தத்துவ போதகர்

இயற்றிய

# ஆத்தும நிர்ணயம்

பதிப்பாசிரியர்

ச. இராசமாணிக்கம், சே. ச.

TNSDA
06986

தமிழ் இலக்கியக் கழகம்
தூத்துக்குடி
1967

தத்துவ போதகர்

இயற்றிய

# ஆத்தும நிர்ணயம்

பதிப்பாசிரியர்

ச. இராசமாணிக்கம், சே. ச.

தமிழ் இலக்கியக் கழகம்

தூத்துக்குடி

1967

6986

*Epigram on Fr. Robert de Nibili, S. J. illustrious founder of the Madurai Mission*

Paul planted the Faith; Apollo, his fellow-worker, watered it; God himself gave the increase. Behold, Robert, the Faith is increasing over the whole world, while you plant with your pen and zealously water with your spoken word. Any one acquainted with you and your writings might well explain in wonder: "Surely, here we have Paul, Apollo and God!"

*Epigram on his Catechism.*

This work, reader, demonstrates Nobili's great mind, and Nobili's great mind demonstrates that this is a noble work. His noble mind was not unequal to so great a work, and the noble work is not unworthy of so great a mind. Which is one to admire more, the mind or the work? The truly great mind is to be admired because of its own nobility.

Fr. Balthasar da Costa S. J. companinon of Fr. De Nobili wrote these epigrams in Latin in his introduction to his translation of De Nobili Catechism. Fr. F. Gilmore has kindly rendered those epigrams into English. The second epigram may be applied to all the works of Nobili.

**ஆசிரியரது வேண்டுகோள்:**

*தமிழிலும் தெலுங்கிலும் கிரந்தத்திலும் (சமஸ்கிருதம்) நான் எழுதினவெல்லாம் நம் தூய அன்னை கத்தோலிக்கு உரோமன் திருச்சபைக் கருத்துப்படி இருக்கவேண்டும் என்பது என் விருப்பம். தப்பாகவோ தவருகவோ புண்படுத்தக்கூடிய முறையிலோ ஏதாவது மறந்து நான் விட்டிருந்தால் அதைத் திருத்தும்படி அவனை மன்ருடுகிறேன். இவ்வேண்டுகோளை ஒவ்வொரு சுவடியிலும் சேர்க்கும்படி இந்நூல்களைப் படி செய்வோரையும் மொழிபெயர்ப்போரையும் மிக உருக்கமாக மன்ருடுகிறேன்.*

*சான் தோமே, 6 சனவரி 1656.*

**[தாம் இறப்பதற்குப் பத்து நாட்களுக்கு முன்பு இவ்வேண்டுகோளைத் தாம் எழுதிய நூல்களிலெல்லாம் சேர்க்கும்படி ஆசிரியர் ஒழுங்கு செய்தார் என்று பல்தசார் டா கோஷ்டா ஞானோபதேச மொழிபெயர்ப்பில் கூறுகிருர்.]**



சென்னை அதிமேற்றிராணியாராகிய

**வண. ரா. அருளப்பா ஆண்டகைக்கு**

இந்நூல் அன்புக் காணிக்கை



தத்துவபோதகர் ஞானோபதேசம் கற்பிக்கும் காட்சி



**தத்துவ போதகர்**

( Ink-sketch by his companion Fr. da Costa )

# அறிமுகம்

**Roberto de Nobili** என்ற சேசுசபை குருவானவர் 1577-ல் உரோமை நகரில் பெரும் பிரபக்கள் குடும்பத்தில் பிறந்து 1596-ல் சேசுசபையில் சேர்ந்து குருப்பட்டம் பெற்று 1605 மே 20-ஆம் நாள் கோவா நகர் வந்தார். 1605 நவம்பர் 15-ஆம் நாள் மதுரைக்கு வந்து நம் நாட்டுத் துறவியர் வாழ்க்கையையும் கோலத்தையும் மேற்கொண்டதோடு **தத்துவ போதகர்** என்ற பெயரையும் ஏற்றுர். இந்திய நாகரிகத்தையோ பண்பாட்டையோ நடையுடை முதலியவற்றையோ கைவிடாது கிறிஸ்தவனுகலாம் என்று நிலைநாட்டியவர் இவரே. இவரது முறையைப் பின்பற்றியதால் பல்லாயிரக் கணக்கான மக்கள் கிறிஸ்து மதத்தைத் தழுவினர். புதிதாய் மனந்திருப்பியோரைப் படிப்பிக்கவும் கொள்கையில் உறுதிப்படுத்தவும் தமிழ் தெலுங்கு சமஸ்கிருதம் என்ற மும்மொழிகளிலும் பல நூல்களை இயற்றினர். தமிழைப் பொறுத்த மட்டில் 'உரைநடையின் தந்தை' என்றழைக்கக் கூடிய முறையில் முதல் முதலாக உரை நடை நூல்கள் இயற்றினர். தத்துவ அல்லது அறிவு நூல் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துக்கூறும் அளவுக்கு அவருச்குச் சிறந்த தமிழ்ப் பயிற்சி இருந்தது. **ஆத்தும நிர்ணயம்** அத்தகைய நூல்களுள் ஒன்று. ம. சா. இயாகப் பிள்ளை அவர்கள் 1889-ல் சென்னையில் இதனை முதலில் அச்சிட்டார். தற்போது இந்நூல் கிடைப்பதற்கரிது. மேலும் புதிதாய்க் கிடைத்த பல பிரதிகளை ஒப்புநோக்கி அதிகாரங்களைப் பல பத்திகளாகப் பகுத்துத் தலைப்பீந்து அரும்பதப் பொருள் முதலியன தொகுத்து, பல அடிக் குறிப்போடு மீண்டும் அதை அச்சிடுகிருேம். பாடம் சில இடங்களில் விளங்காமல் இருத்தல் நூல் அச்சாவதில் ஏற்படும் தொல்லைகள், பல அலுவல்கள் முதலியவற்ருல் சில பிழைகள் வந்துவிட்டன. அடுத்த பதிப்பில் இவை களையப்பெறும். இந்நூலை அச்சடிக்க உத்தரவளித்த பெரியோருக்கும், அதற்கான பிரதிகளை உதவியோருக்கும், இந்நூலை அச்சிட உதவியோர் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றி. இந்நூல் கருத்துச் செறிவு மிகுந்து இருப்பதால் அறிவு நூல் முறையில் அமைந்திருக்கிறது. முதன் முறை படித்ததும் விளங்காதவை மீண்டும் படித்தால் விளங்கலாம். முற்காலத்தில் திருமறையைக் கற்பித்தோருக்கும் ஞானறிப் படித்தோருச்கும் இந்நூல் மிகவும் பயன்பட்டதுபோல் தற்காலத்திலும் எதிர்காலத்திலும் பயன்படும் என்பது எம் நம்பிக்கை.

# உள்ளுறை


முன்னுரை ... (9) i

விவேகம்... 1

I. ஆன்மாவின் இயல்பு (1—9)

1. உயிரே உடலின் மாத்திரை... 17
2. அறிவு உடலைக் கடந்தது 31
3. பல அறிவற்ற நிலைகள் ... 42
4. உரிமை அல்லது சுதந்திரம்... 53
5. இதை மறுப்போர் ... ... 67
6. உரிமைக்கெதிர்: தலையெழுத்து 79
7. கடவுளும் சுதந்திரமும் ... 90
8. தேவ அறிவும் பராமரிப்பும்... 102
9. கடவுளும் பாவமும்... ... 114

II. ஆன்மாவின் தோற்றம் (10—22)

10. ஆன்மா கடவுளன்று 128
11. அனாதியுமன்று 148
12. ஆனால் அறிவற்றது ... 163
13. பிற உயிர்கள் அறிவதேன்? 186
14. மேலாங்கிஷமும் கீழாங்கிஷமும் 198

மறு பிறப்பு (15—22)

15. மும்மைப் பாவம் இம்மையில் நீங்காது ... 209
16. ஒருடல் மாத்திரை வேறுடல் செல்லாது ... 226
17. மோட்ச நரகத்தில் மறுபிறப்பில்லை ... 249
18. உயிர்களின் வேறுபாடும் மறுபிறப்பும் ... 261
19. உயர்வு தாழ்வு தேவை ... 277
20. அண்ட பிண்ட ஒப்புமை ... ... 287
21. சில வினா விடைகள் ... ... 297
22. கூன் குருடு: இயற்கைக் காரணம் ... 310

III. ஆன்மாவின் ஒடுக்கம் (23—38)

23. ஆன்மா முடிவு இம்மையன்று 323
24. சுவர்க்கமும் அன்று... ... 369
25. வைகுண்டமும் கைலாசமுமன்று 389

26. சானித்தியம், சாமீப்பியம், சாயுச்சியம் 401
27. சாரூப்பியமும் அல்ல ... ... 410

(1) நல்லோரின் முடிவு மோட்சம் (28—35)

28. ஆன்மாவின் இறையறிவு ... ... ... 423
29. இம்மையில் விசுவாசம் ... ... ... 438
30. கடவுளைக் காணலாமா? ... ... ... 453
31. அதற்குத் திருவருள் தேவை ... ... 465
32. மோட்சத்தில் பல நிலைகள் ... ... ... 476
33. கண்கொள்ளா மகிமைகள் ... ... ... 495
34. மோட்சவாசியின் புதுக்கோலம் ... ... 509
35. தேவபராமரிப்பும் பேரின்பமும் ... ... 525

(2) தீயோரின் முடிவு நரகம் (36—38)

36. நரகத்தின் இயல்பு ... ... ... ... 541
37. தீ பேய்களை வாட்டும் முறை ... ... 564
38. நரகம் அழியாததேன்? ... ... ... 577

*Nihil Obstat*
C. S. MARIAROCKIAM
*Cens. dep.*
16—11—64

*Imprimatur*
S. MARIADAS
*Administrator Tuticorin.*
22—11—64

# முன்னுரை

தமிழ் நாட்டில் தத்துவ போதகர் என்றும் வெளி நாட்டில் ராபற்று தே நொபிலி [1] என்றும் அழைக்கப்பெற்ற சேசு சபைக் குருவானவர் கி. பி 1577-ஆம ஆண்டு செப்டம்பர் திங்களில் உரோமை நகரில் பிறந்தார். இவர் பிறந்த நாள் எது என்று தெரியவில்லை. பெரிய பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்த இவர் சேசு சபையில் சேரப் பெற்றோர் உடன்படாதபடியால் நேப்பிள்ஸ் பட்டணத்திற்கு ஓடிப்போய் அங்குள்ள உறவினர் ஒருவரின் உதவியால் 1596-ல் சேசு சபையில் சேர்ந்தார். நேப்பிள்ஸ் நகரிலும் உரோமையிலும் குருப்பட்டக் கல்வி பயின்று குருவாகி 1603-ஆம் ஆண்டு தொடக்கத்தில் சொந்த நாட்டை விட்டு நம் நாடு வரப் போர்த்துக்கல் நாட்டுக்குச் சென்றார். போர்த்துக்கலின் தலைநகரான இலிஸ்பனை விட்டு 1604 ஏப்ரல் 28-ஆம் நாள் கப்பலேறியவர் புயலாலும் பிற இடையூறுகளாலும் துன்புற்று 1605 மே 20-ஆம் நாள்தான் கோவா நகர் வந்து சேர்ந்தார்.

அடுத்த ஆண்டு சனவரித் திங்களில் கொச்சி சேர்ந்தார். அம்மாதம் 19-ஆம் நாள் கொடிய காய்ச்சல் வாய்ப்பட்டு உயிர் பிழைத்ததே அரிதாகி விட்டது. உடல் நலமானதும் தமிழ் நாட்டின் கடற்கரைப் பகுதிக்குச் சென்று தமிழ் கற்று வரும் இவரை, மலபார் மாகாண சேசு சபைத் தலைமைக் குரு ஆல்பற்று இலயர்சியோ [2] என்பார் தம்மோடு மதுரைக்கு அழைத்துச் சென்றார். அவரோடு தத்துவ போதகர் 1606 நவம்பர் 15-ஆம் நாள் மதுரை வந்து சேர்ந்தார். அந்நாள் தத்தவ போதகர் வாழ்க்கையிலும் தமிழ் நாட்டுக் கததோலிக்குத் திருமறை வரலாற்றிலும் பொன்னான நாள். ஏனெனில் தத்துவ போதகர் வரவோடு நம் திருமறை புத்துயிரோடும் புது முறையோடும் பரவத்தொடங்கிற்று.

மதுரையில் அப்பொழுது ஏறத்தாழ நூறு கிறிஸ்தவர்கள் இருந்தனர். இவர்கள் எல்லோரும் வெளியில் இருந்து வந்த வர்கள், வாணிகம்புரிவோர் அல்லது அவர்களுக்குத் துணை

1. Robert do Nobili. 2. Albert Laerzio.

செய்வோர். இவர்களைக் கண்காணிக்க கொன்சாலோ பர்ணந்தசு[3] என்ற சேசு சபைக் குரு ஒருவர் இருந்தார். குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் ஒன்று வைத்து நடத்தி வந்தார். அக்காலத்தில் போர்த்துக்கீசியரைத் தமிழ் மக்கள் பரங்கிகள் என்று அழைத்தனர். இன்று சென்னையிலுள்ள தோமையார் மலை, பரங்கி மலை என்று அழைக்கப்பெறுவது இதை உறுதிப்படுத்தும். போர்த்துக்கீசியர் மட்டுமன்று அவர்களைப்போல் உண்டு உடுத்தி வாழ்பவர்கள், அவர்களோடு தொடர்புள்ளவர்கள் அனைவருக்குமே இப்பரங்கிப் பட்டம் கிடைத்தது. அவர்கள் கடைப்பிடித்த கிறிஸ்தவ மதமும் பரங்கி மார்க்கம் என்று அழைக்கப்பட்டது.

ஒவ்வொரு குலத்தாரும் வழிபடும் குலதெய்வங்கள் இருந்தபடியால் கிறிஸ்தவக் கடவுளும் பரங்கி குலத்துக்கே உரிய குலதெய்வம் என்ற எண்ணம் தோன்றியது. எல்லா மக்களுக்கும் பொதுவான மறை என்ற உட்பொருள் நீங்கி விட்டது. எனினும் அதைப் போர்த்துக்கீசியர் பொருட்படுத்தவில்லை. ஆகவே எவரும் இவர்களோடு தொடர்புகொள்ள மாட்டார்கள். மிகவும் இழிந்த நிலையிலிருந்த பறையர் பள்ளரும்கூட சாதியைவிட்டு விலக்கி விடுவார்கள் என்ற அச்சத்தால் இவர்களோடு உறவுகொள்ளவில்லை.

ஒரு வகையில் இந்நிலை போர்த்துக்கீசியருக்குப் பயன் பட்டது. எவன் அவர்கள் பக்கம் வந்தானோ மீண்டும் அவன் இந்து சமுதாயத்துக்குச் செல்லமாட்டான். ஆகவே மேற்கொண்ட மதத்தைக் கைவிடாது கடைப்பிடிப்பான். இரண்டாவது சாதி வேற்றுமை கருதாத, தீண்டாமை ஒழிந்த, உயர்வு தாழ்வு அற்ற ஒரு வகைச் சமநிலை புதிய கிறிஸ்தவர்களிடம் ஏற்பட்டது. கோவாவிலும் இன்னும் போர்த்துக்கீசிய ஆதிக்கமோ செல்வாக்கோ உள்ள இடங்களிலும் எந்த அளவுக்கு இந்நிலை உதவியாக இருந்ததோ அந்த அளவுக்கு உள்நாட்டு மக்கள் மனம் திரும்புவதை மிகக் கடினமாக்கி விட்டது.

கிறிஸ்து மறையைக் கடைப்பிடிக்க வேண்டுமாயின் பழைய கொள்கையை மட்டுமன்று சொந்தப் பண்பாடு நாகரிகம் பிறந்த குலம் உற்றார் உறவினர் அனைவரையும் துறக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அந்த அளவுக்கு எவரும் முன்வரத்

3. Gonsalo Fernandes.

தயாராக இல்லை, அதுவும் கத்தோலிக்குத் திருமறையை நன்கு உணருவதற்கு முன்பு.

### புதிய முறை

1606 நவம்பர் 15-ஆம் நாள் மதுரைக்கு வந்ததிலிருந்து இறைச்சியோ மீனோ முட்டையோ மதுவோ அருந்துவதை தத்துவ போதகர் விலக்கி விட்டார். தாழ்ந்த குல மக்களோடு வெளியரங்கமாகப் பழகுவதையும் நீத்தார். தமிழ் மக்களோடு பழக இன்றியமையாது துணைபுரியும் தமிழ் மொழியை இராப்பகலாகப் பயின்றார். ஆறு மாதத்திற்குப் பிறகு எவர் உதவியுமின்றி எந்தத் தலைப்புப் பற்றியும் பல மணிக் கணக்காக உரையாட அவரால் முடிந்தது. அந்த அளவுக்கு மொழிப்பயிற்சி பெற்றார். அவர் எப்படி உரையாடினார் என்று அறிய விரும்புவோமாயின் இந்நூலைப் படித்தால் புலனாகும். தமிழ் மொழி முனிவரது மனதைக் கவர்ந்தது. அழகு மிகுந்து வளப்பம் பொருந்தி மிகவும் பண்பட்டு விளங்குவது[1] என்று மேல் நாட்டாருக்குத் தமிழை அறிமுகப்படுத்துகிறார். விரைவில் தாய் மொழியான இத்தாலிய மொழியும், படித்த போர்த்துக்கீசு மொழியும் மறந்துபோயின. அவற்றிற்குப் பதிலாகத் தமிழ் மொழி ஒன்றே அவர் கருத்துக்களை வெளியிடும் கருவி மொழியாக அமையலாயிற்று. இம்மொழியில் பேசுவதோடு அமையாது 1607-ம் ஆண்டு தொடங்கி 1656-ஆம் ஆண்டு சனவரி 16-ஆம நாள் உயிர் துறக்கும்வரை அரிய பெரிய நூல்களைத் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் தெலுங்கு மொழியிலும் இயற்றினார்.

### அறுவடை

எவரையும் மனம் திருப்பமுடியாது என்ற சூழ்நிலையைத் தத்துவ போதகர் உடனே மாற்றினார். முதலில் மனம் திரும்பிய ஆல்பற்று என்ற அறிஞரோடு இருபது நாள் அளவாக உரையாடி அவருக்கு ஞானதீட்சை அளித்தார். ஆல்பற்றைப் பின்பற்றிப் பலர் இவரிடம் ஞான உபதேசம் கேட்க வந்தனர்.

இதுவரைக் கறுப்பங்கி அணிந்துகொண்டு மக்கள் பரங்கி என்று அழைத்த கொன்சாலோ பர்னாந்துசு என்பவரோடு

1. Bellissima copiosissima e molte eleganto.

குடியிருந்தார். ஆனால் உயர்ந்த குலத்தில் மனம் திரும்பியவரது தொகை மிக மிக, மேலும் மக்கள் மனம் திரும்புவதற்கு இக்குடியிருப்பு இடையூறாகிவிட்டது. அக்காலத்தில் தீண்டாமை சாதிக்கட்டுப்பாடு முதலியவை மிகக் கண்டிப்பாய் வழக்கி லிருந்தன. உயர்ந்த குலத்தில் பிறந்தவரை மனம் திருப்புவது ஒரு புறம் இருக்க, தாழ்ந்த குலத்தினரை மனம் திருப்பலாம் எனினும் இச்சாதிக் கட்டுப்பாட்டைக் கவனித்து நடக்கவேண்டி யிருந்தது. ஆகவே பெரியோர்களின் உத்தரவு பெற்றுப் பழைய வீட்டை விட்டு உயர்ந்த குல மக்கள் வாழும் பகுதியில் ஒரு சிறிய குடிசை கட்டித் தாழ்ந்த குல மக்களோடு மிகுதியும் புழங்காமல் பிராமணர்களை வேலையாட்களாக அமர்த்தியதோடு தான் அணிந் திருந்த கறுப்பு அங்கியைக் கழற்றிவிட்டு இந்து மதச் சந்நி யாசிகள் அணியும் காவியாடை அணிந்தார். செல்வாக்கு மிகுந்த பண்டார சன்னதிகள்போல் காதைத் தொளைத்துக் கடுக்கன் அணிந்தார். உயர்ந்த குலமக்கள் அணியும் பூணூல் அவர் மார்பை அணி செய்தது. இத்தாலியாவில் பிரபுக் குலத்தில் தோன்றியதால் நம் நாட்டு அரசர் அல்லது சத்திரியர் உரிமை யைக் கொண்டாடி அவர்களைப்போல் பூணூல் பூண்டார். ஆனால் மீதிப்பேரைப்போல் நூலால் பூணூல் அணியாது, அர்ச். தம திரித்துவத்தைச் சுட்டும் மூன்று தங்கப்புரிகளும் கிறிஸ்து பெருமானது உடலையும் உயிரையும் எடுத்துக் காட்டும் இரண்டு வெள்ளிப்புரிகளும் சேர்ந்த ஐம்புரிப் பூணூல் ஏற்று அதனிறுதி யில் ஆண்டவர் பாடுகளை அறிவிக்கும் பாடுபட்ட சுரூபம் ஒன்றையும் அணிந்தார்.

உணவாலோ உடையாலோ பழக்க வழக்கத்தாலோ இந்துக்கள் மனதைப் புண்படுத்தாது பிறமக்களைப்போல வாழ்ந்ததோடு அமையாது மண்ணாசை பொன்னாசை பெண்ணாசை என்ற மூன்று ஆசையும் முற்றத் துறந்து வாழும் முனிவரைப் போல் நாடோறும் பட்டினி இருந்து மாலை நான்கு மணிக்கு மரக்கறி உணவருந்துவார். தமிழ் மொழியை நன்கு பயின்ற தோடு வடமொழியையும் கற்று அதிலிருந்து மேற்கோள் காட்டிக் கிறிஸ்துமதமே கடவுள் அருளிய உண்மைத் திருமறை என்றும் வீடுபேறு அடைய வேறு வழியில்லை என்றும் பல சான்றுகளால் எண்பித்தார். இவரது பெயர் மதுரை எங்கும் விரைவில்

பரவியது. அக்காலத்தில் முத்துக்கிருஷ்ணப்பன் ஆட்சிசெய்தான். அவன் விட்ட மானியத்தால் 10,000 மாணவர் மதுரையில் கற்று வந்தனர் என்றும் தங்களுக்கான பாடத்தையும் ஆசிரியரையும் மாணவரே தேர்ந்துகொண்டனர் என்றும் முனிவர் ஒரு கடிதத்தில் கூறுகிறார்.[1] இத்தகைய சூழ்நிலையில் தத்துவபோதகர் பெயர் பரவவே பலர் இவரைக் காண விரும்பியதில் வியப்பில்லை. தம்மைப் பார்க்கும்படி முதன்முறை கேட்டதும் உடன்படாது பன்முறை கேட்ட பிறகே பேட்டியளித்தார். வந்தவர் அனை வரும் இவரது தூய வாழ்க்கையையும் சிறந்த பண்பாட்டையும் மக்களது உள்ளத்தைக் கவரும் பேச்சு வன்மையையும் ஆழ்ந்த படிப்பையும் கண்டு வியந்து சென்றனர்.

மேல்நாட்டுக் குருக்களைக் கண்டதும் இகழ்ந்து விலகிச் செல்லும் படிப்பாளிகள் இப்பொழுது தத்துவபோதகரைக் காணத் தவமிருந்தனர்; நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. வந்தவருள், சிறப்பாக பிராமணருள், பலர் தீட்சை பெற்றனர். மனம் திரும்பியோர் தம் குடுமியை வெட்டவேண்டும் என்றும் பூணூலை அறுக்கவேண்டும் என்றும் சந்தனம் பொட்டு முதலியன அணியலாகாது என்றும் போர்த்துக்கீசியர் தடுத்தது போல் தடுக்காது இவை அனைத்தையும் நல்ல கருத்துக்களாலும் சிறந்த செபங்களாலும் கிறிஸ்து மயமாக்கினார். கிறிஸ்து மதத்தைப் பின்பற்றியவர்கள் மதத்தைப் பின்பற்றினரே யொழிய மேல் நாட்டார் நாகரிகத்தையோ புறக்கோலத்தையோ மேற்கொள்ளவில்லை. இதனால் பிற இந்துக்களோடு வாழும்போது புதிய மதத்தால் தடை ஒன்றும் ஏற்படவில்லை. தொடக்கத்தில் பிராமணர்களாலும், பண்டாரங்களாலும் பொய் வதந்தியாலும் சிறிது தொந்தரவு ஏற்பட்டாலும் இறுதியில் எல்லாம் ஓய்ந்து விட்டது. கிறிஸ்து மதம் பரங்கி மார்க்கம் என்ற தப்பெண்ணம் முற்றிலும் அகன்றது.

## பாப்பானவர் தீர்ப்பு

இந்நிலையில் முனிவருக்கு, எதிர்பாராத வேறொரு பக்கத்தில் நெருக்கடியான நிலை ஒன்று ஏற்பட்டது. தத்துவபோதகரின் கூட்டாளியும், தாழ்ந்த குல மக்களைக் கவனித்து வந்தவருமான

1. diecimila studenti Bramani — Laerzio 8-12-1610

கொன்சாலோ பர்ணுந்துசு அவருக்கு எதிராகப் பல கடிதங்களும் மனுக்களும் எழுதத்தொடங்கினர். கிறிஸ்துவ அடிப்படையான கொள்கையில் மாற்றம் செய்துவிட்டார் என்றும் முனிவரது போதனையும் முறையும் பரம்பரைக் கொள்கைக்கு முரணனவை என்றும் பறைசாற்றினர். அவருக்குச் சார்பாகப் பலர் சேரவே இனிமேல் புதிதாய் மக்களை மனம் திருப்பலாகாது என்று தத்துவ போதகருக்குக் கட்டளை பிறந்தது. 1623 சனவரி 31ஆம் நாள் பதினைந்தாம் கிரகொரி[1] என்ற பாப்பானவர், தாம் எழுதிய "ரோமானே சேடிஸ் ஆன்றிஸ்டெஸ்"[2] என்ற கடிதம் ஒன்றால், தத்துவபோதகர் முறைக்கு ஆசீரும் ஆதரவுமளித்தார். மனந்திரும்பியோர் குடுமி, பூணூல், சந்தனம் முதலியவை அணிய லாம் என்ற முடிவு அதில் இருந்தது. இம்முடிவைப்பெற எத்தனை செபதபங்கள்! எத்தனை ஆண்டுகள், எத்தனை கடிதங்கள், எத்தனை முறை கொச்சிக்கும் கோவாவுக்கும் பிற இடங்களுக்கும் செல்வது! எனினும் விடா முயற்சியினால் இறுதியில் வெற்றி பெற்றார். இம்முடிவைப் பெற ஏறத்தாழப் பத்தாண்டுகள் சென்றுவிட்டன. எனினும் பாப்பாண்டகை உத்தரவுக்குப் பிறகு அமைதியாய் ஆத்தும இரட்சணிய வேலையில் ஈடுபட முடிந்தது.

பாப்பானவர் தீர்ப்பளித்த பிறகு மதுரையைவிட்டுத் திருச்சி, சேலம், மோரமங்களம், சத்தியமங்களம் முதலிய இடங்களுக்குச் சென்று திருமறையைப் பரப்பினர். இவருக்குத் துணையாக மூன்று நான்கு பேர் வந்தனர். இருந்தாலும் அறுவடை எவ்வளவு மிகுதி என்றால் அவர்கள் எண்ணிக்கை போதவில்லை.

உயர்ந்த குலத்தினரைக் கவனிப்பதுபோல் தாழ்ந்த குல மக்களைக் கண்காணிக்கப் பண்டாரசாமி என்ற வேறொரு பிரிவை ஏற்படுத்தினர். பிராமண சந்நியாசிகள் பிராமணருக்கும் பிறருக்கும் போதிக்கலாம். பண்டாரசாமிகளோ பிராமணர் களைத் தவிர மீதி அனைவருக்கும் போதிக்கலாம். பிராமண சந்நியாசிகள் வெள்ளையாடையணிந்து பூணூல் அணிந்தகோலும், கமண்டலமும் பாதக்குறடுகளும் அணிந்திருந்தனர். அவர் களுக்குத் தாடியில்லை. பண்டாரசாமிகளுக்குத் தாடி உண்டு; கடுக்கன் உண்டு; காவி ஆடை உண்டு. பண்டாரசாமிகளுடைய

1. Gregory XV. 2. Romanae Sedis Antistes.

வாழ்க்கை, பிராமண சந்நியாசிகளுடைய வாழ்க்கையை காட்டிலும் எளிதாக இருந்தது. பிராமண சந்நியாசிகள் வடமொழி பயின்றிருக்கவேண்டும்; நாடோறும் பட்டினி இருக்கவேண்டும் மக்களிடம் அவர்களுக்கே மிகுந்த செல்வாக்கு இருந்தது. இரு பண்டாரசாமிகளின் வேலையை ஒரு பிராமண சந்நியாசியால் செய்யமுடியும் என்கிறார் தத்தவபோதகரோடு உழைத்த எம்மானுவேல் மார்ட்டினஸ் என்ற குருவானவர்.

மிகவும் கடினமான பிராமண சந்நியாசிகள் வாழ்க்கையில் தத்துவபோதகர் ஈடுபட்டதோடு வாழ்நாள் முழுதும் அதைக் கடைப்பிடிப்பேன் என்று பெரியவர்கள் உத்தரவோடு வார்த்தைப்பாடு கொடுத்தார். 1656 சனவரி 16ஆம் நாளில் மைலாப்பூரில் மரிக்கும் வரை இவ்வுறுதிமொழியைக் காப்பாற்றினர். 1640-ல் ஒரு முறையும் 1641-ல் வேறொரு முறையும் பல மாதங்களாகச் சிறையிலடைக்கப்பட்டார். ஏட்டுச்சுவடிகளைப் பல ஆண்டுகளாய்ப் படித்ததாலும், முதிய பருவத்தாலும், உடல் நலக்குறைவாலும் இவர்தம் கண்கள் மங்கிப் பார்வை இழந்து விட்டன. ஆகவே இவருக்கு ஓய்வு அளிக்க 1645-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு இவரைப் பெரியோர்கள் அனுப்பினர்கள். 1648ஆம் ஆண்டுவரை தம்மோடு வந்த நான்கு பிராமணர்களோடு அங்கு வேதத்தைப் போதித்தது மட்டுமன்றிப் புதிய நூல்கள் பல இயற்றினர். 1648-ல் மைலாப்பூருக்குத் திரும்பிவந்த பிறகும் பல நூல்களைத் தமிழிலும் தெலுங்கிலும் வடமொழியிலும் இயற்றியதோடு செபதபத்தில் மிகுந்து [1]புனித தந்தை என்று மக்களால் கொண்டாடப்பட்ட இம்முனிவர் 1656-ஆம் ஆண்டு சனவரி 16-ஆம் நாளில் உயிர் துறந்தார். இவரைப் புதைத்த இடம் தெரியவில்லை. ஆனல் இவர் எழுதிய நூல்கள் பல இருக்கின்றன. தமிழைப் பொறுத்த மட்டில் இவர் எழுதிய நூல்கள் வருமாறு:—

## எழுதிய நூல்கள்:

தத்துவ போதகர் பன்மொழிப் புலவர். மேல் நாட்டு மொழிகளில் கிரேக்கம், இலத்தீன், இத்தாலியம், போர்த்துக்கீசியம் முதலிய மொழிகளில் இவருக்கு நல்ல பயிற்சி உண்டு.

1. Santo Padre

கிரேக்கத்தைத் தவிர மீதி மொழிகளில் எழுதிய மடல்களும், கட்டுரைகளும் பல இன்றும் இருக்கின்றன. பாரத நாடு வந்த பின் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் என்ற மூன்றிலும் நல்ல பயிற்சி பெற்று அம்மொழிகளில் பல நூல்களை எழுதியிருக்கிருர். ஆனல் அவர் காலத்தில் ஏற்பட்ட கலகங்களாலும் போராட்டங்களாலும் அவர் எழுதிய நூல்கள் சில ஆசிரியர் காலத்திலேயே அழிபட்டன என்பதை அவருடைய வாழ்க்கை வரலாற்றில் அறிகிரேம். தமிழைப் பொறுத்தமட்டில் அவர் எழுதிய நூல்களில் பல நமக்குக் கிடைத்திருந்தாலும் இன்னும் கிடைக்காத நூல்கள் சில இருக்கின்றன. இவற்றை ஆசிரியரே தமது நூல்களில் மேற்கோளாகப் பல இடங்களில் கையாண்டிருக்கிருர். மேலும் ஆசிரியரைப் பின்பற்றி அவர் நடையைக் கண்டுபாவித்துப் பல நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. எவை முனிவர் எழுதியன, எவை அவரைப் பின்பற்றியோர் எழுதியன என்பது ஒரு சில இடங்களில் விளக்காவிட்டாலும் ஆசிரியருடைய நூல்களை ஊன்றிப் படிப்போர் அவருக்கே உரிய நடையையும் கருத்தையும் கண்டுணராமல் இருக்க முடியாது. கீழ்க் கண்ட நூல்களை முனிவர் எழுதியதாகக் கூறலாம்.

1. ஞானுேபதேசம் (3 காண்டங்கள்) 2 மந்திர வியாக்கியானம் (4ம் கா.) 3. சத்தியவேத லக்ஷணங்கள் (5ம் கா.) 4. நித்திய சீவன சல்லாபம். 5. புனர்ஜென்ம ஆக்ஷேபம். 6. கடவுள் நிர்ணயம். 7. 26 பிரசங்கங்கள். 8. தூஷணத் திக்காரம். 9. சேசுநாதர் சரித்திரம். 10. அர்ச். தேவமாதா சரித்திரம். 11. ஞான உபதேச குறிப்பிடம். 12. ஆத்தும நிர்ணயம். 13. ஞான தீபிகை. 14. பேதகப் பரீக்ஷை. 15. ஞான சங்க்ஷேபம். 16. விசுவாச சல்லாபம். 17. உபதேச சல்லாபம். 18. பத்துச்சல்லாபம். 19. சிலுவையின் விசேஷ சல்லாபம். 20. மந்திரமலே.

இந்நூல்களில் 3, 13-20 இன்னும் அகப்படவில்லே. மீதி நூல்கள் அச்சாகி விட்டன. மேலும் இறந்து போன சமயத்தில் ஒப்பாரி வைக்கும் போது, பொய்த் தேவதைகளைக் கூறி அழும் பழக்கத்தை விட்டு விட்டு, கிறிஸ்துபெருமானின் பாடுகள், வியாகுலத் தாயின் துன்பங்கள், மக்கள் சம்மனசுக்கள் செய்த பாவங்கள், அவற்றின் விளைவு பற்றிய செய்யுள் நூல் ஒன்றும்,

திருமறை பற்றி 700 அடிகளில் வேறொரு பாடலும், 2000 அடிகளில் நித்திய வாழ்வு பற்றி இன்னுமொரு செய்யுள் நூலும் ஆசிரியர் இயற்றியதாக டா கோஷ்டா அடிகள் சேசுசபைத் தலைமை அடிகளுக்கு 1644- ஆம் ஆண்டில் தெரிவிக்கிறார். இவற்றைத் தவிர்த்து **அக்கியான நிவாரணம், திவ்விய மாதிரிகை, ஞான சஞ்சீவி, அண்ட பிண்ட வியாக்கியானம், உலக பிரமாண சாஸ்திரம், பரமசூமாக்ஷிப்பிராயம், சகுன நிவாரணம்** முதலிய நூல்களையும் ஆசிரியர் எழுதியதாகச் சொல்கின்றனர். இவற்றைப் பற்றிய ஆராய்ச்சி 'ஞான உபதேசக் குறிப்பிடம்' என்ற நூலில் '**தத்துவ** போதகர் எழுதிய நூல்கள்' என்ற கட்டுரையில் விரிவாய் வருகிறது.

## நூலின் அமைப்பு:-

"அனைத்துலகையும் அடைந்தாலும் தனது ஆன்மாவை இழந்தால் என்ன பயன்" என்ற சேசு பெருமான் வாக்கைத் தமது நூலின் விருது வாக்காகக் கொண்டு, ஆன்மாவின் தோற்றம், ஒடுக்கம், இயல்பு முதலிய பற்றி முப்பத்தெட்டுப் பாடங்களில் ஆசிரியர் எடுத்துரைக்கிறார். ஆன்மா உடலில் கூட்டிலுள்ள குஞ்சுபோல் தங்கியிராமல், உடலின் மாத்திரை (Form) என்றும் அவ்வுயிராலேதான் வளர்த்தி, பகுத்தறிவு, புலனறிவு, உரிமைச் செயல் முதலியன நடைபெறுகின்றன என்றும் காட்டிய பிறகு உடலின்றி இயங்கும் ஞானச் செயல்களை ஆன்மா செய்வதால் உடல் அழிந்த வழியும் ஆன்மா அழியாது என்றும் காட்டுகிறார். உரிமை அல்லது சுதந்திரம் என்ன என்று விளக்கி, கடவுள், மோட்ச நரகமடைந்த மக்கள், இவ்வுலகினர் பெற்றுள்ள சுதந்திரத்தைப் பாகுபாடு செய்து விளக்குகிறார். மேலும் லலாடலிபி அல்லது தலைவிதி அல்லது தலையெழுத்து என்பது தப்பறை என்றும் உரிமைக்கு முரணானது என்றும் காட்டுகிறார். மேலும் உலகில் பாவத்தைக் கடவுள் தடுக்காததற்குக் காரணம் கூறுகிறார். இவ்வாறாக முதல் ஒன்பது பாடங்களில் (1-9) ஆன்மாவின் இயற்கை எடுத்தோதப்படுகிறது.

அடுத்து வரும் பதின்மூன்று பாடங்களில் (10-22) ஆன்மாவின் தோற்றத்தைப் பற்றிப் பேசுகிறார். ஆன்மா கடவுளோ, அல்லது அவரது உறுப்போ அல்லது சாயலோ அன்று என்றும், தானாகவோ அல்லது அனாதியாகவோ உண்டான பொருளன்று என்றும், உலகத் தொடக்கத்தில் கடவுளால் படைக்கப்படவில்லை என்றும், தாய் தகப்பனாலேயோ அல்லது பூதியங்

களுடைய கூட்டுறவினாலேயோ தோன்றவில்லை என்றும் காட்டிய பிறகு, உடலின்றி இயங்கும் ஆன்மா அழியாதது என்றும், அது கடவுளால் படைக்கப்பட்டது என்றும், ஐம் பொறிகள் முதலிய கிரஹங்கிஷம் உடலோடு அழிபட்டாலும், மேலாங்கிஷத்தையுடைய ஆன்மா அழியாது என்றும், இம்முறையில் உடல் அழியுங்கால் அழியும் பகுத்தறிவற்ற உயிர்களில் நின்று வேறுபட்டது என்றும் விளக்குகிறார். அதன் பிறகு வரும் எட்டு அதிகாரங்களில் ஆன்மாவின் இரண்டாம் தோற்றம் அல்லது (15 - 22) மறுபிறப்பு என்பதே இல்லை என்று பல காரணங்களால் விளக்குகிறார்.

ஆன்மாவின் ஒடுக்கத்தைப் பற்றி மீதி அதிகாரங்களில் (23 - 38) பேசுகிறார். சுவர்க்கம், வைகுண்டம், கைலாசம், இவ்வுலகம் முதலியன ஆன்மாவின் கெதி அல்லது முடிவு அல்ல என்றும் (23 - 25) சாமீத்தியம், சாமிப்பியம், சாயுச்சியம், சாரூப்பியம் (25 - 27) முதலான நிலைகள் ஆன்மாவின் கெதி அல்ல என்றும் காட்டி, நல்லோர்க்கு வரும் முடிவாகிய மோட்சம் (28-35) பற்றியும், தீயோர் அடையும் கெதியாகிய நரகம் (36-38) பற்றியும் கூறி நூலை முடிக்கிறார்.

விவேகம் என்ற இந்நூலின் முகவுரையில் ஒவ்வொரு அதிகாரத்தின் கருத்தும் ஆசிரியரால் தொகுத்துக் கூறப்பெற்றிருப்பதால் அவற்றைப் பற்றி மீண்டும் விளக்க வேண்டிய தேவை இல்லை. அறிவுநூல் பற்றி, அறிவுநூல் முறையில் எழுதப்பட்ட இந்நூலில் அறிவுநூலுக்குரிய கலைச்சொற்கள் பல வருகின்றன. அவற்றைத் தனியே கொடுத்திருக்கிறோம். மேலும் அறிவுநூலில் பயன்படும் வடசொற்கள் பல இந்நூலில் வந்திருக்கின்றன. அவற்றையும் தனியாகத் தொகுத்துக் கொடுத்திருக்கிறோம்.

**காலம் :-**

இந்நூலை ஆசிரியர் எப்பொழுது எழுதினார் என்று தெரியவில்லை. 1640 - இல் எழுதப்பட்ட "தூஷணத்திக்காரம்" என்ற நூலில் 6, 178 பக்கங்களில் இது மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் இந்நூலின் 35 - ஆம் பாடத்தில் (பக். 592) தூஷணத்திக்காரத்தின் 22 - ஆம் பாடம் மேற்கோளாகக் கையாளப்பட்டிருக்கிறது. இனி எழுதவிருக்கும் தூஷணத்திக்காரத்தை ஆசிரியர் குறிப்பிடுகிறாரா, அல்லது தூஷணத்திக்காரம் எழுதிய பின் இந்நூலைத் திருத்தி, அந்நூலைப் பற்றிய விவரத்தைப் புகுத்தியிருக்கிறாரா என்பது விளங்கவில்லை.

## மேற்கோள் :-

ஞான உபதேசக் காண்டங்களில் முதற்காண்டத்தில் 11, 12, 66, பக்கங்களிலும் இரண்டாம் காண்டத்தில், 42, 98, 157, 171, 292 ஆம், மூன்றாம் காண்டத்தில் 19, 478, 480, 483, 509 ஆம் நான்காம் காண்டத்தில் 103 ஆம் பக்கத்திலும் இந்நூல் மேற்கோளாகக் கையாளப்படுகிறது. மேலும் "புனர் சென்ம ஆக்ஷேபம்" என்ற நூலில் 1, 28, 43, 53, 108 என்ற பக்கங்களில் இந்நூல் மேற்கோளாக வருகிறது. **இந்நூலில் வரும் மேற்கோள்கள்:** 72, 149, 152, 176, 184, 468 என்ற பக்கங்களில் ஞானஉபதேச முதல் காண்டமும், 307, 373, 399, 475 என்ற பக்கங்களில் இரண்டாம் காண்டமும், 501, 541, 596 என்ற பக்கங்களில் மூன்றும் காண்டமும் மேற்கோளாகக் கையாளப்பட்டிருக்கின்றன. சுவர்க்கம் என்ற சொல்லானது மோட்சம் என்ற பொருள் தராதென்றும் சிற்றின்பத்தைச் சுட்டுகிறதென்றும் காட்ட **கப்பித்துலு** என்ற கிறிஸ்தவ நூலிலிருந்து சில பாடல்களைச் சுட்டிக் காட்டுகிறார். அப்பகுதி 25-ஆம் பாடத்தில் 397-ஆம் பக்கத்தில் வருகிறது.

## இப்பெயர் கொண்ட சமஸ்கிருத நூல் :-

மதுரையில் கல்வி கற்றுவரும் மாணவர்களுக்குக் கிறிஸ்தவ அறிவுநூலை விளக்குவதற்காக இந்நூலை ஆசிரியர் இயற்றியிருக்கலாம். அதிகாரத்தின் இறுதியில் இத்தனை கிரந்தங்கள் என்று ஏறத்தாழக் குறிக்கப்பட்டிருக்கின்றன. 32 எழுத்துகளைக்கொண்ட எழுத்தாலாகிய கிரந்தம் என்ற பாடலால் இந்நூல் அமைந்திருக்கலாம். அப்படியாயின் இப்பெயர் கொண்டதும் ஆசிரியர் இயற்றியதுமான சமஸ்கிருத நூல் ஒன்று இருக்கலாம். அத்தகைய நூலின் விவரம் இதுவரை நமக்குக் கிடைக்கவில்லை. அப்படியின்றி ஈடு முதலிய பழங்கால உரைநடை நூல்களைக் கிரந்தமாக எண்ணியிருப்பதுபோல் இந்நூலுக்கும் குறிப்பிட்டதாகக் கொண்டோமானால் கிரந்த எண்ணிக்கை பலஅதிகாரங்களுக்குப் பொருந்தாமல் இருக்கிறது. மேலும் சில அதிகாரங்களுக்கு எண்ணிக்கை குறிப்பிடப்படவில்லை. அச்சாகிய இந்நூலின் ஒரு பக்கத்தில் ஏறத்தாழ 20 எழுத்துக்கள் (Syllables) கொண்ட சுமார் 32 வரிகள் வருகின்றன. 32 எழுத்துகள் கொண்டது ஒரு கிரந்தமானபடியால், ஒவ்வொரு பக்கத்திலும் சராசரி 20 கிரந்தங்கள் வருகின்றன. இந்தக் கணக்குப்படி பார்த்தால் அதே அளவுள்ள அதிகாரங்கள் அதே அளவுள்ள கிரந்தங்களைப் பெற்றிருத்தல் வேண்டும். ஆனால் அவ்

வாறு அமையவில்லை என்பது இந் நூலில் வரும் கிரந்தக் கணக்கால் விளங்குகின்றது. சான்றாக 36 - ஆம் அதிகாரத்திற்கு 23 பக்கங் கள் இருக்கின்றன. அதற்கு $23 \times 20 = 460$ கிரந்தங்கள் வர வேண்டும். ஆனால் அதிகாரத்தின் இறுதியில் குறிப்பிடப் பட்டி ருப்பது 567, அதாவது 107 கிரந்தங்கள் அல்லது 5 பக்கங்கள் மிகுதியாகக் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. இதேபோல் பல அதி காரங்களின் கிரந்தக் கணக்கு பக்கத்தோடு பொருத்தமாய்த் தோன் றவில்லை. ஆகவே இவை பக்கத்தில் வரும் எழுத்துக்களால் ஆகிய கிரந்தங்களைக் குறிப்பிடாமல் 32 எழுத்தாலாகியச் சுலோகங்களை உடைய செய்யுட்கணக்கைச் சுட்டுவதுபோலத் தோன்றுகின்றது. ஆகவே "ஆத்தும நிர்ணயம்" என்று ஆசிரியர் சமஸ்கிருத மொழி யில் வேறொருநூலை எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

ஆசிரியர் எழுதிய "புனர் ஜென்ம ஆக்ஷேபம்" என்ற நூலி லும் இத்தகைய கிரந்தக்கணக்கு வருகிறது. ஆனால் அந்தக்கணக்கு அதிகாரத்தில் வரும் எழுத்துக்களோடு பொருத்தமாயில்லை. அதே பேர்கொண்ட இருசுவடிகள் பாரிசு அரசியலார் பழஞ்சுவடி நிலை யத்தில் இருப்பதாகவும், ஒன்று தெலுங்கிலும் மற்றொன்று தெலுங்கு எழுத்தில், ஆனால் சமஸ்கிருதத்தில், அமைந்திருப்பதா கவும் தகவல் கிடைத்தது; அவற்றைச் சோதித்துப்பார்த்து அவற் றின் அமைப்பைப்பற்றிய விவரம் தெரிவிப்பார் இதுவரைக்கும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆகவே அச்சுவடிகளிலிருந்து "ஆத்தும நிர்ணயம்" என்ற பெயர் கொண்ட சமஸ்கிருத நூல் இருப்பதற்குச் சார்பாகவோ எதிராகவோ சான்று கூறமுடியவில்லை.

நமக்குக் கிடைத்த சுவடிகளுள் ஒன்றில் மட்டும் அதிகாரங்க ளின் இறுதியில் அவ் அதிகாரத்திற்குரிய கிரந்தக்கணக்கு தமிழ் எண்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் 16 பக்கங்கள் கொண்ட விவேகம் என்ற முகவுரைக்கும், 2, 3, 11, 26 - 31 முத லிய அதிகாரங்களுக்கும் உரியஎண்ணிக்கை குறிப்பிடப்படவில்லை. மேலும் 9 - ஆம் அதிகாரத்திற்கு 2568 கிரந்தங்கள் குறிக்கப்படி ருக்கின்றன. இத்தொகை, விவேகம் உட்பட முதல் ஒன்பது அதி காரங்களுடைய கூட்டெண்ணிக்கையாய் இருக்கலாம். இனி முத லில் அதிகாரத்தின் எண்ணிக்கையும், அதற்கடுத்து அதிகாரம் தொடங்கும் பக்கமும், அதின் பிறகு அதிகாரத்திற்குள்ள மொத்த பக்கங்களும், அதன் பின்னர் அதிகாரத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் கிரந்த எண்ணிக்கையும் முறையாகக்

கீழே கொடுத்திருக்கிறோம்.(1) பக்கம் ஒன்றுக்குச் சுமார் 20 கிரந்தம் எனக் கொண்டு அந்தந்த அதிகாரத்தில் வரும் மொத்தப்பக்கங்களையும், அவற்றினருகில் குறிப்பிடப்பட்டிருக்கும் கிரந்தங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கிரந்த எண்ணிக்கை இவ்வுரைநடை நூலுக்குப் பொருந்தாமை எளிதில் விளங்கும். ஆகவே கிரந்தக் கணக்கு சமஸ்கிருதத்தில் எழுதிய நூலைக் குறிக்கிறது போலும்.

| பாடம் | பக்கம் | பக்கங்கள் | கிரந்தங்கள் | பாடம் | பக்கம் | பக்கங்கள் | கிரந்தங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| (விவேகம்) | 1 | 16 | ? | 20 | 287 | 10 | 120 |
| 1 | 17 | 14 | 244 | 21 | 297 | 13 | 255 |
| 2 | 31 | 11 | ? | 22 | 310 | 13 | 250 |
| 3 | 42 | 11 | ? | 23 | 323 | 13 | 235 |
| 4 | 53 | 12 | 242 | 24 | 369 | 20 | 460 |
| 5 | 67 | 1 | 220 | 25 | 389 | 12 | 205 |
| 6 | 79 | 11 | 280 | 26 | 401 | 12 | ? |
| 7 | 90 | 12 | 280 | 27 | 410 | 13 | ? |
| 8 | 102 | 12 | 285 | 28 | 423 | 15 | ? |
| 9 | 114 | 14 | 2568 | 29 | 438 | 15 | ? |
| 10 | 128 | 12 | 270 | 30 | 453 | 12 | ? |
| 11 | 140 | 23 | | 31 | 465 | 11 | ? |
| 12 | 1[illegible]3 | 23 | 425 | 32 | 476 | 19 | 422 |
| 13 | 18[illegible] | 12 | 240 | 33 | 495 | 15 | 304 |
| 14 | 198 | 11 | 162 | 34 | 509 | 16 | 337 |
| 15 | 209 | 17 | 350 | 35 | 525 | 1[illegible] | 380 |
| 16 | 226 | 23 | 510 | 36 | 541 | 23 | 367 |
| 17 | 249 | 12 | 274 | 37 | 564 | 13 | 265 |
| 18 | 261 | 16 | 300 | 38 | 677 | 19 | 545 |
| 19 | 277 | 10 | 200 | முடிவு | 596 | | |

(1) 23-ஆம் அதிகாரம் 366-ஆம் பக்கத்தில் முடிவடைகிறது. 24-ஆம் பாடம் 369-இல் (அதாவது 32 பக்கங்களுக்குப் பிறகு) தொடங்குகிறது. இரண்டு அச்சகத்தார் இந்நூலை அச்சிடும் பணியில் ஈடுபட்டிருக்கப் பக்கக் கணக்குச் சேர்ந்து வரமுடியவில்லை.

## ஆத்தும நிர்ணயமும் வெர்டியர் அடிகளாரும்

இந்நூலைத் தத்துவ போதகர் இயற்றிய காலந்தொட்டே அவர்தம் சீடர்களும் கூட்டாளிகளும் பயன்படுத்தினர். பிற மதத்தினரோடு போராடுகையில் இந்நூலிலிருந்து மேற்கோள் காட்டித் தமது கொள்கையை நிலைநாட்டினர். "வேத விகற்பத் திக்காரம்" என்ற நூலில் முத்துசாமிப்பிள்ளை இந்நூலைப் பல இடங்களில் கையாண்டு எதிர்ப்பக்கத்தைத் தாக்கித் தமது கொள்கையின் பொருத்தத்தைக் காட்டுகிறார். மதுரை மிஷனுக்குப் பல ஆண்டுகள் தலைமைதாங்கிய வெர்டியர் அடிகளார் இந்நூலை மிகவும் மதித்துக் கற்றார் என்பது அவரது சொல்லாலும் செயலாலும் வெளிப்படுகிறது. இதை அவர் எழுதிய கடிதம் ஒன்று உறுதிப்படுத்தும். அக்கடிதம் வருமாறு :

"நீங்கள் அனுப்பிய பையன் பவுல் மேரி மிகக் கெட்டிக்காரனாகத் தோன்றுகிறான். தத்துவ போதகர் எழுதிய ஞான உபதேச முதல் காண்டம் முழுவதையும் ஆத்தும நிர்ணயத்தில் பதினொரு பாடங்களையும் அவனுக்கு விளக்கிவிட்டேன். அவ்விரு நூல்களுள் ஒன்று மற்றொன்றைச் சார்ந்திருக்கிறது. சிறந்த முறையில் அறிவுரை நிகழ்த்த நிறைந்த கருத்துக்களைக் கொண்டிருந்தும், நம் உபதேசிமார்களுக்கும் குருக்களில் பலருக்கும் அது புதை பொருளாக இருக்கிறது. ஏனெனில் அதன் நடை கடினம். எனக்கு ஓய்வு கிடைக்கும்போது ஒவ்வொரு பாடமாக அவற்றைப் பாகுபாடு செய்து, ஒவ்வொரு வரியில் வரும் அரும் பதங்கள், கடினமான கருத்துக்கள் முதலியவற்றிற்கு விளக்கம் தர எண்ணியிருக்கிறேன். அவ்வாறு செய்யின் இச்சிறந்த நூல்களைக் கிறிஸ்தவர்களும் இந்துக்களும் கண்டுபிடித்துப் பயன்படுத்த முடியும். இவ்வுலகை விட்டு நீங்குமுன் இந்த மிஷனுக்கு நான் கொடுக்க இருக்கும் இறுதி அன்பளிப்பு இதுவேயாகும்".

இந்தக் கடிதத்தை வெர்டியர் அடிகளாரின் வரலாறு எழுதிய தெசால் அடிகள் மேற்கோளாகக் கையாண்டு கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார். "இவ்விலக்கியப் பணிக்குப் போதிய உடல் நலம் வெர்டியர் அடிகளிடம் இல்லை... நமக்குக் கிடைத்தவை சில பாடங்களின் குறிப்புக்களே" *

அக்குறிப்புக்களில் ஒன்று ஆத்தும நிர்ணயத்தில் வரும் 38 பாடங்களுள் முதல் பதினொன்கு பாடங்களுக்கு இலத்தீன் மொழியில் பொழிப்புரை போன்ற சுருக்கமான மொழிபெயர்ப்பாகும். அதிலிருந்து ஒரு பகுதியைக் கீழே கொடுத்திருக்கிறோம்.

---

* வெர்டியர் அடிகளாரின் வாழ்க்கை வரலாறு — தெசால் அடிகளார் இயற்றியது. பக். 255 — 256

Tractatus de Natura Animae

Auctore P. Roberto de Nobili s.j.

Analysis Capituum 1 - 14 a P. L. VERDIÈR s. j.

## Caput I.

Quid est anima? Quotuplicis generis? Quales sunt ejus actus? Quum anima sit intelligens, habetne liberum arbitrium? Quum anima sit forma corporis est-ne immortalis, animae transitus post mortem in aliud corpus? Denique quisnam est animae finis? - Hae sunt questiones quae in hoc libro tractabuntur.

*Prima* questio :- Quid est anima? - Generali modo anima dicitur forma corporis quod habet organa tanquam instrumenta ad excercendos diversos actus, et est principalis causa horum actuum. Dicitur "generali modo", quia in tertio capite quaedam aliae utilitates exponentur.

*Secunda* questio :- [a] Quid est *forma?* (i) Forma est id quod nomen dat rei et praecipue rem specificat. Exempla :- Anima non est in corpore tamquam homo in domo, avis in cavea, etenim homo et domus, avis et cavea retinent suum proprium nomen et non sunt *unum* quid, sed duae res specificae. Anima autem in corpore est ut forma, ita ut ex duobus unum quid efformetur quod habet nomen proprium et specificationem propriam. Unde fit ut unicuique corpori est una et specifica, distincta, specialis forma. Distinctio enim non venit ex elementis corpora constituentibus, quia eadem sunt in quovis corpore. (ii) In entibus, pracipuum est forma. Ergo corpus aptari debet formae non forma corpori. Exempla.

[b] Quot sunt *sensus*? De sensu generali, de sensu aestimativo, de sensu interno. Animal sine sensibus vivere non potest. In quo consistit sensus? . . .

மேலும் இந்நூல்களில் வரும் அரும்பதங்களைப் பொறுக்கி எடுத்து அவற்றிற்குத் தகுந்த பொருளும் விளக்கமும் கொடுத்திருக்கிறார். முதல் பதிப்பில் வரும் முதல் 44 பக்கங்களுக்கு இத்தகைய விளக்கம் தரும் பிரதி நமக்குக் கிடைத்திருக்கிறது. அதிலுள்ள ஒரு பகுதியைக் கீழே கொடுத்திருக்கிறோம். *

நிருணயம் — ( நிர் = plenitude, — நயம் = excellence) full specification, judgement, :treatise
சீவன் — life, soul, vital principle,
ஒப்புவிக்க — to prove, establish.
விருத்தம் — opposition
விபக்ஷம், விபக்கம் — opposite side, contrary
சித்தாந்தம் — conclusion, certitude
விஷயம், விடயம் — particularity, object
சங்க்ஷேபம், சஞ்சேபம் — summary, compendium
விருத்தி — growth, development
இயத்தனம் — instrument
மாத்திரை — form (forma)
நிருபணம் — definition, description
பதார்த்தம் — object
சங்கேதம் — mark, sign, specification, condition, convention
கலசம் — a pot,
சட்டி — a vessel made of earth
பானை — a big pot
மடக்கு — an enormous vessel
திரவியம் — elementary substance, riches
கிரகம் — house
பஞ்சாரம் — cage
சேட்டை, சேஷ்டை — action (actus), operation
சடம் — body, matter (opp. to spirit)
அபிவிருத்தி — growth, augmentation
சாரம் — juice, sap
ஊன் — marrow
ஆதாரம் — support, bottom, foundation
சரீராதேயம் — corporal quality, something depending on the body
தாது — principle, element, constituting elements
தாதுகுணம் — elementary quality

---

மூலத்தைப் [illegible] அமைந்தவை.

**நோக்கம்:** ஆசிரியர் காலத்தில் மதுரை ஒரு சிறந்த பல்கலைக் கழகமாக விளங்கியது. 10,000 பிராமண மாணவர் அங்குக் கற்றனர் என்றும் 200 அல்லது 300 பேர்கொண்ட பல குழுவினராகப் பிரிந்து தாம் விரும்பிய பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியரிடம் கல்வி பயின்றனர் என்றும் அவர்களுக்குத் தேவையான ஊண் உடை உறையுள் முதலியனவற்றை மன்னர் தமக்கு விட்ட மானியத்திலிருந்து ஆசிரியரே கொடுத்தனர் என்றும் தத்துவ போதகர் தமது மடல் ஒன்றில் குறிப்பிடுகிறார். பல கலைகளையும் மதத்தையும் கற்கும் இப்பரந்த சூழ்நிலையில் கிறிஸ்துவ மதத்தையும் அதன் அடிப்படையில் அமைந்த அறிவு நூலையும் கற்பிக்க முனிவர் விரும்பினார். அதற்கான நூல்கள் வேண்டியிருந்தன. 'ஆத்தும நிர்ணயம்' என்ற இந்நூல் அத்தகைய குறையைப் போக்கும் எண்ணத்தில் எழுதப்பட்டதாய் இருக்கலாம். 'இப்பெயர் கொண்ட சமஸ்கிருத நூல்' என்ற தலைப்பில் கூறியபடி முதன் முதலில் இந்நூல் சமஸ்கிருதத்தில் அமைந்திருக்கலாம். பின்னர்த் தமிழ்ப் படுத்தப்பட்டிருக்கலாம். ஏனெனில் அக்காலத்தில் அறிவு நூலை பிராமணர்கள் வடமொழியிலேயே பயின்றார்கள். ஐரோப்பாவில் இலத்தீனில் பயில்வது போல் பாரத நாட்டில் சமஸ்கிருதத்தில் பயின்றனர் என்று முனிவரே சான்று பகர்கின்றார். அறிவு நூலைப் புகட்டும் எண்ணத்திற்கு மக்களின் ஈடேற்றம்தான் முக்கிய காரணமென்பது விவேகம் என்ற முகவுரையால் விளங்கும்.

**கலைச் சொற்கள்:** அறிவு நூல் முறையில் இந்நூல் அமைந்திருப்பதால் அறிவு நூல் பயிலாதவர்கள் அல்லது இவர் கையாளும் கலைச் சொற்களை உணராதவர்கள் இந்நூலை எளிதில் கண்டுணர முடியாது. ஆகவே அக்குறையைப் போக்க ஆசிரியர் கையாளும் கலைச் சொற்களைத் தொகுத்து ஆங்கில மொழி பெயர்ப்போடு நூலின் இறுதியில் கொடுத்திருக்கிறோம். மேலும் இவர் காலத்துக்குப்பின் ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்குப்பின் வந்த வீரமாமுனிவர் இவர் இயற்றிய கலைச்சொற்களுக்கான அர்த்தத்தைச் சுட்டியிருக்கிறார். அதையும் தொகுத்து நூலின் இறுதியில் கொடுத்திருக்கிறோம். ஆசிரியர் காலத்தில் எழுதிய பிரயோன்சா அடிகளாரின் தமிழ்—போர்த்துக்கீசிய அகராதியும், போர்த்துக்கீசிய—தமிழ் அகராதியும் ஆசிரியரின் கலைச் சொற்களின் பொருளை உணரப் பெருந்துணை புரிந்தன.. மேலும் இந்நூலில் வரும் எல்லா அரும்பதங்களையும் தொகுத்து

அவற்றிற்குப் பொருளையும் காட்டி நூலின் இறுதியில் இணைத்திருக்கிறோம்.

**நடை :** 'மற்றப்படியல்ல' என்ற சொல்லால் ஆசிரியரின் வாக்கியங்கள் பல இடங்களில் முடிவடைகின்றன. 306 பக்கங்கள் கொண்ட முதல் பதிப்பில் ஏறத்தாழ 211 முறை இச்சொல் வருகின்றது. மேலும் மேல்வாரியாய் என்று தற்போது பொருள்படும் 'பத்தும்பத்தாய்' என்ற சொல் ஆசிரியர் காலத்தில் 'கவனமாய்' என்ற பொருளில் வருகின்றது; இந்நூலில் மட்டும் 36 தடவை வருகின்றது. இரு பொருள்களைப் பிரித்துக் காட்டுகையில் ஒன்றில்...ஒன்றில், ஆனாலும்...என்கிலும் என்று ஆசிரியர் பல இடங்களில் பயன்படுத்துகிறார். 'அவ்வாறே' என்பதற்கு 'அத்தன்மையாக, அம்மருவாதியே, அவ்வண்ணமே, அந்த விதமாக, அந்தடவாக, அந்தப் பிரகாரமாக, அப்படிக்கொத்த, அப்பேர்ப்பட்ட மேரையாக' என்று பல சொற்களைப் பயன்படுத்துகிறார். 'மேலும்' என்பதற்குப் பதிலாக 'இதன்றியே, இதுக்கப்பால், இதல்லாதே, இது தவிர' என்பன வருகின்றன. அவர்தம் வாக்கிய முடிபில் சில வருமாறு: 'என்று சொல்லாயிருக்கிறது, என்று சொல்லத்தகும், என்கிறதுக்குத் தப்பாது, என்று அங்கீகரிக்கக்கடவோம், என்பது அறியத்தக்க விஷயமாகும், என்று சொல்லவேண்டியிருக்கிறது, என்று சொல்லவும் கருதவும் கூடாது, என்று சொல்லக் கடவோமல்ல, என்று சொல்லக் கணக்கில்லை, என்கிறதுக்குச் சந்தேகமில்லை, என்று சொல்லவொண்ணாது, என்று வரஅறியாது, என்று சொல்ல வருந்தக் கடவோம், இம்மாத்திரம் சொல்லிக் காட்டினது போதும், என்று சொல்ல வேண்டுமொழிய மற்றப்படியல்ல, அப்படியானாலும் இப்படி யென்கிலும் செய்யப்படாது' முதலியன

**பேச்சுத் தமிழ் :** பேச்சுத் தமிழில் வரும் சில சொற்களையும் சொல் முடிபுகளையும் ஆசிரியர் கையாளுகிறார். அக்காலத்தில் கற்றறிந்தோரும் அவ்வாறு பேசியதாலும் தமிழ் உரைநடை நூல்கள் எழுதுவதில் ஆசிரியரே முன்னோடியானதாலும் இத்தகைய வழக்குகள் ஆசிரியர் நூல்களில் வருகின்றன. சில இடங்களில் அவற்றைப் பிற்காலத்தவர்கள் திருத்தியிருக்கிறார்கள். சான்றாக முதற் பாடத்தில் 'ஞானோபதேசம்' என்பது 'ஞானோபதேச காண்டம்' என்று முதற் பதிப்பில் திருத்தப்பட்டிருக்கிறது. ஆசிரியர் கையாண்ட பேச்சு வழக்குச் சொற்

களுள் சில வருமாறு: ஆச்சுது, போ'ற, தோர்வை, உசந்த, உசத்தி, கூடித்து(ற்று), பிதத்துதல், மாஸ்தை, மனைதல்(வனை) எளிசாய், துலேயும், பிலம், குடுத்து, பூர(புக), ஒஞ்சு, பட்டுது, அஞ்சு(5), அதுகள், விரை(தை), ஏத்திருக்கும், போரும், பிறப்பிடல்(புற), காரணமன்னிலே (காரணமின்றி), தோப்பன் மார், ஒருமிச்சார், துள்ளி(துளி), இத்தை(இற்றை), இவடத்தில், வேணும், சிலவழி, அங்கீகரிச்சு, பன்னி முதலியன. இவை தவிரப் பண்ணிருலே பண்ணிருய் (பண்ணச்தான் வேண்டும்), இல்லாதே போகத் திரிந்துது (இல்லாமற் போயிருக்கும்), அத்தை, அத்தால், அத்தின் (அதை, அதால், அதின்), திரியச் செய்தே (திரிய, திரியச்சே), சிறிது விசேஷங்கள் (சில விசேஷங்கள்) முதலிய வழக்குகள் குறிப்பிடத்தக்கவை.

ஆசிரியர் கூறும் பொருள் அறிவு நூல் பட்டதாலும், அந்தகைய நூல்கள் வடமொழியிலே பெரும்பாலும் அமைந்ததாலும் வடசொற்கள் நிறைய வருகின்றன. எனினும் வடசொற்களை வலிந்து புகுத்துவதாய்த் தோன்றவில்லை. ஆசிரியர் காலத்தில் கற்றறிந்தோர் பேசியதுபோல் ஆசிரியரும் பேசுகிருர். தமது உள்ளத்தில் தோன்றும் கருத்துக்களைத் தங்கு தடையின்றி வெளியிடுகிருர். தமிழ்ச் சொல் அகப்படாவிட்டால் வடசொல்லைப் பயன்படுத்துகிருர். அதுவும் கிடைக்காவிட்டால் தாமே சில சொற்களைப் படைத்து அவற்றின் துணை கொண்டு வெளியிடுகிருர். ஆசிரியர் படைத்த சொற்கள் சிலவற்றை வீரமாமுனிவர் குறிப்பிடுகிருர். அவை நூலின் இறுதியில் வருகின்றன. தமிழிலே அறிவியல் நூலைக் கற்க முடியுமா என்று ஐயுறுவோர் இந்நூலைப் பயிலவேண்டும். முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரே தத்துவ போதகர் முடியும் என்று தமது செயலால் காட்டியிருக்கிருர். மறை நூல் பயின்றவர்கள் கூடக் கேட்காத சில நுட்பமான கேள்விகளுக்கு விடையளிக்கிருர். இதற்கு ஒரு சான்று: சரீரியான தீ அசரீரியான பேய்களையும் நரசீவன்களையும் எவ்வாறு எரிக்கும் என்ற கேள்வியை எழுப்பி அதற்கு விடையளிப்பது வருமாறு: எல்லா வல்ல கடவுளுக்குப் படைக்கப்பட்ட பொருள் கீழ்ப்பட்டிருப்பதால் அதன் மீது அவருக்கிருக்கும் சிரவணிக சத்தியைக்கொண்டு, தீக்குப் பண்ணுகிற சத்தியும் அசரீரிக்கு தரிக்கிற அல்லது ஏற்கிற சத்தியும் கொடுத்து, தீ எரிக்கவும், அசரீரி எரிபடவும் செய்கிருர். இதுபோலப் பல செய்திகள் வருகின்றன.

**திருத்தமான பதிப்பு:** ஆசிரியர் எழுதிய நூல் பல நூற்றுண்டுகளுக்குப் பின்னர்‘அச்சாவதால் பல பாடபேதங்கள் இருக்கின்றன. முதல் பதிப்பில் ‘களப்பிற பிரசாதம்’ கீழ்ப் பிரசாதம் என்றிருந்தது. ஒரு பிரதியில் ‘களபபிறசாதம்’ என்றும் மற்ருெரு பிரதியில் ‘களபபிறபிறசாதம்’ என்றும் இருந்தது. ‘களபபிறசாதம்’ என்பதை முதல் பதிப்பில் ‘கீழ்ப் பிரசாதம்’ என்று தவருய்த் திருத்தியிருக்கின்றனர். மேலும் கழகொடியாய் என்ற சொல் நூலின் இறுதியில் வருகிறது. இதைக் ‘கடைகோடியாய்’ என்று திருத்தியிருக்கிரும். கடை கோடியாய் என்ற சொல் களகொடியாய, கழகொடியாய, கள் குடியாய் என்றெல்லாம் திரிந்து வந்திருக்கிறது. போர்த்துக் கீசிய தமிழ் அகராதி ஒன்றில் ‘இறுதியாய்’ என்பதற்குக் ‘கழ கொடியாய்’ என்று இருக்கிறது. மூன்று நூற்றுண்டுக்கு முன்னரே இப்பிழை ஏற்பட்டிருக்கிறது போலும். சில இடங் களில் இன்னும் பாடம் விளங்கவில்லை. பல அலுவல்களிடையே அச்சாகும் இந்நூலில் பல பிழைகள் வந்துவிட்டன. அவற்றை விடவேண்டியவை, சேர்க்கவேண்டியவை, திருத்தவேண்டியவை என்று மூன்று பிரிவாய்ப் பிரித்து அவற்றைத் தடித்த எழுத் தால் குறிப்பிட்டிருக்கிரும். எழுத்துக்கள் விடப்பட்டுத் திருந்திய பாடம் கொடுக்கும்போது தடித்த எழுத்துகள் வர வில்லை. ஆனல் திருந்தப்படவேண்டிய இடம் அல்லது திருந்திய இடம் தடித்த எழுத்துக்களால் சுட்டப்படுகின்றன. அடுத்த பதிப்பு இப்பிழைகள் நீங்கிச் செம்மையாய் அமையும்.

### விடவேண்டிய இடங்கள்

1·5↑ **இரண்டாவது** 2·12 அழியாத, 18·3 **intelligent,** 19·5↑ வாசமாய், 62·5 **பாவம் வேண்டாம் ... நரகத்திலே விழுந்ததினுல் முழுதும்,** 70·6 **சொல்லிக்,** 82·10 வியர்த்தமாய், 87·14 மோக்ஷ கரை, 116·6 அங்கீகரிக்கிறதுக்கு, 120·7 பண்ணுர் கள், 121·12 செனமானதை, 140·3↑ பிரமாணத்திஞல் ஒப்பு, 154·14 அத்தன்மைபோல, 155·7 வாங்காதபோதே, 163·9↑ இன்னம், 170·9 ஆதேயமா, 171·2↑ அங்கீகரித் தோமாஞற், 186·14 காலத்திலே, 204·8 சேட்டைகளுண் டாய், 205·9↑ சத்தியானது, 207·8 வரச்செய்தே, 229·2 என்கிறதிலே, 230·4 பிறக்குமொழிய, 236·20 கேவல விரோத, 239·21 ஓலேயெழுத்தன், 256,17 பாவங்களிலே,

269·5 நிமித்தமாக, 285·21 பெருமைகளிலேயும், 315·1↑ வருமென்று, 324·12 **கிருபையுள்ள திருவுளப்படியே மனுஷ னுக்குக்,** 376·16 யக்கியத்தின், 377·10↑ இருத்தியடை, 378·23 சட்டை பண் (389·18), 395·1↑ மானது அகாலே, 404·13 மாகிற **ஸ்தலமாகிற** ஸ்தல, 421·26 பரமானந்த, 476·17 முப்பத்திரண்டாம், 480·33-35 உதாகரணம், 481·3 குறையற்ற **பிரத்தியக்ஷ** பாக்கிய, 487·6 அப்படிக்கொத்த, 488·10 தோற்றிவிக்க, 530·20 களையும் [3]**கட்டளையும்** கட்டளை, delete note 3, 532·2 களுக்குத், 533·16 கச்சைக, 536·25 தம்முடைய **தம்முடைய,** 540·2↑ யாவரர்க்கும், 547·11 சுபாவமான, 590·26 ஒரு.

### சேர்க்கவேண்டிய இடங்கள்

4·1↑ மென்கிற **சுவாதந்திரியமுள்ள விருத்திக்குக் காரணமாய் இருக்குதே. அந்த,** 5·2 படுத்தப், 5·15 உண் டானுற், 6·21 பூலோகத், 6·23 இல்லாது போம், 28·22 ஒவ்வாமல், 30·3↑ சுவாதந்திரிய, 41·12 சேட்டையைப், 54·1 கிரிகைகளை, 64·13 என்றும், 69·8↑ நடவாமல் **விழுந் துபோம் என்கிறதுக்குத் தப்பாது. அப்படியே,** 74·21 இராசாவினுடைய, 75·7 வேணும், 81·7↑ என்று **எல்லாரும் சம்மதிச்சிருக்கிறுர்களே, லலாட லிபி உண்டென்று,** 81·20 லிபி, 82·13 வல்லவனுய், 84·3 தாற்பரியம், 87·5↑ கர்த்தரானவர் (126·4), 88·8↓ யங்களுக்காகத், 89·9↑ மறுத்துத்தரம், 89·8 லலாட லிபியை, 100·1 **தக்கதாகப்.** 118·1 ரானவர், 125·2 ஆனபடியினுலே, 143·16 ஆத்தும மானது, 146·12 இதன்றியே, 149·15 மாட்டாதென்று, 149·19 நம்மால், 152·8↑ உண்டாக்கிறதுக்கு, 183·5 சம்பந் தத்துக்கடுத்த, 183·25 மதிகெட்டவனுனுலுஞ், 193·5 நிர்ப் பாக்கியங்களையும். 193·8 **சம்பாவனைத்,** 194·5 தயைக், 199·6 ரூபமான, 203·1↑ இப்படிச், 223·5 நிர்ப்பாக். 224·16 நிர்ப்பாக்கியனுய்த, 225,9 அனுபவியாமல், 241·17 இப்படிப், 248·3 லேகிகனுயி, 250·6 கட்டுக்கதை, 305·18 அவனுக்குத், 328·9 போறதுமில்லை, 372·1 இங்கேயும், 374·23 அபேக்ஷியாதவர்; 377·1 தீக்ஷதருக்குள்ளே, 377·1↑ யாய்ப், 379·7↑ உங்களுக்கு, 381·6 கர்த்தர், 383·15 அங் கீகரிக்கிற, 384·16 புண்ணியாத்து, 385·9↑ உண்டாக்கிற, 386·6 புண்ணியாத்துமா, 386·23 தேவேந்திரன். 388·7

பேர்களுக்குச், 389·4 பராமரிசித்து, 389·23 குறை, 390·13 அங்கீகரித்துச், 390·24 பித்துக், 391 21 யெல்லாம் விட்டு ஒரு, 392·1 மானுல், 393·6 மேரைகளை, 394·9 ↑ நாமதே யத்தை, 395·1 ↑ களுடைய, 399·4 அங்கீகரிச், 401·16 வகையாகப், 404·16 அங்கீகரிக்கிற, 419·14 மானுனவன்... கருதவுமாட்டான், 422·4 ஆசைப்பட்டு, 440·1 ↑ வைக்கத், intellectu, 444·8 ↑ முதலானவை...கொண்டி...பண்ண... மகிமை, 450·12 சன்னிதானததிலே, 452·14 கால ஸ்தல, 453·23 செல்லுமென்று...கிரகிக்கும், 454·3 எடுத்து, 457·1 ↑ சூரியனைச், 460·7 யிருக்கிற, 466·24 மனுஷனுனவன், 471·5 கர்த்தரானவர்...பாக்கியமாகிற, 475·5 விருத்திகளை.... பொருளின், 479·28 வரைப்...கண்டுபிடிக்கிற, 480·27 தக்கதாக, 481·1 ↑ தாகப், 485·1 ↑ சருவேசுரனுனவர், 487·9 ↑ உண்டாக்க...பிரமவாதி, 489·21 பிரத்தி, 492·28 அறிய, 498·2 லேயும் சத்த தெரிசனத்திலுலேயும், 505·13 காட்டிலும், 508·14 அடைஞ்சிருக்கிற, 513·12 அடையாமல் 518·7 ↑ முகிவில்லாத பத்தியானது, 528·3 பாவிகளுக்குப் 529·9 மோட்ச, 529·16 பாவத்தைச் சகல, 538·27-28 கொண்டும் (2), 538·3 ↑ கசசாயம், 540·1 ↑ கட்டளையிடப், 534·4 அர்த்தத்தைச், 543·7 ↑ விஷயக சுவாதந்திரியம், 546·16 சுவாதந்திரியமானது அவதிக்குத்தக்க மேரையுள்ள சுவாதந்திரிய, 549·8 நாலாம், 550·22 இப்போது, 551·10 கூடச், 552·27 திருவுளத்தில் நின்று, 558·9 அக் கினியின், 559·20 வேகத்தக்க, 561·25 மோக்ஷ, 563·7 மாக்க, 570·10 ரோசகமாய், 571·14 சக்தியைக்கொண்டு, 573·1 வசனமானது, 590 34 என்றென்றைக்கும், 595·24 பிரசாதத்திலுலேயும்,

### தடித்த எழுத்தாக மாற்றவேண்டிய இடங்கள்

9·6 ↑ துலக்க, 10·12 பறைகளாயிரு, 11·15 புத்தி விஷயத்தின், 12·1 சத்த, 12·21 கிளப்பிற பிரசாத, 14·2 எப்போதும் எப்போதும், 15·1 ↑ யாதன சரீரம், 16·7 அனுபவி, 17·2 ↑ reason, 23·20 சொல்லப்படாது, 24·13 கூட்டுகிற, 37·22,25 விசேஷியத்தோடே, 50·2 ↑ பாரதந் திரியம்(51·6), 55·19 அனுபவிக்கிற, 56·13 தோடேநடத்திற 56·3 ↑ தருமத்தையானுலும், 88·3 ↑ தெக்ஷிணே, 88·6 ↑ மனுஷ, 98·2 ஆனந்த, 111·1 தைச், 113·8 திருவுளப்

படியே, 115 defect. 118·23 அது மிகவும். 125·17 ஒவ்வாதோ. 142·6 ↑ அது நரசீவனிடத்திலே. 144·7 ↑ கொண்டிருந்ததோ. 145·3 கூடிக். 188·1 ↑ மனுஷ்யனைவன. 190·11 ↑ லோகத்தை. 191·7 ↑ சம்பாவனே. 192·5 இடா. 202·2 ↑ காரணமேதென்றால். 219·0 மனமார. 224·8 மறுவுத்தாரம். 225·18 சென்ம. 225·2 ↑ லலாட. 229,3 கர்மங்களுக்கு. 229·11 இருக்க...சொல்லு. 231·4 போகத்தின். 237·20 விருத்திகளானதுகள். 239·11 சீவனு. 239·22 வீணாய். 240·19 விளங்க. 241·6 நடத்தத்தக்க. 241·16 வியக்தி. 243·2 சம்மத. 245·17 சரீரத்தை. 255·4 ↑ உபாய 257·3 கோதும்பை. 263·16 இராசாவானவன். 263·19 தள்ளிவிட்டால். 264·4 அனுசரிக்கும். 265·16 அங்கீகாரமானதைப். 266·9,10 முதலான. ஸ்தலத்தை; 267·1 வளர்த்தி 267·7 பொருட்களுக்காக. 271·7 கர்மங்களை. 273·6 உற்பவியாமற். 273·3 ↑ சர்வே. 275·4 கர்த்தனுலே. 275·7 மனுஷருக்கு. 275·11 சென்ம. 277·6 பண்ணுகிறதுக்கு. 277·14 தப்பறை. 278·17 இருக்கிற. 278·8 ↑ நிர்ப்பாக்கிய. 279·13 நீதி-ரீதி?. 280·6 சாமர்த்தியமுள்ள. 280·13 கொடுத்தானுழிய. 285·2 குறைவில்லாமல். 289·4 உண்டாக்கினீர். 302·16 ஊழியமாகிற. 310·15 பயிரிலே. 314·7 உண்டாக்குவதற்கு. 314·26 உடைத்தான. 322·17 ஆக்கினே. 322·9 ↑ கர்த்தரானவர். 322·7 ↑ யுண்டானுல். 329·4 யானவள். 333·11 அதேதெனில். 335·16 சலபானத்தை. 336·1 ↑ வெளிப்படு. 375·4 பர்த்தா. 375·7 தான். 379·1 வண்ணிய. 380·17 யிருக்கக். 381·11 சுகத்தைப். 381·19 சரீரம். 383·16 பேர்கள்...கீழாயிருக்கிற. 383·17 மென்றும். 383·7 ↑ தனக்கு. 385 16 மகா. 397·5 பனிரண்டாம். 398·9-10 ↑ சத்தத். 399·5 ↑ வெறுமனே. 400·17 மோக்ஷத்தை. 401·9 அடை. 402·8 சம்மதித்துக். 402·12 ஆத்துமத்துக்கு. 402·5 தேவோக்கித்த. 406·3 பேரிட்டார்கள். 413·4 அப்புவு. 413·3 ↑ இழந்து. 414 8 ↑ கூடாது. 415·6 யாராஞ்சு. 423·8 ↑ ஞாயத்துக்கு. 428·6 ↑ வஸ்து. 434·22 காமைப் (435·23). 445·6 ↑ நிற்செயம். 447·19 சகல...நடத்துகிற. 449·5 சரீர. 454·17 எந்தடவென்று... 'பிரகிருதி. 454·3 ↑ 'சரீரூபம். 466·5 ↑ தொந்திரு. 469·2 ↑ சொல்ல. 474·9 ↑ போது...அப்படி 3 ↑. 478·8 கூடாது. 480·14 தக்ஷிணை. 481·19 இது. 482·8 என்றறிந்து.

**483·7** இட்டருளு. 487·16 தனக்கு விஷயமாயிராமல்?. **491·14** அதிகமாக. 492·18 தெய்வீக. 493·10 நிற்கு மென்று. 495·5 ரூபனா. 496·20 வேணும். 510·3 இணை(?) **513·27** (514 17) காட்டினியம். 518·17↑ சொல் லப்படாது. 519·4↑ சனமான. 523·8 மோக்ஷத்தை. **525·10** முதலான புண்ணிய. 527·3↑ பத்தி. 528·8 இருபையையும். 533·6 சன்னிதி (533·14. 535·1↑). **541·6** உபதேசித்த. 542 **Qui fecit te sine te, non salvabit te sine te – S. Aug.,** 545·7↑ நரக. 548·13 கூடின. **549·3↑** இருக்கிறார். 551·2 ஒன்றில். 565·16-17 பூமியிலே திரிகிற இப்படிப்பட்ட தெளிவற்ற மனுஷனானவன். 569·12 என்கிற பதங்களும் பத்தும்.... 578·8↑ தரிக்கிற சக்தி. **571·6** சரீரத்தினுடன். 572·12 உண்டாக்குகிறதுக்கு. **572·16** தரிக்கிற. 572·19 கொண்டிருக்கிற (தரிக்கிற பா.பே.) சத்தியானது. 572·21 அந்தச் சத்தியைக் கொண்டு. 578·21 ஆஸ்பதமாய். 583·1↑ சொல்லத்தகும். 584·7 பிராமணனை யும். 590·24 ஒருக்காலாகிலும். 600·6 விலாசம்(2)-விசாலம்

இந்நூல் உருவாகி மூன்று நூற்றாண்டுக்கு மேல் ஆனதாலும் 1889ல் தான் முதன்முறை அச்சானபடியாலும் பல பாட பேதங்கள் காணப்படுகின்றன. பிற்காலத்தில் வந்தவர்கள் ஆசிரியரின் பேச்சு நடையை மாற்றியிருக்கிறார்கள். கூடியவரை ஆசிரியர் எழுதிய பாடத்தைத் தேடிப் பார்த்து அதன்படி அச்சிட்டிருக்கிறோம். சென்னையில் உள்ள பழஞ்சுவடியும் செம்பக னூரில் உள்ள பழஞ்சுவடிகளும் இதற்குப் பெருந்துணை செய்தன. சென்னைச் சுவடியின் பாட பேதத்தைப் பெற சென்னை அதிமேற்றிராணியார் வண. அருளப்பா ஆண்டகை பெருந்துணை செய்தார். அவருக்கும் அவர்தம் விருப்பத்திற்கு இணங்கி இக்கடினமான அலுவலில் ஈடுபட்டவர்களுக்கும் நமது உளங்கனிந்த நன்றி. இந்நூலை அச்சிட உத்தரவளித்த பெரியோருக்கும், இது அச்சாவதில் பெரும் அக்கறை எடுத்தது மட்டுமன்றி இதைப் படி செய்து உதவிய காலஞ்சென்ற சோலியர் அடிகளார்க்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**20 மே 1967**

**தத்துவ போதகர் நம் நாடு வந்த ஆண்டு நிறைவு நாள்**

தூய சவேரியார் கல்லூரி
பாளையங்கோட்டை

ச. இராசமாணிக்கம் சே. ச..

# ஆத்தும நிருணயம்

## விவேகம்[8]

### सत्ताहीनस्य मर्त्यस्य निखिल जगतीलाभेनापि किं प्रयोजनं?

("சத்தாஹீனஸ்யா மர்த்தியஸ்யா நிகிலஜகதீ லாபேநாபி கிம் ப்ரயோஜனம்?" மனிதன் உலகமெல்லாம் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தன்னாத்துமத்தைச் சேதப்படுத்தினால் அவனுக்குப் பிரயோஜனமென்ன?" மாற்கு 8 : 36.)

**0.1 கர்த்தரது வாக்கு:** திவ்விய குருவானவர் திருவுளம் பற்றின இந்த வாக்கியங்களுக்கு ஆன அர்த்தத்தைக் கண்டு பிடித்தோமானால் ஆத்தும நிருணயம் என்கிற இந்த [1]நிபந்தனத்தைப் பண்ணத்தக்கதாக நமக்கு உண்டாயிருக்கிற கருத்து விளங்கும் என்கிறதுந் தவிர, அனைவன் தன் ஆத்துமத்தைக் [2]கரையேற்றுகிற வர்த்தமானம் மிகவுங் கனமானதாய் இருக்கு தென்று அறிந்து, அதினுடைய [3]ஈடேற்றத்தை நிறைவேற்றத் தக்கதாகப் பிரயாசம் என்னப்பட்ட யாவுக்கும் பின்வாங்காமல், லோகத்திலே காணப்பட்ட பாக்கியம் என்னப்பட்டதெல்லாம் [4]திரணமாக [5]விசரித்துத், தன்னை ஈடேற்றத் தக்கதாகக் கர்த்தனுடைய சுபாவ சுரூபத்தை அறியவும் அவர் கற்பித்த சகல நிர்மல புண்ணிய நெறியிலே நடக்கவும் துணிவான். இது நிமித்தமாகத் திவ்விய குருவானவர் திருவுளம்பற்றின இந்த வாக்கியங்களுக்கு அர்த்தத்தை எல்லோரும் அறிந்து, முன் சொல்லப் பட்ட பிரயோசனத்தை அடைகிறதற்கு அந்தந்தக் கிரந்த வார்த்தைக்குத் தமிழ் பாஷையிலே [6]பிரதிபதங்களைச் சொல்லி, அதற்கு எல்லாத்துக்கும் ஆன [7]தாற்பரியத்தை வெளிப்படுத்தக் கடவோம்.

**0.2 அதன் பொருள்:** இரண்டாவது அவ்வண்ணமே திவ்வியகுரு அருளிச்செய்ததை அறியும்படிக்குத் தமிழ் பாஷையிலே பிரயோகிக்கத்தக்க பிரதிபதங்களாவது: "யாதொருத்தன் தன் ஆத்துமத்தினுடைய சேதத்தை அடைந்தால், சகல லோகத்தினுடைய லாபத்தையானாலும் அடைந்திருக்கிற அப்

1 புஸ்தகம் 2, 3 மீட்பு 4 புல்லாக 5 கருதி
6 பதவுரை 7 கருத்துரை 8 முகவுரை

படிப்பட்ட மனுஷன் பொருட்டாக, என்ன பிரயோசனம் வரப்போகிறது?" இதற்கு அபிப்பிராயம் ஏதென்னில், லோகத்திலே அனுபவிக்கப்படலான சுகபோகம் என்னப்பட்ட யாவையும் அனுபவித்தாலும், சகல சம்பத்துகளாகிற தன தானிய முதலான அயிசுவரியங்களை மனுஷன் சம்பாதித்திருந்தாலும், லவுகீக பெருமையாகிற இராசாங்கம் முதலான சோபனங்களினாலே விளங்கப்பட்டவனாய் இருந்தாலும், நீர்மேல் குமிழிக்குச் சரியாய் இருக்கிற இப்படிப்பட்ட பாக்கியங்களை நாலுநாள் மாத்திரம் அனுபவித்த மனுஷனானவன், பண்ணின பாவங்களின் நிமித்தமாக மரணத்திற்குப் பிற்பாடு அவனுடைய ஆத்துமம் நரகத்திலே விழுந்து நரகத்தினுடைய ஒழியாத அக்கினிக்குள்ளே அழியாதக் கட்டையாய்க் கிடந்து, தனது ஆத்துமத்தினுடைய என்றென்றைக்கும் நிற்கத்தக்க சேதத்தை அடைந்தானானால், லவுகீக வெகுமான தனதானிய போக சுகங்களினாலே அப்படிப்பட்ட மனுஷனுக்கு வரத்தக்கப் பிரயோசனமேது? இதற்குத் தாற்பாரிய மாவது: பூலோகத்திலே அனுபவிக்கப்படலான போக பாக்கியங்கள் என்னப்பட்ட யாவையும் நாலுநாள் மாத்திரம் அனுபவித்துக்கொண்டு வந்த மனுஷனானவன் நரகத்திலே விழுந்து அதிலே என்றென்றைக்கும் நிற்கத்தக்க கனமான சேதமாகிற மனோ வாக்குக்கு எட்டாததாய் இருக்கிற வாதை நோவுகளை அனுபவிக்கும்போது, ஒரு க்ஷணத்தில் எரிந்தணைந்து போன வாணத்துக்குச் சமானமாயிருக்கிற லவுகீக போக பாக்கியங்களை நாலுநாள் அனுபவித்த மனுஷனுக்கு, அதெல்லாம் [1]அப்பிரயோசனமாய் இருக்கும் என்கிறதற்குச் சந்தேகப்படத் தகாது.

**0.3 அஞ்ஞானத்தால் நரகம்:** மூன்றாவது, பாவத்துக்குக் காரணம் அஞ்ஞானம். ஆனால் சரீரத்தை விட்டுப் பிரிந்த ஆத்துமமானது நரகத்தினுடைய சேதத்தை அடைகிறதற்கு அது பூலோகத்திலே சரீரத்தோடே திரியும்போது அது அடைந்திருக்கிற வேறேயொரு சேதமானது காரணமாய் இருக்கக்கொள்ள, அப்படிப்பட்ட சேதமானது இன்னதென்று வெளிப்படுத்தி, அத்தை நிவாரணம் பண்ண வேணுமென்கிற

1 பயனின்மை

கருத்தானது ஆத்தும நிர்ணயம் என்கிற நாமத்தைக் கொண்டிருக்கிற இந்தப் பிரபந்தத்தை நாம் உண்டாக்கத் தக்கதாகப் பிரயாசப்படுகிறதற்குக் காரணமாய் இருந்ததொழிய மற்றப்படி அல்ல. அது எப்படியென்றால், மனுஷனானவன் கரையேறுகிறதற்குத் தனது ஆத்தும விஷயத்திலே அவன் அறியவேண்டின சில விசேஷங்களுண்டு. அதுகளை அநேகம் பேர்கள் அறியாமலிருக்கிறதுந் தவிர, [1]தங்கள் ஆத்தும விஷயத்திலே மகாமகாப் பட்ட தப்பான விசேஷங்களை அங்கீகரித்துக்கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட அஞ்ஞானமானது பூலோகத்திலே பிழைத்திருக்கிற மனுஷனானவன் தனது ஆத்தும விஷயத்திலே அடைந்திருக்கிற [2]முந்தின சேதமென்று சொல்லத்தகும். இப்படிப்பட்ட சேதமானது நரகத்திலே விழுந்த ஆத்துமமானது அடையப்போகிற ஒழியாத சேதத்துக்குக் காரணமாய் இருக்கக்கொள்ள, நரகத்தினுடைய சேதத்தை நரசீவன் அடையாதபடிக்கு பூலோகத்திலே [3](சரீரத்தோடே கூட அது திரியுங் காலத்திலே) முன்சொல்லப்பட்ட அஞ்ஞானமாகிற சேதத்தை அடையாமலிருக்க வேண்டியிருக்கிறது. ஆகலாலே அப்படிப்பட்ட விஷயத்திலே அறியவேண்டின சத்தியங்களுடைய ஞானமாகிற பிரகாசத்தினாலே முன்சொல்லப்பட்ட அஞ்ஞானமாகிற அந்தகாரமானது நீங்க வேணும் என்கிறதற்காகக், கரையேறுகிறதற்கு அறியவேண்டின அப்படிப்பட்ட சத்தியங்களைக் கொஞ்சத்துக்குள்ளே எவ்வளவாகிலும் வெளிப்படுத்த ([4]வருந்த)க் கடவோம்.

**0.4 நூலின் அமைப்பு — உயிரின் தோற்றமும் இயல்பும் முடிவும்:** அதிலே நம்மால் அனுசரிக்கப்படத்தக்க கிரமமுள்ள மேரையாவது: நரசீவனுனது [5]உற்பவிக்கிற வகையையும், நரசீவனுக்கு உண்டான [6]சுபாவத்தையும், இனிமேல் நரசீவனுனது அடையப்போகிற [7]கெதியையும் அறியப்பண்ணுவோம். அவ்வண்ணமே அதெல்லாம் அறிவிக்கும்போது ஆத்துமத்தினுடைய தோற்றமும் [8]ஒடுக்கமும் இன்னதென்று நம்மால் அறிவிக்கப்பட்டாப் போலாகும். ஆனால் இந்த இரண்டு விசேஷங்களை அறியத்தக்கதாக மகா மகாப்பட்ட

1 தனது (பா.) 2 முதல் 3 — 4 —
5 தோற்றம் 6 இயற்கை 7 முடிவு 8 இறுதி

பேர்கள் மிகவும் பிரயாசைப்பட்டுங் [1]கண்டுபிடிக்க மாட்டாமல் இருக்கிறார்களே. ஆதலால், அவர்கள் [2]அப்பிரயோசனமான வருத்தத்தை விட்டு இந்த விஷயத்திலே [3]சபலமாய் அவர்கள் பிரயாசப்படுகிறதற்கு யோக்கிய வழியானது நம்மால் திறக்கப் பட்டாப் போலாகும்.

## 0.4 பாடங்களும் அவற்றின் உள்ளுறையும்.

1. அவ்வண்ணமே சேட்டைக்குக் காரணமானது சீவனுடைய இலக்ஷணமாயிருக்கச் செய்தே, எந்தச் சேட்டையினாலே சீவனுண்டென்றும், அதினுடைய [4]விருத்தியானது எப்படிப்பட்டதென்றும் கண்டுபிடிக்கலாமென்கிற விசேஷமும் சீவனுனது சரீரத்திற்கு மாத்திரையாயிருக்கும் மேரையும், இந்த முதற் பாடத்தில் ஒப்பிப்போம் என்கிறதினாலே சீவனுடைய சாதாரண நிருபணம் இன்னதென்று அதிலே சொல்லப்படும் (என்கிறதுக்குச் சந்தேகமில்லை).

2 அறிக்கையென்கிற ஞானமான (விருத்தியான)து இன்னதென்றும், அது சரீரத்திலே ஆதேயமாயிராமல் ஆத்துமமானது மாத்திரம் அதற்கு ஆதாரமாய் இருக்கிறதினாலே, ஞான விருத்தியைப் பண்ணிக்கொண்டு வருகிற நரசீவனுனது அழிவில்லாமல் என்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளாய் இருக்கிறதென்றும், ஞானவிருத்தியானது உற்பவிக்கிற பொருளிலே மாத்திரம் ஆதேயமாய் இருக்கலாமொழிய வேறே பொருளோடே [5]சேர்ந்திருக்கக் கூடாதென்றும் இரண்டாம் பாடத்திலே சொல்லிக் காட்டக்கடவோம்.

3. அதிலே சிறு பிள்ளைகளுக்கும் பயித்தியக்காரனுக்கும் உண்டாயிருக்கிற அறிக்கையின் மேரையிலே கேட்கப்படத்தக்க சந்தேகத்தை நிவாரணம் பண்ணி, இதற்கடுத்த சொற்பனத்தினுடைய [6]சொரூபத்தையும் மூன்றும் பாடத்தில் வெளிப்படுத்துவோம்.

4. நரசீவனுனது ஞான விருத்தியைப் பண்ணிக்கொண்டு வருகிறதுந் தவிர, வேணும் வேண்டாமென்கிற சுவாதாந்திரியம்

1 கண்டுபிடியாமல் (பா. பே.) 2 பயனற்ற 3 பயன் தரும்
4 செயல் 5 சார் (பா. பே.) 6 சுருபம்: இயற்கை

இன்னதென்றும், அதினுடைய பலபல வகைகளும் நாலாம் பாடத்திலே நம்மாலே வெளிப்படுத்தபடும். ஆதலால் சர்வேஸ் வரனுடைய சுவாதந்திரியம் எப்படிப்பட்டதென்றும், மோக்ஷம், நரகம் அடைந்தபேர்களுடைய சுவாதந்திரியம் இன்னதென்றும், அவதியை அடையாத வழிப்போக்கனாகிற மனுஷனுடைய சுவாதந்திரியத்தின் சுபாவ சொரூபத்தையும் வெளிப்படுத்து வோம். அத்தால் மனுஷனும் மிருகாதிகளும் தனது கிரிகை களைப் பண்ணுகிறதினாலே உள்ள வித்தியாசம் இன்னதென்று கண்டுபிடிக்கலா யிருக்கும்.

5-6. மனுஷனுக்குண்டான சுவாதந்திரியத்தின் பெருமை யைத் தெளிவற்ற பாவிகள் அறியாததினாலே [1]லலாட லிபியைக் கற்பித்திருக்கிறார்களே, அப்படிப்பட்ட லலாடலிபி முழுத் தப்பறையாயிருக்கிறதென்று பலபல ஞாயங்களினாலே ஐந்தாம் ஆறும் பாடங்கள் இரண்டிலும் பிரத்தியட்சமாய் ஒப்பிவிப் போம். அவ்வண்ணமே, லலாடலிபி உண்டானாற் பாவ புண்ணிய மும் மோக்ஷநரகமும் இல்லாதிருக்க வேணுமென்றும், தருமபுத்தி சொல்லுகிற குருக்கள் முதலான மகாத்துமாக்கள் லோகத்திலே வியர்த்தமாய் இருக்கிறார்கள் என்றும், இதுகள் முதலான நியாயங்களினாலே விதியானது அங்கீரிக்க ஒண்ணாத தப்பறை விசேஷமாய் இருக்கிறதென்றும் ஒப்புவிக்கப்படும்.

7–8. இதற்கடுத்த வேறே சில சந்தேக நிவாரணமும், சுவாதந்திரியமானது எதிலே செல்லும் செல்லாதென்றும் இதுகள் முதலான வேறே அறியவேண்டின சில இரகசியங்களை ஏழாம் பாடத்திலே வெளிப்படுக்துவோம். அதிலே கர்த்தரா னவர் பாவம் வராதபடிக்கு அவசியமான உபாயங்களைக் கொண்டு ஏன் விலக்கவில்லை என்கிற விசேஷம் முதலான வேறே சில விஷயங்களையும் இந்தப்பாடத்திலேயும் எட்டாம் பாடத்தி லேயும் சொல்லி, வரத்தக்க பாவ புண்ணியத்தைக் கர்த்தரான வர் அநாதியாய்ப் பார்த்துக்கொண்டு வருகிறதினால், அவ னவன் பாவ புண்ணியத்தைப் பண்ணுகிறதிலே கட்டாயம் வரவறியாதென்றும், வரத்தக்க பாவ புண்ணியத்தைக் கர்த்தர்

[1] தலையெழுத்து

பார்த்துக்கொண்டு வருகையிலே ஆன வித்தியாசம் இன்னதென்றும் வெளிப்படுத்துவோம். இது தவிர, பாவம் வராதபடிக்குக் கர்த்தரானவர் தப்பில்லாக் கிரமமுள்ள உபாயத்தைப் பண்ணினுரென்றும் பாவத்துக்கு கர்த்தரானவர் உதவி செய்யவில்லை என்றும் ஒப்புவிப்போம்.

9. இது காரணமான உண்டாக்கப்பட்ட பொருளின் சுபாவத்துக்கு வரலான சுவாபக் குறையும் ஆசாரக் குறையும் இன்னதென்று காட்டி, அப்படிக்கொத்த குறைகள் பொருளுக்கு வருகிற தென்கிறது பொருளின் சுபாவத்துக்கு துர்பலத்தை அறிவிக்கும் என்கிறதுக்குத் தப்பாது. இதன்றியே அப்படிப்பட்ட குறைகள் பொருளுக்கு வராதவண்ணங் கர்த்தரானவர் சகல உபாயங்களைப் பண்ணுது இருந்தது என்கிறது அக்கிரமமாய் இராதென்று, ஒன்பதாம் பாடத்தில் ஒப்பிவிப்போம். இந்தடைவாகப் பாவமில்லாத் தன்மையானது படைப்புண்ட பொருளின் சுபாவத்துக்கு மேலான நன்மையாய் இருக்கக் கொள்ள, பொருளின் சுபாவத்துக்குச் சரியான நன்மைகளைக் கர்த்தரானவர் சகல வஸ்துக்களுக்குங் கொடுத்தாற்போலப் பாவமில்லாத்தனத்தையும் எங்கும் இருக்கத் தக்கதாகச் சகல உபாயங்களினுலே கர்த்தரானவர் பண்ணுதிருக்கிறதுக்குக் கிரமமுள்ள ஞாயத்தை ஒன்பதாம் பாடத்தில் ஒப்பிவிப்போம். இதன்றியே, பூலோகத்திலே திரிகிற வழிப்போக்கரான மனுஷருக்கு ஒரு பாவமாறும் வராதிருந்தால், அனேக நன்மைகள் லோகத்திலே இல்லாது என்கிற மேரையைக் காட்டிக், கர்த்தரானவர் அனேகம் பாவங்களை விலக்காதே போனுர் என்கிற வாக்கியமானது அங்கங்கே சொல்லப்படுகிறதே, அதற்கு விபரீத அர்த்தத்தை அறியாத மனுஷர் அங்கீகரியாதபடிக்கு, அந்த வாக்கியத்தில் அங்கீகரிக்கத்தக்க அர்த்தத்தை ஒன்பதாம் பாடத்தின் கடைசியிலே வெளிப்படுத்துவோம்.

10. நரசீவனுடைய உற்பத்தியையும் சுபாவத்தையும் நிரூபிக்கிறதுக்குமுன்னே, அதினுடைய ஞானுதி விருத்திகள் சொல்லப்பட்டதற்கு ஆன ஞாயங்களைப் பத்தாம் பாடத்திலே சொல்லுவோம். நரசீவனுனது பூமியிலே இருக்கிற வஸ்துக்

களுக்குள்ளே உத்தம பொருளாய் இருக்கச் செய்தே அத்தைத் தெளிவற்ற பாவிகள் நிரூபிக்கிறதிலே கற்பித்துக் கொண்டு வருகிற தப்பறை விசேஷங்களுக்குள்ளே சிலதுகளை அவ்விடத்திலே ஆக்ஷேபம் பண்ணுவோம். அவ்வண்ணமே, சில மதி கெட்ட பாவிகள் நரசீவனை து சர்வேஸ்வரனென்றும், வேறே சில மிலேச்சர் நரசீவனை து சர்வேஸ்வரனுடைய அங்கிஷம் என்றும், வேறே சில அறிவின் குறைச்சலுள்ள பேர்கள் நரசீவனை து சர்வேஸ்வரனுடைய பிரதிபிம்பம் என்றும் தாறுமாறாய்க் குளறிச் சொல்லிக் கொண்டு வருகிறார்களே. இவர்களுடைய விபக்ஷங்கள் மூன்றும் அங்கீகரிக்க ஒண்ணாத தப்பறைகளாய் இருக்கிறதென்று அந்தப் பத்தாம் பாடத்திலே தானே ஒப்புவிக்கக்கடவோம்.

11. இந்தடைவாக முதிர்ந்த பயித்தியங் கொண்ட பேர்களுக்குள்ளே சிலர் நரசீவனை து தானுயிருக்கிற பொருள் என்றும், வேறே சிலர் நரசீவனை து அநுதியாய் உண்டாக்கப்பட்ட பொருளென்றும், வேறே சிலர் கர்த்தரானவர் நரசீவன்களை உலோக ஆரம்பத்திலே சிருஷ்டித்தருளினார் என்றும், வேறு சிலர் நரசீவனைத் தாய்தகப்பன் பிறப்பிக்கிறார்கள் என்றும், வேறு சிலர் நரசீவனை து பூதியங்களுடைய கூட்டுறவு என்றும் பித்து பிதற்றுகிறவர்களைப் போலே இப்படிச் சொல்லிக் கொண்டு வருகிறார்களே. இதெல்லாம் அங்கீகரிக்க ஒண்ணாத தப்பறை விசேஷங்களென்று பதினோராம்பாடத்திலே ஒப்புவிப்போம்.

12. நரசீவனை து அழியாத வஸ்துவாய் இருக்கிறதென்று குறையற்ற விதமாக ஒப்புவிக்க வேணும் என்கிறதுக்காகச் சில வித்தியாபாரகருக்குள்ளே தர்க்கிக்கப்படுகிற ஒரு விசேஷத்திலே வகையறுக்க வருந்துவோம். அந்த விசேஷமான து: நரசீவனை து தான் நிற்கிறதற்குச் சுபாவமாய்ச் சரீரத்தை அபேக்ஷியாத பொருளாய் இருக்கையிலே, செந்துக்களுடைய சீவன்கள்போலே சரீரத்திலே ஆதேயமாய் இருந்து அது தான் நிற்கிறதுக்குச் சரீரத்தைச் அபேக்ஷிக்கத் தக்கதாகச் சர்வேஸ்வரனாலே பண்ணப்படலாமோ, இல்லையோ என்கிற வியவகாரத்

திலே நடந்து வருகிற பக்ஷம் இரண்டையுங் காட்டி, அதிலே ஒப்புக்கொள்ளத்தக்க சித்தாந்தம் இன்னதென்று பனிரெண்டாம் பாடத்திலே நம்மால் காட்டப்பட்ட பிற்பாடு, நரசீவனானது அனாதியாய் இருக்கவில்லை என்றும், சர்வேஸ்வரனாலே உண்டாக்கப்பட்டதென்றும், ஒப்புவிக்கத் தக்கதாகப் போன பாடத்திலே சொல்லப்பட்ட ஞாயங்கள் தவிர வேறே சில விசேஷ ஞாயங்களினாலே இதிலே ஒப்புவிப்போம். கடைசியாய் ஞானமில்லாத ஜெந்துக்களுடைய சீவனானது சரீரங்களோடே கூட அழிந்து போகிறதென்றும், நரசீவனிடத்திலே மேலாங்கிஷமும் கீழாங்கிஷமும் உண்டாயிருக்கிறதென்றும், அந்தப் பாடத்திலேதானே ஒப்பச்சொல்லுவோம். இதன்றியே நரசீவனானது அழியாத பொருளாயிருக்கிறதென்று வேறே ஞாயங்களினாலே பதின்மூன்றும் பாடத்திலே ஒப்புவித்த பிற்பாடு, நரசீவனுடைய சுபாவ சொரூபத்தை அறியாத மிலேச்சனாலே கேட்கப்படுகிற சில சந்தேகங்களுக்கு அந்தப் பாடத்திலேதானே ஆன பிரத்தி உத்தாரத்தைச் சொல்லுவோம்.

14. போன பாடங்களில் ஒப்பிக்கப்பட்ட சத்தியங்களை வேறே உச்சிதப் பிரசங்கத்தினாலேயும் உவமைகளினாலேயும் பதினாலாம் பாடத்திலே ஒப்புவிப்போம். இதன்றியே, சரீரத்தைவிட்டுப் பிரிந்த நரசீவனானது பண்ணுகிற சேட்டையாதென்று வெளிப்படுத்தி, நரசீவனுக்கு மேலாங்கிஷமும் கீழாங்கிஷமும் உண்டாயிருக்கிறதென்று திரும்பவும் ஒப்பச் சொல்லி, அழிந்தழியாத பொருளினுடைய இலக்ஷணங்களை அறிவிப்போம்.

15–22. நரசீவனுடைய சுபாவசொரூத்தை அறியாத மிலேச்சர் அந்தந்த விசேஷ நரசீவனானது அந்தந்த விசேஷ நரசரீரத்திற்கு மாத்திரையாய் இருந்து அந்தந்த சரீரத்தோடே அந்தந்த மனுஷன் உண்டாகிறதற்கு மாத்திரம் சுபாவமாக வல்லதாயிருக்கிறதென்று முன் சொல்லப்பட்ட பரம [1] சத்தியம் கண்டு பிடியாததினால், அந்தந்த விசேஷ நரசீவனானது தனது பவுதீக சரீரத்தை விட்டுப் பிரிந்து பரலோக சம்மந்தமாயிருக்கிற

1. ரகசியங்களை (பா. பே.)

நல்வினை தீவினை உடைத்தான ஸ்தலங்களிலே பண்ணின பாவ புண்ணிய நிமித்தமாக ஆக்கினை சம்பாவனை அனுபவித்த பிற்பாடு, திரும்பவும் பூமியிலே வந்து கோடானுகோடி சரீரங்களிற் பிரவேசித்துக்கொண்டு வருகிறதினால் எண்ணப்படாத பொருள்களாய்ப் பிறக்கிறதென்று சொல்லுகிறார்களே. இப்படிப்பட்ட முழு அஞ்ஞானத்தில் நின்று பிறந்த விபக்ஷமானது அநேக துர்மதங்களிலே விதிக்கப்பட்டு அங்கங்கே பரம்பியிருக்கிறதினால், அப்படிப்பட்ட விபட்சமானது நீதி நியாயத்திற்கு ஒவ்வாத தப்பறையாய் இருக்கிறது என்று பதினைந்தாம் பாடந் துவக்கி இருபத்திரண்டாம் பாடமட்டும் விஸ்தாரமாக ஒப்புவிப்போம். அவ்வண்ணமே, பூலோகத்திலே பலபல அந்தஸ்திலுள்ள மனுஷரால் அனுபவிக்கப்படுகிற பாக்கிய நிர்ப்பாக்கியமும் சுக துக்கமும் வியாதி ஆரோக்கியமும் பூர்வ சென்மத்திலே பண்ணப்பட்ட கர்மத்தின் நிமித்தமாக வராமல், அதுகளுக்கு ஆன ஞாயமுள்ள காரணத்தை அந்த எட்டுப் பாடங்களிலே வெளிப்படுத்தும்போது, மறுசென்மமானது தெளிவற்ற பாவிகளாலே வெறுமனே கற்பிக்கப்பட்ட தப்பறைக் கதையாய் இருக்கிறதென்று பிரத்தியட்சமாய் ஒப்புவிக்கப்படும் என்கிறதற்குத் தப்பாது.

23. நரசீவனுடைய உற்பத்தியையும் சுபாவசொரூபத்தையுங் கண்டுபிடித்த பிற்பாடு, நரசீவனுடைய ஒடுக்கமாகிற அவதியை வெளிப்படுத்துகிறது என்கிறது கிரமமாகும். ஆதலாலே, பூலோகத்திலே அநுபவிக்கப்படுகிற பாக்கிய நிர்ப்பாக்கியத்திலே நரசீவனுடைய ஒடுக்கமாகிற அவதியானது அடங்கும் என்று நாஸ்திகர் அங்கீகரித்துக்கொண்டு வருகிறார்களே. அப்படிப்பட்டவர்களுடைய விபட்சமானது முழுத் தப்பறையாய் இருக்கிறதென்று இருபத்தி மூன்றாம் பாடத்திலே துவக்கமாக ஒப்புவிக்கக்கடவோம்.

24. சுவர்க்கமானது சகல ஞாயங்களுக்கும் ஒவ்வாததாய் இருக்கக்கொள்ள அதிலே நரசீவனுடைய ஒடுக்கமான அவதியானது கிடையாது என்று இருபத்தி நாலாம் பாடத்திலே ஒப்புவிப்போம்.

25. இதுதவிர வைகுண்டம் கைலாசம் முதலிய ஸ்தலங்கள் தேவோக்கித்த வேதத்திற்குப் புறத்திப்பட்ட பேர்களினாலே வெறுமனே கற்பிக்கப்பட்டதுகளாய் இருக்கக்கொள்ள அதுகளிலேயும் நரசீவனுடைய ஒடுக்கமில்லை என்றும், சுவர்க்கம் வைகுண்டம் கைலாசம் இதுகள் முதலான நாமங்கள் மோட்சம் இன்னதென்று சொல்லுகிறதிலே பிரயோகிக்க ஒண்ணாது என்றும் இருபத்தைந்தாம் பாடத்திலே ஒப்பச் சொல்லுவோம்.

26. இதன்றியே சிலபேர்கள் நரசீவனுடைய ஒடுக்கமாகிற அவதியானது மோட்சமென்று அங்கீகரித்துக்கொண்டு வந்தாலும் மோட்சம் இன்னதென்று நிரூபணம் பண்ணுகிறதிலே அவர்களாற் கற்பிக்கப்படுகிற மோட்சவகைகள் முழுதப் பறைகளா இருக்கிறதென்று ஒப்புவிக்கும்போது, சானித்தியம் சாமீப்பியம், சாயுச்சியம் என்கிற மேரைகள் இன்னதென்று வெளிப்படுத்தி, அப்படிப்பட்ட மேரைகளிலே மோட்சம் கிடையாதென்று இருபத்தாறும் பாடத்திலே பிரத்தியட்சமாய் ஒப்புவிக்கக்கடவோம்.

27. இதன்றியே யாதொரு வஸ்துவானது வேறே ஒரு வஸ்துவினுடைய லயத்தைக் கொண்டிருந்தால், வஸ்துவின் அபிவிருத்தி முதலான விகாரங்களை அடைய வேணுமென்கிற திலை, சர்வேஸ்வரனிடத்திலே சீவனானது லயித்துப்போக மாட்டாதென்றும், அந்தந்தப் பூதியங்களிடத்திலே லயத்தின் மேரையானது இன்னதென்றும், மோட்சமானது சீவனுடைய லயத்திலே அடங்கினால், மோட்சத்தை அடைகிறதுக்கு வருந்துகிற சன்னியாசி முதலான பேர்கள் மதிகெட்ட பேர்களாய் இருக்கிறார்களென்றும், சீவனுடைய லயமானது சர்வேஸ்வரன் இடத்தில் இருந்தால் அத்தால் ஒன்றும் வர மாட்டாது என்கிற போதே, சகல லயங்களைக் காட்டிலும் அது நிசிரமான லயமாய் இருக்கவேணும் என்றும், இதுகள் முதலான ஞாயங்களினாலே சாரூப்பியம் என்கிற மேரையிலே மோட்சம் உண்டாக மாட்டாது என்று இருபத்தேழாம் பாடத்தில் ஒப்புவிப்போம்.

28. இதற்கப்பால், மோட்சத்தை நிரூபணம் பண்ணி, அது இன்னதென்று கண்டுபிடிக்கிறதற்கு அறியவேண்டின விசேஷங்களுக்குள்ளே சில விசேஷங்களை இருபத்தெட்டாம் பாடத்திலே சொல்லுவோம். அதாவது அவதியான நன்மையினுடைய இலட்சணம் இன்னதென்றும், சர்வேசுரனைக் குறையற்ற விதமாய் அவதி மேரையாக அடைகிறது ஏதென்றும், அந்தந்த விஷயத்தைக் கிரகிக்கிறதற்கு அந்தந்த சத்தியானது உண்டாயிருக்கும்போது, இந்த ஞாய முதலான வேறே ஞாயங்களினாலே சரீரத்தின் கண்ணாலே சகல நன்மைச் சொரூபியான சர்வேசுரனைக் காணக்கூடாது என்று ஒப்பிவிப்போம். இந்தடைவாகப் புத்தியினுடைய விஷயத்தின் விஸ்தாரத்திற்குள்ளே ஆகுதல் என்னப்பட்ட யாவும் அடங்கியிருக்கக் கொள்ள, புத்தியின் விஷயத்தின் விஸ்தாரத்திற்குள்ளே பராபர வஸ்துவானது அடங்கியிருக்கிறதென்று சொல்ல வேண்டியிருக்கச் செய்தே, கனமான விசேஷம் சத்திய விஷயத்தின் விஸ்தாரத்திற்குள்ளே அடங்கியிருந்தாலும் அத்தாலே விஷயமானது கிரகிக்கப்படாது. இது இப்படியிருக்கச் செய்தே, உண்டாக்கப்பட்ட புத்தியானது சகல நன்மைச் சொரூபமாய் இருக்கிற அனந்த சர்வேஸ்வரனைக் கிரகிக்கிறது எப்படி என்று சொல்லி, இதற்கடுத்த வேறே சில விசேஷங்களை அந்தப் பாடத்திலே தானே விரித்துரைக்கக் கடவோம்.

29. விசுவாச தெரிசனத்தினாலே பராபர வஸ்து காணப்படுகிறதிலே ஆன சந்தேகமும், அதினுடைய நிவாரணமும், பிரத்தியட்ச தெரிசனங்களுக்குள்ளே பூலோகத்திலே திரிகிற மனுஷனுக்கு உண்டான பிரத்தியட்ச தெரிசனமானது அத்தியந்த நீசமானதென்றும், அப்படிப்பட்ட தெரிசனத்தினாலே கிரகிக்கப்படாத விசேஷங்கள் இன்னதென்றும், பிரத்தியட்ச தெரிசனந் தவிர ஸ்மரண முதலான வேறே தெரிசனங்களுடைய சுபாவ சுரூபங்களும் அதுகள் செய்யப்படும் மேரைகள் இன்னதென்றும், அந்தடைவாகச் சர்வேஸ்வரன் இந்த லோகத்திலே அறியப்படுகிற விதம் இன்னதென்றும், இதுகளுக்கு அடுத்த வேறே சில விசேஷங்களும் இருபத்தொன்பதாம் பாடத்திலே நம்மால் சொல்லப்படும்.

30. முன்சொல்லப்பட்ட தெரிசனங்கள் தவிரச் சதத ஞானம் உண்டாய் இருக்கிறது என்றும், அதினுடைய வகைகள் இரண்டும் இன்னதென்றும், சொல்லி, வஸ்துவின் நிரூபண மானது விளுபூதம் அவிளுபூதம் என்கிற இரண்டு வகைகள் உள்ளதென்றும் வெளிப்படுத்தின பிற்பாடு, சர்வேஸ்வர விஷயக அவிளுபூக நிரூபணத்தைக் குறையில்லாமல் சரியாகப் பண்ணு கிறதற்குக் காணப்பட்ட பொருள்கள் என்னப்பட்ட யாவும் உதவி செய்ய மாட்டாதென்றும் அப்படிப்பட்ட நிரூபணம் எந்தப் பிரகாரம் பண்ணப்படும் என்றும், அனந்த மகிமை சொரூபமான பராபர வஸ்துவுக்கும் உண்டாக்கப்பட்ட புத்திக்கும் முகிவில்லாத தூரமிருப்பதினாலே சுபாவ பெலத்தைக் கொண்டு அது கிரகிக்கக்கூடாது என்கிறதினால் சர்வேஸ்வர விஷயகப் பிரத்தியட்ச தெரிசனத்திற்குச் சர்வேஸ்வரன்தானே பிரதான காரணமென்றும் இதுகள் முதலான வேறே சில விசேஷங்களையும் முப்பதாம்பாடத்திலே வெளிப்படுத்துவோம்.

31. இதுக்கப்பால் குறையற்ற பாக்கியம் ஆகிற மோட்ச மானது உண்டாக்கப்படலான பொருளின் சுபாவத்திற்கு மேலான நன்மையாய் இருக்கக்கொள்ள, அத்தைப் பேறுபெறு கிறதற்குக் கர்த்தருடைய விசேஷ கிருபை வேண்டியிருக்கிறது என்றும், அப்படிப்பட்ட கிருபைகள் எத்தனை வகையிலே அடங்கி இருக்கிறது என்றும், அதில் கீழ்ப்பிரசாதமானது புண்ணியமல்ல என்றும், கடைசியாய் மோட்ச சாதக சுகிர்த விருத்திகளானதுகள் பொருளின் சுபாவத்திற்கு மேலானதாய் இருக்கக்கொள்ள, அப்படிப்பட்ட விருத்திகளுக்கு உண்டாக் கப்பட்ட பொருளானது ஏற்ற மேரையாகக் காரணமாய் இருக்கிறதென்றும், இதுகள் முதலான வேறே சில விசேஷங்களை முப்பத்தோராம் பாடத்தில் அறியப்பண்ணக் கடவோம்.

32. இது தவிர சர்வேஸ்வரனைக் கண்டுபிடிக்கிற மேரைகள் இன்னதென்றும், அதில் ஏற்றக் குறைத்தலான ஞான மேரைகள் இன்னதென்றும் சொல்லி, மோட்சம் இன்ன தென்று அறியும்படிக்குத் தேவோக்கித்த வேதத்தின் சில வாக் கியங்களுக்குத் தாற்பரியம் இன்னதென்றும், குறையற்ற பாக்

கியமாகிற மோட்சத்தைத் தயாபரனுன கர்த்தரானவர் அக்கிரம மாகக் கொடுக்கத்தக்கதில்லை என்றும், அது தேவவிஷயக பிரத்தியட்ச தெரிசனத்திலே அடங்கி இருக்கிறதென்றும், அதுக்குண்டான நாலுமகிமைகளில் இரண்டு மகிமைகள் இன்ன தென்றும், புத்திக்குள்ளே பதிந்திருக்கிற கேவலம் தைவீக பிரதிபிம்பமானது (புத்தியால்) உண்டாகமாட்டாது என்றும் முப்பத்திரண்டாம் பாடத்தில் ஒப்புவிப்போம்.

33. மோட்சத்தைப் பெற வருந்துகிற புண்ணியாத்து மாக்கள் யாருக்குச் சரியாய் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் பூலோகத்திலே திரிகிற நாள்மட்டும் தேவ விஷயக ஞானத்தை அடைந்திருக்கிறார்களே, அப்படிப்பட்ட ஞானங்கள் எத்தனை விகிதங்களுக்குள்ளே அடங்கியிருக்கிறது என்றும், அதுகளுக் கும் தேவ விஷயகப் பிரத்தியட்ச தெரிசனத்திற்கும் உண்டா யிருக்கிற வித்தியாசம் இன்னது என்றும், அப்படிப்பட்ட பிரத்தியட்ச தெரிசனத்தினாலே புத்தியானது சர்வேசுரனிடத் திலே பிரவேசித்துக் கர்த்தனிடத்திலே கண்டுவருகிற அனந்த மகிமைகளையும் வெளிப்படுத்தி, அத்தறுவாயிலே அனந்தம் என்கிற சத்தத்திற்குக் கண்டுபிடிக்கத்தக்க அர்த்தம் இன்னதென்றும், சகல பொருட்கள் சர்வேஸ்வரனிடத்திலே உத்தமப் பிரகாரமாய் அடங்கி இருக்கிறதை மோட்ச வாசியாய் இருக்கிறவர் கண்டுபிடிக்கிற மேரை இன்னதென்றும் திரித்துவ யேகத்துவமாகிற பரம ரகசியமானது வெளியாகும்படிக்கு தானப்பரிக்கிரகத்தின் மேரை மரியாதைகளையும், மோட்ச வாசிகள் அடைந்திருக்கிற மகாமகாப்பட்ட நன்மைகளுக் குள்ளே சில விசேஷ நன்மைகளையும் முப்பத்து மூன்றாம் பாடத்திலே சொல்லிக் காட்டுவோம்.

34. அதெல்லாம் [1]தேவோக்தித்த வேதத்தின் பலபல வாக்கியங்களினால் ஒப்பச்சொல்லிச், சர்வேஸ்வரனுக்கு உண் டான சுபாவ மகிமைகள் மட்டாக மோட்சவாசிகளிடத்திலே இருக்கிறது என்று சொல்லும்போது, தானாய் இருக்கிற மகிமை யும் அனந்த ஞானமும், திவ்விய பரம சத்தியமும், பரமானந் தமும், அனந்த பெலமும், பாவமில்லாத தனமும், நோவுதுக்கம்

1 தேவோக்த.

முதலானதுகளுடைய இல்லாததனமும் மரணமில்லாததனமும் விகாரத்தினில்லாததனமும் எப்போதும் எப்பொழுதும் ஒருகண்ட சீராய் இருக்கிற மேரையும், இதுகள் முதலான திவ்விய மகிமைகள் உண்டாக்கப்பட்ட பொருளின் மட்டாக மோட்சவாசிகளிடத்திலே இருக்கிறதென்று முப்பத்து நாலாம் பாடத்தில் ஒப்பச் சொன்ன பிற்பாடு, அதெல்லாத்தையும் ஆன உவமையினாலே சொல்லிக் காட்டுவோம், இதன்றியே சினேகா பேட்ச (சுபாவாபேக்ஷா) பட்சம் இரண்டும் இன்னதென்று வெளிப்படுத்தி மோட்சவாசியாய் இருக்கிறவர் சர்வேஸ்வரன் பேரில் கொண்டிருக்கிற பத்தி மேரையும் சர்வேஸ்வரனுடைய ஸ்தோத்திரத்தை மாத்திரம் மோட்சவாசியாய் இருக்கிறவர் ஆசைப்படுகிறார் என்றும் இத்தைக் காட்டுகிற உவமையையும் சர்வேஸ்வரனைப் பிரத்தியட்சமாகக் காண்கிறதிலே மோட்ச வாசிக்கு உண்டான திகட்டில்லாத திருத்தியையும் ஆண்டவன் நிமித்தமாகப் புண்ணியவான் பூமியிலே அனுபவித்த விசேஷ கஸ்திகளுக்கு மோட்ச இராச்சியத்திலே விசேஷ சந்தோஷத்தை அனுபவிக்கிறார் என்றும், அந்தந்த மோட்சவாசியுடைய விசேஷ சந்தோஷத்தைப் பார்த்தவனுக்கு விசேஷ சந்தோஷம் உண்டாய் இருக்கிறது என்றும், நரசீவான்களானது சம்மனசுக்களுடைய ஒன்பது விலாச சபைக்குள்ளே தப்பில்லாக் கிரமத்தோடு இருக்கும் மேரையும் மோட்சவாசிகள் அந்தந்த விஷயங்களை அறிகிறதினாலே விசேஷ சந்தோஷத்தை அனுபவிக்கிறார்கள் என்றும், இதுகள் முதலான வேறே சில விசேஷங்களை இந்த முப்பத்திநாலாம் பாடத்தில்தானே வெளிப்படுத்துவோம்.

35. இதல்லாதே, கர்த்தரானவர் பாவிகளையும் புண்ணிய ஆத்துமாக்களையும் பூமியிலே நடத்துகிற வகையைப் பார்க்கும் போது, அது நிலையாத சமுத்திரமாய் இருக்கும் என்கிறதுக்குத் தப்பாது. அதினுடைய மகிமையுள்ள கிரமத்தையும், நரகத்திலிருக்கிற பாவிகள் மனோவாக்குக்கு எட்டாததாய் இருக்கிற கஸ்தி நோவுகளை அனுபவிக்கிறதிலே விளங்கி வருகிற அனந்தமான திவ்விய நீதியையும் மோட்சவாசியானவர் பார்த்து, மிகுந்த சந்தோஷத்தை அனுபவிக்கிறார் என்று முப்பத்தஞ்சாம்

பாடத்திலே சொல்லிக், குறையற்ற பாக்கியமாகிற மோட்சம் வர்ணிக்கப்படுகிற வகையிலே கண்டுபிடிக்கத்தக்க அர்த்தம் இன்னதென்று அந்தப்பாடத்திலேதானே வெளிப்படுத்துவோம்.

36. மோட்சம் இன்னதென்று வெளிப்படுத்தின பிற்பாடு, அது புண்ணியத்தின் வழிக்கு அவதியாய் இருக்கிறதென்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமாகும் என்கிறதற்குத் தப்பாது. ஆனபடியினாலே பாவத்தின் வழிக்கு அவதியாகிற நரகம் உண்டாயிருக்கிறது என்று அங்கீகரிக்கத் தக்கதாகும். அவ்வண்ணமே, நரகத்தினுடைய சுபாவ சொரூபம் இன்னதென்று நிச்சயிக்கத்தக்கதாக அறியவேண்டின அநேகம் விசேஷங்கள் உண்டு. அதுகளுக்குள்ளே சிலதுகளை மாத்திரம் சுருக்கமாக வெளிப்படுத்தக் கடவோம். அது ஏதெனில், நரகத்திலே இருக்கிறவர்களுடைய சுவாதந்திரியம் இன்னதென்றும், நரகத்திலே பாவிகள் அனுபவிக்கிற ஆக்கினையினுடைய வகைகள் இன்னதென்றும் அதுக்கான ஞாயங்களையும் முப்பத்தாறும் பாடத்திலே சொல்லுவோம். இதெல்லாம் விளங்கும்படிக்குச் சில விசேஷங்களை அறியவேண்டியிருக்கிறது. அதாவது குறையற்ற பாக்கியமென்கிற மோக்ஷத்தை அடையவேணும் என்கிறதற்காக ஞானமுடைத்தான பொருளைத் தயாபரனுன கர்த்தரானவர் உண்டாக்கினுரொழிய நரகமாகிற ஒடுக்கத்தை அடையவேணுமென்று அத்தை உண்டாக்கவில்லை என்று ஒப்புவிப்போம். அவ்வண்ணமே அனந்த ஞான சுரூபமாய் இருக்கிற கர்த்தரானவர் எல்லாத்தையும் அறுதியாக அறிந்தவருமாய்க், கற்பித்தவருமாய் இருக்கச்செய்தே, அவரிடத்திலே பூர்வாபர மேரை இன்னதென்று அத்தறுவாயிலே வெளிப்படுத்துவோம். ஆதலாலே அனந்த நீதி சுரூபமான கர்த்தரானவர் பாவத்தைக் கண்ட பிற்பாடு நரகத்தைக் கற்பித்தருளினுர் என்று ஒப்புவிக்கப்படும் என்கிறதற்குத் தப்பாது.

37. இதெல்லாம் முப்பத்தாறும் பாடத்தில் ஒப்பச் சொன்ன பிற்பாடு நரசீவனுனது பௌதீக சரீரத்தைவிட்டுப் பிரிந்த பிற்பாடு ஆதன சரீரம் கொண்டிருக்கத் தக்கதில்லை

என்றும், சரீரமில்லாத பிசாசுக்களும், தன் சரீரங்களை விட்டுப் பிரிந்த நரசிவன்களும் சரீரமுள்ள அக்கினி நிமித்தமாக எண்ணப்படாத கஸ்தி நோவுகளை அனுபவிக்கும் வகையையும் முப்பத்தேழாம் பாடத்திலே வெளிப்படுத்துவோம்.

38. இதன்றியே, நரகத்திலே விழுந்த பேர்கள் என்றென்றைக்கும் எண்ணப்படாத கஸ்தி நோவுகளை ஒருகண்டசீராய் அனுப்பிப்பார்கள் என்று கடைசியான முப்பத்தெட்டாம் பாடத்திலே நாலு ஞாயங்களைக்கொண்டு ஒப்புவிப்போம்.

இந்தப் பிரபந்தத்தை நிறைவேற்றினதென்கிறது மிகவும் அருமையாய் இருக்கக்கொள்ள, அத்தை எவ்வளவாகிலும் நிறைவேற்றுவேன் என்று என்னுடைய துர்பெலத்தை நம்பாமல், அனந்த கிருபை சுரூபமாய் இருக்கிற கர்த்தருடைய கருணையை நம்பியிருக்கிறேன். ஆகையாலே, அவர் அடியேனுக்குத் தயை பண்ணுகிறதுக்குப் பரிசுத்த கன்னியாஸ்திரியாகிற மாதாவானவள் அவரை வேண்டிக்கொள்ள வேணுமென்று துர்பெலனுயிருக்கிற நான் மிகுந்த வினயத்தோடு அவளை வேண்டிக் கொள்ளுகிறேன். *

விவேகம் முற்றும்

---

* இந்த 38 பாடங்களையும் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்

I ஆன்மாவின் இயற்கை (பாடம் 1–9)
  1. உயிர் உடலின் மாத்திரை. உடலின் வளர்த்தி, புலனறிவு, பகுத்தறிவு, மனது முதலியவற்றின் இயக்கத்துக்கெல்லாம் அதுவே காரணம். (1)
  2. பகுத்தறிவு (2–3)
  3. மனது (4–9)

II ஆன்மாவின் தோற்றம் (10–22)
  1. பிறப்பு (10–14)
  2. மறுபிறப்பு (15–22)

III ஆன்மாவின் ஒடுக்கம் (23–38)
  1. தவறான இடங்கள் — இம்மை, சுவர்க்கம், வைகுண்டம், கைலாசம். (23–25)
  2. நிலைகள் — சாமித்தியம், சாமீப்பியம், சாயுச்சியம், சாரூப்பியம், (25–27)
  3. நல்ல முடிவு (மோட்சம்) (28–35)
  4. கெட்ட முடிவு (நரகம்) (36–38)

## முதற் பாடம்

### (சீவனுடைய சாதாரண நிரூபணம்)

**1 1. ஆத்துமம் பற்றித் தவறுன கொள்கைகளும் அவற்றின் மதிப்பும்:–** பாவ அந்தகாரத்திஞலே தெளிவற்ற மனுஷரானவர்கள் பராபர வஸ்து[1] இன்னதென்று சொல்லிவருகையில் அனேகம் [2]தப்பறை விசேஷங்களை லோகத்துக்குக் கேடாகக் கற்பித்தாற்போல, [3]சீவன் இன்னதென்று நிர்ணயம் பண்ணுகிறதிலே சீவனுனது தானே கரையேறுகிறதற்கு விக்கினமாயிருக்கிற அனேக [4]அபத்த விசேஷங்களை [5]ஒப்புவிக்க [6]வருந்துகிருர்கள். [7]சத்தியத்துக்கு விருத்தமாயிருக்கிற இப்படிப்பட்ட [8]விபக்ஷங்களானதுகள் முழு தப்பறைகளென்று தள்ளத்தக்கதாக இருக்கையிலே, அதுகளுக்குச் [9]சித்தாந்தம் என்கிற நாமமானது செல்லுமென்று சொல்லிக்கொண்டு வருகிருர்கள். ஆனல் ஆத்தும விஷயத்திலே பாவிகளிஞலே கற்பிக்கப்பட்ட தப்பறை விஷயங்களைப் பார்க்குமிடத்தில், அதுகள் அனேகமாய் இருக்கக்கொள்ள அதுகளை எல்லாம் தனித்தனியே சொல்லிக்காட்டி இவ்விடத்திலே கண்டிக்கிறது அரிது. ஆனபடியிஞலே, ஆத்தும விஷயத்திலே தப்பறை விபக்ஷங்களைத் தள்ளுகிறதற்கு அறியவேண்டின விசேஷங்களுக்குள்ளே [10]புத்திசன்னிதானத்தில் இருக்கிற சிறிது விசேஷங்களை இவ்விடத்திலே சொல்லிக்காட்டி வேதப்பிரமாணங்களிஞல் ஒப்பச்சொல்லத்தக்க மற்ற சத்திய விசேஷங்களை [11]ஞான உபதேசத்தில் ஆன இடங்களில் வெளிப்படுத்தி இதன் முடிவிலே சிலதுகளைச் சொல்லிக் காட்டக்கடவோம்.

**1 2. இந்நூல் விளக்கும் ஆறு சத்தியங்கள்:–** அவ்வண்ணமே, இத்தொகைப்பட்ட சத்தியங்களுக்குள்ளே

1. கடவுள் 2. பிழை 3. உயிர், ஆன்மா. 4. தப்பு
5. சிறுவ 6. முயலுகிருர்கள் 7. உண்மைக்கு முரணுன
8. எதிர்க்கொள்கை 9. முடிந்தபொருள்
10. Within reach of reason. 11. முதல் பதிப்பில் 'நம்மால் உண்டாக்கப்பட்ட ஞானுேபதேச காண்டத்தில்',

ஆறு சத்தியங்களை இந்தப் புத்தகத்திலே சங்க்ஷேபமாகச் சொல்லிக்காட்டுவோம். அதாவது:- 1. ஆத்துமம் [11]ஏதென்றும், 2. அது எத்தனை வகையிலே அடங்குமென்றும், 3. அதினுடைய [1]விருத்திகள் எப்படிப்பட்டதுகளென்றும், 4. மனுஷ சீவனுக்கு, [2]ஞானமுண்டாய் இருக்கிறப்போலே, [3]சுவாதந்திரிய மனசுண்டோ இல்லையோ என்றும், 5. உண்டாக்கப்பட்ட சீவனானதுகள் சரீரத்துக்கு [4]மாத்திரைகளாய் இருக்கையிலே அப்படிப்பட்ட சீவன்களுக்குள்ளே என்றென்றைக்கும் நிற்கத்தக்க யாதொரு சீவன் உண்டோ இல்லையோ என்றும், 6. கடைசியாய், மனுஷனுடைய மரண நிமித்தமாக மனுஷ சீவனானது தனது சரீரத்தை விட்டு வேறே சரீரத்தை அடையலாமோ என்றும், இந்த ஆறு விசேஷங்களிலே அங்கிகரிக்கத்தக்க சத்தியம் இன்னதென்று புத்தி சன்னிதானத்திலே இருக்கிற ஞாயங்களினாலே ஒப்பச் சொல்லிக், கடைசியிலே ஆத்துமத்தினுடைய [5]ஒடுக்கம் ஏதென்றும் கொஞ்சத்துக்குள்ளே வெளிப்படுத்துவோம். அதேதென்றால், இந்தச் சத்திய விசேஷங்களைத்தானே வேத பிரமாண வாக்கியங்களினாலே ஞான உபதேசத்தின் ஆன ஸ்தலங்களிலே ஒப்பச் சொல்லுவோம்.

**1.3. சீவனின் சாதாரண நிருபணம்:** சொல்லப்பட்ட ஆறு ஆத்தும விசேஷங்களுக்குள்ளே ஆத்துமம் ஏது என்று முதலாம் விசேஷமென்று சொல்லக்கடவது. அதேதென்றால்: பலபல கிரியைகளுக்குள்ளே [6]ஏற்றினமாகிற [7]அவையவங்களை உடைய சரீரத்துக்கு மாத்திரையுமாய், அந்தந்தக் [8]கிரியைகளுக்குப் [9]பிரதான காரணமுமாயிருக்கிற பொருளானது சீவனென்று சொல்லப்படும். இது சீவனுடைய [10]சாதாரண நிருபணமாய் இருக்கிறதென்று சொல்லுகிறோம். அதேதென்றால், மனுஷ சீவனுடைய நிருபணங்களுக்கடுத்த வேறே சிறிது சத்தியங்களைப் பதின்மூன்றும் பாடத்திலே வெளிப்படுத்துவோம்.

1. தொழில்கள் 2. Intelligient 3. free will 4. forma substantialis 5. destiny 6. கருவி 7. உறுப்பு 8. தொழில் 9. principal cause 10. generic (definition) 11. யாது?

**14. மாத்திரை என்றால் என்ன? மாத்திரையாவது** ஏது என்றால் [1]பதார்த்தத்துக்கு நாமத்தைக் கொடுத்துப், பதார்த்தம் இன்னதென்று பிரதானமாகச் [2]சங்கேதத்தைப் பண்ணுகிற யாதொன்றுண்டு. அது மாத்திரையானது என்று சொல்லப்படும். இதெல்லாம் [3]இந்தடைவிலே வெளியாக் கலாம். பலபல பாத்திரங்களைப் பார்க்கும்போது, இது 'கலசம்' என்றும் அது 'சட்டி' யென்றும், அது பானை என்றும் அது 'மடக்கு'' என்றும் சொல்லப்படுகிறது. அது எல்லாம் மண்ணாய் இருக்கையிலே, கலசத்தினுடைய ரூபத்தினாலே மண்ணுக்குக் கலசமென்கிற சங்கேதம் உண்டாச்சுது. மண்ணாலான கலசமானது மண்ணில்லாமல் உண்டாக மாட்டா திருந்தாலும், கலசம் என்கிற சங்கேதமானது ரூபத்தினாலே பிரதானமாய் வருகிறதொழிய மண்ணினாலே வரமாட்டாது. இத்தன்மைபாகக் கல்லால் மரங்களினால் செம்பினால் பண்ணப்பட்ட [5]விக்கிரக முதலானதுகளிலே யோசிக்கக்கடவோம். அதேதென்றால், கல்லு, மரம் முதலான [6]திரவியங்கள் விக்கிரகத்தினுடைய நாமகரணத்தையும் சங்கேதத்தையும் பண்ணாமல், ரூபமானது விக்கிரகத்தினுடைய சங்கேதம் (பிரதானமாய்ப்) பண்ணிக்கொண்டு வரும் என்கிறதற்குத் தப்பாது. ஆனபடியினாலே, இத்தொகைப்பட்ட பொருள்களிடத்திலே ரூபமானது மாத்திரையாய் இருக்கிறதென்று சொல்லக்கடவது.

**15 சீவன் சரீரத்துக்கு மாத்திரை:** இது இப்படி இருக்கையிலே. இந்தப் பூமியிலே காணப்படுகிற சீவனுடைத்தான பதார்த்தமானது சரீரத்தினாலேயும் சீவனாலேயும் [7]கூடின பொருளாய் இருந்தாலும், பதார்த்தத்தினுடைய நாமகரணத்தையும் பதார்த்தம் இன்னதென்கிற சங்கேதத்தையும் சீவனானது பிரதானமாய்ப் பண்ணிக்கொண்டு வருகிறதினாலே, உயிருள்ள பொருட்களுக்கு உயிரே மாத்திரையாய் இருக்கிறது என்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே கிருகத்திலே மனுஷனானவன் வாசகமாய் இருக்கிறாப் போலேயும், [8]பஞ்சரத்திலே அடைபட்டிருக்கிற பக்ஷியானது

1. பொருள் 2. denomination, குறியீடு 3. இவ்வாறு
4. பெரிய பாத்திரம் 5. உருவம் 6. materialis (பொருள்)
7. காணப்படுகிற (பா. பே.) 8. கூட்டிலே (பா.)

போலேயும் சீவனானது அந்தந்தச் சரீரத்திலே இருக்கிறது என்று அறியாத மனுஷர் சொல்லுகிறார்களே, அதெல்லாம் அபத்தத் தப்பறை என்று இந்த ஒரு ஞாயத்தினாலே கண்டு பிடிக்கலாம். அது ஏதென்றால், கிருகத்திலே மனுஷன் இருக்கிறதினால் கிருகம் வளருமோ? வளராதே. கிருகத்திலே இருக்கிற மனுஷனானவன் கிருகத்தோடே கூடப் பலபல கிரிகைகளைப் பண்ணிக்கொண்டு வருவானோ? அதில்லையே! மனுஷன் கிருகத்திலே இராததினால் கிருகம் அழிந்துபோமோ? அழியாதே! கடைசியாய்க், கிருகத்திலே மனுஷனானவன் வாசமாய் இருக்கிறதினால், கிரகத்தினாலேயும் மனுஷனாலேயும் ஒரு பொருள் உண்டாகாமல், மனுஷன் மனுஷன் என்றும் வீடு வீடு என்றும் இரண்டு பொருளுமாய், இரண்டு நாமகரணமுமாய், இரண்டு சங்கேதமுமாய் இருக்குமொழிய மற்றப்படியல்ல. சீவனோ என்றால், சரீரத்திலே இருக்கிறபோது சரீரம் வளருகிறது என்று கண்ணாலே பார்த்துக்கொண்டு வருகிறோமே. சரீரத்தோடே கூடச் சீவனானது பலபல கிரியைகளைப் பண்ணிக்கொண்டு வருகிறது என்கிறதிலே சந்தேகப்படுவார் உண்டோ? சரீரத்தைச் சீவனானது விட்டுப்போனால், சரீரம் அழிந்து போகிறதென்று எல்லாரும் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். இது தவிர, சரீரமும் சீவனும் கூட இருக்கிறதினால் ஒரே பொருள் ஒரே நாமகரணம், ஒரே சங்கேதம் உண்டாகிறதொழிய மற்றப்படியல்ல.

**1·6 உடலிலே உயிர் இருப்பது, வீட்டிலே மனிதன் இருப்பது போலன்று:** இத்தன்மையாகச் சரீரத்தோடே கூட அந்தந்தச் சீவன் இருக்கிறதினாலே, மரமும் மிருகமும் மனுஷனும் என்கிற பொருளினுடைய சங்கேதமும் நாமகரணமும் உண்டாகிறதொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே மனுஷன் கிருகத்திலிருக்கிற வகையையும் சரீரத்தோடே சீவன் இருக்கிற மேரையையும் பார்க்குமிடத்தில், அதற்கும் இதற்கும் வலு வேற்றுமை உண்டென்று சொல்லக்கடவோம். அந்த வேற்றுமைகள் ஏதென்றால், மனுஷனானவன் (கிருகத்தில் வாசமாய் இருக்கையிலே கிருகத்துக்கு மனுஷன்) மாத்திரையாய் இராததினால், மனுஷனாலேயும் கிருகத்தினாலேயும் ஒரு பொருள் உண்டாகாமலும், ஒரு சங்கேதமும் ஒரு நாமகரணமுமாய் இரா

மலும், மனுஷனும் கிருகமும் முழுப்பொருள் இரண்டுக்கும் வேறே சங்கேதமும் [1]பின்ன நாமகரணமும் உண்டென்று சொல்லவேணு மொழிய மற்றப்படியல்ல.

சரீரக்கோடே சீவனுனது இருக்கிற மேரையோ என்றால், சரீரத்துக்குச் சீவனுனது மெய்யான மாத்திரையாய் இருக்கிறதினால், இரண்டு பாதி கூடினால் ஒரே முழு [2]வஸ்து உண்டாகுமாப்போலே, சரீரமும் சீவனும் கூடியிருக்கிறதினால் ஒரே முழுப் பொருள் உண்டாய் ஒரே சங்கேதம், ஒரே நாமகரணம் என்று சொல்லப்படும். இது நிமித்தமாக அந்தந்தச் சரீரமானது மிகுந்த வேற்றுமையுள்ள ரூபகங்களைக் கொண்டிருக்கிறது என்று சொல்லக்கடவதாகும். அதேதென்றால், [3]பிரிதிவு, [4]அப்பு, [5]வாயு [6]தேயு முதலான [7]பூதியங்கள் அந்தந்த வகையுள்ள ரூபத்தைக் கொண்டிருக்கலாம் என்கிறதினாலே, அந்தந்தச் சரீரத்துக்கு அந்தந்த ரூபம் உண்டாய் இருக்கிறதுக்குப், பூதியங்களானதுகள் காரணமாய் இருக்கின்றன என்று சொல்லப்படாது. ஆனபடியினாலே, அந்தந்த வேற்றுமையுள்ள மாத்திரையானது, அந்தந்தச் சரீரத்துக்கு வேற்றுமையான ரூபம் உண்டாயிருக்கத் தக்கதாகக், காரணமாய் இருக்கிறது என்கிறதற்குத் தப்பாது.

**1.7 மாத்திரையாகிற உயிருக்கு ஏற்ற உடல் வேண்டும்:** அது ஏதென்றால், பொருள்களிடத்திலே மாத்திரையானது பிரதானம் என்று சொல்ல வேணும். ஆதலாலே பிரதான [8]அங்கிஷமாகிற மாத்திரைக்குத் தக்க சரீரம் உண்டாய் இருக்கவேணும். அப்படியே, சீவனுனது பொருளுக்கு மாத்திரையாய் இருக்கக்கொள்ள, அந்தந்தச் சீவனுக்குத் தக்க ரூபமுள்ள சரீரம் உண்டாயிருக்க வேணும். அது எப்படி என்றால்: எறும்பினுடைய சீவன் இந்த வகையுள்ளதாய்; இந்த வகையுள்ள [9]சேஷ்டைகளுக்குக் காரணமாய் இருக்க வேணும். ஆகையால், எறும்பினுடைய சீவனுக்குப் [10]பாத்திரமானதுமாய் அந்தச் சீவனுக்கான சேஷ்டைகள் உண்டாகிறதற்கு உதவி செய்கிறதுமான அவயவங்கள் உடைத்தான சரீரத்

1. வெவ்வேறு 2. பொருள் 3. மண் 4. நீர் 5. காற்று 6. தீ 7. Elements 8. (அம்சம்) பகுதி 9. தொழில் 10. ஏற்றது

தோடே அப்படிப்பட்ட எறும்பினுடைய சீவன் கூடவேணு மொழிய, யானைக்கு உண்டான சரீரத்தோடே அது கூடி அத்தைப் பிழைப்பிக்கவும் மாட்டாது, அதனோடு கூடித் தனது சேஷ்டைகளைப் பண்ணவுமாட்டாது. இத்தன்மையாக யானை யுடைய சீவனுக்கு, எறும்புக்கு உண்டான சரீரம் பாத்திரமாய் இராமல், அப்படிப்பட்ட சீவனுக்கான சேட்டைகள் உண்டா கிறதற்கு உதவி செய்கிற அவயவங்கள் உடைத்தான வேறு சரீரம் அவசியமாய் இருக்கச் செய்தே, யானையினுடைய சீவ னனது எறும்பின் சரீரத்துக்கு மாத்திரையாய் இருக்கமாட்டா மல், எறும்பின் சரீரத்தோடே கூடியதாய்ப் பிழைக்கவும் மாட் டாது. அப்படிப்பட்ட எறும்பின் சரீரத்தைப் பிழைப்பிக்கிற தற்கு அது வல்லதாகவும் இராது. [2]இம்மருவாதியே மனுஷனு டைய அழியாத சீவனுக்கு மிருகங்களினுடைய சரீரமானது பாத்திரமாய் இராததினாலேயும், மனுஷனுடைய சீவனுக்கான சேட்டைகள் உண்டாகிறதற்கு விருக்ஷங்களுக்கும் மிருகங்களுக் கும் உண்டான சரீரம் உதவமாட்டாததினாலேயும், மனுஷனு டைய சீவனனது விருக்ஷங்களுக்கும் மிருகங்களுக்கும் உண்டான தேகங்களுக்கு மாத்திரையாய் இருக்கவும், அப்படிப்பட்ட சரீரங் களோடு கூடி ஒரே பொருள் உண்டாகவும் மாட்டாது.

**1.8 வேறுபட்ட சீவன்களுக்கு வேறுபட்ட உடல்:** இந்தச் சத்தியத்தை ஒரு ஞாயத்தினாலே எளிதாய்க் கண்டு பிடிக்கலாம். அதேதென்றால், ஆன கிரிகைகளுக்கு அவசியமாய் வேண்டின அவயவங்களாகிற இருதயமும் தலையும் வெட்டப் பட்டால், அப்படிப்பட்ட சரீரத்திலே அவசியமாய்ச் சீவன் இருக்கமாட்டாது. அதேதென்றால், இருதயமும் தலையும் இல்லாத சரீரம், சீவனுக்கு உண்டான சேட்டைக்கு உதவாது என்கிறதற்குச் சந்தேகமில்லை. இது இப்படி இருக்கையிலே, மச்சத்தினுடைய சரீரமானது மனுஷனுக்கு உண்டான சேட்டையாகிற [3]வார்த்தை சொல்லுகிறதற்கும், [4]ஆனதையும் ஆகாததையும் அறிகிறதற்கும், மற்றுமுண்டான கிரியைகளுக் கும் சற்றாகிலும் உதவ மாட்டாதபோதே, அப்படிப்பட்ட மச்சத்தினுடைய சரீரத்தோடே மனுஷ சீவனனது கூடியிருக்

2. இவ்வாறே. 3. பேசுகிறதுக்கும் 4. பகுத்தறிவு,

கிறது எப்படி? அவ்வண்ணமே, சுபாவத்திலே வேற்றுமையாய் இருக்கிற பலபல சீவன்களுக்கு ஒரே வகையுள்ள ரூபமுடைத்தான சரீரம் பாத்திரம் ஆகாததினாலேயும், அந்தந்தச் சாதியுள்ள சீவனுக்கான சேட்டைகள் உண்டாகிறதற்கு ஒரே வகையுள்ள அவையவங்களை உடைத்தான சரீரம் உதவ வல்லதாயிராததினாலேயும், சுபாவத்திலே வேற்றுமையாய் இருக்கிற எண்ணப்படாத சீவன்களுக்கு வெவ்வேறே வகையுள்ள அவையவங்களையும் உருபங்களையும் உடைத்தான சரீரங்கள் உண்டாயிருக்கிறது என்று சொல்லக்கடவோம்.

இத்தறுவாயிலே [1]லோகசங்கேதத்தினாலே வருகிற சாதிபேதகத்தைச் சொல்லாமல், மனுஷனுக்கும், நாய்க்கும், யானைக்கும், எறும்புக்கும் இது முதலான மற்றுமுள்ள மிருகங்களுக்கும் விருக்ஷங்களுக்கும் உண்டான சாதிவேற்றுமையையும் பேதகத்தையும் சொல்லுகிறோமொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால், சுபாவத்திலே பேதமுள்ள பல சீவன்களானதுகள் வெவ்வேறே ரூபமுள்ள சரீரங்களோடே அவசியமாய்க் கூட வேணுமொழிய, மற்றபடியல்ல. இலௌகிக சங்கேதத்தினாலே வருகிற சாதிபேதம் உள்ளவர்களுக்கு வெவ்வேறே வகையுள்ள ரூபமுடைத்தான சரீரம் உண்டாயிருக்கவேணும் என்று சொல்லப்பட்டது. அவ்வண்ணமே, பொருளிடத்திலே மாத்திரை ஏதென்றும் சீவன் என்னப்பட்டதெல்லாம் தத்தம் சரீரத்துக்கு மாத்திரையாய் இருக்கிறதென்றும் கொஞ்சத்துக்குள்ளே ஒப்பச் சொன்னாப்போலே ஆச்சுது.

**1.9 சீவனே மூவகைச் சேட்டைக்குப் பிரதான காரணம்.** சீவனானது தனது சரீரத்துக்கு மாத்திரையுமாய் இருக்கிறதும் தவிரத், தனக்கான சேட்டைகளுக்குப் பிரதான காரணமுமாய் இருக்க வேணுமொழிய மற்றப்படியல்ல. சேட்டையானது உண்டில்லை என்கிறதினாலே சீவனுக்கும் [2]சடத்துக்கும் பேதகம் உண்டென்று சொல்லக்கடவோம். ஆனபடியினாலே சீவனுக்கான சேட்டை இல்லாத பொருளானது சடமாகும். சீவனுக்கான சேட்டை ஏதென்றால், மூன்று வகைக்குள்ளே அடங்கும் என்று சொல்லக்கடவோம். வளருகிற சேட்டையும், பஞ்சேந்

1, மக்கள் உடன்படிக்கை (Convention)   2, Matter

திரியங்கள் முதலான இந்திரியங்களுடைய சேட்டையும், அறிகிற சேட்டையும் இந்த மூன்று கிரியைகள் மாத்திரம் சீவனுக்கான சேட்டைகளென்றும் சொல்லக்கூடுமொழியப், பாரத்தினாலே இறங்குகிறதென்கிறதும், இலகு குணத்தினாலே மேலே ஏறுகிறதானாலும் சீவனுக்கான சேட்டையென்று சொல்லக்கூடாது. ஆதலாலே, கீழே இறங்கிற கல்லும் மேலே ஏறுகிற அக்கினிச் சுவாலையும் உயிருடைத்தானதென்று சொல்லவும் எண்ணவுங் கூடாது. அதேதென்றால், பார இலகு குணங்களினாலே அப்படிப்பட்ட சேட்டைகள் வருகிறதொழிய மற்றப்படியல்ல.

**1. வளருகிற சேட்டை:** இத்தன்மையாக எந்தெந்த [4]அபிவிருத்தியும் சீவனுக்கான அபிவிருத்தி என்று சொல்லப்படமாட்டாது. அதேதென்றால்: ஒரு கல்லுமேல் மற்றொரு கல்லை ஏற்றுகிறதினாலே மதில் வளரும்; விறகுமேலே விறகு கட்டுகிறதினாலே அக்கினி [5]வர்த்திக்கும். இப்படிப்பட்ட அபிவிருத்தியானது சீவனுக்கான அபிவிருத்தியாயிருக்கிறது என்று சொல்லப்படாமற், பொருளானது வேறே பொருளினுடைய சாரமாகிற ஊணைத் தன்னுள்ளத்திலே வாங்கி அதைத் [1]தன்னுடையதாகப் பண்ணி அதனாலே வளருகிற அபிவிருத்தியானது சீவனுக்கான அபிவிருத்தி என்று சொல்லக்கடவதொழிய மற்றப்படியல்ல. இந்தடவாகப் பூமியிலே முளைத்திருக்கிற புல்லுச் செடி, மரமானதுகள் மண் தண்ணீர் முதலானதுகளுடைய சாரமாகிற ஊணை உறிஞ்சுகிறுப்போலே தன்னுள்ளத்திலே வாங்கி, அந்தச் சாரத்தைத் தனதாகப்பண்ணி அத்தாலே புல்லு மரம் முதலானது வளருகிறதினாற், புல்லு மரம் முதலானதுகள் சீவனுடைத்தானது என்று சொல்லக்கடவோம். அதேதென்றால், சீவனுக்கான சேட்டை எங்கே காணப்படுகிறதோ அங்கே சீவன் உண்டென்று சொல்லவேணும். மனுஷனிடத்திலே காணப்படுகிற வளர்த்தியைப்போலே மர முதலான புல்லுகளிடத்திலேயும் சீவனுக்கான சேட்டையென்கிற அபிவிருத்தி காணப்படுகிறதே, ஆதலால் மரங்கள் முதலான புல்லுக்களிடத்திலே சீவன் உண்டென்று சொல்லக்கடவது. இப்படிப்பட்ட சீவனுக்குச் சொல்லப்பட்ட அபிவிருத்தி என்கிற சேட்டையொழிய வேறே சேட்டை உண்டென்று சொல்லக்கூடாது. ஆனபடி

4. வளர்ச்சி 5, வளரும். 1. assimilation

யினாலே [2]வளர்த்தியைப் பண்ணுகிற சீவனென்கிற பேர் இப்படிப்பட்ட சீவனுக்குஉண்டாச்சுது. இது இப்படியிருக்கை யிலே, சரீரமில்லாமல் வளர்த்தி என்கிற சேட்டை உண்டாக மாட்டாது என்கிறதினாலே பூமியிலே முளைக்கிற மரங்கள் முதலானதுகளுக்குக் காணப்படுகிற சரீரம் அழிந்துபோனால், அதுகளுக்கு உண்டான சீவனும் அழிந்துபோம் என்கிறதற்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அதேதென்றால், சேட்டை யானது உண்டு இல்லை என்கிறதினால் சடத்துக்கும் சீவனுக்கும் பேதகம் உண்டென்று கண்டுபிடிக்கிறோம். அவ்வண்ணமே சேட்டைக்குக் காரணமான சடம் உண்டென்றும், ஒரு சேட்டைக்கானாலும் காரணமாகாத சீவன் உண்டாயிருக்கிற தென்றும் சொல்லத்தகாது. மரங்களிலே உண்டான சீவ னுக்குச் சரீரமில்லாமல் தனது சேட்டையாகிற அபிவிருத்தி யுண்டாக மாட்டாது என்கிறதினால், மரத்தினுடைய சரீரம் அழிந்து போனால், அதற்குண்டான சீவனும் அழிந்துபோக வேணும் என்கிறதற்குத் தப்பாது.

2. **இந்திரியங்களுடைய சேட்டை :** இந்த வகையுள்ள சீவன்தவிர வேறே ஒருவகைச் சேட்டையினாலே வேறே ஒரு வகைச் சீவன் உண்டென்று நிச்சயம் பண்ணிக்கொண்டு வருகி றோம். அப்படிப்பட்ட சீவன் ஏதென்றால், [3]பஞ்சேந் திரியச் (சீவன்கள். இதுகள்) [4]இந்திரியங்களுடைய சேட்டைக்குப் பிரதான காரணமாய் இருக்கக் கொள்ள, ஐந்திரியச் சீவன் என்கிற பேரைத் தரித்துக்கொண்டிருக் கும். ஆனபடியினாலே, மிருகங்களிடத்திலே பஞ்சேந்திரிய முதலான இந்திரியங்களுடைய சேட்டைகள் காணப்படுகிறதி னால், மிருகங்களுக்கு ஐந்திரியச் சீவன் உண்டென்று சொல் லக்கடவோம். இந்திரியங்களுடைய வகைகளைப் பத்தும் பத்தாய் விசாரிக்கிறபோது [1]புறவிந்திரியமென்றும், [2]உள்ளிந் திரியமென்றும் சொல்லவேண்டியிருக்கும். கண், ஸ்பரிச முத லான பஞ்சேந்திரியங்களுக்குப் புறவிந்திரியமென்கிற பேர் செல்லும். பஞ்சேந்திரியங்களுடைய [3]விஷயங்களை எல்லாம்

2. vita vegetatvia 3. புலன் அறிவுடைய விலங்குகள் 4. புலன்கள்.

1. Sensus externi 2. Sensus interni 3. Objects; புலன்கள்

ஒன்றும் கிரகிக்கிற [4] சாதாரணமான இந்திரியமும், சரீரத்துக்கு ஆனது இன்னதென்றும் ஆகாதது இன்னதென்றும் [5] மதிக்கிற விந்திரியமும், உள்ளிந்திரியமென்று சொல்லக்கடவோம். இவ்விந்திரியங்களில்லாமல் மிருகமானதுகள் பிழைக்கமாட்டாததினால், சர்வசீவ தயாபரனாய் இருக்கிற நாதன் ஆன காலத்திலே மிருகங்கள் பூமியிலே பிழைத்திருக்கிறதற்கு இப்படிப்பட்ட உள்ளிந்திரியங்களையும் புறவிந்திரியங்களையும் மிருகங்களுக்குக் கொடுத்தருளினார்.

**1.10 சரீரத்தை அவசிய ஆதாரமாய்க் கொண்ட சீவன் சரீரமின்றித் தனித்து நிற்கவோ இந்திரிய சேட்டை செய்யவோ முடியாது.** இந்திரியமென்னப்பட்ட யாவுக்கும் சரீரமானது அவசியமான [6] ஆதாரமாய் இருக்கக் கொள்ள, இந்திரியம் எனப்பட்டதெல்லாம் [7] சரீராதேயமென்று சொல்லப்படும். இந்திரியமானது சரீராதேயமாய் இருக்கிறபோதே, தனக்கு அவசியமான ஆதாரமாகிற சரீரமில்லாமல் நிற்கமாட்டாது என்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே இப்படிப்பட்ட இந்திரியங்களுடைய சேட்டைகள் உண்டாகிறதற்கு அவசியம் சரீரம் வேண்டியிருக்கிறதொழிய மற்றப்படி அல்ல. இதெல்லாம் அதிகமாய் வெளியாகும்படிக்கு அறிய வேண்டின விசேஷமானது: சரீரத்தினுடைய வர்ணம் ருசி முதலான குணங்களையும் சரீரத்துக்கடுத்த சுகம் நோய் முதலானதுகளையும் கிரகித்து அபேக்ஷிக்கிறதற்கும் வெறுக்கிறதற்கும் ஆன [8] சத்தியானது இந்திரியமாகும். இப்படிப்பட்ட சத்தியாகிற இந்திரியமானதுக்கு சரீரத்துக்கடுத்த பொருள் மாத்திரம் விஷயமாய் இருக்கக்கொள்ள இந்திரியமானது சரீராதேயமாய் இருக்கிறதற்குச் சந்தேகப்படக்கூடாது. இந்திரியமானது சரீராதேயமாய் இருக்கிறபோதே, இந்திரியமாகிற சத்தியானது சரீரத்திலே இல்லாவிட்டால் அது கிரியை செய்யவும் நிற்கவுங்கூடாது. ஆதலாலே இந்திரியச் சேட்டை எனப்பட்ட யாவும் சரீரத்தினுடைய அவையவங்களுடைய உதவி இல்லாமல் உண்டாகமாட்டாது. ஆனபடியினாலே, மிருகங்களுக்கு உண்டான இந்திரியச் சீவனுக்கு, இந்திரியத்துக்கடுத்த சேட்டை

4. Sensus communis 5. Vis aestimativa 6. Subjectum (Support)
7. Intrinseco (dependens a materia) 8. Potentia

தவிர வேறே சேட்டை இல்லாததினுல், மிருகங்களுடைய சரீரம் உண்டாயிருக்கையிலே ஐந்திரியச் சீவனுனது பிழைத் திருக்குமொழியச், சரீரத்தினுடைய [9]தாது குண பிரமாணம் இல்லாமல் சரீரம் அழிந்துபோனுல் விருக்ஷங்களுடைய சீவனைப் போல் அழிந்துபோம் என்கிறதற்குத் தப்பாது.

**1.11 சரீரம் அழிய இந்திரிய சீவன்களும் அழிகின்றன:** இந்தச் சத்தியத்திலே சந்தேகம் வராதபடிக்கு இந்தடைவாக ஞாயத்தைச் சொல்லி நடத்திக்கொண்டு வரலாம். சேட்டை உண்டாயிருக்கிறது என்கிறது சீவனுக்கும் சடத் துக்கும் பேத காரணமாய் இருக்கும் என்கிறதுக்குத் தப்பாது. ஆகலாலே, சேட்டையில்லாத சடத்துக்குப் பேதமாயிருக்கிற சீவன் என்னப்பட்ட யாவும் சேட்டையில்லாமல் உண்டாக மாட்டாது. மிருகங்களுக்கு உண்டான ஐந்திரியச் சீவனுன துக்குச் சரீரம் இல்லாவிட்டால் ஒரு சேட்டையானுலும் இராது. ஆகலாலே, சரீரம் இல்லாவிட்டால் மிருகங்களுக்கு உண்டான ஐந்திரியச் சீவனுனது பிழைக்கமாட்டாமல், அழிந்து போம் என்கிறதற்குச் சந்தேகப்பட தேவையில்லை. இப்படியே அபிவிருத்தி என்கிற சேட்டையும் இந்திரியத்துக்கடுத்த சேட்டையும் ஆகிய இவ்விரண்டு வகைச் சேட்டைகளுக்கு மாத்திரம் மிருகங்களுடைய சீவன் காரணமாய் இருக்கக் கொள்ளத், தனது சரீரம் அழிந்துபோனுல் அதுவும் அழிந்து போம் என்கிறதுக்குத் தப்பாது. அது அழிந்து போகிற போதே, அப்பாலே வேறே [1]ஸ்தலமடையத் தக்கதில்லை என்று சொல்ல வேணுமொழிய மற்றப்படியல்ல.

**1.12 ஞான காரியங்களை உணராத மிருகத்துக்கு மோட்சமோ நரகமோ இல்லை:** இதுவும் அன்றியே, இந் திரியமாகிற சத்தியினுலே பாவ புண்ணியங்களையும், ஞாயத் துக்கு ஒக்கும் ஒவ்வாது என்கிறதையும் சரீரமில்லாத சர்வேஸ் வரன் முதலான பொருள்களையும் கிரகிக்கக்கூடாது என்கிற திஞலே, இந்திரியத்தை மாத்திரம் உடைத்தான மிருகங்களு டைய சீவனுனது, இவ்வுலகத்திலே திரிகிறபோது பாவ புண் ணியம் அறியவும் பண்ணவுமாட்டாது, சரீரம் போனுல் நரகம்

9. temperatura (?) 1. இடம்

மோக்ஷ முதலான வேறே ஒரு ஸ்தலத்தை அடையவும் மாட்டாது. இது காரணமாக, மனுஷ சீவனானது சரீரத்தை விட்டுப் பிரிந்தால், அது நல்ல ஸ்தலத்தை அடையவேணும் என்கிறதினாலே, அதற்காகச் செப, தப, தான முதலானதுகளை அவனவன் நடத்திக்கொண்டு வருகிறதுபோல, மிருகம் என்னப்பட்ட யாவும் செத்துப்போனால், அந்த மிருகத்தினுடைய சீவனானது நல்ல ஸ்தலத்தை அடையும்படிக்கு எந்த மதிகெட்டவனானாலும் இப்படிப்பட்ட கருமங்களை நடத்தலாம் என்று சொல்லுவானோ? இதற்கு ஞாயம் ஏதென்றால், மனுஷ சரீரம் அழிந்து போனாலும், மனுஷனுடைய சீவன் அழியாதென்று இனிமேல் ஒப்பச் சொல்லுவோமே. அப்படிப்பட்ட சீவன், சரீரம் இல்லாதிருந்தாலும் அழியாத பொருளாய் இருக்கக்கொள்ள, சரீரத்தை விட்டுப் போன பிற்பாடு, யாதொரு ஸ்தலத்தை அடையவேணும். ஆதலால் பொல்லாத ஸ்தலத்தை அடையாமல் நல்ல ஸ்தலத்தை அடைகிறதற்கு, மனுஷன் செத்துப்போன பிற்பாடு அவனுடைய சீவனுக்காகச் செபம், தான முதலானதுகளை உலகத்திலே இருக்கிற பேர்கள் நடத்துகிறது எல்லாருக்கும் சம்மதமாயிருக்கும். மிருகமோவென்றால், அது செத்துப்போன பிற்பாடு அதினுடைய சீவன் அழிந்துபோய், வேறு ஒரு ஸ்தலத்தையும் அடையமாட்டாததினால், அப்படிப்பட்ட சீவனுக்காகச் செப, தப தானங்களை அவனவன் நடத்துகிறது ஞாயத்துக்கும் புத்திக்கும் ஒவ்வால், யாதானும் ஒருத்தன் செத்த மிருகங்களுக்காக பிஷை தான முதலான தருமங்களை நடத்தினால், அவனைப் பயித்தியம் கொண்டவன் என்று சொல்ல வேணுமொழிய மற்றப்படியல்ல. இதற்கோர் [1]உச்சிதமான ஞாயம் சொல்லிக் காட்டலாம்.

**1.13. மனிதன் நிமிர்ந்தும் மிருகம் கவிழ்ந்தும் இருப்பதன் காரணம்:** அது ஏதென்றால், அளவில்லாத ஞான சுரூபமாய் இருக்கிற கர்த்தரானவர் அந்தந்தப் பொருட்களை அந்தந்த ரூபங்களாய் உண்டாக்கினதுக்கு ஞாயம் உண்டென்று சொல்ல வேணுமொழிய, ஞாயமில்லாமல் வீணாக ஒன்றையும் உண்டாக்கிறார் என்று சொல்லவும் கருதவும்

1. சிறந்த

கூடாது. இது இப்படி இருக்கையிலே, மனுஷனை [2]செவ்வை ரூபமாய் உண்டாக்கி, மிருகம் என்னப்பட்ட யாவையும் கவிழ்ந்த ரூபமாய் உண்டாக்குவானேன் என்கிறதற்கு ஞாயமாவது: மிருகமானது பூமியிலே பிறந்து பூமியிலே சரீரத்தோடிருக்கிற நாள்மட்டும் தனது பாக்கியத்தை அனுபவிக்கக்கூடுமே ஒழியப் பூமியை விட்டால் அழிந்து போகிற சீவனுக்கு ஒன்றும் கிடையாது என்கிறதினால், தனது நன்மையிருக்கிற ஸ்தலத்தை எப்போதும் பார்த்துக்கொண்டு வரவேணும் என்று, நீதி சுரூபமாய் இருக்கிற நாதன் மிருகங்களைக் கவிழ்ந்த ரூபமாய் உண்டாக்கினார் என்று சொல்லக்கடவோம். ஆனபடியினாலே, மிருகங்களுக்கு உண்டான கவிழ்ந்த ரூபமானது மிருகங்களுடைய சீவனுக்கு இந்தப் பூமி தவிர அப்பால் உலகமில்லை என்று உச்சிதமாகக் காட்டிக்கொண்டு வருகிறதென்று சொல்லலாம்.

மனுஷனுக்கோ என்றால், குறையற்ற பாக்கியம் என்கிற மோக்ஷமானது [2]அவதியாயிருக்கக் கொள்ளத், தனது பாக்கியமாய் இருக்கிற சோதி மண்டலத்தை மனுஷனானவன் அடிக்கடி அண்ணாந்து பார்த்து, அதிலுண்டான தனது குறைவற்ற பாக்கியத்தை அபேக்ஷிக்க வேணுமென்று, [3]நிமிர்ந்த ரூபமாக மனுஷனை ஆண்டவர் உண்டாக்கினார். அப்படியே மனுஷனுடைய ஆசையைப் பூரிக்கிற சந்தோஷமும் மனுஷனுக்கு அவதியாகிற குறையற்ற நன்மையும் சோதி மண்டலத்தில் உண்டாயிருக்கிறது என்று, மனுஷனுக்கு உண்டான செவ்வையாக நடக்கிற சுரூபமானது, காட்டிக்கொண்டு வருகிறதென்று உச்சிதமாய்ச் சொல்லலாம்.

**1.14. நரசீவன் வளரும் சீவனிலும், இந்திரிய சீவனினும் சிறந்தது:** இத்தை வரைக்கும் சீவனானது சேட்டைக்குக் காரணமாய் இருக்கிறதினால், சடத்துக்கு அது பேதமாய் இருக்கிறதென்று சொன்னதுந் தவிர, இரண்டு

2. முடிவு 3. நிமிர்ந்த

வகைச் சேட்டையினுலே இரண்டு வகைச் சீவன் உண்டென்று ஒப்பச் சொன்னுப் போலே ஆச்சுது. அப்படியே, அபிவிருத்தி என்கிற சேட்டை மாத்திரம் உடைத்தான மரத்தின் சீவனுனது வளர்த்தியைப் பண்ணுகிற சீவன் என்று சொன்ஞேம். மிருகங் களுக்கு உண்டான ஐந்திரிய சீவனே என்ருல் அபிவிருத்தி என்கிற சேட்டைக்கும் இந்திரியச் சம்மந்தமாயிருக்கிற சேட் டைக்கும் பிரதான காரணமாய் இருக்கக்கொள்ள, விருக்ஷங் களுக்கு உண்டான வளர்த்தியைப் பண்ணுகிற சீவனைக் காட் டிலும் உத்தம சீவனென்று சொல்ல வேண்டியிருந்தாலும், இந்த இரண்டு வகைச் சீவனுனது சரீரம் இல்லாவிட்டால் ஒரு சேட்டையானுலும் பண்ணமாட்டாது என்கிறதினுல் சரீரமில் லாமல் அது நிற்கக்கூடாதென்றும் சரீரம் அழிந்துபோனுல் கூட அழிந்துபோம் என்றும் ஒப்பச் சொன்னுற் போலாச்சுது. இனி வேறே உத்தம சேட்டையினுலே வேறே உத்தம சீவனுகிய மனுஷனுடைய ஆத்துமமானது இன்னதென்று கண்டுபிடிக்க வேணும். அப்படிப்பட்ட சீவன் எந்த ஞாயத்தினுலே அழியாத சீவனென்று சொல்ல வேணும் என்றும், அதற்குப் [3]புத்தியா கிறது ஏது என்றும், [4]சுவாந்திரிய மனசு எப்படிக்கொத்த சத்தி என்றும் அறியவேண்டினவற்றை எல்லாம் பின்வரும் பாடங் களிலே சொல்லுவோம்.

முதற் பாடம் முற்றும்.

(கிரந்தம்) உாசமிசு *

3. Intolligenco 4. free will * 244

## 2-ம் பாடம்

**2.1** ஞான சேட்டை செய்கிற உத்தம சீவன் உண்டு. சேட்டைக்குக் காரணமானது சீவனுதேமென்றும், அபிவிருத்தி ஐந்திரிய சேட்டை என்கிற இரண்டு வகைச் சேட்டையினாலே இரண்டு வகைச் சீவன் உண்டென்றும் போன பாடத்திலே ஒப்புவித்தாப்போலே ஆச்சுது. இந்தப்பாடத்திலே [1]ஞானமாகிற உத்தம சேட்டையினாலே வேறேவகையுள்ள சீவன் உண்டென்று அறிவிக்கத்தக்கதாய் இருக்கும். இப்படிப்பட்ட உத்தம சீவனுடைய விஷயங்களிலே அறிவிக்கப்படலான விசேஷங்களை விசாரிக்குமிடத்தில், அதிலே அநேக விஸ்தாரப் [2]பிரசங்கங்களைப் பண்ணலாம். அதெல்லாம் கரையேறுகிறதுக்கு அவசியமாய் அறிய வேண்டின விசேஷங்கள் ஆகாதகினால் அதெல்லாத்தையும் விட்டு, அவனவன் கரையேறுகிறதுக்கு ஆத்தும விஷயத்திலே தள்ளத்தக்க தப்பறை வார்த்தைகளையும் அங்கீகரிக்கத்தக்க சத்திய விசேஷங்களையும் [2]சங்க்ஷேபமாக வெளிப்படுத்துவோம்.

**2.2** ஞான சேட்டை வேறு மிருகங்களுக்குள்ள மதிக்கிற சேட்டை வேறு: அபிவிருத்தியும் இந்திரிய சேட்டையும் இந்த இரண்டும் தவிர [3]அறிக்கை என்கிற சேட்டை உண்டென்று சந்தேகமில்லாமல் அறிந்து கொண்டிருக்கிறோம். சுபாவத்தினாலே சீவனானது தனக்கு ஆனதின் பேரில் ஆசையினாலே விழுகிறதும், அக்கைத் தேடுகிறதும் சுபாவமான அருவருப்பினாலே தனக்கு ஆகாதது வராதபடிக்குத் தான் [4]அகலுகிறது என்கிறதும், இத்தறுவாயிலே சொல்லப்படுகிற அறிக்கை என்று சொல்லக்கூடாது. அதேதென்றால், அந்தச் சேட்டைகள் இரண்டையும் ஞானமில்லாத ஐந்திரிய சீவனுடைத்தான மிருகமானதும் பண்ணிக்கொண்டு வரும். அவ்வண்ணமே, தனக்கான [5]பக்ஷணங்களைப் பார்த்து, அத்தைத் தின்னத்தக்கதாக நடந்து போகும். அதைக் காணவிட்டால் அங்கேயும் இங்கேயும் தேடிக்கொண்டு திரியும். பொல்லாத தாய் இருக்கிற அடி முதலானதுகளும் தனக்கு வராதபடிக்குத்

1. Spiritual 2. சுருக்கமாக 3. அறிதல் Intelligence
4. தவிர்த்தல் 5. தீனி, இரை 6. இரந்தங்களை (பா. பே.)

தப்பிக்கொண்டு திரியவும் செய்யும், ஆகாததை அருவருத்துத் தேடாமல் இருக்கவும் செய்யும். இதெல்லாம் ஐந்திரிய சீவனுக்கான சேட்டையாய் இருக்கக்கொள்ள, அதுக்கு [6]ஞானபெலன் வேண்டியிருக்கும் என்று சொல்லக்கடவதல்ல.

**2.3** ஞான சேட்டை எது? [7]ஞானமான சேட்டை ஏதென்றால், இது இது ஞாயமென்றும் இது இது ஞாயத்துக்கு ஒத்திருக்கிறதென்றும் ஒவ்வாமல் இருக்கிறது என்றும், புண்ணிய பாவம் இன்னதென்றும், பாவ புண்ணியத்தினாலே ஆக்கினை, பலன் வருமென்றும், அறிகிறதுதான் ஞானசேட்டை என்று சொல்லப்படும். இது தவிர லோகத்தைப் பார்த்து, அதுக்கு ஆதிகாரணம் உண்டாயிருக்க வேணும் என்றும், அப்படிப்பட்ட பொருள் தானாயிருக்க வேணுமென்றும் அவருக்கு உண்டான மற்ற லக்ஷணங்களையும் நிச்சயம் பண்ணுகிறது ஞானம் என்று சொல்லத்தகும்.

இது அன்றியே, அந்தந்தச் சாதியுள்ள வஸ்துக்களுக்குள்ளே அன்னியோன்னியமாகச் சமான ரூபமுள்ள சரீரமும் ஒருவகைச் சீவனும் இருக்கக்கொள்ள, அந்தந்த வஸ்துக்களுக்குப் பின்ன பேதக சுபாவமிருந்தாலும், உண்டான சாமானியத்தினாலே அதெல்லாம் ஒன்றாய் விசாரித்துச் சாமானியம் என்று ரூபிக்கிறது என்கிறதுக்குச் சாமானியமானது காரணமாகும். [9]சாமானியமானது ஏதென்றால், மனுஷர் எல்லாருக்கும் மனுஷத்துவமும், எல்லாப் பசுக்களுக்கும் பசுத்துவமும் அந்தந்த மிருகங்களுக்கு மிருகத்துவமும் இப்படிப்பட்ட சாமானியத்தை ரூபிக்கிறதுக்குக் காரணமாகும். ஆதலாலே, மனுஷனிடத்திலே மனுஷத்துவத்துக்கு அடுத்த ஞாயம் முதலான இத்தொகைப்பட்ட மற்றும் உண்டான கிரிகைகள் ஞானசேட்டை என்று சொல்லக்கூடுமொழியச் சரீரத்துக்கு ஆனதைத் தேடித் திரிகிறதும், ஆகாததைத் தள்ளுகிறதும் ஆகிய இது முதலான மிருகங்களுக்கு உண்டான சேட்டைகள் ஞானமாயிருக்கிறதென்று சொல்லப்படாது.

6. Intellectual power 7. Spiritual act 8. சிரந்தங்களை (பா.பே.)
9. Universal

**2.4 புத்தியானது ஞானசேட்டை பண்ண உடல் ஆதாரமாய் இராது:** இத்தொகைப்பட்ட ஞானசேட்டையைப் பண்ணுகிற பெலத்துக்குச் [2]சுமுத்திரையான பேர் சொல்ல வேணுமானால், [3]புத்தி என்றும் அறிவு என்றும் சேதம் என்றும் அல்லது சேதனம் என்றும் சொல்ல வேண்டும். ஆனால் சில இடங்களிலே சிலர் வேறே பிரகாரமாய் விபரீதமான அர்த்தத்தைப் புத்தி முதலிய சொல்லப்பட்ட பதங்களுக்குச் சொல்லிக்கொண்டு வருகிறதினால், சுமுத்திரையான பேர் என்கிற இரண்டு பதங்களைச் சொல்லிக் காட்டினோம். இந்த ஞானசேட்டைக்கு உண்டான மேரையைப் பார்க்கும்போது, சரீரத்துக்கு அடுத்த விஷயங்கள் மேல் [4]இலவலேசமாகிலும் இந்திரியம் போலே விழுந்து, சரீரத்துக்கு அடுத்ததுகளை மாத்திரம் [5]விஷயமாகக் கிரகிக்கிறதென்று சொல்லப்படாது. ஆனபடியினாலே, இப்படிப்பட்ட ஞானசேட்டை உண்டாகிறதுக்கு அவசியமாய்ச் சரீரம் வேண்டியிருக்கிறது என்று சொல்லத் தகாது. இப்படிப்பட்ட ஞானசேட்டை சரீரமில்லாவிட்டாலும் உண்டாகலாம் என்கிறதினால் அந்த ஞானசேட்டைக்குக் காரணமான பெலமாகிற புத்தியானது [6]சரீராதேயமாய் இராதென்று அற்பமாகிலும் சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கக்கடவோம்.

**2.5 சுவாதந்திரியமுள்ள மனசு செய்யும் ஞானசேட்டை:** சொல்லப்பட்ட இரண்டு வகையுள்ள சீவனைப் பார்க்கிலும், இத்தொகைப்பட்ட சரீர சம்மந்தமாயிராத பொருட்களை நிச்சயிக்கிறதற்குப் பெலமாகிற புத்தி உண்டாயிருக்குமாப்போலே, அப்பேர்ப்பட்ட [7]அசரீரியான பொருட்கள் வேணும் வேண்டாம் என்கிறதுக்கும் மனுஷனிடத்திலே பெலம் உண்டாயிருக்கிறதென்று [8]அனுபவசித்தியினாலே அறிகிறோம், இப்படிப்பட்ட பெலத்துக்குச் சுமுத்திரையான பேர் சொல்ல வேணுமானால் [9]மனசு என்றும் மானசம் என்றும் சித்தம் என்றும் சொல்லக்கடவோம். இப்படிப்பட்ட பதங்களுக்கு வேறே

2. exact name 3. Intelligence, reason 4. சற்றாகிலும்
5. Percipere 6. Independens a materia (corporea)
7. Immaterial, Spiritual, 8. Experience 9. Will

சில இடங்களிலே வெவ்வேறு விபரீத அர்த்தம் சொல்லப்படுகிற தினால், இத்தறுவாயிலே சுமுத்திரையான பேரென்கிற இரண்டு பதங்களைக் கூட்டினோம். இந்த மனசுக்குக் குறையற்ற [1]சுவா தந்திரியம் உண்டென்று பல ஞாயங்களினாலே அங்கீகரிக்க வேணுமே. இதெல்லாம் இனிமேல் ஒப்பச் சொல்லுவோம்.

**2.6 சரீரத்துக்கு மாத்திரையான உத்தம சீவன் வளர்த்தி, இந்திரிய சேட்டைகளையும் செய்கிறது:** சொல்லப்பட்ட இரண்டுவகையுள்ள சீவனைக்காட்டிலும் இந்த உத்தம சீவனானது அழிந்துபோகிற சரீரத்துக்கு மாத்திரையாய் இருக்கையிலே ஞானமான சேட்டையைப் பண்ணிக்கொண்டு வருகிற மேரையைக் கொஞ்சத்துக்குள்ளே வெளிப்படுத்துகிறதற்கு முன்னே உண்டான சில விசேஷங்களை இங்கடைவிலே சொல்லிக் காட்டி நடத்திக் கொண்டு வரலாம். இந்த உத்தம சீவனானது அபிவிருத்தி என்கிற சேட்டைக்கும் இந்திரிய சேட்டைக்கும் ஞான சேட்டைக்கும் காரணமாய் இருக்கக் கொள்ள, அச்சேட்டைகளுக்கான சத்தி ரூபமான குணங்களை உடைத்தானதாய் இருக்கிறதென்று சொல்லக்கடவோம். ஆனபடியினாலே, அபிவிருத்தியைப் பண்ணுகிறதற்கு வேண்டின சத்தி ரூபமான குணமும், பலபல வகையுள்ள ஐந்திரிய சேட்டைகளாகிற காண்கிறதுக்கும் கேட்கிறதுக்கும் [2]ஆக்கிராணத்துக்கும் ருசியைக் கிரகிக்கிறதுக்கும் தொடுகிறதுக்கும் வெவ்வேறு சத்தி ரூபமான குணங்களும் உத்தம சீவனுக்கு உண்டென்று சொல்ல வேணும். இதன்றியே புறம்பாய் இருக்கிற பஞ்சேந்திரியங்களுடைய விஷயங்களை எல்லாம் கிரகிக்கிறதுக்கு உள்ளிந்திரியம் ஆகிற [7]சாதாரண இந்திரியமும் [8]ரூபிகரண சத்தியும், சரீரத்துக்கு ஆனதையும் ஆகாததையும் மதித்துக்கொண்டு ஆனதை அபேக்ஷிக்கிறதுக்கும் ஆகாததை வெறுக்கிறதுக்கும் [9]மதிக்கிற சத்தி ரூபமான குணங்களெல்லாம் ஆனை முதலான மற்ற மிருகங்களுக்கும் உண்டென்று பார்த்துக்கொண்டு வருகிறோம்.

1. Freedom 2. முகர்தல் 6. கிரகிக்கிறதுக்கு 7. Sensus Communis 8. Phantasma, imaginatio. 9. aestimativa (Instinct)

**2.7 சரீர ஆதாரமாயுள்ள இச்சத்தி உத்தம சீவனின் கிழாங்கிஷர்:** ஆனபடியினாலே மிருகங்களிடத்திலே இத் தொகைப்பட்ட சத்தி ரூபமான குணங்கள் சரீர ஆதேயமாய் உண்டாயிருக்கிறதென்று சந்தேகமறச் சொல்லிக்கொண்டு வருகிறாப்போலே, உத்தம சீவனுக்கு உண்டாயிருக்கிற இத் தொகைப்பட்ட சத்தி ரூபமான குணங்களானதுகள் ஊற்றில் நின்று சலமானது ஊறிப் [1]புறப்படுகிறதுபோலே உத்தம சீவனிடத்தில் நின்று அதுகள் தோன்றிப் பிறப்படுகிறதென்று சொல்ல வேண்டியிருந்தாலும், அத்தொகைப்பட்ட சத்தி ரூபமான குணங்கள் சரீர ஆதேயமாய் இருக்கிறதென்று சொல்லவேணுமே யொழிய மற்றப்படியல்ல. இதெல்லாம் உத்தம சீவனுக்கு உண்டான [2]கிழாங்கிஷம் என்று சொல்லத் தகும். இந்தக் கிழாங்கிஷமானதுக்குச் சரீரமானது ஆதார மாய் இருக்கக் கொள்ள, உத்தம சீவனது சரீரத்தோடே இருக்கிற நாள் மட்டும் அப்படிப்பட்ட கிழாங்கிஷமானது உண்டாயிருக்கும். சரீரம் போனால் அத்தோடேகூட இத் தொகைப்பட்ட சத்திரூபமான குணங்களாகிற கிழாங்கிஷ மானது [3]க்ஷயமாய்ப் போம் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. ஆகையினாலே ஆதாரமாகிற சரீர அவயவங்களின் உதவி இல்லாமல் உண்டாகமாட்டாத இந்தச் சேட்டைகளை உத்தம சீவனனது சரீரத்தை விட்டுப் போன பிற்பாடு பண்ண மாட்டாது என்று சொல்லக்கடவோம்.

**2.8 உத்தம சீவன் சரீரமின்றி ஞானசேட்டைகளைச் செய்யவல்லது:** உத்தம சீவனனது, சரீரத்தின் அவயவங்க ளோடே கூடப் பண்ணிவருகிற இந்தவகையுள்ள சேட்டைகள் தவிர, ஞானமான சேட்டைகளைப் பண்ணிக்கொண்டு வருகிறதே. ஆதலால் இந்த சேட்டைக்கான சத்தி ரூபமான குணத்தை உத்தம சீவனனது கொண்டிருக்கிறதென்று சொல்ல வேணும்: அதற்கு சரீரத்தின் அவயவமானது ஆதார மாய் இராததினாலே, ஆத்துமத்திலே தானே அத்தொகைப்பட்ட குணமாகிற புத்தியானது ஆதேயமாய் இருக்கிறதொழிய மற்றப்படியல்ல. ஆகவாலே உத்தம சீவனனது சரீரத்தை விட்டுப் போன பிற்பாடு ஞான சேட்டைகள் உண்டாகிறதுக்கு

1. புறப்படு 2. கீழ்ப்பகுதி 3. அழிந்துபோம்

வேண்டின சத்தியாகிற புத்தியைக் கொண்டிருக்கிறதினால் உத்தம சிவனுடைய சரீரம் இல்லாமலிருந்தாலும், ஞானசேட்டை என்னப்பட்ட யாவையும் பண்ணிக்கொண்டு வருகிறதென்று சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கக்கடவோம்.

**2.9 சரீரத்தோடுள்ள உத்தம சிவன் ஞானசேட்டை செய்வது எப்படி?** இதெல்லாம் இப்படியிருக்கையிலே உத்தம சிவனுடைய அழிந்துபோகிற சரீரத்தோடு கூடவிருந்து, அதற்கு மாத்திரையாய் இருக்கையிலே, அது ஞான சேட்டைகளைப் பண்ணிக்கொண்டு வருகிற மேரை இன்னதென்று இத் தறுவாயிலே சொல்லத்தகும்.

**1. புலனறிவு:** இதிலே நடக்கிற கிரமமானது: புறம்பாயிருக்கிற பஞ்சேந்திரியங்களினாலே அந்தந்த விஷயத்தின் [1]பிரதிபிம்பத்தை உத்தம சிவனுடைய கிரகிக்கும். அதுக்குப் பிற்பாடு உள்ளிந்திரியமாகிற பொது இந்திரியமானது அந்த விஷயத்தின் பிரதிபிம்பத்தைத் தன்னிடத்திலே உண்டாக்கும். அதுக்கப்பால் ரூபிகரண சத்தியானது அந்தந்த விஷயங்களுடைய பிரதிபிம்பங்களைக் கிரமத்தோடே குறையில்லாமல் ரூபிகரித்துப் பார்த்துக்கொண்டிருக்கும். இதெல்லாம் இந்தடைவாக உண்டாயிருக்கையிலே சரீரத்துக்கு ஆதேயமான இத் தொகைப்பட்ட சத்தி ரூபமான குணங்களும் சரீரத்திலே ஆதேயமாய் இராத சத்தியும் ஒரே உத்தம சிவனிடத்திலே உற்பத்தி உடைத்தானதுகளாய் இருக்கக்கொள்ள, முன்சொல்லப்பட்ட சத்திரூபமான இந்திரியங்களுக்கும் ஞான சத்தியாகிற புத்திக்கும் மிகுந்த [2]தொந்தம் உண்டென்று சொல்லக்கடவது.

**2. புத்தியறிவு:** தொந்தமாவது ஏதென்றால், புற இந்திரியங்களும் உள்ளிந்திரியங்களும் தனித்தனியே தனது விருத்திகளைக்கொண்டு விஷயத்தைக் கிரகிக்கிறபோது, புத்தியானது அந்த வஸ்துவை ஞான மேரையாகக் கிரகிக்கும்படிக்கு அதற்குத் தக்க பிரதிபிம்பத்தைத் தன்னிடத்திலே உண்டாக்கி, வஸ்துவை அறிகிறதற்கு அந்தப் பிரதிபிம்பத்தினாலே குறைவற்ற சத்தியாகிற புத்தியைக்கொண்டு உத்தம சிவனுடைய பொருளை அறிகிறது என்கிற [3]விருத்தியைப் பண்ணும். இந்த

1. Species 2. தொடர்பு 3. Operation, தொழில்

விருத்தியானது [1]அறிக்கை என்றும் ஞானம் என்றும் சொல்லப்படும். இப்படிப்பட்ட ஞான விருத்தியானது ஆத்துமத்திலே உற்பத்தி உள்ளதாயிருந்து, ஆத்துமத்துக்குப் புறம்பாய்ப் போகாமல், ஆத்துமத்திலேதானே ஆதேயமாயிருக்கும். வெள்ளை, கறுப்பு முதலான குணங்கள் அந்தந்தப் பொருளிடத்திலே ஆதேயமாயிருக்கக் கொள்ள, அத்தாலே மாத்திரம் பொருளானது வெள்ளையானதுமாய்க் கறுப்பானதுமாய் இருக்கிறாப்போலே, அந்தப் பொருள் விஷயக ஞான விருத்தியானதும் ஆத்துமத்திலே உற்பவித்து ஆத்துமமானது அத்தைக் கொண்டிருக்கக் கொள்ளக், குறையிலலாமல் அந்தப் பொருளை அறிகிறதென்கிற நாமதேயம் சீவனுக்கு உண்டாம். இந்த ஞான விருத்தியானது [2]புத்தியினுடைய வார்த்தை என்றும் உள் வார்த்தை என்றும் சொல்லக்கடவது.

**3. அறிவதில் மூன்று நிலை: கேவல கிரகணம், பரிச்சேதம், பராமரிசம்:** இந்த விருத்தியானது மூன்று வகைக்குள்ளே அடங்கினதாய் இருக்குமென்று அங்கீகரிக்க வேணும். அதேதென்றால், சிலமுறை புத்தியானது ஒன்றோடொன்று கூட்டாமல் பொருளை அறியும். அதாவது [3]விஷயத்தின் பேரிலே [4]விசேஷணத்தை [5]யோசியாமல் பொருளுடைய [6]சுபாவத்தைப் பார்க்கிறாப் போலே இருக்கும். இந்த ஞான விருத்தியானது [7]கேவலாவலோகனம் என்றும் [8]கேவலகிரகணம் என்றும் சொல்லலாம். சில முறை புத்தியானது விஷயத்தோடேகூட விசேஷணத்தைக் கூட்டிப் பொருளை அறியும். அதாவது 'மனுஷனானவன் புத்திமானாய் இருக்கிறான்' என்று அறிகிறபோது, மனுஷனாகிய விஷயத்தோடே புத்திமானாகிய விசேஷணத்தைக் கூட்டினது போலாச்சுது. இந்த ஞான விருத்தியானது [12]பரிச்சேதம் என்றும் தீர்வை என்றும் சொல்லலாம். இந்த இரண்டு ஞான விருத்தி தவிர வேறே ஒரு வகையுள்ள ஞான சேட்டை உண்டென்று சொல்லக்கடவோம். அதாவது, ஒரு பொருளை அறிந்து, அதினாலே வேறே ஒன்றை [13]இழுக்கிறாப்போலே அது உண்டாயிருக்கிறது என்று ஸ்தாபிக்கும். அது

1. அறிதல் Cognition, intellectio 2. Verbum mentale
3. Subject விசேஷியத்தின் (பா. பே) 4. attribute
5. to join 6. essense, nature 7. simple perception
12. Judgment 13. Infer

எப்படியென்றால், 'மெய்யான சர்வேசுரனை அறியாதவன் ஒரு போதும் கரையேறமாட்டான். இவன் சர்வேசுரனை அறியாதவனாய் இருக்கிறான். ஆனபடியினாலே இவன் கரையேறமாட்டான்'. இப்படிப்பட்ட ஞான விருத்திக்குப் [1]பராமரிசம் என்கிற பேர் சொல்லப்படும்.

**2·10 தான் உற்பத்தியான பொருளை விட்டு ஞான விருத்தி வேறொரு பொருளுக்குப் போகமுடியாது:** உத்தம சீவனுடைய ஞான சேட்டையைப் பண்ணுகிற மேரையில் மிகவும் அறியவேண்டின ரகசியமுண்டு. அத்தை வெளிப்படுத்த வேணும். அத்தை வெளிப்படுத்தினதினால், மனுஷனிடத்திலே உண்டாயிருக்கிற ஞானத்தைச் சொல்லும்போது, அறியாத [2]பேர்கள் சத்தியத்தை விட்டுக் கற்பிக்கிற தப்பறைகள் வெளியாகும். அது ஏனென்றால், ஞான விருத்தியானது பூலோகத்திலே காணப்படுகிற உயிருள்ள பொருட்களிடத்திலே பண்ணப்படுகிற சேட்டையாய் இருக்குமொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே, உயிரான சேட்டையினுடைய சுபாவமான மேரையை விசாரிக்குமிடத்தில், ஞான விருத்தியானது எந்தப் பொருளிடத்திலே உற்பத்தி உண்டாகுமோ, அந்தப் பொருளை விட்டுப் பிரியாமல் அதிலே ஆதேயமாயிருந்து, அந்தப் பொருளை ஞானமுடைத்தானதாகப் பண்ணிக்கொண்டு வருமொழிய, ஒரு பொருளிடத்திலே பிறந்து, வேறே பொருளிடத்திலே தாண்டி, அத்தை ஞானமுடைத்தானதாகப் பண்ணலாமென்று மதிகெட்டவனாகிலும் சொல்லமாட்டான்.

**2·11 குடமாகிய சடப்பொருளுக்கு மண் உபாதான காரணம், குயவன் நிமித்தகாரணம்:** இத்தாலே சடமும் உயிருள்ள பதார்த்தமும், குணத்தையும் உயிருள்ள சேட்டையையும் கொண்டிருக்கிற வகையை விசாரிக்குமிடத்தில், அதற்கும் இதற்கும் உண்டான வெள்ளை கறுப்பு முதலான குணங்களுக்கு ஆதாரமாயிருந்து அத்தாலே வெள்ளையானதும் கறுப்பானதும் என்கிற பேர் [3]சட பதார்த்தத்துக்குச் சென்று வரும். ஆனால் சடத்துக்கு உண்டான சுபாவத்தை விசாரிக்கும்போது, தனது வெள்ளை கறுப்பு இது முதலான குணங்களுக்கு ஆதாரமாக மாத்திரம் இருக்குமொழியத், தன்னிலே ஆதேயமாயிருக்கிற

1 Reasoning, argumentation 3 Material substance 2 பொருள் (பா.பே.)

குணங்களுக்கு [1] நிமித்த காரணமாயிராது. ஆனபடியினாலே, வேறே ஒரு நிமித்த காரணத்தினாலே பண்ணப்பட்ட வெள்ளை கறுப்பு முதலான குணங்களுக்குச் சடமானது, எப்போதுமுள்ள மேரையை விசாரிக்குமிடத்தில், [2] உபாதான காரணமாக மாத்திரம் இருக்குமொழிய மற்றப்படியல்ல. மீளவும் வெள்ளை கறுப்பு முதலான குணங்களுக்கு உண்டான சுபாவத்தைப் பார்க்கும்போது, அதுகள் உயிருள்ள சேட்டையாய் இராதது போல, ஒரு நிமித்த காரணமாகிற பொருளினாலே உண்டாக்கப் பட்டு வேறே பொருளிடத்திலே ஆதேயமாயிருக்கும். ஆனபடியினாலே உயிருள்ள சேட்டையாகாத வெள்ளை கறுப்பு முதலான குணங்களுக்குப் [3] பின்னமாயிருக்கிற இரண்டு பொருட்களான துகள் நிமித்த காரணமும் உபாதான காரணமுமாய் இருக்கிற தொழிய மற்றப்படிபல்ல. கலச முதலானதுகளுடைய [4] நிருமாணத்திலே [5] குலாலன் முதலானபேர்கள் நிமித்த காரணம் என்றும் மண் முதலான திரவியங்கள் உபாதான காரணம் என்றும் சொல்லப்படும்.

**2,12 ஞான விருத்திக்கு உயிரே இவ்விருவகைக் காரணம்:** இதெல்லாம் இப்படியிருக்கையிலே, ஞான விருத்தியானது சந்தேகமற உயிருடைத்தான சேட்டையாய் இருக்கக்கொள்ள, ஒரு பொருளிடத்தில் உற்பத்தி உண்டாய் வேறே பொருளிடத்திலே ஆதேயமாயிருந்து அத்தை ஞானம் உடைத்தானதாகப் பண்ணலாம் என்று சொல்லவும் எண்ணவும் கூடாது. அதேதென்றால், சடபதார்த்தமானது கறுப்பினால் கறுப்பானது என்று சொல்லப்படுமாப்போலே சீவனானது ஞானவிருத்தியினாலே அறிகிற பொருளென்று அங்கீகரிக்கத்தக்க பக்ஷமாயிராது. இதற்குச் சுமுத்திரையான ஞாயமேதென்றால், பொருளானது வெள்ளையானதுமாய்க் கறுப்பானதுமாய்க் இருக்கும்படிக்கு வெள்ளையென்கிற குணத்துக்காகிலும் கறுப்பென்கிற குணத்துக்கென்கிலும் ஆதாரமாக மாத்திரம் இருந்தாற் போதும். அதேதென்றால், வெள்ளையானது அத்தை மாத்தி

1. efficient cause 2. material cause 3. வேறுபட்ட
4. உண்டாக்கப்படுவதிலே 5. குயவன்

ரம் சொல்லுமொழிய அப்பாற் சொல்லமாட்டாது. காண்கிறதும் அறிகிறதுமோவென்றால் பார்வைக்கும் ஞான விருத்திக்கும் ஆதாரமாயிருக்கிறதும் தவிரச் சேர்க்கையைச் சொல்லும் என்கிறதுக்குச் சந்தேகப்படக் கூடுமோ? ஆனபடியினாலே என் கண்ணிலே உற்பத்தி உண்டாயிருக்கிற பார்வையாகிற விருத்தியை என் கண்ணானது கொண்டிருக்கக் கொள்ள என் கண் காணுமென்று சொல்லக்கூடுமொழிய, வேறே ஒரு கண்ணிலே பிறந்த பார்வை என் கண் கொண்டிருக்கவும் அந்தப் பார்வையினாலே என் கண்ணானது காணலாம் என்றும் மதிகெட்டவனானாலும் சொல்லுவானோ?

**2.13 புத்தியிலே பிறந்த விருத்தியினாலேயே புத்தி அறியும்:** அத்தன்மைபோலே புத்தியானது பொருளை அறிகிறதுக்கு அதற்குத்தக்க ஞான விருத்தியைப் புத்தியானது தன்னிடத்தில் பிறப்பித்து அத்தைக் கொண்டிருக்கிறதினால், அறிந்திருக்கிறது என்கிற பேர் புத்திக்குச் செல்லுமொழிய, வேறே ஒரு திக்கிலே பிறந்த ஞான விருத்தியைப் புத்தியானது கொண்டிருக்கலாமென்றும் அத்தாலே விஷயத்தை அறியலாம் என்றும் சொல்லுகிறதைச் [1]சலமில்லாமற் பார்த்தோமானால் ஞாயத்துக்கு ஒத்துவராதென்று சொல்லுவோம். அதேதென்றால், பொருள் என்பது கறுப்பு வெள்ளை முதலான குணங்களைக் கொண்டிருக்கிறதினாலே மாத்திரம் அந்தக் குணங்களை உயிருள்ள சேட்டையென்று யாதாமொருத்தன் சொன்னால், அப்படிப்பட்டவன் பயித்தியக்காரன் என்கிற பேர் பெற்று எல்லாரும் சிரிக்கிறதுக்கு இடங்கொடுத்தாப் போலாகும். அம்மருவாதியே வேறொரு திக்கிலே பிறந்த ஞானத்தை நான் கொண்டிருந்து அத்தாலே அறிந்தவனாயிருக்கிறேன் என்கிற [2]வார்த்தைகளை யாதாமொருத்தன் சொல்லிக்கொண்டு வந்தால், பரிகாசத்துக்கு இடங்கொடுத்தான் என்று சொல்லப்படும். அத்தன்மைபோலே, [3]பரஸ்பர விருத்தமான அருத்தங்களாவது: உயிருள்ள சேட்டையாய் இராததை உயிருள்ள சேட்டையாய் இருக்கிறது என்கிறது. இதை ஒரு ஞான விருத்தியிலே தானே

1. பிடிவாதம் 2. அர்த்தங்களை (பா. பே.) 3. Contradictory

ஆரோபித்தாப்போலே ஆச்சுது. அதேதென்றால், உயிருள்ள பொருள் வெள்ளையைக் கொண்டிருக்கிறதென்கிறது உயிருள்ள சேட்டையென்று சொல்லப்படாதபோதே, அத்தைக் கொண்டிருக்கிறது என்கிறதினாலே மாத்திரம் உயிருள்ள சேட்டை என்கிறபேர் செல்லும் என்று அங்கீகரிக்கக்கூடாது. ஆதலாலே கறுப்பு வெள்ளை முதலான குணத்தைக் கொண்டிருக்கிறது என்கிறதினாலே மாத்திரம் உயிருள்ள சேட்டை என்கிற பேரை விதிக்கிறது ஞாயமல்ல. இது இப்படியிருக்கையிலே, அறிகிறது என்கிற சேட்டை உயிருள்ள சேட்டையென்று சொல்ல வேணும். ஆனபடியினாலே வேறொரு திக்கிலே பிறந்த ஞான விருத்தியை என் புத்தி கொண்டிருக்கிறதினால் என் புத்தியானது அறிக்கை என்கிற சேட்டைப் பண்ணுகிறதென்று சொல்லப்படுகிறதினால் விருத்தமான அர்த்தங்கள் சொல்லப்பட்டதென்று சொல்லத்தகும். இது நிமித்தமாகச் சிலர் சொல்லுகிறாப்போலே மண்ணுங்கட்டிபோலே இருக்கிற மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்கிற லிங்க சரீரம் ஆகிற அந்தக் கரணத்திலே, ஞான சொரூபியாயிருக்கிற பரமாத்துமமானது 'பிரதிபலிக்கிறதினாலே அந்தகரணமானது ஞானமுடைத்தானதாயிருக்கிறதென்று சொல்லுகிறது சந்தேகமறக் கண்டு பிடிக்கலான தப்பறையாய் இருக்கக்கொள்ள, கரையேற ஆசை உள்ளவன் அத்தை அங்கிகரிக்கக்கடவானல்ல.

**2.14** சந்தோஷம் முதலிய விருத்திகள் தம்மை உற்பவித்த பொருளை சந்தோஷமாக்குகின்றன, ஞான விருத்தியும் அவ்வாறே: கடையாய் மற்ற விருத்திகள் உண்டாகிறதுக்கு, சந்தோஷம் முதலான உயிருள்ள சேட்டைகளுடைய விஷயத்திலே யோசிக்கப்படுமாப்போலே, ஞான விருத்தியிலே யோசித்துச் சொல்லக்கடவோம். அதெப்படியென்றால், துக்கமும் நோயும் சந்தோஷமும் இது முதலானதுகள் ஒரு இடத்திலே உற்பவித்து வேறொரிடத்திலே ஆதேயமாயிராமல் உற்பவித்த பொருளிடத்திலே ஆதேயமாயிருந்து, அத்தைத் துக்கமும் சந்தோஷமும் உடைத்தானதாகப் பண்ணிக்கொண்டு

4. is reflected

வருகிறாப்போலே ஞான விருத்தியானது எந்தச் சீவனிடத்திலே உற்பவிக்குமோ அந்தச் சீவனிடத்திலே ஆதேயமாயிருந்து அந்தச் சீவனை ஞானமுடைத்தானதாகப் பண்ணிக் கொண்டு வருமொழிய, ஞான விருத்தியானது ஒரு திக்கிலே பிறந்து வேறொரு பொருளிடத்திலே பாய்ந்து அத்தை அறிகிற பொருளாகப் பண்ணலாம் என்கிறது முழு தப்பறையாய் இருக்கிறது என்று விசாரிக்கக்கடவோம். ஞானவிருத்தியானது சீவனிடத்திலே உண்டாகிற மேரையைக் கொஞ்சத்துக்குள்ளே சொல்லிக் காட்டினோம் என்கிறதினாலே, மகா ரகசியமான வேறே இரண்டு விசேஷம் எப்படி என்று கண்டுபிடிக்கலாம். இந்த இரண்டு வகை சத்திய விசேஷங்கள் ஏதென்றும் இருக்கிற வகை ஏதென்றும் வருகிற பாடத்திலே வெளிப்படுத்துவோம்.

இரண்டாம் பாடம் முற்றும்.

## 3-ம் பாடம்

**31 பிள்ளைகளிடமும் பயித்தியகாரரிடமும் நரசீவனின் நிலை:** போன பாடத்திலே ஞான விருத்தியானது நரசீவனிடத்திலே உண்டாகிற விதத்தைக் கொஞ்சத்துக்குள்ளே வெளிப்படுத்தினாற் போலாச்சுது. அந்த விஷயத்திலே அறிய வேண்டிய இரண்டு சத்திய ரகசிய விசேஷங்களுண்டு. அது மனுஷனிடத்திலே எப்போதும் உள்ளதுகள் என்று எல்லோரும் கண்டுகொண்டு வருகையிலே, அதுகளிலே [1]போம் வழி மிகவும் மறைவாய் இருக்கிறதினால், அதுகளிலே அங்கீகரிக்கத் தக்க சித்தாந்தம் ஏதென்று சுருக்கமாய்ச் சொல்லிக்காட்டுவோம். அறியவேண்டின இரண்டு சத்திய ரகசிய விசேஷங்கள் ஏதென்றால், ஞான விருத்தியைப் பண்ணவும் கொண்டிருக்கவும் வல்லதாய் இருக்கிற உத்தம சீவனானது சிறுபிள்ளைகளிடத்திலே ஞான விருத்தியைப் பண்ணாதது ஏன் என்கிறது அறிய வேண்டின முதலாம் ரகசியமாகும். பயித்தியக்காரரிடத்திலே

[1] Solution

யும் நித்திரை பண்ணுகிறவனிடத்திலேயும் சீவனானது 'விபரீத கிரமத்தோடே விஷயங்களை அறிந்துகொண்டு வருமென்கிறது அறியவேண்டின இரண்டாம் ரகசியமாகும். இதிலே சந்தேகப் படத் தக்க விசேஷம் ஏதென்றால், பாலனுடைய சரீரத்தையும் பயித்தியகாரனுடைய சரீரத்தையும் சீவனானது விட்டுப் பிரிந் தால் அறிக்கை இல்லாததுமாய்ப் பயித்தியமுள்ளதுமாய் இராமல், குறையறற ஞானமுடைத்தானதாய் இருக்கிறது என்கிறதுக்குச் சந்தேகமில்லை. இப்படிப்பட்ட சரீரங் களோடே கூட அறிக்கை இல்லாததுமாய்ப் பயித்தியமுள்ளது மாய் இருக்கிறதென்று கண்டு வருகிறோம். ஆனால், ஞான விருத்தியானது சீவனிடத்திலே உண்டாயிருக்கிற விதத்தை நன்றாய் விசாரித்து நிச்சயம் பண்ணினோமானால், இப்படிப் பட்ட இரண்டு சந்தேகங்களுக்கு ஆன ²பிரத்தியுத்தாரத்தை எடுத்துக்காட்டலாம்.

**3.2 உடலோடு கூடிய ஆன்மா உள்ளிந்திரியங்கள் புற இந்திரியங்கள் துணைகொண்டு பொருளை உணரும்; உடல் வளர்த்தியிலேயும் கிழாங்கிஷ வளர்த்தியிலேயும் கருத்தாயிருக்கும் குழந்தையின் ஆன்மா மேலாங்கிஷ மான அறிவுச் செயலில் ஈடுபடுவதில்லை:** அது எப்படி என்றால், புற விந்திரியங்களாகிற பஞ்சேந்திரியங்கள் தனது விஷயங்களைப் பலநாளும் கிரகிக்க, உள்ளிந்திரியங்களானதுகள் அந்தந்த விஷயத்தினுடைய பிரதிபிம்பங்களைத் தன்னிடத்திலே உண்டாக்கி, அந்தந்த விஷயங்களைக் கிரகித்துக்கொண்டு வரும் என்று சொல்லப்பட்டாப்போலே ஆச்சுது. புற இந்திரியங் களும் உள்ளிந்திரியங்களும் பழுதற அந்தந்த விஷயங்களைக் கிரகித்த பிற்பாடு, புத்தியானது தனது ஞான விருத்தியைப் பண்ணிக்கொண்டு வருமேயொழிய மற்றப்படியல்ல. உத்தம சீவனானது அழிந்துபோகிற சரீரத்துக்கு மாத்திரையாயிருக்கிற நாள்மட்டும் இவ்விதாய் ஞான விருத்தியைப் பண்ணிக் கொண்டு வருமொழிய மற்றப்படியல்ல. 1. இப்படிப் பண்ணிக்

1 தவறான முறை 2 விடை,

கொண்டு வருகிற மேரையானது இப்படிப்பட்டதாய் இருக்கையிலே, சிறுபிள்ளைகளுடைய பஞ்சேந்திரியங்களானதுகள் தனது விஷயங்களைப் பலநாளும் கிரகித்துக்கொண்டு வராததினாலே உள்ளிந்திரியங்களானதுகள் அப்படிப்பட்ட விஷயங்களைப் பழுதறக் கிரகிக்கிறதே இல்லை. இப்படிப் பழுதறக் கிரகியாத நாள்மட்டும் பாலனுடைய சரீரத்தோடே கூடியிருக்கிற ஆத்துமமானது தனது ஞான விருத்தியைப் பண்ணாது. ஆறெழு வருஷத்துக்குள்ளே ஏறக்குறைய அந்தந்தச் சரீர தர்மத்துக்குத் தக்கது, பலநாளும் பஞ்சேந்திரியங்களினாலே கிரகிக்கப்பட்ட விஷயங்களைக் கிரகிக்கிற உள்ளிந்திரிகளானதுகள், தனது விஷயங்களைப் பழுதறக் கிரகிக்கும். இந்திரியத்தினாலே பழுதறக் கிரகிக்கப்பட்ட யாதொரு பொருள் உண்டு. [1]அந்த வஸ்து விஷயக ஞான விருத்தியைப் புத்தியானது பண்ணிக்கொண்டு வருமொழிய மற்றப்படியல்ல. இது அழிந்து போகிற சரீரத்துக்கு, அழியாத சீவனானது மாத்திரையாயிருக்கிற மேரைக்கு, ஆன கிரமமென்று சொல்லக்கடவது.

2. இது தவிர, சிறுபிள்ளை சரீரத்தோடே கூடியிருக்கிற ஆத்துமமானது ஒரே ஆத்துமமொழிய மற்றப்படியல்ல. அந்த ஒரே ஆத்துமமானது புற இந்திரியங்களைக்கொண்டும் உள்ளிந்திரியங்களைக்கொண்டும் புத்தியைக்கொண்டும் ஆன சேட்டைகளைப் பண்ணிக்கொண்டு வரவேணும் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. ஆனபடியினாலே சிறுபிள்ளையுடைய சரீரத்தை வளரப் பண்ணுகிறதுக்கும் உள்ளிந்திரியங்களுக்கு வேண்டின அவயவங்களைத் திடமாக இருக்கப்பண்ணுகிறதுக்கும் ஆத்துமமானது தனது பெலமெல்லாம் செலவழித்துக் கொண்டிருக்கையிலே, இப்படிப்பட்ட தனது கீழாங்கிஷத்தைச் செவ்வே உண்டாக்கிறதிலே ஆத்துமமானது முழுதும் [2]உபட்சீணமாய் இருக்கக்கொள்ள, மேலாங்கிஷத்துக்கு அடுத்த ஞான விருத்திகளைப் பண்ணுகிறதுக்கு அதுக்குப் பெலம் மிஞ்சிப் போகாது.

1 அந்தப்பொருளை அறிதல் என்னும் தொழில்
2 கருத்தாய் (Occupied)

முதல் உவமை: தழல்விட்டெரியும் முன் விறகை நெருப்பு கொளுத்துவதுபோல், அறிவை வளர்க்குமுன் குழந்தையின் ஆன்மா உடலைப் பேணுகிறது: இந்தச் சத்தியத்தை ஒரு உவமையினலே வெளிப்படுத்தலாம். அக்கினிக்கு மேலே ஏறுகிறது என்கிறது சுபாவமாய் இருக்கையிலே, தனது அபிவிருத்திக்கு வேண்டிய [1]திரவியத்தைக் கூட்ட வேணுமென்று கீழே இறங்கும். இறங்கிக் கூட்டத்தக்க திரவியம் எல்லாம் கூட்டினபிற்பாடு, தனது சுபாவத்தின்படியே மேலே ஏறும். அத்தன்மைபோலே, ஏறுகிறதுக்குச் சமானமாயிருக்கிற ஞான விருத்தியைப் பண்ணுகிறது என்கிறது மனுஷனுடைய சீவனுக்குச் சுபாவமாய் இருக்கையிலே, தனது சரீரத்தை வளரப்பண்ணவும், இந்திரியங்களுக்கு வேண்டின அவையவங்களைத் திடமாகப் பண்ணவும் [2]தருவாயாயிருந்தால், அச்சீவனனது இறங்கிறதுக்குச் சமானமாயிருக்கிற இப்படிப்பட்ட தனது கீழாங்கிஷக்தைச் செவ்வே பண்ணிக்கொண்டு வரவும்வேணும் என்கிறதுக்குத் தப்பாது. இத்தொகைப்பட்ட இறக்கமானது சீவனிடத்திலே முழுதும் உண்டாயிருந்தால் ஏற்றத்துக்குச் சரியாயிருக்கிற ஞான விருத்தியானது சீவனிடத்திலே பழுதற உற்பவிக்கமாட்டாது. தனக்கு வேண்டின திரவியத்தைக் கூட்டுகிறதுக்கு இறங்கிற அக்கினிபோலே சீவனனது தனது சரீரத்தையும் சரீரத்துக்கடுத்த கீழாங்கிஷத்துக்கு வேண்டின அவயவங்களையும் சிறிது வருஷத்துக்குள்ளே திடமாகப் பண்ணின பிற்பாடு, தனக்கு வேண்டின திரவியத்தைக் கூட்டி ஏறுகிற அக்கினிபோலே ஆத்துமமானது தனது சுபாவத்தின்படியே கிளம்பிப், பலபல ஞான விருத்திகளை எளிதாய்ப் பழுதறப் பண்ணிக்கொண்டு வரும். ஆனபடியினலே பாலனுடைய சரீரத்தோடே கூடியிருக்கையிலே ஞான விருத்திகளைப் பண்ணுமல் ஏழெட்டு வயசுக்குப் பிற்பாடு தனது உத்தம சேட்டைகளாகிற ஞான விருத்திகளைப் பண்ணிக்கொண்டு வரும்.

1 பொருளை  2. சமயம்.

**உவமை 2:** கருமமே கண்ணுனவன் பிற பொருளைக் கவனிப்பதுஇல்லை. அதுபோல் உடல் வளர்ச்சியில் கருத்தாயிருக்கும் ஆன்மா அறிவாற்றலைக் கவனிப்பதில்லை: *இந்த சத்தியத்தை இன்னம் வேறொரு திருஷ்டாந்திரத்தினுலே வெளிப்படுத்தலாம். மனுஷனுனவன் ஒருகாரியத்தின் பேரிலே மிகவும் விசாரமாயிருந்தால், கண்முன்னே வந்த விஷயத்தைக் காணுமலும் சத்திக்கிற சத்தத்தைக் கேளாமலும் இருப்பான். இதுக்குக் காரணம் ஏதெனில் ஒரே சீவனுனது மனுஷனிடத்திலே உண்டான உயிருள்ள சேட்டைகளுக்குப் பிரதான காரணமாய் இருக்கும். ஆனபடியினுலே சீவனுனது ஒரு பொருளை மிகவுந் தியானம் பண்ணுகிறதிலே தனக்குண்டான சத்தியெல்லாம் செலவழித்தால், அப்படிப்பட்ட சேட்டை பண்ணுகிறதிலே முழுதும் உபட்சீணமாய் இருக்கிற சீவனுனது, கண்ணோடே கூடக் காண்கிற சேட்டையும் காதோடே கூட கேட்கிற சேட்டையும் பண்ணமாட்டாது. அக்கன்மைபோல் பாலனுடைய சரீரத்திலே உண்டாயிருக்கிற சீவனுனது அந்தந்த இந்திரியங்களுக்கு வேண்டின அவையவங்களைத் திடமாகப் பண்ணிக்கொண்டு வருகிறதிலே தனது சத்தியில் அனேகம் செலவழிக்கிறதினுல், பஞ்சேந்திரியங்களுடைய சேட்டைகளை ஒரு பிரகாரமாய்ப் பண்ணுகிறதுக்கும் சிறிதுகாலம் போன பிற்பாடு உள்ளிந்திரியங்களுடைய சேட்டைகளைக் குறையோடே மெள்ள மெள்ள ஒரு பிரகாரமாய்ப் பண்ணுகிறதுக்கும் சற்றென்கிலும் சத்தியானது மிஞ்சியிருந்தாலும், ஞானவிருத்தியைப் பண்ணுகிறதுக்குச் சீவனுடைய சத்தியிலே கொஞ்சம் போராமல் அதிகமாக வேண்டியிருக்கக்கொள்ள, அத்தொகைப்பட்ட அபிவிருத்தி என்கிற சேட்டையைப் பண்ணுகிறலே மிகவும் உபட்சீணமுயிருக்கிற சீவனுனது, ஞான விருத்தியைப் பண்ணுகிறதுக்கு வேண்டின சத்தியினுடைய கனமானது தனக்கு மிஞ்சாது என்கிறதினுல், ஞான விருத்தியைப் பண்ணமாட்டாது.*

**3.3 உடலின் உறுப்புக்கள் பைத்தியத்தால் ஒழுங்கீனமாய் இயங்குகையில், உடலோடு கூடிய ஆன்மா**

**வும் ஒழுங்கோடு வேலை செய்யாது:** சீவனுனது ஞான விருத்தியைப் பண்ணுகிற மேரை இப்படிப்பட்டதாயிருக்கையிலே, உள்ளிந்திரியங்களுக்கு ஆதாரமாய் இருக்கிற அவயவங்களானதுகள் வாத பித்த சிலேட்டுமம் முதலான விஷ சலங்களினுலே யாதுலும் வேறே காரணங்களிஞல் என்கிலும் யாதொன்றிலே கெடுக்கப்பட்டால் இந்திரிய பெலன்களானதுகள் தனது செய்கைகளைக் செவ்வையாய் பண்ணமாட்டாது. அதேதென்றால், உள்ளிந்திரியங்களானதுகள் தன்னிடத்திலே உண்டான விஷயங்களுடைய பிரதிபிம்பங்களைக் கொண்டு தனது விருத்திகளைப் பண்ணிக்கொண்டு வருகையிலே, சேதப்பட்ட அவயவங்களினுலேயும் வேறே காரணங்களினுலேயும் கிரமமில்லாமல் விபரீதமாய்ப் பிரதிபிம்பங்கள் அங்கேயும் இங்கேயும் அசைபடுகிறதிஞல், உள்ளிந்திரியங்களானதுகள் தன்தன் விருத்திகளைக் கிரமமில்லாமல் விபரீதமாய்க் பண்ணிக்கொண்டு வரும். இத்தொகைப்பட்ட இந்திரியங்களானதும் புத்தியானதும் ஒரே ஆத்துமத்துக்கடுத்த பெலன்களாய் இருக்கக்கொள்ளத் தங்களுக்கு மிகவும் [1]கொந்த சம்பந்தமாயிருக்கிறது. கொந்த சம்பந்தமாய் இருக்கிறதிஞல், உள்ளிந்திரியங்கள் ஒழுங்கில்லாமல் தனது சேட்டைகளைத் தாறுமாறுகப் பண்ணிக்கொண்டு வரும்போது, புத்தியானது தனது ஞானவிருத்திகளைக் கிரமத்தோடே பண்ணுகிறதுக்கு வல்லதாய் இராதென்பதற்கு சந்தேகப்படத் தேவையில்லை. இதுவே அழிந்துபோகிற சரீரத்துக்கு உக்கம சீவனுனது மாத்திரையாயிருக்கிற ஸ்திதிக்கு வேண்டின கிரமமொழிய மற்றப்படியல்ல.

**3.4 தூக்கத்தில் ஆன்மாவின் நிலை:** [1]நித்திரை அவஸ்தையிலே நடக்கிற வர்த்தமானத்தை அறியும்படிக்கு இந்தடவிலே யோசிக்கக்கடவோம். மனுஷன் முதலான மிருகம் என்னப்பட்ட யாவும் [2]சாகரணத்திஞலே அடைகிற [4]இளைப்பு முதலான வருத்தங்களைத் தீர்க்கிறதுக்கும், இப்படிப்பட்ட

1 நெருங்கிய தொடர்பு 2. உறக்கநிலை 3, விழித்திருக்கும் நிலை
4. பிழைப்பு (பா. பே.)

சுகமுதலான சரீரத்தின் வேறே நன்மைகளை அடைகிறதுக்கும் சகலத்துக்கும் ஆதிகாரணமாய்க் கிருபை சுரூபியான கர்த்தரானவர் கட்டளையிட்ட இந்திரியங்களுடைய [1]பந்தமானது நித்திரை என்று சொல்லப்படும். இந்த இந்திரியங்களுடைய பந்தனமானது தலையிலே ஏறுகிற ஆவி முதலானதுகளினாலே பண்ணப்படுகிறதென்று சொல்லப்படும். சன்னி வாதம் முதலானதுகளாலே பண்ணப்படுகிற இந்திரிய பந்தனமானது நித்திரையாய் இராதென்று காட்டவேணும் என்கிறதினாலே இளைப்பாறுதலாகிற சுகமுதலான நன்மைகளை மனுஷன் முதலான மிருகங்கள் அடைகிறது என்கிற பதங்களைக் கூட்டினோம். கனமான நித்திரை உண்டாயிருக்கையிலே புற இந்திரியங்களும் உள்ளிந்திரியங்களும் கட்டுப்படுகிறது என்கிறதினால், அப்படிப் பட்ட கனமான நித்திரை உண்டாயிருக்கையிலே, சீவனானது ஐந்திரிய சேட்டைகளைப் பண்ணமாட்டாததினால், புத்தியைக் கொண்டு ஞானவிருத்திகளைப் பண்ணுகிறதுக்கு வல்லதாயிராது.

அதேதனென்றால், அழிந்துபோகிற சரீரத்துக்கு ஆத்துமமானது மாத்திரையாயிருக்கிற நாள்மட்டும், ஞான விருத்திகளைப் பண்ணுகிறதுக்கு உள்ளிந்திரியங்கள் என்கிலும் தமது விருத்திகளைப் பண்ணிக்கொண்டு வரவேணும். இது ஆத்துமமானது அழிந்து போகிற சரீரத்துக்கு மாத்திரையாயிருக்கிற மேரைக்குத் தக்க கிரமமாகும். நித்திரையானது கனமாய் இராதிருந்தாற் புற இந்திரியங்கள் மாத்திரம் கட்டுப்பட்டு உள்ளிந்திரியங்களானதுகள் கட்டுப்படாமலிருக்கும். உள்ளிந்திரியங்கள் கட்டுப்படாமல் இருக்கும்போது அதுகளிலே இருக்கிற பிரதி பிம்பங்களைக் கொண்டு சீவனானது அதுகளுடைய சேட்டைகளைப் பண்ணிக்கொண்டு வரும். இப்படிப் பட்ட இந்திரியச் சேட்டைகள் உண்டாயிருக்கிறதினாலே, ஆத்துமமானது புத்தியைக்கொண்டு தனது ஞானவிருத்திகளைப் பண்ணிக்கொண்டு வருகிறதென்று அனுப சித்தியினாலே அறிகிறோம். இது சொற்பனம் என்றும் கனவு என்றும் சொல்லப்படும். இதிலே மிகவும் அறியவேண்டின ஒரு விசேஷமுண்டு. அதாவது ஆத்துமமானது அழிந்து போகிற

1. கட்டு

சரீரத்துக்கு மாத்திரையாய் இருக்கையிலே *சாகரணம் ஆகிற சகல இந்திரியங்கள் கட்டப்படாமலிருக்கிற அவத்தையானது உண்டாயிருந்தால், தனது சுவாதந்திரிய மனசினாலே அந்தந்த விசாரங்களைத் தள்ளுகிறதுக்கும்உடன்படுகிறதுக்கும் வல்லதாய் இருக்கும். சாகரணம் இல்லாமற் புற இந்திரியங்கள் மாத்திரம் கட்டுப்பட்டால், உள்ளிந்திரியங்களிடத்தில் இருக்கிற பிரதி பிம்பங்களானதுகள் பிசாசு சரீரதர்மம் இது முதலான காரணங்களினாலே தாறுமாறாய் அசைக்கப்பட்டு ஆத்துமமானது ஐந்திரியச் சேட்டைகளையும் ஞான விருத்திகளையும் வேணும் வேண்டாமென்கிற அங்கீகாரத்தையும் கட்டாயமாய்ப் பண்ணிக் கொண்டு வருமொழியத் தனது இச்சைப்படி இப்படிப்பட்ட விருத்திகளைப் பண்ணமாட்டாது. இது காரணமாகச் சொப்பன அவஸ்தையிலேயும் பயித்திய அவஸ்தையிலேயும் மனுஷன் பண்ணி வருகிற 'அங்கீகார அனங்கீகாரத்தினாலே பாவபுண்ணியம் கட்டிக்கொள்ளுகிறதில்லை என்று சொல்லக்கடவோம்.

**3.5 ஆத்துமத்தில் ஆதேயமாயிருக்கும் மனசு உண்டு:** உத்தம சீவனுனது புத்தியைக் கொண்டு ஞான விருத்திகளைப் பண்ணிக் கொண்டு வருகிற மேனையானது கொஞ்சத்துக்குள்ளே சொல்லப்பட்டாப்போலே ஆச்சுது. சரீர சம்மந்தமாய் இருக்கிற பொருட்களை நிச்சயிக்கிறதுக்குப் பெலமாகிற புத்தியுண்டாய் இருக்குமாட்போலே அத்தொகைப் பட்ட அசரீரியான பொருட்களை வேணும் வேண்டாம் என்கிற துக்கு மனுஷனிடத்திலே ஆன பெலமுண்டாய் இருக்குதென்று அனுபவசித்தியினாலே அறிகிறோம். இப்படிப்பட்ட பெலத்துக்குச் சுமுத்திரையான பெயர் சொல்ல வேணுமானால் மனசு என்றும், மானசம் என்றும், சித்தம் என்றும் சொல்லக் கடவோம். இப்படிப்பட்ட பதங்களுக்குச் சில இடங்களிலே வேறே விபரீதமான அர்த்தம் சொல்லப்படுகிறதினால், இத் தறுவாயிலே சுமுத்திரையான பேர் என்கிற இரண்டு பதங் களைக் கூட்டினேம். இந்த மனசானது சரீர சம்பந்தமாய் இராத பொருட்களை வெறுக்கவும் அபேக்ஷிக்கவும் செய்யும் என்கிறதினாலே, புத்தியானது போலே ஆத்துமத்திலே ஆதேய

மாய் இருக்கிறதொழியச் சரீரமானது அப்படிப்பட்ட மனசுக்கு ஆதாரமாய் இருக்குதென்று சொல்லக்கூடாது.

**3.6 உடலை விட்டுப் பிரிந்த நிலையில் ஆன்மாவுக்குப் புத்தியோடு மனசும் உண்டு:** அதேதென்றால், சரீரத்துக்கு ஆனதையும் ஆகாததையும் மதித்து அபேக்ஷிக்கிறதுக்கும் வெறுக்கிறதுக்கும் சத்தி ரூபமான இந்திரியம் என்னப்பட்டதெல்லாம் சரீரியானதைக் கடவாமல் இருக்கக்கொள்ள, சரீரத்திலே ஆதேயமாயிருக்கும். ஆத்துமத்திலே ஆதேயமாயிருக்கிற மனசோவென்றால், சரீரம் என்னப்பட்டதெல்லாம் கடந்து சரீரத்துக்குமேலே இருக்கிற ஞானப் பொருட்களை விஷயீகரிக்கிறதினாலே சரீரத்திலே ஆதேயமாய் இருக்கமாட்டாது. இதற்குக் காரணமேதெனில், சரீரத்திலே ஆதேயமானது சரீரத்தைக் கடந்து சரீரத்துக்கு மேலே இருக்கிற பொருட்களை விஷயீகரிக்க மாட்டாது. மனசானது சரீரமானதைக் கடந்து சரீரத்துக்கு மேலான வஸ்துக்களை விஷயீகரிக்கிறதென்று கண்டுகொண்டு வருகிறோம். ஆதலாலே மனசானது சரீரத்திலே ஆதேயமாயிராமல் ஆத்துமத்திலேதானே ஆதேயமாய் இருக்கிறதென்று சொல்லக்கடவோம். ஆத்துமத்திலே ஆதேயமாயிருக்கிற போதே, ஆத்துமமானது சரீரத்தைவிட்டுப் பிரிந்தாலும் புத்தியானதைக் கொண்டிருக்கிறப்போலே, அங்கீகார அனங்கீகாரத்துக்குக்குச் சத்தி ரூபமான இந்த மனசானதைக் கொண்டிருக்கிறதென்று சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கக்கடவோம். ஆனபடியினாலே, ஆத்துமமானது சரீரத்தைவிட்டுப் பிரிந்த பிற்பாடு புத்தியைக்கொண்டு ஞான விருத்திகளைப் பண்ணுகிறதுக்கு வல்லதாய் இருக்குமாப்போலே, அப்படிப்பட்ட ஞானவிஷயங்களுக்குள்ளே ஆத்துமமானது தனக்கானதையும் ஆகாததையும் பார்த்து மனசைக்கொண்டு அதுகளை வேணும் வேண்டாமென்கிற விருத்திகளைப் பண்ணத் தக்கதாகச் சீவனானது வல்லதாயிருக்கிறது என்கிறதுக்குச் சந்தேகமில்லை. இப்படிப்பட்ட மனசானது ஒருபிரகாரமாய்க் குறையற்ற சுவாதந்திரியமுள்ளது என்று சொல்ல வேணும்.

**3.7 சுவாதந்திரியம் — பராதந்திரியம்:** இதெல்லாம் வெளியாகும்படிக்குப் பாரதந்திரியம் ஏதென்றும், சுவாதந்

திரியம் ஏதென்றும், சுவாதந்திரியமானது எத்தனை வகையுள்ள தாய் இருக்கிறதென்றும் வெளிப்படுத்த வேணும். அது எப்படி என்றால், பொருளிடத்திலே காணப்படுகிற சேட்டையான துக்குப் பொருளிடத்திலே பெலம் உண்டாயிராமல், அந்தச் சேட்டைக்குக் காரணமான பெலம் பிறத்தியிலே இருக்கிறது என்கிறது பாராதந்திரியம் என்றும், பாரதந்திரியத்தினாலே பொருளானது சேட்டை உடைத்தானதாய் இருக்குமென்றும் சொல்லத்தகும். பொருளிடத்திலே காணப்படுகிற சேட்டைக்குப் பொருளிடத்திலே காரணமான பெலம் உண்டாயிருக்கிறது என்கிறது சுவாதந்திரியம் என்றும், சுவாதந்திரியத்தினாலே பொருளானது சேட்டை உடைத்தானதாய் இருக்கிறதென்றும் சொல்லத்தகும். அவ்வண்ணமே, வஸ்துவினிடத்திலே இருக்கிற சத்தியைக் கொண்டு தனது சேட்டையைப் பண்ணுகிற பொருளானது சுவாதந்திரியம் உள்ளதாய் இருக்கும். அப்படிப் பட்ட சுதந்தரத்தினுடைய சுபாவமானது சுவாதந்திரியம் என்று சொல்லத்தகும்.

3·8 சுவாதந்திரியம் என்ற சொல்லுக்கு இடுகுறிப் பெயர், காரணப்பெயர் என்ற இரண்டு பொருள்: இந்தடைவுள்ள [2]யோகார்த்தமானது சுவாதந்திரியம் என்கிற பதத்துக்கு உண்டாயிருக்கையிலே [3]லோக சங்கேதத்தினாலே வருகிற [4]ரூட்டியார்த்தத்தை விசாரிக்குமிடத்தில், தனது சத்தியைக் கொண்டு சேட்டையைப் பண்ணுகிற பொருள் என்னப்பட்ட யாவும் 'சுதந்தரம்' என்றும் இதினுடைய பண்ணுகையானது 'சுவாதந்திரியம்' என்றும் சொல்லத்தகாது. அதெப்படியென்றால், சேற்றிலே உற்பத்தியுள்ளது என்று சொல்லப்படுகையிலே சேற்றிலே உற்பவிக்கிற பொருள் என்னப்பட்ட யாவுக்கும் [5]பங்கசம் என்கிற பேர் சென்று வராமல், தாமரைப்பூ என்கிற பொருள் மாத்திரம் பங்கசம் என்கிற நாமதேயத்தைக் கொண்டிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. அத்தன்மைபோல, பொருளினிடத்திலே இருக்கிற சத்தியினாலே பிறக்கிற சேட்டையானது சுவாதந்திரியம் என்று சொல்லப்பட்டிருக்கையிலே, பொருளிடத்திலே இருக்கிற சத்தியினாலே உற்பத்தியுள்ள

2 காரணப் பெயர்கள் 3 Convontion: உலக வழக்கு, மரபு
4 இடுகுறிப் பெயர்கள் 5 பங்கம் : சேறு, ஜம் : தோன்றுவது

[5]பண்ணுகை என்னப்பட்ட யாவுக்கும் சுவாதந்திரியம் என்கிற பேர் நடவாமல், ஒரு வகையுள்ள பண்ணுகைக்கு மாத்திரம் சுவாதந்திரியம் என்ற பேர் செல்லுமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே, கல்லானது கனத்தினாலே கீழேயிறங்கிப் போகிறதினாலேயும், தனது சத்தியினாலே அக்கினியானது உஷ்ணம் பண்ணுகிறதினாலேயும், சூரியனானது தன்னிடத்திலி ருக்கிற பெலத்தினாலே தன் பிரகாசத்தை எங்கும் பரவப் பண்ணுகிறதினாலேயும், கல்லும் அக்கினியும் சூரியனும் சுவாதந்திரிய முள்ள பொருட்கள் என்று சொல்லத்தகாது. இந்தடவிலே விருக்ஷம், புல்லு, செடி என்னப்பட்டதெல்லாம் தனது சத்தியினாலே பூத்துப்பழம் பழுத்தாலும், விருக்ஷ முதலானது சுவாதந்திரியம் உள்ள பொருளென்று சொல்லக்கடவதல்ல. இந்தடவாக மனுஷன் முதலான மிருகங்களையும் பார்க்குமிடத்தில், மனுஷன் முதலான மிருகத்திலே இருக்கிற பலத்தினாலே பக்ஷிக்கப்பட்டதெல்லாம் சீரணமாய்ப் போனாலும், அப்படிப்பட்ட செரிக்கிற சேட்டையானது சுவாதந்தரியத்தினாலே வருகிற கிரிகையென்று சொல்லத் தகாது.

அதேதென்றால், அறியப்பட்ட விஷயத்தை உத்தேசித்துப் பொருளானது தனது சத்தியைக்கொண்டு பண்ணிக்கொண்டு வருகிற யாதொரு கிரிகை ஒன்றுண்டு. அதுவே சுவாதந்திரியமான பெலத்தினாலே வருகிற சேட்டையென்று சொல்லப்படுமொழிய மற்றப்படியல்ல. இந்த விதமாகச் சுவாதந்திரியம் என்கிற பதத்துக்கு அர்த்தத்தைச் சொன்னோமானால் பூமியிலே காணப்பட்ட பொருள்களுக்குள்ளே மனுஷன் முதலான மிருக சாதிகள் என்னப்பட்டதெல்லாம் சுவாதந்திரியமுள்ள பொருளென்று சொல்ல வேண்டியிருக்கும். ஆனபடியினாலே இதெல்லாம் வெளியாகும்படிக்குக் [1]கேவல சுவாதந்திரியமானது ஏதென்றும், அது எத்தனை வகைக்குள்ளே அடங்கியிருக்கிறதென்றும் வெளிப்படுத்தக் கடவோம். இதெல்லாம் கிரமத்தோடே கொஞ்சத்துக்குள்ளே வருகிற பாடத்திலே சொல்லிக் காட்டுவோம்.

மூன்றாம் பாடம் முற்றும்

---

6 செயல் 1 Libertas simpliciter (formalis)

## நாலாம் பாடம்

**4.1 சுவாதந்திரியத்துக்குரிய மூன்று குணங்கள் :** புத்தியுடைத்தான சனமானது கரையேறுகிறதுக்குக் கர்த்தன் அதற்குக் கொடுத்த சுவாதந்திரியமான குணத்தை மதிகெட்ட பாவிகளான பேர்கள் அறியாமல், அத்தை நிரூபணம் பண்ணுகிறதிலே அனேகம் தப்பறை விஷயங்களைக் கற்பித்து லோகத்துக்குக் கேடாகச் சில [1]கிரந்தங்கள் உண்டு பண்ணினார்கள்; ஆகையாலே, மனுஷனானவன் கரையேறுகிறதுக்குக் கர்த்தன் கொடுத்த சுவாதந்திரியத்தைப் பலபல தப்பறை விஷயங்களினாலே கெடுத்து அத்தைத் தாங்களும் தங்களுடைய சீஷர்களும் பாதாளத்திலே இறங்கிறதுக்கு வழியாகப் பண்ணிக் கொண்டு வந்தார்கள். இப்படிக்கொத்த கேடானது கரையேற ஆசை உள்ள பேர்களுக்கு வராதபடிக்கு மனுஷனுக்குண்டான சுவாதந்திரிய விஷயத்திலே அங்கீகரிக்கத்தக்க சிறிது சத்திய விசேஷங்களைச் சங்க்ஷேபமாக வெளிப்படுத்தக்கடவோம்.

சுவாதந்திரிய குணமானது [2]சுவைரம் என்றும் சுவேச்சை என்றும் வித்தியாபாரகராய் இருக்கிற பேர்கள் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட குணத்தை விசாரிக்குமிடத்தில், கிரிகையானது உண்டாகிறதுக்குக் கிரிகை உடைத்தான பொருளின் உள்ளத்திலே இருக்கிற சத்தியானது மாத்திரம் சுவாதந்திரியம் என்றும் சுவேச்சை என்றும் சொல்லத்தகாது. அதேதென்றால் கல் இறங்கி விழுகிறதுக்கும் அக்கினி சுடுகிறதுக்கும் தண்ணீர் ஈரம் பண்ணுகிறதுக்கும் விருக்ஷாதிகள் பழம் பழுக்கிற சேட்டை முதலானதுகளுக்கும் வேறே அனேக இத்தொகைப் பட்ட பொருள்கள் தனது சேட்டைகளை உண்டாக்கிறதுக்கும் அப்படிப்பட்ட பொருள் உள்ளத்திலே ஆன பெலன் உண்டாயிருந்தாலும் அப்படிப்பட்ட பொருள்கள் தனது கிரிகைகளை சுவேச்சையினாலே பண்ணிக்கொண்டு வருகிறதென்று சொல்லக் கூடாது.

பின்னையும் அறியப்பட்ட விஷயத்தை உத்தேசித்துப் பொருள்களானது தனது உள்ளத்திலே இருக்கிற பெலத்தினாலே கிரிகைகளைப் பண்ணினாலும் சுவேச்சையினாலே தனது

1. நூல்கள் 2. சுதந்திரம், உரிமை

கிரிகளைப் பண்ணிக்கொண்டு வருகிறதென்று சொல்லக்கடவதல்ல. அதேதென்றால், மிருகம் என்னப்பட்டதெல்லாம் தனக்கு ஆகாததையும் ஆனதையும் வெறுத்தும் அபேக்ஷித்தும் [3]கெமனம் முதலான சேட்டைகளைப் பண்ணிக்கொண்டு வந்தாலும், மிருகமானது ஒரு குறையினாலே சுவேச்சையுள்ள பொருளென்று சொல்லப்படாது. அந்தக் குறையானது மிருகமானது தனக்கு ஆகாததையும் ஆனதையுந் தனக்கு உண்டான மதிக்கிற இந்திரியத்தினாலே கிரகிக்கிறபோது, மிருகத்தினாலே கிரகிக்கப்பட்ட விஷயமானது மிருகமானது தனது கிரிகையைப் பண்ணுகிறதுக்குக் குறையற்ற கட்டாயம் பண்ணுமொழிய மற்றபடியல்ல. அவ்வண்ணமே மிருகத்தாலே காணப்பட்ட புல்லு முதலான பக்ஷணமானது பசியுள்ள மிருகத்தைத் தன்னண்டைக்கு இழுத்து மிருகமானது பக்ஷிக்கிறதுக்குக் கட்டாயம் பண்ணுகிறதென்று சொல்லவேணும். அத்தாலே மிருகமானது தனது பக்ஷணத்தைக் கண்டால், அத்தைப் பக்ஷிக்கக் கட்டாயமாய்ப் போக வேணுமொழிய [1]பந்தனம் முதலான விக்கினங்கள் இல்லாவிட்டாற் போகாமலிருக்கக் கூடாது. இந்தடவிலே மிருகமானது தனக்கு ஆகாததாய் இருக்கிற அடி முதலானதுகளைப் யாதொரு இந்திரியத்தினாலே கிரகித்தால், தனக்கு ஆகாததை வெறுத்து அத்தை அனுபவியாதபடிக்கு அவசியமாய் ஓடிப்போகவேணுமொழிய, அப்படிப்பட்ட ஆகாத விஷயத்தை அனுபவிப்பேனென்று துணிந்து நிற்கமாட்டாது. ஆனபடியினாலே மிருகமானது தனக்கு ஆகாததையும் ஆனதையும் கிரகித்துப் பலபல சேட்டைகளை அந்தரங்கமான பலத்தினாலே பண்ணிக்கொண்டு வந்தாலும், அப்படிப்பட்ட கட்டாயமாகிற குறைச்சலினாலே மிருகமானது சுவேச்சையுள்ள பொருளாய் இருக்கிறதென்று சொல்லப்படாது. அவ்வண்ணமே, சுவாதந்திரியமான குணத்துக்கு முன்சொல்லப்பட்ட மூன்று விசேஷம் உண்டாயிருக்க வேணுமொழிய, அதிலே குறையுண்டானாற் குறையற்ற சுவாதந்திரியம் என்றும் மெய்யான சுவேச்சை என்றும் சொல்லவுங் கருதவும் கூடாது.

3. நடத்தல்   1. கட்டு

**4.2 நாலுவகைச் சுவாதந்திரியம்:** இது இப்படியிருக்கையிலே, நாலுவகையுள்ள சுவாதந்திரியம் உண்டாயிருக்கிறது என்று சொல்லக்கடவோம். 1. எண்ணப்படாத நன்மைகளை அறிந்து [2]பிரரேகன் இல்லாதே அதுகளைப் பண்ணுகிறதுக்கு ஒரு இடத்திலே விழமாட்டாத சத்தியானது உத்தம சுவாதந்திரியம் என்று சொல்லப்படும். இப்படிக்கொத்த உத்தம சுவாதந்திரியமானது ஒன்றான சர்வேஸ்வரனுக்கே சுபாவமாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே சகல நன்மை சொரூபமாய் இருக்கிற கர்த்தனுக்குச் சுபாவமாயிருக்கிற உத்தம சுவாதந்திரியத்தினாலே கர்த்தரானவர் எண்ணப்படாத நன்மைகளை அறிந்து கட்டாயம் பண்ணுகிற பிறர்கள் இல்லாதே, அதுகளையெல்லாம் பண்ணலாம் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. ஆனால் கர்த்தரானவர் மட்டில்லாத சகல நன்மை சுரூபியாய் இருக்கக்கொள்ள தனது உத்தம சுவாதந்திரியத்தினாலே நன்மை செய்யலாமொழிய, மற்றப்படியல்ல. 2. இப்படிப்பட்ட உத்தம சுவாதந்திரியமானது கர்த்தனுக்கு மாத்திரம் சுபாவமாய் இருக்கையிலே, அப்படிப்பட்ட கர்த்தனுடைய [3]பிரத்தியக்ஷ தெரிசனமானது குறையற்ற பாக்கியம் என்கிற மோக்ஷத்தை அனுபவிக்கற பேர்களுக்கு உண்டாயிருக்கிறதே, அப்படிப்பட்ட பிரத்தியக்ஷ தெரிசனத்தின் [1]பிரசுரத்தினாலே மோக்ஷத்தை அனுபவிக்கிற பேர்கள் அஞ்ஞானம் தப்பறை இது முதலான பாவமாகிற குறைகளிலே விழமாட்டாத பேர்களாய், நன்மை விஷயத்திலே சம்மதிப்பார்களொழிய ஓர் அற்பப் பாவத்திலே ஆனாலும் விழ உடன்பட மாட்டார்கள். அதேதென்றால், புண்ணியாத்துமாக்களாய் இருக்கிற பேர்கள் [2]தேவ விஷயக பத்தி முதலான நல்ல குணங்களோடே கூடின மரணத்தினாலே வழிப்போக்கனுக்கான நாமமும் அவத்தையும் இல்லாத பேர்களாய், அவதியை அடைந்திருக்கிறதினால், வழிப்போக்கருக்கு ஆன [3]சஞ்சலமாகிற நன்மை விஷயத்திலே திரும்பலான குணத்தை விட்டு, அப்படிப்பட்ட பாக்கியவான்களுடைய மனசானது தேவ விஷய பத்தி முதலான சகல தர்மங்களிலே குறையில்லாமல் நன்மையில் நிலைகொண்டதாய் இருக்கக்கொள்ள, அது நன்

2. இயக்குவோன் 3. கண்ணுறக்காணல்

1 மிகுதியாலே 2 Amor Dei 3 mutalilitas

மையை விட்டுக் குறையாகிற பாவத்தை ஆசைப்பட்டுப் பாவத்திலே திரும்பி விழ மாட்டாது. இதுவும் கர்த்தனுடைய நீதி திருவுளத்துக்கு ஒத்திருக்கிறது என்று சொல்லக்கடவோம். அதேதென்றால், நல்ல கோதும்பையை விரைத்தவன் பலனுகிற நல்ல கோதும்பையை அறுக்கவும் ⁴பொசிக்கவும் கர்த்தன் பண்ணுகிறதென்கிறது கர்த்தனுடைய ஞானமுள்ள கிரமத்துக்கு ஒத்திருக்கிறது என்று சொல்லத் தகுமாப்போலே, நல்ல விதையை விதைக்கிறவனுக்குச் சரியாகப் புண்ணியாத்துமாக்களாய் இருக்கிற பேர்கள் தர்மம் விரைப்பார்கள். அத்தோடு மரணத்தை அடைந்ததினாலே தர்மத்திலே நிலைகொண்ட மனசைப் பலனாக எப்போதும் அவர்களைக் கர்த்தரானவர் கொண்டிருக்கப் பண்ணுகிறது என்கிறது சகலத்தையும் கிரமத்தோடே நடக்கிற கர்த்தனுடைய நீதியுள்ள திருவுளத்துக்கு ஒத்திருக்கும் என்று சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கக் கடவோம்.

3. இந்த இரண்டு வகையுள்ள சுவாதந்திரியம் தவிர அவதியாகிற நரகத்தை அடைந்த பேர்களுக்கு உண்டாயிருக்கிற சுவாதந்திரியத்தைப் பார்க்குமிடத்தில், பாவ விஷயத்திலே அது நடக்குமொழிய நன்மை விஷயத்திலே அது நடக்காது. அது ஏதென்றால், பாவிகளான பேர்கள் பாவத்தோடே கூட மரணத்தினாலே அவதியை அடைந்ததினால் பாவத்திலே நிலைகொண்ட மனசுள்ள பேர்களாய் இருக்கிறார்கள் என்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே அவதியாய் இருக்கிற குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷத்தை அடைந்த பேர்கள் நன்மையிலே நிலைகொண்ட மனதுள்ள பேர்களாய் இருக்கக்கொள்ள, நன்மையை விட்டுப் பாவமாகிற குறைக்கு உடன்படமாட்டார்கள் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. அத்தன்மைபோலே அவதியாகிற நரகத்தை அடைந்த நிர்ப்பாக்கியரான பேர்கள் ¹தேவவிஷயக வருமம் முதலான பொல்லாப்பிலே நிலைகொண்ட மனசுள்ள பேர்களாய் இருக்கக்கொள்ள, அப்படிக்கொத்த தேவவிஷயக வருமம் முதலான பொல்லாப்பை விட்டு அப்படிப்பட்ட நிர்ப்பாக்கியருடைய மனசானது ஒரற்ப தருமத்திலேயாகிலும் நாடவும் சம்மதிக்கவும் மாட்டாது. ஆனபடியினாலே பலபல பாவங்களிடத்திலே அவர்களுடைய சுவாதந்திரியமானது சென்றுவந்தாலும்,

⁴ உண்ணவும் ¹ தெய்வப்பகை

நன்மையிலே செல்லமாட்டாது. குறையற்ற நீதி சரூபமாயிருக்கிற கர்த்தரானவர் சகலத்தையும் கிரமத்தோடே நடத்துகிறதினாலே பாவிகளுக்கு இப்படிப்பட்ட ஆக்கினை நியாயத்தின் படியே கட்டளை இருக்கிறதென்று சொல்லக்கடவோம். அது ஏனென்றால், முள்ளு விரைத்தவன் பழமாகிற முள்ளை அனுபவிப்பான்; அத்தை அனுபவிக்கப் பண்ணுகிறதென்கிறதும் கர்த்தனுடைய நீதிக்கு ஏற்றிருக்குமாப்போல, மனுஷனானவன் பூமியிலே திரிகிற நாளையிலே பற்பல பாவங்களை மரணபரியந்தம் பண்ணிக்கொண்டு வந்தது என்கிறது முள்ளுக்களை விரைத்ததுக்குச் சமானமாயிருக்கிறதென்று சொல்லத்தகும். அப்படியே பாவமாகிற முள்ளுக்களை விரைத்த பாவியானவன் முள்ளாகிற பழத்தை அறுத்து அனுபவிக்கிறவன் போலே, பாவத்திலே நிலைகொண்ட மனசுள்ளவனாய் முள்ளாகிற பாவத்திலே நிலைகொண்ட மனசை எப்போதும் ஆக்கினையாகக் கொண்டிருக்கிறது என்கிறது கர்த்தருடைய நீதிக்கு ஒத்திருக்கும் என்று சொல்லக்கடவோம். அவதியை அடைந்த பேர்களுடைய சொல்லப்பட்ட சுவாதந்திரிய சுரூபத்தை விசாரிக்குமிடத்தில், அது பண்ணப்பட்ட பாவ புண்ணியத்துக்கு நீதியுள்ள கர்த்தனுடைய திருவுளப்படியே பலனாய் இருக்கக்கொள்ள, அப்படிப்பட்ட சுவாதந்திரியத்தினாலே நவமான சந்தோஷத்தையும் சம்பாவனையும் புதிதாயிருக்கிற துக்கத்தையும் ஆக்கினையையும் மோக்ஷத்திலே நரகத்திலே இருக்கிற பேர்கள் அடையத்தக்கதில்லை என்று சந்தேகமறச் சொல்லக்கடவோம்.

அது ஏனென்றால், வழிப்போக்கனுக்கு ஆன சஞ்சலமாகிற பாவ புண்ணிய விஷயத்திலே திரும்பலான சத்தியானது வழிப்போக்கனுக்கான குணமென்று சொல்ல வேண்டியிருக்கக்கொள்ள, வழிப்போக்கனானவன் [2]சம்பாவனையிலே அபிவிருத்தியை ஆனாலும் அதிக ஆக்கினையென்கிலும் புண்ணிய பாவத்தினாலே தனக்கு வரப்பண்ணலாமென்று சொல்லத்தகுமாப்போலே, அவதியை அடைந்த பேர்கள் நன்மை பொல்லாப்பு விஷயத்திலே என்றென்றைக்கும் [1]ஒருகன்ட சீருள்ள அவஸ்தையைக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லக்கடவோம். இப்படியே சொல்லாவிட்டால், அவதியை அடைந்த பேர்கள்

2 பரிசு, Reward 1, Uniform

இன்னம் வழிப்போக்கராய் இருக்கிறார்கள் என்கிற அபத்த விஷயத்தை அங்கீகரிக்க வேண்டியிருக்கும். அப்படிப்பட்ட அபத்த விசேஷத்திலே அங்கீகாரம் உண்டாகாதபடிக்கு, மோக்ஷத்திலே இருக்கிற பேர்கள் நன்மையிலே நிலைகொண்ட மனசைக்கொண்டு பண்ணிவருகிற புண்ணிய அங்கீகாரத்தினாலே தங்களுக்கு அதிக மோக்ஷம் வரப்பண்ணுகிறதில்லை என்று சொல்லக்கடவோம். அத்தன்மைபோல அவதியாகிற நரகத்தை அடைந்த பேர்கள் பாவத்திலே நிலைகொண்ட மனசினாலே பற்பல பாவங்களிலே சம்மதப்பட்டாலும், அப்படிப்பட்ட பாவ அங்கீகாரத்தினாலே அதிகமான ஆக்கினை தங்களுக்கு வரப்பண்ணுகிறதில்லை என்று சொல்ல வேணுமொழிய மற்றப்படியல்ல. அது ஏனென்றால், முன்னே சொன்னாப்போலே, வழிப்போக்கருடைய ஸ்திதிக்கும் அவதியை அடைந்த பேர்களுடைய அவத்தைக்கும் இதே வேற்றுமையுள்ள மேரையும் இதே ஞாயமுள்ள கிரமத்தோடு கூடியிருக்கிற பேதமும் என்று சொல்லப்படுமொழிய மற்றப்படியல்ல.

4. அவதியை அடைந்தபேர்களுடைய சுவாதந்திரியமானது இந்தடவாய் இருக்கையிலே இந்தப் பூமியிலே திரிகிற வழிப்போக்கராகிற மனுஷருடைய சுவாதந்திரியம் ஏதென்று ஆராய்ந்து கொள்ளக்கடவோம். அதேதென்றால், மனுஷனானவன் இந்தப் பூமியிலே திரிகிற நாள் மட்டும் அவதியையடையாதவனுமாய், வழிப்போக்கனுமாய் இருக்கக்கொள்ள, வழிப்போக்கனுக்கான சுவேச்சையானது எந்தடவாயிருக்கிறதென்றும், எந்த விஷயத்திலே செல்லாதென்றும் இந்தப்பாடத்திலே வெளிப்படுத்தி, இப்படிப்பட்ட சுவாதந்திரியமானது பூமியிலே திரிகிற மனுஷனுக்கு அவசியமாய் இருக்கிறதென்று சிறிது ஞாயங்களினாலே வருகிற பாடத்திலே இன்னம் ஒப்பச் சொல்லுவோம். இதிலே அறியவேண்டின விசேஷமானது: மனுஷனானவன் பூமியிலே திரிகிற நாள் மட்டும் அவதியை அடையாமல் வழிப்போக்கனாய் இருக்கக்கொள்ள நன்மையிலேயானாலும் பாவத்திலேயென்கிலும் நிலைகொண்ட மனசைக் கொண்டிராததினால், மனுஷனானவன் இந்தப் பூமியிலே இருக்கிற நாள்மட்டும் பாவத்திலே நின்று தருமத்திலே தனது மனசைத் திருப்பலாம். மீளவும் தருமத்தை விட்டுப் பாவத்தில் விழலாம் (என்கிறதுக்கு

தப்பாது). ஆனபடியினாலே, பூமியிலே திரிகிற மனுஷனுடைய மனசானது மோக்ஷத்திலேயும் நரகத்திலேயும் இருக்கிறவர்களுடைய மனசுபோல் ஒன்றிலே மாத்திரம் நிலை கொண்டதாய் இருக்கிறது என்று சொல்லக் கூடாது. அதெல்லாம் அதிகமாக இன்னம் வெளியாகும்படிக்கு இதிலே உண்டான வர்த்தமானத்தைக் கிரமமாகச் சொல்லிக் காட்டக் கடவோம். உண்டாக்கப்பட்ட பொருள் என்னப்பட்ட யாவும் புத்தியுடைத்தானதாய் இருந்து அவதியை அடையாமல் இருந்தால், புத்தியினாலே கிரகிக்கப்பட்ட விஷயத்தைப் பார்க்கும்போது, ஒன்றில் தனக்கு ஆனது என்றும் ஒன்றில் தனக்கு ஆகாதது என்றும் கண்டுபிடிக்கவேணும். இப்படிப்பட்ட ஞானமானது [1]வியர்த்தமாய்ப் போகாமற் [2]சபலமாயிருக்கிறதுக்கு ஆனதையும் ஆகாததையும் வெறுக்கவும் அபேக்ஷிக்கவுந், தள்ளவும் [3]சுவிகரிக்கவும் சத்தி உள்ளதாய் இருக்கவேணும். ஆனபடியினாலே, அவதியை அடையாத புத்தியுடைத்தான மனுஷன் புத்தியைக் கொண்டு அவனால் அறியப்பட்ட ஆனதையும் ஆகாததையும் வேணும் வேண்டாம் என்கிறதுக்குப் பெலமுடைத்தானவனாய் இருக்க வேணும் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை.

இது இப்படி இருக்கையிலே, பொருளானது எப்படிப்பட்ட மகாமகா ஞானம் உடைத்தானதாய் இருந்தாலும், அது உண்டாக்கப்பட்டதாய் இருக்கக்கொள்ள, மட்டில்லாத சகல நன்மை சுரூபமாய் இருக்கிற கர்த்தனைபோலே இருக்கலாம் என்று மகா பாவமில்லாதே சொல்லவும் கருதவும் கூடாது. உண்டாக்கப்பட்ட பொருளானது சகல நன்மை சொரூபமாய் இராதபோதே, அதினுடைய சுபாவத்தைப் பார்க்கும்போது (இது) குறையுள்ளதுமாய்க் குறையிலே விழாலான பொருளுமாய் இருக்கிறதென்று சொல்லக்கடவோம். அதேதென்றால், நன்மை விஷயத்திலே மட்டோடே இருக்கிற பொருளானது தனக்கு உண்டான நன்மையிலே அபிவிருத்தியை அடையலாம். அப்படிப்பட்ட அபிவிருத்தி இல்லாத போது ஒரு விதமாகக் குறைவுள்ளது என்று சொல்லத்தகும். ஆனபடியினாலே, உண்டாக்கப்பட்ட பொருளெல்லாம் குறையுடைத்தான சத்தி

1. வீணாய் 2. பலனுள்ளதாய் 3. ஏயிகரிக்கவும் (பாடம்)

உள்ளதாய் இருக்கக் கொள்ள, சுபாவமாக நன்மையின் குறை ஆகிற பாவத்திலே விழலாம் என்று சொல்லவேணும். (ஒழிய மற்றப்படியல்ல). அவ்வண்ணமே உண்டாக்கப்பட்ட மனுஷனானவன் அப்படிப்பட்ட ஞானம் முதலான நன்மைகளை உடைத்தானவனாயிருந்தாலும், அவனுடைய குறையுள்ள சத்தியினுடைய சுபாவத்தை விசாரிக்குமிடத்தில், புத்தியுடைத்தான மற்ற வஸ்துக்களைப்போலே மனுஷனானவன் ஞானம் முதலான நன்மையின் குறையிலே விழலாமென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. கர்த்தரானவர் மாத்திரம் மட்டில்லாத சகல நன்மை சுரூபமாய் இருக்கக்கொள்ள. அவர் ஒருவரே அற்பக் குறையிலேயாகிலும் விழமாட்டார் என்று சந்தேகப்படாமல் அங்கீகரிக்கத் தக்கதாகும்.

**4.3 முடிவை அடைந்தவர்களின் சுவாதந்திரியம் :** இது இப்படியிருக்கையிலே, புத்தியுடைத்தான பொருளானது இரண்டு வகையுள்ள அவத்தையிலே இருக்கலாம் என்று காண்கிறோம். அதேதென்றால், அதுக்குக் கற்பிக்கப்பட்ட அவதிக்குப்போகிற வழியிலே வழிப்போக்கன் போலே நடக்கிற பொருளாய் இருக்கிறதென்று சொல்லவேணும்; அல்லது வழியானதைக் கடந்து அவதியை அடைந்ததென்று அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. அவதியோவென்றால், வழியின் முகிவாய் இருக்கிறதினாலே பாவ புண்ணியத்துக்குத் தக்க நன்மையோடாகிலும் பொல்லாப்போடென்கிலும் அது என்றென்றைக்கும் நிற்தமென்று சொல்லுகிறது என்கிறது ஞாயமுள்ள கிரமமாகும். அவ்வண்ணமே, பொல்லாப்பாகிற பாவமுள்ள நடக்கைக்கு ஆக்கினையாகிற பொல்லாட்பேபாடே கூடியிருக்கிற அவதி உண்டென்று சொல்லுமாப்போலே, நன்மையாகிற புண்ணியமுள்ள நடக்கைக்கு நன்மையாகிற சந்தோஷம் முதலான பாக்கியத்தோடே கூடியிருக்கிற அவதி கிடைக்கும் என்று சொல்லத்தகும். மீளவும் அவதியுடைய சுபாவத்தை விசாரிக்கும்போது அது முகிவாயிருக்கக்கொள்ள, அதுக்கு அப்பால் வேறே விதமாய் இருக்கிற வகையில்லை என்று சொல்லவேணும். ஆனபடியினாலே நன்மை தின்மை விஷயத்திலே வெவ்வேறே [2]விகாரம் இல்லாமல் நன்மையோடாகிலும் பொல்லாப்போடென்

2. மாற்றம்.

திலும் அவதியானது உண்டாயிருந்தால், நன்மையோடென்கிலும் தின்மையோடென்கிலும் அது என்றென்றைக்கும் நிற்குமொழிய மற்றப்படியல்ல. இதுநிமித்தமாகப் புண்ணியத்தோடு கூடி இருந்ததினால், நன்மையோடு எப்போதும் இருக்கிற அவதி ஆகிற மோக்ஷத்தை அடைந்து, நன்மை விஷயத்திலே நிலை கொண்ட மனசுடைத்தான பேர்களாய் இருக்கிறார்களென்று சொல்லக்கடவது. அதேதென்றால், அது முடிவாய் இருக்கக் கொள்ள நன்மை தின்மை விகாரத்துக்கு இடமாயிராமல் நன்மையிலே மாத்திரம் அவர்களுடைய மனசானது ஒடுமொழி யப் பொல்லாப்பிலே ஆசையுள்ளதாய் இருக்க மாட்டாது. அவ்வண்ணமே, மோக்ஷத்திலே இருக்கிறபேர்கள் உண்டாக்கப் பட்ட பொருளாயிருந்து, வழியிலே நடக்கும்போது குறையிலே விழலான பேர்களாய் இருந்தார்கள் என்று சொல்ல வேண்டி இருக்கையிலே, நன்மையோடு முடிவாகிற மோக்ஷத்தை அடைந்ததினால், குறையாகிற பாவத்திலே விழமாட்டார்கள் என்று சொல்லப்படும். அத்தன்மைபோலே, பாவிகளுடைய வழியின் முகிவானது பாவத்தோடு கூடியிருந்ததினால், பொல்லாப்போடேகூட என்றென்றைக்கும் நிற்கிற அவதியாய் இருக்கிற நரகமானது அவர்களுக்குக் கிடைக்குமென்று சொல்லத்தகும். ஆனபடியினாலே, பொல்லாப்போடே என் றென்றைக்கும் நிற்கத்தக்க அவதியை அடைந்ததினால், பொல்லாப்பாகிற பாவத்திலே நிலைகொண்டதுமாய்ப், புண்ணியத்திலே திரும்பமாட்டாததுமாய் இருக்கிற மனசை என்றென்றைக்கும் ஆக்கினையாகக் கொண்டிருந்து, முகியாத ஆக்கினைக்குப் பாத்திரவான்களாய், நரகத்தினுடைய ஒருக்கா லும் ஒழியாத அக்கினிக்குள் ஒரு நாளும் அவியாத கட்டை களாய் இருப்பார்கள். அவ்வண்ணமே, (நரக) அவதியை அடைந்த பேர்களுடைய சுவாதந்திரியத்தை விசாரிக்கும்போது, பற்பல பாவங்களுடைய விஷயங்களிலே இந்தப் பாவத்தையும் அந்தப்பாவத்தையும் வேணும் வேண்டாம் என்கிறதுக்கு முன் சொன்னப்போலே, வல்லவர்களாய் இருக்கிறார்களொழிய, பாவத் தை முழுதும்விட்டுப், பாவமாகாத புண்ணியக்கிரிகைகளைப் பண் ணவும் அடைவாக இச்சிக்கவும் மாட்டார்கள், ஆனபடியினாலே, பாவிகளான பேர்கள் வழிப்போக்கர் போல லோகத்திலே திரிகிற

போது பாவம் வேண்டாம் என்கிறதுக்கும் புண்ணியம் வேணும் என்கிறதுக்கும் வல்லவர்களாய் இருந்தார்களென்று சொல்ல வேண்டியிருக்கையிலே, என்றென்றைக்கும் பொல்லாப்போடே கூடியிருக்கிற அவதியாகிற நரகத்திலே விழுந்ததினால், முழுதும் பாவம் வேண்டாம் என்கிறதுக்கும் புண்ணியம் வேணும் என்கிறதுக்கும் வல்லவர்களாய் இருந்தார்களென்று சொல்ல வேண்டியிருக்கையிலே, என்றென்றைக்கும் பொல்லாப்போடே கூடியிருக்கிற அவதியாகிற நரகத்திலே விழுந்ததினால், முழுதும் பாவம் வேண்டாமென்றும் புண்ணியம் வேணுமென்றும் அடைவாக இச்சிக்க மாட்டார்கள். இந்தப் பாடத்திலே இற்றைவரைக்கும் சொல்லப்பட்டதை விசாரிக்கும்போது, அவதியை அடைந்த பேர்களுக்கு உண்டான சுவாதந்திரியத்தினுடைய சுபாவ சொரூபத்தை வெளிப்படுத்தினாற்போலே ஆச்சுது.

**4.4 முடிவை அடையாமல் இன்னும் பூமியில் உள்ள மனிதர்களின் சுவாதந்திரியம்:** [1]ஆனால் அவதி அடைந்த பேர்களுக்குச் சுவாதந்திரியம் உண்டாயிருக்கையிலே அவதி அடையாமல் பூலோகத்திலே திரிகிற பேர்களுக்கு ஆன சுவாதந்திரியம் இல்லை என்று சொல்லக்கடவதல்ல. இப்படிப்பட்ட வழிப்போக்கருடைய வேஷத்தைக் கொண்டிருக்கிற பேர்களுடைய சுவாதந்திரியம் ஏதென்றால், அவர்கள் அவதியை அடையாத பேர்களாய் இருக்கக்கொள்ள, அவதி ரூபமாயிருக்கிற சம்பாவனையாகிற மோக்ஷத்தையும் ஆக்கினையாகிற நரகத்தையும் பெறுகிறதுக்கு ஆன சுவாதந்திரியமானது அவர்களுக்கு உண்டாயிருக்க வேணும் என்று சொல்லக்கடவோம். ஆதலாலே, அவதியை அடைந்த பேர்களைப்போலே பாவ புண்ணியத்திலே நிலை கொண்ட பேர்களாயிராமல், பாவபுண்ணியம் இரண்டையும் பண்ணத்தக்க சத்தியுள்ள மனசை உடைத்தான பேர்களாய் இருக்கவேணும். இப்படிப்பட்ட சுவாதந்திரியத்தினுடைய சொரூபமானது இந்தடவிலே சொல்லிக்காட்டலாம். முந்த முந்த மனுஷனானவன் பாவம் இன்னதென்றும் புண்ணியம் இன்னதென்றும் அறியவேணும். அறியப்பட்ட பாவமான விஷயத்தையானாலும் புண்ணியமான விஷயத்தை

1. என்றால் (பா. பே.)

என்கிலும் வேணும் வேண்டாமென்கிற பெலமுள்ள மனசினாலே வெறுக்கவும் சுவீகரிக்கவும் கடவான். [1]ஏனென்றால் வெறுக்கிறதினாலேயாகிலும் சுவீகாரம் பண்ணுகிறதினால் என்கிலும் நாய் நரி முதலான மிருகங்கள், கிரகிக்கப்பட்ட விஷயங்களினாலே கட்டாயமாய் இழுக்கப்படுகிறப்போலே மனுஷனானவன் அறியப்பட்ட சுகமான விஷயத்தினாலே கட்டாயமாய் இழுக்கப் படுகிறானென்று சொன்னோமானால், மனுஷனானவன் தனது கிரியைப் பண்ணுகிறதிலே நாய் நரி முதலான மிருகங்களுக்குச் சரியாய் இருக்கிறானென்று ஸ்தாபித்தாப்போலே ஆச்சுது. இப்படிப்பட்ட அபத்த விஷயத்தை அங்கீகரியாதபடிக்கு, மிருகமும் மனுஷனும் இப்படிப்பட்ட தனது சேட்டைகளைப் பண்ணிக்கொண்டு வருகையிலே உண்டாயிருக்கிற வேற்றுமையையும் ஏற்றக்குறைத்தலையும் வெளிப்படுத்தக் கடவோம்.

**4.5 மிருகத்துக்கும் மனிதனுக்குமுள்ள வேற்றுமை:**

**1. மனிதனைப்போல் நல்லது பொல்லாததை மிருகம் கருதுவதில்லை :** அதேதென்றால், மிருகமானது [2]புற இந்திரியமான கண்ணைக்கொண்டு புல்லு முதலானதினுடைய பச்சை நிற முதலான துகளைக் காண்கிறப்போலே, மதிக்கிற சத்தியாகிற உள்ளிந்திரியத்தைக் கொண்டு ஆனதையும் ஆகாததையும் கிரகிக்குமொழிய, விசேஷிய விசேஷணத்தைக் கூட்டுகிற மேரையாய்க் கூட்டி 'இது நல்லதாயிருக்கிறது' என்றும், 'இது தனக்குப் பொல்லாததாய் இருக்கிறது' என்றும் மதிக்கிறது இல்லை. இத்தாலே தனக்குப் பிழைப்பு வரும் என்றும் பசி போம் என்றும் கேடு பலிக்கும் என்றும் யூகிக்கிறதும் இல்லை. அதேதென்றால், இத்தொகைப்பட்ட ஞான விருத்திகள் தேகத்துக்கு ஆதேயமாயிராத புத்திக் கடுத்த சேட்டைகளாய் இருக்கிறதொழிய, சரீரத்துக்கு ஆதேயமாய் இருக்கிற உள்ளிந்திரிய புறயிந்திரியங்களுக்கு ஆன கிரிகைகள் என்று சொல்லக்கூடாது. அவ்வண்ணமே, புற இந்திரியமான கண்ணானது வெள்ளை கறுப்பு இது முதலான விஷயத்தைக் காணுமொழிய, விசேஷியத்தோடே விசேஷணத்தைக் கூட்டி 'இந்த வஸ்து கறுப்பு வெள்ளையாய் இருக்கிறது' என்று சொல்லமாட்டாது. அத்தன்மைபோல் மிருகமானது தனது உள்ளிந்திரியமாகிற மதிக்

1 என்றால் (பா. பே.) 2 புற வுக்குப் பதிலாக பிற என்று நெடுக வருகிறது

கிற சத்தியினாலே ஆனதையும் ஆகாததையும் கிரகிக்குமொழிய விசேஷியத்தோடே விசேஷணத்தைக் கூட்டுகிற ரீதியாக 'இந்த வஸ்து எனக்கு நல்லதாய் இருக்கிறது' என்றும் 'இது எனக்குச் சாவு வருத்திவிக்கும்' என்றும் இத்தொகைப்பட்ட மற்றும் உண்டான கிரிகைகளையும் பண்ணமாட்டாது. மனுஷனோ என்றால் புற இந்திரியத்தினாலேயும் உள்ளிந்திரியத்தினாலேயும் மிருகமானது வஸ்துவைக் கிரகிக்கிற அடைவாகத் தானும் விஷயத்தைக் கிரகிக்கிறதுந் தவிரத், தேகத்துக்கு ஆதேயமாய் இராத தனது புத்தியைக்கொண்டு விசேஷியத்தோடே விசேஷணத்தைக்கூட்டி, 'இந்த வஸ்து எனக்கு நல்லது' என்றும், 'இதினால் எனக்கு மரணம் வரும்' என்றும் 'யோசித்து ஒரு வஸ்துவில் நின்று (வேறேயொன்று) வரும் வராதென்று யூகிக்கிறான் என்றும், அனுபவசித்தியினாலே கண்டறிகிறோம் என்கிறதினாலே, விஷயத்தைக் கிரகிக்கிறதிலேதானே மிருகத்துக்கும் மனுஷனுக்கும் வலு வித்தியாசம் உண்டாயிருக்கிறது என்று சொல்லக்கடவோம்.

**2. உள்ளிந்திரியத்தால் மிருகம் கட்டாயமாய் இழுக்கப்படுகிறது:** பின்னையும் மிருகமானது உள்ளிந்திரியத்தினாலே தனக்கு ஆனதையும் ஆகாததையும் கிரகித்த பிற்பாடு, கிரகிக்கப்பட்ட விஷயத்தின் பிரதிபிம்பத்தினாலே கட்டாயமாய் இழுக்கப்பட்டு அதினால் ஆன விஷயத்தையும் ஆகாத விஷயத்தையும் கட்டாயமாய் இச்சிக்கிறதுக்கும் வெறுக்கிறதுக்கும் வல்லதாய் இருக்கிறதொழிய மற்றபடியல்ல. மனுஷனோவென்றால், ஆன விஷயத்தையும் ஆகாத விஷயத்தையும் முன் சொன்ன பிரகாரம் அறிந்து, அப்படிப்பட்ட விஷயத்தினாலே அழைக்கப்படுகிறான் என்று சொல்லக்கூடுமொழிய, மிருகம்போலே கட்டாயமாய் இழுக்கப்படுகிறான் என்று சொல்லக்கூடாது. ஆனபடியினாலே, மனுஷனானவன் பக்ஷணத்தைப் பார்த்துப் பசியுண்டாய் இருந்தாலும், தபசு பண்ணவேணும் என்கிற மனசு முதலான நிமித்தங்களினாலே தனது சுவாதந்திரியத்தைக் கொண்டு 'அந்தப் பக்ஷணத்தைப் பக்ஷிக்கத்தக்கதில்லை' என்று சொல்லலாம். இதெல்லாம் கட்டாயம் பண்ணுகிற வேறே விஷயம் இல்லாமல் மனுஷனானவன் பண்ணுவானொழிய மற்றப்படியல்ல.

1 சேர்த்து

**3. உள்ளிந்திரியம் வெறுப்பதையும் மேலான மனசைக்கொண்டு மனிதன் ஏற்கலாம்:** இது தவிர, உள்ளிந்திரியத்தைக்கொண்டு மனுஷனாலே வெறுக்கப்படுகிற சிறிது விஷயங்களை மனுஷன்தானே தனது மேலான சுவாதந்திரியம் உள்ள மனசைக்கொண்டு தனக்கு வேணும் வேண்டாமென்று சொல்லுகிறபோது, மிருகத்துக்கு இல்லாத சுவேச்சையான சத்தியானது மனுஷனானவன் தனக்குண்டாய் இருக்கிறது என்று பிரத்தியக்ஷமாய்க் காட்டினதாலே ஆச்சுது. அது எப்படியென்றால், தனது புண்ணைச் சுடவேணும் என்கிற தறுவாய் உண்டாயிருக்கையிலே, மதிக்கிற சத்தியாகிற இந்திரியத்தினாலே கிரகிக்கப்பட்ட [1]தகனத்தை வெறுத்தும் பயப்பட்டும் பின்வாங்குவான். மேலாயிருக்கிற சுவாதந்திரியமுள்ள மனசைக்கொண்டு அத்தகனம் தனக்கு வேணும் என்று அங்கீகரிப்பான். கைப்புள்ள [2]அவுஷதத்தை அருவருத்தும், குடிக்கவும் செய்வான். ஸ்திரீக்கடுத்த போக முதலான பாவ சுகங்களைக் கிரகித்து அப்படிப்பட்ட விஷயங்களினாலே அழைக்கப்பட்டாலும், மேலாயிருக்கிற புத்தியைக்கொண்டு அப்படிப்பட்ட கிரிகையானது கர்த்தனுக்குத் துரோகமாய் இருக்கிறது என்றும் ஞாயத்துக்கு ஒத்திராது என்றும் நிச்சயம் பண்ணி, தனது மேலான சுவேச்சையுள்ள மனசினாலே அத்தை வேண்டாம் என்று சொல்லலாம். அல்லது கர்த்தனுக்குத் துரோகம் பண்ணுவேன் என்று துணிந்து, பாவமான விஷயத்துக்குச் சம்மதப்படலாம் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. வியாதி முதலான உபாதைகளைச் சுபாவமாய் வேண்டாம் என்று சொல்லி, அப்படிப்பட்ட வாதைகளைத் தான் அனுபவிக்கிறது என்கிறது கர்த்தனுக்குப் பொருந்தி இருக்கிறதென்று நிச்சயித்து, அதுகளை அனுபவிக்கிறதுக்குத் தனது சுபாவ சுவாதந்திரியத்தினாலே சம்மதித்து, அதுகள் நிமித்தமாகச் சந்தோஷப்படுவான். இத்தொகைப்பட்ட விருத்திகள் மிருகங்களிடத்திலே உண்டென்று மிருகத்தைப் பார்க்கிலும் மதிகெட்ட மனுஷனானவன் சொல்லுவானொழிய புத்திமான் சொல்லமாட்டான்.

**4. மனிதனுக்கு விதி முதலான கட்டாயம் இல்லை:** இதன்றியே மனுஷனானவன் அறியப்பட்ட விஷயத்தினாலே

1 சுடுதல் 2 மருந்து

மிருகம் போலே இழுக்கப்படுகிறதில்லை என்று சொல்லுமாப் போலே,[1]விதி முதலான காரணங்களினாலே கட்டாயமாகப் பாவ புண்ணியத்திலே மனுஷனானவன் தள்ளப்படுகிறான் என்று சொல்லக்கூடாது. அப்படிச் சொன்னோமானால், மனுஷனானவன் விஷயத்தை வேணும் வேண்டாம் என்கிற விருத்திகளைப் பண்ணுகிறதிலே மிருகத்தைக் காட்டிலும் அதிகக் கேடாய் இருக்கிறான் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. அதேதென்றால், கட்டாயம் என்கிற குறையானது மிருகத்துக்கும் மனுஷனுக்கும் சரியாய் உண்டாயிருக்கிறதென்று அநியாயமாய்ச் சொல்லிக் கொண்டு வருகையிலே, மிருகமானது தன்னாலே அறியப்பட்ட ஆன ஆகாத விஷயத்திலே இழுக்கப்பட்டுக் கட்டாயத்தை அனுபவிக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. மனுஷனோவென்றால் காணாத [2]பிரேரகன், விதி முதலான காரணங்களினாலே பொல்லாப்பிலே தள்ளப்பட்டுக் கட்டாயத்தை அனுபவிக்கிறான் என்று அவர்களுடைய துர்மார்க்கத்திலே சொல்லி இருக்குது.

**4.6 இவ்வுலகில் உள்ள மனிதனின் சுதந்திரத்தின் தன்மை:** இப்படிப்பட்ட அபத்தத்தைச் சொல்லாதபடிக்கு, இவ்வுலகத்திலே திரிகிற மனுஷனுக்கு உண்டான சுவாதந்திரியமானது இருக்கும் வகையை இந்தடவாகச் சொல்லக்கடவோம். அதாவது, மனுஷனானவன் ஆனதையும் ஆகாததையும் முன் சொல்லப்பட்ட விதமாக அறிந்து, அறியப்பட்ட விஷயத்தினாலே இழுக்கப்படாதவனுமாய், விதி பிரேரகன் முதலான காரணங்களினாலே கட்டாயத்தை அனுபவியாதவனுமாய், வேணும் வேண்டாம் என்கிற தனது விருத்திகளைப் பண்ணுகிறதுக்குச் சுவாதந்திரிய பெலம் உடைத்தானவனுமாய் இருக்கிறான் என்று சந்தேகமற அங்கீகரிக்கக்கடவோம். அவ்வண்ணமே, மனுஷனுடைய சுவாதந்திரியமானது பாவ புண்ணிய முதலானதுகளை வேணும் வேண்டாம் என்கிறதிலே செல்லும் என்று சொல்ல வேணுமொழியக் கர்த்தருடைய கட்டளைப் படியே தீர்க்காயிசு அயிஸ்வரியம் முதலான விஷயங்களை அடைகிறதிலேயும், மரண முதலான துரித கஸ்திகளை அனுபவிக்கிறதிலேயும் மனுஷனுடைய சுவாதந்திரியமானது செல்லாது என்று சொல்லக்கடவோம்.

1 Fate 2 இயக்குவோன்

## அஞ்சாம் பாடம்

**5.1 சுவாதந்திரியம் இல்லை என்போரில் பலவகை:** பூலோகத்திலே திரிகிற மனுஷருக்குச் சுவாதந்திரியம் உண்டாயிருக்கிறது என்றும், அதினுடைய அடைவையும் போன பாடத்திலே சொன்னதுப்போலாச்சுது. பாவ [1]கஷ்டத்திலே அமிழ்ந்தி இருக்கவேணும் என்கிற ஆசையுள்ள பாவிகள் தாங்கள் பண்ணிக்கொண்டு வருகிற அருவருப்புள்ள பாவங்களின் நிமித்தமாகப் போக்குச் சொல்லித், தங்கள் பேரிலே குற்றமில்லை என்று காட்டும்படிக்கு, நம்மாலே சொல்லப்பட்ட சுவாதந்திரியமான சத்தியானது மனுஷருக்கு இல்லை என்று சொல்லுகிறார்கள். இந்த விஷயத்திலே அவர்கள் கற்பித்த தப்பறை விசேஷங்கள் வெகுவாய் இருக்கக்கொள்ள, அதுகளை எல்லாம் விஸ்தார பிரசங்கம் இல்லாமல் எண்ணிக்கொண்டு வரக்கூடாது. ஆனபடியினாலே, அப்படிப்பட்ட தப்பறை விசேஷங்களுக்குள்ளே சிறிதுகளை மாத்திரம் வெளிப்படுத்தி, அதுகள் ஞாயத்துக்கு ஒத்திராத விபக்ஷங்களாய் இருக்கிறது என்று ஒப்பச் (சொல்ல, அப்படிச்) சொல்லுகிற ஞாயங்களினாலே, இந்த விஷயத்திலே கற்பிக்கப்பட்ட மற்றுமுள்ள விசேஷங்கள் முழுத்தப்பறைகளாய் இருக்கிறது என்று எல்லாரும் கண்டுபிடிக்கிறதுக்கு வழி திறந்தாப் போலாகும்.

**1.** இக்காலத்திலே சரீரத்தோடே கூடத் திரிகிற சீவன் என்னப்பட்ட யாவும் பூர்வ காலத்திலே வெவ்வேறு சரீரத்தோடே திரிந்து, பற்பல பாவ புண்ணியங்களைப் பண்ணினதினால் சீவன்களினாலே பண்ணப்பட்ட கர்மத்துக்குத் தக்க பிரகாரமாக அந்தந்தச் சீவனுடைத்தான பொருட்களிடத்திலே தேவனானவன் சில எழுத்துக்களை [2]லலாடத்திலே எழுதினானாம். அதுகளை [3]எழுத்து என்றும் தலைவிதி என்றும் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட எழுத்தைத் தேவன் முதலாய்த் துடைக்கிறதுக்கு வல்லவராய் இருக்கவில்லை என்று அங்கீகரிக்கிறார்கள். 2. வேறே சில பேர்களுடைய மதமானது: கல்லை எறிந்து போடுகிறவன் எறியப்பட்ட கல்லிலே கட்டாயமாக அது போகத்தக்கதாகத் தள்ளுகிற ஒரு குணத்தைக் கல்

1 மலம் 2 மண்டையோட்டிலே 3 விபி (பா. பே.)

னுக்குக் கொடுக்கிறாப்போலே, இந்தச் சென்மத்திலே அத்தையும் இத்தையும் அவனவன் கட்டாயமாய்ப் பண்ணுகிறதுக்கு அவனவனிடத்திலே பிரேரகன் போலே ஒரு குணம் உண்டாம். அது பூர்வ சென்மத்திலே அவனவன் பண்ணின கர்மங்களினாலே அவனவனுக்கு வந்ததென்றும் கற்பிக்கிறார்கள். அப்படிப்பட்ட குணத்துக்குப் 'பூர்வசென்மவாசனை' என்கிற பேரும், 'பூர்வ சென்ம சம்ஸ்காரம்' என்கிற நாமமும் ''பிராக்தனம்' என்றும் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இதெல்லாம் தலையெழுத்தானாலும், தலைவிதி, பூர்வசென்ம வாசனை, சம்ஸ்காரம், பிராக்தனம் என்கிறதும், மனுஷனிடத்திலே உண்டாய், மனுஷனானவன் அத்தையும் இத்தையும் பண்ணுகிறதுக்குக் கட்டாயம் பண்ணிக்கொண்டு வருகிறதொழிய, விதி முதலானதுகளைத் தப்பி மனுஷனானவன் ஒரு காரியத்தையானாலும் செய்ய மாட்டானென்று சொல்லுகிறார்கள். இது தவிரப் பூர்வசென்மத்திலே பண்ணின கர்மங்கள் நிமித்தமாக அத்தையும் இத்தையும் பண்ணுகிறதுக்கும் அடைகிறதுக்கும் கர்மத்தினாலே வருகிற தலையெழுத்து, பிராக்தனம் இது முதலானதுகள் போருமென்று சிலர் சொல்லுகிறார்கள். 3. வேறே சிலர், கர்த்தன் ஒருவன் உண்டென்று அங்கீகரித்து, அவனவன் **பூர்வ சென்மத்திலே பண்ணின கர்மத்துக்குத் தக்கது** அத்தையும் இத்தையும் இந்த சென்மத்திலே அப்படிப்பட்ட கர்த்தரானவர் அவனவனை அடையப்பண்ணுகிறாரென்று சொல்லுகிறார்கள். 4. வேறே சிலபேர்கள், லோகத்திலே கர்த்தன் உண்டென்று சொல்லி, அப்படிப்பட்ட **கர்த்தன்** தனது இச்சைப்படியே **பொம்மையை ஆட்டிவைக்கிறாப் போலே** மனுஷன் முதலான பொருட்களை ஆட்டி வைக்கக்கொள்ள, எல்லாவற்றையும் பண்ணுகிறவனும் எல்லாவற்றையும் அனுபவிக்கிறவனும் கர்த்தன்தானே என்று சொல்லுகிறார்கள். ஆனபடியினாலே புண்ணியத்தைப் பண்ணுகிறவர் அவர்தான் என்றும், பாவத்திலே விழுகிறவர் அவர்தான் என்றும் முழுதும் மதிகெட்ட பேர்களாய்ச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

**5.2 இவர்கள் கூற்றுப்படி மனிதனுக்கும் விலங்குகளுக்கும் வேறுபாடில்லை:** சொல்லப்பட்ட இந்த துர்மதங்

4 பிரார்த்துவம் (பா. பே.)

களினாலே ஸ்தாபிக்கப்படுகிற தப்பறை விசேஷமாவது: மனுஷ னானவன் தனது கிரியையைப் பண்ணுகிறதுக்கு ஆன [1]அந்தரங்க பலத்தைக் கொண்டிருந்தாலும், தனது கிரிகைகளைப் பண்ணிக்கொண்டு வருகையிலே அந்தக்கிரிகை வேணும் என்கிறதுக்கும் இந்தக்கிரிகை வேண்டாம் என்கிறதுக்கும் வல்லவனாய் இராமல், விதி முதலானதுகளினாலே தள்ளப்பட்டவனாய், அத்தையும் இத்தையும் பண்ணுகிறானொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே, அப்படிப்பட்ட பாவிகள் தமது கிரிகைகளைப் பண்ணுகிறதிலேயும், நாய் முதலான செந்துக்கள் தனது கிரிகைகளைப் பண்ணுகிறதிலேயும், அறிவுள்ள அறிவற்ற பொருள் இரண்டிலே பேதமும் ஏற்றக்குறைச்சலும் இல்லை என்று ஒப்புவிக்க வருந்துகிறதினால், மிருகங்களைப் பார்க்கிலும் தாங்கள் மதிகெட்ட பேர்களாய் இருக்கிறார்கள் என்று காண்பிக்கிறார்களொழியத், தங்கள் தப்பறை விபக்ஷத்தைத் தக்க ஞாயங்களினாலே ஒப்பச் சொல்ல மாட்டார்கள். இதெல்லாம் கர்த்தனுடைய கிருபையினாலே யாவர்க்கும் வெளியாகும்படிக்கு, ஒவ்வொன்றிலும் அவர்களாலே சொல்லப்படுகிற பிரத்தியக்ஷ தப்பறைகளைச் சொல்லிக் காட்டக் கடவோம்.

"பூர்வசென்மம்" அவனவனுக்கு உண்டாயிருக்கிறது என்று இந்த விஷயத்திலே அவர்களாலே கற்பிக்கப்படுகிறது, தப்பறை விசேஷங்கள் என்னப்பட்ட யாவையும் ஒப்புவிக்கிறதுக்கு அஸ்திவாரமான ஞாயமாயிருக்கிறது. ஆனபடியினாலே பூர்வ சென்மம் இல்லை என்று சந்தேகமறப் பிரத்தியக்ஷமாய் ஒப்புவிக்கப்பட்டால், அஸ்திவாரம் இல்லாத கல்மாளிகையானது இடிந்து விழுகிறாப்போலே, அவர்களாலே கற்பிக்கப்பட்ட தப்பறை விசேஷங்கள் எல்லாம் நடவாமல் பூர்வ சென்மமில்லை என்று இனிமேல் வருகிற பதினைந்தாம் பாடம் துவக்கி இருபத்திரண்டாம் பாடம் பரியந்தம் ஒப்புவிக்கிற ஞாயங்களினாலே இதெல்லாம் தப்பறையாய் இருக்கிறதென்று திரும்பவும் ஒப்புவிக்கப்படும் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. ஆனால், பூர்வசென்ம வர்த்தமானத்தைச் சொலத்தக்க இடத்திலே சொல்லுவோம் என்கிறதினாலே, இவ்விடத்திலே அத்தை நினையாமல், மனுஷனுடைய சுவாதந்திரிய விஷயத்திலே

[1] சொந்த

இவர்கள் சத்தியத்தினுடைய மேரையைத் தப்பிக் கற்பித்த விசேஷங்கள் முழுத் தப்பாறையாய இருக்கிறதென்று வேறே ஞாயங்களினாலே வெளிப்படுத்தக்கடவோம்.

**5.3 தலையெழுத்து உண்டென்று பிரத்தியக்ஷமாகவோ, அனுமானத்தினாலோ, அனைவரும் ஏற்கும் புராணத்தினாலோ ஒப்புவிக்க முடியாது:** அப்படியே, அவனவன் பூர்வ சன்மத்திலே பண்ணின கர்மத்துககுத் தக்கது அவனவன் தலையிலே தேவனானவன் எழுத்தை எழுதினான் என்கிற வர்த்தமானம் மெய்யாயிருக்கிறதோ இல்லையோ என்று ஆராய்ந்து கொள்ளத் துவக்குவோம். இதெல்லாம் மெய்யென்று எந்த ஞாயத்தினாலே ஒப்பச் சொல்லலாமென்று முந்தமுந்தக் கேட்கிறேன். அதேதென்றால், இது பிரத்தியக்ஷமாய் இருக்கிறது என்று சொல்லக்கூடாது. இதன்றியே, [2]பருவதத்திலே [3]அக்கினி உண்டென்று புகையாகிற [4]அனுமானமானது காட்டுகிறாப் போலே, தேவனானவன் அவனவன் தலையிலே இப்படிக்கொத்த எழுத்துக்களை எழுதுகிறான் என்று கண்டுபிடிக்கிறதுக்கு அற்ப அனுமானமென்கிலுங் காணாது. ஆனபடியினாலே, அந்தந்தப் புராணத்திலே சொல்லப்பட்டிருக்கிறதினாலே இந்த விசேஷமானது அங்கீகரிக்கத் தக்கதாகும் என்று சொல்கிறார்கள். இந்த ஞாயத்தை விசாரிக்கும்போது, அது மகா துர்பெலமாய் இருக்கிறதென்று சொல்லக்கடவது. அதேதென்றால், இந்தச் சீர்மையில் வழங்குகிற பதினெட்டுப் புராணங்களானதுகள் [5]பரஸ்பர விருத்தத்தினாலேயும், காணப்பட்ட சத்தியத்துக்கு அனேக விருத்த விசேஷங்கள் அதுகளிலே சொல்லப்படுகிறதினாலேயும். அப்படிப்பட்ட புராணங்கள் வழங்குகிற இராச்சியத்திலே இருக்கிற வித்தியாபாரகர் முதலாய் அப்புராணங்களிலே தங்களுடைய புத்திக்கு விருத்தமான விசேஷங்களைச் சொல்லிக் கண்டு பிடித்ததினால் சில புராணங்கள் முழுதும் அங்கீகாரம் பண்ணவொண்ணாதென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அப்படியே ருத்திரனைக் கடவுளென்று சொல்லுகிற புராணங்கள் விஷ்ணு பராபரவஸ்துவாய் இருக்கிறானென்று விதிக்கிற புராணங்களுக்கு விருத்தங்களாயிருக்கக் கொள்ள, வைஷ்ணவ

1. முன்பிறப்பு, 2. மலை 3. தீ 4. அடையாளம்
5. ஒன்றுக்கொன்று முரண்படுவதினாலேயும்.

மதத்தை அங்கீகரிக்கிற [1]வித்துவாங்கிஷரான பேர்கள் ருத்திர புராணங்களை முழுதும் அங்கீகரிக்க வொண்ணாதென்று ஸ்தாபிக் கிறார்கள். இந்தட்வாகச் சைவ மதத்தை அங்கீகரிக்கிற பேர்கள் விஷ்ணுவுக்கடுத்த புராணங்களிலே விஷ்ணு கடவுளாயிருக் கிறான் என்கிற விசேஷம் முதலான அனேகம் பொய்கள் உண்டென்று சொல்லி, அதுகளை முழுதும் விசுவாசமாகக் கொள்ளவும் செய்யார்கள். இந்த விசேஷம் முதலான வேறே அனேகம் விசேஷங்கள் தப்பறையாய் இருக்கிறதென்று அந்தந் தப் புராணத்திலே கண்டுபிடிக்கப்படுகிறதினால், புராணத்திலே சொல்லப்படுகிற விசேஷம் வேறே ஞாயங்களினாலே ஒப்பு விக்கப்படாதிருந்தால், புராணங்களானதுகள் சொல்லுகிறதி னாலே மாத்திரம் அத்தை மெய்யென்று அங்கீகரிக்கிறது என்கி றது ஞாயமுள்ள புத்திக்கு ஒத்துவராதென்று சொல்லத்தகும். அதேதென்றால், பற்பல தப்பறைகளைச் சொல்லுகிற சாக்ஷியான வன் ஒரு விசேஷத்தைச்சொன்னால், அத்தை விசுவாசிக்கிறதுக்கு வேறே ஞாயம் காணாமல் அவன் சொல்லுகிறதினாலே மாத்திரம் யாதொருத்தன் அப்படிப்பட்ட விசேஷத்தை அங்கீகரித்தால் அவன் அறிவின் குறைச்சல் உள்ளவன் என்று சொல்லப் படுகிறாப்போலே, தேவனானவன் அவன் இவன் தலையிலே எழுத்தை எழுதுகிறான் என்பதை மெய்யென்று அங்கீகரிக் கிறதுக்கு வேறே ஒரு ஞாயங் காணாமல், பற்பல தப்பறைகளைச் சொல்லுகிற புராணங்கள் இப்படிப்பட்ட தலையெழுத்தை விசுவாசிக்கிறதென்கிறது, அறிவின் குறைச்சல் என்று சொல்லத் தகுமொழிய மற்றப்படியல்ல.

**5.4 எலும்புகளின் பொருத்தத்தைத் தலை எழுத்து என் கின்றனர்.** இந்த விஷயத்திலே புத்தியில்லாத சில சனங்கள் சொல்லுகிற விசேஷத்தையும் அவர்களுடைய அஞ்ஞானத்தையும் பார்த்துச்சிரிக்கிறதுக்கும், அவர்கள் பேரிலே இரக்கமாய் இருக் கிறதுக்கும் [2]அவகாசம் உாணும் என்று சொல்லலாம். அதேதென் றால் [3]சிற்பாசாரியானவன் இரண்டு பலகையைச் சேர்க்க வேணு மானால், பலகை இரண்டும் சேருகிற பாரிசங்களிலே அங்கேயும் இங்கேயும் அறுத்து, ஒன்றோடொன்றைப் பொருத்துவான். அத்தன்மை போலே மனுஷன் தலையிலே இருக்கிற கீழ்ப்பொடுகள்.

1. கற்றோர் 2. இடம், காரணம் 3. தச்சன்

இரண்டும் நெற்றியிலே சேரும்படிக்கு ஒன்றோடொன்றிலே பொருத்த வேண்டியிருக்கும். ஆனபடியினாலே ஓடுகள் இரண்டிலே சுபாவமான அறுப்புகள் காணவருகிறது. அப்படிப்பட்ட ஓடுகள் இரண்டும் சேருகிறதுக்குச் சுபாவமாய் இருக்கிற அறுப்புகளுடைய [1]ரேகைகளானதுகளைச், சில மூடராயிருக்கிற பேர்கள், தேவனானவன் தலையில் எழுதின எழுத்துக்களென்று சொல்லுகிறார்களே. இந்தடவிலே பலகைகள் இரண்டும் சேருகிறதுக்குச் சிற்பாசாரியானவன் அறுத்துப் பண்ணின ரேகைகளைப் 'பலகை லிபி' என்று சொல்லலாமே! இதெல்லாம் சிரிக்கிறதுக்குக் காணப்பட்ட அபத்தங்களாய் இருக்கக்கொள்ள, ஞாயங்களினாலே அதுகளைக் கண்டிக்கிறதிலே [2]காலக்ஷயம் பண்ணத் தேவையில்லை. ஆனபடியினாலே தேவனானவன் தலையெழுத்து எழுதுகிறானென்று சொல்லுகிறது ஞாயத்துக்கு மிகவும் விருத்தமாய் இருக்கிறதென்று வேறே கெட்டி ஞாயங்களினாலே காட்டக்கடவோம்.

**5.5 கடவுள் சும்மா எழுதவில்லை.** இத்தறுவாயிலே சகல சத்தியத்துக்கும் அஸ்திவாரம் போலிருக்கிற ஒரு குன்றாத சத்தியத்தைச் சந்தேகப்படாமல் அங்கீகரிப்போம். அதாவது: இந்த லோகத்தை உண்டாக்கி இத்தை நடத்துகிற ஆதிகாரணமாய் இருக்கிற கர்த்தர் ஒருவர் உண்டாயிருக்கவேணும். அவர் சகல நன்மை சுரூபமாய் இருக்கிறார் என்கிறதுக்குச் சந்தேகப்பட ஒண்ணாது என்று ஞானோபதேசத்தினுடைய மூன்றாம் பாடம் முதலானதுகளில் ஒப்புவித்தாப்போலே ஆச்சுது. 1. அப்படிக்கொத்தவர் லோகத்தை நடத்துகிறதினாலே அவராலானாலும் அவர் உத்தாரப்படியே என்கிலும் மனுஷன் தலையிலே இப்படிப்பட்ட எழுத்து எழுதப்படுகிறது என்று சொல்ல வேணுமொழிய மற்றப்படியல்ல. இதிப்படி இருக்கையிலே, மனுஷன் தலையிலே இப்படிக்கொத்த எழுத்து எழுதப்படுகிறது என்று அங்கீகரித்தோமானால், சகல நன்மை சுரூபமாய் இருக்கிற கர்த்தரானவர் முழுதும் பொல்லாதவராயிருக்கிறாரென்று சொல்ல வேண்டியிருக்கிறது. அதேதென்றால், மனுஷனைப் பார்த்துக் 'களவு கொலை பாதகங்களைப் பண்ணு' என்று கற்பித்து, அப்படிப்பட்ட பாவங்களை மனுஷ

1. வரிகள் 2. காலப்போக்கு

ஷனவன் பண்ணக் கட்டாயம் பண்ணுகிறவன் முழுப் பொல்லா தவனாய் இருக்கிருனென்று சந்தேகப்படாமல் அங்கீகரிக்கக் கடவதாகும். ஆனபடியினாலே சகல நன்மை சுரூபியாயிருக்கிற கர்த்தரானவர் இப்படியே பாவத்தை மனுஷன் கட்டாயமாய்ப் பண்ணத்தக்கதாகக் கற்பித்துக்கொண்டு வந்தால், அவர் முழுப் பொல்லாதவராயிருக்கிருர் என்றுசொல்லவேணும். 2. இது தவிரத் தாம் அருளிச்செய்த வேதத்திலே களவு கொலை பாதகம் முதலான பாவம் என்னப்பட்ட யாவும் பண்ணவேண்டாம் என்று மனுஷர் என்னப்பட்ட யாவர்க்கும் விலக்கி, அவனவன் தலையில் எழுத்து எழுதி அவனவன் கொலை பாதக முதலான பாவம் என்னப்பட்ட எல்லாம் கட்டாயமாய்ப் பண்ணுகிறதற்குக் கற்பிக்கிறபோதே, இரண்டு இடங்களிலே 'விருத்தமான விசேஷங்களைக் கற்பித்தாரென்று சொல்ல வேண்டியிருக்கிற தினால், சத்திய சுரூபியாய் இருக்கிற கர்த்தரானவர் முழுத் தப்பறைக்காரனாய் இருக்கிருர் என்று அங்கீகரித்தாப்போல் ஆச்சுது. 3. இதன்றியே, நீதி சுரூபமாயிருக்கிற சருவேசுரன் பாவத்தை மனுஷனானவன் பண்ணுகிறதுக்குக் கட்டாயம் பண்ணி வருகிருர் என்று சொல்லிப், பாவம் பண்ணின மனுஷனுக்கு ஆக்கினையிடுகிருர் என்று சம்மதித்தோமானால், அவரை முழுதும் அநியாயக்காரன் என்று சொன்னாப்போலே ஆச்சுது, அதேதென்றால், இராசாவானவன் தனது சேவகனைப் பார்த்து 'வேருெருத்தனைக் கொல்' என்று கற்பித்ததும் போராமற் சேவகனுடைய கையைப் பிடித்து, பிடித்த கையைக் கொண்டு ஒருத்தனைக் குத்துவித்த பிற்பாடு, சேவகனை ஆக்கினையிட்டால், அது நிமித்தமாக அப்படிப்பட்ட ராசாவானவன் மகா அநியாயம் பண்ணினுனென்று சொல்லக்கடவது. அத்தன்மைபோலே மகா ராசாவான சர்வேஸ்வரனானவர் மனுஷனானவன் பாவத்தைப் பண்ணுகிறதுக்குத் தாமே கற்பித்த லலாட லிபியினாலே கட்டாயம் பண்ணுகிருரென்றும், தாம் கற்பித்தபடியே பாவம் பண்ணுகிற மனுஷனுக்குத் தாம் பண்ணிவித்த பாவங்கள் நிமித்தமாக ஆக்கினையிடுகிருர் என்றும் அங்கீகரிக்க வேணும். ஆனபடியினாலே, நீதி சுரூபமாய் இருக்கிற கர்த்தரானவர் முழு அநியாயக்காரனாய் இருக்கிருரென்று சொல்லவேணுமொழிய மற்றபடியல்ல.

4. இதைத் தவிர, பாவத்தைப் பண்ணுகிறவனும் பண்ணிவிக்கிறவனும் ஆகிற இரண்டு பேரும் பாவிகளுமாய், ஆக்கினைக்குப் பாத்திரமுமாய் இருக்கிறார்களென்று கர்த்தரானவர் தாம் அருளிச் செய்த வேதத்திலே சொல்லுகிறபோதே, தம்மை மகா பாவி என்றும் ஆக்கினைக்குப் பாத்திரமாய் இருக்கிறாரென்றும் சொன்னாற்போலே ஆச்சுது. 5. கடைசியாய், இப்படிப்பட்ட தலையெழுத்தை அங்கிகரித்தோமானால், முடிவில்லாத ஞான சுரூபியாய் இருக்கிற கர்த்தரானவர் முழுதும் புத்தியில்லாதவராய் இருக்கிறாரென்று சொன்னாற்போலேயாகும். அதேதென்றால், கூடுமான காரியத்தைப் புத்திமானாய் இருக்கிறவன் கற்பிக்கவேணுமொழியக் கூடாத காரியத்தைச் செய்யும்படி கற்பிக்கிறவனும் புத்திசொல்லுகிறவனும் முழுப்பயித்தியக்காரன் என்று சொல்லவேணும் ஒழிய மற்றப்படியல்ல. இதிப்படி இருக்கையிலே, பாவம் பண்ணுகிறதுக்கு மனுஷன் தலையிலே எழுத்துண்டாய் இருக்கையிலே மனுஷனானவன் பாவம் பண்ணாமலிருக்கக் கூடாதல்லோ?. அப்படியே, கர்த்தரானவர் பாவம் செய்ய வேண்டாமென்று வேதத்திலே கற்பித்தபோதே, அவர் புத்தியில்லாதவராய்க் கூடாத காரியத்தை மனுஷனுக்குக் கற்பித்தாரென்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஏழையாயிருக்கிற மனுஷனுக்குக் கூடாத காரியம் கற்பிக்கிறது என்கிறது நிஷ்டூர இராசாவினுடைய லக்ஷணமாய் இருக்கிறதொழிய, தயாபரரான பிதாவினுடைய லக்ஷணமாய் இருக்கமாட்டாது. அவ்வண்ணமே, கர்த்தர் மனுஷன் தலையில் எழுதுகிற லிபியினாலே கர்த்தரானவர் மனுஷனுக்குத் தயாபர தகப்பனாய் இராமல், நிஷ்டூரமுள்ள இராசாவாய் இருக்கிறாரென்று சொல்லக்கடவதாகும்.

6. புண்ணிய விஷயத்திலேயோ என்றால், தலையெழுத்து உண்டாயிருக்கிறதினாலே மனுஷனானவன் கட்டாயமாய்ப் புண்ணியம் பண்ணுவானொழிய மற்றப்படியல்ல. இது இப்படி இருக்கையிலே, மனுஷனானவன் புண்ணியம் பண்ணுகிறதுக்குக் கர்த்தன் கற்பித்த கற்பினையானது வியர்த்தமாய் இருக்கிறதென்று சொல்லக்கடவோம். அதெப்படி என்றால், கர்த்தரானவர் சூரியனை லோகத்திலே கற்பித்தாற்போலே, சூரியனானது கர்த்தன் கொடுத்த சுபாவத்தினாலே தனது பிரகாசத்தை

எங்கும் பரம்பப் பண்ண வேணுமொழிய, அத்தைப் பரம்பப் பண்ணுமல் இருக்கமாட்டாது. அப்படியிருக்கையிலே, சூரியனைப் பார்த்து 'நீ உன்னுடைய பிரகாசத்தைப் [2]பரம்பப் [2]பண்ணினுலே பண்ணினுய்; பரம்பப் பண்ணுதே போனுயானுல் ஆக்கினையிடுவேன்' என்று சொல்லலாய் இருக்கிறதோ? அப்படியே, கர்த்தன் சொன்னுரென்று சொன்னேமானுல், அப்படிப் பட்ட சொல் வியர்த்தமாய் இருக்கிறதென்று சொல்ல வேணும் மொழிய மற்றப்படியல்ல. அத்தன்மைபோலக், கர்த்தரானவர் மனுஷனனவன் தலையில் எழுதின விதியினுலே மனுஷனனவன் புண்ணியம் கட்டாயமாய் பண்ணுவானெழியப் புண்ணியம் பண்ணுதிருக்க மாட்டான் என்றிருக்கையிலே, கர்த்தரானவர் மனுஷனைப் பார்த்து, 'நீ புண்ணியம் [2]பண்ணினுலே பண்ணினுய்; இல்லாவிட்டால் நரகத்திலே உன்னைத் தள்ளுவேன்' என்று திருவுளம்பற்றினது என்கிறது வியர்த்த வார்த்தை என்றும், [3]**கவுரவ தோஷத்தோடே கூடியிருக்கிற கற்பினை என்றும் அங்கீகரிகக்கத் தக்கதாகும்.** அதேதென்றுல், லலாட விதியினுலே மனுஷனனவன் புண்ணியத்தைக் கட்டாயமாய்ப் பண்ணுகிறுன் என்று சம்மதித்தோமானுல், மனுஷனனவன் புண்ணியம் பண்ணுகிறதுக்கு லலாடவிதி ஒன்றே பரிபூரண காரணமாய் இருக்கிறதென்று சொல்லக்கடவது. லலாட விதியானது புண்ணியம் உண்டாகிறதுக்குப் போரும் என்றிருக்கையிலே, இதுக்குத் தானே தேவகற்பனையானது வேண்டியிருக்கிறதென்று சொன்னேமானுல், கவுரவ தோஷத்தை அங்கீகரிக்கிறேம் என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றுல், காரியம் உண்டாயிருக்கிறதுக்கு ஒரு காரணம் போரும் என்றிருக்கையிலே, அதினுடைய உற்பத்திக்கு வேறொருகாரு காரணம் வேண்டி இருக்கிறதென்று சொன்னுப்போலே ஆச்சுது.

**5.6 முன் பிறப்பின் கர்மத்தைப் பார்த்துக் கடவுள் எழுதவில்லை:** இதுக்கு எல்லாத்துக்கும் சிலர் சொல்லுகிற பிரதியுத்தாரமாவது: 'கர்த்தரானவர் அவனவன் முன்சென்மத்திலே பண்ணின கர்மத்தைப் பார்த்து, அதுக்குத்தக்க விதியை அவனவன் தலையிலே எழுதுகிருரொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினுலே சொல்லப்பட்ட தூஷணங்களுக்கு அவகாசம் காண

2 பண்ணினை நினுலே (பா. பே.) 3 பெருமைக்கு இழுக்கு

மாட்டாது' என்று சொல்லுகிறார்கள். இந்த பிரத்தியுத்தார மானது ஒன்றுக்கும் ஆகாதென்றும், சொல்லப்பட்ட தூஷணங் களுடைய நிவாரணத்தை இலவலேசமாகிலும் பண்ணுகிறதுக்கு வல்லதாய் இராதென்றும் அடைவாக வெளிப்படுத்தக் கட வோம். 1.மனுஷனுடைய சென்ம பரம்பரையிலே "அனவஸ்தை தோஷம்' அங்கிகாரம் பண்ணாத படிக்கு, லோகமும் லோகத்தில் உண்டான மனுஷ சந்ததியும் துவக்கிற்றென்று சொல்லக் கடவது. ஆனபடியினாலே, முந்தமுந்தச் சில மனுஷ சனங்களைக் கர்த்தர் உண்டாக்கினாரென்று சந்தேகமற அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். அப்படிப்பட்ட முந்தின மனுஷ சனங்களுக்கு அதுவே முந்தின சென்மம் என்று சொல்ல வேணுமொழிய, வேறே அவர்களுக்குப் பூர்வ சென்மம் உண்டாயிருந்தது என்று சொல்லவேணும் என்கிறது ஒன்றிலே தானே கேவலம், அர்த்த விரோதமானது அங்கீகரிக்கப்பட்டதாகும். அது ஏதென்றால், முந்த முந்த உண்டாக்கப்பட்ட மனுஷர் உண்டு என்று அங்கீகரிக்கிறபோது, அவர்களுக்கு முன்னே வெவ் வேறே மனுஷர் உண்டாயிருக்கவில்லை என்று சொன்னாப்போலே ஆச்சுது. ஆனால் முந்த முந்த உண்டாக்கப்பட்ட மனுஷருக்குப் பூர்வ சென்மம் உண்டென்று அங்கீகரிக்கப்பட்டால், அப்படிப் பட்டவர்கள் முந்தின பேர்கள் ஆகாதவர்களுமாய் முந்தின பேர் களுமாய் இருந்தார்கள் என்று அங்கீகரிக்கிறதுக்கு ஒக்கும். அவ்வண்ணமே, முந்த முந்த உண்டாக்கப்பட்ட மனுஷருக்குப் பூர்வ சென்மம் உண்டாயிருந்தது என்று சொல்லவும் கருதவும் கூடாது, இது இப்படி இருக்கையிலே வேறே சென்மத் திலிருந்து கர்த்தரானவர் பிறப்பியாத மனுஷருக்கு அவர்களாலே பண்ணப்பட்ட கர்மங்கள் இல்லையே. ஆனபடியினாலே கர்த்த ரானவர் அவர்கள் தலையில் எழுத்தை எழுதவில்லை என்று அங்கீ கரிக்கக் கடவது. அது ஏதென்றால், லலாட லிபியானது கர்மத் துக்குத் தக்கதாய் எழுதப்படுகிறதென்று சொல்லப்படுகிற போது லலாடலிபி எழுதப்படுகிறதுக்கு அவனவன் பண்ணின கர்மமானது காரணமாயிருக்கிறது ஒழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே முந்த முந்த உண்டாக்கப்பட்ட மனுஷ சனங்கள் பண்ணின வேறே கர்மங்கள் அவர்களிடத்திலே இல் லாததினால், லலாடலிபியைக் கர்த்தரானவர் அவர்களிடத்திலே

1 முடிவு பெருமைக் குற்றம். fallacy of endless regression.

எழுதுகிறதுக்குக் காரணம் இல்லாதிருக்கைகயிலே, அவர்களிடத்திலே தலையெழுத்தை எழுதவில்லை என்று அங்கீகரிக்கவேணும். அப்படிப்பட்ட மனுஷர் என்னப்பட்ட பெயர்கள் பூலோகத்திலே திரிந்தநாள் மட்டும் தலையெழுத்தில்லாமல் தனது கிரிகைகளைப் பண்ணிக்கொண்டு வந்தார்கள் என்று அற்பமாகிலும் சந்தேகமில்லாமல் அங்கீகரிக்க வேணும். 2. பின்னையும் அப்படிப்பட்ட மனுஷருக்குப் பிறந்த பிள்ளைகள் வேறே ஜென்மத்திலே பிறவாததினால், வேறே கர்மங்களைப் பண்ணாத பேர்களாய் இருந்தார்களென்று சொல்லவேண்டியிருக்கிறது. ஆனபடியினாலே, முன் பண்ணின கர்மங்கள் இல்லாமல் லலாடலிபியை எழுதாத கர்த்தரானவர் முந்தின மனுஷரிடத்திலே பிறந்த பிளளைகளுக்குத் தலையெழுத்தை எழுதவில்லை என்றும், அவர்கள் பூலோகத்திலே திரிகிற நாள் மட்டும் தலையெழுத்தில்லாமல் தனது சேட்டைகளைப் பண்ணிக்கொண்டு வந்தார்களென்றும் முன்சொல்லப்பட்ட ஞாயங்களினாலே சொல்லவேணுமொழிய மற்றபடியல்ல. 3. இதன்றியே, முந்த முந்த உண்டாக்கப்பட்ட மனுஷ சனங்கள் தாங்கள் பெற்ற பிள்ளைகளுக்குத் தாங்கள் தாங்கள் பிள்ளைகளாய்ப் பிறவாமல் தனது பேரமாரைக் கண்டார்களென்று சொன்னோமானால், அப்படிப்பட்ட பேரமாரும் பூலோகத்திலே திரிகிற நாள்மட்டும் லலாடலிபி இல்லாமல் தனது விருத்திகளைப் பண்ணிக்கொண்டு வந்தார்களென்று சந்தேகமில்லாமல் சம்மதப்படத்தக்க சத்தியாகும். 4. அவ்வண்ணமே மூன்று தலைமுறையிலுள்ள மனுஷர்கள் லலாட லிபி இல்லாமல் தமது விருத்திகளைப் பண்ணிக்கொண்டு வந்தார்களென்று சந்தேகமில்லாமல் அங்கீகரிக்க வேண்டியிருக்கையிலே, மற்றுமுள்ள மனுஷர் என்னப்பட்ட யாவரும் தலையெழுத்தின்றி விதியின் கட்டாயமும் இல்லாமல் தமது விருத்திகளைப் பண்ணிக்கொண்டு வருகிறார்களென்று அங்கீகரிக்கக் கடவோம். அப்படியே அங்கிகாரம் பண்ணாமல் இருந்தால், முந்தின மூன்று தலைமுறையிலும் உள்ள மனுஷரானவர்கள் தங்கள் விருத்திகளைப் பண்ணிப் பூலோகத்திலே நடந்தாப்போலே இக்காலத்திலே இருக்கிற மனுஷரானவர்கள் தமது கிரிகைகளை (ப் பண்ணாமல்) வேறே பிரகாரமாய்ப் பண்ணிக்கொண்டு வருகிறார்களென்று அங்கீகரிக்கிறதினால் அப்படிப்பட்ட பேர்கள் கர்மங்களுடைய விஷயங்களிலே வேறே..

வகையுள்ள மனுஷராய் இருக்கிறார்கள் என்று சொல்லக் கட வோம். இப்படிப்பட்ட அபத்தத்தைச் சொல்லாதபடிக்கு, முந்தினமுன்று தலை முறையிலுள்ள பேர்கள் லலாட லிபியும் லலாட லிபியினாலே வருகிற கட்டாயமும் இல்லாமல் தமது விருத்திகளைப் பண்ணிக்கொண்டு வருகிறதிலே வேணும் வேண்டாம் என்கிற சத்தியுள்ள மனசுள்ள பேர்களாய் இருந்தார் களென்று அங்கீகரிக்கிறாப்போலே, பிற்காலத்திலே பிறந்த மற்றுள்ள மனுஷர் எனப்பட்ட யாவரும் லலாட லிபியும் இல்லாமல், லலாட லிபியினாலே வருகிற கட்டாயமும் இல்லாமல் தமது விருத்திகளைப் பண்ணுகிறதினாலே வேணும் வேண்டா மென்கிற சத்தி உள்ள பேர்களாய்ப் பூலோகத்திலே தலைமுறை தலைமுறையாக நடந்து வருகிறார்களென்று சொல்ல வேண்டியிருக்கிறது.

5. கடைசியாய், முந்த முந்த உற்பவித்த மனுஷ சனங்களைப் பட்டினியாய் வையாமல் அவர்களுடைய காலத்திலே விருக்ஷங் கள் என்கிலும் பூமியிலே இருந்தது என்கிறதுக்குத் தப்பாது. பின்னையும் சமுத்திரமும் பூமியும் அக்காலத்தில் இருந்தாப்போல் இக்காலத்திலும் இருக்கிறது என்கிறதுக்குச் சந்தேகப்படக் கூடாது ஆனதினால் இக்காலத்திலே சமுத்திரத்திலே மச்சியங் களும் பூமியிலே மிருகங்களும் பிழைத்துத் திரிகிறாப்போலே அக்காலத்திலேயும் மச்சியங்களும் மிருகங்களும் பிழைத்துத் திரிந்ததென்று சொல்லக்கடவோம். ஆனபடியினாலே, முன் சென்மத்திலே கர்மங்களைப் பண்ணின மனுஷ சனங்களில்லா மல் மச்சியங்களும் மிருகங்களும் அக்காலத்திலே இருந்ததென்று சொல்லுமாப்போலே இக்காலத்திலும் மச்சியங்களும் மிருகங்க ளும் முன்சென்மத்திலே பண்ணப்பட்ட கர்மங்களும் லலாட லிபியும் இல்லாமற் பூமியிலே பிழைத்துத் திரிகிறதென்றும் சொல்லக்கடவதாகும்.

தெளிவற்ற பாவிகளான பேர்கள் அநியாயமாய்க் கற்பித்த லலாட லிபியானது கர்த்தருடைய சத்தியம் நீதி முதலான மகிமைகளுக்கு விருத்தமாய் இருக்கக்கொள்ள சகல நன்மை சுரூபியாயிருக்கிற கர்த்தரானவர் இப்படிப்பட்ட லலாட லிபி மனுஷரிடத்திலே இல்லாமற் பண்ணவேணுமென்று இந்தப் பாடத்திலே சொல்லப்பட்ட ஞாயங்களினாலே சந்தேகமில்லாமற்

கண்டுபிடிக்கலாம் என்கிறாப்போலே, இப்படிப்பட்ட லலாட லிபியானது சுத்த அபத்தத் தப்பறை என்று வேறே அனேகம் ஞாயங்களினாலே சந்தேகமறக் கண்டுபிடிக்கலாம். அதுகளுக்குள்ளே சில ஞாயங்களைக் கொஞ்சத்துக்குள்ளே எடுத்துக் காட்டி, அப்படிப்பட்ட ஞாயங்களைக் கொண்டு மனுஷனுக்குக் கட்டாயம் பண்ணுகிற லலாட லிபியானது உண்டென்று சொல்லுகிறது முழுத் தப்பறையாய் இருக்கிறதென்று வருகிற பாடத்திலே இன்னமும் ஒப்பச் சொல்லக்கடவோம்.

ஐந்தாம் பாடம் முற்றும்

(கிரந்தம்) உாசுமெஉ *

## ஆறும் பாடம்

**6.1** தலையெழுத்து இல்லை: உரிமையின்றிப் பாவ புண்ணியமோ மோட்ச நரகமோ இல்லை: நரக மோக்ஷத்தைப் பெறுவிக்கிற பாவ புண்ணியத்தின் [1]சுபாவ சரூபத்தை நிச்சயம் பண்ணின மகாத்துமாக்களாய் இருக்கிற பேர்கள், பிரசைகளினாலே பண்ணப்படுகிற விருத்திகளுடைய மேரையைப் பார்க்கும்போது, அதுகளுடைய உற்பத்தி உண்டாக்கிறதுக்குக் கட்டாயம் பண்ணுகிறது என்னப்பட்டது எல்லாம் பிரசைகளிடத்திலே இல்லாதிருக்க வேணுமென்று சம்மதித்துக் கொண்டு வருகிறார்கள். ஆனபடியினாலே, மனுஷனானவன் தனது விருத்திகளைப் பண்ணிக்கொண்டு வருகிறதிலே ஒன்றில் அவனிடத்திலே கட்டாயம் பண்ணுகிற பொருள் இல்லாமல் இருக்க வேணும்; அல்லது அப்படிப்பட்ட விருத்திகளுடைய உற்பத்தி ஆகிறதுக்கு முன்னே அதுகள் உண்டாகிறதுக்குக் கட்டாயம் பண்ணுகிற யாதொன்று மனுஷரிடத்திலே உண்டானால் அப்படிப்பட்ட விருத்திகளுக்கு முன்சொல்லப்பட்ட பாவ புண்ணியத்தின் நாமதேயமானது சொல்லமாட்டாது என்று ஸ்திரமாகச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆனபடியினாலே, அந்தந்த விருத்திகளை மனுஷனானவன் பண்ணுகிற

* 242 [1] இயல்பு

துக்கு முன்னே மனுஷனானவன் அந்த விருத்தியைப் பண்ணுகிற துக்குக் கட்டாயம் பண்ணுகிற லலாட லிபியைக் கர்த்தரானவர் மனுஷனிடத்திலே எழுதினாரென்று சொன்னோமானால், மனுஷனாலே பண்ணப்படுகிற கிரிகை என்னப்பட்ட யாவுக்கும் நரக மோக்ஷத்தைப் பெறுவிக்கிற பாவ புண்ணியத்தின் நாமதேயமானது செல்லாதென்று சொல்லக்கடவோம். பாவ புண்ணியமானது லோகத்திலே இல்லை என்று அங்கீகரிக்கிறபோது இவ்வுலகத்திலே களவு கொலை முதலான கிரிகைகள் என்னப்பட்ட யாவையும் பண்ணின மனுஷனானவன் மரணத்துக்குப் பிற்பாடு நரகம் முதலான ஆக்கினையை அடைய மாட்டான் என்கிறதுக்குத் தப்பாது. அல்லது அப்படிப்பட்ட மனுஷனுக்குக் கர்த்தரானவர் நரக முதலான ஆக்கினையை இட்டார் என்று சொன்னோமானால், நீதி சொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் ஒரு பாவமானாலும் பண்ணாதவனுமாய் நரக வேதனைக்குப் பாத்திரமாகாதவனுமாய் இருக்கிற மனுஷனை நரக வேதனையை அனுபவிக்கக் கட்டளையிட்டார் என்று அங்கீகரிக்கக் கடவதாகும். பின்னையும், இவ்வுலோகத்திலே பாவமில்லாதவனுமாய்க் கர்த்தனை உத்தேசித்துத் தபசு முதலான தான செப அனுஷ்டானங்களைப் பண்ணினவனுமாய் இருந்தாலும், அப்படிப்பட்டவன் மரணத்துக்குப் பிற்பாடு மோக்ஷத்தைப் பெற மாட்டான் என்று சொல்லக்கடவது. அவ்வண்ணமே, பாவம் இல்லாதவனுமாய்க், கர்த்தனை உத்தேசித்துத் தபசு முதலான சகல தருமங்களிலே பிரயாசைப்பட்ட (வனுமாய் இருக்கிற) வனுக்குத் தயாபரனாயிருக்கிற கர்த்தரானவர் மோக்ஷமாகிய சம்பாவனையைக் கொடுக்கவில்லை என்றும் சொல்ல வேண்டி இருக்கிறது. இப்படிப்பட்ட அபத்தங்களை மகா பாவத்தைக் கட்டிக்கொண்டு அங்கீகாரம் பண்ணுதபடிக்கு, மனுஷனானவன் தனது விருத்திகளைப் பண்ணுகிறதுக்கு முன்னே மனுஷனானவன் தனது விருத்திகளைப் பண்ணுகிறதுக்குக் கட்டாயம் பண்ணுகிற லலாட லிபியை நீதி சொரூபியாய் இருக்கிற கர்த்தரானவர் மனுஷனிடத்திலே எழுதவில்லையென்று ஓர் அற்பமாகிலும் சந்தேகப்படாமல் அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது.

**6.2 உரிமை இல்லாவிட்டால் நீதி நூல்களோ அறிஞர்களோ தேவையில்லை:** இதன்றியே, பாவிகளாய் இருக்கிற பேர்கள் மரணபரியந்தம் தங்களிடத்திலே எழுதப் பட்ட லலாட லிபியினாலே கட்டாயமாய்ப் பாவம் பண்ணு வார்கள் என்றிருக்கையிலே, பாவிகளைப் பார்த்துப் 'பாவங்களை விட்டு உங்களுக்கு மரணம் வருகிறதுக்கு முன்னே தருமத்தைப் பண்ணுங்கள்' என்று சாஸ்திர முதலான நல்ல பொஸ்தகங் களில் எழுதப்பட்ட தர்ம வாக்கியங்களானதுகளை வியர்த்த வாக்கியங்கள் என்றும், அநியாயக் கற்பனைகள் என்றும் சொல்ல வேண்டியிருக்குமொழிய மற்றப்படியல்ல. இந்தடை விலே, லோகத்திலே வேண்டியிருக்கிற குருபீட புருஷர் முத லான மகாத்துமாக்களாய் இருக்கிற பேர்கள் லோகத்திலே வியர்த்தமாய் இருக்கிறார்கள் என்று சொல்லக் கடவோம். அது ஏதென்றால், பாவ மார்க்கத்திலே திரிகிற பாவிகளைப் பார்த்துப் 'பாவத்திலுடைய அதர்மமாயிருக்கிற வழியை விட்டு மேலான தர்மத்தின் உத்தம வழியிலே நடவுங்கள்' என்று புத்தி சொல் லுகிறது என்கிறது இது ஒன்றே அவர்களுக்கான [1]வியாபார மாய் இருக்கிறதொழிய மற்றப்படியல்ல. மரண பரியந்தம் பாவியானவன் கட்டாயமாய்ப் பாவத்தைப் பண்ணுவான் என் கிறதுக்கு லலாட லபியானது பாவியிடத்திலே உண்டென்று அங்கீகரிக்கிறபோது, பெரியவர்களாலே சொல்லப்படுகிற தர்ம புத்தி என்னப்பட்ட யாவும் [2]அப்பிரயோசனமும் புத்தியில்லாத் தனமுமாய் இருக்கிறதென்று அங்கீகரிக்க வேண்டியிருக்கும். ஆனபடியினாலே, லலாட லிபியை அங்கீகரிக்கிறபோது, தரும புத்தியைச் சொல்லுகிறதுக்கு உண்டாயிருக்கிற பெரியவர்கள் லோகத்துக்கு வேண்டியிருக்கிற பேர்களாய் இருக்கிறார்கள் என்று சொன்னோமானால், அப்படிப்பட்ட மகாத்துமாக்களாய் இருக்கிற பேர்கள் லோகத்திலே [3]சுத்தமாயிருக்கத் தேவை இல்லையென்று சொல்லத்தகும்.

**6.3 உரிமை இல்லாத மனிதனுக்கு அறிவு சொல்வது, பறக்கமுடியாத மனிதனைப் பறக்கச் சொன்னது போன்றது:** இதெல்லாம் ஒரு உவமையினாலே துலக்கமாக வெளிப்படுத்தலாம். அதேதென்றால், சரீரத்தின் கனத்தினாலே

1 தொழில் 2 பயனற்றது 3 அறவே வேண்டாம்

**மனுஷர் என்னப்பட்ட** யாவரும் பூமியிலே நடக்கிறதுக்கு வல்லவர்களாய் இருக்கிறார்களொழிய, ஆகாச மார்க்கத்திலே பறக்கிறதுக்கு வல்லவர்களாய் இரார்கள் என்றிருக்கையிலே, யாதாமொருத்தன் கனமான சரீரமுடைத்தான மனுஷரைப் பார்த்துப் 'பூமியிலே திரியாமல் ஆகாசமார்க்கத்திலே பறவுங்கள்' என்று புத்தி சொன்னால், அப்படிப்பட்ட புத்தி சொல்லுகிறவனைப் பயித்தியங்கொண்டவன் என்று சொல்லுவார்கள். இந்தப் புத்தியைச் சொல்லுகிற நிமித்தமாக லோகத்திலே அவன் திரிகிறானென்று சொன்னோமானால், அவன் லோகத்திலே சஞ்சரிக்கிறதென்கிறது வியார்த்தமாய் இருக்கிறதென்று சொல்லத் தகும். அம்மருவாதியே, லலாட விபியின் கட்டாயமாகிற கனத்தினாலே பாவியானவன் கீழாயிருக்கிற பாவ மார்க்கத்திலே நடக்கிறதுக்கு மாத்திரம் வல்லவனாய் இருக்கிறானொழிய மிகவும் மேலாய் இருக்கிற தரும வழியிலே நடக்கிறதுக்கு வல்லவனாய் இரான். இது இப்படியிருக்கையிலே, பாவியானவனைப் பார்த்துப் 'பாவ வழியிலே திரிய வேண்டாம்' என்றும், 'தரும வழியிலே நட' என்றும் புத்தி சொல்லுகிறவன் கனமான சரீரமுடைத்தான மனுஷனைப் பார்த்துப், 'பூமியிலே திரிய வேண்டாம்' என்றும் 'ஆகாச மார்க்கத்திலே பறந்து போ' என்றும் புத்தி சொல்லுகிறதுக்குச் சமானமாகும் (என்கிறதுக்குத் தப்பாது). ஆனபடியினாலே, மனுஷன் ஆகாசத்திலே பறக்கிறதுக்குப் புத்தி சொல்லுகிற பயித்தியக்காரன் லோகத்திலே இருந்தால், அவன் லோகத்திலே வியர்த்தமாய் இருக்கிறானென்று சொல்லப்படுமாப்போலே, 'பாவ வழியை விட்டுத் தரும வழியிலே நடவுங்கள்' என்று பாவிகளைப் பார்த்துப் புத்தி சொல்லுகிற குருவானவன் பயித்தியம் கொண்டிருக்கிறான் என்றும், இது நிமித்தமாக அவன் லோகத்திலே வியர்த்தமாய் இருக்கிறான் என்றும் சொல்லத்தகும் (ஒழிய மற்றபடியல்ல). இத்தனை அபத்தங்களுக்குச் சம்மதப்படாதபடிக்குப், பாவ வழியிலே திரிகிற பாவியானவன் [1]லலாட விபியினாலே கட்டாயமாய்ப் பாவ வழியிலே நடவாமல் வேணும் வேண்டாம் என்கிற தனது சத்தியுள்ள மனசினாலே பாவத்தை விடலாமென்றும் தரும வழியிலே நடக்கலாம் என்றும் அங்கீகரிக்கக்கடவோம். ஆனபடியினாலே, பாவ வழியை விடுகிறதுக்கு வல்லவனாயிருக்கிற பாவிக்

1. பிரதிகளில் லாடவிபி என்றே வருகிறது.

குத் தரும புத்தி சொல்லுகிற குருக்கள் முதலான மகாத்துமாக்களாய் இருக்கிற பேர்கள் லோகத்துக்கு வேண்டியிருக்கிற பேர்களாய் இருக்கிறார்களென்றும், அவர்கள் லோகத்திலே சஞ்சரிக்கிறது 'சபலமாயிருக்கிறதென்றும் சொல்லக்கூடும் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை.

**6.4 தலை எழுத்து இருந்தால் செபபூசை தான தருமம் பலனில்லை :** இதன்றியே, நல்வினை தீவினை வருகிறதுக்குத் தலையெழுத்து மாத்திரம் காரணமாயிருந்தால், நன்மை வர வேணும் என்றும் தின்மை நீங்கவேணும் என்றும் செபம் பூசை முதலான தான தருமங்களைப் பண்ணுகிறதும், சருவேசுரனை வேண்டிக்கொள்கிறதும் (முழுதும்) அறிவின் குறைத்தலென்று சொல்லவேண்டியிருக்கிறது. அதெப்படியென்றால், நாளைச் சூரியனாலே [2]எனக்கு அவசியமாய் வரத்தக்க பிரகாசத்தை உத்தேசித்து அந்தப் பிரகாசம் எனக்கு வரவேணுமென்று செபம் பண்ணுவேனானால், பின்னையும் எனக்குக் காற்றானது கட்டாயமாய் வருத்திவிக்கத்தக்க குளிரை எண்ணி அந்தக் குளிரானது எனக்கு வராதபடிக்குத் தர்ம தான முதலானதுகளைப் பண்ணிக்கொண்டு வந்தோமானால், புத்திக்குறைத்தல் எனக்கு உண்டென்று அவசியமாய்ச் சொல்லுவார்களே. அத்தன்மை போலே, நல்வினை தீவினையானது தலையெழுத்து நிமித்தமாக கட்டாயம் வரவேண்டியிருக்கையிலே, தலையெழுத்தினாலே நாளை நமக்குக் கட்டாயமாய் வரத்தக்க நன்மையானதைப் பார்த்து, அது நமக்கு வரவேணும் என்கிறதுக்குச் சருவேசுரனை நான் வேண்டிக்கொள்ளக் கடவேனல்ல. அதேதென்றால், தலையெழுத்தைத் துடைக்க வல்லவனாய் இராத கர்த்தரானவர் தலையெழுத்தினால் வரத்தக்க நன்மை வராதபடிக்கு அவர் விலக்க மாட்டாரென்று அங்கீகரிக்க வேணும். அம்மருவாதியே, தலையெழுத்தினாலே வரத்தக்க பாவமுதலான [3]துரிதங்கள் வராதபடிக்குக் கர்த்தரானவர் விலக்க மாட்டார் என்கிற போது, அப்படிப்பட்ட துரிதங்கள் வராதபடிக்குக் கர்த்தரானவரை வேண்டிக்கொள்கிறதுக்குக் கணக்கேது? ஆதலாலே, முடிவில்லாத கர்த்தருடைய அளவறுக்கப்படாத பெலத்தை

1. பயனானது   2. நமக்கு (பாடம்)   3. கேடுகள்

அறிந்த பேர்கள் அவருடைய கிருபாகடாக்ஷத்தினாலே பாவ வழியிலே நடவாதிருக்கிறதுக்கும் அவருக்கு ஏற்றிருக்கிற தரும வழியிலே நடக்கிறதுக்கும் தற்பரியம் உள்ளவர்களாய் இருக்கிறதினால் இத்தனை அபத்தங்களை அங்கீகரிக்கக் கடவார்களல்ல.

**6.5 தலையெழுத்தைத் தடுக்காவிட்டால் கடவுளிடம் நீதியோ வல்லமையோ இல்லை:** அவ்வண்ணமே, அப்படிக் கொத்த புண்ணியவான்களாய் இருக்கிற பேர்கள் கர்த்தரானவர் லலாட லிபியை அவனவனிடத்திலே எழுதுகிறார் என்கிலும் அல்லது வேறே யாதொருத்தன் அவருடைய கட்டளைப்படியே எழுதுகிறான் ஆனாலும் [1]சம்மதப்படமாட்டார்கள். அது ஏன் என்றால், பாவ புண்ணிய விஷயத்திலே கர்த்தரானவர் தனது பிரசைகளுக்கு லலாட லிபியினாலே தாமே கட்டாயம் பண்ணுகிறாரென்றும், அல்லது வேறே ஒருத்தன் கட்டாயம் பண்ணுகிறதுக்கு உத்தாரம் கொடுக்கிறார் என்றும் சொன்னோமானால், சகல நன்மை சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் பேரிலே நிஷ்டூர அநியாய முதலான துர்க்குணங்களை [1]ஆரோபித்தது போலாச்சுது. அல்லது தனது உத்தாரமில்லாமல் லலாட லிபி வேறே ஒருத்தன் எழுதுகிறான் என்று சொன்னோமானால், இப்படிப் பட்ட அநியாயத்தைக் கர்த்தரானவர் [2]உதாசீன புத்தியினாலே விலக்காமல் இருக்கிறாரென்றுவது அங்கீகரித்தோமானால் இத்தாலே கர்த்தரானவர் பொல்லாதவராய் இருக்கிறாரென்று சொன்னாப்போலே ஆச்சுது. ஏனென்றால், இவர்கள் சொல்லுகிறப்போலே, லலாட லிபியானது ஒருத்தனாலே வில(க்)கக் கூடாது என்கிறதினால், கர்த்தரானவர் முதலாய் அப்படிப்பட்ட லிபியைப் பிர்மா எழுதவேண்டாமென்று சொல்லமாட்டார் என்று அங்கீகரித்தோமானால், சகல நன்மை சுருபமாய் இருக்கிற சர்வேசுரனானவர் லலாட லிபியினுடைய அநியாயத்தை வில(க்)கிறதுக்கு மனசுண்டாய் இருந்தாலும், வில(க்)கமாட்டார் என்கிற போதே, முடிவில்லாத பெல சுருபமாய் இருக்கிற கர்த்தரானவர் மிகவும் பலவீனராய் இருக்கிறாரென்று சொன்னாப் போலே ஆச்சுது.

**6.6 உரிமை பற்றிய உண்மையான நிலை:** அவ்வண்ணமே, இந்த விஷயத்திலே அங்கீகரிக்கத்தக்க சத்தியமாவது:

1 சுமத்தினது 2 அக்கறையில்லாமையினாலே 4. சொல்ல (பா. பெ.)

மனுஷனானவன் கரையேறுகிறதுக்குச் சகல நன்மை சுரூபமாய் இருக்கிற கர்த்தரானவர் மனுஷனை உண்டாக்கின போதே, அவனுடைய கரையேற்றத்துக்கு வேண்டியிருக்கிற ஞானத்தை மனுஷனுக்குக் கொடுத்தார் என்று சொல்லக்கடவது. அப்படிப் பட்ட ஞானத்தினாலே பாவ புண்ணியம் இன்னதென்று மனுஷனானவன் நிச்சயம் பண்ண வல்லவனாயிருக்கிறான் என்கிறதுக்குத் தப்பாது. இப்படிப்பட்ட ஞானமானது மனுஷனிடத்திலே வியர்த்தமாய் இராமல் மனுஷன் கரையேறத் தக்கதாக அது உபயோகமாய் இருக்கிறதுக்கு வேணும் வேண்டாம் என்கிற சத்தியுள்ள மனசை மனுஷனுக்குத் தயாபரனான கர்த்தன் கொடுத்தார் என்று சொல்லக் கடவோம். அப்படிப்பட்ட சத்தியுள்ள மனசைக்கொண்டு மனுஷனானவன் கட்டாயம் பண்ணுகிற லலாட லிபி முதலான பிரேரகன் இல்லாதே பாவம் வேண்டாம் என்கிறதுக்கும் [3]அடைவாகப் புண்ணியம் வேணும் என்கிறதுக்கும் வல்லவனாய் இருக்கிறானென்று அங்கீகரிக்கத் தக்க சத்தியமாகும். ஆனால், புண்ணியம் பண்ணுகிறதுக்கு மனுஷனிடத்திலே இருக்கிற பலமாகிறது முடிவில்லாத பலமாய் இராமல், மனுஷ சுபாவத்துக்குத் தக்க குறைவுள்ள பலமாய் இருக்கக்கொள்ள, மனுஷனானவன் அப்படிக்கொத்த குறைவு உள்ள பெலமுடைத்தானவனாய் இருக்கையிலே புண்ணியத்தினுடைய குறையாகிற பாவத்தை அடையலாம் என்று சொல்லத்தகும். பின்னையும், மனுஷனானவன் இந்தப் பூமியிலே திரிகிற நாள் மட்டும் அவதியை அடையாதவனாய் இருக்கிறதினாலே, நரக மோட்சம் என்கிற அவதி இரண்டும் அடைந்த பேர்களைப் போலே பாவ புண்ணியத்தினாலே நிலை கொண்ட மனசுள்ளவனாய் இருக்கவில்லை என்று அங்கீகரிக்க வேணும். ஆனபடியினாலே, மனுஷனானவன் இந்தப் பூமியிலே திரிகிற நாள்மட்டும் அவதியை அடையாதவனுமாய் அவதிக்குப் போகிற வழியிலே நடக்கிறவனுமாய் இருந்துகொண்டு, பாவத்தில் நின்று புண்ணியத்திலே மனசு திரும்புகிறதுக்கும் புண்ணியத்தை விட்டுப் பாவத்திலே விழுகிறதுக்கும் வல்லவனாய் இருக்கிறானென்று சொல்லவேணும். அவ்வண்ணமே, பாவ புண்ணிய விஷயத்திலே கட்டாயம் பண்ணுகிற பிரேரகன் மனுஷனிடத்திலே இல்லாமல் மனுஷனானவன் புண்ணியம்

[3] முறையாக

பண்ண வேணுமானால், தேவ கிருபையினாலே தனது சுவாதந்திரிய பெலத்தைக்கொண்டு மெய்யான புண்ணியம் பண்ணலாம் என்று அங்கீகரிக்க வேணும், அல்லது பாவம் பண்ணவேணுமானால், தனது குறைவுள்ள பெலத்தினாலே பாவத்திலே விழலாம் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. ஆனபடியினாலே, பாவ புண்ணிய விஷயத்திலே வேணும் வேண்டாம் என்கிற குணமானது மனுஷனுக்கான சுவாதந்திரியம் என்று அங்கீகரிக்கிறோமொழிய, அவனவன் தீர்க்காயுசு ஆரோக்கிய முதலான [1]போக சுகங்களை அனுபவிக்கிறதுக்கும், ராசாங்கம் முதலான அயிஸ்வரியங்களை அனுபவிக்கிறதுக்கும் மனுஷனிடத்திலே சுவாதந்திரிய பெலமானது செல்லாதென்று சொல்லிக்கொண்டு வருகிறோமொழிய மற்றப்படியல்ல.

**6.7 முதல் சந்தேகம்: நீடுவாழ்வு பதவி முதலியன அடைய ஏன் உரிமை தரப்படவில்லை:** சுவாதந்திரிய விஷயத்திலே நம்மாலே சொல்லப்பட்டதுமாய், எல்லோரும் அங்கீகரிக்கத் தக்கதுமாய் இருக்கிற இந்த சத்தியத்தைத் தெளிவற்ற பாவிகளாயிருக்கிற சிலபேர்கள் கண்டிக்க வேணுமென்று சில அபத்த சந்தேகங்களைக் கேட்பார்கள். அதுகளுக்கான பிரத்தியுத்தாரத்தை அறிகிறது என்கிறது கரையேறுகிறதுக்கு அவசியமாய் வேண்டியிராது; இருந்தாலும், சர்வேஸ்வரனுடைய வேதத்திலே அங்கீகரிக்கப்படுகிற விசேஷம் என்னப்பட்டதாவும் குன்றாத சத்தியமாய் இருக்கிறதென்று ஒப்பிவிக்கிறதுக்கு நல்ல ஞாயங்கள் முதலான லக்ஷணங்கள் உண்டாயிருக்கிற [2]படியால், அப்படிப்பட்ட சத்தியமானது வியர்த்த வார்த்தைகளினாலே கண்டிக்கக் கூடுமொழிய நல்ல ஞாயங்களினாலே கண்டிக்கக் கூடாது என்கிறதுக்குத் தப்பாது. இது துலக்கமாய் வெளிப்படுகிறதுக்கு அவரவர் இந்த விஷயத்திலே அபத்தமாய்க் கேட்கிற சந்தேகங்களுக்கான பிரத்தியுத்தாரத்தைச் சொல்லுவோமொழிய, அதெல்லாம் அறிகிறது என்கிறது கரையேறுகிறதுக்கு அவசியமாய் அறியவேண்டி இருக்கிறது என்று சொல்லக்கடவோமல்ல. அது ஏனென்றால், அவனவன் அங்கீகரிக்கத்தக்க சத்தியங்களை விசுவசியாததுக்கும், விசுவாசிக்கிறதுக்கும் கிரிகை வார்த்தையினாலே பண்ணின பாவ

1 இன்பநலங்களை (பா. பே.) 2 போலே (பா. பே.)

புண்ணியத்தின் நிமித்தமாக நீதி சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் அவனவனுக்கு நரக மோக்ஷத்தைக் கட்டளை இடுவாரொழிய இப்படிக்கொத்த விசேஷங்கள் மனுஷனானவன் அறிந்ததுக்கும் அறியாததுக்கும சம்பாவனையும் ஆக்கினையும் கட்டளையிடத் தக்கதில்லை என்று அங்கீகரிக்கத்தக்க [1]சத்தியமாகும். சில பேர்கள் இந்த விஷயத்திலே (கேட்கிற சந்தேகமாவது: 'பாவ புண்ணிய விஷயத்திலே) தயாபரரான கர்த்தரானவர் மனுஷனுக்குச் சுவாதந்திரிய பலத்தைக் கொடுத்தருளினாப்போலே, தீர்க்காயிசு இராசாங்கம் முதலான பாக்கியங்களை அனுபவிக்கிறதுக்கு அப்படிப்பட்ட சுவாதந்திரிய பெலத்தை அனுக்கிரகம் பண்ணாமலேன்?' என்று கேட்கிறார்கள்.

இதற்குப் பிரத்தியுத்தாரமாவது: (1) பாவ புண்ணிய விஷயத்திலே நம்மாலே சொல்லப்பட்ட சுவாதந்திரிய பலமானது மனுஷன் மோக்ஷக்கரை ஏறுகிறதுக்கு வேண்டியிருக்கிறதினால், தயாபரனான கர்த்தரானவர் பாவ புண்ணிய விஷயத்திலே சுவாதந்திரிய பலத்தைக் கொடுத்தார் என்று சொல்லக்கடவோம். தீர்க்காயுசு இராசாங்கம் முதலான பாக்கியங்களை அனுபவிக்கிறதுக்குச் சுவாதந்திரிய பெலமானது மனுஷன் கரையேறுகிறதுக்கும், லோகமானது சிரமமாய் நடக்கிறதுக்கும் விருத்தமாய் இருக்கக்கொள்ள, இப்படிப்பட்ட விஷயத்திலே மனுஷனுக்குக் கர்த்தரானவர் சுவாதந்திரிய பலத்தைக் கொடுக்கவில்லை என்று அங்கீகரிக்கக்கடவது. அதேதென்றால் இப்படிப்பட்ட அபத்த சந்தேகங்களைக் கேட்கிற பாவிகளான பேர்கள் பயமில்லாமல் திரளான பாவங்களைச் செய்கிறதுக்குத் தீர்க்காயிசு முதலான பாக்கியங்களை அபேட்சிக்கிறார்கள். இதிலே கர்த்தரானவர் சுவாதந்திரிய பெலத்தைக்கொடுத்தாரானால், பயமில்லாமல் மனுஷனவன் பாவம் செய்கிறதுக்குச் சகாயம் பண்ணினாப்போலே யாகும். (2) இதுதவிர. இப்படிக் கொத்த விஷயத்திலே கர்த்தரானர் மனுஷனுக்குச் சுவாதந்திரியத்தைக் கொடுத்தால் மனுஷனவன் கரையேறுகிறதுக்கு கர்த்தரானவர் விக்கினம் பண்ணினாரென்று சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல. (3) இதுதவிர இராசாங்க முதலான அயிஸ்வரியங்களை மனுஷர் என்னப்பட்ட யாவரும்

1. தாகும் (பா. பே.)

அபேக்ஷிக்கிறபோது, இந்த விஷயத்திலே மனுஷனுக்குச் சுவா தந்திரிய பெலமுண்டானால், உலோகத்தினுடைய நடக்கை என்னப்பட்ட யாவும் விபரீதமாய் நடக்குமென்று கேட்க வேணுமோ? அதேதென்றால், எல்லாரும் இராசாக்களாய் இருக்கிறதற்குச் சம்மதிப்பார்களொழியச், சேவகருமாய்க் கீழ்ச்சாதியுமாய் இருக்கிறதுக்குச் சம்மதியார்கள். ஆதலாலே, காலில்லாமல் தலையுள்ள சரீரமானது நன்றாய் இராததுபோலே, சரீரமாகிற லோகமானது காலாகிற கீழ்ச்சாதி யில்லாமற் பெரியவர்களாகிற தலை மாத்திரம் உள்ளதாயிருந்தால், அது செவ்வே நடவாது என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை

**6.8 சந்தேகம் II :** சிலர் வேறே சந்தேகத்தைக் கேட்கிறார்கள் : அதாவது, 'சர்வ நன்மை சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் பாவ புண்ணிய விஷயத்திலே சுவாதந்தரியத்தைக் கொடாமல் புண்ணியத்திலே மாத்திரம் சுவாதந்திரிய பெலத்தைக் கொடுத்தால் நல்ல கிரமமாகும். அதேதென்றால், கர்த்தனுக்கு மிகவும் [1]அரோசகமாய் இருக்கிற அருவருக்கத்தக்க பாவமானது லோகத்திலே [2]பலிக்கிறதுக்குக் கர்த்தரானவர் விக்கினம் பண்ணினாரென்று சொல்லத்தகும்'.— இதுவும் அபத்த சந்தேகமாய் இருக்கிறது (க்குத் தப்பாது). அதேதென்றால், வேலை பண்ணுகிறதற்கு முன்னே வேலைக்குக் கொடுக்கத்தக்க கூலியைக் கொடுக்க வேணுமென்று சொன்னோமானால், அது அக்கிரமம் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. அம்மருவாதியே, நன்மையிலே மாத்திரம் சுவாதந்திரியமுள்ள மனசானது மனுஷனானவன் பண்ணத்தக்க புண்ணியமாகிற வேலைக்குக் கொடுக்கத்தக்க கூலியாய் இருக்கச்செய்தே, அப்படிப்பட்ட மனசு அவதியாகிற மோக்ஷத்தை அடைந்த பேர்கள் பூமியிலே பண்ணின புண்ணியங்களுக்காகத் தயாபரனான கர்த்தர் அவர்களுக்குக் கொடுக்கத் தக்க பலனாகும். இது இப்படியிருக்கையிலே, பூமியிலே திரிகிற மனுஷருக்கு நன்மையினாலே மாத்திரம் சுவாதந்திரியம் உள்ள மனசைக் கர்த்தரானவர் அனுக்கிரகம் பண்ணவேணும் என்று சொல்லுகிறது என்கிறது வேலை செய்கிறதுக்கு முன்னே [3]தெக்ஷணையும் அவதியை அடைந்த பேர்களுக்குக் குடுக்கத் தக்க பலனையும், அவதிக்குப் போகிற வழியிலே நடக்கிற பேர்களுக்குக் கொடுக்க வேணுமென்று சொல்லுகிறதுக்கு ஒக்கும்.

1 வெறுப்பாய் 2 நிகழ்வதற்கு 3 கூலி

**6.9: சந்தேகம் III:** இதிலேயும் அப்பால் சிலர் கேட்கத்தக்க சந்தேகமாவது: "சகல நன்மை சுரூபியாய் இருக்கிற கர்த்தரானவர் சகலத்துக்கும் வல்லவராய் [1] இருக்கிறார் என்கிறதுக்குத் தப்பாது. அப்படிப்பட்டவர் சகல தர்மம் உண்டாகிறதுக்குத் தலையெழுத்து எழுதாதிருந்தாலும், நன்மையிலே மாத்திரம் சுவாதந்திரியமுள்ள மனசை மனுஷனுக்குக் கொடாமலிருந்தாலும், பாவம் லோகத்திலே வராமலிருக்கிறதுக்கு வேறே உபாயத்தைப் பண்ணித், தரும வழியிலே பிரயாசைப்பட்டவர்களுக்கும் படாதவர்களுக்கும் கடைசியாய் மோக்ஷத்தைக் கொடுக்கமாட்டாரோ? அதேதென்றால் இதுக்கான உபாயத்தை அறியாதிருந்தால் ஞானத்திலே அவருக்குக் குறையுண்டென்று சொன்னாற் போலாச்சுது. அல்லது அதுக்கான உபாயத்தை அறிந்து அதைப் பண்ணத்தக்கதாக மனசாய் இருக்கவில்லை என்று சொன்னோமானால் அவருடைய தயைக்கு முடிவு கற்பித்தாப்போலே ஆச்சுது. அதேதென்றால் இப்போதிருக்கிற தயையைக் காட்டிலும் இன்னம் அதிகமான தயை கர்த்தனிடத்திலே இருக்கலாமென்று அங்கீகரிக்கக் கடவது. இதன்றியே எல்லாருக்கும் மோக்ஷத்தைக் கடைசியாகக் கொடுக்கிறதுக்கான உபாயத்தை அறிந்து அவர் அத்தைப் பண்ணுகிறதுக்கு மனசுள்ளவருமாயிருந்து, அத்தை நிறைவேற்ற மாட்டாதவரானால், பலவீனராய் இருக்கிறாரென்று [2] சொல்லவேணும்" என்கிறார்கள். இந்தச் சந்தேகத்தைப் பார்க்கும்போது, லலாடலிபியை அங்கீகரித்தாலும் அங்கீகரியாவிட்டாலும் சர்வேசுரன் உண்டென்று அங்கீகரிக்கிற பேர்கள் எல்லாரும் இப்படிப்பட்ட சந்தேகத்துக்கு மறுத்துத்தரச் சொல்லக்கடவார்களொழிய, லலாடலியை அங்கீகாரம் பண்ணுகிறவர்கள் மாத்திரம் சொல்லக் கடவார்கள் என்று சொல்லக்கடவதல்ல. அவ்வண்ணமே, லோகத்திலே ஆதிகாரணமுமாய் லோகத்தை நடத்துகிறவருமாய் இருக்கிற கர்த்தரானவர் உண்டென்று சம்மதித்து, அவரிடத்திலே குறையில்லை என்றும், ஞாயமுள்ள கிரமத்தோடு அவர் லோகத்தை நடத்துகிறாரென்றும் அங்கீகரிக்கிற பேர்கள் எல்லாரும் முன் சொல்லப்பட்ட சந்தேகத்துக்குப் பிரத்தியுத்தாரத்தைச் சொல்லவேண்டியிருக்கையிலே, அந்தந்த

1 இருக்...வு: இருக்கையிலே (பா. பே.)
2 சந்தேகப்படத்தகாது (பா, பே.)

தப்பறை மதங்களை அனுசரிக்கிற பேர்கள் இப்படிப்பட்ட சந்தேக நிவாரணம் பண்ணுகிறதுக்கு ஆன பிரத்தியுத்தாரத்தை அறியாதிருக்கிறதினால், சர்வேசுரனுடைய வேதத்தை அனுசரிக்கிற பேர்களாய் இருக்கிற [2]நாம் கரையேறுகிறதுக்கு அறிய வேண்டின சத்தியங்களைக் கண்டுபிடிக்கிறபேர்களாய் இருக்கக்கொள்ள, இந்த விஷயத்திலே சந்தேகம் எனப்பட்ட யாவுக்கும் ஆன பிரத்தியுத்தாரங்களைச் சொல்லுகிறாப்போலே இந்த சந்தேகத்திலேயும் போம் வழி இன்னதென்று வருகிற பாடத்திலே வெளிப்படுத்தக்கடவோம்.

ஆறும் பாடம் முற்றும்

(கிரந்தம்) ஊஊம் *

---

## ஏழாம் பாடம்

**7.1 நன்மை மட்டும் செய்யக் கட்டுப்படுத்த முடியாது:** 1. லோகத்திலே இருக்கிறபேர்கள் எல்லாரையும் கடைசியாய்க் கரையேற்றுகிறதுக்குக் கர்த்தரானவர் லலாடலிபி முதலான உபாயங்களைக் கொண்டு மனுஷனானவனுக்குக் கட்டாயம் பண்ணி அக்கினி முதலான பூதியங்களையும் விருக்ஷமுதலான மிருகங்களையும் அங்கேயும் இங்கேயும் திரும்ப வொட்டாமல் அப்படிப்பட்ட பொருட்களானது ஒன்றை மாத்திரம் பண்ணுகிறதுக்குக் கற்பிக்கிறாப்போலே, மனுஷன் தனது புண்ணிய விருத்திகளைப் பண்ணுகிறதுக்குக் கற்பிக்க வேணுமென்று சொன்னோமானால், இது ஞாயத்துக்கும் கிரமத்துக்கும் ஏற்றிராதிருக்கக்கொள்ள, இப்படிப்பட்ட உபாயத்தினாலே கர்த்தரானவர் மனுஷருடைய பிரையாசம் இல்லாமல் மனுஷரைக் கரையேற்ற வேணுமென்று சொல்லத்தகாது. அதேதென்றால் மற்றப்பொருள்கள் தனது விருத்தி பண்ணுகிறதிலே அதுகளை நடத்துகிறாப்போலே மனுஷனை நடத்தினால், பண்ணப்படுகிற கட்டாயத்தினாலே மனுஷனுடைய விருத்திகளுக்கு

2. நாங்கள் (பா. ?ப.) * 220

மெய்யான புண்ணியத்தின் நாமதேயமானது [4]செல்லாதிருக்கக் கர்த்தர் பண்ணினதும் போராமல், இப்பூலோகத்தை நடத்து கிற ஞாயமுள்ள மேரையை விசாரிக்குமிடத்தில், ஞானமில்லாத பொருட்களுக்கும் ஞானமுள்ள மனுஷனுக்கும் உண்டான சுபா வத்துக்குத் தக்கது இரண்டையும் நடத்துகிறதிலே வித்தியாசம் பண்ணாமல், கர்த்தரானவர் ஞாயமுள்ள கிரமம் தப்பி லோகத்தை நடத்துகிறார் என்று அங்கீகரித்தாப்போலேயாகும். ஆனபடியினாலே, கர்த்தரானவர் இந்த உபாயத்தினாலே மனுஷ ரைக் கடைசியாய்க் கரையேற்றக் கடவாரல்ல என்று சொலலக் கடவோம். 2. இந்த உபாயந்தவிர நன்மையிலே மாத்திரம் சுவா தந்தரியமுள்ள மனசைப் பூமியிலே திரிகிற மனுஷருக்கு அநுக் கிரகம் பண்ணினால், இந்த [1]உபாயத்தினாலே பாவமென்னப் பட்ட யாவையும் கர்த்தரானவர் வில(க்)கி, எல்லாரும் பிரயா சைப்படாமல் எல்லாரையும் கரையேற்றலாம் என்று சொன் னோமானால், இந்த உபாயமானது ஞாயத்துக்கும் கிரமத்துக்கும் ஒவ்வாதென்று போன பாடத்திலே ஒப்பிவித்தோம். அப்படிப் பட்ட ஞாயங்களினாலே அது ஆகாத உபாயமென்று தள்ளப் பட்டாற்போலே யாச்சுது.

3. இவ்விரண்டு வகையுள்ள உபாயங்கள் தவிர, வேறே ஒரு உபாயத்தினாலே கர்த்தரானவர் பாவமென்னப்பட்ட யாவையும் வில(க்)கி எல்லோரும் பிரயாசைப்படாமல் மோக்ஷத்தை அடையப்பண்ணலாமென்று சொல்லிக் காட்டலாம். அதாவது, கர்த்தரானவர் தாம் எந்தக் [2]கிருபையைப் பண்ணுகிறதினால் அவனவன் பாவத்திலே விழாதிருக்கப் பிரயாசை யில்லாமல் தருமத்தை மாத்திரம் பண்ணுவானென்று தம்முடைய அளவில் லாத பரம ஞானத்தினாலே பார்த்துக் கொண்டிருக்கிறாரோ, அவனவனுக்கு அந்தப் [3]பரிபூரண கிருபையைப் பண்ணினால், இந்த உபாயத்தினாலே பாவம் என்னப்பட்ட யாவும் வில(க்)கப் பட்டு, எல்லாரும் பிரயாசைப்படாமற் கரையேறுவார்கள் என்கிறதற்குத் தப்பாது. இதுவும் அவருடைய முகிவில்லாத தயைக்கு ஏற்றிருக்கிறது என்று அங்கீகரிக்கத் தக்கதாகுமென்று

4 செல்லாதருக்கு (பா. பே.)

1 means 2 grace 3 efficacious grace

[1] காண்பிக்கிறது. ஆனால் கர்த்தரானவர் லோகத்தை நடத்துகிற ஞாயத்தையும் கிரமத்தையும் அறியாத பேர்கள் இதிலே அறியவேண்டின சத்தியத்தை அறியாமல் தாங்கள் இடறுகிறதுக்கு அத்தை இடம் பண்ணிக்கொண்டு, சிறிது அபத்த விசேஷங்களைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆனபடியினாலே, இந்த சந்தேகத்திலே போம் வழி இன்னதென்று வெளிப்படுத்தக்கடவோம்.

கர்த்தரானவர் தயாபரனாய் இருக்கக்கொள்ள, கரையேற்ற வேணுமென்று எல்லாரையும் உண்டாக்கினார் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. எல்லாரையும் கர்த்தரானவர் கரையேற்ற வேணுமென்று உண்டாக்கினபோதே, தயாபரராய் இருக்கக்கொள்ள, அவனவன் கரையேறுகிறதுக்குப் [2]போரும் என்னப்பட்ட கிருபையை அவனவனுக்குப் பண்ண வேணும் என்று திருவுளமானார். அந்தத் திருவுளப்படியே லோகத்திலே திரிகிற மனுஷர் என்னப்பட்ட யாவரும் பாவத்திலே விழாமல் தருமத்தைப் பண்ணிக் கரையேறத்தக்கதான நல்ல விசாரங்கள் முதலான உதவிகளை எல்லாருக்கும் பண்ணிக்கொண்டு வருகிறாரென்று லவலேச சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கக் கடவோம்.

கர்த்தரானவர் தயாபரனாயிருக்கக் கொள்ள, இந்தடைவிலே எல்லாரும் கரையேறுகிறதுக்கான கிருபையைப் பண்ணுகிற அப்படிப்பட்ட கிருபையை எல்லாரும் சட்டைபண்ணி, அவர் கற்பித்த நெறியைக் கடவாமல் தரும வழியிலே நடக்க வேணுமென்று முன் சொல்லப்பட்ட சுவாதந்திரியமான பெலத்தை எல்லாருக்கும் கொடுத்தருளினார். அது ஏன் என்றால், அப்படிப்பட்ட சுவாதந்திரியத்தைக் கொடாதிருந்தால், [3]மோக்ஷ சாதக தருமத்தினுடைய நாமதேயமானது லோகத்திலே உண்டாகமாட்டாது. இது இப்படியிருக்கையிலே, மோக்ஷத்தைப் பெறுகிற தருமத்தை மனுஷரானவர்கள் பண்ணுகிறதுக்குக் கர்த்தர் கொடுத்த சுவாதந்திரியத்தினால் சிலபேர்கள் கர்த்தருடைய கிருபையைச் சட்டைபண்ணாமல் பாவத்திலே விழுகிறார்களென்று பார்த்துக்கொண்டிருக்கிறவர் முடிவில்லாத நீதி சுரூபமாய் இருக்கக்கொள்ள, அப்படிப்

1 தோன்றுகிறது 2 Sufficient grace 3 Meritorious act.

பட்டவர்களுக்கு ஆக்கினையிடத் திருவுளமானார். இந்தடை வாகக் கர்த்தரானவர் லோகத்தை நடத்துகிறதிலே தமது திவ்விய கிருபையையும் நீதியையும் காண்பித்தார் என்கிறதுக்குத் தப்பாது. அது ஏனென்றால், கரையேறுகிறதுக்கு அவனவனுக்குப் போதும் என்னப்பட்ட உதவிகளைப் பண்ணுகிறதிலே தமது திவ்விய தயையைக் காட்டினவர், அப்படிப்பட்ட உதவிகளைத் தனது சுவாதந்திரிய பெலத்தினாலே சட்டை பண்ணாத பாவிகளுக்குக் கர்த்தரானவர் ஆக்கினை இடுகிறதில் தமது அளவில்லாத நீதியைக் காட்டினார் என்கிறதுக்குத் தப்பாது. கர்த்தரானவர் இந்த ஞாயமுள்ள மேரையாக லோகத்தை நடத்திக் கொண்டு வருகையிலே, சகல நன்மை சுரூபமாயிருக்கிற ஆண்டவன் பேரிலே ஓரற்பக் குறை என்கிலும் ஆரோபிக்கிறதுக்கு அவகாசமுமில்லை. ஞாயத்தையும் விசாரிக்குமிடத்தில், கர்த்தர் பேரிலே முறைப்பாடு சொல்லுகிறதுக்கு நரகத்திலே விழுந்து நரக வேதனையை அனுபவிக்கிற பாவிகள் முதலாய் இடங் காணமாட்டார்கள். அது ஏனென்றால், பாவிகளான பேர்கள் கர்த்தர் கையிலே வாங்கின உதவிகளைக்கொண்டு கரையேறுகிறதுக்கு வல்லவர்களாயிருந்து ஒரு கட்டாயமும் பிரேரகனுமில்லாமல் தாங்களே வேணுமென்று பாவம் பண்ணி நரகத்திலே விழுந்தபோதே, தங்களைத் தாங்கள்தானே வெறுக்கவும் நொந்திருக்கவும் கணக்கு உண்டாயிருக்கிறதொழிய வேறொருத்தனை வெறுக்கிறதுக்கும் நொந்திருக்கிறதுக்கும் அவகாசம் காணமாட்டாதென்று சொல்லக்கடவோம்.

4. இது இப்படி இருக்கையிலே, 'நரகத்திலே விழுந்த பாவிகள் முதலாய்ப் பாவம் பண்ணுகைபடிக்கும் கரையேறுகிறதுக்கும் ஆன உதவிகளைக் கர்த்தரானவர் தமது முகிவில்லாத ஞானத்தினாலே அறிந்திருக்கிறாரே, அப்படிப்பட்ட உதவிகளை எல்லாருக்கும் கொடுத்தருளி, எல்லாரையும் கரையேற்ற ஒண்ணாதோ?' என்று சில மூடராயிருக்கிற பேர்கள் கேட்கிறார்கள். இதில் இடறுகிறதுக்கு இடமாயிராமல், கர்த்தரானவர் நடத்துகிற தப்பில்லாத ஞாயமுள்ள மேரையை அறியாத பேர்கள் இதிலே தத்தளியாதபடிக்கு ஆன பிரத்தியுத்தாரத்தை வெளிப்படுத்தக்கடவோம்.

லோகத்துக்கு எல்லாத்துக்கும் நன்மையுண்டாக நடத்து கிற கர்த்தரானவர், மனுஷனுக்கு உதவி செய்கிறதிலே, அந்த மூடராயிருக்கிற பேர்கள் சொன்ன அடைவிலே காரியத்தை நடத்தினால், அநேக [1]அனர்த்தங்கள் லோகத்திலே வரும் என் கிறதுக்குத் [2]தப்பாது. அதுக்குள்ளே முதலாம் அனர்த்த மாவது: மனுஷனுடைய சுபாவத்துக்குச் சரியாக ஏற்றிருக்கிற நன்மையையும் மனுஷனுடைய சுபாவத்துக்கு மேலாயிருக்கிற பாக்கியமாகிற மோக்ஷத்தையும் விசாரிக்குமிடத்தில், அப்படிப் பட்ட நன்மை யிரண்டுக்கும் வலு வித்தியாசம் உண்டென்று சொல்லக்கடவோம். ஆனபடியினாலே ஆன கிரமத்தைப் பார்க்கு மிடத்தில் உண்டாக்கப்படலான சுபாவத்துக்குச் சரியாக ஏற்றி ருக்கிற நன்மையானது எல்லாருக்கும் சாதாரணமாயிருக்க வேணும். ஆனபடியினாலே, கர்த்தரானவர் எல்லாருக்கும் அத் தைக் கொடுக்கிறது கிரமமாகும். அவ்வண்ணமே, தலை காலுண் டாய்இருக்கிறதுக்கும் வார்த்தை சொல்லுகிறதும் இத்தொகைப் பட்ட மனுஷ சுபாவத்துக்கு வேண்டியிருக்கிற நன்மையானதை அவனவன் பிரயாசப்படாமல் அடைகிறது கிரமமாகும். இதெல் வாம் வெளியாகும்படிக்கு அடைவிலே நன்மை என்னப்பட்ட யாவையும் [3]விவேசனம் பண்ணி வெளிப்படுத்தக்கடவோம்.

**7.2: சுபாவத்துக்கு இன்றியமையாத நன்மைகள்:** உண்டாக்கப்பட்ட பொருளினுடைய சுபாவ சுரூபத்தை விசாரிக்குமிடத்தில், சில நன்மையானதுகள் பொருளானதுக்கு வேண்டியிருக்கும். அவ்வண்ணமே பொருளானதுக்கு அப்படிப் பட்ட நன்மையுண்டானால் பொருளானதுக்குத் தனது சுபாவ சுரூபத்தின் மேரையிலே பொருளுக்குக் குறையுண்டாச்சுது என்று சொல்லவேணும். இந்த நன்மையானது சுபாவமாகப் பொருளுக்கு ஏற்றிருக்கிற சரியான நன்மையென்று சொல்லப் படும். அப்படியே தேகத்தின் அவையவங்களும் அதுகளுக் கான சேட்டைகளும் அந்தந்தச் சீவனானது தனது சுபாவத்துக் குச் சரியான விருத்திகளைப் பண்ணுகிறதென்கிறதும், இத் தொகைப்பட்ட நன்மையின் அந்தஸ்திலே அடங்கியிருக்கிறது என்று சொல்லக்கடவோம். அவ்வண்ணமே, [4]சரண், சிரசு

1 கேடுகள் 2 சந்தேகமில்லை (பா. பே)
3 பகுத்தறிந்து, வகைப்படுத்தி 4 கால், தலை

முதலான அவையவங்களும், பஞ்சேந்திரிய சேட்டைகளும், நடக்கை வார்த்தைகளும், வளர்த்தி முதலான ஆரோக்கிய சுகங்களும், [3]விஷய விசேஷணத்தைக் கூட்டுகிற [4]ரீதியாக ஆனதையும் ஆகாரதையும் அறிகிறது என்கிறதும், ஒன்றைப் பார்த்து வேறே யாதொன்று [5]ஊகிக்கிறது என்கிறதும் கட்டாயமில்லாமல் அத்தை இத்தை வேணும் வேண்டாம் என்கிற பெலமானதும், பூலோகத்திலே திரிகிற மனுஷனுக்குச் சுபாவமாக ஏற்றிருக்கிற சரியான நன்மை என்று சொல்லப் படும். ஆனபடியினாலே இத்தொகைப்பட்ட நன்மைகள் மனுஷனுக்கு உண்டானால், மனுஷனுடைய சுபாவ சுரூபத்தின் மேரையிலே மனுஷனுக்குக் குறையில்லை என்று சொல்லக் கடவோம், அல்லது இத்தொகைப்பட்ட நன்மைக்குள்ளே யாதொன்று மனுஷனுக்கு இல்லாவிட்டால், மனுஷனுக்குச் சுபாவமாகச் சரியான நன்மையிலே குறையுண்டாச்சுது என்று சொல்லவேண்டியிருக்கும்.

இத்தொகைப்பட்ட நன்மைகளுடைய அடைவையும் கர்த்தர் லோகத்தை நடத்துகிற மேரையையும் பார்க்குமிடத்தில், வியாதி முதலான விக்கினம் இல்லாவிட்டால், தயாபரனான கர்த்தரானவர் மனுஷரென்னப்பட்ட யாவர்க்கும் அந்த நன்மைகளைக் கொடுத்தருளுகிறதினாலே இத்தொகைப்பட்ட நன்மைகளை அவனவன் பிரயாசப்படாமல் அடைகிறது கிரமமாகும். அப்படியே சரண் சிரசு முதலான அவையவங்களைக் கொண்டிருந்து அதினுடைய சேட்டைகள் முதலான பஞ்சேந்திரியங்களுடைய கிரிகைகளைப் பண்ணுகிறதும், வளர்ந்து பக்ஷணத்தினுடைய சீரணத்தினாலே சரீரத்தினுடைய சொஸ்தான போஷணமும், [3]விஷய விசேஷணத்தையும் கூட்டி ஆனதையும் ஆகாரதையும் அறிகிறதும், இத்தொகைப்பட்ட மற்றுமுள்ள நன்மைகளெல்லாம் மனுஷ சுபாவத்துக்கு வேண்டியிருக்கிற நன்மையாய் இருக்கக்கொள்ள, அதுகள் மனுஷ சுபாவ சுரூபத்துக்கு ஏற்றிருக்கிற சரியான நன்மையென்று சொல்லப்படும். ஆனபடியினாலே அப்படிப்பட்ட நன்மைகளுக்குள்ளே யாதொன்று மனுஷனுக்கு இல்லாவிட்டால், தனது சுபாவ

3. விசேஷிய விசேஷணம் (பா. பே.) 4. முறை 5. Inference

சுரூபத்திலே அவனுக்குக் குறையுண்டாச்சுதென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட நன்மைகளெல்லாம் மனுஷரென்னப்பட்ட யாவரும் பிரயாசப்படாமல் அதுகளை அடைந்து கொண்டிருக்கிறார்களொழிய மற்றபடியல்ல. ஆதலால் முன் சொன்னாப்போலே இத்தொகைப்பட்ட நன்மைகளைத் தயாபரனான கர்த்தரானவர் எல்லாருக்கும் கொடுத்தருளி வருகிறது ஞாயமுள்ள கிரமமாகும்.

**7.3 சுபாவத்துக்கு அலங்காரமான நன்மைகள்:** இத்தொகைப்பட்ட நன்மைகள் தவிர வேறேயொருவகையுள்ள நன்மையானது மனுஷனுக்கு உண்டென்று சொல்ல வேணும். அது மனுஷ சுபாவத்துக்கு வேண்டியிருக்கிற நன்மையாயிராமல் அதில்லாவிட்டால் மனுஷனுக்குத் தனது சுபாவ சுரூபத்திலே குறையுண்டென்று சொல்லக் கூடாதிருக்கையிலே, அத்தொகைப்பட்ட நன்மைகள் மனுஷனுக்கு உண்டாயிருந்தால் அதுகளினாலே மனுஷனானவன் அலங்கரிக்கப்படுகிறானென்று சொல்லவேணும். ஆனபடியினாலே அது மனுஷனுடைய சுபாவ சுரூபத்தின் அந்தஸ்தைக் கடவாமற், சுபாவத்துக்கு ஏற்றிருக்கிற சரியான நன்மையென்று சொல்லக்கடவோம். அவ்வண்ணமே, [1] அக்ஷர அப்பியாசம் முதலான பற்பல சாஸ்திரங்களுடைய [2] பரிசிதியும் நானாவித வித்தைகளும் மனுஷ சுபாவத்துக்கு வேண்டியிருக்கிற நன்மையாயிராமல், அதுகளுடைய [3] இல்லாததனத்தின் நிமித்தமாகச் சுபாவ சுரூபத்திலே மனுஷனுக்குக் குறையாகாதிருந்தாலும், அப்படிக்கொத்த நன்மைகள் மனுஷனுக்கு உண்டானால் அதுகளாலே மனுஷனானவன் [6] அலங்கரிக்கப்பட்டு மனுஷருக்குள்ளே அவன் [4] பூச்சியனாய் இருக்கிறானென்று பார்த்துக்கொண்டு வருகிறோம். இத்தொகைப்பட்ட நன்மைகள் மனுஷ சுபாவத்துக்கு அவசியமாய் வேண்டியிராததுகளாய் இருக்கக் கொள்ள மனுஷ சுபாவத்துக்கு ஆதிகாரணமாய் இருக்கிற கர்த்தன் மனுஷ சுபாவத்தை மாத்திரம் பார்த்து அதுகளைக் கொடாமல், அவனவன் படுகிற பிரயாசை [5] முகனையாக நீதியுள்ள கர்த்தரானவர் கொடுத்து வருகிறாரொழிய மற்றப்படியல்ல. மனுஷர் என்னப்பட்ட

1 எழுத்துப் பயிற்சி 2 தேர்ச்சி (பரிச்சதி, பரிசத்தி — பா. பே.)
3 இல்லாமை 4 போற்றற் குரியவன் 5 காரணமாக
6 ad melius esse, non ad esse.

யாவரும் வித்தியா விஷயத்திலே பிரயாசப்பட்டு அத்தை அடைந்தார்கள் என்கிறதினாலே அப்படிப்பட்ட நன்மைகளை நீதியுள்ள கர்த்தரானவர் எல்லாருக்குங் கொடாமலிருக்கிறது என்கிறது ஞாயமுள்ள கிரமமாகும். ஆனபடியினாலே சில பேர்களுக்குக் கர்த்தரானவர் இத்தொகைப்பட்ட நன்மைகளை கொடுத்துச் சில பேர்களுக்குக் கொடுக்கவில்லை என்கிறதினாலே முறைப்பாடு சொல்லுகிறதுக்கு அவகாசம் காணமாட்டாது. இதன்றியே, இத்தொகைப்பட்ட நன்மைகள் அடைவதற்குப் பிரயாசப்பட அவனவனுக்குப் பெலமுண்டாயிருக்கையிலே, வித்தியா விஷயத்திலே பிரயாசப்பட்டவனுக்கும் படாதவனுக்கும் கர்த்தரானவர், தடாபரனாய் இருக்கக்கொள்ள, வித்தை முதலான நன்மைகளைக் கொடுக்க வேணுமென்று யாதொருத்தன் சொன்னால் அவனை மதிகெட்டவனென்று சொல்ல வேணுமொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால் இத்தொகைப்பட்ட நன்மைகளைப் பிரயாசைப் பட்டவர்களுக்கு மாத்திரம் கர்த்தரானவர் கொடுத்து வருகிறது கிரமமாய் இருக்கக்கொள்ள, பிரயாசப்படாத மனுஷரென்னப்பட்ட யாவர்க்கும் நீதியுள்ள கர்த்தர் கொடுக்கிறது அக்கிரமமென்று சொல்லப்படும். ஆனபடியினாலே, மனுஷரென்னப்பட்ட யாவர்க்கும் வித்தை முதலான நன்மைகளைத் தயாபரனான கர்த்தரானவர் கொடுக்க வேணுமென்று யாதாமொருத்தன் சொன்னால், முடிவில்லாத நீதி சுரூபமாயிருக்கிறவர் கிரமம் தப்பி, லோகத்தை நடத்த வேணுமென்று சொல்லுகிறதுக்கு ஒக்கும்.

**மூன்றாம்வகை நன்மை: இயற்கைக்கு மேற்பட்ட மோக்ஷம்.** இற்றைவரைக்கும் சொல்லப்பட்ட இந்த இரண்டு வகையுள்ள நன்மை தவிர, ஞானமுள்ள மனுஷனுக்கு வேறே ஒரு வகையுள்ள நன்மையுண்டு என்று சொல்லக்கடவோம். அதாவது, முடிவில்லாத சகல நன்மை சுரூபமாயிருக்கிற கர்த்தனை ஞானமுடைத்தான சீவனானது [1]பிரத்தியக்ஷமாய்ப் பார்த்து, அப்படிப்பட்ட பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலே சீவனானது சொல்லப்படாத ஆனந்தத்தையும் திருத்தி கொடுக்கிற சந்தோஷத்தையும் அடையும் என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால் சகல நன்மை சுரூபமாயிருக்கிற சருவேசுரனானவர்

1 கண்கூடாய்

தாம் தம்மை முகிவில்லாத தெளிவோடு பிரத்தியக்ஷமாகப் பார்த்துக்கொண்டு இருக்கிறதினாலே முகிவில்லாத அனந்த சுரூபமாயிருக்கிறாரென்று சொல்லப்படுமாப்போலே, அப்படிப்பட்ட முகிவில்லாத சகல நன்மை சுரூபமாயிருக்கிற கர்த்தனை சீவனானது பிரத்தியக்ஷமாய்ப் பார்த்தால் அப்படிப்பட்ட பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலே சீவனானது அனுபவிக்கிற குறையற்ற ஆனந்தத்தையும் திருத்தி கொடுக்கிற சந்தோஷத்தையும் [2] தேவ பிரகாசத்தினாலே அத்தைச் சீவனானது அனுபவிக்கும் என்பதில் சந்தேகப்படத்தகாது. இந்த நன்மையாகிற மோக்ஷமானது மனுஷனுக்குத் தேவகிருபையினாலே வரலான பாக்கியமாயிருந்தாலும், மனுஷனுடைய சுபாவத்தின் அந்தஸ்தைக் கடந்து மனுஷ சுபாவத்துக்கு மேலான பாக்கியமென்று சொல்லப்படும். ஆனபடியினாலே மனுஷ சுபாவத்தினுடைய அந்தஸ்திலே அடங்கியிருக்கிற நன்மைகளுக்குள் ஒரு நன்மையாய் இராமல் அப்படிப்பட்ட நன்மையினாலே மனுஷனானவன் மிகவும் அலங்கரிக்கப்பட்டாலும், மோக்ஷமென்கிற பாக்கியமும் மனுஷ சுபாவத்துக்கு ஏற்றிருக்கிற சரியான நன்மைகளுக்குள்ளே ஒரு நன்மையாய் இருக்கிறதென்று சொல்லப்படாமல் உண்டாக்கப்பட்ட ஞானமுடைத்தான சுபாவத்துக்கு மிகவும் மேலான நன்மையென்றும் உத்தம பாக்கியம் என்றும் சொல்லக்கூடு மொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே ஞானமுடைத்தான பொருட்களுக்கு அது வரலான நன்மையாயிருந்தாலும் தேவகிருபையினாலே மாத்திரம் ஞானமுடைத்தான பொருளானது அப்படிப்பட்ட பாக்கியத்தை அடையலாமென்று சொல்லத் தகுமொழிய உண்டாக்கப்பட்ட ஞானமுடைத்தான பொருளென்னப்பட்ட யாவும் தனது சுபாவ பெலத்தினாலே மாத்திரம் பிரயாசப்பட்டு அத்தை அடையலாமென்று மகா பாவமில்லாமல் சொல்லவுங் கருதவும் கூடாது.

இப்படியிருக்கையிலே, உண்டாக்கப்படலான சுபாவத்துக்கு மேலானதாயிருக்கிற இப்படிப்பட்ட பாக்கியத்தை அடையலாமென்று மனுஷரெல்லாரையுங் கர்த்தரானவர் உண்டாக்கினபோதே, மனுஷ சுபாவத்தைப் பாராமல், தனது முகிவில்லாத கிருபையைப் பார்த்து மனுஷரெல்லாரும் இப்

2 lumen gloriae

படிப்பட்ட பாக்கியத்தை அடைகிறதுக்குப் பிரயாசப்படத் தக்க சத்தியாகிற சுவாதந்திரியத்தையும் தர்ம விசாரங்கள் முதலான எண்ணப்படாத ஒத்தாசைகளையும் மனுஷரென்னப் பட்ட யாவர்க்கும் தயாபரனான சருவேசுரன் கொடுத்தருளி வருகிறார் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை.

இந்தவகையாகக் கர்த்தரானவர் மனுஷனுக்குக் கிருபை பண்ணிக்கொண்டு வருகையிலே, தரும விஷயத்திலே பிரயாசப் பட்டவனுக்கு மாத்திரம் மோக்ஷமாகிற மேலான பாக்கியத்தை நீதியுள்ள கர்த்தரானவர் கொடுத்தருளுகிறது கிரமமாயிருக் கிறதொழியப் பிரயாசப்பட்டவர்களுக்கும் படாதவர்களுக்கும் மோக்ஷமென்கிற பாக்கியத்தை நீதி சுரூபமாயிருக்கிற கர்த்த ரானவர் கொடுத்தருளுகிறது லோகத்திலே நடந்து வருகிற திவ் விய கிரமமுள்ள மேரைக்கு விருத்தமென்று சொல்லத்தகும். ஆனபடியினாலே, எல்லாருக்கும் மோக்ஷத்தைக் கொடாமல் இருக்கிறதினால் முறைப்பாடு சொல்லுகிறதுக்கு அவகாசம் உண்டாயிருக்க மாட்டாது. அது ஏனென்றால், அக்ஷராப் பியாசம் முதலான சகல சாஸ்திரங்களுடைய பரிசிதியையும். லௌகீக வித்தைகளையும், மோக்ஷ பாக்கியத்தையும் பத்தும் பத்தாய் விசாரிக்குமிடத்தில் இரண்டுக்கும் சொல்லப்படாத வித்தியாசம் உண்டென்று எண்ணக்கடவோம். அது ஏனென் றால் கிளிஞ்சி முதலான உடைந்த ஓட்டுக்கும் விலைமதியாத மாணிக்கத்துக்கும் உண்டாயிருக்கிற வித்தியாசத்தைப் பார்க் கிலும் சகல வித்தையினாலே ஞான பாக்கியத்துக்கும் [1]பராபர வஸ்து விஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலே வருகிற [2]பரம ஞான செல்வத்துக்கும் எண்ணப்படாத தூரம் உண்டாயிருக்கக் கொள்ள, சகல வித்தையினாலே மனுஷனுக்கு வருகிற [3]ரஜஸ் உள்ள ஞான அலங்காரமானது கிளிஞ்சி சிப்பியின் ஒளிவுக்குச் சமானமென்று சொல்லத்தகும்; தேவ விஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலே வருகிற பரம ஞானமாகிற பிரகாசமானதோ என்றால், அது மத்தியானத்திலே இருக்கிற சூரியனுடைய பிரகாசத்தை [4]அதிசயித்திருக்கிற திவ்வியமான பரஞ்சோதி என்று சொல்லக்கடவது. இது இப்படியிருக்கையிலே, காசு

1 கடவுளைக் கண்கூடாய்க் காணுதல் 2 Supreme bliss
3 ஒளியுள்ள 4 கடந்திருக்கிற

பெருத சகல வித்தை ஞான அலங்காரத்தை அடையத்தக்க பிரயாசப்படத்தக்க பெலத்தை அநேகம் பேர்களுக்குக் கர்த்தரானவர் கொடுத்திருக்கையிலே பிரயாசப்படுகிற பேர்களுக்கு மாத்திரம் வித்தை அலங்காரத்தைக் கர்த்தரானவர் வரப் பண்ணுகிறது என்கிறதும், பிரயாசப்படாத பேர்களுக்கு அப்படிப்பட்ட ஞான அலங்காரத்தைக் கொடாமலிருக்கிறதும் ஞாயமுள்ள கிரமமாய் இருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. அத்தன்மைபோலே, மோக்ஷப்பிரகாசத்தை அடையத்தக்கதாக பிரயாசப்படுகிறதுக்கு ஆன பெலத்தை தயாபரனுன கர்த்தரானவர் மனுஷர் என்னப்பட்ட யாவருக்கும் அனுக்கிரகம் பண்ணினபோதே, அப்படிப்பட்ட மோக்ஷத்தைப் பெற்று அடைகிறதுக்குத் தர்ம வழியிலே நடந்து பிரயாசப்பட்ட பேர்களுக்கு நீதிபரனுன கர்த்தரானவர் குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷத்தை அருளுகிறது என்கிறது ஞாயமுள்ள கிரமமாய் இருக்கிறதென்று ஓர் அற்ப சந்தேகமும் படாமல் அங்கீகரிக்க வேணுமொழியப், புண்ணிய வழியின் [1]கமனத்திலே பிரயாசப் படாத பேர்களுக்கு மோக்ஷ இராச்சியத்தைக் கர்த்தரானவர் கொடுக்க வேணுமென்று சொல்லுகிறது அக்கிரம மென்று சொல்லக்கடவோம்.

ஆனபடியினுலே, புண்ணிய வழியிலே நடந்து பிரயாசப் பட்ட பேர்களுக்கும் படாத பேர்கள் எல்லாருக்கும் நீதியுள்ள கர்த்தரானவர் மோக்ஷ பாக்கியத்தைக் கொடாமல் இருக்கிறது அநியாயமாய் இருக்கிறதென்று சொல்லக்கூடாது. மோக்ஷத்தைப் பெற்று அடைகிறதுக்குப் பிரயாசப்பட்ட புண்ணியாத்துமாக்களுக்கு மாத்திரம் மோக்ஷமாகிற குறையற்ற பாக்கியத்தைக் கொடுத்தருளித், தனது இச்சையின்படியே திவ்விய கிருபையைத் தள்ளிப் பாவ வழியிலே நடந்து, புண்ணிய வழியின் கெமனத்திலே பிரயாசப்படாத பாவிகளுக்கு நீதி சுரூபமான கர்த்தரானவர் மோக்ஷமாகிற குறையற்ற பாக்கியத்தைக் கொடாமல் இருக்கிறதினுலே முறைப்பாடு சொல்லுகிறதுக்குச் சற்றுகிலும் அவர் பேரிலே அவகாசம் காண மாட்டாது.

அது எப்படி என்றுல், யுத்தம் பண்ணிச் சத்துருக்களைச் செயிக்க வேணுமென்று இராசாவினுலே அனுப்பப்பட்ட

1 நடக்கை

6986

சேவகருக்குள்ளே செயம் பண்ணின பேர்கள் மாத்திரம் இராசாவினுலே [2]சம்பாவனை தங்களுக்கு வருமென்று ஞாயத்தின்படியே [3]பார்த்துக் கொண்டிருப்பார்கள். பின்வாங்கி [4]அபசெயமுள்ள பேர்களோ வென்றுல் அவர்கள் தங்களுக்கு ஆக்கினை இராசாவினுலே வருமென்று ஞாயத்தின்படியே பார்த்துக்கொண்டிருக்கக் கடவார்களொழிய மற்றப்படியல்ல.

அம்மருவாதியே, துர்க்குண முதலான பாவங்களைக் கர்த்தன் கட்டளைப்படியே செயித்துக்கொண்டு வருகிற புண்ணியாத்துமாக்களாய் இருக்கிறபேர்கள் தங்களுக்குத் தயாபரனுய் இருக்கிற கர்த்தர் அப்படிப்பட்ட செயத்துக்கான சம்பாவனையாகிற மோக்ஷத்தை அனுக்கிரகம் பண்ணுவாரென்று ஞாயத்தின்படியே பார்த்துக் கொண்டிருக்க வேணுமொழியத், துர்க்குணங்கள் முதலான பாவங்களினுலே தோர்வைபட்ட பாவிகள் நீதி சுரூபமான கர்த்தரானவர் தங்களுக்கு ஆக்கினையிடப் போகிருரென்று பார்த்துக்கொண்டிருக்கிறது ஞாயமாயிருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. ஆகலாலே, பாவிகளான பேர்கள் தங்களை நரகத்திலே கர்த்தரானவர் தள்ளி, ஒழியாத அக்கினி வேதனையைத் தாங்கள் அனுபவிக்கிறதுக்கு நீதி சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் கட்டளையிடப் போகிருர் என்கிறதினுலே, முறைப்பாடு சொல்ல அவர்களுக்குமுதலாய்ச் சற்றுனுலும் அவகாசம் உண்டாயிராது என்று சொல்லக்கடவோம்.

ஆனபடியினுலே, மனுஷரென்னப்பட்ட யாவர்க்கும் கர்த்தரானவர் கடைசிபாய் மோக்ஷங் கொடுப்பாரென்று சில துர்மதங்களிலே சொல்லியிருக்கிறதே, அப்படிப்பட்ட [5]பக்ஷமானது ஞாயமுள்ள கிரமத்துக்கு விருத்தமாயிருக்கொள்ள, அது தப்பறையா யிருக்கிறதென்று அங்கீகரிக்கக்கடவோம். இவ்விடத்திலே மிகவும் அறியவேண்டின ஒரு விசேஷமுண்டு. அத்தை வருகிற பாடத்திலே வெளிப்படுத்தக்கடவோம்.

ஏழாம் பாடம் முற்றும்

(கிரந்தம்) உஎஅம *

2 பரிசில் 3 எதிர்பார்த்து, expect 4 தோல்வி
5 கொள்கை * 230

## எட்டாம் பாடம்

**8.1 கடவுளின் முக்கால அறிவும் சுதந்தரமும்: முதல் கேள்வி:** நீதியுள்ள கர்த்தரானவர் மோக்ஷத்தைக் கொடுக்கிறதுக்குப் போரும் என்னப்பட்ட பெலத்தை மனுஷரென்னப்பட்ட யாவர்க்கும் கொடுக்கிறது என்கிறது அவருடைய முடிவில்லாத தயைக்கும் நீதிக்கும் ஏற்றிருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. ஆனால் எல்லாரும் மோக்ஷத்தைப் பெறுகிறதுக்கு எல்லாருக்கும் போரும் என்னப்பட்ட பெலத்தை தயாபரனை கர்த்தன் கொடுத்தபோதே, ஒருவன் தனது சுவாதந்திரியத்தினாலே கர்த்தன் கொடுத்த தர்ம விசாரங்கள் முதலான உதவிகளைக்கொண்டு கரையேறுவான் என்றும், வேறொருத்தன் கர்த்தன் பண்ணின தயவைச் சட்டைபண்ணால் தனது சுவாதந்திரியத்தினாலே பாவம் பண்ணி நரகத்திலே விழுவான் என்றும் அளவில்லாத ஞான சுருபமாயிருக்கிற சர்வேசுரனவர் [1]கேவலம் பார்த்துக்கொண்டிருக்கையிலே, வேறே பிரகாரமாய்ப் பலிக்கமாட்டாது. அவ்வண்ணமே, வர்த்தமானமானது வரும் என்று எந்தடவிலே கர்த்தனாலே காணப்பட்டதோ, அந்தடவிலே வர்த்தமானம் பலிக்குமொழிய கர்த்தன் காணுகிற வகைக்கு விருத்தமாய்ப் பலிக்கமாட்டாது. ஆதலாலே [2]திவ்விய தெரிசனமனது அந்தந்தக் காரியம் வருகிறதுக்குக் கட்டாயம் பண்ணுகிற காரணமாயிருக்கிறதென்று காண்பித்தாப்போலே ஆச்சுது.

**2 சொல்லிய பேதகத்தின் மறுப்பு:** இதுக்குப் பிரத்தியுத்தாரமாவது: திவ்விய தெரிசனமானது லோகத்திலே பாவ புண்ணியம் வருகிறதுக்குக் கட்டாயம் பண்ணுகிற காரணமாய் இருக்கிறதென்று சொல்லக்கூடாது. அதேதென்றால் அவனவன் பாவ புண்ணியம் பண்ணுவான் என்கிறதினாலே அவனவன் பாவ புண்ணியம் பண்ணுவானென்று முடிவில்லாத ஞானசொருபமாயிருக்கிற கர்த்தரானவர் காண்கிறரொழிய, ஆண்டவர் வருங்காலத்திலே வரத்தக்க பாவ புண்ணியத்தைக் காண்கிறதினாலே லோகத்திலே திரிகிற பாவிகளும் புண்ணியவான்களுங் கட்டாயமாகப் பாவ புண்ணியத்தைப் பண்ணிக்

1. ஒழிய, Merely  2. Scientia visionis

கொண்டு வருவார்களென்று சொல்லத்தகாது. அதேதென்றால், மனுஷனானவன் தனது சுவேச்சையுள்ள மனசினாலே வருங்காலத்திலே பண்ணும் விருத்திகளுடைய திவ்விய தெரிசனமானது கர்த்தனுக்கு உண்டாயிருந்தாலும், அப்படிப்பட்ட தெரிசனமானது அவராலே மனுஷனுக்குக் கொடுக்கப்பட்ட சுவாதந்திரியமான பெலத்தைச் சற்றாகிலும் கெடுக்கவில்லை என்கிறதுக்குத் தப்பாது. ஆதலாலே [3]பவிஷ்ய காலத்திலே மனுஷன் பண்ணத்தக்க பாவபுண்ணியத்தைத் தனது சுவாதந்திரியத்தினாலே பண்ணுவான் என்று கர்த்தரானவர் தமது முகிவில்லாத ஞானத்தினாலே பார்த்துக்கொண்டு இருக்கிறாரொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே மனுஷனுடைய சுவாதந்திரியத்தினாலே கட்டாயமில்லாமற் பண்ணப்படுகிற பாவ புண்ணியமானது மனுஷனாலே அது பண்ணப்படாமல் இருக்கலாம் என்கிறதினாலே, அப்படிப்பட்ட பாவ புண்ணியமானது லோகத்திலே வராமல் இருக்கலாமென்று கர்த்தன்கூடப் பார்த்துக்கொண்டு இருக்கிறாரொழிய மற்றப்படியல்ல. இந்த வர்த்தமானமெல்லாம் லோகத்திலே நடக்கிற ஒரு விசேஷத்தினாலே வெளியாகும். அதேதென்றால், நீ ஒருத்தனை அடிக்கிறதை யாகிலும் நீ ஒருத்தனுக்குத் தானம் கொடுக்கிறதை என்கிலும் நான் பார்த்துக்கொண்டிருக்கிற தறுவாயிலே நடக்கத்தக்க எதார்த்த வசனமானது : நீ பாவ புண்ணியம் பண்ணுகிறதினாலே பாவ புண்ணியத்தை நீ பண்ணுகிறாயென்று நான் அவசியமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லக்கூடுமொழிய, நான் உன்னுடைய பாவ புண்ணியத்தைப் பார்த்துக் கொண்டு இருக்கிறதினாலே நீ பாவ புண்ணியத்தைப் பண்ணுகிறாயென்று மதிகெட்டவனானாலும் சொல்ல மாட்டுவானோ? அத்தன்மை போலே, நீ பாவ புண்ணியத்தைப் பண்ணுவாய் என்கிறதினாலே உன்னுடைய பாவ புண்ணியத்தை முடிவில்லாத ஞானமுள்ள கர்த்தரானவர் பார்த்துக் கொண்டிருக்கிறாரென்று சொல்லவேணுமொழிய இனிமேல் நீ பண்ணத்தக்கப் பாவ புண்ணிய விஷயக திவ்விய தெரிசனமானது கர்த்தரிடத்திலே கேவலம் [1]இருக்கிறதினால், நீ பாவ புண்ணியத்தைக் கட்டாயமாய்ப் பண்ணுவாயென்று சொல்லவும் கருதவும் கூடாது.

3. எதிர்காலத்திலே (பவிஷ்யத்து : பாடம்) 1. இருக்கிறதினால்தான்

3. இந்தடைவாக விளங்கும்படிக்கு அறியவேண்டின ஒரு பரம ரகசியம் உண்டு. அதேதென்ருல், உண்டாக்கப்பட்ட வஸ்து என்னப்பட்ட யாவும் காலப்பிரமாணத்துக்குள்ளே அடங்கப்பட்டதாயிருந்து, அப்படிப்பட்ட வஸ்துக்கள் [2]பூர்வாபரக் கால முதலான [3]விகாரங்களை உடைத்தானதாய் இருக்கக்கொள்ள, அப்படிப்பட்ட வஸ்துக்களுக்குச் சென்ற காலமும் வருங்காலமும் உண்டென்று சொல்லக்கூடும் என்கிற துக்குத் தப்பாது. தானுயிருக்கிற கர்த்தரானவரோவென்ருல், விகாரம் என்னப்பட்ட யாவும் அவரிடத்திலே இல்லாததினுல், காலப்பிரமாணத்துக்குள்ளே அடங்காதவராய் இருக்கிருர் என்று சொல்லக்கடவோம். ஆனபடியினுலே அவரை [4]உத்தேசித்து பூருவாபரமும் போன காலமும் வருங்காலமும் உண்டாகி இருக்கவில்லை என்று அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். அவ்வண்ணமே, கர்த்தரானவருக்கு [5]வர்த்தமான காலமாத்திரம் உண்டாயிருக்கிறதென்று சொல்ல வேண்டியிருக்கையிலே, போன காலத்திலே நமக்கு உண்டாயிருந்த [6]வாத்தமானங்களும் வருங்காலத்திலே இனிமேல் நமக்கு வரத்தக்க விசேஷங்களும் அவருடைய முகிவில்லாத ஞானத்தின் சன்னதியிலே இருக்கிறதினுலே, நமக்குப் போனதையும் வரத்தக்கதையும் விசாரிக்கும் இடத்தில், வர்த்தமான காலத்திலே உண்டாயிருக்கிற பொருளை நாம் பார்த்துக்கொண்டிருக்கிருேம் என்கிறப்போலே அதை எல்லாம் கர்த்தரானவர் பார்த்துக்கொண்டிருக்கிருர் என்று அங்கீகரிக்க வேணுமொழிய, கர்த்தருடைய திவ்வியமான தெரிசனத்துக்குப் போனதும் வரத்தக்கதும் உண்டென்று சொல்லிப், போன விசேஷங்களை இப்போ நாம் காணுமல் முன்னே கண்டோம் என்கிறப் போலே கர்த்தன் போன விசேஷங்களை இப்போ காணுமல் அதுகளை முன்னே கண்டார் என்றும், இனிமேல் வரத்தக்க வர்த்தமானங்களைக் கர்த்தர் இப்போக் காணுமல் அதுகளைக் காணப்போகிருர் என்றும் அங்கீகரிக்கவொண்ணுது. இதற்குக் காரணமேதெனில், சகல நன்மை சுரூபமாயிருக்கிற கர்த்தரானவரிடத்திலே பொருளென்னப்பட்டதெல்லாம் [1]உத்தம பிரகாரமாய் உண்டாயிருக்கிறதி.

2. பூர்வ+அபர=முன்பின் (Succession) 3. வேறுபாடு
4. நோக்கி, பற்றி 5. நிகழ்காலம் 6. நிகழ்ச்சிகளும்
1 modo eminenti

னால், போன காலமும் போன காலத்திலே உண்டாயிருந்த வர்த்தமானங்களும் வரத்தக்க காலம் வருங்காலத்திலே பிறக்கத் தக்க பொருளென்னப்பட்டதெல்லாம் உத்தம பிரகாரமாக அவரித்திலே இருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது.

அவரிடத்திலே இருக்கிறதெல்லாம் அவருக்குப் [1]பின்னமா யிராமல் அவராய் [2]இருக்கிறது என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. ஆனபடியினாலே தாம் தம்மை அறிகிறதினாலே நமக்குப் போனதையும், வரத்தக்கதையும் அறிகிறாரொழியத், தமக்குப் பின்னமாயிருக்கிற வஸ்துக்களுடைய [3]பிரதிபிம்பங் கள் முதலான வேறே யாதொன்றைக்கொண்டு வஸ்துக்களை அறிகிறாரென்று மகா பாவமில்லாமல் அங்கீகரிக்கப்படாது. இது இப்படியிருக்கையிலே, கர்த்தரானவர் தாம் தமக்குக் குறையற்ற பிரகாரமாக [4]ஆசன்னராய் இருக்கிறாரென்று அங்கீ கரிக்கிறபோதே, நமக்குப் போனதும் வரத்தக்கதும் உண்டா யிருக்கிற பொருளும் அவரைக் குறித்துப் போனதும் வரத்தக்கதுமாய் இராமல், அதெல்லாம் அவரிடத்திலே உத்தமபிரகாரமாய் இருக்கிறதினால், தாம் தமக்கு ஆசன்னராய் இருக்கிறாப்போலே அவருடைய திவ்விய தெரிசனத்துக்குப் பொருளென்னப்பட்ட யாவும் ஆசன்னமாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கக் கடவோம். அவ்வண்ணமே, நமக்குப் போனதும் வரத்தக்கதும் கர்த்தரானவருக்கு வர்த்தமான காலத்திலுள்ள ஆசன்னமான பொருளாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கக் கடவோம்.

இதெல்லாம் இப்படியிருக்கையிலே, உன் முன்பாக இப் போது ஒருத்தனாலே பண்ணப்படுகிற பாவ புண்ணியத்தை நீ பார்த்துக்கொண்டிருக்கிறதினால், உன்னுடைய பார்வையானது அவன் பண்ணுகிற பாவ புண்ணியத்துக்குக் காரணமாய் இருக் கிறதென்று சொல்லக் கூடாமல், அவன் பாவ புண்ணியம் பண்ணுகிறதினால் அப்படிப்பட்ட பாவ புண்ணியத்தை நீ பார்த்துக்கொண்டிருக்கிறாய் என்று சொல்ல வேணுமொழிய, நீ பார்த்துக்கொண்டிருக்கிறதினாலே அவன் பாவ புண்ணியம் பண்ணுகிறானென்று மதிகெட்டவனானாலும் சொல்லமாட்டான்.

2 இருக்கிறார் (பாடம்) 3 சாயல் (species) 4 present 5 அவர்மட்டில்

அம்மருவாதியே, கர்த்தனுடைய தெரிசனத்தை [1]உத்தேசித்து நமக்கு வரத்தக்க காரியத்தின் விஷயத்திலே சொல்லத்தக்க சத்தியமாவது: இனிமேல் நீ பண்ணத்தக்கது கர்த்தனுடைய தெரிசனத்துக்கு வர்த்தமான காலத்திலுள்ள ஆசன்னமான பொருளாய் இருக்கக்கொள்ள, இனிமேல் நீ பண்ணும் பாவ புண்ணியத்தைப் பார்க்கும்போது, அவருடைய திவ்விய தெரிசனத்தின் சன்னதியிலே பாவ புண்ணியம் பண்ணுகிறவனைப் இருக்கிருயென்று சொல்லத்தகும். அவ்வண்ணமே, உன்னுடைய சுவாதந்திரியத்தினுலே பாவ புண்ணியம் பண்ணுவாய் என்று பார்த்துக் கொண்டிருக்கிருரென்று சொல்ல வேணுமொழிய, நீ பண்ணத்தக்க பாவ புண்ணிய விஷயக திவ்விய தெரிசனமானது நீ பாவ புண்ணியத்தைக் கட்டாயமாய்ப் பண்ணுவாய் என்கிறதுக்குக் காரணமாய் இருக்கிறதென்று சொல்லவும் எண்ணவும் கூடாது.

ஆனுல், கர்த்தரானவர் வரும் பாவ புண்ணியத்தைப் பார்த்துக்கொண்டிருககிருர் என்கிற விஷயத்திலே அறியவேண்டின விசேஷமாவது: வரத்தக்க பாவ புண்ணியத்தைக் கர்த்தரானவர் அளவில்லாத தெளிவோடே பார்த்துக்கொண்டிருந்தாலும், பாவத்தை வெறுத்துத் தன் சித்தத்துக்கு [2]அரோசகமானதாக அத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிருரொழிய, மற்றப்படி அல்ல. பண்ணப்படத்தக்க புண்ணியமோவென்ருல், அத்தை அங்கீகரித்து அந்தப் புண்ணியமானது வருகிறதுக்கு ஸ்திரமான திருவுளமுள்ளவராய்த் தம்முடைய சித்தத்துக்கு [3]ரோசகமானதாக வரும் புண்ணியத்தை, முன் சொன்னுப்போலே, பார்த்துக் கொண்டிருக்கிருர் என்கிறதுக்குத் தப்பாது. இது நிமித்தமாகக் கர்த்தரானவர் வரத்தக்க புண்ணியத்தைப் பார்த்து அத்தை அங்கீகரித்துத் தெரிந்துகொண்டார் என்றும், வரும் பாவத்தை அறுதியாகப் பார்த்த மாத்திரத்திலே அத்தை அருவருத்து நிராகரித்தார் என்றும் சகல வித்தியாபாரகர் முதலான [4]ஆசாரிய புருஷருக்கு இந்த சம்மதமாய் இருக்கிற வசனம் என்று சொல்லப்படும்.

**இரண்டாம் கேள்வி:** வரத்தக்க பாவ புண்ணிய விஷயக திவ்விய தெரிசனத்திலே இற்றை வரைக்கும் நம்மால் சொல்லப்

1 குறித்து 2 வெறுப்பானது 3 விருப்பமானது 4 Doctors

பட்டதெல்லாம் அங்கீகரிக்கத்தக்க சத்திய பக்ஷமாய் இருக்கை யிலே, இதுக்கப்பால் சில பேர்களினாலே கேட்கப்படுகிற சந்தேகமாவது: 'பாவ விஷயக திவ்விய தெரிசனமானது பாவத் துக்குக் காரணம் ஆகாவிட்டாலும், தனது திவ்விய தெரிசனத் தினாலே தயாபரனான கர்த்தரானவர் வரும் பாவத்தை அறிந்து, அதெல்லாம் வராதபடிக்கு விலக்க வல்லவராய் இருக்கிறார் என் கிறதுக்குத் தப்பாது. இது இப்படி இருக்கையிலே, கர்த்த ரானவர் தனது தயை சுரூபமான பெலத்தினாலே, பாவம் என் னப்பட்ட யாவும் லோகத்திலே வராதபடிக்குப் பண்ணுகிறது என்கிறது அவருடைய தயைக்கு ஏற்றிருக்கிறதென்று காண்பிக் கிறது. அது ஏனென்றால், பாவம் என்னப்பட்ட யாவும் வராத படிக்கு விலக்கினால், மனுஷர் என்னப்பட்ட யாவரும் மோக்ஷத் துக்குப் போவார்கள் என்கிறதுக்குத் தப்பாது'.

இதுக்குப் பிரத்தியுத்தாரமாவது: மூன்று விதமாகத் தயாபரனான கர்த்தரானவர் லோகத்திலே பாவம் பலியாதபடிக் குப் பண்ண வல்லவராய் இருக்கிறாரென்று சொல்லத்தகும். 1. மனுஷன் வேணும் வேண்டாமென்கிற சுவாதந்திரியத்தைக் கெடுத்துப் பாவம் வராதபடிக்குக் கட்டாயம் பண்ணுகிறது முதலாம் வகையாகும். அது முன் சொல்லப்பட்ட ஞாயங் களினாலே மிருகங்களைக் கர்த்தன் நடத்துகிற மேரையாய் இருக் கிறதொழிய, மனுஷனுடைய சுபாவத்தை விசாரிக்குமிடத்திலே அது மனுஷனை நடத்தத்தக்க மேரையாயிராது. ஆனபடி யினாலே ஞானமுள்ள கிரமத்தோடு சகலத்தையும் நடத்துகிற கர்த்தரானவர் இந்த உபாயத்தினாலே பாவம் என்னப்பட்ட யாவும் லோகத்திலே வராதபடிக்குப் பண்ணுகிறது என்கிறது தப்பில்லாக் கிரமமுள்ள திவ்விய நீதிக்கு ஒத்திராதென்று சொல்லத்தகும். 2. வேறே உபாயத்தினாலே கர்த்தரானவர் லோகத்திலே பாவம் வராதபடிக்கு விலக்கலாமென்று சொல்லு கிறார்கள். அதாவது மனுஷனுக்குப் பாவ விசாரம் வரவொட் டாமல் பற்பல புண்ணிய விஷயத்திலே மாத்திரம் வேணும் வேண்டாம் என்கிற சுவாதந்திரியத்தை மனுஷனுக்குக் கொடுத் தால், இந்த உபாயத்தினாலே பாவம் என்னப்பட்ட யாவும் லோகத்திலே வாராதே பண்ணலாம். வாக்குக்கும் மனசுக்கும் எட்டாததாய் இருக்கிற இப்படிப்பட்ட செல்வமானது பராபர

வஸ்து விஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலே புத்தியுடைத்தான பேர்களுக்கு வரும் என்கிறதுக்குத் தப்பாது. ஆனால் புண்ணிய வழியின் கெமனத்திலே மரணபரியந்தம் பிரயாசைப்பட்டு மோக்ஷமாகிற அவதியை அடைந்த பேர்களுக்குத் தயாபரனை கர்த்தன் கொடுக்கத்தக்க சம்பாவனையாகும் என்கிறதினாலே, அவதியை அடையாமல் இந்த லோகத்திலே திரிகிற பேர்கள் வழிப்போக்கராய்த் திரிகிற நாள் மட்டும் அது வரத்தக்க பாக்கியமாயிருக்க மாட்டாது. ஆகலாலே ஞானமுள்ள மேரைக்கு ஏற்றிராத இந்த உபாயத்தினாலே கர்த்தரானவர் பாவம் வராமல் விலக்கிறது என்கிறது கிரமமாயிராதென்று சொல்லக் கடவோம்.

3. இந்த இரண்டு வகை உபாயந் தவிர, பாவம் வராதபடிக்கு வேறே உபாயம் உண்டென்று சொல்லலாம். அதாவது, அவதிக்குப் போற வழியுமாய் யுத்தத்துக்கான ஸ்தலமுமாய் இருக்கிற இந்த பூமியிலே திரிகிற மனுஷரென்னப்பட்ட யாவரும் பாவமென்னப்பட்ட யாவுக்கும் உடன்படாமல், நிர்மல புண்ணிய வழியிலே நடக்கிறதுக்கு வேணும் வேண்டாமென்கிற சுவாதந்திரியமுள்ள மனசையும், புண்ணிய விசாரங்கள் முதலான உதவிகளையும் தயாபரனை கர்த்தரானவர் பூமியிலே திரிகிற சகல பிரசைகளுக்கும் கொடுத்தருளுகிறது என்கிறது லோகத்திலே பாவம் வருகிறதுக்குத் தயாபரனை கர்த்தன் பண்ணத்தக்க விக்கினமென்று சொல்லத்தகும். இப்படிப்பட்ட உபாயமானது நீதி தயை சுபாவமாயிருக்கிற ஆண்டவனாலே பண்ணப்பட்டது என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அதேதென்றால், மனுஷர் எல்லாரும் தமது விருத்திகளைப் பண்ணுகிறதிலே கட்டாயப்படாததுக்கு வேணும் வேண்டாமென்கிற பெலமான சுவாதந்திரியத்தை சகல மனுஷருக்கும் கொடுத்தருளினார். இதுதவிர பாவமென்னப்பட்ட யாவுக்கும் மனுஷனானவன் உடன்படாமல் பாவம் என்னப்பட்டதெல்லாம் தள்ளுகிறதுக்கு வேண்டின உதவிகளாகிற புண்ணிய விசாரங்களையும் மற்ற அநேக [1]பிரசாதங்களையும் தயாபரனை கர்த்தரானவர் சகல மனுஷருக்கும் கொடுத்தருளின போதே, கர்த்தருடைய தயையினாலே அவனவன் கரையேறுகிறதுக்குப் போருமென்னப்

1 graces

பட்ட திவ்விய சகாயத்தை அடைந்தான் என்று சொல்லக்கட வோம். இப்படிப்பட்ட திவ்விய சகாயத்தைக் கொண்டு மனுஷ னனவன் தனது சுவாதந்திரியத்தினலே பாவத்திலே விழாமல் புண்ணிய வழியிலே நடக்கிறதுக்கு வல்லவனுய் இருக்கக் கொள்ள கர்த்தரானவர் லோகத்திலே பாவம் வராதபடிக்கு நல்ல உபாயத்தினலே விலக்கினரென்று சொல்லக்கடவோம். ஆனல், மனுஷனனவன் தனது சுயேச்சையினலே கர்த்தன் பண்ணிவருகிற திவ்விய சகாயங்களைச் சட்டைபண்ணமல் அதுகளைத் தள்ளிப்போட்டு மனுஷன் பிழைக்கிறதுக்கு வேண் டியதாயிருக்கிற சுவாதந்திரியமுள்ள மனசைக் கர்த்தரானவர் கொடுத்தாரே அப்படிப்பட்ட சுவாதந்திரியத்தினலே மனுஷ னனவன் பாவத்திலே விழுவேனென்று சம்மதிக்கிறதினல் லோகத்திலே பாவம் வராதபடிக்குக் கர்த்தரானவர் உபாயம் பண்ணுகிறதிலே மோசமாய்ப் போனரென்றும் செய்யத்தக்க தைச் செய்யவில்லை என்றும் சொல்லப்படாது.

இதெல்லாம் ஓர் உவமையினலே வெளியாக்கலாம். அதே தென்றல், மகா ராசாவாயிருக்கிற ஒருத்தன் தன்னண்டையிலே இருக்கிற பிரசைகள் பிழைக்கவேணுமென்று ஆயிரம் இரண் டாயிரம் மூவாயிரம் (ஆக) அவனவன் பிழைக்கிறதுக்குப் போரும் என்னப்பட்ட திரவியத்தைக் கொடுத்தான். இப்படிப் பட்ட தயையுள்ள ராசாவானவன் தனது பிரசைகளுக்குத் தனம் கொடுத்தபோதே, அவனவன் பிழைக்கிறதுக்கான உபா யத்தைப் பண்ணினனென்று சொல்லக்கடவதொழியத் தனது பிரசைகளை ரக்ஷிக்கிறதிலே செய்யத்தக்கதைச் செய்யாமற் குறை பண்ணினன் என்று சொல்லப்படாது. இதிப் படி இருக் கையிலே எல்லாரும் தாங்கள் தாங்கள் பிழைக்கிறதுக்குப் போரும் என்னப்பட்ட திரவியத்தை ராசாவின் கையிலே (வாங்கி) அவர்களுக்குள்ளே சிலர் வியாபாரம் பண்ணித் [1] தனட்டியராய்ப் போய்ச் சிலர் வாங்கின திரவியத்தை எறிந்து போட்டுக் குடிக்கக் கஞ்சியில்லாமல் செத்துப்போனர்கள். அப்படிப்பட்ட பேர்களுக்குச் சம்பவித்த வர்த்தமானத்தை விசாரிக்குமிடத்தில், தனட்டியராய்ப் போன பேர்களுடைய பிழைப்புக்குத் தனம் கொடுத்த தயாபரனை ராசாவும் அவன

1 செல்வராய்

வன் வியாபாரம் பண்ணுகிறதிலே பட்ட பிரையாசமும் காரண மாயிருந்ததென்று சொல்லத்தகும். தனம் எறிந்துவிட்ட பேர்கள் பசியினாலே செத்துப்போனதுக்கு, அவர்களுடைய மதியில்லாத் தனம் முதலான துர்க்குணங்கள் காரணமாய் இருக்கிறதென்று சொல்லத் தகுமொழியப் பிழைக்கிறதுக்குப் போருமான தனம் கொடுத்த தயையுள்ள ராசாவானவனுடைய கொடையானது அவர்கள் செத்ததுக்குக் காரணமாய் இருந்ததென்று மதிகெட்ட வனானாலும் சொல்ல மாட்டான். அத்தன்மைபோல, மனுஷ ரென்னப்பட்ட யாவருக்கும் தயாபரனான கர்த்தரானவர் கொடுத்தருளின சுவாதந்திரியமும், தர்ம விசாரங்கள் முதலான எண்ணப்படாத சகாயங்களும் அவனவன் பிழைக்கிறதுக்குப் போரும் என்னப்பட்ட திரவியமென்று சொல்லப்படும். இப்ப டிப்பட்ட திரவியத்தைக்கொண்டு கரையேறினவர்களுடைய பிழைப்பானது கர்த்தரானவருடைய தயையினாலேயும் அவரர் கள் பட்ட பிரயாசத்தினாலேயும் வந்ததென்று சொல்ல வேணும். தனது சுவாதந்திரியத்தினாலே மதிகெட்ட பாவியா னவன் பாவத்திலே விழுகிறது என்கிறது தான் பிழைக்கிறதுக் குப் போரும் என்னப்பட்ட கர்த்தன் கொடுத்த திரவியத்தை எறிந்து போட்டதுக்குச் சமானமாய் இருக்கிறதென்று சொல் லத்தகும். இப்படிப்பட்ட பாவி தான் பிழைக்கிறதுக்குப் போதுமான திரவியத்தை எறிந்து போட்டதினால், நரகமாகிற சாகாத சாவை அடைந்ததுக்குப் பாவியினுடைய புத்தியில்லாத் தனம் முதலான துர்க் குணங்கள் காரணமாய் இருக்கிறதென்று சொல்லக்கடவதொழிய, மனுஷன் பிழைக்கிறதுக்குப் போரும் என்னப்பட்ட திவ்விய சகாயங்களைப் பண்ணின கர்த்தரானவர் ஒரு எள் பிரமாணமானாலும் பாவியானவன் கெட்டுப்போன துக்கு உதவி செய்தாரென்று சொல்லவும் கருதவும் கூடாது. இந்தச் சத்தியத்தை அங்கீகாரம் பண்ணுகிறதுக்கு வருங்காலத் திலே வரத்தக்க வர்த்தமானம் என்னப்பட்டதெல்லாம் கர்த்த ரானவர் தமது முகிவில்லாத ஞானத்தினாலே பார்த்துக்கொண் டிருக்கிறார் என்கிறது விக்கினமாய் இருக்கமாட்டாது. அதே னென்றால், பாவியானவன் பாவம் பண்ணுவானென்று கர்த்த ரானவர் அறிந்தாலும், முன் சொன்னாற்போலே அப்படிப்பட்ட திவ்விய ஞானமானது பாவியினுடைய சுவாதந்திரிய பெலத்

த்தைக் சற்றுனுலும் குறைக்கிறதுமில்லை. பாவியானவன் பண்ணத்தக்க பாவத்துக்கு அற்பமாறுலும் அது உதவுகிற் காரணமாய் இருக்கிறதென்றும் சொல்லப்படாது.

மூன்ரும் கேள்வி: இதெல்லாம் இப்படியிருக்கையிலே, இதுக்கப்பால் சிலர் கேட்கிற சந்தேகமாவது: "கர்த்தரானவர் எல்லாரும் பிழைக்கிறதுக்குப் போரும் என்னப்பட்ட சகாயங் களையும் நல்ல விசாரங்கள் முதலான திவ்விய பிரசாதத்தினுலே வருகிற சுவாதந்திரிய பெலத்தையும், கர்த்தரானவர் எல்லாருக் கும் கட்டளை பண்ணினபோதே, பாவியானவன் பாவத்திலே விழுகிறதுக்குச் சற்றுனுலும் அவர் காரணமாய் இருக்கிருரென்று சொல்லக்கூடாது என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. பின்னையும் பாவியானவன் பாவம் பண்ணுவானென்று முகிவில் லாத ஞான சுரூபியாயிருக்கிற கர்த்தரானவர் பார்த்துக்கொண்டி ருந்தாலும், கர்த்தருடைய பாவ விஷயக தெரிசனமானது தம்முடைய சித்தத்துக்கு அரோசகமான பாவம் லோகத்திலே பலிக்கிறதுக்குச் சற்றுனுலும் உதவி செய்கிறதில்லை என்கிறதுக் குத் தப்பாது. ஆனுல் வரத்தக்க பாவமானதைக் கர்த்தரான வர் அறிகிறதொழிய அறியாமல் இருக்கத்தக்கதில்லை என்று சொல்லக்கடவோம். அப்படிப்பட்ட உபாயத்தைக் கர்த்தரான வர் பண்ணித் தமக்குப் பொருந்தாத பாவத்தை விலக்காமல் இருக்கிறதுக்கு ஞாயமேது?" என்று அறியாமல் சில பேர்கள் இந்தச் சந்தேகத்தினுலே தத்தளிக்கிருர்கள்.

ஆனபடியினுலே நீதி சொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் தனது தப்பில்லாத [1]பராமரிசத்தினுலே லோகத்தை ஞாய முள்ள கிரமத்தோடே நடத்திக்கொண்டு வருகையிலே, பாவத் துக்குச் சற்றுனுலும் காரணமாய் இராமல், பாவமென்னப்பட்ட யாவையும் விலக்கி அது வராமலிக்கிறதுக்கு உண்டாயிருக் கிற அனேக ஞாயங்களுக்குள்ளே சிலதுகளைக் கொஞ்சத்துக் குள்ளே வெளிப்படுத்துகிறதுக்கு முன்னே இத்தொகைப் பட்ட கேள்விகளுடைய விஷயங்களுக்குள்ளே மிகவும் அறிய வேண்டின ஒரு விசேஷமுண்டு. அது இத்தொகைப்பட்ட அபத்த சந்தேகங்களுக்குச் சாதாரண பிரத்தியுத்தாரமாகும்.

1. Providence

அதேதென்றால், கட்டாயமில்லாமல் தனது சுவேச்சையைக் கொண்டு எல்லாத்தையும்உண்டாக்குகிறகர்த்தரானவர் எல்லாத்தையும் நடத்துகிற மேரையைப் பார்த்துப், பொருளை வேறே பிரகாரமாய் உண்டாக்கலாம் என்றும் வேறே அடைவிலே நடத்தலாம் என்றும் சொல்லலாம் என்கிறதுக்குத் தப்பாது. இது இப்படியிருக்கையிலே, 'வேறே பிரகாரமாய்ப் பொருளை உண்டாக்காமலேன்? நடத்தாமலேன்?' என்கிறது அபத்தக் கேள்வியாய் இருக்கிறது என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவை இல்லை. அதேதென்றால், எந்தப்பிரகாரமாய்க் கர்த்தரானவர் பொருளை உண்டாக்கினாலும் எந்தக் கிரமத்தோடு பொருளை நடத்தினாலும், அப்போதும் இப்படிப்பட்ட கேள்வி பண்ணலாம் என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால், அத்தறுவாயிலே 'கர்த்தரானவர் வஸ்துவை உண்டாக்கி இந்தப்பிரகாரமாய் நடத்துவானேன்?' என்றும், 'வேறே பிரகாரமாய் நடத்தாமலேன்?' என்றும் கேட்கலாமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே, சகல தறுவாய்களிலேயும் கேட்கலானதாயிருக்கிற இந்த அபத்தக் கேள்வியை விட்டுக், கர்த்தரானவர் பொருளை உண்டாக்கின வகையிலேயும் அதை நடத்துகிற மேரையிலேயும் கர்த்தனுடைய நீதியுந் தயையும் சாமர்த்தியமும் இது முதலான நன்மைகளும் விளங்கும் விதத்தைத் தேடிக் கண்டுபிடிக்க வேணுமொழிய மற்றப்படியல்ல. ஆகலாலே கர்த்தரானவர் வஸ்துவை வேறே பிரகாரமாய் உண்டாக்கலாம் என்கிறதுக்கு ஞாயமுகலானது கேட்கக்கடவதல்ல. ஆதலாலே சகலத்துக்கும் வல்லவருமாய், கரை காணாத கருணைக் கடலுமாயிருக்கிற கர்த்தரானவர் மனுஷனை நடத்துகிறதிலே, மனுஷனுடைய சுவாதந்திரியமுள்ள மனசினாலே பண்ணப்படுகிற பாவமென்னப்பட்ட யாவையும் சகல உபாயங்களினாலேயும் வரப்பண்ணாமல் இருக்கிறதுக்கு உண்டாயிருக்கிற ஞாயங்களை விசாரித்து, அதுகள் பாவம் வரப்பண்ணாமல் இருக்கிறதுக்கு ஆன ஞாயங்களென்று கண்டு பிடிக்கக் கடவோம். அப்படிப்பட்ட அனேக ஞாயங்களுக்குள்ளே சில ஞாயங்களை மாத்திரம் கொஞ்சத்துக்குள்ளே வெளிப்படுத்துவோம்.

1. அதுகளுக்குள்ளே முதலாம் ஞாயமாவது: பொருள் எனப்பட்ட யாவையும் கர்த்தரானவர் உண்டாக்கித் தப்பில்லாத

கிரமத்தோடு சகலத்தையும் நடத்துகிறவராயிருக்கக்கொள்ள, அவர் நடத்துகிறதிலே எப்போதுமுள்ள மேரையை விசாரிக்கும் இடத்தில், அந்தப்பொருளினுடைய சுபாவத்தையும் பொருளானது இருக்கிற அந்தஸ்தையும் பார்த்துப், பொருளினுடைய சுபாவத்துக்கும் அந்தஸ்துக்கும் ஆன விதமாகப் பொருளை நடத்துகிறதொழிய மற்றப்படியல்ல. இந்தவிடைவிலே சுடுகிறதென்கிறது அக்கினிக்குச் சுபாவமாய் இருக்கக்கொள்ளச், சிலமுறை கர்த்தரானவர் தமது திருவுளம்படியே ஓர் அற்புதம் வேணுமென்று, அக்கினியானது சுடாமல் சீதளத்துக்குக் காரணமாயிருக்கிறதுக்கு (ச் செய்ய) வல்லவராயிருந்தாலும், கர்த்தரானவர் அக்கினியை நடத்துகிறதிலே எப்போதுமுள்ள வகையை விசாரிக்கும்போது, அக்கினியானது சுடாமலிருக்கத் தக்கதாக எப்போதும் விலக்கிறதென்கிறது கர்த்தரானவர் எல்லாத்தையும் நடத்துகிற மேரைக்கு ஒத்திராது. பின்னையும், அக்கினியானது தண்ணீரினாலே செயிக்கவும் அணைக்கவும் படாமல் இருக்கப்பண்ணுகிறது என்கிறது கர்த்தரானவர் அக்கினியை நடத்துகிறதில் எப்போதுமுள்ள மேரைக்கு ஒவ்வாது. அந்தவிடைவிலே மற்ற வஸ்துக்கள் என்னப்பட்டயாவிலும் யோசிக்கக்கடவோம். அவ்வண்ணமே, பொருளானது தனது சுபாவத்தின்படியே நாச முதலான குறைவையும் பழுதையும் அடைகிறதுக்குப் பாத்திரமாய் இருந்தால் அப்படிப்பட்ட பொருளானது ஒருவிடத்திலே யாகிலும் பழுதடையாமற் கர்த்தன் பண்ணுகிறதற்குத் திருவுளமாய் இருக்கவில்லையென்று பார்த்துக்கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட திருவுளமானது குறையற்ற ஞாயமுமாய்த் தப்பில்லாக் கிரமமுமாய் இருக்கிறது என்று சொல்லக்கூடுமொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால்; நாச முதலான குறைகளையும் பழுதுகளையும் அடைகிறதுக்கு ஆன சுபாவத்தைப் பொருளானது கொண்டிருக்கிறபோது, ஒரு விடத்திலேயாகிலும் அது பழுதை அடையாமலிருக்கப் பண்ணி, அப்படிப்பட்ட பொருள்களுக்கு எங்கும் குறைவராத படிக்கு விலக்கிவந்தால் அந்தப் பொருளிடத்திலே அப்படிப்பட்ட சுபாவமுண்டு என்று கண்டுபிடிக்கிறதுக்கு இடமில்லாமல் இருக்கிறதும் தவிரப், பொருள்களுக்கு உண்டான சுபாவத்துக்குத் தக்கவிதமாக ஒரு இடத்திலேயாகிலும்

கர்த்தரானவர் பொருளை நடத்தவில்லையென்று சொல்லத்தகும். அதன்றியே கர்த்தரானவர் லோகத்தை எப்போதும் நடத்துகிற மேரையைப் பத்தும் பத்தாய் விசாரிக்கிறபோது, அது ஞாயம் உள்ள கிரமமாய் இருக்கிறதென்று சொல்லவேண்டி இருக்கையிலே, இது தானே வேறே மேரையாகக் கர்த்தரானர் நடத்தாமல் இருக்கிறதுக்குப் பரிபூரண ஞாயமாயிருக்கிறதென்று கண்டுபிடிக்கக் கடவோம். ஆனால், கர்த்தரானவர் லோகத்திலே பாவம் என்னப்பட்ட யாவையும் விலக்காமலிருக்கிறது என்கிறது பாவத்தை உண்டாக்கிறவனுடைய சுபாவத்துக்கு ஒத்திருக்குமென்று இந்த ஞாயத்தினாலே எப்படி ஒப்புவிக்கப் கப்படுமென்று வருகிற பாடத்தில் ஒப்பச் சொல்லக்கடவோம்.

எட்டாம் பாடம் முற்றும்

(கிரந்தம்) உ௱அ௰௫ *

## ஒன்பதாம் பாடம்

**9.1** பொருளின் குறை இரண்டு வகை — உடற் குறை, ஒழுக்கக் குறை (பாவம்): உண்டாக்கப்படலான வஸ்து என்னப்பட்ட யாவும் சர்வேஸ்சுரனைப் போலே நன்மை சுரூபியாயிராமல், புத்தியுடையதுமாய் நன்மையிலே சுவாதந்திரிய மனசுடைத்தானதுமாய் இருந்தால், நன்மையிலே அவதியை அடையாத அப்படிப்பட்ட வஸ்துவின் சுபாவத்தை விசாரிக்குமிடத்தில், தனது சுவாதந்திரியத்தினாலே திவ்விய கிருபையைக்கொண்டு, நன்மையிலே நிற்க வல்லதாய் இருக்குமாப்போலே, தனது சுவாதந்திரியத்தினாலே நன்மையிலே நின்று தப்பி, நன்மையின் குறையை அடைகிறதற்கு வல்லதாய் இருக்குமொழிய மற்றப்படியல்ல. ஆகையினாலே, புத்தி உடைத்தான பொருளானது தனது சுவாதந்திரியத்தினாலே நன்மையை விடாமல் நன்மையிலே இருந்து நல்ல பொருள் என்று காண்பித்துக் கொள்ளுகிறப்போலே, தனது சுவாதந்திரியத்தினாலே தானும் நன்மையை விட்டு, நன்மையின்

குறையை அடையலாம் [1]என்கிறதுக்கும், நன்மையிலே குறை உள்ளதாய்ப் போல்லா வஸ்து என்று காண்பிக்கலாம் என்கிற தற்குத் தப்பாது. அவ்வண்ணமே, இற்றைவரைக்கும் நம்மால் சொல்லப்பட்டதை விசாரிக்குமிடத்தில், வஸ்துவினுடைய குறையென்னப்பட்டதெல்லாம் இரண்டு வகைக்குள்ளே அடங்குமென்று சொல்லலாம். அதின் நாசம் முதலான பழுது களானதுகள் [2]ஆகுதலுக்கடுத்த குறை என்று சொல்லத்தகும். ஞாயமில்லாத் தனமாகிற பழுதேதாவென்றால், பாவமென்றும் [3]ஆசாரிகக் குறைவென்றும் சொல்லக்கடவோம்.

**9.2 பாவத்தை நீக்காததற்குக் காரணங்கள்: முதல் ஞாயம்: நீக்கினால் பொருளின் இயற்கை மாறிவிடும்:** இதெல்லாம் இந்தடைவாக இருக்கையிலே, பாவமாகிற குறையை எங்கும் கர்த்தரானவர் வில(க்)காமலிருக்கிறதுக்கு முந்தின ஞாயமாவது: ஆகுதலுக்கடுக்க குறை அடைகிறதுக் குப் பாத்திரமாயிருக்கிற பொருளைக் கர்த்தரானவர் பார்த்து, அதுக்குக் குறைவராதபடிக்குக் கர்த்தரானவர் வில(க்)க வல்ல ராய் இருந்தாலும், அப்படிப்பட்ட வஸ்துவுக்கு ஒரு இடத் திலேயானாலும் பழுதுவராதபடிக்கு வில(க்)கி வந்தால், அப் படிப்பட்ட பொருள்களினுடைய சுபாவத்துக்கு ஆன கிரம மாகக் கர்த்தரானவர் நடத்தவில்லை என்று சொல்லத்தகும் (என் கிறதுக்குச் சந்தேகமில்லை). அத்தன்மைபோலே புத்தியுடைத் தானதுமாய்ச் சுவாதந்திரிய மனசுடையதுமாய் இருக்கிற பொருளானது ஆசாரிகக் குறையாகிற பாவத்தை அடையலாம் என்கிற சுபாவத்தைக் (கொண்டிருக்கையிலே, அப்படிப்பட்ட பொருளானது ஒருவிடத்திலே ஆனாலும் ஆசாரிகக் குறையாகிற பாவத்தை அடையலாமென்கிற சுபாவத்தைக்) கொண்டிருக்கிற தென்று கண்டுபிடிக்கிறதுக்கு இடமில்லாதே போகவேணும். ஆனபடியினாலே புத்தியுடைத்தான பொருளினுடைய [4]சாதிக் குள்ளே அடங்கியிருக்கிற [5]வியத்திகள் என்னப்பட்ட யாவுக் கும் ஆசாரிகக் குறையாகிற பாவம் வராதபடிக்குக் கர்த்தரான வர் வில(க்)கிவந்தால், புத்தியுடைத்தான பொருளினுடைய சாதியானது ஒரு இடத்திலேயானாலும் ஒரு விஷயத்திலே என்

1 என்றும் (பாடம்) 2 Physical defect 3 Moral defect
4 Genus 5 Species

சிலும் குறையாகிற பாவத்தை அடையாதபோது, அது உண்டாக்கப்பட்ட வஸ்துவாயிருந்தாலும், தானுயிருக்கிற சகல நன்மை சுரூபமான கர்த்தனைப்போலே நன்மையை விட்டுப் பிரிந்து நன்மையில் நின்று தாழவும், நன்மையினுடைய குறைவை அடையவும் மாட்டாதென்கிற முழுத்தப்பறையை அங்கீகரிக்கிறதுக்குக் ஒருவிதமாக அவகாசமும் ஞாயமும் காணப்பட்டாற் போலேயாகும்.

அப்படியே, புத்தியுடைத்தான வஸ்துவினிடத்திலே இம் மாத்திரம் நன்மையினுடைய ஸ்திரமானது உண்டென்று ஊகிக்கிற(துக்குக் குறையற்ற ஞாயமும் அவகாசமும் இல்லாமலிருந்தாலும், பாவவிசாரம் வரக்கூடாதென்கிற மகிமையுள்ள விசேஷமும் பாவத்திலே விழமாட்டாது)என்கிற பெலத்தினுடைய ஆதிக்கமும் புத்தியுடைத்தான பொருளினுடைய சுபாவத்துக்கு மேலான நன்மையாயிராமல், அந்தப் புத்தியுடைத்தான பொருளினுடைய சுபாவத்துக்கு உண்டாயிருக்கிற சரியான நன்மைகளுக்குள்ளே பாவத்திலே விழாதிருக்கிற நன்மையானது ஒன்றுயிருக்கிற நன்மையென்று சொல்ல வேண்டியிருக்கும். அதெப்படியென்றுல், பஞ்சேந்திரிய முதலான விருத்திகளான்துகள் மனுஷரென்னப்பட்ட யாவருக்கும் உண்டாயிருக்கிறதினல், அப்படிப்பட்ட விருத்திகளானதுகள் மனுஷனுடைய சுபாவத்துக்கு மேலானதாயிராமல், மனுஷ சுபாவத்துக்குச் சரியான நன்மையென்று சொல்லப்படுமாப்போலே, பாவ விசாரம் வரமாட்டாது என்கிற விசேஷ மகிமையும், பாவத்திலே விழமாட்டாது என்கிற பெலத்தின் ஆதிக்கமும் புத்தி உடைத்தான பொருள்களுக்கு எல்லாத்துக்கும் உண்டென்று கண்டோமானுல், சுபாவத்துக்குச் சரியான மற்ற நன்மைகளுக்குள்ளே இதுவும் ஒன்றென்று இப்படி ஊகிக்கிறதுக்கு இடம் கொடுக்கப்பட்டது என்று சொல்லவேணுமொழிய மற்றப்படி அல்ல.

இந்த ஞாயத்தை இந்தடைவிலே நடத்தக்கடவோம்: சாதிக்குள்ளே அடங்கியிருக்கிற சகல வியக்திகளுக்கும் தப்பில்லாமல் உண்டாயிருக்கிற நற்குணம் என்னப்பட்டதெல்லாம் சாதியினுடைய சுபாவத்துக்கு மேலான நன்மையாயிராமல் சுபாவத்துக்கு வரத்தக்க சரியான நன்மை என்று சொல்லப்

படும். புத்தியுடைத்தான சாதிக்குள்ளே அடங்கியிருக்கிற சகல வியத்திகளுக்கும் பாவத்திலே விழமாட்டாத நல்ல குணமானது தப்பில்லாமல் உண்டாயிருக்கிறதென்று சொன்னோமானால், பாவத்திலே விழமாட்டாத நல்ல குணமானது புத்தியுடைத்தான பொருளின் சுபாவத்துக்கு மேலான செல்வமாயிராமல், சுபாவத்துக்கு வரத்தக்க சரியான நன்மைகளுக்குள்ளே பாவமில்லாத் தனம் ஒரு நன்மையாய் இருக்கிறதென்று சொல்லவேண்டியிருக்கும். அதேதென்றால், பொருளின் சுபாவத்துக்கு வரத்தக்க நன்மைகளில் உண்டாயிருக்கிற அடைவானது பாவம் வரமாட்டாது என்கிற நல்ல குணத்திலே காணப்படுகிறதினாலே மற்ற நன்மைகளுக்கும் பாவமில்லாத் தனத்துக்கும் வித்தியாசம் துலக்கமாய்க் காணாது. வித்தியாசம் காணாதபோதே பொருளின் சுபாவத்தை உத்தேசித்துப், பாவத்திலே விழமாட்டாத நல்ல குணங்களும் மற்ற நன்மைகளும் ஓரந்தஸ்திலே இருக்கிறதென்று யோசிக்கிறதுக்கு இடமுண்டாயிருக்கிறது என்று சொல்லலாம். இப்படிப்பட்ட தப்பறை விசேஷத்தை அங்கீகரிக்கிறதுக்கு இடமிருக்கவொண்ணாதென்று, கர்த்தரானவர் திருவுளமானார் என்கிறதினால், புத்தியுடைத்தான செனமானது பாவத்திலே விழாதபடிக்குப் போரும் என்னப்பட்ட திவ்விய சகாயத்தையும் சுவாதந்திரிய பெலத்தையும் புத்தியுடைத்தான செனத்துக்குக் கொடுத்தருளிப், புத்தியுடைத்தான செனமானது தனது சுவாதந்திரிய பெலத்தினாலே குறையாகிற பாவத்திலே விழாதவண்ணம் உபாயங்களினாலே கர்த்தன் வில(க்)காதிருந்ததுக்கு அதே ஞாயமென்று கண்டுபிடிக்கத் தக்கதாகும்.

அவ்வண்ணமே, சகலத்தையுங் கிரமத்தோடு நடத்துகிறவருமாய்ச், சகல நன்மை சொரூபமானவருமாய் இருக்கிற கர்த்தரானவர், தமக்கு மிகவும் பொருந்காத பாவமாகிற பொல்லாப்பைப் புத்தியுடைத்தான சனமானது தனது சுவாதந்திரியத்தினாலே ஒருக்காலானாலும் பண்ணாதபடிக்கு முழுதும் வில(க்)காமல் இருக்கிறதென்கிற திவ்விய பரம ரகசியமானது கிரமத்துக்கு ஒத்திருக்கிறதென்று இரண்டொரு ஞாயங்களினாலே ஒப்புவிக்கப்பட்டாப் போலே ஆச்சுது. அதேதென்றால், ஆகுதலுக்கடுத்த நாச முதலான குறைகளை அடைகிறதுக்குப்

பாத்திரமாயிருக்கிற பொருளை அப்படிப்பட்ட நாச முதலான குறைகளை அடையப் பண்ணுகிருர் என்கிறதினுலே, அவருடைய திருவுளமானது ஞாயமுள்ள கிரமத்துக்கு ஏற்றிருக்கும் என்று சொல்ல வேணும். அப்படியே பொருளினுடைய சுபாவ சுரூபத்துக்குத்தக்க மேரையாகப் பொருளை நடத்துகிறரொழிய மற்றபடியல்ல. அத்தன்மைபோலச், சுவாதந்திரியமுள்ள செனமானது பாவமாகிற குறையிலே தனது சுவாதந்திரியத்தினுலே விழலாமென்கிற சுபாவத்தை உடைத்தானதாய் இருக்கிற போதே, கர்த்தரானவர் அப்படிப்பட்ட பொருளானது பாவத்திலே விழாதபடிக்கு முழுதும் விலக்காமல் இருக்கையிலே, அப்படிப்பட்ட பொருளினுடைய சுபாவத்துக்கு விருத்தமான மேரையாக நடத்தினுரென்று சொல்லக்கூடாது. ஆனபடியிலே அநியாயம் பண்ணினுரென்றும் புத்திபுடைத்தான பொருளைக் கிரமந்தப்பி நடத்தினுரென்றும் சொல்லுகிறதுக்கு அவகாசம் காண மாட்டாது.

இந்த விஷயத்திலே மிகவும் பராமரிசிக்கத்தக்க விசேஷமாவது: நாச முதலான குறைகள் ஞாயத்துக்கு விருத்தமாய் இராததினுல், அப்படிப்பட்ட குறைகள் ஆண்டவனுடைய திருவுளத்துக்கு ஏத்திருக்கும். ஆனபடியினுலே பொருளானதை நாசமுதலான குறைகளை கர்த்தரானவர் அடையப் பண்ணுகிருரென்று சொல்லவேணும். ஆசாரிகக் குறையாகிற பாவமோவென்ருல், சகல நன்மை சுரூபமாயிருக்கிற கர்த்தரானவருக்கு மிகவும் அது விரோதமாய் இருக்கக்கொள்ள, அப்படிப் பட்ட குறையாகிற பாவத்தைப் புத்தியுடைத்தான (செனமானது அடையாதபடிக்குப் போரும் என்னப்பட்ட திவ்விய சகாயங்களைப் புத்தியுடைத்தான) செனமானதுக்குக் கர்த்தன் கொடுத்தார் என்கிறதினுல், பாவத்திலே விழாதபடிக்குத் திவ்விய சகாயங்களைக் கொண்டிருக்கிற செனமானது பாவமாகிற குறையிலே விழுகிறதென்கிறது கர்த்தனுடைய திருவுளத்துக்கு ஏத்திராதென்று சொல்லக்கடவோம். ஆனுல், பாவத்திலே விழாதபடிக்குத் திவ்விய சகாயத்தைக் கொண்டிருக்கிற செனமானது தனது சுவாதந்திரியத்தினுலே பாவத்திலே விழுவேனென்று சொல்லி விழுகையிலே, கர்த்தரானவர் தமக்கு அரோசகமாய் இருக்கிற பாவமாகிற குறையிலே

அப்படிப்பட்ட சனமானது விழாதபடிக்குச் சகல உபாயங்களினாலே அவர் வில(க்)கக் கணக்கில்லே. ஆகலாலே, கர்த்தரானவர் தமக்கு அரோசகமாயிருக்கிற பாவமாகிற குறையிலே சுவாதந்திரியமுள்ள செனமானது விழுவேனென்று சொல்லுகிறபோது, அத்தைக் கர்த்தன் வில(க்)காமலிருக்கிறது என்கிறது செனத்தினுடைய சுபாவத்துக்குத் தக்கதாய் இருக்கிறதுந் தவிரக், குறையற்ற திவ்விய நீதிக்கு ஏத்திருக்கிற ஆக்கினேயாய் இருக்கிறதுக்குச் சந்தேகப்படக் கணக்கில்லே. இது முதலாம் ஞாயமாகும்.

**9.3 இரண்டாம் ஞாயம்: இனத்தின் பண்பு இனத்துட்பட்டவரிடம் உண்டு:** செல்லப்பட்ட இரண்டாம் ஞாயமாவது: அந்தந்தப் பொருளினுடைய சாதிக்கு உண்டான சுபாவத்துக்கு மேலான செல்வமானது சாதிகளுடைய சகல வியத்திகளிடத்திலே காணுதிருக்கிறது என்கிறது கிரமமாகும். ஆனபடியினாலே, பாவமில்லாத்தனமாகிற மகிமையுள்ள நன்மையானது உண்டாக்கப்படலான பொருளின் சுபாவத்துக்கு மேலான பாக்கியமாய் இருக்கக்கொள்ளப், பொருளின் சுபாவத்துக்குச் சரியான நன்மைகளேப் போல சகல வியத்திகளிடத்திலே அது கிடையாமல் இருக்கிறதென்கிறது கிரமமாகும். அவ்வண்ணமே, திவ்விய கிருபையினாலே சில பேர்களிடத்திலே பாவமில்லாத்தனம் உண்டாயிருக்கிறதும் செனத்தினுடைய துர்ப்பலத்தினாலே சில இடங்களிலே அப்படிப்பட்ட செல்வமானது காணுமல் இருக்கிறதும் திவ்விய தயைக்கும் பொருளினுடைய துர்ப்பெலமுள்ள சுபாவத்துக்கும் ஒத்திருக்கிற மேரையாய் இருக்கிறதென்று செல்லத்தகும்.

**9.4 மூன்றும் ஞாயம்:** இந்த ஞாயங்கள் தவிரக் கர்த்தரானவர் செனத்தினுடைய சுவாதந்திரியத்தினாலே வருகிற பாவம் என்னப்பட்ட யாவையும் விலக்காமல் இருக்கிறது என்கிறது ஞாயமுள்ள கிரமத்துக்கு ஏற்றிருக்கிறதென்று வேறே ஞாயத்தினால் ஒப்புவிக்கலாம். அதாவது: பாவமில்லாத்தனத்தைப் பூமியிலே திரிகிற பேர்களெல்லாருக்கும் கர்த்தரானவர் கொடுத்தருளினுல் மூன்று அனர்த்தங்கள் வரும்போலே காண்பிக்கிறது. 1. அதெனில், கண் மூக்கு இது முதலானதுகள் எல்லாருக்கும் இருக்குமாப்போலே, பாவமில்லாத்தனம் எல்லா

ருக்கும் உண்டானால், கர்த்தன் எல்லாருக்கும் கொடுத்திருக்கிற கண் மூக்கு முதலான நன்மைகளை எண்ணுகிறாப்போலே பாவமில்லாத்தனம் என்கிற பாக்கியத்தை எல்லாரும் எண்ணுவார்களென்று சொல்லத்தகும். அப்படியே பாவமில்லாத்தனமாகிற மகா பாக்கியத்தைக் கனமாய் எண்ணாமல், மனுஷர் தங்களுக்கு அத்தைக் கர்த்தன் கொடுத்தருளினதினால், மிகவும் ஸ்தோத்திரம் பண்ணினார்கள். ஆகையாலே பாவமென்கிற குறையை அடையமாட்டாத பேர்கள் நன்றியறியாத்தனம் என்கிற குறையை அடைந்தார்களென்று சொல்ல வேண்டியிருக்கும். 2. இதன்றியே, இப்படிக்கொத்த நன்மையானது எல்லாருக்கும் உண்டாய் 'அது ஒருத்தனுக்கானாலும் இல்லாமலிருக்கையிலே அவனவன் அத்தைப் போக்கடிக்கலாம் என்கிற விசாரத்துக்கு அவகாசம் இல்லாதபோதே அவனவன் அத்தைப் போக்கலாம் என்கிறதுக்குப் பயப்படாமல் [2]சாவதானமாக நடக்கிறது எப்படி? அவ்வண்ணமே, பூமியாகிற [3]ரணஸ்தலத்திலே பயமும் எச்சரிக்கையும் இல்லாமல் திரியலாமென்று சொல்லத்தகும். அதேதென்றால், பாவம் என்னப்பட்ட யாவும் வராதபடிக்குக் கர்த்தரானவர் விலகிக்கொண்டு வருகிறார் என்று அறிந்தோமானால், பாவமில்லாத்தனத்தோடே கூடியிருக்கிற தேவஇஷ்டப்பிரசாதத்தைப் போக்கடிக்கலாம் என்று பயப்படுகிறதுக்குக் கணக்கேது? பாவமில்லாத்தனத்தைத் தன்னிடத்திலே மரணபரியந்தம் நீடிக்கப்பண்ணுகிறதுக்கு மகா எச்சரிக்கையாய் அவனவன் நடக்கிறதுக்கு உண்டாயிருக்கிற கடமை ஏது? 3. இது தவிர, பாவமில்லாத்தனம் எல்லாருக்கும் அவசியமாய்த் தப்பாமலிருக்கும் என்று அறிந்தோமானால், இப்படிக்கொத்த பாவமில்லாத்தனமாகிற பாக்கியமானது போகாதபடிக்குக் கர்த்தனை மிகவும் பிராத்திக்கிறவர்களார்?

**9.5 கேள்வியும் மறுப்பும்:** இதுக்கெல்லாத்துக்கும் ஒரு பிரத்தியுத்தாரத்தைச் சிலர் சொல்லுகிறார்கள். அதாவது: 'இந்த அனர்த்தங்களெல்லாம் வராதபடிக்குக் கர்த்தரானவர் கூட விலக்குவாரென்று சொன்னோமானால் தோஷமென்ன?' இந்த பிரத்தியுத்தாரமானது ஞாயமுள்ள கிரமத்துக்கு ஒத்து வராதென்று கண்டுபிடிக்கலாம். 1. அதேதென்றால், பாவம்

1 அத்தை (பர. 3ப.) 2 எச்சரிக்கையாக 3 போர்க்களத்திலே

இல்லாத்தனமாகிற குறையற்ற செல்வத்தைக் கர்த்தரானவர் கொடுத்த பேர்களிடத்திலே, சொல்லப்பட்ட அனர்த்தங்கள் வராதபடிக்குத் தனது பிரத்தியக்ஷ தெரிசனமாகிற மோக்ஷ செல்வத்தினாலே விலக்க வேணும். இது அவதியாய் இருக்கக்கொள்ள, அவதியை அடையாத வழிப்போக்கருக்குக் கர்த்தன் அத்தைக் கொடுக்கிறது என்கிறது கிரமமாயிராது. அல்லது இப்படிப்பட்ட அனர்த்தங்கள் வராதபடிக்கு வேறே மகாமகாப்பட்ட வரப்பிரசாதங்களினாலே கர்த்தன் ஒரு இடத்திலே விலக்கினாற் போலே எங்கும் விலக்கலாமென்று சொன்னோமானால், அது ஞாயமுள்ள கிரமத்துக்கு ஏத்திராது. அது ஏனென்றால், உண்டாக்கப்படலான சகல செனங்களைக் காட்டிலும் ஒரு செனமானத்தை தயாபரனான கர்த்தன் உசத்தி, அப்படிப்பட்ட செனத்தை [2]உயர வைத்த அந்தஸ்தைப் பார்த்து உண்டாக்கப்படலான பொருளானது அத்தைக் காட்டிலும், உன்னதமான அந்தஸ்தில் ஏறமாட்டாதென்றிருக்கச்செய்தே, இப்படிப்பட்ட அந்தஸ்திலே இருக்கிற செனத்துக்குக் கர்த்தன் கொடுத்த பாவமில்லாத்தனம் முதலான மகாமகாப்பட்ட வரப்பிரசாதங்களை எல்லாருக்கும், கை கால் முதலான அவையவங்களைக் கொடுத்தாற்போலே, அந்த வரப்பிரசாதங்களையும் கொடுக்கிறதென்கிறது கிரமத்துக்கு ஒக்கும் ஒவ்வாதென்று புத்திமானாயிருக்கிறவன் [1]பரிச்சேதம் பண்ணக்கடவான்.

2. இதன்றியே, அந்தகாரம் ஒரு இடத்திலே உண்டாயிருந்தால், வேறொரு இடத்திலே உண்டான பிரகாசம் அதிகமாக விளங்கும். அத்தன்மைபோலே, பாவமாகிற அந்தகாரமானது ஒரு இடத்திலே மூடியிருக்கிறதுக்கு நீதியுள்ள கர்த்தரானவர் அநேக ஞாயங்களினாலே விலக்காமல் இருக்கையிலே, வேறொரு இடத்திலே பாவமில்லாத்தனமாகிற பிரகாசத்தை அதிகமாக, அவர் அத்தாலே விளங்கப் பண்ணினாற்போலே ஆச்சுது. இந்தடைவிலே கர்த்தனுடைய கிருபையானது மிகவும் விளங்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அது ஏனென்றால், கால் தலை முதலான நன்மைகள் எல்லாருக்கும் கர்த்தரானவர் கொடுக்கிறாப்போலே பாவமில்லாத்தனத்தை எல்லாருக்கும் கொடுத்தாரானால், மற்ற நன்மைகளைக் கொடுத்

1. முடிவு கட்டு 2. அவர் (பா.)

ததிலே திவ்விய கிருபையானது விளங்குமாப்போலே, பாவ மில்லாத்தனத்தைக் கொடுக்கிற விஷயத்திலே திவ்விய கிருபை யானது சரியாய் [1]விளங்காதொழிய மற்றப்படியல்ல.

3. சாதாரணமாய் [2]நிகழக்கூடிய பாவம் என்னப்பட்ட யாவையும் கர்த்தரானவர் விலக்கினால் மகாமகாப்பட்ட நன்மை லோகத்திலே இராதபடிக்குப் பண்ணிக்கொண்டு வரவேணும். அதேதென்றால், வசவு முதலான பொல்லாத வார்த்தைகள் லோகத்திலே இல்லாதபடிக்குக் கர்த்தரானவர் பண்ணினா ரானால், பொறுமை என்கிற தர்மமானது எங்கே? ஆனபடியி னாலே, முன்னே சொல்லப்பட்ட பொல்லாப்புகளைக் கர்த்தரான வர் விலக்கினாரானால், அப்படிப்பட்ட தர்மமானது லோகத்தில் இல்லாதபடி பண்ணவேணுமென்கிறதுக்குத் தப்பாது. சத்தி யத்தின் பேரிலே பகையுள்ளவர்கள் சத்தியத்தை அனுசரிக்கிற புண்ணியவான்களை உபாதிக்கிறார்களே, அந்தப் பாவமானது இல்லாதபடிக்குக் கர்த்தரானவர் விலக்கினால், கர்த்தன் நிமித்தமாகப் பாடுபடுகிற புண்ணியமானது லோகத்திலே இல்லாதிருக்கவேணும். ஆனபடியினாலே, சர்வேசுரன் நிமித்த மாகப் பாடுபடுகிறது என்கிற தருமத்தோடே கூடியிருக்கிற தயிரிய முதலான அனேக புண்ணியங்கள் பூமியிலே இராமற் போம் என்கிறதுக்குத் தப்பாது. கர்த்தன் நிமித்தமாக அப் படிப்பட்ட பாடுபடுகிறது என்கிறது லோகத்திலே இல்லா விட்டால், கர்த்தன் பேரிலே உண்டாயிருக்கிற மிகுந்த பக்தி யானது எதிலே உண்டாயிருக்கிறதென்று காணப்படும்? அதேதென்றால், பொல்லாதவர்கள் கையிலே கர்த்தன் நிமித்த மாகக் கஸ்திப்பட்டுக் கர்த்தர் கற்பித்த நெறியை மகாத்துமாக் களாய் இருக்கிற பேர்கள் நடத்துகிறதினால், நிஷ்டூரர் கையி னாலே அடிபட்டு மரணத்தை அடைகிறதைக் காட்டிலும் கர்த் தன் பேரிலே பத்தியில்லை என்று சொல்லத்தகும். இது இப்படி இருக்கையிலே, லோகத்திலே இப்படிப்பட்ட பாவிகளான பேர்கள் இல்லாதபடிக்குக் கர்த்தரானவர் முழுதும் விலக்கினா ரானால், தேவவிஷயக உத்தம பக்தியாகிற இந்த நன்மையானது லோகத்திலே கர்த்தரானவர் இல்லாதே பண்ணினார் என்று

1 விளங்குமொழிய (பா.) 2 கழக்கோடியாய், கிழக்கொடியாய் (பா.)
பக். 123, 4-கடை கோடியாய் – கடையாய்

சொல்லவேணும். கர்த்தன் நிமித்தமாகப் புண்ணியவான்களாய் இருக்கிற பேர்கள் பற்பல நிர்ப்பந்தங்களை அனுபவியாமலும் உபாதையை அனுப்பிக்க ஆசைப்படாமலும் இப்படிப்பட்ட உத்தம பத்தியை அடைவார்களென்று சொன்னோமானால் இப்படிப்பட்ட சொல்லுதல் ஆர்க்கும் எளிது, செய்தலரிது என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை.

4. கடைசியாய்க், கர்த்தரானவர் பாவம் என்னப்பட்ட யாவையும் விலக்காமல் இருக்கிறதினால், மனோவாக்குக்கு எட்டாததாய் இருக்கிற தனது திவ்விய சாமார்த்தியத்தையும் அளவறுக்கப் படாத பெலத்தையும் காண்பித்தாப்போலாயிற்று. அதேதென்றால், நன்மையில் நின்று நன்மை பிறக்கப் பண்ணுகிறது எப்போதுமுள்ள சுபாவமேரை என்று சொல்லப்படும். கர்த்தரானவர் அநேக ஞாயங்களினாலே மகாமகாப்பட்ட பாவங்களை விலக்காமல் தாம் விலக்காத பாவங்கள் நிமித்தமாக மகாமகாப்பட்ட நன்மைகள் பிறப்பிக்கிறது. அதே அளவறுக்கப்படாத சாமர்த்தியம் என்றும், அதே முகிவில்லாத திவ்விய பெலம் என்றும் சொல்லத்தகுமொழிய மற்றபடியல்ல. அவ்வண்ணமே, பாவமென்னப்பட்ட யாவையும் விலக்கிறதைக் காட்டிலும் சிறிது பாவங்களை விலக்காமல், விலக்காத பாவங்களில் நின்று நன்மை பிறக்கிறது கர்த்தனுடைய நீதியுள்ள திருவுளத்துக்கு அதிகமாய் ஏற்றிருந்தது என்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே, பாவமென்னப்பட்ட யாவையும் கர்த்தரானவர் விலக்காமலிருந்தது என்கிறது குன்றாத ஞாயமென்றும், தப்பில்லாத கிரமமென்றும், லோகத்தை நடத்துகிறதிலே குறையற்ற வகையுள்ள [1]பராமரிசம் என்றும் அற்பமாகிலும் சந்தேகம் இல்லாமல் முழு மனசோடு அங்கீகரிக்கக் கடவோம். அவ்வண்ணமே தப்பில்லாக் கிரமத்தோடு சகலத்தையும் நடத்துகிற கர்த்தரானவர் இந்த மேரையுள்ள கிரமத்தோடு லோகத்தை நடத்துகிறதினால், தனது கரைகாணாத கிருபையையும் சற்றுனாலும் [2]அக்கிரமம் இல்லாத செவ்வையாயிருக்கிற தனது அளவறுக்கப்படாத நீதியையும் காட்டிக்கொண்டு வருகிறார் என்கிறதுக்குத் தப்பாது.

1. Providence 2. கோணல், கோடுதல்

அதேதென்றால், மனுஷரென்னப்பட்ட யாவரும் கரையேற வேணுமென்று, திவ்விய திருவுளத்துக்கு மிகவும் பொருந் தாததாய் இருக்கிற பாவத்திலே விழாமல், நிர்மல புண்ணிய வழியிலே நடக்கிறதுக்குச் சுவாதந்திரியமுள்ள மனசையும் தரும விசாரம் முதலான எண்ணப்படாத திவ்விய சகாயங்களை யும் எல்லாருக்கும் கொடுத்தருளத் திருவுளமுண்டானபோதே, அதிலேதானே வாக்குக்கும் மனசுக்கும் எட்டாததாய் இருக்கிற தனது திவ்விய கருணையை மிகவுங் காட்டினரென்று சொல்லக் கடவோம். அப்படிப்பட்ட கிருபையைச் சிலர் தனது சுவாதந் திரியமுள்ள மனசைக்கொண்டு சட்டைபண்ணமல் வேணும் என்று பாவத்திலே விழுவார்களே, அத்தை விலக்காமற் பார்த் துக்கொண்டிருக்கிற நீதி சுரூபமான கர்த்தரானவர் ஞாயமுள்ள கிரமத்தோடு காரியத்தை நடத்தினரென்று சொல்லவேண்டி இருக்கிறது. அதேதென்றால், அப்படிப்பட்ட பாவம் வராத துக்கு வேறே உபாயங்களினலே விலக்காதிருக்கத் திருவுளமான போது, திவ்விய கிருபைக்குப் பாத்திரமாகாத பாவிகளுக்கு வேறே கிருபை பண்ணமல், அவர்களுடைய பாவங்களுக்கு ஞாயத்தின்படியே ஆக்கினை இடுகிறவராய்த், தனது தப்பில் லாத நீதியைக் காட்டினர் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. தயாபரனயிருக்கிற கர்த்தரானவர், தாம் பண்ணி வருகிற தயையைப் பாவிகளான பேர்கள் சட்டை பண்ணமல் இருப்பார்களென்று அவர் பாத்திருந்தாலும், வேறே உபாயங் களினலே பாவம் என்னப்பட்டதெல்லாம் வராமற் பண்ணு கிறது அவருடைய கிருபைக்கு ஏற்றிருக்கிறதென்று சில மதி கெட்ட பாவிகள் சொல்லிக்கொண்டு வருகிறார்களே, அப்படிப் பட்ட வார்த்தையை புத்தி இல்லாத பேர்கள் சொல்லு கிறதினல், அத்தைச் சட்டை பண்ணக்கடவோமல்ல. அதேதென்றால், சகல நன்மைச் சுரூபமாயிருக்கிற கர்த்த னுக்குக் கரைகாணக் கிருபை உண்டாயிருக்குமாப்போலே, செவ்வையாயிருக்கிற முடிவில்லாத நீதி உண்டாயிருக்கிற துக்குத் தப்பாது. ஆனபடியினலே, பாவம் வராதபடிக்கு ஆன திவ்விய சகாயங்களை மனுஷரென்னப்பட்ட யாவருக்கும் கட்டளை பண்ணுகிறது அவருடைய கிருபைக்கு ஏற்றிருக்குமாப் போலே, திவ்விய கிருபையை மனசு பொருந்திச் சட்டை

பண்ணாத பாவிகளுக்கு ஆன ஆக்கினை இடுகிறது தப்பில்லாத திவ்விய நீதிக்கு ஏத்திருக்கிறதென்று சொல்லத்தகும். ஆன படினாலே பாவம் பண்ணாதபடிக்கு எண்ணப்படாத சகாயங்களைப் பண்ணிக்கொண்டு வருகிற கர்த்தரானவர் தனது தயையைக் காட்டுகிற ஞாயமுள்ள கிரமத்துக்கு ஒத்திருக்குமென்று சொல்லவேணும். அத்தன்மைபோலத், தனது திவ்விய கிருபையைக் சட்டைபண்ணாத பாவிகளுக்குக் கர்த்தரானவர் ஆக்கினையிட வேணுமென்று, வேறே தயை அவர்களுக்குப் பண்ணாமல், அவர்களுடைய பாவங்களை வேறே உபாயங்களினாலே முழுதும் விலக்காமல் இருக்கிறவராய்த், தப்பில்லாத தனது திவ்விய நீதியைக் காட்டுகிறார். இப்படித் தனது திவ்விய நீதியைக் காட்டுகிறது ஞாயமுள்ள கிரமத்துக்கு ஒத்திருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே பாவமென்னப்பட்ட யாவையும் விலக்கினால், திவ்விய கிருபையைச் சட்டைபண்ணாத பாவிகளுக்குக் கர்த்தரானவர் ஒரு இடத்திலே யானாலும் ஆக்கினையிடாமலிருக்க வேணும். இது தப்பில்லாத நீதிக்கு ஒக்குமோ ஒவ்வாதோ என்று புத்திமானா இருக்கிறவன் பரிச்சேதம் பண்ணக்கடவான். அப்படியே, பாவமென்னப்பட்ட யாவையம் கர்த்தரானவர் விலக்காததினால் வேறே அனேக நன்மை வருகிறாப்போலே அவருடைய திவ்விய நீதி விளங்கிறது என்கிற நன்மையானது லோகத்திலே மிகவும் விளங்கிறதென்று சொல்லக்கடவோம்.

**9.6 சில பாவிகள் கரையேற, வேறுசிலர் கரை ஏறாதது பொருந்துமா?** இந்தடைவிலே, சில பேர்கள் பண்ணின பாவங்களைப் பொறுத்து அவர்களைக் கரையேற்றி வேறே சில பேர்கள் பண்ணின பாவங்களைப் பொறாமல் நரகத்திலே தள்ளுகிறதினால், கர்த்தரானவர் மேலே அநியாயத்தை யானாலும் [1]பக்ஷபாதத்தை என்கிலும் ஆரோபிக்கிறதுக்கு அவகாசமில்லை. அதேதென்றால், தனது பிள்ளைகளாகிற மனுஷருக்கு ஒருத்தனுக்கானாலும் அநியாயம் பண்ணாத கர்த்தரானவர், தனது தயை விளங்கும்படிக்குச் சில பாவிகளுடைய பாவங்களைப் பொறுக்கிறதினால் தனது திவ்விய தயையை விளங்கப்பண்ணினாரென்று சொல்லத்தகும். இப்படிப்பட்ட

1. ஓரவஞ்சனை

மேரையானது குற்றமென்று எண்ணக்கூடுமோ? எண்ணக் கூடாது. அம்மருவாதியே, பாவத்தின் நிமித்தமாகப் பச்சாத் தாபம் இல்லாத பாவிகளுடைய பாவங்களைப் பொறுமல், அவர் களை நரகத்திலே தள்ளி ஆக்கினையிடுகிறதினால், கர்த்தரானர் தனது திவ்விய நீதியை விளக்கப்பண்ணுகிறாரென்கிறது தப்பில்லாக் கிரமமென்று சொல்லக்கடவதொழிய, அநியா யத்தையானாலும், பக்ஷபாதத்தை என்கிலும் அது நிமித்தமாகக் கர்த்தன்பேரிலே ஆரோபிக்கிறதுக்கு இடங்காணமாட்டாது.

இதெல்லாம் ஒரு உவமையினால் ஒப்பச் சொல்லக் கடவோம். கண்ணில்லாத நூறு பேர்களுக்குக் கர்த்தன் கிருபை பண்ணினதினால் கண்ணுள்ள பேர்களாய் இருக்கிற வர்கள் எல்லாரும் மனசு பொருந்தி தங்களுக்கு உண்டான கண் களைப் பிடுங்கினால், நீதி சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் இவர்களை நடத்தத்தக்க வகையை விசாரிக்குமிடத்தில், அவனவன் தான் வேணுமென்று தனது கண்களைப் பிடுங்கி எறிந்து போட்டதினால், இவர்களெல்லாரும் குருடராய் இருக் கட்டும் என்று கர்த்தன் சொல்லுகிறது என்கிறது நீதிக்கு ஏற் றிருக்கும் ஒழியக், குருடராய் இருக்கட்டுமென்று கர்த்தரானவர் சொல்லுகிறதினாலேயும், அவர்களுக்குக் கண்களைத் தயாபரனை கர்த்தன் திரும்பக் கொடாததினாலேயும் கர்த்தன் பேரில் அநியாயத்தை ஆரோபிக்கிறதுக்கு அவகாசம் காணமாட்டாது. இது இப்படியிருக்கையிலே, கர்த்தரானவர் தனது தயையைப் பண்ணுகிறதுக்கு வல்லவராய் இருக்கக்கொள்ள, நூறு குருடருக்குள்ளே ஒருத்தனிடத்திலே தனது தயையைக் காட்ட வேணுமென்று கண் கொடுத்தால் இது குற்றமென்று சொல்லத் தகாது. மற்றவர்களுக்குக் கர்த்தரானவர் கண் கொடாததினால் அநியாயம் பண்ணினாரென்று எண்ணவும் கூடாது. அம்மரு வாதியே, மனுஷனுடைய கரையேற்றத்துக்கு வேண்டியதாய் இருக்கிற சுவாதந்திரிய முதலான திவ்விய சகாயங்களைத் தயாபரனை கர்த்தன் மனுஷருக்குக் கொடுத்தாரென்கிறது கரையேறுகிற வழியிலே மனுஷன் நடக்கத்தக்கதாக வேண்டின கண்களை அவனுக்குக் கொடுத்ததுக்குச் சமானமாம். மனுஷ னைவன், வேணுமென்று கர்த்தன் பண்ணின கிருபையைச் சட்டைபண்ணுமல் தனது சுவாதந்திரியத்தினாலே பாவத்திலே

விழுந்து, தேவயிஷ்டப் பிரசாதத்தைப் போக்கடித்தபோதே, தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்துக்கு வேண்டினதாய் இருக்கிற கண்களை வேணுமென்று பாவியானவன் பிடுங்கின துக்கு ஒக்கும். இதெல்லாம் இப்படியிருக்கையிலே, ஒரு பாவி யானவனுக்குக் கர்த்தரானவர் தயை பண்ணித், தனது இஷ்டப் பிரசாதத்தை இவனுக்குக் கொடுக்கத் திருவுளமானால், வேண் டாமென்று சொல்லுவார் உண்டோ? மற்றவர்களுக்குச் சுபாவ மேரையுள்ள கிரமத்தோடு ஆக்கினையிடுகிற கர்த்தன் ஒருத்த னுக்குத் தயை பண்ணினால், மற்றவர்களுக்கு அநியாயம் பண் ணினாரென்று சொல்லத்தகாது.

இது தவிர, இத்தறுவாயிலே அறியவேண்டின ஒரு விசேஷ முண்டு. அது இந்த விஷயத்திலே சந்தேகம் என்னப்பட்டது எல்லாம் தீர்க்குமொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால், தனது கண்களைப் பிடுங்கிற பேர்களுக்குச் சமானராயிருக்கிற பாவிகள் என்னப்பட்ட யாவரும் எந்தெந்தப் பாவமும் பண்ணின பிற்பாடு பூலோகத்திலே இருக்கிற நாள்மட்டும் அவர்கள் பாவத் திலே நின்று திரும்புகிறதுக்குத் தயாபரனான கர்த்தன் போது மான திவ்விய சகாயங்களை அவர்களுக்குப் பண்ணிக்கொண்டு வருகிறாரொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே பாவத்திலே நின்று திரும்பத்தக்கதாக அவர்களுக்கு மனசில்லாததினால் அவர்கள் திரும்பாமல் இருக்கிறார்களென்று சொல்லக்கடவோம். ஆதலால், பாவிகளான பேர்கள் பாவத்தில் நின்று திரும்பாத துக்கு பாவிகள் பேரிலே குற்றம் சுமக்குமொழிய, அவர்கள் நல்லவர்களாயிருக்க வேணுமென்று அதற்கான உதவி பண்ணு கிற கர்த்தன் பேரிலே லவலேசமானாலும் குற்றம் சுமந்திருக்கு மென்று சொல்லவும் கருதவும் கூடாது. இந்தப்பாடம் முதலான வேறே பாடங்களிலே கர்த்தரானவர் பாவங்களை விலக்காம லிருக்கிறார் என்கிற வாக்கியத்துக்கான அர்த்தத்தைச் சாவதான மாய்க் கண்டுபிடிப்பாயாக. அதேதென்றால், பாவத்தை மனுஷ னானவன் பண்ணவேண்டாமென்று கர்த்தரானவர் தமது வேதத் திலே கட்டளையிட்டருளி, ஓர் அற்பப் பாவத்துக்கென்கிலும் உத்தாரம் கொடாததினாலேயும், பாவம் வராதபடிக்கான உதவிகளை மனுஷருக்குப் பண்ணின தினாலேயும், பாவத்தை அவர் குறையற்ற விதமாக விலக்கிறாரென்று சொல்லத்தகும் என்கிற

துக்குச் சந்தேகமில்லை. ஆதலாலே, சர்த்தரானவர் தாம் விலக்கின பாவத்தை மனுஷனவன் பண்ணுதபடிக்குக் கட்டாய முத லான உபாயங்களை அவர் பண்ணுதிருக்கிறது என்கிறது கர்த்த ரானவர் பாவத்தை விலக்காமலிருக்கிறார் என்கிற வாக்கியத்துக் குள்ள அர்த்தத்தைக் கண்டுபிடிக்கலாமொழியக், கர்த்தரான வர் பாவத்துக்கு உத்தாரம் கொடுத்தார் என்கிற அர்த்தத்தை யாலும், அவர் பாவம் செய்யவேண்டாம் என்று கற்பிக்க வில்லை என்கிற மேரையை என்கிலும் சொல்லவும் கருதவும் கடவாயல்ல.

ஒன்பதாம் பாடம் முற்றும்

(கிரந்தம்) உகூடு௯ாசுயிஅ *

## பத்தாம் பாடம்

**10.1 ஆன்மாவின் தோற்றம், இயல்பு கூறுமுன், அதன் ஞான சேட்டைகளைச் சொன்னதேன்?** ஆத்துமத்தினுடைய உற்பத்தி ஏதென்றும், மனுஷ ஆத்துமமாகிறது இன்னதென்றும் வெளிப்படுத்துகிறதுக்கு முன்னே, சரீர சம்மந்தமாயிராத ஞான விருத்திகளையும் சுவாதந்திரிய சேட்டைகளையும் சொன்னோம் என்கிறதினாலே, காரிய காரணத்தை அறிவிக்கிறதிலே ஆன கிர மத்தைத் தப்பினோம் என்று ஒருவனும் விசாரிக்கவேண்டாம். அதேதென்றால், மனுஷ ஆத்துமமானது தனது விருத்திகளுக் குக் காரணமாய் இருக்கிறதினால், ஆத்துமம் இன்னதென்று நிரூபணம் பண்ணின பிற்பாடு, ஆத்துமத்தில் நின்று செனிக்கிற ஞான முதலான விருத்திகள் இன்னதென்று சொல்லுகிறது என்கிறது கிரமம்போலே தோன்றினாலும், இத்தறுவாயிலே இது அனுசரிக்கத்தக்க கிரமமாயிராது. அதேதென்றால், ஞான விருத்திகள் முதலான சுவாதந்திரிய சேட்டைகளுடைய நிச்செயிக்கப்பட்ட சுபாவ சுரூபமானது மனுஷ ஆத்துமம் இன்னதென்றும், அதனுடைய உற்பத்தியானது இப்படிக் கொத்ததென்றும், கண்டுபிடிக்கிறதுக்கு இதுவே மிகவும் உபயோகமாய் இருக்கக்கொள்ள, மனுஷ ஆத்துமத்தில் நின்று

செனிக்கிற ஞானம் முதலான விருத்திகளுடைய சுபாவ சுரூபத்தை நிரூபித்த பிற்பாடு மனுஷ ஆத்துமத்தினுடைய உற்பத்தி இன்னதென்று வெளிப்படுத்துகிறது என்கிறது இந்த அவசரத்திலே அனுசரிக்கத்தக்க கிரமமாய் இருக்கிறதொழிய, மற்றப்படியல்ல. அதேதென்றால், மனுஷ ஆத்துமத்தினுடைய நிர்ணயம் மகா கனமான விருக்காந்தமாய் இருக்கிறதுந் தவிரத், தப்பில்லாமற் சத்தியத்தைச் சூழ்த்திரையாய் அனுசரித்து அதனுடைய சுபாவ சுரூபத்தை வெளிப்படுத்துகிறது மிகவும் அரிதாய் இருக்கக்கொள்ள, எந்தவழியாலே மனுஷ ஆத்துமம் இன்னதென்று எளிதாய் அதிகமதிகமாய்ப்[1] பிரகாசிப்பிக்கப்படுகிறதோ அதே மனுஷ ஆத்துமத்தினுடைய சுபாவ சுரூபத்தை நிரூபிக்கிறதில் உத்தம கிரமமென்று சொல்லத்தகும். ஆத்துமத்தினுடைய நிர்ணயமானது கனமான விருத்தாந்தமென்று சொன்னோம் என்கிறதுக்குக் காரணமேதெனில், ஆத்துமமானது சகல நன்மை சுரூபமான சர்வேசுரனுடைய இராமலிருந்து. அப்படிப் பட்ட சர்வேசுரனாலே பூமியிலே உண்டாக்கப்பட்ட பொருள்களுக்குள் அது உத்தம பொருளென்று சொல்லக்கடவது. இந்த விஷயத்திலே தெளிவற்ற பாவிகள் கற்பித்த தப்பறை விசேஷங்களைப் பார்க்குமிடத்தில் அதுகள் எண்ணப்படாதது களாய் இருக்கிறது என்று சொல்ல வேண்டியிருக்கும். ஆனபடியினாலே, மனுஷனுடைய ஆத்துமமானதும் அதினுடைய உற்பத்தியானதும் இன்னதென்று சுலபத்திலே சொல்லப்பட்ட பிற்பாடு மனுஷ சீவனானது தனது சரீரத்தை மரணம் நிமித்தமாக விட்டுப்பிரிந்தாலும், என்றென்றும் அழியாத பொருளாய் இருக்கிறதென்று சிறிது ஞாயங்களினாலே பன்னிரண்டாம் பாடத்திலே ஒப்புவிக்கக்கடவோம்.

**10.2 ஆன்மாவைப் பற்றிய தப்பறைகள்:** *(1)* சகல நன்மை சுரூபமாய் இருக்கிற சர்வேசுரன், மனுஷசீவனைச் சரீரத்தோடு பூமியிலே திரிகிறார் என்று சில தெளிவற்ற பாவிகள் சொல்லுகிறார்கள். (2) வேறு சிலர், ஆத்துமமானது சருவேசுரனுடைய அங்கிஷம் என்று சொல்லுகிறார்கள். (3) இன்னும் சிலர் மனுஷனிடத்திலே ஸ்தூல சரீரமுண்டென்றும் லிங்கசரீரமாகிற அந்தக்கரணம் உண்டென்றும் சொல்லிப்,

1. விளங்குகிறதோ

பற்பல தண்ணீர்க் குடங்களிலே சூரியனுடைய பிரதிபிம்பம் பிரதிபலிக்கிறதுபோலே அப்படிப்பட்ட மனோபுத்தி சித்தம் அகங்காரம் என்கிற அந்தக்கரணங்களிலே பரமாத்துமாவாகிற சருவேசுரனுடைய பிரதிபிம்பம் பிரதிபலிக்கும் என்றும், ஆன படியினாலே மனுஷனிடத்திலே இருக்கிற அந்தக்கரணங்களான து சீவாத்துமம் என்று சொல்லி, அதிலே பிரதிபலிக்கிற பராபர வஸ்துவினுடைய பிரதிபிம்பமானது ஞானமுடைத்தான பொருளென்றும், பரமாத்துமம் என்றும் வாக்கினாலே மாத்திரம் சொல்லுகிறார்களொழியத் தாங்கள் சொல்லுகிற அடைவு இன்னதென்று தாங்களே அறியாதிருக்கிறார்கள். மேலும், தங்களுடைய தப்பறையான பக்ஷத்தைச் சற்றாகிலும் அங்கீகரிக்கிறதுக்கு மனசுக்குச் சரியாகக் காட்டி நிலைநிறுத்தவும் மாட்டார்கள். (4) வேறே சில மதிகெட்டவர்கள் ஆத்துமமானது சருவேசுரனாய் இருக்கிறதென்று அங்கீகரியாமல், சருவேசுரனோடேகூட அநாதியாய் இருக்கிறதென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அவ்வண்ணமே பதி, பசு, பாசம் என்கிற மூன்று பொருள்கள் அநாதியாய் இருக்கிறதென்று சொல்லி இந்த விஷயத்திலே சில பிரபந்தங்களை லோகத்துக்குக் கேடாக உண்டுபண்ணிக்கொண்டு வந்தார்கள். (5) வேறே சிலர் மனுஷ சீவன்கள் என்னப்பட்ட யாவும் லோகத்தினுடைய ஆரம்பத்திலே கடவுளினால் உண்டாக்கப்பட்டதென்றும் சொல்லி அப்போது அந்தந்த சீவனானது கர்த்தனை உத்தேசித்துப் பத்தியாய் இருந்ததுக்கும் இராததுக்கும் ஆன மேரையாகப், பிற்காலங்களிலே அந்தந்தச் சரீரங்களோடேகூடி மனுஷனாய் இந்த லோகத்திலே திரிகிறது என்கிறார்கள். (6) சிலர், தாய் தகப்பனான பேர்கள் மனுஷ சரீரம் உற்பவிக்கிறதுக்கு உதவி செய்கிறப்போலே, மனுஷ சீவனுக்கும் அவர்கள் காரணமாய் இருக்கிறார்களென்றும் ஸ்தாபித்தார்கள். (7) கடைசியாய் வேறே சில மதிகெட்ட பாவிகள் பூதியங்களுடைய பிரமாணமுள்ள கூட்டுறவானது சீவன் என்று அங்கீகரிக்கிறார்கள். இத்தொகைப்பட்ட பக்ஷங்களுக்குப் பொய்யான துர்மதம் என்கிற நாமமானது செல்லும் என்கிறதுக்குத் தப்பாது. அது ஏனென்றால், ஞாயத்துக்கும் புத்திக்கும் விருத்தமான விசேஷங்கள் அப்படிப்பட்ட மதங்களிலே விதிக்கப்படுகிறதினால் அதுகளுடைய அங்கீகாரமானது மனுஷனானவன்

கரையேறுகிறதுக்கு விக்கினமாய் இருக்கிறதென்பதுக்குத் தப்பாது. இது எப்படியென்று வெளியாகும்படிக்கு ஒவ்வொன்ருய்க் கொஞ்சக்துக்குள்ளே இந்தத் தப்பறை மதங்களை ஆராய்ந்து கொள்ளக்கடவோம்.

**10.3 தப்பறைகளின் மறுப்பு: கடவுள் உடலின் மாத்திரையாகிய உயிர் அல்லர்.** (1) சர்வேசுரனைவர் தானுயிருக்கிற பொருளென்று அங்கீகரிக்க வேணும் என்கிறதினால் அவர் மட்டில்லாத சகல நன்மை சுரூபமாய் இருக்கிறவர் என்று அற்பமாகிலும் சந்தேகமில்லாமல் அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. சீவனேவென்ருல், சரீரத்துக்கு மாத்திரையாய் இருக்கிறதென்று ஒப்புவிக்கப்பட்ட போதே, மனுஷனுடைய பாதியுமாய்க் குறையுள்ள வஸ்துவானதுமாயிருந்து, சரீரத்தோடே கூட முழு மனுஷனுயிருக்கிற வஸ்துவைப் பண்ணிக்கொண்டு வருகிறதென்கிறதுக்குத் தப்பாது. இது இப்படி இருக்கையிலே சீவனைது சகல நன்மை சுரூபமான வஸ்து என்று அறிவின் குறைச்சலினாலே முழுதும் மதிகெட்ட பேர்கள் சொல்வார்களொழிய மற்றப்படியல்ல. 2. இதன்றியே முடிவில்லாத ஞானம், முடிவில்லாத பலம், இது முதலான சகல நன்மை சுரூபமாய் இருக்கிற கர்த்தரானவர் சரீரத்தோடேகூட அஞ்ஞானத்தையும் துர்ப்பலத்தையும் அடைந்தார் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனபடியினாலே, கர்த்தரானவர் சரீரத்தினுடைய [1]உபாதியினாலே கர்த்தருக்குண்டான சுபாவ சொரூபம் அழிந்து போச்சென்று சொல்லத்தகும். அவ்வண்ணமே, கர்த்தனுடைய சுரூபமானது [2]அகண்டமாய் இருக்கையிலே, சற்றுமாத்திரம் அது கெட்டுப் போச்சென்று சொல்லாமல், திவ்விய சுரூபமானது முழுதும் அழிந்துதென்று அங்கீகரிக்க வேணும். 3. இது தவிரச் சரீர உபாதியினாலே, இத்தனை கேடு வந்துதென்று சம்மதித்தோமானால், கர்த்தன் சகல நன்மையாய் இருக்கிறதிலே அவருக்குண்டான பலத்தைக் காட்டிலும் திவ்விய பெலம் முதலான நன்மைகளைக் கெடுக்கிறதிலே அற்ப சரீரத்துக்கு அதிக பெலமுண்டாய் இருக்கிறது என்று அங்கீகரிக்கக் கடவதாகும். இத்தொகைப்பட்ட வேறே அநேகம் விஷயங்களை அங்கீகரியாதபடிக்குச், சகல நன்மை

1 தொடர்பு 2 Simple, indivisible, பகாத

சுரூபமாயிருக்கிற சர்வேசுரனானவர் சரீரத்துக்கு மாத்திரையான சீவனாய் இருக்கலாமென்று சொல்லவும் கருதவுங்கூடாது. 4. இதன்றியே, அக்கியானம் காமம் குரோதம் இது முதலான பாவங்களெல்லாம் மனுஷரிடத்திலே உண்டாயிருக்கிறது என்று (பிரத்தியக்ஷமாகக்) கண்டிருக்கிறோமே, அப்படிப்பட்ட பாவங்களுக்குச் சீவனானது பிரதான காரணமென்று சொல்லவேணும் என்கிறதினால், சகல நன்மை சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் மனுஷனுக்குச் சீவனாயிருக்கிறார் என்று அங்கீகரித்தோமானால், அவர் தாமே சகல பாவத்துக்கும் பிரதான காரணமாய் இருக்கிறார் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. 5. பின்னையும் பாவ நிவாரணம் உண்டாகிறதுக்குப் பாவிகளான பேர்கள் கர்த்தனை வேண்டிக்கொள்கிறபோது, தமது பாவங்களைத் தங்களுக்குத் தாங்களே பொறுக்க வேணுமென்று தாங்கள் தங்களை வேண்டிக்கொள்கிறார்கள் என்று சொன்னாப்போலே ஆச்சுது. 6. கடைசியாய் மரணம் நிமித்தமாகச் சீவனானது தனது சரீரத்தைவிட்டுப் பிரிகிறபோது, பாவம் நிமித்தமாக நரகத்திலே விழுகிறது என்கிற வார்த்தையானது லோகத்திலே நடந்து வருகிறதே, கர்த்தரானவர் சீவனாயிருந்தால் அவர்தானே நரகத்திலே விழுகிறாரென்றும், நரக வேதனையை அவர்தானே அனுபவிக்கிறார் என்றும் சொல்லக்கடவது. இதெல்லாம் திவ்விய தீர்வையினாலே வரவேணும் என்றிருக்கையிலே, கர்த்தரானவர் நரகத்திலே விழுகிறதுக்குத் தாம் தமக்குத் தீர்வை சொன்னாரென்று சொல்லத்தகும்.

7. அவ்வண்ணமே, கர்த்தரானவர் சீவனாயிருந்தால், இத்தனை கேடுகளும் இத்தொகைப்பட்ட வேறே அனேக சேதங்களும் சரீர உபாதியினாலே அவருக்கு வருகிறதென்று சொல்லவேண்டி இருக்கையிலே, அவர் சரீரத்துக்குச் சீவனாய் இருக்கிறாரென்று சம்மதிக்கிறபோது, தாம் தம்மைக் கெடுக்கிறதுக்குச் சம்மதித்தாப்போலே ஆச்சுது. ஆனபடியினாலே கர்த்தரானவர் *நிஷ்கள அவஸ்தையை அடைந்திருக்கையிலே தானே சரீரத்தை எடுத்துச் சரீர உபாதியினாலே இத்தனை கேடுகளை அடையத்தக்கதாகத் திருவுளமுண்டாயிருந்தபோதே, அப்படிப்பட்ட நிஷ்கள அவஸ்தையிலேதானே கர்த்தரானவர்

* உருவமற்ற நிலை

மதிகெட்டவரா யிருக்கிருரென்று சொல்லவேணும். அதேதென்ருல், யாராலும் தானே கெட்டுப்போகிறதுக்குச் சம்மதித்தால், அவன் முழுது மதிகெட்டவனுய் இருக்கிருனென்று சொல்லவேணுமொழிய, மற்றப்படியல்ல. ஆதலாலே, இத்தனை கேடுகளைத் தனக்கு வருத்திவிக்கிற விளையாட்டுக்களைக் கர்த்தன் பண்ணுகிறதுக்கு மனசுண்டாய் இருக்கலாமென்று சொல்லுகிறவனே முழுதும் மதிகெட்டவன் என்றும், அவனே லெச்சையில்லாத தப்பறைக்காரனென்றும், பாவிகளுக்குள்ளே அவனே மேலான பாவியாய் இருக்கிருன் என்றும் சொல்லக் கடவோமொழிய மற்றப்படியல்ல.

**10.4 (2) ஆன்மா கடவுளின் அம்சம் அன்று:** சொல்லப்பட்ட இந்த ஞாயங்களினுலே சீவனுனது கர்த்தனுடைய அங்கிஷமாய் இருக்க மாட்டாதென்று சத்தியத்திலே தாற்பரியமுள்ள புத்திமானுய் இருக்கிறவன் கண்டுபிடிக்கக் கடவான். 1. இதன்றியே, சர்வேசுரனிடத்திலே நின்று அங்கிஷம் பிரியலாமென்று அங்கீகரித்தோமானுல், தனது நிஷ்கள அவஸ்தையிலேதானே கர்த்தரானவருக்கு இடைவிடாமல் விகாரங்கள் வருகிறதென்று சொல்லவேணும். அதேதென்ருல், வஸ்துவினிடத்திலிருந்து இடைவிடாமல் எண்ணப்படாத அங்கிஷங்கள் மேலே அங்கிஷங்கள் பிறக்கிறபோது, அப்படிப்பட்ட அங்கிஷங்களுடைய பிரித்தலினுலே வஸ்துவுக்கு வேற்றுமையும் விகாரமும் பலிக்கிறதென்று அங்கீகரிக்கக்கடவது. 2. இதன்றியே, சீவனுனது பராபர வஸ்துவினுடைய அங்கிஷமாயிருந்தால், பராபர வஸ்துவைப் போலே சீவனுனது ஞானம் பெலம் இது முதலான நன்மைகளுடைய சுரூபமாய் இருக்கவேணும். ஆனபடியினுலே ஞானத்திலேயும் பலத்திலேயும் மற்றுமுண்டான சகல நன்மைகளிலேயும் குறைவற்ற பேர்களாய் இருக்கவேணும். அது ஏது என்ருல், பிள்ளையானவன் பிதாவினுடைய அங்கிஷமாய் இருக்கக்கொள்ள, (அவன்) பிதாவுக்குண்டான சரியான சுபாவத்தை உடைத்தானவனுய் இருப்பானெழிய மற்றப்படி அல்ல. 3. இது தவிரச், சரீர உபாதியினுலே கர்த்தரானவருடைய அங்கிஷமானது அங்கங்கே சீவனுய் இருக்கிறது என்று அங்கீகரித்தோமானுல், மனுஷருக்குள்ளே பகைகள்

உண்டாய் ஒருத்தன் ஒருத்தனைக் கெடுக்கிறான் என்கிறபோது, கர்த்தரானவர் சரீர உபாதியினாலே தாம் தமக்குப் பகையாய் இருக்கிறாரென்றும், தாம் தம்மைக் கெடுக்கிறாரென்றும் அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. ஆனபடியினாலே சொல்லப் பட்ட தப்பறை விசேஷங்களுடையவும் மற்ற அனேக அபத்தங் களுடையவும் அங்கீகாரமானது கரையேறுகிறதுக்கு விக்கின மாய் இருக்கக்கொள்ள, கரையேற(த்தக்க)தாற்பரியமுள்ளவன் இப்படிப்பட்ட துர்மதங்களை முழு மனதோடு வெறுக்கக் கடவான்.

**10.5 (3) ஆன்மா, கடவுளின் பிரதிபிம்பம் அன்று:** சீவனானது, சர்வேசுரனாலும் அவருடைய அங்கிஷமாயென் கிலும் இருக்க மாட்டாதென்று சந்தேகப்படத் தகாத சத்திய மாய் இருக்குமாப்போலே, அந்தகரணத்திலே பிரதிபலிக்கிற பராபர வஸ்துவினுடைய பிரதிபிம்பமானது சீவனாயிருக்க மாட்டாதென்று ஸ்திரமாக அங்கீகரிக்கத்தக்க சத்தியமாயிருக் கும் என்கிறதுக்குத் தப்பாது. இந்தப் பக்ஷத்திலே அனேகம் தப்பறைகள் அடங்குமென்று பிரத்தியக்ஷமாய்க் காண்பிக்கத் தக்கதாக ஒப்பச் சொல்லலாம். ஆனால் இந்தத் தப்பறையான பக்ஷத்தைச் [1]சமறப்பகமாய்க் கண்டிக்கிறதுக்கு இது தறுவாயல்ல என்கிறதினாலேயும், ஆத்தும விஷயத்திலே அறியவேண்டின வேறே சத்திய விசேஷங்களை இத்தறுவாயிலே வெளிப்படுத்த நமக்குக் கருத்துண்டாயிருக்கிறதினாலேயும் இந்தத் துர்மத முத லான வேறே அனேக துர்மதங்களினாலே ஆத்தும விஷயத்திலே கற்பிக்கப்படுகிற தப்பறை விசேஷங்களைத் தனித்தனியே இத் தறுவாயிலே தெளிவித்துக் கண்டிக்கக் கடவோமல்ல. இது தவிர இந்தத் தப்பறையானது கொஞ்சமாய்ப் [2]பராமரிசிக்கப் பட்டாலும் தப்பறையென்று தானே எளிதாய்க் காண்பிக்கிற தினாலே, அத்தை அனேக ஞாயங்களினாலே விஸ்தாரமாய்க் கண்டிக்கிறதுக்குப் பிரயாசப்படுகிறவன் வியர்த்த பிரயாசப் படுகிறானென்று சொல்லுகிறதுக்கு இடங்கொடுத்தாப் போலே ஆகும். ஆனபடியினாலே, இரண்டொரு ஞாயத்தினாலே இது தப்பறையாய் இருக்கிறதென்று காட்டி, அப்பால் [3]நடத்தத்தக்க விசேஷங்களை நடத்தக்கடவோம்.

1. முற்றிலும், செம்மையாக. 2. ஆராய 3. பேச

1. பராபர வஸ்துவினுடைய பிரதிபிம்பம் உண்டாக்கப் படலாம் என்று சொல்லி, அது சர்வேசுரன் என்று அங்கீ கரித்தோமானால், இப்படிச் சொல்லுகிறதினாலே தானே விருத்த மான அர்த்தங்கள் சொல்லப்படும் என்கிறதுக்குச் சந்தேகம் இல்லை. அதேதென்றால், பொருளின் வகையானது பொருளி னுடைய பிரதிபிம்பத்திலே காண்பிக்க வேணுமொழிய அந்தப் பொருளின் பிரதிபிம்பமானது பொருளாய் இராதென்றிருக்கை யிலே, உண்டாக்கப்பட்ட பிரதிபிம்பத்திலே தானாய் இருக்கிற ஸ்திதியின் வகையானது உண்டென்று காண்பிக்கிறது எப்படி? ஆனபடியினாலே, ஞாயத்தை விசாரிக்குமிடத்திலே தானாய் இருக்கிற வஸ்துவின் பிரதிபிம்பமானது வஸ்துவாயிருந்தால், அது தானாயிருக்க வேணும். தானாயிருக்கிற பிரதிபிம்பமானது சர்வேசுரனாலே உண்டாக்கப்பட்டதென்று சொல்லுகிறது என்கிறது முழுத் தப்பறையாய் இருக்கிறதென்று அற்பப்புத்தி உள்ளவனாய் இருந்தாலுங் கண்டுபிடிப்பான். 2. இதுதவிர, மனுஷனுக்குண்டான கண் மூக்கு முதலான அவையவங்கள் மனுஷனுடைய பிரதிபிம்பத்திலே 'காண்பித்திருக்க வேணு மொழிய, அது மனுஷனாயிராது. அத்தன்மைபோலக் கர்த்த ரானவர் மட்டில்லாமல் சகல நன்மையாய் இருக்கக்கொள்ள, அவருக்குப் பிரதிபிம்பம் உண்டாகி அது சருவேசுரனாயிருந்தால், அப்பிரதிபிம்பத்திலேதானே மட்டில்லாத சகல நன்மை காண்பித்திருக்கிறதும் தவிர அது சகல நன்மையாய் இருக்க வேணும். மட்டில்லாத சகல நன்மையானது என்கிறதும், உண்டாக்கப்பட்ட வஸ்துவிலே அது உண்டாயிருக்கிறது என்கிறதும், புத்திக்கு ஒத்திராது. இந்த இரண்டு விசேஷ மானது ஞாயமுள்ள புத்திக்கு ஒவ்வாததாய் இருக்கிறதொழிய மற்றப்படியல்ல.

3. பின்னையும், வஸ்துவினுடைய பிரதிபிம்பமானது வஸ்துவுக்குப் பின்னமாய் இருக்கிறதும் தவிர, வஸ்துவில்லாத ஸ்தலத்திலே உண்டாயிருக்க வேணும். அவ்வண்ணமே, சூரிய னானது தண்ணீர்க் குடத்திலேயும், மனுஷனானவன் கண்ணாடி யிலேயும் இருக்கவில்லை என்கிறதினால், தண்ணீர்க் குடத்திலே யும் கண்ணாடியிலேயும் சூரியனுடையவும் மனுஷனுடையவும்

4. தோன்ற.

பிரதிபிம்பங்கள் பிரதிபலிக்கிறதொழிய, மற்றப்படியல்ல. ஆனபடியினாலே, பரமாத்துமத்தின் பிரதிபிம்பம் அந்தக்கரண முதலான ஸ்தலங்களிலே பிரதிபலிக்கிறதென்று அங்கீகரித்தோமானால், பரமாத்துமமானது எங்குமில்லை என்று சொல்லக் கடவது. கர்த்தரானவர் எங்கும் இருக்கவில்லை என்று சொல்லுகிறது, கர்த்தரானவர் கர்த்தர் அல்லவென்றும், லோகத்திலே சர்வேசுரன் இல்லை என்றும் சொல்லுகிறதுக்கு ஒக்கும்.

4. இதன்றியே, கர்த்தரானவர் முகிவில்லாத ஞானமாய் இருக்கிறபோது, அப்படிப்பட்ட முகிவில்லாத ஞானத்தினுடைய பிரதிபிம்பமானது மனுஷனிடத்தில் இருக்கிறது என்று சொன்னோமானால், மனுஷனிடத்தில் அக்கியானம் வருகிறதுக்கு அவகாசமில்லை. அதெப்படியெனறால், தண்ணீர்க் குடத்திலே சூரியனுடைய பிரதிபிம்பம் உண்டாயிருக்கையிலே, தண்ணீர்க் குடத்தில் அந்தகாரம் வருகிறதுக்கு இடமுண்டாயிராது. அத்தன்மை போலே, பரமாத்துமமாகிற முகிவில்லாத ஞானத்தின் பிரதிபிம்பமானது மனுஷனிடத்திலே இருந்தால், அக்கியானமாகிற அந்தகாரமானது மனுஷனிடத்திலே வருகிறதுக்கு இடமில்லாதே போகவேணும். அதேதென்றால், குடத்தினுடைய உபாதியானது சூரியனுடைய பிரதிபிம்பத்தோடே கூட அந்தகாரமாய் இருக்கப் பண்ணமாட்டாதது போலே, அந்தக்கரணத்தினுடைய உபாதியானது முகிவில்லாத ஞானமாகிற பிரகாசத்தின் பிரதிபிம்பத்தோடே கூட இருளாகிற அக்கியானம் இருக்கப் பண்ண மாட்டாதென்று சொல்ல வேணுமொழிய மற்றப்படியல்ல. ஞான விஷயத்திலே சொல்லப்படுகிறப்போலே மற்ற நன்மை விஷயங்களிலேயும் யோசிக்கக் கடவோம். அதேதென்றால், கர்த்தரானவர் சகல நன்மை சுரூபமாய் இருக்கையிலே அவருடைய பிரதிபிம்பமானது சகல நன்மையினுடைய பிரதிபிம்பமாய் இருக்கவேணும் என்கிறதுக்குத் தப்பாது. மனுஷனிடத்திலே அக்கியானம் தப்பறை முதலான சகல பொல்லாப்புகளும் உண்டாயிருக்கையிலே, மனுஷனிடத்திலே சகல நன்மைகளுடைய பிரதிபிம்பம் உண்டு என்று கண்டுபிடிக்கிறதுக்கு இடம் காணமாட்டாது.

5. பின்னையும், மட்டில்லாத சகல நன்மையாகிற பரமாத்து மத்தின் பிரதிபிம்பமானது, முன் சொன்னாப்போலே, உண்டாக்கப்படலாம் என்று சொல்லக்கூடாது என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால், விஷயத்தினுடைய பிரதிபிம்பமானது விஷயமில்லாத இடத்திலே இருக்கலாமொழிய, விஷயமுண்டான இடத்திலே இருக்கக் காணோம். அவ்வண்ணமே, [1]பஞ்சேந்திரியங்களுடைய [2]விஷயமானதுகள் இந்திரியத்துக்குள்ளே இராததினால், அதுகளுடைய பிரதிபிம்பமானது இந்திரியங்களுக்கு உள்ளே இருந்து இந்திரியமானது வஸ்துவினுடைய பிரதிபிம்பத்தைக் கொண்டு வஸ்துவைக் கிரகிக்கும். புத்திக்குள்ளே அந்தந்த வஸ்துக்கள் இல்லாமல் இருக்கையிலே, வஸ்துக்களுடைய பிரதிபிம்பங்கள் புத்திக்குள்ளே இருந்துகொண்டு அப்படிக்கொத்த பிரதிபிம்பங்களைக் கொண்டு வஸ்துக்களை அறியும். இது இப்படி இருக்கையிலே, பராபர வஸ்துவின் பிரதிபிம்பம் இருக்கலாம் என்று சொன்னோமானால் அப் பராபர வஸ்து இல்லாத இடத்திலே அதனுடைய பிரதிபிம்பமானது இருக்கிறதென்று அங்கீகரிக்க வேணும்.

6. இதன்றியே, இவர்கள் சொல்கிறாப்போலே, பராபர வஸ்துவின் பிரதிபிம்பம் உண்டென்று அங்கீகரிக்கும்போது, இப்படிப்பட்ட பிரதிபிம்பமானது அந்தக்கரணத்திலே இருக்கிறதினாலே, என்ன வரும் என்று கேட்கிறோம். அதேதென்றால், அறிக்கை இந்திரியமுடைத்தான பொருளினிடத்திலே, வஸ்துவின் பிரதிபிம்பமானது வஸ்துவைக் கிரகிக்கிறதுக்கு உதவி செய்யுமொழிய வேறொன்றைப் பண்ணக்காணோம். அந்தந்த விஷயங்களைக் கிரகிக்கிறதுக்குப் பெலமுடைத்தான பொருள்களிடத்திலே உண்டாயிருக்கிற விஷயங்களுடைய பிரதிபிம்பங்களை ஆராய்ந்து கொள்ளுகிற புத்திமானுக்கு இந்த சத்தியமானது பிரத்தியக்ஷமாய்க் காண்பிக்கிறதொழிய மற்றப்படியல்ல. இது இப்படியிருக்கையிலே, மண்ணாங்கட்டிபோலே இருக்கிற அந்தக்கரணத்திலே பராபர வஸ்துவினுடைய பிரதிபிம்பமானது இருக்கிறதுக்குப் பலன் காணமாட்டாது. அது

1 Senses 2 Object

ஏனென்றால், அந்தக்கரணமானது தனது சுபாவத்திலே ஞானமுடைத்தானதாய் இராதென்று சொல்லுகிறார்கள். ஆனபடியினாலே, பராபர வஸ்துவின் பிரதிபிம்பத்தைக் கொண்டு அந்தக்கரணமானது பராபர வஸ்துவை அறியமாட்டாது. சூரியனுடைய பிரதிபிம்பத்தைக் கொண்டிருக்கிற செலத்தின் குடமானது சூரியனை அறியாததுபோலே, பராபர வஸ்துவின் பிரதிபிம்பத்தைக் கொண்டிருக்கிற அந்தக்கரணமானது பராபர வஸ்துவை அறிய மாட்டாதென்று சொல்லக்கடவது.

7. அல்லது அப்படிப்பட்ட பிரதிபிம்பத்தின் காரண நிமித்தமாக மண்ணுங்கட்டிபோலே இருக்கிற அந்தக்கரணமானது அறிகிறதுக்கு வல்லதாய் இருக்கிறதென்று சொன்னோமானால், அப்படியே இந்தப் பக்ஷமானது அபத்தத் தப்பறை என்று கண்டுபிடிக்கலாம். அதேதென்றால், இந்த விஷயத்திலே மனுஷனுக்கு நடக்கும் மேரையை விசாரிக்குமிடத்தில், அந்தந்தப் பொருளினுடைய பிரதிபிம்பமானது தனது பொருளை அறியப்பண்ணுமொழிய, ஒரு பொருளின் பிரதிபிம்பமானது மற்றப் பொருள்களை அறிகிறதுக்கு உதவாது. அவ்வண்ணமே, பராபர வஸ்துவின் பிரதிபிம்பமானது அந்தக்கரணத்தில் இருந்தால், அப்படிப்பட்ட பிரதிபிம்பமானது பராபர வஸ்துவை அந்தக்கரணம் அறியத்தக்கதாக உதவுமொழியக், கர்த்தனுக்கு வேற்றுமை மேரையாய் இருக்கிற மற்றப் பொருள்களை அந்தக்கரணம் அறிகிறதுக்குத் திவ்விய பிரதிபிம்பமானது சகாயம் பண்ணமாட்டாது. 8. இந்த விஷயத்திலே இவர்கள் சொல்லுகிற அபத்தமான பிரத்தியுத்தாரமாவது: ஒரு சூரியனானது தான் பிரகாசம் உள்ளதாயிருக்கையிலே, மற்றப் பொருள்களைப் பிரகாச முள்ளதாகப் பண்ணுகிறதுபோலே, ஒரே பரமாத்துமமானது தான் முகிவில்லாத ஞான சுரூபமாக இருக்கையிலே, எண்ணப்படாத அந்தக்கரணங்களிலே பிரதிபலித்து அந்தக்கரணங்கள் என்னப்பட்ட யாவையும் ஞானமுடைத்தானதுகளாகப் பண்ணிக்கொண்டு வரும் என்கிறார்கள். – இந்த உவமை

1 Demonstrated conclusion

யினுலே தெளிவுஅற்ற பேர்கள் தமது தப்பறைப் பக்ஷத்தைச் [1]சித்தாந்தம்போல ஒப்புவித்தார்கள் என்று எண்ணுகிறுர்கள். அவர்கள் எதிலே மோசம் போகிறுர்கள் என்று அறியாதபோது அவர்கள் மோசம் போகிறவிடத்தை நாமே வெளிப்படுத்தக்கடவோம். அதெப்படியென்ருல், பிரகாசத்தைக் கொண்டிருக்கிறது என்கிறதுக்கும், ஞானவிருத்தியைக் கொண்டிருக்கிறது என்கிறதுக்கும் மிகுந்த வேற்றுமை உண்டென்று சொல்லக்கடவோம். அதாவது வெள்ளை கறுப்பு இது முதலான குணங்களைக் கல்லு மரங்கள் முதலான திரவியங்கள் கொண்டிருக்கிறுப்போலே சூரியனிடத்தில் நின்று பிறக்கிற பிரகாசத்தை ஆகாசமும் சலமும் மற்ற அனேக பதார்த்தங்களும் கொண்டிருக்கலாம் என்கிறதுக்குத் தப்பாது. ஞானமோவென்ருல், உயிருள்ள விருத்தியாய் இருக்கக்கொள்ள, அது எந்த வஸ்துவினிடத்தில் நின்று செனிக்குமோ அந்த வஸ்துவினிடத்தில் [1]ஆதேயமாயிருந்து, அத்தை ஞானமுடைத்தான பொருளாகப் பண்ணுமொழிய, ஒரு வஸ்துவினிடத்தில் நின்று பிறந்து தான் பிறந்த வஸ்துவை விட்டு பிரிந்து வேறொரு வஸ்துவினிடத்திலே [2]தாண்டி அத்தை ஞானமுடைத்தான பொருளாகப் பண்ணமாட்டாது. நோவும் துக்கமும் சந்தோஷமும் முதலான உயிருள்ள சேட்டைகள் ஒருத்தனிடத்திலே பிறந்து வேறொருத்தனிடத்திலே பாய்ந்து, பாய்ந்த பொருளை நோவும் சந்தோஷமும் உண்டாவதாகப் பண்ணமாட்டாதது போலே, உயிருள்ள சேட்டைகளுக்குள்ளே உத்தம உயிருள்ள சேட்டையாகிற ஞானமானது, தன்னைப் பிறப்பிக்கிற பொருளிடத்திலே ஆதேயமாயிருந்து அத்தை ஞானமுடைத்தானதாகப் பண்ணி வருமொழிய மற்றபடியல்ல.

இந்த மேரையானது சேட்டை என்னப்பட்ட யாவுக்கும் உண்டாயிருக்கையிலே, உயிருள்ள சேட்டையாகிற ஞானத்தின் இடத்திலே அது காணுதென்று யாதொருத்தன் சொன்னுல், அவன் முழுதும் ஞானமில்லாத மிருகத்துக்குச் சரியாயிருக்கிறுன் என்று சொல்லக் கடவோம். இந்த [3]மதத்தை அனுசரிக்

1. சார்தல் Inheregre 2. Transire 3. கொள்கை

கிற பேர்கள் அந்தக்கரணம் எந்த விதமாக [4]க்ஷயமாய்ப்போம் என்றும், பரமாத்துமத்தினுடைய பிரதிபிம்பமானது எந்தப் பிரகாரமாகப் பரமாத்துமத்திலே [5]லயமாய்ப்போம் என்றும் சொல்லுகிறார்களோ, அதெல்லாம் மனுஷனுடைய சீவனானது என்றென்றைக்கும் நிற்கிற பொருளாயிருக்கிறது என்று ஒப்புவிக்கிற தருவாயிலே, இதெல்லாம் ஆராய்ந்து கொள்ளக் கடவோம். இனி வேறே சில தெளிவற்ற பாவிகளினாலே இந்த விஷயத்திலே கற்பிக்கப்பட்ட வெவ்வேறு தப்பறை விஷயங் களை வருகிற பாடத்திலே வெளிப்படுத்துவோம்.

பத்தாம் பாடம் முற்றும்

(கிரந்தம்) உ௱௭௰ *

---

## பதினோராம் பாடம்

**11.1 ஆன்மா பற்றித் தவறான கொள்கைகள்:** பராபரவஸ்து என்கிலும் பராபரவஸ்துவினுடைய அங்கிஷம், பிரதிபிம்பமானாலும் சீவனாயிருக்க மாட்டாமல் தன்று சிலபேர்கள் சொன்னாலும், ஆத்துமம் இன்னதென்று அவர்கள் சொல்லு கிறதிலே வேறொரு அபத்த விசேஷத்தைக் கற்பித்தார்கள். அதாவது, சருவேசுரனைப் போல் ஆத்துமம் அநாதியாய் இருக் கிறதென்று ஸ்தாபிக்க வருந்தி, பதி, பசு, பாசம் என்கிற மூன்று பொருள்கள் அநாதியாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கத் தக்கதாகுமென்று சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லுகிற துக்கு அர்த்தமாவது: பதி, பசு, பாசம் என்கிறது ஒன்றான சருவேசுரனும், சீவனும், கருமமும் என்று ஸ்தாபித்து, இந்த மூன்றுங் கூட அநாதியாய் இருக்கவேணுமென்று அறிவின் [1]குறைச்சலினால் அங்கீகரித்து, இவர்கள் தமது பக்ஷத்தைப் புராண பிரமாணத்தினால் அத்தை ஒப்புவிக்கிறதும் தவிர, ஒரு ஞாயத்தினால் அத்தை ஒப்புவிக்க வருந்துகிறார்கள். "அதே தென்றால், ஆத்துமமானது உண்டாக்கப்பட்ட பொருளாயிருந்

4. அழி 5. இரண்டறக் கலத்தல், ஒன்றாதல். * 270

1 ஒரு பிரதியில் குறைச்சல், குறைத்தல் என்றே வருகிறது.

தால், அது அழிந்து போகிற பொருளென்று அங்கீகரிக்க வேணும். மனுஷ சீவனானது என்றைக்கும் நிற்கிற பொருளாய் இருக்கிறதென்று சொல்லவேண்டி இருக்கக்கொள்ள, நரசீவனானது உண்டாக்கப்பட்ட பொருளென்று சம்மதிக்க வேண்ணுதாம். ஆனபடியினாலே, நரசீவனானது சருவேசுரனைப் போல் அநாதியாய் இருக்கிறதென்று ஒப்புக்கொள்ளக் கடவது" என்று சொல்லுகிறார்கள்.

**11.2 அழிபடாத பொருள்கள் இருவகை: கடவுள், ஆன்மா:** இந்தத் தப்பறையை அவர்கள் ஸ்தாபிக்கிறதுக்குச் சொல்லி வருகிற ஞாயமானது மோசம் போகிற இடத்தைக் காட்டக்கடவோம். அதினுடைய [4]தப்பின் குறைச்சலானது விளங்கும்படிக்கு அறிய வேண்டினதாவது: நாசத்துக்குப் பாத்திரமாய் இராத பொருட்கள் இரண்டு விதமாகப் பிரியும். ஒருத்தனால் அழிக்கப்படாது என்கிறது முதலாம் விதமாகும். நாசத்துக்குக் காரணமான குணத்தைக் [2]கொண்டிராமல் இருக்கிறது என்கிறது இரண்டாம் விதமென்று சொல்லப்படும். இந்தடைவாக நாசத்துக்குப் பாத்திரமாயிருக்கிற பொருளானது இரண்டு வகைக்குள் அடங்கும். அதெதென்றால், அன்னியோன்னியமாய் விரோத குணங்களைக் கொண்டிருக்கிற பொருளானது முதலாம் வகையில் அடங்கின நாசத்துக்குப் பாத்திரமான பொருளென்று சொல்லப்படும். இந்த மேரையாகப் பவுதீக சரீரமானது அன்னியோன்னியமாய் விருத்தமான குணங்களாகிற உஷ்ணம் குளிர் முதலானதுகளைக் கொண்டிருக்கக்கொள்ள, அது நாசத்துக்குப் பாத்திரமான பொருளென்று சொல்லக் கடவோம். இது தவிர, யாதொரு பொருளானது நாசத்துக்குக் காரணமாயிருக்கிற அன்னியோன்னிய விருத்தமான குணங்களைக் கொண்டிராதிருந்தாலும், தான் நிற்கிறதுக்கு (முன் சொல்லப்பட்ட) அழிந்துபோகிற [2](பதார்த்தத்தை [1]அவசியமாய் அபேக்ஷிக்தால் நாசத்துக்குப் பாத்திரமாயிருக்கிற பொருள் என்று சொல்ல வேணுமொழிய மற்றப்படியல்ல. இந்தடைவிலே [3]ஞானமில்லாத செந்துவினுடைய சீவனானது விரோதமான குணங்களைக் கொண்டிராதிருந்தாலும், தான் நிற்கிறதுக்கு

2 +காட்டி. (பா பே.) 1 Necessarily require 2 — (பா. பே)
3 Irrational animals 4. ஞாயத்தின்?

அழிந்துபோகிற) சரீரத்தை அவசியமாய் அபேக்ஷிக்கிறதினுல், ஞானமில்லாத செந்துக்களுடைய சீவன்களென்னப்பட்ட யாவும் அழிந்துபோகிற பொருட்களென்று அங்கீகரிக்கதக்க தாகும்.

இது இப்படியிருக்கையிலே, நரசீவனுனது அழியாத பொருளாயிருக்கிறதென்று நாங்கள் சொல்லும்போது, நரசீவனுனது நாசத்துக்குக் காரணமாயிருக்கிற உஷ்ணம் குளிரென்கிற விரோதமான குணங்களைக் கொண்டிருக்கவில்லை என்றும், அது நிற்கிறதுக்கு அழிந்துபோகிற பதார்த்தத்தை அவசியமாய் அபேக்ஷிக்கவில்லை என்றும் சொல்லுகிறோமொழிய, வேறொரு காரணத்தினுலே அழிக்கப்படாதென்று அங்கீகரிக்கிறோமில்லை. அதேதென்றுல், இந்தடவிலே நாசத்துக்குப் பாத்திரமாகாத பொருளானது சருவேசுரன் ஒருவரேயொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே, அவர் ஒருவரே வேறேயொரு காரணத்தினுலே அழிக்கப்படாமல், மற்றப் பொருளென்னப்பட்ட யாவையும் ஆதிகாரணமான சருவேசுரன் உண்டாக்கினுப்போலே அகெல்லாத்தையும் அவர்தானே அழிக்கலாம் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. ஆதலாலே, உண்டாக்கப்பட்ட பொருளெல்லாம் அழிந்து போகலாமென்கிற வாக்கியமானது முதல் விதமுள்ள அர்த்தத்தைக் கொண்டிருந்தால், மெய்யான வாக்கியம் என்கிறதுக்குத் தப்பாது. உண்டாக்கப்பட்ட பொருளானது விரோதமான குணங்களைக் கொண்டிருக்கிறதினுலே ஆனுலும், அது நிற்கிறதுக்கு அழிந்து போகிற பதார்த்தத்தை அபேக்ஷிக்கிறதினுலே ஆனுலும், உண்டாக்கப்பட்ட பதார்த்தம் அழிந்துபோகிற பதார்த்தமாய் இருக்கவேணும் என்கிற அர்த்தத்தை முன்சொல்லப்பட்ட வாக்கியமானது கொண்டிருக்கிறதென்று சொன்னேமானுல், அது நரசீவனடவிலே தப்பறை வாக்கியமாய் இருக்கிறதென்று சொல்ல வேண்டியிருக்கும். அதேதெனென்றுல், நரசீவனுனது விரோதமான குணங்களைக் கொண்டிருக்கிறதினுலே யானுலும், அது நிக்கிறதுக்கு அழிந்துபோகிற பதார்த்தத்தை அபேக்ஷிக்கிறதினுலே என்கிலும் அது நாசத்துக்குப் பாத்திரமான பொருளென்று சொல்லக்கூடாது.

**11·3 பசு, பாசம் அநாதியாய் இல்லை: (i) உடலின்றி உயிர் அநாதியாய் இருந்தால்:** ஆனால், பசு, பாசம் என்கிற திலே இவர்கள் வெறுமனே கற்பிக்கிற தப்பறை விசேஷத்தை ஆராய்ந்து கொண்டு [1]ஆக்ஷேபம் பண்ணக்கடவோம். பசு, என்கிற [2]சத்தத்தினாலே சொல்லப்பட்ட ஆத்துமமானது அநாதியாய் இருக்கவில்லை என்கிற சத்தியமானது [3]தேவோக்கித்த வேதத்தினாலே அறியப்பெற்றதும் தவிரப், பலபல ஞாயங்களில் ஒப்புவிக்கப்படலாம் என்கிறதுக்குத் தப்பாது. அப்படிப்பட்ட ஞாயங்களுக்குள்ளே ஒன்றிரண்டை எடுத்துக் காட்டி அவர்களுடைய மதத்திலே பதியென்கிற கடவுளோடே பசு என்கிற சீவனும் பாசமாகிற கர்மத்தினாலே வருகிற சரீரமும் அநாதியாய் இருக்கிறது என்கிற பக்ஷமானது அறிவின் குறைச்சலுள்ள மயக்கத்தினாலே வெறுமனே கற்பிக்கப்பட்ட முழுத் தப்பறையாய் இருக்கிறதென்று கர்த்தன் கிருபையினாலே பிரத்தியக்ஷமாய்க் காட்டக்கடவோம். 1. அதேதென்றால், ஆத்துமானது அநாதியாயிருந்ததென்று சொன்னோமானால், யாதொரு சரீரத்தோடே இருந்ததென்று சொல்லவேணும், அல்லது சீவனானது அநாதியாய் இருந்து அதுக்குப்பிற்பாடு சரீரத்தை எடுத்ததென்று சொல்ல வேண்டியிருக்கும். இந்த இரண்டில் எந்தப் பக்ஷத்தை அங்கீகரித்தாலும், பலபல அபத்தங்களுக்குச் சம்மதப்பட வேணும் என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால், சரீரமில்லாமல் ஆத்துமமானது அநாதியாய் இருந்ததென்று சொன்னோமானால், [4]அனந்தகாலம் போன பிற்பாடு சரீரத்தை எடுத்ததென்று சொல்லவேணும். சரீரத்தை ஆத்துமம் எடுக்கிறதுக்கு, இவர்களுடைய மதத்தை அனுசரித்தோமானால், கருமம் முந்தியிருந்தது என்று அங்கீகரிக்கவேணும். கருமமோ என்றால் அச்சரீரமில்லாமல் உண்டாக மாட்டாதென்று இவர்கள் சொல்லிக்கொண்டு வரச்செய்தே, ஆத்துமமானது அநாதி காலத்துக்குப் பிற்பாடு சரீரத்தை எடுத்தது என்றும் எடுக்கவில்லை என்றும் சொல்லக்கூடாது.

2. இதுதவிர, ஆத்துமத்துக்குச் சரீரம் வந்தவகை ஏதென்று ஒப்பச் சொல்லுகிறதுக்கு இடங்காணாது. அது

1. மறுக்க, Refute 2. சத்தியத்தினாலே (பா. பே) சொல்லினாலே
3. Revealed religion 4. Infinite.

ஏது என்றால், தாய் தகப்பன் முகாந்திரத்தினாலே ஆத்துமத்துக்குச் சரீரம் வந்துதென்று சொன்னால், தாய் தகப்பன் என்கிற இருவருக்கும் சரீரம் வந்த வகையேது? அல்லது சர்வேசுரனாலே சீவனோடே சரீரம் கூடித்தென்று சொன்னோமானால், எத்தனை ஆத்துமங்களுக்குக் கடவுள் சரீரங்களைக் கட்டளையிட்டார் என்று முழுப்பயித்தியக்காரன் சொற்பனத்திலே கண்டால் சொல்லுவானொழிய, விழித்திருக்கிற புத்திமானாய் இருக்கிறவன் சொல்லமாட்டான். 3. கடைசியாய் ஆத்துமாக்கள் சரீரம் இல்லாமல் அநாதியாயிருந்தது என்று சம்மதித்தோமானால், ஆத்துமாக்கள் அநாதி காலத்திலே எங்கே கிடந்தது என்றும், சுகத்தை அனுபவித்ததோ அல்லது துக்கத்தை அனுபவித்துதோ என்றும் ஒப்பச் சொல்லுகிறதுக்கு லவலேசமானாலும் இடங்காணமாட்டாது.

ஆனபடியினாலே, ஆத்துமம் அநாதிக்காலத்திலே சரீரம் இல்லாமலிருந்து அதுக்குப் பிற்பாடு சரீரத்தை எடுத்தது என்கிற பக்ஷத்துக்குச் சம்மதப்படுகிறவன் இற்றைவரைக்கும் சொல்லப்பட்ட அபத்தங்களையும், அத்தொகைப்பட்ட வேறே தப்பறைகளையும் அங்கீகரிக்கவேணும் என்கிறதுக்காக, அப்படிப்பட்ட பக்ஷமானது முழுத் தப்பறையாய் இருக்கிறது என்கிறதுக்குச் சந்தேகப்படப்படாது.

**11·4 (ii) உயிர் உடலோடு அநாதியாய் இருந்தால்:** ***(1) சென்ம பரம்பரை அநாதியில்லை:*** அல்லது சீவனானது அநாதியாய்ச் சரீரத்தோடே இருந்துதென்று அங்கீகரித்தோமானால் சகல ஜீவன்களும் சரீரத்தோடே கூட இருந்துதோ அல்லது பாதி மாத்திரம் சரீரங்களோடே இருந்துதோ என்றும் இல்லாவிட்டால் சிலதுகள் மாத்திரம் சரீரங்களைக் கொண்டிருந்ததோ என்றும் சொல்ல வேண்டியிருக்கிறதிலே, எந்த வகையாய்ச் சொன்னாலும், பித்து பிதத்துகிறதுக்குச் சமானமாயிருக்குமொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால், ஸ்திரி பூமான்கள் அநாதியாய் இருந்தார்களானால், இருவரும் விவாகப்பண்ணிக் கூடினதும், பிள்ளை பெற்றதும் எப்போ? இதிலே சொல்லத்தக்க மேரையுள்ள வார்த்தை காணமாட்டாது. அதேதென்றால், ஸ்திரீ பூமான் கூடினதினால் ஸ்திரி

யானவள் கர்ப்பந் தரித்து ஒன்பதாம் மாஸத்தையிலே பிள்ளை பெற்ருள் என்று சொன்னேமானல், ஒன்பது மாஸத்தைக்கு முன்னே ஸ்திரீ பூமான் கூடிப் கெர்ப்பம் தரித்தகாலம் அனதி காலமாய் இருந்ததென்று சொல்லக்கூடாது. அல்லது அனதி யாய் ஸ்திரீ பூமான் விவாகம் பண்ணமல் இருந்தார்களென்று சொல்லி வெகுகாலமாகிற அனேக வருஷத்துக்கு முன்னே விவாகமும் பிரசவ மேரையும் உண்டென்று சொன்னேமானல், மனுஷனுடைய [1]சென்ம பரம்பரையானது அனதியாய் இருக்க வில்லை என்று சொல்லவேண்டியிருக்கிறதுந்தவிர, அனதியா யிருந்த மனுஷர் செத்துப்போனது எப்போ என்றும், செத்துப் போன பிற்பாடு அனதி காலத்திலே சரீரமில்லாத சீவன்கள் எவ்விடத்திலே கிடந்து கழிந்தது என்றும் முழுப்பயித் தியக்காரன் போலே தாறுமாருய்க் குளறி அபத்த வார்த்தை களைச் சொல்ல வேண்டியிருக்கிறதொழியப், புத்திக்கு ஏத் திருக்கிற ஒரு வார்த்தையானலும் சொல்லுகிறதுக்கு அவகாசம் கிடைக்குமென்று சொல்லக்கூடாது.

(2) ஆன்மாவுக்கு மட்டுக்கட்டுகிறது யார்? இது தவிர, அனதியாயிருக்கிற ஆத்துமாக்கள் ஒன்றில் தானுயிருக் கிற பொருள்களென்று சொல்ல வேணும். ஒன்றில் உண்டாக் கப்பட்ட பொருள்களென்று அங்கீகரிக்க வேண்டியிருக்கும். இரண்டும் சொல்லக் கூடாதபோதே, ஆத்துமாக்கள் அனதி யாயிருந்ததென்று முழுமதிகெட்டவன் தனது சொற்பனத்திலே கண்ட தப்பறை விசேஷமென்று சொல்லப்படத்தக்கதாகும். அதெனென்ருல், ஆத்துமாக்களானதுகள் தானுயிருக்கிற பொருள்களென்று அங்கீகரிக்கும் போது, ஆத்துமாக்களுடைய இலக்கம் [1]இம்மாத்திரம் என்கிறதிலேயும், ஆத்துமாக்களுடைய ஞானம் முதலான நன்மைகளிலேயும் மட்டுக்கட்டினவன் ஆர்? ஆத்துமாக்களை உண்டாக்கிறவன் ஆத்துமாக்களுடைய இலக் கத்திலேயும் அறிக்கை முதலான நன்மைகளிலேயும் மட்டுக் கட்ட வேண்டியிருக்கையிலே, ஆத்துமாக்களை உண்டாக்கிற வன் இல்லாதபோதே, ஆத்துமாக்களுடைய இலக்கமும் ஆத்து மாக்களுடைய அறிக்கை முதலான நன்மைகளும் மட்டில்லாதது

1. Series of generation.

(1) 8400000 பேதங்கள் உண்டு (சைவசித்தாந்தம்)

களாயிருக்கவேணும். அதெப்படியென்றால், மண் பாத்திரங்களானதுகள் இலக்கத்திலேயும் அளவு பிரமாணத்திலேயும் மட்டுள்ளதுகளாய் இருக்கிறதற்கு அதுகளை மனைகிற குலாலன் காரணமாய் இருக்கிறானென்று சொல்லவேண்டியிருக்கையிலே, குலாலன் இல்லாவிட்டாற் பாத்திரங்களுடைய இலக்கமும் அளவும் பிரமாணமும் மட்டில்லாததுகளாய் இருக்கிறதென்று சொல்லவேணும். அத்தன்மைபோல், கர்த்தரானவர் ஆத்துமாக்களைச் சிருஷ்டிக்கவில்லை என்று சொல்லும்போது, ஆத்துமாக்களுடைய இலக்கத்துக்கும் நன்மைக்கும் மட்டில்லையென்று சம்மதிக்கவேணும்.

**(3) கடவுள் எப்படி எல்லாத்துக்கும் வல்லவர்?** இன்றியே, இப்படிப்பட்ட கர்த்தரானவர் பொருட்களை உண்டாக்கிறதினாற் பொருள்களுக்கு முழுக் கர்த்தனாயிருக்கையிலே, ஆத்துமாக்களை உண்டாக்காதபோதே, அதுகளுக்கு அவர் முழுக்கர்த்தன் அல்லவென்றும் சொல்ல வேண்டியிருக்கும். இப்படிச் சொல்லும்போது, சர்வேசுரனானவர் சருவத்துக்கும் ஆதிகாரணர் என்றும், முழுக் கர்த்தன் என்றும் சொல்லக் கூடாது. அவர் கர்த்தன் ஆகாதபோதே, ஆத்துமாக்களை உத்தேசித்துத் தீர்வைசொல்லி அதுகளை நரகத்திலே தள்ளுகிறதுக்கும், மோக்ஷத்திலே அழைக்கிறதுக்கும் வல்லவராய் இருக்கிறது எப்படி? இந்தவிடைவாக ஆத்துமாக்களை உண்டாக்கிறதுக்குச் சருவேசுரனானவர் வல்லவராய் இராதபோதே, 'சருவத்துக்கும் வல்லவர்' என்கிற நாமமானது அவருக்குச் செல்லுமென்று சொல்ல வொண்ணாது. அநாதியாயிருக்கிற ஆத்துமாக்களைத் தானாயிருக்கிற பொருளாய் இருக்கிறதென்று அங்கீகரித்தால், இப்படிப்பட்ட தப்பறைகளும் தவிர வேறே அனேக அபத்த விசேஷங்களை அங்கீகரிக்க வேண்டியிருக்கும். அதுகளை எண்ணுகிறதுக்கு மாத்திரம் விஸ்தார பிரசங்கங்களைப் பண்ண வேண்டியிருக்குமென்கிறதினால் அதுகளை நினையாமல், அப்படிப்பட்ட பக்ஷமானது தப்பறையாய் இருக்கிறதென்று பிரத்தியக்ஷமாய் அவனவன் கண்டுபிடிக்கிறதுக்கு இத்தனை தப்பறை விசேஷங்கள் அத்தாலே வருகிறதென்று நம்மால் ஒப்புவிக்கப்பட்டது என்கிறது போரும்.

**11.5 உயிர் கடவுளால் அநாதியாய்ப் படைக்கப் பட்டால் (1) கடவுளுக்குப் பிற்பாடு உண்டாகின்றன.** இத்தனை அபத்தங்களைச் சிலர் அங்கீகரிக்கமாட்டாமல் அநாதியாயிருக்கிற ஆத்துமாக்கள் சர்வேசுரனாலே உண்டாக்கப் பட்டதுகளாய் இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இந்தப் பக்ஷமானது ஞாயத்துக்கும் புத்திக்கும் ஒவ்வாததாய் இருக்கிறதென்று எளிசாய் ஒப்புவிக்கலாம் என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால் ஆத்துமாக்கள் சருவேசுரனாலே உண்டாக்கப் பட்ட பொருள்களென்று அங்கீகரிக்கும்போது, கர்த்தனாலே சுவாதந்திரிய மேரையாக உண்டாக்கப்பட்டு அநாயிராத பொருளென்று சம்மதப்பட வேணும். இந்த மேரையாக ஆத்துமாக்கள் உண்டாக்கப்பட்டதுகளாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கும்போது, ஆதிகாரணமான சர்வேசுரனோடே கூட ஆத்துமாக்களானதுகள் அநாதியாயிராமற், சர்வேசுரனுக்குப் பிற்பாடு உண்டாச்சுதென்று சொல்ல வேணும்.

**காரணத்திலிருந்து காரியம் தோன்றும் வகை** இரண்டு: இதிலே சில பேர்கள் மோசம் போகிற வகையை வெளிப்படுத்தக் கடவோம். அதேதெனன்றால் காரிய காரணத்திலே [1]பூர்வாபர மேரை தேவையில்லை என்று சொல்லுகிறார்கள். இதில் அறியவேண்டின விசேஷ ரகசியமாவது: காரணத்திலே நின்று காரியம் பிறக்கும் மேரையானது இரண்டு விதமாய்ப் பிரியும். அதுகளில் ஒன்றுக்கொன்று மிகுந்த வேற்றுமையாயிருக்கிறது என்று அங்கீகரிக்க வேணும். அப்படிப்பட்ட வேற்றுமை ஏதென்றால், சிலமுறை காரணமானது தனது சுபாவ மேரையாக ஒரு காரியத்தைப் பிறப்பிக்கும். அப்படிப்பட்ட காரியத்தினுடைய பிறப்பானது காரணத்தினுடைய சுபாவத்துக்கு அவசியமாய் வேண்டியிருக்கச் செய்தே, அதில்லாவிட்டாற் காரணத்தினுடைய சுபாவத்துக்குக் குறைவுண்டாகும். அப்படிப்பட்ட வகையுள்ள பிறப்பை உடைத்தான காரியமானது தனது காரணத்தோடே ஏக காலத்திலே இருக்கலாம் என்கிறதுக்குத் தப்பாது. ஆதலாலே, அப்படிப்பட்ட காரிய காரணத்துக்குக் காலப்

[1] பூர்வ + அபர = முன் பின்

பிரமாணமுள்ள பூருவாபர மேரையானது தேவையில்லை என்று சொல்லத்தகும். இப்படிப்பட்ட மேரையுள்ள பிறப்புந் தவிரக் காரியத்துக்கு வேறே வகையுள்ள பிறப்பு உண்டென்று கண்டுகொண்டு வருகிறோம். அது காரணத்தினின்று காரியத்தினுடைய சுபாவ மேரையுள்ள நிர்க்கமனமாகிற புறப்படுதலாய் இராமல் சுவாதந்திரிய முதலிய வகைகளினாலே காரணத்தில் நின்று காரியமானது புறப்படுகிறதென்று கண்டுகொண்டு வருகிறோம். இப்படிப்பட்ட நிர்க்கமனதின் விஷயத்திலே காரிய காரணத்துக்குக் காலத்தின் அளவிலே பூருவாபர மேரையானது அவசியமாய் உண்டாயிருக்கவேணும். இதெல்லாம் அந்தந்தக் காரியமானது பிறக்கும் வகையை வெளிப்படுத்தும்போது வெளியாகும் என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால், சூரியனானது தனது சுபாவத்தின் மேரையாக பிரகாசத்தைப் பிறப்பிக்கிறதினால் சூரியனை காரணத்துக்கும் பிரகாசமாகிற காரியத்துக்குங் காலத்தின் அளவிலே பூருவாபர மேரையானது உண்டாயிருக்க மாட்டாது. அவ்வண்ணமே எந்த க்ஷணத்திலே சூரியனானது பிறந்ததோ, அந்த க்ஷணத்திலே தானே தனது பிரகாசத்தைச் சூரியனானது பிறப்பிச்சுது என்கிறதுக்குச் சந்தேகமில்லை. சர்வேசுரனாகிற காரணத்தில் நின்று ஆத்துமமாகிற காரியமானது முன் சொல்லப்பட்ட மேரையாகப் பிறப்பிடமாட்டாத போதே, சர்வேசுரனோடே கூட அநாதியாயிருக்க மாட்டாதென்று அங்கீகரிக்கத் தக்கதாகும்.

(2) கடவுளாகிய காரணத்திலிருந்து உயிராகிற **காரியம் இயற்கையாய் தோன்றாதபடியால் அநாதியன்று.** இப்படிச் சொல்லாமற், சருவேசுரனிடத்தில் நின்று ஆத்துமமானது அநாதியாய்ப் பிறப்படலாமென்று சொன்னோமானால், சர்வேசுரனிடத்தில் நின்று சுபாவ மேரையாகப் பிறப்படமாட்டாத காரியமாகிற ஆத்துமமானது, காரணத்தில் நின்று காரியமானது பிறப்பிக்கிற சுபாவ மேரையாக, ஆத்துமமாகிற காரியமானது சருவேசுரனாகிற காரணத்தில் நின்று பிறப்பட்டுதென்று சொல்லுகிறதுக்கு இடமுண்டாகும். அப்படியே காரணமாகிற சருவேசுரனுக்கும் காரியமாகிற ஆத்துமத்துக்கும் காலத்தின் அளவிலே பூருவாபர மேரையானது இல்லாதிருந்

தாற், சருவேசுரனுகிற காரணத்தில் நின்று ஆத்துமமாகிற காரியமானது சுபாவ மேரையாக அவசியமாய்ப் பிறந்ததென்று சொல்லுகிறதுக்கு இடமுண்டாய் இருக்குமொழிய, சர்வேசுரனிடத்தில் நின்று ஆத்துமமானது சுபாவ மேரையாகப் பிறக்கவில்லை என்று அடையாளங் கண்டுபிடிக்கிறது அரிது. இப்படிச் சொல்லும்போது, சுபாவத்தின் மேரையாகப் பிறப்படமாட்டாத காரியத்தின் சுபாவ சுரூபத்துக்குத் தனது காரணத்தோடே காலத்தின் அளவிலே பூர்வாபர மேரையானது உண்டாயிருக்க வேணும் என்று நம்மாற் சொல்லப்பட்டு தொழிய, அனுதியிருக்கிற சர்வேஸ்வரனிடத்திலே அனந்த பெலம் எப்போதும் போல் ஒருகண்ட சீராய் இருந்ததில்லை என்கிற அபத்தத்தை அங்கீகரிககிறதுக்கு நாம் இடங்கொடுத்தோமென்று சொல்லவும் கருதவும் கடவோமல்ல. ஞானோபதேசத்தின் முதற் காண்டத்திலே மனுஷனுடைய செனமபரம்பரையானது அனுதியாயிருக்க மட்டாதென்று எந்த ஞாயங்களைச் சொல்லி நம்மால் ஒப்புவிக்கப்பட்டுதோ, அந்த ஞாயங்களினுலே தானே பசு, பாசம், அனுதியாயிருக்க மாட்டாதென்று ஒப்புவிக்கப்படும் என்கிறதினுலே, அவடத்திலே அதுகளைப் பார்த்து, இங்கே நம்மால் ஆக்ஷேபம் பண்ணப்பட்ட பக்ஷமானது முழுத் தப்பறையாய் இருக்கிறதென்று அவனவன் கண்டுபிடிக்கலாம் என்கிறதுக்குத் தப்பாது.

**11.6. உலகத் தொடக்கத்தில் உயிர்களைக் கடவுள் படைக்க, அவை செய்த நன்மை தீமைப்படி பல நிலையிலுள்ள உடல்களை எடுத்தன என்பது தவறு.** இந்த விஷயத்திலே நம்மால் இற்றை வரைக்குங் கண்டிக்கப்பட்ட தப்பறை விசேஷங்கள் தவிர வேறே சில தெளிவற்ற பாவிகள் வேறே அபத்த வர்த்தமானங்களை அறியாத மனுஷருக்குக் கேடாக வெறுமனே கற்பித்தார்கள். அதேதென்றால், லோகத்தினுடைய ஆரம்பத்திலே கர்த்தரானவர் சகல மனுஷசீவன்களை உண்டாக்கினுராம். அப்படிப்பட்ட சீவன்களானதுகள் சரீரமில்லாமலிருந்து, கர்த்தன் பேரிலே பத்தியை வைத்தது வையாததுக்குத் தக்க மேரையுள்ள விதமாகப் பல பல அந்தஸ்துக்களிலே சரீரங்களை எடுத்துக்கொண்டு வருகிறதென்று சொல்லுகிறுர்கள். இதெல்லாம் முழு அபத்தத்

தப்பறையாய் இருக்கிறதென்று வித்தியாபாரகராய் இருக்கிற பேர்கள் பல பல ஞாயங்களைக் கொண்டு ஒப்புவிக்கிறார்களே, அந்த ஞாயங்களுக்குள் ஒன்றிரண்டு மாத்திரம் எடுத்துக் காட்டக் கடவோம்.

(1) கடவுள் முழுப் பொருள்களைப் படைக்கிறாரொழிய மனிதனின் பாதியாகிய உயிரை மட்டும் படைப்பதில்லை. அதெப்படியென்றால், நரசீவனும் சரீரமும் ஒன்றாய்க் கூடினால் முழு மனுஷனென்று சொல்ல வேண்டி இருக்கச் செய்தே, நரசீவனுஞ் சரீரமுந் தனித்தனியே விசாரிக்கப்பட்டால் ஒவ்வொன்றும் மனுஷனுடைய பாதியென்றும் குறையுள்ள பொருளென்றும் சொல்லக் கடவது. அது இப்படி இருக்கச் செய்தே, சர்வத்துக்கும் வல்லவருமாய் அனந்த பெலமானவருமாய் இருக்கிற கர்த்தரானவர் லோகத்தை உண்டாக்கின ஆரம்பத்திலே சகல பொருட்களையுங் குறைவில்லாததுகளுமாய் முழுப் பொருள்களுமாய் உண்டாக்கினார் என்கிறது அவருடைய அனந்த பெலத்துக்கு ஏற்றிருக்கிற மேரையென்று சொல்ல வேண்டியிருக்கச் செய்தே, மனுஷனுடைய பாதியானதுமாய்க் குறைவுள்ள பொருளுமாயிருக்கிற நரசீவன்களைச் சரீரமில்லாமல் உண்டாக்கினாரென்று சொல்லவுங் கருதவுங் கூடாது. அதேதென்றால், சீவன்களில்லாத சரீரங்களை உண்டாக்கினாரென்று சொல்லப்படாதது போலே, சரீரமில்லாத (நர)சீவன்களை உண்டாக்கினார் என்கிறது முழுத் தப்பறையாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கக்கடவோம். அதேதென்றால், பொருள்கள் என்னப்பட்ட யாவையுங் குறைவில்லாமல் முழுப் பொருளாய்க் கர்த்தரானவர் உண்டாக்கின போதே, முழு மனுஷனை உண்டாக்காமல் மனுஷனுடைய பாதியாயிருக்கிற ஆத்துமத்தை மாத்திரஞ் சரீரம் இல்லாமல் உண்டாக்கினாரென்று சொல்லுகிறதென்கிறது அங்கீகரிக்க வொண்ணாத முழுத் தப்பறையாய் இருக்கிறதென்று கேட்க வேணுமோ?

(2) உலகிலுள்ள உயர்வு தாழ்வு கடவுளால் ஆகிய தொழிய உயிர்களால் ஆகவில்லை. கடைசியாய், லோகம் நன்றாய் நடக்கிறதுக்குப் பலபல அந்தஸ்துகளுள்ள மனுஷர்

அவசியமாய் வேண்டியிருக்கச் செய்தே, தப்பில்லாத, இப்படிப் பட்ட அவசியமாய் வேண்டின கிரமமானது அந்தந்தச் சீவனுடைய சுவாதந்திரியமுள்ள நடக்கையினாலே வந்ததென்று முழுமதி கெட்டவன் சொன்னாற் சொல்லுவானொழியப் புத்திமானாயிருக்கிறவன் அப்படிப்பட்ட தப்பறைக்கு உடன்படமாட்டான். அதேதென்றால், அந்தந்தச் சீவனது சுவாதந்திரியத்தினாலே இந்த விதமுள்ள விருத்தியைப் பண்ணினாப்போலே வேறே விதமுள்ள விருத்தியைப் பண்ணக்கூடினதென்று சொல்லவேண்டி இருக்கிறது. அப்படியே, வேறே விதமுள்ள விருத்தியைப் பண்ணும்போது, லோகத்திலே அதுக்குத்தக்க அந்தஸ்து இல்லாதே போகவேணும் என்கிறதுக்குத் தப்பாது. ஆதலாலே, லோகம் நன்றாய் நடக்கிறதுக்கு அவசியமாய் வேண்டின கிரமமானது தப்பில்லாத கிரமத்தோடு சகலத்தையும் நடத்துகிற கர்த்தனுடைய திருவுளத்தின்படியே நடந்து வருகிறதென்று அங்கீகரிக்க வேணுமொழிய, அந்தந்தச் சீவனுடைய சுவாதந்திரியமுள்ள நடக்கையின் நிமித்தமாக வந்ததென்று அறிவின் குறைச்சலினாலே சொல்லப்படும் என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால், இப்படிச் சொல்லும்போது இராசா, நீசன் முதலான மனுஷனுடைய அந்தஸ்துக்கள் லோகத்திலே இல்லாதேபோகத் திரிந்தது என்கிற அபத்தத்தை அங்கீகரிக்க வேணும்.

**11.7 தாய் தந்தையர் உயிருக்குக் காரணமில்லை.** ஆத்தும விஷயத்திலே இற்றை வரைக்குஞ் சொல்லப்பட்ட அபத்த விசேஷங்களுந் தவிர, சில தெளிவற்ற பாவிகள் வேறே ஒரு அபத்த விசேஷத்தை அங்கீகரிச்சுக்கொண்டு வருகிறார்கள். அதேதென்றால், மாதா பிதாக்கள் நரசீவன் உற்பவிக்கிறதுக்குக் காரணமாய் இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு வருகிறதினால் அப்படிப்பட்ட பேர்கள் ஞானசத்தி யுடைத்தான சீவனை அநியாயமாய்க் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லத்தகும். (1) அதேதென்றால், நரசீவனுக்கு உண்டான சுபாவத்தின் மகிமையைப் பார்த்து நரசீவனது தான் நிற்கிறதுக்குச் சரீர முதலான வேறே பொருளை அபேக்ஷியாதபோதே, உற்பவிக்கிறதுக்கு வேறே ஒரு பொருளின் சகாயத்தை அபேக்ஷியாமல், சர்வேஸ்வரனானவரே அதுக்குக் காரணமாய்

இருக்கிருரென்று சொல்ல வேணுமொழிய மற்றப்படியல்ல. அதேனென்ருல், நரசீவனுனது உற்பவிக்கிற வகையைப் பார்க்கும்போது, சர்வேஸ்வரனுனவர் ஒன்றுமில்லாமல் இருக்கையிலே நரசீவனை உண்டாக்கிருரென்று சொல்லவேண்டி இருக்கிறது. இந்தடைவிலே பொருளைப் பிறப்பிக்கிற காரணமானது [1]அனந்த பெலம் உடைத்தானதாய் இருக்கவேணும். இந்தச் சத்தியத்தை 'ஞானோபதேசத்தின் முதற் காண்டத்திலே' விரிவாக ஒப்புவித்தோம் என்கிறதினுலே அதை இவ்விடத்திலே திரும்ப ஒப்புவிக்கிறதுக்குக் கணக்கில்லை, இந்த ஞாயத்தினுலே கொஞ்சப் பெலமுடைத்தான மாதா பிதாக்கள் நரசீவனைப் பிறப்பிக்கிறதுக்கு வல்லவர்களாய் இருக்கமாட்டார்கள் என்று ஒப்புவிக்கப்படுகிறதுக்குச் சந்தேகப்படத் தகாது. (௨) இதன்றியே, மாதா பிதாக்கள் சுக்கில இரத்த முதலானதுகளைக் கொடுத்து, அதுகளைக்கொண்டு கர்த்தரானவர் மனுஷ சரீரத்தை உண்டாக்கிருர்களென்று சொல்லக்கூடாது. அதேதென்ருல், [2]கிரகத்தை உண்டாக்கிறவன் கிரகத்தினுடைய அங்கிசங்களாகிற [3]சாங்கோபாங்கங்களெல்லாம் அறிகிறதுந் தவிரக், கிரகம் இடிந்துபோனுல் அதைத் திரும்பக் கட்டுகிறதுக்குச் சாமார்த்திய முள்ளவனுய் இருக்க வேணும். அத்தன்மை போல, மாதா பிதாக்கள் மனுஷ சரீரத்தைப் பிறப்பிக்கிருர்களென்று சொன்னேமானுல், மாதா பிதாக்கள் மனுஷ சரீரத்தில் உண்டான எலும்பு நரம்புகள் முதலான அங்கிஷங்களை அறிகிறதுந் தவிர, அப்படிப்பட்ட சரீரத்தினுடைய அங்கிஷங்களுக்குள்ளே யாதொரு அங்கிஷமானது கெட்டுப்போனுல் அதைத் திரும்ப உண்டாகிறதுக்கு அவர்கள் சாமார்த்திய முள்ளவர்களாய் இருக்கவேணும். அவர்களுக்கு இப்படிப்பட்ட சாமார்த்தியம் இல்லாதே போதே, மாதா பிதாக்கள் மனுஷ சரீரத்தை உண்டாக்கிருர்களென்று சொல்லுகிறதுக்கு இடங்காணமாட்டாது. மனுஷனுக்குண்டான நீச பொருளாகிற சரீரத்தைப் பிறப்பிக்கிறதுக்கு மாதா பிதாக்கள் சாமார்த்தியமில்லாத பேர்களாயிருக்கிற போதே, மிகவும் உத்தம பொருளாகிற நரசீவனை மாதா பிதாக்கள் பிறப்

1. Infinite power 2. வீடு 3. உறுப்புக்கள்

பிக்கிறார்களென்று முழு மதிகெட்டவன் முதலாய்ச் சொல்ல மாட்டான்.

**11.8. உயிர் பூதியங்களின் கூட்டுறவு அன்று.** கடைசியாய்ப் 'பூதியங்களுடைய கூட்டுறவானது நரசீவனாயிருக்கிறது' என்று சொன்னோமானால், வேறே அநேக அபத்த விசேஷங்களுக்குச் சம்மதப்படவேண்டியிருக்கும். (1) அதேதென்றால், பூதியங்களினாலே கூடின பதார்த்தமானது [7]சடபதார்த்தம் என்றும் சரீரம் என்றும் சொல்லப்படும் எனறிருக்கச் செய்தே, பூதியங்களுடைய கூட்டுறவானது சீவனென்று சொல்லப்பட்டால், கிரிகை இல்லாத சடப்தார்த்தத்துக்கும் பலபல கிரியைகளுக்குக் காரணமாயிருக்கிற சீவனுக்கும் [6]சுபாவ சுரூபத்திலே வேற்றுமையில்லை என்கிற அபத்தத்தை அங்கீகரிக்கவேணும். (2) இதன்றியே பூதியங்களுடைய கூட்டுறவானது நரசீவனாய் இருக்கிறதென்று சொல்லும்போது நரசீவனானது தான் இருக்கிறதுக்கு சரீரத்தை அபேக்ஷித்திருக்கிறதென்று சந்தேகமற அங்கீகரிக்கவேணும். ஆதலாலே, மனுஷர் மரணத்தின் நிமித்தமாக நரசீவனானது அழிந்துபோமென்று சம்மதப்படுகிறதுக்கு ஒக்கும். அப்படியே மனுஷனுடைய மரணத்தின் நிமித்தமாக ஆத்துமமானது அழிந்துபோமென்று சொன்னோமானால், தபசு முதலான தர்ம சரித்திரங்களிலே பிரயாசப்படுகிறது என்கிறது [1]நிஷ்பலமாயிருக்கிறது என்று சொல்லக்கடவோம். அதேதென்றால், நம்முடைய ஆத்துமமானது சரீரத்தை விட்டுப் பிரிந்த பிற்பாடு அதுவும் அழிந்து போனால், அது அடையத்தக்க [2]பரலோகம் இல்லையென்று சொல்லவேணும். அது அடையத்தக்க பரலோகம் இல்லாவிட்டால், இனிமேல் வரத்தக்க ஆக்கினைக்கு மனுஷனானவன் பயப்படாமல் தனது இச்சைப்படியே கைக்கெட்டின பாவமெல்லாம் பண்ணி, அது நிமித்தமாக வரத்தக்க சுகத்தை [3]வர்ச்சிக்கிறதுக்குக் கணக்கேது? அந்தடைவிலே மனுஷனுடைய ஆத்துமத்துக்குப் பரலோகம் இல்லாவிட்டாற், [4]சர்வபரித்தியாகத்தினாலே [5]வெகுமானத்தையும் [6]அயிசுவரியத்தையும்

7. Material substance    8. இயற்கை

1. வீணாய், பயனற்றதாய்  2. மறு உலகம்  3. தவிர்ப்பதற்கு
4. முற்றத் துறத்தல்  5. பெருமையும்  6. செல்வமும்

சரீரத்துக்கான ஸ்திரி போக முதலான சுகத்தையும் மனுஷ னவன் விட்டு, இவ்வுலோகத்திலே பலத்தையனுபவியாமல், தபசு முதலான பல பல தர்மங்களைப் பண்ணுகிறதிலே எண்ணப்படாத பிரயாசைகளையும் கஸ்திகளையும் அவன் அனுபவிக்கத் தக்கதாகத் துணிகிறதுக்கு வேண்டின ஞாயம் காண்பிக்கிறது அரிது.

(3) இது தவிர, மனுஷனுடைய மரணத்துக்குப் பிற்பாடு மனுஷனுடைய ஆத்துமமானது அழிந்து போய் நில்லாவிட்டால் [7]திவசத்திலே செப (தப) தான தர்மங்களைச் செத்தவர்களுக்காக ஏன் நடத்த வேணும்? அதேனென்றால், திவசத்திலே பண்ணப்படுகிற செப முதலான தருமங்களானதுகள் மண்ணாய்ப்போன சரீரத்துக்கு உதவுமென்று சொல்லக் கூடாது. ஆனபடியினாலே அதெல்லாம் சரீரத்துக்காகப் பண்ணப்படுகிறதென்று சொல்லத்தகாது. அத்தன்மைப் போல், மரண நிமித்தமாக மனுஷ சரீரம் நாசமாய்ப் போனாப் போலே மனுஷனுடைய ஆத்துமம் அழிந்து போனால், அப்படி அழிந்துபோன ஆத்துமத்துக்குத் திவசத்திலே பண்ணப் படுகிற செப (தப) தான தருமங்கள் உதவாதென்று சொல்லக் கடவோம். ஆதலாலே, செத்தவனுடைய சரீரத்துக்கும் ஆத்துமத்துக்கும் திவசத்திலே பண்ணப்படுகிற செப (தப) தான முதலான தருமங்கள் உதவாதபோது, அதெல்லாம் செத்தவனுக்கு ஒன்றும் உதவாமல் இருக்கிறதினால், செத்தவனுக்காக அதெல்லாம் நடத்துகிறது மிகவும் அறிவின் குறைச்சலாய் இருக்கிறது [8]ஒழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே ஆத்துமமானது அழிந்து போகிற பொருளாயிருக்கிறதென்று அங்கிகாரம் பண்ணினோமானால், இத்தொகைப்பட்ட வேறே அனேகம் தப்பறை விசேஷங்களுக்குச் சம்மதிக்க வேண்டியிருக்கிறதினால், மனுஷனுடைய ஆத்துமமானது என்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கத்தக்க சத்தியமாய் இருக்கிறதொழிய, அது அழிந்து போகிற பொருளாயிருக்கிறதென்று சொல்லுகிறது முழுத்தப்பறையாய் இருக்கிறது என்கிறதுக்குச் சந்தேகமில்லை.

7 சிராத்தம். 8. என்று சொல்ல வேணும். (பா. பே.)

**11.9 ஆன்மா அழியாத பொருள்:** இந்தச் சத்திய மானது மிகவும் விளங்கி, அவனவன் அத்தைக் கண்டுபிடிக் கிறதுக்கு முன் கொஞ்சத்துக்குள்ளே நம்மால் சொல்லப் பட்டதை இன்னமும் திரும்ப விரிவாக (வெளிப்படுத்தக் கடவோம். அதேதென்றால், அழிந்து போகிற பொருட்கள் ஏதென்றும், அழியாத பொருள் ஏதென்றும் முந்த முந்த நாம்) வெளிப்படுத்தி, மனுஷனுடைய ஆத்துமமானது அழியாத பொருளாய் இருக்கிறதென்று எந்த ஞாயங்களினாலே கண்டு பிடிக்கலாமென்று கொஞ்சத்துக்குள்ளே சொல்லிக் காட்டு வோம். அழியாத பொருளானது இன்னதென்று நிற்சயம் பண்ணின பிற்பாடு, அழிந்து போகிற பொருள் ஏதென்று எளிதாய் நிச்சயம் பண்ணலாமென்கிறதினால், அழியாத பொருள் ஏதென்று முந்த முந்தக் காட்டக்கடவோம்.

**(1) இரு வகை அழியாப் பொருள்களில் கடவுள் ஒருவரே முற்றிலும் அழியாப் பொருள்.** அழியாத பொரு ளானதுகள் இரண்டு வகைக்குள்ளே அடங்குமென்று சொல்லத் தகும். அதில் எந்தெந்தப் பெலத்தினாலேயும் அழிக்கப்படாத வஸ்துவானது அழியாத பொருளினுடைய இரண்டு வகைக் குள்ளே முதலாம் வகையாகும். இந்தடைவிலே அழியாத பொருளை விசாரிக்குமிடத்தில், ஒன்றான சர்வேஸ்வரன் மாத்திரம் அழியாத பொருளென்று சொல்லக்கூடுமொழிய, வேறே பொருளானது அழியாத பொருளென்று சொல்லப் படாது. அதேதென்றால், ஒன்றான கர்த்தரானவர் தானாயிருக் கிறார் என்கிறதினால், தமக்குண்டான [1]ஸ்திதியை வேறொரு பொருளின் கையிலே வாங்கவில்லையென்று சொல்லக் கடவோம். வேறே யொரு பொருளின் கையிலே கர்த்தரானவர் தமக் குண்டான ஸ்திதியை வாங்காதேபோனால், அவருக்குண்டான அப்படிப்பட்ட திவ்விய ஸ்திதியைக் கொடுக்கிறதுக்கானாலும் கெடுக்கிறதுக்கென்கிலும் வல்லதாயிருக்கிற வேறே ஒரு வஸ்து வானது காணமாட்டாது. அவ்வண்ணமே, ஒன்றான சர்வேஸ் வரன் மாத்திரம் இந்தடைவிலே அழியாத பொருளென்று சொல்லக்கூடுமொழிய, மற்றுண்டான பொருளென்னப்பட்ட யாவும் சர்வேஸ்வரனாலே உண்டாக்கப்பட்டதினால், அவராலே

1. இருக்கை

அழிக்கப்படலாமென்று சொல்லக்கடவோம். ஆனபடியினாலே சொல்லப்பட்ட இந்த வகையில் அழியாத பொருளினுடைய பேரானது பராபர வஸ்துவுக்கு மாத்திரம் செல்லுமொழிய, மற்றுண்டான பொருளென்னப்பட்ட யாவுக்கும் இந்தடைவிலே அழியாத பொருளின் பேரானது செல்லமாட்டாததினால், இந்த மேரையிலே உண்டாக்கப்பட்ட பொருள் என்னப்பட்டதெல்லாம் அழிக்கப்படலான பொருளாயிருக்கிற தென்கிற வாக்கியமானது அங்கீகரிக்கத்தக்க குறையற்ற சத்தியமென்று சொல்லத்தகும்.

(2) இரண்டாம் வகை: தானாகவோ கடவுளைத் தவிரப் பிறராலோ அழிவுறாத பொருள். இந்தடைவிலே அழியாத பொருளின் வகையைத் தவிர வேறே வகையுள்ள அழியாத பொருள் [1]உளதென்று அங்கீகரிக்கவேணும். அதாவது பராபர வஸ்துவினாலே உண்டாக்கப்பட்ட பொருளாயிருந்து அவருடைய அளவில்லாத பெலத்தினாலே அழிக்கப்படலான பொருளாயிருந்தாலும், அப்படிப்பட்ட பொருளானது தான் நாசமாய்ப் போகிறதுக்கு நாசத்துக்குக் காரணம் யாதொன்றுண்டோ, அத்தைத் தன்னிடத்திலே கொண்டிருக்கிறதுமில்லை, தான் நிற்கிறதுக்கு நாசகாரணத்தைக் கொண்டிருக்கிற பொருளை அபேக்ஷிக்கிறதுமில்லை. (i) அழிவுக்குக் காரணம் அதனிடம் இல்லை. அப்படிப்பட்ட பொருள் இரண்டாம் வகையான அழியாத பொருளென்று சொல்லக்கடவோம். இதெல்லாம் துலக்கமாக விளங்கும்படிக்கு இதிலே அறிய வேண்டினதெல்லாம் கிரமத்தோடு இப்படியே வெளிப்படுத்த வேணும். யாதொரு பொருளுக்குப் பகையுள்ள வேறே ஒரு பொருள் உண்டென்று கண்டோமானால், அப்படிப்பட்ட சத்துருவினால் செயிக்கப்படலாமென்று கண்டுபிடிக்க வேணும். வேறே ஒரு வஸ்துவினாலே அது செயிக்கப்படலாம் என்றபோதே, அப்படிப்பட்ட பொருளானது அழிக்கப்படலான பொருளென்று அங்கீகரிக்கக் கடவோம். அவ்வண்ணமே, உஷ்ணம் குளிர் குணமிரண்டும் அன்னியோன்னியமாய் விரோதமாய் இருக்கக்கொள்ள, உஷ்ண குணத்துக்குக்

1. ஏதென்று (பா. பே.)

குளிரானது பகையாய் இருக்கிறதென்றும் குளிரென்கிற குணத்துக்கு உஷ்ணமானது பகையாய் இருக்கிறதென்றும் பிரத்தியக்ஷமாய்க் காணப்பட்ட சத்தியமாகும். பின்னையும் உஷ்ணத்துக்குக் குளிரானது பகையாய் இருக்கிறபோதே, குளிரானது உஷ்ணத்தினலே செயிக்கப்படலாம் என்கிறதுக்கும் உஷ்ணமானது குளிரினலே செயிக்கப்படலாம் என்கிறதுக்கும் தப்பாது. ஆனபடியினலே, உஷ்ணம் குளிர் குணமிரண்டும் அழியத்தக்கது என்று அங்கீகரிக்க வேணும். உஷ்ணத்திலேயும் குளிரிலேயும் சொல்லப்பட்ட அடைவை [2]ஈர சுஷ்கம் என்கிற இரண்டு குணங்களிலே யோசிக்கக்கடவோம். ஆதலாலே உஷ்ணம் குளிர் முதலான நாலு குணங்களானதுகள் நாசமாய்ப் போகத்தக்கதுகளாய் இருக்கக்கொள்ள, உஷ்ணம் குளிர் முதலான குணங்களைக் கொண்டிருக்கிற பொருளானது நாசமாய்ப் போகிறதற்கான காரணத்தைக் கொண்டிருக்கிறதென்று சொல்லவேணும். ஆதலால், அது அழிந்து போகிற பொருளாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கவேணும். அவ்வண்ணமே, பூமியிலே காணப்பட்ட சரீரமானதெல்லாம் உஷ்ணம் குளிர் முதலானதுகளைக் கொண்டிருக்கக் கொள்ளப், பூமியிலே உண்டாயிருக்கிற சரீரமென்னப்பட்ட யாவும் தான் அழிந்து போகிறதுக்கான காரணத்தைக் கொண்டிருக்கிறது என்கிறதுக்காகப், பூமியிலே உண்டாயிருக்கிற சரீரம் என்னப்பட்டதெல்லாம் அழிந்துபோகிற பொருளாயிருக்கிறதென்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமாகும்.

(ii) அழிவுறக் கூடிய பொருளால் தாங்கப்படவுமில்லை. ஆனல்; உஷ்ணங் குளிர் முதலான குணங்களைக் கொண்டிராத பொருளானது தான் இருக்கிறதுக்கு உஷ்ணங் குளிர் முதலான குணங்களைக் கொண்டிருக்கிற பொருளானது அவசியமாய் வேண்டியிருந்தால், உஷ்ணங் குளிர் முதலான குணங்களைக் கொண்டிருக்கிற பொருளை அபேக்ஷிக்கிற அப்படிப்பட்ட பொருளானது அழிந்து போகிற பொருளாயிருக்கிறதென்று அங்கீகரிக்க வேணும்.

2. ஈரம் + சுஷ்கம்; சுஷ்கம் — வரட்சி

(iii) அழிவுறும் உடலைச் சார்ந்திருப்பதால், தாமாக அழிபடாத விலங்குயிர், அழிபடுகிறது. இந்தடவிலே ஞான மில்லாத செந்துவினுடைய சீவனானது அழிந்துபோகிற பொருளென்று சொல்லவேணும். அதேதென்றால் அப்படிப்பட்ட சீவனானது உஷ்ணங் குளிர் முதலான குணங்களாகிற நாச காரணத்தைக் கொண்டிராதிருந்தாலும், அப்படிப்பட்ட நாச காரணத்தைக் கொண்டிருக்கிற சரீரமானது அந்தச் சீவனானது நிற்கிறதுக்கு அவசியமாய் வேண்டியிருக்கிறதினாலே, நாச காரணத்தைக் கொண்டிருக்கிற சரீரமானது அழிந்துபோகிற பொருளென்று சொல்லப்படுமாப்போல, செந்துவினுடைய சீவனானது தான் நிற்கிறதுக்கு அப்படிப்பட்ட சரீரத்தை அபேக்ஷிக்கிறபோது, அந்தச் சீவனானது அழிந்துபோகிற பொருளென்று சொல்லத்தகும். அதெப்படியென்றால், கோபுரமானது நிற்கிறதுக்கு அஸ்திவாரம் வேண்டியிருக்கிறதினால் (தகுந்த) அஸ்திவாரம் உண்டானால் (மாத்திரம்) கோபுரமானது நிற்கலாமென்றுஞ் சொல்லக்கடவது. இது இப்படி இருக்கையிலே, கோபுரத்தின் அஸ்திவாரமானது இடிந்து போகலானதாயிருந்தால், அப்படிப்பட்ட அஸ்திவாரத்தை அபேக்ஷிக்கிற கோபுரமானது இடிந்து போகலான கோபுரமென்று அங்கீகரிக்கத் தக்கதாகும். அத்தன்மைபோலே, செந்துவினுடைய சீவனானது நிற்கிறதுக்கு அழிந்துபோகிற சரீரம் வேண்டியிருக்கிறதினால், அழிந்துபோகிற சரீரம் அழியாத நாள் மட்டும் செந்துவின் சீவனானது நிற்குமென்று செல்லவேணும். சரீரமானது அழிந்து போனால், செந்துவின் சீவனானது நிற்கமாட்டாமல் அழிந்து போமென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அவ்வண்ணமே, நாச காரணத்தைக் கொண்டிருக்கிற சரீரமானதும், தான் நிற்கிறதுக்கு அப்படிப்பட்ட சரீரத்தை அவசியமாய் அபேக்ஷிக்கிற பொருளானதும் இந்தப் பொருள்கள் இரண்டும் அழிந்துபோகிற பொருள்கள் என்று சொல்லக்கடவது.

(iv) தானாகவோ பிறபொருளைச் சார்ந்தோ அழிவு காரணமற்ற மனித உயிர் அழியாதது. இதெல்லாம் இந்தடைவாய் இருக்கையிலே, மனுஷருடைய ஆத்துமமானது உஷ்ணங் குளிர் முதலான குணங்களாகிற நாசகாரணமாயிருக்கிற குணங்களைக் கொண்டிராமல் இருக்கிறதுந் தவிர,

அது நிற்கிறதுக்கு நாசகாரணத்தைக் கொண்டிருக்கிற சரீரமானது வேண்டியிராத போதே, மனுஷனுடைய சீவனானது அழியாத பொருளென்று சொல்லக்கூடுமொழிய, சரீரமும் செந்துவினுடைய சீவனும்போல அது அழிந்துபோகிற பொருளாயிருக்கிறதென்று சொல்லவுங் கருதவுங் கூடாது.

**11.10 (1) செய்கைகளுக்கு உயிரே காரணம்.** ஆனால் மனுஷனுடைய ஆத்துமமானது அழியாத பொருளாய் இருக்கிறதென்று முந்த இந்த ஞாயத்தினால் ஒப்பச் சொல்லக்கடவோம். சீவனென்னப்பட்ட யாவும் முன் சொல்லப்பட்ட சேட்டைகளுக்குக் காரணமாயிருக்கவேணும் என்கிறதினாலே, சேட்டைகள் நிமித்தமாகச் சடபதார்த்தத்துக்குச் சீவனானது வேற்றுமையா யிருக்கிறதென்று சொல்லவேணும். அவ்வண்ணமே சடபதார்த்தமானது முன்சொல்லப்பட்ட சேட்டைகளுக்குக் காரணமா யிருக்கமாட்டாததுபோலே, சீவனானது முன் சொல்லப்பட்ட சேட்டைகளுக்குள் ஒன்றுக்கானாலும் காரணமாயிருக்க வேணுமொழிய, ஒரு சேட்டைக்கென்கிலும் காரணமாகாமல் இருக்கமாட்டாது. இது இப்படியிருக்கையிலே, சீவனானது சேட்டையைப் பண்ணுகிற சில நாள் மட்டும் சீவனானது நிற்குமென்று சொல்லவேணுமொழிய, சேட்டை பண்ணக் கூடாத அவஸ்தை[1] வந்தால் சீவனானது சுபாவமாய் நிற்கக்கூடாது என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அதேதென்றால், சீவனானது சடபதார்த்தமாய் இருக்கமாட்டாது என்பது குன்றாத சத்தியமாயிருக்கையிலே, சேட்டை பண்ணுகிற நிமித்தமாகச் சீவனானது சடபதார்த்தமாய் இராது. அப்படியே, சேட்டைகள் இல்லாமல் சீவனானது நிற்கலாமென்று [2]சலத்தினாலே சொன்னோமானால், சீவனானது சீவனாயிராத சடபதார்த்தமாய் இருக்கிறதென்று சொல்ல வேண்டி இருக்கிறது. அவ்வண்ணமே, சேட்டை பண்ணாத சீவன் சுபாவமாய் உண்டாயிருக்கலாமென்று அங்கீகரித்தோமானால், சீவனானது சடபதார்த்தமாய் இருக்கலாமென்று அங்கீகரிக்கிறதுக்கு ஒக்கும். இப்படிப்பட்ட அபத்த முதலான வேறே அபத்தங்களுக்குச் சம்மதியாத வண்ணம், சீவனானது எத்தனை நாள் யாதொரு [3]விருத்திக்குக் காரணமாய் இருக்கக்கூடுமோ,

1 நிலைமை 2, பிடிவாதத்தினாலே 3. செய்கை

அத்தனை நாள் சீவனானது நிற்குமென்று சொல்ல வேணு மொழிய, ஒரு விருத்தியாலும் பண்ணக்கூடாத அவஸ்தை வந்தால், அப்படிப்பட்ட தருவாயிலே சீவனானது நில்லாமல் சுபாவமாய் அழிந்துபோக வேணுமொழிய, சடபதார்த்தம் போல் ஒரு சேட்டையாலும் பண்ணுமல் சீவனானது நிற்க லாம் என்கிற அங்கீகாரமானது சீவனுடைய சுபாவத்துக்கும் ஞாயத்துக்கும் ஒவ்வாதென்று சொல்லக்கடவோம்.

**(2) உய்த்துணர்ந்தவை: (i) உடல் அழியச் சிற்றுயிர்களின் உயிரும் அழிகிறது; நல்வினை தீவினை அற்றது.** (இது) இந்த விஷயத்திலே தப்பில்லாக் கிரமமும் குன்றாத சத்தியமுமாய் இருக்கையிலே, அப்படிப்பட்ட சத்தியத்தினாலே [1]யூகிக்கத்தக்க விசேஷங்களாவன: விருக்ஷத்தினுடைய சீவனானது வளர்கிறதும் பூக்கிறதும் முதலான சேட்டைகளுக்கு மாத்திரம் காரணமாய் இருக்கையிலே, அதுக்குச் சரீரமாகிற யோக்கியமான வேர் தூர் இது முதலானதுகள் இல்லாவிட்டால், அத்தொகைப்பட்ட சேட்டைகளை விருக்ஷத்தின் சீவனானது பண்ணமாட்டாத போதே, அப்படிப்பட்ட சரீரம் ஆன குணங்களோடே கூட இருக்கிற நாள் மட்டும் மாத்திரையாயிருக்கிற அந்தச் சீவனானது முன்சொல்லப்பட்ட தனது சேட்டைகளைப் பண்ணும் என்கிறதுக்குத் தப்பாது. அல்லது அப்படிப்பட்ட சரீரம் ஆன குணங்களைவிட்டு அழிந்து போனால், விருக்ஷத்தினுடைய சீவனானது தனது சேட்டை பண்ணக்கூடாததினால், அத்தருவாயிலே முன்சொல்லப்பட்ட ஞாயத்தினாலே விருக்ஷத்தின் சீவனானது அழிந்து போமென்று ஒப்புக்கொள்ள வேணுமொழியத் தனது சேட்டையில்லாமல் அப்படிப்பட்ட சீவனானது நிற்கலாமென்று அங்கீகரிக்கக்கூடாது. இந்தவிடையிலே செந்துவினுடைய சீவனானது வளர்த்தி என்கிறதையும், பஞ்சேந்திரியத்துக்கு அடுத்த பார்வை முதலான சேட்டைகளையும், சரீர சம்பந்தமாய் இருக்கிற உள்ளிந்திரியங்களுடைய விருத்திகளையும் பண்ணுகிறதுக்கு மாத்திரம் வல்லதாயிருக்கையிலே, அப்படிப்பட்ட சேட்டைகளெல்லாம் ஆன சரீரமில்லாமல் உண்டாக்கமாட்டாது என்கிறதினால், ஆன

1. Corollories; Conclusions, inference

குணங்களை உடைத்தானதாய் இருக்கிற அப்படிப்பட்ட சரீர மாயிருக்கிற நாள்மட்டும் அதுக்கு மாத்திரையாய் இருக்கிற செந்துவின் சீவனுனது சரீரத்தோடேகூடத் தனது சேட்டைகளைப் பண்ணுகிறதுக்கு வல்லதாயிருக்கிறதொழிய, அப்படிப்பட்ட சரீரமில்லாமல் தனது சேட்டைகளுக்குள்ளே ஒன்றுனுலும் பண்ணமாட்டாது என்கிறதுக்குச் சந்தேகப்படத் தகாது. ஆதலாலே செந்துவினுடைய சீவனுனது தனது யோக்கிய சரீரமிருக்கிற நாள்மட்டும் நிலைத்திருக்குமென்று சொல்லவேணும். அல்லது, அப்படிப்பட்ட சரீரம் கெட்டுப் போய்ச் சீவனுக்கு அது பாத்திரமாயிராமல், அத்தோடேகூட சீவனுனது இருக்கக்கூடாத அவஸ்தை வந்தால், செந்துவினுடைய சீவனுனது கூடஅழிந்து போகுமென்று அற்பச் சந்தேகமாகிலும் இல்லாமல் ஒப்புக்கொள்ளத் தக்க சத்தியமாய் இருக்கிறதொழிய மற்றப்படியல்ல. இது நிமித்தமாக செந்துவினுடைய சீவனுனது பூமியிலே திரிகிற நாள்மட்டும் பாவ புண்ணிய விஷயக ஞானமில்லாததினுல், பாவ புண்ணியத்தைப் பண்ணுகிறதுக்கு அது வல்லதாயிராதென்று சொல்லக் கடவோம். இதன்றியே, தனது சரீரத்தோடேகூட அப்படிப்பட்ட சீவனுனது அழிந்துபோம் என்கிறதினுல், பாவ புண்ணியத்துக்கு ஒத்தவண்ணம் ஆக்கினை சம்பாவனை அது அனுபவிக்கத்தக்கதாக அதுக்குப் பரலோகம் உண்டென்று மதி கெட்டவனுய் இருக்கிறவன் சொல்லுவானெழிய மற்றப்படி அல்ல.

(ii) **உடலுக்கு மாத்திரை என்ற அளவில் வளர்த்தி முதலிய செய்கைகளைச் செய்தாலும், ஆன்மா உடலின்றிச் செய்கைகளைச் செய்யவும் தனித்து நிற்கவும் கூடும்; ஆகவே அழியாது.** மனுஷனுடைய சீவனேவென்ருல், தனது சரீரத்துக்கு மாத்திரையாய் இருந்தாலும் தனது சரீரத்தோடேகூடஇருந்து சரீர வளர்த்தி முதலானதுகளையும் பஞ்சேந்திரியங்கள் முதலான சேட்டைகளையும் பண்ணுகிறதுக்கு வல்லதாயிருக்கிறதுந் தவிர, சரீர சம்பந்தமாயிராத ஞான விருத்திகளையும் சரீரமில்லாத விஷயங்களையும், வேணும் வேண்டாமென்கிற சேட்டைகளையும் பண்ணுகிறதுக்கு வல்லதாய் இக்கிறதென்று பார்த்துக்கொண்டிருக்கிருேம். அப்படிப்பட்ட சேட்டைகளைக்

குறையற்ற பிரகாரமாய் உண்டாக்கிறதுக்குச் சரீரமானது விக்கினமாய் இருக்கிறதென்று அநுபவ சித்தியினலே அறிகிறோம் என்கிறதினுல், அப்படிப்பட்ட ஞான முதலான விருத்திகளை மனுஷ சீவனுனது பண்ணுகிறதுக்குச் சரீரமானது அவசியமாய் வேண்டியிருக்கிறது என்று சொல்லக்கடவோம் அல்ல. ஆதலாலே, மனுஷனுடைய சீவனுனது தனது சரீரத் தோடேகூட இருக்கையிலே இத்தொகைப்பட்ட ஞான முதலான விருத்திகளை ஒருவிதமாகப் பண்ணுகிறதுக்கு வல்ல தாயிருந்தாலும், தனது சரீரத்தை விட்டால், ஞான முதலான விருத்திகளைப் பழுதற நன்ருகப் பண்ணுகிறதுக்கு விக்கின மில்லாத பெலமுடையதாய் இருக்குமொழிய மற்றப்படியல்ல. அப்படி மனுஷனுடைய சீவனுனது சரீரமில்லாமல் தனது சேட்டைகளைச் [1]சமற்பகமாக பண்ணுகிறதுக்கு வல்லதாய் இருக்கிறதினுல், அது தனது சரீரத்தை விட்டுப் பிரிந்தாலும், அழிந்து போகாமல் என்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளாய் இருக்கிறதென்று அங்கீகரிக்க வேணுமொழிய, செந்து வினுடைய சீவனைப் போலே சரீரம் இல்லாதிருந்தால் அழிந்து போகுமென்று சொல்லுகிறது என்கிறது, மனுஷனுடைய சுபாவத்துக்கு ஒவ்வாத விசேஷமாய் இருக்கிறதும் தவிர, வேறே மகா மகாப்பட்ட ஞாயங்களுக்கு விரோதமாய் இருக்கக் கொள்ள, மனுஷனுடைய சீவனுனது சரீரத்தை விட்டுப் பிரிந் தாலும், அது நிற்குமென்று சொல்லக்கடவோமொழிய, அது அழிந்து போகும் என்கிற முழுத் தப்பறை விசேஷத்தை அங்கீகரிக்கக் கடவோமல்ல.

அவ்வண்ணமே. மனுஷ சீவனுனது சரீர சம்பந்தமாய் இராத ஞான முதலான விருத்திகளைப் பண்ணுகிறதுக்குப் பலமுடைத்தானதாய் இருக்கிறதினுல், இந்த லோகத்திலே திரிகிற நாள்மட்டும் பாவ புண்ணியத்தைக் கட்டிக்கொள்ளு கிறதுக்கு வல்லதாய் இருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. மனுஷ சீவனுனது பாவ புண்ணியத்தைப் பண்ணுகிறதுக்கு வல்லதாய் இருக்கிறபோதே, பாவ புண்ணியத்துக்கு ஒத்த வண்ணம், ஆக்கினை சம்பாவனையை அது அநுபவிக்கத் தக்க தாக பரலோகம் உண்டென்று அறிய சந்தேகமானுலும்

1. செம்மையாக

இல்லாமல் அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். அவ்வண்ணமே, மனுஷருடைய சீவனுனது உஷ்ண முதலான குணங்களாகிற நாச காரணங்களைக் கொண்டிராமல், நாச காரணங்களைக் கொண்டிருக்கிற சரீரமானது மனுஷனுடைய சீவனுனது நிலையாய் நிற்கிறதுக்கு வேண்டியிராத போதே, மனுஷ சீவனுனது என்றென்றைக்கும் சுபாவமாக நிற்கத்தக்க பொருளாய் இருக்கிறதொழிய, அழிந்து போகிற பொருளாய் இருக்கிறதென்று சொல்லக்கடவோமல்ல.

(iii) இதற்கு எதிரான கூற்றுப் பற்றி அடுத்த அதிகாரத்தில். இப்படிப்பட்ட நரசீவனுனது சுபாவமாக அழியாத பொருளாயிருக்கச் செய்தே, இதுக்கடுத்த விஷயத்திலே ஒரு விசேஷத்தின் பேரிலே நவமாயிருக்கிற வித்தியா பாரகர் வலுவாதத்தைப் பண்ணிக்கொண்டு வருகிறுர்கள். அவர்களுக்கு உண்டான சந்தேகம் நிவாரணம் பண்ணினோமானல், அப்படிப்பட்ட நிவாரணமானது இற்றைவரைக்கும் சொன்ன சத்தியத்தை ஒப்புவிக்கிறதுக்கு மிகவும் உதவும் என்கிறதினல், அதெல்லாம் வருகிற பாடத்திலே அடைவாக வெளிப்படுத்தின பிற்பாடு, இந்தப் பாடத்திலே நம்மால் சொல்லப்பட்ட சில ஞாயங்களைத் திரும்பச் சொல்லி, அதுகளுக்குச் சில விசேஷங்களைக் கூட்டி, மனுஷன் கரையேறுகிறதுக்கு மிகவும் அறியவேண்டின இந்தச் சத்தியமானது இதின்னம் அதிகமதிகமாக விளங்குகிறதுக்கு வேறே சில ஞாயங்களை வருகிற மூன்று பாடங்களிலே சொல்லிக் காட்டக்கடவோம்.

பதினோராம் பாடம் முற்றும்.

(கிரந்தம்) ?

---

## பன்னிரண்டாம் பாடம்

**12.1 (1) பரிமாணமானது இயற்கையாய் ஆதாரமான பொருளைத் தழுவி நின்றாலும் தேவ வல்லமையால் ஆதாரமின்றி நற்கருணையில் இருக்கிறது.** நரசீவனுனது

சுபாவமாக நிற்கிறதுக்குச் சரீரத்தை அபேக்ஷியாத பொருளாய் இருக்கிறதினால், அது அழியாத பொருளாய் இருக்கிறதென்று ஒப்புவிக்கப்படுகிறது என்று சொன்னோம். இதிலே நவமாய் இருக்கிற சில வித்தியாபாரகரான பேர்கள் ஒரு சந்தேகத்தை ஆராய்ந்து கொள்ளத் தக்கதாகத் தாங்களுக்கு இடம் பண்ணிக் கொண்டு, [1]சித்தாந்தம் இன்னதென்று நிச்சயம் பண்ணாத [2]வாதத்தைப் பண்ணிக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக் குள்ளே சிலர் அங்கீகரிக்கிற பக்ஷமாவது: "நரசீவனானது சுபாவமாக நிற்கிறதுக்குச் சரீரத்தை அபேக்ஷியாதிருந்தாலும், சர்வேஸ்வரனுடைய அளவில்லாத பெலமுள்ள திருவுளமானது நரசீவனானது நிற்கிறதுக்குச் சரீரத்தை அபேக்ஷிக்கத் தக்க தாகப் பண்ணலாம்" என்று அங்கீகரிக்கிறார்கள். ஆதலாலே, சுபாவமாய் அழியாத பொருளாகிற நரசீவனானது சர்வேஸ்வர னுடைய பெலத்தினாலே மிருகங்களுடைய சீவனைப் போலே அழிந்து போகிற பொருளாய்ப் போகலாமென்று சொல்லப் பட்டாப் போலே ஆச்சுது. இந்தப் பக்ஷத்தை ஒப்புவிக்கிற ஞாயமாவது: [3]குணமான பரிமாணமானது தானிருக்கிறதுக்குச் சுபாவமாய் ஆதாரமாகிற [4]திரவியத்தை அபேக்ஷித்திருந்தாலும், சர்வேஸ்வரனுடைய அளவில்லாத பெலத்தினாலே அப்படிப் பட்ட பரிமாணமானது திரவியமாகிற ஆகாரத்திலே ஆதேய மாயிராமல், வேறே ஆதாரமான பொருளும் இல்லாமலிருக் கலாம் என்கிறதுக்கு தேவோக்கித்த வேதத்தை அங்கீகரிக்கிற பேர்கள் சந்தேகப்படமாட்டார்கள்.

**2. அதுபோல இயற்கையாய் ஆதாரமற்ற ஆன்மா, ஏன் தேவ வல்லமையால் உடலைத் தழுவி அதனோடு அழி வுறலாகாது?** அத்தன்மை போல ஞானமில்லாத செந்துவி னுடைய சீவனானது தானிருக்கிறதுக்குச் சரீரத்தை அபேக்ஷித் திருந்தாலும், அனந்த திவ்விய பெலத்தினாலே அப்படிப்பட்ட சீவனானது சரீரத்தை அபேக்ஷியாமல் சரீரமில்லாமல் இருக்க லாமென்று சந்தேகமற அங்கீகரிக்கத்தக்க விசேஷமென்று சொல்லுகிறார்கள். ஆதலாலே, இதுக்கு [5]விருத்த மேரையாகச் சரியான விசேஷத்தை அவர்கள் அங்கீகரித்துத் தான் இருக்

1. முடிந்த முடிவு 2. discussion 3. accidens quantitatis
4. substance, பொருள் 5. மாறாக (contrarily)

திறதுக்குச் சரீரத்தை அபேக்ஷியாத நரசீவனுனது திவ்விய திருவுளப்படியே அது நீர்கிறதுக்குச் சரீரத்தை அபேக்ஷித்து நாசத்துக்குப் பாத்திரமான பொருளாய் இருக்கலாமென்று சொல்லுகிறுர்கள். இவர்களுடைய பக்ஷமானது ஞாயத்துக்கு ஒவ்வாததுமாய்ச், சகல பாவங்களுக்கும் வழி திறக்கிற பக்ஷமானதுமாய் இருக்கக்கொள்ள, அது அங்கீகரிக்க வொண்ணுதை முழுத் தப்பறையாய் இருக்கிறதென்று சொல்ல வேண்டி இருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது.

(i) குணம், திரவியம் என்ற இரு வகை ஆகுதல். இதெல்லாம் துலக்கமாக விளங்கும்படிக்கு அறியவேண்டின சில விசேஷங்களுண்டு. அதாவது பூமியிலே காணப்படுகிற வஸ்து என்னப்பட்ட யாவிலும் இரண்டு வகையுள்ள ஆகுத லுண்டென்று சகல [7]வித்தியாபாரகருக்கும் சம்மதமாகும். அதில் முதலாம் வகையுள்ள ஆகுதலாவது பரிமாணமும் வர்ணம் ருசி முதலானதுகளும் ஒன்றிலே ஆதேயமாய் இருக்கிறதென்று கண்டுகொண்டு வருகிறேம். அப்படிப்பட்டதுகளுக்கு [1]குணம் என்கிற பேர் செல்லுமென்று சொல்லத்தகும். இப்படிப் பட்டதுகளுக்கு ஆதாரமாயிருக்கிற பொருள் யாதொன்று உண்டு, அதுக்கு வித்தியாபாரகராயிருக்கிற பேர்கள் [2]திரவியம் என்கிற நாமத்தை இட்டார்கள். அப்படிப்பட்ட பொருளானது சரீரத்தின் கண்ணுக்கு விஷயமாயிராத சீவனுயிருக்கிற [3]மாத்திரையும், காணப்படுகிற குணமென்னப்பட்ட யாவுக்கும் பிரதான ஆதாரமாயிருக்கிற [4]உபதான காரணமும் திரவியம் என்று சொல்லப்படும்.

**(ii) எதிர்ப்பு 1. நரசீவன் விலங்கு சீவன்போல் உடலில் ஆதேயமாய் இல்லாவிட்டாலும் தேவ வல்லமையால் அப்படி இருக்கலாம்.** இதிப்படியிருக்கையிலே, முன் சொல்லப்பட்ட பக்ஷத்தை அங்கீகரிக்கிற பேர்களிலே சொல்லப்படுகிற ஞாயமாவது: "நரசீவனும் செந்துவினுடைய சீவனும் என்கிற இரண்டு பொருளும் திரவியரூபமான [5]பொருட்களாய் இருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. செந்து

1. accidens 2. substance 3. forma
4. material cause 5. substance 7. அறிஞர்

வின் சீவனுகிற திரவியமானது ஆதாரமாகிற சரீரத்திலே ஆதேயமாய் இருக்கிறபோதே, ஆகாரத்திலே ஆதேயமாய் இருக்கிற மேரையானது திரவியத்தின் சாதாரண மேரைக்கு [6]அத்தியந்த விரோதமாய் இருக்கிறதென்று சொல்லக்கடவோமல்ல. ஆதலாலே, நரசீவனுனது திரவிய ரூபமாயிருந்து சுபாவமாய்ச் சரீரத்திலே ஆதேயமாய் இராதிருந்தாலும், திவ்வியமான அனந்தபெலமானது அத்தைச் சரீரத்திலே ஆதேயமாய் இருக்கப்பண்ணிறைல், அது திரவிய மேரைக்கு விரோதமாய் இராதிருக்கக் கொள்ள, நரசீவனுகிற திரவியமானது சரீரத்திலே ஆதேயமாயிருக்கிறது என்கிறது [7]அர்த்த விரோதமானதென்றும் திவ்விய பெலத்தினுலே பண்ணப்படாத விசேஷமென்றும் சொல்லக்கடவோமல்ல".

(iii) **மறுப்பு: நரசீவன் பொருளின் பாதி என்ற அளவில் ஆதேயமாயிருக்கிறது. குணத்தைப் போல் தழுவினுல், இயல்பே கெட்டு அழிபடும்.** இப்படிக்கொத்த தப்பறைப் பக்ஷத்துக்கு அஸ்திவாரமாய் இருக்கிற இந்த ஞாயமானது எதிலே சத்தியத்தை விலகித் தப்புகிறதென்றும், இந்த ஞாயத்தை அங்கீகரிக்கிற பேர்கள் எதிலே மயங்கி மோசம் போகிறுர்கள் என்றும் வெளிப்படுத்தக்கடவோம். அதேதென்றுல், ஆதேயமாயிருக்கிற மேரையானது திரவியத்துக்குண்டான சாதாரண மேரைக்கு அத்தியந்த விரோதமாய் இருக்கச் செய்தே, யாதொரு திரவியமான பொருளானது ஆகாரத்திலே ஆதேயமாய் இருக்கலாமென்று சொல்லக்கூடுமொழிய, ஆகாரத்தை அபேட்சியாத திரவியமானது திவ்விய பெலத்தினுலே ஆகாரத்திலே ஆதேயமாய் இருக்கலாம் என்று சொல்லவும் கருதவும் கூடாது. அதெப்படியென்றுல், திரவிய ரூபமான பொருளானது முழுப் பொருளாயிராமல் பொருளினுடைய பாதியான மாத்திரையாய் இருக்கலாம் என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றுல், திரவிய ரூபமான நரசீவனுனது முழுப் பொருளாயிராமல், மனுஷனுடைய பாதியாகிற மாத்திரையாய் இருக்கக்கொள்ளத், திரவியமான பொருளின் மேரைக்குப் பொருளின் பாதியான மாத்திரையாய் இருக்கிறதென்கிறது விரோதமாய் இராதென்று சொல்ல

6. initrinsece repuguans (?) 7. contradiction in terms.

வேண்டி இருக்கையிலே, யாதொரு திரவியமான பொருளானது பொருளின் பாதியான மாத்திரையாய் இருக்கலாமென்று சொல்லத்தகுமொழியத், திரவியமான பொருளென்னப்பட்ட யாவும் பொருளின் பாதியான மாத்திரையாய் இருக்கலாமென்று சொல்லக்கூடாது.

(iv) **முழுப் பொருள் வேருெரு பொருளின் மாத்திரையாயிருக்க முடியாது.** ஞானமுள்ள நரசீவன் உணர்ச்சிகளுக்கும் காரணம். அறிவற்ற மிருக சீவனைப் போல் மிருகத்திலிருந்து அதன் உணர்ச்சிகளுக்குக் காரணமாக முடியாது. அவ்வண்ணமே, திரவிய ரூபமான சம்மனசாகிற முழுப் பொருளானது, குறையுள்ள பொருளுமாய் வேறே ஒரு பொருளினுடைய பாதியான மாத்திரையுமாய்த் தேவ பெலத்திஞலே இருக்கலாமென்று சொல்லக்கூடுமோ? அதில்லையே. அதேதென்ருல், பொருளின் மாத்திரையாய் இருக்கிறதுக்கு முழுப் பொருளானது தனது சுபாவமாகிற முழுப் பொருளின் மேரையை விட்டு விடவேணும். அப்படிச் சொல்லும்போது, தனது சுபாவத்தை விடுகிற பொருளானது நாசமாய்ப் போக வேணும் என்கிறதுக்குத் தப்பாது. இந்தடைவாகத் திரவியமான செந்துவினிடத்திலே இந்திரிய விருத்திகளுக்குக் காரணமானதும் [1]ஞானமில்லாத்தன மேரையும் ஒன்ருய்க்கூடும் என்கிறதிஞல், இந்திரியக விருத்திகளுக்கு ஆதிகாரணமாகிற திரவிய ரூபமான பொருள்களுக்கு ஞானமில்லாத மேரையானது விருத்தமாய் இருக்கிறதென்று சொல்லக்கூடாது. ஆனல் அப்படிப்பட்ட ஐந்திரியக விருத்திகளுக்குக் காரணமானது ஞான மேரையாகிற விசேஷத்தோடே கூடிஞல் அப்படிப்பட்ட ஐந்திரியக விருத்திகளுக்குக் காரணமானது, ஞானமில்லாத்தன மேரையோடே திரும்பக்கூடலாமென்று சொல்லவும் கருதவும் கூடாது. இது காரணமாக மனுஷனிடத்திலே ஐந்திரியக விருத்திகளுக்குக் காரணமானது ஞான மேரையுள்ள விசேஷத்தோடே கூடியிருக்கச் செய்தே, அப்படிப்பட்ட ஐந்திரியக விருத்திகளுக்குக் காரணமானது மிருகாதிகளிடத்திலே ஞானமில்லாத்தன மேரையுள்ள விசேஷத்தோடே கூடுகிறுப்போலே மனுஷனிடத்திலே இருக்கிற அப்படிப்பட்ட ஐந்திரியக

1. irrational nature

காரணமானது மதியில்லாத்தன மேரையுள்ள விசேஷத்தோடே தேவ பெலத்தினாலே கூடலாமென்று சொல்லக்கூடுமோ? அதில்லையே. அத்தன்மைபோல மிருகாதிகளிடத்திலே இருக்கிற திரவிய ரூபமான சீவனானது தான் நிற்கிறதுக்குச் சரீரத்தை அபேட்சித்திருந்தாலும், மனுஷனிடத்திலிருக்கிற திரவிய ரூபமான சீவனானது சரீரத்தை அபேட்சியாத மேரையுள்ள விசேஷத்தோடே கூடச் சுபாவமாய்க் கூடியிருக்கச் செய்தே, அப்படிப்பட்ட சீவனானது தான் நிற்கிறதுக்குச் சரீரத்தை அபேக்ஷிக்கலாமென்று சொல்லக்கூடாது. அதேதென்றால் நரசீவனானது சரீரத்தை விட்டு மிருகாதிகளுடைய சீவன்போலே சரீரத்தை அபேக்ஷிக்கிற மேரையோடே கூடவேணுமென்று சொல்ல வேண்டியிருக்கிறது. இப்படி சொல்லுகிறது என்கிறது நரசீவனானது நாசமாய்ப் போகவேணுமென்று சொல்லுகிறதுக்கு ஒக்கும்.

**(v) எதிர்ப்பு 2. மிருக சீவன் உடலைத் தழுவாது நிற்காமலும், நரசீவன் உடலைத் தழுவியே நிற்கவும் தேவ வல்லமை செய்யலாம்.** நம்முடைய பக்ஷத்துக்கு விரோதமான [1]விபக்ஷத்தை அனுசரிக்கிற பேர்கள் நாம் பண்ணின பிரசங்கத்தை ஆக்ஷேபம் பண்ணுகிறதுக்கு அவர்கள் சொல்லுகிற ஞாயமாவது: "நரசீவனானது தான் நிற்கிறதுக்குச் சரீரத்தைச் சுபாவமாக அபேட்சியாதது போலப் புத்தியில்லாத செந்துவினுடைய சீவனானது தான் நிற்கிறதுக்கு ஆதாரமான சரீரத்தைச் சுபாவமாய் அபேட்சிக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. ஆனால் அப்படிப்பட்ட செந்துவினுடைய சீவனானது சர்வேசுரனுடைய பெலத்தினாலே சரீரத்தை அபேக்ஷியாமல் இருக்கலாமென்று சொல்லுகிறோம். ஆகலாலே நரசீவனானது தான் நிற்கிறதுக்குத் தேவ பெலமானது சரீரத்தை அபேக்ஷிக்கத் தக்கதாகப் பண்ணலாமென்று சொல்லக்கடவோம்."

**(vi) ஆதாரமின்றி நில்லாத பரிமாண முதலிய குணங்களைத் தமது வல்லமையால் கடவுள் தாங்கும் போது அவற்றின் இயற்கை மாறவில்லை.** இந்த ஞாயமானது தப்பும் மேரையையும், விபக்ஷத்தை அனுசரிக்கிற

1. எதிர்கட்சி

பேர்கள் தாங்கள் மோசம் போய் மயங்கிற இடத்தையும் கண்டு பிடியாததினுல் இந்த ஞாயத்தினுலே தங்களுடைய விபக்ஷத்தை நிலைநிற்கத்தக்க சித்தாந்தமாக ஸ்தாபிக்கலாமென்று விசாரிக்கிறுர்கள். ஆனபடியினுலே நம்முடைய சத்தியமும் அவர்கள் மோசம் போகிற இடமும் விளங்கும்படிக்கு அறியவேண்டின சில விசேஷங்களுண்டு. அதாவது: பொருளானது தான் நிற்கிறதுக்குப் போரும் என்னப்பட்ட பெலத்தைத் தன்னிடத்திலே கொண்டிராததினுலே வேறே பொருளைத் தனக்கு ஆதாரமாய் இருக்கத்தக்கதாக வேண்டியிருக்கிறதென்று சொல்லத்தகும். ஆதலாலே நிலை நிற்கிறதுக்குப் போரும் என்னப்பட்ட பெலத்தைக் கொண்டிராத பொருளை ஆதாரமான பொருள் தாங்கிறுப்போலே அது நிலை நிற்கிறதுக்கு ஆதாரமாய் இருக்கிற பொருள் உபகாரம் பண்ணும் என்கிற ரகசிய விசேஷத்தைப் பாமரராயிருக்கிற பேர்கள் கண்டுபிடியாதிருந்தாலும், அத்தைப் புத்திமானகளாயிருக்கிற பேர்கள் கண்டு பிடிக்கக்கடவார்கள்.

இது இப்படியிருக்கச்செய்தே, நிலைநிற்கிறதுக்கு ஆதாரத்தை அபேக்ஷிக்கிற துர்ப்பெலமான பொருளின் சுபாவத்தைக் கெடாமற் கர்த்தரானவர் தனது அளவில்லாத பெலத்தினுலே அத்தை ஆதாரமில்லாமல் இருக்கப் பண்ணலாம் என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றுல் திவ்விய பெலத்தினுலே இப்படிப்பட்ட அற்புதமானது உண்டாகும் மேரையைப் பத்தும் பத்தாய் விசாரித்தோமானுல், துர்ப்பெலமாயிருக்கிற பொருளைத் தாங்கிற வகையாக ஆதாரமான பொருளானது துர்ப்பெலமாயிருக்கிற பொருளானது நிற்கிறதுக்கு உபகாரம் பண்ணுகிற சூக்ஷமான விசேஷத்தை சில வித்தியாபாரகராயிருக்கிற பேர்கள் கண்டுபிடித்திருந்தாலும், துர்ப்பெலமான பொருளானது நிற்கிறதுக்கு ஆதாரமான பொருளினுலே பண்ணப்படுகிற உபகாரத்தைக் கர்த்தரானவர் தம்முடைய அளவில்லாத பெலத்தினுலே அத்தின் ஆதாரமாயிராத வேறொரு பொருளைக் கொண்டானுலும் தம்முடைய திவ்விய திருவுளத்தைக் கொண்டென்கிலும் பண்ணுவிக்கலாமென்று அங்கீகரிக்கும்போது, ஞாயத்துக்கும் திவ்வியமான அனந்த பெலத்துக்கும் ஏற்றிருக்கிற மேரையானது அங்கீகரிக்கப்படும் என்கிறதுக்குத் தப்பாது.

இப்படிக்கொத்த அற்புதத்தைக் கர்த்தரானவர் தமது அளவில்லாத பெலத்தைக்கொண்டு பண்ணும்போது, துர்ப்பெலமான பொருளுக்கு ஆதாரத்தினாலே வருகிற உபகாரத்தை வேறே மேரையாய் அதுக்கு வரத்தக்கதாக அவர் பண்ணிக்கொண்டு வருகிறாரொழியத், துர்ப்பெலமான பொருளினுடைய சுபாவத்தைக் கர்த்தரானவர் கெடுக்கிறதுமில்லை. அப்படிப்பட்ட துர்ப்பெலமான பொருளின் சுபாவத்திலே கனமான விகாரங்களைப் பண்ணிவிக்கிறதுமில்லை.

ஆதலாலே திரவியத்திலே ஆதேயாமாயிருக்கிற பரிமாணமானது திரவியமாகிற ஆதாரமில்லாமற் கர்த்தரானவர் இருக்கப் பண்ணலாமென்று ஒரற்பமாகிலுஞ் சந்தேகமில்லாமல் ஒப்புக்கொள்ளத்தக்க குன்றாத சத்தியமாகும். அவ்வண்ணமே, கர்த்தரானவர் இந்த அற்புதத்தைப் பண்ணும்போது, பரிமாணமாகிற குணமானது நிற்கிறதுக்கு ஆதாரமாகிற திரவியத்தினாலே வருகிற உபகாரத்தை வேறே மேரையாக அதுக்கு வரத்தக்கதாகக் கர்த்தரானவர் பண்ணுகிறாரொழியப் பரிமாணமாகிற குணத்தின் சுபாவத்தைக் கர்த்தரானவர் கெடுக்கிறாரென்றும், அப்படிப்பட்ட குணத்தின் சுபாவத்திலே கனமான விகாரங்களைப் பண்ணுகிறாரென்றுஞ் சொல்லுகிறதுக்கு இடங்காண மாட்டாது. ஆதலாலே பரிமாணமாகிற குணமானது தான் நிற்கிறதுக்குச் சுபாவமாக ஆதாரத்தை அபேக்ஷித்திருந்தாலும், திவ்விய பெலத்தினாலே ஆதார மில்லாமல் அப்படிப்பட்ட குணங்கள் முதலான குணங்களான(து)கள் ஆதாரமில்லாமல் இருக்கலாமென்று சந்தேகமற அங்கீகரிக்கக் கடவோம்.

**(vii) மிருக சீவன் உடலின்றி இறைவனால் தாங்கப்படலாம். ஆனால் அதன் செய்கையெல்லாம் உடலைச் சார்ந்திருப்பதால், உடலின்றிச் செய்கை செய்ய வேறே அற்புதம் வேண்டும். அன்றேல் செய்கையின்றி இருக்கும்.** செந்துவினுடைய சீவனானது சுபாவமாகச் சரீரமாகிற ஆதாரத்தை அபேக்ஷிக்கிறதென்று அறிந்திருக்கிறோம். அப்படிப்பட்ட சீவனிடத்திலே இந்தவிடைவாக யோசிக்கலாமோ இல்லையோ என்கிறதிலே சந்தேகப்படுகிறதுக்கு இடமுண்டு. அதேதென்றாற் சுபாவமாய் ஆதாரமென்கிற சரீரத்தை அபேக்ஷிக்கிற

சீவனுனது சரீரத்தின் உதவி கொண்டு கிரிகைகளைப் பண்ணு மொழிய, சரீரமில்லாமற் கிரிகைகளை அது பண்ணுகிறதுக்கு வல்லதாயிராது என்றிருக்கையிலே, அப்படிப்பட்ட சீவனுனது சரீரத்தை விட்டுப் பிரிந்து கிரிகைகளைப் பண்ணமாட்டாத பொருளாயிருந்து(கொண்டு), அது சீவனுகாத பொருளுமாய்ச் சீவனுயிருக்கிற பொருளுமாயிருக்க வேணுமென்று காண்பித்திருக்கிறது. இதிலே அங்கீகரிக்கத்தகக விசேஷமானது : அப்படிப்பட்ட சீவன் சரீரமில்லாமல் இருந்தாலும் அது சீவனென்று சொல்லப்படுகிறதுக்குச் சரீரமில்லாமல் அப்படிப்பட்ட சீவனை நிற்கத்தக்கதாகப் பண்ணுகிற கர்த்தரானவர் ஒன்றில் சரீரமில்லாமல் அந்த சீவன் கிரிகை பண்ணுகிறதுக்கு வேறே அற்புதத்தைக் பண்ணிக்கொண்டு வரவேணும். இல்லாவிட்டாற் கிரியைப் பண்ணுகிறதுக்கு அப்படிப்பட்ட சீவனிடத்திலே உண்டாயிருக்கிற யோக்கிதையானது அது சீவனென்று சொல்லப்படுகிறதுக்குப் போருமென்று அங்கீகரிக்க வேணும். இதிலே போம் வழி ஏதென்றும், அங்கீகரிக்கத் தக்க சித்தாந்தம் ஏதென்றும் வித்தியாபாரகராயிருக்கிற பேர்கள் பரிச்சேதம் பண்ணக்கடவார்கள்.

(viii) **உடலைத் தழுவாத நரசீவன் தேவ வல்லமையால் அதைத் தழுவினுல் தன் இயற்கையில் மாறிவிடும்.** நரசீவனுனது சரீரத்திலே ஆதேயமாயிருக்கக்கூடாது என்கிற சித்தாந்தத்திலே சந்தேகப்படாததுக்கான மேரையுள்ள ஞாயங்களைச் சொல்லிக் காட்டக்கடவோம். அதேதெனில், நரசீவனும் சம்மனசாகிற திரவியமான பொருளும் இந்த இரண்டு பொருள்களும் ஆதாரமில்லாமல் இருக்கத்தக்கதாக அதுகளுக்கு உண்டாயிருக்கிற பலமானது அதுகளுடைய சுபாவமாயிருக்கிறதென்று அங்கீகரிக்க வேணுமொழிய மற்றப்படியல்ல. ஆதாரத்தை அபேக்ஷியாத அப்படிப்பட்ட பெலமாகிற சுபாவமானது ஆதேயமான துர்ப்பெலமாய்ப் போகலாமென்று சொலலுகிறது என்கிறது முன் சொல்லப்பட்ட குறையற்ற பெலமானது நாசமாய்ப் போகவேணுமென்று சொல்லுகிறதுக்கு ஒக்கும். அல்லது அப்படிப்பட்ட குறையற்ற பெலமானது நாசமாய்ப்போகத் தேவையில்லை என்று அங்கீகரித்தோமானுற், பின்னபேத மில்லாமல் ஒரு பொருள் தானே

குறையற்ற பெலமானதுமாய்க் குறையுள்ள துர்ப்பெலமானது மாயிருக்கலாம் என்கிற பரஸ்பர அர்த்த [1]விரோதமான விசேஷங்களை அங்கீகரிக்க வேணும். இது காரணமாக ஆதாரத்தை அபேக்ஷியாத நரசீவனுனது தனது சுபாவத்தைவிட்டு நாசமாய்ப் போகாமல் திவ்விய பெலத்தினுலே ஆதேயமான பொருளாய்ப் போகக்கூடாதென்கிற சத்திய விசேஷமானது இதிலே ஒப்புக்கொள்ளத்தக்க சித்தாந்தமாய் இருக்கிறதென்று சொல்லிக்கொண்டு வருகிறோம்.

ஆதலாலே ஆதாரத்தை அபேக்ஷிக்கிற பொருளானது திவ்விய பெலத்தினுலே ஆதாரம் இல்லாமல் இருக்கலான மேரைக்கும், ஆதாரத்தை அபேக்ஷியாத பெலமாகிற சுபாவமானது ஆதேயமான பொருளாய்ப் போகிற வகைக்கும் உண்டாயிருக்கிற வித்தியாசத்தைப் பத்தும் பந்தாய் விசாரிக்கக் கடவோம். அதேதென்றுல், ஆதாரத்தை அபேக்ஷிக்கிற பொருளானது தான் இருக்கிறதுக்கு வேண்டியிருக்கிற ஆதாரத்தின் உபகாரத்தைத் தேவ பெலத்தினுலே வேறேமேரையாய் அடையாலாம் என்கிறதுக்காக, ஆதாரத்தை அபேக்ஷிக்கிற பொருளானது தேவ பெலத்தினுலே ஆதாரமில்லாமல் இருக்கலாமென்று அங்கீகரித்துக்கொண்டு வருகிறோம். ஆதாரத்தை அபேக்ஷியாத பொருளோவென்றுல், அது தனது சுபாவத்தை விட்டுத் தான் கெட்டுப் போகாமல் தேவையான பொருளாய்ப் போகமாட்டாது என்கிறதினுலே, ஆதாரத்தை அபேக்ஷியாத நரசீவன் முதலான திரவியமான பொருள்கள் தேவ பெலத்தினுலே ஆதேயமான பொருள்களாய்ப் போகக்கூடாது என்கிற அங்கீகாரமானது குறையற்ற ஞாயத்துக்குங் கர்த்தரானவர் தனது திவ்விய பெலத்தைக்கொண்டு நடத்தலான மேரைக்கும் [2]ஏற்றிருக்கிறதென்று சொல்லவேண்டியிருக்கிறது.

**12·2 நரசீவன் உடலைத் தழுவி நின்றுல் உடலழியத் தானும் அழியும்; நரகமோ மோட்சமோ பாவ புண்ணியத்துக்கு இராது.** இற்றைவரைக்குஞ் சொல்லப்பட்ட ஞாயந் தவிர வேறேயொரு ஞாயத்தினுலே நரசீவனுனது சரீர ஆதேயமான பொருளாய் இருக்கமாட்டாதென்று ஒப்புவிக்கக்

1 Contradictory. 2 ஏத்து (பா. பே.)

கடவோம். அதேதென்றால், நரசீவனுனது சரீர ஆதேயமாய் இருக்கலாமென்று சொன்னோமானுல், அப்படிப்பட்ட சீவனு னது தனது சரீரத்தைவிட்டுப் பிரியும்போது அது அழிந்து போக வேணுமென்று அங்கீகரிக்க வேணும். ஆகலாலே இப்படிப்பட்ட நரசீவனுக்குப் பரலோக சம்மந்தமாயிருக்கிற நரக மோக்ஷம் இல்லை என்று சம்மதிக்கவேணும். இந்த விசேஷ மானது அங்கீகரிக்கப்பட்டால், இன்னம் வேறே யிரண்டு அபத்த விசேஷங்களிலே சம்மதப்பட வேண்டியிருக்கிறது. அதெப்படியென்றால், சரீரத்திலே ஆதேயமாய் இருக்கிற நர சீவனுனது ஞானமுஞ் சுவாதந்திரியமும் உடைத்தானதா யிருக்கவேணும். ஆகலாலே முடிவில்லாத மகிமையுள்ள கர்த்தனை நிந்தித்து முடிவில்லாத பொல்லாப்புள்ள பாவத்தைப் பண்ணினுல், அப்படிப்பட்ட சீவனுனது தான் பண்ணின பாவத்துக்குக் கர்த்தரானவர் வேறே அற்புதம் பண்ணுமல், என்றென்றைக்குஞ் சரியான ஆக்கினை யிடமாட்டாரென்று சம்மதிக்க வேண்டியிருக்கிறது. ஆகாலாலே நரசீவனுனது முடிவில்லாத பாவத்தைப் பண்ணுகிறதுக்கு வல்லதாயிருந்து, மீளவும் அந்தச் சீவனுனது தான் பண்ணின பாவத்துக்கு என்றென்றைக்கும் சரியான ஆக்கினை அனுபவிக்கிறதுக்கு யோக்கியதை இல்லாமலிருக்கிறது என்கிற விபக்ஷமானது பழு தற்ற ஞாயத்துக்குங் குறையற்ற திவ்விய நீதிக்கும் ஒவ்வாததா யிருக்கக்கொள்ள, அது முழுத்தப்பறையா யிருக்கிறதென்று அங்கீகரிக்க வேணும்.

மீளவும், [1]விபரீத மேரையாக அப்படிப்பட்ட நரசீவ னுனது கர்த்தன் பேரிலே குறையற்ற விசுவாசமும் பத்தியும் உண்டாய், மோக்ஷ சாதகமான புண்ணியங்கள் என்னப்பட்ட யாவையும் பண்ணினுலும், அதுகளால் வருகிற பலனுகிற மோக்ஷத்தை அனுபவிக்கிறதுக்கு அந்தச் சீவனுனது யோக் கியதை இல்லாததாய் இருக்கிறதினுல், கர்த்தனுடைய அனந்த கிருபைக்கு அது பாத்திரமாகாததாய் இருக்கிறதென்று அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. இத்தனை அபத்தங்களிலே சம்மதப்படாதபடிக்கு, நரசீவனுனது சரீராதேயமாய் இருக்க லாம் என்கிற தப்பறையான விபக்ஷத்தை முழுதும் வெறுத்து,

1. e contra, on the other hand இதற்கு மாருக

அத்தை நினையாமலிருக்கக் கடவோம். அதேதென்றால், அப்படிப்பட்ட விபக்ஷத்தைப் பத்தும்பத்தாய் விசாரித்தோமானால், சகல பாவங்களுக்கும் காரணமாயிருக்கிற நாஸ்திகருடைய மதத்துக்கு ஏறக்குறைய வழியாய் இருக்கிறதென்று சொல்லலாய் இருக்கிறது. அதேதென்றால், வெட்கங்கெட்ட பாவியானவன் தனது சீவனும் வேறே அனேக மனுஷருடைய சீவன்களும் சரீராபேக்ஷயமான பொரு(ள்க)ளாய்க், கர்த்தரானவர் தனது பலத்தைக் கொண்டு பண்ணினரென்று கர்த்தரானவர் தானே அறிவித்ததினால், பாவியானவன் தான் அறிகிறனென்று சொன்னான் ஆனால், அப்படிப்பட்ட வெட்கங்கெட்ட பாவிக்கும் அவனை அனுசரிக்கிற மதிகெட்ட மிலேச்சருக்கும் பரலோகம் உண்டென்று ஒப்புவிக்கிறதுக்கு வழி காணாது.

**12.3 நரசீவன் அழியாதது; ஆனால் அது அனாதியன்று (i) ஞான முதலானவற்றில் ஏற்ற குறைச்சல் என்ற மட்டோடு இருக்கிறது.** இந்த விஷயத்திலே நம்மால் விரிவாகப் பண்ணப்பட்ட பிரசங்கத்துக்குக் காரணமேதெனில், நரசீவனானது தான் இருக்கிறதுக்குத் திவ்விய பலத்தினாலேயானாலும் சரீரத்தை அபேக்ஷிக்கமாட்டாது என்று ஒப்புவித்த போதே, சுபாவமாக அது அழியாத பொருளாய் இருக்கிறதென்று உத்தம விதமாக ஒப்புவிக்கப்பட்டுது என்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது. ஆனால் நம்மால் ஒப்புவிக்கப்பட்ட சத்தியத்தை இன்னந் துலக்கமாக ஒப்புவிக்கிறதுக்குப் போன பாடத்திலே சொல்லப்பட்ட சில ஞாயங்களை இன்னம் சொல்லி, அதுகளுக்கு இந்தச் சத்தியத்தை ஒப்புவிக்கிற சில விசேஷங்களைக் கூட்டக்கடவோம். அதெப்படியென்றால், நரசீவனானது அழியாத பொருளாயிருக்கிறதென்று சில பேர்கள் சொல்கிறதுக்குச் சர்வேஸ்வரனோடே கூட அது அனாதியாகத் தானாயிருக்கிற பொருளாய் இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இவர்கள் மயக்கத்தினாலே தாறுமாறாகச் சொல்லுகிற விசேஷம் தப்பறையாயிருக்கிறதென்று இன்னம் வெளிப்படுத்தக் கடவோம். அதேதென்றால், 'பதி, பசு, அனாதியாயிருக்கிறதென்று சொல்லுமாப்போலே, பாசமானது கூட அனாதியாய் இருக்கிறதென்று ஒப்புக்கொள்ளத் தக்கது' என்று சொல்லுகிறார்கள். இந்த ஞாயத்துக்கான பிரதியுத்தாரத்தை மனுஷ

சீவனுடைய அழியாத பாவத்தை ஒப்புவிக்குந் தறுவாயிலே சொல்லுவோமென்கிறதினாலே இந்த [1]அவசரத்திலே இவர்களாலே கற்பிக்கப்பட்டதுகள் ஒப்புக்கொள்ளத் தக்கதாய் இருக்கமாட்டாதென்று ஒப்பச் சொல்லக்கடவோம். அதேதென்றால், சீவனானது தானாகவும் அநாதியாகவும் இருக்கிறதென்று சொன்னோமானால், சர்வேஸ்வரனைப் போலே அது மட்டில்லாதே சகல நன்மை சுருபமாய் இருக்கிறதென்று சம்மதிக்க வேணும். நரசீவனானது ஞான முதலான நன்மைகளிலே மட்டோடு இருக்கிறதுந் தவிர, நன்மை விஷயத்திலே குறையுள்ள பொருளாய் இருக்கிறதென்று [2]அனுபவசித்தியினாலே சந்தேகமில்லாமல் அறிந்திருக்கிறோம் என்கிறபோது, நரசீவனானது தானாயிருக்கிற பொருளாகமாட்டாது என்கிறதுக்குச் சந்தேகப்படக் கணக்கில்லை.

இந்த ஞாயத்தை இந்நடைவாகக் கண்டுபிடிக்கலாம். ஞான முதலான நன்மைகள் நரசீவனிடத்திலே அதிகமாய் இருக்கலாமென்றும் குறைவாக இருக்கலாமென்றும் அங்கீகரிக்க வேணும் என்றிருக்கையிலே. இதெல்லாம் ஏற்றக் குறைச்சலாய் இருப்பதுக்கும்[3] மட்டோடு ஞான முதலான நன்மைகள் ஆத்துமத்திலே உண்டாயிருக்கிறதுக்கும் ஞாயமாவது: ஆத்துமத்தை உண்டாக்கிறவன் ஞான பெலம் இது முதலான நன்மைகளை மட்டோடு ஆத்துமத்துக்குக் குடுத்தாரென்று சொல்லக்கடவோம். ஆனபடியினாலே, ஆத்துமத்துக்குக் காரணம் இல்லாவிட்டால் நன்மை விஷயங்களிலே மட்டுக் கட்டுகிறவன் இல்லாதே ஆத்துமத்திலே இருக்கிற நன்மைகள் மட்டில்லாதே இருக்கவேணும் என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால், ஆத்துமமானது தான் தனக்கு முன்னே இருக்கமாட்டாததினால், தானே தனக்கு ஞான முதலான நன்மைகளிலே மட்டுக்கட்டிக்கொண்டு வந்ததென்று சொல்லவும் எண்ணவும் கூடாது. அதேதென்றால் இப்படிப்பட்ட விஷயங்களிலே மட்டுக்கட்டி வருகிறதென்கிறது காரணத்துக் கடுத்த செயலாய் இருக்கக்கொள்ளப், பொருளானது தான் தனக்குக் காரணமாயிருக்க மாட்டாதது போலே, தான் தனக்கு அதிலே இதிலே மட்டுக்கட்டிக்கொண்டு வரக்கூடாதென்று சொல்லக்கடவது.

1. சமயம் 2. பட்டறிவு 3. ஆகாததுக்கும் (பாடம்)

(ii) எண்ணற்ற எண்ணிக்கையுள்ளது என்ற முரண்பாடு வருகிறது. இது தவிர, கர்த்தரானவர் ஆத்துமாக்களை உண்டாக்கினரென்று சொல்லாதிருந்தோமானால், ஆத்துமாக்களுடைய [1]இலக்கமானது அம்மாத்திரமென்றும் இம்மாத்திரமென்றும் பண்ணினவனார்? அப்படியே ஆத்துமாக்களுடைய இலக்கமானது அம்மாத்திரம் என்றும் இம்மாத்திரம் என்றும் பண்ணினவன் இல்லாதபோதே, ஆத்துமாக்களுடைய இலக்கமானது முடிவில்லாததாய் இருக்கிறதென்று சொல்லக்கடவோம். ஆத்துமாக்களுடைய [1]சங்கியையானது மட்டில்லாதே முடிவில்லாத சங்கியையாய் இருக்கிறதென்று சொல்லுகிறபோது, அநேக அபத்தங்களை அங்கீகரிக்க வேண்டி இருக்கும். இதெல்லாம் 'ஞானோபதேசத்தில்' ஒப்பச் சொன்னோம் என்கிறதினாலே, இவ்விடத்திலே திரும்பச் சொல்லக் கணக்கில்லை. இந்த ஞாயத்தினாலே மாத்திரம் இவ்விடத்திலே இவர்கள் சொல்லுகிற வார்த்தை தப்பறையெனறு கண்டுபிடிக்கலாம். அதேதென்றால், ஆத்துமாக்களுடைய முடிவில்லாத கூட்டங்கள் எண்ணப்படாத சரீரங்களோடே கூட இருக்கிறதென்று சொன்னோமானால், சரீரங்களிலே தானே [2]'பரார்த்த சங்கியை' உண்டென்று அங்கீகரிக்கத்தக்கதாகும். எண்ணப்படலான சங்கியைகளுக்குள்ளே அதிகமான சங்கியையானது பரார்த்த சங்கியை என்று சொல்லப்படும். ஆனபடியினாலே பரார்த்த சங்கியைக் காட்டிலும் அதிக சங்கியை உண்டாயிருக்க மாட்டாதென்று சொல்லவேணும். இதிப்படி இருக்கிறபோது, சரீர வகையிலே பரார்த்த சங்கியை கிடைக்கலாமென்று சொல்லக்கூடாது. அதேதென்றால, சரீரங்களிலே அங்கீகரிக்கப்படுகிற பரார்த்த சங்கியைக் காட்டிலும் சரீரங்களுக்குண்டான ரோமங்களுடைய சங்கியையானது அதிகமாய் இருக்கிறதென்று அங்கீகரிக்க வேணும். இப்படி அங்கீகரிக்கிறபோது, முகிவில்லாத எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமான எண்ணிக்கை உண்டென்கிற அபத்த விசேஷத்தை அங்கீகரிக்க வேணும். இப்படிப்பட்ட அபத்தங்களை அங்கீகரியாதபடிக்குக் கர்த்தரானவர் ஆத்துமாக்களை உண்டாக்கி, அதுகளுக்கு ஞான முதலான நன்மைகளை மட்டோடே கொடுத்

1. எண்ணிக்கை 2. எண்ணற்றது

தருளினுரென்றும், ஆத்துமாக்களுடைய இலக்கத்தை இம்மாத்திரமென்று பண்ணி, நன்மையிலேயும் சங்கியையிலேயும் தனது கிருபையுள்ள திருவுளப்படியே மட்டுக்கட்டினுரென்றும் அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும்.

(iii) **கடவுள் கடவுளாக இருக்கமாட்டார்.** இது தவிர, லோகத்திலே மனுஷருக்குள்ளே ராசாங்க முதலான கர்த்தத்துவங்களைப் பிரசைகளெல்லாம் கூடிச் சிலருக்குக் கட்டளையிட்டதினுல், சிலர் மனுஷருக்குள்ளே கர்த்தாக்களாய் இருக்கிருர்களென்று சொல்லப்படுமாப்போல், ஒன்ருன சர்வேஸ்வரன் சகலத்துக்கும் கர்த்தராய் இருக்கிருரென்று சொல்லவொண்ணுது. அதேனென்ருல், உலக கட்டளைப் படியே பிரசைகள் சம்மதிக்கிறதினுலே ஆனுலும், பலாத்காரத்தினுலே என்கிலும் லோகத்திலேயுள்ள ராசாக்கள் கர்த்தாக்களாய் இருக்கிருர்களென்று சொல்லக்கூடுமொழிய மற்றப்படி அல்ல. சுபாவமான கர்த்தனென்கிற நாமதேயம் அவர்களுக்குச் செல்லமாட்டாது. அதேதென்ருல், சுபாவ கர்த்தர் [1]என்கிறது ஒன்ருன கடவுளுக்குச் செல்லுமொழிய மற்றப்படியல்ல. இதுக்குக் காரணமேதெனில், சர்வேஸ்வரனுனவர் தானே மாத்திரம் காரணமில்லாதவருமாய்த் தானுயிருக்கிற பொருளுமாய் இருந்து, மற்றுண்டான பொருள் என்னப்பட்ட யாவும் நவமாய் உற்பவிக்கிறதுக்கும் இருக்கிறதுக்கும் அவர் மெய்யான காரணமாய் இருக்கக்கொள்ள, சகலத்துக்கும் சுபாவமான கர்த்தராய் இருக்கிருரென்று சொல்லக்கடவோம். அவ்வண்ணமே, யாதாமொரு [2]எதார்த்த பொருள் உற்பவிக்கிறதுக்கும் இருக்கிறதுக்கும் சர்வேஸ்வரனுனவர் காரணமாய் இருக்கவில்லை என்ற அங்கீகரித்தோமானுல், அப்படிப்பட்ட பொருட்களுக்குச் சர்வேஸ்வரன் கர்த்தராய் இருக்கவில்லை என்று அங்கீகரிக்க வேணும். ஆதலாலே, லோகத்திலே சர்வத்துக்கும் உடையவராயிருக்கிற பராபரவஸ்து இல்லையென்று சொல்ல வேண்டியிருக்கும். இதன்றியே, சகலத்தையும் உண்டாக்கிறதுக்கு வல்லவராயிருக்கிற சர்வேஸ்வரனுனவர் இல்லை என்றும் அங்கீகரிக்கக்கடவது.

1. என்கிற பேரானது கர்த்தனுக்கே செல்லும் (பா. பே.)
2. Ens reale, உள்ள பொருள்

(iv) கடவுளால் தீர்வை யிடமுடியாது. கடைசியாய்ச் சர்வேஸ்வரனானவர் ஆத்துமாக்களை உண்டாக்காமல் அதுகளுக்குச் சுபாவ கர்த்தராய் இருக்கவில்லை என்று சம்மதப்பட்டோமானால், ஆத்துமாக்களை நடத்துகிறதிலேயும், ஆக்கினை சம்பாவனை அதுகளுக்கு இடுகிறதிலேயுங் கர்த்தரானவர் சுபாவமாக வல்லவராயிருக்க மாட்டாரென்று சொல்லக்கடவது. ஆதலாலே, சகலத்தையும் நடத்துகிறவருமாய், நீதிப்பிரகாரமாகப் பாவிகளுக்கும் புண்ணியவான்களுக்கும் ஆக்கினை சம்பாவனை தருபவருமாய்க், குறையற்ற பிரகாரமாயிருக்கிற கர்த்தரானவர் லோகத்திலே இருக்கவில்லை என்று அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. இந்தப் பொய்யான விசேஷங்கள் முதலான வேறே அநேக அபத்தத் தப்பறைக்கு அங்கீகாரம் உண்டாகாதபடிக்கு, ஒன்றான சர்வேஸ்வரன் மாத்திரம் காரணமில்லாதவருமாய்த் தானாயிருக்கிற பொருளுமாய் இருக்கிறாரென்று அங்கீகரித்து ஆத்தும முதலான எதார்த்த பொருளென்னப்பட்ட யாவும் நூதனமாய் உற்பவிக்கிறதுக்கும் இருக்கிறதுக்கும் அவரே மெய்யான காரணமாய் இருக்கிறாரென்று சந்தேகமில்லாமல் அங்கீகரித்து, அவர்தானே சகலத்தையும் நடத்துகிறவருமாய்ப், பாவிகளுக்கும் புண்ணியவான்களுக்கும் நீதிப்பிரகாரம் ஆக்கினை சம்பாவனை தருபவருமாய்ச், சர்வத்தக்குஞ் சுபாவமான கர்த்தருமாய் இருக்கிறாரென்று அற்ப சந்தேகமாகிலு மில்லாமல் முழு மனதோடு ஒப்புக்கொள்ளக் கடவோம்.

*12.4* **ஆன்மாவின் தோற்றம் பற்றிச் சத்தியவேதக் கொள்கை.** இந்தச் சத்தியத்தை அங்கீகரிக்கிறதிலே வேறே தப்பறை விசேஷங்களைக் கலவாமல் ஆண்டவர் திருவுளம்பற்றின குறையற்ற ஞாயத்துக்கு ஒக்திருக்கிற வேதத்தினாலே ஆத்தும விஷய முதலான மற்றுமுள்ள விஷயங்களிலே அறிவிக்கப்படுகிற சத்திய விசேஷங்களைச் சந்தேகமற விசுவாசிக்கத்தக்கதாகும். அவ்வண்ணமே, சரீரத்துக்கு மாத்திரையாய் இருக்கிற மனுஷனுடைய ஆத்துமத்தைச் சர்வேஸ்வரனானவர் ஒன்றுமில்லாமலிருக்கையிலே உண்டாக்கி, மாதா கெர்ப்பத்திலே உற்பவித்து வளர்ந்த சரீரமானது எந்த க்ஷணத்திலே ஆத்துமத்துக்குப் பாத்திரமாய் இருக்கிறதோ, அந்த க்ஷணத்திலேதானே எங்குமிருக்கிற சர்வத்துக்கும் வல்லவரான கர்த்தரானவர் ஒரு பொருளாயிராத

மனுஷாத்துமம் பொருளாயிருக்கட்டும் என்று சொல்லி, அத்தை நவமாய் உண்டாக்கிக்கொண்டு வருகிறாரென்று சொல்லவேணு மொழிய, லோகத்தை உண்டாக்கினபோதே ஆத்துமாக்களை யெல்லாம் உண்டாக்கினாரென்று சொல்லக்கடவோமல்ல. அதே தென்றால், குறையற்ற கர்த்தரானவர் தனது சுபாவத்திலே குறையுள்ள வகையாய் வஸ்துவை உண்டாக்காமல், குறை யில்லாத ஸ்திதியிலே அதுகளை உண்டாக்கினாரென்று சொல்லக் கடவோம். அவ்வண்ணமே, ஆத்துமத்திலேயும் சரீரத்திலேயும் கூடின பொருளாகிற மனுஷனிடத்திலே ஆத்துமமானது ஒரு பாதியாய் இருக்கையிலே, சரீரமில்லாமல் இருந்தால், தனது சுபாவ ஸ்திதியிலே இராமல் குறையுள்ள ஸ்திதியிலே இருக்கிற தென்று சொல்லவேணும்.

அவ்வண்ணமே மனுஷனுடைய ஆத்துமமானது அழியாத பொருளாய் இருக்கக்கொள்ள, சுபாவமாக மரண நிமித்தமாகச் சரீரமில்லாமல் இருக்கலாமென்று சொன்னாலும், அப்படிப்பட்ட ஸ்திதியானது ஆத்துமத்துக்குச் சுபாவமானதாய் இராமல், குறைவுள்ள ஸ்திதியாய் இருக்கக்கொள்ள, வஸ்துக்களை எல்லாம் தனது சுபாவத்திலே குறையற்றதுகளாய் உண்டாக்கின கர்த்தரானவர் லோகத்தை உண்டாக்கிறபோது, சரீரமில்லாமல் ஆத்துமாக்களை உண்டாக்கினாரென்று சொன் னோமானால், ஆத்துமத்துக்குச் சுபாவமானதாய் இராத ஸ்திதி யிலேயும் குறையுள்ள ஸ்திதியிலேயும் ஆத்துமாக்களை உண்டாக் கினாரென்று அங்கீகரிக்க வேண்டியிருக்கும். இதன்றியே, இப்படிப்பட்ட ஆத்துமாக்கள் சரீரத்திலே கூடுகிற நாள்மட்டும் இருக்கிற ஸ்தலத்தையும் காத்தரானவர் அதுகளைச் சரீரங்களில் ஏவுகிற மேரையையும் சொல்லுகிறதிலே அனேக அபத்த விசேஷங்களைக் கற்பிக்க வேண்டியிருக்கும். இதெல்லாம் வராத படிக்கு, மாதா கெர்ப்பத்திலே இருக்கிற [1]பிண்டமானது அந்தந்த மாத்திரையோடு இருந்துகொண்டு மெள்ள மெள்ள மனுஷ சரீரமாக வளர்ந்து எந்த க்ஷணத்திலே ஆத்துமத்துக்கு அது பாத்திரமாச்சுதோ, [2]அந்த க்ஷணத்திலே தானே சரீரத்

1. உடல் 2. ஆண் விந்தும் பெண் கருவும் சேரும்போதே ஆன்மா உண்டாக்கப்படுகிறது என்பது தற்காலக் கருத்து. 30 அல்லது 40 நாட் களுக்குப் பின்னரே ஆன்மா உண்டாக்கப்படும் என்பதும் அது வரை வேறு மாத்திரைகள் உடலுக்கு இருக்கும் என்பதும் பழங்காலக் கொள்கை.

துக்கு மாத்திரையான ஆத்துமத்தை நவமாய்க் கர்த்தரானவர் உண்டாக்கிறுரென்று சொல்ல வேணுமொழிய மற்றப்படி அல்ல.

**12·5. மிருக சீவன் உடலோடு கூடிய செய்கைகளை மட்டும் செய்யும், உடலழிய அதுவும் அழிந்துபோம்.** ஆனால் மனுஷ சீவனுடைய தோற்றத்திலே பராமரிசிக்கத்தக்க ஒரு விசேஷமுண்டு. அதாவது, செந்துவினுடைய சீவனானது சரீரத்துக்கு மாத்திரையாய் இருக்கிறதும் தவிர, வளர்த்தியாகிற சேட்டையும் இந்திரியக சேட்டையும் மாத்திரம் உடைத்தானதாய் இருக்கக்கொள்ள, அப்படிப்பட்ட சீவனானது சரீர சம்மந்தமாய் இருக்கிற பொருளென்று சொல்லக்கடவது. சரீர விஷயக சுக துக்க முதலானதுகளைக் கிரகிக்கிறதுக்கும் அனுபவிக்கிறதுக்கும் மாத்திரம் வல்லதாயிருக்கிற சீவனைது சரீர சம்மந்தமாயிருக்கிற பொருளென்று சொல்லத்தகும் என்கிறதினால், செந்துவினுடைய சீவனனது சர்வேஸ்வரன் முதலான சரீரமில்லாத விஷயங்களைக் கிரகிக்கிறதுக்கும் அனுபவிக்கிறதுக்கும் வல்லதாயிராமல், சரீரத்துக்கடுத்த பொருள்களைத் தாண்டி ஏருமலிருக்கக்கொள்ள, சரீரத்துக் கடுத்த சேட்டைகளை மாத்திரம் பண்ணுகிறதுக்குப் பெல முடையதாய் இருக்கிறதொழியச், சரீரத்துக்கு மேலாயிருக்கிற ஞான விருத்திகளைப் பண்ணமாட்டாது. சரீரத்துக்கடுத்த சேட்டைகளை மாத்திரம் பண்ணுகிறதுக்கு செந்துவின் சீவனனது வல்லதாயிருக்கிறபோது, தனது சேட்டை என்னப் பட்ட யாவும் பண்ணுகிறதுக்குச் சரீரம் வேண்டியிருக்கிறதொழியச், சரீரமில்லாமல் ஒரு சேட்டையானாலும் பண்ண மாட்டாது. ஒரு சேட்டையானாலும் சரீரமில்லாமல் பண்ண மாட்டாத சீவனனது தான் இருக்கிறதுக்கு அவசியமாய்ச் சரீரத்தை அபேக்ஷிக்குமென்று சொல்லக்கடவது. ஆனபடியினாலே அப்படிப்பட்ட சீவனனது தனது சரீரம் தன்கூட இருக்கிறதுக்குப் பாத்திரமாயிருக்கிற நாள்மட்டும் அது சரீரத்தோடே கூடியிருக்கையிலே, பிழைக்குமென்று சொல்ல வேணும். அல்லது சீவனனது தான் இருக்கிறதுக்குத் தனது சரீரம் உஷ்ண முதலான பிரமாணமில்லாததுமாய் வேண்டின அவையவங்கள் அற்றதுமாயிருந்தால், அப்படிப்பட்ட சரீரத்

துக்கு அந்தச் சீவனானது மாத்திரையாய் இருக்கமாட்டாத தினால், சரீரத்தை விட்டுப் பிரியவேணும். சரீரமில்லாமல் அது சேட்டை பண்ணுகிறதுக்கும் தான் இருக்கிறதுக்கும் வல்லதாய் இராதபோதே, எந்தத் தருவாயிலே தனது சரீரம் தான் இருக்கிறதுக்குப் பாத்திரமாகாமல் போயிற்றோ, அந்தத் தருவாயிலே தானே அப்படிப்பட்ட சீவனானது அழிந்துபோம் என்கிற துக்குச் சந்தேகப்படக் கணக்கில்லை. அவ்வண்ணமே, மிருகாதிகளுடைய சீவனானதுகள் தனது சரீரத்தோடே இருக்கிற நாள் மட்டும் பிழைத்திருக்கும்; தனது சரீரத்தோடே கூடத் தாங்கள் இருக்க எக்காலத்திலே கூடாமல் போயிற்றோ, அக்காலத்திலே தானே மிருகாதிகளுடைய சீவனது அழிந்துபோமென்று சொல்லக்கடவோம். அவ்வண்ணமே, பூமியிலே சரீரத்தோடே கூடியிருக்கிற நாள்மட்டும் ஞான விருத்திகள் இல்லாததுமாய்ப், பாவ புண்ணியம் பண்ணுகைதுகளுமாயிருந்து, சரீரத்தோடேகூட அழிந்துபோம் என்கிறதினால், பரலோக சம்மந்தமாயிருக்கிற அவதியாகிற நரக மோக்ஷத்தை அடையமாட்டாது.

**12.6 உடலின்றி இல்லாத மிருக உயிர், உடலுதவியால் தோன்றுகிறது.** இதெல்லாம் முன்னே ஒப்பச் சொன்னோம் என்கிறதினாலே, திரும்ப இங்கே அத்தையொப்புவிக்கக் கணக்கில்லை. ஆனால் மிருகாதிகளுடைய சீவன்கள் உற்பவிக்கிற மேரையைக் கண்டுபிடிக்கிறதுக்கு இதெல்லாம் அறிய வேணும் என்கிறதினால், அதைத் திரும்பவும் இங்கே சொல்லவேண்டியிருந்தது. அதேதென்றால் பொருளினுடைய ஸ்திதியும் உற்பத்தியும் ஒத்திருக்கிறது என்கிறதினால், சரீரத்தின் சகாயமில்லாமல் இருக்கமாட்டாத பொருளானது அது உற்பவிக்கிறதுக்குச் சரீர சகாயம் வேண்டியிருக்கிற தொழிய, சரீர சகாயமில்லாமல், சுபாவ மேரையைப் பார்க்குமிடத்தில், உற்பவிக்கமாட்டாது. ஆதலாலே, செந்துவின் சீவனானது தான் இருக்கிறதுக்குச் சரீரத்தின் சகாயமானது அவசியமாய் வேண்டியிருக்கையிலே, இப்படிப்பட்ட சீவனுடைய ஸ்திதிக்கு அதினுடைய உற்பத்தியானது ஒத்திருக்கவேணும் என்கிறதினால், செந்துவின் சீவனானது நவமாய் உற்பவிக்கிறதுக்குத் தாய் தகப்பனுடைய சரீர சம்மந்த

மாயிருக்கிற [1]வித்து ரத்தம் முதலானதுகள் ஒருவிதமாகக் காரணமாயிருந்து சகாயம் பண்ணவேணுமென்று சொல்லக் கடவது.[2]

அவ்வண்ணமே, இந்த ஞாயத்தை இந்தடைவிலே நாம் நடத்தத்தக்கதாகும். சீவனுனது முன் சொல்லப்பட்ட சேட்டைகளுக்குள்ளே ஒரு சேட்டைக்காகிலும் காரணமாய் இருக்கவேணும் என்கிறதினுல், சேட்டை யில்லாமற் சீவனுனது உண்டாயிருக்க மாட்டாதென்று சொல்லக்கடவது. செந்துவினுடைய சீவனுனது சரீரமில்லாமற் சேட்டை பண்ண மாட்டாது என்கிறபோது, அப்படிப்பட்ட சீவனுனது சரீர மில்லாமல் இருக்கிறதுக்கு வல்லதாய் இராதென்று சொன்னேம். ஆனுல் இப்படிப்பட்ட சீவனுடைய ஸ்திதிக்கு அதினுடைய உற்பத்தியானது ஒக்திருக்கவேணும் என்கிறதினுல், அப்படிப்பட்ட சீவனுடைய ஸ்திதிக்குச் சரீரமானது காரணமாய் இருக்குமாப்போலே, அப்படிப்பட்ட செந்துவின் உற்பத்திக்குத் தகப்பனுடைய சரீர சம்மந்தமா யிருக்கிற வித்து ரத்த முதலானதுகள் காரணமாய் இருக்கிறதென்று சொல்லக் கடவது. ஆதலாலே, செந்துவினுடைய உற்பத்தி வகையிலே தாய் தகப்பன் செந்துவினுடைய சரீரத்துக்கு காரணமாயிருக்கிறதும் தவிரச், செந்துவினுடைய சீவனுக்குத் தாய் தகப்பனுடைய வித்து ரத்தம்* சீவன்கள் முதலானதுகள் காரணமாயிருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே, அவசியமாய்ச் சரீரத்தை அபேக்ஷிக்கிற சீவனைச் சரீர சம்மந்தமாயிருக்கிற பொருட்களானதுகள் பிறப்பித்துது என்கிறது ஞாயத்துக்கு ஒத்திருக்கக்கொள்ள, அது ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமென்று சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல.

**12.7 உடலின்றி இருக்கவும் இயங்கவும் கூடிய ஆன்மா உடலால் தோன்றவில்லை.** மனுஷ உற்பத்தியினுடைய வகையை விசாரிக்குமிடத்தில், செந்துவினுடைய உற்பத்திக்கும் அதுக்கும் வலு வேற்றுமை உண்டாயிருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றல், மனுஷ சீவனுனது ஞான விருத்திகளைப் பண்ணுகிறதுக்குஞ் சர்வேஸ்வரன் முதலான சரீரமில்லாத விஷயங்களைக் கிரகிக்கிரதுக்கும், அபேக்ஷிக்கிறதுக்கும் வல்லதாயிருக்கிறதென்று பார்த்துக்கொண்டி

1. வித்து 2. 17ம் நூற்றுண்டு அறிவியற் கொள்கை

ருக்கிறோம். இப்படிப்பட்ட சேட்டைகளானதுகள் சரீரசம்மந்தமாயிருக்கிற பொருளென்னப்பட்ட யாவையுந் [1]தாண்டிச் சரீரமில்லாத பொருட்களை விஷயிகரிக்கிறதினால்[2], அப்படிப்பட்ட சேட்டையானது [3]கேவலம் உண்டாக்குகிறதுக்குச் சரீர சம்பந்துக்கடுத்த பொருள் வேண்டியிருக்கிறதென்று சொல்லப்படாது. மனுஷனுடைய சீவனானது தனது சேட்டையைக் கேவலம் பண்ணுகிறதுக்குச் சரீரத்தின் சகாயம் வேண்டியிராததினால், மனுஷனுடைய சீவனானது தான் இருக்கிறதுக்கு அவசியமாய்ச் சரீரம் வேண்டியிராதென்று சொல்லக்கடவதாகும். ஆனபடியினாலே, மனுஷ சீவனானது சரீரத்தை விட்டுப் பிரிந்தால், அழிந்துபோமென்று சொல்லக்கூடாது. அது அழியாதபோதே, யாதொரு ஸ்தலமாகிற நரகத்தையாகிலும் மோக்ஷத்தை என்கிலும் அடையவேணுமென்று சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கக்கடவோம். இதெல்லாம் வருகிற பாடத்திலே சொல்லுவோம் என்கிறதினால், இவ்விடத்திலே கொஞ்சத்துக்குள்ளே எடுத்துக்காட்டினது போரும். ஆனால், மனுஷசீவனானது செந்துவின் சீவனைப்போலே சரியான பொருளென்றும் சரீரத்தின் அந்தஸ்திலே அடங்கின பொருளென்றுஞ் சொல்லாமல், அதினுடைய சுபாவத்தைப் பார்க்குமிடத்தில், [4]சரீரமாகாததுமாய், ஞானப் பொருளுமாய் இருக்கிறதென்று சொல்லக்கடவோம். இப்படிப்பட்ட ஞானப் பொருளானது சகல சரீரத்தின் மேலே மிகவும் உயர்ந்திருக்கிற உத்தம பொருளாய் இருக்கக்கொள்ள, அப்படிப்பட்ட சீவனானது உற்பவிக்கிறதுக்குத் தாய் தகப்பனுடைய வித்து இரத்த முதலானதுகள் காரணமாய் இருக்கிறதென்று மதிகெட்டவனாலுஞ் சொல்லமாட்டான்.

**12.8 கடவுள்தான் ஆன்மாவை ஒன்றுமில்லாமையிலிருந்து படைத்தார்.** அதேதென்றால், பிரதான காரணமானது தனக்குச் சரியானதையாகிலும் அல்லது தனக்குக் கீழானதாய் இருக்கிற பொருளை என்கிலும் பிறப்பிக்கிறதுக்கு வல்லதாய் இருக்குமொழியத் தன்னைக் காட்டிலும் உத்தம பொருளைப் பிறப்பிக்க மாட்டாதென்கிறது சகல நியாயத்துக்கும் ஒத்திருக்கக் கொள்ளச், சகல வித்தியாபாரகருக்கும்

1. கடந்து 2. Percipere: நுகர் 3. Formally. 4. Immaterial and spiritual

சம்மதமாயிருக்கிற சித்தாந்தமாகுமொழிய மற்றப்படியல்ல அவ்வண்ணமே, தாய் தகப்பனுடைய வித்து இரத்த முதலானதுகள் கெர்ப்பத்திலே யிருக்கிற பிள்ளைகளுடைய சரீரம் உண்டாயிருக்கிறதுக்கும் வளருகிறதுக்கும் சகாயம் பண்ணுமொழியப், பிள்ளைகளுடைய ஆத்துமமானது வித்து ரத்த முதலானதுகளைக் காட்டிலும் மிகவும் மேலானதுமாய் உத்தமமானதுமாய் இருக்கிறதினால், அக்கைக் காட்டிலும், மிகவும் நீசமான பொருளாகிற வித்தும் இரத்தமும் அத்தைப் பிறப்பிக்கிறதுக்குச் சற்றாகிலும் சகாயம் பண்ணமாட்டாதென்று சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். ஆனபடியினாலே, ஒன்றான சர்வேஸ்வரன் மாத்திரம் மனுஷ சீவனைப் பிறப்பிக்கிறதுக்கு வல்லவரா யிருக்கிறாரொழிய, வேறொரு வஸ்து அத்தைப் பிறப்பிக்கிறதுக்கு வல்லதா யிருக்க மாட்டாது. அதேதென்றால், அசரீரியானதுமாய் ஞானப் பொருளானதுமாய் இருக்கிற சீவனை [1]ஒன்றும் ஆகாமலிருக்கையிலே, உபதான காரணத்தின் சகாயமுமில்லாமல் காரணமானது பிறப்பிக்கவேணும். இந்தவகையாக வஸ்துவை உற்பவிக்கப் பண்ணுகிறதுக்கு முடிவில்லாத பலம் வேண்டியிருக்கிறதென்று ஞானோபதேசத்திலே[2] ஏழாம் எட்டாம் பாடங்களிலே ஒப்பு வித்தாப்போலேயாயிற்று. அப்படியே தானாயிருக்கிற கர்த்தனுக்கு மாத்திரம் முடிவில்லாத பலமுண்டா யிருக்கிறதினால், தானாயிருக்கிற கர்த்தன் மாத்திரம் மனுஷனுடைய சீவனைப் பிறப்பிக்கிறாரொழிய, அப்படிப்பட்ட உத்தம பொருளின் உற்பத்திக்கு உண்டாக்கப்பட்ட பொருள்களுக்குள் ஒன்றானாலும் அற்ப சகாயத்தைப் பண்ணிவருகிறதென்று சொல்லவும் கருதவுங்கூடாது.

12.9 கொலைஞன் மனிதனைக் கொல்வதுபோல் பெற்றோர் பிள்ளைகளைப் பிறப்பிக்கின்றனர். கர்ப்பத்திலே யிருக்கிற பிள்ளையின் சரீரத்துக்கும், சர்வேஸ்வரனாலே மாத்திரம் உண்டாக்கப்படுகிற சீவனுக்கும் உண்டாயிருக்கிற பந்தனத்தைத் தாய் தகப்பனுடைய வித்து இரத்த முதலானதுகள் பண்ணுகிறது என்கிறதினாலே (மாத்திரம்) மனுஷன் மனுஷனைப் பிறப்பிக்கிறானென்று சொல்லவேணுமொழிய

1. Ex nihilo sui et subjecti (casuae materialis). 2. முதல் காண்டம்.

மற்றப்படியல்ல. அதேதென்றால், சரீரமும் ஆத்துமமும் தனித்தனியே முழு மனுஷனென்று சொல்லப்படாமல், அன்னியோன்யமாய்க் கட்டப்பட்ட நிமித்தமாக மனுஷனாய் இருக்கிறதினால், பந்தன நிமித்தமாக மனுஷன் உண்டானு னென்று சொல்லத்தகும். ஆனபடியினாலே மனுஷனாயிருக் கிறதுக்கு நிமித்தமான பந்தனத்தை உண்டாக்கிற தாய் தகப்பனானபேர்கள் மெய்யாகவே மனுஷனைப் பிறப்பித்தார் களென்று சொல்லத்தகும். அதெப்படியென்றால், மனுஷனைக் கொல்லுகிறவன் மனுஷனுடைய ஆத்துமத்தையும் சரீரத்தை யும் கெடுத்து ஆத்துமமானதைத் தனது சரீரத்தைவிட்டுப் பிரியப் பண்ணினதினால், அப்படிக்கொத்தவன் மனுஷனைக் கொன்று போட்டானென்று சொல்லத்தகும். அத்தன்மை போல், மனுஷாத்துமத்துக்கும் சரீரத்துக்கும் உண்டான பந்தனத்தைச் சுபாவ விதமாக உண்டாக்கிற தாய் தகப்பனான பேர்கள் ஆத்துமமானதைத் தனது சரீரத்தோடே கூடயிருக்கப் பண்ணுகிறதினால், மனுஷனைப் பிறப்பித்தார்களென்று சொல்ல வேணுமொழிய, ஆத்தும சரீரத்தை அவர்கள் உண்டாக்க வேணுமென்று சொல்லக்கடவதல்ல. இற்றைவரைக்கும் பண்ணின பிரசங்கத்தினாலே மனுஷ சீவனானது சர்வேஸ் வரனாலே மாத்திரம் உண்டாக்கப்படுகிறதென்று ஒப்புவிக்கப் பட்டாப்போலே ஆச்சுது. சர்வேசுரனாலே மாத்திரம் அது உண்டாக்கப்பட்டபோதே, தாய் தகப்பனான பேர்கள் மனுஷ சீவன் உற்பவிக்கிறதுக்கு காரணமாயிருக்க மாட்டார்களென்று சந்தேகமற அங்கீகரிக்கக் கடவோம்.

**12.10 ஆன்மா பூதியங்களின் கூட்டுறவு அன்று.** இதன்றியே, சொல்லப்பட்ட ஞாயங்களிலே மனுஷ சீவனானது பூதியங்களுடைய கூட்டுறவு என்று சிலபேர்கள் சொல்லுகிறார் களே, அதெல்லாம் முழுத் தப்பறையாயிருக்கிறதென்று சொல்லப்பட்ட ஞாயங்களினாலே கண்டுபிடிக்கலாம் என்கிற துக்குத் தப்பாது. ஆனால் இந்த சத்தியத்தைத் தானே வேறொரு கெட்டி ஞாயத்தினால் ஒப்பச் சொல்லலாம். அதே தென்றால், பூதியங்களுடைய உஷ்ணங் குளிர் இது முதலான குணங்கள் மனுஷனிடத்தில் உண்டாயிருக்கிறதினால், அதுகளோடுகூட இருக்கிற உள்ளிந்திரியங்களான கீழான

அங்கிஷமானது மனுஷனிடத்திலே காமக் குரோத முதலான [1]வியசனங்களானதுகள் உற்பவிக்கிறதுக்குக் காரணமாயிருக் கிறதென்று சொல்லவேண்டியிருக்கையிலே, மனுஷனானவன் அதுக்கெல்லாம் நிக்கிரகம்[2] பண்ணிக்கொண்டு வருகிறானென் கிறதினால், அப்படிப்பட்ட நிக்கிரகத்துக்கு மனுஷனுடைய புத்திமனசென்கிற மேலான அங்கிஷமானது காரணமாயிருகிற தென்று சொல்லக்கடவோம். ஆனபடியினாலே, மனுஷனு டைய புத்தி மனசென்கிற மேலாங்கிஷமானதென்கிலும் பூதியங் களுடைய கூட்டுறவென்றுஞ் சரீரத்துக்கு ஆதேயமாயிருக்கிற இந்திரியங்களென்றுஞ் சொல்லக்கூடாது. அதேதென்றால், அப்படிச் சொல்லும்போது, காமக் குரோத முதலான வியசனங் கள் உற்பவிக்கிறதுக்குக் காரணமான யாதொன்றுண்டு, அதுதானே காமக் குரோதத்தின் நிக்கிரகத்துக்கும் காமக் குரோதம் நாசமாய்ப் போகிறதுக்கும் ஏக காலத்திலேதானே ஓரே காரணமாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கத்தக்கதாகும். இப்படிக்கொத்த அபத்தத்தை ஒப்புக்கொள்ளாதபடிக்கு, மனுஷனுடைய சீவனானது பூதியங்களுடைய கூட்டுறவென்கி லும் சரீரத்துக்கு ஆதேயமாயிருக்கிற இந்திரியங்கள் என்கிலும் ஆகமாட்டாதென்று ஒப்புவிக்கிறதுக்கு இந்த ஞாயமானது காட்டினது போரும்.

பன்னிரண்டாம் பாடம் முற்றும்.

(கிரந்தம்) சாஉம்உ*

---

## பதின்மூன்றும் பாடம்

**13.1. தானாகவோ, கடவுளைத் தவிரப் பிறராலோ ஆன்மா அழிவுறாது.** போன பாடத்திலே மனுஷனுடைய சீவனானது உண்டாக்கப்பட்டதுமாய், என்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளுமாய் இருக்கிறதென்று சொன்னாப்போலே ஆச்சுது. ஆனால் 'உண்டாக்கப்பட்ட பொருளெல்லாம் அழியத் தக்க பொருளாய் இருக்கிறது' என்று சொல்லுகிறார்களே, இப் படிப்பட்ட வாக்கியமானது நாம் சொன்னதுக்கு விருத்தமாய்

1. வேறுபாடுகள், உணர்ச்சிகள் 2. அடக்கம் * 422

இருக்கிறதென்று சொல்லக் கடவதல்ல. அதெதென்றால், உண்டாக்கப்பட்ட மனுஷ சீவனுனது சர்வேஸ்வரனைப் போலே அழியாத பொருளாய் இருக்கிறதென்று சொல்லாமல், இரண்டாம் வகையுள்ள அழியாத பொருளாய் இருக்கிறதென்று சம்மதப்படுகிறதொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே உண்டாக்கப்பட்ட பொருள் அழியாத பொருளாய் இருக்க மாட்டாதென்கிற வாக்கியமானது முந்தின வகையுள்ள அழியாத பொருளாய் இருக்கமாட்டாது என்கிறதுக்குச் செல்லுமொழிய, இரண்டாம் வகையுள்ள அழியாத பொருளாயிருக்கிற சீவன் முதலான ஞானமுடைத்தான பொருட்களுக்குச் செல்லாது என்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமாகும். மனுஷ சீவனுனது அழியாத பொருளாயிருக்கிறது என்கிற சத்திய விசேஷத்தை வேறே சில ஞாயங்களினாலே ஒப்புவிக்கலாம்.

**13·2. உடலிலும் சிறந்த ஆன்மா, உடலைப்போல் அழியாது.** அதின் முதலாம் ஞாயமாவது: நம்மாலே சொல்லப்பட்ட ஞான முதலான விருத்திகளுடைய மகிமையை விசாரிக்குமிடத்தில், சரீரத்தின் மேரையை அது மிகவும் கடந்திருக்குமொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே, அப்படிப்பட்ட விருத்திகளுக்குக் காரணமாயிருக்கிற பொருளாகிற சீவனுனது அதுகளைக் காட்டிலும் உத்தம வஸ்துவாயிருக்கிற போதே, சரீரமென்னப்பட்ட யாவினுடைய அந்தஸ்தை மனுஷ சீவனுனது மிகவும் கடந்து, சகல சரீரத்தைக் காட்டிலும் அது சொல்லப்படாத மகிமையை உடையதாயிருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது, இது நிமித்தமாக மனுஷ சீவனுடைய உற்பத்திக்குச் சர்வேஸ்வரன் மாத்திரம் காரணமாய் இருக்கக் கூடுமொழியச், சரீரமானாலும் வேறே உண்டாக்கப்பட்ட பொருளென்கிலும் அதினுடைய உற்பத்திக்குக் காரணத்தின் மேரையாக உதவமாட்டாதென்று சொல்லக்கடவது. சீவனுடைய உற்பத்திக்குச் சர்வேஸ்வரன் மாத்திரம் காரணமாய் இருந்து, சரீரமென்கிலும் வேறே உண்டாக்கப்பட்ட வஸ்துவானாலும் வேண்டியிராதென்கிறதுக்குத் தப்பாது. ஆதலாலே, மனுஷ சீவனுனது சரீரத்தை விட்டுப் பிரிந்தாலும், அது அழிந்து போகாமல் என்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளாய் இருக்கிறதென்று சொல்லக்கடவதொழிய மற்றப்படியல்ல.

**13.3. ஆன்மா உடலோடு அழிபடும் என்று சொல்லிப் பாவத்தைப் பெருக்கும் மதம் கெட்ட மதம்.** இதன்றியே, எந்த மதமானது சகல பாவத்துக்கும் வழி திறந்து மனுஷராய் இருக்கிறவர்கள் அத்தை அனுசரிக்கிறதினால் முழுப் பாவிகளாயிருக்கிறார்களென்று [1]காண்கிறோமோ, அது துர்மதம் என்றும் முழுத் தப்பறையானது என்றும் சொல்லக்கடவோம். அதேதென்றால், நிர்மல பிரகாசமானது அந்தகாரம் பிறக்கிறதுக்குக் காரணமாயிருக்க மாட்டாதது போலே, பழுதற்ற புண்ணியத்தோடு கூடியிருக்கிற சத்திய விசேஷத்தின் அங்கீகாரமானது மனுஷனானவன் குறையற்ற புண்ணியவானாயிருக்கிறதுக்கும் சத்தியத்தை அவனவன் அனுசரிக்கிறதுக்கும் உதவுமொழிய, பாவமாகிற இருட்டிலே மனுஷனானவன் திரிகிறதுக்கு அது காரணமாய் இருக்கமாட்டாது. இது இப்படி இருக்கையிலே, மனுஷனுடைய ஆத்துமமானது என்றென்றைக்கும் நிற்கிற பொருளாய் இராமல், சரீரத்தோடே கூடவென்கிலும் சிறிது நாளைக்குப் பிற்பாடானாலும் அழிந்து போகும் என்கிற மதமானது மனுஷனானவன் சகல பாவத்திலேயும் விழுந்து, முழுப் பாவியாய்ப் போகிறதுக்குக் காரணமாய் இருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால், மனுஷன் பண்ணுகிற பாவத்தின் நிமித்தமாக ஆன ஆக்கினையை அனுபவிக்கிறதுக்குப் பரலோகமில்லாவிட்டால், மனுஷரென்னப்பட்ட யாவரும் பயப்பட்டுச் சகல பாவத்தையும் வெறுக்கிறதுக்குக் காரணமேது? இதன்றியே, தன் கைக்கெட்டின பாவமென்னப்பட்ட யாவையும் ரகசியமாகவானாலும் மனுஷனானவன் பண்ணாதிருக்கிறதுக்குக் கணக்கேது? அப்படியே, ஆத்துமமானது அழிந்துபோகிற பொருளாயிருந்தால், இந்தப் பூமியிலே இருக்கிற நாள்மட்டும், ஸ்திரீபோக முதலான சுகமென்னப்பட்டதெல்லாம் மனுஷனானவன் ஏன் அனுபவியாமலிருக்க வேணும்?

இதன்றியே, தனது சீவனோபாயத்தின் காரணமாக மனுஷனானவன் [2]பரருடைமையை அபேக்ஷியாமல் இருக்கிறதுக்கும் அத்தைக் களவாணக்கூடுமானால் களவு பண்ணாதிருக்கவும் காரணமேது? இத்தைத் தவிர, மனுஷனானவன தனது

1. கண்டோமானால் (பா.) 2. பிறருடைமை

கோபத்தைத் தீர்க்கத்தக்க (தாகத்) தனக்கு அவமான முதலான அபகாரங்களைப் பண்ணினவன் பேரிலே முழுப் பகையாய் [1]இருக்கிறதுக்கும் அவனைக் [2]கொல்லுகிறதுக்கும் ஏன் துணியாமல் இருக்கவேணும்? செந்துக்களிடத்திலே இந்த சத்தியத்தை இந்தடைவாகக் கண்டுபிடிக்கலாம். அதேதென்றால், செந்துவினுடைய சீவனானது சரீரத்தோடேகூட அழிந்து போகிற பொருளாய் இருக்கக்கொள்ள, ஸ்திரீபோக முதலான சுகங்களை அனுபவிக்கிறதுக்கும் தனது [3]உதர போஷண நிமித்தமாகக் களவாண்கிறதுக்கும் தனக்குப் பொல்லாப்புச் செய்கிறவனைக் கொல்லுகிறதுக்கும் அஞ்சாது. அப்படிக்கொத்த [4]வியாபாரங்களைச் செந்துவானது பண்ணத்தக்கதாக அடி முதலான காணப்பட்ட பொல்லாப்புகளை விட்டு அஞ்சத்தக்க ஞாயமில்லை. அந்தன்மைபோலே, மனுஷனுடைய சீவனானது அழிந்துபோகிற பொருளாய் இருக்கிறதென்று அங்கீகரித்தோமானால், செந்துவைக் காட்டிலும் மனுஷனானவன் கெட்ட பொருளாயிருந்து ரகசியமாகவானாலும் பாவமென்னப்பட்ட யாவையும் பண்ணத்தக்கதாக அஞ்சுகிறதுக்கு நல்ல காரணம் காணாதென்று சொல்லக்கடவோம். இத்தொகைப்பட்ட பொல்லாப்பு முதலான வேறே அநேகம் துரிதங்களுக்கு, மனுஷனுடைய ஆத்துமமானது அழிந்து போகிற பொருளாயிருக்கிறதென்கிற மதமானது காரணமாய் இருக்கக்கொள்ள, அது துர்மதமாய் இருக்கிறதென்றும், முழுத் தப்பறையாய் இருக்கிறதென்றும், சந்தேகமில்லாமல் அங்கீகரிக்க வேணுமொழிய மற்றப்படியல்ல.

**13.4. இதற்கெதிரான நல்ல மதமோ பாவத்தை விலக்கி ஆத்தும் அழியாதது என்று சாற்றுகிறது.** இந்தத் துர்மதத்துக்கு [5]விபரீத மதமோவென்றால், மனுஷனானவன் சகல பாவத்துக்கும் பயப்பட்டுச் சகல நிர்மல புண்ணிய வழியிலே பிரயாசத்தோடானாலும் நடக்கத் துணிகிறதுக்கு மிகவும் உதவுகிறதினாலே, மனுஷ சீவனானது என்றென்றைக்கும் நிற்கிற பொருளாயிருக்கிறது, என்கிற

1. + இல்லாமல் (பா. பே) 2. கொல்லாமல் இருக்குமென்று துணி ... ... (பா. பே.)
3. வயிற்றுப் பிழைப்பு 4. செயல் 5. எதிரான

மதமானது அனுசரிக்கத்தக்கதுமாய் குறையற்ற சத்தியமுமாய் இருக்கிறதென்று ஒப்புக்கொள்ளத் தக்கதாகும். அவ் வண்ணமே, பரலோகம் உண்டென்று முழு மனதோடு அங்கீகரிக்கிற பேர்கள் தாங்கள் நரகத்திலே விழாதபடிக்குப் பாவம் என்னப்பட்ட யாவையும் [4]வர்ச்சிக்கிறதும் தவிரப் பரலோகத்திலே தங்களுக்கு அதிகமதிகமாகப் பலனுண்டாக வேணுமென்று தபசு முதலான சகல புண்ணியங்களையும் நிறைவேற்ற வேணுமென்று [5]சர்வ பரித்தியாகத்தினாலே லோகத்தையும் லோகத்திலே தங்களுக்குண்டான தாய் தகப்பன் முதலான பந்து சனங்களையும் [6]வெகுமானத்தையும் அயிசுவரியத்தையும் லோகத்திலே தங்களுக்கு வரத்தக்க பாக்கியமென்னப்பட்ட யாவையும் அப்படிப்பட்ட பேர்கள் ஒரு [7]திரணமாய் எண்ணிக் கொண்டு வருகிறார்கள். ஆத்துமமானது என்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளாய் இருக்கிறதென்று சொல்லுகிற மதமானது இத்தனை புண்ணியங்களை மனுஷனானவன் பண்ணுகிறதுக்குக் காரணமாய் இருக்கக்கொள்ள, இதே சத்தியமாய், இதே எல்லாரும் ஒப்புக்கொள்ளத்தக்க மதமாய் இருக்கிறதொழிய மற்றப்படியல்ல.

**13.5. கடவுள் உலகை நடத்தும் முறை, ஆத்துமம் அழியாதது என்பதைக் காட்டுகிறது.** பழுதற்றதாய் இருக்கிற இப்படிப்பட்ட சத்தியத்தை முழு மனதோடு மனுஷனானவன் அங்கீகரிக்கிறதுக்குக் கர்த்தரானவர் லோகத்தை நடத்துகிற கிரமத்தினாலே அவர் உதவி செய்ய வேணுமென்று திருவுளமானாரென்றும் சொல்லக்கடவோம். அதெப்படி என்றால், சகல நீதி சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் சில பாவிகள் சகல ஆக்கினைகளுக்கும் பாத்திரராயிருக்கையிலே, அப்படிப்பட்ட பேர்களுக்கு இந்த லோகத்திலே சிறிது ஆக்கினையை மாத்திரம் இட்டு, வேறே சில பாவிகளாயிருக்கிற பேர்களுக்கு சகல ஆக்கினைக்கும் பாத்திரர்களாய் இருக்கையிலே, மரணபரியந்தம் சகல பாக்கியங்களையும் அனுபவிக்கப் பண்ணி, ஒரு ஆக்கினையையானாலும் இடாமலிருக்கிறார். அப்படிப்பட்டவர்கள் முழு அவமானத்தையும் தூஷணத்

4. தவிர் 5: முற்றத் துறத்தல் 6. பெருமை
7. துரும்பு, புல்.

தையும் படத்தக்க பேர்களாய் இருக்கையிலே, அவர்கள் மகாராசாக்களாய், மரணபரியந்தம் எல்லாராலேயும் பூசிக்கப் பட்டவர்களாய் இருக்கிறார்கள். இதுக்கு விபரீத மேரையாக மகாமகாப்பட்ட புண்ணியவான்களாய் இருக்கிற பேர்கள் இவ் வுலோகத்திலே ஓரற்ப சுகத்தையானாலும் அனுபவியாமல், மரணபரியந்தம் வியாதி முதலான சகல நோய்களையும் கஸ்தி களையும் அனுபவிக்கப் பண்ணுகிறார். இப்படிப்பட்ட புண்ணிய வான்கள் சகல வெகுமானத்துக்கும் பாத்திரவான்களாய் இருக் கையிலே, மகாமகாப்பட்ட பாவிகளினாலே தூஷிக்கப்பட்ட பேர்களாயிருந்து, அவர்கள் மூழு அவமானப்படுகிறதுக்குக் கர்த்தரானவர் திருவுளமாயிருக்கிறார்.

**13·6. சில பாவிகளைத் தண்டித்தும் சில புண்ணிய வான்களைப் பாராட்டியும் நடத்தும் முறை இரண்டு பாடங்களைக் கற்பிக்கின்றது.** இப்படிப்பட்ட தப்பில்லாக் கிரமத்தோடு கர்த்தரானவர் லோகத்தை நடத்துகிறதினால், லோகத்துக்கு முழு நன்மை பண்ணுகிற திவ்விய திருவுளத் தைப் புத்தியில்லாத பேர்கள் அறியாததினால் அறியாமாய் மயங்கித் தக்களிக்கிறார்கள். அதேதென்றால், இப்படிப்பட்ட திருவுளத்தினாலே மனுஷனுக்கு வருகிற பழுதற்ற ஞானமான து மனுஷனானவன் கரையேறுகிறதுக்கு மிகவும் உதவும் என் கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அதெப்படி என்றால், மனுஷனானவன் கரையேறுகிறதுக்குப் பாவமென்னப் பட்ட யாவுக்கும் சம்மதப்படாமல், நிர்மலமான புண்ணிய வழியிலே பிரயாசத்தோடானாலும் நடக்கிறதுக்கு அவனவன் துணியவேணும். இப்படிப்பட்ட நல்ல துணிவை மனுஷ னானவன் அடைகிறதுக்கு இரண்டு சத்திய விசேஷங்களை அங்கீகரிக்க வேணும். அதிலே பாவ புண்ணியத்துக்கு ஒத்த வண்ணம் ஆக்கினை சம்பாவனை இடுகிற கர்த்தன் உண்டென்று அங்கீகரிக்கத்தக்கது முந்தின சத்திய விசேஷமாகும். இது தவிர மனுஷனுடைய ஆத்துமம் அழிந்துபோகிற பொருளாய் இராமல் தனது சரீரத்தை விட்டுப் பிரிந்த பிற்பாடு பூலோகத் திலே மனுஷனாலே பண்ணப்பட்ட பாவ புண்ணியத்துக்கொத்த வண்ணம் ஆக்கினை சம்பாவனை அனுபவிக்கிறதுக்குப் பரலோகம் உண்டென்று ஒப்புக்கொள்ளத்தக்க இரண்டாம்

சத்திய விசேஷமென்று சொல்லத்தகும். இது இப்படி இருக்கையிலே, தப்பில்லாக் கிரமத்தோடு சகலத்தையும் நடத்துகிற கர்த்தரானவர் பாவிகளுக்கு ஒரு ஆக்கினையானாலும், புண்ணிய ஆத்துமாக்களுக்கு இவ்வுலோகத்தில் ஒருக்காலும் ஒரு சம்பாவனையென்கிலும் விடாதிருந்தால், தேவன் இல்லை என்று மனுஷராயிருக்கிற பேர்கள் அங்கீகரிக்கிறதுக்குத் தங்களுக்கு இடம் பண்ணிக்கொண்டு வருகிறார்கள்; அல்லது, பாவிகளும் புண்ணியவான்களென்னப்பட்ட யாவரும் இவ்வுலோகத்திலே பண்ணின பாவ புண்ணியத்துக்கு ஒத்தவண்ணம் தப்பில்லாமல் எப்போதும் ஆன ஆக்கினை(யும்) சம்பாவனையும் கர்த்தரானவர் இட்டுக்கொண்டு வந்தால், பாவ புண்ணியத்துக்கு ஒத்தவண்ணம் இவ்வுலோகத்திலே தானே மனுஷனானவன் அனுபவிக்கிறானென்று பாவியும் புண்ணியவானும் விசாரிப்பார்களொழியப், பாவ புண்ணியத்துக்கு ஒத்தவண்ணம் மனுஷனானவன் அனுபவிக்கும்படிக்குப் பரலோகமுண்டென்று சம்மதிக்கிறது அரிது. மனுஷன் கரையேறுகிறதுக்கு விக்கினமாயிருக்கிற இப்படிப்பட்ட இரண்டு தப்பறை விசேஷங்களை மனுஷனானவன் அங்கிகாரம் பண்ணாததுக்குத் தயாபரனான கர்த்தரானவர் லோகத்தை நடத்துகிறதிலே முன் சொல்லப்பட்ட தப்பில்லாத கிரமத்தினாலே ஆன உபாயத்தைப் பண்ணத் திருவுளமானாரென்று சொல்லக்கடவது.

**13.7.** ஆன்மா அழியாதது என்று இத்தகைய நிலை காட்டுகிறது. அதெப்படியென்றால், சில பாவிகளுக்கும் சில புண்ணியவான்களுக்கும் ஆக்கினை(யும்) சம்பாவனையும் சிலமுறை இடுகிறதினால், லோகத்தைப் பராமரிசித்து நடத்துகிற தேவன் உண்டென்கிற குன்றாத சத்தியத்தை எல்லாரும் சந்தேகப்படாமல் முழு மனதோடு அங்கீகரிக்கிறதுக்குக் கர்த்தரானவர் உபதேசம் பண்ணிக்கொண்டு வருகிறாரென்று சொல்லத்தகும். அப்படிப்பட்ட கர்த்தரானவர் முடிவில்லாத நீதி சுருபமாயிருக்கையிலே, சில பாவிகள் பண்ணின பாவங்களுக்கு ஒத்தவண்ணம் பூலோகத்திலே ஒரு ஆக்கினையானாலும் இடாமல், மரண பரியந்தம் வெகுமான முதலான பாக்கியமென்னப்பட்ட யாவையும் அவர்கள் அனுபவிக்கப்பண்ணுகிறார் என்கிறதினாலே, பாவியானவன் பண்ணின பாவத்துக்கு நீதி சுருப

மாயிருக்கிற கர்த்தரானவர் ஆக்கினை இடத்தக்க பரலோகம் உண்டென்றும், பிரத்தியக்ஷமாய்க் காட்டினாப் போலே ஆச்சுது. பின்னையும் சில புண்ணியாத்துமாக்களாய் இருக்கிற பேர்கள் இடைவிடாமல் வியாதி முதலான உபாதைகளையும் மற்றுமுண்டான நிர்பாக்கியங்களையும் கர்த்தருடைய திருவுளப் படியே மரணபரியந்தம் அனுபவித்து அவர்கள் பண்ணின புண்ணியத்துக்குத் தயாபரனான கர்த்தரானவர் சற்றுனாலும் சம்பவானையை [1]தராதபோதே, அப்படிப்பட்ட புண்ணிய வான்கள் பண்ணின புண்ணியங்களுக்குத் தக்கவண்ணம் சம்பூரண பலனை அவர்கள் [2]பொசிக்கிறதுக்குப் பரலோகம் உண்டென்று மனுஷரென்னப்பட்டவர்கள் எல்லாரும் சந்தேக மில்லாமல் கண்டுபிடிக்க வேணுமென்று, தயாபரனான கர்த்த ரானவர் ஆன வழியைத் திறந்தார் என்கிறதுக்குத் தப்பாது.

அவ்வண்ணமே, சகல நன்மை சுரூபமாயிருக்கிற கர்த் தருக்குக் குறையற்ற நீதியும் கரைகாணாத கிருபையும் உண்டென்கிற சத்தியத்தைப் புத்தியுள்ள சனங்களானவர்கள் அற்பமாகிலும் சந்தேகப்படாமல் ஒப்புக்கொள்ளுகிறதுக்கு, மனுஷனுடைய சீவனானது என்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளாயிருக்கிறதென்றும், அது பண்ணின பாவ புண்ணியத் துக்கு ஒத்தவண்ணம் ஆக்கினை சம்பாவனையை அனுபவிக் கிறதற்கு இனிமேல் அடையத்தக்க பரலோகம் உண்டென்றும் [3]இருமனப்படாமல் பரிபூரண அங்கிகாரத்தைப் பண்ண வேணும். அல்லது சரீரத்தோடே கூட மனுஷ சீவனானது அழிந்துபோம் என்று சொன்னோமானால், குறையற்ற நீதி சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் அநேகம் பாவிகள் பண்ணின எண்ணப்படாத பாவங்களுக்கு ஆன ஆக்கினையை இடவில்லை என்று சம்மதிக்க வேண்டியிருக்கிறது. ஆனபடியினாலே, குறையற்ற நீதி சுரூபமாயிருக்கிற கர்த்தர் பேரிலே நீதிக் குறையை [4]ஆரோபித்தாப் போலாச்சுது. இந்தபடைவாகச் சீவனானது என்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளாயிருக்கிற தென்று அங்கிகரியாதே போனோமானால், அநேகம் புண்ணி யாத்துமாக்களாய் இருக்கிற பேர்கள் சொல்லப்படாத பிரயாசத்

1. பண்ணுத (பா. பே) 2. நுகர்வதற்கு 3. தத்தளிக்காமல் 4. சாட்டுதல்.

தோடு பண்ணின மகா மகாப்பட்ட புண்ணியங்களுக்குத் தயாபரனுன கர்த்தரானவர் ஓரற்பமாகிலும் பலனைக் கொடாதே போனுரென்று சொல்லவேண்டி இருக்கிறது. அப்படிச் சொல்லு கிறபோது, கரைகாணுத கருணைக் கடலாயிருக்கிற கர்த்த னுக்குத் தயை குறைச்சல் உண்டென்று சம்மதித்தாப்போலே யாகும். இத்தனை அபக்கத் தப்பறைகளை அங்கீகாரம் பண்ணுதபடிக்கு, மனுஷனுடைய சீவனுனது அழியாததுமாய், என்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளுமாய் இருக்கிறதென்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமாகும்.

**13.8. ஆன்மா உடலின்றி இருக்கவும் செய்யவும் முடியும்.** மனுஷனுடைய சீவனுனது அழியாத பொருளாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கத்தக்க சத்தியமாய் இருக்கிறதும் தவிர, அப்படிப்பட்ட சீவனுனது சரீரமாகாததுமாய், அது நிற்கிறதுக்குச் சரீரத்தை அபேக்ஷியாத பொருளுமாய் அகண்ட மானதுமாய்ச், சரீர சம்பந்தமாயிராத ஞான முதலான விருத்தி களுக்குக் காரணமுமாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். அதேதென்றுல், சீவனில்லாமல் சரீரத்துக்குப் பிழைப்பில்லை என்று பார்த்துக் கொண்டிருக்கிறதினுல் சீவனுனது சரீரத்தின் பிழைப்பாய் இருக்கிறதென்று சொல்லக் கடவது. சரீரத்தின் பிழைப்புக்குச் சரீரமானது காரணமாகாத போதே, சீவனுனது சரீரமாயிருக்க மாட்டாதென்று சொல்லக் கடவோம். மனுஷனுடைய சீவனுனது அழியாத பொருளாய் இருக்கிறதென்று ஒப்புவிக்கப்பட்டதினுல் அப்படிப்பட்ட சீவனுனது தானிருக்கிறதுக்குச் சரீரத்தை அபேக்ஷிக்க மாட்டா தென்று சொல்லக்கடவது.

பின்னையும், அது அழிந்து போகாததுக்குச் சரீரத்தோடே கூட அவசியமாயிருக்க வேணுமென்று சொல்லவொண்ணுது என்கிறதினுல், மனுஷனுடைய சீவனுனது சரீரத்தோடே கூடவிருந்தாலுஞ் சரீரத்தை விட்டுப் பிரிந்தாலும், எப்போதும் நிற்கத்தக்க பொருளாய் இருக்கிறதென்று சொல்ல வேணு மொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே, சரீர மாகாததுமாய், முன் சொன்னுப்போலே, தானிருக்கிறதுக்குச் சரீரத்தை அபேக்ஷியாததுமாய் இருக்கிற மனுஷசீவனுனது ஞானப் பொருளாய் இருக்கிறதென்று சொல்லக்கடவோம். ஞானப்

பொருளாய் இருக்கிறபோதே, அது [1]கண்டிப்பில்லாததுமாய், அகல நீள முதலான [2]பிரமாணமில்லாத பொருளுமாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கத் தக்கதாகும். அவ்வண்ணமே, சரீர சம்மந்தமா யிராத ஞான முதலான விருத்திகளுக்கு அது காரணமா யிருக்கிறபோதே, அப்படிப்பட்ட சீவனுனது சரீர மில்லாமல் இருந்தாலும், சரீர சம்பந்தமாயிராத ஞான முதலான விருத்திகளைப் பண்ணுகிறதுக்குப் பலமுடையதாயிருக்கிறது என்கிறதுக்குச் சந்தேகப்படத் தகாது.

**13.9 ஆன்மா உடலைப் பிழைப்பிக்கிறதொழிய உடலுக்குரிய உறுப்பும் குணமும் அற்றது.** ஆனபடியினுலே, ஆத்துமத்துக்கு வர்ணமேதென்றுங், கால் கை முதலான அவையவங்களுண்டோ இல்லையோ என்றுஞ், சரீரத்தை விட்டுப் பிரிகிறபோது வாயாலோ கண்ணுலோ பிறப்பட்டுப் போயிற்றென்றும், உச்சந் தலையிலே [3]பிர்மரந்திரம் உண்டென்றும், அதில்நின்று பிறப்பட்டால் மோக்ஷத்துக்குச் சீவனுனது போமென்றும், [4]அபானத் துவாரத்தில் நின்று பிறப்பட்டால் நரகத்திலே போமென்றும் இது முதலான அபத்த விசேஷங்களை மூடராயிருக்கிற பேர்கள் கேட்கிருர்களே, நம்மாற் சொல்லப்பட்ட 'ஆத்தும நிருபணத்திலே' அப்படிப் பட்ட அபத்த விசேஷங்களுக்குச் சொல்லத்தக்க பிரத்தியுத்தாரத்தைப் புத்திமானு யிருக்கிறவன் கண்டுபிடிப்பான். அதெப்படியென்ருல், மனுஷ சீவனுனது சரீரமாகாததுமாய்க், கண்டிப்பும் அங்கிஷமும் இல்லாததுமாய் இருக்கிறபோது, வெள்ளை கறுப்பு முதலான வர்ணங்களுக்கும், உஷ்ணங் குளிர் முதலான குணங்களுக்கும் சுபாவமாக அது ஆதாரமாய் இருக்க மாட்டாது. அப்படிப்பட்ட ஞானப் பொருளானது சரீரத்தைப் பிழைப்பிக்கிறது என்கிறது சரீரத்திலே யிருக்கிறது என்கிற தாகுமொழிய, மற்றப்படியல்ல.

இப்படிப்பட்ட ஸ்திதியானது [5]அங்கிசங்களினுலே ஸ்பரிசமாயிராமற் [6]சக்தி ஸ்பரிசமாய் இருக்கிறதென்று சொல்லப் படும். அப்படிப்பட்ட சக்தி ஸ்பரிசத்தினுலே மனுஷ

1 Immaterial 2. அளவு (quantity) 3. Fontanelle—உச்சித்துவாரம். 4. ஆசனவாய் 5. அம்ச ஸ்பரிசம் 6. சக்தி ஸ்பரிசம்

ஜீவனுனது சரீரத்துக்குப் பிழைப்பைக் கொடாமல் இருக்கிற தென்கிறது சரீரத்தை விட்டுப் பிரிகிறதென்று சொல்லப்படும். ஆகலாலே, ஜீவனுனது சரீரத்தை விட்டுப் பிரிகிறதென்கிறது சரீரத்தைப் பிழைப்பியாமல் இருக்கிறதென்கிறதாகும். இதுக்கு வாய் கை பிர்மரந்திரம் அபானத்துவாரம் இது முதலான ஸ்தலங்கள் வேண்டியிருக்கிறதென்று முழுமதிகெட்டவன் சொல்லுவானெழிய மற்றப்படியல்ல. ஆனபடியினலே, பாவியினுடைய ஜீவனுனது தனது சரீரத்தைப் பிழைப்பியாத க்ஷணத்திலே. நரகத்திலே வேதனையை அனுபவிக்கிறதென் கிறது பாவியினுடைய ஜீவனுனது தனது சரீரத்தைப் பிரிந்து தென்றும் நரகத்திலே விழுந்துதென்றுஞ் சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல. புண்ணியவானுடைய ஆத்துமமோவென்ருல், தனது சரீரத்தைப் பிழைப்பியாத க்ஷணத்திலே, சர்வேஸ் வரனைப் பிரதியக்ஷமாய்க் காண்கிறதென்கிறது அது மோக்ஷக் கரையேறிற்றென்று சொல்லத்தகும்.

**13.10 இவ்வுலகில் இருக்கும்வரை ஆன்மா புலன் களின் வழியாய் அறிகிறது.** ஆனல் ஆத்துமமானது சரீரம் ஆகாததுமாய்த், தான் பிழைக்கிறதுக்குச் சரீரத்தை அபேக்ஷியாத பொருளுமாய், அகண்டமானதுமாய்ச், சரீர சம்பந்தமாயிராத ஞான முதலான விருத்திக்குக் காரணமானது மாய் இருக்கிறதென்று சொன்னபோதே, மூடாத்துமாக்களா யிருக்கிற பேர்கள் இதெல்லாம் அடைவாகக் கிரகியாமல், முன் சொல்லப்பட்ட அபத்த விசேஷங்களை அவர்கள் கேட்கிருர்க ளென்று ஆச்சரியப்படத் தேவையில்லை. அதேதென்ருல், மனுஷரென்னப்பட்ட யாவரும் பூலோகத்தில் இருக்கிற நாள் மட்டும் பஞ்சேந்திரியங்களினலே கிரகிக்கப்பட்ட விஷயங்களைப் பிரத்தியக்ஷமாய் அறிகிருர்களொழியப், பஞ்சேந்திரியங் களினலே கிரகிக்கப்படாத பொருட்களை அறியமாட்டார்கள். அதுகளை அறிகிறதுக்கு வேண்டியதுகளைத் தோற்றுவிக்கிற சுபாவமான பிரதி பிம்பங்கள் புத்திக்குள் இல்லாததினுல். பஞ்சேந்திரியங்களினலே மனுஷனுனவன் கிரகியாத பொருளைப் பிரத்தியக்ஷமாய் அறியமாட்டான். கறுப்பு வெள்ளை முதலான பிரகாசத்தோடே யிருக்கிற வர்ணங்களும், ருசி சத்தங் கந்தங் கண்டிப்புள்ள பரிமாணங்களும், உஷ்ணங் குளிர் முதலானது

களும் பஞ்சேந்திரியங்களினாலே கிரகிக்கப்படுகிற விசேஷங்களாய் இருக்கிறதொழிய வேறு வஸ்துவானது பஞ்சேந்திரியங்களுக்கு [2]விஷயமாயிருக்க மாட்டாதென்கிறதினாலே, ஆத்தும முதலான சரீரமாகாத பொருள்களும் அந்தப் பொருளுடைய [1]விசத சுபாவங்களும் இத்தொகைப்பட்டதுகளும் பஞ்சேந்திரியங்களுக்கான விஷயங்களா யிருக்கமாட்டாது.

ஆதலாலே இத்தொகைப்பட்ட பொருட்களைத் தோற்றுவிக்கிற சுபாவமான [3]பிரதிபிம்பங்கள் புத்திக்குள்ளே உண்டாயிராமல், அதுகளை மனுஷனானவன் அறிகிறதுக்கு அவன் தானே நவமான பிரதிபிம்பங்களைப் பிறப்பிக்கிறபோது, பஞ்சேந்திரியங்களினாலே கிரகிக்கப்பட்ட பதார்த்தங்களிடத்திலே நின்று பிரதிபிம்பங்களை எடுத்து, எடுத்த பிரதிபிம்பங்களைக்கொண்டு சரீரமில்லாததுகளை [4]ரூபிகரிக்கவேணும். ஆனபடியினாலே பஞ்சேந்திரியங்களினாலே கிரகிக்கப்பட்ட பொருட்களுடைய பிரதிபிம்பங்களுக்குள்ளே அந்தப் பொருளினுடைய பிரதிபிம்பத்தைப்போலே நவமான பிரதிபிம்பத்தை ரூபிகரித்து, அப்படிப்பட்ட பிரதிபிம்பத்தைக்கொண்டு சரீரமாகாத பொருளையும் அத்தொகைப்பட்ட விஷயங்களையும் மனுஷனானவன் அறிவானொழிய மற்றப்படியல்ல.

அவ்வண்ணமே, காற்றும் வெறுஞ் சாயலும் ஆகாயமுஞ் சோதியுஞ் சரீரகண்டிப்புக்கு அதிகமாகத் தூரமாயிருக்க கொள்ள, இப்படிக்கொத்த வஸ்துக்களுடைய பிரதிபிம்பங்களைக்கொண்டு, அறியவேண்டின சரீரமாகாத பொருள் முதலானதுகளை மனுஷனானவன் அறிய வருந்துவான். ஆனால் இப்படி அறிகிறதினாலேதானே புத்தியைக்கொண்டு அறியப்பட்ட ஞாயத்தினாலே மனுஷனானவன் [5]தப்புத் தீர்க்கிறவன் போலே, காற்று ஆகாய முதலான பிரதிபிம்பங்கள் ஆத்துமத்தினுடைய பிரதிபிம்பங்களல்ல வென்று அறிந்து, ஆத்துமத்தைத் தோற்றுவிக்கிற சுபாவமான பிரதிபிம்பங்கள் புத்திக்குள்ளே இல்லாததினால், ஆத்தும முதலான சரீரமாகாத பொருட்களை இத்தொகைப்பட்ட பிரதிபிம்பங்களைக் கொண்டு பூமியிலே இருக்கிற நாள்மட்டும் அறியக்கூடுமொழிய, வேறே பிரகாரம்

1. விசத சுபாவம் — சுத்த சுபாவம். 2. விஷயம் — object.
3. Species. 4. உருவாக்க. 5. திருத்து, சரிபார்.

இப்படிப்பட்ட வஸ்துகளை அறியக்கூடாதென்று புத்திமானு யிருக்கிறவன் அறிவான். ஆத்துமமானது சரீரத்தை விட்டுப் பிரிந்த பிற்பாடு சரீர சம்மந்தமா யிருக்கிற பஞ்சேந்திரியங் களைக் கொண்டிராததினால், அறியவேண்டின வஸ்துக்களை அறிகிறதுக்குச் சகலத்தையுங் கிரமத்தோடு நடத்துகிற கர்த்த ரானவர் ஆத்துமத்திலே அறியவேண்டின பொருள்களைத் தோற்றுவிக்கிற சுபாவமான பிரதிபிம்பங்களை நவமாய்க் கொடுப்பார். அந்தப் பிரதிபிம்பங்களைக் கொண்டு ஆத்தும மானது அறியவேண்டின விஷயங்களை அறியுமொழியப், பொருள்களிடத்தில் நின்று பஞ்சேந்திரியங்களினாலே கிரகிக்கப் பட்ட பிரதிபிம்பங்களைக் கொண்டு பொருட்களை அறியமாட் டாது. இதெல்லாம் மூடனாயிருக்கிறவன் அறியாமல், ஆத்துமத் துக்கு வர்ணமேதென்றும், அவையவங்கள் ஏதென்றுஞ், சரீரத் திலே எந்தப் பக்கத்தில் நின்று பிறப்படுகிறதென்றும், இது முதலான அபத்தக் கேள்விகளையுங் கேட்பானொழிய மற்றப்படி யல்ல.

பதின்மூன்றும் பாடம் முற்றும்.

(கிரந்தம்) உாசமி *

## பதினாலாம் பாடம்

**14.1 கிழாங்கிஷம் என்ற மனிதனின் பொறிகள்.** போன பாடத்திலே சொல்லப்பட்ட ஞாயங்களினாலே மனுஷ னுடைய சீவனானது தனது சரீரத்தை விட்டுப் பிரிந்த பிற்பாடு என்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளா யிருக்கிறதென்று ஒப்புவிக்கப்பட்டாற்போலே ஆச்சுது. அப்படிப்பட்ட சத்திய விசேஷமானது தானே வேறே ஒரு உச்சித பிரசங்கத்தினால் ஒப்புவிக்கப்படலாம் என்று இந்தப் பாடத்திலே காட்டக்கட வோம். அதெப்படியென்றால், மனுஷனுடைய சீவனிடத்திலே நின்று செனிக்கிற சத்திய ரூபமான குணங்களானதுகள் பலபலதுகளா யிருந்தாலும், அதுகளெல்லாம் இரண்டு விதத் திலே அடங்குமென்று சொல்லத்தகும். கண் காது இது

முதலான புறவிந்திரியங்களும், உள்ளிந்திரியங்களாகிற பொது இந்திரியமுஞ், சரீரத்துக்கு ஆனது ஆகாததை அபேக்ஷிக்கிற துக்கும் வெறுக்கிறதுக்கும் [1]மதிக்கிற சத்தியானதும், வேறே யாதொரு உள்ளிந்திரியமும் உண்டாயிருந்தால் இதெல்லாம் [2]'இந்திரியம்' என்று சொல்லப்படும். ஆதலால், ஓர் அந்தஸ் திலே யிருக்கிற சத்தி ரூபமான குணங்கள் என்று சொல்லக் கடவோம். இப்படிப்பட்ட சத்தி ரூபமான குணங்களெல்லாஞ் சீவனிடத்திலே உற்பத்தியாயிருந்து, சீவனிடத்திலே நின்று செனித்தாலும், சரீரத்தினுடைய பலபல அவையவங்களிலே அப்படிப்பட்ட சத்திகளானதுகள் ஆதேயமாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. இத்தொகைப்பட்ட சத்தி ரூபமான குணங் களானதுகள் செந்துவினுடைய சீவனிடத்தில்நின்று செனித்துச் சரீரத்திலே ஆதேயமாயிருக்குமாப்போலே, மனுஷனுடைய சீவனிடத்திலே நின்று அப்படிப்பட்ட சத்தி ரூபமான குணங்கள் செனித்து மனுஷ சரீரத்திலே ஆதேயமாயிருக்கிற துக்குத் தப்பாது. மிருகாதிகளிடத்திலேயும் மனுஷனிடத்திலே யும் உண்டாயிருக்கிற இப்படிப்பட்ட சத்தி ரூபமான குணங் களானதுகள் சரீர சம்பந்தமாய் இருக்கக்கொள்ள, மனுஷாத்து மத்தினுடைய 'கீழாங்கிஷம்' என்று சொல்லத்தகும். மிருகாதி களிடத்திலே இத்தொகைப்பட்ட சத்திரூபமான குணங்கள் காணப்படுமொழிய, இதுக்கு மேலான வேறொன்றுங் காண மாட்டாது.

**14.2 புத்தி மனது என்கிற மேலாங்கிஷமுடைய ஆன்மா, உடலழிந்தும் அழியாது.** மனுஷ சீவனோவென் றால், அதில்நின்று இப்படிப்பட்ட சத்தி ரூபமான குணங்கள் செனிக்கிறதுக்குந்தவிர, மேலாயிருக்கிற வேறே சத்தி ரூபமான குணங்கள் செனிக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. அதுகள் சரீரத்திலே ஆதேயமாயிராமல், ஆத்துமமானது தானே அத் தொகைப்பட்ட சத்திரூபமான குணங்களுக்கு ஆதாரமா யிருக் கிறதொழிய, மற்றப்படியல்ல.

இத்தொகைப்பட்ட சத்திகளானதுகள் ஞான விருத்தி களுக்குக் காரணமான புத்தியும், சுவாதந்திரியமுள்ள மனமுமென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட சத்திகளைக்

1. மதியாகிற (பா.) 2. பொறி. Sense.

கொண்டு மனுஷனுடைய சீவனனது சர்வேஸ்வரன் முகவான் சரீரமில்லாத விஷயங்களை அறிகிறதுக்கும் அபேக்ஷிக்கிற துக்கும் வெறுக்கிறதுக்கும் வல்லதாயிருக்கிறதென்று சொல்லத் தகும், ஆதலாலே இத்தொகைப்பட்ட சத்தி ரூபமான புத்தி மனசானது சரீரத்திலே ஆதேயமா யிராமற் சரீரத்தினுடைய சம்பந்தமா யிராததினால், அதுகள் மனுஷ சீவனுடைய 'மேலாங்கிஷம்' என்று சொல்லப்படும். இதெல்லாம் இந்த டைவாக இருக்கையிலே, இத்தாலேதானே செந்துவினுடைய சீவனனது தனது சரீரத்தை விட்டுப் பிரிந்தாற், பிழைக்க மாட்டாமல் அழிந்துபோகும் என்றும், மனுஷனுடைய சீவனனது தனது சரீரத்தை விட்டுப் பிரிந்தாலும் என்றென் றைக்கும் அது அழியாமல் நிற்கத்தக்க பொருளாய் இருக்கிற தென்றுஞ் சந்தேகமறக் கண்டுபிடிக்கலாம். அதேதென்றால், மிருகாதிகளுடைய சீவனனது சரீரத்துக்கு ஆதேயமாயிருக்கிற சத்தி ரூபமான இந்திரியங்களை மாத்திரங் கொண்டிருக்கிற தினாற், சரீரத்தோடேகூட அது இருந்துகொண்டு தனது சேட்டைகளைப் பண்ணுகிறதுக்கு வல்லதா யிருக்கிறதொழியத், தனது சரீரத்தைவிட்டுப் பிரிந்தால் ஒரு சேட்டையானாலும் பண்ணுகிறதுக்குப் பலமுடையதாயிராது. சீவனென்னப் பட்ட யாவுஞ் சேட்டையில்லாமற் பிழைக்க மாட்டாதென்கிற ஞாயம் உண்டாயிருக்கையிலே, தனது சரீரத்தை விட்டுப் பிரிந்த செந்துவின் சீவனனது ஒரு சேட்டையானாலும் பண்ண மாட்டாது என்கிறதினாற், செந்துவினுடைய சீவனனது தனது சரீரத்தை விட்டுப் பிரிந்தால், அழிந்துபோகும் என்கிற துக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. மனுஷனுடைய சீவனேவென்றாற், சரீரத்துக்கு ஆதேயமா யிருக்கிற சத்தி ரூபமான இந்திரியங்களைக் கொண்டிருக்கக்கொள்ள, அப்படிப் பட்ட இந்திரியங்களைக்கொண்டு ஆன சேட்டைகளைப் பண்ணு கிறதுக்கு வல்லதாயிருக்கும். ஆனால் சத்தி ரூபமான குணங் களான புத்தியையும் சரீரமாகாத விஷயங்களை அபேக்ஷிக் கவும் வெறுக்கவுஞ் சுவாதந்திரியமுள்ள மனசையுங் கொண்டி ருந்து, அப்படிப்பட்ட மேலான அங்கிஷத்துக்கு ஆத்தும மானது ஆதாரமாயிருக்கக்கொள்ள, மனுஷனுடைய ஆத்தும மானது சரீரத்தை விட்டுப் பிரிந்தாலும், ஞான விருத்திகளெனப்

6.986

பட்ட யாவையும் பண்ணுகிறதுக்கும் சரீரமாக, விஷயங்களை வெறுக்கிறதுக்கும் அபேக்ஷிக்கிறதுக்கும் வல்லதா யிருக்கக்கொள்ள, மனுஷ சீவனுனது சரீரத்தை விட்டுப் பிரிந்தாலுந், தனது அநேக விருத்திகளைப் பண்ணுகிற சீவனுமாய் அழியாத பொருளுமாய், என்றென்றைக்கும் நிக்கத்தக்க ஆத்துமமுமா யிருக்கிறதென்று சந்தேகமில்லாமல் ஒப்புக்கொள்ளத்தக்க குன்ருத சத்தியமென்று அங்கீகரிக்கக்கடவோம்.

**14.3.** முதல் உவமை: **நாட்டை இழந்த அரசன் ஆளாவிட்டாலும் தனி மனிதனுக்குரிய செயல்களைச் செய்வான்.** இதெல்லாம் இரண்டு உவமைகளினல் ஒப்பச் சொல்லக்கடவோம். இராச்சியபாரம் பண்ணிக்கொண்டு வருகிற இராசாவானவன் இரண்டு வகையுள்ள சேட்டைகளைப் பண்ணிக்கொண்டு வருகிருனென்று சொல்லத்தகும். ஒருவகைச் சேட்டையானது ஒருத்தனுக்குத் [1]துரைத்தனம் குடுக்கிறதென்கிறதும் வேருெருத்தனுக்குத் துரைத்தனம் வாங்கிறதென்கிறதும், ஒருத்தனுக்குச் சம்பாவனைபண்ணி வேருெருத்தனுக்கு ஆக்கினையிடுகிறது என்கிறதும், ஒருத்தன் மேலே படையிறங்கி வேருெருத்தனேடே சமாதானம் பேசுகிறதென்கிறதும், இத்தொகைப்பட்ட [2]சந்தி விக்கிரக முதலான [3]ஆறு உபாயங்களைத் தனது சத்தித் திறமையோடு பண்ணிக்கொண்டு வருகிறது என்கிறது இராசாவுக்குண்டான முதல் வகையுள்ள சேட்டைகளென்று சொல்லத்தகும். இந்த வகையுள்ள சேட்டைகள் தவிர, நித்திரையும் போசனமும் வார்த்தை சொல்லுகிறதென்கிறதும் பஞ்சேந்திரிய முதலான கிரிகைகளும் ஞானவிருத்திகளும் இத்தொகைப்பட்ட சுபாவமான சரித்திரங்களும் இராசாவினிடத்திலே இருக்கிற இரண்டாம் வகையுள்ள சேட்டைகளென்று சொல்லக்கடவோம். இது இப்படியிருக்கையிலே, இராசாவானவன் தனது ராச்சியத்தைப் பறிகொடுத்தால், அத்தோடேகூட, முதலாம் வகையுள்ள சேட்டைகள் என்னப்பட்ட யாவும் போம் என்கிறதுக்குத் தப்பாது. இராச்சியபாரம் பண்ணுகிறதுக்கடுத்த இப்படிப்பட்ட சேட்டைகள்

1. அதிகாரம் 2. கூட்டல், பிரித்தல் 3. மேலே கூறிய ஆறு: கொடுத்தல், வாங்கல், ஈதல், ஒறுத்தல், கூட்டல், பிரித்தல்.

போனலும், இராசாவானவன் தனது சுபாவமான சேட்டைகளைப் பண்ணுகிறதுக்கு வல்லவனுயிருக்கக் கொள்ள, இராச்சியம் போனலும், இராசாவானவன் சாகாமல் பிழைத்திருப்பான் என்கிறதுக்குச் சந்தேகப்படுவாரில்லை.

**14.4. உடலை விட்டுப் பிரிந்த ஆன்மாவும் உடலைத் தழுவாத ஞானச் செயல்களைச் செய்யும்.** அத்தன்மை போல், சீவனுனது ராச்சியமாகிற சரீரத்திலே இராசாவானவன் இருந்துகொண்டு ராச்சியத்தைப் பண்ணுகிறுப்போலே டஞ்சேந்திரியங்கள் முதலான இந்திரியங்களைப் பார்த்து அந்தந்த விருத்தியைத் தனது கற்பனைப்படியே உண்டாகப்பண்ணும். சரீரத்தை விட்டுப் பிரிந்தால், ராச்சியத்தைப் பறிகொடுத்து ராச்சியம் ஆளாத ராசாவைப்போலே, ராச்சியமாகிற சரீரத்துக் கடுத்த கிரிகைகளைப் பண்ணுதிருக்கும் என்கிறதுக்குத் தப்பாது. அப்படிப்பட்ட அவஸ்தையை அடைந்திருக்கிற மனுஷ சீவனுனதைப் பார்க்குமிடத்தில், சுபாவமான நித்திரை போசனுதி கிரிகைகளை உடைத்தான ராசாவானவன் போலே, மனுஷனுடைய சீவனுனது தனது சுபாவமான ஞானுதி விருத்திகளைப் பண்ணுகிறதுக்குச் சத்தி ரூபமாகிய புத்தியையும் சுவாதந்திரியமுள்ள மனசையும் கொண்டிருக்கக்கொள்ளப், பலபல ஞானவிருத்திகளையும் சுவாதந்திரியமுள்ள மனசினுடைய சேட்டைகளையும் பண்ணிக்கொண்டு வரும். அதேனென்றால், இப்படிப்பட்ட விருத்திகளுடைய காரணமாகிற புத்தியும் மனசும் சரீரத்திலே ஆதேயமாயிராமல் ஆத்துமத்திலே தானே அதுகள் ஆதேயமாயிருக்கிறதினுலேயும், அப்படிப்பட்ட ஞானுதி விருத்திகள் சரீர சம்பந்தமாய் இராததினுலேயும், மனுஷ சீவனுனது சரீரத்தை விட்டுப் பிரிந்த பிற்பாடு அப்படிப்பட்ட விருத்திகளைப் பண்ணிக்கொண்டு வருமென்கிறதினுல், சரீரத்தை விட்ட செந்துவினுடைய சீவனுனது அழிந்து போருப் போலே மனுஷனுடைய சீவனுனது அழியாமல் என்றென்றைக்கும் நிற்கத் தக்க பொருளாயிருக்கிற தொழிய மற்றப்படியல்ல. இதுக்குக் காரணமேதென்றால, சீவனுனது சுபாவமாய்ச் சேட்டைகள் இல்லாமல் இருக்கமாட்டாமல், யாதொரு சேட்டையை எப்போதும் பண்ணுகிறதுக்கு வல்லதாய் இருக்கவேணும்.

இப்படி சொல்லாவிட்டால், சீவனும் சீவனாகாத சடபதார்த் தமும் ஏக பொருளாய் இருக்கிறது என்கிற அபத்தத்தைச் சொல்லுகிறதுக்கு ஒக்கும். ஆதலாலே, செந்துவினுடைய சீவனானது சரீரத்தை விட்டுப் பிரிந்தால், ஒரு சேட்டை யானாலும் பண்ணமாட்டாததினாலே, சரீரத்தை விட்டவுடனே அழிந்துபோச்சுதென்று சொல்லக்கடவோம். மனுஷனுடைய சீவனோவென்றால், சரீரமில்லாமல் ஞான முதலான அநேக சேட்டைகளைப் பண்ணுகிறதுக்கு வல்லதாய் இருக்கக் கொள்ளச், சரீரத்திலே இருந்துகொண்டு முன்சொல்லப்பட்ட இரண்டு வகைச் சேட்டைகளைப் பண்ணும். சரீரத்தை விட்டுப் பிரிந்தாலும் [1]ஞானாதி சேட்டைகள் மாத்திரம் பண்ணும். ஆதலால், சரீரத்தோடே இருக்கிறபோது தான் பிழைக்கிருந்து சரீரத்தைப் பிழைப்பித்துக் கொண்டிருக்கும். சரீரத்தை விட்டால், சரீரத்தைப் பிழைப்பிக்கப் பண்ணாமல், தான் பிழைக்கிற பொருளாய் என்றென்றைக்கும் நிற்கும் என்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமாகும் என்கிறதுக்குத் தப்பாது.

**14.5.** இரண்டாம் உவமை: **நீரை விட்டும் வாழக் கூடிய விலங்குகள் போல் உடலை விட்டும் ஆன்மா உய்கிறது.** இந்தடைவாகச் சொல்லப்பட்ட இந்தச் சத்தியத்தை வேறொரு உவமையினால் ஒப்புவிக்கலாம். சமுத் திரத்திலே இருக்கிற செந்துகளானதுகள் இரண்டு வகைக் குள்ளே அடங்கி இருக்கிறதென்று சொல்லத்தகும். சிலது களுக்குச் சமுத்திரத்திலே மாத்திரம் இரையானது கிடைக்கு மொழியச் சமுத்திரத்தை விட்டுக் கரையேறினால் கரையிலே ஒரு இரையானாலும் அதுகளுக்குக் கிடைக்கமாட்டாது. இத் தொகைப்பட்ட செந்துகளானதுகள் தண்ணீரை விட்டுப் பிரிந்த வுடனே செத்துப்போமென்று பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த [2]மச்சங்கள் தவிர வேறே சில செந்துக்களுண்டு. அதாவது கடற்குதிரை, ஆமை, சில பாம்புகள், நண்டுகள் இது முதலான செந்துக்களுக்குத் தண்ணீரிலேயும் இரை கிடைக்கும், தண்ணீரை விட்டு அதுகள் கரையேறினால், கரையிலேயும் புல் முதலான பக்ஷணங்களைத் தின்றுகொண்டு வரும். இத்தொகைப்பட்ட செந்துக்

1. ஞான முதலிய 2. மீன்கள்

களானதுகள் சமுத்திரத்திலேயும் சமுத்திரத்திற்குப் பிறத்தியிலேயும் பிழைக்கும் என்கிறதுக்குத் தப்பாது.

அம்மநுவாதியே, இரை இடையாமல் பிழைக்கமாட்டாத சந்துக்களைப் போலே சேட்டைகள் இல்லாமல் பிழைக்க மாட்டாத சீவன்களை விசாரிக்குமிடத்தில், சீவன்களிடத்திலே இரண்டு வகையுள்ள சீவன்கள் உண்டென்று சொல்லப்படும். சில சீவன்களுக்குத் தண்ணீராகிற சரீரத்திலே மாத்திரம் சேட்டைகளுக்குண்டாய்த் தண்ணீராகிற சரீரத்துக்குப் பிறத்தியிலே ஒரு சேட்டையானாலும் உண்டாயிராது. தண்ணீரிலே மாத்திரம் இரைகளைத் தின்றுகொண்டு பிழைத்திருக்கிற செந்துக்களைப் போலே, இத்தொகைப்பட்ட சீவன்கள் தண்ணீராகிற சரீரத்திலே சேட்டைகளைப் பண்ணுகிறதுகளாய்த், தண்ணீராகிற சரீரத்துக்குப் பிறத்தியிலே சேட்டைகளைப் பண்ணுகிறதுமில்லை, பிழைத்திருக்கிறது மில்லை என்று அங்கீகரிக்க வேணும். மிருகாதிகளுடைய சீவன்கள் என்னப்பட்ட யாவும் ஞானமுடைத்தானதுகளாய் இராததினால், இத்தொகைப்பட்ட அந்தஸ்திலே இருக்கிற சீவன்களென்று அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். அதேதென்றால், மனுஷனுடைய சீவன் ஒன்றே ஞானமுடைத்தானதாய் இருக்கக்கொள்ள, அது சரீரத்தை விட்டுப் பிரிந்த பிற்பாடும் சேட்டைகளைப் பண்ணுகிறதுக்கு வல்லதாயிருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே தண்ணீராகிற சரீரத்திலேயும் சரீரத்துக்குப் புறத்தியிலேயும் மனுஷனுடைய சீவனானது பலபல சேட்டைகளை உடைத்தானதாய் இருக்கக்கொள்ளத் தண்ணீரிலேயும் தண்ணீருக்குப் புறத்தியிலேயும் இரையைத் தின்றுகொண்டு பிழைத்திருக்கிற செந்துக்களைப் போலே தண்ணீராகிற சரீரத்திலேயும் சரீரத்துக்குப் புறத்தியிலேயும் மனுஷ சீவனானது பிழைத்திருக்கிற பொருளாய் இருக்கிறது என்கிறதுக்குச் சந்தேகப்படக் கடவோமல்ல.

**14.6 உடலைத் தழுவியதும் தழுவாததுமாகிய இரு வகைச் செயல்கள் ஆன்மாவில் உள.** ஆதலாலே, மனுஷனுடைய சீவனாலே பண்ணப்படுகிற சேட்டைகள் என்னப்பட்ட யாவும் ஓர் அந்தஸ்திலே இருக்கிறதென்று சொல்லவுமெண்ணவும் கூடாது. அதேதென்றால், மனுஷனுடைய

சீவனாலே பண்ணப்படுகிற சில சேட்டையானது கேவலம் சரீரசம்பந்தமாயிருக்கிற சேட்டைகளுமாய், மிருகாதிகளுக்கும் மனுஷனுக்குஞ் [1]சாதாரணமானதுகளுமாய் இருக்கிறதென்று பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவ்வண்ணமே, நித்திரையும் போசனமும் பஞ்சேந்திரியங்களுடைய கிரிகைகளும் இத்தொகைப்பட்ட மற்றுண்டான விருத்திகளும் மனுஷனிடத்திலேயும் மிருகாதிகளிடத்திலேயுங் காணப்படுகிறதினால், அதுகளெல்லாஞ் சரீர சம்பந்தமா யிருக்கிற கிரிகைகளென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால் இப்படிப்பட்ட விருத்திகளெல்லாஞ் சரீரத்தினுடைய மேரையைக் கடந்து, மேலாகப் போகாமல் இருக்கிறதினாற் சரீரத்திலே ஆதேயமாயிருக்கிற சத்தி ரூபமான குணங்களானதுகள் இத்தொகைப்பட்ட கிரிகைகளுக்குக் காரணமாயிருக்க வேணுமொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே அப்படிப்பட்ட விருத்திகள் சரீரத்தினுடைய மேரைக்கு அப்பாற் கடவாததினால் அதுகள் சரீர சம்பந்தமாயிருக்கிற கிரிகைகளென்று சந்தேகமறக் கண்டு பிடிக்கக்கடவோம். இது இப்படியிருக்கையிலே, மிருகாதிகளிடத்திலே காணப்படாததுகளுமாய்ச், சரீரத்து மேரையை மிகவுங் கடந்து மேலாகப் போகிறதுகளுமா யிருக்கிற சில விருத்திகள் மனுஷனிடத்திலே உண்டாயிருக்கிறதென்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த விருத்திகளுடைய சுபாவ சுரூபத்தைப் பார்க்கும்போது, சரீரமில்லாத பொருள்கள் அப்படிப்பட்ட விருத்திகளுக்கு விஷயங்களா யிருக்கக்கொள்ள, அதுகளுக்குக் காரணமாயிருக்கிற சத்தியமானது சரீரத்திலே ஆதேயமாயிராதே ஆத்துமத்திலே தானே அது ஆதேயமாய் இருக்கிறதென்று சொல்லத் தகுமொழிய மற்றப்படியல்ல.

**14.7** பெண்ணாசையும் அதை அடக்குவதும் ஆன்மாவின் இவ்விருவகை ஆற்றலைக் காட்டுகிறது. இந்தச் சத்திய விசேஷத்தை ஒரு [2]ஞாயத்திலே புத்திமானாயிருக்கிறவன் கண்டுபிடிக்கக்கடவான். அதேதென்றால், மனுஷனானவன் இரண்டு [3]விருத்தமான கிரிகைகளைத் தன்னிடத்திலே அனுபவித்துக்கொண்டு வருகிறான். அப்படிப்பட்ட விருத்த

1. பொது. 2. Instance. 3. முரண்பட்ட.

மான விருத்திகள் [2]ஏக க்ஷணத்திலே இருக்கும்போது, [3]பின்ன பேத சத்திகளினாலே அதுகளிரண்டும் பண்ணப்படுகிறதென்று சொல்லவேணுமொழிய, ஒரு சத்திருபமான குணத்தில் நின்று அப்படிப்பட்ட விருத்தமான விருத்திகள் பிறக்கிறதென்று சொன்னோமானால், ஏக சத்தியானது ஏக க்ஷணத்திலே தானே ஏக பொருளின் பேரிலே வெறுப்பையும் ஆசையையும் பிறப்பிக்கிறது என்கிற அபத்தத்தை அங்கீகரிக்க வேணும். அதெப்படியென்றால், சரீர சுகத்தை அனுபவிக்க வேணுமென்று காமாதுரனாயிருக்கிறவன் நல்ல ஸ்திரியைப் பார்த்து[4], அவள் பேரிலே ஆசையானது காமாதுரனுடைய ஆத்துமத்திலே பிறக்கும். அந்த க்ஷணத்திலே தானே ஸ்திரிபேரிலே ஆசையானது உண்டாயிருக்கையிலே, அப்படிப்பட்ட ஆசையை நிக்கிரகம் பண்ணுகிற வேறொரு விருத்தியானது காமாதுரனுடைய ஆத்துமத்திலே உண்டாயிருக்கும். இத்தொகைப்பட்ட இரண்டு விருத்திகளுடைய சுபாவ சுரூபத்தைப் பார்க்கும் போது, ஆசையாகிற விருத்தியிலே 'ஸ்திரி வேணும்' என்று சொல்லப்படும்; ஸ்திரியாசையினுடைய நிக்கிரகமோவென்றால், அப்படிப்பட்ட நிக்கிரகத்திலே கர்த்தனுடைய முகத்தைப் பார்த்து 'ஸ்திரி வேண்டாம்' என்று சொல்லப்படும். ஸ்திரி வேணும் வேண்டா மென்கிற இரண்டு விருத்தமான விருத்திகளானதுகள் ஏக க்ஷணத்திலே ஏக சத்தியினாலே பிறக்க மாட்டாது என்கிறதுக்குச் சந்தேகமில்லை. இது இப்படியிருக்கையிலே, சரீர சுகத்தை அபேக்ஷிக்கிற சேட்டையானது சரீரத்துக்கடுத்த சுகத்தை அங்கீகரிக்கிறதினால், அப்படிப்பட்ட ஆசையானது சரீர சம்பந்தமாய் இருக்கிறதென்று சந்தேகமறச் சொல்லக்கடவோம். கர்த்தனுடைய முகத்தைப் பார்த்துச் சரீரத்தினுடைய சுகத்தை வெறுக்கிற நிக்கிரகமோ வென்றால், அது சரீரத்துக்கு விருத்தமானதாய் இருக்கக் கொள்ள, அப்படிப்பட்ட விருத்திக்கு காரணமான சத்தியானது சரீர சம்பந்தமாய் இராததுமாய்ச், சரீரத்திலே ஆதேயமாய் இராததுமா யிருக்கிற சத்தியென்று ஒப்புக்கொள்ளக் கடவது.

2. ஒரேசமயத்தில். 3. வேறுபட்ட. 4. பார்க்க.

**14.8.** நோயை வெறுத்தலும் அதை ஏற்றலும் கிழாங்கிஷம் மேலாங்கிஷம் என்ற இருபிரிவைக் காட்டுகிறது. இந்தடைவாகத் தேவபத்தனாய் இருக்கிறவன் அனுபவிக்கிற வியாதியை வெறுத்து அத்தை வேண்டாமென்கிற ஆசை அவனிடத்திலே உண்டாயிருக்கும்போது, ஆண்டவன் நிமித்தமாக வியாதி முதலான நோவுகளைத் திரளாய் அனுபவிக்க வேணுமென்கிற அபேக்ஷை உண்டாயிருக்கிறது. இதற்குச் சரியாகப் பாவ நிவாரணம் உண்டாகிறதுக்குப் பலபல வாதைகளையும் நிர்ப்பந்தங்களையும் அனுபவிக்க வேணும் என்கிற இச்சையானது தேவ பத்தனுக்கு உண்டாயிருக்கையிலே, அப்படிப்பட்ட உபத்திரவங்களை வெறுக்கிற விருத்தியானது அவனிடத்திலே கூடப் பிறந்திருக்கும். கடைசியாய், வியாதிக்காரனானவன் தனது வியாதி போகவேணும் என்கிறதுக்காகக் [1]சுடுவிக்கிற நிமித்தமாக வருகிற நோவுக்குச் சம்மதப்படுகிற க்ஷணத்திலே தானே அப்படிப்பட்ட தகனத்தை வெறுத்து அதுக்குப் பின்வாங்கிற பயமாகிற விருத்தியானது அவனிடத்திலே உண்டென்று அனுபவ சித்தியினாலே கண்டுகொண்டுவருகிறோம். இத்தைப் பார்க்கும்போது, வேணும் வேண்டாம் என்கிற விருத்திகளிரண்டும் ஒரே க்ஷணத்திலே உண்டாச்சுதென்று சொல்லப்படும். ஒரு காரணமானது ஒரு க்ஷணத்திலே வஸ்துவைக் கிரகிக்கிறதுக்கும் தள்ளுகிறதுக்கும் வல்லதாயிராதது போலே, ஏக சத்தியானது ஏக க்ஷணத்தில் ஒரு வஸ்துவை வேணும் வேண்டாம் என்கிற விருத்திகளிரண்டும் பண்ணமாட்டாது என்கிறதுக்குச் சந்தேகமில்லை.

இதெல்லாம் இப்படி நடந்து வரச்செய்வதே, நோவு வாதைகளை அனுபவிக்கிறதுக்குப் பின்வாங்கிற விருத்தியானது அதுகளை வேண்டாம் என்கிறதுக்கு ஒக்கும். ஆனபடியினாலே, அதெல்லாம் சரீரத்தின் சுகத்தை மாத்திரம் தேடுகிற ஆசையாய் இருக்கக்கொள்ளச், சரீரத்தைத் தாண்டிப் போகாத அப்படிப்பட்ட விருத்திகளுக்குச் சரீரத்திலே ஆதேயமாய் இருக்கிற சத்தியானது காரணமாய் இருக்கவேணுமொழிய மற்றப்படியல்ல. இதுக்கு விபரீத மேரையாக நோவு

1. + சதுப்புளிகொண்டு

வாதைகளை அனுபவிக்க வேணுமென்கிற இச்சையானது சரீர சுகத்துக்கு விரோதமானதுமாய்ச், சரீரத்தின் வகையைக் கடந்து நீதியையும் ஞானத்தையும் அது விஷயீகரிக்கிறதினாலே, அப்படிப்பட்ட விருத்திக்குக் காரணமான சத்தியானது சரீரத்தின் சம்பந்தம் ஆகாததுமாய்ச், சரீரத்திலே ஆதேயமாய் இராததுமாயிருக்கிற சத்தியென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல.

**14.9.** ஆகவே கிழாங்கிஷத்தைச் சாவில் இழந்த **ஆன்மா, மேலாங்கிஷத்தால் இயங்குகிறது.** நரசீவனுக்கு உண்டான இப்படிப்பட்ட மேலாங்கிஷமானது சரீரத்தை [2]அபேக்ஷியாமல் இருக்கிறதினால், மனுஷனுடைய ஆத்தும மானதுதானே அப்படிப்பட்ட சத்திக்கு ஆதாரமாயிருந்து, சரீரத்தை விட்டுப் பிரிந்தாலும், அப்படிப்பட்ட சத்தியை இடைவிடாமல் எப்போதும் கொண்டிருக்கும் என்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே, ஆத்துமமானது தனது சரீரத்தை விட்டுப் பிரிந்தாலும், அத்தைக்கொண்டு ஆன விருத்திகளைப் பண்ணிக்கொண்டு வருமொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே, மனுஷனுடைய சீவனானது சரீரமில்லாமல் பலபல சேட்டைகளைப் பண்ணுகிறதுக்கு வல்லதாய் இருக்கக்கொள்ள, அப்படிப்பட்ட சீவனானது என்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளாய் இருக்கிறதென்று சந்தேகமற ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமென்று சொல்லக்கடவோம். என்றென்றைக்கும் நிற்கத்தக்க இப்படிக்கொத்த சீவனானது ஒரு சரீரத்தை விட்டுப் பிரிந்து, பலபல சரீரங்களை எடுத்து, வெவ்வேறு சென்மங்களை அடையலாமோ இல்லையோ என்கிற விசேஷமான திலே அநேகம் பேர்கள் மயங்கிறுர்கள் என்கிறதுக்காக, அதிலே அங்கீகரிக்கத்தக்க சத்தியத்தை வருகிற எட்டுப் பாடங்களிலே விரிவாக வெளிப்படுத்தக் கடவோம்.

பதினாலாம் பாடம் முற்றும்.

(கிரந்தம் ௱௬௰௨)*

---

2. தமுவிகில் • 162

# பதினைந்தாம் பாடம்

**15.1. குருடர் யானையை வரையறுத்தது போல் அஞ்ஞானிகள் வகுத்த தவறான கொள்கையில் மறு பிறப்பும் ஒன்று.** அனந்த ஞான சுரூபமாய் இருக்கிற கர்த்தரானவர் சகலத்தையும் தப்பில்லாததுமாய் அளவறுக்கப் படாததுமாய் இருக்கிற கிரமத்தோடே நடத்தி வருகையிலே, வாக்குக்கும் மனசுக்கும் எட்டாததாய் இருக்கிற அப்படிப்பட்ட திவ்விய கிரமத்தின் வகையைத் தெளிவற்ற மனுஷர் மேலெழுந்தவாரியாக மாத்திரம் பார்த்ததினால், அது போம்வழி இன்னதென்று சத்தியமாகக் கண்டுபிடிக்க மாட்டார்கள். ஆனபடியினாலே, கண்ணில்லாத பேர்கள் கையினாலே மாத்திரம் யானையை [1]ஸ்பரிசித்து உரல் உலக்கை முதலான ரூபங்களை யானையானது கொண்டிருக்கிறதென்று குருடராயிருக்கிற பேர்கள் சொல்லி நிலை நிறுத்தினாற்போலே, அற்பப் புத்தியுடைத்தான மனுஷரான பேர்கள் சர்வேஸ்வரன் லோகத்தை நடத்துகிறதிலே அவருக்குப் பொருந்தியிருக்கிற குறைபற்ற ஞாயமுள்ள கிரமத்தை அனுபவத்தினாலே மாத்திரம் தொட்டாப்போலே அதினுடைய [2]உற்பனத்தை அறியாமல், அது போம்வழி இன்னதென்று சொல்லுகிறபோது, சத்தியத்தின் வழியை மிகவும் தப்பிப், பற்பல அபத்த விசேஷங்களைச் சித்தாந்தப் பக்ஷமாக அறியாத பிரசைகளிடத்திலே நிலை நிறுத்தினார்கள்.

இப்படிப்பட்டவர்களுடைய அஞ்ஞானத்தினாலே அறியாத பேர்களுக்குப் பலபல விஷயங்களிலே மகாமகாப்பட்ட கேடுகளாகிற மயக்கங்களானதுகள் வந்து விழுந்தாப்போலே, பெரியவர்களென்றும் [3]தணிந்தவர்களென்றும், ஊழியம் கொள்ளுகிற பேர்களென்றும் ஊழியம் பண்ணுகிற பேர்களென்றும், வியாதி முதலான உபாதையை அனுபவிக்கிற பேர்களென்றும் கர்த்தன் திருவுளப்படியே லோகத்திலே திரிகிறார்களே, இப்படிப்பட்ட [4]பின்னபேதங்களுக்கும் ஏற்றக் குறைச்சல்களுக்கும் ஆன காரணங்களை மெய்யாகவே மதிகெட்ட பேர்கள் கண்டுபிடியாததினால், இவர்களுடைய

1. தடவிப்பார் 2. தோற்றம் 3. தாழ்ந்தவர் 4. வேற்றுமை

அஞ்ஞானத்தினாலே பூர்வ சென்மம் உண்டாயிருந்தது என்கிற மயக்கமானது [5]தேவோகித்த வேதத்தை அறியாத பேர்களுக்கு உண்டாச்சுது. அவ்வண்ணமே, மனுஷனுடைய சீவனானது பூருவகாலங்களில் எண்ணப்படாத சரீரங்களைக் கொண்டிருந்து, பலபல சாதியுள்ளதாய்ப் பிறந்ததும் போராமல், கல்லாய் மரமாய் ஊர்வன பறப்பன செந்துக்களாய், மிருகங்களாய்ப் பிறந்கதென்று சொல்லி, இந்தவிதமாய் பூர்வ சென்மத்தை நிலைநிறுத்தினார்கள்.

**15.2. மறு பிறப்பு வாதிகள் கூறும் சான்றுகள்.** மனுஷன் கரையேறுகிறதுக்கு மிகவும் விக்கினமாய் இருக்கிற இப்படிப்பட்ட தப்பறைப் பக்ஷத்தை நிலை நிறுத்தத்தக்கதாக அவர்களுடைய புத்திக்கு ஞாயம்போலே தோன்றின காரணமே தெனில்: "பாக்கியம் என்னப்பட்டதெல்லாம் அவனவன் பண்ணின புண்ணியத்துக்குப் பலனாயிருக்க வேணும். பின்னை யும், வியாதி நிர்ப்பாக்கியம் என்னப்பட்ட யாவும் ஆக்கினை ரூபமாய் இருக்கக்கொள்ள, அவனவனாலே பண்ணப்பட்ட பாவத்தின் நிமித்தமாக அவனவன் பூலோகத்திலே வியாதி தாரித்திரம் இது முதலான நிர்ப்பாக்கியங்களை அனுபவித்துக் கொண்டு வரவேணுமொழிய மற்றப்படியல்ல. இது காரண மாக அவனவன் இராசாங்க முதலான அயிசுவரியமுள்ளவனாய்ப் பிறக்கிறதுக்கும் சரீர ஆரோக்கிய முதலான சுகங்களை அனுபவிக்கிறவனாய்ச் செனிக்கிறதுக்கும் அவனவன் இந்த சென்மத்திலே புண்ணியம் பண்ணினானென்று சொல்லக் கூடாத தினால், அவனவன் பூருவ காலத்திலே பிறந்து அப்படிப்பட்ட பூருவ சென்மத்திலே அவனவன் பண்ணின புண்ணியங்களுக் கான பலன்களைப் [1]போசிக்கிறதுக்கு அவனவன் இராசாங்க முதலான அயிசுவரியமுள்ளவனாய்ப் பிறக்கிறானென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். மீளவும் அவனவன் பூருவ சென்மத்திலே பண்ணின பாவங்களுக்குத் தக்க ஆக்கினை அனுபவிக்கிறதுக்கு அவனவன் நீசனாய், வியாதி முதலான நிர்ப்பாக்கியமுள்ளவனாய், இந்த சென்மத்திலே பிறக்கிறா னென்று கற்பித்தார்கள். அவ்வண்ணமே, அவனவன் பூருவ சென்மங்களிலே பண்ணின பாவ புண்ணியமானதுகள் இந்த சென்மத்திலே [2]துலையும் என்று அங்கீகரிக்கிறார்கள்."

5. கடவுள் அருளிய 1. பருக 2. நீங்கும்.

**15.3 இக்கொள்கை அஸ்திவாரம் இல்லாதது.** முழுதும் தப்பறையாயிருக்கிற இந்தப் பக்ஷமானது தேவன் அருளிச் செய்த வேதத்துக்கு [3]ஆதரமாயிருக்கிற அநேக மதங்களிலே [4]விதிக்கப்படுகிறதினுலே. அப்படிப்பட்ட [5]விபக்ஷத்தின் தப்பறையை அடைவாகப் பலபல ஞாயங்களினுலே வெளிப்படுத்தின பிற்பாடு, கர்த்தன் திருவுளப்படியே லோகத்திலே நடக்கிற ஏற்றக் குறைச்சலானது பூர்வ செனமங் கற்பிக்கப் படுகிறதுக்கு இவர்களுடைய மதங்களிலே அதே ஞாயம் அதே காரணமாயிருக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கக் கொள்ள, லோகத்திலே உண்டாயிருக்கிற பலபல பொருள்களுடைய முன் சொல்லப்பட்ட வேற்றுமைக்கும் ஏற்றக் குறைச்சலுக்கும் [6]சுமுத்திரையான காரணம் இன்னதென்று ஒப்பச் சொல்லிக் காட்டின பிற்பாடு, அஸ்திவாரமில்லாத கோபுரமானது இடிந்து விழுந்தாப்போலே, அநேகந் தெளிவற்ற மனுஷருடைய மனசிலே பூரண அங்கோரத்தினுலே கோபுரம்போலே நிலைநிறுத்தப்பட்ட பூர்வசென்ம பக்ஷமானது, அஸ்திவாரமில்லாத முன் சொல்லப்பட்ட இடிந்த கோபுரம்போல், அது விழும் என்கிறதுக்குத் தப்பாது.

**15.4 தாழ்ந்த குலத்தில் பிறப்பதும் நோய்வாய்ப் படுவதும் குற்றஞ்செய்த கள்ளனைச் சிறையில் அடைத்ததுபோல் என்பர்.** அவ்வண்ணமே, இப்போது பூமியிலே திரிகிறபேர்கள் நீசத்தனம் முதலான நிர்ப்பாக்கியத்தையும் ராசாங்கம் முதலான பாக்கியத்தையும் அனுபவிக்கிறதுக்குப் பூர்வ சென்மத்திலே பண்ணப்பட்ட பாவ புண்ணியமானது காரணமா யிருக்க மாட்டாதென்று இந்தப் பாடத்திலேயும் வருகிற பாடத்திலேயும் ஒப்பச் சொல்லி அடைவாகக் காட்டக் கடவோம். [1]சண்டாளன் ஒருத்தன் முழுத் தரித்திரத்தை அடைந்திருக்கிறதும் போராமல் [2]துர்கந்தப் புண்கள் முதலான பலபல கெட்ட வியாதிகளினுலே பாதிக்கப்படுகிருன். அண்டையில் ஒருத்தனுனுலும் இருந்து, அவனுடைய துர்கந்தையும் துர்குணங்களையும் சகிக்க மாட்டாமற், சகலராலும் முழு அவமானப்பட்டு [3]அகோராத்திரம் தூஷிக்கப்படுகிருன். இப்படிக்கொத்த

3. புறம்பாய். 4. கூறு. 5. எதிர் பக்கம். 6. சரியான.
1. தாழ்ந்த குலத்தான். 2. நாறும். 3. இராப்பகல்

சண்டாளனுடைய [1]அவஸ்தைக்கு இந்தவகையாக இவர்கள் காரணத்தைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அந்தச் சண்டாளனுடைய ஆத்துமமானது பூர்வ சென்மத்திலே வேறே சரீரத்தைக் கொண்டிருந்து, மகா மகாப்பட்ட பாவங்களைப் பண்ணி, லவுகீக ராசாவானவன் கள்ளனைச் சிறையிலே போட்டு அடைக்கிறது என்கிறது ஞாயமுள்ள கிரமமாகுமே, அத்தன்மைபோலக், குறையற்ற நீதியுள்ளவரானவர், பூர்வ சென்மத்திலே பாவம் பண்ணின இந்தத் துஷ்டாத்துமத்தை முன்சொல்லப்பட்ட துர்கந்த வியாதிகளோடேயும் முழு அவமான தூஷணங்களோடேயும் கூடியிருக்கிற சிறைச்சாலையாகிற சரீரத்திலே அடைத்துப் போட்டார். அப்படிப்பட்ட சரீரத்திலே யிருக்கிற துராத்துமமானது கஸ்தியை அனுபவிக்கிறதினால் அத்தாலே முன் பண்ணப்பட்ட பாவங்களெல்லாம் துலையு மொழிய மற்றப்படியல்ல.

**15.5 சிறையை விட்டு நீங்க முயலும் கள்ளனைப் போல், ஆன்மா உடலைவிட முயலாமல் அதைப் பேணுவதேன்?** இந்தவகையிலே சொல்லப்பட்ட வர்த்தமானத்திலே அடங்கியிருக்கிற தப்பறை விசேஷங்களைத் தனித்தனியே ஆராய்ந்து கொள்ளக்கடவோம். அதெப்படியென்றால், துராத்துமமானது ஆக்கினையை அனுபவிக்கிறதுக்குச் சண்டாளனுக்கு உண்டான சகல நிர்ப்பாக்கியத்தோடே கூடி யிருக்கிற சரீரமானது ஆன சிறைச்சாலையா யிருந்தால், துஷ்டாத்துமமானது அப்படிப்பட்ட சரீரத்திலே கட்டுப்பட்டிருக்கிறது கட்டாயமென்று சொல்லவேணும். கட்டாயம் உண்டாயிருக்கையிலே, அப்படிப்பட்ட சரீரத்திலே ஆத்துமத்தினுடைய [1]ஸ்திதியானது மனசுக்குப் பொருந்தாமல் இருக்கிறதென்று அங்கீகரிக்கத்தகும். அது மனசுக்குப் பொருந்தாத ஸ்திதியாகிறபோது, சிறைச்சாலையாகிற சரீரத்தில் நின்று துஷ்டாத்துமமானது பிறப்படுகிறதுக்கு இடைவிடாமல் ஆசைப்படவும் வேணும். இதன்றியே சிறைச்சாலையான சரீரமானது நாளுக்குநாள் இடிந்துபோனால், அது நிமித்தமாகத் துஷ்டாத்துமமானது மிகவுஞ் சந்தோஷப்படவும் வேணும்; சந்தோஷப்படுகிறதினால், தான் அப்படிப்பட்ட சரீரமாகிற

4. நிலைமை 1. குடியிருத்தல்.

சிறைச்சாலை இடிந்து போகிறதுக்குப் பிரயாசைப்பட வேணும்.

இதெல்லாம் சிறைச்சாலையிலே கட்டாயமாய் அடைக்கப் பட்ட கள்ளனுக்கு உண்டாயிருக்கிறதினாலே, அப்படிப்பட்ட கள்ளனைப்போலே சிறைச்சாலையாகிற சண்டாளனுடைய சரீரத் திலே அடைக்கப்பட்ட துராத்துமத்துக்கு இந்தக் குணங்க ளெல்லாம் உண்டாயிருக்கவேணும் என்றிருக்கையிலே, அப் படிப்பட்ட குணங்களெல்லாம் சண்டாளனுடைய துராத்து மத்திலே காணுகிறதுந் தவிர, அதுக்கு [2]விருத்த விருத்தி கள் சண்டாளனுடைய துராத்துமத்திலே காணப்படுகிற தொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால், எப்படிப்பட்ட மகாமகா கடின வியாதிகள் சண்டாளனுடைய சரீரத்திலே உண்டாயிருந்தாலும், எப்படிக்கொத்த அவமான தூஷணங் கள் நிமித்தமாகச் சண்டாளனானவன் சொல்லப்படாத துக்கத்தை அனுபவித்தாலும், சண்டாளனுடைய ஆத்தும மானது தனது சிறைச்சாலை யாகிற சரீரம் கெடவேணு மென்று தனது சிறைச்சாலையாகிற சரீரத்தைத் தான் கெடுக கவும், தனக்குச் சிறைச்சாலையாகிற சரீரத்தில் நின்று புறப் படவும் ஆசைப்படவில்லை; அப்படிப்பட்ட சரீரமாகிற சிறைச்சாலையினுடைய [3]விமோசனத்தைச் சண்டாளனுடைய ஆத்துமமானது ஆசைப்படாமல் இருக்கிறதும் தவிர, சண்டாள னுடைய ஆத்துமமானது தனது சரீரத்திலே எப்போதும் இருக்கிறதுக்கு மிகவும் சந்தோஷப்பட்டு இருக்கிறதொழியத், தனது சரீரத்தை விட்டு பிரியலாமென்கிற விசாரமாத்திரம் சொல்லப்படாத மனஸ்தாபத்தை அனுபவிக்கிறதுக்குக் காரண மாயிருக்கும். ஆனபடியினாலே, அப்படிப்பட்ட பிரிதலுக்கு மிகவும் பயப்பட்டுத், தனது சரீரங் கெட்டுப்போகாத படிக்குத் துஷ்டாத்துமமானது அறியப்பட்ட நல்ல அவுஷ தங்களுடைய [4]பிரயோகங்களைப் பண்ணித், தனது சரீரத்தைத் தான் விட்டுப் பிரியாததுக்குத் தனக்கு எட்டின உபாயங்கள் என்னப்பட்ட யாவையும் பண்ணிக்கொண்டு வருமொழிய மற்றப்படியல்ல.

2. எதிரான செயல்கள். 3. விடுதலை 4. கையாளல்.

15.6 ஆகவே உடலில் ஆன்மா இருப்பது பாவ தண்டனையன்று. இதெல்லாம் இந்தடவிலே நடந்து வருகையிலே, புத்திமானாயிருக்கிறவன் யோசிக்கத்தக்க விசேஷமானது: சண்டாளனுடைய ஆத்துமமானது எண்ணப்படாத நிர்ப்பாக்கியங்களை உடைத்தான சரீரத்தோடே கூட இருக்க மிகவும் ஆசைப்பட்டு 'இப்படிப்பட்ட சரீரத்தை விட்டுப் பிரிவேன்' என்கிற நினைவு மாத்திரம் [1]எண்ணப்படாத மனஸ்தாபத்தை அது அனுபவிக்கத்தக்கதாகக் காரணமா யிருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே துராத்துமமானது தனது சரீரம் அழியாததுக்குத் தனக்குக் கூடின மாத்திரம் பிரயாசைப்பட்டுத், தனது சரீரத்தைப் போஷித்துக்கொண்டு வருமொழிய மற்றப்படியல்ல. இதெல்லாம் இப்படியிருக்கையிலே, சண்டாளனுடைய ஆத்துமமானது தனது நிர்ப்பாக்கிய சரீரத்திலேயிருக்கிறது என்கிறது கட்டாயமாய் இராதபோதே, அது ஆக்கினையாய் இருக்கிறதென்று சொல்லவுங் கருதவுங் கூடாது. கடைசியாய், நிர்ப்பாக்கிய சரீரத்தோடே கூடஇருக்கிறதென்கிறது சண்டாளனுடைய ஆத்துமத்துக்குச் சிறைச்சாலையாகிற ஆக்கினையாய் இராதபோதே, அப்படிப்பட்ட நிர்ப்பாக்கிய சரீரத்தைச் சண்டாளனுடைய ஆத்துமங் கொண்டிருக்கிறது என்கிறது பாவநிமித்தமாக வந்ததென்று மதிகெட்டவனாலுஞ் சொல்லமாட்டான். அதேதென்றால், எப்படிப்பட்ட மதிகெட்ட கள்ளனாலும், சிறைச்சாலையிலே இருக்கச் சந்தோஷப்பட்டுச் சிறைச் சாலையில் நின்று பிறப்படமாட்டேன் என்று சொல்லவு மாட்டான், சிறைச்சாலையினுடைய விடுதலை நிமித்தமாக மிகவும் பயப்பட்டு அத்தை வெறுத்துத் தனக்கு வரவேண்டாமென்று எண்ணவு மாட்டான் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அவ்வண்ணமே நிர்ப்பாக்கியம் உடைத்தான சரீரமானது ஆத்துமத்துக்குச் சிறைச்சாலையாய் இருக்கிறதென்றும் பாவநிமித்தமாக அந்தச் சிறைச்சாலையிலே ஆத்துமமானது சர்வேஸ்பரனாலே போடப்பட்டுதென்றும் மதிகெட்டவன் ஞாயத்தைப் பாராமற் சொல்லுவானொழியப், புத்திமானாய் இருக்கிறவன் இதெல்லாத்தையும் நன்றாய் ஆராய்ந்து பத்தும்பத்தாய் விசாரித்தானானால், ஞாயத்

1. கூட.

துக்கு விருத்தமா யிருக்கிற அப்படிப்பட்ட தப்பறை வர்த்த மானத்தை அங்கீகரிக்க மாட்டான்.

**15.7 அவமானம் நோய் முதலியன எப்போதும் பாவதண்டனேயல்ல; நன்மை தரும் வழியாகலாம்.** இந்தச் சத்தியத்தை வேருரு ஞாயத்திலுலே கண்டுபிடிக் கலாம். அதேதென்ருற், சுரமானது ஆரோக்கியமா யிருக்கிற சுகம் வருகிறதுக்குக் காரணமாய் இருக்கமாட்டாதென்று சொல்லுவார்களொழியக், சுரமானது ஆரோக்கியத்தைப் பண்ணுகிறதுக்கு வல்லதா யிருக்கிறதென்று சொல்லக் கூடாது. இது இப்படியிருக்கையிலே, மனுஷனுனவன் வியாதி முதலான உபத்திரவங்களை அனுபவிக்கிரதினுலேயும், அவமான முதலான தூஷணங்களைச் சகிக்கிறதினுலேயும், சில முறை மிகுந்த பொறுமையுள்ளவனுய்ச் சர்வேஸ்வரன் பேரிலே மிகுந்த பத்தியாயிருப்பான். அப்படிப்பட்ட பத்தியினுலே பாவ மென்னப்பட்ட யாவையும் விட்டு நிர்மல புண்ணிய வழியிலே பழுதற நடப்பான். இதெல்லாத்துக்கும் வியாதி முதலான நிர்ப்பாக்கியங்கள் சிலமுறை காரணமா யிருக்கக்கொள்ளக், கர்த் தரானவர் பாவ நிமித்தமாக மாத்திரம் வியாதி முதலான நிர்ப்பாக்கியங்களை மனுஷனுக்குக் கட்டளையிட்டார் என்று அங்கீகரிக்கிறதுக்கு ஸ்திரமுள்ள ஞாயங் காணமாட்டாது. அதேதென்ருல், இந்த முகாந்தரத்தினுலே யாகுலும் அந்த முகாந்திரத்தினுலே என்கிலும் வரலான காரியமானது ஒரு முகாந்திரத்தினுலே மாத்திரம் வந்ததென்று அங்கீகரிக்கிறவன் புத்திமானுய் இருக்கிருனென்று சொல்லக்கூடாது. அம்மரு வாதியே தேவபத்தியையும், மகா பலனுக்குக் காரணமாயிருக் கிற பொறுமையையும், மற்றுண்டான தர்ம குணங்களையும் மனுஷனுனவன் வியாதி முதலான நிர்பாக்கியங்கள் நிமித்த மாக அடையலாம் என்கிறதினுலே, அப்படிப்பட்ட தர்ம குணங்களை மனுஷனுனவன் அடைய வேண்டுமென்று, வியாதி முதலான நிர்ப்பாக்கியங்களைத் தயாபரனுன கர்த்தரானவர் மனுஷனுக்குக் கட்டளையிட்டாரென்று சொல்லலாம் என்றிருக் கையிலே, பூர்வ சென்மத்திலே பண்ணப்பட்ட பாவங்கள் நிமித்தமாக மனுஷனுனவன் ஆக்கினையை அனுபவிக்கிறதுக்கு மாத்திரங் கர்த்தரானவர் வியாதி முதலான நிர்ப்பாக்கியங்களைக்

கட்டளையிட்டாரென்று அங்கீகரிக்கத் தகாது. இதன்றியே, தேவதத்தன் என்கிறவன் வியாதி முதலான உபாதைகளை அனுபவியாதிருந்தால், மகாமகாப்பட்ட பாவங்களுக்கு உடன் படுவானென்றும் அதுகள் நிமித்தமாக நரகத்திலே விழுவா னென்றும் தனது தூரதிஷ்டியினாலே பார்த்துக்கொண்டிருக்கிற கர்த்தரானவர் தேவதத்தன் என்கிறவன் பாவங்களைப்பண்ணி நரகத்திலே விழாதபடிக்கு, வியாதி முதலான நிர்ப்பாக்கியங் களைத் தேவதத்தன் என்கிறவனுக்குத் தயாபரனான கர்த்த ரானவர் கட்டளையிடலாம் என்றிருக்கையிலே, தேவதத் தனென்கிறவன் பண்ணின பாவத்துக்காக ஆக்கினையை அனுப விக்கிறதுக்கு மாத்திரம் கர்த்தரானவர் வியாதி முதலான நிர் பாக்கியங்களைக் கட்டளை யிட்டாரென்று ஸ்திரமாய்ச் செல்லு கிறதுக்கு இடங்காணாது.

**15.8.** கள்ளர் முதலிய குற்றவாளிகள் துன்பப் படுவது இவ்வுலகில் செய்த குற்றத்துக்கு. இது தவிரக், கள்ளர் முதலான பாவிகள் ஆக்கினையை அனுபவிக்கிறார் களென்று பார்த்துப், பூர்வ சென்மத்திலே இவர்கள் பண்ணின பாவங்களுக்கு இந்த ஆக்கினை அனுபவிக்கிறார்களென்று சொல்லுகிறதினால், மதிகெட்டவர்களுடைய அறிவின் குறைச்ச லானது மிகவும் காண்பிக்கிறதொழிய மற்றப்படியல்ல. அதே தென்றால், கள்ளனானவன் பலபல களவுகளை இந்தச் சென்மத் திலே பண்ணினதினால் அவனை ஆக்கினைபிடிக்கிறது ஞாயமாகும். ஆனபடியினாலே, கள்ளனானவன் தலை வெட்டுண்டு கழுவிலே போடப்பட்டதுக்குக் கள்ளனானவன் இன்று நேற்று பண்ணின களவுகள் போதாதோ? இன்று நேற்றுக் கள்ளனானவன் பண்ணின பாவங்கள் அவன் ஆக்கினை அனுபவிக்கிறதுக்குப் போதும் என்றிருக்கையிலே, கள்ளனானவன் பூர்வ சென்மத் திலே பண்ணின பாவத்துக்கு ஆக்கினைப்பட்டானென்று புத்தி யீனனாய் இருக்கிறவன் சொல்லுவானேயொழிய மற்றப்படியல்ல. இந்தடைவாகக் காமாதுரனாய் இருக்கிறவன் கெட்ட வெள்ளாட்டிகளோடே திரிந்து பாவம் பண்ணினதினால், ஒட்டிய புண் முதலான வியாதிகளை அடைந்தான் என்று சொல்ல வேணுமொழியப், பூர்வ சென்மத்திலே பாவியானவன் பண்ணின பாவத்தினாலே இப்போது பறங்கிப் புண் முதலான

அரையாப்புக்கிரந்திபாய்க் கிடக்கிறானென்று சொல்லுகிறது என்கிற அறிவின் குறைச்சலானது பத்தும் பத்தாய் விசாரிக்கப் பட்டால், அது புத்திமானாய் இருக்கிறவன் சிரிக்கத்தக்கதாகக் காரணமாய் இருந்தாப்போலே ஆகும்.

**15.9.** மேலும் பாவத்தைப் பாவத்தால் போக்கக் கடவுள் கட்டளையிட்டது போலாம். ஆனால், துர்க்கந்த வெள்ளாட்டிகளோடே திரிகிறது என்கிறது பூர்வ சென்மத்திலே பண்ணின பாவத்துக்குக் கர்த்தரானவர் இந்தச் சென்மத்திலே காமாதுரனாய் இருக்கிறவனுக்கு ஆக்கினை இடவேணுமென்று, இப்போது துர்க்கந்த வெள்ளாட்டிகளோடே சங்கம் பண்ணக் கற்பிக்காரென்று சிலர் சொல்லுகிறப்போலே அங்கீகரித்தோமானால், இந்தப் பிரத்தியுத்தாரத்திலே தானே முழுத் தப்பறையைக் கண்டுபிடிக்கலாம். அதெப்படி என்றால், சகல நன்மைச் சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர், பதினோராம் பாடத்திலே நம்மால் சொல்லப்பட்ட ஞாயங்கள் முதலான வேறே அநேக ஞாயமுள்ள நிமித்தங்களினாலே, சில பாவங்களை விலகாமல் இருக்கிறாரென்று சொல்ல வேண்டியிருந்தாலும், பாவியானவன் பண்ணின பாவத்துக்கு நீதி சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் பாவியை நரக வேதனை முதலான கஸ்திகளை அனுபவிக்கத்தக்கதாகக் கற்பிக்கிறப்போலே, பாவியானவன் பண்ணின பாவத்துக்காக அவனைப் பார்த்து, 'இன்னம் வேறே ஒரு பாவம் பண்ணு' என்று கர்த்தரானவர் கற்பிக்காரென்று சொல்லவும் கருதவும் கூடாது. அதேதென்றால், பாவத்தைக் கற்பிக்கிறது என்கிறது சகல நன்மைச் சுரூபமாயிருக்கிற கர்த்தனுக்குண்டான சுபாவத்துக்கு ஒக்கிராது என்கிறதும் தவிரப், பூர்வ சென்மத்திலே பண்ணப்பட்ட பாவமானது இந்தச் சென்மத்திலே துலைகிறதுக்கு வேறே பாவத்தைப் பண்ணுகிறது என்கிறது உபாயமாயிருக்க மாட்டாது. ஆதலாலே, நீதிசுரூபமாய் இருக்கிற கர்த்தரானவர் பண்ணப் பட்ட பாவங்களுக்குப் பாவிகளைப் பார்த்து, 'இன்னம் பாவங்களைப் பண்ணுங்கள்' என்று கற்பிக்கிறாரென்பது ஒப்புக் கொள்ள ஒண்ணாத பயித்திய விசாரமாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல.

**15.10.** செய்த பாவத்துக்கு வருத்தப்பட்டாலொழிய பாவ மன்னிப்பில்லை. மறு பிறப்பில் செய்த பாவமே தெரியாததால் வருத்தமோ மன்னிப்போ இல்லை. ஆனால், பாவியானவன் பூர்வ சென்மத்திலே பண்ணின பாவத்துக்காக இந்தச் சென்மத்திலே வியாதி முதலான நிர்ப்பாக்கியங்களை அனுபவிக்கிறதுக்கு, இவர்கள் சொன்னைப்போலே, கர்த்தன் கற்பித்தாரென்று சொல்லுகிறதென்கிறது வேறொரு கெட்டி ஞாயத்தினாலே தப்பறையாய் இருக்கிறதென்று ஒப்பச் சொல்ல லாம். அதேதென்றால், பாவியானவன் பூர்வ சென்மத்திலே பண்ணின பாவத்துக்காக இந்தச் சென்மத்திலே வியாதி முதலான நிர்ப்பாக்கியங்களை அனுபவிக்கிறதினால், பூர்வ சென்மத்திலே பாவியினாலே பண்ணப்பட்ட பாவங்கள் துலையு மென்று சொல்லுகிறார்களே, இது முழுத் தப்பறையாய் இருக் கிறதென்று இந்தடைவில் ஒப்புவிக்கலாம். அதேதென்றால், பாவநிவாரணம் உண்டாகிறதுக்குப் பாவத்தின் நிமித்தமாகப் பாவியானவன் பச்சாத்தாபமாய் இருக்கவேணுமென்கிற விசேஷமானது சர்வேஸ்வரனுடைய வேதத்தினாலே விதிக்கப் படுகிறதும் தவிரப், பாவத்தினிமித்தமாக [1]அனுதாப இல்லாமல் பாவநிவாரணம் பலிக்க மாட்டாதென்கிறது சர்வேஸ்வர னுடைய வேதத்துக்கு இதரமாயிருக்கிற அநேகம் துர்மதங் களுக்கு முதலாய்ச் சம்மதமாயிருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. இது இப்படியிருக்கையிலே, சகல வியாதி முதலான நிர்ப்பாக்கியங்களை உடைத்தான சரீரத்தைச் சண்டாளனானவன் கொண்டிருக்கிறதினால் அவன் பூர்வ சென்மத்திலே பண்ணின பாவங்கள் துலையா மாட்டாதென்று கண்டுபிடிக்கலாம். அதே தென்றால், பாவ நிமித்தமாகப் பச்சாத்தாபமில்லாமல் பாவ நிவாரணம் உண்டாகமாட்டாது என்று அங்கீகரிக்கிறபோது, பாவநிவாரணம் உண்டாகிறதுக்கு பாவ நிமித்தமாகப் பச்சாத் தாபம் வேண்டியிருக்கிறதென்று சொல்லுகிறதுக்கு ஒக்கும். பாவநிமித்தமாகப் பச்சாத்தாபம் உண்டாகிறதுக்குப் பாவி யானவன் தான் பண்ணின பாவத்தை அறிந்து அது நிமித்த மாகப் பச்சாத்தாபமாய் இருக்கலாமொழியத், தான் பண்ணின பாவத்தை அறியாமல் பண்ணின பாவ நிமித்தமாகப் பச்சாத்

1. மனஸ்தாபம்

தாபமாய் இருக்கலாமென்று சொல்லுவாரில்லை. ஆதலாலே, சண்டாளனும் இருக்கிறவன் பூர்வசென்மத்திலே தான் பண்ணின பாவத்தை அறியாதபோதே, அப்படிப்பட்ட பாவத்தின் நிமித்தமாகப் பச்சாத்தாபமாய் இருக்கமாட்டான். பாவ நிமித்தமாக அனுதாபம் இல்லாதபோது பாவம் துலையுமென்று சொல்லக்கூடாது.

**15.11. பாவம் வரும் வழியும் போம் வழியும்.** இந்தச் சத்தியமானது வெளியாகும்படிக்கு அத்தை அடைவாக வெளிப்படுத்தக்கடவோம். பாவம் துலையுமென்று சொல்லுகிறது, உண்டான பாவம் போயிற்றென்றும் அத்தை நீதிசுரூபமாய் இருக்கிற கர்த்தரானவர் பொறுத்தாரென்றும் சொல்லுகிறதுக்கு ஒக்கும். இதிப்படி இருக்கையிலே, பாவம் வரும் வழி ஏதென்றும் பண்ணின பாவம் போம் வழி ஏதென்றும் ஆராய்ந்து சொல்லக்கடவோம். அநியாய விஷயத்தின பேரிலே மனசானது [1]ஞான பூர்வமாகச் சந்தோஷப்பட்டிருக்கிறது என்கிறது, பாவத்தை மனசானது அங்கீகாரம் பண்ணினதினால், மனுஷனானவன் பாவத்திலே விழுந்தானென்றும் பாவியாய்ப் போனான் என்றும் சொல்லப்படும். ஆனபடியினாலே, பாவத்தின் நிமித்தமாகப் பட்ட சந்தோஷத்தினின்று மனசானது திரும்பாத நாள்மட்டும் பாவத்திலே மனசானது விழுந்திருக்கிறதென்றும், மனுஷனானவன் பாவியாய் இருக்கிறானென்றும், பாவமானது துலையவில்லை என்றும் சொல்லக்கடவது. பாவமானது பலிக்கிற வகை இதேயென்று சொல்ல வேண்டியிருக்கையிலே, சந்தோஷத்தினாலே பாவத்திலே விழுந்த மனசானது பண்ணின பாவத்து நிமித்தமாகத் துக்கப்பட்டால் அப்பாவத்தில் நின்று திரும்பிற்றென்று சொல்லத்தகும். அவ்வண்ணமே, அநியாய விஷயத்திலே விழுதலானது பாவமென்று சொல்லப்பட்டு, அநியாய விஷயத்தில் நின்று திரும்புதல் பாவம் துலைகிறதுக்கும் நீதியுள்ள கர்த்தரானவர் பாவத்தைப் பொறுக்கிறதுக்கும் வேண்டியிருக்கிறதென்று அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். ஆதலாலே பாவத்தில் நின்று திரும்புதல் இல்லாமல் பாவம் துலைந்து போயிற்றென்றும், பாவத்தைச் சர்வேஸ்வரன் பொறுத்தார் என்றும்

1. மனமாற

சொல்லுகிறது என்கிறது பாவம் உண்டாயிருக்கையிலே பாவ மில்லை என்கிற அபத்தத்தைச் சொல்லுகிறதுக்கு ஒக்கும். சரவேஸ்பரனுனவர் பாவத்தைப் போக்காமல் பாவத்தைப் போக்கிறுரென்றும், மனுஷனுனவன் பாவியாய் இருக்கையிலே பாவமில்லாமல் [1]தருமபாரகனுய் இருக்கிறுனென்றும் அங்கீகரித் தாப் போலே ஆச்சுது. ஆனபடியினுலே, பாவியானவன் தான் பண்ணின பாவத்தின் நிமித்தமாக ஆன பச்சாத்தாபப்பட்டுப் பாவத்தில் நின்று மனசைச் திருப்பாதிருந்தால், பாவியானவன் பண்ணின பாவம் ஒருக்காலும் துலையாது என்று ஒப்புக் கொள்ளத்தக்க சத்தியமாகும்.

**15.12. பாவ அறிவின்றிப் பாவம் வரவோ போகவோ முடியாது.** பாவம் துலேந்து போகிறதுக்குப் பாவத்தின் நிமித்தமாகப் பச்சாத்தாபம் வேண்டி இருக் கையிலே, இப்படிப்பட்ட பச்சாத்தாபமானது [2]பாவத் தினுடைய ஞானமில்லாமல் பிறக்கமாட்டாது என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அதேதெனென்றால், பாவத்தை அறிந்து பாவத்திலே சந்தோஷப்படலாமொழிய, அறியாத பாவத்திலே சந்தோஷப்படக் கூடாது. அத்தன்மை போல அறிந்த பாவத்தின் நிமித்தமாகத் துக்கப்படலாமொழிய அறியாத பாவத்தின் நிமித்தமாகத் துக்கப்படக்கூடாது. ஆனபடியினுலே பாவியானவன் தான் பண்ணின பாவத்தை அறிந்து அது நிமித்தமாக மனஸ்தாபப்பட்டு இந்தடைவாகப் பாவத்தில் நின்று மனசைத் திருப்புகிறதினுல் பாவநிவாரணம் ஆயிற்றென்று சொல்லத்தகும்மாழிய, வேறே பிரகாரமாய்ப் பாவம் துலேந்ததென்று புத்திமானுயிருக்கிறவன் ஒப்புக்கொள்ள மாட்டான். இது இப்படியிருக்கையிலே, இந்தச் சென்மத் திலே வியாதி முதலான நிர்ப்பாக்கியங்களை அனுபவிக்கிறவன் பூர்வ சென்மத்திலே பண்ணின பாவத்தை அறியான் என்று அனுபவசித்தியினுலே கண்டுகொண்டு வருகிறேமே. பாவி யானவன் பூர்வ சென்மத்திலே தான் பண்ணின பாவங்களை அறியாதபோதே, அப்படிப்பட்ட பாவங்கள் நிமித்தமாகப் பச்சாத்தாபமாய் இராதபோதே, பாவத்தில் நின்று பாவி யானவன் தனது மனசைத் திருப்பவில்லையென்று சொல்லக்

1. புண்ணியவாளனுய் 2. பவாம் செய்ததை உணர்தல்

கடவோம். ஆனபடியினாலே பாவம் துலைந்து போச்சுதென்று மதிகெட்டவன் சொல்லுவானொழிய மற்றப்படியல்ல.

**15.13 முன்பிறப்பின் பாவம் பச்சாதாபத்தாலன்றி வெறும் மறுபிறப்பால் போகாது: துரோகியின் உதாரணம்.** இதெல்லாம் ஓர் உவமையினாலே தெளியப் பண்ணலாம். அதெப்படியென்றால், தாசனாயிருக்கிறவன் தனது ராசாவுக்கு வேணுமென்று துரோகம் பண்ணி ராசாவைக் கொல்லப் பார்த்தான். ஆனபடியினாலே [1]சுவாமி துரோகியென்கிற பேரானது தாசனானவனுக்கு மெய்யாகவே உண்டாச்சுது. இதிப்படி இருக்கையிலே, தாசனைச் சிறைச்சாலையிலே போட்டு [2]வேணத்தக்க அடி முதலான ஆக்கினைகளைத் தாசனானவன் அனுபவித்துக்கொண்டு வந்தாலும் இராசாவைக் கொல்லவேணும் என்கிற மனசை தாசனானவன் விடாதவனாய்ச் 'சுவாமித் துரோகம் அறியாமற் பண்ணினேன்' என்று சொல்லி அப்படிப்பட்ட துரோகத்திலே நின்று தனது மனதைத் திருப்பாதிருக்கையிலே, வேணத்தக்க ஆக்கினையை அனுபவிக்கிறதினாலே தாசனானவன் சுவாமித் துரோகி என்கிற பேரைப் போக்கடித்து ராசாவுக்கு நல்லவனாய்ப் போனானென்று சொல்லக்கூடாது என்கிறதுக்குச் சந்தேகப்படுவார் இல்லையே. அத்தன்மைபோலப், பாவியானவன் தான் பூர்வ சென்மத்திலே பண்ணின பாவத்தை அறியாதே பாவத்தின் நிமித்தமாக ஆன அனுதாபமாயிராமல், வேணத்தக்க வியாதி முதலான ஆக்கினைகளை அனுபவிக்கிறாலும், பாவத்தில் நின்று தனது மனசைத் திருப்பாதபோதே, அவனுடைய பாவம் துலைந்து பாவியானவன் சகல நன்மை சுரூபமாயிருக்கிற கர்த்தனுக்கு நல்லவனாய்ப் போனானென்று சொல்லக் கணக்கில்லை. இதுக்கு காரணமேதெனிற், பாவத்தின்பேரிலே சந்தோசப்பட்டதினால் பாவத்திலே விழுந்த மனசானது பாவத்தின் நிமித்தமாக ஆன பச்சாதாபமாயிராமல் பாவத்திலே நின்று எத்தனை நாள் மனசானது திரும்பாதிருந்ததோ அத்தனை நாள் பாவத்திலே விழுந்திருக்கிற மனசென்று சொல்லத்தகும். அதெப்படியென்றாற், சகல பாவங்களை வெறுத்துச் சகல தருமத்திலே தாற்பாரியமுள்ள மனசானது ஒரு பாவத்துக்

1. Traitor. 2. வேண்டிய மட்டும்

காளுலும் உடன்படாமல் தருமத்தில் நின்று எத்தனைநாள் திரும்பாதிருந்ததோ, அத்தனைநாள் தருமத்திலே நிலைநிற்கிறது, தருமமுள்ள மனசுமாய் இருக்கிறதென்று சொல்லத்தகும். இந்தவிடையிலே பாவத்திலே விழுந்த மனசானது பாவத்தில் நின்று திரும்பாத நாள்மட்டும் அது பாவத்திலே நிலைநிக்கிறது மாய்ப் பாவமுள்ள மனசுமாய் இருக்கிறதென்று சொல்லத் தகுமொழிய மற்றப்படியல்ல. இந்தப் பாடத்திலே சொல்லப் பட்ட ஞாயங்களை விசாரிக்குமிடத்தில், பாவியானவன் பூர்வ சென்மத்திலே பாவம் பண்ணின நிமித்தமாக ஆன பச்சாத் தாபமாய் இராததினலே அவனுடைய பாவமானது துலையாது என்ற[3] ஒப்புவித்தாப்போலே ஆச்சுது. பாவியானவன் நாய் முதலான மிருகங்களாய் மரமாய்க் கல்லாய்ப் பிறந்தான் என்கிற தப்பறை விசேஷத்தை அங்கீகரித்தாலும், அப்படிப் பட்ட சென்மத்திலே தான் பண்ணின பாவங்களை அறியாமல் அதுகள் நிமித்தமாக ஆன பச்சாதாபமா யிராததினுல், பூர்வ சென்மத்திலே பாவியினலே பண்ணப்பட்ட பாவங்கள் நாய் மாடு மரச் சென்ம முதலான நீச சென்மங்களினலே துலைந்து போச்சுது என்று அங்கீகாரம் பண்ணுகிறவன், தான் தன்னை மதிகெட்ட மாடென்று ஒப்புவித்தானென்று சொல்லத்தகு மொழியப், பூர்வ சென்மத்திலே பண்ணப்பட்ட பாவங்கள் துலைந்துதென்று ஒப்புவிக்கவில்லை.

**15.14. செய்த பாவத்தையும் தண்டனையையும் நீதிபதி காட்டவேண்டும்.** கடைசியாய், நீதிபரனுன ராசாவானவன் குடியானவனை ஆக்கினையிட்டால், அப்படிப் பட்ட ஆக்கினை நிமித்தமாகக் குடியானவனுக்குப் பிரயோசனம் வரும்படிக்கு, 'இன்ன இன்ன பாவம் பண்ணினதினுல் இந்த ஆக்கினையிடுகிறேன்' என்று ஏறக்குறைய ராசாவானவன் அறிவிக்கிறது என்கிறது நல்ல கிரமமாகும். அத்தன்மைபோல், மனுஷனானவன் இந்தச் சென்மத்திலே பண்ணின பாவ நிமித்த மாகக் கர்த்தரானவர் ஆக்கினையிட்டால் ஆக்கினைப்படுகிற மனுஷனானவன் பூர்வ சென்மத்திலே பண்ணின பாவங்களை அறியவேணும். அப்படியே, மனுஷனானவன் பூர்வ சென்மத் திலே பண்ணின பாவங்களை அறிந்ததினுல், அறியாமல் பாவங்

3. என்றும் (பா.)

களைப் பண்ணினேனென்று சொல்லிப், பாவங்களில் நின்று பாவியானவன் தனது மனசைத் திருப்புவான். ஆதலாலே பாவி யானவன் நல்லவனாய்ப்போய், ஆக்கினையினுடைய அனுபவ மானது பாவிக்குச் [1]சபலமாச்சுதென்று சொல்லப்படும். அவ் வண்ணமே இந்தச் சென்மத்திலே வியாதி முதலான நிர்ப்பாக் கியங்களை உடைத்தான சரீரமானதைப் பூர்வசென்மத்திலே ஆத்துமமானது பண்ணின பாவத்தின் நிமித்தமாக அடைந்து தென்று ஒப்புக்கொள்ள வொண்ணாத தப்பறை என்றும், இந்தச் சென்மத்திலே வியாதி முதலான நிர்ப்பாக்கியங்களை அனுபவிக்கிறதினால் பூர்வ சென்மத்திலே பண்ணப்பட்ட பாவங்கள் துலையவில்லை என்றும் ஒப்புவித்தாப்போலே ஆச்சுது. ஆனபடியினாலே இதுக்கு எல்லாத்துக்கும் வேறே காரணத்தைச் சொல்லிக்காட்ட வேணுமொழிய மற்றப்படி அல்ல. ஆதலாலே பாவத்தின் நிமித்தமாகத் தெளிவற்ற மனுஷர்களினாலே கற்பிக்கப்படுகிற பூர்வ சென்மமானது வெறுமனே கற்பிக்கப்பட்டதாய் இருக்கிறதென்றும் ஞாயத் துக்கு ஏற்றிராத தப்பறை என்றும் சொல்லக்கடவோம்.

**15.15** மறுபிறப்பு இருக்குமாயின் மறுஉலகம் இல்லை. இதன்றியே இவர்கள் கற்பிக்கிற மறுசென்மத்தி னுடைய மேரையை அங்கீகரித்தோமாகில், பூலோகத்திலே திரிகிற பாவியும் புண்ணியவானும் பண்ணிக்கொண்டு வருகிற பாவ புண்ணியத்துக்குத் தக்க ஆக்கினையும் சம்பாவனையும் அனுபவிக்கிறதுக்கு ஆன ஸ்தலமானது பரலோகத்திலே உண்டாயிருக்கிறதென்று சொல்லுகிறதரிது. இந்த ஞாயத் தின் பெலமானது விளங்கும்படிக்கு இந்தடைவாகச் சொல்லிக் காட்டுவோம். அதெப்படியென்றால், பூர்வ சென்மத்திலே [1]வரதன் என்கிறவன் பண்ணின பாவத்தின் நிமித்தமாக நிர்ப் பாக்கியத்தை அனுபவிக்கத்தக்கதானால், பூர்வ சென்மத்திலே வரதன் பண்ணின பாவத்தின் நிமித்தமாக நரகம் உண்டென்று சொல்லக்கூடுமோ? கூடாது. இத்தன்மையாகத் தேவதத்தன் என்கிறவன் பூர்வ சென்மத்திலே பலனாக அயிசுவரிய முதலான போக பாக்கியங்களை அனுபவிக்கப் போகிறான் என்று அங்கீ

1. பயன்பட்டது.

1. வரதன் என்றும், வாதன் என்றும், ஆதன் என்றும் கொள்ளலாம்.

கரித்தோமானால், தேவதத்தன் பூர்வ சென்மத்திலே பண்ணின புண்ணியத்தின் நிமித்தமாக ஆன பலனை அனுபவிக்கிறதுக்குப் பரலோகத்திலே ஸ்தலங் கிடைக்குமென்று அங்கீகரிக்கிற தெப்படி?

**15.16** சில பாவங்களுக்கு மட்டும் இங்கு மன்னிப் படைந்தால் ஏன் பிறவற்றிற்கும் அடைய முடியாது? நம்மாற் சொல்லப்பட்ட இந்த ஞாயத்துக்குத் தெளிவற்ற பாவிகளினாலே சொல்லப்படத்தக்க மறுவுத்தரங்களெல்லாம் பத்தும் பத்தாய் விசாரிக்கப்பட்டால், அதுகளுக்குள்ளே தனித்தனியே ஒவ்வொரு பிரத்தியுத்தரமானதும் முழுதுந் தப்பறையாய் இருக்கிறதென்று தெளிவாய்க் கண்டுபிடிக்கலா யிருக்கிறது. இதெல்லாம் விளங்கும்படிக்குச் சொல்லப்படத்தக்க பிரத்தியுத்தரங்களெல்லாம் தனித்தனியே ஆராய்ந்து கொள்ளக்கடவோம். அதேதென்றால் "சில பாவங்களுக்கு மாத்திரம் நரகத்திலே பாவியானவன் வேதனையை அனுபவித்து, வேறே சில பாவங்களின் நிமித்தமாகப் பூலோகத்திலே பாவியானவன் நிர்ப்பாக்கியனாய் திரிகிறான்" என்கிற பிரதியுத்தாரமானது கற்பிக்கப்பட்டதாய் இருக்கிற முழுத் தப்பறை என்று புத்திமானாய் இருக்கிறவன் எளிதாய்க் கண்டுபிடிப்பான் என்கிறதுக்குத் தப்பாது. இந்தடைவாகப் புண்ணிய விஷயத்திலே சொல்லப்படத்தக்க சரியான பிரத்தியுத்தாரமானது தப்பறையா யிருக்கிறதென்று யோசிக்கக்கடவோம். அதேதென்றால், பூர்வ சென்மத்திலே பண்ணப்பட்ட பாவத்தினாலாவலும் புண்ணியத்தினாலென்கிலும் பாதிக்கு இந்தச் சென்மத்திலே பலனாகிற நிர்ப்பாக்கியத்தையும் பாக்கியத்தையும் அனுபவிக்கக் கூடுமானால், மற்றப் பாதிக்கு அனுபவிக்கக்கூடாது என்று ஒப்புக்கொள்ளுகிறதுக்கு இடங்காண மாட்டாது. இத்தன்மையாகச் சில பேர்கள் நரகத்திலே விழுந்து பண்ணின பாவங்களுக்காக உத்தரிக்கிறார்கள் என்றுஞ் சிலபேர்கள் வேறே சென்மத்திலே உத்தரிக்கிறார்கள் என்றுங் கற்பிக்கப்பட்ட பிரத்தியுத்தரமானது முன் சொல்லப்பட்ட ஞாயத்தினாலே தப்பறையாய் இருக்கிறதென்று கண்டுபிடிக்கலா யிருக்கிறது.

**15.17. முன் பிறப்பில் செய்த பாவத்திற்கு இம்மையில் இன்ப துன்பமடைந்தால், மறு பிறப்பில்லை.** இதன்றியே வரதனுனவன் பூர்வ சென்மத்திலே பண்ணின பாவ புண்ணியத்துக்காகப் பரலோகத்திலே ஆன ஆக்கினையும் சம்பாவனையும் அனுபவித்தான் என்று அங்கீகரித்தோமானுல், பூர்வ சென்மத்திலே அவனவன் பண்ணின பாவ புண்ணியங்களெல்லாம் துலைந்துதென்று சொல்லவேணும். ஆதலாலே இந்த லோகத்திலே சென்மத்தை எடுத்தால் அதிலே பாக்கிய நிர்ப்பாக்கியத்தையும் சுக துக்கத்தையும் அவன் அனுபவியாம இருக்கக்கடவான், அல்லது பாக்கிய நிர்பாக்கியத்தையும் சுக துக்கத்தையும் இந்த இரண்டில் ஒன்றை அவசியமாய் வரதன் அனுபவிக்கவேணும் என்று அங்கீகரித்தோமானுல், சுக துக்க அனுபவமானது பூர்வ சென்மத்திலே பண்ணப்பட்ட தருமத்தின் நிமித்தமாக வந்ததல்ல என்று அங்கீகரித்தாப்போலே ஆச்சுது. அவ்வண்ணமே, பூர்வ சென்மத்திலே பண்ணப்பட்ட தர்மங்களானதுகள் இல்லாமல் அவனவன் இந்தச் சென்மத்திலே பாக்கியத்தை யானுலும் நிர்ப்பாக்கியத்தை யென்கிலும் அனுபவிக்கலாமென்று அங்கீகரிக்கும்போது, பூர்வ சென்மமானது கற்பிக்கப்படுகிறதுக்கு வீணுகச் சொல்லப்படுகிற [1]யுத்திகள் என்னப்பட்ட யாவும், கனமான காற்றினுலே பறந்து போகிற பஞ்சுபோலே, பறந்துபோச்சுதென்று சொல்லக் கடவோம். ஆனபடியினுலே, அவனவன் இந்த லோகத்திலே பண்ணின பாவ புண்ணியத்துக்கான ஆக்கினையும் சம்பாவனையும் அனுபவிக்கிறதுக்குப் பரலோகத்திலே ஆன ஸ்தலங்கள் உண்டாய் இருக்கிறது என்கிற குன்றுத சத்தியமானது எல்லாருக்கும் சம்மதமாயிருக்கையிலே, பூர்வ சென்மத்தின் அங்கீகாரத்தினுலே அது அங்கீகரிக்கப்படாது என்கிறதுக்காகப், பூர்வ சென்மத்தின் பக்ஷமானது கற்பிக்கப்பட்ட முழுத் தப்பறையாய் இருக்கிறதென்று சந்தேகமற அங்கீகரிக்கக் கடவதாகும். இந்தப் பாடத்திலே வியாதி முதலான நிர்ப்பாக்கியங்களுடைய அனுபவத்துக்குப் பூர்வ சென்மத்திலே பண்ணப்பட்ட பாவங்கள் காரணமாயிருக்க மாட்டாதென்று ஒப்புவித்தாப்போலே, ராசாங்க முதலான பாக்கியங்களை

1. ஞாயங்கள்

அவனவன் இந்தச் சென்மத்திலே அனுபவிக்கிறதுக்குப் பூர்வ சென்மத்திலே அவனவனாலே பண்ணப்பட்ட புண்ணியங்களானதுகள் காரணமாய் இருக்கமாட்டாதென்று வருகிற பாடத்திலே சந்தேகம் [1]அற்ற ஞாயங்களைச் சொல்லிக் கர்த்தருடைய அனுக்கிரகத்தைக்கொண்டு ஒப்புவிக்கக்கடவோம்.

பதினைந்தாம் பாடம் முற்றும்.

(கிரந்தம்) நூறும் *

## பதினாறும் பாடம்

**16.1.** முன் பிறப்பில் செய்த நல்வினையால் இம்மைப் பதவி வரவில்லை. (1) **செய்த நல்வினை தலையெழுத்தால் வந்தால் அதற்குப் பதவிப் பரிசு கிடையாது.** இராசாங்க முதலான பாக்கியங்களை அவனவன் அனுபவிக்கிறதுக்குக் காரணம் ஏதென்று இருபத்திரண்டாம் பாடத்திலே சொல்லுவோமே, அவ்விடத்திலே அவனவன் பாக்கியத்தை அனுபவிக்கிறதுக்குப் பூர்வ சென்மத்திலே பண்ணப்பட்ட செப பூசை முதலான தர்மங்கள் காரணமாய் இருக்கமாட்டாதென்று ஒப்புவிக்கிறபோது, பூர்வ சென்மமானது வீணிலே கற்பிக்கப்பட்ட தப்பறையாயிருக்கிறது என்று ஒப்புவிக்கப்படும் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. இந்தப் பாடத்திலே இந்தச் சத்தியத்தைத் தானே ஒப்பச்சொல்லி, வேறே ஞாயங்களினாலே பூர்வ சென்மமானது கற்பிக்கப்பட்ட தப்பறையாய் இருக்கிறதென்று வெளிப்படுத்தக் கடவோம். அதெப்படியென்றால், இந்த சென்மத்திலே அவனவன் இராசாங்க முதலான பாக்கியங்களை அனுபவிக்கிறதுக்குப் பூர்வ சென்மத்திலே அவனவனாலே பண்ணப்பட்ட செப பூசை முதலான தர்மங்கள் காரணமாய் இருக்கிறதென்று சொன்னோமானால், இந்த விஷயத்திலே ஆராய்ந்து கொள்ளத்தக்க விசேஷமானது: பூர்வ சென்மத்திலே அவனவன் பண்ணின செப பூசை முதலான தர்மங்கள் விசாரிக்கப்பட்டால், ஒன்றிலே [1]லடாட விதியினாலே, இவர்கள் சொல்லுகிறப் போலே, அதுகள் கட்டாயமாய்ப் பண்ணப்பட்டதென்று;

1. அகலும்படியான பற்பல (பா. பே.) * 350

1. தலை எழுத்து

சொல்லவேணும். இல்லாவிட்டால் தனது சுவாதந்திரியமுள்ள மனசினாலே செப பூசை முதலான தர்மங்களைப் பண்ணினு னென்று சொல்லவேணும். அப்படிச் சொல்லும்போது, லலாட லிபியினாலே கட்டாயப்பட்டு அவனவன் பண்ணின செப பூசை முதலான தர்மங்களுக்குப் புண்ணியத்தினுடைய நாமமானது செல்லுமென்று சொல்லக்கூடாது. இந்தச் சத்தியத்தைப் போன பாடத்தில் ஒப்புவித்தாப்போல் ஆச்சுது. அது இன்னு மொரு திஷ்டாந்தரத்தினாலே மெய்யாய் இருக்கிறதென்று ஒப்பச் சொல்லிக்காட்டலாம்.

அதெப்படியென்றால், என் மனசு பொருந்தாமல் எனக்கு ராசாவானவன் கட்டாயம் பண்ணி அவனவனுக்கு என்னுடை மையை என்னைக்கொண்டு கொடுப்பித்தால், அப்படிப்பட்ட தானத்துக்குப் புண்ணியமென்கிற நாமம் செல்லமாட்டா தென்று சந்தேகப்படுவாரில்லை. பின்னையும் என்னை ராசா வானவன் பட்டினியாய் வைத்தால், அப்படிப்பட்ட உபவாச மானது நான் பண்ணின தர்மமென்று சொல்லுவாருண்டோ? இல்லையே. பின்னையும் ஒன்றுன கர்த்தனை நமஸ்கரிக்கத்தக்க தாகப் பாவியானவனுக்குச் சற்றாகிலும் மனசுண்டாயிராமல், அப்பாவியானவன் கட்டாயமாய்ச் சருவேசுரனை நமஸ்கரித்தால், அப்படிப்பட்ட நமஸ்காரமானது புண்ணியமாயிருக்கிறதென்று மதிகெட்டவனானாலும் சொல்லமாட்டான். ஆனபடியினாலே அவனவன் லலாட லிபியினாலே கட்டாயப்பட்டுச் செப பூசை முதலானதுகளைப் பண்ணினால், அப்படிப்பட்ட தர்மங்களுக்குப் புண்ணியத்தினுடைய நாமமானது செல்லமாட்டாது என்று அங்கீகரிக்கத் தக்கதாகும். அப்படிப்பட்ட கர்மங்களானதுகள் புண்ணியங்களாகாதபோது, புண்ணியத்துக்குக் கொடுக்கத் தக்க பலனானது நீதியுடைய கர்த்தனாலே அதுகளுக்குக் கொடுக்கப்பட்டுதென்று சொல்லுகிறது ஞாயமுள்ள கிரமத் துக்கு ஏற்றிராது. ஆதலாலே, ராசாங்க முதலான பாக்கிய மானது, பூர்வ சென்மத்தை அங்கீகரிக்கிற பேர்கள் சொல்லு கிறாப்போலே, பண்ணப்பட்ட தர்மங்களுக்குக் கொடுக்கத்தக்க பலனாயிருக்கையிலே, பூர்வ சென்மத்திலே அவனவனாலே கட்டாயமாய்ப் பண்ணப்பட்ட தர்மங்களுக்கு ராசாங்க முதலானதுகள் பலனாகக் கொடுக்கப்பட்டுதென்று அவர்கள்

சொல்லும்போது, தர்மமாகாத தர்மங்களுக்குப் பலனாக ராசாங்க முதலான பாக்கியங்கள் கொடுக்கப்பட்டுதென்று அவர்கள் அங்கீகரிக்க வேணுமொழிய மற்றப்படியல்ல. அப்படி அங்கீகரிக்கும்போது, தங்களுடைய பக்ஷத்துக்குத் தாங்கள் தானே விபரீதமாய்ச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள் என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால், மெய்யான புண்ணியங்களுக்குக் கொடுக்கத்தக்க பலனானது கட்டாயத்தினாலே பண்ணப்பட்ட தர்மங்களுக்குக் கொடுக்கப்பட்டபோதே, புண்ணியமாயிராத தர்மங்களுக்குப் பலனானது கொடுக்கப்பட்டுதென்று அவர்கள் சொன்னாப்போலே ஆச்சுது.

(2) **உலகத்துக்கு தேவையான உயர்வு தாழ்வுகளைத் தன் உரிமைச் செயலால் கெடுக்கலாம் என்பது தவறு.** ஆனால் இப்போது ராசாங்க முதலான பாக்கியங்களை அனுபவிக்கிற பேர்கள் பூர்வ செனமத்திலே கட்டாயமில்லாமல் தனது சுவாதந்திரியமுள்ள மனசிலே மெய்யான புண்ணிய தர்மங்களைப் பண்ணினார்கள் என்கிறதினால் அப்படிப்பட்ட மெய்யான புண்ணியங்களுக்குப் பலனாக ராசாங்க முதலான பாக்கியத்தை இந்த சென்மத்திலே சிலர் அனுபவிக்கிறார்கள் என்று சொல்லுகிற பேர்கள் அப்படியே அங்கீகரித்துத் தனது பக்ஷத்தை நிலையாக நிறுத்த வருந்தச்செய்தே, வேறே ஒரு மகா அபத்த விசேஷத்தை அவர்கள் அங்கீகரிக்கவேணும் என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால், அவனவன் பூர்வ சென்மத்திலே தனது சுவாதந்திரியத்தினாலே பண்ணின புண்ணியங்களை விசாரிக்குமிடத்தில், அப்படிப்பட்ட புண்ணிய தர்மங்களை அவனவன் பண்ணாமல் இருக்கலாம் என்று அங்கீகரிக்க வேணும். அவர்கள் இப்படிப்பட்ட தர்மங்களைப் பண்ணாமலிருக்கலாம் என்று அங்கீகரிக்கிறபோது, ராசாங்க முதலான பாக்கியங்களை அனுபவிக்கிற பேர்கள் லோகத்திலே இல்லாமலிருக்கலாம் என்று சொல்லுகிறதுக்கு ஒக்கும். அதேதென்றால், புண்ணியமாகிற காரணம் வராமல் இருக்கலாம் என்று சொல்லுகிறவன் அந்தக் காரணத்தினாலே பிறக்கத்தக்க பாக்கிய அனுபவமாகிற காரியமானது பிறவாமல் இருக்கலாமென்று அங்கீகரிக்கக் கடவான் என்கிறதுக்குத் தப்பாது. இந்தவிதமாகப் பூர்வ சென்மத்திலே பாவம்

பண்ணின பேர்கள் இந்தச் சென்மத்திலே நீசராய் இருக்கிறார்கள் என்கிறதினாலே யோசிக்கக்கடவது. அதேதென்றால் கட்டாயமாய்ப் பண்ணப்பட்ட பாவமாகாத கர்மங்களுக்கு ஆக்கினையிடப்பட்டுதென்று ஒன்றிலே சொல்லவேணும், அல்லது பூர்வ சென்மத்திலே பாவியானவன் தனது சுவாதந்திரியமுள்ள மனசு கொண்டு பாவம் பண்ணினானென்று சொன்னோமானால், பாவியானவன் அப்படிப்பட்ட பாவங்களைப் பண்ணாமலிருக்கலாம் என்று அங்கீகரிக்கக்கடவோம். பாவம் வரமலிருக்கலாமென்று அங்கீகரிக்கிறபோது ஊழியம் பண்ணுகிறவர்களும் நீசரும் லோகத்திலே இல்லாமல் இருக்கலாய் இருந்துதென்று சம்மதப்படவேணும். அனால் சரீரமானது நன்றாய் இருக்கிறதுக்குக் காலுந் தலையும் அவசியமாய் வேண்டியிருக்கிறதினால், அதில்லாமற் சரீரமானது இருக்கமாட்டாது என்றிருக்கையிலே, சரீரமானது காலுந் தலையுமில்லாமற் சரீரமானது இருக்கலாயிருந்துது என்கிற வாக்கியமானது அபத்தமாய் இருக்கிறதென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அத்தன்மைபோலச், சரீரமாகிற லோகமானது நன்றாய் நடக்கிறதுக்குக் காலுக்குந் தலைக்கும் சமானமாயிருக்கிற நீசரும் பெரியவர்களும் லோகத்திலே உண்டாயிருக்கவேணும் என்கிறதுக்குத் தப்பாது. இப்படிப்பட்ட பலபல அந்தஸ்திலே இருக்கிற பேர்கள் லோகம் நன்றாய் இருக்கிறதுக்கு வேண்டியிருக்கையிலே, அப்படிப்பட்ட அந்தஸ்திலே இருக்கிற பேர்கள் லோகத்திலே இல்லாமலிருக்க அவகாசம் உண்டாயிருந்துதென்று சொல்லுகிறது என்கிறது, சரீரமானது கால் தலையில்லாமல் இருககலாயிருந்துது என்று சொல்லிகிறதுக்கு ஒக்கும். ஆனபடியினாலே, லோகமானது நன்றாய் நடக்கிறதுக்கு அவசியமாய் வேண்டியிருக்கிற ஞாயமுள்ள கிரமமானது அவனவன் தனது சுவாதந்திரியத்தினாலே வந்துதென்றும் வராதிருக்கலாய் இருக்கிறதென்றுஞ் சொல்லுகிறதென்கிறது அபத்தத்திலே கூட்டொழிய மற்றப்படியல்ல, இப்படிப்பட்ட அபத்த விசேஷமானது பூர்வ சென்மத்தினுடைய அங்கீகாரத்தினாலே அங்கீகரிக்கத்தக்கதாக இருக்கிறதினால், பூர்வ சென்ம அங்கீகாரமானது தானே அபத்தமாய் இருக்கிறதென்று ஒப்புக்கொள்ளத் தக்கது என்று சொல்லத்தகும். அதேதென்றால், பிரகாசத்தினுடைய தெரி

சனத்து நிமித்தமாக அந்தகாரமானது தோன்றமாட்டாது என்கிறதுபோல, பிரகாசத்துக்குச் சரியாயிருக்கிற சத்திய விசேஷத்தினுடைய அங்கீகாரத்து நிமித்தமாக வேறே சத்திய விசேஷத்தினுடைய ஞானம் பிறக்குமொழியத், அபத்த விசேஷக்கினுடைய அங்கீகாரமானது சத்தியத்தின் தெரிசனத்தின் நிமித்தமாக உண்டாகமாட்டாது என்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே, நீசரும் பெரியவர்களும் லோகத்திலே இல்லாதே இருக்கலாயிருந்தது என்கிற அபத்த விசேஷத்தின் அங்கீகாரமானது பூர்வ சென்மத்தின் அங்கீகாரத்தில் நின்று செனிக்கிறது என்கிறதினுலே, பூர்வ சென்மத்தினுடைய அங்கீகாரமானது அபத்தத் தப்பறையாய் இருக்கிறதென்று சொல்லத்தகுமொழிய, அதைச் சுபத்த விசேஷம் என்றும் உண்டான விருத்தாந்தம் என்றும் சொல்லவுங் கருதவுங்கூடாது.

**16.2 மறுபிறப்பை எதிர்க்கும் சான்று 2:** இவர்களாலே அங்கீகரிக்கப்படுகிற பூர்வ சென்மத்தினுடைய பட்சமானது இன்னம் வேறேயொரு ஞாயத்திலே முழுத்தப்பறையென்று சொல்லிக்காட்டலாம். (i) **காமாதுரர் நிலை:** அதேதென்ருல், இந்தச் சென்மத்திலே சுகபோகங்களுடைய அனுபவத்துக்குப் பூர்வசென்மத்திலே பண்ணப்பட்ட புண்ணிகங்கள் காரணமாயிருக்கிறதென்று சொல்லுகிருர்கள். ஆதலாலே அனேகம் ஸ்திரிகளோடேகூடப் புருஷனுனவன் இருந்து அவர்களோடே போக முதலான சுகங்களை அனுபவிக்கிறதெல்கிறது பூர்வ சென்மத்திலே புருஷனுனவன் பண்ணின புண்ணியங்களுக்குப் பலனென்று அங்கீகரித்தாப்போலே ஆச்சுது. அப்படிச் சொன்னேமானுல் இப்போது இந்தச் சென்மத்திலே பதிவிரதையாயிருக்கிறவள் பலபல புண்ணியம் பண்ணிக்கொண்டு வந்தால், வருகிற சென்மத்திலே அவள் அநேகம் புருஷரோடே கூடியிருந்து அவர்களோடு சங்கம் பண்ணுகிற தென்கிறது இப்போது அவள் புண்ணியத்துக்குப் பலனுக வருகிற சென்மத்திலே கிடைக்குமென்று சொல்லக்கட வோம். அவ்வண்ணமே, இக்காலத்திலே கண்டபேருடனே கூடித்திரிகிற வெட்கங்கெட்ட வெள்ளாட்டிகள் பூர்வ சென்மத்திலே மகா மகாப்பட்ட புண்ணியம் பண்ணினுர்கள் என்று அங்கீகரிக்கவேணும். அதேதென்ருல்,

அநேக ஸ்திரீகள் நிமித்தமாக வருகிற போகத்தின் சுகமானது புருஷன் பண்ணின புண்ணியத்துக்குப் பலனாயிருக்கிறது என்று அங்கீகரிக்கிறபோது, அநேகம் பேர்கள் நிமித்தமாக ஸ்திரியானவளுக்கு வருகிற போகத்தின் சுகமானது பூர்வ ஜென்மத்திலே அவள் பண்ணின புண்ணியங்களுக்கு வந்த பலனென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. ஆகலாலே, அனேகம் ஸ்திரிகளோடே கூடிப் போகத்தின் சுகத்தை அனுபவிக்கிற [1]லெச்சையில்லாத காமாதுரன் பூர்வ ஜென்மத்திலே புண்ணியவாளனாய் இருந்தானென்று சொல்லு கிறப்போலே, இக்காலத்திலே அனேக புருஷரோடே திரிகிற துர்கந்த வெள்ளாட்டியானவள் பூர்வ ஜென்மத்திலே புண்ணிய வதியாய் இருந்தாளென்று சொல்லக் கடவோம். அதேதென்றால், இவ்விரண்டிடத்திலே பலனாகிற போகத்தின் சுகமானது சரியாகக் காணப்படுகிறதினால், இரண்டு இடத்திலேயும் இப்படிப்பட்ட பலனைப் பெறுகிற புண்ணியமானது சரியாக இருந்ததென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல.

(ii) விலங்குக்குரிய சிற்றின்பமா நல்வினைப் பயன்? இதிலே பூர்வ ஜென்மத்தினுடைய பக்ஷத்தை அங்கீகரிக்கிற பேர்கள் மிகவும் மதிகெட்ட பேர்களாயிருக்கிறார்களென்று காண்பித்திருக்கிறது. அதேதென்றால், இந்தச் ஜென்மத்திலே [2]தன் தார தார, பரதார புத்திரன் ஆயிருக்கிறவனும், குறை யற்ற விரத்தனாய் இருக்கிறவனும், தேவ பூசை செப முதலான தபோ தர்மத்திலே மிகவும் பிரயாசைப்படுகிற வனும், இப்படிப்பட்டவர்கள் இந்த ஜென்மத்திலே பண்ணின புண்ணியங்களுக்கு, நாய்க்கும் பன்றிக்கும் கிடைத்திருக்கிற புணர்ச்சி போகமானது இனிமேல் வருகிற ஜென்மத்திலே பலனாயிருக்குமென்று அங்கீகரிக்கவேணும். அவ்வண்ணமே, மகாமகாப்பட்ட புண்ணியங்களுக்கு இதே வரத்தக்க பல னென்று சொல்லுகிறவனை நாய் நரி பன்றி முதலான மிருகங் களைக் காட்டிலும் மதிகெட்டவனென்று சொல்ல வேணு மொழிய மற்றப்படியல்ல.

1. வெட்கம். 2. தன் மனைவிக்குக் கணவன், பிற பெண்களுக்கு மகன்.

(iii) **தீயொழுக்கமுடைய அரசர் பாக்கியவான்களா?** இது தவிர வேறொரு ஞாயத்தினால் இராசாங்க முதலான அயிசுவரியங்களும் [1]பண்ணப்பட்ட புண்ணியங்களுக்குப் பலனாக வந்ததென்று சொல்லக் கணக்கில்லை. அதேதென்றால், இவர்கள் அனுசரிக்கிற பக்ஷத்தைப் பார்க்குமிடத்தில், இராசாக்களுக்கு அவசியமாய் நரகம் கிடைக்குமென்று சொல்லுகிறார்களே, அவ்வண்ணமே இவர்கள் அனுசரிக்கிற பக்ஷத்திலே இராசாங்கமானது நரகத்துக்குப் போகிற வழி யென்று சொல்ல வேணும். இராசாங்கமானது நரகத்துக்குப் போகிற வழியாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கிறபோது, பூர்வ ஜென்மத்திலே பண்ணப்பட்ட புண்ணியங்களுக்கு இராசாங்க மானது பலனாயிருக்கிறதென்று மதிகெட்டவன் சொன்னால் சொல்லுவானொழியப், புத்திமானாய் இருக்கிறவன் சொல்ல மாட்டான். இந்தவிடத்திலே இராசாங்கமானது எண்ணப்படாத பாவங்களுக்கு ஏதுவாயிருக்கச் செய்தே, ராசாங்கத்தை அனுபவிக்கிற இராசாவானவன் அநேகம் பாவங்களைப் பண்ணு கிறதுக்கான ஸ்திதியை உடைத்தானவனாய் இருக்கக்கொள்ள, இராசாங்கமான ஸ்திதியானது பண்ணப்பட்ட புண்ணியங் களுக்குப் பலனாக வந்ததென்று சொல்லுகிறது என்கிறது, அறிவின் குறைச்சலாய் இருக்கிறவன் ஒப்புக்கொள்ளுவா னொழிய மற்றப்படியல்ல. (iv) **பெண்ணாசை யடக்கல் மதியீனமா?** இதன்றியே, புண்ணியத்தின் பலனை வேண்டா மென்கிறவன் மதிகெட்டவனாய் இருக்கிறானென்று சொல்ல வேணும். ஆதலாலே, ஸ்திரீபோக முதலான அயிசுவரியங்கள் பண்ணப்பட்ட புண்ணியங்களுக்குப் பலனாயிருக்கிறதென்று அங்கீகரித்தோமானால், புண்ணியத்தினுடைய பலனாகிற ஸ்திரீ போக முதலான அயிசுவரியங்களைச் சர்வபரித்தியாகத்தினாலே வேண்டாமென்று சொல்லியிருக்கிற [2]யதீசுரராய் இருக்கிற பேர்கள் மதிகெட்டவர்களாய் இருக்கிறார்களென்று சொல்லக் கடவோம். (v) **பொன்னாசை விட்ட முனிவன் முட்டாளா?** இது தவிர, அயிசுவரியமானது புண்ணியத்துக்குப் பலனாய் இருந்தால், இவர்கள் சொல்லுகிறாப் போலே, தரித்திரமானது பாவத்துக்கு வரத்தக்க ஆக்கினையென்று சொல்லவேணும்.

1. சிற்றின்பத்தைப் போல் பதவியும் சொத்தும் 2. பெருந்துறவிகள்.

அவ்வண்ணமே, நாம் சொன்ன ஞாயத்தைத் திருப்பி அங்கீகரிக்கத் தக்க மேரையேதென்றால், மோக்ஷத்தை அடையத்தக்கதாக ஆசையுள்ள யதீசுரனானவன் பூர்வ சென்மத்திலே தான் பண்ணின புண்ணியத்துக்குப் பலனாகிற அயிசுவரியத்தை விட்டுத், தன்னால் பண்ணப்பட்ட பாவத்துக்கு வரத்தக்க ஆக்கினையாகிற தாரித்திரத்தைத் தெரிந்துகொண்டான் என்று அங்கீகரிக்கத்தக்கதாகும். இதெல்லாம் முழு மதிகெட்டவன் அங்கீகரிப்பானொழியப், புத்திமானாய் இருக்கிறவன் ஒப்புக்கொள்ளமாட்டான்.

**16.3. மறுபிறப்பை எதிர்க்கும் சான்று 3:** (i) **ஒன்றின் மாத்திரையாகிய சீவன் மற்றொன்றின் மாத்திரையாய் இருக்கமுடியாது.** அவனுக்கு இப்போதிருக்கிற சென்மம் தவிரப் பூர்வசென்மங்கள் இருந்ததென்றும், இன்னும் வேறே சென்மங்கள் வரத்தக்கதென்றும் சொல்லுகிறது என்கிறது முழுக்தப்பறையாய் இருக்கிறதென்று ஒப்புவிக்கிறதுக்குச் சொல்லப்பட்ட ஞாயங்கள் தவிர, இன்னம் வேறே அநேக ஞாயங்களினாலே அற்ப சந்தேகத்துக்காகிலும் இடமில்லாமல் அதை ஒப்புவிக்கக்கடவோம். அதேதென்றால், ஆத்துமத்தினுடைய சுபாவத்தை விசாரிக்குமிடத்தில், 'ஆத்தும நிருணயத்தின் முதற் பாடத்திலே' சொல்லப்பட்ட ஞாயங்களினாலே சீவனானது தனது சரீரத்தை விட்டு வேறே சரீரத்திலே பூரமாட்டாதென்று கண்டுபிடிக்கலாம். அதெப்படியென்றால் சீவனானது சரீரத்தில் இருக்கும் வகையை விசாரிக்குமிடத்தில், [1]கிரகத்திலே ஆனாலும் பஞ்சரத்திலே என்கிலும் மனுஷனும் பக்ஷியும் இருக்கிறாப்போலே, சீவனானது சரீரத்திலே இராதென்று பிரத்தியக்ஷமாய் அந்தப் பாடத்திலே ஒப்புவித்தாப்போலே ஆச்சுது. அதேதென்றால், சீவனானது சரீரத்துக்கு மாத்திரையாயிருந்து, பிரதானமாகப் பொருளைப் பண்ணுகிறதொழிய மற்றப்படியல்ல. இதெல்லாம் சந்தேகத்துக்கு இடமில்லாமல் முன்சொன்ன பாடத்தில் ஒப்புவிக்கப்பட்டபோதே, சீவனானது தனது சரீரம் ஒன்றுக்கே மாத்திரையாய் இருக்கிறதினால், வேறே சரீரத்துக்குச் சுபாவமாக மாத்திரையாய் இருக்கமாட்டாதென்று அங்கீகரிக்க வேணும். அதெப்படி

1. வீடு.

என்றால், கலசத்துக்கு மாத்திரையாய் இருக்கிற ரூபமானது தோண்டிக்கு மாத்திரையாய் இருக்கக்கூடுமோ? பின்னையும், தோண்டிச்கு மாத்திரையான ரூபமானது பானைக்கு மாத்திரையாய் இருக்கிறதென்று சொல்லுவாரில்லையே! அதேதென்றால், கலசத்துக்கு மாத்திரையான ரூபமானது மண்ணோடே கூடித் தனது சுபாவத்தினாலே கலசமாகிற பதார்த்தத்தைப் பண்ணுகிறதுக்கு வல்லதாய் இருக்கிறதொழிய, வேறே பதார்த்தத்தை உண்டாக்கிறதுக்கு வல்லதாயிருக்க மாட்டாது. அதேதென்றால், பாதியாகிற மாத்திரையானது தனது சுபாவத்தை வேறொரு பாதியாகிற பதார்த்தத்துக்குக் குடுத்து அந்தப் பாதியாகிற பொருளோடேகூடி ஒரு விசேஷமான முழுப்பொருளைப் பண்ணுகிறதொழிய மற்றப்படியல்ல.

அவ்வண்ணமே, கலசத்தின் மாத்திரையான ரூபமானது மண்ணுக்குத் தன்னைக் கொடுத்தாப்போலே மண்ணோடேகூடக் கலசமென்கிற பதார்த்தத்தைச் சுபாவமாகப் பண்ணுகிறதுக்கு வல்லதாயிருக்கிறதொழிய, வேறே பொருளுண்டாக்கிறதுக்கு அது பெலமுடையதாய் இராது. ஆதலாலே கலசத்தினுடைய மாத்திரையானது தான் இருந்து தனது சுபாவத்தை விடமாட்டாது என்கிறதினாலே, தன் சுபாவத்தை மண்ணுக்குக் கொடுத்து மண்ணோடேகூடக் கலசம் என்கிற பதார்த்தத்தைப் பண்ணுகிறதுக்கு வல்லதாய் இருக்கிறதொழிய வேறே பொருளை உண்டாக்கிறதுக்கு அது பெலமுடையதாய் இராது.

(ii) நிமித்த காரணம் பல பொருளை ஆக்கலாம், மாத்திரையான காரணம் ஒரே பொருளை ஆக்கும். அவ்வண்ணமே, [1]நிமித்த காரணமானது தன்னை வேறொரு பொருளோடே கூட்டாமல், தனக்குப் [2]பின்னமாயிருக்கிற பல பல காரியங்களை உண்டாக்கிறதென்கிறது நிமித்த காரணமானது காரியங்களை உண்டாக்கிற விதமாய் இருக்கையிலே, [3]மாத்திரையான காரணம் தன்னைக் கொடுத்துப் பொருளை உண்டாக்கிறதினால், அந்தந்த மாத்திரையான காரணமானது அந்தந்த விசேஷ பொருளை மாத்திரம் பண்ணுமொழிய, வேறே பொருளைப் பண்ணமாட்டாதென்று சொல்லக்கடவது. அது

1. Efficient cause    2. Extrinsic    3. Formal cause

எப்படியென்றால், நிமித்த காரணமாகிற முத்திரை போடு கிறவன் பதினாயிர முத்திரைகளையும் வேறே அநேகம் பதார்த் தங்களையும் உண்டாக்கிறதுக்கு வல்லவனாயிருப்பான். முத்திரையினுடைய மாத்திரையான காரணமாகிற ரூபமோ வென்றால், தன்னை மெழுகுக்குக் கொடுத்துத் தான் மெழு கோடே கூடி முத்திரையாகிற விசேஷ பொருளைப் பண்ணு கிறதுக்கு வல்லதாயிருக்குமொழிய, மரங்கள் இதுமுதலான வேறே பதார்த்தங்கள் அதினாலே உண்டாக்கப்படலாமென்று சொல்லவும் எண்ணவும் கூடாது. அத்தன்மைபோலே, மனுஷ னுடைய பாதியாகிற சீவனானது மனுஷ பாதியாகிற சரீரத் துக்கு மாத்திரையாய் இருந்து, தன்னைச் சரீரத்துக்குக் கொடுத்துத் தான் சரீரத்தோடே கூடி, மனுஷனாகிய விசேஷ மான முழுப் பொருளை உண்டாக்கிறதுக்கு வல்லதாயிருக்கு மொழிய, நாய் முதலான மிருகங்களை உண்டாக்கிறதுக்கு வல்லதாயிராது. அதேதென்றால், தன்னைச் சரீரத்துக்கு கொடுத்துத், தான் சரீரத்தோடே கூடி மனுஷனாகிற பொருளை உண்டாகப் பண்ணுகிற சீவனானது, தான் தன்னை அல்லவென்று பண்ணவும் தனது சுபாவத்தைப் [4]பேதிப்பிக்கவும் மாட்டாத தினாலே, தான் சரீரத்தோடே கூடி விசேஷ பொருளாகிற மனுஷன் உண்டாகும்படிக்குப் பிலமுடையதாய் இருக்கு மொழிய, வேறே ஒன்றைத் தோற்றுவிக்க மாட்டாது.

(iii) **ஒரே மாத்திரை தம்முள் மாறுபட்ட குணத் தைத் தரவோ, அக்குணப் பொருளைப் படைக்கவோ முடியாது.** உஷ்ண முதலான குணங்கள் வேறேயொரு பதார்த்தத்தோடே கூடுகிற மேரையை விசாரித்தோமானால், இந்தச் சத்திய வர்த்தமானத்தைக் கண்டுபிடிக்கிறதுக்கு உதவும் என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால், உஷ்ண மானது தான் தன்னை வேறேயொரு பதார்த்தத்துக்குக் கொடுத் தாப்போலே, அந்தப் பதார்த்தத்தோடே கூடியிருந்தால், உஷ்ணமுள்ள பொருளைப் பண்ணுமொழியக், குளிருள்ள பொருளையானாலும் ஈரமுள்ள பதார்த்தத்தை என்கிலும் பண்ண மாட்டாது. இந்தடைவிலே, பச்சை வர்ணமானது வேறே பதார்த்தத்தோடே கூடினால் பச்சை வர்ணத்தைத் தோற்று

4. வேறுபடுத்தவும்.

விக்குமொழிய, வெள்ளை, கறுப்புள்ளதைத் தோற்றுவிக்க மாட்டாது. அம்மருவாதியே, மனுஷனுடைய சீவனனது சரீரத்துக்குத் தன்னைக் கொடுத்து, தான் சரீரத்தோடேகூடி மனுஷனென்கிற விசேஷப் பொருளைத் தோற்றுவிக்குமொழிய, நாய், நரி மிருகம்[1] இது முதலான வெவ்வேறே பொருள்களைத் தோற்றுவிக்க மாட்டாது. அவ்வண்ணமே, இந்தக் கலசத்துக்கு இந்த மாத்திரையான ரூபமானது வேறே மண்ணோடே கூடிப் பானை முதலான வேறே பாத்திரத்தைத் தோற்றுவிக்க மாட்டாததுபோலே, மனுஷனுடைய பாதியாகிற மாத்திரையான சீவனனது பூதியங்களிலே உண்டாயிருக்கிற சரீரத்தோடே கூடி, மனுஷனாகிற விசேஷப் பொருளைத் தோற்றுவிக்குமொழியச், கல்லையும் மரத்தையும் மிருகத்தையுமானாலும் வேறே பொருளையென்கிலும் தோற்றுவிக்க மாட்டாது என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. ஆதலாலே, இந்தச் சரீரத்துக்கு மாத்திரையான சீவனனது வேறே சரீரங்களோடே கூடி நாயாய் இருந்ததென்றும், பன்றியாயிருந்ததென்றும், இனிமேல் வேறே சரீரத்தோடே கூடிக் குரங்காய்ப் பிறக்குமென்றும் சொல்லுகிறது என்கிறது முழுத் தப்பறையாய் இருக்கிறதென்கிறதும் போராமல், அந்தச் சரீரத்துக்கு மாத்திரையான ஆத்துமத்தினுடைய சுபாவத்துக்கு [2]கேவலம் விரோதமானதுமாய், உண்டாகமாட்டாத விருத்தாந்தமுமாய் இருக்கிறதென்று சொல்லக்கடவோம். அதேதென்றால், நாய் நரி குரங்கு இது முதலான மிருகங்கள் என்னப்பட்ட யாவையும் பார்க்கும்போது, அந்தந்த விசேஷ மிருகமானது உண்டாகிறதுக்கு வெவ்வேறே விசேஷ மாத்திரையான சீவனனது தனக்குப் பாத்திரமாயிருக்கிற வெவ்வேறே சரீரத்தோடே கூடவேணுமொழிய மற்றப்படியல்ல.

**(iv) சீவன் பொருளின் பாதியும் பிரதான காரணமும், உடலோ சீவனுக்கேற்ற கருவிபோல.** இதன்றியே, சீவனுள்ள பொருளினிடத்திலே சீவனனது பொருளினுடைய ஒரு பாதியும், சரீரமானது வேறே பாதியுமாய் இருந்துகொண்டு இரண்டும் கூடினால் முழுப் பொருளாகும் என்று அங்கீகரித்தாலும், சீவனனது பிரதானமானதென்றும், சீவனனது தனது

1. மான் 2. முழு

சேட்டைகளைப் பண்ணுகிறதுக்குச் சரீரமானது [1]யத்தனமாய் இருந்ததென்றும் எல்லாரும் அங்கீகரிக்கத்தக்க சத்தியமாய் இருக்கிறதொழிய, மற்றப்படியல்ல. ஆகலாலே, சீவனுக்குச் சரீரமானது யத்தனமாய் இருக்கிறபோதே, சரீரமானது அந்தச் சீவனுடைய சேட்டைகளுக்கான யத்தனமாய் இருக்கவேணும் என்று ஒப்புக்கொள்ளத்தக்க விசேஷமாகும். அந்தந்தச் சீவனுடைய சேட்டைகளை விசாரிக்குமிடத்தில், அந்தந்தச் சீவன் பண்ணுகிற சேட்டைகளுக்குள்ளே பரிபூரண வேற்றுமை உண்டாயிருக்கிறதென்று பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதேதென்றால் [2]மச்சத்தினுடைய சீவனானது நீந்துகிறது இது முதலான யோக்கிய கிரியைகளுக்குக் காரணமாயிருக்கச் செய்தே, பக்ஷியினுடைய சீவனானது பறக்கிறது இது முதலான விருத்திகளைப் பண்ணிக்கொண்டு வரும். மற்ற மிருகாதிகளை எல்லாம் விசாரிக்கும்போது, அந்தந்தச் செந்துவின் சீவனுக்குத் தனித் தனியே மிகவும் வேற்றுமையான வெவ்வேறே விருத்திகள் உண்டாயிருக்கிறதென்று பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். மனுஷனுடைய சீவனோவென்றால், மிருகாதிகள் என்னப்பட்ட யாவுக்கும் இல்லாததுகளுமாய், விசேஷமானதுகளுமாயிருக்கிற அநேக விருத்திகளானதுகள மனுஷ சீவனொன்றுக்கே இருக்கிறதொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே, சீவனானது தனது சேட்டைகளைப் பண்ணுகிறதுக்குச் சரீரமானது யத்தனமாயிருக்கிறதென்று எல்லாரும் அங்கீகரித்து வருகிற சத்திய விசேஷமாய் இருக்கக்கொள்ள, அந்தச் சீவனுடைய வேற்றுமையுள்ள கிரியைகளுக்குச் சரீரமானது ஆன யத்தனமாய் இருக்கும்படிக்கு, அந்தந்தச் சீவன் பண்ணிக்கொண்டு வருகிற மிகுந்த வேற்றுமையுள்ள சேட்டைகளுக்கு ரூபத்திலேயும் உஷ்ண முதலான குணங்களுடைய பிரமாணத்திலேயும் மற்றுள்ள மேரைமரியாதிகளிலேயும் பரிபூரண வேற்றுமையுள்ள சரீரங்கள் உண்டாயிருக்க வேணுமொழிய மற்றபடியல்ல. ஆதலாலே, ஒரு சீவனுக்கான சரீரம் வேறே சீவனுக்கு ஆகாததாய் இருக்கிறதென்று சொல்லவேணும் என்கிறதினால், அந்தந்தச் சீவன் தனக்குப் பாத்திரமாயிருக்கிற

1. கருவி. 2. மச்சியம் (பா. பே.)

அந்தந்தச் சரீரத்தோடே கூடியிருந்து, அந்தந்தச் சரீரத்தைப் பிழைப்பிக்கிறதுக்கும், அந்தந்தச் சரீரத்தோடே கூடித் தனது சேட்டைகளைப் பண்ணுகிறதுக்கும் வல்லதாயிருக்கிற தொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே, எறும்பினுடைய சீவனானது யானையினுடைய சரீரத்தோடே இருந்து அப்படிப்பட்ட சரீரத்தைப் பிழைப்பிக்கவும் அப்படிப்பட்ட சரீரத்தோடே கூடித் தனது சேட்டைகளைப் பண்ணவும் மாட்டாதென்று அங்கீகரிக்கத்தக்க சத்தியமாயிருக்குமொழிய மற்றப்படியல்ல. இந்தவைவாக அந்தந்தச் சீவனுடைய வகையிலே யோசிக்கக்கடவது.

(v) மண்வெட்டி, எழுத்தாணி, தூரிகை ஆன ஆளோடு சேரும். இதெல்லாம் ஓர் உவமையினாலே தெளியப் பண்ணலாம். அதேதென்றால், தொழிலாளிகளா யிருக்கிற நாலுபேர்களைப் பார்த்தால், அவர்களுக்குள் ஒருத்தன் மண் வெட்டுகிறவன், வேறொருத்தன் ஓலையெழுத்தனாயிருக்கிறான். வேறொருத்தன் கல்லிலே விக்கிரகங்களைப் பண்ணுகிறான், நாலாமவன் படத்திலே சித்திரங்களை எழுதிக்கொண்டு வருகிறான். இந்த நாலு பேர்களும் வெவ்வேறே வேற்றுமையுள்ள [1]வியாபாரங்களைப் பண்ணிக்கொண்டு வருகிறதினால், அவனவன் வேற்றுமையுள்ள [2]எற்றினத்தைக் கொண்டிருக்க வேணுமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே, ஒருத்தனுக்கு மண்வெட்டியும், இரண்டாமவனுக்கு எழுத்தாணியும், மூன்றாமவனுக்கு உளியும், கடைசியானவனுக்குத் [3]தூரிகையும் உண்டா யிருக்கவேணும். இதிப்படியிருக்கையிலே, மண் வெட்டுகிறவனுக்குத் தூரிகையும், சித்திரக்காரனுக்கு மண்வெட்டியும், இப்படியே ஒவ்வொருத்தனுக்குத் ஆன எற்றினத்தை வேறொருத்தனுக்குக் கொடுத்தோமானால், அது [4]எக்கச்சக்கமும் அக்கிரமுமா யிருக்கிறதுந் தவிர, அவனவன் பண்ணத்தக்க தனது கிரிகைக்கான எற்றினங்களைக் கொண்டிராமல் ஆகாத எற்றினங்களைக் கொண்டிருக்கக் கொள்ள, அவனவன் தனது கிரிகைகளைப் பண்ணவுமாட்டான். ஆதலாலே, யவனவன் கையிலே யிருக்கிற யற்றினமானது [5]வியர்த்தமா யிருக்குமொழியச், [6]சபலமா இருக்கமாட்டாது.

1. தொழில்களை. 2. கருவி. 3. Brush. 4. ஒழுங்கீனம்
5. வீண். 6. பயன்படுவதாய்.

(vi) அதுபோல் ஆன்மா தக்க உடலோடுதான் சேரும். இதெல்லாம் இப்படி யிருக்கையிலே, இந்த நாலுபேர்கள் பண்ணிக்கொண்டு வருகிற வேற்றுமையுள்ள கிரியைகளைக் காட்டிலும் அந்தந்தச் சீவன்கள் அதிகமாக வேற்றுமையுள்ள விருத்திகளைப் பண்ணிக்கொண்டு வருகிறது என்கிறதுக்குத் தப்பாது. அதுகாரணமாக அந்தந்தச் சீவனுனது வேற்றுமை யாயிருக்கிற தனது விருத்திகளைப் பண்ணுகிறதுக்கு அந்தந்த வேற்றுமையுள்ள எற்றினமாகிற சரீரத்தைக் கொண்டிருக்கு மொழிய, முன்சொல்லப்பட்ட நாலு தொழிலாளிகளுக்குள் ஒருத்தனுக்கு ஆகாமல் இருக்குமாப்போலே, மிகுந்த வேற்றுமை விருத்தியுள்ள சீவனுக்குள் ஒரு சிவனுக்கான எற்றினமாகிற சரீரமானது மற்றச் சீவனுக்கு ஆகாதென்று சொல்லக்கடவோம். அப்படியே, இந்தச் சீவனுக்கு ஆகாத எற்றினமாகிற சரீரமானது இந்தச் சீவனோடே கூடியிருக்கலா மென்று [1]சலத்தினுலே யாதொருத்தன் சொன்னுல், மண் வெட்டுகிறவன் கையிலே தூரிகையுஞ் சித்திரகாரனுக்கு மண் வெட்டியுங் குடுத்தாப்போலேயாகும். அதேதென்றால், அந்தந்தச் சீவனுனது தனக்கு ஆகாத எற்றினமாகிற சரீரத்தைக்கொண்டு தனது விசேஷ விருத்திகளைப் பண்ணமாட்டாது. அப்படிப் பட்ட சரீரமானது அந்தச் சீவனோடே தனது சுபாவத்துக்கு விருத்தமாய்க் கூடியிருக்கிறதினுல், ஓலையெழுதத் தன் கையிலே மண்வெட்டி இருக்குமாப்போலே அது வீணாய் அந்தந்தச் சீவனோடே கூடியிருக்குமொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே, சீவனுடைய சுபாவத்தையும் சீவனுக்கான விருத்திகளையும் பார்க்கும்போது, அந்தந்தச் சீவன் தனது சரீரத்தோடே இருக்கக்கூடுமொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே, சீவனு டைய சுபாவத்தையும் சீவனுக்கான விருத்திகளையும் பார்க் கும்போது, அந்தந்தச் சீவன் தனது விசேஷ சரீரத்தோடே இருக்கக்கூடுமொழிய மற்றப்படியல்ல என்று ஒப்புவிக்கப் பட்டதினுல், பூர்வ செனமம் உண்டாயிருந்ததென்றும், இனிமேல் வேறே சென்மமுண்டாயிருக்கும் என்றும் சொல்லு கிறது என்கிறது முழுத் தப்பறையாய் இருக்கிறதென்று ஒப்புவித்தாப்போலே ஆச்சுது.

1. பிடிவாதம்.

இற்றைவரைக்கும் நம்மாற் சொல்லப்பட்ட ஞாயத்தைப் பத்தும் பத்தாய் விசாரித்துப் புத்திமானாய் இருக்கிறவன் அதினுடைய பெலத்தை அளவறுத்துக்கொண்டு வந்தால் அப்படிப்பட்ட ஞாயத்தினாலே நரசீவனானது புத்தியில்லாத செந்துவினுடைய சரீரத்தோடே கூடமாட்டாது என்கிற சத்திய விசேஷமானது ஒப்புவிக்கப்படுகிறதென்று அவன் நிச்சயம் பண்ணுகிறதுந்தவிர, நரசீவன்களுக்குள் ஒரு சீவனானது தனது சரீரத்தை விட்டுப் பிரிந்தால், வேறொரு நரசரீரத்தைப் பிழைப்பிக்கிறதுக்கும் அதோடேகூட வேறொரு மனுஷனாய் உற்பவிக்கிறதுக்கும் அது வல்லதாயிருக்கமாட்டாது என்கிற சத்திய விசேஷமானது முன் சொல்லப்பட்ட ஞாயத்தினாலே வெளிப்படுத்தப்படுகிறதென்று புத்திமானாயிருக்கிறவன் சந்தேகமறக் கண்டுபிடிப்பான் என்கிறதுக்குத் தப்பாது.

**16.4.** தேவதத்தனைப் பார்க்க இது எளிதாய் விளங்கும்: இந்த இரண்டு சத்தியங்களானதுகள் முன் சொல்லப்பட்ட ஞாயத்தினால் ஒப்புவிக்கப்படுகிற மேரையை எல்லாரும் அறியும்படிக்கு, அத்தினுடைய பெலம் இம்மாத்திரமென்று விளக்கப்பண்ணுகிறதுக்கு நாம், 'தேவதத்தன்' என்கிற விசேஷ [1]வியக்தியாகிற மனுஷனானவனிடத்திலே இதெல்லாம் [2]ஆரோபித்து, இந்தடைவிலே காட்டக்கடவோம். தேவதத்தன் என்கிற வியக்தியாகிற மனுஷனானவன் சகல மனுஷராயிராமல், சுபாவமாக ஒரு வியக்தியாகிற மனுஷனாய் இருக்கிறானென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. இப்படிச் சொல்லாவிட்டால், உமக்கும் நமக்கும் அற்பமாகிலும் வேற்றுமை இல்லாமல் நீ நானாயிருக்கிறாய் என்றும், நான் நீயாயிருக்கிறேன் என்றும் அங்கீகரித்துப் பயித்தியக்காரன் போலே பித்துப் பிதற்றவேண்டியிருக்கும் என்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே சிரிக்கிறதுக்கு இடமாயிருக்கிற இந்தப் பயித்தியத்தை விட்டுத், தேவதத்தன் என்கிறவன் சுபாவமாக ஒரு விசேஷ வியக்தியாகிற மனுஷனாயிருக்கிறான் என்கிற குன்றாத சத்தியத்தையும் கண்ணாலே காணப்படுகிற [3]வர்த்தமானத்தையும் அங்கீ

1. தனிப்பட்ட ஆள்  2. ஏற்றி  3. fact, நிகழ்ச்சி

கரிக்கக் கடவோம். அதேதென்றால், இப்படி அங்கீகாரம் பண்ணுத பேர்களுக்குப் பயித்தியங்கொண்ட பேர்களுடைய நாமமாருது செல்லுமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே, தேவதத்தன் என்கிறவன் சுபாவமாக ஒரு விசேஷ [1]வியக்தியாகிற மனுஷனுயிருக்கிறுன் என்கிற சத்தியத்தைச் சந்தேகமற [2]உட்பட்டுக்கொண்டு, அப்பால் நடக்கத்தக்க விசேஷங்களை நடத்தக்கடவோம்.

**(1) ஆன்மா மட்டும் தேவதத்தன் என்பது தவறு.** அதுகளில் முதலாம் விசேஷமானது: இந்த விசேஷ சீவனுனது மாத்திரம் தேவதத்தன் என்கிற விசேஷ வியக்தியாகிற [3]மனுஷன் ஆனவனுய் இருக்கிறதென்று ஒன்றில் அங்கீகரிக்க வேணும். அல்லது இந்த விசேஷ சீவனுனது மாத்திரம் தேவதத்தன் என்கிற விசேஷ வியக்தியாகிற மனுஷனுய் இருக்கவில்லை என்று சொல்லி, இந்த விசேஷ சீவனும் இந்த விசேஷ சரீரமும் என்கிற இரண்டு பாதிகள் ஒன்றுய்க் கட்டப்பட்டால் சுபாவமாகத் தேவதத்தன் என்கிற விசேஷ வியக்தியாகிற மனுஷனுனவனுய் இருக்கிறுன் என்று அங்கீகரிக்க வேண்டியிருக்கும். இப்படிப் பட்ட [4]பக்ஷங்களுக்குள் ஒவ்வொரு பக்ஷத்தை ஆராய்ந்து கொண்டு, அது நிமித்தமாகத் தெளிவற்ற மனுஷர் மறு சென்மத்தை அங்கீகரிக்கிறதினுல், நடத்தத்தக்க விசேஷங்கள் அபத்தத் தப்பறைகளாய் இருக்கிறதென்று காட்டக்கடவோம். **சான்று 1. தேவதத்தன் எல்லாப் பிறப்பிலும் வேருளா யில்லாமல் தாருக இருக்கவேண்டும்.** அதெப்படி என்றுல், இந்த விசேஷ சீவனுனது ஒன்றின் சுபாவமாக இந்த விசேஷ வியக்தியாகிற மனுஷனுன தேவதத்தனுய் இருக்கிற தென்று ஒப்புக்கொள்ள வேணும். இப்படி ஒப்புக்கொள்ளும் போது, இந்த விசேஷ வியக்தியாகிற தேவதத்தன் என்கிற சீவனுனது எந்தச் சரீரத்திலே புகுந்தாலும், அது தனது சுபாவத்தை விடுமென்று சொல்லக்கூடாது. ஆதலாலே, அந்தச் சீவனுனது தனது சுபாவத்தை விடாதபோதே, சுபாவமாய் முழுப்பொருளாய் இருக்கிற தேவதத்தனுகிற அப்படிப்பட்ட சீவனுனது எந்த நரசரீரத்திலே புகுந்தாலும், எப்போதும்

1. வியக்தி (Individual) opposed to சாதி (species)
2. உடன்பட்டு 3. தேவதத்தன் என்கிறவனுய் (பா.) 4. தரப்பு

முழுப் பொருளாகிற தேவதத்தனும் இருக்க வேணுமொழிய, வரதன், பொம்மன் முதலான வேறே மனுஷராக மாட்டாது. அதெப்படியென்றால், [1]சுகமாகிற ஒரு விசேஷ பக்ஷியானது அந்தந்தப் பஞ்சரத்திலே அடைக்கப்பட்டதினால், அது தனது சுபாவத்தை விடாதபோது எங்கெந்தப் பஞ்சரத்திலே அடைக்கப்பட்டாலும், எப்போதும் [2]சுகமாய் இருக்கிற இந்த ஒரு விசேஷ பக்ஷியானது இந்த விசேஷப் பக்ஷியாய் இருக்குமொழிய வேறொரு விசேஷப் பக்ஷியாய் இருக்கமாட்டாது. [3]இந்தடைவாக இந்த விசேஷ மனுஷ வியக்தியாகிற வரதன் அந்தந்தக் கிரகப்பிரவேச நிமித்தமாகத், தனது சுபாவத்தை விடாததினால் வரதனானவன் எங்கெந்தக் கிரகத்திலே பிரவேசித்தாலும், சுபாவமாயிருக்கிற வரதன் வரதனாகவே இருக்கிறானொழியப், பலபல கிரகப்பிரவேச நிமித்தமாக அப்படிப்பட்ட வரதனானவன் பொம்மன், திம்மன் முதலிய வேறே மனுஷர்களாய் இருக்கமாட்டான். அத்தன்மை போல், இந்த விசேஷ சீவனானது ஒன்றே மாத்திரம் சுபாவமாக இந்த விசேஷ மனுஷ வியக்தியாகிற தேவதத்தனாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கும்போது, இந்தச் சீவனானது பலபல நரசரீரங்களுடைய பிரவேசத்து நிமித்தமாக ஒன்றில் தனது சுபாவத்தை விட்டுதென்று அங்கீகரிக்க வேணும், அல்லது தனது சுபாவத்தை விடவில்லை என்று சொல்ல வேண்டியிருக்கும். தனது சுபாவத்தை விட்ட பொருள் அழிந்துபோன பொருளாயிருக்கிறது என்கிற ஞாயத்தினாலே, தேவதத்தனாகிற இந்த விசேஷ சீவனானது வேறே சரீரப் பிரவேசத்து நிமித்தமாகத் தனது சுபாவத்தை விட்டுது என்று அங்கீகரித்தோமானால், தேவதத்தனாகிற இந்த விசேஷ சீவனானது வேறே சரீரத்திலே புகும்போது சுத்தமாய் அழிந்து போச்சுதென்று அங்கீகரிக்கக்கடவோம்.

முழுதும் அழிஞ்சுபோன சீவனானது, வேறே சரீரத்தோடே வேறே மனுஷனாய்ப் பிறக்கலாம் என்று முதிர்ந்த பயித்தியங் கொண்டவன் முதலாய்ச் சொல்லமாட்டான். அல்லது, இந்த விசேஷ சீவனானது பலபல நரசரீரப் பிரவே

1. சுகம்: கிளி; சுபாவமாக (பா.) 2. சுபாவமாய் (பா.)
3. புனர்சென்ம ஆக்ஷேபம், பக். 17

சத்து நிமித்தமாகத் தனது சுபாவத்தை விடவில்லையென்று சம்மதப்படவேணும். இப்படி சம்மதிக்கும்போது, முன் சொன்னாப்போலே, பலபல பஞ்சரப் பிரவேச நிமித்தமாகத் தனது சுபாவத்தை விடாத பக்ஷியானது போலவும், [1]விவித கிரகப் பிரவேசங்களினாலே தனது சுபாவத்தை விடாத வரதனானவன் போலவும், பலபல நர சரீரப் பிரவே சத்தின் காரணமாகத் தனது சுபாவத்தை விடாத தேவதத் தனாகிற இந்தச் சீவனானது எந்த நர சரீரத்திலே புகுந்தா லும் எப்போதும் தேவதத்தன் என்கிற விசேஷ வியக்தி யாகிற மனுஷனானவனாய் இருக்கவேணுமொழிய, அது வரதன் திம்மன் முதலான வேறே மனுஷராய் இருக்கமாட்டாது. இதன்றியே, சுபாவமாய்த் தேவதத்தனாகிற இந்தச் சீவனானது. இந்தச் சென்மத்திலே ஒரு விசேஷ மனுஷனுக்குத் தகப்பனா யிருக்கிறவன், விசேஷ மனுஷனாகிற தனது மகனுக்கு அல்லது பேரனுடைய பேரனுக்கு மகனாய்ப் பிறக்கலாம் என்று அங்கீகரிக்கவேணும்.

சான்று 2. செத்த தேவதத்தனைச் செத்தான் எனல் கூடாது. இதுதவிரத், தேவதத்தனாகிற இந்தச் சீவனானது பலபல நரசரீரங்களுடைய பிரவேசத்தினாலே தனது சுபா வத்தை விடாமல் எப்போதும் போலே அழியாத பொருளா யிருக்கச் செய்தே, தேவதத்தனாகிற இந்தச் சீவனானது பலபல சரீரங்களிலே கூடுகிறதினால் 'தேவதத்தனானவன் செத்துப்போனான்' என்கிற [2]வசனமானது முழுதுந் தப்பறை யாயிருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. அதெப்படியென்றால். ஒரு விசேஷப் பக்ஷியும், வரதனாகிற விசேஷ மனுஷனானவனும் பலபல பஞ்சரக் கிரகப் பிரவேசங்களினாலே 'பக்ஷி செத்துப் போயிற்று' என்றும் 'வரதன் மரித்தான்' என்றுஞ் சொல்லப் படாது. அத்தன்மைபோல், இந்த விசேஷ சீவனாகிற தேவதத்தன் என்கிறவன் பலபல நர சரீரங்களிலே பிரவேசித் ததினால், 'தேவ தத்தன் என்கிறவன் செத்துப்போனான்' என்கிற வசனமானது முழுத் தப்பறையாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கத் தக்கதாகும். இந்தடைவிலே விசேஷ பக்ஷியும் வரதனாகிற விசேஷ மனுஷனானவனும் அற்பமாகிலும் வேற்

1. பல் வகை 2. பேச்சு

றுமையில்லாமல், அந்த விசேஷ பக்ஷியுமாய் வரதனுகிற விசேஷ மனுஷனுமாய் இருக்கிறதென்று சொல்லத்தகு மொழியப், பலபல பஞ்சரக் கிரகங்களுடைய பிரவேசங்களினுலே யந்த விசேஷ பக்ஷியானது அனேகம் வேற்றுமையுள்ள பக்ஷிகளா யிருந்துதென்றும், ஒரு விசேஷ மனுஷனுயிருக்கிற வரதனுனவன் பின்னபேதமுள்ள பலபல மனுஷனுய்ப் போனுனென்றும் சொல்லவும் எண்ணவுங் கூடாது.

அம்மருவாதியே, ஒரு விசேஷ வியக்தியாகிற மனுஷனுன தேவதத்தன் என்கிற இந்த விசேஷ சீவனுனது நர சரீரங்களிலே பிரவேசித்தாலும், எப்போதும் பின்னபேத மில்லாமல் தேவதத்தனென்கிற விசேஷ மனுஷனுனவன் தேவதத்தனுகவே இருந்தானென்று சொல்லத்தகு மொழிய, எண்ணப்படாத நர சரீரப் பிரவேசத்தின் நிமித்தமாக இந்த விசேஷ சீவனுகிற தேவதத்தன் ஒருவன் மெய்யாகவே எண்ணப்படாத மனுஷனுய்ப் போனுனென்று பயித்தியங் கொண்டவன் சொன்னுற் சொல்லுவானுழிய, புத்திமானு யிருக்கிறவன் சொல்லமாட்டான். அதெப்படியென்ருற், பிராமணனுயிருக்கிற மல்லனுனவன் கோமுட்டி, வெள்ளாளன், சண்டாளன் இவர்கள் முதலான பலபல பேர்களுடைய வேஷங்களைக் கொண்டிருந்தாலும், அப்படிப்பட்ட வேஷங்கள் நிமித்தமாகப் பலபல சாதியுள்ள பேர்களாய் மல்லன் போகாமல், மெய்யாகவே எப்போதும் விசேஷ பிராமணனுகிற மல்லனுய் இருப்பானுழிய, முன் சொல்லப்பட்ட வேஷங்களிலே விசேஷ பிராமணன் என்கிற மல்லனுனவன் கோமுட்டி, வெள்ளாளன், சண்டாளனுய்ப் போனுனென்று மதிகெட்ட மிலேச்சன் முதலாய்ச் சொல்லமாட்டான். அத்தன்மைபோலப், பலபல வேஷங்களுக்குச் சரியாயிருக்கிற வெவ்வேறே நர சரீரங்களிலே இந்த விசேஷ சீவனுகிற தேவதத்தன் என்கிறவன் பிரவேசித்தாலும், அப்படிப்பட்ட பிரவேசங்களின் நிமித்தமாக விசேஷ மனுஷனுகிற 'தேவதத்தன் ஒருவன் மெய்யாகவே எண்ணப்படாத மனுஷனுய்ப் போனுன்' என்கிற வசனமானது பரிகாசத்துக்கு இடமாயிருக்குமொழிய, அங்கீகரிக்கத்தக்க விசேஷமாயிராது. அவ்வண்ணமே, இந்தச் சீவன் ஒன்றே மாத்திரம் தேவதத்தன் என்கிற விசேஷ மனுஷனுய் இருக்கிறதென்று

சொல்லிப், பலபல நரசென்மங்களை எடுக்கலாம் என்கிற அங்கீகாரத்தினுலே இந்தத் தப்பறைகள் முதலான வேறே அனேக அபத்த விசேஷங்களை அங்கிகரிக்க வேண்டியிருக்கிறதினால், தேவதத்தனுகிற ஒரு சீவனுனது பலபல நர சரிரங்களை எடுக்கலாம் என்கிற வர்த்தமானத்தை விசாரிக்கும் போது, முழுப் பயித்தியங் கொண்டவன் சொற்பனத்திலே அதைக் கண்டானென்று சொல்லத்தகுமொழிய, விழித்திருக்கிற மனுஷனுனவன் அத்தை அங்கிகரிக்கலா மென்று சொல்லுகிறதுக்கு இடங்காணமாட்டாது.

**16.5 (2) உடலும் ஆன்மாவும் சேர்ந்து தேவதத்தனுல் மறுபிறப்பு நடக்காது.** ஆனுல் இந்த விசேஷ சீவனுனது மாத்திரம் தேவதத்தன் என்கிற வியக்தியாகிற மனுஷனுய் இருக்கிறதென்று ஒப்புக்கொள்ளாமல், இந்த விசேஷ மனுஷ வியக்தியாகிற தேவதத்தன் என்கிறவன் உண்டாமென்று சம்மதித்தோமானுல், அப்போதும் இந்த விசேஷ மனுஷனுகிற தேவதத்தனுடைய சீவனுனது தனது பாதியாகிற விசேஷ சரித்திரத்தைப் பிழைப்பித்து, அதோடே கூடக் கட்டப்பட்டதாயிருந்து, தேவதத்தன் என்கிற முழு விசேஷ மனுஷனை உண்டாகப் பண்ணுகிறதுக்கு வல்லதாய் இருக்கிறதொழிய, வேறே நர சரீரத்தைப் பிழைப்பித்து, அதோடே கூடியிருக்கலாம் என்று அங்கிகரித்தோமானுல், வேறே அநேக அபத்த விசேஷங்களை அங்கிகரிக்க வேண்டியிருக்கும்.

*சான்று* **1.** **இந்த ஆன்மா தன் பாதியாகிய இந்த உடலோடே சேரும்.** அதேதெனில், முழு மனுஷனுகிற தேவதத்தனுடைய மெய்யான பாதியாகிற இந்த விசேஷ சீவனுனது பத்தும் பத்தாய் விசாரிக்கப்பட்டால், அது தனது சுபாவத்தினுலே தேவதத்தனுடைய பாதியாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினுலே, தேவதத்தன் என்கிறவனுடைய பாதியான இந்த விசேஷ சீவனுனது வேறே சரீரத்திலே கூடுகிறதினுலே அது அழிந்து போகாமல், தனது சுபாவத்தை விடாதபோதே, எந்த நர சரீரத்திலே பிரவேசித்தாலும், எப்போதுந் தேவதத்தனுடைய பாதியாய் இருக்குமொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே, தேவதத்தனுடைய பாதி

யாகிற இந்தச் சிவனுனது தனது விசேஷ பாதியாகிற சரீரத்தோடே கூடாமல் வேறே சரீரத்தோடே கூடிற்றென்று அங்கீகரித்தோமானுல், தேவதத்தன் என்கிற முழுமனுஷனை உண்டாக்கமாட்டாமல் இருக்கவேணும். தேவதத்தன் என்கிற முழுமனுஷனை உண்டாக்கமாட்டாத போதே, வேறே சரீரத்தின் நிமித்தமாக எந்த மனுஷனை உண்டாக்கப் பண்ணிற்றென்று [1]ஸ்தாபிப்போம்? அதேதென்ருல், கேவலம் விருத்தமான பக்ஷங்களை அங்கீகரிக்க வேண்டியிருக்கும். இதெல்லாம் ஓர் உவமையிஞலே வெளியாக்கலாம்.

**சான்று 2 : தேவதத்தனது உயிர் வேருெருவன் உடலோடு சேர்வது முற்றிலும் முரணுனது.** அதேதெனில், மோதிரத்தினுடைய ரூபமானது விசேஷப் பொருளாகிற மோதிரத்தை உண்டாக்கப் பண்ணுகிறதுக்கு வல்லதாயிருக்குமொழிய, மற்ருெரு பொருளாகிற கடுக்கனை அது உண்டாக்கமாட்டாது. அத்தன்மைபோலே, இந்த விசேஷ சிவனுகிற மாத்திரையானது இந்த விசேஷப் பொருளாகிற தேவதத்தனை உண்டாக்கிறதுக்கு வல்லதாயிருக்கிற தொழிய மற்றப்படியல்ல. இப்படிச் சொல்ல வேண்டியிருக்கையிலே, தேவதத்தனுடைய பாதியாகிற இந்த விசேஷ சிவனுனது வேறே நர சரீரத்தோடே கூடிஞல், அதோடே வேறே மனுஷன் உண்டாயிருக்கிறதுக்கு அது காரணமாயிருக்கிறது என்று சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த இரண்டு வகையுள்ள வாக்கியங்களும் ஏக விஷயத்திலே [2]கேவலம் விரோதார்த்தமாய் இருக்கக்கொள்ள, இதிலே போம்வழி ஏதென்று காணுமல், எந்த வார்த்தை சொன்ஞேமாஞலும், எப்போதும் பித்து பிதற்றுகிறவன்போலே வார்த்தை சொல்ல வேண்டியிருக்குமொழிய, ஞாயத்துக்கும் புத்திக்கும் ஒத்திருக்கிற வார்த்தை சொல்லுகிறதுக்கு இடங்காண மாட்டாது.

**சான்று 3 : இதன் பாதியும் அதன் பாதியும் சேர்ந்தால் பொருளின் பெயரென்ன?** அதேதென்ருல், தேவதத்தன் என்கிற பொருளினுடைய பாதியாகிற இந்த விசேஷ சிவனுனது எப்போதும் தேவதத்தனுடைய பாதியாயிருக்கை

1, 2 contradictory

1. ஸ்தாபித்தோம் (பா.) 2. முழுதும் எதிரான பொருள்

யிலே, வேறே நர சரீரத்தோடே கூடிற்றென்று சொல்லும் போது, அப்படிப்பட்ட சரீரமானது வேறே மனுஷனுடைய பாதியாய் இருக்கிறதென்று சொல்லக்கூடுமொழிய மற்றப்படி அல்ல. அப்படியே, இரண்டு மனுஷனுடைய பாதிகள் இரண்டும் ஒன்ருய்க் கூடினுல் அப்படிப்பட்ட பொருள்களுக்கு என்ன பேரிடலாம் என்று சொல்லுகிறதென்கிறது அரிது. அதேனென்ருல், தெளிவற்ற பாவிகளுடைய கற்பனைப்படியே பெண்சாதியும் புருஷனும் என்கிற பாதிகள் இரண்டும் ஒன்ருய்க் கூடினுல், 'அர்த்தநாரி' என்கிற பேர் வழங்கிறுப் போலே, தேவதத்தன் என்கிற பாதியாகிற இந்த விசேஷ சீவனுனது வேறே மனுஷனுடைய பாதியாகிற சரீரத்தோடே கூடினுல், இப்படிப்பட்ட இரண்டு பாதிகளாகிற பொருள் களுக்கு இடத்தக்கப் பேரேதென்று, இந்தப் பயித்தியமான பக்ஷத்தை அனுசரிக்கிற பேர்கள் அபத்தத்தைச் சொல்லுகிற துக்கு இலச்சைப்படாமல் இருக்கக்கொள்ள, அவர்களே சொல்லவேணுமொழிய அபத்தத்தைச் சொல்லுகிறதுக்குச் சங்கோசப்படுகிறவன் இப்படிப்பட்ட பேர்களுக்குப் பேரிடு கிறதுக்குப் பின்வாங்குவானேழிய மற்றப்படியல்ல.

**சான்று 4 : பொருளின் பாதியுறுப்புகள் வேருெரு பொருளோடு சேராது. ஆனுல் ஒரு பொருளிடம் பல கருவிகள் இருக்கலாம்.** இதிலே மிகவும் அறியவேண்டின விசேஷமாவது: தேவதத்தனுடைய பாதியாகிற இந்த விசேஷ நர சரீரமானது தேவதத்தனுடைய மற்றொரு பாதியாகிற விசேஷாத்துமத்துக்கு எற்றினமாயிருக்கிறதும் தவிரத், தேவ தத்தனுடைய பாதியாகிற இந்த விசேஷாத்துமமானது அந்த விசேஷமான தனது சரீரத்தோடே கட்டப்பட்டு முழு மனுஷ னுகிற தேவதத்தனை உண்டாகப் பண்ணுகிறதினுல், சுபாவ மாகத் தனது விசேஷ சரீரத்தோடே கட்டப்பட்டிருந்து, தேவதத்தனென்கிற ஒரு முழுப் பொருளை உண்டாக்கிறதுக்கு வல்லதாய் இருக்கிறதென்று சொல்லக்கூடுமொழியக், கோடி நர சரீரங்களோடே அந்த விசேஷ சீவனுனது கட்டுப்பட்டுக் கோடி மனுஷராய் இருக்கலாமென்று மதிகெட்டவன் சொற்

பனத்திலே கண்டால் சொல்லுவாரெழியப், புத்திமானாய் இருக்கிறவன் இந்த அபத்தத்தைச் சொல்லவும் எண்ணவும் மாட்டான். இது காரணமாக, [1]லேகினாயிருக்கிறவன் தனது எழுத்தாணியோடே கட்டப்பட்டு அத்தோடுகூட ஒரு பொருளாய் இராததினால், ஒரு லேகினாய் இருக்கிறவன் தனது எத்தனமாகிற பல பல எழுத்தாணிகளைக் கொண்டிருக்கலாம். தேவதத்தனுடைய பாதியாகிற இந்த விசேஷ சீவனானது எத்தனமாகிற தனது விசேஷ சரீரத்தோடே கட்டப்பட்டு ஒரு முழுப் பொருளாகிற தேவதத்தனை உண்டாக்கிறதினால், தனது விசேஷ சரீரத்தோடே கட்டப்பட்டுத் தேவதத்தன் என்கிற ஒரு முழுப் பொருளை உண்டாக்கிறதுக்கு வல்லதாயிருக்கிறதென்று சொல்லவேணுமொழிய, ஒரு பொருளானது நூறாயிரம் பொருள்களாய் இருக்கமாட்டாது என்கிற ஞாயத்தினால், ஒரு பொருளாகிற தேவதத்தனுடைய பாதியான இந்த விசேஷ சீவனானது நூறாயிரம் பொருள்களுடைய பாதியாய் இருக்கலாம் என்கிற தப்பறைப் பக்ஷத்துக்குச் சம்மதப்படலாம் என்கிறதுக்கு இடங்காணமாட்டாது.

ஆதலாலே, அந்தந்த விசேஷ நரசீவனானது அந்தந்த விசேஷ நரசரீரத்தோடே கட்டப்பட்டு, அந்தந்த விசேஷ மனுஷனை உண்டாகப்பண்ணலாம் என்று சொல்லத்தகுமொழிய, ஒரு விசேஷ சீவனானது நூறாயிரம் நர சரீரத்தோடே கட்டப்பட்டு, நூறாயிரம் மனுஷரை உண்டாகப் பண்ணமாட்டாது என்று ஒப்புவிக்கப் பட்டாப்போலே ஆச்சுது. ஆனால் ஒரு சீவனானது பல பல செந்துக்களுடையவும் மனுஷனுடையவும் சரீரங்களிலே பிரவேசித்துப், பலபல சென்மங்களை எடுக்கலாம் என்கிற பக்ஷமானது முழுத்தப்பறையாய் இருக்கிறதென்று வருகிற ஆறு பாடங்களிலும் ஒப்பச் சொல்லக்கடவோம்.

பதினொரும் பாடம் முற்றும்.

(கிரந்தம் ௫௱௰ )*

1. எழுத்தாளன். * 510

## பதினேழாம் பாடம்

**17.1 மறுபிறப்பு இல்லை என்று இவ்வுலக நிலைமை எண்பிக்கிறது: இம்மை முடிவன்று, முடிவுக்கான வழி.** புனர் சென்மத்தினுடைய அங்கீகாரமானது முழுத் தப்பறையா யிருக்கிறதென்று இவ்வுலோகத்திலே மனுஷனுக்கான [1]ஸ்திதி யினுடைய சுரூபத்தினால் ஒப்பச் சொல்லலாம். அதேதென் றால், மனுஷனானவன் பூமியிலே திரிகிற நாள் மட்டும் அவதிக்குப் போகிற வழியிலே நடக்கிறானென்று சொல்லத் தகுமொழிய, அவதியை அடைந்தானென்று சொல்லத்தகாது, இதிப்படியிருக்கையிலே, பூர்வ சென்மத்தையும் இனிமேல் வரத்தக்க சென்மத்தையும் அங்கீகரித்தோமானால், இந்நாளிலே அவனுக்கு உண்டான சென்மந்தானே அவனவனுக்கு அவதியு மாய் அவதிக்குப் போகிற வழியுமாய் இருக்கிறதென்கிற அபத்தத்தைச் சொன்னாப்போலே ஆகும். அதே தென்றால், கடைசியாக ஆக்கினையும் சம்பாவனையும் அனுப விக்கிறது என்கிறது அவதிக்கும், ஆக்கினையும் சம்பாவனையும் அனுபவிக்கிறதுக்கான கர்மங்களைப் பண்ணுகிறது என்கிறது அவதிக்குப்போகிறவழிக்கும், சுபாவ சுரூபமா யிருக்கிறதென்று சொல்லப்படும். ஆதலாலே, பூர்வ சென்மத்திலே அவனவன் பண்ணின பாவ புண்ணியத்துக்கு அவனவன் ஆக்கினையும் சம்பாவனையும் இப்போது அனுபவிக்கிறான் என்று ஒப்புக் கொண்டோமானால், பூர்வ சென்மத்துக்கு இப்போதிருக்கிற சென்மமானது அவதிரூபமாய் இருக்கிறதென்று சொல்ல வேண்டியிருக்கும்.

**17.2 முடிவு, துன்ப இன்பம் கலவாதது.** பின்னையும், அவதியினுடைய [2]சுபாவ சுரூபத்தை விசாரிக்குமிடத்திலே, ஒன்றில் பாவத்தினிமித்தமாக வரத்தக்க [3]ஆக்கினை அனுபவத் தோடே மாத்திரமிருக்கவேணும், அல்லது புண்ணியத்தி னிமித்தமாக வரத்தக்க சம்பாவனையினுடைய அனுபவத் தோடே மாத்திரமிருக்கவேணும். இதுகாரணமாகப், பரலோக சம்மந்தமாயிருக்கிற நரகமும் நல்ல பதவியும் உண்டென்று சகல பேர்களுக்கும் சம்மதமாகும். இதிப்படியிருக்கையிலே,

1. நிலைமை. 2. வழியினுடைய (பா·) 3. சம்பாவனை (பா. பே)

பூர்வ சென்மத்திலே பண்ணின பாவபுண்ணியங்களுக்கு இந்தச் சென்மத்திலே நிர்ப்பாக்கியத்தையும் பாக்கியத்தையும் அவனவன் அனுபவிக்கிறானென்று சொல்லும்போது, நல்வினை தீவினை இரண்டும் கலந்திருக்கிற வேறே ஒரு அவதிபோல வெறுமனே கற்பித்தாப்போலே யாச்சுது. இப்படிப்பட்ட வியர்த்தமான கட்டுகதைகள் அவதியினுடைய சுபாவ சுரூபத்துக்கு விருத்தமாய் இருக்கிறதுந் தவிர, அப்படிப்பட்ட தப்பறையை அங்கிகாரம் பண்ணுகிறவன் ஞாயத்தைப் பார்க்குமிடத்திற், பரலோக சம்பந்தமா யிருக்கிற நரகமும் நல்ல பதவியும் இல்லையென்று அங்கிகரிக்கக்கடவான். அதேதெனன்றால், பாவ புண்ணியத்துக்கு ஒத்தவண்ணம் பலனை அவனவன் அனுபவிக்கவேணுமென்கிற காரணத்தினாலே, அப்படிப்பட்ட ஸ்தலங்கள் இரண்டும் உண்டென்று சொல்லுகிறோமொழிய மற்றப்படி படியல்ல என்றிருக்கையிலே, பாவ புண்ணியத்துக்கு ஒத்த வண்ணம் பலனுடைய அனுபவமானது இவ்வுலோகத்திலே கிடைக்குமென்று சொன்னோமானால், இதுக்காக வேறே பரலோக முண்டென்று சொல்லுகிறதுக்கு ஞாயங்காணாது. அதேதெனன்றால், மகாமகாப்பட்ட கொலைபாதக முதலான பாவங்களைத் துலைக்கிறதுக்கு இந்த லோகத்திலே ஆன நிர்ப்பாக்கியத்தினுடைய அனுபவம் வல்லதாய் இருக்கையிலே, மற்றுண்டான பாவங்களைப் போக்கடிக்கிறதுக்கு அது வல்லதாயிராதென்று வெறுமனே ஞாயமில்லாமற் சொல்லலாமொழிய, ஒருத்தன் ஞாயத்தைப்பார்த்து, ஞாயத்தினாலே அப்படிப்பட்ட தப்பறையை ஒப்பச்சொல்ல மாட்டான்.

**17.3 அவதியாகவும் வழியாகவும் ஒரே சமயத்தில் இருக்க முடியாது.** ஆனால், இந்தடைவாக இவர்கள் சொல்லுகிறதை விசாரிக்கும்போது, இந்தச் சென்மமானது பூர்வ சென்மத்துக்கு அவதியாயிருக்கிறது என்று அங்கிகரிக்க வேண்டி இருக்கிறதுந் தவிர, இந்தச் சென்மமானது தானே அவதிக்குப் போகிற வழியாயிருக்கிறதென்று சொல்லக்கடவது. அதேதெனன்றால், இந்தச் சென்மத்திலே பண்ணப்படுகிற பாவ புண்ணியத்துக்கு வருகிற சென்மத்திலே அவனவன் ஆக்கினை சம்பாவனையும் அவனவன் அனுபவிப்பானென்று சம்மதிக்கும்

போது, [1]பூர்வ சென்மத்துக்கு இந்த சென்மமானது அவதியுமாய், இந்தச் சென்மமானது அவதியாகிற வரத்தக்க சென்மத்துக்கான வழியுமாய் இருக்கிறதென்று சொல்லவேணு மொழிய மற்றப்படியல்ல. இதெல்லாம் ஞாயத்துக்கு ஒத்திரா தென்று புத்திமானா யிருக்கிறவன் கண்டுபிடிக்கக்கடவான். அதெப்படியென்றால், ஏககாலத்திலே வேலையும் கூலியும். ஏககாலத்தில் ஒன்றில் விரையும் அறுப்பும் உண்டென்கிறதும், ஒரு பொருளானது அவதியாகிற முகிவுமாய் நடுவாகிற வழியு மாய் இருக்கிறதென்கிறதும் கிரமத்துக்கு ஏற்றிருக்க மாட்டாதுபோல, இந்தச் சென்மந்தானே பயன் அனுபவிக்கிற துக்கு அவதியும் இனிமேல் அனுபவிக்கத் தக்க பலனுக்கு வழியுமாயிருக்கிறதென்று சொல்லுகிற தென்கிறது ஞாயத்துக்கு ஒவ்வாது.

**17.4. நீடுழி மோட்ச நரகமே மனிதன் முடிவு; இல்லையேல் மனிதன் பாவத்தில் எளிதாக விழுவான்.** அவ்வண்ணமே, இந்தச் சென்மமானது அவதியாகிற நரகத்துக் கானாலும், அவதியான மோக்ஷத்துக்கென்கிலும் வழியாயிருக்கிற தென்று அங்கீகரித்து, இந்தச் சென்மத்திலே பாவியானவன் தான் பண்ணின கனபாவத்தைப் போக்கடியாமல், அப்படிப் பட்ட பாவத்தோடே மரணநிமித்தமாக அவதியாகிற நரகத்தை அடைந்து, அவ்விடத்திலே பாவத்திலே நிலைகொண்ட மனசு உள்ளவனாய் என்றென்றைக்கும் நரகத்தின் ஒழியாத அக்கினிக் குள் அவியாத கட்டையாய் இருப்பானென்று சந்தேகமற ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமாகும். அல்லது [2]தேவவிஷயக விசுவாச பத்தியோடே தருமபாரகனானவன் மரணத்துக்குப் பிற்பாடு நன்மையிலே நிலைகொண்ட மனசுள்ளவனாய்ப், பராபரவஸ்து விஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலே குறை யற்ற சந்தோஷத்தையும் திரித்தியைக் கொடுக்கிற ஆனந்தத் தையும் என்றென்றைக்கும் அனுபவிப்பானென்று அங்கீகரிக் கத்தக்க சத்தியமாகும். அவ்வண்ணமே, இக்காலமானது கேவலம் விரைக்கிற காலமென்றும், பரலோக சம்மந்தமாய் இருக்கிற நரக மோக்ஷம் விரைப்புக்குத் தக்க பலனை அனுபவிக் கிற காலமென்றும் சொல்லத்தகும். இந்த ஞாயமுள்ள அடை

1. வருகிற சென்மமானது இந்த சென்மமானதுக்கு (பா.)
2. Divine

வானது சகல நன்மை சுரூபமாயிருக்கிற சர்வேஸ்வரனுக்கு மிகவும் ஒத்திருக்கிறதென்று சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல. அதெப்படியென்றால், சர்வேஸ்வரனானவர் சகல நன்மை சுரூபமாயிருக்கிறபோது, மிகவும் பாவத்தை [1]வெறுக்க வேணும். பாவம் வெறுக்கத்தக்கதாக மனுஷருக்குக் கெட்டி மனசை எந்த உபாயத்தினாலே வரப்பண்ணலாமோ, அப்படிப்பட்ட எத்தினமுள்ள கற்பினை கர்த்தனுடைய மட்டில்லாத சகல நன்மையினுடைய மேரைக்கு ஏற்றிருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. இது இப்படியிருக்கையிலே, பூலோகத்திலே திரிகிற மனுஷரான பேர்கள் பண்ணுகிற கன பாவங்களுக்குச் சிறிது காலமாத்திரம் ஆக்கினை அனுபவித்துத் திரும்பிப் பிறக்கலாம் [2]என்று, இந்தடவாக வருகிறதும் போகிறதும் ஆண்டவன் கற்பித்தால், மனுஷனானவன் சகல பாவத் துரோகத்தைப் பண்ணுகிறதுக்குப் பயப்படாமல் துணிவான். அதேதென்றால், சிறிது காலம் ஆக்கினைப் பட்டாலும் படுவானொழிய, 'இப்போதைக்கு என்னுடைய ஆசை- தீர்த்துப்போட்டு, என் கைக்கெட்டின பாவமென்னப் பட்ட யாவையும் பண்ணுவேன்' என்று துணிந்து நடப்பான். இப்படிப்பட்ட பாவத்தின் பேரிலே துணிவுள்ள மனசு வராதபடிக்குக் கர்த்தரானவர் மனுஷன் பண்ணின பாவமென்னப் பட்டதெல்லாம் மரணத்துக்கு முன்னே மனுஷனானவன் போக்கடிக்கிறதுக்குத் தயை பண்ணிக்கொண்டு வருகிறவர், இப்படிப்பட்ட தயையைச் சட்டைபண்ணாமல், தனது கன பாவங்களைப் போக்கடியாத பாவிகளுக்கு என்றென்றைக்கும் அவதியாகிற நரகத்தில் ஒழியாத அக்கினி வேதனையினுடைய அனுபவத்தைக் கற்பித்தது என்கிறது குறையற்ற ஞாயத்துக்கு ஒத்திருக்கிறதும் தவிரப், பாவத்திலே மனுஷனானவன் துணியாததுக்கு மேலான உத்தம உபாயத்தினாலே கர்த்தன் விலக்கினாரென்று சொல்லத்தகும். மீளவும் ஒருக்காலும் ஒழியாத ஆனந்தமுமாய்த் திரித்தி கொடுக்கிற சந்தோஷமுமாய் இருக்கிற குறையற்ற பாக்கியமென்கிற மோக்ஷத்தைத் தருமபாரகருக்குக் கொடுப்பேனென்று கர்த்தரானவர் திருவுளம் பற்றினபோதே, மனுஷனானவன் பிரயாசம் என்னப்பட்ட

1. வெறுக்கவும் (பா.) 2. என்றும் (பா.)

யாவையும் சட்டைபண்ணுமல், சகல நிர்மல புண்ணிய வழியிலே இடைவிடாமல் மரணபரியந்தம் நடக்கிறதுக்குச் [1]சஞ்சலமில்லாமல் கெட்டியுள்ள மனசை மனுஷனுனவன் அடைகிறதுக்கு மேலான உத்தம உபாயத்தைக் கர்த்தன் பண்ணினுரென்று சொல்லப்படும்.

**17.5. இதற்கு அரசன் குடிமக்களுக்கு வழங்கும் நீதி நல்ல உவமை.** இப்படிப்பட்ட ஞாயமுள்ள அடைவானது ஒன்றுன சர்வேஸ்வரனுக்கு உண்டாயிருக்கிற சகல நன்மையான சுபாவத்தினுடைய மேரைக்கு ஏற்றிருக்கிறது என்று ஓர் உவமையினுலே ஒப்பச்சொல்லலாம். அதேதென்றுல், நீதிபரனுன ராசாவானவன் நன்றுய் இராச்சியம் பண்ணவேணுமாலுல், பாவம் பண்ணின பேர்களுக்கு ஆக்கினையிடவும், நன்றுய் நடக்கிற புண்ணியபாரகருக்குச் சம்பாவனை குடுக்கவும் வேணும். இது ராச்சியம் பண்ணுகிறதுக்குக் கிரமமாய் இருக்கையிலே, கொலை பாதக முதலான மகாமகாப்பட்ட பாவங்களைப் பண்ணுகிற பேர்களுக்குச் சிறிது நாள் மாத்திரம் சிறைச்சாலையிலே போடுவித்துக் கொஞ்சத்துக்குள்ளே அடிப்பித்து ராச்சியத்திலே திரியச் சொல்லிவிட்டால், இப்படிப்பட்ட அற்ப ஆக்கினைக்குப் பாவியானவன் பயப்படாமல் இருக்கிறதினுல், கொலை பாதக முதலான மகாமகாப்பட்ட பாவங்களைப் பண்ணுகிறதுக்குத் துணியாதவனுர்? மீளவும் இராசாவின் சித்தத்துக்குச் சரியாக நடக்க வேணுமென்று மிகவும் பிரயாசைப்பட்டு அவனுக்காகத் தன் பிராணனைக் கொடுக்கிற புண்ணியவான்களான பேர்களுக்குப் பத்தஞ்சு காசு மாத்திரம் சம்பாவனை கொடுத்துச், சிறிதுநாள் மாத்திரம் பல்லக்கேறவும் துரைத்தனத்தை ஆளவும் கட்டளையிட்டால், ராசாவின் காரியத்துக்கு மிகவும் பிரயாசைப்படுகிறதுக்கும், இராசாவுக்காகத் தனது பிராணனைச் செலவழிக்கிறதுக்கும் ஒருமிக்கிறவனுர்? ஆனபடியினுலே, இராச்சியம் பண்ணுகிறதிலே இப்படிப்பட்ட [2]நீதியானது ஆன பிரகாரமாய்ப் பாவங்களை விலகி அவனவனுக்குப் பாவத்தின் பேரிலே மனசு வராதபடிக்குப் பழுதற உபாயத்தைப் பண்ணுதிருக்கிறதினுலேயும், அவனவன் பிரயாசமென்னப்பட்ட யாவையும் தனது பிராண

1. inconstancy 2. ரீதி (பா. பே.)

யையும் சட்டைபண்ணாமல், புண்ணியமாகிற நல்ல ராசாவின் சித்தத்துக்குச் சரியாய் நடக்கிறதுக்குக் கெட்டி மனசு அவனவனுக்கு வரப்பண்ணுகிறதிலேயும், இராச்சியம் பண்ணுகிறதிலே இப்படிப்பட்ட நீதியானது நல்லதாய் இருக்கிறதென்று சொல்லத்தகாது.

அத்தன்மைபோல, மகாராசாதி ராசனாயிருக்கிற சர்வேஸ்வரனானவர் கொலை பாதக முதலான மகாமகாப்பட்ட பாவங்களை மனுஷனானவன் பண்ணித், தயை பண்ணத்தக்க ஸ்தலமாகிற இந்தப் பூமியிலே பாவங்களைத் துலையப் பண்ணாமல், அனுபவத்துக்கான ஸ்தலமாகிற பரலோகத்தைப் பாவியானவன் அடைந்து, சிறைச்சாலையாகிற நரகத்திலே பாவியானவனைக் கர்த்தரானவர் சிறிது நாள் மாத்திரம் இருக்கக் கட்டளையிட்டுப், பாவங்களுக்காக நாய் கழுதை முதலான பல பல சென்மங்களை எடுக்கப்பண்ணினால், லௌகீக ராசாவானவன் மகாமகாப்பட்ட பாவங்கள் நிமித்தமாகக் கள்ளனைச் சிறைச்சாலையிலே சிறிது நாள் போடுவித்தும், கொஞ்சத்துக்குள்ளே அடிப்பித்தும், திரும்பக் கள்ளன் பாவங்களைப் பண்ணுகிறதுக்கு ராச்சியத்திலே அவனைத் திரியச்சொல்லி விட்டதுக்குச் சமானமாகும். இது தவிர, மனுஷனானவன் பயப்படாமல் எந்தெந்தப் பாவத்தைப்[1] பண்ணத்தக்கதாகத் துணிகிறதுக்கு அது உதவி செய்கிற நீதியென்று சொல்லத் தகும். ஆனால், ராசாவானவன் கன பாவங்களைப் பண்ணுகிற பேர்களை ஆன காலத்திலே தலை வெட்டுவித்தால், தனது ராச்சியத்திலே அப்படிப்பட்ட பாவி ஒருக்காலும் வராதபடிக்குக் கட்டளையிட்டதுக்குச் சமானமாம். ராச்சியம் நடக்கிறதிலே இப்படிப்பட்ட கிரமமானது மிகவும் நல்லதாய் இருக்கிறதென்று சொல்லக்கடவோம். அதேதெனென்றால், இராச்சியத்திலுள்ள சனங்களுக்குள்ளே சிலர் பாவிகளாய்ப் போனார்களானால், அவர்களை ராச்சியத்திலே இராதபடிக்குப் பண்ணினதென்கிறது தப்பில்லாக் கிரமமுள்ள தருமமென்று சொல்லப்படும். இதன்றியே, இருக்கிற பேர்கள் பயப்பட்டுப் பாவத்தைப் பண்ணத் துணியாததுக்கு இது பண்ணப்படத்தக்க உத்தம உபாயமாகும். அப்படிப்பட்ட உபாயமானது குறை

1. பாவத்தையும்

யற்ற ஞாயத்துக்கு ஏற்றிருக்கிற புண்ணியமென்று சொல்லத் தகும்.

**17.6. அதுபோல, கடவுள் நீடுழி மோட்சமும் நரகமும் வழங்குவது நீதியாகும்.** இது இப்படியிருக்கையிலே, தயாபரனுன கர்த்தரானவர் மோக்ஷக்கரை ஏற வேணுமென்று மனுஷரை உண்டாக்கினபோதே, மோக்ஷராச்சியமானது மனுஷனுனவன் குறையற்ற பாக்கியத்தை என்றென்றைக்கும் அனுபவிக்கிறதுக்கான ராச்சியமென்று சொல்லத்தகும். ஆதலாலே, அத்தை மனுஷன் எப்போதும் சுகத்திலே இருக்கிறதுக்கான ராச்சியமென்று சொல்லவேணும். கன பாவங்கள் நிமித்தமாக அப்படிப்பட்ட மோக்ஷ ராச்சியத்திலே பாவியானவன் ஒருக்காலும் வரவேண்டாமென்று சொல்லி, அவனைக் கர்த்தரானவர் நரகத்திலே எப்போதும் இருக்கத் தள்ளுகிறதென்கிறது லௌகீக ராசாவானவன் கள்ளனைத் தலைவெட்டித் தனது ராச்சியத்தில் ஒருக்காலும் அவன் வரவேண்டாமென்று கட்டளையிட்டதுக்கு ஒக்கும். இப்படிப்பட்ட கிரமமானது குறையற்ற நீதியென்று சொல்லப்படுமாப்போலே, கர்த்தரானவர் பாவியானவனை என்றென்றைக்கும் நரகத்திலே இருக்கப் பண்ணுகிறது என்கிறது, பழுதற்ற நீதியென்றும் தப்பில்லாக் கிரமமென்றும் சொல்லக்கடவோமொழிய மற்றப்படியல்ல. அதேதெனென்றால், தர்மம் என்னப்பட்ட யாவிலேயும் ஸ்திரமான நிலைகொண்ட மனசுள்ள பேர்களுடைய ராச்சியமாகிற மோக்ஷத்தில் நின்று அருவருப்புள்ள பாவத்திலே நிலைகொண்ட மனசுள்ள பாவிகளைத் தள்ளினது என்கிறது, குறையற்ற ஞாயத்துக்கு ஏற்றிருக்கிற கிரமமாகுமென்று சொல்லத் தகும் என்கிறதுக்குத் தப்பாது.

இதன்றியே, பூமியிலே யிருக்கிற மனுஷரானவர்கள் பயப்பட்டு, இப்படிப்பட்ட கிரமத்தினுலே பாவமென்னப்பட்டது எல்லாத்தையும் வெறுக்கிறதுக்கு நல்ல மனசை அடைவாகளொழிய, மற்றப்படியல்ல. பாவத்தைப் பண்ண அவனவன் துணிகிறதை இந்த அபாயமானது வில(க்)குமொழிய, அதுக்கு உதவி செய்ய மாட்டாது. ஆனபடியினுலே, கன பாவத்தோடே மரணத்தை அடைந்த பாவியானவனைக் கர்த்தரானவர் என்றென்றைக்கும் நரகத்தின் ஒழியாத அக்கினிக்குள் அசையாமல் முழுகி

யிருக்கப் பண்ணுகிறதென்கிறது குறையற்ற நீதியாய் இருக்கிறதென்று சொல்லவேணுமொழிய, இது கர்த்தனுடைய தயைக்கு ஏற்றிராத மேரையாய் இருக்கிறதென்று சொல்லக்கூடாது. ஆனபடியினாலே, பலன் பெறத்தக்க ஸ்தலமாகிற பூமியானது தயைக்கான ஸ்தலமென்று சொல்லப்படும் என்றிருக்கையிலே, கர்த்தரானவர் பூமியிலே திரிகிற மனுஷனானவன் பாவம் பண்ணுதபடிக்கான திவ்விய சகாயங்களை மனுஷனுக்குப் பண்ணிக்கொண்டு வருகிறதென்கிறதும், மனுஷன் பண்ணின பாவங்களைப் பொறுக்கிறது என்கிறதுந் தயை பண்ணத்தக்க ஸ்தலமாகிற பூமிக்கு ஒத்திருக்கும் என்கிறதினால், அப்படிப்பட்ட நீதியானது குறையற்ற நீதியென்று சொல்லப்படும். அதேனென்றால், தயையானது காட்டப்படத்தக்க ஸ்தலத்திலே காட்டப்பட்டுதொழிய மற்றப்படியல்ல. ஆனால் பரலோகமானது பேறுபெற்றதுக்கான பலனை அனுபவிக்கத்தக்க ஸ்தலமாயிருக்கக்கொள்ள, பாவத்தோடே கூடப் பரலோகத்தை அடைந்த பாவியானவன் தான் பண்ணின பாவங்களினாலே நிலைகொண்ட மனசுள்ளவனாய், அப்படிப்பட்ட பாவங்களுக்குத் தக்க பலனை அனுபவிக்கிற ஸ்தலத்திலே இருக்கிறபோது என்றென்றைக்கும் பாவியானவன் ஆக்கினையை அனுபவிக்கிறது குறையற்ற ஞாயமென்று சொல்ல வேணுமொழியத், தயைக்கேற்றிராத மேரையாய் இருக்கிறதென்று சொல்லக்கடவதல்ல. இந்தவிதமாய்க் தேவவிஷயக பத்தி முதலான தருமங்களோடேகூட மரணத்து நிமித்தமாகப் பரலோகத்தை அடைந்த புண்ணியாத்துமாக்களாயிருக்கிற பேர்கள் அவரவர்கள் பேறு பெற்றதுக்கான பலனை அனுபவிக்கிற ஸ்தலத்தை அடைந்தார்களென்கிறதினால், அவர்கள் பண்ணின புண்ணியத்துக்கு ஒத்தவண்ணங் குறையற்ற பாக்கியமுந் திருத்தியைக் கொடுக்கிற ஆனந்தமுமென்கிற மோக்ஷத்தை என்றென்றைக்கும் அனுபவிக்கிறதென்கிறது பழுதற்ற ஞாயமென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல.

1. Merit.

**17.9 பாவ முள்ளையும் கோதும்பை நல்வினையும் விதைத்தவர்கள் அடையும் பேறு.** அதெதப்படியென்றால், விரைக்கிற குடியானவனுக்குப் பயிராகத்தக்கதாகச் சர்வேஸ்வரனானவர் தண்ணீர் வெய்யில் இது முதலான சகாயங்களைப் பண்ணுகிறதென்கிறது கிரமமாகும். அறுப்புக்காலமுண்டாய், அவனவன் விரைத்ததுக்குத் தக்கதாகக் கோதும்பையாலும், விஷமாகிற எட்டிப் பழமாலும் முள்ளாகிலும் அவனவன் விரைத்ததுக்குத் தக்க பலனை அவனவன் [1]பக்ஷிக்கிறதுக்கு கர்த்தரானவர் திருவுளமாக மேனுமொழியக், கோதும்பை விரைத்தவனை முள்ளும் எட்டிப்பழமும் அவர் பக்ஷிக்கப் பண்ணத் தக்கதுமில்லை, முள்ளும் எட்டியும் விரைச்சவனைக் கோதும்பை பக்ஷிக்கப் பண்ணத்தக்கதுமில்லை. இது இப்படியிருக்கை யிலே, பூலோகத்திலே மனுஷனானவன் வாசமாயிருக்கையிலே, பூலோகத்திலே மனுஷனானவன் வாசமாயிருந்து பாவ புண்ணியத்தைப் பண்ணிக்கொண்டு வருகிறதென்கிறது விரைத்துப் பயிரேற்றுகிறதுக்குச் சமானமும், மரணகாலமோ என்றால் அறுப்புக்காலம் என்றும் சொல்லப்படும். இப்படிப்பட்ட மரணமானது மனுஷனுக்கு முடிவாகியிருக்கக் கொள்ள, முன சொல்லப்பட்ட விரைப்பும் பயிரேற்றமும் அறுப்புந் திரும்ப வரக்கூடாதென்று சொல்லக்கடவது. பரலோகமோவென்றால், விரைத்ததுக்குத் தக்க பலனுடைய அனுபவமாகும். அது அவதியாயிருக்கக்கொள்ள, அது முடியத் தக்கதுமில்லை, அதையடைந்த மனுஷனை விட்டுப்பிரியத் தக்கதுமில்லை. அதேனென்றால், அவதிக்கும் அதுக்குப் போகிற வழிக்குங் காணப்பட்ட வேற்றுமையானது: துலைகிறது[2] என்கிறது வழிக்கான மேரையாகும். என்றென்றைக்கும் சஞ்சலமில்லாமல் நிலையாக நிற்கிறது என்கிறது அவதிக்கான சுபாவமென்று சொல்லத்தகு மொழிய மற்றப்படியல்ல. இதெல்லாம் இப்படியிருக்கையிலே, பாவத்தைப் பண்ணின மனுஷனானவன் முள்ளையும் எட்டியையும் விரைச்சானென்றும், புண்ணியத்தைப் பண்ணினவன் கோதும்பையை விரைச்சானென்றும் சொல்லக்கடவோம். முள்ளை விரைத்த பாவிக்கும் கோதுமபை விரைத்த புண்ணியவானுக்கும் அறுப்புக் காலமாகிற மரண காலம் ஆச்சுதானால் அப்படிப்பட்ட மரணமாகிற அறுப்புக்குப்பிற்பாடு

1. உண்ண. 2. முடிவடைவது.

அவனவன் விரைத்ததுக்குத் தக்க பலனைக் கர்த்தரானவர் அனுபவிக்கப் பண்ணுகிறதென்கிறது குறையற்ற ஞாயமுள்ள கிரமமாகும். இப்படிப்பட்ட அனுபவமானது வழியாயிராமல் அவதியா யிருக்கக்கொள்ள, என்றென்றைக்கும் நிலையாக நிற்கு மென்று சொல்லக்கடவோம்.

**17.10. நித்திய மோட்ச நரகம்தான் மனிதனை அக்கறையோடு இருக்கச் செய்கின்றன.** அவ்வண்ணமே, நரகத்திலே விழுந்த பாவிகளை அதினுடைய ஒழியாத அக்கினிக் குள் என்றென்றைக்கும் உபாதையை அனுபவிக்கத் தக்கதாகக் கர்த்தரானவர் பண்ணுகிறதென்கிறது அவருடைய முடிவில் லாத நீதிக்கும், அவர்கள் அடைந்த ஸ்தலத்தின் சுபாவத்துக்கும் ஏற்றிருக்கிறதும் தவிரப், பாவிகளான பேர்கள் முகிவில்லாத மகிமையுள்ள கர்த்தனை நிந்தை பண்ணினதினால், அவர்கள் கட்டிக்கொண்ட முகிவில்லாத பாவத்துக்கு ஒத்திருக்கிற முகிவில்லாத ஆக்கினையை அனுபவிக்கிற தென்கிறது குறை யற்ற ஞாயமாயிருக்கிறதென்று சொல்லத்தகும். இந்தடை வாகப், புண்ணியம் பண்ணின பேர்களுக்கு ஒருக்காலும் முடியாத ஆனந்தமென்கிற மோக்ஷத்தைக் கர்த்தன் கொடுத் தருளுவார் என்று அங்கீகரிக்கிறபோது, பூமியிலே திரிகிற கால மெல்லாம் அற்பகாலமாய் இருக்கக்கொள்ள, இப்படிக்கொத்த அற்ப காலத்திலே புண்ணிய வழியிலே நடக்கிறதுக்குப் பார மான பிரயாசத்தை அனுபவிக்க வேண்டியிருந்தாலும் ஒருக் காலும் முடியாத பாக்கியத்தை அடைகிறதுக்குப் பிரயாசம் என்னப்பட்ட யாவையும் மனுஷன் சட்டைபண்ணமல் இருப் பான். அப்படியே, ஒருக்காலும் முடியாத ஆனந்தத்தோடே யும் திரித்தி கொடுக்கிற சந்தோஷத்தோடேயும் இருக்கிறது மாய், என்றென்றைக்கும் நிற்கத்தக்கதுமாய் இருக்கிற பிழைப் பைப் புண்ணியவழியிலே நடக்கிறவர்களுக்குக் கர்த்தரானவர் கொடுப்பாரென்று ஒப்புக்கொள்ளுகிறபோது, லோகத்திலுள்ள செல்வமென்னப்பட்ட யாவையும் அயிசுவரியம் என்னப்பட்டது எல்லாத்தையும் சகல சுகத்தையும் லவுகீக பெருமையும் மனுஷனானவன் கனமாய் எண்ணமல், குறையற்ற பாக்கிய முமாய் நித்திய சீவனுமாயிருக்கிற மோக்ஷத்தைப் பெறுகிற துக்கு அதெல்லாம் மண்ணுங்கட்டி போலே எண்ணி, எளிசாய்

விட்டுவிடத்தக்கதாக மனுஷன் துணிகிறதுக்குக் குறையற்ற ஞாயமுண்டென்று சொல்லத்தகும்.

**17.11. மறு பிறப்பிருந்தால் செல்வம் முதலியன விடாது மனிதன் நினைப்பது என்ன?** அல்லது மனுஷனாலே பண்ணப்படுகிற புண்ணியங்களுக்கு, வருகிற சென்மத்திலே சிறிது நாள் மாத்திரம் பாக்கியத்தைக் கர்த்தரானவர் அனுபவிக்கப் பண்ணுவாரென்று அங்கீகரித்தோமானால், இப்போது புண்ணியம் என்னப்பட்ட யாவையும் மனுஷன் பண்ணத்தக்கதாகத் துணிகிறதுக்குக் கணக்கில்லை என்று [1]காண்பிக்கிறது. அதேதென்றால், தனது மனசையும் ஆசையையும் நிக்கிரகம் பண்ணாமல், வேறே பலபல பிரயாசங்களைப் படாமல், புண்ணியம் பண்ணக்கூடாது என்கிறதுக்குத் தப்பாது. வருகிற சென்மத்திலே சிறிது நாள் மாத்திரம் பாக்கியத்தை அனுபவிக்கிறதுக்கு இப்போது சிறிது நாள் சுகத்தை அனுபவியாமல் பிரயாசங்களையும் கஸ்திகளையும் ஏன் அனுபவிக்கவேணும்? இதெல்லாம் இந்தடைவிலே தெளிவாகக் கண்டுபிடிக்கலாம். "இப்போது எனக்கு உண்டான அயிசுவரியங்களைப் பலபல தானங்களைப் பண்ணுகிறதிலே செலவழித்தேனானால், இனிமேல் வருகிற சென்மத்திலே அயிசுவரியவானாய் இருப்பேன். இதன்றியே, தானங்கள் நிமித்தமாகச் சில பாவங்கள் துலைந்துபோய்த், தாரித்திர முதலான கஸ்திகளை வருகிற சென்மத்திலே அனுபவியாமல் இருக்கலாம் என்று அங்கீகரிக்கத்தக்க விசேஷமாகும். [2]ஆகட்டும், இப்போது என் கையிலே இருக்கிற அயிசுவரியமானது காணப்பட்ட அயிசுவரியமென்று சொல்லப்படும். இனிமேல் வருகிற சென்மத்திலே வரத்தக்க அயிசுவரியம் காணப்பட்டதில்லையே! இது தவிர, எனக்கு அது வருமென்று ஒப்புக்கொள்ளுகிறதுக்கு ஞாயங்காணாது. அப்படிப்பட்ட அயிசுவரியம் வந்தால் இந்தச் சென்மத்திலே இந்த அயிசுவரியம் என் கையிலே இருக்குமாப் போலே வருகிற சென்மத்திலே சிறிது நாள் என் கையிலே இருக்குமொழிய மற்றப்படியல்ல. இது இப்படியிருக்கையிலே, வருகிற சென்மத்திலே சிறிது நாள் அயிசுவரியத்தை நான் அனுபவிக்கிறதுக்கு, இந்தச் சென்மத்திலே நான் அனுபவிக்கிற

1. தோன்றுகிறது. 2. சரி, இருக்கட்டும்

அயிசுவரியத்தை ஏன் அனுபவியாமல் இருக்கவேணும்? இதன்றியே, என்னுடைய திரவியத்தை நான் [1]செலவழித்தால், இந்தச் சென்மத்திலே தாரித்திர கஷ்டத்தை அனுபவிப்பேன்." இதிப்படி இருக்கையிலே, வருகிற சென்மத்திலே சிறிது நாள் மாத்திரம் தரித்திர கஷ்டத்தை அனுபவியாமல் இருக்கிறதுக்கு. இப்போது சிறிது நாள் தரித்திர கஷ்டத்தை அனுபவிக்கத் துணிகிறதுக்கு, நன்ருய்ப் பத்தும் பத்தாய் விசாரிக்கிறவன் ஞாயத்தைக் காணமாட்டான். இந்தடைவாக வருகிற சென்மத்தின் பலத்தை அனுபவிக்கிறதுக்குப் பண்ணத்தக்க மற்றுண்டான தருமங்களிலே யோசிக்கக்கடவோம்.

**17.12. மோட்ச நரகத்தை ஏற்போர் தக்க வாழ்வை மேற்கொள்வர்.** ஆண்டவன் திருவுளம்பற்றின வேதத்தை அங்கிகரிக்கிற புண்ணியாத்துமாக்கள் பேரிலே அத்தனை அபத்தங்களைச் சுமத்துகிறதுக்கு இடங்காண மாட்டாது. அதேதென்ருல், கனமானதுமாய்க் குறையற்றதுமாய் ஒருக்காலும் முடியாததுமாயிருக்கிற பாக்கியமாகிற மோக்ஷத்தின் நிமித்தமாக மிகவும் சொற்பமானதுமாய், எண்ணப்படாத குறைகளுள்ளதுமாய், க்ஷணகாலத்திலே மாத்திரம் நிற்கத்தக்கதுமாய் இருக்கிற செல்வத்தை நாங்கள் விடுகிறேருமொழிய மற்றப்படியல்ல. அப்படிப்பட்ட சொற்ப செல்வத்தை அடைவாகச் சட்டைபண்ணுத புண்ணியவான்களுக்குக் குறையற்ற பாக்கியமென்கிற மோக்ஷமானது கிடைக்குமென்று அற்ப சந்தேகமில்லாமல் ஒப்புக்கொள்ளுகிறதுக்கு மகாமகாப்பட்ட ஞாயங்கள் உண்டென்கிறதுக்குத் தப்பாது. இதெல்லாம் மோக்ஷத்தின் இலக்ஷணத்தைச் சொல்லுகிறபோது துலக்கமாக வெளியாகுமே, இப்போதைக்கு மறுசென்மமில்லாமல் கர்த்தரானவர் பாவிகளுக்கு முகிவில்லாத நரகத்தையும், புண்ணியவான்களுக்கு முடியாத ஆனந்தமென்கிற மோக்ஷத்தையும் கட்டளை இடுவார் என்கிற அடைவானது கர்த்தனுக்குண்டான முகிவில்லாத நன்மையாகிற சுபாவத்தின் மேரைக்கு ஏற்றிருக்கிறதென்று ஒப்புவிக்கப்பட்டது போதும். கர்த்தனுடைய

1. செலவழியாதிருந்தால் (பா.)

மேரைக்கு ஏற்றிருக்கிற இந்தடைவுக்கு மறுசென்மமானது கேவலம் விருத்தமாய் இருக்கக்கொள்ள, மறுசென்மமானது மனுஷராலே வெறுமனே கற்பிக்கப்பட்ட கதையென்று சொல்ல வேணுமொழிய, ஒப்புக்கொள்ளத்தக்க சத்திய விசேஷமாய் இருக்கிறதென்று சொல்லவும் எண்ணவும் கூடாது.

பதினேழாம் பாடம் முற்றும்.

(கிரந்தம்) உாஎய்சு *

## பதினெட்டாம் பாடம்

**18.1 எல்லா உயிரும் ஒன்று என்கின்றனர். மறு பிறப்புக் கொள்கை உலக நிலைமைக்கு முரணானது.** புனர் சென்ம அங்கீகாரமானது பத்தும்பத்தாய் விசாரிக்கப் பட்டால், அது முழுத்தப்பறையா யிருக்கக்கொள்ளச், சிறிது விஷயங்களிலே லௌகிக ஆசாரத்துக்கு முதலாய் மகா விருத்தமா யிருக்கிறதென்று கண்டு பிடிக்கலாம். இது வெளி யாகும்படிக்கு மறுசென்மத்தை இவர்கள் அங்கீகாரத்தில் நின்று வருகிற [1]எக்கச்சக்கமான விசேஷங்களை வெளிப்படுத் தக்கடவோம். அதெப்படியென்றால், எண்ணப்படாத உயிருள்ள பொருட்களிடத்திலே சீவன் ஒன்றே என்று சொல்லுவார்கள். ஆனபடியினாலே, ஞானமுடைத்தானது மாய் அழியாத ஆத்துமமுமாய் என்றென்றைக்கும் நிக்கத் தக்க பொருளுமா யிருக்கிற சீவனானது கிரகத்திலே குடியாய் இருக்கிறவன்போல கிரகமாகிற சரீரத்திலே வாசமாயிருக்கிற தொழிய மற்றப்படியல்லவென்று சொல்லுவார்கள். அவ்வண் ணமே, மனுஷனுடைய சரீரமாகிற கிரகத்திலே இப்போதி ருக்கிற சீவனானது, நாய் நரி கழுதை பன்னி இதுகள் முதலான சகல மிருகாதிகளுடைய சரீரங்களாகிற கிரகங் களிலே பூர்வ காலங்களிலே வாசமாயிருந்த தென்றும், இனி வாசமாயிருக்கப் போகிறதென்றும் அங்கீகரித்துக்கொண்டு வருகிறார்கள். இதுவும் போதாமல், இந்தச் சீவனானது தானே சகல மிருகாதிகளுடைய சரீரமாகிற கிரகங்களிலே வாசமா யிருக்குமாப்போலே, சகல மரங்கள் முதலான செடி புல்லுக்

• 274

1. ஒழுங்கீனமான.

களுடைய காணப்பட்ட சரீரங்களாகிற கிரகங்களுக்குள்ளே வாசமாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கிறார்கள். இப்படியே, போகப்போக அதிகமாய் மதிகெட்டவர்களாய்ப் போகிற தினால், மனுஷனுடைய சீவனைது கல்லாய், இரும்பாய் இது முதலான பதார்த்தங்களா யிருக்கிறதென்று லெச்சை இல்லாமற் சொல்லிச், சிறிது பிரபந்தங்களைக் கட்டிப் பாடிக் கொண்டு வருகிறார்கள்.

**18.2 பகுத்தறிவு விலங்குக்கும் பிற சிற்றுயிர் களுக்கும் உண்டோ?** இந்தடைவாக அங்கீகரிக்கப்பட்ட மறுசென்ம வர்த்தமானத்திலே அடங்கியிருக்கிற பலபல வியர்த்தக் கதைகளை முன்சொன்ன மூன்று பாடங்களிலே யும் இந்தப் பாடத்திலேயும் சொல்லப்படுகிற ஞாயத்திலே புத்திமானு யிருக்கிறவன் கண்டு பிடித்துப், புனர் சென்ம வர்த் தமானத்தை அங்கீகாரம் பண்ணத்தக்கதாக லெச்சைப் படுவான் என்கிறதுக்குத் தப்பாது. அதேனென்றால், நாய்க்குங் கழுதைக்கும் உண்டான பேதமாத்திரந் தனக்கும் நாய் முதலான மிருகங்களுக்கும் உண்டென்று சொல்லக்கூடுமொழிய, அதிக வேற்றுமை உண்டென்று அவர்கள் சொல்லக்கூடாது. அதெப்படியென்றால், நாய்க்குங் கழுதைக்குஞ் சரீரபேதம் உண்டென்று அவர்கள் சொல்லுகிறப்போலே, மனுஷனுக்கும் நாய்க்குஞ் சரீரபேதமொழிய, வேறேஅதிக வேற்றுமையில்லை என்று அங்கீகரிக்கவேணும். அவ்வண்ணமே, மனுஷனுக்கு உண்டான புத்தி ஞான சுவாதந்திரியமுள்ள மனசையும் இதனாலே மனுஷனுக்கு வருகிற பெருமையையும் ஒன்றாக்கி[1] அதெல்லாம் நாய் கழுதை முதலான மிருகாதிகளிடத்திலே உண்டாயிருக்கிறதென்று சொல்லுகிறதுந் தவிர, அப்படிப் பட்ட ஞானமுதலான பெருமைகள் முதலானதுகள், மரங்கள் முதலான செடி புல்லுகளிடத்திலேயுங் கல்லு முதலான சடபதார்த்தங்களிடத்திலேயும் உண்டாயிருக்கிற தென்று அங்கீகரிக்கவேணும். ஆனால், புத்தி ஞான முதலான மகிமையானதுகள் நாய் கழுதை முதலான மிருகாதிகளுக்குங் கல்லு முதலானதுகளுக்கும் உண்டென்கிறதுக்கு ஒரு ஞாயம் ஒரு [2]லக்ஷணம் உண்டாயிராமல், அப்படிப்பட்ட வஸ்துக்

1. மண்ணாக்கி (பா.) 2. அறிகுறி.

களிடத்திலே அந்த மகிமைகளில்லை என்கிறதுக்குப் பலபல பிரத்தியக்ஷ ஞாயங்கள் உண்டாயிருக்கிறதினால், நாய் கழுதை இது முதலான மிருகாதிகளிடத்திலேயும் மற்றுண்டான பதார்த்தங்களிடத்திலேயும் உண்டென்று சொல்லுகிறவன் கேட்கிற பேர்கள் சிரிக்கிறதுக்கு இடங் கொடுத்துத், தான் தன்னை எருமைக் கிடாவைக் காட்டிலும் மதிகெட்டவ னென்று காட்டுவானொழிய, மிருகாதிகளுக்கும் மனுஷனுக்கும் சரீர பேத மாத்திரம் உண்டென்றும், மிருகாதிகளிடத்திலே யுங் கல்லுகளிடத்திலேயும் புத்தி ஞான முதலான மகிமைகள் உண்டென்றும் ஒப்புவிக்க மாட்டான் என்கிறதுக்குத் தப்பாது.

**18.3** சிற்றுயிர்களை மாய்ப்பதும் கல்லை வெட்டு வதும் கூடப் பாவமாயிருக்கும். இதுதவிர, இராசா வானவன் அரண்மனையிலே இருக்கிறபோது அவனை யாதொருத் தன் அடித்து அரமனையில் நின்று ஓட்டினால், மகாமகாப் பட்ட பாவங் கட்டிக்கொண்டான் என்று சொலலவேணும். அப்படிப்பட்ட இராசாவானவன வேறேயொரு வீட்டிலேயா லுலும் குச்சிலென்கிலும் இருக்கும்போது, அவனை அடித்து இருக்கிற வீடு குச்சு இதுகளிலே யிருக்கவொட்டாமல் யாதொருத்தன் தள்ளிவிட்டால், அரண்மனையில் நின்று இராசா வைத் தள்ளியவனும் அந்த வீடுகளிலே யிருக்கிற இராசாவை அடிக்கிறவனும் தள்ளுகிறவனும இவர்கள் இருவருஞ் சரியாகச் சுவாமித்துரோகத்தைக் கட்டிக்கொள்வார்களொழிய மற்றப் படியல்ல. அத்தன்மைபோல், மனுஷனிடத்திலே யிருக்கிற மகாராசாவான சீவனானது ஆடு கோழி இது முதலான மிருகங்களுடைய சரீரங்களிலேயுங் கீரை முதலான செடி களிலேயும் வாசமாயிருக்கிறதென்று அங்கீகரித்தோமானால், மனுஷனுடைய சரீரமாகிற அரமனையில் நின்று மகாராசாவா யிருக்கிற சீவனைத் தள்ளுகிறவன் மகா கொலைபாதகத்தைக் கட்டிக் கொள்ளுகிறான் என்று சொல்லப்படுமாப் போலே, ஆடு கோழி இது முதலான மிருகங்களுடைய சரீர மாகிற கிரகங்களிலே மகா இராசாவாயிருக்கிற சீவனை அடித்துத் தள்ளுகிறவன் கொலைபாதகம் கட்டிக்கொண்டா னென்று சொல்லக்கடவோம். இதன்றியே, மகாராசாவா யிருக்கிற சீவனானது தானே கீரைக்குள்ளேயுங் கல்லுக்குள்ளே யும் இருக்கிறதென்று அங்கீகரிக்கிறபோது, கீரை அறுக்கிற

திருலேயுங் கல்லைச் சுண்ணும்பாய்ச் சுடுகிறதிருலேயும் அப்படிப்பட்ட ஸ்தலங்களிடத்திலே இருக்கிற மகா இராசா வான சீவனே அந்தந்த ஸ்தலங்களிடத்திலே நின்று தள்ளிப் டக்ஷிக்கிறன் எப்போதுங் கொலே பாதகங் கட்டிக்கொண்டு வருகிருனென்று சொல்ல வேணுமொழிய மற்றப்படியல்ல. இந்தவிதமாக இவர்களாலே புண்ணியமென்று அங்கீகரிக்கப் பட்ட [1]எக்கியம் என்னப்பட்டதெல்லாம், அதிலே மகா இராசா வாயிருக்கிற சீவனுனது மிருகாதிகளுடைய சரீரமாகிற கிரகத் தினின்று தள்ளப்படுகிறதிருல், அதெல்லாங் கொலே பாதக மென்று சொல்ல வேணுமொழிய மற்றப்படியல்ல.

**184. உண்பதுகூடப் பாவமாயிருக்கும்.** இந்த ஞாயத்தினுடைய வலுமையைச் சில பேர்கள் கண்டுபிடித்து, அதுக்குப் பிரத்தியுத்தாரமாகப் போம் வழியை அறியாமல், வேறே ஓர் அபத்தத்தைக் கற்பித்தார்கள். அதேதென்ருல், "அஹிம்ஸா பரமோ தர்ம:, அதர்ம: ப்ராணினும் வத :"[2] என்கிற வாக்கிய முதலான அத்தொகைப்பட்ட அநேகம் வாக்கி யங்களினுலே அந்தந்தச் சரீரத்திலே சீவன் ஒன்றே வாசமாய் இருக்கிற பக்ஷத்தைச் சம்மதித்து, மனுஷனேயானுலும் மிருகாதிகளை என்கிலும் சம்மதித்துக் கொல்லுகிற தென்கிறது சரி பாவமாய் இருக்குதென்று சொல்லுகிருர்கள். இதுவும் போராமல், மனுஷனுடைய சீவனுனது புல்லு செடிகள் விருக்ஷங்கள் இதுகளுக்குள்ளே உண்டாயிருக்கிறதிருல், கீரை முதலான வஸ்துக்களை அறுக்கிறதும், அரைக்கிறதும், இடிக் கிறதும், வேகவைக்கிறதும், கடிக்கிறதும் இந்த அஞ்சு பாவங்கள் மனுஷனுலே எப்போதும் பண்ணிக்கொண்டு வரப் படுகிறதென்று சொல்லிக்கொண்டு வருகிருர்கள். அதற்கான [3]பிராயச் சித்தங்கள் விதிக்கப்படுகிறது. அவ்வண்ணமே, இப்படிக்கொத்த பக்ஷத்தை அனுசரிக்கும்போது, மகா பாவங் களில்லாமல் மனுஷனுனவன் பக்ஷணங்களைப் பக்ஷித்துப் பிழைக்க மாட்டானென்று சொன்னுப் போலே ஆச்சுது. ஆனபடியினுலே, மனுஷனுடைய சீவன் அந்தந்த மிருகாதி

1. யாகம், வேள்வி
3. கழுவாய், பரிகாரம்
2. अहिंसा परमो धर्मः, अधर्मः प्राणिनां वधः

களுடைய சரீரங்களுக்குள்ளேயும் கீரைக்குள்ளேயும் இருக்கிறதென்று அங்கீகரித்தோமானால், அவன் தனது சாதியினுடைய ஆகாரத்தைக் கூட்டுகிறதினால் பிராமணனானாலும் சூத்திரனென்கிலும் கொலை பாதகம் கட்டிக்கொள்ளுகிறான் என்று சொல்லக்கடவது. அவ்வண்ணமே, சகல சரீரங்களிலே இருக்கிற சீவன்களானதுகள் சுபாவத்திலே வேற்றுமை இல்லாததுகளாய் இருக்கிறதென்கிற பக்ஷத்தை அங்கீகரிக்கும்போது, இப்படிப்பட்ட அபத்த விசேஷங்களை அங்கீகரிக்க வேணும் என்கிறதினால், சகல சரீரங்களிலே சுபாவத்தின் வேற்றுமை இல்லாமல் ஒரே சீவனுயகன் இருக்கிறதென்கிற பக்ஷமானது முழுத் தப்பறையென்று சொல்லவேணுமொழிய மற்றப்படி அல்ல.

**18.5. தப்பறையிலிருந்து தப்பறை.** அதேதெனன்றால், ஒரு சத்திய விசேஷத்தின் அங்கீகாரமானது வேறேயொரு சத்திய விசேஷத்தின் அங்கீகாரத்தைப் பிறப்பிக்குமொழிய, அதில் நின்று தப்பறை விசேஷத்தின் அங்கீகாரமானது பிறப்பிக்கமாட்டாது. அத்தன்மைபோல, ஒரு தப்பறை விசேஷத்தின் அங்கீகாரமானது வேறொரு தப்பறை விசேஷத்தின் அங்கீகாரத்தைப் பிறப்பிக்குமொழிய அப்படிப்பட்ட விசேஷத்தின் அங்கீகாரத்தில் நின்று சத்திய விசேஷத்தின் அங்கீகாரமானது பிறக்கிறதென்று சொல்லக்கூடாது. அவ்வண்ணமே மனுஷனுக்கும் நாய்க்கும் சரீர வேற்றுமை மாத்திரமுண்டென்றும், இரண்டு மனுஷருக்குள்ளே உண்டான வேற்றுமையைக் காட்டிலும் கழுதைக்கும் மனுஷருக்கும் அதிகமான வேற்றுமை இல்லையென்றும், கீரை முதலான வஸ்துக்களை அறுக்கிறதிலேயும் மனுஷனை வெட்டுகிறதிலேயும் ஒரே கொலைபாதகம் பலிக்கிறதென்றும், கீரை முதலான பக்ஷணங்களைப் பாவமில்லாமல் பக்ஷிக்கக் கூடாதென்றும், இது முதலான வேறே அபத்த விசேஷங்களுடைய அங்கீகாரமானது சகல சரீரங்களிலே இருக்கிற சீவன்கள் சுபாவத்திலே வேற்றுமை இல்லாததுகளாய் இருக்கிறதென்கிற பக்ஷத்தினாலே வாகிறதினால், அப்படிப்பட்ட மதமானது முழுத் தப்பறையாய் இருக்கிறதென்று கேட்கவேணுமோ?

**18.6. சிற்றுயிர்களுக்கும் திவசம் வேண்டியிருக்கும்.** இதன்றியே, மனுஷனுடைய சரீரத்திலே இன்றுண்டான சீவன் நாளை நாயினுடைய சரீரத்துக்குள்ளேயும் கீரைக்குள்ளேயும் இருக்குமென்று அங்கீகரித்தோமானால், இப்படிப்பட்ட சீவனுயகன் மனுஷன் சரீரத்தில்நின்று பிறப்படுகிறபோது, பொல்லாத ஸ்தலத்தை அடையாமல் நல்ல பதவியை அடையவேணுமென்று, [1]ஓமம் செபதான தர்மக் கிரிகைகளை நடத்தத்தக்கதாக விதித்திருக்கிறப்போலே, இந்தச் சீவனுயகன்றானே நாயினுடைய சரீரத்தில் நின்றும் கீரை முதலானதுகளில் நின்றும் பிறப்படுகிறபோது, அது பொல்லாத ஸ்தலத்தை என்கிலும், பொல்லாத சென்மத்தையாகிலும் அடையாமல் நல்ல பதவியையும் நல்ல சென்மத்தையும் சீவனுனது அடைகிறதுக்குச், செபதான முதலான தருமங்களை விதித்திருக்கவும் வேணும்; விதியாததுக்கு ஒரு ஞாயமும் காணமாட்டாது. அப்படியே, நாயின் சரீரத்துக்குள்ளே என்கிலும் கீரைக்குள்ளே யாகிலும் புகுந்திருக்கிற உன்னுடைய சீவனுயகனுனது அப்படிப்பட்ட ஸ்தலங்களிடத்தில் நின்று பிறப்படுகிறபோது, அது நல்ல ஸ்தலத்தை அடைகிறதுக்கு யாதொருத்தன் செப தான முதலான தருமக் கிரிகைகளை நடத்திக்கொண்டு வந்தால், அபத்தம் பண்ணினுனென்று சொல்லக்கடவதல்ல. அவ்வண்ணமே, சகல சரீரங்களிலே இருக்கிற சீவன்கள் சுபாவத்திலே வேற்றுமை இல்லாததுகளாய் இருக்கிறது என்கிற பக்ஷத்திலேலே நாய், கழுதை இது முதலான மிருகசாதிகளுக்கும் கீரை நாயுருவி இது முதலான புல்லுக்களுக்கும் [2]திவசம் பண்ணலாமென்று சொன்னப்போலே ஆச்சுது.

**18.7. ஆகவே உயிர்களிடையே அடிப்படையான வேற்றுமையை ஏற்கவேண்டும்.** இத்தறுவாயிலே அறியவேண்டின சத்தியத்தை ஒப்புக்கொணடோமானால், ஓரற்ப அபத்தத்தையாகிலும் அங்கீகாரம் பண்ணத் தேவையில்லை. அதேனென்றால், கீரை முதலான புல்லுக்களுக்கும் நாய் முதலான மிருகங்களுக்கும் மனுஷனுக்கும் வெவ்வேறே சாதியுள்ள சீவன்கள் உண்டென்று சொல்லி, விருக்ஷ முதலான

1. ஒரு சந்தி (பா. பே.) 2. சிராத்தம், செத்தோர் சடங்கு.

புல்லுக்களானதுகள் வெவ்வேறே சாதியுள்ள [4]வளர்த்திச் சீவன்களுள்ளதாய் இருக்கிறதென்றும், நாய் கழுதை முதலான மிருக செந்துக்களும் சுபாவத்திலே வேற்றுமையுள்ள எண்ணப்படாத இந்திரியச் சீவன்களை உடைத்தானதுகளாய் இருக்கிறதென்றும், மனுஷரென்னப்பட்ட யாவரும் ஒரே சாதிக்குள்ளே அடங்கின, எண்ணப்படாத ஞானசீவன்களைக் கொண்டிருக்கிறார்களென்றும் அங்கீகரித்தோமானால், கீரை முதலான விருக்ஷங்களுக்கும், நாய் முதலான மிருக செந்துக்களுக்கும் மனுஷரென்னப்பட்ட யாவருக்கும் சரீர பேதம் தவிர மிகுந்த வேற்றுமையுள்ள சீவபேதம் உண்டென்று சொல்லுவோம் என்கிறதினாலே, மனுஷன் [1]மனுஷன் இரண்டுக்கும் உண்டான பேதத்தைக் காட்டிலும் புல் நாய் முதலான மிருக செந்துக்களுக்கும் மனுஷனுக்கும் அதிகமான பேதமாகிற சுபாவத்திலே மிகுந்த வேற்றுமை உண்டென்று அங்கீகரித்தாப்போலே யாகும்—அதேனென்றால், மனுஷரென்னப்பட்ட யாவர்க்கும் ஒரு சுபாவத்தை உடைத்தான சீவன்களும் சரீரங்களும் உண்டாயிருக்கையிலே, லோக சங்கேதத்தினாலே மாத்திரம் சாதி பேதமுண்டென்று சொல்லத்தகுமொழிய, சுபாவத்திலே [2]அசகசாந்திரம் உண்டாயிருக்குமாப்போலே, மனுஷன் மனுஷன் இருவருக்கும் அப்படிப்பட்ட சுபாவ வேற்றுமை உண்டாயிருக்கிறதென்று சொல்லக்கூடாது. பின்னையும், புண்ணிய பாவத்தை அறியாததுகளுமாய்ச், சரீரத்தோடேகூட அழிந்து போகிறதுமாய்ப், பரலோக சம்மந்தமாயிருக்கிற நரக மோக்ஷத்தை அடையமாட்டாததுகளுமாய் இருக்கிற சீவன்களை உடைத்தான புல்லுகளும் மிருக செந்துக்களும் பரலோக சம்பந்தமாயிருக்கிற நரக மோக்ஷத்தை அடையமாட்டாததினால், அப்படிப்பட்ட பொருட்களுக்காகத் திவசம் செபத்தியானம்[3] முதலிய புண்ணிய தருமங்களை நடத்த வேண்டியிராதென்றும், நடத்தினால் வியர்த்தமாய் இருக்கிறதும் தவிரத், தப்பறை விசேஷத்தின் அங்கீகாரமாகிற பாவங்களில்லாமல் அப்படிப்பட்ட கருமங்களை நடத்தவே கூடாதென்றும் சொல்லிக் காட்டினாப்போலே ஆச்சுது. ஆனபடியினாலே, இது அங்கீகரிக்கத்தக்க சத்தியமொழிய, இதற்கு விருத்தமான புனர்

1. மனுஷனுக்கு (பா) 2. அசம்:ஆடு, கசம்:யானை; ஆட்டுக்கும் யானைக்குமுள்ள வேற்றுமை 3. தானம் (பா.பே.) 4. வளர்த்தியுள்ள (பா.)

சென்ம பக்ஷத்தை அங்கீகரிக்கும்போது, அத்தோடேகூட முன் சொல்லப்பட்ட தப்பறை விசேஷங்கள் முதலான வேறே அநேகம் தப்பறை விசேஷங்களை அங்கீகரிக்க வேண்டியிருக்கிற தினால், மறுசென்ம பக்ஷமானது கற்பிக்கப்பட்ட முழுத் தப்பறையென்று சொல்லக்கடவோம்.

**18.8 மறுபிறப்பு உண்மைக்கு முரணானது: இம்மை யின் செயல் முற்பிறப்பாலன்று.** இப்படிப்பட்ட மறு சென்ம பக்ஷமானது கேவலங் கற்பிக்கப்பட்டதுமாய்க், காணப்படுகிற வேறே சிறிது ஞாயங்களுக்கு விரோதமானது மாய் இருக்கிறதென்று ஒப்பச் சொல்லிக்காட்டலாம். அதே தென்றால், மனுஷனாலே இந்தச் சென்மத்திலே பண்ணப் படுகிற கர்மம் என்னப்பட்ட யாவும் பூர்வ சென்மத்திலே அவனாலே பண்ணப்பட்ட கர்மங்களுக்கு மாத்திரம் ஒத்தி ருக்கிற கர்மங்களாய் இருக்கிறதொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே, பூர்வ சென்மத்திலே இருந்த மனுஷனானவன் பண்ணின கர்மங்களுக்கு ஒத்திருக்கிற கர்மங்களை மாத்திரம் இந்தச் சென்மத்திலே பண்ணுவானொழிய, வேறே கர்மங்களை பண்ணமாட்டானென்று சொல்லவேணும். அல்லது பூர்வ சென்மத்திலே இவன் பண்ணின கர்மங்களுக்குத்தக்க சிறிது கர்மங்களை மாத்திரம் இந்தச் சென்மத்திலே இவன் பண்ணுகிறு னென்று சொல்லிப், பூர்வ சென்மத்திலே பண்ணப்பட்ட கர்மங்களினாலே வராததாயிருக்கிற அனேக கர்மங்களை இந்தச் சென்மத்திலே நவமாய் இவன் பண்ணிக்கொண்டு வருகிறானென்று சொல்லவேணும். இந்த இரண்டாம் பக்ஷத்தை[1] அங்கீகரித்தோமானால், பூர்வ சென்மத்தின் நிமித் தமாக வராத சிறிது கர்மங்களை மனுஷனானவன் இந்தச் சென்மத்திலே பண்ணிக்கொண்டு வருகிறானென்று சொல்லு மாப்போலே, மற்றுண்டான கர்மங்களைத்தானே பூர்வ சென்மத்திலே பண்ணப்பட்ட கர்மங்கள் நிமித்தமாகப் பண்ணா மல் அதுகளை நவமாய்ப் பண்ணுகிறானென்று சொல்லக் கடவோம். இப்படிச் சொன்னதினால் தோஷமேது?

இதெல்லாம் மிகவும் விளங்கும்படிக்கு நாம் நடத்துகிற ஞாயத்தை ஒரு விசேஷ மனுஷன் பேரிலே [2]ஆரோபிக்கக்

1. Alternative. 2. Apply.

கடவோம். அதெப்படியென்றால், மல்லனானவன் இருபதினாயிரங் கர்மங்களைப் பண்ணிச் செத்தான். இதிலே கேட்கத் தக்கதாவது: மல்லனென்கிறவன் பண்ணின இருபதினாயிரங் கர்மங்களையெல்லாம் பூர்வ சென்மத்திலே அவன் பண்ணின கர்மங்கள் நிமித்தமாகப் இருபதினாயிரம் கர்மங்களைப் பண்ணினானென்று ஒன்றில் அங்கீகரிக்கவேணும், அல்லது மல்லனென்கிறவன் பூர்வ சென்மத்திலே பண்ணின கர்மங்கள் நிமித்தமாக இந்தச் சென்மத்திலே பண்ணின கர்மங்களுக்குள்ளே பாதியாகிற பதினாயிரங் கர்மங்களை மாத்திரம் பண்ணினானென்று சொல்லி, மற்றப் பாதியாகிற பதினாயிரங் கர்மங்களைப் பூர்வ சென்மத்திலே மல்லன் பண்ணின கர்மங்கள் நிமித்தமாக இந்தச் சென்மத்திலே பண்ணாமல் அதுகளை நவமாகப் பண்ணினானென்று அங்கீகரிக்கத் தக்கதாகும் அவ்வண்ணமே, மல்லனென்கிறவன் பூர்வ சென்மத்திலே பண்ணின கர்மங்களானதுகள் இந்தச் சென்மத்திலே அவன் பண்ணின கர்மங்களுடைய பாதிக்கு மாத்திரங் காரணமாயிருந்து, மற்றக் கர்மங்களுடைய பாதியானது பூர்வ சென்மத்திலே அவனாலே பண்ணப்பட்ட கர்மங்கள் நிமித்தமாக வராமல், மல்லனானவன் அப்படிப்பட்ட கர்மங்களுடைய பாதியை ஒரு காரணமன்னியிலே நவமாய்ப் பண்ணினானென்று அங்கீகரிக்க வேணும். இந்த இரண்டாம் பக்ஷத்தை அங்கீகரித்தோமானால், இந்தச் சென்மத்திலே மல்லனானவன் பண்ணின கர்மங்களுடைய ஒரு பாதிக்குப் பூர்வ சென்மத்திலே பண்ணப்பட்ட கர்மங்கள் காரணமாயிராதென்று அங்கீகரிக்குமாப்போலே, மற்றக் கர்மங்களுடைய பாதியானது பூர்வ சென்மத்திலே பண்ணப்பட்ட கர்மங்கள் நிமித்தமாகப் பண்ணப்பட்டதில்லை என்று அங்கீகரிக்கலாம் என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால், கர்மங்களுடைய ஒரு பாதியிலே அங்கீகரிக்கப்படுகிற மேரையானது கர்மங்களுடைய மற்றப் பாதியிலே சரியாக அங்கீகரிக்கப்படத் தக்கதாயிருக்கிறதொழிய, கர்மங்களுடைய பாதிகள் இரண்டில் ஒரு பாதிக்கு அங்கீகரிக்கப்படாமல் இருக்கிறதுக்கு ஞாயங்காணாது ஆதலாலே, பாதிகள் இரண்டுக்கும் சரியான மேரை அங்கீகரிக்கப்பட்டு, ஞாயமுள்ள அப்படிப்பட்ட அங்கீகாரத்தினாலே

பூர்வசென்ம அங்கீகாரம் வியர்த்தமாய் இருக்கிறதென்றும், பூர்வ சென்மத்துக்கு ஆன ஞாயமுள்ள காரணம் இல்லாத தினலே, அது கற்பிக்கப்பட்ட கதையாயிருக்கிறதென்றும், காணப்பட்டுதொழிய மற்றப்படியல்ல.

**18.9 அல்லது நல்வினையோ தீவினையோ செய்தவன் எப்பிறப்பிலும் அப்படியே செய்வான்.** அல்லது முதலாம் பக்ஷத்தை அங்கீகரித்து, மனுஷனைவன் பூர்வ சென்மத்திலே பண்ணின கர்மங்களுக்கு ஒத்த கர்மங்களை மாத்திரம் இந்தச் சென்மத்திலே பண்ணுகிருனெழியப், பூர்வ சென்மத்தின் நிமித்தமாக வராததாய் இருக்கிற ஒரு கர்மத்தை யானலும் பண்ணமாட்டான் என்கிற அபத்த விசேஷத்தை அங்கீகரித்தோமானல், வேறேயொரு அபத்தத் தப்பறையை அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. ஆதாவது, பூர்வ சென்மத்திலே புண்ணியவாளனய் இருக்கிறவன் இந்தச் சென்மத்திலேயும் வரத்தக்க சென்மங்களிலேயும், எப்போதும் புண்ணியவானய் இருப்பானெழிய மற்றப்படியல்ல. பொல்லாதவனேவென்றுற், பூர்வ சென்மத்திலே கள்ளனயிருந்தவன் இந்தச் சென்மத்திலேயும், வருகிற சென்மத்திலேயும், எப்போதுங் கள்ளனயிருக்க வேணும் என்கிறதுக்குத் தப்பாது. இந்த ஞாயத்தை[1] இந்தடைவாகச் [2]சொல்லி நடத்தலாம். ஒருத்தன் அந்த சென்மத்திலே தர்மக் கிரிகைகளை மாத்திரம் பண்ணிக் கொண்டு வந்தானென்று சொல்லும்போது, இப்படிப்பட்ட தர்மக் கிரிகைகளுக்குத் தர்மக் கிரிகைகள் மாத்திரம் ஒத்திருக்கிற கிரிகைகளாய் இருக்கக்கொள்ள, பூர்வ சென்மத்திலே தர்மக்கிரிகைகளை மாத்திரம் பண்ணினவன் இந்தச் சென்மத்திலேயும் தர்மக்கிரிகைகளை மாத்திரம் பண்ணிக்கொண்டு வருவானென்று அங்கீகரிக்கவேணும். இந்தடைவாக வருகிற சென்மங்களிலே தர்மக்கிரிகைகளை மாத்திரம் பண்ணி, ஊழியுள்ள காலம் புண்ணியவானய் இருப்பானென்று சொல்லத் தகுமொழிய, மற்றப்படியல்ல.

இதுக்குச் சரியான மேரையாக இந்தச் சென்மத்திலே பாவியானவன் பண்ணின கர்மங்களுக்கு ஒத்திருக்கிற

1. argument 2. develop.

கர்மங்களை மாத்திரம் வருகிற ஜென்மத்திலே பண்ணமாட்டுவா னொழிய, வேறே கர்மங்களைப் பண்ணமாட்டானென்று சம்மதிக் கத்தக்கதாகும். ஆகலாலே, புண்ணியத்துக்கு ஒத்திருக்கிற கர்மமானது புண்ணியமென்று சொல்லப்படுமாப்போலே, பாவ கர்மத்துக்கு ஒத்திருக்கிற கர்மமானது பாவமென்று சொல்ல வேண்டியிருக்கையிலே, பாவியானவன் இந்தச் ஜென்மத்திலே பண்ணின கர்மங்களுக்கு ஒத்த கர்மங்களை மாத்திரம் வருகிற ஜென்மத்திலே பண்ணுவானொழிய மற்றப்படியல்ல என்றும் அங்கீகரிக்க வேணும். இப்படி அங்கீகரித்தோமானால், இந்தச் ஜென்மத்திலே பத்துப் புண்ணியமாத்திரம் பாவியானவன் பண்ணி அவனாலே பண்ணப்பட்ட மற்றுண்டான கர்மங் களெல்லாம் பாவமாயிருக்கக் கொள்ள, இந்தச் ஜென்மத்திலே பண்ணின பத்துப் புண்ணியங்களுக்கு ஒத்திருக்கிற பத்துக் கர்மங்களை மாத்திரம் வருகிற ஜென்மத்திலே பாவியானவன் பண்ணுவான் என்றும், பின்னையும் இந்தச் ஜென்மத்திலே பண்ணின எண்ணப்படாத பாவ கர்மங்களுக்கு ஏற்றிருக்கிற எண்ணப்படாத பாவ கர்மங்களை வருகிற ஜென்மத்திலே பாவி யானவன் பண்ணுவானென்றும் சொல்லவேணுமொழிய, வேறே நவமான கர்மங்களைப் பண்ணமாட்டானென்று சொல்ல வேண்டியிருக்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. இந்தடைவாகப் புண்ணியவான்களிடத்திலே யோசிக்கக் கடவது. [1]ஒரு ஜென்மத்திலே புண்ணியவானென்கிலும் பாவி யென்கிலும் வருகிற ஜென்மங்களிலே எப்போதும் புண்ணிய வானாய் இருப்பானென்றும் பாவியாய் இருப்பானென்றும் ஒப்புவிக்கப்பட்டாப்போலே ஆச்சுது.

**18.10** காரணமும் காரியமும் ஒன்றாகிவிடும். ஆனால், இந்தச் ஜென்மத்திலே கள்ளனானவன் பண்ணின பத்துப் புண்ணியங்களுக்கும் ஆன பலன் ரூபமான பாக்கி யத்தையும் நிர்ப்பாக்கியத்தையும் வருகிற ஜென்மத்திலே அனுபவிப்பானென்று யாதொருத்தன் சொன்னால், அப்படிப் பட்ட பிரத்தியுத்தார நிமித்தமாக இந்தச் ஜென்மத்திலே வித்தியாபாரகரா யிருக்கிற பேர்களையும் புண்ணியவான்களை யும் பாவிகளையும் பார்த்து, இப்படிப்பட்டவர்களுக்கு உண்

1. இங்கு ஏதோ விடுபட்டிருக்கிறது போலும்

டான வித்தையும், புண்ணிய பாவத்திலே விழுந்திருக்கிற மனசும் பூர்வசென்ம சமஸ்காரம்[1] என்றும், பூர்வசென்ம வாசனை என்றுஞ் சொல்லுகிறீர்களே, இந்த வார்த்தைக ளெல்லாம் தப்பறையாய் இருக்கிறதென்று பிரத்தியக்ஷமாய் அந்தப் பிரத்தியுத்தாரத்தினால் ஒப்புவித்தாப்போலே ஆச்சுது. அதேதென்றால், அப்படிப்பட்ட சம்ஸ்காரமும் வாசனையும் பூர்வ சென்மத்தினுடைய வித்தை பாவமுதலான கர்மங் களுக்குப் பலனும் ஆக்கினையுமாய் இருக்கிறதென்று சொல்ல வேணும். ஆனபடியினாலே, கூலி பெறுகிற கிரிகையுங் கிரிகைக்கு வருகிற கூலியும் ஒருவிதமாய் இருக்கிறதென்கிற அபத்தமானது அங்கீகரிக்கப் பட்டாப்போலே ஆச்சுது.

**18.11 உலகத்தைக் கடவுள் கட்டாயமின்றிப் படைத்தார்.** கடைசியாய், பூர்வசென்மத்தை அங்கீகரிக்கிற பேர்கள் வேறொரு பெரிய அபத்தத்தை அங்கீகரிக்கவேணும். ஆதாவது, காணப்பட்ட லோகமானதும் அதிலுண்டான பொருளென்னப்பட்ட யாவுஞ் சுபாவமுதலான சகல குணங் களிலே மட்டோடே இருக்கக்கொள்ள, லோகமும் லோகத்தி லுண்டான வஸ்து என்னப்பட்ட யாவும் உண்டாக்கப்பட்டுது என்கிறதுக்கு ஞாயத்தின்படியே சந்தேகப்படுவாரில்லை. அப்படியே சர்வேசுரனுடைய சுவாதந்திரியமுள்ள மனசிலே உண்டாக்கப்பட்டுதென்று அங்கீகரிக்குமிடத்தில், அதுக்குக் காரணமாயிருக்கிற சர்வேசுரனானவர் அவர் ஒருத்தரே அநாதி யாய் இருக்கிறாரென்று அங்கீகரிக்கக்கூடுமொழிய, அவருடைய சுவாதந்திரியமுள்ள திவ்விய மனசினாலே சிருஷ்டிக்கப்பட்ட இந்த லோகமானது அநாதியாயிராமல், தனது காரணம் இருக்கிறதுக்குப் பிற்பாடு துவக்கினதென்று சொல்லவேணு மொழிய மற்றப்படியல்ல; அதேனென்றால், சூரியனாகிற காரணத்தில் நின்று பிரகாசமாகிற காரியமானது அவசிய மாய்ச் சுபாவத்தினாலே உற்பவிக்கிறதினால், காரண காரியத் துக்கு ஏககாலம் உண்டென்று சொல்ல வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட காரண காரிய மேரைக்கும் காரணத்தில் நின்று அவசியமில்லாமல் சுவாதந்திரியத்தினாலே உற்பவிக்கிற காரியத்தின் மேரைக்கும் உண்டான வேற்றுமையானது;

1. சங்ஸ்காரம் (பா.) — பூர்வ சென்ம வாசனை

ஆவசிகயமாகவுஞ்[1] சுபாவமாகவும் காரணத்தில் நின்று உற்ப விக்கிற காரியமானது தனது காரணத்தோடே சமான காலத்தை உடைத்தானதாயிருந்து[2]. அப்படிப்பட்ட காரண காரியத்துக்குக் காலப்பிரமாணத்திலே பூர்வாபர விசேஷம் என்கிற முன்பின் என்கிறது இல்லை. காரணத்தில் நின்று காரியமானது சுபாவமாகவும் அவசியகமாகவும் உற்பவியமாற். சிற்பாசாரியனாலே விக்கிரகமானது பண்ணப்படுமாப்போலே, சுவாதந்திரிய மேரையாக காரணத்தில் நின்று காரியமானது உற்பவித்தால், அப்படிப்பட்ட காரியமானது காரணத்தோடே சமான காரியமாயிராமல், அப்படிப்பட்ட காரண காரியத் துக்குக் காலப்பிரமாணத்திலே பூர்வாபர விசேஷமென்கிற முந்தினதென்றும் பிந்தினதென்றும் உண்டாயிருக்கிறதென்று சொல்லக்கடவோம். ஆதலாலே, காரணமானது எப்போதும் ஒரு கண்டசீராய்ப் பெலமுடைத்தானதா யிருந்தாலும், சுவா தந்திரிய மில்லாமல் சுபாவமாகப் பிறப்பிக்கத்தக்க காரியத் தைப் பிறப்பிக்கிறப்போலே, சுபாவமாகப் பிறப்பிக்கக்கூடாத காரியத்தைப் பிறப்பிக்கலாம் என்று அங்கீகரிக்கக் கூடாது. ஆதலாலே, சுவாதந்திரிய மேரையாக காரணத்தில் நின்று உற்பவிக்கிற காரியத்தினுடைய சுபாவத்தைப் பார்க்கும் போது, தனது காரணத்தோடே சமான காலம் உடைத் தானதாய் இருக்கக்கூடாது என்கிறதினால், அப்படிப்பட்ட காரணம் முந்தினதென்றும், அப்படிப்பட்ட காரியம் பிந்தின தென்றும் அங்கீகரிக்கக்கடவோம். அல்லது இப்படிப்பட்ட காரியமானது காரியத்தோடே சமானகாலம் உடைத்தான தாய் இருக்கலா மென்று சொன்னோமானால், காரணத்தில் நின்று சுபாவமாக உற்பவியாத காரியம் காரணத்தில் நின்று சுபாவமாக உற்பவித்த காரியத்தினுடைய உற்பத்தி உடைத் தானதாய் இருக்கிறதென்று சொல்லுகிறதுக்கு ஒக்கும்.

**18.12** உலகம் அநாதியாய் இல்லாமல் கடவுளால் ஒன்று மில்லாமையிலிருந்து படைக்கப்பட்டது. ஆதலாலே, சர்வேஸ்வரனிடத்தில் நின்று லோகமானது அவசி யகமாகவுஞ் சுபாவமாகவும் உற்பவியாமற், கர்த்தரானவர் தனது சுவாதந்திரியமுள்ள திவ்விய மனசினாலே லோகத்தை

1. Necessario. 2. இருந்து: இருக்க.

உண்டாக்கினபோது, கர்த்தரானவர் முன்னே இருந்தா ரென்றும், லோகமானது பின்னே இருந்ததென்றும் சொல்ல வேணுமொழியக், கர்த்தரானவரும் லோகமானதும் அனுதியா யிருந்ததென்றும், கர்த்தராகிற காரணத்தோடு லோகமாகிற காரியமானது சமான காலத்தை உடைத்தானதாய் இருக்கிற தென்றுஞ் சொல்லக்கூடாது. இதுதவிர, மெய்யாகவே முழுதும் உண்டாக்கப்பட்ட வஸ்துக்களானது ஒன்றுமில்லாமல் இருக்கை யிலே உண்டாக்கப்பட்டதென்று அங்கிகரிக்க வேணும். உற்ப விக்கிறதுக்கு முன்னே வஸ்துவானது ஒன்றுமில்லாமலிருந்தால், அது அனுதியாய் இருக்கிறதென்று சொல்லக்கூடாது. அதே தென்றுல், முன்னே[1] என்கிற வார்த்தையானது அனுதி என்கிற மேரைக்குச் செல்லுமென்று சொல்லக்கூடாது. இதுதவிர, அனுதியாய் இருக்கிற வஸ்துவானது ஒரு க்ஷணத்திலேயானு லும் ஒன்றும் இல்லாததாயிருந்ததென்று சொல்லக்கூடாத திறல், அப்படிப்பட்ட வஸ்துவானது ஒன்றுமில்லாமல் இருக்கையிலே, சர்வேஸ்வரனுலே உண்டாக்கப்பட்டதென்று சொல்லக்கூடாது. அவ்வண்ணமே, அனுதியாயிருக்கிறது என் கிறது சுவாதந்திரியமுள்ள காரணத்திஞலே உண்டாக்கப் பட்ட பொருளினுடைய சுபாவத்துக்கு விருத்தமாய் இருக் கக்கொள்ள, பொருளானது அனுதியாயிருக்கிறது என்கிறது ஒன்றுமில்லாமல் உண்டாக்கப்பட்ட பொருளானது உண்டாக் கப்பட்ட பொருளாய் இராதென்று சொல்லுகிறதுக்கு ஒக்கும். ஆனுல் ஒரு பொருளிடத்திலே [2]ஏகவிஷயத்திலே உண்டு இல்லை என்று சொல்லப்படுகிற தப்பறையானது சர்வத்துக் கும் வல்லவராயிருக்கிற கர்த்தனுலே, உண்டாக்கப்படலாம் என்று சொல்லவும் கருதவும் கூடாது. ஆதலாலே உண்டாக் கப்பட்ட லோகமும் அதிலே உண்டாக்கப்பட்ட மனுஷசாதி யும் முன்னே ஒன்றுமில்லாமல் இருக்கையில் ஒரு காலத்திலே உற்பவித்து இருக்கத் துவக்கிச்சென்று சொல்லக்கடவோம்.

**18.13** உயர்வு தாழ்வு கொண்ட ஆதிமனிதரிடம் மறுபிறப்பு இல்லாததுபோல் பிற்கால மக்களிடம் இல்லை. இது இப்படியிருக்கையிலே, ஆரம்பத்திலே சர்வேஸ்

1. + இல்லை (பா. பே.) 2. Sub eodem respectu.

வர்னவர் உண்டாக்கின மனுஷர் இன்றென்று [3]கீர்த்திக் கத்தக்க [4]விசேஷ வியக்திகளாகிற மனுஷர் இருந்தார்களென்று சொல்லக்கடவோம். அவர்கள் ஒன்றுமில்லாமலிருக்கையிலே கர்த்தனுலே உண்டாக்கப்பட்டார்கள் என்கிறதினுல், முன்னே பிறந்தார்கள் என்றும், அவர்களுக்குப் பூர்வ சென்மம் உண் டாயிருந்ததென்றும் மதிகெட்டவனுனுலும் சொல்ல மாட்டான். முந்தின மனுஷருககுப் பிள்ளைகளும் பேரமாரும் பிறந்தார் கள். இவர்கள் ஒன்றுமில்லாம லிருக்கையிலே முன்னே பிறந் தார்களென்று சொல்ல வேண்டியிருக்கிறதினுல், இவர்களுக் குப் பூர்வ சென்மம் உண்டாயிருந்துதென்று சொல்லக்கூடாது. அப்படிப்பட்ட பேர்கள் பூர்வ செம்மமில்லாமற் சுகத்தையும் வியாதி ஆரோக்கியத்தையும் அனுபவித்து. மரணத்தை யடைந்தார்கள் என்கிறதுக்குத் சந்தேகமில்லை. இதுதவிர, அவர்களுக்குள் ஏற்றக் குறைச்சல் இல்லாமற் பெரியவர்கள் சிறியவர்கள் இல்லாமல் அக்காலத்திலே லோகம் நடந்த தென்று சொல்லக்கூடாதே. ஆதலாலே, சுக துக்கம் முதலான வியாதி ஆரோக்கியத்தினுடைய அனுபவமும் மரணமும் பெருமையும் இது முதலான விஷயங்களில் ஏற்றக்குறைச் சல்கள் முந்தின மனுஷனுக்கும் பூர்வசென்ம மில்லாமல் உண்டாயிருந்துதென்று அங்கீகரிக்கிறப்போலே, இக்காலத் திலே இருக்கிற மனுஷருக்கும் சுகதுக்க முதலானதுகளுடைய அனுபவமும், பெருமையில் ஏற்றக் குறைச்சலும், மரண முதலான நிர்ப்பாக்கியங்களும் பூர்வசென்ம மில்லாமல் உண்டா யிருக்கிறதென்று அங்கீகரிக்கத்தகும்.

**18.14 மனிதனின் பிறப்பு வரிசை அனுதி என்பது தப்பு.** பூர்வசென்ம மில்லையென்று கெட்டியாக ஒப்புவிக்கிற இந்த ஞாயத்தினுடைய வலுமையைப் பார்த்துப், பூர்வ சென்மம் என்கிற அபத்தத்தைத் திரும்ப ஸ்தாபிக்கிற துக்கு வேறே அபத்தமான மறுவுத்தரத்தைத் தேடி னுர்கள். அதேதென்றுல், முந்தமுந்தச் சர்வேசுரனுலே முந்தின மனுஷனுனவர்கள் உண்டாக்கப்படவில்லை என்று சொல்லி, மனுஷனுடைய [1]சென்ம பரம்பரை அனுதி

3. குறிப்பிட்ட. 4. தனிமனிதன்.

1. Series of births. பிறப்பு வரிசை.

யாய் நடந்து வருகிறதென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இந்தப் பிரத்தியுத்தரமானது ²பாதார்த்த சங்கியை முதலான ஞாயங்களினாலே அபத்தமென்று ஒப்புவித்தோம் என்கிறதினாலே, யிவடத்திலே திரும்ப அப்படிப்பட்ட ஞாயங்களைச் சொல்லக் கணக்கில்லை. மனுஷ சாதியானது உண்டாக்கப் பட்டுதென்று அங்கீகரிக்கிறபோது, அனாதியாய் இருக்கக் கூடாதென்று ஒப்புவிக்காப்போலே ஆச்சுது. இதுதவிர, சிறிது மனுஷரைச் சர்வேசுரன் அனாதியாய் உண்டாக்கினாரென்று அங்கீகரித்தாலும், அவர்கள் எத்தனை நாளைக்குப் பிற்பாடு பிள்ளை பெற்றார்களென்று சொல்லவேணும். அதேதென்றால், பிள்ளை பெறுகிறதுக்கு முன்னே தகப்பன்மார் இருந்தார்கள் என்கிறதுக்குத் தப்பாது. இப்படிச் சொல்லும் போது, பிள்ளைகள் அனாதியாய் இராததினால், மனுஷ சென்ம பரம்பரை அனாதியாய் இருக்கவில்லையென்று சொல்லிக் காட்டினாப்போலே ஆச்சுது. அல்லது பிள்ளைகள் அனாதியாய் இருந்தார்களென்று சொல்லும்போது, பிள்ளைகளானதுகள் ஒன்பது மாசந் தாயாருடைய கெர்ப்பத்திலே இருந்தார்களென்று சொல்லவுங் கூடாது, தோப்பன்மாருக்குப் பிற்பாடு பிள்ளைகள் பிறந்தார்களென்று அங்கீகரிக்கவுங் கூடாது. ஆனால், பூர்வசென்ம அங்கோரத்து நிமித்தமாக இத்தனை அபத்தங்களை ஒன்றுமேல் ஒன்றாய் அடுக்கி, ஒப்புக்கொள்ளுகிறதைக் காட்டிலும், ஓர் அபத்தமாகிற பூர்வசென்ம வர்த்தமானத்தை அங்கீகரியாமலிருக்கிறது புத்திமானுக்கு ஆன லக்ஷணமென்று சொல்லத்தகும். அதேதென்றால், இத்தனை ஞாயங்களினாலே பூர்வசென்மானது தப்பறையாய் இருக்கிறதென்று ஒப்புவிக்கப்பட்டபோதே, அத்தை வீண் வார்த்தையினாலே இன்னம் ஸ்தாபிக்க வேணுமென்று வருந்துகிறவன் 'பஞ்சிலே சரடு திரிக்கிறப்போலே கல்லிலே நாருரித்து அதினாலே கயிறு திரிக்க வருந்துகிறவன்' என்று சொல்லத் தகும்.

பதினெட்டாம் பாடம் முற்றும்.

(கிரந்தம்) ௩௱ *

2. எண்ணற்றது.   * 300

## பத்தொன்பதாம் பாடம்

**19.1 உலக ஆட்சி மறுபிறப்பை எண்பிக்கிறதா?** பூர்வ ஜசன்மத்திலே பண்ணின பாவ புண்ணியத்துக்கு வருகிற சென்மத்திலே ஆன பலன் வரமாட்டாதென்றும், அது நிமித்தமாகப் பாவங்கள் துலையமாட்டாதென்றும், ஆத்துமத்தினுடைய சுபாவத்துக்கும் ஆத்துமமானது தனது விருத்திகளைப் பண்ணுகிறதுக்கும் சகல நன்மை சுரூபமாயிருக்கிற கர்த்தனுடைய சுபாவத்துக்கும் அவர் நடத்தி வருகிற தப்பில்லாத கிரமத்துக்கும் மறு செென்மமானது விருத்தமாய் இருக்கிறதென்றும் இற்றைவரைக்கும் சொல்லப்பட்ட போன நாலு பாடங்கள் ஒப்புவித்தாப்போலே ஆச்சுது. ஆனபடியினாலே மறு ஜென்மமானது கப்பறையா யிருக்கிறதென்று காட்டப்பட்டுது. ஆனால், தெளிவற்ற பேர்கள் கர்த்தன் லோகத்தை நடத்துகிற வகையை அறியாததினாலே, அப்படிப்பட்ட மறு செென்மமாகிற தப்பறையைக் கற்பிக்கத்தக்கதாக அவர்களுக்குத் தோன்றின [1]நிமித்தங்களைச் சொல்லிக்காட்டின பிற்பாடு, அதுகள் மறுஜென்மங் கற்பிக்கப்படுகிறதுக்கு நல்ல ஞாயங்களாயிருக்க மாட்டாதென்று கர்த்தன் கிருபையினாலே வருகிற நாலு பாடங்களிலே சந்தேகமறக் காட்டக்கடவோம்.

**19.2 இயற்கையாய் வரும் ஏற்ற தாழ்வு இன்ப துன்பம் மறுபிறப்பாலன்றி எப்படி வந்தன?** சர்வேஸ்வரனுடைய நீதி திருவுளப்படியே மனுஷருக்குள்ளே நடந்து வருகிற லவுகீக பெருமையில் ஏற்றக்குறைச்சலும், [2]பிறந்தநாள் துவக்கி வியாதி ஆரோக்கியத்தை அவனவன் அனுபவிக்கிறது என்கிறதும், நடுவாந்தரத்திலே அவனவன் பாக்கிய நிர்பாக்கியத்தை அடைகிறதுக்கு [3]யோக்கிய காரணங் காணுதிருக்கிறது என்கிறதும், இந்த மூன்று நிமித்தங்களினாலே மாத்திரம் மறுஜென்மமானது அறியா மனுஷரினாலே கற்பிக்கப்பட்டுது என்கிறதுக்குத் தப்பாது. இதெல்லாந் தனித்தனியே பிரித்துச் சொல்லிக் காட்டும்போது, சத்தியமானது மிகவும் விளங்கும் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. "அதெப்படியென்றால், லோகத்திலே சிலபேர்கள்

1. காரணம். 2. மூலத்தில் 'பிறந்தநாள் துவக்கி' நடுவாந்திரத்துக்கு முன் வருகிறது. 3. தக்க

ராசாங்க முதலான துரைத்தனங்களேயும் அபிசுவரியங்களேயும் அனுபவிக்கவும் மகாராசாக்களாய்ப் பல்லக்கேறவும் பிறக்கிருர்கள். இது நன்மையா யிருக்கக்கொள்ளப், 'பலனுயிருக்க வேணும், பலனுயிருந்தால் பண்ணப்பட்ட புண்ணியத்தி னிமித்தமாக அது வரவேணும். இந்தச் சென்மத்திலே இவர்கள் ஒரு புண்ணியத்தையாகிலும் பண்ணவில்லை என்கிறதினுல், ராசாங்க முதலான நன்மைகளுக்குக் காரணமாயிருக்கிற புண்ணியத்தை இவர்கள் பண்ணுகிறதுக்கு வேறேயொரு சென்மத்திலே பிறந்திருக்க வேணுமென்று சொல்லக் கடவோம். இந்தடைவாகச் சரீர சம்பந்தமாயிருக்கிற ஆரோக்கியம் அழகு இது முதலான நன்மைகளோடே பிறக்கிறவர்களிடத்திலேயுங், காணப்பட்ட காரணங்களில்லாமல் நடுவாந்திரத்தில் இருந்தாப்போலே பாக்கியவான்களாய்ப் போகிறவர்களிடத்திலேயும் யோசிக்கலாம்.

"இத்தன்மையாக, நீச சாதிக்குள்ளே பிறந்த பேர்களேயுந், தாரித்திர முதலான நிர்ப்பாக்கியங்களிலேயும் வியாதிகளிலேயும் பிறந்தாள் துவக்கிக் கிடந்தழுந்தி இருக்கிற ஏழைகளேயும் பார்க்குமிடத்திலே, தாரித்திரம் நீசத்தனம் இது முதலான ஆக்கினை ரூபமான நிர்ப்பாக்கியங்களே அனுபவிக்கிருர்கள் என்கிறதுக்குக் தப்பாது. பாவமில்லாமல் ஆக்கினை வரமாட்டா தென்கிற ஞாயமுண்டா யிருக்கையிலே, இவர்கள் பண்ணின பாவத்து நிமித்தமாகத் தாரித்திர முதலான நிர்ப்பாக்கியங்களே அனுபவிக்க வேணுமொழியப், பண்ணப்பட்ட பாவங்களில்லாமல் இப்படிப்பட்ட நிர்ப்பாக்கியங்களாகிற ஆக்கினைகளே அனுபவிக்கிருர்களென்று சொல்லக் கடவதல்ல. இதிப்படி யிருக்கையிலே, நிர்பாக்கியங்களாகிற ஆக்கினைகளே இப்போது அனுபவிக்கிற பேர்கள் இப்படிப் பட்ட ஆக்கினைகளே அனுபவிக்கிறதுக்கான பாவங்களே இந்தச் சென்மத்திலே பண்ணுதபோதே, இவர்கள் வேறேயொரு சென்மத்திலே முன்னே பிறந்து இப்போது அனுபவிக்கிற நிர்ப்பாக்கியங்களாகிற ஆக்கினைகளுக்குக் காரணமாயிருக்கிற பாவங்களே அந்தச் சென்மத்திலே பண்ணிஞர்களென்று சொல்லிக்கொண்டு வருகிருர்கள். அவ்வண்ணமே.

4. வினைவு, காரியம்.

மறுசென்மம் கற்பிக்கிறதுக்கு இதே ஞாயம், பூர்வசென்ம அங்கீகாரமானது இவர்கள் மனசிலே நிலைபாக நிற்கிறதுக்கு, இதே அஸ்திவாரமொழிய மற்றப்படியல்ல ''

**19.3 இத்தகைய காரணங்கள் நகைப்பிற்குரியவை.** இந்த விஷயத்தைப் பத்தும் பத்தாய் விசாரித்து, அதை ஆராய்ந்து கொண்டோமானால், நடக்கத்தக்க ஆச்சரியமான து வார்த்தை முகாந்திரமாய் வர்ணிக்கத்தக்கதா யிராது. அதே தென்றால், ஒன்றுக்கும் ஆகாததுமாய் ஒன்றை [1]நிறுத்துகிற துக்குப் பெலமில்லாததுமாய் இருக்கிற [2]யுக்திகளினால் எண்ணப் படாத ஞாயங்களுக்குக் கேவலம் விருத்தமா யிருக்கிற மறு சென்மத்தின் பக்ஷத்தைச் சில பேர்கள் கற்பிக்த விதத்தையும், அத்தை நிலையாக நிறுத்தின வகையும், அத்தை அங்கீகாரம் பண்ணுகிற நீதியையும் புத்திமானாயிருக்கிறவன் பார்த்துக் தான் சிரிக்கிறதுக்கு இடங் கண்டுபிடிப்பானொழிய மற்றப் படியல்ல. அதேதென்றால், ஞானமில்லாத மிருகாதிகளாய் இராமல் மனுஷராயிருக்கிற பேர்களுக்கு இந்த அபத்தமான து எப்படி [3]சுபத்தமாய்த் தோன்றிற்றென்றும், சத்தியத்தைப் போலே அந்தத் தப்பறையை எப்படி அங்கீகாரம் பண்ணி னார்களோ என்றும் ஞாயங் காணாது என்கிறதினாலே, அநேகம் பாவங்களினாலே சர்வேஸ்வரனாலே கைவிடப்பட்ட பேர்களு மாய், அநேகம் பாவங்களினாலே தானே மதிகெட்ட பேர்களு மாய் இருக்கக்கொள்ள, மறுசென்ம பக்ஷத்தைக் கற்பித்தார்க ளொழிய, மற்றப்படியல்ல என்று எண்ணிக்கொண்டு வரத் தக்கதாகும். இதெல்லாம் மறுசென்மங் கற்பித்ததுக்கு அவர் கள் சொல்லுகிற யுத்திகளை ஒன்றுக்கும் ஆகாத யுத்திக ளென்று நாம் ஒப்புவிக்கிறபோது, மிகவும் வெளியாகும் என்கிறதுக்குத் தப்பாது.

**19.4 உலக வாழ்க்கைக்குப் பல்வகைப் பொருள்கள் தேவை.** சகலத்தையுந் தப்பில்லாக் கிரமத்தோடு நடத்துகிற கர்த்தரானவர், லோகமானது நன்றாய் நடக்க வேணுமென்று பின்னபேதமுள்ள அந்தஸ்திலே யிருக்கிற எண்ணப்படாத பொருட்களை உண்டாக்கினாரொழியப், பண்ணப்பட்ட பாவ

1. To prove. 2. ஞாயங்கள் 3. சுபத்தம் X அபத்தம்

புண்ணியத்து நிமித்தமாகப் பலபல அந்தஸ்திலே இருக்கிற சூரியன் முதலான நக்ஷத்திரங்களையும், வாயு ஆகாசம் முதலான பூதியங்களையும் உண்டாக்கவில்லையென்று அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். அதேதென்றால், லோகத்துக்கு வேண்டியிருக்கிற இப்படிப்பட்ட சாதாரண நன்மையானது ஆண்டவனுடைய பரம சமார்த்திமுள்ள திருவுளக் கட்டளைப் படியே உண்டாச்சுதென்று சொல்ல வேண்டியிருக்கிறதொழிய, பொம்மன், திம்மனுடைய மனசினாலே பண்ணப்பட்ட பாவ புண்ணியத்தின் நிமித்தமாக ஒருத்தன் சூரியனைப் போனானென்றும், வேறொருத்தன் சந்திரனைப் போனானென்றும், இன்னும் அனேகம் பேர்கள் நக்ஷத்திரங்களாய்ப் பிறந்தார்களென்றும் யாதொருத்தன் சொன்னான் என்கிறதினாலே, எல்லாரும் சிரிக்கிறதுக்கு இடங் கொடுத்தானேழிய, அவனாலே சொல்லப்பட்ட வார்த்தையானது அங்கீகரிக்கத் தக்க விசேஷமென்று சொல்லத் தகாது.

**19.5. மழை, இடி, வால் நட்சத்திரத்துக்கு இயற்கையான காரணம்.** ஆனால், சில பேர்கள் இந்த விசேஷத்திலே சொல்லிக்கொண்டு வருகிற முழுப் பயித்தியம் கொண்ட வார்த்தைகளை வெளிப்படுத்த வேணுமொழிய, அதுகளைச் சொல்லாமல் இருக்கவொண்ணாது. அதேதென்றால், பூமியிலே நின்று சூரியனானது பலபல ஆவிகளை ஆன காலத்திலே எடுத்து, அதுகளை மேலே [1]எழுப்புகிறதென்று கண்டுகொண்டு வருகிறோம். இதெல்லாம் மலைகளுக்குண்டான ஸ்தலத்திலே [2]வெகுத்துவமாக உண்டாம். அதேதென்றால், ஈரமும் சீதளமுமாயிருக்கிற மலையிலே இத்தொகைப்பட்ட ஆவிகளைச் சூரியனானது வெகுத்துவமாக எடுத்துக் கிளப்புகிறதினால், விடியற் காலத்திலே புகைபோல் இத்தொகைப்பட்ட ஆவிகள் கிளம்புகிறதென்று பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இத்தொகைப்பட்ட ஆவிகள் ஆகாசத்தினுடைய மிகுந்த குளிருள்ள ஸ்தலத்திலேறி, அவ்விடத்திலே கெட்டியாய்ப்போய் மேகமாய்ச் செனிக்கும். அது சூரிய [3]ரசமியினாலே அழிந்து போனால், மழையாகப் பெய்யும், இப்படிப்பட்ட ஆவிகளுக்

1. கிளப்பு (பா. பே.) 2. பெரும்பாலும் 3. கதிர்

குள்ளே அக்கினி ரூபமாயிருக்கிற உஷ்ணமுள்ள அங்கிஷங்களானதுகள் ஈரமும் சீதளமுமாய் இருக்கிற மேகத்துக்குள்ளே இருக்கமாட்டாமல், பீரங்கியிலே நின்று பிறப்படுகிற அக்கினியானது ஆகாசத்தை மிகுந்த பலத்தோடு பிளக்கிறதினால் அது சத்திக்கிறாப்போலே, மேகத்தைப் பிளந்து அதினின்று பிறப்படுகிற அக்கினி ரூபமான ஆவியானது இடியாகிற சத்தத்தைப் பண்ணிக்கொண்டு வரும். அத்தோடுகூட மண்ணைப்போல் கெட்டியான ஆவியினுடைய யாதொரு அங்கிஷமானது உண்டாயிருந்தால், பீரங்கியில் நின்று தள்ளப்பட்ட குண்டைப்போலே அப்படிப்பட்ட கெட்டியான ஆவியானது மேகத்தில் நின்று தள்ளப்பட்டுப் பூமியிலே [3]இடியாய் விழும். இதெல்லாம் பண்ணப்பட்ட புண்ணியத்தின் நிமித்தமாக வந்துதென்று இவர்கள் சொல்லாமல், அதிலே சம்பவித்திருக்கிற ஒரு விசேஷமானது பாவ புண்ணியத்தினாலே வந்துதென்று சொல்லுகிறார்கள்.

அதேதென்றால், சில முறை ஈரமும் சீதளமுமாயிருக்கிற ஆவியானது கெட்டியாயிராமல் அதிலே இருக்கிற அக்கினி ரூபமான அங்கிஷமானது யாதொன்றுண்டு, அதில் நின்று பூமியிலே அது விழுகிறபோது, பிரகாசமாயிருக்கிற [4]நக்ஷத்திரம் போலே கண்ணுக்குத் தோன்றும். இதெல்லாம் சுபாவ காரணங்களினாலே இந்தடைவாக உற்பவித்து நடந்துவரும்போது, இந்த விஷயத்திலே முழு மதிகெட்டவர்கள் கற்பித்த வியர்த்த கதைக்கட்டாவது: பூலோகத்திலே திரிந்த மனுஷனானவன் அநேகம் புண்ணியம் பண்ணினதினால் நக்ஷத்திரமாய்ப் போய்த், [1]தேஜஸ் உள்ள வடிவைக் கொண்டிருக்கிறவனாய்த், தான் பண்ணின புண்ணியங்களுடைய பலன்களைச் சுவர்க்கத்திலே [2]பொசிப்பான். அதுகளைப் பொசிக்கத்தக்க நாள் ஒழிந்த பிற்பாடு சுவர்க்கத்திலே நின்று தள்ளப்பட்டவனாய் விழுவான். அந்தப் பிரகாசமாயிருக்கிற புண்ணியவானானவன் புல்லின் மேலே விழுந்து, அப்படிப்பட்ட புல்லானது எந்த மிருகத்தினாலே பக்ஷிக்கப்பட்டது, அது அதன் வயிற்றிலே அதனுடைய சுக்கிலமாய்ப்போய், அந்த மிருக

3. இது அக்கால அறிவியலார் கொள்கை 4. meteor, வால்நட்சத்திரம்

1. ஒளி 2. நுகர், பருகு

மாய்ப் பிறக்கும். அத்தன்மை போல், அந்த மிருகமானது எந்த மனுஷனாலே பக்ஷிக்கப்பட்டதோ அது அப்படிப்பட்ட மனுஷனுடைய வயிற்றிலே சுக்கிலமாய் அந்தச் சாதியுள்ள மனுஷனாய்ப் பிறப்பார்களென்று சொல்லக்கடவார்கள். அவ்வண்ணமே, சண்டாளன் முதலான நீசர்களினாலே பக்ஷிக்கப்பட்ட பசுவானது நீசருடைய வயிற்றிலே நீசருடைய சுக்கிலமாய்ப் போய் இனிமேல் சண்டாள சென்மத்தை அடையும் என்று சொல்லக்கடவது.

**19.6.** எவரும் புதிதாய் விண்மீனாய்ப் போக **முடியாது.** இத்தனை ஒன்றுக்கொன்று ஒவ்வாமலிருக்கிற விபரீத விசேஷங்களை இவர்கள் கற்பித்ததைப் பார்த்து, விழித்திருக்கையிலே இவர்கள் கற்பித்த [3]அன்னியோன்னிய விருத்த விசேஷ தப்பறைகளுக்குச் சரியான அபத்த விசேஷங்களை நித்திரையிலே சொற்பனம் காண்கிற பேர்களும் காண மாட்டார்கள். அதேதென்றால், லோக ஆரம்பத்திலே கர்த்தரானவர் சந்திர சூரியனை உண்டாக்கினாப்போலே நக்ஷத்திரங்களையும் உண்டாக்கினாரென்று சொல்ல வேணும். இது தவிர, ஒவ்வொரு நக்ஷத்திரமானது பூமியைக் காட்டிலும் பெரிதாய் இருக்கிறதென்று சோதிட சாஸ்திரத்தினாலே நிச்சயமாய் இருக்கும். பின்னையும், அந்தந்த மரத்திலே கனுவானது அசையாமல் பிறந்திருக்கிறாப் போலே, சந்திர சூரியன் முதலான நக்ஷத்திரங்களானதுகள் மேலாயிருக்கிற அந்தந்த மண்டலங்களிலே கர்த்தன் திருவுளப்படியே பதிந்திருக்கிறாப்போலே அசையாமல் பிறந்திருக்கிறதென்று சொல்ல வேணுமொழிய [4]மற்றப்படியல்ல. இதிப்படி இருக்கையிலே, நடுவாந்தரத்திலே நவமான நக்ஷத்திரம் பிறந்ததாவது ஏது? குரு சாபத்தினாலே பறையனாய்ப் போன திருசங்கு ராசாவானவன் சுவர்க்கத்திலே போய் அதில் நின்று தள்ளப்பட்டவனாய் விழுகிற போது, விசுவாமித்திரனாலே நிறுத்தப்பட்டு நக்ஷத்திரமாய்ப் [1]பிறந்தானென்றும், பிர்மாவானவன் கலை ரூபத்தை எடுத்து மான் ரூபத்தை எடுத்துக்கொண்டிருக்கிற தான் பெற்ற

3. ஒன்றுக்கொன்று முரணான 4. விண் மீன்கள் அசையாதவை என்பது 17-ம் நூற்றாண்டு வான நூலாரின் கொள்கை.

1. பிறந்திருக்கிற (பா.)

மகளோடு காட்டிலே அநேக நாள் புணர்ச்சி பண்ணினதினுல் பிரமாவானவன் ருத்திரனுலே தலை வெட்டுண்டுபோய் அந்தத் தலையானது மிருகசீர்ஷ நக்ஷத்திரமாய்ப் போனதென்றும், ருத்திர சம்பந்தமாயிருக்கிற திருவாதிரை என்கிற நக்ஷத்திர மானது சிவந்திருக்கக்கொள்ள, மிருகசீர்ஷத்தை இன்னமும் உபாதிக்கிறதென்றும், அவனவன் புண்ணியம் பண்ணினதினுல் நக்ஷத்திரமாய்ப் போகிறதென்றும், இத்தொகைப்பட்ட எண்ணப்படாத தப்பறை விசேஷங்களை விசாரிக்குமிடத்தில், பொழுதுபோக்க வேணுமென்கிற [2]போக்கணங்கெட்ட கிழவிகள் தனது பேரர்களுக்குச் சொல்லிவரும் கட்டுக்கதைகள் என்று சொல்ல வேணுமொழிய, மற்றப்படியல்ல. ஆதலாலே, புத்திமான்களாயிருக்கிற பேர்கள் அதுகள் பொய்யான விசேஷங்களாய் இருக்கிறதென்று சந்தேகப்படாமல் விசாரிப் பார்கள் என்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினுலே, அதுகளைக் கண்டிக்கிறதிலே [3]வியர்த்த காலக்ஷயம் பண்ணுமல், மறுசென்மத்தை ஒப்புவிக்கிற மற்ற யுத்திகளுக்குப் பிரத்தியுத்தாரம் சொல்லக்கடவோம்.

**19.7.** தம்முள் வேறுபட்ட, ஏற்றக் குறைச்சலான பொருள்கள் உலகத்திற்குத் தேவை. இற்றைவரைக்கும் இந்தப் பாடத்திலே சொல்லப்பட்ட ஞாயத்தைக் கொஞ்சத் துக்குள்ளே சொல்லவேணுமானுல், இந்தவாகச் சொல்லிக் காட்டலாம். சகலத்தையும் உண்டாக்கிறதிலே முடிவில்லாத பெலமுடையவருமாய்ச், சகலத்தையும் தப்பில்லாக் கிரமத் தோடு நடத்துகிறவருமாய் இருக்கிற கர்த்தரானவர் சந்திரன் முதலான நக்ஷத்திரங்களையும், அக்கினி முதலான பூதியங் களையும், லோகத்திலுண்டான மற்றுண்டான அநேக வஸ்துக் களையும் ஒருவகை ரூபத்தை உடைத்தானதுகளுமாய், ஒரு அந்தஸ்திலே இருக்கிறதுகளுமாய் உண்டாக்கலாம். பெலம் அழகு, பெருமை இது முதலான நன்மை வகையில் ஏற்றக் குறைச்சல் உள்ளதுகளாய் இருக்கிற எணணப்படாத பொருட்களை உண்டாக்கிருரொழியப், பெல முதலான நன்மை யினுடைய விஷயங்களிலே சரியானதுகளாகப் பொருளையெல் லாம் உண்டாக்கவில்லை என்று பார்த்துக்கொண்டிருக்கிரும்.

2. வக்கற்ற 3. வீண் நேரம் போக்கல்.

இந்தடைவாகக் கர்த்தரானவர் பின்னபேதமுள்ள பொருள்களை உண்டாக்கினதுக்கு ஞாயமுள்ள காரணத்தை விசாரிக்கு மிடத்திலே, பற்பல அந்தஸ்துகளிலே இருக்கிற பொருள்களில்லாமல், உலகமானது நன்றாயிருக்க மாட்டாது என்கிறதினால், உலகமானது குறைவில்லாமல் நன்றாயிருக்கிறதுக்குப் பலபல அந்தஸ்துக்களிலே கிரமத்தோடு அடங்கியிருக்கிற பொருளானது அவசியமாய் வேண்டியிருக்கிறதென்று சொல்லக் கடவதொழியக். கிரமத்தோடு பொருள்களானதுகள் பலபல அந்தஸ்துகள் உள்ளதுகளாய் இராமல் பொருள்களெல்லாம் நன்மைகளுடைய விசேஷங்களில் ஒருகண்டசீராய்ச் சரியானதுகளாய் இருந்தால், உலகமானது நன்றாயிருக்க மாட்டாதென்று அங்கீகரிக்கத்தக்க சந்தேகமற்ற சத்தியமாகும். ஆனபடியினாலே, கர்த்தரானவர் நன்மையிலே, ஏற்றக்குறைச்சலோடு பொருள்களை உண்டாக்கினதுக்கு லோகத்திலே [1]சாதாரண நன்மை உண்டாகவேணுமென்கிற திருவுளமானது காரணமென்று சொல்லத்தகும்.

**19.8. மக்கள் சமுதாயத்துக்கும் ஏற்றதாழ்வு தேவை.** இந்தடைவாகப் பலபல பொருட்களை ஏற்றக் குறைச்சலோடு கர்த்தன் உண்டாக்கிறதுக்கும் நடத்துகிறதுக்கும் லோகத்திலே நடக்கத்தக்க சாதாரண நன்மையானது காரணமாய் இருக்கிறதென்று சொல்லப்படுமாப்போலே, லவுகீக பெருமை முதலான அயிசுவரியங்களிலே சரிசமானராக மனுஷரைக் கர்த்தரானவர் உண்டாக்காமல், நன்மையோடு லோகமானது நடக்க வேணுமென்கிறதுக்கு, ராசாங்க சேவுக, துரைத்தனமும் நீசத்தனமும் ஆகிற பலபல அந்தஸ்துக்களிலே மனுஷனை உண்டாக்கினாரென்று சொல்ல வேணுமொழிய, அறியப்படாததுமாய் ஞாயத்துக்கு விருத்தமானதுமாயிருக்கிற பூர்வ ஜென்மத்திலே பண்ணப்பட்ட பாவ புண்ணிய நிமித்தமாகப் பலபல அந்தஸ்துள்ள மனுஷரைக் கர்த்தரானவர் உண்டாக்கினார் என்று அங்கீகரிக்கிறதுக்கு இடங்காண மாட்டாது. இந்த ஞாயத்தை விரிவாக வெளிப்படுத்தக்கடவோம். லோகமானது நடக்கும் பிரகாரமாய்ச் சர்வ ஞாயமுள்ள கர்த்தரானவர் லோகத்தை நடத்தவேணுமொழிய, லோகமானது நடவாத

1. பொது.

பிரகாரமாகக் கர்த்தரானவர் லோகத்தை நடத்த வேணுமென்று சொல்லவும் எண்ணவும் கூடாது என்றிருக்கையிலே, மனுஷரெல்லாரும் பலபல அந்தஸ்துகளிலே இராமல், ஒரே அந்தஸ்திலே இருந்தார்களானால், உலகமானது நடக்க மாட்டாதென்கிறதினால், பலபல அந்தஸ்துக்களுள்ள மனுஷரானவர்கள் உண்டாயிருக்கிறது என்கிறது லோகமானது நடக்கும் பிரகாரமாய் நடக்கிறதுக்கு வேண்டியிருக்கிற கிரமமென்று சொல்லத்தகும்.

பின்னையும், மனுஷரென்னப்பட்ட யாவரும் ஒரே அந்தஸ்தில் இருந்தார்களானால் உலகம் நடவாதென்கிறதினால், லோகம் நடக்கும் பிரகாரமாய் லோகத்தை நடத்துகிற கர்த்தரானவர், லோகம் நன்றாய் நடக்கிறதுக்கு மனுஷரெல்லாரையும் ஒரு அந்தஸ்திலே உண்டாக்காமல் பலபல அந்தஸ்துகளுள்ள மனுஷரை உண்டாக்கினாரென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. இது எல்லாத்தையும் தனித்தனியே ஆராய்ந்து கொண்டோமானால், வெளியாகும். எல்லாரும் ராசாக்களாயிருந்தோமானால், [1]சேவுகர் எங்கே? சேவுகரேயில்லாமல் உலகம் நடக்கக்கூடுமோ? எல்லோரும் ஊழியங் கொள்ளுகிற பேர்களாய் இருந்தோமானால், சம்பளங் கொடுத்து ரக்ஷிக்கிற பேர்கள் காணக்கூடுமோ? அதில்லையே! ஆனபடியினாலே, ராசாங்க முதலான பெருமைகளினாலேயும் அயிசுவரிய முதலான செல்வங்களிலேயும் ஏற்றக்குறைச்சலுள்ள மனுஷர் லோகத்திலே இல்லாவிட்டால், உலகம் ஒரு நாளைக்கு முதலாய் நன்றாய் நடக்கமாட்டாது என்கிறதினால், தப்பில்லாக் கிரமத்தோடு சகலத்தையும் நடத்துகிற கர்த்தரானவர் இராசாங்க முதலான அயிசுவரியங்களில் ஏற்றக்குறைச்சலுள்ள மனுஷரை உண்டாக்கினதுக்கு லோகமானது நன்றாய் நடக்க வேணுமென்ற திருவுளமானது காரணமாயிருந்துதென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல.

**19.9** இதுக்குக் கெட்டியான ஞாயமேதெனில், பொருளானது குறைவில்லாமல நன்றாயிருக்கிறதுக்கு வேண்டியிருக்கிற நன்மை யாதொன்றுண்டு, பொருளின் காரணமான

1. ஊழியர்

வருமாய்ப் பொருளை நடத்துகிறவருமாய் யாதொருத்தன் உண்டு. அவர்தானே அப்படிப்பட்ட நன்மையைப் பொருள்களுக்குக் கட்டளையிட வேணுமொழிய, வேறே யொரு நிமித்தத்தினாலே அப்படிக்கொத்த வேண்டின நன்மையானது பொருளுக்கு வந்திருக்கிறதென்று சொல்லக்கூடாது என்கிறதினாலே, மனுஷருக்குள்ளே உண்டாயிருக்கிற ராசாங்க முதலான அயிசுவரியங்களில் ஏற்றக்குறைச்சலானது லோகம் நன்றாய் நடக்கிறதுக்கு வேண்டின நன்மையாயிருக்கக்கொள்ள, அப்படிப்பட்ட நன்மையானது லோகத்துக்குக் காரணமுமாய், லோகத்தை நடத்துகிறவருமாய் இருக்கிற கர்த்தனுடைய திருவுளப்படியே லோகத்துக்கு வரவேணுமொழியப், பொம்மன் திம்மன் பண்ணின பாவ புண்ணியத்து நிமித்தமாக இப்படிப்பட்ட நன்மையானது லோகத்துக்கு வரவேணுமென்று மதிகெட்டவன் சொல்லுவானேழிய மற்றப்படியல்ல. அதெப்படியென்றால், விக்கிரகத்தினுடைய மேரைக்கு வேண்டியிருக்கிற கை, கால், கண், மூக்கு, இதுமுதலானதுகள் விக்கிரகத்தினுடைய காரணத்தினாலே விக்கிரகத்துக்கு வரவேணுமொழிய மற்றப்படியல்ல என்றாற்போலே, பெரிய விக்கிரகமாகிற லோகத்துக்குப் பலபல அவையவங்கள்போலே வேண்டியிருக்கிற பலபல அந்தஸ்துள்ள மனுஷரானவர்கள் லோகத்தினுடைய காரணமாகிற கர்த்தன் திருவுளப்படியே வருகிறதென்று சொல்ல வேணுமொழிய, பொம்மன் திம்மன் பூர்வசென்மத்திலே பண்ணின பாவ புண்ணியத்து நிமித்தமாக, லோகமாகிற விக்கிரகத்துக்குத் தனது அவையவங்களானதுகள் வந்ததென்று சொல்லவும் எண்ணவுங் கூடாது. இதெல்லாம் வருகிற பாடத்திலே இன்னும் அதிகமாக விளக்கிக் காண்பிக்கக்கடவோம்.

பத்தொன்பதாம் பாடம் முற்றும்.

(கிரந்தம்) உா *

* 200

## இருபதாம் பாடம்

**20.1** 'அண்டத்திலுள்ளது பிண்டத்தில், பிண்டத்திலுள்ளது அண்டத்தில்' என்ற பழமொழி. போனபாடத்திலே, சொல்லப்பட்ட சத்திய விசேஷத்தை லோகத்திலே நடந்துவருகிற ஒரு பிரசித்த வார்த்தையினால் ஒப்புவிக்கலாம். லோகத்திலே நடந்துவருகிற பிரசித்த வார்த்தையாவது: 'அண்டத்திலே உண்டானதெல்லாம் பிண்டத்திலே உண்டு' என்றும், 'பிண்டத்திலே உண்டானதெல்லாம் அண்டத்திலே உண்டு' என்றும் சொல்லுகிற வார்த்தையானது, எல்லாரும் அறிய லோகத்திலே பிரசித்தமாய் நடந்துவருகிறது என்கிறதுக்குத் தப்பாது. லோகத்திலே நடந்துவருகிற இப்படிப்பட்ட [1]பிரத்தியக்ஷ வார்த்தைக்கு இந்தடைவாக அர்த்தத்தைச் சொல்லக்கடவோம். [2]அண்டமானது சரீரத்துக்குச் சரியென்றுன்றும், [3]பிண்டமானது அண்டத்துக்குச் சமானமென்றும் அங்கீகரிக்கிறபோது, அண்டமானது [4]பெரிய லோகமென்று சொல்ல வேண்டியிருக்கையிலே, பிண்டமானது [5]சின்ன லோகமென்று சொல்லக்கடவோம். பிண்டமானது சின்ன சரீரமென்று சொல்லும்போது, அண்டமானது பெரிய சரீரமாயிருக்கிறதென்று சொல்லலாம் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. முன்சொன்ன பிரதியக்ஷ வார்த்தைக்கு இதே ஒப்புக்கொள்ளத்தக்க தாற்பரியமாகும். அவ்வண்ணமே, சின்ன லோகமாகிற பிண்டமானது நன்றாய் இருக்கிறதுக்குப் பல பல அவையவங்கள் வேண்டியிருக்கிறாப்போலே, பெரிய சரீரமாகிற அண்டமானது குறையற்ற பிரகாரமாய் நன்றாய் இருக்கிறதுக்குப் பல பல அந்தஸ்துகளுள்ள மனுஷராகிற அவையவங்களானதுகள் அண்டமாகிற சரீரத்துக்கு உண்டாயிருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது.

**20.2** உடலும் உலக அமைப்பும். அதேதென்றால், சின்ன லோகமாகிற சரீரத்துக்குத் தலையானது வேண்டியிருக்கிறாப்போலே, அண்டமாகிற பெரிய சரீரத்துக்குத் தலையான ராசாக்கள் முதலான பெரியவர்கள் உண்டாயிருக்க

1. பழமொழி. 2. உலகம். 3. உடல். 4. Macrocosm.
5. Microcosm.

வேணும். சின்ன லோகமாகிற சரீரம் நன்ருயிருக்கிறதுக்குக் கண்கள் உண்டாயிருக்க வேணுமே, அம்மருவாதிய பெரிய சரீரமாகிற அண்டமானது நன்ருய் இருக்கிறதுக்குக் கண்களாகிற பிரமாணர் முதலான வித்தியாபாரகரும் ஞானிகளும் உண்டாயிருக்கவேணும் என்கிறதுக்குத் தப்பாது. பின்னையும் சின்ன லோகமாகிற சரீரமானது குறையில்லாமல் நன்மை யோடே இருக்கிறதுக்குஅது வாயை உடைத்தானதா யிருக்க வேணுமே. அத்தன்மைபோல், அண்டமாகிறபெரிய சரீரமானது குறையில்லாமல் நன்மையோடே இருக்கிறதுக்கு வாய்க்குச் சரியான மகாத்துமாக்கள் லோகத்திலே உண்டாயிருக்கவேணும். அப்படிப்பட்ட பேர்கள் [1]தர்ம சரித்திரமாகிற பிழைக்கும் வழியை அறியாத பேர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறதினுல், அப்படிப்பட்ட குருக்கள் முதலான பெரியவர்கள் வாய்க்குச் சமானமாய் இருக்கிருர்களென்று யோசிக்கக் கடவோம். பின்னையும், சின்ன லோகமாகிற சரீரத்துக்குக் காது வேண்டியதாய் இருக்குமாப்போலே, காதுகளாய் இருக்கிற உபதேசங்கள் கேட்கிற சீடர்களான பேர்கள் அண்டமாகிற பெரிய சரீரத்துக்கு உண்டாயிருக்கவேணும். இதுதவிரச் சின்ன லோகமாகிற சரீரமானது பிழைக்கும்படிக்குக் கைகள் உடைத்தானதாய் இருக்கவேணும், அம்மருவாதியே, அண்டமாகிற பெரிய சரீரமானது பிழைக்கிறதுக்குக் கைகளுக்குச் சமானமா யிருக்கிற [2]கிரிஷி பாரகரும், ஊழியர் முதலான எண்ணப்படாத வேலைகளைப் பண்ணிக்கொண்டுவருகிற பேர்களும் அப்படிப்பட்ட அண்டமாகிற பெரிய சரீரத்துக்கு அவசியமாய் உண்டாயிருக்க வேணுமொழிய மற்றப்படியல்ல. இதன்றியே, சின்ன லோகமாகிற சரீரமானது நடக்கிறதுக்குக் கால் உள்ளதா யிருக்கவேணு மென்கிறுப்போலே, அண்டமாகிற பெரிய சரீரமானது கிரமத்தோடு பாங்காகவே நன்ருய் நடக்கிறதுக்கு அது காலாகிற நீச சாதியுள்ள பேர்களை உடைத்தானதா யிருக்கவேணும். அதேதென்ருற், காலில்லாத சரீரமானது நடக்க மாட்டாதது போலே, லோகத்துக்கு வேண்டியிருக்கிற அந்தந்த ஈன வேலைகளைப் பண்ணிக்கொண்டு வருகிற நீசரான பேர்கள் லோகத்திலே இல்லாவிட்டால், நீசரில்லாத லோகமானது நடக்க அறியாது என்கிறதுக்குத் தப்பாது.

1. நல்லொழுக்கம் 2. குடியானவர்.

20.3. உடலுறுப்பெல்லாம் உயர்ந்ததாய்ப் படைக்காத கடவுள் உலகில் அனைவரையும் உயர்ந்த பதவியில் படைக்கவில்லை. இது இப்படி இருக்கையிலே, பிண்டமாகிற சரீரத்தை உண்டாக்கின கர்த்தனைப் பார்த்து 'ஆண்டவரே பிண்டமாகிற சரீரத்திலே இத்தனை அவையவங்களை உண்டாக்குவானேன்?' என்றும், 'தலையானது உத்தம அங்கமுமாய்க் கண்ணானது நல்ல அவையமுமாய் இருக்கையிலே, சரீரமெல்லாம் உத்தம அங்கமுமாய்க் கண்ணுமாய் ஏன் உண்டாக்காதே போனீர்?' என்றும் கேட்டோமானால், சின்ன லோகமாகிற சரீரத்தை உண்டாக்கிற பரம ஞான சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் இப்படிப்பட்ட விசேஷக் கேள்விகளுக்குச் சொல்லத்தக்க பிரத்தியுத்தாரமாவது: மதிகெட்டவனே, சரீரமெல்லாம் தலையாய் இருந்தால், நடக்கிறதுக்குக் கால் எங்கே? சரீரமெல்லாம் கண்ணாயிருந்தால் [1]ஜீவனோபாயம் என்கிற பலபல வேலைகளைப் பண்ணி வருகிறதுக்குக் கையானதுள் எங்கே?'— அவ்வண்ணமே, வேறுபட்டதுகளுமாய் மனுஷனுடைய மேல் கீழானதுமாயிருக்கிற அவையவங்கள் இல்லாமல் சரீரமானது இருக்கமாட்டாததினால், அப்படிப்பட்ட சரீரமானது தனது சுபாவத்திலே குறையில்லாமல் நன்றாய்ப் பிழைத்துத் திரிய வேணும் என்கிறதினால், மேல் கீழான அந்தஸ்துள்ள அவையவங்களை உடைத்தான சரீரத்தைக் கர்த்தன் உண்டாக்கினரொழிய மற்றப்படியல்ல.

இந்தவகையாக அண்டமாகிற பெரிய சரீரத்தை உண்டாக்கின சகலத்தையும் அறிந்த சர்வேஸ்வரனைப் பார்த்து, "இப்படிப்பட்ட அண்டமாகிற லோகத்திலே பலபல அந்தஸ்திலே இருக்கிற மனுஷரான ராசாக்களையும், சேவுகரையும், பல்லக்குச் சுமக்கிற பேர்களையும், பல்லக்கு ஏறுகிற துரைகளையும், அயிசுவரியத்தினாலே கனமான பேர்களையும், தாரித்திரயத்தினாலே ஏழைச் சாதிகளையும் இவர்கள் முதலான வேற்றுமையான மனுஷரை ஏன் உண்டாக்கினீர்?' என்று கேட்டோமானால், முன்சொன்ன பிரத்தியுத்தாரம் போலே இந்தக் கேள்விக்குக் கர்த்தரானவர் சொல்லத்தக்க பிரத்தியுத்தாரமும் இருக்குமேயொழிய மற்றப்படியல்ல. அதெப்படியென்றால், தலை

1. பிழைக்கும் வழி

போலே இருக்கிற ராசாக்களான துரைகள் உத்தம அங்கம் போலே மேலான அந்தஸ்திலே இருக்கிறபேர்கள் என்கிறதுக்குத் தப்பாது. ஆனால் எல்லாரும் தலைபோலே ராசாக்களாய் இருந்தால், லோகமானது பிழைக்கிறதுக்கு வேண்டியிருக்கிற [2]பயிர்ச்செலவு முதலான வேலைகளைப் பண்ணுகிற குடியானவர்கள் எங்கே? கண்ணுகிற பிராமணர் முதலான வித்தியாபாரகரையும் ஞானிகளையும் விசாரிக்குமிடத்திலே, அப்படிப்பட்ட பேர்கள் உத்தம புருஷர்களென்றும், லவுகீக பெருமையினுடைய மேலான அந்தஸ்திலே இருக்கிற பேர்களென்றும் மற்றுண்டான மனுஷருக்குப் [3]பூச்சியர் என்றும் சொல்லக் கடவோம். ஆனால் எல்லாரும் கண்ணுகிற பிராமணர் முதலான வித்தியாபாரகராய் இருந்தோமானால், எல்லாரும் பிழைக்கிறதுக்கு வேண்டியிருக்கிற தரையிலே நடக்கிற கால்போலே நீசமான நடக்கை உள்ள சண்டாளர் முதலான பேர்கள் லோகத்திலே இல்லாதே போகவேணும். அவ்வண்ணமே, பலபல அவையவங்கள் இல்லாமல் சின்ன லோகமாகிற சரீரமானது பிழைக்க மாட்டாததுபோல, பல பல அவையவங்களுக்குச் சரியான மேல் கீழான அந்தஸ்திலே இருக்கிற சாதிகள் இல்லாமல் பெரிய சரீரமாகிற லோகமானது நடக்கமாட்டாது. ஆனபடியினாலே, லோகமானது நன்றாய் நடக்கிறதுக்குப் பல பல அந்தஸ்துள்ள மனுஷரை லோகத்திலே கர்த்தரானவர் கட்டளையிட்டாரென்று சொல்ல வேணுமொழியப், பூர்வ சென்மத்திலே பண்ணப்பட்ட பாவ புண்ணிய நிமித்தமாக இப்படிப்பட்ட தப்பில்லாக் கிரமம் வந்துதென்று சொல்லக்கடவோமல்ல.

**20.4. உலக ஏற்ற தாழ்வைக் கண்டு இடறல் படுவாரின் கூற்று.** அவ்வண்ணமே, லோகமானது ஈடேறுகிறதுக்குக் கர்த்தரானவர் கற்பித்திருக்கிற கிரமத்தை மதிகெட்டவர்கள் தாங்கள் இடறுகிறதுக்கு இடம் பண்ணிக்கொண்டு வந்தார்கள். இதிலே இவர்கள் இடறுகிற வகையை வெளிப் படுத்தக்கடவோம். ஆனால் போகிற ராச மார்க்கத்திலே மத்தியான சமையம் ஆகிறபோது வழிதப்பிப் போகிறவன் போலே, [1]இலவலேசமானாலும் மயங்கிறதுக்கு இடமிராத விஷயத்திலே அறிவின் குறைச்சலினாலே அநேகம் பேர்கள்

2. உழவுத் தொழில் 3. வணங்கத்தக்கவர் 1. சற்றேனும்.

மபங்கினார்கள் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. அவர்கள் சொல்லுகிற வார்த்தையாவது: "சர்வேஸ்வரனானவர் எல்லாருக்கும் சரியான தோப்பனாராய் இருக்கையிலே, எல்லாரையும் பாக்கியத்தை அனுபவிக்கத்தக்கதாகக் கட்டளையிடவேணும். அல்லது ஒருத்தன் பாக்கியத்தையும் ஒருத்தன் நிர்ப்பாக்கியத்தையும், இவன் அயிசுவரியத்தையும் அவன் நிர்ப்பாக்கியத்தையும் அனுபவிக்கக் கட்டளையிட்டால், அவரிடத்திலே பக்ஷபாதம் உண்டென்று காண்பிக்கிறது. அதேதென்றால், இவன் பல்லக்கேறவும் அவன் பல்லக்குச் சுமக்கவும் கட்டளையிட்டபோதே, ஒருவன் பிரயாசப்படவும் வேறொருவன் சுகத்தை அனுபவிக்கவும் கட்டளையிட்டதும் போராமல், ஒருத்தன் பிரயாசத்தினாலே வேறொருத்தன் சுகத்தை அடையத்தக்கதாகக் கற்பித்தாப்போலே ஆச்சுது. ஆனபடியினாலே சர்வேஸ்வரனுக்குப் பக்ஷபாதம் வராதபடிக்குப், பூர்வ ஜென்மத்திலே பண்ணப்பட்ட பாவ புண்ணியமானது லவுகீக பெருமையிலே இருக்கிற இப்படிப்பட்ட ஏற்றக் குறைச்சலுக்குக் காரணமாய் இருக்கிறதென்று சொல்லத்தக்கது" என்று அங்கீகரிக்கிறார்கள்.

**20.5** இதன் மறுப்பு: (i) கடவுளின் பேரறிவு இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லுகிறதிலே தானே தங்களைத் தாங்கள் முழுமதிகெட்ட பேர்களென்று கட்டிக்கொண்டு வருகிறார்கள். அதேதென்றால், சர்வேஸ்வரன் பேரிலே பக்ஷபாதத்தை ஆரோபிக்க வேண்டாமென்று, தாங்கள் வெட்கமில்லாமல் தங்களுடைய புத்தியில்லாத தனத்தை அவர்பேரிலே ஆரோபித்தாப்போலே ஆச்சுது. அதேதென்றால், பக்ஷபாத மில்லாமல் எல்லாரையும் லவுகீக பெருமை முதலான நன்மைகளிலே சமானராகக் கர்த்தரானவர் உண்டாக்க வேணுமென்று சொன்னோமானால், உலகமானது நடவாத பிரகாரமாகப், புத்தியில்லாதவன்போலே, லோகத்தைக் கர்த்தரானவர் நடத்தவேணுமென்று சொல்லுகிறதுக்கு ஒக்கும். பின்னையும், தப்பித்துக்கொள்ள வேணுமென்று இதுக்காகப் பூர்வ ஜென்மத்தை அங்கீகரிக்கிறோமென்று சொன்னார்களானால், சர்வேசுரனிடத்திலே பக்ஷபாதமுண்டு என்கிற ஓர் அபத்தத்தை அங்கீகாரம் பண்ணுதபடிக்குக், கர்த்தரானவர் பூர்வ ஜென்மங் கட்டளையிட்டாரென்று

சொல்லும்போது, அனேக அபத்தங்களை அங்கீகரிக்க வேண்டி யிருக்கிறது. ஆதலால் ஒரு மெய்யான விசேஷத்தை அங்கீகரிக்க மாட்டேனென்று சொல்லுகிறவன் அனேக தப்பறை, விசேஷங் களை அங்கீகரித்தாப்போலே ஆச்சுது.

(ii) உலகத்தின் பொது நன்மை: வயிறும் பிற உறுப்புகளும். இதன்றியே, இப்படிக்கொத்த கிரமத்திலே மயங்கிறதுக்கு இடமில்லை யென்று சொல்லக்கடவோம். அதேதென்றால், ஒருவனுடைய பிரயாசத்தினாலே வேறொருத் தனுக்குப் பிரயோசனம் வருகிற தென்கிற கிரமமானது தப்பில்லாக் கிரமமும் குறையற்ற ஞாயமுமென்று சொல்லத் தகுமொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால், உலகத்தி னுடைய சாதாரண நன்மைக்கு அப்படிப்பட்ட கிரமமானது வேண்டியிருக்கிறதுந்தவிர, அவனவன் தனித்தனியே விசேஷ நன்மையை அடைகிறதுக்கும் அப்படிப்பட்ட கிரமமானது அவசியமாய் வேண்டியிருக்கிறதொழிய மற்றப்படியல்ல.

இந்தச் சத்திய விசேஷத்தைச் சின்ன லோகமாகிற சரீரத் திலேதானே நடந்துவருகிற ஒரு விசேஷ வர்த்தமானத்திலே துலக்கமாக ஒப்பச் சொல்லிக் காட்டலாம். அதேதென்றால், சின்ன சரீரமாகிற பிண்டமானது கெட்டுப்போகாதபடிக்குப் பிரயாசப்படாத [1]குக்ஷியானது சகல அவையவங்களும் பிரயாசப் படுகிறதினால் வருகிற பிரயோசனத்தை அனுபவிக்கப், பிரயா சப்படாததா யிருக்கிற அப்படிப்பட்ட குக்ஷியானது சின்ன லோகமாகிற சரீரத்திலே உண்டாய் இருக்கவேணும் என்கிறாப் போலே, அண்டமாகிற பெரிய சரீரமானது கெட்டுப் போகாதபடிக்கு அதைத் தனது புத்தி உபாயத்தினாலே நடத்திப் பிழைப்பித்துக்கொண்டு வருகிற பெரியவர்கள், லோகத்திலே உண்டாயிருக்கவேணும். அதேதென்றால், கண் காண்கிறதென்கிறதும், கை வேலை செய்கிறதென்கிறதுங், கால் நடக்கிறதென்கிறதும், இந்தடைவிலே மற்ற அவையவங்கள் பிரயாசப்படுகிற தென்கிறதும் எல்லாம் [2]பிசாயிருக்கிற குக்ஷிக்கு [3]அசன முதலான நன்மை தேடுகிறதுக்குப் பிரயா சைப்படுத்துகிறாப்போலே, கால் கை இதுகள் முதலான

1. வயிறு 2. சும்மா 3. உணவு

அவையவங்களுக்குச் சமானமாயிருக்கிற பலபல அந்தஸ்து களுள்ள மனுஷர்கள் பலபல விதமாகப் பிரயாசைப்படுகிறதை விசாரிக்குமிடத்திற், புத்திமதி சொல்லி லோகத்தை நடத்திக் கொண்டு வருகிற மகாத்துமாக்களுக்கு நன்மை பிரயோசனம் உண்டாக வேணுமென்று மனுஷரெல்லாரும் பிரயாசைப் படுகிறார்களென்று காண்பித்திருக்கிறது. அவ்வண்ணமே, சனங்களெல்லாம் பிரயாசப்பட, லோகத்தை நடத்துகிற மகாத்துமாக்களாய் இருக்கிற பேர்கள் பிரயாசப்படாமற் சுகத்திலே யிருந்து, மற்றவர்களுடைய பிரயாசங்கள் முதலான ஊழியங்களினாலே வருகிற பிரையோசனத்தைக் கைக்கொண்டு வருவார்கள் என்கிறதினால், அண்டமாகிற பெரிய சரீரத்துக்கு அப்படிப்பட்ட பெரியவர்கள் குக்ஷியாக இருக்கிறார்களென்று சொல்லக்கடவோம்.

ஆனால், கால் கை இது முதலான அவையவங்கள் [1]அசுகைப்பட்டாப்போலே, பிசாயிருக்கிற குக்ஷிக்கு அசன முதலான நன்மைகளைத் தேடத்தக்கதாகக் காலானது 'நானேன் நடக்க வேணும்?' என்றும், கையானது 'நானேன் வேலை செய்ய வேணும்?' என்றும், இந்தவிதமாக அவையவங் களெல்லாம் 'என்னத்துக்குப் பிரயாசப்பட வேணும்?' என்றும் சொல்லிப், பிரயாசப்படாமல் பிசாயிருக்கிற குக்ஷிக்கு அசனந் தேடத்தக்கதாகக் கால் கை இது முதலான அவையவங் களெல்லாம் பிசாயிருந்தால், கால் நடவாமலும், [2]கை வேலை செய்யாமலும் இருந்தால், கால் கை முதலான அவையவங் களெல்லாம் ஓய்ந்து செத்துப்போம் என்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே, அவையவங்களெல்லாம் பிசாயிருக்கிற குக்ஷிக் காகப் பிரயாசப்படுகிறது என்கிறது தங்களுக்கே நன்மை வரத் தக்கதாகப் பிரயாசப்படுகிறதுக்கு ஒக்கும். அத்தன்மை போலக், கால் கை முதலான அவையவங்களுக்குச் சரியாய் இருக்கிற சுமக்கிற சிவியாரும், பயிர்ச்செலவு பண்ணுகிற குடியானவர்களும் இவர்கள் முதலான பல பல ஊழிய வேலை களினாலே பிரயாசப்படுகிற பேர்களும் குக்ஷிபோலே பிசாயிருக் கிற ராச்சியத்தை நடத்துகிற பேர்களுக்குப் பிரயோசனம்

1. அசுகை — பொறாமை 2. கையினாலே (பா.)

உண்டாக வேணுமென்று பிரயாசப்படுகிறுப்போலே [1]காண்பித்திருக்கிறதொழிய மற்றப்படியல்ல.

(iii) ஊழியம் செய்வோரும் பெறுவோரும் ஒருவரொருவருக்கு உதவுகின்றனர். ஆனுல் உண்டான வர்த்தமானத்தைப் பத்தும் பத்தாய் விசாரிக்குமிடத்தில், பிசாயிருக்கிற குக்ஷியாகிற ராச்சியத்தை நடத்துகிற பேர்களுக்காகக் கால் கை இதுகள் முதலான அவையவங்களாகிற சனங்களானதுகள் பிரயாசப்படாமல் அவர்களுக்கு ஊழிய முதலான பிரயோசனங்களை வரப்பண்ணுகிருந்தால், அண்டமாகிற சரீரத்துக்குண்டான குக்ஷிபோலே இருக்கிற துரைகளுக்குக் கேடு வருமென்கிறதும் தவிர, மற்றுண்டான சனங்களாகிற அவையவங்களானதுகள் ஓய்ந்து செத்துப் போம் என்கிறதுக்குத் தப்பாது. ஆகலாலே, அவையவங்களான சனங்களானதுகள் குக்ஷிபோலே இருக்கிற துரைகளுக்கு ஊழியம் முதலான பிரயோசனங்களைப் பண்ணிக்கொண்டு வருகிறது, தாங்கள் தங்களுக்குத்தானே நன்மை பண்ணிக்கொண்டு வருகிறதுக்குப் பிரயாசப்படுகிறது என்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே, லோகத்திலே [2]அன்னியோன்னியமாக ஊழியம் பண்ணுகிற பேர்களையும் ஊழியம் கொள்ளுகிற பேர்களையும் பார்க்கும் போது, இவர்களுக்குள்ளே ஒருத்தன் நிமித்தமாக மற்றவன் பிழைக்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றுல், ஊழியம் பண்ணுகிற பேர்களினுல் ஊழியம் கொள்ளுகிற பேர்கள் சுகத்தை அனுபவித்துக்கொண்டு வருகையில், ஊழியம் பண்ணுகிற பேர்கள் சம்பளத்தை வாங்கிக்கொண்டு பிழைக்கிறுர்கள். அவ்வண்ணமே [3]அண்டமாகிற பெரிய சரீரத்துக்குப் பிசாயிருக்கிற குக்ஷிக்குச் சமானரான ராசாக்களும் பிரபுக்களும், பிரயாசப்படுகிற பல பல அவையவங்கள் போலே இருக்கிற சனங்கள் கையிலே ஞாயத்தின்படியே [4]பகுதியையும் [5]ஆயங்களையும் வாங்கி, ஆன ஊழியங்களைக் கொள்ளும்போது, அது நிமித்தமாக சனங்களை ஆண்டுகொண்டிருக்கிறதினுல், குடியானவர்களுக்குப் பலபல அநியாயங்கள் வரவொட்டாமல் அவர்களைப் பலபல விதமாக இரக்ஷித்துக்கொண்டு வருகிறுர்கள்

1. தோன்று  2. ஒருவருக்கொருவர்  8. +பிசாயிருக்கிற (பா.)
4. வரி  5. சுங்கம்.

என்கிறது பிரயாசப்படுகிற அவையவங்களினாலே அசன முதலானதுகளை வாங்கிற குக்ஷியானது திரும்ப அவையவங்களுக்குப் பலம் முதலான நன்மைகளைக் கொடுத்து வருகிறதுக்குச் சமானமென்று சொல்லப்படும்.

இந்தடைவிலே குடியானவர்கள் பகுதியையும் ஆயங்களையும் கொடாமல், ஆன ஊழியங்களினாலே ராசாக்கள் முதலான பிரபுக்களுக்குப் பலபல பிரயோசனங்களை வருத்தியாதிருந்தால், அசன முதலானதுகளைப் பிரயாசப்படுகிற அவையவங்கள் பிசாயிருக்கிற குக்ஷிக்குத் தேடி இடாததினால், குக்ஷியினாலே வரத்தக்க பெல முதலான நன்மைகள் வராமல் அவையவங்கள் அழிந்து ஓய்ந்து செத்துப் போகுமாப் போலே, சனங்களானதுகள் ராசா முதலான பிரபுக்களுக்குப் பகுதி ஆயம் இது முகாந்திரத்தினாலே பலபல பிரயோசனங்களை வருத்திவியாமலிருந்தால், அசனமில்லாத குக்ஷிபோலே பலமில்லாத ராசாக்களினாலே அவையவங்களாகிற குடியானவர்கள் இரக்ஷிக்கப்படாமல், அது நிமித்தமாக அநேகம் கேடுகளை அனுபவித்து, முழுதும் கெட்டுப் போவார்கள் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. இப்படிப்பட்ட அன்னியோன்னிய நன்மை வருகிற மேரையானது லோகமானது நன்றாய் நடக்கிறதுக்கு அவசியமாய் வேண்டியிருக்கிறதினால், உலகம் நன்றாய் நடக்கிறதுக்குப் பெரியவர்களும் சிறியவர்களுமாகிற பலபல அந்தஸ்துள்ள மனுஷரைச், சகலத்தையும் தப்பில்லாக் கிரமத்தோடு நடத்துகிற கர்த்தரானவர், லோகத்திலே கட்டளை இட்டார் என்று சொல்லவேணுமொழிய, மல்லன் திம்மன் முதலானவர்கள் பண்ணின புண்ணிய பாவத்தினாலே லோகம் நடக்கிறதுக்கு அவசியமாய் வேண்டியிருக்கிற ஒழுங்கானது வந்ததென்று ஒழுங்கு அறியாத மதிகெட்டவன் சொல்லுவானொழியப் புத்திமானாயிருக்கிறவன் சொல்லவும் எண்ணவும் மாட்டான்.

அவ்வண்ணமே, அவையவங்கள் என்னப்பட்டதெல்லாம் வெறுமனே இருக்கிற குக்ஷிக்கு அசன முதலானதுகளைத் தேடிக் கொடுக்கிறதினால் அவையவங்கள் தானே தனக்குப் பெலமுண்டாய்த் தனது பிழைப்புக்கும் பிரயாசைப்படுகிறதென்று சொல்லத்தகும். வெறுமனேயிருக்கிற அவையவங்களானதுகள்

பிரயாசைப்படாமலும் அசன முதலானதுகளைத் தேடியிடாம லும் இருந்தால், அவையவங்கள் தானே ஒஞ்சு சொத்துப்போம் என்கிறதுக்காக, வெறுமனே இருக்கிற குக்ஷிக்கு அவயவங்கள் பாடுபடுகிறது என்கிறது அவையவங்களுடைய நன்மைக்குக் காரணம் என்றிருக்கையிலே, அவயவங்களானதுகள் வெறுமனே இருக்கிற குக்ஷிக்குப் பிரயாசைப்படாமல், ஊழியம் பண்ணுமல் [1]இருந்தால் அவையவங்கள் தானே கெட்டுப்போம் என்கிறதுக்கு அதுகளே காரணமென்று சொல்லக்கடவோம்.

இராசாக்களும் குடியானவரும் சமூகத்துக்குத் தேவை : இந்நிலை மறுபிறப்பாலன்று. இந்தடைவாக எல்லாம் முன்சொன்னப்போலே ராசாக்களுக்கும் குடியானவர் களுக்கும் நடந்துவருகிறதென்று அங்கீகரிக்கக்கடவோம். அப்படியே, அண்டமாகிற பெரிய சரீரத்துக்குப் பலபல அந்தஸ்துள்ள பேர்கள் அவையவங்களா யிருக்கக்கொள்ள, ஒருகண்டசீராய் இராமற் பலபல வேற்றுமையுள்ள விருத்தி களைப் பண்ணுகிற அவையவங்களைப்போலே, பலபல அந்தஸ் திலே யிருக்கிற வேற்றுமையுள்ள கிரிகைகளைப் பண்ணிக் கொண்டு வருகிறவர்களாய் இருக்கவேணும் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அப்படிப்பட்ட அண்டமாகிற பெரிய சரீரத்துக்குத் தரையிலேயுஞ் சேற்றிலேயும் நடந்து திரிகிற கால்களைப்போலே ஈனமான கிரிகைகளைப் பண்ணு கிறதிலே திரிகிற நீசர் இருக்கவேணும். சிலர் பல பல வேலைகளைப் பண்ணுகிற கைகளைப்போலே நாலு வகையுள்ள வேலைகளாகிற ஊழியங்களைப் பண்ணிக்கொண்டு வரவேணும். சிலர் கூர்மையுள்ள கண்களைப்போலே நாலுவித வித்தைகளைக் கற்று எல்லாரும் காணுத ரகசிய சத்தியங்களை அறிந்து கொண்டு வரவேணும். சிலர் வாயைப்போலே அறியவேண்டிய விசேஷங்களை அவனவனுக்கு உபதேசிக்கவும், சிலர் சொல்லப் பட்ட வார்த்தைகளைக் காதுபோலே கேள்க்கவும் வேணும். ஆதலாலே பலபல வகையுள்ள அவையவங்களுக்குச் சமானரா யிருக்கிற பல பல அந்தஸ்திலே யிருந்து, வெவ்வேறே ஊழிய [2]வியாபாரங்களைப் பண்ணிக்கொண்டு வருகிற பேர்கள் வெறுமனே யிருக்கிற குக்ஷிக்குச் சமானரான ராசாக்கள்

1. இருக்கிற (பா.) 2. தொழில்.

முதலான துரைகளுக்காகப் பிரயாசப்படுகிறது என்கிறது. லோகமானது நடக்கிறதுக்கு ஆன கிரமமும், அவனவனுக்குத் தனித்தனியே வரத்தக்க விசேஷ நன்மை வருகிறதுக்கு ஆன உபாயமும் என்று சொல்லவேணுமொழிய, இப்படிப்பட்ட கிரமத்தின் நிமித்தமாகக் கர்த்தர்பேரிலே பக்ஷபாதத்தை ஆரோபிக்கவுங் கூடாது; அப்படிப்பட்ட கிரமமானது பூர்வ சென்மத்திலே பண்ணப்பட்ட பாவ புண்ணியத்து நிமித்தமாக வந்துதென்று சொல்லவும் எண்ணவுங் கூடாது. இதிலே மிகவும் அறிய வேண்டின ஒரு விசேஷமுண்டு, அத்தை வருகிற பாடத்திலே வெளிப்படுத்தக்கடவோம்.

இருபதாம் பாடம் முற்றும்.

(கிரந்தம்) உாம *

## இருபத்தொன்றும் பாடம்

**21.1.** உடலுக்கு வாயாலே உணவு, மக்களுக்குக் குருவாலே ஞான உணவு. அனந்த நீதியும் தயையுமாய் இருக்கிற கர்த்தரானவர் பிண்டமாகிற சரீரத்திலே பலபல அவையவங்கள் உண்டாக்கினாலும், அசனம் என்கிற [1]பிரசாதத்தினால், அவையவங்களுக்குப் பலம், அழகு முதலான நன்மைகள் வரத்தக்கதாகக் கட்டளையிட்டார். அத்தன்மை போல், அண்டமாகிற சரீரத்துக்குப் பலபல அவையவங்களாகிற நீசரும் பெரியவர்களும் இவர்கள் முதலான பேர்களும், வெவ்வேறே அந்தஸ்திலே இருந்தாலும், திவ்விய அசனமாகிற பரம சத்திய [2]பிரசாதத்தினாலே பலபல அவையவங்கள் போலே வெவ்வேறே அந்தஸ்துள்ள மனுஷரென்னப்பட்ட யாவருக்கும் [3]தேவஇஷ்டமும் கரையேற்றமும் வரக் கட்டளையிட்டார். பின்னையும், அசனமானது வாயினாலே சகல அவையவங்களுக்குள்ளே பரவிப்போகுமாப்போலே, வாய்போலே இருக்கிற குருவினுடைய உபதேசத்தின் வழியினாலே பலபல அவையவங்களாகிற வெவ்வேறே அந்தஸ்துள்ள மனுஷரென்னப்பட்ட யாவருக்கும் அசனமாகிற பரம சத்தியமானது சென்றுவரும் என்கிறதுக்குத் தப்பாது. இந்த விஷயத்திலே அறியவேண்டின

* 210 1. கொடை 2. பிரகாச (பா. பே.) 3. திருவருளும் மீட்பும்

தாவது: வாயின் வழியாக உள்ளே [4]தரிக்கிற அசனத்தின் பிரயோசனமானது பிண்டமாகிற சரீரத்தினுடைய வேற்றுமையுள்ள அவையவங்களினாலே அவசியமாய்ச் [5]சுவீகரிக்கப்படுமொழியச் சுவிகரியா திருக்கக்கூடாது. அண்டமாகிற பெரிய சரீரத்தினுடைய அவயவங்களான பலபல அந்தஸ்துள்ள மனுஷரான பேர்களோவென்றால், இப்படிப்பட்ட அவையவங்கள், தனித்தனியே சுவாதந்திரியமுள்ளதுகளாய் இருக்கக்கொள்ள, வாயாகிற குருவானவர் கொடுக்கிற திவ்விய பக்ஷணப் பிரசாதமாகிற பரமசத்திய உபதேசத்தை அப்படிப்பட்ட அவையவங்களான மனுஷரானவர்கள் கேட்டு அதின்படியே நடக்கவேணுமானால் அப்படியே நடப்பார்கள்; குருவினுடைய உபதேசத்தைச் சட்டைபண்ணமல், அத்தைத் தள்ள வேணுமானால், அத்தைத் தள்ளலாமொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே, அப்படிப்பட்ட உபதேசமாகிற திவ்விய அசனத்தைப் பொசிக்கத்தக்க காலமுடிந்த பிற்பாடு, போசனம் பண்ணின அவையவங்களுக்குக் கரையேற்றமாகிற நித்திய சீவனமானது வருமொழிய, போசனம் பண்ணுகை நிர்ப்பாக்கிய அவையவங்களுக்கு நரகத்தினுடைய [6]சாகாத சாவு பலிக்கும் என்கிற துக்குத் தப்பாது.

**21.2. தத்தம் இடத்தில் நின்று கோட்டை காத்தவர்களுக்கு அரசன் அளிக்கும் பரிசு.** இந்தச் சத்திய விசேஷத்தை வேறொரு வகையுள்ள உவமையினாலே துலக்கமாய் வெளிப்படுத்தலாம். யுத்தகாலம் உண்டாயிருக்கையிலே, மகாராசாவான ஒருவன் தனது கோட்டையை ரக்ஷிக்க வேணுமென்று, தனக்குக் கீழாயிருக்கிற மனுஷரைப் பார்த்து, சில பேர்களை ஒரு [1]கொத்தளத்திலே வைப்பான். வேறே சில பேர்களைக் [2]கொம்மையண்டையிலே நிறுத்துவான். வேறே சில பேர்களை அந்தந்த மூலையிலே இருக்கக் கட்டளையிடுவான். வேறே சில பேர்களை வாசலிலே காத்திருக்கச் சொல்வான். வேறே சில பேர்களை [3]அரப்புக் கோட்டையிலே திரியச் சொல்லுவான். இந்தடைவாக மேலும் கீழுமாயிருக்கிற பலபல ஸ்தலங்களிலே தனது மனுஷரை இருக்கக்கட்டளையிடுவான்.

4. தங்கு 5. வாங்க 6. நித்திய நகரம்

1. 2. கோட்டை உறுப்புக்கள் 3. கோட்டை மெல்ாளம் (barbette)

இப்படிப்பட்ட ராசாவானவன் கோட்டையை ரக்ஷிக்க வேணுமென்று கோட்டையினுடைய நன்மையானது மாத்திரம் உத்தேசித்து, மேலும் கீழுமாயிருக்கிற பலபல ஸ்தலங்களிலே தனது மனுஷரை இருக்கக் கட்டளையிட்டானென்று சொல்ல வேணுமொழிய, அவனவன் முகத்தின் அழகைப் பார்த்து, 'நீ மேலான ஸ்தலத்திலேயிரு' என்றும், 'நீ கீழான ஸ்தலத்திலே நில்' என்றும் சொன்னானென்று சொல்லக்கூடாது. ஆனால், 'யுத்தத்தினுடைய காலமானது முடிந்த பிற்பாடு, அவனவன் யுத்தம் பண்ணினதையும் பண்ணாததையும் சத்துருக்களுக்குக் கொடுத்ததையும், சத்துருக்களைத் தள்ளிச் செயித்ததையும் ராசாவானவன் பார்த்து, அவனவன் பண்ணின ஊழிய துரோகங்களுக்குத் தக்க ஆக்கினை சம்பாவனை கொடுப்பான் என்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே, நீதி தயாபரனான ராசாவானவன் மேலும் கீழுமாயிருக்கிற பலபல ஸ்தலங்களிலே அவனவனை இருக்கக் கட்டளையிடும்போது, கோட்டையினுடைய [5]சாதாரண ரக்ஷணையாகிற நன்மையைப் பார்த்தானொழிய, அவனவன் பண்ணின கர்மங்களையானாலும், அவனவன் முகத்தினழகை யானாலும் பார்த்து மேலும் கீழுமாயிருக்கிற ஸ்தலங்களிலே அவனவனை நிறுத்தினானென்று சொல்லவும் கருதவும் கூடாது என்றிருக்கையிலே, யுத்தத்தினுடைய காலமானது முடிந்த பிற்பாடு, அவனவன் பண்ணின கர்மங்களைப் பார்த்து, ஆக்கினை சம்பாவனையைக் கொடுப்பானொழிய மற்றப் படியல்ல.

**21.3 தத்தம் நிலையில் நின்று உலகில் நல்வினைப் போர் புரிந்தோருக்குக் கடவுள் தரும் பரிசு.** அத்தன்மை போல், முடிவில்லாத நீதியுந் தயையுமாயிருக்கிற கர்த்தரானவர், அவனவனை நவமாக உண்டாக்கி, லோகஞ் செவ்வையாய் நடக்கிறதுக்கு அவனவனை மேலுங் கீழுமாயிருக்கிற ஸ்தலங்களுக்குள்ளே ஒரு ஸ்தலத்திலே நிறுத்தவேணுமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே (சில பேர்களை[4]) உசந்த ஸ்தலத்திலே துரைகளாயிருக்கப்பண்ணி, வேறே சில பேர்களைக் கீழான ஸ்தலத்திலே நீசராயிருக்கக் கட்டளையிட்டார். இப்படிப் பலபல அந்தஸ்துகளினாலே எண்ணப்

4. உயித்தம் (பா. பே.)  5. பொது காப்பு

படாத மனுஷரை இருக்கக் கட்டளையிடும்போது, லோக மானது நன்றாய் நடக்க வேணுமென்கிற நன்மையைப் பார்த்தாரொழிய, மற்றப்படியல்ல. லோகத்திலே யிருக்கிற மனுஷர் பாவமாகிற சத்துருக்களைத் தோற்கடிக்கப் பண்ணுகிறதென்கிறதுந், தர்மமாகிற செயம் லோகத்திலே உண்டாகப் பண்ணுகிறதென்கிறதும் நீதியுள்ள கிரமமா யிருக்கக்கொள்ள, அப்படிப்பட்ட கிரமமானது லோகத்தினுடைய நன்மை யென்று சொல்லப்படும். ஆதலாலே, மனுஷரென்னப்பட்ட யாவரையும் கர்த்தரானவர் பலபல அந்தஸ்துக்களிலே யிருக்கப் பண்ணும்போது, லோகத்திலே முன்சொல்லப்பட்ட நன்மை உண்டாக வேணுமென்று பார்த்தாரொழிய, நவமாக அவராலே உண்டாக்கப்படுகிற பேர்கள் பண்ணின பாவ புண்ணியங்களும் இல்லை, அவர்களாலே (பாவ புண்ணியம்) பண்ணப்படாததினாலே கர்த்தரானவர் பார்க்கத்தக்கது ஒன்று மில்லை. ஆனால் கர்த்தருடைய கட்டளைப்படியே, அவனவன் தனது அந்தஸ்திலே இருந்துகொண்டு, நன்றாய் பாவங்களாகிற சத்துருக்களோடே யுத்தம் பண்ணினதையும், பண்ணாததையும், சகல நன்மை சுரூபமான கர்த்தனுக்கு விரோதமா யிருக்கிற பொல்லாப்பாகிற பாவத்துக்கு உள்ளாயிருந்ததையும் உடன்பட்டதையும் அத்தைத் தள்ளிச் செயித்ததையுங், கர்த்தன் கற்பித்த புண்ணிய நெறியிலே நடந்ததையும் பிரயாசத்துக்குப் பயப்பட்டுப் புண்ணியவழியிலே நின்று திரும்பிப் பள்ளத்திலே வேணுமென்று விழுந்ததையும், அப்படிப்பட்ட அந்தந்த அந்தஸ்துகளிலே யிருக்கிற மனுஷர்களினாலே பண்ணப்பட்ட துர்மார்க்கங்களையுஞ் சுகிர்த கர்மங்களையுங், குறையற்ற நீதிபரரான கர்த்தரானவர் பார்த்து, அப்படிப்பட்ட கர்மங்களுக்கு ஆக்கினை சம்பாவனை பண்ணுவார் என்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே, அவரவரைக் கர்த்தரானவர் நவமாயுண்டாக்கி, அவரவரை மேலுங்கீழுமா யிருக்கிற அந்தஸ்துகளிலே வைக்கிறதுக்கு அவரவர் பண்ணின பாவ புண்ணியத்தைப் பாராமல், உலகமானது நன்றாய் நடக்க வேணுமென்கிற ஞாயத்தையும் சகல அந்தஸ்துக்களிலே யிருக்கிற மனுஷர்களினாலே தர்ம செயமாகிற நீதியுள்ள கிரமம் லோகத்திலே உண்டாக வேணுமென்கிற நன்மையையும் பாத்திருக்கிற கர்த்தரானவர், அவனவன் தனது அந்தஸ்திலே இருந்து

6986

கொண்டு பிரயாசைப்பட்டுப் பலன் பெறுகிற காலம் மரணத்து நிமித்தமாக அவனவனுக்கு முடிந்து கிரமத்தோடு அனுபவ காலம் வந்திருக்கையிலே, அவனவன் பண்ணின பாவ புண்ணியங்களைப் பார்த்துப், பாவ புண்ணியத்துக்கொத்த ஆக்கினை சம்பாவனையையும் எப்போதும் அவனவன் அனுபவிக்கிறதுக்கு நீதிபரனான கர்த்தரானவர் கட்டளையிடுவாரொழிய மற்றப்படியல்ல.

**21.4. கேள்வி: 1.** நல்வினை தீவினை இரண்டும் ஒருவனிடம் இருந்தால்? (i) இறுதியில் தீவினையுள்ளவனுக்கு நரகம். இத்தறுவாயிலே மூடராயிருக்கிற பேர்கள் கேட்கிற கேள்வியும், அதுக்கான பிரத்தியுத்தரமும் அறிய வேண்டினதாகும். அவர்கள் கேட்கிற கேள்வியானது: 'ஒருத்தனிடத்திலே பாவ புண்ணியங் கலந்திருந்தால், அவனுக்குப் போம்வழி என்ன?' பாவ புண்ணியத்தையும் அதன் சுபாவ சுரூபத்தையும் அறியாததினாலே தெளிவற்ற பேர்கள் இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்கிறார்களொழிய, பாவ புண்ணியத்தினுடைய சுபாவ சுரூபத்தை இன்னதென்று அறிந்தால், இப்படிப்பட்ட அபத்த சந்தேகத்தைக் கேட்க மாட்டார்கள். இந்தச் சந்தேகத்துக்குப் பிரத்தியுத்தரமாவது: யாதொருத்தன் அனேகம் புண்ணியங்களைப் பண்ணின பிற்பாடு கனமான பாவத்தைப் பண்ணி, அப்படிப்பட்ட பாவத்து நிமித்தமாகத் தேவ இஷ்டப்பிரசாதத்தைப் போக்கடித்து, ஆன பச்சாத்தாப நிமித்தமாகப் பாவத்தைத் தள்ளாமலிருந்தால், கர்த்தனுடைய இஷ்டத்தைத் திரும்ப வரப் பண்ணாமல் இருக்கிறதென்கிறது 'பாவத்தினுடைய அவஸ்தை யென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட அவஸ்தையிலே யிருக்கிறவன் மரணத்தை யடைந்தால், இப்படிப்பட்ட பாவத்தின் அவஸ்தையை நீதி சுரூபமா யிருக்கிற கர்த்தரானவர் பார்த்து, ஆன நரகத்தின் முடியாத வேதனையைப் பாவிக்குக் கட்டளையிடுவாரொழிய மற்றப்படியல்ல.

அவனவன் முன்னே பண்ணின புண்ணியங்களைப் பார்க்கத் தக்கதாகக் கணக்கில்லை என்கிற ஞாயமுள்ள கிரமமானது

1. State of sin.

லோகத்திலே நடந்துவருகிற அடைவுள்ள ஆசாரத்தினாலே நல்லதாய் இருக்கிறதென்று கண்டுபிடிக்கலாம். அதெப்படி என்றால், சம்பளம் வாங்காமல் நூறு வருஷம் ராசாவுக்கு ஊழியம் பண்ணின தாசனானவன், கனமான துரோகத்தை ராசாவுக்குப் பண்ணினால், அந்தத் துரோக நிமித்தமாகத் தாசனானவன் சேவித்த சம்பளத்தை எல்லாம் போக்கடித்து, ராசாவானவன் அவனைத் தலைவெட்டுவிக்கிறது என்கிறது குறையற்ற ஞாயமாகும் என்கிறதுக்குத் தப்பாது. அத்தன்மைபோலே, நூறு வருஷம் சர்வேஸ்வரன் சித்தத்தின்படியே மனுஷனானவன் நடந்து, எண்ணப்படாத புண்ணியங்களைப் பண்ணின பிற்பாடு, கனமான பாவமாகிற சுவாமித் துரோகத்தைப் பண்ணி, அப்படிப்பட்ட சுவாமித் துரோகத்தின் நிமித்தமாகக் கர்த்தனுடைய இஷ்டப் பிரசாதத்தைப் போக்கடித்தவன் சுவாமித் துரோகியாய் மரணத்தை அடைந்தால், நீதி சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர், அப்படிப்பட்ட பாவியானவன் முன் பண்ணின ஊழியமாகிற புண்ணியத்துக்கு வரத்தக்க சம்பளமாகிற மோக்ஷத்தைப் போக்கடித்ததினால், கர்த்தரானவர் பாவியானவன் முன் பண்ணின புண்ணியங்களைச் சட்டைபண்ணாமல், அவன் [1]பண்ணின சுவாமித் துரோகத்துக்குத்தக்க ஆக்கினை இட்டுத், தலைவெட்டுகிறதுக்குச் சமானமாயிருக்கிற நரகத்தினுடைய ஒழியாத அக்கினிக்குள்ளே பாவியானவனை அவியாத கட்டையாயிருக்கக் கர்த்தரானவர் கட்டளையிடுகிறது என்கிறது குறையற்ற ஞாயம் இதே, தப்பில்லாக் கிரமம் இதே என்று சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல.

(ii) இறுதியில் நல்வினையுடையவனுக்கு மோட்சம். இந்தடைவாக மனுஷனானவன் இருந்த நாளெல்லாம் எண்ணப்படாத பாவங்களைப் பண்ணிக், கடைசியாய் ஆன பச்சாத்தாபத்தின் நிமித்தமாகப் பண்ணின பாவங்களைக் கர்த்தரானவர் பொறுக்கப்பண்ணித், தேவஇஷ்ட முதலான பிரசாதங்களை அடைந்து, இப்படியே கர்த்தனுக்குச் [2]சனுவாய் மனுஷனானவன் மரணத்தை அடைந்தால், அவன் பண்ணின பாவத்தைக் கர்த்தரானவர் சட்டைபண்ணாமல், அப்படிப்பட்ட பாவங்களுக்கு வரவேண்டினதாயிருந்த நரக வேதனையைக்

1. இருக்கிற (பா.) 2. உகந்தவன்

கட்டளையிடாமல், கர்த்தனுடைய சனுவுக்குக் கொடுக்கத்தக்க மோக்ஷ பாக்கியத்தைக் கொடுப்பாரொழிய மற்றபடியல்ல. இது குறையற்ற ஞாயமென்று சொல்லப்படும். அதேதென்றால், லவுகீக ராசாவுக்கு அனேகம் குற்றங்களைப் பண்ணினவன் ஆன உபாயத்தினாலே திரும்ப ராசாவுக்குச் சனுத்தாசனைப் போனால், ராசாவானவன் அவனுக்கான துரைத்தனத்தைக் கட்டளையிடுகிறது என்கிறது பழுதற்ற ஞாயம் என்கிறதுக்குத் தப்பாது. அம்மருவாதியே, மனுஷனானவன் கர்த்தனுக்கு அநேகம் குற்றங்களாகிற பாவங்களைப் பண்ணின பிற்பாடு, ஆன உபாயத்தினாலே கர்த்தனுக்குத் திரும்ப சனுவாய்ப் போய், அப்படிப்பட்ட அவஸ்தையிலே மரணத்தை அடைந்தால், அவனுக்குக் கர்த்தரானவர் மோக்ஷ மகிமையாகிற துரைத்தனத்தைக் கட்டளையிடுகிறதென்கிறது குறையற்ற ஞாயமென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட இரண்டு அவஸ்தைக்குள் ஒன்றிலே அவசியமாய் அவனவன் இருக்கவேணும் என்கிறதினால், அந்தந்த விசேஷ மனுஷனானவன் சாகிறபோது ஒன்றில், தேவ இஷ்டத்தை உடைத்தானவனாய்ச் சர்வேஸ்வரனுக்குச் சனுவாக இருக்கவேணும், அல்லது மனுஷனானவன் சாகிறபோது தேவஇஷ்டமுள்ளவனாய் இராதிருந்தால், அவசியமாய்ச் சர்வேஸ்வரனுக்குச் சத்துருவாய் இருக்கவேணும். ஆனபடியினாலே, அறியாத பேர்கள் சொல்லுகிறபோலே, செத்தவனிடத்திலே பாவ புண்ணியம் கலந்திருக்கலாமென்று சொல்லக்கூடாது என்கிறதினால், பாவ புண்ணியம் கலந்திருந்தால் போம் வழி ஏது என்கிற கேள்வியானது அபத்தமான கேள்வியாயிருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது.

**21.5.** கேள்வி **2**: கடவுளுக்கு நண்பர்களுமில்லை, எதிரிகளுமில்லை. இவர்கள் கெதி என்ன? இதுக்குச் சரியாய் வேறேயொரு அபத்தக் கேள்வியை மூடராயிருக்கிற பேர்கள் கேட்பார்கள்: 'வேறே சிலர் சர்வேஸ்வரனுக்குச் சத்துருக்களுமல்ல, சனுக்களுமல்லவென்று சொல்ல வேணும். அப்படிப்பட்ட பேர்கள் தேவஇஷ்டத்தை உடைத்தான பேர்களுமல்ல, தேவனைக் குறித்துத் துரோகியாய் இருக்கிற பேர்களுமல்ல என்று சொல்ல வேணும்' அத்தை ஒரு உவமையினாலே சொல்லிக் காட்டுகிறார்கள். அதேதென்றால், 'லவுகீக

ராசாவைச் சில பேர்கள் கண்டுகொண்டு வந்து அவனுடைய மனசுக்குச் சரியாக நடக்கிறதினாலே அப்படிப்பட்ட பேர்கள் ராசாவுக்குச் சனுக்களாயிருக்கிறார்களென்று சொல்ல வேண்டியிருக்கிறது. வேறே சிலபேர்கள் பலபல குற்றங்களைப் பண்ணினதினால், ராசாவுக்குச் சுவாமித் துரோகிகளாய் இருக்கிறார்கள். இந்த இரண்டு வகையுள்ள பேர்கள் தவிர, வேறே சில பேர்கள் ராசாவின் கையிலே சம்பள முதலான உபகாரங்களை வாங்காமலும், ராசாவைக் கண்டு வரவும் சேவிக்கவும் செய்யார்கள். அப்படிப்பட்ட பேர்கள் ராசாவுக்கு ஒரு அற்ப அபகாரமானாலும் பண்ணாதபோதே, ராசாவுக்குச் சத்துருக்களாய் இருக்கிறார்களென்று சொல்லப்படாது. மீளவும் ராசாவைக் கண்டுவராமல் ராசாவின் மனசுக்குச் சந்தோஷம் வருத்தியாதபோதே, அப்படிப்பட்ட ராசாவுக்கு அவர்கள் சனுக்களாய் இருக்கிறார்களென்று அங்கீகரிக்கவும் ஒண்ணாது. அத்தன்மைபோலப் பாவத்தினிமித்தமாகச் சில பேர்கள் சர்வேஸ்வரனுக்குச் சத்துருக்களாய் இருப்பார்கள். புண்ணியத்தின் நிமித்தமாக வேறே சிலபேர்கள் சர்வேஸ்வரனுக்குச் சனுக்களாய் இருப்பார்கள். இப்படிப்பட்ட சுவாமித் துரோகிகளுமாய்ச் சுவாமிக்குச் சனுக்களுமாயிராத பேர்கள் உண்டானால் அவர்களுக்கு கெதியேது? அதேதென்றால், இத் தொகைப்பட்ட பேர்கள் சுவாமித் துரோகிகளாய் இராததினால் நீதி சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் அவர்களுக்கு நரக வேதனையைக் கட்டளையிடுவாரென்று சொல்லவொண்ணாது. மீளவும் அப்படிப்பட்ட பேர்கள் சர்வேஸ்வரனுக்குச் சனுக்களாய் இராததினால் கர்த்தரானவர் அவர்களுக்கு மோக்ஷத்தைக் கொடுத்தருளுவாரென்கிறது ஞாயமுள்ள கிரமத்துக்கு ஏற்றிராது.''

விடை (i) ஒப்புமை சரியில்லை: இந்தக் கேள்வியானது முன் சொல்லப்பட்ட கேள்வியைக் காட்டிலும் அபத்தக் கேள்வி என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால், ராசாவினுடைய உவமையானது தாங்கள் சொன்ன வார்த்தையை [1]ஈடேற்றுகிறதுக்கு உதவி செய்யமாட்டாது. அதேதென்றால், ராசாவின் கையிலே சம்பள முதலான பிரயோசனங்களைப்

1. மெய்ப்பி,

பெற்றுக்கொள்ளாத பேர்கள் ராசாவுக்கு ஊழியம் பண்ணத் தேவையில்லை. ஊழியம் பண்ணுகதினாலே ராசாவுக்குத் துரோகி களாயிருக்கிற பேர்களென்று சொல்லவுங்கடவதல்ல. ஆனபடி யினாலே, லவுகீக ராசாவைக குறித்து இஷ்டமும் பகையு மில்லாத பேர்கள் உண்டாயிருக்கலாமென்று சொல்லத்தகும். தேவ விஷயத்திலேயோ என்றால் இந்த வார்த்தையானது செல்லும் என்று சொல்லத்தகாது.

(i) கடவுள் மனிதனுக்குச் செய்த நன்மை. அதேதென்றால், மகாராசாதிராசனாயிருக்கிற சர்வேஸ்வரன் மனுஷரென்னப்பட்ட யாவருக்கும் உண்டாயிருக்கிற சீவனைச் சிருஷ்டித்துச் சரீரத்தையும் உண்டாக்கி அவனவனுக்கு உண்டான ஞான முதலான நன்மைகள் என்னப்பட்ட யாவையுங் கர்த்தர் தானே அவனவனுக்குக் கொடுத்தார் என்கிறதுக்குத் தப்பாது. இதுதவிர, மனுஷனுக்குப் பலபல நன்மைகள் உண்டாக வேணுமென்று, தயாபரனான கர்த்தரானர் லோகத் திலே உண்டாக்கினுரென்று பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆதலாலே, மகாராசாவா யிருக்கிற சர்வேஸ்வரனானவர் அவனவனுக்கு தனித்தனியே பரிபூரண சம்பளத்தைக் கொடுத்தருளி வருவாரென்று சொல்லக் கடவோம். அவனவன் மகாராசாவா யிருக்கிற சர்வேஸ்வரன் கையிலே பரிபூரண சம்பளத்தைப் [1]பெற்றுக்கொண்டு வருகை யிலே, சர்வேஸ்வரனுடைய சித்தத்தின்படியே அவனவன் நன்றாய் நடக்கவும் அவருக்குக் குறையற்ற ஊழியம் பண்ணவும் வேணும் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. சகல மனுஷர்பேரிலேயும், இப்படிப்பட்ட கடன் சுமந்திருக்கிற போது, மனுஷருக்குள்ளே யாதொருத்தன் தனக்குண்டான கடனைப்பார்த்து, சர்வேஸ்வரனுடைய சித்தத்தின்படியே பாவமென்னப்பட்ட யாவையும் வெறுத்துச், சகல புண்ணியத் தின் நிர்மல வழியிலே இடைவிடாமற் பழுதற நடக்கிற வனாய் இந்தவிடையிலே கர்த்தனுக்கு ஊழியம் பண்ணிக் கொண்டு வந்தால், அப்படிப்பட்டவன் தேவயிஷ்டப் பிரசாத முள்ளவனுமாய்ச், சர்வேஸ்வரனுக்கு உகந்த பிள்ளையுமா யிருக்கிறானென்று சொல்லக்கடவது. அல்லது, யாதொருத்தன் தனக்குண்டான கடனைப் பாராமற் கர்த்தனுடைய திருவுளத்

1. பற்றி (பா.)

துக்கு விருத்தமாகப் பாவத்துக்குள்ளாகிக், கர்த்தன் கற்பித்த குறையற்ற நெறியைக் கடந்து நடந்தால், அப்படிப்பட்டவன் சுவாமித் துரோகியாயிருக்கிறான் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. இதன்றியே, கர்த்தன் கையிலே மனுஷரென்னப் பட்ட யாவரும் வாக்குக்கும் மனசுக்கும் எட்டாத நன்மை களைப் பெற்றுக்கொண்டபோதே, யாதொருத்தன் கர்த்தன் கையிலே தான் வாங்கின நன்மைகளை யறிந்து, அப்படிப் பட்ட கர்த்தன் சித்தத்ததுக்குச் சரிவர நடந்தால், அப்படிப் பட்டவனை நன்றியறிந்தவன் என்றும், கர்த்தனுக்கு உகந்தவ னென்றுஞ் சொல்லக்கடவோம். அல்லது, யாதொருத்தன் கர்த்தன் கையிலே வாங்கின நன்மைகளை எண்ணாமல், அதுகளைச் சட்டை பண்ணாமல், கர்த்தன் விலக்கின அருவருப்புள்ள பாவ வழியை அனுசரித்து நடந்தால், அப்படிப்பட்டவன் நன்றி யறியாதவனுமாய்க், கர்த்தனுக்குத் துரோகியுமாய் இருக்கிறா னென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. ஆனபடி யினாலே, இந்த விஷயத்திலே உண்டான வர்த்தமானமெல் லாம் பத்தும் பத்தாய் விசாரிக்குமிடத்தில், அவனவன் ஒன்றிற் சர்வேஸ்வரனுக்கு உகந்தவனாயிருக்க வேணும்; அல்லது உகந்தவனாயிராதிருந்தால், அவசியமாய்க் கர்த்தனுக்குத் துரோ கியாயிருக்க வேணுமொழியக், கர்த்தனுக்கு உகந்தவனுமாய்த் துரோகியுமாயிராமல் நடுவிலே யிருக்கிற மனுஷன் உண்டென்று சொல்லக்கூடாது.

**21.6.** கேள்வி 3: இறந்த பிள்ளைகளின் நிலை என்ன? இத்தறுவாயிலே ஒரு பெரிய சந்தேகம் கேட்க அவகாசமுண்டு. அதாவது: "பிறந்த பிள்ளைகள் பாவ புண்ணியத்தை அறிகிறதுக்கு முன்னே பாவத்தையாகிலும் புணணியத்தை என்கிலும் தாங்கள் பண்ணமாட்டார்கள் என் கிறதினாலே, அப்படிப்பட்ட அவஸ்தையிலே இருக்கிற நாள் மட்டும் கர்த்தனுக்குத் துரோகிகளென்று சொலலக்கூடுமோ? சனுக்களென்று சொல்லக்கூடுமோ? இது தவிர, இப்படிப் பட்ட பிள்ளைகள் பாவ புண்ணியத்தைத் தாங்கள் பண்ணுகிற துக்கு முன்னே செத்துப்போனால், அவர்கள் அடையத்தக்க கதி ஏது?" என்கிற சந்தேகத்துக்கு ஆன பிரத்தியுத்தாரத்தை இத்தறுவாயிலே சொல்லத்தக்கதாய் இராது. அதேதென்றால்,

தாயாருடைய கெர்ப்பத்திலே பிள்ளையானது உற்பவிக்கும் போது, சர்வேஸ்வரனுக்குத் துரோகியாய் உற்பவிக்கிறுனே என்றும், கர்த்தனுக்குச் சனுவாய் உற்பவிக்கிறுனே என்றும் நிச்சயம் பண்ணி வரையறுக்க வேணும். இதெல்லாம் 'ஞானோபதேசத்திலே இரண்டாம் காண்டத்திலே' இந்த விஷயத்துக் கடுத்த வர்த்தமானமெல்லாம் சொல்லப்படுமே, அவ்விடத்திலே சொல்லப்பட்ட விசேஷத்தை அறிந்தாலொழிய, இந்தச் சந்தேகம் நிவாரணம் பண்ணக்கூடாது. ஆகலாலே, இந்தச் சந்தேகத்துக்குப் பிரத்தியுத்தாரமானது அவ்விடத்திலே சொல்லப்படத்தக்கதொழிய, இத்தறுவாயிலே அத்தைச் சொல்லுகிறது கிரமமாய் இராது என்றிருக்கையிலே, யாதொருத்தனுக்கு இந்தச் சந்தேகம் வந்தால், அப்படிப்பட்ட சந்தேகத்துக்கு ஆன ஸ்தலத்திலே பிரத்தியுத்தாரத்தைச் சொல்லுவோம் என்று அறியவேணும் என்கிறதுக்கு இந்தச் சந்தேகத்தை எடுத்துக் காட்டினேமொழிய மற்றப்படியல்ல. இற்றை வரைக்கும் லவுகீக பெருமையிலேயும் அயிசுவரியத்திலேயுமுள்ள ஏற்றக் குறைச்சல்களைக் கர்த்தரானவர் லோகத்திலே உண்டாயிருக்கக் கற்பித்ததுக்கான ஞாயங்களையும் காரணத்தையும் சொல்லி, அப்படிப்பட்ட ஏற்றக் குறைச்சலானது பூர்வ சென்மத்தினிமித்தமாக லோகத்திலே உண்டாகமாட்டாதென்று ஒப்புவித்தாப்போலே ஆச்சுது.

**21.7. குருடர் நொண்டிகளாய்ப் பிறப்பது முன் பிறப்பு வினையாலன்று.** இதன்றியே, சிலபேர்கள் குருடரும், சிலபேர்கள் நொண்டிகளும், இவர்கள் முதலான பலபல வியாதிகளை உடைத்தானவர்களும், லோகத்திலே பிறக்கிறதுக்குப் பூர்வசென்மத்திலே பண்ணப்படுகிற கர்மங்கள் காரணமாய் இருக்கிறதென்று இவர்கள் சொல்லுகிறுர்களே, அப்படிப்பட்ட பக்ஷமானது ஞாயத்துக்கேற்றிராதென்று இந்த ஞாயத்தினலே கண்டுபிடிக்கலாம். இந்தச் சென்மத்திலே இந்தச் சீவனுனது இந்த விசேஷ சரீரத்தோடே பண்ணின பாவத்தினிமித்தமாக இந்தச் சீவன்தானே வருகிற சென்மத்திலே வேறே சரீரத்திலே இருந்துகொண்டு வாதை முதலான நிர்ப்பந்தங்களை அனுபவிக்குமென்று சொல்லும்போது, அப்படிப்பட்ட மேரையிலே குறையற்ற ஞாயமானது

காண்பியாதென்று சொல்லத்தகும். (i) **சீவன் உடலுக்கு மாத்திரையானால்.** அதேதென்றால், இந்தச் சீவனுனது இந்தச் சென்மத்திலே கொண்டிருக்கிற சரீரத்துக்கு மாத்திரை யாயிருந்து, இந்த விசேஷ சரீரத்தோடே கூடுகிறதினல் ஒரு பொருளினுடைய இரண்டு பாதிகள் கூடுகிறாப்போலே முழுப் பொருளாகிற இந்த விசேஷம் உண்டென்று சொன்னோமானல், இப்படிப்பட்ட மெய்யான பக்ஷத்தை அங்கீகரிக்குமிடத்தில், ஆத்துமமானது மாத்திரம் பாவத்தைச் செய்ததென்றும் சரீர மானது மாத்திரம் பாவத்தைப் பண்ணினதென்றும் சொல்லக் கூடாததினல், ஆத்துமமும் சரீரமும் இரண்டுங் கூடப்பண்ணிக் கொண்டு வருகிறதென்று சொல்லத்தகுமொழிய மற்றப்படி யல்ல என்றிருக்கையிலே, இரண்டு கள்ளர் கூடிக் களவு பண்ணி இருக்கையிலே, ஒருத்தனைக் களவு பண்ணுதவனுய் (இருக்கிற) வேறொருத்தனோடே கூட்டிக் களவு பண்ணின வனுக்கும் களவு பண்ணுதவனுக்கும் ஆக்கினை இடப்பட்டால், ஞாயத்துக்குக் குறைச்சலாய் இருக்கிறதென்று சொல்ல வேணும். அத்தன்மை போலப், பெரிய சிறிய கள்ளர் இரண்டும் களவு பண்ணுகிறதிலே கூடுகிற மேரையாகப் பெரிய கள்ளனுகிற இந்தச் சீவனுனதும் சின்னக் கள்ளனுகிற இந்த விசேஷ சரீரமும் இரண்டுங்கூடி இந்தச் சென்மத்திலே பலபல பாவங்களைப் பண்ணினல், இரண்டுங்கூடிப் பண்ணின பாவங்கள் நிமித்தமாக வருகிற சென்மத்திலே இந்தச் சீவனுனது பாவம் பண்ணுத சரீரத்தை எடுத்து, அதோடுகூட வியாதி முதலான நிர்ப்பாக்கியங்களை அனுபவிக்குமென்று சொல்லும்போது, பாவம் பண்ணின கள்ளனைப் பாவம் பண்ணுத வனோடே கூட்டி இரண்டுக்கும் ஆக்கினை இடப்படுமென்று சொல்வதுக்கு ஒக்கும். பாவம் பண்ணுகிற ஆத்தும சரீரத்திலே சொல்லப்படுமாப்போலே புண்ணியம் பண்ணுகிற ஆத்தும சரீரத்திலேயும் யோசிக்கக்கடவோம். அதேதென்றால், புண்ணியம் பண்ணினவனுக்கும் பண்ணுதவனுக்கும் சம்பாவனை அளிக்கப்படுமென்று அங்கீகரித்தாப்போலே ஆச்சுது.

(ii) **சீவன் உடலுக்கு மாத்திரையாகாவிட்டால்.** அல்லது சீவனுனது சரீரத்துக்கு மாத்திரையாய் இராமல் கிரகத்திலே இருக்கிறாப்போலே சீவனுனது சரீரத்திலே இருக்-

கிறதென்று சொன்னோமானால், அப்படிப்பட்ட தப்பறைப் பக்ஷத்தை அங்கீகரிக்கிறதிலே தானே இந்தச் சரீரத்திலே சீவனானது பாவம் பண்ணினதினால் வருகிற சென்மத்திலே வேறே சரீரத்திலே இருந்துகொண்டு, அந்தச் சரீரமானது வியாதி முதலான குறைச்சல்களை உடைத்தானதாய் இருக்குமென்று சொல்லுகிறதிலே ஞாயக்குறைச்சல் காண்பிக்கும் என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால், இந்த விசேஷ கிரகத்திலே பாவம் பண்ணினவன் உண்டானால், இந்தக் கிரகத்திலே அவன் பண்ணின பாவத்து நிமித்தமாக ஆக்கினையிட வேணுமென்று வேறே கிரகத்திலே அவனை அடைந்து அப்படிப்பட்ட கிரகம் பலபல குறைச்சல்களை உடைத்தானதாய் இருக்கப் பண்ணப் பட்டால்[3], பாவியானவன் வேறே கிரகத்திலே பண்ணின பாவத்து நிமித்தமாக இந்த விதமாக ஆக்கினை [2]அனுபவிப்பான் என்று சொல்லுகிறதென்கிறது [1]எக்கச்சக்கமான அடைவாயிருக்குமொழியக் கிரமத்தோடே இருக்கிறமேரையாய் இருக்கமாட்டாது. அம்மருவாகியே, கிரகமாகிற இந்தச் சரீரத்திலே இந்தச் சீவனானது பண்ணின பாவத்து நிமித்தமாக ஆக்கினையை அனுபவிக்கும்படிக்கு இந்தச் சீவனானது கிரகமாகிற வேறே சரீரத்திலே பிரவேசித்து, அந்தச் சரீரமாகிற கிரகமானது இடிக்கப்பட்ட கிரகமானதுபோலே தனது அவையவங்களுடைய இல்லாத்தன முதலான பலபல குறைச்சல்களை உடைத்தானதாய் இருக்கப் பண்ணப்படுகிறது என்கிற கிரமமானது, ஞாயமுள்ள மேரைக்கு ஏற்றிருக்கிறதென்று புத்திமானாய் இருக்கிறவன் சொல்லமாட்டான் என்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே, வியாதி முதலான குறைச்சல்களை உடைத்தான பேர்கள் லோகத்திலே உற்பவிக்கிறதுக்கும் நடுவிலே உண்டாகிறதுக்கும் ஆன ஞாயமுள்ள காரணத்தை வெளிப்படுத்தக்கடவோம்.

இருபத்தொன்றாம் பாடம் முற்றும்.

(கிரந்தம் உ௱ருடுரு)*

1. ஒழுங்கீனம், Disorder 2. அனுபவிக்கும் (பா.)
3. மாட்டாமல் (பா. பே.) * 255

## இருபத்திரண்டாம் பாடம்

**22.1. உவமை 1. இயற்கை இடையூறுகளால் பயிர் நலிவதுபோல் கெர்ப்பமும் கூன் குருடாய்ப் பிறக்கிறது.** சில பேர்கள் மொண்டிகளாய்ச், சிலர் கண்தெரியாத பேர்களாய் இது முதலான குறைச்சலோடு பிறக்கிறதுக்கும், நடுபாதியிலே வெவ்வேறே வியாதிகளையும் [1]சேதபாதங்களையும் அடைகிறதுக்கும் மெய்யான காரணம் கிட்டியிருக்கையிலே, இல்லாததாய் இருக்கிற பூர்வ சென்மத்திலே வேறே காரணத்தைக் கேட்கக் கடவதல்ல. இந்த விசேஷத்தை வேறே ஓர் உவமையினாலே சொல்லிக் காட்டலாம். அதேதெனில், குடியானவனொருத்தன் தனது விரையை விரைத்தான். விரைக்கிறதிலே உப்பு மண்ணிலே விழுந்த விரையானது சுத்தமாய் விளையாமல் போச்சுது, சில விரைகள் உவர் மண்ணிலே விழுந்ததினாலே முளை கெட்டுப்போய்க் கதிர் சின்னதாய்ப் போச்சுது, வேறே சில விரையானது தண்ணீரில்லாது வாடிச் சாவியாய் போச்சுது. பயிரிலே இதுகள் முதலான அநேக [2]விகாரங்களைக் கண்டோமானால், அங்கேயும் இங்கேயும் தூரத்திலேயும் இப்படிப்பட்ட விகாரங்களுக்குக் காரணத்தைத் தேடாமல், கிட்டியிருக்கிற மெய்யான காரணத்தைக் கண்டுபிடிக்கக் கடவ தொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே, மண்வாசியும் தண்ணீர்க் குறைச்சலும் இதுகள் முதலானதுகள் பயிர் கெட்டுப்போனதுக்குக் காரணமாயிருக்கிறது என்கிறது கிரமமாகும்.

இந்நடைவாக லோகத்திலே நடந்துவருகிற பிரசித்த வார்த்தையாவது: 'மாதாவுக்குச் சுகமுண்டானால் கெர்ப்பத்துக்குச் சுகமுண்டு'. ஆதலாலே, மாதாவுக்குச் சுகமில்லாமல் வியாதி முதலான குறைச்சல்கள் உண்டானால், அவசியமாய்க் கெர்ப்பத்துக்கு மோசம் வரவேணும் என்கிறதுக்குச் சந்தேகப் படத் தேவையில்லை. ஆனபடியினாலே, சிசுவினுடைய சரீரத்துக்கு வருகிற நொண்டித்தனம் முதலான பலபல குறைச்சல்களைப் பார்க்கும்போது, பயிரினுடைய குறைச்சல்களுக்கு மண்வாசியும், தண்ணீர்த் [3]தாழ்வும் மழையின் [4]வெகுத்துவம்

1. ஊனங்கள் 2. வேறுபாடு 3. குறைவு 4. மிகுதி

இது முதலானதுகள் காரணமாய் இருக்கிறதென்று சொல்லு கிறப்போலே, கெர்ப்பவாசியும் மாதாவினுடைய வியாதியும் பிள்ளையுடைய சரீர அவயவங்கள் திரண்டுவருகிறதுக்கு உஷ்ண சீதள முதலான குணங்களிலே வேண்டின பிரமாணங் களிலே ஏற்றக் குறைவுகளும் சிசுவினுடைய காலுக்கும் கைக்கும் வந்த ஊனத்துக்கு ஆன காரணமாய் இருக்கிற தென்று சொல்லத்தகுமொழிய, இல்லாத பூர்வசென்மத்திலே நின்று அப்படிப்பட்ட குறைச்சல்களுக்குக் காரணத்தை அமைப்பிக்கக்கடவோமல்ல. இப்படிப்பட்ட சத்திய விசேஷத்தை இந்தவிடைவிலே இன்னம் வெளியாக்கலாம். இஸ்திரியினுடைய கெர்ப்பத்திலே விழுந்த மனுஷனுடைய சுக்கிலமானது. புருஷனுக்கு உண்டான அத்தியந்த உஷ்ணத் தினாலே இறுகியிராமல் இளகியிருந்தாலென்கிலும், வேறே கெட்ட குணங்களைச் சுக்கிலமானது கொண்டிருந்தாலாகிலும், அப்படிப்பட்ட சுக்கிலமானது ஸ்திரியினுடைய இரத்தத்தைக் கூட்டிப் பிண்டமாக்குகிறதுக்கு வல்லதாய் இராததினால், அப்படிப்பட்ட சுக்கிலத்தின் நிமித்தமாகக் கெர்ப்பமானது உற்பவிக்கமாட்டாது. அவ்வண்ணமே கெட்ட விரையினின்று நல்ல முளை முளைக்க மாட்டாதது போலே, புருஷனுடைய சுக்கிலமானது கெட்டுப்போய் இருக்கிறதினால் நல்ல கெர்ப்பம் உற்பவிக்கப் பண்ணுகிறதுக்கு அது பலமுடையதாயிராது.

**22.2. உவமை 2: மருந்தால் வயிறு போவது போல் கெர்ப்பமும் அழியும்.** இது தவிர, [1]விரேசனத்துக்கு அவுஷதங்கொண்டோமானால், அப்படிப்பட்ட அவுஷதத் தினாலே வயிறுபோம். வயிறுபோகிறதுக்கு அவுஷதமே காணப் பட்ட காரணமென்று சொல்லத்தகுமொழிய, பூர்வ சென்மத் திலே பண்ணப்பட்ட கர்மமானது வயிறு போகிறதுக்குக் காரணமாய் இருந்துதென்று யாதொருத்தன் சொன்னால், அவன் எல்லாரும் சிரிக்கிறதுக்கு இடங்கொடுத்தானென்று சொல்ல வேணுமொழிய, அங்கீகரிக்கத்தக்க விசேஷத்தைச் சொன்னா னென்று சொல்லக்கூடாது. இந்தவிடைவிலே வேறொரு அவுஷதத் தினாலே வயிறு அடைபட்டால், வயிறு அடைபடுகிறதுக்கு அந்த அவுஷதமே காரணமொழிய, அதுக்கு வேறே

1. சுகபேதி மருந்து.

காரணத்தை மதிகெட்டவன் தேடினால் தேடுவானொழியப், புத்திமானாயிருக்கிறவன் தேடமாட்டான். இம்மருவாதியே, பித்த சிலேட்டுமம் இதுகள் முதலான விஷசலங்களை அவுஷதத்தினாலே முறிக்கிறாப்போலே, அடி வியாதி இது முதலான நிமித்தியங்களினாலே கெர்ப்பமழிந்து போகிறதுக்குத் தப்பாது. இதன்றியே, கெர்ப்பம் அழிந்துபோகிறதுக்குக் காரணமாய் இருக்கிற [2]உஷ்ணுதிக்க முதலான கேடுகளை அவுஷதமானது வருத்திவிக்க வல்லதாய் இருக்குமாப்போலே கெட்ட வியாதியானது அப்படிப்பட்ட உஷ்ணுதிக்க முதலான கேடுகளை வருத்திவிக்கலாம் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை.

இது இப்படியிருக்கையிலே, கெர்ப்பமழிந்து போனதுக்கு அவுஷதமும் வியாதியுங் கண்ணாலே காணப்பட்ட காரணங்களாய் இருக்கையிலே, இப்படியே காரணங்களை விட்டுப், பூர்வ சென்மத்திலே புத்தியீனனாய் இருக்கிறவன் இல்லாத காரணங்களைத் தேடி விசாரிப்பானொழியப், புத்திமானாயிருக்கிறவன் இப்படிப்பட்ட அபத்தத்துக்கு உடன்படமாட்டான். இந்தடைவாகக் கெர்ப்பம் உண்டாகிறதுக்கு விக்கினமான [3]விப்புருதி முதலான வேறே அனேகம் வியாதிகள் ஸ்திரீயினிடத்தில் இருந்தால், அவள் கெர்ப்பந்தரிக்க மாட்டாள். ஆனால் அவுஷதங்கள் முதலான காரணங்களினாலே கெர்ப்பத்துக்கு விக்கினமான வியாதிகள் போக்கடிக்கப்பட்ட பிற்பாடு ஸ்திரியானவள் கெர்ப்பந்தரிப்பாள் என்கிறதுக்குத் தப்பாது. அப்படிப்பட்ட கெர்ப்பம் உண்டாகிறதுக்கும் உண்டாகாததுக்கும் கிட்டின காரணம் உண்டாயிருக்கையிலே, பூர்வ சென்மத்திலே அதுக்கு வேறே காரணங்களைப் புத்திமானாயிருக்கிறவன் தேடக்கடவானல்ல. இந்தடைவாகச் சில அவுஷதங்களும் சில வியாதிகளும் கெர்ப்பந்தரிக்கிறதுக்கு விக்கினமாய் இருக்குமாப்போலே, வேறே சில வியாதிகளும் பக்ஷணங்களும் அடிகளும் இதுகள் முதலானதுகளும் உற்பவித்த கெர்ப்பத்துக்கு ஊனம் வருத்தவிக்கத்தக்கதாக வல்லதாய் இருக்கும் என்கிறதுக்குத் தப்பாது.

2. வெப்பமிகுதி 3. புண்.

**22.3. மருந்தின் விளைவும் முன்பிறப்புப் பயன் என்பது தவறு.** இதெல்லாம் ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமா யிருக்கையிலே, சில தெளிவற்ற பேர்கள் அதைக் கெடுக்கிறதுக்குச் சொல்லும் பிரத்தியுத்தாரமாவது: பூர்வ சென்மத்திலே அதுக்குத்தக்க கர்மங்கள் பண்ணப்பட்ட தினுல் ஆன அவுஷதங்கள் கிடைத்துதென்றும் கிடையா தென றும், வியாதி வந்ததென்றும் போனதென்றுஞ் சொல்லு கிறார்கள். இந்தப் பிரதியுக்தரத்தைச் சொல்லுகிறவர்கள் ஞாயத்தைப் பாராமற், [1]சலஞ்சாதித்துக்கொண்டு வருகிறார்க ளொழிய மற்றப்படியல்ல. அதேதென்றாற், காணப்பட்ட காரணங்கள் அதுக்கெல்லாத்துக்கும் போராமலிருந்தால், வேறே காரணங்களை அப்பால் இப்பால் தேடுகிறதுக்கு இடமுண்டாயிருக்கும். ஆனால் காணப்பட்ட காரணங்கள் அதுக்கெல்லாத்துக்கும் போரும் என்றிருக்கையிலே, வேறே காரணங்களைத் தேடுகிறவன் சலஞ்சாதித்துக்கொண்டு வருகிறவ னென்று சொல்லவேணுமொழியக், கரையேறத்தக்கதாகச் சத்தியத்தைத் தேடிக் கண்டுபிடிக்கிறதுக்கு ஆசையுள்ளவ னென்று சொல்லக்கூடாது. கடைசியாய்ச் சர்வேஸ்வரனுடைய திருவுளத்தினுலேயுஞ், சுவாதந்திரியமுள்ள மனசினுலேயும் பண்ணப்படுகிற உபாயங்களினுலேயும் மருந்து கிடைக்கதுங் கிடையாததும் இது முதலான அந்த வர்த்தமானங்களைப் பார்த்துப், பூர்வசென்மத்திலே பண்ணப்பட்ட கர்மங்கள் நிமித்தமாக வந்துதென்றும் வராதென்றுஞ் சொல்லுகிறதென் கிறது ஞாயத்துக்கு ஒவ்வாதென்கிறதினுல், அத்தை வெறுத் துத் தள்ளத்தக்க தப்பறை விசேஷமென்று சொல்லத்தகு மொழிய, அது ஒப்புக்கொள்ளத்தக்க விசேஷமென்று சொல்லக் கூடாது.

**22.4. உவமை 3: குயவன் சூளையில் பானைபோல் பெற்றோரிடம் கர்ப்பம்.** பின்னையுங், கெர்ப்பந் தரிக்கப் பண்ணுகிறதுக்கு வல்லதாயிருக்கிற சுக்கிலமானது ஸ்திரீயி னுடைய கெர்ப்பத்திலே விழுந்தாலும், இப்படிப்பட்ட சுக்கிலத்தோடே கூடத்தக்க ஸ்திரீயினுடைய இரத்தமானது உஷ்ணசீதளமென்கிற வேண்டின குணங்களையும் ஆன

1. பிடிவாதஞ்செய்.

பிரமாணத்தையும் உடைத்தானதாய் இராதிருந்தால், குயவனு னவன் ஆகாத மண்ணிலே பாத்திரங்களை வனையமாட்டாதது போலே, கெர்ப்பத்தின் நிமித்தகாரணயா யிருக்கிற புருஷனு டைய சுக்கிலமானது ஆகாத மண்போலே யிருக்கிற ஸ்திரீயி னுடைய கெட்ட இரத்தத்தினாலே கெர்ப்பத்தை உற்பவிக்கப் பண்ணமாட்டாது. பின்னையும், பலபல குசவர் ஒரு பாத்திரம் உண்டாக்கியவனுக்கு[1] அத்தை எல்லாரும் வனைவோமென்றால், நல்ல மண்ணுயிருந்தாலும் பாத்திரமானது செவ்வே உண்டாக மாட்டாது என்கிறதுக்குச் சந்தேகமில்லை. பின்னையுந், தனது பலத்தையெல்லாம் வேறேயநேக காரியங்களினாலே சிலவழிக் கிற குசவனானவன் ஒரு பாத்திரத்தை நன்றாய் மனைகிறதுக்கு வல்லவனாயிரான். அத்தன்மைபோல் அனேகம் புருஷரோடே கூடிச் சங்கம் பண்ணுகிற ஸ்திரீகளுக்கும், அனேக ஸ்திரிக ளோடே கூடிப் போகிக்கிற புருஷனுக்கும், எப்போதும் நடந்துவருகிற மேரையை விசாரிக்குமிடத்தில், இத்தொகைப் பட்ட பேர்கள் புத்திர சந்தானத்தை அடைவதில்லை. பிரயா சத்தினாலே யடைந்தாலும் அது கொஞ்சமாய் இருக்குமொழிய வெகுத்துவமாயிருக்க மாட்டாது. இதெல்லாத்துக்கும் நம்மாற் சொல்லப்பட்ட குணங்கள் காரணமாயிருக்கையிலே, இல்லாத பூர்வசென்மத்திலே இதுக்குக் காரணமுண்டென்று ஏன் தேடி அங்கிகரிக்கவேணும்?

ஆனால், நல்ல சுக்கிலமானது நல்ல ஸ்திரீ கெர்ப்பத்திலே விழுந்த பிற்பாடு அதுநிமித்தமாக மெள்ளமெள்ள நாள்வட்டத் திலே பிள்ளையினுடைய சரீரத்தில் அவையவங்கள் திரளு மொழிய மற்றப்படியல்ல. இது செவ்வே பலிக்கிறதுக்கு உஷ்ணமுதலான குணங்களுடைய பிரமாணத்தை அடைந் தானதாயிருக்கிற சத்தியானது மாதாவினிடத்திலே உண்டா யிருக்கவேணும். இதிலே குறைச்சலுண்டானால், அப்படிப் பட்ட சத்தியானது சகல அவையவங்கள் திரளத்தக்க உதவி செய்யும்போது, யாதொரு அங்கம் திரளுகிறதுக்கு உதவாமல் இருக்கிறதினால், அந்த அவையவத்திலே ஊனம் பலிக்கும் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அதெப்படி யென்றால், குசவன் சூளையிலே ஆன பிரமாணத்தோடு

1. = பதிலாக. 2. மிகுதி.

அக்கினியாவது எங்குங் குறைவில்லாமற் பரம்பினால், அப்படிப் பட்ட அக்கினியினுடைய பிரமாணத்தையுடைத்தான உஷ்ணத் தின் சத்தியினாலே பாத்திரமெல்லாங் குறைவில்லாமல் வெந்து போம் என்கிறதுக்குத் தப்பாது. ஆனால், சூளையிலே அக்கினி கொஞ்சமா யிருந்தால், அதினுடைய உஷ்ணமானது எங்கும் பரம்பாமற் பாத்திரத்தையெல்லாம் வேகப்பண்ணுகிறதுக்கு வல்லதாயிராததினால், அப்படிப்பட்ட உஷ்ணத்தினாலே பாத் திரத்திற் பாதி வெந்துபோய் மற்றப் பாதியானது வெந்து போகாதென்றும், உடைந்துபோகுமென்றும் பிரத்தியக்ஷமாய்க் கண்டுகொண்டு வருகிறோம். அத்தன்மைபோலச், சூளைக்குச் சரியாகத் தாயாருடைய கெர்ப்பத்திலே உஷ்ணமாகிற சத்தி யானது பிரமாணத்தோடே எங்கும் பரம்பாமலிருந்தால், அதுகளுக்குள்ளே வேகிற பானைபோலே யிருக்கிற திரண்டு வருகிற சரீரமானது ஒரு பக்கத்திலே திரளாமல் இருந்தாலும் இருக்கும்; ஒரு பக்கத்திலே அவையவமானது கெட்டுப்போனா லும் கெட்டுப்போம். ஆனபடியினாலே, மாதாவினிடத்திலே உள்ள குறைச்சலானது பிள்ளையினுடைய சரீரம் ஒரு பக்கத் திலே திரளாமலிருக்கிறதுக்கும் சுத்தமாய்க் கெட்டுப்போகிற துக்கும் போதும் என்னப்பட்ட காரணமா யிருக்கையிலே, அப்பால் இப்பால் வேறே காரணத்தைத் தேடி விசாரிக்கக் கடவோமல்ல.

**22.5 கர்ப்பத்தைக் கெடுக்கும் வேறுசில காரணங் கள்.** இது தவிரப், பிள்ளை சரீரம் உண்டாகிறதுக்கு மாதா வினிடத்திலே ஆன பிரமாணத்தோடு உண்டாகிற சத்தி யானது [1]பக்ஷணங்கள் முதலான வேறே காரணங்களினாலே கெட்டுப்போகலாம். அதுக்குக் கேடுவரும்போது பிள்ளை சரீரத்துக்கு ஊனம் வரும் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. இதன்றியே, ஆகாத தறுவாயிலே, கெர்ப்ப மானது தரிக்கப்பட்டால், மாதாவினிடத்திலே இருக்கிற குறையற்ற சத்தியானது பிள்ளை சரீரத்துக்கு மோசம் வராமல் விலகமாட்டாது. அவ்வண்ணமே ஸ்திரீயானவள் தூராயிருக் கையிலே கெர்ப்பந்தரித்தாற், பிள்ளையினுடைய கண்ணுக்கு மோசம் வருமென்று [2]வயித்திய சாஸ்திரபாரகரா யிருக்கிற

1. உணவு. 2. ஆசிரியர் காலத்திலுள்ள அறிஞர்

பேர்கள் சொல்லுகிறார்கள். இதன்றியே, மாதாவானவள் அடிபட்டதினாலே (யாதிலும்) விழுந்ததினாலேயென்கிலும் கெர்பபத்திலே யிருக்கிற பிள்ளையினுடைய சரீரத்துக்கு ஊனம் வருமென்று சந்தேகப்படுவார் இல்லை. ஆனபடியினாலே, ஸ்திரீயானவள் கெர்ப்பம் தரியாததுக்கும், தரித்த கெர்ப்பத்துக்கு பலபல குறைச்சல்கள் வருகிறதுக்கும் கிட்டியிருக்கிறதுமாய்க் காணப்பட்டதுகளுமாய் இருக்கிற காரணங்கள் உண்டாயிருக்கையிலே, வேறே காரணங்களைத் தேடி விசாரிக்கிறது அறிவின் குறைச்சலாய் இருக்கிறதென்று சொல்லத்தகுமொழிய மற்றப் படியல்ல.

**22.6. திடீரென்று வரும் இன்னல்கள் மும்மையின் விளைவா?** இந்தவிதமாக இருந்தாப்போலே அவனவனுக்கு வருகிற [2]சேதபாதங்களை விசாரிக்குமிடத்திலே, அதுகள் வருகிறதுக்கான காரணங்கள் கிட்டியிருக்கையிலே, பூர்வசென்மத்திலே யாகிலும், வேறே ஸ்தலங்களிலே என்கிலும் அப்படிப் பட்ட காரணங்களைத் தேடக்கடவோமல்ல. அதெப்படி என்றால், ஒருத்தன் பேரில் இல்லாத குற்றத்தை அறியாத பேர்கள் [3]ஆரோபித்து அப்படிப்பட்ட குற்றத்தினிமித்தமாக ராசாக்களாயிருக்கிற பேர்கள் ஆக்கினையிடுகிறார்கள். இப்படிப் பட்ட ஆக்கினையை அனுபவிக்கிறதுக்கு இந்தச் சென்மத்திலே குற்றம் காணாததினால், அவனுக்குப் பூர்வ சென்மத்திலே குற்றம் உண்டாயிருக்க வேணும். அதேனென்றால், அவனவன் பண்ணின பாவத்து நிமித்தமாக மாத்திரம் ஆக்கினை இடுகிறவருமாய்க் குற்றமில்லாதவனுக்கு ஆக்கினை இடுவியாதவருமாய் இருக்கிற கர்த்தரானவர், இந்தச் சென்மத்திலே குற்றம் பண்ணாதவனுமாய்ப் பூர்வ சென்மத்திலே குற்றம் பண்ணினவனுமாய் இருக்கிறவனுக்கு ஆக்கினை இடுவித்தாரென்று சொல்லக்கடவோம் என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். இந்தவிதமாகத் திரவிய சேத முதலான கேடுகள் யாதொருத்தனுக்கு வந்தால், அப்படிப்பட்ட சேத முதலான கேடுகளை அவனவன் அனுபவிக்கிறதுக்கு இந்தச் சென்மத்திலே குற்றம் பண்ணாதவன் பூர்வ சென்மத்திலே குற்றம் பண்ணி அப்படிப் பட்ட குற்றத்து நிமித்தமாகக் கர்த்தரானவர் இப்போது

2. கேடுகள் 3. சுமத்தி.

ஆக்கினையிடுகிறாரென்று சொல்லவேணுமென்று சொல்லு கிறார்கள்.

**22.7. முன்பிறப்பாவில்லை: (i) இம்மையில் செய்த பாவத்துக்குத் தண்டனை.** இந்த விஷயத்திலே மனுஷனுனவன் மயங்கத்தக்க இடமில்லாமல் இருக்கையிலே, சில பேர்கள் மயங்கும்போது மகா மகாப்பட்ட பாவங்களினாலே அவர்களுக்கு முழுதும் புத்தி மயங்கிப் போச்சுதென்று சொல்ல வேணுமொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால், அவனவன் இந்தச் சென்மத்திலே பிறந்த பிற்பாடு, அவனவன் அறிந்து பண்ணின பாவங்களை விசாரிக்கும்போது, அதுகள் எண்ணப் படாததாய் இருக்கக்கொள்ள, 'விடிந்தாலும் அந்திபட்டாலும் மனுஷனுனவன் பண்ணுகிறதெல்லாம் பாவமாய் இருக்கிறது' என்கிற வாக்கியமானது பிரசித்தமாய் லோகத்திலே நடந்து வரும் என்கிறதுக்குத் தப்பாது. இது இப்படியிருக்கையிலே, இந்தச் சென்மத்திலே பண்ணின பலபல பாவங்களைப் பார்க்கும்போது, ஒவ்வொரு பாவத்தின் நிமித்தமாக மனுஷனுனவன் நரகத்திலே விழுந்து அவிடத்திலே முடியாத காலம் இருக்கிறதுக்குப் பாத்திரமாய் இருக்கும்போது, மனுஷனுனவன் இப்போது படுகிற திரவிய சேத முதலான கேடுகளை அனுபவிக்கிறதுக்கு இல்லாத பூர்வ சென்மத்திலே காரணத்தைத் தேடி விசாரிக்கக் கணக்கில்லை.

(ii) **தகப்பனைப் போல் கடவுள் துன்பத்தால் அடித்துத் திருத்துகிறார்.** இது தவிர, அவனவன் இந்த லோகத்திலே திரவிய சேத முதலான மகாமகாப்பட்ட பொல்லாப்புக்களைப் படுகிறதுக்குக் குறையற்ற ஞாயமுள்ள காரணமுண்டு. அதேதென்றால், குற்றம் பண்ணின சிறுபிள்ளைக்குப் புத்திவரவேணுமென்று தோப்பனாராகிறவன் அந்தச் சிறுபிள்ளையைக் கன்னத்திலே அடிக்கிறாப்போலே, தயாபரனான கர்த்தரானவர் பாவியானவன் பாவமென்னப்பட்ட யாவையும் விடுகிறதுக்கும், கர்த்தன் கற்பித்த புண்ணிய நெறியைக் கடவாமல் நடக்கிறதுக்கும், இந்தடைவாக மரணம் வருகிறதுக்கு முன்னே அவனவன் தனது காரியம் கெட்டி பண்ணுகிறதுக்கும் புத்தி உண்டாக வேணுமென்று, கர்த்தரானவர் இந்த லோகத்திலே

பலபல ஆக்கினையிடுகிறார் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. ஆதலாலே, லோகத்திலே இருக்கிற பேர்களுக்குப் பிழைக்கத்தக்க புத்தியுண்டாகவேணும் என்கிற திவ்விய திருவுளமானது அவனவன் திரவிய சேத முதலானதுகளை அனுபவிக்கிறதுக்குக் காரணமாயிருக்கிறதென்று சொல்லக்கடவது.

(iii) அரசன் இடும் தண்டனை இரு வகைப்படும். இதிலே அறியவேண்டினதாவது: லௌகிக ராசாவானவன் தனது குடியானவர்கள் பண்ணின குற்றத்து நிமித்தமாக இரண்டு வகையுள்ள ஆக்கினைகளை அவர்களுக்குப் பண்ணிக்கொண்டு வருகிறான். சில பாவிகளைச் சிறைச்சாலையிலேயும் விலங்கிலேயும் போடுவித்து இது முதலான ஆக்கினைகளை இட்டபிற்பாடு, அவர்களை விடுகிறதினால், அது முதல்வகை ஆக்கினையென்று சொல்லக்கடவது. இப்படிப்பட்ட ஆக்கினையானது அனுபவிக்கிறவனுக்கு இனிமேல் குற்றம் பண்ணாமல் நன்றாய் நடக்கும் படிக்கு நல்ல புத்தியை வரப்பண்ணுகிறதுக்காக [1](அப்படிப்பட்ட ஆக்கினையானது ஆக்கினை [2]அனுபவிக்கிறவனுக்கு நன்மை வரத்தக்கதாகக்) காரணமாய் இருக்கிறதென்று சொல்லத்தகும். அந்த ஆக்கினை தவிரக் கள்ளனைத் தலைவெட்டிக் கழுவிலே போடுவிக்கிறது என்கிறது இரண்டாம் வகையுள்ள ஆக்கினையென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட ஆக்கினையானது ஆக்கினையை அனுபவிக்கிறவனுக்கு நன்மை வரத்தக்க காரணமாயிராமல், அவனை முழுதும் கெடுத்து ஆக்கினை அனுபவிக்கிறவனைப் பார்த்துக் கொண்டிருக்கிற பேர்கள் அந்தந்தப் பாவங்களிலே விழவொண்ணாது என்கிற நல்ல புத்தியை அடைகிறதுக்குக் காணப்பட்ட ஆக்கினை காரணமாயிருக்குமொழிய மற்றப்படியல்ல.

(iv) அதுபோலத் திருத்துவதற்காகக் கடவுள் தரும் முதல் தண்டனை. அத்தன்மைபோலப் பூலோகத்திலே திரிகிற பேர்களைத் திரவிய சேத முதலான நோவு வியாதிகளைக் கர்த்தரானவர் அனுபவிக்கப் பண்ணுகிறதுக்கு இரண்டு காரணம் உண்டென்று சொல்லப்படும். அதேதென்றால், பாவமில்லாத

1. அதே கருத்தும் ஏறத்தாழச் சொல்லும் திரும்பி வருகிறது
2. வரபண்ணுகிறதுக்கு (பா. பே.)

மகாத்துமாக்கள் பூலோகத்திலே தேவ இஷ்ட முதலான சுகிர்த குணங்களுடைய அபிவிர்த்தியை யடைந்து, மோக்ஷ ராச்சியத்திலே பரமானந்த முதலான பாக்கிய செல்வங்களை அதிகமதிகமாக அனுபவிக்க வேணுமென்கிற கிருபையுள்ள திவ்விய திருவுளமானது, பாவமில்லாத மகாத்துமாக்களாய் இருக்கிற பேர்கள் திரவிய சேத முதலான வியாதி நோவு வாதைகளை அனுபவிக்கிறதுக்குக் காரணமாய் இருக்கிறதென்று சொல்லத் தகும். ஆனால் பாவாத்துமாக்கள் பாவங்களை வெறுத்துப், பாவத்தினுடைய துர்மார்க்கத்தில் நின்று திரும்பி, நிர்மல புண்ணிய நெறியை [2]அனுசரிக்கத் தக்கதாக அவர்களுக்குப் புத்தியுண்டாக வேணுமென்று, பாவிகளுக்கு நன்மையாகத் திரவிய சேத முதலான வியாதி உபத்திரவங்களைக் கர்த்தரானவர் அவரவர்களை அனுபவிக்கப் பண்ணுகிறாரொழிய, எப்போதும் நடக்கும் மேரையை விசாரிக்குமிடத்தில், பாவிகள் கெட்டுப்போக வேணுமென்று பூலோகத்திலே கர்த்தரானவர் அவரவர்களை ஆக்கினை இடுகிறதில்லை என்று அங்கீகரிக்கக் கடவோம். ஆகலாலே, லோகத்திலே கர்த்தனாலே இடப்பட்ட ஆக்கினை என்னப்பட்டயாவும் ஆக்கினை அனுபவிக்கிற பேர்களுக்கும் ஆக்கினை அனுபவிக்கிற பேர்களைப் பார்த்துக் கொண்டு இருக்கிறவர்களுக்கும் நன்மை வரத்தக்க காரணமாய் இருக்கிறதென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல.

இந்த விசேஷத்தை யின்னந் துலக்கமாய் இந்தவிடைவாகச் சொல்லிக் காட்டலாம். பாவம் பண்ணின பேர்கள் பாவத்தை விடாமல் பாவத்திலே சந்தோஷ மனசுள்ளவர்களாய் இருக்கையிலே, இப்படிப்பட்ட பேர்கள் பாவப் புத்தியை விட்டுத் தர்ம புத்தியை அடையவேணும் என்கிறதுக்குத் தயாபரனை கர்த்தரானவர் வியாதி முதலான கஸ்திகளை அனுப்புவிக்கும்போது, வியாதி உள்ளவர்களுக்கு வியாதி நிவாரணம் உண்டாக வேணும் என்று அவுஷதங் கொடுத்தாப்போலே ஆச்சுது. ஆனபடியினாலே அப்படிப்பட்ட பாவிகளுக்கு ஆக்கினையானது நன்மை என்று சொல்லப்படுமொழிய மற்றப்படியல்ல. ஆனால், சிலர் தாங்கள் பண்ணின பாவங்களைத் தள்ளிப் புண்ணியவானாய் இருக்கையிலே, அப்படிப்பட்ட பேர்கள் தாங்கள் பண்ணின பாவங்

2. அனுபவி (பா. பே.)

களுக்காகப் பரலோகத்திலே சிறிது காலமானாலும் ஆக்கினை அனுபவியாமல் இந்த லோகத்திலே பாடுபட்டு அவர்கள் பண்ணின பாவங்களுக்கு உத்தரிக்கவேணுமென்று தயாபரனை கர்த்தரானவர் கஸ்தி முதலான உபாதைகளை அவர்களுக்கு அனுப்புகிறதினால் வியாதி முதலான உபாதைகளானதுகள் அவர்களுக்கு மகா நன்மை வருத்திவிக்கும் என்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது. அல்லது, மகாத்துமாக்களாய் இருக்கிற பேர்கள் ஒருக்காலும் பாவம் பண்ணுகவர்களாய் இருக்கையிலே இவர்கள் முதலாய் வியாதி முதலான கஸ்திகளை அனுபவிக்கிறது என்கிறதுக்காக மகாமகாப்பட்ட நன்மைகளை அடைகிறார்கள் என்கிறதினால், மகாத்துமாக்களுக்கு முதலாய் வியாதிகளும் திரவிய சேத முதலான உபாதைகளும் பலபல நன்மைகளுக்குக் காரணமாய் இருக்கிறது என்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது.

(v) தீயோரைத் தொலைப்பதுபோல் கடவுள் தரும் இரண்டாம் (நரக) தண்டனை. ஆனால், லவுகீக ராசாவானவன் களவு முதலான பாவங்கள் நிமித்தமாகக் கள்ளனைத் தலைவெட்டுவித்து அவனைக் கழுவிலே போட்டுவிக்கும்போது, அவனுக்குக் கேடாயிருந்தாலும், அப்படிப்பட்ட ஆக்கினை அனுபவிக்கிறவனை இருக்கிற பேர்கள் பார்ப்பதினால் பயப்பட்டுக் களவு முதலான பாவங்களைப் பண்ணுமல், நன்றாய் நடக்கவேணுமென்கிற பெரிய புத்தியை அடைவார்கள் என்கிறதினால், அப்படிக்கொத்த ஆக்கினையானது செத்துப்போகிற கள்ளனுக்கு நன்மையை வருத்திவியாமல் இருந்தாலும், பிழைக்க இருக்கிறவர்களுக்குத் தர்ம புத்தியென்கிற நன்மை வரப்பண்ணும் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. ஆகலாலே ஆக்கினை என்னப்பட்டதெல்லாம் லோகத்துக்கு நன்மை வரத்தக்க காரணமாய் இருக்கிறதென்று சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல. லவுகீக ராசாவானவன் தனது குடியானவர்களாய் இருக்கிற பாவிகளுக்கு இரண்டு வகையுள்ள ஆக்கினை இடுகிறாப்போலே மகாராசாவாய் இருக்கிற சர்வேஸ்வரனானவர் முன்சொல்லப்பட்ட ஆக்கினை தவிர மனுஷனுக்குப் பாவத்து நிமித்தமாக வேறே வகையுள்ள ஆக்கினையைப் பண்ணிக்கொண்டு வருகிறாரென்று சொல்லவேணும். அதேதென்றால், நீதிபரராயிருக்கிற

கர்த்தரானவர் சில பாவிகளைச் சாகப்பண்ணி நரகத்திலே தள்ளுகிறார்.

(vi) நரக தண்டனையால் அங்குள்ள பாவிகள் பயனடையா விட்டாலும் இவ்வுலகினர் பயனடைகின்றனர். இந்த ஆக்கினையானது ஆக்கினையை அனுபவிக்கிற பாவிகளுக்கு முழுதும் கேடாயிருந்தாலும், கர்த்தரானவர் பாவத்து நிமித்தமாக மனுஷருக்கு இப்படிப்பட்ட ஆக்கினையிடுகிறார் என்று அறிந்த பேர்கள், மிகவும் பயப்பட்டு பாவமென்னப்பட்ட யாவையும் வெறுக்கவும், நிர்மல புண்ணிய வழியிலே நடக்கவும் துணிவார்கள் என்கிறதினால், அப்படிப்பட்ட ஆக்கினையானது ஆக்கினையை அனுபவிக்கிற பாவிக்குப் பிழைப்பாகிற நன்மை வருத்தியாதிருந்தாலும், அதைப் பார்த்தவர்களுக்கு நன்மை வருத்திவிக்கும் என்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது. இந்த ஆக்கினை தவிரச் சர்வேஸ்வரனானவர் வியாதி முதலான கஸ்திகளையும் திரவிய சேத முதலான கேடுகளையும் மனுஷனுக்கு, முன் சொன்னாப்போலே, அனுப்பும்போது, மனுஷனானவன் மிகவும் பயந்து பாவத்தை வெறுக்கவும், புண்ணியத்தைச் சம்பாதிக்கவும் மனுஷனானவன் துணியவேணுமென்று கர்த்தரானவருக்குத் திருவுளமுண்டாய் இருக்கக்கொள்ள, இப்படிப்பட்ட ஆக்கினையானது ஆக்கினையை அனுபவிக்கிறவனுக்கு நன்மை வரத்தக்க காரணமுண்டாய் இருக்கும் என்கிறதுக்குத் தப்பாது. அதெப்படியென்றால், பூமியிலே திரிகிற பேர்கள் நரக மோக்ஷத்தைப் பெறுகிறதுக்கான அவஸ்தையை அடைந்திருக்கிறார்கள் என்கிறதினால், மனுஷன் நரகத்திலே விழாமல் மோக்ஷத்தைப் பெறுகிறதுக்குத் தயாபரனான கர்த்தரானவர் எண்ணப்படாத உதவிகளைப் பண்ணிக்கொண்டு வருகிறார் என்கிறதுக்குத் தப்பாது. ஆதலாலே, பூமியானது கர்த்தன் கிருபை பண்ணுகிற ஸ்தலமென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட கிருபை பண்ணுகிற ஸ்தலத்திலே(யே), பாவியானவன் பாவத்தை விட்டுத் தர்மபுத்தியை அடையவேணுமென்று கிருபையுள்ள பிதாவைப் போலேஇத்தனை கனமான ஆக்கினையிடுகிற கர்த்தரானவர், தனது நீதிப்படியே பாவத்துக்கொத்த வண்ணம் சரியான ஆக்கினை இடத்தக்க ஸ்தலத்தை அடைந்த பாவியானவனுக்குச் சொல்லப்

படாத ஆக்கினையைக் கர்த்தரானவர் இடுவார் என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால், காத்தன் கிருபை பண்ணிக்கொண்டு வருகிற ஸ்தலத்திலே இருக்கிறவனுக்குத் தர்ம புத்தி உண்டாகிறதுக்கு மாத்திரம் கர்த்தரானவர் இத்தனை கனமான ஆக்கினைகளை இடும்போது, பாவத்துக்கொத்த வண்ணம் கேவலம் பலனை அனுபவிக்கத்தக்க ஸ்தலத்தை அடைந்த பாவிக்கு மனோவாக்குக்கு எட்டாததாயிருக்கிற நோவு உபாதைகளை நரகத்திலே அனுபவிக்கப் பண்ணும்போது, நரகத்திலே விழுந்தவனை நரகத்தினுடைய ஆக்கினையானது முழுதும் நிர்ப்பாக்கியனாக்கி அவனைப் பிழைக்கத்தக்கதாகப் பண்ணாதிருந்தாலும், அப்படிப்பட்ட நரகத்தினுடைய ஆக்கினை அனுபவிக்கிறவனை விசுவாசத்தின் கண்ணாலே கண்டிருக்கிற பேர்கள் நரகத்திலே தள்ளுகிற பாவமென்னப்பட்ட யாவையும் முழு மனதோடு வெறுத்துப், புண்ணிய வழியிலே நடக்கிற பேர்கள் படத்தக்க பிரயாசத்துக்குத் துணிவார்கள் என்று அங்கீகரிக்கத்தக்கதாகும்.

அவ்வண்ணமே. நரகத்தினுடைய அக்கினையைப் பாவிகள் அனுபவிக்கிறதென்கிறதும், புண்ணியவான்களும் பாவிகளும் பூலோகத்திலே ஆக்கினையை அனுபவிக்கிறது என்கிறதும் பூலோகத்திலே இருக்கிற பேர்கள் பிழைக்கிறதுக்குக் காரணமென்று சொல்ல வேண்டியிருக்கிறது. அதேதென்றால், சஸ்தியுபாதைகளை மகாத்துமாக்களாய் இருக்கிற பேர்கள் அனுபவிக்கிறதினால், பொறுமை முதலான நல்ல குணங்களையடைந்து கர்த்தனுக்கு அதிகமான சனுக்களாய்ப் போகிறார்கள். இதுதவிரப் பாவமாகிற வியாதி அவர்களுக்கு வராதபடிக்குத் தயாபரனான கர்த்தரானவர் அவுஷதம் குடுத்தாப்போலேயாகும். அதெப்படியென்றால், தயவுள்ள மாதாவானவள் தான் பெற்ற பிள்ளைக்கு வியாதியுண்டானால். அப்படிப்பட்ட வியாதியைப் போக்கடிக்க வேணுமென்று தான் பெற்ற பிள்ளைக்கு மருந்து கொடுக்கிறவள் வியாதியில்லாத வேறே பிள்ளைக்கும் வியாதி வராதபடிக்கு மருந்து கொடுக்கிறாள் என்கிறதுக்குத் தப்பாது. அத்தன்மைபோலே தயாபரனான கர்த்தரானவர் பாவமுள்ள பேர்களுக்குத் தரும புத்தியுண்டாய்ப் பாவநிவாரணம் உண்டாக வேணுமென்று

வியாதி முதலான கஸ்திகளை அனுப்பும்போது, வியாதியுள்ள பேர்களுக்கு வியாதி போக்கடிக்க வேணுமென்று அவுஷதங் கொடுத்தாப்போலே யாகும். பாவமாகிற வியாதியில்லாத மகாத்துமாக்களும் வியாதி முதலான நோவுகளை அனுபவிக்கும் படிக்குக் கட்டளையிடும்போது, வியாதியில்லாத பிள்ளைகளுக்கு ஒரு வியாதியும் வராதபடிக்கு அவுஷதங் கொடுத்தாப்போலே ஆகுமென்று அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். அவ்வண்ணமே, பாவமுள்ள பேர்களும் இல்லாத பேர்களும் இக்காலத்திலே பலபல ஆக்கினைகளையும், திரவிய சேத முதலான கேடுகளையும் அனுபவிக்கிறதுக்கு அப்படிப்பட்ட ஞாயங்களுள்ள காரணம் உண்டாயிருக்கையிலே, அவனவன் இந்தச் சென்மத்திலே படுகிற பாடுகளுக்கு இல்லாத பூர்வ சென்மத்திலே முழுதும் அறியப்படாத காரணங்களைக் கரையேறத்தக்கதாகத் தாற்பாரியமுள்ளவன் சொல்லவும் எண்ணவும் கடவானல்ல.

இருபத்திரண்டாம் பாடம் முற்றும்.

(கிரந்தம்) உ௱௫௰*

## இருபத்திமூன்றும் பாடம்

**23.1. ஆன்மாவின் ஒடுக்கம்: குறையற்ற பாக்கியம்.** சரீரமாய் இராததுமாய், என்றென்றைக்கும் நிற்கிறதுக்குச் சரீரத்தை அபேக்ஷியாததுமாய்ச், சரீர சம்பந்தமாய் இராத ஞானதி விருத்திகளுக்குக் காரணமுமாய் இருக்கிற மனுஷாத்துமமானது உற்பவித்த வகையையும், அதுக்குண்டான சுபாவ முதலான பல குணங்களுடைய மேரையையும் இற்றைவரைக்கும் சொல்லப்பட்டாப்போலே ஆச்சுது. ஆதலாலே அநேகம் பேர்களினாலே அறியவேணுமென்று தேடப்பட்டதுமாய், அறியப்பட்டதாய் இராததுமாய் இருக்கிற இப்படிப்பட்ட மனுஷ சீவனுடைய [1]தோற்றமாகிற உற்பத்தியானது கொஞ்சத்துக்குள்ளே நம்மால் ஒப்பச் சொல்லப்பட்டுதென்று சொல்லக்கடவது. ஆனால் ஆன கிரமத்தை விசாரிக்கு

* 250 1. origin

மிடத்தில், ஆத்துமத்தினுடைய தோற்றமானது இன்னதென்று நிச்சயிக்கப்பட்ட பிற்பாடு, அதினுடைய [2]ஒடுக்கம் ஏதென்று சொல்ல வேண்டியிருக்கிறதென்று கரையேறுகிறதுக்குத் தாற்பரியமுள்ளவர்கள் அபேக்ஷித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆத்துமத்துக்குக் கடைசியாய் வரத்தக்க [3]கெதியும், [4]அவதியும் ஒடுக்கமாகும். ஆனபடியினாலே, தயாபரனாய் இருக்கிற கர்த்தரானவர், மனுஷ சீவனுக்குக் கட்டளையிட்டருளின ஒடுக்கமாகிற அவதி ஏதென்று இனிமேல் முப்பத்திரண்டாம் பாடந்துவக்கி முப்பத்தஞ்சாம் பாடம் பரியந்தம் வெளிப்படுத்தி, நரக பாவத்துக்கு ஒத்திருக்கிற அவதியை நினையாமல், தயாபரனான கர்த்தரானவர் தம்முடைய கிருபையுள்ள திருவுளப்படியே மனுஷனுக்குக் கிருபையுள்ள திருவுளப்படியே மனுஷனுக்குக் கட்டளையிட்டருளின அவதி இன்னதென்று துலக்கமாய்ச் சொல்லிக் காட்டக்கடவோம்.

அப்படிப்பட்ட அவதியிலே அந்தந்த மனுஷ சீவனானது தனக்கு வரலான குறையற்ற பாக்கியத்தை அடையவேணுமென்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமாகும். அல்லது குறையுள்ள பாக்கியத்தைச் சீவனானது அப்படிப்பட்ட அவஸ்தையிலே அடைந்தால் போதுமென்று சொன்னோமானால், அந்தச் சீவனுக்கான [5]பாத்திரத்தையும் அளவுபிரமாணத்தையும் பார்க்கும்போது, அந்ததுக்கு அப்பால் சர்வேஸ்வரனுடைய கிருபையினாலே இன்னம் அதிகமான பாக்கியம் வரலாமென்று சொல்லத்தகும். இந்தவிடத்திலே சொல்லும்போது, அவதிக்கு அப்பால் ஒன்றும் வரக்கூடாதென்கிற ஞாயத்தினாலே குறையுள்ள பாக்கியமானது அவதி ரூபமான பாக்கியமாய் இருக்கிறதென்று சொல்லத்தகாது. ஆதலாலே ஒடுக்கமாகிற அவதியிலே மனுஷ சீவனுக்கு வரத்தக்க பாக்கியமானது, குறையற்ற பாக்கியமாய் இருக்கவேணுமொழிய மற்றப்படியல்ல.

**23.2. பூலோக இன்பம் ஆன்மாவின் ஒடுக்கமா?**

இதிப்படியிருக்கையிலே, ஞானமற்ற செந்துக்களைக் காட்டிலும் மதிகெட்ட சில பாவிகள் சரீரத்தோடேகூட மனுஷ சீவனானது அழிந்து போகிறதென்று அஞ்ஞானத்தினால் விசாரிக்கிறதினால்,

2, 3, 4 = முடிவு 5. capacity.

பூலோகத்திலே காணப்பட்ட போகாதி சுகங்களும் தன முதலான சம்பத்துக்களும் லௌகிக வெகுமான பெருமைகளுமே மனுஷனுக்கு வரலான குறையற்ற பாக்கியமென்றும், இதே காணப்பட்ட பழுதற்ற செல்வமென்றும், இதே அபேக்ஷிக்கத்தக்க நன்மையென்றும், இதுக்கப்பால் ஒன்றும் வரத்தக்கதில்லை என்றும் முழுப் பயித்தியங்கொண்டிருக்கிற பேர்கள் அங்கீகரித்துக்கொண்டு வருகிறார்கள். அதேதெனறால், பாவ சமுத்திரத்தின் பாதாளத்திலே அமிழ்ந்திருக்கிற துராத்துமாக்கள் தாங்கள் அமிழ்ந்திருக்கிற அருவருப்புள்ள [1]கஷ்டங்களைக் காண்கிறதுக்கு வல்லவர்களாய் இருக்கிறார்களொழிய, இதுக்கு மேலே மனுஷருக்கு வரலான பழுதற்ற செல்வத்தையும் திரித்தியைக் கொடுக்கிற பரமானந்தத்தையும் அவர்கள் கண்டுபிடிக்க வல்லவர்களாய் இரார்கள். ஆனபடியினாலே, பூலோகத்திலே காணப்படுகிற நன்மை என்னப்பட்ட யாவும், மனுஷனுக்கு வரத்தக்க அவதிரூபமான குறையற்ற பாக்கியமாய் இருக்கமாட்டாதென்று இந்தப பாடத்திலே வெளிப்படுத்தக் கடவோம்.

**23.3.** ஒரு பொருளின் உள்முடிவும் புறமுடிவும். அதெப்படியென்றால், பொருளானது தனமட்டுக்கு வரலான நன்மையென்னப்பட்ட யாவும் குறையற்ற பிரகாரமாகப் பரிபூரண பிரமாணத்தில் எந்த [2]அவஸ்தையினாலே அடையுமோ அப்படிப்பட்ட அவஸ்தையானது பொருளானதுக்குப் பரிபூரண நன்மையென்றும் அவதியென்றும் சொல்லப்படும். [3]சடபதார்த்தங்களிடத்திலேயும், [4]அசேதனப் பிராணிகளிடத்திலேயும் [5]ஞானமுடைத்தான பிராணிகளிடத்திலேயும் அடைவாக இதெல்லாததையும் கண்டுபிடிக்கக் கடவோம். அப்படியே, [6]கிரகமானது நாலு திக்கும் பார்த்து, ஆன பிரமாணத்தோடேயும சகல [7]அங்கோபாங்களோடேயும அதுக்கு வரலான அலங்கார முதலான நல்ல குண ரூபங்களோடேயும் குறையற்ற விதமாய் இருந்தால், கிரகமானது அவதியை அடைந்ததென்று சொல்லத்தகும். இத்தன்மையாக

1. மலம் 2. நிலை 3. material things
4. irrational animals 5. rational beings 6. வீடு
7. அங்க+உப அங்கம்—உறுப்புக்கள்

[8]விருக்ஷமானது தனது சுபாவத்துக்குத் தக்கது வரலான உசத்தி யையும் [9]பத்திரங்களுடைய அலங்காரத்தையும் வேண்டின புஷ்பங்களையும் பழங்களுடைய பழுதற்ற பூர்த்தியையும் கொண்டிருந்தால், சுபாவமாக இதற்கு மேலாக விருக்ஷத்துக்கு மேலான நன்மை இல்லாததினால், அப்படிப்பட்ட அவஸ்தை யானது விருக்ஷத்துக்குக் குறையற்ற நன்மையென்றும் அவதி யென்றும் சொல்லப்படுமொழிய மற்றப்படியல்ல. ஞான மில்லாத மிருகங்கள் முதலான சந்துக்களோ என்றால் அது களுடைய சுபாவத்தின் மட்டாக அதுக்கதுக்கான குணங்கள் உண்டாய் அப்படிப்பட்ட பிராணியானது தனக்கு வரலான சரீர சுக முதலான செல்வம் என்னப்பட்ட யாவையும் அடைந் தால் அது தனக்குக் குறையற்ற அவதி அடைந்ததென்று சொல்லத்தகும். இந்தவைவாகச் சொல்லப்பட்ட அவதியானது பொருளுக்கு அந்தர்கத[1] அவதியாய் இருக்கிறதென்று சொல்ல வேணும். அதேதென்றால் பொருள்களை உண்டாக்கின கர்த்த னுடைய ஸ்தோத்திர முதலானதுகள் பொருளுக்குப் புறத்திப் பட்ட அவதி என்று சொல்ல வேணுமொழிய மற்றப்படியல்ல. அத்தன்மையாகக் [2]கர்த்தரானவன் கிரகத்திலே வாசமாய் இருக் கிறது என்கிறதும், அவர் விருக்ஷத்தின் பிரயோசனத்தை அடைகிறது என்கிறதும், அசேதன செந்துக்களினாலே அவருக்கு வருகிற ஊழிய முதலான சகாயங்களும் அப்படிப் பட்ட பொருள்களுக்குப் [3]பிறத்திப்பட்ட அவதியாயிருக்கிறது என்று ஒப்புக்கொள்ளத் தக்கதாகும்.

**23.4. மனிதன் முடிவின் முதல் லக்ஷணம்: குறை யற்ற பூரிப்பு** இந்தவைவாக அவதியினுடைய [4]நிருபண மானது சொல்லப்படுகையிலே, மனுஷனைவனுக்குத் தனது சுபாவத்துக் கொத்த அவதி ஏதென்றும், அவனுடைய சுபாவத் துக்கு மேலாகத் தேவ கிருபையினாலே வரலான அவதி ஏதென்றும் இத்தருவாயிலே ஆராய்ந்து கொள்ளலாமென்றால், கரையேறுகிறதுக்கான வழியைக் கொஞ்சத்துக்குள்ளே வெளிப்படுத்தக் கருத்துள்ளவனுக்கு இப்படிப்பட்ட விஷயங் களிலே விஸ்தாரப் பிரசங்கங்கள் வேண்டியிராது என்கிறதினால்

8. மரம் 9. இலை. 1. intrinsic
2. கர்த்தரானவர் (பா.) உடையவன் 3. extrinsic 4. வரையறை

அதுகளை எல்லாம் விட்டுக் கரையேறத் தக்கதாக ஆசையுள்ள வன் இந்த விஷயத்திலே அங்கீகரிக்கத்தக்க சிறிது சத்தியங்களை மாத்திரம் வெளிப்படுத்தக் கடவோம். அதில் முதலாம் விசேஷமாவது: மனுஷனுக்கு அவதி ரூபமாயிருக்கிற குறையற்ற [5]பாக்கியத்தை நிருபணம் பண்ணவேணும் என்றால், அப்படிப்பட்ட பாக்கியமானது மூன்று[6] லக்ஷணங்களை உடைத்தானதாய் இருக்கவேணுமென்று சொல்லக்கடவோம். அதிலே மனுஷனுடைய ஆசையைக் குறையற்ற விதமாகப் பூரிக்கிறதென்கிறது முதலாம் லக்ஷணமென்று சொல்லப்படும். அதேதென்றால் பாக்கியமானது மனசினுடைய ஆசையைப் பூரியாமல் இன்னும் அப்பால் ஆசைப்படத்தக்க இடமுண்டானால், அப்படிப்பட்ட பாக்கியமானது குறையுள்ள பாக்கியமென்று சொல்லவேணு மொழியக், குறையற்ற பாக்கியமென்கிற நாமமானது அதுக்குச் செல்லுமென்று சொல்லக் கடவதல்ல. ஆசையைப் பூரிக்கிறதென்கிற இந்த லக்ஷணமானது பூலோகத்திலே காணப்படுகிற செல்வ முதலான [7]சோபனங்களிடத்திலே காணமாட்டாது என்கிறதுக்குச் சந்தேகப்படக் கணக்கில்லை.

**23.5.** இப்பூரிப்பு சிற்றின்பத்தில் இல்லை (i) காமாதுரனிடம். அதேதென்றால், பூலோகத்திலே பாக்கியமென்கிற பேர் கொண்டிருக்கிற விஷயங்கள் என்னப்பட்ட யாவுஞ் சரீரத்தின் [1]சுகம், தனம், வெகுமானம் இந்த மூன்று விஷயங்களுக்குள்ளே அடங்கி இருக்கிறதென்று சொல்லத்தகும். இதுகளை யெல்லாந் தனித்தனியே பத்தும்பத்தாய் விசாரித்து ஆராய்ந்து கொண்டோமானால், ஒவ்வொன்றும் மனுஷனுடைய ஆசையைப் பூரியாமல், அது நிமித்தமாக ஆசை அதிகமாக [2]வருத்திச்சு வருகிறதென்று அனுபவ சித்தியினாலே கண்டு கொண்டு வருகிறோம். அவ்வண்ணமே, சரீரத்தின் போக முதலான சுகங்களை மிகவும் ஆசைப்பட்டு எண்ணப்படாத பிரயாசை உபாயங்களினாலே இடைவிடாமல் அதுகளைத் தேடிக் கொண்டு வருகிற காமாதுரனானவன் அப்படிப்பட்ட போக முதலான சுகங்களை அனுபவிக்க அனுபவிக்க ஒருக்காலானாலும்,

5. bliss 6. இரண்டு மட்டும் விளக்கப்பட்டிருக்கின்றன. 7. அலங்காரம். 1. pleasure, wealth, honour 2. வளர்ந்து

போதுமென்று சொல்லாமல், அக்கினிக்குள் எண்ணெய் வார்க்க வார்க்க அக்கினியானது அதிகமதிகமாய்ச் சுவாலிக்கிறாப் போலே, காமாதுரனானவன் தனது காமமாகிற அக்கினியிலே தான் நாளுக்கு நாள் வெந்து போகிறானென்று பார்த்து, அப்படிப்பட்ட குரூர உபாதையைப் பொறுக்கமாட்டாமல், காமத்தினாலே வருகிற [3]பரிதாபத்தைச் [4]சமிக்கப்பண்ண வேணுமென்று இடைவிடாமல் அநேக ஸ்திரீகளைச் சம்பாதிச்சுக்கொண்டு வருவான். சம்பாதிச்சுக்கொண்டு வருகிற பலபல ஸ்திரீகளோடே பண்ணிக்கொண்டு வருகிற அருவருப்புள்ள மைதுனமாகிற எண்ணெய் நிமித்தமாகத் தனது மனசைத் [5]தகனம் பண்ணிக்கொண்டு வருகிற காமமாகிற அக்கினியானது நாளுக்குநாள் அதிகமதிகமாக வர்த்தித்துச் சரீரத்தின் எண்ணப்படாத [6]ரோகங்களினாலேயும், மனோவியாதி முதலான சொல்லப்படாத வியாகுல பரிதாபங்களினாலேயும் காமாதுரனுடைய சரீராத்துமத்தை நானாவிதத்திலே காமமாகிற அக்கினியானது முழுதும் கெடுத்து, அவனுடைய ஆத்தும சரீரத்தை அதிகமாகத் தகனம் பண்ணிக்கொண்டு வருகிறதென்று சந்தேகமற அங்கீகரிக்க வேணுமென்கிறதுக்குத் தப்பாது. இது காரணமாகச் சரீரத்தின் போக சுக அனுபவமானது அப்படிப்பட்ட விஷயத்திலே உண்டாயிருக்கிற ஆசையைத் திருத்தியடையப் பண்ணுமல், காமாதுரருக்குள்ளே தான் தேடிக்கொண்டு வருகிற துர்க்கெந்த போக விஷயத்திலே போருமென்று சொல்லுகிறவன் இந்நாள் வரைக்கும் கண்டதுமில்லை, இனிமேலும் காணப் போறதில்லை.

(ii) காமினியிடம் காமாதுரன் வகையிலே சொன்னது காமினிகளிடத்திலே யோசிக்கக்கடவோம். அதெதென்றால், இப்படிப்பட்ட ஸ்திரீகள் எண்ணப்படாத பல புருஷரோடே சங்கம் பண்ணப்பண்ண சங்கத்தின் நிமித்தமாக அப்படிப்பட்ட ஸ்திரீகள் அனுபவித்துக்கொண்டு வருகிற அசுத்த போகத்தின் விஷயத்திலே [1]ஆசையானது நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறதொழியக் குறையத்தக்கதில்லை. இந்தச் சத்தியத்தை ஒப்புவிக்கிறதுக்கு அழகு முதலான மோகத்துக்

3. வெப்பம் 4. தணிக்க 5. வெந்த 6. பிணி
1. ஆசையினாலும் (பா. பே)

கான் குணங்களிலுலே மிகவும் [3]அதிசயித்திருக்கிற ஒரு ஸ்திரீயானவள் சொன்ன வார்த்தை உபயோகமாகும். அதேதெனில், ஒரு ராத்திரிக்குள்ளே இடைவிடாமல் அநேகம் பேர்களோடே கூட இந்த ஸ்திரீயானவள் மைதுனம் பண்ணின பிற்பாடு, [6]விடிவேறு பார்க்கும்போது, அவள் சொன்ன வார்த்தை யாவது: 'தவிப்பை அடைந்தேனொழியத் திருத்தியை அடைந்த தில்லை' என்று லெச்சையில்லாமல் வெள்க்கங்கெட்டவளாய்ச் சொன்னாள். அவ்வண்ணமே, ஸ்திரீபோக முதலான சுகங் களுடைய வகைகளிலே மனுஷனுக்கு உண்டான ஆசையானது ஒரு நாளானாலும் திருத்தியை அடையாதபோதே, சரீரத்தின் போக முதலான சுகங்களுக்கு மனுஷனுக்கு வரத்தக்க குறை யற்ற பாக்கியமான நாமமானது செல்லுமென்று மோக [3]பிராந் தியிலே மதிகெட்டவன் சொல்லுவானொழிய, மற்றவன் சொல்ல மாட்டான். இப்படிப்பட்ட சுகமானது குறையற்ற பாக்கியம் ஆகாதபோதே, மனுஷனுக்குக் கர்த்தனாலே கற்பிக்கப்பட்ட அவதியாய் இருக்கிறதென்று சொல்லவும் கருதவும் கூடாது.

**23.6. செல்வமும் புகழும் (i) பூரிப்பு அளிப்பதில்லை.** திருத்தியைக் கொடுக்கிற லக்ஷணம் சரீரத்தின் போக முதலான சுகங்களுடைய வகைகளிலே கிடைக்கமாட்டாதது போலே, தன முதலான அயிசுவரியங்களிலேயும் லவுகீக வெகுமான முதலான பெருமைகளிலேயும் காணமாட்டாதென்று ஓரற்ப மாறாலும் சந்தேகமில்லாமல் சொல்லக்கடவோம். அதே தென்றால், 'கிருபணனாகிற பணவாசை மிகுதியுள்ள [5]பிசினி யானவன் தனம் சம்பாதிக்கச் சம்பாதிக்கத், தனவகையிலே திருத்தியடையாமல், தன முதலான சம்பத்துக்களைச் சம்பாதிக் கிற நிமித்தமாகத் தன முதலானதுகளிலே தனது ஆசை அதிக மதிகமாக வளரப்பண்ணுவானொழியக் கிருபணனானவன் தனது ஆசை திருத்தியை அடைகிறதுக்கு உபாயம் பண்ணமாட்டான். இத்தன்மையாக லவுகீக வெகுமானங்களையும் பெருமைகளையும் மட்டில்லாத ஆசையோடு தேடிக்கொண்டு வருகிற ஆங்காரி யானவன், இப்படிப்பட்ட வெகுமானத்திலேயும் பெருமையின் வகைகளிலேயும் ஒருக்காலும் 'போதுமென்னாமல், எப்படிப் பட்ட [illegible]சங்க[illegible] முதலான [illegible]மகிமைகளை ஆங்காரியானவன்

2. மிகுந்த [illegible] வெறி[illegible] 4-5 : உலோபி[illegible] 6. [illegible]லையில்.

அடைந்தாலும், இன்னம் அதிகமதிகமாக அத்தொகைப்பட்ட பெருமைகளை அடைய வேணுமென்று ஆசைப்படுவானொழிய, அதிலே தனக்கு மட்டு மரியாதை பண்ணிப் போருமென்று சொல்லத்தக்கதில்லை. இது காரணமாகத திருத்தியை அடையப் பண்ணுகிறதென்கிற லக்ஷணமானது குறையற்ற பாக்கியத்துக்கு வேண்டின லக்ஷணமாயிருந்து, சரீரத்தின் சுகம், தனம், வெகுமானம் என்கிற மூன்று விஷயங்களில் காண மாட்டாது என்கிறதினால், சரீரத்தின் சுகம் தனம் வெகுமானம் என்கிற மூன்றுக்கும் மனுஷனுக்கு வரலான குறையற்ற பாக்கியத்தினுடைய பேரும் அவதியினுடைய நாமமானதும் செல்லாதென்று சொல்லக்கடவோம்.

(ii) மாறாக உப்புத் தண்ணீர்போல் இன்னும் ஆசையை வளர்க்கின்றன. இந்தச் சத்திய விசேஷத்தை ஓர் உவமையினாலே வெளியாக்கலாம். அதேதென்றாற் பொறுக்கப்படாத மிகுந்த தாகத்தின் நிமித்தமாகக் கனமான வாதையை அனுபவிக்கிறவன் இடைவிடாத சஞ்சலமுடைத்தான சமுத்திரத்தினுடைய உப்பு சலத்தைக் குடிக்கக் குடிக்க, அப்படிப்பட்ட [1]சலபானத்து நிமித்தமாகத் தனக்கு உண்டான தாகத்தை வர்த்திக்கப்பண்ணி, நாளுக்குநாள் அதிகமதிகமாகத் தாகத்தினுடைய அங்கலாய்ப்பையுங் கஸ்தியையும் அனுபவித்துக்கொணடு வருவான் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அத்தன்மைபோலே, இடைவிடாத சஞ்சலத்தோடே கூடியிருக்கிற சமுத்திரமாகிற லோகத்திலே உண்டாயிருக்கிற உப்புச் சலமாகிற போகத்தின் சுகம், தனம், வெகுமானம் இந்த மூன்று விஷயங்கள் ஆசை தீர்க்கிறதுக்கு வல்லதாயிராமல், ஆசைகளை வளரப்பண்ணுகிறதுக்குக் காரணமாயிருக்கிறதினால், உப்புசலமாயிருக்கிற இந்த விஷயங்களை அனுபவ மேரையினாலே அதிகமதிகமாக மனுஷனானவன் அடைந்துகொண்டு வருகிறதினால், உப்புச் சலபானம் பண்ணுகிறவன்போலே இப்படிப்பட்ட விஷயங்கள் பேரிலே தனக்குண்டான ஆசையை வர்த்திக்கப்பண்ணுவானொழிய, அப்படிப்பட்ட விஷய்ங்கள் பேரிலே ஆசையாகிற தாகத்தை அதுகளுடைய அனுபவத்து நிமித்தமாக முழுதும் தீர்க்கிறது

1. நீரைக் குடித்தல். 2. தீர்க்க (பா. பே.)

மில்லை, லவலேசமானாலும் அத்தைத் 'தள்ளத்தக்கதுமில்லை என்கிறதுக்குத் தப்பாது.

**23.7.** *திருத்தியின் இரண்டாம் லக்ஷணமாகிய* **பொல்லாப்பின் கலப்பின்மை: (i) சிற்றின்பத்தில் இல்லை.** இந்தவகையாகக் குறையற்ற பாக்கியத்துக்கு உண்டான இரண்டாம் லக்ஷணமானது இப்படிப்பட்ட விஷயங்களிலே காணமாட்டாதென்று ஒப்பச்சொல்லலாம். அதேதென்றால், ஒரு பொல்லாப்பின் கலப்பில்லாமல் இருக்கிறதென்கிறது குறையற்ற பாக்கியத்துக்கான இரண்டாம் லக்ஷணமென்று சொல்லத்தகும். அதேதென்றால் பொல்லாப்பு என்னப்பட்ட யாவும் குறைவாயிருக்கிறதென்று சொல்லவேண்டியிருக்கச் செய்தே, அற்பமாகிலும் பொல்லாப்பின் கலப்புள்ள செல்வமானது குறையுள்ள பாக்கியமென்று சொல்லப்படுமொழியக், குறையற்ற பாக்கியமாகிற நாமமானது அதுக்கு ஒவ்வாதென்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமாகும். இதுதவிர யாதொரு குறையாகிற பொல்லாப்பானது கலந்திருந்தால், அப்படிப்பட்ட குறையாகிற பொல்லாப்பானது அனுபவிக்கப் படுகிற பாக்கியத்திலே இருக்க வேண்டாமென்று மனசானது ஆசைப்படுமொழிய மற்றப்படியல்ல. இப்படி மனசானது ஆசைப்படுகிறபோது, தான் அனுபவிக்கிற நன்மைத்தனத் துக்குப் போராது என்கிறதினால், அதுக்கு மேலானதுமாய்த் தன்னிடத்திலே இல்லாததுமாயிருக்கிற நன்மையை மனசானது ஆசைப்படுகிறபோது, அது திருத்தியை அடைந்ததென்று சொல்லவும் எண்ணவுங்கூடாது. இது நிமித்தமாக ஒரு அற்பமாகிலும் பொல்லாப்பின் கலப்பில்லாத தனமானது குறையற்ற பாக்கியத்துக்கான லக்ஷணமென்று சொல்லவேணு மொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால், சற்றாகிலும் பொல்லாப்பின் கலப்புள்ள பாக்கியமானது குறையற்ற பாக்கியத்தின் நாமத்தைக் கொண்டிருக்க மாட்டாததினால், அது மனதினுடைய ஆசையைப் பூரிக்கிறதுக்கு வல்லதாயிருக்கிறதென்று சொல்லக் கணக்கில்லை. இது இப்படியிருக்கையிலே, சரீரத்தில் போகாதி சுகங்களோடேகூட எண்ணப்படாத வியாதிகளும் அதுக்குப் பரிதாபங்களும் தப்பாமல் உண்டாயிருக்கக்கொள்ள, சரீரபோகாதி சுகங்களானதுகள் பலபல

பொல்லாப்புக்களோடே கூட கலந்திருக்கிறதென்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகலாலே, அப்படிப்பட்ட சுகங்களானவைகள் பொல்லாப்பின் கலப்பில்லாத நன்மையாய் இருக்கிறதென்று சொல்லப்படாது. இப்படிச் சொல்லப்படாத போதே, போகாதி சுகமானது மெய்யான செல்வத்தினுடைய இரண்டாம் லக்ஷணமற்றதுமாய்க், குறைபுள்ள பாக்கியமுமாய் இருக்கிறதென்று சொல்லக்கூடுமொழிய, மனுஷனுக்கு அவதிரூபமான குறையற்ற நன்மையாய் இருக்கிறதென்று அத்தைச் சொல்லக் கடவோமல்ல.

(ii) செல்வத்திலும் பெருமையிலும் இல்லை. இந்தவிதமாகத் தன முதலான அயிசுவரியங்களையும் லோக சம்பந்தமாயிருக்கிற வெகுமான பெருமைகளையுஞ் [1]சமர்ப்பகமாய் ஆராய்ந்து கொண்டோமானால், பொல்லாப்பின் கலப்பில்லாத்தனமாகிற குறையற்ற பாக்கியத்தின் இரண்டாம் லக்ஷணமானது சரீரத்தின் போகாதி விஷயங்களிலே காணமாட்டாதென்று சொல்லப்படுமாப்போலே, தன முதலான அயிசுவரியங்களிடத்திலேயும், லவுகீக வெகுமான பெருமைகளிடத்திலேயுங் குறையற்ற பாக்கியத்துக்குச் சொல்லத்தக்க இந்த இரண்டாம் லக்ஷணமானது சுத்தமாய்க் கிடையாதென்று சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கக்கடவோம். அதேதென்றால், தனதிசம்பத்துக்களையும் லவுகீக பிரபுத்துவ முதலான மகிமைகளையும் ஆசைப்பட்டுத் தேடுகிறவன் எண்ணப்படாத பிரயாச வருத்தங்களை அனுபவிக்க வேணும் என்கிறதுக்குத் தப்பாது. நீர்மேற் குமிழிக்குச் சமானமாயிருக்கிற இப்படிப்பட்ட பொய்யான செல்வங்களைச் சிறிதுநாள் நிற்கவும், வர்த்திக்கவும் பண்ணிக்கொண்டு வருகிறவனை விசாரிக்குமிடத்தில், அவனுக்குண்டாயிருக்கிற மனதை அறுக்கிற சிந்தைகளும் வியாகுலமும் சஞ்சலப் புத்திகளும் சொல்லத்தக்கதுகளுமாய் எண்ணத்தக்கதுகளுமாய் இராது. இப்படிப்பட்ட பொய்யான நன்மைகளை மனுஷனானவன் போக்கடித்தானாகில், அது நிமித்தமாக வருகிற துக்கங்களையும், மனஸ்தாபங்களையும் பார்க்கும்போது, அதுகள் நிமித்தமாக வலியப் [2]பிராணகத்தி பண்ணத்தக்கதாய் அவனுக்குத் தோனுகிற வருமொழிய, மற்றப்படியல்ல.

1. செம்மையாய். 2. தற்கொலை.

ஆதலாலே, இப்படிப்பட்ட விஷயங்கள் சம்பாதிக்கிறதிலேயும், சம்பாதித்த பிற்பாடு அதுகளை [1]ரக்ஷிக்கிறதிலேயும், அதுகளைப் போக்கடிக்கிற தறுவாய்களிலேயும் மனுஷனுனவன் எண்ணப்படாத பரிதாபங்களை அனுபவிக்கும்போது, 'முழு நீர்ப் பாக்கியம்' என்கிற பேரானது அதுகளுக்குச் செல்லுமென்று சொல்லக்கூடுமொழிய, அதுகளை ஆசைப்படுகிற மதிகெட்டவன் 'பாக்கியம்' என்று சொல்லுவானென்றொழிய மற்றப் படியல்ல.

**23.8.** **கானல் நீர் தேடியவனுக்குத் துன்பத்தைத் தருவதுபோல் இம்மை நன்மைகளும்.** இதெல்லாம் ஓர் உவமையினுலே அறியப்பண்ணலாம், அதெதெனிற், பொறுக்கப்படாத தாகத்தினுலே வருகிற அங்கலாய்ப்போடே கூடக் கனமான வாதையை அனுபவிக்கிறவன் தனது தாகத்தைத் தீர்க்கத்தக்கதாகச் சலபானம் பண்ணுகிறதுக்கு மிகவும் ஆசைப்படுவான் என்கிறதுக்குத் தப்பாது. இதுகாரணமாக இப்படிப்பட்ட தாகமுள்ளவன் அங்கங்கே தண்ணீரைத் தேடி மெய்யான [1]உதகத்தைக் காணுமல், தூரத்திலேயிருக்கிற கானலைக் கண்டான். கானலானது சலமாயிராதிருந்தாலும், தூரத்திலே இருந்து பார்க்கபேருக்கு அது சலம்போலே காண்பித்திருக்கிறதினுல், முன்சொல்லப்பட்ட தாகமுள்ளவன் தூரத்திலேயிருக்கிற கானலைப் பார்த்து [2]நிலையான பிரமாண்ட சலசமுத்திரமென்று பரிதாபத்தின் மயக்கத்தினுலே அத்தை விசாரிக்கிறவனுய், அது நிமித்தமாகத் தனது தாகத்தைக் குறையற்ற விதமாகத் தீர்ப்பேனென்றும், தாகத்தினுலே தனக்குண்டான பொறுக்கப்படாத உபத்திரவத்தையும் அங்கலாய்ப்பையும் நிவாரணம் பண்ண வேணுமென்றும் எண்ணிக்கொண்டான். மயக்கமாயிருக்கிற இப்படிப்பட்ட எண்ணிக்கையினுலே தாகமுள்ளவன் ஏவப்பட்டுத், தனக்குச் சலம்போலக் காண்பித்திருக்கிற கானலைப் பிரயாசத்திலேயாகுலும் அடைய வேணுமென்று நிருமிச்சான். இப்படிப்பட்ட துணிவுள்ளவன் தூரத்திலேயிருக்கிற கானலை அடைகிறதுக்கு வெகுகாலத்திலே விழுந்தும் கெட்டும் ஓடியும் அதுக்காகப் பிரயாசத்தையும் தவிப்பையும் அடைந்த

8. காத்தல். (பா.) 1. நீர். 2. நிலையாத (பா.)

ஜொழிய‌த், தனது தாகத்தைத் தீர்க்கிறதுக்கான சலத்தைக் காணமாட்டான் என்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே, தாகத்தின் வாதையை வேண்டாமென்று தாக நிவாரணத்திலே வருகிற சுகத்தை மிகவும் ஆசைப்படுகிறவன் ஒரு சுகத்தையும் அடையாமல், அதிகமான வியாகுலத்தையும் பரிதாபத்தையும் அடைந்து சலம்போலே இருக்கிற கானலை அடைகிறதுக்கு ஓடினுன் என்கிறதினுலே, பிரயாசமும் தவிப்பும் தனக்கு மிச்சம் என்று அனுபவ சித்தியினுலே [3]கடைகோடியாய் அறிந்தாப்போலே யாச்சுது. இற்றைவரைக்குஞ் சொல்லப்பட்ட உவமையினுடைய வழியினுலே பூலோகத்திலே திரிகிற எண்ணப்படாத தெளிவற்ற மனுஷருக்குச் சம்பவித்துக்கொண்டு வருகிற மோட்சத்தை இந்தவைவாக அத்தோடே யோசித்துக் கண்டு பிடிக்கலாம். அதேதெனிற், பூலோகத்திலே திரிகிற மனுஷரென்னப்பட்ட யாவரும் குறையற்ற சுகத்தை அனுபவிக்கிறதுக்கு மிகவும் ஆசைப்படுகிறதினுற், பூமியிலே திரிகிற பேர்களெல்லாரும் சலத்தை உத்தேசித்துப் பொறுக்கப்படாத தாகமுள்ளவனுக்குச் சமானமா யிருக்கிருர்களென்று சொல்லக் கடவோம். சலத்தின்பேரிலே உண்டாயிருக்கிற தாகத்தைத் தீர்க்கிறதுக்கு வல்லதாயிருக்கிற நிர்மல சலமானது உண்டென்கிருப்போலே, மனுஷரென்னப்பட்ட யாவர்க்கும் உண்டான குறையற்ற சுகானுபவத்தின் பேரிலே தாகமாகிற ஆசையைப் பரிபூரணமாகப் பூரிக்கிறதுக்குக் குறையற்ற அமிர்தமான சகல நன்மை சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் வல்லவரா யிருக்கிருரென்று சந்தேகமற முழுமனதோடு அங்கீகரிக்கத் தக்க சத்திய விசேஷமாகும். சலத்தின் பேரிலே உண்டா யிருக்கிற தாகத்தைத் தீர்க்கிறதுக்கு நிர்மல சலமானது உபாயமா யிருக்கிறதொழிய, வேறே உபாயங் காணமாட்டாது என்கிருப்போலே, குறையற்ற சுகானுபவத்தின்பேரிலே மனுஷனுக்கு உண்டாயிருக்கிற தாகமாகிற ஆசையைப் பூரிக்கிறதுக்கு அளவறுக்கப்படாத பரமானந்த சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் யாதொருத்தருண்டு. அப்படிப்பட்ட பராபர

3. கழக்கொடி, களக்குடி (பா.)

வஸ்துவைப் பிரத்தியக்ஷ தெரிசனத்திலேயுங் குறையற்ற சினேகத்திலேயும் அடைகிறதென்கிறது குறையற்ற சுகத்தின் பேரிலே மனுஷனுக்கு உண்டாயிருக்கிற தாகமாகிற ஆசையைப் பூரிக்கிறதுக்கு திவ்விய திருவுளப்படியே காணப்பட்ட மெய்யான உபாயமொழிய, வேறே உபாய தந்திரங்கள் காணமாட்டாதென்று சற்றுகிலுஞ் சந்தேகமில்லாமல் சம்மதப் படக்கடவோம்.

இதிப்படி யிருக்கையிலே, தெளிவற்ற மனுஷரானவர்கள் குறையற்ற சுகத்தை அனுபவிக்கத் தங்களுக்கு உண்டான திருத்தியில்லாத ஆசையைத் திருத்தியடையப் பண்ணுகிற துக்கு வல்லவராகிற பரமானந்த சுரூபமான சர்வேசுரனை விட்டுச், சுகானுபவ விஷயக ஆசையைப் பூரிக்கிறதுக்குப் பூமியிலுண்டாயிருக்கிற துர்ப்பலமான பொய்யான செல்வங் களை மிகவும் அபேக்ஷித்து, எண்ணப்படாத உபாயங்களினாலே அதுகளைத் தேடும்போது, தாகத்தைத் தீர்க்கிறதுக்கு வல்ல தாயிருக்கிற நிர்மல சலமானத்தை விட்டுத் தூரத்திலே சலம் போலே காண்பித்திருக்கிற கானலை அடைய வேணுமென்று ஓடிப் பிரயாசைப்பட்ட மதிகெட்டவனுக்குச் சரிசமானராய் இருக்கிறார்களென்று சொல்லத்தகுமொழிய, மற்றப்படியல்ல. அதேதென்றால், பூலோகத்திலே உண்டாயிருக்கிற போகாதி சுகமென்னப்பட்ட யாவிலும் மெய்யான பாக்கியத்தினுடைய முன்சொல்லப்பட்ட லக்ஷணங்கள் காணமாட்டாது என்கிற தினால், பூலோகத்திலே உண்டான போகாதி பாக்கியங் களுக்கு மெய்யான செல்வத்தின் பேரானதும் சத்தியமான பாக்கியத்தின் நாமதேயமானதும் செல்லாதென்றும் சொல்லக் கூடுமொழிய மற்றப்படியல்ல. இதிப்படியிருக்கையிலே, கான லானது சலமாய் இராதிருந்தாலும், தூரத்திலே பார்த்த வனுக்கு அது சலம்போல் காண்பித்திருக்கிறாப்போலே, பூமியிலே காண்பித்திருக்கிற போகாதி சுகங்களும் தன சம்பத் துக்களும் வெகுமான பெருமைகளும் மெய்யான பாக்கியங் களாய் இராதிருந்தாலும், அதுகள் இல்லாதவனாகிற தூரத்திலே

பார்த்தவனுக்கு மெய்யான பாக்கியங்கள்போலே காண்பித்திருக்கிறதொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே, பாக்கியவானாய் இருக்கவும் சுகத்தை அனுபவிக்கவும் வேணுமென்று ஆசைப்படுகிற பேர்கள், தங்களுக்குச் செல்வமும் பாக்கியமும்போலே காண்பித்திருக்கிற போகாதி சுகங்களையும் தன வெகுமானங்களையும் அடைகிறதுக்கு மிகவும் பிரயாசைப்படுவார்கள்; ஆனால் சலமாகாத கானலைத் தேடுகிற தாகமுள்ளவன் தனது தாகத்தைத் தீராமல் அதிகமான தவிப்பும் பிரயாசமும் தனக்கு மிச்சமென்று காண்பிக்கிறாப்போலே, பாக்கியமுஞ் செல்வமுமாகாமல் செல்வம்போலே காண்பித்திருக்கிற போகாதி சுகங்களையும் தன சம்பத்துக்களையும் வெகுமான பெருமைகளையும் தேடிப் பிரயாசைப்படுகிற மதிகெட்ட பேர்கள் சுகபாக்கியத்தின் பேரிலே தங்களுக்கு உண்டான ஆசையைத் தீராமற், பிரயாசமும் தவிப்பும் தங்களுக்கு மிச்சமென்று கடைசியாய்க் கண்டுகொண்டு வருகிறார்களொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே, லோகத்திலே உண்டாயிருக்கிற செல்வ பாக்கியமென்னப்பட்ட யாவும் மனுஷனுக்கு அவதிருபமான குறையற்ற பாக்கியமாய் இருக்கமாட்டாது என்று இந்தப் பாடத்திலே ஒப்புவித்தாப்போலேயாச்சுது. தெளிவற்ற பாவிகளினாலே கற்பிக்கப்பட்ட சுவர்க்கமுதலான வேறே ஸ்தலங்களிலே அவதிருபமான குறையற்ற பாக்கியமானது மனுஷனுக்குக் கிடைக்குமோ இல்லையோ என்று வருகிற பாடத்திலே வெளிபடுத்தக்கடவோம்.

இருபத்திமூன்றாம் பாடம் முற்றும்.

(கிரந்தம்) உ௲௩௱௫௰௫ *

## 24ம் பாடம்

**24·1 மறுமை பற்றிப் பல மாறுபட்ட கொள்கைகள்.** சரீர போக முதலான சுகங்களிலேயும், பலபல லௌகீக வெகுமானங்களினாலே வருகிற பெருமைகளிலேயும், தன முதலான சம்பத்துக்களைச் சம்பாதிக்கிறதிலே அடையப்படலான பிரயோசனங்களிலேயும் அடங்கியிருக்கிற செல்வமானது, மெய்யான பாக்கியத்தினுடைய லக்ஷணங்களைக் கொண்டிராததினால், பூலோகத்திலே மனுஷனானவன் திரிகிற நாள் மட்டும் அவதிரூபமான குறைபற்ற பாக்கியத்தை அனுபவிக்கமாட்டானென்று சில பேர்கள் சம்மதப்பட்டு, ஆத்துமத்தினுடைய ஒடுக்கமானது பரலோக சம்மந்தமாயிருக்கிறதென்று சொல்லத்ததமொழிய, மனுஷனானவன் பூலோகத்திலே வழிப்போக்கனாய்த் திரிகிற நாள் மட்டுங் குறைபற்ற பாக்கியமாகிற கதியை அடையாமல் மரணத்தை மனுஷனானவன் அடைந்த பிற்பாடு, சீவனானது அவதியாகிற ஒடுக்கத்தை அடையுமென்று அங்கீகரித்து, இப்படிப்பட்ட விஷயத்திற் பூர்வகாலத்திலே அவனவனாலே கற்பிக்கப்பட்ட எண்ணப்படாத கதைகளைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அவ்வண்ணமே, அக்கியானமாகிற அந்தகாரத்தினாலே சூழ்ந்திருக்கப்பட்ட பாவிகளான பேர்கள் பூர்வகாலந் தொடுத்து எண்ணப்படாத மதங்களைக் கற்பித்து, அப்படிப்பட்ட மதங்களிலே ஆத்துமத்தின் ஒடுக்கத்துக்கடுத்த [1]பரஸ்பர விருத்தமான கதைகளை எழுதிவைத்தார்கள். அப்படிப்பட்ட கதைகளைப் பத்தும் பத்தாய் ஆராய்ந்து கொண்டோமானால் சர்வேஸ்வர விஷயக ஞானமில்லாமல் அஞ்ஞான முதலான எண்ணப்படாத பாவங்களினாலே மதிகெட்டுப் போயிருக்கிற அந்தந்தத் தேசங்களிலுள்ள பேர்களிடத்திலே பரஸ்பர விருத்தமுள்ளதுகளுமாய், ஞாயமுள்ள கிரமமற்றதுகளுமாய்ச், சத்தியத்திற்கு ஒவ்வாததுகளுமாய் இருக்கிற எண்ணப்படாத அப்படிப்பட்ட கதைகள் நடந்து வருகிறதினால், அதுகளையெல்லாம் ஒவ்வொன்றாய் எண்ணி, ஆன ஞாயங்களினாலே [2]ஆக்ஷேபம் பண்ணி அதுகளெல்லாம் முழுத்தப்பறை விசேஷங்களாய் இருக்கிறதென்று ஒப்புவிக்கிறதென்கிறது வெகுகாலப்படத்தக்க வீண்காரியமும், [3]அப்பிரயோசகப் பிரயாசமும் போலேயிருக்கக்கொள்ள. இப்

1 ஒன்றுக்கொன்று முரணான. 2 மறுத்து
3 பயனற்ற முயற்சி

படிப்பட்ட [1]விருத்தத்துக்குத் துணியத்தக்கதாகக் கணக்கில்லை. ஆனபடியினாலே, இந்த விஷயத்திலே தெளிவற்ற பாவிகளினாலே கற்பிக்கப்பட்ட சில விசேஷங்களை மாத்திரஞ் சொல்லிக் காட்டி, அதுகள் முழுத்தப்பறைகளென்று ஒப்புவிக்கும் ஞாயங்களினாலே அதுக்குச் சரியான அந்தஸ்திலே கற்பிக்கப்பட்ட எண்ணப் படாத மற்றுண்டான கதைகளைக் கண்டித்து, அதுகளெல்லாம் முழுத்தப்பறைகளாயிருக்கிறதென்று ஒப்புவிக்கத்தக்கதாக வழி திறந்ததுக்குச் சமானமாயிருக்குமென்று சொல்லத்தகும்.

**24·2 சுவர்க்கம் என்பதன் பொருள்.** அவ்வண்ணமே, பூலோகத்திலே திரிகிற மனுஷனானவன் பண்ணின புண்ணியததின் பலன்களைப் [2]பொாசிக்கிறதுக்குத் தெளிவற்ற பாவிகளினாலே கற்பிக்கப்பட்ட கதியாகிற 'சுவர்க்கம்' ஆனது இந்த விஷயத்திலே முந்தமுந்தப் பத்தும் பத்தாய் பராமரிசித்து ஆராய்ந்து கொள்ளத்தக்க விசேஷம் என்கிறதினால், அப்படிப்பட்ட பாவிகள் கற்பித்த பிரகாரமாகச் சுவர்க்கமானது இன்னதென்றும், அதிலே நடந்து வருகிற மேரையானது எப்படிப்பட்டதென்றுங், கடைசியாய் அதெல்லாம் சத்தியத்துக்கு ஒவ்வாத தப்பறையென்றும் வெளிப்படுத்தக்கடவோம் அதெப்படியென்றால்,புண்ணியாத்துமாக்களாய்இருக்கிறபேர்கள் பூலோகத்திலே புண்ணிய [3]சரித்திரங்களாய் நடந்து பட்ட பிரயாசங்களுக்கு அவதி ரூபமாகிற ஸ்திரீபோக முதலான சுகங்களை அனுபவிக்கிறதுக்குத் தெளிவற்ற பாவிகளினாலே கற்பிக்கப்பட்ட ஸ்தலமானது சுவர்ககம் என்று சொல்லப்படும். அதேதென்றால் மாலை, சந்தனம், ஸ்திரீகளினாலே வருகிற சுகமும் "சுவ" என்கிற பதத்திலே சொல்லப்படும். அடைகிறது என்கிறது 'கம்' என்கிற பதத்துக்கு அர்த்தமாகும். ஆதலாலே, இவ்வுலகத்திலே சரீரத்தோடேகூட சீவனானது பண்ணின புண்ணியங்களுக்காகப் பலனாகிற மாலை, சந்தனம், ஸ்திரீகளினாலே செனிக்கிற போக முதலான சுகத்தைப் [4]பவுதீக சரீரத்தை விட்ட சீவனானது அனுபவிக்கத்தக்கதாக ஆன ஸ்தலத்துக்குச் சுவர்க்கம் என்கிற நாமமானது செல்லுமென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

**24·3 சுவர்க்கத்தின் இயற்கை** அவ்வண்ணமே, மிருகங்களுடைய மைத்துனத்தைக் காட்டிலும் தேவர்

1 எதிர்ப்பு 2 பருகுவதற்கு 3 ஒழுக்கம்
4 ஊன உடல் [Physical body]

களாலே பண்ணப்படுகிற மைத்துனமானது கெட்ட மைத்துனமென்று சொல்லப்படும். ஆனபடியினாலே தேவர்களாலே பண்ணப்படுகிற மைத்துனமானது முழு அக்கிரமமென்றும், மோக சமமந்தமாயிருக்கிற காமமான பாவமென்றும் அங்கீகரிக்க வேணுமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே சுவர்க்கத்திலே புண்ணியவான்கள் பண்ணின புண்ணியங்களுக்கான பலனை அனுபவிக்கிறதுக்குத் தெளிவற்ற பாவிகளினாலே கற்பிக்கப்பட்ட ஸ்தலத்தை விசாரிக்கும்போது, பூலோகத்திலே நாய் நரி முதலான செந்துக்களோடே அழிந்துபோகிற சரீரத்தோடே திரிகிற நாளையில் எண்ணப்படாத மகாமகாப்பட்ட பாவங்கள் நிமித்தமாக வெறுக்கப்படத்தக்க பாவிகள், பிரபுக்கள் முதலான பேர்கள் வாசமாயிருக்கிற உத்தியானம் சிங்காரத்தோப்பு இதுகள் முதலான அழிந்து போகிற செல்வ அலங்காரத்தை உடைத்தான அரமனைகளுக்குப், பண்ணப்பட்ட புண்ணியங்களுக்குப் பலனை யனுபவிக்கிறதுக்கு ஆன ஸ்தலமாகிற பரலோகமானது சமானமாயிருக்கிறதென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள் என்கிறதினாலே, தானு [1]சரீர நிக்கிரகம் பண்ணிக்கொண்டு வருகிறவனானது இப்படிப்பட்ட அழிந்துபோகிற செல்வங்களை விட்டு, நிர்மல புண்ணியவழியிலே நடக்கவேணுமென்று அனுபவிச்ச வருத்தங்களுக்கான பலனை அனுபவிக்கத்தக்கதாக அழிந்துபோகிற செல்வத்தையுடைத்தான ஸ்தலமானது திரும்பக் கிடைத்துதென்று சொல்லக்கடவோம். ஆதலாலே, புண்ணியவான்களாய் இருக்கிற பேர்கள் பாவத்திலே விழாதபடிக்குத் தாங்கள் அருவருத்துவிட்ட ஸ்தலந்தானே பண்ணப்பட்ட புண்ணியங்களுக்குப் பலனாக அடைந்தாப்போல ஆச்சுது. அப்படிப்பட்ட சுகமுள்ள ஸ்தலமாகிற சுவர்க்கத்தைச் சீவன்களானதுகள் மரணத்து நிமித்தமாகப் பவுதிக சரீரங்களைவிட்டு வேறே [2]திவ்வியமான சரீரங்களைக் கொண்டிருந்து அடையுமென்று சொலலிக்கொண்டு வருகிறார்கள். அவ்வண்ணமே, சுவர்க்கமான சுகமுள்ள ஸ்தலத்திலே வேசிகளுடைய ஆடல் பாடல் நடந்து வருகிறதுககுத் 'தும்புராதிகள்' முதலான நட்டுவமார்கள் உண்டாயிருக்கிறார்களென்றும், அங்கங்கே தொங்கியிருக்கிற தூங்குமஞ்சக் கட்டில்களிலே புண்ணியவான்கள் படுத்துக்கொண்டிருக்க மகாமகாப்பட்ட சவுந்திரியமுள்ள வேசிகள் பாடி ஊஞ்சலாட, மதுரமான பழங்களைப் பழுக்கிற விருக்ஷாதி

1 உடலடக்கம் 2 ஞான உடல்

கள் சாலை சாலையாக இருக்க, அங்கேயும் இங்கேயுந் திரிகிறதுக்கு விமானங்களும் ரதங்களும் உண்டாயிருக்க, இதுகள் முதலான செல்வபாக்கியங்களிலே அலங்கரிக்கப்பட்ட சுவர்க்க ஸ்தலமானது விளங்கியிருக்கிறதென்று சொல்லிக்கொண்டு வருகிருர்கள். அப்படிப்பட்ட ஸ்தலத்திலே புண்ணியாத்துமாக்கள் மாறுபடாத மலர்ந்திருக்கிற புஷ்பங்களினுலே கட்டப்பட்ட மாலைகளை இடைவிடாமல் தரித்து, மிகவும் பரிமளித்திருக்கிற இஷ்டகெந்தமுள்ள திரவியங்களைப் பரிபூரணமாகப் பூசி, ரம்பை, மேனகையிவர்கள் முதலான மனோகர ரூபலாவன்னியமுடைத்தான ஸ்திரீகளோடேகூட இராத்திரி பகலும் மைதுனம் பண்ணிக்கொண்டு வருகிறதென்கிறது பண்ணப்பட்ட புண்ணியங்களுக்கு இதே பலனென்று தெளிவற்ற பாவிகளான பேர்கள் அங்கீகரித்துக் கொண்டு வருகிருர்கள் என்று சொல்லக்கடவோம். அதேனென்ருல், பூலோகத்திலே புண்ணியாத்துமாக்கள் சர்வேஸ்வரன் கட்டளைப்படியே விட்ட பாவ [1]வியாபாரங்களும் அவர்களாலே அருவருக்கப்பட்ட விஷயங்களாகிற பாவ காரணங்களும் மிகவும் பாவத்தை விலகியிருக்கிற சர்வேஸ்வரனுலே புண்ணியத்துக்குப் பலனுக ஒப்புக்கொண்டாப்போலே ஆச்சுது.

24.4 புணர்ச்சி மக்கட்பேற்றுக்காகத்தான். ஆதலாலே, சுவர்க்க விஷயத்திலே மிகவும் காமாதுரராயிருக்கிற பாவிகளினுலே கற்பிக்கப்பட்ட விசேஷங்களைத் தனித்தனியே ஆராய்ந்து கொண்டு அதுகளெல்லாம் சகலஞாயத்துக்கும் நீதிக்கும் ஒவ்வாததுகளாய் இருக்கிறதென்று இந்தடவிலே வெளிப்படுத்தக்கடவோம். அதெப்படியென்ருல், அந்தந்த வியாபாரக் கிரிகைகளிலே அபேக்ஷிக்கத்தக்க பிரயோசனமும் அவதியுங் காணப்பட்டால், அப்படிப்பட்ட கிரிகையானது கிரமத்தோடே கூடியிருக்கிறதென்று சொல்லத்தகும். அல்லது கிரிகையிலே அபேக்ஷிக்கத்தக்க பிரயோசனத்தையும், அவதியையும் காணுதிருந்தோமானுல், அப்படிக்கொத்த வியாபாரமானது அக்கிரமமென்றும் அநியாயமென்றும் சொல்லவேணும் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. இதிப்படியுண்டாயிருக்கச்

1. செயல்கள்

செய்தே, [1]ஸ்திரீபூமானுக்கு நடந்துவருகிற மைத்துனமாகிற வியாபாரத்தைப் பார்க்கும்போது, [2]புத்திரலாபமும், பிறந்த சந்ததியை [3]ரக்ஷிக்கிறது என்கிறதும் ஸ்திரீ பூமானுக்கு நடந்து வருகிற புணர்ச்சியாகிற வியாபாரத்துக்கு அவதியும் பிரயோசனமுமாய் இருக்கிறதென்று சந்தேகப்படுகிறதுக்குக் கணக்கில்லை. இதெல்லாம் 'ஞான உபதேசத்தின் இரண்டாங் காண்டத்தில் ஆறு, ஏழு, எட்டு' என்கிற மூன்று பாடங்களிலும் ஒப்பச் 'சொல்வோம் என்கிறதினாலே, அதெல்லாம் ஒப்புவிக்கப்பட்டதாய் எண்ணிக்கொண்டு இவ்விடத்திலே நடக்கத்தக்க விசேஷங்களைக் கொஞ்சத்துக்குள்ளே நடத்தக்கடவோம்.

**24·5 விலங்குகள் இப்பாடத்தைக் கற்பிக்கின்றன.** அதெப்படியென்றால், புத்திரலாபமானது ஸ்திரீபூமான் சங்கத்துக்குப் [5]பிரயோசனமாய் இருக்கிறதென்கிற சந்தேகமற்ற சத்தியமானது மத்தியானத்துச் சூரிய பிரகாசத்தைக் காட்டிலும் பிரத்தியக்ஷ சத்தியமாய் இருக்கச் செய்தே, காம முதலான பாவங்களினாலே கண்ணுகிற மதிகெட்டவர்கள் அப்படிப்பட்ட சத்தியத்தைச் சற்குரு உபதேசத்தின் நிமித்தமாகவானாலுங் கண்டுபிடியாத போதே, நாய் நரி இதுகள் முதலான புத்தியில்லாத செந்துக்களண்டையிலே போய் அதுகள் நடக்கிற நடக்கையைப் பார்த்து இப்படிப்பட்ட சத்தியத்தைத் தெளியக்கடவார்கள். அதெப்படியென்றால், மைதுன விஷயத்திலே புத்தியில்லாத செந்துக்களானதுகள் எப்போதும் நடக்கிற வகையை விசாரிக்குமிடத்தில், புத்திரலாபம் வருகிறதுக்குக் கெர்ப்பந்தரிக்கப் பக்குவ காலத்திலே மாத்திரம் ஆண் பெண் செந்துக்கள் இரண்டும் புணர்ச்சி பண்ணிக்கொண்டு வருகிறதென்று பார்த்துக்கொண்டிருக்கிறோமொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால், சகலத்தையும தப்பில்லாத கிரமத்தோடு நடத்துகிற கர்த்தரானவர் புத்தியுங் குறையற்ற சுவாதந்திரியமும் இல்லாத செந்துக்கள் வர்த்திக்கிறதுக்குப் புணர்ச்சியாகிற உபாயத்தைக் கட்டளையிட்டபோதே, இப்படிப்பட்ட புத்தியில்லாத செந்துக்களுக்குக் கொடுத்த சுபாவ குணத்தின் நிமித்தமாகப் புத்தியின் குறையற்ற சுவாதந்திரியமில்லாத செந்துக்கள் நடக்கிற அடைவிலே கர்த்தர்தானே [7]பிரேரகனாய் இருக்கிறாரென்று சொல்லத்தகும். முடிவில்லாத ஞான சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் பண்ணப்

1 ஆண் பெண் 2 பிள்ளைப்பேறு 3 காத்தல் 4 சொன்னோம்(பா.)
5 பேசத்தக்க 6 முடிவு 7 இயக்குவோன்

படுகிற கிரிகைக்குப் பிரேரகனாய் இருக்கும்போது, அப்படிப் பட்ட கிரிகையானது, தப்பில்லாக்கிரமத்தோடு பொருந்தியிருக் கிற கிரிகையாயிருக்குமொழிய மற்றப்படியல்ல. இது காரண மாகக் கர்ப்பந்தரிக்கிறதுக்குப் பக்குவமான காலத்திலே மாத் திரம் புத்தியில்லாத செந்துக்கள் புணர்ச்சியைப் பண்ணத்தக்க தாகக் கர்த்தரானவர் பிரேரகன் மேரையாகக் கட்டளையிட்ட போதே, ஸ்திரீ பூமான் சங்கத்துக்குப் புத்திரலாபமானது தானே பிரயோசனமும் அவதியுமாய் இருக்கிறதென்று சொல்லக் கடவோமொழிய, மதிகெட்டவன் முதலாய் அதிலே அல்ல வென்று சொல்லுகிறதுக்கு அவகாசங் காணமாட்டான். ஆகை யாலே, புத்திரலாபத்துக்காக ஸ்திரீ பூமான் பண்ணிக்கொண்டு வருகிற புணர்ச்சியானது கிரமமுள்ள கிரிகையாயிருக்கச் செய்தே, காமமாகிற வியாதியில்லாமல் ஒருக்காலானாலும் புத் திரலாபத்தை அபேக்ஷியாத மைத்துனமானது ஞாயமில்லாத கிரிகையும், அக்கிரமுமென்று சொல்லத்தகுமொழிய மற்றப்படி யல்ல.

24·6 சுவர்க்கப் போகம் நல்வினைப் பரிசாகாது. இதெல்லாம் ஓர் அற்பமானாலுஞ் சந்தேகமில்லாமல் ஒப்புக்கொள்ளத்தக்க சத்திய விசேஷமாய் இருக்கச் செய்தே, மிகவுங் காமாதுரரான பாவிகளினாலே கற்பிக்கப்பட்ட சுவர்க்க ஸ்தலத்தை அடைந் திருக்கிற புண்ணியாத்துமாக்களான பேர்கள் பண்ணிக்கொண்டு வருகிற மைத்துன வகையை விசாரிக்கும்போது, பூலோகத்திலே வேசிகளோடே ஒருக்காலும் புத்திர லாபத்தை அபேக்ஷியாதவ களாலே பண்ணப்படுகிற மைத்துனத்தைக் காட்டிலும், தேவர் களாலே பண்ணப்படுகிற மைத்துனமானது கெட்ட மைத்துன மென்று சொல்லக்கடவோம். ஆனபடியினாலே, தேவர்களாலே பண்ணப்படுகிற மைத்துனமானது முழு அக்கிரமமென்றும், மோக சம்பந்தமாயிருக்கிற கனமான பாவமென்றும அங்கீகரிக்க வேணுமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே, சுவர்க்கத் திலே பண்ணப்படுகிற மைத்துனமானது அக்கிரமும் பாவமுமாய் இருக்கிறதென்று அங்கீகரிக்க வேண்டியிருக்கிறதினாற் பாவமற்ற சகல நன்மை சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் அப்படிப்பட்ட பாவமான மைத்துனத்தை விலக்குவாரென்று சொல்லவேணு மொழிய, அதைப் பூமியிலே பண்ணப்பட்ட புண்ணியங்களுக்குப்

1 வியாதியினால் (முதற்பதிப்பு)

பலனைக் கட்டளையிட்டாரென்று முழுப்பயித்தியங் கொண்டவன் முதலாய்ச் சொல்லமாட்டான்.

## 24·7 'வேள்வியால் சுவர்க்கம்' என்பதன் ஆராய்ச்சி.

இது தவிர "[1]சுவர்க்க காமனையிருக்கிறவன் [2]யக்கியம் பண்ணக்கடவான்" என்கிற வசனத்திலே அடங்கியிருக்கிற [3]விபரீத மேரையை ஆராய்ந்துகொள்ளக்கடவோம். அதேதென்றால் யக்கியம் பண்ணிச் சுவர்க்கத்தை அபேக்ஷிக்கிறவன் அருவருப்புள்ள சுகத்தின் போகத்தை மாத்திரம் பிரதானமாய் அபேக்ஷிக்கிறானென்று சொல்ல வேண்டியிருக்கையிலே, இப்படிப்பட்ட பலனாகிற போகத்தின் சுகமானது பூலோகத்திலே யக்கியமில்லாமல் எறிஞ்சு போட்ட ஸார்த்தனாலே அடையப்படுகிற செல்வமாய் இருக்கிறதென்று கண்டுகொண்டு வருகிறோம். அது யக்கியத்துக்கும் புண்ணிய சரித்திரங்களுக்கும் பரலோகத்திலே வரத்தக்க பலனையிருக்கிறதென்று சொல்லவுங் கருதவுங் கூடாது. யக்கியத்தைப் பண்ணுகிற தீக்ஷதனுக்குச் சமானமாகத் தீக்ஷதனுடைய ஸ்திரீயாகிற நங்கையார் தனது புருஷனோடேகூடச் சரியாக யக்கியம் பண்ணுகிறாளென்று சொல்லக் கடவோமொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே, அனேகம் வேசிகளோடேகூட மைத்துனம் பண்ணித் [4]தீக்ஷதனானவன் பண்ணின யக்கியத்துக்குப் பலனை அனுபவிக்க வேணுமென்று ஆசைப்பட்டு யக்கியசாலையேறும் போது, சரியாக யக்கியம் பண்ணுகிற நங்கையாரானவள் சுவர்க்கத்திலே அனேகம் புருஷர்களோடேகூட மைத்துனம் பண்ண வேணுமென்று அபேக்ஷித்துத் தனது புருஷனோடே கூடத்தீக்ஷத யக்கியத்தைச் சரியாக நிறைவேற்றுகிறாள் என்று சொல்லத்தக்க ஞாயமாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. அப்படியே நங்கையாரானவள் யககியம் பண்ணுகிறதுக்கு முன்னே இத்தனை பேருக்குச் சுண்ணும்பிட்டேனென்று லெச்சையோடே சொல்லுகிறவள் தான பண்ணுகிற யக்கியத்துக்குப் பலனை அனேகம் பேர்களோடே மைத்துனம் பண்ணுவேனென்று இலச்சையில்லாமற் சொன்னைப்போலே யாச்சுது.

ஆனால் நங்கையாரானவள் தனது பாத்தாவோடே மாத்திரஞ் சுவர்க்கத்திலே போகிப்பாள் என்று தெளிவற்ற பாவிகள் சொல்லி நடத்திக்கொண்டு வருகிற வார்த்தையானது, ஞாயத்துக்கு ஒவ்வாத தப்பறை விசேஷமா யிருக்கிறதென்று இந்தடை

1. சுவர்க்கத்தை நாடுவோன் 2. யாகம் 3. பொருந்தாமை
4. பண்ணுகிறது என்கிறது

யிலே கண்டுபிடிக்கலாம். (1) அதேதென்றால் அனேகம் பேர் களோடே பண்ணுகிற மைத்துனமானது யக்கியம் பண்ணுகிற பத்தாவுக்குப் பலனுயிருக்கும்போது, அனேகம் பேர்களோடே கூடப்பண்ணுகிற மைத்துனமானது அவனுக்குச் சரியாகக்கூட யக்கியம் பண்ணுகிற நங்கையாருக்கு வரத்தக்க பலனென்றும் அங்கீகரிக்கத்தக்கதாகும். (2) மீளவும், நங்கையாரானவள் சுவர்க்கத்துக்குப் போகிறதுக்கு முன்னே பத்தாவானவன் செத்துச் சுவர்க்கத்துக்குப் போனால், திவ்விய சரீரத்தை அடைந்து யக்கியத்தினுடைய பலனுகிற சுவர்க்கத்திலே இருக்கிற வேசிகளோடேகூட மைத்துனம் பண்ணிக்கொண்டு வருகிறான் என்று அங்கீகரிக்கும்போது, தீக்ஷதனைவன் சாகிறதுக்கு முன்னே நங்கையார் செத்துச் சுவர்க்கத்திலே போய்த் திவ்விய சரீரத்தைக் கொண்டிருக்கிறவளாய் அனேகம் புருஷர்களோடே கூடத்திரிவாளென்றும் ஒப்புக்கொள்ளத்தக்க ஞாயமாகும். இப்படிச்சொல்லாவிட்டால்,நங்கையார் பண்ணின யக்கியத்துக்குச்சுவர்க்கத்தை அடைந்தபின் அனேகநாள் யாக்கியத்தின் பலனை அனுபவியாதே போனளென்று சொல்ல வேணும். (3) அல்லது பத்தாவான தீக்ஷதன் குறையற்ற விதமாகச் சன்னியாசம பண்ணினென்று சொன்னோமானால், அப்படிப்பட்ட பத்தாவானவன் சுவர்க்கத்துக்குப் போகாமல் மோக்ஷத்துக்குப் போவானென்று இவர்களுடைய மதத்திலே ஆன சித்தாந்தமென்று சொல்லப்படும். அப்படிப்பட்ட தறுவாயிலே, அப்பாவி நங்கையாரானவள் சுவர்க்கத்திலே [1]விரத்தினியாயிருந்து தான் பண்ணின யக்கியத்துக்கு என்ன பலனை அனுபவித்தாள் என்று சொல்லப் போகிறோம்?

(4) இதல்லாமல், திவ்விய சரீரத்தை அடைந்து சுவர்க்கத்திலே இருக்கிறபேர்களெல்லாம் ஒன்றில் வேசிகளாய் இருக்கிறார்கள், அல்லது வேசிகளோடே மைத்துனம் பண்ணுகிற பேர்களாய் இருக்கிறார்களென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட ஸ்தலத்திலேயிருக்கிற நங்கையாரானவள் விரத்தினியாயிருப்பாளென்று அங்கீகரிக்கத்தகாது. அதேதென்றால், சுவர்க்கத்தை அடைந்த அப்பாவி நங்கையாரானவள் விரத்தினியாயிருக்க மனசாயிருந்தாலுஞ், சுவர்க்கத்திலே யிருக்கிற காமாதுரர்களுடையயவும் வேசிகளுடையவும்சங்கத்தினாலே[2] அழிந்து போவாளென்று சொல்லக் கணக்கொழிய, மற்றப்படி

1. விரக்ஷிணி (பா.) 2. சங்காதத்தாலே

யல்ல. (5) கடைசியாய், யக்கியம் பண்ணுகிற தீக்ஷதருக்குளே ஒருத்தனானாலுஞ் சுவர்க்கத்திலே போய் ஸ்திரீகளோடே மைத்துனம் பண்ணாமல் குறையற்ற விரத்தனா யிருப்பானென்றுசொல்லப்படாதது போலே, தீக்ஷதரோடே கூட யக்கியத்தைப் பண்ணின நங்கையாரானவள் சுவர்க்கத்திலேபோய் விரத்தினியாய் இருப்பாளென்று ஒப்புக்கொள்ளக் கடவதல்ல. அவ்வண்ணமே யக்கியம் பண்ணின அப்பாவி நங்கையாரானவள் தெளிவற்ற பாவிகளினாலே யக்கியத்துக்குக் கற்பிக்கப்பட்ட பலனை இந்தப் பூமியிலேதானே அனுபவித்தாலே அனுபவித்தாள், மரணத்துக்குப்பிற்பாடு யக்கியத்தின் பலனை அனுபவிக்கிறதுக்குச் சுவர்க்க ஸ்தலத்தை அடைவாளென்று நித்திரையிலே காணப்பட்ட சொற்பனம் போலே அங்கீகரிக்கத்தக்க விசேஷமாயிருக்கிற தொழிய மற்றப்படியல்ல.

## 24.8 சுவர்க்கப் போகத்தால் தேவர்களுக்குத் திருப்தி இல்லை

இப்படிப்பட்ட அபத்த விசேஷங்களவிரச் சுவர்க்க விஷயத்திலே வெட்கங்கெட்ட பாவிகளினாலே கற்பிக்கப்பட்ட வேறே அனேகந்தப்பறை விசேஷங்களுண்டு. அதுகளுக்குள் ஒன்றிரண்டு ஆராய்ந்து கொள்ளக் கடவோம். அதெப்படியென்றால், திவ்விய சரீரத்தைக் கொண்டிருக்கிற புண்ணியாத்துமாக்கள் சுவர்க்கத்திலே இருக்கிற ரூபலாவண்ணியமுள்ள வேசிகளோடேகூடப் பண்ணுகிற மைத்துனத்தின் நிமித்தமாகப் பூமியிலே திரிகிற எறிந்துபோட்ட காமாதுரர்போலே திரித்தியை அடைகிறார்களில்லை என்று சொல்லக்கடவோம். இந்தவகைச் சுவர்க்கத்திலே இருக்கிற சகல வேசிகளோடே திரிகிற திவ்விய சரீரத்தைக்கொண்டிருக்கிற தேவேந்திரனானவன் அப்படிப்பட்ட வேசிகளோடே அவன் பண்ணிக்கொண்டு வருகிற மைத்துனத்தின் நிமித்தமாகத் தனது போகத்திலே திரித்தியையடையாததினால், பூலோகத்திலே திரிகிற ஸ்திரீகளை ஆசைப்பட்டு அங்கங்கே அவர்களோடே மைத்துனம் பண்ணுகிறதுக்கு வருந்தினான் என்று எழுதி வைத்தார்கள். **(1) தேவேந்திரனும் அகலிகையும்.** அவ்வண்ணமே, கவுதமனுடைய ஸ்திரீயாகிற அகலியாதேவியோடே மைத்துனம் பண்ணிப் பிறப்படுகிறபோது, ரிஷியாகிற கவுதமன் கண்டு யோனியை ஆசைப்பட்டதினால் உன் சரீரமெல்லாம் யோனியாய்ப் போகக்கடவதென்று சபித்தானும். அப்படிப்பட்ட சாபத்தினாலே தேவேந்திரனுக்குச் சரீரமெல்லாம் யோனியாய் போனதினால் அவன் லெச்சைப்பட்டுப் பிறப்படாமல் இருந்

தகினுல் அவனைக்குறித்துக் கவுதமன் [1]பிரதிசாபம் பண்ண வேணுமென்று சுவர்க்கத்திலே யிருக்கிற பேர்கள் வேண்டிக் கொண்டார்களாம். அவர்கள் வேண்டிக்கொண்டதினுல், யோனியெல்லாம் கண்ணுப்போகக் கடவதென்று பிரதி சாபம் இட்டானும். அவ்வண்ணமே எங்கெங்கே நல்ல ஸ்திரீகள் உண்டோவென்று [2]கெடுக்கத்தக்கதாகத் தேவேந்திரனுக்கு இரண்டு கண் போராமல் மைதுனம் பண்ணத்தக்கவர்களான வெள்ளாட்டிகள் எங்கே இருக்கிருர்களென்று தேடுகிறதுக்குக் கவுதமன் ஆயிரங்கண்களைக் கொடுத்தானென்று சொல்லுகிறதுக்கு இடமாச்சுது. இப்படிப்பட்ட பாவத்தின் நிமித்தியமாகச் சபிக்கப்பட்ட தேவேந்திரனைவன்தனது பீசத்தைப் போக்கடித்தானும். தேவேந்திரனுக்கு ஸ்திரீ போகமில்லாமற் போச்சென்கிறதினுல் உண்டாயிருக்கிற பிதிருக்கள் கஸ்திப்பட்டுத்,தேவேந்திரனைவன் கொண்டிருக்கிற திவ்விய சரீரத்துக்கு ஆட்டினுடைய பீசத்தை ஒட்டினுர்களென்கிறதினுலே, 'மேஷ விருஷணன்' என்கிற நாமமானது தேவேந்திரனுக்குச் சென்று வருகிறது.

(2) **தேவேந்திரனும் தமயந்தியும்.** இதுதவிர, தேவந்திரன் தனக்குத் தமையந்திபெண்டாட்டியாய் இருக்கிறவேணுமென்று நளனைத் தூதனுப்பினுன் என்று சொல்லுகிருர்கள். தேவேந்திரன் தமயந்தியை ஆசைப்பட்டாப்போலே வேறு சில தேவர்களும் இவள் பேரிலே மோகமாயிருந்து தங்களுக்குப் பெண்டாட்டியாய் இருக்கத்தக்கதாக வருந்தினுர்கள். அவள் இவர்களையெல்லாம் சட்டைப்பண்ணுமல் அருவருத்துத் தள்ளிப் போட்டு, ராசாவாகிற நளனேடு விவாகம் பண்ணினுளாம். ஆதலாலே திவ்விய சரீரத்தைக் கொண்டிருக்கிற தேவர்களானவர்கள் திவ்விய சரீரத்தை யுடைத்தான வேசிகளோடே மைத்துனம் பண்ணுகிறது போருமென்றிராமற், பூமியிலே திரிகிற [3]பவுதீக சரீரமுள்ள ஸ்திரீகளோடே மைத்துனம் பண்ணுகிறதுக்கு வருந்துகிறபோதே, போகத்திலே அவர்களுக்கு உண்டாயிருக்கிற ஆசையானது திரித்தி அடையவில்லையென்று கண்டு பிடித்தாப்போலே யாச்சுது.

(3) **வேதமதியைக் கண்ட சுதரிசனும் சுவர்க்கணனும்.** இந்தச் சத்தியத்தை இன்னமொரு பிரசித்த கதையினுல் ஒப்பச் சொல்லக்கடவோம். அதேதென்ருல், ரிஷியாகிற காலவனுக்கு

1. மறுசாபம் 2. கேள்க்க (பா. பே.) 3. ஊன்உடல்

மிருந்த ரூபாலாவன்னிய முடைத்தான வேதமதியென்கிற பெண் உண்டாயிருந்தாளாம். அவள் தனது தோப்பனுர் பூசை பண்ணுகிறதுக்குப் புஷ்பம் பறிக்கிறபோது சுதரிசனனும் [1]சுவர்க்கணனும் என்கிற இரண்டு தேவர்கள் விமானத்தில் ஏறிக்கொண்டு ஆகாச மார்க்கத்திலே போனுர்கள். ரூபலாவண்ணியமுள்ள வேதமதியைப் பார்த்துக் காமாதுரர்களாய் இருக்கக்கொள்ள, அவளைத் தங்களுக்கு ஸ்திரியாய் இருக்கத்தக்கதாகக் கேட்டார்களாம். அவர்கள் கேட்டதுக்கு வேதமதியானவள் தனது தோப்பனுர் உத்தாரமில்லாமல் இது செய்யவொண்ணுதென்றுந் தகப்பனுரை உத்தாரங்கேட்டு அவருடைய உத்தரத்தின் படியே விவாகம் பண்ணுவேன் என்றுஞ் சொன்னுளாம். தேவர்கள் அவளுடைய மறுவுத்தாரத்தைக் கேட்டு அவளோடே மைத்துனம் பண்ணத்தக்கதாகக் கொண்ட ஆசையைத் தணிக்கமாட்டாமற், பலாத்காரத்தினுலே அவளைப் பிடிச்சதினுலே அவள் வலுவாய்க் கூப்பிட்ட சத்தம் அனேகம் ரிஷிகளுக்கும் இவருடைய தோப்பனுருக்குங் கேட்டு, அந்த ஸ்தலத்திலே ஓடிவந்தார்களாம். காலவனென்கிறவன் தேவர்கள் பண்ணின அனியாயத்தைப் பொறுக்கமாட்டாமல் இந்தடைவிலே இரண்டு தேவர்களையும் சபிச்சானும். 'பலாத்காரத்தினுலே ஒருத்தியைப் பிடிக்கிறதென்கிறது பிசாசுகளுக்கடுத்த வியாபாரமாய் இருக்கிறதொழிய மற்றப்படியல்ல. ஆகையால், பிசாசுகளுக்கடுத்த வியாபாரத்தை நீங்கள் பண்ணினபோதே அப்படிப்பட்ட அக்கிரமத்தின் நிமித்தமாக நீங்கள் பிசாசுகளாய்ப் போவீர்கள்" என்று சபித்தானும். அவர்கள் இரண்டுபேரும் [2]காலவன் பிரதி சாபம் பண்ணவேணுமென்று வேண்டிக்கொண்டதுக்குக். காலவனுனவன் பண்ணின பிரதி சாபமாவது: நீங்கள் வேதாளமென்கிற நாமமுடைத்தான பிசாசுகளாய்ப் பூமியிலே திரிந்து, கடைசியாய் ராமசேது விலேயிருக்கிற இருபத்தினுலு தீர்த்தங்களுக்குள்ளே தரும தீர்த்தத்திலே நீங்கள் ஸ்நானம் பண்ணினுல் உங்களுக்குண்டான பிசாசத்துவம் போகக்கடவது. இது தவிர, உங்களுக்குண்டான பிசாசத்துவத்தைப் போக்கடித்த தீர்த்தமானது உங்களுடைய பேர்கொண்டிருந்து சகல மனுஷர்களினுலே வேதாளதீர்த்தம் என்று சொல்லப்படும்?

## 24.9 சிற்றின்பம் நல்வினைப்பயன் என்பது தப்பறை.

சுவர்க்க விஷயத்திலே தெளிவற்ற பாவிகள் கற்பிச்ச இத்

1 சுகர்ணன் (பா. பே) 2 பேர் (பா.)

தொகைப்பட்ட கதைகள் எண்ணப்படாது. அதுகளெல்லாம் கற்பிச்ச தப்பறையாய் இருக்கிறதென்று (எல்லாரும்) எளிதாய்க் கண்டுபிடிக்கிறதுக்கு, அப்படிப்பட்ட கதைகளிலே சொல்லப் படுகிற ஞாயத்துக்கு ஒவ்வாத அனேகந்தப்பறை விசேஷங்களுக் குள்ளே சிறிது மாத்திரம் சொல்லி அதுகளுக்குண்டான ஞாய நீதிக்கு விபரீதமேரையானது பிரத்தியக்ஷமாய் நம்மாற் காட்டப் படுகிறதினால், பூமி ஸ்தலத்திலே புண்ணியவான்கள் புண்ணியங் கள் பண்ணினதுக்குப் பலனாக போக மைத்துனத்தின் சுக அனுபவ முதலான செல்வங்களைச் சுவர்க்க ஸ்தலத்திலே சகலநன்மை சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் கட்டளையிட்டார் என்பதும்,[1] இதுகள் முதலான அனேகம் கதைகளுந் தெளிவற்ற பாவிகளினாலே கற்பிக்கப்பட்ட முழுத்தப்பறை விசேஷங்களா யிருக்கிறதென்று எளிதாய்க் கண்டுபிடிக்கலாம்.

(1) **அவ்வின்பம் ஒழுங்கீனமானது: இதைப் பாவிகள் கற்பிக்கிறார்கள்.** அதேதென்றால், புத்திர சந்தான லாபத்தை அபேக்ஷியாமற் போகத்தின் சுகத்தை மாத்திரம் அபேக்ஷித்துக் கொண்டுவருகிற மைதுன மேரையானது முழு அக்கிரமமாயிருக்கச் கொள்ளக் கிரமரூபமாகிற புண்ணிய சரித்திரங்களுக்குப் பலனா யிருக்கலாம் என்று அங்கீகரிக்கப்படாது. அப்படிப்பட்ட அக் கிரமமான மைத்துன அனுபவத்தைத் தபசு முதலான தப்பில் லாத புண்ணிய சரித்திரங்களுக்குத் தப்பில்லாத கிரமத்தோடு சகலத்தையும் நடத்துகிற கர்த்தரானவர் பலனாகக் கட்டளையிட் டருளினார் என்று அறிவின் குறைச்சலினாலே ஞாய நீதியை மறந் திருக்கிற பாவிகளான பேர்கள் கற்பித்தார்களொழிய மற்றப் படியல்ல. அதேதென்றால், அனேகம் நாள் வெகு பாவங்களிலே திரிந்ததினால் அவர்களுடைய புத்தியானது மயங்கிப்போய், குருடருக்குச் சரியாகக் காணுகிற மதியுள்ளவர்களுமாய், ஞாய நீதியைக் கண்டுபிடிக்கிறதுக்குக் காணுகிற மதிகெட்டவர்களு மாயிருந்து, புண்ணியத்துக்கு வரத்தக்க இப்படிப்பட்ட பலனைக் கற்பித்தார்களொழிய மற்றப்படியல்ல.

அதேதென்றால் புத்தியுடைத்தான பேர்களாயிருந்தாலும், வெகு பாவங்களைப் பண்ணப்பண்ண நாள்வட்டத்திலே புத்தி யில்லாத நாய் நரி முதலான செந்துக்களைவிட மதிகெட்டுப்போய் நாய், நரி முதலான செந்துக்களுக்கு உண்டாயிருக்கிற மைத்து

1 என்றும் (பா.)

னத்தின் சுகமானது அதேமாத்திரம் சுகமென்று விசாரித்து, அப்படிப்பட்ட மைத்துனத்தின் சுக அனுபவத்தை முடிவில்லாத ஞாயநீதி முதலான நன்மை சுரூபமாயிருக்கிற சர்வேசுரன் பேரிலே அனியாயமாய் ஆரோபித்தாப்போலே, தபசு முதலான பழுதற்ற புண்ணிய சரித்திரங்களினாலே விளங்கியிருக்கிற மகாத்துமாக்கள் பூலோகத்திலே கர்த்த கற்பித்த நிர்மல புண்ணியத்தின் நெறியைத் தப்பில்லாமல் அனுசரித்து நடக்கிறதிலே அவர்கள் அனுபவித்த மகாமகாப்பட்ட பிரயாசங்களுக்குத், தபசு முதலான புண்ணியங்களைப் பண்ணுகிறதிலே பிரயாசைப்படமாட்டாத புத்தியில்லாத செந்துக்கள் அனுபவித்துக்கொண்டு வருகிற அப்படிப்பட்ட மைத்துன சுகத்தைப் புண்ணிய பலனை அனியாயமாகக் கற்பித்ததினால், ஆக்கினைக்குப் பாத்திரமாய் இருக்கிற கனபாவமாகிற மைத்துன வியாபாரத்தைப் புண்ணிய பலனைக் கற்பித்தாற்போலே ஆச்சுது.

(2) மறுமையில் வரும் ஞான உடல் சிற்றின்பத்தில் ஈடுபடாது

இதுதவிரச் சுவர்க்கத்தை அடைஞ்சிருக்கிற புண்ணியாத்துமாக்கள் [1]தேசோமயமான திவ்விய சரீரத்தைக் கொண்டிருக்கிறதென்று சொல்லும்போது, அப்படிப்பட்ட திவ்விய சரீரமானது பவுதீக சரீரம் போலேயிராமல், உஷ்ணங் குளிர் முதலான அன்னியோன்னிய விருத்த குணங்கள் அதுக்கு இல்லாமல் இருக்க வேணும். ஆதலால் உஷ்ண முதலான குணங்களை உடைத்தான பவுதீக சரீரமானது அழிந்துபோகிற சரீரமாயிருக்கக் கொள்ளப் படுகிற ரேதஸ்கலனமாகிற க்ஷயமானது தேசோமயமான திவ்விய சரீரத்துக்கு வரமாட்டாதென்று சொல்லக்கடவோம். ஆனபடியினாலே அப்படிப்பட்ட திவ்விய சரீரத்தைக் கொண்டிருக்கிற பேர்களுக்குக் கற்பிக்கப்பட்ட மைத்துனமானது திவ்விய சரீரத்தின் சுபாவ மேரைக்கு விபரீத மேரையாய் இருக்கிறதென்கிறதினால், அது முழுதுந் தப்பறை வகையிலே கூட்டத்தக்க விசேஷமென்று சொல்லத்தகும.

இதன்றியே தேசோமயமான திவ்விய சரீரத்தையும் பவுதீக சரீரத்தையும் பாக்கும்போது, மனுஷ சரீரத்துக்கும் நாய் பன்றி முதலான தின் சரீரத்துக்கும் உண்டாயிருக்கிற வித்தியாசத்தைக் காட்டிலும், அப்படிப்பட்ட திவ்விய சரீரத்துக்கும் மனுஷனுக்

1. ஒளிப்பிழம்பு

குண்டான பவுதீக சரீரத்துக்கும் அதிகமான பின்னபேதம் உண்டாயிருக்க வேணுமென்று சொல்லக்கடவோம். திவ்விய சரீரத்தையும், பவுதீக சரீரத்தையுங் கொண்டிருக்கிற பேர்களுக்கு இப்படிப்பட்ட கனமான பேதம் உண்டாயிருக்கையிலே, திவ்விய சரீரத்தைக் கொண்டிருக்கிறவனாலே பவுதீக சரீரத்தைக் கொண்டிருக்கிற ஸ்திரீயோடே பண்ணப்படுகிற மைத்துனத்தை விசாரிக்கும்போது, பவுதீக சரீரத்தைக் கொண்டிருக்கிற மனுஷனானவன் பவுதீக சரீரத்தைக் கொண்டிருக்கிற நாயோடே மைதுனம் பண்ணப்பட்டால், அப்படிப்பட்ட மைதுனத்தைக் காட்டிலும் பவுதீக சரீரத்தைக் கொண்டிருக்கிற ஸ்திரீயோடே திவ்விய சரீரத்தைக் கொண்டிருக்கிறவனாலே பண்ணப்பட்ட மைத்துனமானது அதிகமான அக்கிரமமென்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனபடியினாலே, அப்படிப்பட்ட அக்கிரமத்தைப் பண்ணிக்கொண்டு வருகிற பேர்கள் தேவர்களாய் இருக்கிறார்களென்கிறது கற்பிக்கப்பட்ட முழுத்தப்பறையாய் இருக்கிறதென்று சொல்லக்கடவது.

இது தவிரத் திவ்விய சரீரத்தைக் கொண்டிருக்கிற சுவர்க்கத்துக்குக் கர்த்தனுமாய்ச் சகல தேவர்களுக்கும் அதிபதியுமாயிருக்கிற தேவேந்திரனானவன், மனுஷனாகிற கெவுதமனுடைய பெண்டாட்டியை ஆசைப்பட்டு, அவளோடே மைத்துனம் பண்ணிப் பிறப்படுகிறபோது அவனைக் கெவுதமன் கண்டுபிடிச்சானும். கெவுதமன் இட்ட சாபத்தினாலே தேவேந்திரன் சரீரமெல்லாம் யோனியாய்ப் போயிற்றென்றும், பிரதிசாபத்தினாலே யோனியெல்லாம் கண்ணினுடைய ரூபத்தை அடைந்ததென்றும், பின்னுஞ் சாபத்தினாலே தேவேந்திரனுக்குண்டான திவ்விய பீசம் விழுந்ததென்றும், தேவேந்திரனுடைய திவ்விய பீசத்துக்குப் பாத்திரமாயிருக்கிற திவ்விய சரீரத்துக்கு நீச மிருகமாகிற ஆட்டினுடைய பீசத்தைப் பிதிருக்கள் ஒட்டி வைத்தார்களென்றும், இத்தொகைப்பட்ட வேறெ அனேகம் விசேஷங்களும் அங்கிகரிக்கத்தக்க சத்திய விசேஷங்களோ என்றும், அல்லது நித்திரை பண்ணுகிறவனாலே காணப்பட்ட பரியாசத்துக்கு ஆஸ்பதமாயிருக்கிற விபரீத சொற்பனங்களாய் இருக்கிறதோ என்றும், புத்திமானாயிருக்கிறவன் பரிச்சேதம் பண்ணக்கடவான்.

**(3) இவ்வுலகினர் மோட்சவாசிகளை ஆசீர்வதிக்கவோ சபிக்கவோ முடியாது (i)** வழிப்போக்கரும் ஈடேறினவரும். இது தவிரத்

தேவர்களுக்கு அதிபதியாயிருக்கிற தேவேந்திரனானவன், தான் பண்ணின மகாமகாப்பட்ட புண்ணியங்களுக்கு அவதி ரூபமான பலனை அனுபவிக்கும்போது, புண்ணிய அவதியிலேயிருக்கிற அப்படிப்பட்ட தேவனுடைய மேரையையும், அந்தத் தேவத்துவத்தினுடைய மகிமையுள்ள மேரையை சென்றடைய வேணுமென்று மாகமகாப்பட்ட தபசு முதலான புண்ணியங்களைப் பண்ணிக்கொண்டு வருகிறவனுடையவகையையும் விசாரிக்கும்போது, தபசியாகிற மனஷனுடைய அந்தஸ்தானது தேவனுடைய உன்னதமான அந்தஸ்துக்குமிகவுங் கீழாயிருக்கிறஅந்தஸ்தாய் இருக்கிறதென்று அற்பமாகிலுஞ் சந்தேகமில்லாமல் ஒப்புக்கொள்ளத்தக்க சத்திய விசேஷமாதம் ஆனபடியினாலே, மனுஷனானவன் எப்படிப்பட்ட கனமான தபோமகிமை உடைத்தானவனாய் இருந்தாலும், அவதியிலேயிருந்து தபோ புண்ணியபலனை அனுபவிக்கிறபுண்ணியாத்துமத்துக்குத் தபசியாயிருக்கிறவன் மிகவும் கீழாயிருக்கிறானென்று சொல்லக்கடவோம். இப்படி அங்கிகரிக்கிறபோது, அவதியாகிற சுவர்க்கத்திலே யிருக்கிற மேலான மகிமையுள்ள புண்ணியாத்துமாக்களான போகள்; கிழாயிருக்கிற மனுஷனாகிற தபசியினாலே சபிக்கப்படலாமென்றும், ஆசீர்வாதம் அடையலாமென்றுஞ் சொல்லுகிறது சுத்த தப்பறையாயிருக்கிறதென்று சொல்லப்படும்.

அதேதெனென்றால் [1]நிக்கிரக அனுக்கிரகத்தைப் பண்ணுகிறவன் தனக்குக் கீழாயிருக்கிறவனை உத்தேசித்து நிக்கிரக அனுக்கிரகத்தைப பணண மாட்டுகிறானொழியத், தனக்கு மேலாயிருககிறவனைச் சபிக்கிறதுக்கும ஆசீர்வாதம பண்ணுகிறதுக்கும் வல்லவனாய் இருக்கிறானென்று மதிகெட்டவன் சொல்லுவானொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே, மேலாயிருககிற குருவானவன் தனக்குக் கீழாயிருக்கிற சீஷனுக்கு ஆசீர்வாதம் பண்ணவுஞ் சபிக்கவும் வல்லவனாய் இருக்கிறானென்று சொல்லவேணுமொழியக் கீழாயிருக்கிற சீஷனானவன் தனக்கு மேலாயிருக்கிற குருவைச் சபிக்கிறதுக்கும் ஆசீர்வாதம் பண்ணுகிறதுக்கும் வல்லவனாய் இருக்கிறானென்று சொல்லுகிறது என்கிறது பரியாசத்துக்கு ஆஸ்பதமாய் இருக்கிற முதிர்ந்த பயித்தியமென்று சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே, இவர்கள் சொல்லுகிறப்போலே, அவதியாகிற சுவர்க்கத்திலேயிருந்து திவ்விய சரீரத்தோடே கூடத் தேவத்துவத்தை

1. ஒறுத்தறும் அருளலும்

அடைந்த புண்ணியாத்துமாக்களான பேர்களையும், அவதியாகிற சுவர்க்கத்திலே தேவத்தத்துவமாகிற பாக்கியத்தை இனிமேல் அடைகிறதுக்குப் பூமியிலே மகாமகாப்பட்ட தபோ முதலான பலபல புண்ணியங்களைப் பண்ணுகிற மனுஷரையும் பார்த்து, தேவர்கள் மிகவும் மேலான பேர்களாய் இருக்கிறார்களென்று சொல்லக்கடவோம். சுவர்க்கத்தினுடைய பாக்கியமடைய வேணுமென்று தபோ முதலான பலபல புண்ணியங்களைப் பண்ணுகிறதினாலே பூமியிலேயிருந்து பிரயாசைப்படுகிற மனுஷரோவென்றால் சுவர்க்கத்திலே யிருக்கிற புண்ணியவான்களான மகாராசாக்களைக் காட்டிலும் பூமியிலே தபசு பண்ணுகிற மனுஷரான பேர்கள் மிகவும் கீழ்த்தரமாயிருக்கிற நீசரென்று அங்கீகரிக்கத்தக்க கிரமமாகும்.

(ii) வேலையாளும் அரசனும். இப்படித் தப்பில்லாத ஞாயமுள்ள கிரமமாயிருக்கிறதென்று சொல்ல வேண்டியிருக்கச் செய்தே, சுவர்க்கத்தின் பாக்கியத்தை அடைந்திருக்கிற மகாராசாக்களாய் இருக்கிற புண்ணியத்துமாக்களான பேர்கள் பூமியிலே இருக்கிற மனுஷரிட்ட சாபத்தினிமித்தமாக ஆக்கினையை அனுபவித்தார்களென்று சொல்லுகிறதெங்கிறது, பூலோகத்திலே இராசபட்டத்திலே மகாராசனாயிருக்கிறவன் ராசாங்கத்தை அடையவேணுமென்று சேவக [1]விருத்தியிலே பிரயாசைப்படுகிறவன் கையினாலே ஆக்கினைப்பட்டானென்று சொல்லுகிறதுக்கு ஒக்கும். இந்தடைவாகச் சுவர்க்கத்திலே யிருக்கிற மகாராசாக்களாய் இருக்கிறபேர்கள், தபசிகளாகிற மனுஷருடைய ஆசீர்வாதத்தினாலே நன்மையை அடைந்தார்களென்று அங்கீகரிக்கிறது என்கிறது, வேலையாகிற தபோ முதலான புண்ணியங்களுக்குப் பலனுங் கூலியுமாயிருக்கிற ராசாங்கம் முதலான அயிசுவரியங்களை மெய்யாகவே அனுபவித்துக் கொண்டிருக்கிற மகாராசக்கள் பலனுங் கூலியுமாயிருக்கிற அப்படிப்பட்ட அயிசுவரியங்கள் முதலான செல்வங்களை இனிமேல் அடையவேணுமென்று இப்போ பூமியிலேதானே தபோ முதலான புண்ணியங்களாகிற வேலை நிமித்தமாகப் பிரயாசப்படுகிற முழுத் தாரித்திரர் கையிலே பிசைஷயாகத் துரைத்தன முதலான நன்மைகளைக்கேட்டு வாங்கினார்களென்று சம்மதப்படுகிறதுக்கு ஒக்கும். ஆதலாலே, தபோ பலத்தின் மகிமையினால் ரிஷிகளாகிற மனுஷனுக்குத்தேவர்களைச் சபிக்கவும் ஆசீர்வாதம் பண்ணவும் பலமுண்டாச்சுது என்கிற அபத்த விசேஷத்தை அங்கீகரிக்கிறவன் முழுதுமதி கெட்டவனாய் இருக்கவேணுமொழிய மற்றப்படியல்ல.

1, தொழில்

(iii) **கூலியாளும், செல்வனும்.** அதேனென்றால், தபோ முதலான புண்ணியம் என்னப்பட்டயாவும் சுவர்க்கத்தினுடைய கனமான பாக்கிய முதலான மகிமைகளை அடையவேணுமென்று மனுஷராகிய ரிஷிகளினாலே பண்ணப்படுகிறது என்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே, மனுஷராகிற ரிஷிகளென்னப்பட்ட பேர்களெல்லாரும் தங்களைக் காட்டிலும் மிகவும் பெரியவர்களு மாய்த், தபோ முதலான புண்ணியங்களினாலே ரிஷிகளுக்குவரத் தக்க சுவர்க்க முதலானமகிமைகளைக் குறையற்ற பிரகாரமாய் அடைந்தபேர்களுமாய் இருக்கிற தேவேந்திரன் முதலானதேவர் களைச் சபிக்கிறதுக்கும் ஆசிர்வாதம் பண்ணுகிறதுக்கும் தபோ வலுமையினாலே ரிஷிகளான பேர்கள் வல்லவர்களாய் இருக்கி றார்களென்று சொல்லும்போது, தனமுதலான அயிசுவரியத்தை அடைகிறதுக்கு அனுபவிக்கத்தக்க வருத்தத்தின்வலுமையினாலே, அப்படிப்பட்ட வருத்தத்தை அனுபவிக்கிற கூலிக்காரனுக்குச், சகலதனமுதலான அயிசுவரியங்களை அனுபவித்துக்கொண்டு வரு கிற மகரராசாவுக்குப், பாக்கிய நிர்ப்பாக்கியத்தை வருத்திவிக்கத் தக்கதாகப் பெலமுண்டாச்சுது என்கிற அபத்த விசேஷத்தை ஒப்புக்கொள்ளுகிறதுக்கு ஒக்கும்.

(iv) **வேள்வியும் சுவர்க்கமும்.** இதன்றியே பிராமணராயி ருக்கிற பேர்கள் சுவர்க்கத்திலே செல்வ முதலான பெருமைகளை அடைய வேணுமென்று யக்கிய முதலான புண்ணியங்களைப்பண் ணிக்கொண்டு வருகிறார்கள் என்று அறியப்பட்ட பிரசித்த விசே ஷமாகும் என்றிருக்கும் போது, [1]பிராமணிக்கத்தைக் காட்டிலும் சுவர்க்க சம்பந்தமாயிருக்கிற செல்வமும் மகிமையுங் கனமான தென்று சொல்லக்கடவோம்.ஆதலாலே, சுவர்க்கத்தையும்சுவர்க் கத்திலே யிருக்கத்தக்க தேவேந்திரன் முதலான தேவர்களையும் நவமாக உண்டாகிறதுக்கு வல்லவனாயிருக்கிற விசுவாமித்திரனா னவன், தனக்குப் பிராமணிக்கம் வரவேணுமென்று வெகுகாலந் தபசுபண்ணினான் என்கிற கதையைக் கற்பிச்செழுதி வைத்த வன், நித்திரையிலேசொற்பனங் காண்கிறவனுடைய மேரையாய் இப்படிப்பட்ட கதையைக் கற்பிச்சானொழிய மற்றப்படியல்ல.

(v) **தபசுக்கு இந்திரன் தடை செய்வது பாவமாகும்.** இதன்றியே, பூமியிலே பண்ணப்படுகிற தபசு முதலான புண்ணிய சரித்திரங்கள் சகல நன்மை சுருபமாயிருக்கிற சர் வேசுரனுக்கு ஏற்றிருக்கிற நடக்கையென்று சொல்லவேணு

1 பிராமணத்தன்மை

மொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே, தபோ முதலான புண்ணியங்களுக்குச் சுவர்க்கத்திலே யிருக்கிற தேவேந்திரன் முதலான தேவர்கள் விக்கினம் பண்ணிக்கொண்டு வருகிறார்கள் என்கிற கதைகளைக் கட்டினவன், சுவர்க்கத்திலே யிருக்கிற தேவேந்திரன் முதலான தேவர்கள் கனமான பாவிகளும் மகா மகாப்பட்ட புண்ணியத்துமாக்களுமாய் இருக்கிறார்கள் என்கிற [1]அர்த்த விரோதமான தப்பறை விசேஷத்தைக்கற்பித்து லோகத் துக்குக் கேடாக எழுதி வைத்தானென்று சொல்லத்தகும். அதேதென்றால், பூமியிலே பண்ணப்பட்ட மகாமகாப்பட்ட புண்ணியங்களுக்காகக் கர்த்தன் திருவுளப்படியே அவதியை அடைஞ்சு பலனை யனுபவிக்கிற பேர்கள் சர்வேசுரனுக்கு உகந்த பேர்களுமாய் இருக்கிறதுமல்லாமல், புண்ணியத்திலே நிலை கொண்ட மனசுள்ள பேர்களுமாய் இருக்கிறார்களென்றுசொல்ல வேண்டியிருக்கையிலே, அப்படிப்பட்ட பேர்கள் தபோ முத லான புண்ணியங்களுக்கு விக்கினம் பண்ணிக்கொண்டு வருகிறார் களென்று சொல்லும்போது, அவர்கள் மகாகனமான பாவி களாய் இருக்கிறார்களென்று சொல்லத்தகும். ஆதலாலே சுவர்க்கத்திலே யிருக்கிற தேவேந்திரன் முதலான பேர்கள் கன மான பாவிகளுமாய், மகா புண்ணியாத்துமாக்களுமாய் இருக் கிறார்களென்று அங்கிகாரம் பண்ணினாப்போலே ஆச்சுது. இப் படிப்பட்ட தப்பறை விசேஷங்களைக் கற்பித்த பாவியானவன் லோகத்துக்குக் கேடாக எழுதி வைத்தானென்று சொல்லத் தகும். அதேதென்றால், சுவர்க்கத்திலே யிருக்கிற தேவந்திரன் முதலான தேவர்கள் தபோ முதலான புண்ணியங்களுக்கு விக்கி னம் பண்ணிக்கொண்டு வருகிறார்களென்றும், ஊரார் பெண்டு களைப் பலாத்காரத்தினாலே பிடிக்கிறார்களென்றும், பதிவிரதை களோடே மைத்துனம் பண்ணி (கற்பு) அழிச்சுப் போட்டார் களென்றும் சொல்லும்போது, பூமியிலே திரிகிற மனுஷர் இத்தொகைப்பட்ட பாவங்களைப் பண்ணலாமென்று கேட்கத் தேவையில்லை யென்றும், ஆதலாலே இப்படிப்பட்ட கதைகளைக் கட்டினவன் பூலோகத்திலே மனுஷரான பேர்கள் கன பாவங் களைப் பண்ணுகிறதுக்கு விஸ்தாரவழி திறந்தபோதே, இப்படிப் பட்ட கதைகள் லோகத்துக்குக் கேடாகக் கற்பிக்கப்பட்ட தென்றும் சொல்லக்கடவோம்.

(vi) **தபசினால் கேடுவர முடியுமா?** கடைசியாய்த் தபோ முதலான புண்ணிய சரித்திரங்கள் நிமித்தமாகப் பூலோகத்

1 முரண்பாடு

திலேயுஞ் சுவர்க்கத்திலேயும் இருக்கிற பேர்களுக்குக்கேடு வரு கிறதென்கிற விசேஷத்தைக் காட்டிலுங் கனமான விசேஷங் காண மாட்டாது. அதேனென்றாற், பாவத்து நிமித்தமாகக்கேடு வருமென்று சொல்லவேணுமொழிய, நிர்மல புண்ணிய நடக்கை யாலே பொல்லாப்பு வருமென்று முழுப்பயித்தியக்காரன் முத லாய்ச் சொல்ல மாட்டான். அப்படியே, புண்ணிய நிமித்த மாகக்கேடு வருமென்று சொல்லும்போது, அருவருப்புள்ள பாவ நடக்கை முகாந்திரமாக நன்மை வருமென்று அங்கீகரிக்க வேணும். இப்படிப்பட்ட தப்பறை விசேஷத்துக்குச் சம்மதிக் கிறவன் மகா கெட்ட விஷத்தினாலே பிழைப்பு வந்ததென்றும், அமிர்த ரூபமான சஞ்சீவியினாலே மரணம் பிறந்ததென்றும் பிச்சு நிமித்தமாகத் தித்திப்பும், சர்க்கரையினாலே கைப்பும் பிறந்ததென்றும் அங்கீகரிச்சதுக்குச் சமானம்.

(vii) சுவர்க்கச் சிற்றின்பத்தின் இயற்கை உயர்ந்தது அல் லது தாழ்ந்தது. இதுதவிரத் தெளிவற்றபாவிகளினாலே கற்பிக்கப் பட்ட சுவர்க்கத்திலே அனுபவிக்கப்படுகிற போகத்தின் சுபாவ சுரூபத்தை ஆராய்ஞ்சு கொண்டோமானால், அப்படிப்பட்ட கதைகளைக் கற்பிக்கிறபேர்கள் 'பொய்யானாலும் பொருந்தச் சொல்' என்கிற ஞாயத்தைப்பாராமற் சகல ஞாயத்துக்கும் விருத்தமாக ஒன்றுக்கொன்று ஒவ்வாத விபரீத விசேஷங்களை அறிவின் குறைச்சலினாலே கற்பித்தார்களென்று சொல்லக்கட வோமொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால் சுவர்க்கத்திலே யிருக்கிற மைத்துன போகமானது ஒன்றிற் பூமியிலே யிருக்கிற போகத்தைக் காட்டிலும் கனசுகத்தைக் கொடுக்கிறதென்று அங்கீகரிக்க வேணும், அல்லது சுவர்க்கத்திலே பண்ணப்படுகிற மைதுனத்தினுடைய சுகமானது பூமியிலே பண்ணப்படுகிற மைதுனத்தினுடைய சுகத்துக்குச் சமானமாயிருக்கிறதென்று சொல்லவேணும்.

இதிப்படியிருக்கையிலே, சுவர்க்க சம்பந்தமா யிருக்கிற மைத்துனத்தின் சுகமானது பூமியிலே யிருக்கிற மைத்துன போகத்தின் சுகத்தைக் காட்டிலும் கனமாயிருக்கிறதென்று அங்கீகரித்தோமானாற், சுவர்க்கத்திலேயிருக்கிற போகத்தின் சுகத்தை அனுபவிச்சுக்கொண்டு வருகிற தேவேந்திரன் முத லான தேவர்களும் இரம்பை மேனகை இவர்கள் முதலான ஸ்திரீ களும், பூமியிலே யிருக்கிற ஸ்திரீ புருஷர்களோடே பண்ணப் படுகிற மைத்துனத்தின் சுகத்தை அபேக்ஷித்துத் தேடிப் பண்

ணினபோதே, தேவேந்திரன் முதலான தேவர்கள் முழுப் பயித்தியக்காரர் என்றுங் கனமான அக்கிரமத்தைப் பண்ணின பேர்களென்றும் அங்கீகரித்ததுக்குச் சமானம். அதெப்படியென்றால் ரூபலாவண்ணியமுள்ள ஸ்திரீகளோடேயும், புருஷர்களோடேயும் சங்கம் பண்ணிக்கொண்டு வருகிற புருஷர்களும் ஸ்திரிகளும் அருவருப்புள்ள நாயின் மைத்துனத்தை இச்சித்துப் பண்ணினால் அப்படிப்பட்ட பேர்களுக்கு சரியாகத் தேவேந்திரன் முதலான பேர்கள் வெறுக்கப்படத்தக்க பாவிகளாய் இருக்கிறார்களென்று சொல்லத்தகும்.

அல்லது சுவர்க்கத்திலே பண்ணப்படுகிற மைத்துனத்தின் சுகமானது பூலோகத்திலே மனுஷராலே அனுபவிக்கிற போகத்தின் சுகமானதுக்குச் சமானமானாலுங் கொஞ்சமென்கிலும்[1] என்றுசொன்னோமானால், சுவர்க்கத்துக்குப்போய் அவ்விடத்திலே பண்ணப்படுகிற மைத்துனத்தின் சுகத்தை இனிமேல் அனுபவிக்கிறதுக்குப் பூமியிலே திரிகிற மனுஷனானவன் இப்போது தர்ம தானங்கள் முதலான புண்ணிய சரித்திரங்களைப் பண்ணுகிறதினாலே மகாமகாப்பட்ட திரவிய சேதங்களையுங் கூடின பிரயாசைகளையும் ஏன் படவேணும்? அதேதென்றால், சுவர்க்கத்திலே இனிமேல் வரத்தக்க பலனைப் பார்க்கும்போது, பூமியிலே திரிகிற காமாதுரனானவன் இப்போது தானே பலபல அருவருப்புள்ள வெள்ளாட்டிகளோடே திரிந்ததினாலே திரவிய சேதங்களும் பிரயாசங்களும் படாமற் சுவர்க்கத்தின் பலனை அடைந்து அனுபவிக்கலாம் என்கிறதுக்குத் தப்பாது.

**24·10 நல்வினைப் பயனுகச் சுவர்க்கம் கடவுளால் படைக்கப்பட்டவில்லை.** கடைசியாய் அறிய வேண்டிய விசேஷமாவது: சுவர்க்க சம்பந்தமா யிருக்கிற தெளிவற்ற பாவிகளினாலே கற்பிக்கப்பட்ட எண்ணப்படாத தப்பறை விசேஷங்களுக்குள் சிறிதுகளை மாத்திரம் இந்தப்பாடத்திலே சொல்லிக்காட்டி அதுகளை [2]ஆக்ஷேபம் பண்ணினப்போலே யாச்சுது. ஏனென்றால் இத்தொகைப்பட்ட வேறே அனேகங் கதைகளை சுவர்க்க விஷயத்திலே மோக பிராந்தியினாலே மதிகெட்ட காமா துரராயிருக்கிற பேர்கள் கற்பித்து எழுதி வைத்தார்கள். அப்படிப்பட்ட கதைகளெல்லாஞ் சொல்லிக்காட்டி ஒவ்வொன்றாய் ஆக்ஷேபம் பண்ணினோமானால், அநேக நாள் முடிக்கப்படாத பிரசங்கத்தின் நிமித்

1 தாழ்ந்தது 2 மறு

தமாக வியர்த்த பிரயாசைப் பட்டாப் போலேயாகும். அதே தென்ருற் கரையேறுகிறதுக்குத் தாற்பரியமுள்ளவர்கள் இந்தப் பாடத்திலே நம்மாற் சொல்லப்பட்ட விசேஷ ஞாயங்களைச் [1]சல மில்லாமற் பத்தும் பத்தாய்ப் பராமரிச்சது ஆராய்ஞ்சு கொண்டார்களானுற் புண்ணியாத்துமாக்களாயிருக்கிற பேர்கள் பூலோகத்திலே பண்ணின மகாமகாப்பட்ட புண்ணியங்களுக்காக ஆன பலனை அனுபவிக்கிறதுக்குத் தெளிவற்ற பாவிகளினுலே கற்பிக்கப்பட்ட பரலோக சம்மந்தமா யிருக்கிற சுவர்க்க ஸ்தலத்தைச் சகல நன்மை சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் கட்டளையிட்டருளினுரென்று கன பாவமில்லாமற் சொல்லவுங் கருதவுங் கூடாதென்று அற்பமாகிலுஞ் சந்தேகமில்லாமற் கண்டுபிடிப்பார்கள் என்கிறதுக்குத் தப்பாது. இந்தச் சந்தேகத்தை நிச்சயம் பண்ணினவன் சுவர்க்க சம்மந்தமாகக் கற்பிக்கப்பட்ட கதைகள்; பாவத்தை மனுஷனுனவன் கட்டிக்கொள்ளுகிறதுக்கும் நரகத்திலே விழுகிறதுக்கும் உபயோகமாயிருக்கிறதென்று ஸ்திரமாக அறிந்துகொள்ளுவான். ஆதலாலே, அதுகளெல்லாம் வெறுக்கப் படத்தக்க அபத்தத்தப்பறை விசேஷங்களாயிருக்கிறதென்று இருமனப்படாமல் எண்ணிக் கொண்டு அதுகளைச் சட்டைப் பண்ணுமல் இருக்கக்கடவான்.

இருபத்தி நாலாம் பாடம் முற்றும் (இ. சாசுய)[2]

## இருபத்தஞ்சாம் பாடம்

**25·1: ஆன்மாவின் முடிவு சுவர்க்கம் அன்று:** ஆத்துமத்துக்கு வரலான குரையற்ற பாக்கியமானது பூலோகத்திலே இருக்கிற அயிஸ்வரிய போக சுகங்களினுலே வரமாட்டாதென்று இருபத்திமூன்ரும் பாடத்திலே ஒப்புவித்ததினுலே, ஆத்துமத்தினுடைய அவதியாகிற ஒடுக்கமானது பூமியிலே உண்டாயிருக்க மாட்டாதென்று ஒப்புவித்தாப்போலே ஆச்சுது. தேவேந்திர பதமாகிற சுவர்க்கத்தைப் பத்தும் பத்தாய் விசாரிக்கும்போது அதிலே ரம்பை, மேனகை முதலான வேசிகளோடே பண்ணப்படுகிற மைத்துனமானது புண்ணியவான்களான பேர்கள் இவ்வுலகத்திலே பண்ணிக்கொண்டு வருகிற புண்ணியங்களுக்குப் பலனுயிருக்கிறதென்று சொல்லுகிறது என்கிறது ஞாயமுள்ள கிரமத்துக்கு முழுதும் விருத்தமாயிருக்கிறதென்று இருபத்து நாலாம் பாடத்திலே பலபல ஞாயங்களைக் கொண்டு ஒப்புவிச்ச போதே, சுவர்க்கபதமானது அறியாத பாவிகளினுலே கற்பிக்கப்

1. பிடிவாதம் 2. 460

பட்ட முழுத்தப்பறையாய் இருக்கிறதென்று சந்தேகமில்லாமல் நம்மால் ஒப்புவிக்கப்பட்டது என்கிறதுக்குத் தப்பாது. சுவர்க்கமானது கற்பிக்கப்பட்ட தப்பறையா யிருக்கிறபோதே, ஆத்துமமானது தனது அவதியையும் ஒடுக்கத்தையும் அதிலே அடையலாமென்று முழு மதிகெட்டவன் சொன்னுற் சொல்லுவாளுெழியப், புத்திமானுயிருக்கிறவன் சொல்லமாட்டான்.

**25·2: வைகுண்டம், கைலாசம், பிரமலோகங்கள் ஆன்மாவின் அவதியல்ல.** சுவர்க்கந்தவிர அந்தந்த மதத்தை அனுசரிக்கிறபேர்கள் 'வைகுண்டம்' என்றுங் 'கைலாசம்' என்றும் 'பிரமலோகம்' என்றும் அங்கிகரித்துக்கொண்டு வருகையிலே, அந்தந்த மதத்திலே ஆத்துமத்துக்கு அவதியும் ஒடுக்கமும் கிடைக்குமென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அப்படியே, வைஷ்ணவ மதத்தை அங்கீகரித்துகொண்டு வருகிறபேர்கள் ஆத்துமம் குறையற்ற பாக்கியம் அனுபவிக்கிறதுக்கு வைகுண்டமானது ஆன ஸ்தலமென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். சைவ மதத்துக்குட்பட்ட பேர்களோவென்றால். கைலாசத்திலே ஆத்துமமானது தனது அவதியாகிற குறையற்ற பாக்கியத்தை அனுபவிக்கிறதென்று அங்கீகரித்துக்கொண்டு வருகிறார்கள். [1]பதினெட்டுப் புராணங்களிலேயும் சொல்லப்படுகிற விசேஷ வர்த்தமானங்கள் பரஸ்பர விருத்தமாய் இருந்தாலும், அதுகளுக்குண்டான விருத்த மேரைகளை விசாரியாமற் புத்தியாகிற கண்ணை மூடிக்கொண்டு அதுகளெல்லாம் ஒப்புக்கொள்ளத்தக்கவைகளாய் இருக்கிறது என்று தனது மதத்தின்படியே சிலர் ஸ்தாபித்துகொண்டு வருகிறார்களே, அப்படிப்பட்ட மதிகெட்ட அஞ்ஞானிகள் பிரமலோகத்திலேயும் வைகுண்ட முதலான மோக்ஷவகைகளிலேயும் சீவனுனது தனது குறைபற்ற பாக்கியமாகிற அவதியை அடைந்துகொண்டுவருகிறதெனறு விசுவாசித்துக்கொண்டு வருகிறார்கள். இதிலே [2]பராமரிசிக்கத்தக்கதாவது: அவனவன் தன்து மதத்தை அனுசரித்து அந்தந்த ஸ்தலத்தை வர்ணிக்கிறதிலே ஞாயத்துக்கும் புத்திக்கும் ஒவ்வாத பலபல விசேஷங்களையும் வியர்த்த கதைகளையுங் கற்பிச்சுக்கொண்டு வருகிறுன் என்கிறதுக்குத் தப்பாது. மீளவும் அந்தக் கதைகளையெல்லாம் பத்தும்பத்தாய் விசாரித்தோமானால், அதுகளெல்லாம் பிரத்தியக்ஷமாய்ப் பரஸ்பர விருத்தங்களாய் இருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. இது இப்படியிருக்கையிலே, அந்தந்த மதானுசர

1, எவை? 2 ஆராய

ணத்தின்படியே அனேகம் அபத்த விசேஷங்களை அங்கீகரிக்கிற வனுக்கு அறிவின் குறைச்சல் உள்ளவனென்கிற நாமஞ் செல்லு மென்று சொல்லவேண்டியிருக்கையிலே, ஒன்றோடு ஒன்று ஒவ்வாதிருக்கிற அப்படிப்பட்ட கதைகளையெல்லாம் அங்கீகரிக்கிற பேர்கள் எப்படிப்பட்ட புத்திமான்களென்றும், அவர்களுக்கு எந்த நாமகரணம் பண்ண வேணுமென்றும், பக்ஷபாதமில்லாத புத்திமானானவன் [1]பரிச்சேதம் பண்ணக்கடவான். ஆனபடியினாலே, இதெல்லாம் நாம் விட்டு, இப்படிப்பட்ட ஸ்தலங்களிலே ஆத்துமத்தினாலே தனது அவதியும் ஒடுக்கமும் அடையப்படுமோ இல்லையோவென்று இந்தப் பாடத்திலே கொஞ்சத்துக்குள்ளே அடைவாகக் காட்டக்கடவோம்.

**25.3 சிற்றின்பம் தவிரப் பேரின்பம் அவ்விடங்களில் இல்லை**

**(1) தம் மனையவரிடம் தம் மகிழ்ச்சியைக் காண்போர் ஆன்மாவின் அவதி ஆகார்.** 'விகுண்ட' என்கிற நாமத்தைக் கொண்டிருக்கிற ஸ்திரீயினுடைய மகனுக்கு 'வைகுண்டன்' என்கிற பேருண்டாச்சுது. அப்படிப்பட்ட வைகுண்டனென்கிற விஷ்ணு லக்ஷ்மியோடே கூட வாசமாயிருக்கிற ஸ்தலமானது வைகுண்டமென்று சொல்லப்பட்டுது. இப்படிக்கொத்த வைகுண்டத்திலே ஆத்துமமானது குறையற்ற பாக்கியமென்கிற அவதியை அடையமாட்டாதென்று பலபல ஞாயங்களினால் ஒப்புவிக்கலாம் என்றிருக்கையிலே, அதுகளை யெல்லாம் ஒரு கெட்டி ஞாயத்தினாலே இந்தச் சத்திய விசேஷத்தை ஒப்புவிக்கக்கடவோம். அப்படிப்பட்ட ஞாயத்தினாலேதானே ருத்திரன் பார்வதியோடே கூடி யிருக்கிற கயிலாசத்திலேயும் கயிலாசத்துக்கொத்த மற்றுமுண்டான கற்பிக்கப்பட்ட ஸ்தலங்களிலேயும் அவதி ரூபமான குறையற்ற பாக்கியமானது மனுஷசீவனுக்கு வரமாட்டாதென்று கண்டுபிடிக்கலாயிருக்கும். அதெப்படியென்றால், அவதி ரூபமான (குறையற்ற) பாக்கியத்தைச் சீவனைது அடையப் பண்ணுகிறதுக்கு வல்லவனாயிருக்கிறவன் சகல நன்மை சொரூபமாயிருக்க வேணும் என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால், அவனவன் தனக்குண்டானதைப் பிறத்தியானுக்குக் கொடுக்கத்தக்கதாகச் சமர்த்தனாய் இருக்கிறானென்று சொல்லத்தகுமொழிய, அவனவன் தனக்கு இல்லாததைப் பிறத்தியானுக்குக் கொடுக்கலாமென்று முழுப் பயித்தியக்காரன் சொன்னால் சொல்லுவானொழியப் புத்திமானாயிருக்கிறவன் சொல்லவும் கருதவுமாட்

[1] தீர்மானம்

டான். இந்த ஞாயத்தைப் பத்துப்பத்தாய் விசாரித்தோமாகு குறையற்ற பாக்கியமுள்ளவன் ஒன்றும் குறையில்லாமல் மட்டில்லாத சகல நன்மை சுரூபியாயிருக்க வேணும் என்கிற துக்குச் சந்தேகப்படத்தகாது. அப்படிப்பட்டவர் பிறதிப்பட்ட வஸ்துவிடத்தில் நின்று சுக முதலான நன்மை விஷயங்களிலே ஒன்றுனுலும் அடையமாட்டாரென்று சொல்லக்கடவோம்.

இது இப்படி இருக்கையிலே, புராண முதலான பிரபந்தங்களிலே சொல்லப்படுகிற விசேஷங்களை அங்கீகரிச்சோமானுல், லக்ஷிமி பார்வதி யென்கிற இரண்டு ஸ்திரிகள் முகாந்திரமாக விஷ்ணு ருத்திரன் இவ்விருவரும் ஆனந்தத்தையும் மற்றுண்டான நன்மையையுங் கொண்டிருக்கிறுர்களென்றும், அப்படிப்பட்ட ஸ்திரிகளல்லாமல் நன்மை விஷயத்திலே அவர்கள் இரண்டு பேரும் முழுதுங் குறையுள்ள பேர்களாய் இருக்கிறுர்களென்றுஞ் சந்தேகமற அங்கீகரிக்கக்கடவோம். ஸ்திரிகள் நிமித்தமாக அப்படிப்பட்ட பேர்கள் சகல நன்மையும் உடையவர்களாய் இருக்கிறபோதே, அவர்கள் இரண்டு பேருக்கும் தங்களால் குறையற்ற பாக்கியவான்கள் என்கிற நாமமானது செல்லுமென்று சொல்லவும் எண்ணவுங்கூடாது. ஆதலாலே, அவதி ரூபமான குறையற்ற பாக்கியமானது மனுஷீவனுக்கு அவர்களாலே கொடுக்கலாமென்று மதிகெட்டவனுனுலுஞ் சொல்ல மாட்டான்.

(2.) சுவர்க்கம் இல்லை என்ற ஞாயம் வைகுண்ட கைலாசத்துக்கும். இது தவிர, அப்படிப்பட்ட விஷ்ணு ருத்திரனுகிய இருவருக்கும் ஆனந்தம் முதலான நன்மைகளெல்லாம் ஸ்திரிகள் முகாந்திரத்தினுலே வந்திருக்கிறதென்று அவர்களுடைய புராண வழியாய் அங்கீகரிக்கச்செய்தே, வைகுண்டத்திலேயுங் கயிலாசத்திலேயும் மற்றுமுண்டான ஸ்தலங்களிலேயும் விஷ்ணு ருத்திரன் இவர்களைச் சென்றடைஞ்ச பேர்கள் ஸ்திரீ சங்கத்தினுலே ஆனந்த சுக முதலான நன்மைகளை அடைவார்களென்று ஒப்புக்கொள்ளத்தக்க விசேஷமாகும். இதிப்படிச் சொல்லும்போது, தேவேந்திரபதம் வெறுமனே கற்பிக்கப்பட்ட ஸ்தலமென்று எந்த ஞாயங்களினுலே இருபத்தி நாலாம் பாடத்திலே நம்மால் ஒப்புவிக்கப்பட்டுது, அந்த ஞாயங்கள்தானே வைகுண்டம் கயிலாசம் இதுகள் முதலான ஸ்தலங்கள் சர்வேசுரனை அறியாத பேர்களினுலே வெறு

மனே கற்பிக்கப்பட்டதுகளாய் இருக்கிறதென்று கண்டுபிடிக்கத் தக்கதாக மிகவும் உதவும் என்கிறதுக்குச் சந்தேகப்படுகிறதுக்கு கணக்கில்லை.

(3) **இவ்வுலகிலுள்ள கைலாசமும் வைகுண்டமும் மறுமைப் பலனளிக்கா.** இதன்றியே, அந்தந்த ஸ்தலத்துக்கடுத்த விசேஷ கதைகளையும் அதுகளை வர்ணிக்கிற மேரைகளையும் பார்த்தோமானால், பூமியிலே உண்டான ஸ்தலங்களுக்குள்ளே வைகுண்டமுங் கயிலாசமும் உண்டாயிருக்கிற ஸ்தலமென்று சொல்லப்படும் என்கிறதுக்குத் தப்பாது. இது நிமித்தமாக முன் சொல்லப்பட்ட ஞாயங்களினாலே ஆத்துமத்தினுடைய ஒடுக்கமாகிற கடைசி அவதியானது அப்படிப்பட்ட ஸ்தலங்களிலே உண்டாக மாட்டாது என்று ஒப்புக்கொள்ளத்தக்கதாகும். இதுதவிர, விஷ்ணுவும் ருத்திரனும் மெய்யான சர்வேசுரனாயிராமல் கற்பிக்கப்பட்ட தேவர்களுக்குள்ளே அடங்கின தேவர்களாய் இருக்கிறார்களென்று ஸ்திரமாக எளிசாய் ஒப்புவிக்கலாம் என்றிருக்கையிலே, அவர்களுக்கு இதுகள் ஆன ஸ்தலங்ளென்று கவீசுரராலே கற்பிக்கப்பட்டதுகளாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கத் தக்க விசேஷமாகும். அவ்வண்ணமே வைகுண்ட ஸ்தலத்தை அவரவர்கள் வர்ணிக்கிறபோது, இவ்விடத்திலே காவேரி நதியானது காணப்படுகிறாப்போலே அவ்விடத்திலே 'விரசா' நதிஓடுகிறதென்றும், இவ்விடத்திலே இருக்கிற 'ரங்க மந்திரம்' ஆனது வைகுண்டத்துக்குச் சமானமாய் இருக்கிறதென்றும், இது முதலான விசேஷங்களை அவரவர்கள் சொல்லி, வேறே ரகசியமான அர்த்தத்தை உத்தேசியாமல் வைகுண்டத்தை வர்ணிக்கிறதினால் வைகுண்டமானது பூமியிலேயிருக்கிற ஸ்தலங்களுக்குள்ளே அது கற்பிக்கப்பட்ட ஒரு ஸ்தலமென்று அங்கீகரிக்கத்தக்கதாகும். இந்தடைவாகக் கயிலாச பருவதத்தை இராவணன் என்கிறவன் பிடுங்கப்போய் அதை அசைத்தானென்றும், அது நிமித்தமாகப் பார்வதி பயந்து ருத்திரனை ஆலிங்கனம் பண்ணினாளென்றும், இது முதலான வியர்த்த விசேஷங்களை அவரவர்கள் சொல்லுகிறபோதே, இந்த விசேஷங்களெல்லாங் கற்பிக்கப்பட்ட கதைகளாய் இருக்கிறதென்று சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல.

(4) **குறையற்ற பாக்கியம் அங்கில்லை.** இதன்றியே இப்படிப்பட்ட ஸ்தலங்களுடைய [1]சுபாவ சுரூபமானது நன்றாய் விசாரிக்கப்பட்டால் மோக்ஷமாகிற குறையற்ற பாக்கியத்தைச் சீவனானது அனுபவிக்கிறதுக்கு இதுகள் ஆன ஸ்தலங்களாயிருக்

1 தன்மை, இயல்பு

கிறதென்று மோக்ஷத்தின் சுரூபத்தை அறியாத மிலேச்சன் சொன்னாற் சொல்லுவானொழிய, மோக்ஷத்தின் மகிமையை மெய்யாகவே அறிஞ்சவன் இப்படிப்பட்ட ஸ்தலங்களைச், சீவனானது மோக்ஷமென்கிற குறையற்ற பாக்கியத்தை அனுபவிக்கிறதுக்கு ஆன ஸ்தலங்களென்று சொல்லவுங் கருதவுமாட்டான். அதேதென்றால், சகல நன்மைகளினுடைய விஷயங்களின் குறைபற்ற [1]பரிபூரண பாக்கியத்தை அனுபவிக்கிறதுக்கு ஆன ஸ்தலத்தைப் பார்க்கும்போது, அது நதி முதலான பொருள்களினாலே அலங்கரிக்கப்படுமென்றும், ஒருத்தனாலே அப்படிப்பட்ட ஸதலங்கள் அசைக்கவும், அவ்விடத்திலே இருக்கிற பேர்களுக்குப் பயம் வருத்திவிக்கலாம் என்றும் முழுமதிகெட்டவனானாலும் எண்ணவுஞ் சொல்லவும் மாட்டான். மோக்ஷமாகிற பரமானந்தத்தின் மேரையை முப்பத்திரண்டாம் பாடந் துவங்கி முப்பத்தஞ்சாம் பாடம் பரியந்தம் நாம் சொல்லும்போது, இந்தச் சத்திய விசேஷமானது வெளியாகும் என்கிறதுக்காக, இவ்விடத்திலே இந்த வர்த்தமானத்தை எடுத்துக் காட்டினது போதும்.

25.4 அஞ்ஞானிகளின் சுவர்க்கம் மோட்சமன்று. இருபத்தினாலாம் பாடத்திலேயும் இந்தப் பாடத்திலேயும் இற்றைவரைக்கும் நம்மாற் பண்ணப்பட்ட பிரசங்கத்தைப் பத்தும் பத்தாய் விசாரிச்சோமானால், மோக்ஷமாகிற குறைபற்ற பாக்கியத்தைச் சிலர் சொல்ல வேணும் என்றிருக்கையிலே, அபத்தவார்த்தைகளை பிரயோகிக்கிறார்களென்று சந்தேகமறக் கண்டுபிடிக்கலாயிருக்கிறது. அதேதென்றால் தேவேந்திரபதமாகிற சுவர்க்கமானது ஸ்திரீ போகத்தையுஞ் சந்தன முதலான பரிமளங்களினாலேயும் புஷ்பங்களினாலேயும் வருகிற சுகத்தையும் அனுபவிக்கிறதுக்கு தெளிவற்ற பாவிகளினாலே கற்பிக்கப்பட்ட ஸ்தலமாயிருக்கும் போது, மோக்ஷமென்கிற குறையற்ற பாக்கியத்தைச் சொல்ல வேண்டியிருக்கையிலே, சுவர்க்கமென்கிற நாமதேயத்தைப் பிரயோகிக்கிறது என்கிறது மிகவும் [2]அனுச்சிதமாய் இருக்கிறதென்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது. துலுக்கருடைய மதமானது, அநேக ஸ்திரீகளோடே கூடப்போகிறதிலே மோக்ஷமாகிற பாக்கியமானது அடங்கியிருக்கிறதென்று விதிக்கிறதினால், அப்படிப்பட்ட துர்மதத்தை அங்கீகரிச்சுக்கொண்டு வருகிற அசுத்த... [3]ஆகிற தெளிவற்ற பாவிகள் மோக்ஷத்தினுடைய ஆனந்தம் இப்படிக்கொத்தது என்று அபத்த விசுவாசத்தினால அங்கீகரிக்கிறார்களென்றும், மோக்ஷமென்கிறபாக்கியத்தைச் சொல்ல வேண்

1 விதவிதமாகப் (பா. பே.) 2 பொருத்தமற்றது 3 மிருகம்

டியிருக்கையிலே 'சுவர்க்கம்' என்ற [1]சத்தத்தை அவர்கள் பிரயோகிக்கிறார்களென்றும் ஆச்சரியப் படுகிறதுக்குக் கணக்கில்லை. அதேதென்றால்; மோக்ஷத்தின் சுபாவசுரூபத்தை அறியாமல் அவர்களால் அங்கீகரிக்கப்படுகிற மோக்ஷமேரையைச் சுவர்க்கம் என்கிற பதத்தின் அர்த்தமானது வெளிப்படுத்தும் என்கிறதினால் அவர்களால் அபத்தமாகக் கற்பிக்கப்படுகிற இல்லாத மோக்ஷத்தின் வகைக்குச் சுவர்க்கமென்கிற நாமத்தின் அர்த்தமானது ஒத்திருக்கும் என்கிறதுக்குத் தப்பாது.

25.5: மோட்சத்துக்குச் சுவர்க்கம் என்ற பெயர் செல்லாது. [2]தேவோக்கித்த வேதத்தை அனுசரிக்கிற பேர்களோவென்றால்' குறையற்ற பாக்கியமாகிற மெய்யான மோக்ஷமானது சகல நன்மை சொரூபமாயிருக்கிற பராபர வஸ்துவின் [3]பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலேயும் தேவ விஷயக [4]பரிபூரண பத்தியினாலேயும் அத்தாலே வருகிற [5]பரமானந்தம் முதலான சகல நன்மைகளுடைய அனுபவத்திலேயும் அடங்கியிருக்கிறதென்று அங்கீகரிக்கும்போது, மனுஷருக்கும் நாய் நரிகளுக்கும் [6]சாதாரணமாய் இருக்கிற ஸ்திரீபோக முதலான நீச சுகங்களை அனுபவிக்கிறதிலே மனுஷனுக்கு வரத்தக்க பரலோக சம்பந்தமாயிருக்கிற அவதி ரூபமான பாக்கியமானது அடங்கியிருக்கிறதென்று சொல்லக்கூடாது. அதேதெனனால், தெளிவற்ற பாவிகள் ஞாயத்துக்கும் சத்தியத்துக்கும் விருத்தமேரையாக [7]வெறுமனே கற்பித்த அப்படிப்பட்ட பொய்யான பாக்கியத்துக்கும் அதினுடைய அனுபவத்துக்கான ஸ்தலத்துக்கும் அவர்கள் இட்ட 'சுவர்க்கம்' என்கிற நாமமானது மெய்யான மோக்ஷபரமானந்தத்துக்குச் செல்லும் என்று 'சுவர்க்கம்' என்கிற நாமத்தின் அர்த்தத்தை அறியாதவன் சொன்னால் சொல்லுவானொழிய சுவர்க்கமென்கிற சத்தத்தின் அர்த்தத்தை அறிந்தவன் மெய்யான மோக்ஷத்தைச் சொல்லுகிறதுக்குச் சுவர்க்கமென்கிற பதத்தைப் [9]பிரயோகிக்க மாட்டான்.

25.6 இதற்கு எதிர்ப்பு இவ்விடத்திலே நம்மாலே ஒப்புவிக்கப்படுகிற சத்திய விசேஷத்தைச் சிலபேர்கள் ஒரு பிரத்தியுத்தாரத்தினாலே தட்டிப்போடத்தக்கதாக [9]வருந்துகிறார்கள். இந்தப் பிரத்தியுத்தாரத்தைப் பத்தும்பத்தாய் விசாரிக்கப்பட்டால் [10]எதிராளிகளுடை தாற்பரியமானதுத் அதாலே நிற்கமாட்

1 சொல்லை 2 கடவுள் வெளியிட்ட 3 நேர் காட்சி
4 நிறைந்த அன்பு 5 மோட்ச இன்பம் 6 பொதுவாய்
7 சும்மா 8 வழங்க 9 முயல்கிறார்கள் 10 adversaris,

டாதென்று எளிசாய்க் கண்டுபிடிக்கலாம். இவர்கள் சொல்லுகிற பிரத்தியுத்தாரமாவது:

'சுவர்க்கம் என்கிற நாமமானது தேவேந்திர பதவிக்கு அஞ்ஞானிகள் இட்ட நாமமாய் இருந்தாலும், அந்தச் சப்தத்தைத்தானே மெய்யான பாக்கியத்துக்குத் தேவோக்கித்த வேதத்தை அனுசரிக்கிற பேர்களாயிருக்கிற நாம் இட்டோம என்கிறதினால், மோக்ஷமென்கிற பாக்கியத்தைச் சொல்லுகிறதுக்குச் சுவர்க்கமென்கிற நாமத்தைக் குற்றமில்லாமற் பிரயோகிக்கலாம் என்றெண்ணிக் கொண்டிருக்கிறோம்." இந்தப் பிரத்தியுத்தாரமானது நானாவிதமான குறையுள்ளதாய் இருக்கக்கொள்ள, எதிராளிகளுடைய தாற்பாரியத்தை ஒப்புவிக்கிறதுக்கு வல்லதாயிராது. அதெப்படியென்றால், ஏறக்குறைய இருநூறு [1]காத வழியுள்ள ராச்சியத்திலே வாசமாயிருக்கிற கோடாகோடி மனுஷரான பேர்களுடைய [2]சங்கேதத்தினாலேயும் இவடத்திலே வழங்கிற வேதசாஸ்திரிகளுடையஎண்ணப்படாத, உக்தங்களினாலேயுஞ் 'சுவர்க்கம்' என்கிற நாமமானது ஸ்திரீ போகம் முதலான நீச சுகங்களைப் பிரதானமாய்ச் சொல்லும் போது, பத்தஞ்சு பட்டிகளுக்குள்ளே பிழைக்கிற பிரசைகளுடைய சங்கேதத்தினாலே சுவர்க்கம் என்கிற நாமமானது வேறே அர்த்தத்தைக் கொண்டிருக்கவும், மோக்ஷ பாக்கியத்தைச் சொல்லவும் மாட்டாது.

25.7 கப்பித்துலு என்ற நூலிலிருந்து மறுமொழி: இந்தச் சத்தியத்தை இப்படிப்பட்ட கொஞ்சப் பிரசைகளுக்குள்ளே வழங்கிற [4]பிரபந்தத்தினாலே கண்டுபிடிக்கக்கடவோம். அதேதென்றால், மோக்ஷ பாக்கியத்தை வர்ணிக்கிறதிலே சுவர்க்கம் என்கிற பதப்பிரயோகத்தின் நிமித்தமாக மோக்ஷத்துக்குக் காரணமாயிருக்கிற பராபர வஸ்துவின் பிரத்தியக்ஷ தெரிசன முதலான மகிமைகளை நினையாமற், கற்பிக்கப்பட்ட தேவேந்திர பதவியிலேயிருக்கிற நட்டுவரும், வேசிகளுடைய ஆடல் பாடலும், கட்டில் சப்பிர மஞ்சங்களிலே ஊஞ்சலாடுகிறதும், வேசிகளுடைய அரையிலே இருக்கிற மணிகள் சத்திக்கிறதும், அரம்பை முதலான வேசிகளும், அஞ்சு கற்பக விருக்ஷங்களும், மன்மதத் துவசமாகிற மகரக்காலும் , இத்தொகைப்பட்ட இல்லாத அபத்த விசேஷங்களைக் கவீசுரனாயிருக்கிறவன் சொல்லி வர்ணிச்சானே

1 1:7½நாழிகை வழி; சுமார் 10கல் 2 வழக்கு
3 உக்தம்-கூற்று (தத்துவம் பா. பே.) 4 நூல்

ழிய மற்றப்படியல்ல. இந்த அபத்த விசேஷங்களெல்லாம் கவிசுரனுயிருக்கிறவன் எழுதினதுக்குச் சுவர்க்கம் என்கிற பதத்தின் பிரயோகமானது காரணமாயிருந்தது என்கிறதுக்குச் சந்தேகப்படக் கணக்கில்லை. இதெல்லாம் விஸ்தாரமாக அறியத்தக்க ஆசையுள்ளவன்[1] 'கற்பித்தல்' என்கிற பரபந்தத்திலே பனிரண்டாம் விருத்தந்துவக்கி அப்பால் வாசிக்கக்கடவான். அதிலே சொல்லப்பட்டதிலே இரண்டு மூன்று [2]சூசனையாகச் சொல்லிக் காட்டுகிறோம். அதேதென்றால்:

"அருகெல்லாம் பவழச்செங்கால்,
அடுக்கெல்லாம் மணியின் பாங்கால்
உருவெல்லாம் வயிரத்தின்கால்
உறுப்பெல்லாம் மகரத்தின்கால்
தெருவெல்லாம் கொட்டுமுத்தின்,
சிறப்பெல்லாங் காட்டும்பித்தி
மருவெல்லாம் வீசுமாடம்,
வளமெல்லாம் பேசுங்கூடம்" (1)

"ஆடரங்கிணங்குஞ்சாலை, அணியரங்கிணங்குஞ்சோலை
வீடரங் கிணங்கும்பாயல், வெளியரங் கிணங்குமேடை
நீடரங் கூசலாடும், நிறைமணித் தாமவோசை
பாடரம் பையர்கள் நாதகீதபண்[3] அமுதவோசை" (2)

"சந்தன விமான வீதி, தண்பனி விமான வீதி,
சுந்தர விமான வீதி, துன்புரு விமானவீதி
அந்தர விமானவீதி, யமந்தர விமான வீதி
நந்தர விமான வீதி, நமந்தன விமான வீதி." (3)

இத்தொகைப்பட்ட வேறே அபத்த விசேஷங்களைக் கவிசுரனுய் இருக்கிறவன் எழுதிவைத்ததுக்குச் சுவர்க்கம் என்கிற சத்தத்தின பிரயோகமானது முன் சொன்னப்போலே காரணமாயிருந்துதொழிய மறறப்படியல்ல. ஆதலாலே பத்தஞ்சு பட்டியிலே யிருக்கிற பிரசைகளுடைய சங்கேதமானது எல்லாருக்கும் தோற்றுவிக்கிற அர்த்தத்தைப் [4]பேதிப்பிக்கவுமில்லை; நாலு பிரசைகள் சகல லோகருக்கு விருத்தமாக இந்த அர்த்தத்தைக் கற்பிச்சதினுற், சுவர்க்கம் என்கிற சத்தமானது மோக்ஷத்தைச் சொல்லுகிறதிலே பிரயோகிக்கலாமென்று அங்கீகரிக்கிறதுக்கு இடமுமில்லை.

1 Capitolo (Apologia. ch. 3) இந்நூல் அகப்படவில்லை. 2 சான்றாக.
3 பண்ணொலி (பா.) 4 மாற்றுவது

25.8 கடவுளுக்கடுத்த மோட்சத்தைக்குறிக்க சுவர்க்கப் பேச்சே வேண்டா. இதுதவிரச், சருவேசுரனுக்கடுத்த விஷயம் என்னப்பட்ட யாவும் நிர்மல புண்ணிய சுரூபமாய் இருக்கக் கொள்ள. அப்படிப்பட்ட விஷயங்களைச் சொல்லுகிறதிலே ஸ்திரீ போக முதலான வியர்த்த விளையாட்டுகளை [1]இலவலேசமானாலும் [2]ஆரோபிக்கக்கவும [3]கற்பிக்கவும் ஒண்ணாது. ஆதலாலே, ஒரு பொருளைச் சொல்லி வேறேயொரு அர்த்தத்தை உத்தேசிக்கிற [4]உபோத்காத அலங்காரத்தினாலே மோக்ஷராச்சியத்தை வர்ணிக்கிறதிலே மாணிக்க முதலான அலங்காரங்களைச் சொல்லலாமென்று அங்கீகரிச்சோமானாலும், புத்திர சந்தானத்துக்குக் காரணமாகாததாய் இருக்கிற பாவமான மைத்துனத்தின் பேரையும் வெறுக்கப்படத்தக்க வேசிகளுடைய அருவருப்புள்ள நடக்கையும், மோக்ஷ ராச்சியத்தை வர்ணிக்கிறதிலே கணபாவமில்லாமற சொல்லவும் கற்பிக்கவுங்கூடாது. இது காரணமாகச் சகல சாஸ்திர புராணங்களுடைய எண்ணப்படாத உதாரணங்களினாலேயும் கோடாகோடிகளாய் இருக்கிற மனுஷருடைய சங்கேதத்தினாலேயும் சுவர்க்கம் என்கிற நாமமானது முன் சொல்லப்பட்ட மைத்துனத்தின் பேரையையும் அரம்பை முதலான வேசிகளுடைய அருவருப்புள்ள நடக்கைகளையும் பிரதானமாகச் சொல்லும்போது, சகல நன்மை சுரூபமாயிருக்கிற பராபர வஸ்துவினுடைய பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலே வருகிற மோக்ஷமாகிற குறையற்ற பாக்கியத்தைச் சொல்லுகிறதிலே சுவர்க்கமென்கிற சத்தமானது பிரயோகிக்கலாமோ இல்லையோவென்று சற்குருக்களாயிருக்கிற பேர்கள் பரிச்சேதம் பண்ணக்கடவார்கள். இதுதவிர, மோக்ஷ ராச்சியம் இன்னதென்று சொல்லவேணும் என்றிருக்கையிலே [5]நாங்கள் பிரயோகிக்கிற சத்தத்தைக் கேட்கிற பேர்கள் அந்த சத்தத்தின் நிமித்தமாக மோக்ஷ ராச்சியத்திலே மைத்துன முதலான போகங்கள் உண்டென்று விசாரிக்கிறதுக்கு இடங் கொடுத்தோமானால், அது பாவத்திலேயோ புண்ணியத்திலேயோ கூடடென்று பக்ஷபாதமில்லாத புத்திமான்கள் வகையறுக்கக்கடவார்கள்.

24 9 அதுபோல வைகுண்டமும் கயிலாசமும் மோட்சத்துக்கான சொற்கள் அல்ல. (1) இந்தவைக மோக்ஷராச்சியம் இப்படிக்கொத்ததென்று சொல்லும்போது, 'வைகுண்டம்

1 சற்றுமிலும் 2 ஏற்றிக்கூறவும் 3 புனைந்துரைக்கவும்
4 பிறிதுமொழிதல் 5 நாம்

கயிலாசம்' என்கிற இரண்டு சத்தங்களுடைய பிரயோகமானது மிகவும் அனுசிதமாய் இருக்கக்கொள்ளத் தேவோக்கித்த தேவப் பிரகாரமாக மோக்ஷமாகிற குறையற்ற பாக்கியம் இன்ன தென்று அங்கீகரிக்கிறவன் இப்படிப்பட்ட சத்தங்களுடைய அர்த்தத்தை முழுதும் அறியாதிருந்தால், மோக்ஷம் இன்ன தென்று சொலலுகிறதுக்கு அப்படிப்பட்ட சத்தங்களைப் பிரயோகிப்பாளொழிய, அதுகளுடைய அர்த்தத்தை அறிஞ்சவன் மெய்யான மோக்ஷமாகிற குறையற்ற பாக்கியத்துக்கு வைகுண்டம் என்கிற பேரையுங் கயிலாசம் என்கிற நாமத்தையும இடலா மென்று அங்கீகரிக்கமாட்டான்.

25.10 கற்பனைத்தேவர்கள் இருக்கும் இடமும் (வைகுண்டம்) கற்பனையே. அதேதென்றால், மார்பிலே ஸ்திரீயைக்கொண்டிருக்கிற வைகுண்டன் என்கிறவனையும், தலையிலே பெண்டாட்டியைக் கொண்டிருக்கிற ருத்திரன் என்கிறவனையும் இத்தொகைப்பட்ட மற்றுண்டான பேர்களையும் சலமும் பக்ஷபாதமுமில்லாமல் பத்தும்பத்தாய் விசாரிச்சோமானால், சர்வேசுரனை அறியாத பேர்கள் முதிர்ந்த அஞ்ஞானத்தினாலே அவனவன் தனக்குத் தோன்றின விதமாக அபபடிப்பட்ட விஷ்ணுருத்திர பிரம்மாதிகளை, வெறுமனே கற்பித்த தேவர்களென்று அற்பமாகிலும் சந்தேகமில்லாமல் ஒப்புக்கொள்ளக்கடவோம். இதெல்லாம் 'ஞானோபதேசத்தின் இரண்டாம் காண்டத்திலே' விரிவாக ஒப்புவிக்கப்படும் எனகிறதினால், அதை ஒப்புவிச்சப்பட்டுதென்று அங்கீகரிச்சு இத்தறுவாயில் ஒப்புவிக்கத்தக்க விசேஷத்தை ஒப்புவிப்போம். அரி அர பிரம்மாதிகள் வெறுமனே கற்பிக்கப்பட்டவர்களாயிருக்க, வைகுண்டமும் கயிலாசமும் அவர்களிருக்கிற ஸ்தலங்களென்று அவர்களுடைய புராணங்களிலே சொல்லப்படும என்கிறதுக்குச் சந்தேகமில்லை. இது இப்படி இருக்கையிலே வெறுமனே கற்பிக்கப்பட்ட பேர்கள் வாசமாயிருக்கிற ஸ்தலங்கள் சத்தியத்துக்கு விருத்தமாகக் கற்பிக்கப்பட்ட ஸ்தலங்களாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கவேறு மொழிய மற்றபபடியல்ல. அபபடியே வைகுண்டம் கயிலாசம் முதலானதுகளை இல்லாத தேவர்களுக்கு வேறுமனே கற்பிக்கப்பட்ட ஸ்தலங்களென்று ஞாயத்தின்படியே சொல்ல வேண்டியிருக்கையிலே, இல்லாத ஸ்தலங்களாகிற வைகுண்டமும் கயிலாசமும் மெய்யான மோக்ஷத்தைச் சொல்லும்போது பிரயோகிக்க ஒண்ணாதென்று சந்தேகமில்லாமற் சொல்லக்கடவோம்.

*25.11* **தேவர்களின் பெயர் கடவுளுக்குப் பொருந்தாது; அது போல் அவர்களின் உறைவிடம் கடவுளின் மோட்சத்துக்குப் பொருந்தாது.** இந்தச் சத்திய விசேஷத்தை வேறேயொரு ஞாயத்தினாலே கண்டுபிடிக்கக்கடவோம். அதேதென்றால், மெய்யான சர்வேசுரனைச் சொல்லும்போது, வைகுண்டன் என்கிற நாமத்தைச் சொல்லவும் நினைக்கவும் மாட்டோம் என்றிருக்கையிலே, மெய்யான சர்வேஸ்வரனுடைய பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலே வருகிற மோக்ஷமாகிற குறையற்ற பாக்கியத்தின் ஸ்தலத்துக்கு வைகுண்டம் என்கிற நாமமானது செல்லுமென்று சொல்லுகிறது எப்படி? இந்தடைவாகச் சர்வேசுரன் இன்னதென்று சொல்லும்போது வைகுண்டனும் ருத்திரனும் என்கிற நாமங்களுடைய பிரயோகம் பண்ணவொண்ணாதென்று அங்கீகரிக்கிற பேர்கள் கிரமத்தோடு வார்த்தைகளை நடத்தவேணுமானால், இப்படிப்பட்ட பேர்களுக்கு வெறுமனே கற்பிக்கப்பட்ட ஸ்தலங்களாகிற வைகுண்டமும் கயிலாசமும் என்கிற நாமங்களை மெய்யாகவே உண்டாயிருக்கிற முன் சொல்லப்பட்ட குறையற்ற பாக்கியமென்கிற மோக்ஷத்தைச் சொல்லும்போது பிரயோகியாமல் இருக்கிறதென்கிறது தப்பில்லாக் கிரமமுள்ள வசனமென்று சொல்லப்படும். அவ்வண்ணமே, சர்வேசுரனுடைய பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலே வருகிற குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷம் இன்னதென்று சொல்லும்போது, சுவர்க்கமும் வைகுண்டமுங் கயிலாசமும் என்கிற நாமங்களைப் பிரயோகிக்கவொண்ணாதென்று அங்கீகரிக்கப்படுமாப்போலே, வேறே இத்தொகைப்பட்ட இல்லாத ஸ்தலங்களுடைய நாமங்களை மோட்சராச்சியம் இன்னதென்று சொல்லும்போது [1]வர்ச்சிக்கக்கடவோம்.

இற்றைவரைக்கும் பண்ணப்பட்ட பிரசங்கத்தினாலே சுவர்க்க முதலான சொல்லப்பட்ட ஸ்தலங்கள் இல்லாத ஸ்தலங்களுமாய், வெறுமனே கற்பிக்கப்பட்டதுகளுமாய் இருக்கிறதென்று ஒப்புவிக்கப் பட்டாப்போலே ஆச்சுது. ஆதலாலே, இப்படிக்கொத்த ஸ்தலங்களிலே ஆத்துமத்தினுடைய ஒடுக்கமாகிற அவநிருபமாக நன்மையானது கிடைக்குமென்று சொல்லவும் கருதவுங்கூடாது. ஆனால் மெய்யாகவே மோட்சம் இன்னதென்று நாம் [2]நிருபணம் பண்ணுகிறதுக்கு முன்னே, இவர்களாலே கற்பிக்கப்படுகிற மோட்சவகைகளை ஆராய்ஞ்சு பார்த்து

1. விலக்க 2. நிறுவுதல்

6986

அவர்களுக்குள்ளே சத்தியத்துக்கு விருத்தமாகக் கற்பிக்கப்பட்ட தப்பறை விசேஷங்களைத் தள்ளி, மெய்யான மோட்சம் இன்னதென்று நிரூபிக்கத்தக்கதிலே சத்தியத்துக்கு ஒத்திருக்கிற மேரையை அங்கீகரிச்சுச் சிறிது ஞாயங்களினாலே அப்பால் வருகிற பாடங்களிலே ஒப்புவிக்கக்கடவோம். (கி.) உளரு[1]

இருபத்தஞ்சாம் பாடம் முற்றும்.

## 26-ம் பாடம்

**26.1. ஆன்மாவின் ஒடுக்கம் பற்றித் தவறான கொள்கைகள்:** இவ்வுலகமன்றி. சர்வேஸ்வரனை அறியாத பேர்கள் ஒரு வழியாய்க் கிரமமாக நடவாமல், பரஸ்பர விருத்தமான மதங்களை அனுசரித்து. நரசீவனானது இன்னதென்று சொல்லுகிறதிலே சத்தியத்தை நிர்ணயம் பண்ணாமற், பலபல விதங்களாகப் பிரிந்து அன்னியோன்னியமான விபரீத விசேஷங்களைக் கற்பிக்கிறாப் போலே, ஆத்துமத்தினுடைய ஒடுக்கத்தைக் கண்டுபிடியாமல், அந்த விஷயத்திலே அவரவர்கள் தங்களுக்குத் தோன்றின வகையாய்ப் பலபல கதைகளைக் கற்பிச்சு எழுதி வைச்சார்கள். அவ்வண்ணமே, சரீரத்தோடே கூட மனுஷ சீவனானது அழிஞ்சுபோம் என்கிற தப்பறை விசேஷத்தை அங்கீகரித்துக் கொண்டு வருகிற பாவிகள் ஆத்துமத்துக்கு வரலான சுகதுக்கம் என்னப்பட்ட யாவும் மரணத்துக்கு முன்னே மனுஷனுக்குப் பலிக்குமொழிய மற்றப்படியல்ல (என்கிறார்கள்). ஆதலாலே, இவர்களால் அங்கீகரிக்கப்படுகிற பட்சத்தை அங்கீகரித்தோமானால், ஆத்துமத்தினுடைய ஒடுக்கமானது பூலோகத்திலே கிடைக்கும் என்கிற அபத்தத்தைச் சொல்லவேண்டியிருக்கிறது. ஆதலாலே, பூலோகத்திலே திரிகிற பேர்கள் வழிப்போக்கருக்குச் சமானராயிருந்து, அவதியை அடையாத பேர்களாய் இருக்கக் கொள்ள, முன்சொல்லப்பட்ட பாவிகளுடைய வார்த்தைகளுக்குச் சம்மதப்பட்டோமானால், ஆத்துமத்துக்கு ஒடுக்கமில்லை என்று அங்கீகரிக்கிறது என்கிறதுக்குச் சமானமாகும்.

**26.2** சுவர்க்கமுமன்றி வேறே சில தெளிவற்ற பாவிகள் நரசீவனானது பலபல சென்மங்களினாலே நாய் நரி முதலான எண்ணப்படாத செந்துக்களுடைய சரீரங்களைக் கொண்டிருந்து, பலபல பேர்களாய் இடைவிடாமற் பிறந்து வருகிறது என்கிற ஞாயத்துக்கொவ்வாத பட்சத்தை அறிவின் குறைச்சலினாலே

1. 205

விசுவாசிக்கிருர்களென்கிறதினுலே, 'தேவேந்திர பதவியாகிற சுவர்க்கத்திலே' மனுஷ சீவனுக்கு ஒடுக்கம கிடைக்குமென்று சொல்லிக்கொண்டு வருகிருர்கள். அதிலே நரசீவனுனது இவ் வுலோகத்திலே சரீரத்தைக் கொண்டிருக்கப் பண்ணின புண்ணி யங்களுக்கான பலனை அனுபவித்த பிற்பாடு திரும்பப் பூமியிலே விழுந்து, கல்லாய் மரமாய் மற்றுண்டான வஸ்துக்களாய்ப் பிறக் கும் என்கிற, எந்த ஞாயத்துக்கும ஏற்றிராத, அபத்த விசேஷத் தைச் சம்மதித்துகொண்டு வருகிருர்கள். இவர்களுடைய மதத் தைப் பத்தும்பத்தாய் விசாரிச்சோமானுல், ஆத்துமத்துக்குப் பேர்மாத்திரத்திலே ஒடுக்கம் கிடைக்குமென்று சமமதித்துக் கொண்டு வருகிருர்கள் என்று சொல்லவேணுமொழிய, அவர் களுடைய மதத்தின் அநுசரணத்தினுலே ஆத்துமத்துக்கு மெய் யான ஒடுக்கம் கிடையாதென்று சொல்ல வேண்டியிருக்கிறது என்கிறத்துக் தச் சந்தேகப்படத் தகாது. அதேதென்ருல், ஒடுக்க மானது கடைசியான அவதியென்று சொல்லப்படுமென்கிறதுக் காக, அவதிக்கு அப்பால் வேருெரு வஸ்து உண்டென்று மதி கெட்டவன் சொன்னுல் சொல்லுவானெழிய, புத்திமானுயிருக் கிறவன் சொல்லமாட்டான். அதேதென்ருல், அவதியானது முடிவென்று சொல்ல வேண்டியிருக்கையிலே, முடிவுக்கப்பால் வேருென்று கிடைக்குமென்று சொல்லத்தகாது. அப்படியே, வேறேயொன்று கிடைக்குமென்று சொனனுேமானுல், ஒன்று தானே முடிவுமாய் முடிவு ஆகாததுமாய் இருக்கிறதென்கிற, முதிர்ந்த பயித்தியத்துக்குச் சம்மதித்தாப்போலே யாச்சுது இதுகாரணமாக மோக்ஷ நரகமும் மனுஷனுக்கு அவதிகளாயிருக் கக்கொள்ள மோட்சத்தை அடைந்த பேர்கள் என்றென்றைக் கும் அப்படிப்பட்ட பரமானந்தமாகிற சகல நன்மைகளுடைய விஷயங்களிலே குறையற்ற பாக்கியத்தை அனுபவிப்பார்களென் பதுக்கும், நரகத்திலே விழுந்த நிர்ப்பாக்கியர்கள் அதில் நின்று ஒருக்காலும் பிறப்படாமல் நரகத்தினுடைய ஒழியாத அக்கினிக் குள் என்றென்றைக்கும் அவியாத கட்டைகளாய் இருப்பார்கள் என்கிறதுக்கும் தப்பாது. இந்தச் சத்தியங்கள் இரண்டையும் தேவோககித்த வேதத்தினுடைய அனேக உதாகரணங்களிலே சந்தேகமற அங்கீகரித்துக்கொண்டு வருகிருேம். அந்த சத்தியங் கள் இரண்டையுந் தானே பலபல ஞாயங்களினுலே இனிமேல் முப்பத்திரண்டாம் பாடந்துவக்கி அப்பாற் சொல்லப்படத்தக்க ஆறு பாடங்களிலும் ஒப்பச் சொல்லக்கடவோம். அப்படிப்

பட்ட ஞாயங்களைப் பத்தும் பத்தாய் விசாரித்தோமானால், ஒன்றில் சுவர்க்க பதத்திலே நரசீவனுக்கு ஒடுக்கம் கிடையாதென்று சொல்லக்கடவோம். அப்படிச்சொல்லாவிட்டால், நரசீவனுக்கு எண்ணப்படாத கடைசி அவதிகள் கிடைக்கிறது என்கிற முழுதும் அபத்தமானதுமாய் அர்த்த விரோதமானதுமாய் இருக்கிற வர்த்தமானத்தை அங்கீகரிச்சோம் என்கிறதுக்குச் சமானம்.

26.3 வைகுண்டமுமன்று (i) வைகுண்ட வகையானது எப்படிக்கொத்ததென்றால், "சென்னர்த்தன்" என்கிற நாமதேயத்தை விஷ்ணுவாகிற வைகுண்டனுக்கு வீணாகக் கற்பிச்சார்கள் என்கிறதினால், வைகுண்டத்தை அடைஞ்சவன் வேறே சென்மத்தையெடுத்து வேறே பொருளாய்ப் பிறக்க மாட்டான் என்றங்கீகரிக்கத்தக்கதாகச் சில பேர்கள் தங்களுக்கு இடம் பண்ணிக்கொண்டு வருகிறார்கள். அதேதென்றால், "சென்மம் என்னப்பட்டயாவையும் அறுக்கிறது என்கிறது சென்னர்த்தன்" என்கிற பதத்துக்கு அர்த்தமாகும். அவ்வண்ணமே, சீவனுக்கு வேறே சென்மம் வராதபடிக்கு வைகுண்டம் காரணமாய் இருக்கிறதென்று விசுவாசிக்கிற பேர்கள் வைகுண்டனுடைய ஸ்தலமாகிற வைகுண்டத்தை அடைந்திருக்கிற சீவன் அதில் நின்று இறங்காமல் எனறென்றைக்கும் அவ்விடத்திலே இருக்குமென்று விசுவாசிக்கிறதினால், வைகுண்டத்திலே அவதி ரூபமான நன்மையாகிற ஒடுக்கமானது சீவனுக்குக் கிடைக்குமென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆனால், மார்பிலே பெண்டாட்டியை இடைவிடாமல் சுமந்துகொண்டிருக்கிறவன் வெறுமனே கற்பிக்கப்பட்ட தேவன என்கிற ஞாயத்தினாலே, அவனுக்கான வைகுண்டம் என்கிற ஸ்தலமானது வெறுமனே கற்பிக்கப்பட்ட காணப்படாத ஸ்தலமாய் இருக்கிறதென்று ஒப்புவிக்கப்பட்டாற்போலே ஆச்சுது. அப்படிப்பட்ட இல்லாத ஸ்தலமோவென்றால், மெய்யான பாக்கியமென்கிற மோட்சத்துக்கான ஸ்தலமாயிருக்கலாமென்று மதிகெட்டவன் முதலாய்ச் சொல்லமாட்டான். (ii) இதன்றியே வைகுண்டனென்கிற நாமத்தைக் கொண்டிருக்கிறவன் ஸ்திரியின் நிமித்தமாக ஆனந்த முதலான நன்மை என்னப்பட்ட யாவையும் அடைந்திருக்கிறானென்று அவனுடைய புராண பிரபந்தங்களினாலே அங்கீகரிக்கத்தக்க சித்தாந்தமாயிருக்கச்செய்தே, ஆனந்த முதலான நன்மைகளுடைய விஷயங்களிலே வைகுண்டன் என்கிறவன் மிகவும் குறைவுள்ள பொருளென்று கண்டுபிடிக்கலாகும். ஆதலாலே, வைகுண்டன் என்

கிற நாமத்தைக் கொண்டிருக்கிறவனிடத்திலே சகல நன்மை விஷயக் குறையற்ற பாக்கியமானது இல்லாதபோதே அவதி ரூப மான குறையற்ற பாக்கியத்தைச் சீவனுக்குக் கொடுக்கத்தக்க தாக வைகுண்டனானவன் வல்லவனாய் இருக்கவில்லையென்று கேட்கவேணுமோ? ஆனபடியினாலே, வைகுண்டம் என்கிற ஸ்த லத்திலே அவதி ரூபகமான குறையற்ற பாக்கியமாகிற ஒடுக்கத் தைச் சீவனானது அடையுமென்று அறிவின் குறைச்சலுள்ள பேர்கள் அங்கீகரிப்பார்களொழிய மற்றப்படியல்ல.

26.4 **கயிலாசமுமன்று.** சொல்லப்பட்ட இந்த இரண்டு ஞாயங்களினாலே ருத்திரனுடைய ஸ்தலமாகிற கயிலாசமானது வெறுமனே கற்பிக்கப்பட்ட ஸ்தலமாயிருக்கிறதென்று காட்டப் பட்டாப்போலே யாச்சுது. மீளவும், அப்படிப்பட்ட கயிலாச மாகிற ஸ்தலமாகிற ஸ்தலமிருந்தாலும் பார்வதியினுடைய நிமித் தமாக நன்மை என்னப்பட்டதெல்லாம் அடைந்திருக்கிற ருத்திர னானவன் சீவனுக்கு அவதி ரூபமான குறையற்ற பாக்கியத்தைத் தருபவனாயிருக்கலாம் என்று அங்கீகரிக்கிறதுக்கு எப்பிரமாண மானாலும் இடங்காணமாட்டாது. இற்றைவரைக்கும் நடமாற் பண்ணப்பட்ட பிரசங்கத்தின் நிமித்தமாகத் தேவேந்திர பதமா கிற சுவர்க்கமும், வைகுண்டமும், கயிலாசமும் இத்தொகைப் பட்ட தலங்களும் வெறுமனே கற்பிக்கப்பட்ட ஸ்தலங்களா யிருக்கிறதென்று ஒப்புவிக்கப்பட்டதும் தவிர, அப்படிப்பட்ட இல்லாத ஸ்தலங்கள் உண்டென்று அங்கீகரிக்கப்பட்டாலும், அதுகளிலே குறையற்ற பாக்கியமாகிற ஒடுக்கமானது மனுஷ சீவனுக்குக் கிடையாதென்று ஒப்புவித்தாப்போலே யாச்சுது.

26.5 **மோட்சம் பற்றி வேறு சில அரைகுறைக் கொள்கைகள்.** (i) ஆனால் சீவனுக்கு ஒடுக்கமானது வருவதை விசாரிக்குமிடத் தில், இந்த விஷயத்திலே சத்தியம் இன்னதென்று அறியாமலி ருக்கிற வேறே சில பேர்கள் 'மோக்ஷத்தின் நிமித்தமாகச் சீவ னுக்கு ஒடுக்கங் கிடைக்கும்' என்று ஸ்தாபித்து மோக்ஷம் இன்ன தென்று சொல்லும்போது, அநேக அபத்த விசேஷங்களைச் சொல்லித் தாறுமாறாய்க் குளறிக்கொண்டு வருகிறார்கள். அப்படியே "நையாயிகமதத்திலே[1] மோக்ஷம் இன்னதென்று விதிக் கப்படுகிறபோது, இருபத்தொரு துக்கத்தின் நிவாரணமானது அதிலே விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மோக்ஷ மானது எதிலே அடங்கியிருக்கிறதென்று தெளிவற்ற பாவி

1 Nyaya system

கள் நிரூபிக்கிறபோது, பராபர வஸ்துவாகிற சர்வேஸ்வரனுவர் மோக்ஷம் தருபவரென்று எல்லாருக்குஞ் சம்மதமாம். இதிப்பிடி யிருக்கையிலே, மோக்ஷத்தின் வகையிலே அவனவன் தனக்குத் தோன்றின பிரகாரமாகப் பலபல விஷயங்களை எழுதிவைச்சா ஞெழியச் சத்தியவிதமாக ஒருத்தனுறுலும் மோக்ஷம் இன்ன தென்று நிரூபிக்க மாட்டினனில்லை. (ii) அவ்வண்ணமே, பராபர வஸ்துவினுடைய [1]சன்னதியிலேயிருந்தால் அப்படிப்பட்ட சன்னதி மகிமையிறலே அதுக்கு மோக்ஷம் கிடைக்குமென்று சொல்லுகிறுர்கள். வேறே சிலபேர்கள் பராபர வஸ்துவினுடைய [2]சாமீப்பியமானது சீவனுனது மோக்ஷத்தை அனுபவிக்கிறதுக்குச் சம்பூரண காரணமாயிருக்குமென்று அங்கீகரிக்கிறுர்கள். வேறே சிலபேர்கள் பராபர வஸ்துவோடே [3]சாயுச்சியமானது சீவனனதை மோக்ஷத்தை அடையத்தக்கதாகப் பண்ணிக்கொண்டு வருகிறதென்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்திய விசேஷமாய் இருக்கிறதென்று சொல்லுகிறுர்கள். இவர்கள் தவிரத் தெளிவற்ற பாவிகள் முழுதும் ஞாயமின்னதென்று அறியாமல், ஞாயத்துககும் புத்திக்கும் விருத்தமாக வேறே மேரைக்குள்ளே மோக்ஷமானது அடங்கியிருக்கிறதென்று, கற்பிச்சார்கள். அதேதென்றுல் பராபரவஸ்துவினிடத்திலே சீவனுனது லயமாய்ப் போனுல் ஒழிய அந்த மோக்ஷமடையமாட்டாதென்று குறிக்கொண்டு வருகிறுர்கள். பராபரவஸ்துவினிடத்திலே அவர்களாற் கற்பிக்கப்படுகிற சீவனுடைய லயத்துக்குச் [3]சாரூப்பியமென்கிற நாமகரணம் பண்ணினுர்கள். (iii) கடைசியாய், வேறே சிலபேர்கள் சீவனுனது பராபரவஸ்துவைக்கண்டு வந்தால் அப்படிப்பட்ட [4]தெரிசனத்திலே மோக்ஷ அனுபவமானது சீவனுக்குச் சித்திக்குமென்று சொல்லுகிறுர்கள். இப்படிப்பட்ட பேர்கள் கிரமந்தப்பாமல் தங்களுடைய பக்ஷத்தை ஒப்புக்கொள்ளத்தக்க விதமாகச் சொல்லிக்காட்ட வேணுமானுல், அப்படிப்பட்ட தெரிசனமானது பிரத்தியக்ஷ தெரிசனமாய் இருக்கிறதென்று அவர்கள் அங்கீகரிக்க வேணும். அதேதென்றுல், சீவனுனது குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷத்தை அனுபவியாமல், இவ்வுலகத்திலே பராபரவஸ்துவை [5]அனுமான தெரிசனத்தினுலேயுஞ் [6]சப்த தெரிசனத்தினுலேயும் அது கண்டு பிடிக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. ஆகையாலே, சர்வேஸ்வரனைச்சீவனுனது தெரிசிக்கிறதினுலே மோக்ஷபாக்கியத்தை அடை-

1. அண்மியிருத்தல் 2. ஒன்ருதல் 3. ஒருருவம் 4. காட்சி
5. உய்த்துணர்தல் 6. பிறர்வாக்கு 7 சான்னித்தியம்—பிரசன்னம்

யுமென்று சொல்லும்போது, அப்படிப்பட்ட தரிசனமானதுபிரத்தியக்ஷதரிசனமாய்இருக்கிறதென்கிறதுக்குசந்தேகப்படத்தகாது. அந்தத் தரிசனத்துக்கு [1]சாலோக்கியமென்றுபோட்டார்கள். அப்படியேமோக்ஷமாகிற குறையற்ற பாக்கியமானது சாலோக்கியத்திலேயடங்கி யிருக்கிறதென்று அங்கீகரித்துக்கொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் சம்மதித்துக்கொண்டு வருகிறமோக்ஷ மேரையைப் பார்த்தோமானால், அது ஒன்றிலே மாத்திரஞ் சத்தியத்திலே கூடுமென்று சொல்லலாயிருந்தாலும், அப்படிப்பட்ட பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலே சீவனுக்குக் குறையற்ற பாக்கியமானது [2]சித்திக்கும் வகையை அவர்கள் செவ்வையாகச் சொல்லக்காணோம். ஆனபடியினாலே மோக்ஷமாகிற குறையற்ற பாக்கியமானது பராபர வஸ்துவின் பிரத்தியக்ஷ தெரிசனத்திலே அடங்குமென்கிற மெய்யான வசனத்தை மாத்திரம் இவர்கள் சொல்லிக்கொண்டு வரச்செய்தே, இந்த விஷயத்திலே வெளிப்படுத்தத்தக்க பரம ரகசியங்களெல்லாம் வெளிப்படுத்தாத போதே, மோக்ஷம் இன்னதென்று, மற்ற விஷயங்களுக்குச் சம்மதப்படுகிற பேர்களைப்போலே, இவர்கள் கண்டு பிடியாமற் போனார்களென்று சொல்லக்கடவோம். ஆனால் இவர்கள் அங்கீகரிக்கிற மதத்தைவிட்டு, மோக்ஷ விஷயத்திலே மற்றவர்கள் அனுசரித்துக்கொண்டு வருகிற மதங்களைக்கொஞ்சத்துக்குள்ளே சொல்லிக்காட்டி, அதுகளெல்லாம் சத்தியத்தின் வழியை விலகி ஞாயத்துக்கும் புத்திக்கும் ஏற்றிராத தப்பறைகளாய் இருக்கிறதென்று சுலுபத்தில் ஒப்புவிக்கக்கடவோம்.

26.6 **சான்னித்தியம்.** இதெல்லாங் கிரமத்தோடு நாம் நடத்தி எல்லாருக்கும் அதை விளங்கப்பண்ணும்படிக்கு சான்னித்திய முதலான பதங்களுடைய அர்த்தத்தை வெளிப்படுத்தி, அவர்களுடைய தாற்பரியமானது சத்தியத்துக்கொவ்வாதென்று சந்தேகமறக் காட்டுவோம். ‘சான்னித்திய’ மானது ‘முன்னே யிருக்கிறது.’ அப்படியே சீவனது பராபரவஸ்துவின் சன்னதியிலே யிருந்தால், அது மாத்திரம் மோக்ஷ அனுபவத்தைச் சீவனுக்கு வரப்பண்ணத்தக்கதாகச் சம்பூரண காரணமாய் இருக்கிறதென்று அவர்கள் அங்கீகரிக்கவேணும். அதேதென்றால், ‘சாலோக்கிய’ முதலான இவர்களாற் சொல்லப்படுகிற மோக்ஷ மேரைக்குச் ‘சான்னித்திய’ மானது வேற்றுமையுள்ள மேரையா யிருக்கிறதென்று சொல்லுகிறதுக்குச், சாமீப்

1. ஓரிடம் 2. கிடைக்கும்

பியாதி வகைகள் சான்னியத்திய வகையோடே கூடாமலிருக்க வேணும் என்கிறதுக்குத் தப்பாது. இத்தறுவாயிலே அவர்களாற் சொல்லப்படுகிற உவமையிலே இதே அவர்களுடைய தாற்பரியமாயிருக்கிறதென்று கண்டுபிடிக்கலாய் இருக்கிறது. அதேதெனன்றால குளத்திலே யிருக்கிற தாமரைப் புஷ்பமானது சூரியனுடைய சன்னிதியிலே [1]விகசிக்குமாப்போலே, சீவனானது சர்வேசுரனுடைய சன்னதியிலே மோட்சமாகிற குறையற்ற பாக்கியத்தை அனுபவிக்கும் என்கிறதுக்குச் சந்தேகப்படக் கணக்கில்லை என்று சொல்லுகிறார்கள். ஆதலாலே மோட்ச அனுபவத்துக்குத் தேவ சன்னதியானது ஒன்றே [2]சாட்சாத் காரணமாயிருக்கிறதென்று இவர்களுடைய [3]விபட்சஅனுசரணத்தினாலே சொல்லத்தகும்.

26.7 சாமீப்பியம் (i) 'கிட்டியிருக்கிறது' என்கிற அர்த்தத்தைச் 'சாமீப்பிய'மென்கிற பதமானது கொண்டிருக்கும். அவ்வண்ணமே, சீவனானது பராபர வஸ்துவின் அண்டையிலே இருக்கிறதினாலே மாத்திரம் மோட்சமாகிற குறையற்ற பாக்கியத்தை அடையுமென்று சொல்லுகிறார்கள். இந்த இரண்டு மதங்களை அனுசரிக்கிற பேர்கள் சர்வேசுரனுடைய சுபாவ சுருபத்தைச் சுத்தமாய் அறியாமல், அவர் எங்கும் வியாபிச்சிருக்கிற சத்தியவர்த்தமானத்தை இலவலேசமானாலும் கண்டு பிடித்தார்களென்று சொல்லவுங் கருதவுங் கூடாது. அதேதெனன்றால், அனந்த ஞான சொருபமாயிருக்கிற கர்த்தரானவர் எங்குமுண்டான வர்த்தமானத்தையும் உள்ளும் புறம்புமாக வஸ்துவென்னப்பட்ட யாவையும் அளவில்லாத தெளிவோடு பார்த்துக்கொண்டிருக்கிறதினால் அவருடைய திவ்விய சன்னதியிலே வஸ்துவென்னப்பட்ட யாவு மிருக்கிறதென்று சந்தேகமற அங்கீகரிக்கவேணும். (ii) இதன்றியே, கர்த்தரானவர் தமது திவ்விய சத்தியினாலே சர்வத்தையும் [4]ஸ்பரிசிக்கிறதினால், வஸ்து என்னப்பட்டதெல்லாம் கர்த்தனுக்குச் சமீபமாய் இருக்கிறதென்று சொல்லவுங் கடவது; ஆதலாலே, ஒன்றானாலும் அவருக்கு மறைக்கப்பட்டதா யிருக்கிறதென்று சொல்லவுங் கருதவுங் கூடாது. சான்னித்திய சாமீப்பிய என்கிற இரண்டு பதத்துக்குண்டா யிருக்கிற அர்த்தத்தை அனுசரித்தோமானால், சகல [5]அசேதன வஸ்துக்களும், பூலோகத்திலே திரிகிற மனுஷரென்னப்பட்ட யாவரும், நரகத்திலே விழுந்து மனோ

1. விரியும் 2. நேரடி 3. கொள்கை 4. தொடுவதால் 5. அறிவற்ற

வாக்குக்கு எட்டாததாயிருக்கிற நோயுபாதைகளை யனுபவிக்கிற பிசாசு முதலான ஙிர்ப்பாக்கிய பாவிகளுஞ் சர்வேசுரனுடைய சன்னதியிலே யிருந்து, அவருக்குச் சமீபமாய் இருக்கிறார்கள் என்று சொல்லவேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட பேர்க ளெல்லாரும் மோட்சத்தை அனுபவியாமல் இருக்கிறார்களென்று பிரத்தியட்சமாய்க் கண்டிருக்கிறோம் என்கிறதுக்காகச் சான்னித் தியமுஞ் சாமீப்பியமும் மோட்ச அனுபவத்துக்குக் காரணங் களாயிருக்கிறதென்று மதிகெட்ட மிலேச்சர் குளறிக்கொண்டு வருகிறார்களே, அந்த மதங்கள் இரண்டும் முழுத்தப்பறையாய் இருக்கிறதென்று அற்பமாகிலுஞ் சந்தேகமில்லாமல் ஒப்புக் கொள்ளக்கடவோம். ஆனபடியினாலே, இவர்கள் சொல்லுகிற வியர்த்த விசேஷங்களை விட்டு, அப்பால் அவர்கள் கறபித்துக் கொண்டு வருகிற மோட்சத்தின் வேறே மேரைகளை ஆராய்ந்து கொள்ளக்கடவோம்.

26.8 சாயுச்சியம். (1) 'கூட இருக்கிறது' என்றும், 'கலந்தி ருக்கிறது' என்றும் சாயுச்சியமென்கிற பதத்துக்கு அர்த்தமாகும். இத்தறுவாயிலே 'கலந்திருக்கிற' அர்த்தத்தை அங்கீகரிக்க வேணும். அப்படியே அங்கீகரியாதிருந்தால், 'சாமீப்பிய' மென்கிற பதத்தின் அர்த்தத்துக்குச் 'சாயுச்சிய'த்தின் அர்த்த மானது வேறுபட்டதாயிராது. ஆதலாலே, கலந்திருக்கிறது என்கிற அர்த்தத்தை இத்தறுவாயிலே சாயுச்சியமென்கிற சப்த மானது கொண்டிருக்கிறதென்று சொல்லக்கடவோம். இப்படிப் பட்ட அர்த்தத்தைக் கொண்டிருக்கிற சாயுச்சியமானது உண் டாகமாட்டாத வர்த்தமானத்தை உண்டாயிருக்கலாமென்று சொல்லிக்கொண்டு வருகிறதினால், 'சாயுச்சியமானது மோக்ஷ அனுபவம் பிறப்பிக்கலாம்' என்கிற பக்ஷமானது முழுத்தப்பறை யாயிருக்கிறதென்று சொல்லவேண்டியிருக்கிறது. இதெல்லாம் வெளியாகும்படிக்கு இவர்கள் சொல்லிக்கொண்டு வருகிற[1] திருஷ் டாந்தரத்தினாலே இவர்கள் அனுசரிக்கிற மதத்தினுடைய அபிப் பிராயத்தைக் கண்டுபிடிக்கலாம். அதேதென்றால், தண்ணீர்கள் இரண்டும் அன்னியோன்னியமாய்க்கலந்துபோகிறாப்போலேபரா பரவஸ்து வோடேகூடச் சீவனானது கலந்துபோமென்று சொல் லிக்கொண்டு வருகிறார்கள். அவ்வண்ணமே, பராபர வஸ்து வோடேகூடச் சீவனுடைய கலப்பானது குறையற்ற பாக்கிய மாகிற மோட்சத்தைச் சீவனானது அனுபவிக்கிறதுக்குச் சாட்

1. சான்று

சாத் காரணமாயிருக்கிறது என்று அறிவின் குறைச்சலினாலே கற்பித்துக்கொண்டு வருகிறார்கள் என்கிறதுக்குச் சந்தேகப் படத் தேவையில்லை. அதேனென்றால், கலப்புக்கு ஆஸ்பதமா யிருக்கிற பொருள்களானதுகள் [1]அங்கிஷங்களுள்ளதுகளாய் அவசியமாய் இருக்கவேணும் என்றிருக்கையிலே, [2]அகண்ட விதமாயிருக்கிற பராபர வஸ்துவுக்கு அங்கிஷங்கள் உண்டா யிருக்கிறதென்கிறது கருதவொண்ணாத தப்பறைக்குச் சம்மதப் பட்டாப் போலாகும். இப்படிப்பட்ட தப்பறையை அங்கீகரிக் கிறது கடவுளானது உண்டாக்கப்பட்ட வஸ்துவாயிருக்கிறது என்று அங்கீகரிக்கிறதுக்கு ஒக்கும்.

(2) மூன்று வகை கலப்பு: இது தவிர, இரண்டு பொருள் களினுடைய கலப்பைப் பத்தும் பத்தாய் விசாரித்தோமனால், அது மூன்று விதமாகப் பிரியுமென்று சொல்லலாயிருக்கும். (i) அதில் முதலாங் கலப்பின் விதமாவது: இரண்டு பொருள் கள் அன்னியோன்னியமாய்க் கலந்துபோய் இரண்டு பொருளில் ஒரு பொருளானாலும் கெடாமல் இரண்டு பொருளும் ஒன்றோ டொன்று சம்மந்தித்திருக்கும். இந்தப் பிரகாரமாகத் தண்ணீ ரோடு தண்ணீரானது கலந்து போனால், தண்ணீர்களிரண்டும் கெட்டுப் போகாமல், ஒன்றோடென்று சம்மந்தித்திருக்குமென்று கண்டுகொண்டு வருகிறோம். அது காரணமாக ஒவ்வொரு தண்ணீரைக் காட்டிலும் சம்மந்தித்திருக்கிற தண்ணீர்களி ரண்டும் அதிகமாயிருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. இப் படிப்பட்ட வகையுள்ள கலப்பை விசாரித்தோமானால், சீவனுக் குஞ் சர்வேஸ்வரனுக்கும் அப்படியுண்டாக மாட்டாதென்று சந்தேகமற அங்கீகரிக்கக்கடவோம். அதேதென்றால், சர்வேஸ்வர னுக்குஞ் சீவனுக்குந் தண்ணீர் போலே சம்மந்திக்கப்படத்தக்க பலபல அங்கிஷங்களுமில்லை. சர்வேஸ்வரனும் சீவனும் இந்தப் பிர காரமாகக் கலக்கப் பட்டால், ஒவ்வொன்றைக் காட்டிலும் அதிக மான பொருள் பிறக்கலாமென்று முழு மதிகெட்ட மிலேச்சனை வன் சொல்லவுங் கருதவு மாட்டான்: (ii) இந்தக் கலப்புத் தவிர வேறே இரண்டாம் வகையுள்ள கலப்பாவது: அன்னி யோன்னியமாய்க் கலந்து போகிற பொருளிரண்டும் கெட்டுப் போய் வேறே யொரு மூன்றாம் பொருளானது உற்பவிக்கும். இத்தடைவாக மாதாவின் கர்ப்பத்திலே, மனுஷன் முதலான செந்துக்களுடைய சென்மங்களிலே கலந்து போகிற மாதாவினு

1 உறுப்பு 2 Simple

டைய இரத்தமும் தகப்பனுருடைய சுக்கிலமும் இரண்டுங் கெட்டுப்போய், மூன்றும் பொருளாகிற சரீரம் பிறக்கும். இப்படிப் பட்ட கலப்பானது பராபர வஸ்துவுக்கும் சீவனுக்கும் உண்டாகலாமென்று கனபாவமும்மூதிர்ந்த பயித்தியமும்இல்லாமற் சொல்லக்கூடாது. அதேதென்றால், சீவனுது சர்வேசுரனுலே அழிக்கப்படலான பொருளாயிருந்தாலும சீவனிடத்திலே [1]க்ஷயத்துக்குக் காரணமானது அடங்கியிராததினுல், சீவனுது அக்ஷயமாயிருக்கிற வஸ்துவென்று சொல்லவேண்டியிருக்கிறது. சர்வேசுரனுவென்றால், அவரிடத்திலே க்ஷயத்துக்குக் காரணமானது இராது என்கிறதினுலேயும், அவர் வேறேயொரு வஸ்துவினுலே அழிக்கப்படலான வஸ்துவாய் இராததினுலேலேயும், சர்வேஸ்வரனுக்கும் சீவனுக்கும் முன் சொல்லப்பட்ட கலப்பானது உண்டாயிருக்கிலாமென்று கனபாவமும தப்பறையுமில்லாமல் அங்கீகரிக்கக்கூடாது. (iii) மூன்றும் வகைக் கலப்பாவது: இரண்டு வஸ்துக்கள் ஒன்றொடொன்று கலந்துபோனுல் அந்தப் பொருள்கள் இரண்டில் ஒன்று கெட்டுப்போய் மற்றப் பொருளுக்கு [2]அபிவிர்த்தியுண்டாம். இந்த வகைக் கலப்பானது சாரூப்பியத்திலே கூடும் என்கிறதுக்காகச் சாரூப்பியமானது எந்த ஞாயங்களினுலே ஆக்ஷேபனை நம்மால் பண்ணப்படுமோ, அந்த ஞாயங்களினுலே சீனுக்கும் சர்வேஸ்வரனுக்கும் அப்படிப்பட்ட கலப்பானது உண்டாயிராதென்று சந்தேகமற அங்கீகரிக்கப்படும் என்கிறதுக்குத் தப்பாது. இதெல்லாஞ் சர்வேஸ்வரனுடைய கிருபா கடாக்ஷத்தினுலே வருகிற பாடததிலே கொஞ்சத்துக்குள்ளே நிறைவேற்ற வருந்தக்கடவோம்.

இருபத்தியாறும் பாடம் முற்றும்.[4]

## இருபத்தேழாம் பாடம்

**27.1 சாரூப்பியத்தால் மோட்சமில்லை லயமாய் போகையில் ஏற்படும் விகாரம் கடவுளிடம் இல்லை** சாரூப்பியமாவது மோக்ஷத்துக்குக் காரணமாய் இருக்கிறதென்று முன்பின் விசாரியாமல் சில மதிகெட்ட பேர்கள் அங்கீகரித்துக்கொண்டு வருகிறார்கள். 'சர்வேஸ்வரனேடே சீவனுது ஒரு ரூபமாய்ப் போறது' என்கிறதுக்குச் சாரூப்பியமென்கிற நாமத்தைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட சாரூப்பியமானது பலிக்கும் வகை ஏதென்றால், விறகானது அக்கினியிலே [3]லயமாய்ப் போறாப்போலே, சீவனுது பராபர வஸ்துவிடத்திலே

1. அழிவு 2. வளர்ச்சி 3. இரண்டறக் கலத்தல் 4 (கி.)

லயமாய்ப்போம். அதுக்காகச் சிவனுனது குறையற்ற பாக்கிய மென்கிற மோக்ஷத்தை யடைந்துதென்று அங்கீகரிக்கிருர்கள். இதெல்லாம் முழப் பைத்தியக்காரன் நித்திரை பண்ணுகிற போது கண்ட சொப்பனம்போல இருக்கிறதென்று எல்லாருஞ் சொல்லுகிறதுக்கு இடமுண்டாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. இந்த சாரூப்பியமானது தப்பறை சொரூபமாய் இருக்கிறதென்று ஒப்புவிக்கத்தக்கதாக உண்டாயிருக்கிற ஞாயங்களுக்குள் ஒன்றிரண்டு மாத்திரம் எடுத்துக்காட்டக்கடவோம். அதில் முந்தின ஞாயமாவது: சகல நன்மை சுரூபமாயிருக்கிற பராபர வஸ்துவினிடத்திலே வேறொரு வஸ்து லகித்துப் போகிறது என்கிறது சர்வ ஞாயங்களுக்கும் ஒவ்வாத தப்பறையாய் இருக்கிறதென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. அதேனென்ருல், இயாதொரு வஸ்துவிடத்திலே வேறேயொரு வஸ்துவானது லகித்துபபோனல், லகிப்பிக்கிற வஸ்துவானது அபிவிர்த்தியையும் விகாரத்தையும் அடைகிறது என்று பிரத்தியக்ஷமாய்க் கண்டுகொண்டு வருகிருேம். இந்த விஷயமானது லோகத்திலே காணப்படுகிற சகல லயங்களுடைய விதங்களினுல் ஒப்புவிக்கப்படுகிறதினுலே, முழுதும் மதிகெட்ட மிலேச்சன் இதிலே சந்தேகப்பட்டாற் படுவாஜெழியப் புத்திமானுயிருக்கிறவன் அப்படிபபட்ட பிரத்தியக்ஷ விஷயத்திலே லவலேசமும் சந்தேகப்படமாட்டான். அதேனென்ருல், அக்கினியிலே விறகு முதலான [1]திரவியங்கள் லகிச்சுப்போனுல், அக்கினியானது அபிவிர்த்தியையும் விகாரத்தையும் அடையவில்லை யென்று சொல்லக்கூடுமோ? அதேனென்ருல், அப்படிப்பட்ட அபிவிர்த்தியும் விகாரமும் பிரத்தியக்ஷமாய்க் காணப்படும் என்கிறதுக்காக முழு மதி கெட்ட பயித்தியக்காரன் அப்படிப்பட்ட அபிவிர்த்தியும் விகாரமும் உண்டாயிராதென்று சொல்லவுங் கருதவும் மாட்டான்.

**(i) சீரணத்திலும் விளக்கிலும் ஏற்படும் விகாரம்.** இந்தச் சத்தியமுள்ள மேரையை மற்ற லயங்களுடைய விதங்களிலே யோசிக்கக்கடவது. அதேதென்ருல் பக்ஷிக்கப்படுகிற பக்ஷணதி பானங்களும் சீரணத்தின் சத்தியினுலே லகிச்சுப்போம் என்கிறதுக்காகச், சரீரத்துக்கு அபிவிர்த்தியும் விகாரமும் வருகிறதென்று பிரத்தியட்சமாய்க் காணப்படும். [2]தீபத்திலே எண்ணெயானது அக்கினியிலே மெள்ளமெள்ள லகிச்சுப்போகிறதுக்

1. பொருள்கள் 2. விளக்கு

காக, அக்கினியானது இடைவிடாமல் நவமாய்ச் [1]செனிக்கிறது என்கிறதுக்குச் சந்தேகப்படுவாருண்டோ? இப்படிச் சொல்லா விட்டால், எண்ணெயில்லாமல் தீபம் அணைந்து போகிறதுக்குக் காரணமேது? அவ்வண்ணமே அக்கினியிலே லகிச்சுப்போகிற [2]ஸ்நேகம் இல்லாதபோது, நவமான அக்கினி பிறவாமல் இருக்கிறதென்கிறது இதே தீபம் அணைந்துபோகிறதுக்குக் காரணமாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. இந்தடைவாகப் பக்ஷணாதி பானங்கள் சீரணத்தின் சத்தியினாலே சரீரத்திலே அனேக நாள் லகித்துப்போகாமல் சரீரத்தின் மாங்கிஷம் இரத்தம் முதலானதுகள் நவமாய்ப் பிறவாமல் இருக்கிறதென்கிறது, சரீரமானது அழிந்துபோகிறதுக்கு இதே சாக்ஷத்துக் காரணமாய் இருக்கிறதொழிய மற்றப்படியல்ல.

**(ii) பல தீர்த்தங்கள் தோன்றும் வகை (ஆசிரியர் காலத்துக் கொள்கைப்படி).** இந்தச் சத்திய விசேஷமானதுகள் அனேகம் பேர் அறியாத லயங்களினாலே கண்டுபிடிக்கலாய் இருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. ஆனால் அநேகம் பேர்கள் இப்படிப்பட்ட லயங்களைச் சுத்தமாய் அறியாததினால், அதுகளிலே நாம் ஒப்புவித்துக்கொண்டு வருகிற சத்தியத்தைக் கண்டுபிடிக்கிறது அரிதென்று சொல்லத்தகும். அதுகளுக்குள் ஒன்றிரண்டு நாம் சொல்லிக்காட்டி, அனேகம் பேர்கள் அறியாதிருக்கிற ஒரு விசேஷத்தை வெளிப்படுத்துவோம் என்கிறதுக்காகப் பலபல தீர்த்தங்கள் உற்பவிக்கிறதிலே ஆச்சரியப்படுகிறதுக்குக் கணக்கில்லாதிருக்கச் செய்தே, அதுக்காக அனேகம் பேர்கள் ஆச்சரியப்பட்டு, அத்தைத் தெய்வீகமென்று சொல்லுகிறார்களே, அவர்கள் முழுதும் மிலேச்சராய் இருக்கிறார்களென்று நம்மால் அறிவிக்கப்படுகிற ரகசியத்தினாலே கண்டுபிடிக்கலாயிருக்கும். ஆனால், கண்டுபிடிக்கிறதுக்கு அருமையாயிருக்கிற இந்தரகசியத்தைத் தெளிவாக சந்தேகமில்லாமல் நிச்சயம் பண்ணுகிறதுக்குப் பூதியங்களிடத்திலே உண்டாயிருக்கிற குணங்களையும் பூதியங்கள் பரஸ்பரமாக ஒன்று ஒன்றிலே லகித்துப்போய் ஒரு பூதியமானது வேறொரு பூதியமாய்ப் பிறக்கிற மேரையையும், அனேகம்பேர்கள் அறியாமலிருக்கிறார்களே, அதெல்லாத்தையும் கொஞ்சத்துக்குள்ளே வெளிப்படுத்தக் கடவோம். இதிலே [3]அசைக்கப்பட்ட ஆகாசமானது வாயு என்று சொல்லப்படும் என்கிறதினால், இவ்விடத்திலே வாயுவுக்கும் ஆகாசத்துக்கும்

1 பிறக்கிறது  2 எண்ணெய்  3 அசையும் ஆகாசம்: வாயு

பின்னபேதமில்லை என்று அங்கீகரித்து அப்பால் நடத்தத்தக்க விசேஷங்களை நடத்துவோம்.

*குளிரும் [1]சுஷ்கமும் [2]பிரிதிவிக்குண்டான பிரதான குணங்களென்று சொல்லப்படும். ஈரமுங் குளிரும் [3]அப்பவுக்குரிய பிரதான குணமென்று சொல்லவேண்டியிருக்கிறது. [4]தேஜசாகிற [5]அக்கினிக்கோவென்றால், சுஷ்கமும் உஷ்ணமுமென்கிற பிரதான குணங்கள் இருக்கிறதென்று அங்கீகரிக்கக்கடவோம். கடைசியாய் ஆகாசமானது உஷ்ணத்தையும் ஈரத்தையும் பிரதானமாகக்கொண்டிருக்கிறதென்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்திய விசேஷமாகும். இது இப்படியிருக்கையிலே, அந்தந்தக்குணத்தை அந்தந்தப் பூதியனானது போக்கடிக்கிறதினால் அப்படிப்பட்ட லயத்தின் நிமித்தமாக ஒரு பூதியனானது வேறே பூதியனைப் பிறக்கிறதென்கிற விசேஷத்தைத் திறந்திருக்கிற கண்ணுகிற மதியுள்ளவன் கண்டுபிடிப்பானேயொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே பிரிதிவியானது அனேகம் தண்ணீருக்குள்ளே யிருந்து, [1]சுஷ்கம் என்கிற குணத்தை நாள் வட்டத்திலே முழுதும் போக்கடித்த பிற்பாடு, மண்ணானது சலத்திலே லகிச்சுப்போய் மண்ணானது சலமாய்ப் போம் என்கிறதுக்குச் சந்தேகப்படக் கணக்கில்லை. இந்தடைவாகச் சலமானது அனேக மண்ணுக்குள்ளேயிருந்து ஈரமென்கிற குணத்தை முழுதும் போக்கடித்து அப்படிப்பட்ட லயத்தினிமித்தமாக அது குளிரும் [1]சுஷ்கமும் அடைந்திருக்கிற மண்ணைப் பிறக்கும் என்கிறதுக்குச் சந்தேகப்படக் கணக்கில்லை.

ஆகாசத்திலே நடந்துவருகிற ஒரு விசேஷ மேரையை மிகவும் [6]பராமரிசிக்க அது நிமித்தமாக ஆச்சரியப்படுகிறதுக்கு இடமில்லாத விஷயத்திலே ஆச்சரியப்படலாம். [7]சுபாவமான வர்த்தமானமாவது தெய்வீக விஷயமாயிருக்கிறதென்று சொல்லி, அது நிமித்தமாக அறியாதபேர்கள் கன பாவத்தைக் கட்டிக்கொள்ளுவார்கள். அதெப்படியென்றால், ஈரமும் உஷ்ணமுமென்கிற இரு குணங்களைக் கொண்டிருக்கிற ஆகாசமானது யாதொரு காரணத்தினாலே உஷ்ண குணத்தை முழுதும் இழுந்துபோய்க் கனமான சீதள குணத்தைக் கொண்டிருந்தால், அப்படிப்பட்ட லயத்தினிமித்தமாக ஆகாசமானது சலமாய்ப் போம் என்கிறதுக்குச் சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கத்தக்க

1 வரட்சி 2 மண் 3 நீர் 4-5 தீ 6 ஆராய 7 இயற்கையான நிகழ்ச்சி *ஈண்டு விளக்கப்படும் கொள்கை ஆசிரியர் காலத்தது.

தாகும். இது நிமித்தமாக மகாமகாப்பட்ட [1]பருவதங்களுடைய [2]ரந்திரமுதலான கெபிகளுக்குள்ளே சூரியனுடைய[3] ரஸ்மியானது லவலேசமானாலும் பூராததினால், அப்படிப்பட்ட ரந்திரங்களுக்குள்ளேயுங் கெபிகளுக்குள்ளேயுங் கனமான குளிர் உண்டாயிருக்கச் செய்தே, அந்த ஸ்தலங்களுக்குள்ளே பூருகிற ஆகாசத்தினுடைய உஷ்ணமானது லகிச்சுப் போனதினால், ஆகாசமானது சலமாய்ப் பிறக்குமென்கிறதுக்குத் தப்பாது. அப்படிப்பட்ட சீதளமுள்ள ஸ்தலங்களுக்குள்ளே பூருகிற ஆகாசமானது சலமாய்ப் பிறக்கப்பிறக்க, அதில் நின்று இடைவிடாமல் ஊற்றாய் ஊறி ஸ்தல விசேஷத்துக்குத் தக்கது அதிகமானாலுங் கொஞ்சமானாலும் பிறப்பட்டு ஒடிவரும்.

(iii) இயற்கை நீருக்கு பாவநீக்கும் ஆற்றல் இல்லை. ஆனால் ஆகாசமானது இந்தச் சுவாவ மேரையாகத் தண்ணீராய்ப் பிறக்கிறதை அறியாத பேர்கள் பருவதங்கள் முதலான ஸ்தலங்களில் நின்று பிறப்படுகிற தண்ணீரைப் பார்த்து ஆச்சரியப்பட்டு. அது தெய்வீகமான விசேஷமாயிருக்கிறதென்று சொல்லுகிறதும் போராமல், அப்படிப்பட்ட தீர்த்தங்கள் நிமித்தமாகப் பாவ நிவாரணம் உண்டென்றும், ஒரு ஞாயமுமில்லாமல் அங்கீகரிக்கிறார்கள். நீதி ஞாயத்துக்கு ஒத்திராத இப்படிப்பட்ட அங்கீகாரத்து நிமித்தமாக நவமான பாவங் கட்டிக்கொள்ளுகிறார்களொழிய, உண்டாயிருக்கிற பாவத்தைப் போக்கடிக்க மாட்டார்கள் என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால், ஆகாசமானது தண்ணீராய்ப் பிறக்கிற சுபாவ மேரையைத் தெய்வீக அற்புதமென்று சகல நீதி ஞாயத்துக்கும விருத்தமாக அங்கீகரிக்கிறார்கள். அதேதென்றால், அந்தந்த வஸ்துவானது வருகிற மேரையை அறியாமல் இருந்தோமானால், அதை அறியாமலிருக்கிறோமென்று சொல்லக்கணக்கொழிய, அது தெய்வீக அற்புதமாய் இருக்கிறதென்று கனபாவமில்லாமல் சொல்லவுங் கருதவுங் கூடாது. இது தவிரத், தேவவிஷய ஞானமும் பத்தியும் பாவத்தினிமித்தமாகப் பச்சாத்தாபமும் இல்லாமல் அப்படிப்பட்ட தீர்த்தங்கள் தலையிலே விழுந்ததினாலே மாத்திரம் பாவங்கள் போமென்கிற அங்கீகாரமானது சகல பாவங்களை எளிசாய் மனுஷனைவ பண்ணுகிறதுக்கு வழி திறக்கிற உபாயமென்று சொல்லப்படுமொழியப் பாவ நிவாரணம் அதனாலே சித்திக்குமென்கிற விசுவாசமானது அநியாய விசுவாசமென்று சொல்லக் கடவது.

1 மலைகள் 2 பிளவு, வெடிப்பு, சந்து 3 கதிர்

இத்தை வரைக்கும் நம்மாற் பண்ணப்பட்ட பிரசங்கத்தினாலே ஒரு வஸ்துவினிடத்திலே ஒரு வஸ்துவானது லயிச்சுப் போகிறது நிமித்தமாக நிக்கிற வஸ்துவானது அபிவிருத்தியையும் விகாரத்தையும் நவமான [1] அங்கிஷங்களுடைய [2] உற்பத்தியையும் [3]விபத்தியையும் அடைகிறதென்கிற சத்திய விசேஷமானது அந்தந்த லயத்தை யரான்சு கொண்டதினால் நம்மால் ஒப்புவிக்கப்பட்டாப் போலேயாச்சுது. ஆகையாலே, அந்தந்த வஸ்துக்கள் வேறே வஸ்துக்களிடத்திலே லயிச்சுப் போகிறாப் போலே, மனுஷ சீவனென்கிற வஸ்துவானது சர்வேஸ்வரனாகிற பராபர வஸ்துவிடத்திலே லயிச்சுப் போகலாமென்று அங்கீகரிச்சோமானால், பராபர வஸ்துவாகிற சர்வேசுரனானவர் அபிவிருத்தியும் பலபல விகாரங்களையும் அடைகிறாரென்று அங்கீகரிக்கிறது என்கிறதுக்குச் சமானமாகும். அல்லது சர்வேசுரனானவர் அபிவிருத்தியையும்விகாரத்தையும் அடையாமல் எப்போதும்போலேயிருந்து, அவரிடத்திலே சீவனானது லயிச்சுப் போச்சுதென்று சொல்லுகிறதுக்கு ஞாயமும் [4] இலக்ஷணமுங் காணமாட்டாது.

27·2 கடவுளிடம் விகாரமில்லாவிடில், புதிய கூற்று அவருக்குப் பொருந்தாது. இதன்றியே, ஒரு வஸ்துவினிடத்திலே [5]அந்தர்கத மேரையாய்ப் புது வசனமானது நவமாய்ச் சொல்லப்படுகிறதுக்கு வஸ்துவினிடத்திலே யாதொரு விகாரம் உண்டாயிருக்கவேணும். அதேதெனனால், விகாரமில்லாவிட்டால் வஸ்துவினிடத்திலே நவமான வசனம் சொல்லப்படுகிறதுக்குக் கணக்கில்லை. அவ்வண்ணமே, சீதளமும் கறுப்புமாயிருக்கிற வசனமானது வஸ்துவினிடத்திலே முன்னே சொல்லப்படாமற பின்னே நவமாய்ச் சொல்லப்பட்டால், வஸ்துவினிடத்திலே விகாரம் அவசியமாய வரவேணும் என்கிறதுக்குத் தப்பாது. அத்தன்மைபோல் இந்த விசேஷ சீவனுடைய லயத்தைக் கொண்டிருக்கிற வசனமானது இந்நாள் வரைக்கும் சர்வேசுவரனிடத்திலே உண்டாயிராமல் இப்போது நவமாய்வந்துதென்று சொன்னோமானால்,சர்வேசுரனிடத்திலே விகாரம் வந்துதென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. அதேதெனன்றால், [6] சிருஷ்டி [7] சாசனம் இதுமுதலான விசேஷங்கள் சர்வேசுரனுக்குப் [8]பிறத்திப்பட்ட நிமித்தங்களாய் இருக்கக்கொள்ள, அதுகளிலே

1 பகுதி 2 தோற்றம் 3 கேடு 4 அடையாளம் 5 intrinsic (உள்ளுற) 6 படைத்தல் 7 ஆளுதல் 8 extrinsic

சர்வேசுனுக்கு விகாரம் வரத்தேவையில்லையென்றுஅங்கீகரிக்கப் பட்டாலும், சீவனுடைய லயமானது இவர்கள் சொல்லுகிறுப் போலே, சர்வேசுரனிடத்திலே அந்தர்கதமாய் இருக்கக் கொள்ள, நரசீவனுனது சர்வேசுரனிட த்திலே லயமாய்ப் போய்ச் சர்வேசுரனுய்ப் போச்சுதென்கிற வசனமானது, சர்வேசுரனிடத் திலே [1]ஆரோபிக்கப்பட்டால், சர்வேசுரனிடத்திலே அபிவிருத்தி யும் விகாரமுமில்லாமல் அப்படிப்பட்ட வசனமானது நவமாய் நடக்கமாட்டாது. ஆனுல், சர்வேசுரனுனவர் அபி விர்த்தி முதலான விகாரங்களை அடையலாமென்கிற முழுத் தப்பறை விசேஷத்தைத் தோஷத்துரோகததுக்குப் பயப்படாத [2] பதிதனுனவன் அங்கீகரிப்பாலொழிய மற்றப்படியல்ல. ஆத லாலே இப்படிப்பட்ட லயத்தின் நிமித்தமாகச் சீவனுனது மோக்ஷத்தை அடையலாமெனகிற மேரையானது ஒப்புக் கொள்ள ஒண்ணுத முழுத்தப்பறை விசேஷமாய் இருக் கிறதென்று சொல்லக்கடவோம்.

27.3 (i) **அழிக்கும் அழிபடும் பொருள்களுக்கு முரண்பாடு இருக்கவேண்டும்.** இதன்றியே, சகல லயங்களுடைய மேரையை விசாரிக்கும்மிடத்தில், யாதொரு வஸ்துவிடத்திலே வேறொரு வஸ்து லகிச்சு அந்த வஸ்துவாய்ப் போனுல், லயமாய்ப்போகிற வஸ்துவுக்கு விருத்தமான குணமானது லகிப்பிக்கிற வஸ்து விடத்திலே உண்டாயிருக்கக்கொள்ள, லகிச்சுப்போகிற வஸ்து வானது அத்தோடே இருக்கமாட்டாமல் அப்படிப்பட்ட விருத்த குணத்தினுலே வஸ்துவானது லகிச்சுப்போய் அந்த லயத்தினி மித்தமாக அது வேறே வஸ்துவாய்ப் போம் என்கிறதுக்கத் தப்பாது. இதெல்லாம் ஒன்றிலே காட்டப்பட்டால், இதிலே நடக்கிற மேரையானது மிகவும் விளங்கும். அதெப்படி யென்முல், அக்கினியிடத்திலே அத்தியந்த சுஷ்கமும் உஷ்ண மும் என்கிற இரண்டு குணங்களைப் பார்க்குமிடத்திலே, இந்த இரண்டு குணங்களானதுகள் விறகானதுக்கு அத்தியந்த விருத் தங்களானதுகளாய் இருக்கக்கொள்ள, விறகானது அக்கினி யோடே கூட இருக்கமாட்டாமல், அதுகளாலே விறகானது லகிச்சுப்போய் விறகானது அக்கினியாய்ப் போமென்று அங்கீ கரிக்கக்கத்தக்க விசேஷமாகும். இந்த மேரையானது மற்றுண் டான சகல லயங்களிலே யோசிக்கத்தக்கதாகும். அதேதென்முல், ஒரு வஸ்துவிடத்திலே வேறொரு வஸ்துவானது லகிச்சுப்போ

1 predicate 2 ஒழுங்கீனன்

அந்த வஸ்துவாய்ப் போகிற மேரையானது விசாரிக்கப்பட்டால், லயிச்சுப்போகிற வஸ்துவுக்கு விருத்தமான குணமானது லயிப் பிக்கிற வஸ்துவிடத்திலே உண்டாய், அத்தாலே லயிக்கத்தக்க வஸ்து லயிச்சுப்போமொழிய மற்றப்படியல்ல.

(ii) காக்கும் கடவுளுக்கும் காக்கப்படும் ஆன்மாவுக்கும் அத்தகைய முரண்பாடு இல்லை; ஆ க வே லயமாகவில்லை. இது இப்படியிருக்கச்செய்தே, பராபர வஸ்துவிடத்திலே மனுஷ சீவனானது லயிச்சுப்போகலாமென்று சம்மதித்தோமானால், நரசீவனுக்கு விருத்தமான குணமானது சர்வேஸ்வரனிடத்திலே உண்டாயிருக்கிறதென்று அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. சகல நன்மை சொரூபமானவருமாய், நரசீவ தயாபரனானவருமாய் இருக்கிற கர்த்தனிடத்திலே நரசீவனை உண்டாக்கிறதுக்கு அனந்த பெலமும் நரசீவனை ரக்ஷிக்கிறதுக்கு அளவறுக்கப் படாத கிருபையும் விளங்கி யிருக்கிறதென்று கண்டு வருகிறோமொழிய, நரசீவனைக் கெடுக்கிற குணமானது சகல நன்மையான பராபர வஸ்துவினிடத்திலே உண்டாயிருக்கிறதென்று சொல்லவும் கருதவும் கூடாது. அதேதெனன்றால் நன்மையினுடைய சுபாவ சுரூபத்தை விசாரித்தோமானால், நன்மையானது நன்மையைப் பிறப்பிக்குமொழியக் கேவலம் லயத்தை மாத்திரம் பிறப் பிக்கிறதைக் காணோம். அவ்வண்ணமே, சகல நன்மைசுரூபமான கர்த்தரானவர் தமக்குத் துரோகிகளாயிருக்கிற பாவிகளை நரகத்திலே தள்ளி, அவர்களுக்கு ஆக்கினையிடுகிறதிலே முதலாய் நன்மை பிறப்பிக்கிறாரென்று சொல்ல வேண்டியிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. அதேதெனன்றால், தம்முடைய திவ்விய நீதியானது விளங்கிற தென்கிறது நன்மையாயிருக்கிறது என்கிறதுக்குச் சந்தேகமில்லை. பாவிகளுக்கு ஆக்கினையிடுகிறதிலே அவருடைய நீதி விளங்கிறதினால் அப்படிப்பட்ட அவசரத்திலே முதலாய்க் கர்த்தரானவர் நன்மையைப் பிறப்பிக்கிறாரென்று அங்கீகரிக்கக்கடவோம். நரசீவனுடைய லயத்திலோவென்றால் ஒரு நன்மையானாலும் பிறப்பிக்கமாட்டாரென்று அங்கீகரிக்கக்கடவோம். அதேதெனன்றால், அப்படிப்பட்ட லயத்தினிமித்தமாகச் சகல நன்மை சுரூபமாயிருக்கிற சர்வேசுரனிடத்திலே நவமான நன்மை பிறந்துதென்று சொல்லக்கூடாது. லயிச்சுப்போன ஆத்துமத்தினிடத்திலே நன்மை பிறக்கலாமென்று முழுப்பயித்தியக்காரனாலுஞ் சொல்லவும் கருதவும் மாட்டான்

அப்படியே அனந்த பெல சுரூபமாயிருக்கிறவர் சீவனை யுண்டாக்கினுப்போலே, சீவனை அழிக்கலாம் என்று ஒப்புக்கொள்ளத் தக்க சத்திய விசேஷமாயிருந்தாலும், சீவனை இப்படிக் கெடுக்கிறதில் ஒரு அற்ப நஷ்டமையானுலும் பிறக்கிறதென்று காணும் என்கிறதுக்காகச் சீவனுடைய லயத்தைச் சர்வேசுரன் பண்ணுர் என்று சொல்லுகிறதுக்குப் பலபல ஞாயங்கள் காண்பிக்கிற தொழியக் கிருபை சுரூபமான கர்த்தரானவர் தம்முடைய அனந்த பெலத்தினுலே சீவனைக் கெடுக்கிருரென்று அங்கீகரிக்கிறதுக்கு ஒரு அற்ப ஞாயமானுலும் உண்டாயிருக்கிறதென்று சொல்லிக்காட்டக் கூடாது. ஆதலாலே, தெளிவற்ற பாவிகளினுலே ஞாயத்துக்கு விருத்தமான இப்படிப்பட்ட லயமானது வெறுமனே கற்பிக்கப்பட்டதென்று ஒரு அற்பமாகிலும் சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கக்கடவோம்.

27.4 (i) அழிவிலெல்லாம் ஏதாவது நன்மை வருகிறது. இதன்றியே லோகத்திலே நடந்துவருகிற எண்ணப்படாத வஸ்துக்களுடைய அன்னியோன்னிய லயங்களை விசாரிச்சோமானுல், அந்தந்த லயத்தனிமித்தமாக எப்போதும் யாதொரு வஸ்துவாகிய நன்மையானது நவமாய்ப் பிறக்கிறதென்று கண்டிருக்கிறோம். இல்லாவிட்டால், தன்னிடத்திலே வஸ்துவை லகிப்பிக்கிற வஸ்துவானது அபிவிர்த்தியடையும் என்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே, லகிச்சுப்போகிற பூதியனுனதுவேறே பூதியனைப் பிறக்கிறதென்றும், லகிச்சுப்போகிற விரையினுலே நவமான விருக்ஷமானது முளைக்கிறதென்றும், லகிச்சுப்போகிற விறகினுலே அக்கினிக்கு நவமான அபிவிர்த்தி எய்துகிறதென்றும் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்தடைவாகக் கெர்ப்ப உற்பத்தியினுடைய வகையிலேயும் பிராணிகளிடத்திலே நடந்துவருகிற பக்ஷணத்தின் சீரணமேரையிலேயும் எப்போதும் லயத்தினிமித்தமாக யாதொரு நன்மையாகிற வஸ்துவானது நவமாய் உற்பவிக்குமென்று சந்தேகப்படுகிறதுக்கு இடமில்லை. ஆனபடியினுலே லயமென்னப்பட்ட யாவும் இயாதொரு நவமான நன்மையாகிற வஸ்துவுக்கு அவசியமாய் ஒரு விதமாகக் காரணமாய் இருக்கிறதென்று சந்தேகமற ஒப்புக்கொள்ளத்தகும்.

(ii) சீவன் கடவுளிடம் அழிவதால் நன்மையேயில்லை; ஆகவே அது அழிவதில்லை. இது இப்படியிருக்கச்செய்தே, சர்வேசுரனிடத்திலே சீவனுடைய லயத்தினிமித்தமாக வொரு

நன்மையானாலும் பிறவாதபோதே, இவர்களால் வெறுமனே கற்பிக்கப்படுகிற இப்படிப்பட்ட லயமானது சகல லயங்களைக் காட்டிலும் [1]நிசித லயமென்றும், வியர்த்த நாசமாயிருக்கிற தென்றும் அங்கீகரிக்கத்தக்கதாகும். ஆதலாலே, சீவனுக்கு இவர்களால் கற்பிக்கப்படுகிற இப்படிப்பட்ட லயமானது ஒரு நன்மைக்கானாலுங் காரணமாகாததுமாய் வியர்த்தமானதுமாய், நிசிதமானதுமாய் இருக்கிறதென்று சொல்லவேணும். அப்படிப் பட்ட லயமானது சகல நன்மை சுரூபமான பராபர வஸ்துவி னிடத்திலே உண்டாகுமென்றும், நாசமாய்ப் போன சீவனு டைய குறையற்ற பாக்கியமாகிற மோட்சமானது அப்படிப் பட்ட லயத்திலே அடங்கி இருக்கிறதென்றும் முழுப்பயித்தியங் கொண்டவன் சொற்பனத்திலே கண்டு அத்தை அங்கீகரித்தா னென்று சொல்லத்தகுமொழிய, மிஞ்சிருக்கிற அற்பப்புத்தி மானுவன் இப்படிப்பட்ட லயத்தைச் சொல்லவுங் கருதவுங் மாட்டான் என்கிறதுக்குத்தப்பாது.

27.5. (i) ஆன்மாவின் முழு அழிவில் மோட்சம் இராது. இதன்றியே இவர்களால் சீவனுக்குக் கற்பிக்கப்படுகிற மோட்ச மானது [2]கேவல லயமென்று சொல்லத்தகுமொழிய, அது வேறே ஒன்றுமில்லையென்று சொல்ல வேணும். இப்படிப்பட்ட கேவல லயமோவென்றால், அது அபேக்ஷிக்கப்படத் தக்க விஷயமாயிராது. ஆகையாலே அப்படிப்பட்ட லயமானதுக்கு அனந்த ஞான சுரூபியாயிருக்கிற கர்த்தரானவர் காரணமா யிருக்கிறதில்லையென்று சொல்லுகிறதுக்கு ஞாய முண்டாயிருக் கிறதொழிய மற்றப்படியல்ல. ஆனால் சர்வேஸ்வரனிடத்திலே சீவனுனது லயமாய்ப்போய், அப்படிப்பட்ட லயமானதின் நிமித்த மாகச் சீவனுனது மோட்சத்தை அடைகிறது என்கிற அசத்திய விசேஷத்தை புத்தியினுடைய பரிபூரண குறைச்சலினாலே சிலர் கற்பிச்சார்களென்று இன்னும் இரண்டு ஞாயங்களினாலே பிரத் தியக்ஷமாய் ஒப்புவிக்கக்கடவோம். அதெப்படியென்றால், குறை யற்ற பாக்கியமும் செல்வமும் திரித்தி குடுக்கிற சந்தோஷமும் மோட்சமாயிருக்கிறதென்கிற பக்ஷமானது புத்திமான்கள் என்னப்பட்ட யாவர்க்குஞ் சம்மதமாய் இருக்கிறது என்கிற துக்குத் தப்பாது. இந்தக் குறையற்ற நன்மையைப் பார்க்கும் போது, அத்தைச்சீவனுனது அனுபவிக்கத்தக்கதாகச் சீவனுனது உண்டாயிருக்க வேணுமென்று அவசியமாய்ச் சொல்லவேண்டி யிருக்கும்.

1 தகாத 2 முழு அழிவு

**(ii) அழிந்தவனால் பேரின்பம் அனுபவிக்கமுடியாது.** ஆகையாலே லயமாய்ப்போன சீவனானது இப்படிப்பட்ட பரமானந்தமாகிற மோக்ஷத்தை அனுபவிக்கிறது என்று அங்கீகரிக்கிறவன் முழு மதிகெட்டவனாய் இருக்கவேணும் என்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது அதேதெனன்றால், பரமானந்தமாகிற நன்மையானது ஒரு றுக்குச் சுபாவமாய் இருந்தாலும், அல்லது ஒரு வஸ்துவினிடத்திலே அது ஆதேயமாய் இருந்தாலும் இப்படிப்பட்டவஸ்து இரண்டும்உண்டாய்இருக்கவேணுமென்றுசொல்லவேணுமொழிய, இல்லாத வஸ்துவானது பரமானந்த சுரூபமாயிருக்கவுங்கூடாது; பரமானந்தத்துக்கு அது ஆதாரமாயிருக்கலாமென்று சொல்லவுங்கூடாது. அப்படிச் சொல்லாவிட்டால், இனிமேல் பிறக்கத்தக்க மனுஷனானவன் இப்போது சந்தோஷத்தை அனுபவிக்கிறானென்றும், வித்தியாபாரகனாய் இருக்கிறானென்றும், ராச்சியத்தை ஆளுகிறான் என்றுஞ் சொல்லலாயிருக்குமென்று அங்கீகரிக்க வேணும். இத்தொகைப்பட்ட வசனங்களை அங்கீகரிக்கிறதெ கிறது சர்வேஸ்வரனிடத்திலே லயமாய்ப்போன சீவனானது பரமானந்தமாகிற குறையற்ற பாக்கியமான மோட்சம் அனுபவிக்கிறதென்று சொல்லுகிறதுக்கு ஒக்கும். இதிலே ஸ்திரமாகக் கண்டுபிடிக்கத்தக்க சமான் விசேஷமாவது: இனிமேல் வரத்தக்க சீவனானதும் லயமாய்ப்போன சீவனானதும் விசாரிக்கப்பட்டால், அப்படிப்பட்ட சீவன்களிரண்டுக்கும் இல்லாத் தனமானது சமானம் என்றிருக்கையிலே, இனிமேல் வரத்தக்க சீவனானது ஒன்றுமில்லை யென்று சொல்லப்படுமாப்போலே லகிச்சுப்போன சீவனானது ஒன்றுமில்லை யென்று சொல்லவேண்டியிருக்கிறது. ஒன்றுமில்லாததோ வென்றால், சந்தோஷத்தையுங் குறையற்ற பாக்கியத்தையும் அனுபவிக்கலாமென்று சொல்லுகிறவன் முழுப் பயித்தியக்காரனாய் இருக்கிறானென்று கேட்கவேணுமோ?

**(iii) அழிந்தவர்களுக்கும் இனிப்பிறக்க இருக்கிறவர்களுக்கும் வேறுபாடில்லை.** இதிலே ப்ராமரிசிக்கத்தக்கதாவது: சீவனானது சர்வேஸ்வரனிடத்திலே லயமாய்ப் போச்சுதென்று இவர்கள் வெறுமனே கற்பிச்சாலும், அத்தாலே நம்மாற் சொல்லப்பட்ட ஞாயமானது தள்ளுண்டுபோமென்று விசாரிக்கக்கடவதல்ல. அதேதென்றால், ஒன்றிலே லகிச்சுப்போன வஸ்துவானது இனிமேல் பிறக்கத்தக்க வஸ்துவைப்போலே ஒன்றுமில்லையென்று சொல்லவேணும்; ஆதலாலே இனிமேல் பிறக்கத்

தக்க வஸ்துவுக்கு கடவாத வசனங்கள் ஒன்றிலே லயமாய்ப் போன வஸ்துவுக்கு கடவாதென்று சொல்லக்கடவோம். அதெப் படியென்றால், இனிமேல் முளைக்கத்தக்க விருக்ஷமானதுக்கு 'இப் போது துளிர்க்கிறதென்கிறதும் பூக்கிறதென்கிறதும் பழுக்கிற தென்கிறதும்,' இத்தொகைப்பட்ட மற்றுண்டான வசனங்களும் செல்லாதென்று சொல்ல வேண்டியிருக்கும். அத்தன்மைபோல் அக்கினியிலே லயமாய்ப் போன மரத்துக்கு அத்தொகைப்பட்ட வசனங்கள் [1]ஏற்றக்குறைச்சல் இல்லாதே செல்லாதென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல.

(iv) அழிந்த கடவுளின் பேரின்பம் அழிபட்ட ஆன்மாவைச் சாராது. இது தவிர அக்கினியிலே மரமானது லகிச்சுப்போயிருக் கையிலே உஷ்ணமாயிருக்கிறது என்கிறதும் பிரகாசிக்கிறதென் கிறதும் இத்தொகைப்பட்ட மற்றுண்டான வசனங்களும் அக் கினி யென்கிற பொருளுக்குச் செல்லுமொழிய அக்கினியிலே லயமாய்ப் போன மரத்துக்குச் செல்லுமென்று முழுப் பயித் தியக்காரனாயிருக்கிறவன் முதலாய்ச் சொல்ல மாட்டான். அம்மருவாதியே, பராபர வஸ்துவிடத்திலே சீவனானது லய மாய்ப் போகிறதென்று இவர்கள் கற்பித்திருக்கையிலே, பரா மானந்த சுரூபமுமாய்க் குறையற்ற பாக்கியமுமாய் இருக்கிற தென்கிற மேரைகளும் இத்தொகைப்பட்ட மற்றுண்டான மகிமையுள்ள வசனங்களும் பராபர வஸ்துவினிடத்திலே செல்லுமென்று சொல்லக்கடவோமொழியப், பராபர வஸ்து விடத்திலே லயமாய்ப்போன சீவனுக்கு அத்தொகைப்பட்ட மகிமையுள்ள வசனங்கள் செல்லுமென்று யாதொருத்தன் அங்கீகரித்தால் அவனை முழுப்பயித்தியக்காரனென்று சொல்லு கிறதுக்குச் சந்தேகப்படக் கணக்கில்லை. அப்படியே, பரமா னந்த முதலான மகிமையுள்ள வசனங்கள் பராபர வஸ்துவிடத் திலே லகிச்சுப்போன சீவனுக்குச் செல்லாதபோதே, அப்படிப் பட்ட லயத்தினாலே சீவனானது குறையற்ற பாக்கியமாகிற மோட்சத்தை அடையுமென்கிற பக்ஷமானது முழுதும் அபத்தத் தப்பறைக்குள்ளே [2]முந்தின தப்பறை விசேஷமாயிருக்கிற தென்று ஒரு அற்பமாகிலுஞ் சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கக் கடவோம்.

27.6 முனிவர் முதலியோர் தவம் செய்வது தமது அழிவுக் காகவா? இற்றைவரைக்கும் நம்மாற் சொல்லப்பட்ட ஞாயங்கள்

1 அறிவின் குறைச்சல்? 2 முதல்

தவிர, இன்னமொரு ஞாயத்தினாலே இப்படிப்பட்ட லயத்தைக் கற்பிக்கிறவர்களுடைய முழுப்பயித்தியத்தைச் சந்தேகமில்லாமல் ஒப்புவிப்போம். அதேதென்றால், புத்தியுடைத்தான பொருளென்னப்பட்டயாவும் தான் இருந்துகொண்டு சுகத்தையுஞ் சந்தோஷத்தையும் மற்றுமுண்டான மகிமைகளையும் அடையதக்கதாக ஆசைப்பட்டுத் தனது லயத்தை அருவருத்து வெறுக்குமொழிய, அத்தை ஒருக்காலும் அபேக்ஷிக்கத்தக்கதில்லை. இது காரணமாக இவர்களால் கற்பிக்கப்படுகிற லயமாகிற மோட்சத்தைப் புத்தியுடைத்தான சீவனானது அருவருத்து அத்தைவெறுக்கிறதுக்கு ஞாயமுண்டாயிருக்கிறதொழிய, புத்தியுடைத்தான சீவனானது அத்தை அபேக்ஷிக்கிறதுக்கு ஓரற்பமாகிலும் இடங்காண மாட்டாது. இந்த ஞாயத்துக்கு வேறொரு ஞாயத்தைக் கூட்டி இவர்களுடைய அறிவின் குறைச்சலை அத்தாலே இன்னங் கண்டுபிடிக்கலாயிருக்கும். அதேதென்றால், புத்திமானாயிருக்கிறவன், முன் சொன்னாப்போலே தான் நன்றாய் இருந்து கொண்டு சுகத்தையுஞ் சந்தோஷத்தையும் மற்றுண்டான மகிமையுள்ள பாக்கிய நன்மைகளையும் அனுபவிக்க வேணுமென்று பிரயாசைப்படுவானொழியத் தான் கெட்டுப்போகவேணுமென்று பிரயாசைப்பட்டு வருந்துகிறவன் முழுமதிகெட்ட பேர்களுக்குள்ளே முதிர்ந்த பயித்தியங் கொண்டவனாய் இருக்கிறானென்று சொல்லத்தகுமொழிய மற்றபடியல்ல.

அப்படியே சீவனுடைய குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷமானது, முன்சொல்லப்பட்டவிதமாகச், சீவனுடைய லயத்திலே அடங்குமென்கிற பக்ஷமானது மெய்யானதானால், சீவனானது மோக்ஷ ஆசைப்படுகிறது என்கிறது சீவனானது கெட்டுப்போக வேணுமென்று அபேக்ஷிக்கிறதுக்குச் சமானமாகும். இது நிமித்தமாக மோக்ஷத்தை அடைய வேணுமென்று தபோசெபத்தியான முதலான புண்ணியங்களைப் பண்ணுகிறதிலே மிகவும் பிரயாசப்படுகிற சன்னியாசிகள் முதலான மகாத்துமாக்களாய் இருக்கிற பேர்கள் தாங்கள் கெட்டுப்போகிறதுக்குப் பிரயாசப்படுகிறார்களென்று சொல்லவேண்டியிருக்கிறது. அவ்வண்ணமே சன்னியாசிகள் முதலான மகாத்துமாக்களாயிருக்கிறபேர்கள் தாங்கள் கெட்டுப்போக வேணுமென்று ஆசைபட்டுப் பிரயாசைப் படுகிறார்கள் என்கிறதுக்காக, மற்றப் பாவிகளைக்காட்டிலும் சன்னியாசிகள் முதலான மகாத்துமாக்கள் முழு மதிகெட்ட பாவிகளாயிருக்கிறார்களென்று அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. இத்

தனே அபத்தங்கள் முதலான வேறே அனேகந் தப்பறை விசேஷங் களுக்குச் சம்மதப்படாதபடிக்குச், சாரூப்பிய மேரையிலே சீவனைது மோக்ஷத்தை அடையலாமென்கிற கற்பனையானது தெளிவற்ற பாவிகளினுலே வெறுமனே கற்பிக்கப்பட்ட தப்பறை யாயிருக்கிறதென்று சந்தேகமில்லாமல் ஒப்புக்கொள்ளக் கடவோம்.

இனிமேல், மோக்ஷம் எதிலே அடங்குமென்று வெளிப்படுத் துகிறதென்கிறது கிரமமாகும். இப்படிப்பட்ட பரம ரகசியத் தை நாம் வெளிப்படுத்தும்படிக்கு அத்தைக்கண்டுபிடிக்கிறதுக்கு உபயோகமாயிருக்கிற சில ரகசிய வர்த்தமானங்களை அறிய வேண்டியிருக்கிறது. அதுகளை வருகிற நாலு பாடங்களுக்குள்ளே அடைவாக விரித்துரைத்த பிற்பாடு, சீவனுடைய குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷமானது இன்னதென்றும் எதிலே அடங்கு மென்றுஞ் சர்வேசுரனுடைய கிருபாகடாக்ஷத்தினுலே எவ்வள வாகிலும் வெளிப்படுத்தத்தக்கதாகப் பிரயாசைப்படுவோம்.

இருபத்தேழாம் பாடம் முற்றும் (கி. ?)

## இருபத்தெட்டாம் பாடம்

**28·1 மோட்சம் குறைவற்ற நன்மையாகும்.** அஞ்ஞான மாகிற அந்தகாரத்திலே திரிகிற மனுஷரானவர்கள், பராபர வஸ்து இன்னதென்று அறியாமற், பராபரவஸ்துவை நிர்ணயம் பண்ணுகிறதிலே எண்ணப்படாத அபத்தங்களைக் கற்பித்தாப் போலே, மனுஷ சீவன் இன்னதென்று சுத்தமாய் அறியாமல், அதினுடைய தோற்றமாகிற உற்பத்தி விஷயத்தையும் அதுக் குண்டான சுபாவ மேரையும் அதுக்கு வரத்தக்க ஒடுக்கமாகிற அவஸ்தையையுஞ் சொல்லும்போது, பரஸ்பர விருத்தங்களானது களுமாய், நீதி ஞாயதருக்கு ஒவ்வாததுகளுமாய்ச், சலமில்லாமல் சத்தியம் இன்னதென்று அறிகிறதுக்குங் கரையேறுகிறதுக்குந் தாற்பரியமுள்ள புத்திமானுக்குப் பொருந்தாததுகளுமாய் இருக் கிற எண்ணப்படாத அபத்தத் தப்பறைகளை, நித்திரையிலே சொற்பனங் காண்கிறபேர்களைப் போலே, கற்பித்துக்கொண்டு வந்தார்களொழிய, 'பொய் சொன்னுலும் பொருந்தச் சொல்ல வேணும்' என்கிற வசனத்தின் மேரையை அனுசரித்தார்களில்லை. ஆனபடியினுலே, அப்படிப்பட்ட பொய்யோடே பொருந்தியிருக்

கிற் எண்ணப்படாத துர்மதங்களைச் சட்டைபண்ணி [1]ஆக்ஷேபம் பண்ணுமல், கரையேறுகிறதுக்கு மோக்ஷ விஷயத்திலே அறிய வேண்டியன சத்திய விசேஷத்தைக் [2]கொஞ்சத்துக்குள்ளே சொல்லக்கடவோம். அதேதென்றால், மனுஷ சீவனுக்கு வரலான செல்வங்களுக்குள்ளே மோக்ஷ பாக்கியமானது அவதிரூபமான நன்மையாயிருக்கக்கொள்ள, அப்படிக்கொத்த நன்மைக்கு அப்பாலிருக்கிற நன்மை இல்லாதே போகவேணும்; அல்லது அதுக்கு மேலான நன்மை வரலாமென்று சொன்னோமானுல், அவதியான நன்மை என்கிற நாமமானது அதுக்குச் செல்லுமென்று சொல்லக்கூடாது. ஆதலாலே, எந்த நன்மைக்கு மேலாக வரத்தக்க நன்மையில்லாவிட்டால், அது கடைசியாக அவதிரூபமான பாக்கியமென்று சொல்லத்தகுமொழிய, மற்றப்படியல்ல.

இது இப்படியிருக்கையிலே, சீவனுனது அவதி ரூபமான நன்மையையடைந்தால், அப்படிப்பட்ட நன்மைக்கு மேலாகச் சீவனுன்து ஆசைப்படத்தக்க வேறே நன்மையில்லாதேபோக வேணும் என்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது. ஆகையாலே, அவதி ரூபமான செல்வமானது சீவனுக்குண்டான ஆசையைக் குறையற்ற பிரகாரமாகப் பூரித்து, அப்படிப்பட்ட பரமானந்த சுரூபமான பாக்கியத்திலே சீவனுனது முழுகி இளைப்பாறுகிறுப் போலே பிரவேசித்து, அது நிமித்தமாகச் சீவனுனது ஒன்றிலே யானுலும் குறைபடாமல், தனது [3]பாத்திரத்துக்குத் தக்க அளவு பிரமாணமாகச் சகல நன்மை விஷயங்களிலே குறையற்ற [4]சமற்பகத் திரித்தியைச் சீவனுனது அடைய வேணுமென்று சந்தேகமற அங்கீகரிக்கத் தக்க சத்திய விசேஷமாகும். இது காரணமாகச் சீவனுனது குறையற்ற நன்மையை அடைகிறதினுல் சகல விஷயங்களிலே ஆசையைப் பூரிக்கிற பாக்கியத்தை அனுபவிக்குமென்று சொல்ல வேணுமொழியக், குறையுள்ள நன்மை [5]லாபத்தினிமித்தமாக அப்படிப்பட்ட குறையற்ற செல்வத்தைச் சீவனுனது அடையமாட்டாதென்று சொல்லக்கடவது.

**28.2. கடவுள் ஒருவரே குறையற்ற நன்மை: அவரை நேரடிக் காட்சியால் ஆன்மா அடையும். ஆனுல் ஊனக்கண்ணுல் பார்க்கமுடியாது.** இது இப்படி இருக்கையிலே, உண்டாக்கப்பட்ட நன்மையெல்லாந் தனித்தனியே எண்ணினேமானுலும், சகல நன்மைகளெல்லாங்கூட்டி ஒன்றுக விசாரித்தோமானுலும்,

1. மறுக்காமல் 2. சுருக்கமாய் 3 கொள்ளும் அளவு 4. செம்மையான 5 பேற்றிலுலே

மட்டோடு உண்டாக்கப்பட்ட நன்மையாயிருக்க கொள்ள, குறையுள்ள நன்மையாயிருக்குமென்று அங்கீகரித்தத்தது மொழியக், [1]குறையற்ற தனமானது அதுக்குச் செல்லுமென்று சொல்லக் கடவோமல்ல. பராபர வஸ்து ஒன்றே தானுயிருக்கிற வஸ்துவாயிருக்கக் கொள்ள மட்டில்லாமற் சகல நன்மை சுருபமாயிருக்கிற நன்மையென்று சொல்லத்தகும் என்கிறதுக் குத் தப்பாது. ஆதலாலே, அப்படிப்பட்ட பராபர வஸ்துவை அடைந்த சீவனுனது குறையற்ற செல்வத்தையுந் திரித்தி குடுக்கிற பரமானந்தத்தையும் அனுபவிக்கிறதுக்கு வல்லதா யிருக்குமொழிய, உண்டாக்கப்பட்ட குறைவுள்ள சகல நன்மை களுடைய லாபமானது சீவனுக்குக் கிடைச்சாலும் அப்படிப் பட்ட நன்மைகளினுலே வருகிற பிரையோசனத்தின் காரண மாகச் சீவனுடைய ஆசை பூரிக்கப்பட்டுச் சகல நன்மை விஷயங் களிலே அது திரித்தியடையுமென்று சொல்லவுங் கருதவுங் கூடாது. அவ்வண்ணமே, சீவனுனது குறையற்ற வஸ்துவாகிற கர்த்தனையடைகிறதினுல் திருத்தி குடுக்கிற குறையற்ற பாக்கிய மாகிற மோக்ஷத்தை யடையலாமென்று சொல்லும்போது, பராபர வஸ்துவை சீவனுனது [2]குறையற்ற பிரகாரமா யடையத் தக்க மேரையை நிச்செயம் பண்ணக்கடவோம். அதேனென்றுல், போன பாடங்களிலே ஒப்புவித்தாப்போலே, பராபர வஸ்துவைக் குறையற்ற பிரகாரமா யடைகிறதுக்குச் சான் னித்திய சாரூப்பியாதி மேரைகளாயிருக்கிற அபத்தத் தப்பறை கள் உபயோகமாயிராதபோதே, பராபர வஸ்துவைப் பிரத்தி யக்ஷமாய்ச் சீவனுனது கண்டால், அப்படிப்பட்ட பிரத்தியக்ஷ தெரிசனத்தின் நிமித்தத்தினுலே சீவனுனது பராபர வஸ்துவைக் குறையற்ற விதமாக அடையுமென்று அங்கீகரிக்கத்தக்க குன்றுத சத்தியமாகும். இப்படிப்பட்ட பரமரகசியத்தை வெளிப்படுத்து கிறதுக்கு முன்னே, லோகத்திலே நடந்து வருகிற ஒரு விசேஷ வர்த்தமானத்தைப் பராமரிசித்துக்கொண்டு சொல்லிக் காட்டு வோம். அதேதென்றுல், இப்படிப்பட்ட விசேஷத்தை நிச்சயம் பண்ணுகிறதென்கிறது அறிய வேண்டின மோக்ஷத்தின் சுபாவ சொரூபத்தைக் கண்டுபிடிக்கிறதுக்கு மிகவும் உபயோகமா யிருக்கிறதுந் தவிர, அஞ்ஞானமாகிற கனமான அந்தகாரத்திலே யிருக்கிற முழு மதி கெட்ட சில பேர்கள் சரீரத்தின் கண்ணுலே சர்வேஸ்வரனைக் காண வேணுமென்று சொல்லிக் கொண்டு வருகிற அபத்த விசேஷத்துக்கு ஆன பிரத்தியுத்தரம் ஆகும்.

1 குறையற்றவீனம் (பா.) 2 செவ்வனே.

**ஐம்பொறிகள் தமக்குரிய புலன்களை (பொருள்களை)யே அறிகின்றன.** அறிய வேண்டின அப்படிப்பட்ட விசேஷமேதென்றால், பலபல விஷயங்களைக் கிரகிக்கிறதுக்குப் பலபல [1]சாக்கிரங்களாகிற இந்திரியங்களை அனந்த ஞான சொரூபமான கர்த்தரானவர் தப்பில்லாக் கிரமத்தோடு கட்டளையிட்டருளினாரென்று கண்டுவருகிறோம். அவ்வண்ணமே சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம் என்கிற அஞ்சு [2]விஷயங்களைத் தனித்தனியே கிரகிக்கிறதுக்கு வெவ்வேறே சாக்கிரங்களாகிற பஞ்சேந்திரியங்கள் கர்த்தன் திருவுளப்படியே உண்டாயிருக்கிறது. அப்படியே சத்தத்தைக் கேட்கிறதுக்குச் [3]சுரோத்திரமுங், கண்டிப்புள்ள பரிமாணத்தைத் தொடுகிறதுக்கும் உஷ்ண முதலான குணங்களைக் கிரகிக்கிறதுக்கும் [4]ஸ்பரிச சக்தியும், வர்ணதிரூபங்களைக் காண்கிறதுக்கு [5]சக்ஷுவும், ருசியென்னப்பட்ட யாவையும் அனுபவிக்கிறதுக்கு [6]ரசனுதி ஸ்தலங்களும், [7]இஷ்டாநிஷ்டகெந்தங்களை மோருகிறதுக்கு [8]ஆக்கிருண சக்தியாகிற நாசியும் உண்டாயிருக்கையிலே, ஒவ்வொரு சக்தியாகிற இந்திரியமானது தனித்தனியே தனது விஷயத்தைக் கிரகிக்குமொழிய ஒரு இந்திரியமானது வேறே இந்திரியத்தினுடைய விஷயத்தைக் கிரகிக்கலாமென்று சொல்லவுங் கருதவுங் கூடாது. அப்படியே கண்ணானது வர்ணதி ரூபமாகிற தனது விஷயத்தை கிரகிக்கிறதுக்கு வல்லதாயிருக்கிறதொழிய, சத்தத்தையும் மற்றுமுண்டான மூன்று விஷயங்களையுங் கிரகிக்க மாட்டாது. நானுவிதமுள்ள சப்தங்களைக் கேட்டுக் கிரகிக்கிறதென்கிறது சுரோத்திரமாகிற இந்திரியம் ஒன்றுக்குமே கூடுமொழிய மற்றப்படியல்ல. சக்ஷுவுக்குஞ் சுரோத்திரத்துக்குஞ் சொன்ன அடைவுள்ள மேரையை மற்றுண்டான மூன்று இந்திரியங்களிடத்திலேயும் [9]யோசிக்கக்கடவோம்.

இதுக்குக் காரணமேதென்னில், அந்தந்த விஷயமானது தன்னைக்கிரகிக்கிற சத்தியாகிற இந்திரியத்துக்கு விசேஷ சுபாவத்தைக் கொடுக்கிறதென்கிறதுக்குச் சந்தேகமில்லை. ஆனபடியினாலே 'அந்தந்தச் சத்தியாகிற இந்திரியமானது தனது சுபாவசுரூபத்தைத் தான் கிரகித்துக்கொண்டு வருகிற விஷயத்தினாலே வாங்கிறது' என்கிறது சந்தேகமற ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமாகும். இதுக்கு அர்த்தமாவது: தப்பில்லாக் கிரமத்தோடு சகலத்தையும் நடத்தி வருகிற கர்த்தரானவர் அந்தந்த

1 organ, கருவி 2 புலன்கள் (objects) 3 செவி 4 ஊறு 5 கண். 6 நாக்கு 7 நல்ல, தீய மணங்கள் 8 முகர்தல் (மூக்கு) 9 சேர்

விஷயத்தைக் கிரகிக்கிறதுக்கு மாத்திரம் ஆன சுபாவ சுரூபத்தை அந்தந்த சத்தியாகிற இந்திரியத்துக்குக் கட்டளை யிட்டருளினதொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே, வர்ணாதி ரூபங்களைச் சத்தியாகிற சுரோத்திரிய இந்திரியமானது கிரகிக்கலாமென்று சொன்னோமானால், சுரோத்திரிய இந்திரியமானது தனது சுபாவ சுரூபத்தைப் போக்கடிச்சு சக்ஷுவாய் இருக்கிறதென்று சொல்லுகிறதுக்கு ஒக்கும். ஆதலாலே பொருளாகிற சுரோத்திரமானது சுரோத்திரமாயிராமல் [1]அச்சுரோத்திரியமாய் இருக்கிறதென்று அங்கிகரிக்கிறதுக்குச் சமானம். அப்படிப்பட்ட அபத்த தப்பறையை முழுமதி கெட்டவனானாலும் ஒப்புக்கொள்ள மாட்டானென்று சொல்லுகிறதுக்குத் தப்பாது.

28.3 **பொறி தனக்குரியதாகாத பொருளை உணராது.** இற்றை வரைக்கும் நம்மாற் பண்ணப்பட்ட பிரசங்கத்தினாலே கண்டு பிடிக்கிற ஒரு சத்திய விசேஷமுண்டு. அதாவது அந்தந்தச் சத்தியானது தனது விஷயத்தின் [2]விஸ்தாரத்துக்குள்ளே அடங்காத விசேஷப பொருளைச் சத்தியானது கிரகிக்கலாமென்று சொல்லுகிறது, ஞாயத்துக்குங் கிரமத்துக்கும் முழுதும் விருத்தமான அபத்தத் தப்பறையென்று சொல்லத்தகும். இது நிமித்தமாகச் சப்தமாகிற விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கினதைக் கிரகிக்கிறதுக்கு மாத்திரஞ் சுரோத்திரமானது வல்லதாய் இருக்குமொழிய, சத்தமாகிற விஷத்தின விஸ்தாரத்துக்குள்ளே அடங்காததாயிருக்கிற ரூப, ரச முதலான மற்ற விஷயங்களை யெல்லாம் சுரோத்திரமானது கிரகிக்கமாட்டாதென்று பூரண அங்கீகாரத்தோடு ஒப்புக்கொள்ளக்கடவோம். அத்தன்மை போலேப் பிரகாசத்தோடே கூடியிருக்கிற வர்ணமுள்ள ரூபமாகிற விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கியிருக்கிற விசேஷ பரிமாணங்களைக் கிரகிக்கிறதுக்கு மாத்திரந் [3]திரிஷ்டியானது வல்லதாயிருக்கிறதொழியப் பிரகாசிக்கப்பட்ட வர்ணமுள்ள பரிமாணங்களாயிராத பொருளென்னப்பட்டவியாவும் சக்ஷுவுக்கு [4]அகோசரமாயிருக்கிறதினால், அது சக்ஷுவினாலே காணப்படாதென்று சந்தேகமற அங்கீகரிக்கத்தக்கதாகும். இப்படிச் சொல்லாவிட்டால் கண்ணானது [5]கந்தத்தையும் நாசியானது சத்தத்தையும் கிரகிக்கலாமென்கிற அபத்தத்துக்குச் சம்மதப்படுகிறதுக்கு ஒக்கும்.

1 செவியில்லாதது. 2 பரப்பு. 3 கண். 4 எட்டாதது 5 மணம்

**28.4 உடலற்ற கடவுள் பொறியின் வாய்ப்படாதபடியால், பொறிகள் அவரை உணரமுடியாது; திவ்விய பிரகாசத்தால் அவரைக் காணலாம்.** (i) இது குன்றாத சத்தியமாயிருக்கையிலே, *சரீரியாயிராத பொருள் சரீரத்தின் கண்ணுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே யடங்காத பொருளாயிருக்கச் சரீரியாயிராத பொருளானது கண்ணுக்கு [1]கோசரமாய் இராததினால் கண்ணானது சரீரியாயிராத பொருளைக் காணலாமென்று சொல்லுகிறதென்கிறது முதிர்ந்த பயித்தியத்திலே கூட்டென்று சொல்லக் கடவோம். இது காரணமாக சரீரமில்லாதவருமாய் [2]அகண்டவிதமாக ஞானம் பலம் இதுகள் முதலான சகல நன்மையானவருமாயிருக்கிற பராபர வஸ்துவைச் சரீரத்தின் கண்ணாலே காணத்தக்கதாகத் தனக்குக் காட்டச் சொல்லுகிறவன் முழுப் பயித்தியக்காரருக்குள்ளே கேவலம் மதி கெட்டவனென்று அவனைச் சொல்ல வேணுமொழிய மற்றப்படியல்ல. அப்படிப்பட்ட புத்தியினனா யிருக்கிறவன் பராபரவஸ்துவைச் சரீரத்தின் கண்ணாலே கிரகிக்கப்படலாமென்று சொல்லுமாப்போலே, காதாலேயும் மூக்காலேயும் சர்வேசுரனானவரைக் கிரகிக்கப்படலாமென்று சொல்லுவானென்று அங்கீகரிக்க வேணும். அதேதென்றால், நாசியினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே சர்வேஸ்வரனானவர் அடங்காத பொருளாயிருக்குமாப்போலே சுரோத்திரத்தினுடையவுங் கண்ணினுடையவும் விஷயத்தில விஸ்தாரத்துக்குள்ளே அடங்காதவராயிருக்கிறாரென்கிறதுக்குத் தப்பாது. ஆகையாலே, திரிஷ்டியினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்காத சர்வேஸ்வரனைத் தனது கண்ணாலே தான் காணத்தக்கதாகத் தனக்குச் சாவேசுரனைக் காட்ட வேணுமென்று சொல்லுகிறவன் மூக்காலேயுங் காதாலேயுஞ் சர்வேசுரனைத் தான் கிரகிக்கிறதுக்குச் சர்வேசுசனைக் குருவானவன் தனக்குக் காட்டவேணுமென்கிற அபத்தத்தைச் சொல்லுவான்.* (ii) *இது தவிர, மனுஷனானவன் சரீரத்தின் கண்ணாலே கண்டுவருகிற வஷ்துவென்னப்பட்ட யாவையும் நாய், பன்னி முதலான செந்துக்களுங் கண்டு வருகிறதென்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே, 'சரீரத்தின் கண்ணாலே பராபர வஸ்துவைக் காண்பேன் என்று சொல்லுகிறவன் கழுதை, நாய், பன்னி இதுகள் முதலான செந்துக்கள் சர்வேசுரனைக் காணலாமென்று சொல்லுகிறதுக்கு ஒக்கும்.* (iii)*இதன்*

1 எட்டியது 2 பகாத முறை (simple)

றியே, 'காணப்பட்டதெல்லாம் உண்டாக்கப்பட்டுது' என்கிற ஞாயத்தினாலே, சரீரத்தின் கண்ணாலே சர்வேஸ்வரனைக் காணலாமென்று சொல்லும்போது, சர்வேசுரனானவர் உண்டாக்கப்பட்ட பொருளாயிருக்கிறாரென்று சொன்னாப்போலே ஆச்சுது. அப்படியே சர்வேசுவரனானவர் உண்டாக்கப்படட்ட பொருளாயிருககிறாரென்று சொல்லும்போது, அவர் தானாயிருக்கிற பொருளுமாய், அனாதியுமாய, எப்போதுமிருக் கிறவருமாய், சகல நன்மையானவருமா யிருக்கமாட்டாரென்று சொன்னதுக்குச் சமானமாகும். இப்படிப்பட்ட முழு அபத்தத் தப்பறைகளுக்குச் சம்மதப்படுகிறவன் சர்வேசுர னில்லையென்று அங்கீகரித்துக் கொண்டு வருகிறானென்று சொல்லக்கடவோம். சர்வேசுரன் இல்லையென்று அங்கீகரிக்கிற தெளிவற்ற பாவியானவன் சகல தப்பறைகளுக்கும் பாவங்களுக்கும் அநியாயமான சரித்திரங் களுக்கும் சாக்ஷாத் காரணமாயிருக்கிற அஞ்ஞானத்திலே. விழுந்து கெட்டானென்று சொ லக்கடவோம். ஆனபடியினாலே சகல [1]துரித சாகரத்திலே மனுஷனானவன் விழுந்து அமிழ்ந்திப் போகாதபடிக்கு, மட்டில்லாத சகல நன்மை சுரூபமாயிருக்கிற கர்த்தரானவரைச் சரீரத்தி கண்ணாலே மனுஷனானவன் காணமாட்டானென்று இருமனப்படாமல் பரிபூரண அங்கீகாரம் பண்ணித் தானாயிருக்கிற சகல 5 மையான கர்த்தரைச் சீவனானது கண்ணாகிற புத்தியைக் கொண்டு [2]திவ்விய பிரகாசத்தினாலே காணலாமென்று ஓரற்பமானாலும் சந்தேகமில்லாமல் ஒப்புக்கொள்ளக் கடவான்.

**28·5 உத்தம பொருளாகிற கடவுள் உட்படப் பொருள் அனைத்தும் அறியப்படும்.** அதேதென்றால், சரீரசம்பந்தமாயிராத ஞான முதலான விருத்திகளுக்குக் காரணமாயிருக்கிற சத்தியாகிற புத்தியின் விஷயத்தை விசாரிக்குமிடத்தில், [3]ஆகுதலாகிற பொருள் என்னப்பட்டதெல்லாம் ஞானத்துக்குக் காரணமாயிருக்கிற புத்திக்கு விஷயமாய் இருக்கிறதென்று சொல்லத் தகும். அதேதென்றால், சத்தியாகிற புத்தியானது ஞான விருத்திக்குக் காரணமாயிருக்கும்போது. ஞான விருத்தியினாலே கிரகிக் கப்படலானதாய் இருக்கிற [4]பொருளென்னப்பட்ட யாவும் [5]ஞான விருத்திக்குக் காரணமாயிருக்கிற சத்தியாகிற புத்திக்கு [6]விஷயமாய் இருக்கிறதென்று சொல்லக் கடவோம். உண்டா

1 துன்பக்கடல் 2 lumen gloriae (திருவருள்) 3 Possibile (ens)
4 res 5 actus cognitionis 6 object

யிருக்கிற சகல பொருள்களுக்குள்ளே தானுயிருக்கிற பொருளாகிற சர்வேசுரனுனவர் பொருளென்றும் [1]உத்தம பொருளென்றும் அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். அதேதனென்றுல், பொருளும் ஆகுதலும் என்னப்பட்ட யாவையும் பார்க்கும்போது, ஆகுதலும் பொருளும் 'இருக்கிறது'[2] என்கிற மேரை நிமித்தமாகச் சர்வேசுரனே ஆகுதலென்றும் பொருளென்றுஞ் சொல்லவேணு மொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினுலே. உண்டாக்கப்பட்ட ஆகுதலாகிற பொருள்களுக்குந் தானுயிருக்கிற பொருளாகிற சர்வேசுரனுக்கும் அளவற்ற தூரமாயிருந்தாலும், உண்டாக்கப்பட்ட பொருளிடத்திலேயும் தானுயிருக்கிற பொருளாகிற வஸ்துவினிடத்திலேயும் இந்த இரண்டு வகையுள்ள பொருளிடத்திலே 'இருக்கிறது' என்கிற மேரையானது உண்டாயிருக்கிறது என்கிறதினுலே, உண்டாக்கப்பட்ட ஆகுதலாகிற பொருளும் தானுயிருக்கிற பொருளாகிற சர்வேசுரனும் இந்த இரண்டு வகையுள்ள பொருள்கள் பொருளின் சாதாரண சுபாவத்தைக் கொண்டிருக்கிறதென்றும். மெய்யான பொருளானதென்றுஞ் சொல்லவேணு மொழிய மற்றப்படியல்ல. இரண்டும் மெய்யான பொருளாய் இருக்கும்போது இரண்டும்[3] அறியப்படலானதென்று சொல்லக்கடவோம்.

அதேதனென்றுல் [4]கேட்கப்படலானது காதாலேயும், [5]காணப்படலானது கண்ணுலேயுங் கிரகிக்கப்படுகிறதினுல். சத்தமென்னப்பட்ட யாவுங் [6]கண்டிப்புள்ள ரூபமானதும் காதினுடையவுங் கண்ணினுடையவும் விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கியிருக்கிறதென்று சொல்லப்படுமொழிய மற்றப்படியல்ல. அத்தன்மையாலே, [7]அறியலானது என்னப்பட்டதெல்லாம் அறிவினுலே கிரகிக்கப்படலாம் என்கிறபோது, அறியலானது என்னப்பட்ட யாவும் அறிவினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கியிருக்கிறதென்று அங்கீகரிக்கத்தக்க சத்திய விசேஷமாகும் என்றிருக்கையிலே, ஆகுதலாகிற பொருள் என்னப்பட்டதெல்லாம் உண்டாயிருக்கக்கொள்ள, பொருளானது அறியப்படலானதென்று ஒப்புக்கொள்ளத்தக்கதாகும். பொருளென்னப்பட்டதெல்லாம் அறியப்படலானதாய் இருக்கிறபோதே, பொருளென்னப்பட்டதெல்லாம் அறிவினுலே

1 ens supremum 2 ens 3 Cognoscibile. 4 audibile 5 Visibile
6 Material (பரு பொருள்) 7 Cognoscibile

கிரகிக்கப்படலாமென்றும், அறிவினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கியிருக்கிறதென்றுஞ் சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கவேணும்.

அவ்வண்ணமே பொருளென்னப்பட்ட தெல்லாத்தினுடைய [1]அபாவமாகிற சகல [3]ஆகுதலில்லாத்தனம் மாத்திரம் அறிக்கையாகிற ஞானத்தினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கியிராமல், ஞானத்துக்குக் காரணமான புத்தியினுலே சாக்ஷாத் மேரையாகவுஞ் செவ்வையாகவும் அப்படிப்பட்ட சகல ஆகுதலுடைய இல்லாத் தனமானது மாத்திரம் அறியப்படாதென்று சொல்ல வேண்டியிருக்குமாப்போலே, மெய்யான ஆகுதலாகிற சகல பொருளானது அறியப்படலானதாய் இருக்கிறதினுல், அது புத்தியினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கி யிருக்கிறதென்று சொல்லக்கடவோம் என்கிறதுக்குத் தப்பாது. ஆதலாலே, தானுயிருக்கிற பொருளானது மெய்யான பொருளின் சாதாரண சுபாவத்தைக் கொண்டிருந்து, அது மெய்யான பொருளாயிருக்கக் கொள்ள, தானுயிருக்கிற பொருளானது அறியப்படலானது என்றும், அறிவினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கியிருக்கிறதென்றும் ஒப்புக்கொள்ளத்தக்க சத்திய விசேஷமாகும்.

இத்தறுவாயிலே மிகவும் அறியவேண்டின ஒரு விசேஷமுண்டு. அதேதெனில் மிகவுங் கனமான மகிமையுள்ள விசேஷமானது சத்தியினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கப்பட்டதா யிருந்தாலும், அப்படிப்பட்ட கன மகிமையுள்ள விஷயமானது சத்தியினுடைய சுபாவத்துக்கு எட்டாததாய் இருக்கக்கொள்ள, சத்தியினுடைய சுபாவத்தைப் பார்க்குமிடத்திற் சத்தியானது தனது குறையினிமித்தமாக அப்படிப்பட்ட மகிமையுள்ள விசேஷத்தைக் கிரகிக்கமாட்டாதென்று சந்தேகப்படுகிறதுக்குக் கணக்கில்லை. இப்படியிருக்கையிலே சத்தியானது தனது சுபாவத்துக்கு மேலாகத் திவ்விய பிரகாசத்தினுலே ஏற்றப்பட்டு அப்படி ஏற்றப்பட்ட சத்தியானது தனது சுபாவத்தை மீறித் தனது குறையுள்ள சுபாவத்தின்மேலே திவ்விய பிரகாசத்தினுலே உசத்தப்பட்டால், அது தனது சுபாவத்தின் நிமித்தமாகக் கண்டுபிடிக்கக் கூடாத கன மகிமையுள்ள விசேஷத்தைத் திவ்விய பிரசாதத்தினுலே குறையற்ற பிரகாரமாகக் கிரகிக்கலாம் என்கிறதுக்குத் தப்பாது.

1 இன்மை 2 non-ens (impossibile) 3 elevata

**28.6 கதிரவனைப் பார்க்காத வௌவால் அதைக் கடவுள் துணையால் பார்க்கலாம்.** இதெல்லாம் வெளியாகும்படிக்கு ஒன்றிலே [1]ஆரோபித்துச் சொல்லிக்காட்டக்கடவோம். அதெப்படியென்றால், பிரகாசத்தோடே கூடியிருக்கிற நானாவர்ண ரூபங்கள் கண்ணுக்கு விஷயமாய் இருக்கக்கொள்ளக், கன பிரகாசமுடைத்தான சூரியனானது சரீரக்கண்ணினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கியிருக்கிறதென்று சொல்ல வேண்டியிருந்தாலுஞ் சரீரத்தின் கண்ணென்னப் பட்டதெல்லாம் சூரியனைச் [2]சங்கோசப்படாமல் எதிராகப் பார்க்கலாமென்று சொல்லக்கூடாது. அதெப்படியென்றால், வவ்வாலுக்கு உண்டான கண்ணினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே சூரியனானது அடங்கியிருக்கிறதென்று சொல்லவேண்டியிருந்தாலும், வவ்வாலுடைய கண்ணானது சூரியனைக் காண்கிறதுக்கு வல்லதாயிராதென்கிறதுக்குச் சந்தேகமில்லை. அவ்வண்ணமே சரீரியான கண்ணினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே, சூரியனானது அடங்கியிருக்கக்கொள்ள, வவ்வாலுக்குண்டான சரீரியான கண்ணினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே சூரியனானது அடங்கியிருக்கிறதென்று சொல்லக்கடவோம். ஆனபடியினாலே, வவ்வாலுக்கு உண்டாயிருக்கிற சரீரியான கண்ணானது சூரியனைக் காண்கிறதுக்குத் தனது விஷயத்தின் விஸ்தாரத்துக்காப்பாலே கடக்கத் தேவையில்லை என்கிறதுக்குத் தப்பாது.

ஆதலாலே, வவ்வாலினுடைய கண்ணானது சூரியனைக் காண்கிறதுக்குத் தனது விஷயத்தின் விஸ்தாரததைக் கடக்கவேண்டியிராதபோதே, வவ்வாலினுடைய கண்ணானது தனது சுபாவத்தை விடாமல் சர்வேசுரனுடைய திருவுளப்படியே சூரியனைக் காணலாமென்று அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். ஆனபடியினாலே வவ்வாலுடைய கண்ணானது சர்வேசுரனுடைய திருவுளத்தினாலே திடப்பட்டுச் சூரியனைக் காணலாமென்று நாம் சொல்லும்போது, திவ்விய திருவுளத்தினாலே வவ்வாலுடைய கண்ணானது தனது சுபாவத்தை மீறித் தனது குறையுள்ள சுபாவத்துக்கு மேலாகத் திவ்விய சித்தத்தினாலே உயர்த்தப்பட்டு, அது கூசாமற் சூரியனைக் காண்கிறதென்று சொல்லுகிறோமொழிய, வவ்வாலுடைய கண்ணானது சூரியனைக் காண்கிறதுக்குத் தனது விஷயத்தின் விஸ்தாரத்தைக் கடந்ததென்றும், தனது சுபாவத்தைவிட்டு வேறே

1 Apply, illustrate 2 கூச்சம்

சுபாவத்தை உடைத்தானதாய் இருக்கிறதென்றும், இது முதலான அபத்தங்களுக்கும் [1]அர்த்தவிரோத விஷயங்களுக்கும் சம்மதப்படுகிறாரென்றும் சொல்லவுங் கருதவுங் கூடாது. அவ்வண்ணமே, வவ்வாலினுடைய கண்ணானது சங்கோசப்படாமற் சூரியனைக் காண்கிறதென்கிறது அர்த்த விரோதமான அபத்தமாயிராததினால், வவ்வாலுடைய கண்ணானது கூசாமற் சூரியனை எதிராகப் பார்க்கத்தக்கதாகக் கர்த்தரானவர் வவ்வாலுடைய கண்ணுக்குப் பெலங் கொடுக்கலாமென்று சொல்லத்தகும் என்கிறதுக்குச் சந்தேகப்படக் கணக்கில்லை.

**28·7 தன்னிலே முரணாகாத எதையும் கடவுள் செய்யலாம்:** புத்தியை உயர்த்திக் தன்னைக் காணும்படி செய்யலாம். இதுக்கு ஞாயமான காரணமேதெனில் அர்த்தவிரோமாயிராத விசேஷம் என்னப்பட்ட யாவையும் பண்ணுகிறதுக்கு முகிவில்லாத பெல சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் பண்ணமாட்டுவராய் இருக்கிறாரென்று சொல்லவேணுமொழிய அத்தைக் கர்த்தரானவர் பண்ணமாட்டாரென்று கனபாவமில்லாமல் அங்கீகரிக்கப்படாது. அதேதென்றால், அர்த்தவிரோதமான விசேஷங்கள் தவிர, வேறே யாதொரு விசேஷமானது கர்த்தருக்குக் கூடாதென்று சொன்னோமானால், மட்டோடேயிருக்கிற குறையுள்ள பெலத்தைக் கர்த்தனிடத்திலே ஆரோபித்தாப் போலே ஆச்சுது. அப்படிப்பட்ட அபத்தத்தை அங்கீகரிக்கிறது என்கிறது கர்த்தரானவர் தானாயிருக்கவில்லையென்றும். சர்வேசுரனாயிருக்கமாட்டாரென்றும் சம்மதப்படுகிறதுக்கு ஒக்கும். ஆனபடியாலே அப்படிப்பட்ட அபத்தமான தப்பறைக்குச் சம்மதித்து மூழ அஞ்ஞானத்திலே விழுந்து கன பாவத்துக்கு உள்ளாகாதபடிக்கு அர்த்த விரோதமாகாத காரியமென்னப்பட்டதெல்லாம் முகிவில்லாத பெல சுருபமாயிருக்கிற கர்த்தனாலே பண்ணப்படலாமென்று சொல்ல வேண்டியிருக்கிறதினாற், சத்தியினாலே தனது விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கின வஸ்துவென்னப்பட்ட யாவும் சாதிக்கப்படலாமென்று சொல்லுகிறது என்கிறது அர்த்த விரோதமாயிராதபோதே, ஞான விருத்திக்குக் காரணமான புத்தியானது தனது விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கின பொருளென்னப்பட்ட யாவையுந் திவ்விய பிரகாசத்தினாலேயானாலும் அறிகிறதுக்கு வல்லதாயிருக்கிறதென்று சந்தேகமற ஒப்புக்

1. Intinsically repagnant.

கொள்ளத் தக்க சத்தியமாகும். இது நிமித்தமாக, முன்னே யொப்புவித்தாப்போலே, பொருளென்னப்பட்ட யாவும் புத்தியின் விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கியிருக்கக் கொள்ள, [1]சகல குணமே தனக்கெட்டாத பொருளாயிருக்கிற பராபர வஸ்துவைப் புத்தியானது தனது சுபாவ பெலத்தினாலே கண்டுபிடிக்கிறதுக்கு வல்லதாயிராமல், தயாபரனை கர்த்தனுடைய திருவுளப்படியே உண்டாயிருக்கிற திவ்விய பிரசாதத்தினாலே குறையுள்ள புத்தியானது திடப்பட்டு, அது நிமித்தமாகத் தனது சுபாவத்தை மீறித், தனக்கு முடிவில்லாத தூரமாயிருக்கிற பராபர வஸ்துவானது தனது விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கின பொருளாய் இருக்கக்கொள்ள உண்டாக்கப்பட்ட சுபாவ புத்தியானது திவ்விய பிரகாச பெலத்தினாலே பராபர வஸ்துவைக் கண்டடைகிறதுக்கு வல்லதாயிருக்கலாமென்று சொல்லக்கடவோம்.

28.8 ஒரு பொருளை இருளில், வெளிச்சத்தில் காணும் இரு நிலைகள். இத்தறுவாயிலே மிகவும் அறியவேண்டின ஒரு விசேஷமாவது: சரீரத்தின் கண்ணானது தனது விஷயத்தின விஸ்தாரத்துக்குள்ளே அடங்கின பொருளை இரண்டு விதமாகக் கண்டுபிடிக்கலாம். அதேதெனென்றால், இருட்டுக்குள்ளே எண்ணப்படாத ரூபலாவர்ணியமுள்ள பொருளானதைக் கண்ணானது ஒரு பிரகாரமாகக் காணும் என்கிறதுக்குத் தப்பாது. இருட்டிலே காணப்பட்ட ரூபலாவர்ணியமுள்ள பொருளானது பிரகாசத்தோடேகூடச் சரீரத்தின் கண்ணாலே காணப்படலாம் என்கிறதுக்குச் சந்தேகப்படக் கணக்கில்லை. இருட்டிலேயும் பிரகாசத்திலேயும் சரீரத்தின் கண்ணாலே காணப்பட்ட ரூபலாவர்ணியமுள்ள பொருளானது ஒன்றாயிருந்தாலும், இருட்டிலே காணப்பட்ட அந்தப் பொருளானதுதானே ஒரு பிரகாரமாய்க் காணப்பட்டு, அதினுடைய மகிமையுள்ள பிரகாரங் கண்ணுக்குக் காண்பியாமல் மொத்தமாகக் கொஞ்சமாய்க் காண்பிக்கும். அப்படிப்பட்ட ரூபலாவர்ணியமுள்ள பொருளானது பிரகாசத்தோடேகூடக் காணப்பட்டால் அதினுடைய ஒளிவும் அலங்காரமும் ரூபாலாவர்ணியமும் மகிமையுள்ள பிரகாரமுந் துலக்கமாகக் காணப்பட்டு அந்தப் பொருளானது பிரத்தியட்சமாய்க் காணப்படுகிறதினால், அந்தப் பொருளானது இன்னதென்று அறியப்படும் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. இது தவிர, இருட்டிலே காணப்பட்ட ரூபலாவர்ணியமுள்ள பொருளானது இருட்டிலே

1. எந்தக் குணமும்

தன்னைக் கண்டவனுக்கு மிகவுஞ் சந்தோஷத்தை வருத்திவியாமல் பிரகாசத்தோடே தன்னைக் கண்டவனுக்கு மிகவும் சந்தோஷத்தை வருத்திவிக்கும் என்கிறதுக்குத் தப்பாது.

28.9 அதுபோலக் கடவுளை விசுவாசத்தாலும், நேரடியாகவும் காணும் காட்சி நிலைகள். இந்த உவமையினாலே பராபர வஸ்துவைப் புத்தியானது கண்டுபிடிக்கிறதிலே நடந்து வருகிற மேரையை நிச்சயம் பண்ணலாம். அதெப்படியென்றால் மனசுக்கும் வாக்குக்கும் எட்டாததாயிருக்கிற ரூபலாவர்ணியமுள்ள கர்த்தனை உண்டாக்கப்பட்ட புத்தியானது இரண்டு விதமாகக் கண்டடையலாமென்று சொல்லக்கடவோம். அதேதெனில், சகல நன்மை சுரூபமாயிருக்கிற சர்வேஸ்வரனுக்கு இல்லாததைக் கூட்டாமல் உண்டானதை இல்லையென்று சொல்லாமல் கர்த்தரானவர் இப்படிக்கொத்தவரென்று சத்தியப் பிரகாரமாய் புத்தியானது சந்தேகமற்ற நிச்சயமுள்ள விசுவாசத்தினாலே காண்கிறது என்கிறது மனோவாக்குக்கு எட்டாததாயிருக்கிற சவுந்திரியமாகிற சகல நன்மை சுரூபமாயிருக்கிற கர்த்தனைப் புத்தியானது இருட்டிலே காண்கிறதென்று சொல்லத்தகும். அவ்வண்ணமே, கர்த்தரானவர் முகிவில்லாத பெலம் அனந்த ஞான பரமானந்த சுரூபமாயிருக்கிறாரென்று விசுவாச நிமித்தமாக அறியப்பட்டாலும் இப்படிப்பட்ட மகிமைகளுடைய [1]கேவலாகாரத்தை மொத்தமாகப் புத்தியானது ஒருவிதமாய்க் கண்டுபிடிக்கிறதொழிய மற்றப்படியல்ல. இப்படிப்பட்ட விசுவாசமாகிற இருட்டிலே புத்தியினாலே காணப்பட்ட சகல நன்மையான கர்த்தரானவருடைய கிருபையினாலே ஆத்துமத்திலே உதிக்கிற திவ்விய பிரகாசத்தோடே கூடப், புத்தியினாலே (பராபர வஸ்து) பிரத்தியக்ஷமாய்க் காணப்படலாம் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. இப்படிப்பட்ட பிரத்தியக்ஷ தெரிசனத்து நிமித்தமாகப் புத்தியானது பராபர வஸ்துவை அடையும்போது கர்த்தரானவர் இன்னாரென்று மொத்தமாக மாத்திரம் புத்தியானது அறியாமல் முகிவில்லாத அனந்த நன்மையினுடைய கேவலாகாரத்தையும். ஒவ்வொரு நன்மை [2]அகண்டவிதமாகச் சகல நன்மையோடேகூட அற்பமாகிலும் பின்னபேதமில்லாமல் ஒன்றித்திருக்கிற மேரையையும் புத்தியானது பிரத்தியக்ஷமாய்க் காணும் என்கிறதுக்குத் தப்பாது.

1 Simplicity, (கேவலம் : simple ஆகாரம் : form) 2 பாகுபாடின்றி

அவ்வண்ணமே இருட்டாகிற விசுவாசத்தைக்கொண்டு பராபர வஸ்துவாகிற கர்த்தனைக் கண்டுபிடித்து, அவர் திருவுளம் பற்றின குறையற்ற நிர்மல புண்ணிய நெறியை அனுசரித்து நடக்கிறதென்கிறது பாரமான பிரயாசமாயிருக்கக் கொள்ள, அப்படிப்பட்ட விசுவாசமுதலான புண்ணிய சரித்திரங்களானது கனமான வேலையென்று சொல்லப்படும். மனோவாக்குக்கு எட்டாததாயிருக்கிற ரூபலாவர்ணியமாகிற சகல நன்மை சுரூபமான கடவுளைப் பத்தியானது பிரத்தியக்ஷ தெரிசனத்தினிமித்தமாக அடைந்து என்றென்றைக்கும் இடைவிடாமல் நிற்கத்தக்க குறையற்ற [1]பத்தியினாலே அப்படிப்பட்ட சகல நன்மையான சர்வேசுரனோடே சீவனானது தான் கெடாமல் அயிக்கியமாய்ப் போகிறதினால், அப்படிப்பட்ட கடவுளுக்குச் [2]சுகசமாயிருக்கிற முடிவில்லாத நன்மைகளைச் சீவனானது திவ்விய பிரகாசத்தினாலே தனது மட்டுமேரையாகப் பழுதறக்கொண்டிருக்குமென்கிறது பழுதற்ற விசுவாச புண்ணிய சரித்திரங்களுக்குப் பரிபூரண [3]தெக்ஷணையாய் இருக்கிறதென்று சொல்லத்தகும். ஆதலாலே அது குறையற்ற பாக்கியமென்றும் திரித்திகொடுக்கிற பரமானந்தமென்றும் அற்பமால்லுஞ் சந்தேகமில்லாமல் பூரணமான அங்கீகாரத்தோடே ஒப்புக்கொள்ளத்தக்க பரம சத்தியமாகும் என்கிறதுக்குத் தப்பாது.

**28.10 மூக்காலே ஏன் கடவுளை நுகரக்கூடாது?** இந்தப் பாடத்திலே நம்மாற் பண்ணப்பட்ட பிரசங்கத்திலே முழுதும் மதிகெட்ட பேர்களில் சிலர் இந்த விஷயத்திலே சொல்லுகிற அபத்த வார்த்தைக்கு ஆன பிரத்தியுத்தரம் இன்னதென்று கண்டுபிடிக்கலாம். அதேதென்றால், சகல நன்மை சுரூபமாக கர்த்தனைச் சரீரத்தின் கண்ணாலே காணவேணும் என்கிற அபத்தத்தைச் சொல்லுமாப்போலே, மூக்காலே சகல நன்மை சுரூபமாயிருக்கிற பராபர வஸ்துவைக் கண்டுபிடிக்கலாம் என்கிற அபத்தத்தை அங்கீகரிக்க வேண்டியிருக்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால், "சரீரத்தின் கண்ணினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே சகல நன்மை சுரூபமான கர்த்தரானவர் அடங்காத பொருளாயிருக்குமாப்போலே, மூக்கினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அவர் அடங்காத பொருளாயிருக்கிறாரென்று சொல்லக்கடவோம். இது இந்தப் பிரகாரமாகயிருக்கையிலே, சரீரத்தின் கண்ணானது தனது விஷயத்தின் விஸ்

1. அன்பு 2 இயற்கை 3 பரிசு

தாரத்துக்குள்ளே அடங்காத கர்த்தனைக்காணலாமென்கிற அபத்தத்தைச் சொல்லுகிறதென்கிறது [2]நாசிகைதானே தனது விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்காத சர்வேசுரனைக் கிரகிக்கலாம் என்கிற அபத்தத்தைச் சொல்லுகிறது என்கிறதுக்குச் சமானமென்றும் அங்கீகரிக்கத்தக்கதாகும்.'' இதற்கு விடை இப்படிப்பட்ட தெளிவற்ற பாவிகளானபேர்கள் மெய்யாகவே பிழைக்கிறதுக்கு ஆன உபாயமாவது: சரீர சம்பந்தமாயிருக்கிற இந்திரியங்களினாலே சகல நன்மை சொரூபமாயிருக்கிற கர்த்தனைக் கிரகிக்கலாம் என்கிற அபத்தத்தை முழுதும்விட்டு ஞான விருத்திக்குக் காரணமாயிருக்கிற புத்தியின் விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கியிருக்கிற பராபர வஸ்துவைத் திவ்விய பிரசாதத்தைக் கொண்டு புத்தியானது பிரத்தியக்ஷதெரிசனத்து நிமித்தமாக அடையலாமென்று நிச்சயம் பண்ணக்கடவார்கள். (i) சகல ஆசை பூரிக்கிற அப்படிப்பட்ட பழுதற்ற பாக்கியமானது சகல நிர்மல சரித்திரங்களுக்குத் தெக்ஷிணையாயிருக்கக்கொள்ள, சர்வேசுரன் இப்படிக்கொத்தவரென்று மெய்யான விசுவாசத்தினாலே இவ்வுலோகத்திலே அவர்கள் இருட்டிலே காணுகிறப்போலே கண்டுபிடித்து, அருவருப்புள்ள கஷ்டமாகிற பாவத்தை முழுதும் விட்டுப் பரிசுத்த ஆத்துமாக்களாய்ப் போய்ப் பழுதற்ற சகல புண்ணிய நெறியிலே பாவிகளான பேர்கள் நடக்கிறதுக்குத் துணிகிறதென்கிறது. இதே அவர்கள் கரையேறுகிறதுக்கு உபாயமாயிருக்கிறதொழியச், சரீரத்தின் கண்ணாலே சர்வேசுரனைக் காண்போமென்கிற அபத்தமான ஆசையானது முழுதும் அஞ்ஞானத்தோடே கூடியிருக்கக்கொள்ள, அனேகங்கினமான பாவங்களுக்குக் காரணமாயிருக்குமொழிய, ஒரு அற்ப நன்மைக்கானாலும் அது ஏதுவாயிருக்கமாட்டாது.

(ii) இதன்றியே, சரீரத்தின் கண்ணானது காச முதலான வியாதிகளினாலேயும் தூசிகளினாலேயும் மூடப்பட்டால், தனது விஷயத்தைக்காணமாட்டாது போலே ஞானக் கண்ணாகிற புத்தியானது காசமாகிற அஞ்ஞான முதலான பாவக்கஷ்டங்களினாலே மூடப்பட்டால், பராபர வஸ்துவைப் பிரத்தியக்ஷ தெரிசனத்து நிமித்தமாக, வியாதியும் அழுக்கும் [1]அடசியிருக்கிற அப்படிப்பட்ட கண்ணாகிற புத்தியானது அடையமாட்டாதென்று நிச்சயம்பண்ணி, அப்படிப்பட்ட தெரிசனத்தினாலே வருகிற

1 படிந்து (பா. பே) 2 மூக்கு

பாக்கியமாகிற மோட்சத்தை அடையத்தக்கதாகப் பாவிகளான பேர்கள் அபேக்ஷிச்சு. அஞ்ஞான முதலான பாவ கஷ்டங்களை அவர்கள் முழுதும் விட்டபிற்பாடு, ஞான [1]அஞ்சன சலாகையினாலே கூர்மையுள்ள கண்ணாகிற புத்தியுடைத்தானவர்களாயிருக்கிறதுக்கு [2]வருந்தக்கடவார்கள். விசுவாசம், பிரத்தியக்ஷ தெரிசனம் என்கிற இரண்டு வகையினாலே சீவனானது பராபர வஸ்துவைக் கண்டடையலாம் என்று இந்தப் பாடத்திலே சொன்னோமே, சர்வேசுரனைக்கண்டுபிடிக்கலான அப்படிப்பட்ட இரண்டு வகைகளிலே அறியாத பேர்கள் சில சந்தேகங்களைக் கேட்டுக்கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட சந்தேகங்களுக்குச் சுருக்கமாக ஆன பிரத்தியுத்தாரத்தைச் சொல்லிக் குறையற்ற பாக்கியமென்கிற மோட்சமானது இன்னதென்று விபரமாய் இன்னும் விளங்கிறதுக்கு அறியவேண்டின சிறிது பரம ரகசியங்களை வருகிற பாடத்திலே வெளிப்படுத்தக்கடவோம்.

இருபத்தெட்டாம் பாடம் முற்றும் (கி. ?)

## இருபத்தொன்பதாம் பாடம்

**29·1 புத்தியரங்கில் இருக்கும் கடவுளை விசுவாசம், முகமாரக் காணல் என இருவகையாய்ப் புத்தி அறியலாம்.** பிரகாசத்தையும் வர்ணத்தையும் உடைத்தான ரூபமானது சரீரத்தின் கண்ணுக்கு விஷயமாய் இருக்கக்கொள்ள, அப்படிப்பட்ட விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கியிருக்கிறதெல்லாம் சரீரத்தின் கண்ணாலே கிரகிக்கப்படலானதென்று போன பாடத்திலே ஒப்பச் சொன்னாப்போலே யாச்சுது. இந்தடைவாக மற்றுண்டான இந்திரியங்களுடைய வகைகளிடத்திலேயும் யோசிக்கத் தக்கதாகும். அத்தன்மைபோல ஆகுதலாகிற பொருளென்னப்பட்டதெல்லாம் ஞான விருத்திகளுடைய காரணமான சத்தியாகிற புத்திக்கு விஷயமாய் இருக்கக்கொள்ள, இப்படிப்பட்ட விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கியிருக்கிற பொருளென்னப்பட்ட யாவையுந் திவ்விய பிரகாசத்தைக் கொண்டாலும் புத்தியானது பிரத்தியக்ஷமாய்க் கண்டடையலாம் என்று அங்கீகரிக்கக்கடவோம்.

இதிப்படியிருக்கையிலே [3]தானாயிருக்கிற ஆகுதலாகிற பொருள் என்கிற சர்வேசுரனானவர் [4]மெய்யான ஆகுதலும் சத்தியமான பொருளுமாய் இருக்கிறாரென்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமாயிருக்கிறது. அவ்வண்ணமே, சர்வேசுரனை

1 எழுதுகோல் (அஞ்சனம்; மை. சலாகை—கோல்;—கண் மையிடும் கருவி. அஞ்சனம்காரிக்க—மறைபொருளைக்காட்டும் மை?)
2 முயல. 3 Ens a se 4 ஆகுதல்—ens, பொருள்—res

வர் தானுயிருக்கிற ஆகுதலான பொருளென்று அங்கீகரிக்கும் போது, [5]சகலமான ஆகுதலான பொருளுக்குள்ளே [6]சுபாவமான மனோவாக்குக்கு எட்டாததாயிருக்கிற உத்தம பொருளாயிருந்தாலும், அவரை மெய்யான பொருளென்றும், மெய்யான ஆகுதலென்றுஞ் சொல்லக்கடவோமொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே, ஞான விருத்திக்குக் காரணமான சத்தியாகிற புத்தியினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே தானுயிருக்கிற பொருளாகிற கர்த்தரானவர் அடங்கியிருக்கிற பொருளென்று அங்கீகரிக்கவேணும். அப்படியே, புத்தியினுடைய விஷயத்தின் விஸ்தாரத்திற்குள்ளே கர்த்தரானவர் அடங்கின பொருளாய் இருக்கும்போது, தானுயிருக்கிற பொருளான கர்த்தனுக்கும் உண்டாக்கப்பட்ட புத்திக்கும் முகிவில்லாத தூரம் உண்டாயிருக்கிறதினாலே, உண்டாக்கப்பட்ட புத்தியினுடைய சுபாவ பலத்தைப் பத்தும் பத்தாய் விசாரிக்கும்போது அப்படிப்பட்ட தானுயிருக்கிற பொருளாகிற கர்த்தரானவர் உண்டாக்கப்பட்ட புத்திக்கெட்டாத பொருளாயிருந்தாலும், புத்தியினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே பொருளாகிற கர்த்தரானவர் அடங்கியிருக்கக் கொள்ள, அப்படிப்பட்ட பொருளாகிற கர்த்தனைப் புத்தியானது கண்டுபிடிக்கிறதென்கிறது [1]அர்த்த விருத்தமாய் இராது என்று போன பாடத்தில் ஒப்பச் சொன்னாப்போலே யாச்சுது. அது அர்த்த விரோதமாய் இராதபோதே, உண்டாக்கப்பட்ட புத்தியினுடைய சுபாவ பலத்துக்கு அப்படிப்பட்ட [2]தேவ விஷய பிரத்தியக்ஷ தெரிசனமானது சுபாவமாகச் [3]சாத்தியமாகாததாய் இருந்தாலும், ஒன்றான சர்வேசுரனுடைய அளவில்லாத பெலத்தினாலே உண்டாக்கப்பட்ட புத்தியானது அப்படிப்பட்ட திவ்விய தெரிசனத்தை அடையலாமென்று அற்பமாகிலுஞ் சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கத் தகுமொழிய, அதிலே சந்தேகப்படுகிறதுக்குக் கணக்கில்லை.

29.2 ஐம்பொறிகள் உணராத கடவுளை புத்தி எவ்வாறு அறியும்? இதெல்லாம் இப்படியிருக்கையிலே, [4]திவ்விய பிரசாதத்தின் பெலத்தைக் கொண்டு உண்டாக்கப்பட்ட புத்தியானது தானுயிருக்கிற பொருளாகிற கர்த்தனை இருட்டுக்கும் பிரகாசத்துக்கும் சமமான விசுவாசம் பிரத்தியக்ஷ தெரிசன

1 non repugnat 2 கடவுளை நேரடியாய்க் காணல் 3 முடியாதது
4 திருவருள் 5 எல்லாப் பொருள்கள் 6 இயற்கையாய் எட்டாது.

மென்கிற இரண்டு வகையினுலே கண்டடையலாமென்று சொல்லும்போது, இருட்டுக்குச் சரியாயிருக்கிற விசுவாச தெரிசனத்தினிமித்தமாகப் புத்தியானது கர்த்தனைக் கண்டடையலாம் என்கிறதினுலே, சில பேருக்குண்டான சந்தேகமாவது: "[3]பிறத்திப்பட்ட இந்திரியங்களினுலே கிரகிக்கப்பட்ட பொருள்கள் மாத்திரம் புத்தியினுலே கிரகிக்கப்படலாமொழியப், பிறத்திப்பட்ட இந்திரியங்களுக்குள்ளே இராத விஷயமானது புத்திக்குள்ளே உண்டாயிருக்க மாட்டாது' என்கிற ஞாயத்தைப் பார்த்துப் பராமரிசிச்சு ஆராய்ஞ்சு கொண்டோமானுல், விசுவாச தெரிசனத்து நிமித்தமாகப் புத்தியானது கர்த்தனைக் கண்டுபிடிக்க மாட்டாதென்று சொல்லவேணும் போலே [1]காண்பிச்சிருக்கிறது. அதேதென்றுல், சர்வேசுவரன் என்கிற வரிடத்திலே அங்கீகரிக்கத்தக்க திரித்துவ ஏகத்துவமும், ஒப்புக்கொள்ளத்தக்க [2]அகண்ட விதமாகச் சகல நன்மையாகிற திவ்விய சுபாவ சுரூபமும், இத்தொகைப்பட்ட வேறே அனேகந் திவ்விய மகிமையுள்ள விசேஷங்களும் பிறத்திப்பட்ட இந்திரியங்களுக்கு ஆகாத[4] விஷயங்களாய் இருக்கக்கொள்ள, இப்படிப்பட்ட மகிமையுள்ள விஷயங்களானதுகள் புத்தியிடத்திலே இருக்கமாட்டாதென்று சொல்ல வேண்டியிருக்கிறது. அதுகள் புத்திக்குள்ளே இருக்கமாட்டாதென்று சம்மதிக்கும்போது, புத்தியானது அப்படிப்பட்ட மகிமையுள்ள விசேஷங்களை விசுவாச தெரிசனத்து நிமித்தமாகக் கண்டுபிடிக்கமாட்டாதென்று சொல்ல வேண்டியிருக்கிறுப்போலே தோன்றியிருக்கிறது." ஆதலாலே, அனேகம் பேர்கள் இப்படிப்பட்ட சந்தேகப்பட்டு, அந்தச் சந்தேகத்து நிமித்தமாக அவர்கள் தத்தளித்து, இதிலே போம்வழி ஏதென்று அறியாமல் திகைத்துக் கொண்டிருக்கிறுர்கள் என்கிறதினுலே, இந்தச் சந்தேகந்துக்கு ஆன பிரத்தியுத்தாரம் வெளியாகுமபடிக்கு எவ்வளவாகிலும் விரிவாக இதிலே பிரசங்கம் பண்ணக்கடவோம்.

**29.3 இதற்குப் பதில்: அறிவது மூவகைப்படும்.** மனுஷ சீவனுனது ஞான சத்தியாகிற புத்தியைக் கொண்டு விஷயங்களை அறிகிற மேரையைப் பத்தும் பத்தாய் விசாரித்தோமானுல், அப்படிப்பட்ட அறிகிற மேரையானது அறிகிற வகைக்குள்ளே கடைசி அந்தஸ்திலே வைக்கதக்க நீசமான மேரையுள்ள

1 தோன்றுகிறது 2 பகாமுறை 3 Nihil in intelletu quod non prius fuerit in sensu 4 அடங்காத

அறிக்கையாய் இருக்குதென்று அங்கீகரிக்கத் தகுமொழிய மற்றப்படியல்ல (i) அதேதென்றால், [1]பிரத்தியக்ஷ மேரை யானது அறிகிற வகைக்குள்ளே, உத்தம வகையாய் இருக்கச் செய்தே, மனுஷ சீவனுனது [2]மாத்திரை மேரையாக அழிந்து போகிற பவுதிக சரீரத்தோடே கட்டப்பட்டிருக்கிற நாளெல் லாம், பவுதிக சரீரத்துக்கு உண்டான இந்திரியங்களைக் கொண்டு விஷயங்களைப் பிரத்தியக்ஷமாய்க் கிரகிக்கிறதுக்கு வல்லதா யிருக்குமொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே, பிறத்திப்பட்ட இந்திரியங்களுக்கு ஆன விஷயங்களாகிற ரூப கந்தம் இதுகள் முதலான குணங்களை அப்படிப்பட்ட இந்திரியங்களைக் கொண்டு மனுஷ சீவனுனது பிரத்தியக்ஷ மேரையாகக் கிரகிச்சுச், சரீரத்தி னுடைய பிறத்திப்பட்ட இந்திரியங்களுக்கு விஷயமாகாத பொருள்களைச் சீவனுனது பிரத்தியக்ஷமாய், இந்தப் பூமியிலே திரியச் செய்தே, அறிகிறதுமில்லை; பிறந்திப்பட்ட இந்திரியங்களுடைய விருத்திகளுமில்லாமல் விஷயத்தைப் பிரத்தியக்ஷமாய்க் கிரகிக்கிறதுக்கு வல்லதாயிருக்கிறதுமில்லை. இப்படிப்பட்ட வகையுள்ள பிரத்தியக்ஷமான அறிக்கை யானது [3]தப்பனை, புழுக்கள் முதலான செந்துக்களுக்கு உண்டாயிருக்கக் கொள்ளப், பிரத்தியக்ஷ வகையுள்ள தெரிசனங்களுக்குள்ளே இதே கீழ்த்தரமான பிரத்தியக்ஷ தெரி சனமென்றும், இதே அத்தியந்த நீசமான பிரத்தியக்ஷ தெரிசன மென்றுஞ் சொல்லக்கடவோம். இது நிமித்தமாகச் சகல பொருள்களுடைய வேறுபட்டதாயிருக்கிற எண்ணப்படாத சுபா வங்களும் சரீரமில்லாத பொருள்களும் ஞான விருத்திகளும் இத்தொகைப்பட்ட வேறே யனேகம் விஷயங்களும் முன் சொல் லப்பட்ட இந்திரியங்களுக்கு ஆன விஷயங்களாய் இராததினுல், மனுஷ சீவனுனது அழிந்து போகிற பவுதிக சரீரத்தோடே பொருந்தியிருக்கையிலே, அப்படிப்பட்ட வஸ்துக்களைப் பிரத்தியக்ஷமாய்க் கிரகிக்க மாட்டாது.

(ii) இது தவிர, இந்திரிய [4]சன்னிதான ந்திலே இல்லாத [5]பதார்த்தத்தைச் சீவனுனது பிரத்தியக்ஷமாய்க் கிரகிக்கமாட் டாது என்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே, சீவனுனது இந்தி ரிய சன்னிதானத்திலே இருக்கிற பொருளைக் கிரகிச்சதினுற், கிரகிக்கப்பட்ட பொருளினுடைய விசேஷ [6]பிரதிபிம்பத்தைக்

1 நேர் காட்சி 2 forma 3 தவளை 4 முன்னிலை 5 பொருள்
6 சாயல்

கொண்டு இந்திரிய சன்னிதானத்திலே [1]அந்தர்கத இந்திரியமும் புத்தியுந் தங்களிடத்திலே பிறப்பிக்கும். அப்படிப்பட்ட பிரதி பிம்பத்தைக் கொண்டு இந்திரிய சன்னிதானத்திலே இராத பதார்த்தத்தை எந்த விருத்தியைக் கொண்டு சீவனுனது கிரகிக் கிறதோ, அந்த விருத்திக்கு [2]ஸ்மரணமென்றும், நினைவு என்றும் ஸமஸ்காரமென்றும் சொல்லப்படும். (iii) இந்த இரண்டு வகை ஞானந்தவிரச் சீவனுனது பொருளிரண்டும் அவசியமாய்க்கூட யிருக்கிறதை இந்திரியத்தின் விருத்தியினுலே பிரத்தியக்ஷமாய்க் கிரகித்ததினுலே, அப்படிப்பட்ட இரண்டு பொருளில் ஒன்றை மாத்திரம் இந்திரியத்தைக் கொண்டு பிரத்தியக்ஷமாய்ச் சீவனுனது கிரகித்தால், சன்னிதானத்திலே இராத மற்றப் பொருளானது அவடத்திலே கூட இருக்கிறதென்று நிச்சயம் பண்ணும். அவ்வண்ணமே, அக்கினியும் புகையும் ஓரிடத்திலே கூடயிருக் கிறதென்று சீவனுனது இந்திரியத்தின பிரத்தியக்ஷ தெரிசனத் தினுலே கண்டதினுலே, அப்புகை மாத்திரம் ஓரிடத்திலே கண்டால், அவ்விடத்திலே அக்கினியினுடைய சுரூபத்தையும் ஸ்திதியையும் நிச்சயிக்கும் என்கிறதுக்குச் சந்தேகமில்லை ஆனபடியினுலே, இப்படிப்பட்ட ஞானமானது அடையாள நிமித்தமாகப் பிறந்ததினுல் 'அனுமான ஞானம்' என்கிற நாமமானது அதுக்குச் செல்லுமென்று சொல்லக்கடவோம். இற்றைவரைக்குஞ் சொல்லப்பட்ட மூன்று வகையுள்ள ஞானங்களினுலே கிரகிக்கப்படவான பொருளானது, வொரு முறையாகிலும் [3]பாஹியேந்திரியத்தின் சன்னிதானத்திலே இருக்கவேணும் என்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினுலே, சரீரத்தின் இந்திரியத்துக்கு விஷயமாய் இருக்கமாட்டாத பொருளென்னப்பட்ட யாவும், இப்படிப்பட்ட மூன்று வகை யுள்ள ஞானங்களைக்கொண்டு அறிந்துபோகிற சரீரத்தோடே யிருக்கிற சீவனுலே, கிரகிக்கப்படாதென்று சொல்லத்தகும். இதுகாரணமாகப் பராபரவஸ்து முதலான சரீரமில்லாத பொருள் என்னப்பட்டதெல்லாஞ் சரீரத்தின் இந்திரியத்துக்கு விஷயமாய் இராதபோதே, பராபரவஸ்து முதலான சரீரமில் லாத மற்றுண்டான [4]வகைகளை முன் சொல்லப்பட்ட மூன்று வகையுள்ள ஞானங்களினுலே சீவனுனது அடையமாட்டா தென்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமாகும்.

1 sensus internus (Imaginatio) 2 memory 3 புறஇந்திரியம்
4 வஸ்துக்களை (பா. பே.)

29.4 **அனுரூப காரியத்தால் அனுரூப காரணத்தின் இயல்பை உணரலாம்.** இத்தறுவாயிலே நம்மாற் சொல்லப்பட்ட [1]அனுமான ஞான வகையிலே மிகவும் அறியவேண்டின ஒரு விசேஷமுண்டு. அதேதென்றால், காரியத்துக்கு வேறேயொரு பொருளானது அவசியமாய்க் காரணமாயிருக்க வேணுமென்று ஞானமுள்ள சீவனானது எங்குங் கண்டு பிடித்ததினாலே, யாதொரு காரியத்தைக் கண்டால், அதுக்குக் காரணம் உண்டென்று சந்தேகமில்லாமல் நிச்செயம் பண்ணும் என்கிறதுக்குத் தப்பாது. ஆனாற் சரீரத்தில் பாஹியேந்திரியத்தைக் கொண்டு காரிய காரணம் இரண்டும் எங்குங்கூட உண்டாயிருக்கிறதென்று ஞானமுள்ள சீவனாலே நிச்சயிக்கப்பட்டதினால், பின்னை வேறொரு திக்கிலே யாதொரு காரியத்தை மாத்திரங் கண்டால், காரணத்தினுடைய [2]ஸ்திதியையும் ரூபத்தையும் புத்தியானது நிச்சயம் பண்ணுமென்று சொல்லக் கடவோம். அதெப்படியென்றால், காரணத்தில் நின்று பிறந்த [3]அனுரூப காரியத்தை விசாரிக்குமிடத்தில், அப்படிப்பட்ட காரியத்தைப் பிரத்தியக்ஷ தெரிசனத்து நிமித்தமாகச் சீவனானது பாஹியேந்திரியத்தைக் கொண்டு கிரகித்தால், அதுக்குண்டான காரணத்தினுடைய ஸ்திதியையும், சுபாவ சொரூபத்தையும் புத்தியானது கண்டு பிடிக்குமென்று சந்தேகப்படுகிறதுக்கு கணக்கில்லை, அவ்வண்ணமே, அனுரூபமான காரியமாகிற பிள்ளையைச் சீவனானது பாஹியேந்திரியத்தைக் கொண்டு பிரத்தியக்ஷமாய்க் கிரகிக்கும் போது, பிதாவாகிற காரணத்தினுடைய ஸ்திதியையும் சுபாவ சுரூபத்தையும் கூட நிச்சயம் பண்ணுமென்று அனுபவசித்தியினாலே அறியப் பெற்றது. அத்தன்மையாக நூதனமாய் உற்பவித்த அக்கினியைப் பார்த்ததினால், அப்படிப்பட்ட அக்கினியைப் பிறப்பித்த அக்கினியானது இன்னதென்றும் அது கொண்டிருக்கிற சுபாவ [5]சுரூபம் இன்னதென்றும் புத்தியானது கண்டுபிடிக்கும் என்கிறதுக்குத் தப்பாது.

29.5 அனுரூபமாகாத காரியத்திலிருந்து, அனுரூபமாகாத காரணத்தின் இயல்பை உணரமுடியாது:[4] என்றால் ஆதிகாரணமாகிற சர்வேஸ்வரனும், அவராலே உண்டாக்கப்பட்ட பொருளுமாகிற காரியங்களும கூட இருக்கிறதைப் பாஹியேந்தியங்களினாலே சீவனானது பிரத்தியக்ஷமாய்க் கிரகிக்கிறதுக்கு வல்லதாயிருக்க மாட்டாததினாலேயும், காரியங்களாகிற பொருளென்னப்பட்ட

1 reasoning 2 உள்ளமை 3 univocal effect 4 ஆனால் 5 சுரூபத்தையும் (பா,)

யாவும் ஒவ்வொன்ருய்க் கண்டுபிடிக்கப்பட்டாலும் எல்லாம் ஒன்ருய்க் கூட்டப்பட்டாலும், ஆதிகாரணமாகிற சர்வேஸ்வரனுக்கு அனுரூபமாய் இருக்கமாட்டாததிலுலேயுங் காரியமாகிற லோகம் என்னப்பட்டதெல்லாங் காணப்படும்போது, ஆதிகாரணமாகிற பராபரவஸ்துவானது இருக்கிறதென்று மாத்திரம் புத்திமான்களாலே நிச்சயம் பண்ணப்படுமொழியப், புகையும் பிள்ளையுங் காணப்பட்டதிஞல் அக்கினியும் பிதாவும் இருக்கிறதுந் தவிர, அக்கினியினுடையவும் பிதாவினுடையவும் [1]சுபாவ ரூபமானது இன்னதென்று குறையற்ற விதமாகக் கண்டுபிடிக்கப்படுமாப்போலே, சர்வேஸ்வரனுக்கு அனுரூபமாயிராத காரியமாகிற உண்டாக்கப்பட்ட பொருளென்னப்பட்ட யாவும் பிரத்தியக்ஷமாய்க் காணப்பட்டாலும், அப்படிப்பட்ட பொருள்களுடைய பிரத்தியக்ஷ தெரிசனத்து நிமித்தமாகச் சர்வேஸ்வரனுக்கு உண்டாயிருக்கிற அளவறுக்கப்படாத மகிமையுள்ள சுபாவ முதலான பெருமைகள் இன்னதென்று குறையற்ற பிரகாரமாக நிச்சயம் பண்ணலாமென்று மதிகெட்டவன் சொல்லுவானெழியப் புத்திமானுயிருக்கிறவன் சொல்ல மாட்டான் அதேதென்ருற், காரணத்துக்கு உண்டாயிருக்கிற சுபாவ முதலான சகல குணங்களைச் [1]சமவிதமாகக் காரியமானது கொண்டிருந்தால், காரணத்துக்கு அனுரூபமாயிருக்கிற அப்படிப்பட்ட காரியமானது பிரத்தியக்ஷமாய்க் காணப்பட்டதிஞற் காரணமானது இருக்கதென்றும், காரணத்துக்குண்டான சுபாவ பெருமைகளும நிச்சயிக்கப்படலாமென்றும் அங்கீகரிக்கவேணும். அவ்வண்ணமே, மனுஷனுகிற பிதாவுக்கு உண்டாயிருக்கிற சுபாவ ரூபமும் அதுக்கடுத்த பெருமைகளும் மனுஷனுகிற பிள்ளையிடத்திலே சமவிகிதமாக இருக்கிறதிஞல், மனுஷனுகிற பிள்ளையானது காணப்பட்டதிஞல் பிதாவானவன் இப்படிப்பட்ட சுபாவ சுரூப முதலான கஊக் கொ டிருக்கிருனென்று தப்பில்லாமல் நிர்ணயம் ப ணலாம். அல்லது காரணத்துக்கு உண்டான சுபாவ சுரூப முதலான ம மைகளைக் காரியமானது கொண்டிராதிருந்தாற், காரணத்துக்கு அனுரூபமாகாதாய் இருக்கிற அப்படிப்பட்ட காரியத்தினுடைய பிரத்தியக்ஷ தெரிசனத்து நிமித்தமாகக், காரணத்துக்கு உண்டான சுபாவ சுரூபமும் மகிமையும் இன்னதென்று பழுதற்ற பிரகாரமாக நிச்சயம் பண்ணலாமென்று சொல்லவுங் கருதவுங் கூடாது.

1 இயற்கை 2 சரிநிகரான

**29.6 இதற்குச் சான்றுகள்: சிற்பமும் சிற்பியின் கவி வன்மையும், தங்க ஒளியும் கதிரவனின் அயனங்களும்.** அதெப்படியென்றால், ஆடல் பாடலுக்குச் சாமார்த்தியமுதலான வேறே அனேகம் பெருமைகளைக் கொண்டிருக்கிற சிற்பாசாரியானவன் ஒரு கல்லு விக்கிரகத்தைப் பண்ணினானென்று கண்டோமானால், அப்படிப்பட்ட விக்கிரகத்தின் தெரிசனத்தினாலே சிற்பாசாரியானவனுடைய ஸ்திதியையும விக்கிரகத்தின் சொரூபமானதும் சிற்பாசாரியினுடைய புத்திக்குள்ளே இருக்கிறதென்றும், அப்படிப்பட்ட விக்கிரகத்தின சொரூபத்தைக் கல்லிலே பிறப்பிக்கிறதுக்கு ஆன சாமார்த்தியத்தையும் பெலத்தையும் இத்தொகைப்பட்டதுகளைமாத்திரஞ் சிற்பாசாரியானவர் கொண்டிருக்கிறானென்றும், புத்திமானானவன் விக்கிரக தெரிசனத்தினிமித்தமாகக் கண்டுபிடிப்பானொழிய, ஆடல் பாடலுக்கு ஆன சாமார்த்தியத்தையும வேறே அனேகம் பெருமைகளையுஞ் சிற்பாசாரியானவன் கொண்டிருக்கிறானென்று விக்கிர தெரிசனத்தினாலே புத்திமானாயிருக்கிறவன் கண்டுபிடிக்கிறதுக்கு லவலேசமானாலும் வல்லவனாயிருக்க மாட்டான என்கிறதுக்குச் சந்தேகப்படுகிறதுக்குக் கணக்கில்லை. இந்தடைவாக [1]சுவர்ண முதலான ரத்தினங்களிடத்திலே உண்டாயிருக்கிற காந்திகளுக்கும் ஒளிவுக்கும் சூரியனானது காரணமாயிருக்கிறதென்று அங்கீகரிக்கும்போது, சுவர்ண முதலான ரத்தினங்கள் காணபபட்டால், அப்படிப்பட்ட தெரிசனத்து நிமித்தமாகச் சுவர்ணாதி ரத்தினங்களுடைய காந்திக்கும் ஒளிவுக்குங். காரணமாகிற சூரியனுடைய ஸ்திதியைச் சூரியனைக் காணாத புத்திமானானவன் நிச்செயம்பண்ணி, அப்படிப்பட்ட காரணமாகிற சூரியனானது உத்தம பிரகாரமாக ஒளிவையும் பிரகாசத்தையும் கொண்டிருக்கிறதினால், அப்படிப்பட்ட பிரகாசத்துக்கும் ஒளிவுக்கும் மிகவுங் கீழ்த்தரமாகவானாலும் ஒளிவையும் பிரகாசத்தையும சுவர்ணாதி ரத்தினங்களிடத்திலே நவமாய்ப் பிறப்பிக்கத்தக்க சூரியனானது வல்லதாயிருக்கிறதென்று மாத்திரம் நிச்சயம பண்ணலாமொழிய்ச் சூரியனானது தெக்ஷணாயன உத்தராயனங்களிலே வசந்த முதலான [2]ருதுக்களைப் பண்ணிக்கொண்டிருக்கிறதென்றும், மேக மழைகளுடைய உற்பத்திகளுக்கு அது காரணமாயிருக்கிறதென்றும் [3]விருக்ஷாதிகள் ஸ்தாபரோஷிதிகள் பிறக்கிறதுக்குச் சூரியனானது மிகவும் உபயோகமாயிருக்கிறதென்றும், சொல்லப்

1 தங்கம் 2 பர்வம் 3 மரஞ்செடி கொடிகள்

படாத வேகத்தோடு அறுபது நாழிகைக்குள்ளே பரமண்டல மெல்லாம் இடைவிடாமல் சுற்றிக்கொண்டு வருகிறது என்றும், சூரியனிடத்திலே இத்தொகைப்பட்ட வேறே அனேகம் பெருமைகள் உண்டாயிருக்கிறதென்றும், சுவர்ணு ரி ரத்தினங்களுடைய தெரிசனமானது அறியப் பண்ணலாமென்று முழுமதிகெட்டவன் சொல்லுவானொழியப், புத்திமானுயிருக்கிறவன் எண்ணவுஞ் சொல்லவு மாட்டான்.

29·7 கடவுளின் இயல்பை அனுரூபமாகாத படைப்பிலிருந்து உணரமுடியாது. அத்தன்மைபோல, உண்டாக்கப்பட்ட பொருளென்னப்பட்ட யாவுங் கொண்டிருக்கிற ஆகுதல் பெலம் இது முதலான பெருமைகளைப் பத்தும் பத்தாய்ப் பார்க்கும்போது, சர்வேஸ்வரனுக்கு உண்டானதா யிருக்கிற ஆகுலாகிற அளவறுக்கப்படாத சகல நன்மைகளுக்கும், உண்டாக்கப்பட்ட சகல பொருட்களிடத்திலே உண்டாயிருக்கிற ஆகுதல் பெருமைகளுக்கும் முகிவில்லாத தூரம் உண்டாயிருக்கக் கொள்ள, உண்டாக்கப்பட்ட பொருள்களெல்லாங் காணப்பட்டாலும், அப்படிப்பட்ட தெரிசன நிமித்தமாகக் காரணமான சர்வேஸ்வரனுடைய ஸ்திதியைப் புத்திமானுய் இருக்கிறவன் நிச்செயம் பண்ணிச், சர்வேஸ்வரனிடத்திலே உத்தம பிரகாரமாக ஆகுதல் உண்டாயிருக்கிறதென்றும், சர்வேஸ்வரனைவர் தமக்கு மிகவும் நீழ்த்தரமாயிருக்கிற நவமான ஆகுதலைப் பிறப்பிக்கிறதுக்கு வல்லவராய் இருக்கிறாரென்றும், இந்தடைவுள்ள அந்தஸ்திலே விளங்கியிருக்கிற சில திவ்விய விசேஷ மகிமை மாத்திரம் உண்டாக்கப்பட்ட பொருள்களுடைய தெரிசனத்துநிமித்தமாகப் புத்திமானுயிருக்கிறவன் கண்டுபிடிக்கிறதுக்குவல்லவனுயிருக்கிறுனொழியச், சர்வேஸ்வரனிடத்திலே யிருக்கிற பரமரகசியமாகிற திரீத்துவமும், அவர் நடத்துகிற அளவறுக்கப்படாத மேரைகளும் மனுவாக்குக்கு எட்டாததாயிருக்கிற எண்ணப்படாத வேறே பரமரகசிய விசேஷங்களுஞ் சர்வேஸ்வரனிடத்திலே இருக்கிறதென்றும், உண்டாக்கப்பட்ட சகல பொருட்களைப் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிற உண்டாக்கப்படலான புத்தி யென்னப்பட்ட யாவுங் கண்டுபிடிக்கிறதுக்கு வல்லதாயிருக்கமாட்டாது. இந்தச் சத்திய விசேஷத்துக்கடுத்த பிரசங்கத்தை நித்திய சீவன சல்லாபம் என்கிற புத்தகத்திலே விரிவாகப் பண்ணினோம். அவ்விடத்திலே இந்தச் சத்தியம் விளங்கிறதுக்குச் சொல்லப்பட்ட விசேஷங்கள் தவிர, இந்தச் சத்திய

விசேஷமானது இன்னம் அதிகமாக விளக்கிக் காண்பிக்க வேணு மென்று நவமாக வேறே சிலவிசேஷங்களை இவ்விடத்திலே வெளிப் படுத்தக்கடவோம். அப்படிப்பட்ட விசேஷங்களுடைய நிச்சய மானது அழிந்து போகிற சரீரத்துக்கு மாத்திரையா யிருக்கிற ஞானமுள்ள சீவனுனது இந்த லோகத்திலே யிருக்கிற நாள் மட்டுஞ் சருவேஸ்வரனை அறியத்தக்க அடைவானது எம்மாத் திரமென்றும், எப்படிப் பட்டதாயி நக்கலாமென்றுங் கண்டு பிடிக்கிறதுக்கு மிகவும் உபயோகமாயிருக்கும்.

29.8 வீட்டிலுள்ளவன் அதன் சன்னல் வழியாய்க் காணக் கூடிய வெளிப் பொருள்களைக் காண்கிருன். அதுபோல உடலி லுள்ள ஆன்மா ஐம்பொறி என்ற சன்னல் வழியாகவே புற உலகை காணலாம். அதெப்படியென்றால் மனுஷ சீவனுனது ஞான முதலான விருத்திகளுக்குக் காரணமாயிருக்கிற புத்தியுடைத் தானதாயிருந்தாலும், அழிந்து போகிற சரீரத்தோடேகூடச் சம்பந்தித்து இருக்கிறதென்று பார்த்துக்கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட சரீர அவஸ்தை ஞானமுடைந்தான சீவனுக்கு உண்டாயிருக்கையிலே, அப்படிப்பட்ட அவஸ்தைக்கான வித முள்ள ஞானத்தைச் சீவனுனது கொண்டிருக்கிறதுக்குத் தப்பில் லாக் கிரமத்தோடு சசலத்தையும் நடத்துடுற கர்த்தரவானவர் கட்டளையிட்டருளினுர் என்கிறது ஞாயமுள்ள கிரமத்துக்கு ஏற்றிருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றுற் கிரகத் துக்குள்ளே இருக்கிற கண்ணுள்ளவனும், தனது கண்ணோடே கூடக் கண்ணுடியை வைத்துக்கொண்டிருக்கிறவனும் இந்த இரு வருக்கும் கிரகவாசமும் [1] சட்சுவினிடத்திலே [2] சுலோசன [3] சாமீபப்பியமும் என்கிற அவஸ்தை இரண்டும் இருக்கிற நாள் மட்டும் அவர்கள் இருவருடைய கண்ணுனது விஷயங்களைக் கண்டுபிடிக்கிற மேரையை விசாரித்துக்கொண்டோமானுற், கிரகத்துக்குண்டான [4]பலகணி வழியாய் வந்து பூரலான பொருள் களுடைய பிரதிபிம்பங்களானதுகள் கண்ணிலே கிரகிக்கப்படு மொழியப், பலகணி வழியாய் வந்தேறமாட்டாத பொருள் களுடைய பிரதிபிம்பங்களை அப்படிப்பட்ட கண்ணுனது கிரகிக்க வல்லதாயிராததினுல் அப்படிப்பட்ட பொருள்களைக் கண்ணு னது காணமாட்டாது என்கிறது கிரமமாகும். அதேதென்றுல், பொருள்களைக் கண்ணுனது காண்கிறதிலே சொல்லப்பட்ட மேரையானது கிரகத்திலே அடங்கியிருக்கிற கண்ணினுடைய

1 கண் 2 கண்ணுடி 3 அண்மை 4 சன்னல்

அவஸ்தைக்கு ஏற்றிருக்கிற (காண்கிற விதமானது அதே கிரகத்திலே இருக்கிற கண்ணுக்குக்) காண்கிறமேரையாய் இருக்கிறதென்று சொல்லத் தகுமொழிய மற்றப்படியல்ல இதெல்லாஞ் சுலோசனமுள்ள கண்களிடத்திலே அடைவாக யோசிக்கத் தக்கதாகும்.

29.9 தெற்கு வாசல்தான் இருந்தால் வடக்குப் பக்கமுள்ள பொருள் தெரியாது. உடலுள்ள பொருள்களை நோக்கியே ஐம் பொறி திறந்திருப்பதால், உடலற்ற பொருள்களை உடலிலுள்ள ஆன்மா உணராது.. அவ்வண்ணமே, கண்ணினுடைய பிரதிபிம்பமானது கிரகத்தின் [1]கவாக்ஷத்திலே பூராமல் கண்ணினிடத்திலே செவ்வையாக வந்தேருததினால் அக்கண்ணானது எதிராகத் தன்னை விஷயிகரித்துச் செவ்வையாகக் கண்டுபிடிக்க மாட்டாது. அத்தன்மைபோலே ஞானமுடைத்தான சீவனானது கிரகமாகிற தனது அழிந்துபோகிற சரீரத்திலே மாத்திரையாக இருக்கிற நாள் மட்டுந் தனது பிரதிபிம்பமானது பிறத்திப்பட்ட இந்திரியங்களாகிற பலகணி வழியாய் வந்து ஆத்துமத்திலே பிரவேசிக்க மாட்டாததினால், ஞானமுடைத்தான சீவனானதுக்கு அழிந்து போகிற சரீரத்தினுடைய சம்மந்தமான [2]அவஸ்தையானது இருக்கிற நாள் மட்டும் ஞானமுள்ள சீவனானது சரீரத்துக்குத் தான் கொடுக்கிற பிழைப்பாகிற காரியத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறதினால், அப்படிப்பட்ட பிழைப்புக்கு அது உண்டாயிருக்கிறதென்றும், இப்படிப்பட்ட சுபாவ சுரூபத்தைக் கொண்டிருக்கிறதென்றும் அனுபவசித்தியினாலே அறியப்படுகிறதென்று சொல்லத் தகும், இந்தடைவாகக் கிரகமானது [3]தெக்ஷண திக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிற கவாக்ஷத்தைக் கொண்டிருந்தால், [4]உத்திரா திக்கிலேயுண்டாயிருக்கிற பொருள்களுடைய பிரதிபிம்பங்களானதுகள் தெக்ஷண திக்கைப் பார்த்திருக்கிற கவாக்ஷ வழியாய் வந்து பூரமாட்டாததினாலே, அப்படிப்பட்ட கிரகத்துக்குள்ளே இருக்கிற கண்ணானது தெக்ஷணத்திலே உண்டாயிருக்கிற பேர்களைக் காணுகிறதுக்கு வல்லதாயிருக்குமொழிய, உத்தர திக்கிலே இருக்கிற பொருள்களைக் கண்டுபிடிக்கிறதுக்கு அந்தக் கண்ணானது பெலமுடையதாயிராது.

அப்படிப்போல, கிரகமாகிற அழிஞ்சுபோகிற சரீரமானது சரீரமாகிற திக்கைப் பார்த்திருக்கிற கவாக்ஷமாகிற இந்திரியத்தைக் கொண்டிருக்கிறதினால், அச்சரீரமாகிறதிலே உண்டா

1 சன்னல் 2 நிலை 3 தென்திசை 4 வடதிசை

யிருக்கிற சரீரியான பொருள்களுடைய பிரதிபிம்பங்களானது கள் அப்படிப்பட்ட இந்திரியங்களாகிற கவாக்ஷ வழியாய்ப் பூரலாமென்கிறதுக்குத் தப்பாது. சரீரமில்லாத பொருள்களோ வென்றால், கண்டிப்பு வண்ணம் இதுகள் முதலான குணங்களை அது கொண்டிராததினாலே, சரீரமில்லாத பொருள்களானதுகள் சரீரத்துக்கு எதிரான திக்காகிற [1]சரீரமில்லாத்தனத்திலே இருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. ஆதலாலே, சரீரத்துக்கு எதிரான திக்காகிற சரீரமில்லாத்தன வகையிலே அடங்கியிருக்கிற சரீரமில்லாத பொருள்களுடைய பிரதிபிம்பங்களானதுகள் சரீரமாகிற திக்கைப் பார்த்திருக்கிற கவாக்ஷங்களாகிற இந்திரியங்களுடைய வழியாய் வந்து பூரமாட்டாததினாலே, ஞானமுடைத்தான சீவனானது அப்படிப்பட்ட கவாக்ஷங்களாகிற இந்திரியங்களைக் கொண்டிருக்கிற கிரகமாகிற சரீரத்திலே இருக்கிற நாள்மட்டும், சரீரமுடைத்தான பொருள்களைப்பிரத்தியக்ஷமாய்க் காணுகிறதுக்கு வல்லதாயிருந்து, சரீரமில்லாத பொருள் பண்ணிக்கொண்டு வருகிற காரியங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறதினால், சரீரமில்லாத பொருள் உண்டென்று ஞானமுள்ள சீவனானது நிச்செயம் பண்ணலாமொழியச், சரீரமில்லாத பொருள்கள் இன்னதென்றும், அதுகள் கொண்டிருக்கிற சுபாவ சுரூபத்தையும் பிரத்தியக்ஷமாகவும் சுமுத்திரையாகவும் கண்டுபிடிக்க மாட்டாது.

29.10 ஆகவே அரூபியான கடவுளையோ, சொந்த உயிரையோ மனிதனால் காணமுடியாது. அவ்வண்ணமே, அஞ்ஞான கஷ்டத்தினாலே முழுதும் மதி கெட்ட பேர்கள் சரீரத்தின் கண்ணாலே தனது ஆத்துமத்தையுஞ் சர்வேசுரனையுங் காணவேணுமென்கிற கருத்தானது நம்மாற் பண்ணப்பட்ட பிரசங்கத்தினாலே முதிர்ந்த பயித்தியமாய் இருக்கிறதென்று அற்பமாகிலும் சந்தேகத்துக்கு இடங்கொடாமல் ஒப்புவிக்கப்பட்டதென்று சொல்லக்கடவோம். அதேதென்றால். அழிந்துபோகிற சரீரத்துக்குச் சம்மந்திச்சிருக்கிற மனுஷ சீவனானது சரீர அவஸ்தை நிமித்தமாகப் பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலே ஆனாலும் சுமித்திரையான அறிக்கையினாலே என்கிலுஞ் சரீரமில்லாத பொருள்களைக் கண்டுபிடிக்க மாட்டாதபோதே, உண்டாக்கப்பட்ட சரீரமில்லாத பொருளென்னப்பட்டது எல்லாத்துக்கும் முகிவில்லாத தூரமாயிருக்கிற

[1] immateriality, spirituality

பராபர வஸ்துவைப் பார்த்து, அழிஞ்சுபோகிற சரீரத்தின் அவஸ்தையைக் கொண்டிருக்கிற சீவனை யுடைத்தான மனுஷனை வன், தப்பனையையும் நாய் நரியையும் பன்னியையும் சரீரத்தின் கண்ணாலே காணுகிறாப் போலே அசரீரியான சர்வேஸ்வரனைக் காண்கிறேனென்று சொன்னால், அப்படிப்பட்டவன் கனபாவத்தைக் கட்டிக்கொண்டு, தனது முதிர்ந்த பயித்தியத்தைக் காட்டினதும் போராமல், தன்னைப் பரிகாசம் பண்ணுகிறதுக்கு இடங்கொடுத்தாப் போலேயாகும். இதன்றியே, சீவனைப் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறோமென்று சில பேர்கள் லெச்சைப்படாமற் சொல்லிக் கொண்டு வருகிற வசனமானது முழுத்தப்பறையென்று இவ்விடத்திலே சொல்லப்பட்ட ஞாயங்களினாலே ஒப்பச்சொன்னாப்போலே யாச்சுது. அதே தென்றால், சீவனுடைய பிரதிபிம்பமானது சரீரத்துக்குண்டான இந்திரியங்களாகிற [1]கிரக கவாக்ஷ வழியாகப் பூரமாட்டாததினால், தனது சீவனைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டுவருகிறேனென்று சொல்லுகிறவன் விழிச்சுக்கொண்டிருக்கிறானோ, நித்திரை பண்ணிச் சொற்பனங் காணுகிறானோ என்று சொல்லுகிறதுக்கு இடமும் சந்தேகப்படுகிறதுக்கு அவகாசமும் கொடுத்தாப்போலேயாகும்.

29·11 நேரடிக் காட்சி. இதுதவிர, அழிந்துபோகிற சரீரத்தோடே சம்மந்திச்சிருக்கிற புத்தியுள்ள சீவனை உடைத்தான மனுஷனுக்கு நடந்து வருகிற பிரத்தியக்ஷ தெரிசனத்தின் மேரையானது இன்னதென்று இவ்விடத்திலே பண்ணப்பட்ட பிரசங்கத்திலே நிரூபிக்கலாம். அதேதெனென்றால், விஷயத்தைக் கண்டுபிடிக்கிறவனுடைய சன்னிதானதிலே விஷயமானது உண்டாயிருந்தால், அவனுடைய பாஹியேந்திரியத்தினாலே பண்ணப்படுகிற அந்த விஷயத்தின் [2]கிரகணமானது பூலோகத்திலே திரிகிற மனுஷனுக்கு நடந்துவருகிற பிரத்தியக்ஷ தெரிசனமென்று சொல்லத் தகும். அவ்வண்ணமே, பிரத்தியக்ஷமாய்த் தெரிசிக்கப்படுகிற பொருளானது லோகத்திலே மெய்யாகவே உண்டாயிருக்கவேணும். இதன்றியே, பிரத்தியக்ஷமாகப் பொருளைப் பார்த்துக் கொண்டிருக்கிறவன் இருக்கிற ஸ்தலத்திலே, காணப்படுகிற பொருளானது கூடயிருக்க வேணும். ஆதலாலே, கால ஸ்தல சன்னிதானத்திலே யிருக்கிற அப்படிப்பட்ட பொருளானது சரீரத்துக்குண்டான பாஹியேந்திரியத்தினுடைய விருததியைக் கொண்டு கிரகிக்கப்பட வேணும். இந்த மூன்று குணங்

1. இந்திரியம் உடலாகிய வீட்டுக்குச் சன்னல் 2. கிரகித்தல்

களோடேகூட யிருக்கிற வஸ்துவினுடைய விஷயதெரிசன மானது, பூலோகத்திலே திரிகிற மனுஷனுக்கு வரலான பிரத்தியக்ஷ தெரிசனமென்று சொல்லக்கடவோமொழிய மற்றப்படியல்ல. அதேதெனென்றால், சரீரத்தைவிட்டிருக்கிற அவஸ்தையுடைத்தான ஆத்துமாதி சரீரமில்லாத பேர்கள் பொருள்களைப் பிரத்தியக்ஷமாய் அறிகிறவகையை விசாரிக்குமிடத்தில், அது வேறே விதமாய் இருக்கிறதென்கிற நக்குத் தப்பாது. ஆனால் இத்தறுவாயிலே வெளிப்படுத்தத் தகாத விஷயங்களை வெளிப்படுத்துகிறது என்கிறது கிரமமாய் இராதென்கிறதினால், ஆன தறுவாயிலே அத்தை இனிமேற் சொல்லி, இத்தறுவாயிலே நடத்தத்தக்க விசேஷங்களைச் சொல்லி நடத்தக்கடவோம். அதுகளை வெளிப்படுத்துகிறதினால், பிறத்திப்பட்ட இந்திரியங்களிலே இராத சர்வேசுரன் முதலான பொருள்களும் புத்தியினால் கிரகிக்கப்படும் மேரை இன்னதென்றும் அறியப்படும்; முன்சொல்லப்பட்ட சந்தேகமும் நிவராணமாதும்.

29.12 அறியும் இடத்திலும் காலத்திலும் இல்லாத பொருள் பற்றிய நினைவறிவு. இற்றைவரைக்குஞ் சொல்லப்பட்ட பிரத்தியக்ஷத்தின் மேரை தவிர, பூலோகத்திலே திரிகிற மனுஷனானவன் வஸ்துவை அறிகிறதிலே வேறே விதமுள்ள அறிக்கையானது மனுஷனுக்கு உண்டென்று அனுபவசித்தியினாலே காணப்படும். அப்படிப்பட்ட அறிக்கையானது பிரத்தியக்ஷ தெரிசனம் ஆகாதிருந்தாலும், வஸ்துரூப விஷயக சமுத்திரையான அறிக்கையென்றும் [1]பொருள் விஷயக எதார்த்த கிரகணம் என்றும் சொல்லத்தகும். அப்படிப்பட்ட அறிக்கையானது மனுஷனிடத்திலே பிறக்கிற பிரகாரத்தை வெளிப்படுத்தி அதினுடைய சுபாவ மேரையை அறியப்பண்ணக்கடவோம். அதேதென்றால பிறத்திப்பட்ட இந்திரியங்களைக்கொண்டு மனுஷனானவன் ஒரு பொருளைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டுபிடிக்கிறதினாலே [2]அந்தர்கதமான சத்தியாகிற இந்திரியமும் [3]ஞான விருத்திக்குக் காரணமாயிருக்கிற புத்தியானதும் பிரத்தியக்ஷமாய்த் தெரிசிக்கப்பட்ட பொருளினுடைய பிரதிபிம்பத்தைத் தங்களிடத்திலே பிற(ப்பி)க்கும் என்கிறதுக்குத் தப்பாது. அப்படியே, சிவனானது [4]பாஹிய இந்திரியத்தைக் கொண்டு பிரத்தியக்ஷமாய்க் கிரகித்த அப்படிப்பட்ட பொருளானது பிற்காலத்திலே காலஸ்தல சன்னிதானத்திலே இராதிருந்தாலும், அந்தப்பொருள் விஷயக பிரத்

1 objectively true, 2 அகப்பொறி 3 Spiritual 4 பரம (பாடம்)

நியக்ஷ தெரிசனம் உண்டாயிருந்ததுக்காகப் புத்தியானது தன்னிடத்திலே பிறப்பித்த அந்தப் பொருளின் பிரதிபிம்பத்தைக் கொண்டு அப்படிப்பட்ட பொருளைச் சுமுத்திரையாக அறியும் என்று சந்தேகப்படுகிறதுக்குக் கணக்கில்லை. முற்காலத்திலே பிரத்தியக்ஷமாய்க் காணப்பட்ட பொருளானது, இந்திரியத்தினலே கிரகிக்கப்படக்கூடாத ஸ்தலத்திலே பிற்காலத்திலே இருந்தால், அது ஸ்தலசன்னிதானத்திலே யிராத பொருளென்று சொல்லப்படும். பின்னையும், அப்படிப்பட்ட பொருளானது நாசமாய்ப்போனாற் கால சன்னிதானத்திலே யிராத பொருளென்று வித்தியபாரகராயிருக்கிற பேர்கள் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

பொருளைக்கண்டவனும், காணப்பட்ட பொருளும் ஏக காலத்திலேயும், ஏக ஸ்தலத்திலேயுங் கூட யிருந்தால், அப்படிப்பட்ட பொருளானது கண்டவனுடைய ஸ்தல சன்னிதானத்திலே யிருக்கிற பொருளென்று சொல்லப்படும். அப்படிப்பட்ட வஸ்துவானது அவனாலே பாஹியிந்திரியத்தினுடைய விருத்தியைக்கொண்டு கிரகிக்கப்பட்டால் அது அவனாலே பிரத்தியக்ஷமாய்த் தெரிசிக்கப்பட்ட வஸ்துவென்று சொல்லக்கடவோம். இந்தப்படி உண்டாயிருக்கச்செய்தே, முற்காலத்திலேபிரத்தியட்சமாய்க் காணப்பட்ட பொருளானது பிற்காலத்திலே காலஸ்தல சன்னிதானத்திலே யிராமல், அத்தைப் புத்தியானது சுமுத்திரையாக அறியுமென்கிறதுக்கு அனுபவசித்தியானதே சாக்ஷியாக இருக்கும். அப்படியே, பிரத்தியட்சமாக நம்மாற் காணப்பட்டதுமாய், இப்போது ஸ்தல சன்னிதானத்திலே இராததுமாய் இருக்கிற விஷயமானது நம்மால் அறியப்படும் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. பின்னையும், நம்மாற் காணப்பட்ட மரித்திருக்கிறவன் காலஸ்தல சன்னிதானத்திலே யிராதிருந்தாலும் அப்படிப்பட்டவனை அறிந்துகொண்டு வருகிறோம் என்கிறபோது, ஸ்தலகால சன்னிதானத்திலே இராத பொருளை அறிந்தாப்போலேயாச்சுது.

இப்படிப்பட்ட அறிக்கையானது பிரத்தியக்ஷ தெரிசனமாகாதே யிருந்தாலும், பொருளை விஷயீகரிச்சு அத்தைச் சுமுத்திரையாகக் கிரகிக்கும் என்கிறதுக்குத் தப்பாது. முற்காலத்திலே அது காணப்பட்ட பொருளினுடைய அறிக்கையாக இருக்கக்கொள்ள, அது [1]"ஸ்மரணம்' என்றும் 'நினைவு' என்றும் 'சமஸ்காரம்' என்றும சொல்லப்படும்.

1 memory

29.13 உயர்த்துணர்வு மீளவும், பிரத்தியக்ஷ தெரிசனத்தில் நின்று அந்த அறிக்கையானது இழுக்கப்பட்டாப்போலே இருக்கிறதினுலேயும், ஸ்தலகால சன்னிதானத்தை [2]அபேக்ஷியாதிருக்கிறதினுலேயும் [1]ஆக்கிரிஷ்ட ஞானம் என்கிற நாமமானது அதுக்குச் செல்லுமென்று சொல்லலாம். அவ்வண்ணமே, மனுஷனுனவன் பிரத்தியக்ஷ தெரிசன, ஆக்கிரிஷ்ட ஞானமென்கிற இரண்டு விதமுள்ள ஞானத்தைக்கொண்டு பொருளை அறியலாமென்று ஒப்பச் சொன்னுப்போலே யாச்சுது. இந்த இரண்டு வகையுள்ள ஞானந்தவிர, வேறேயொரு வகையுள்ள ஞானம் மனுஷனிடத்திலே இருக்கிறதென்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். இது முதலான அறியவேண்டின சில விசேஷங்களை வருகிற முப்பதாம் பாடத்திலே வெளிப்படுத்துவோம்.

இருபத்தொன்பதாம் பாடம் முற்றும் (கி. ?)

## முப்பதாம் பாடம்

30·1 சத்தஞானம் என்ற கேள்வியறிவு பூலோகத்திலே திரிகிற மனுஷனுனவன் பொருளை அறிகிற மேரையிலே [3]பிரத்தியக்ஷ தெரிசனம், [4]ஆக்கிரிஷ்ட ஞானம் என்கிற இரண்டு வகையுள்ள அறிக்கைகளைப் போன பாடத்திலே வெளிப்படுத்தினுப்போல யாச்சுது. இந்த இரண்டு வகையுள்ள ஞானந்தவிர அழிந்து போகிற சரீரத்தைக் கொண்டிருக்கிற மனுஷனுக்கு வேறே விதமுள்ள ஞானமுண்டாயிருக்கிறதென்று பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதுக்குச் [5]சத்தஞானம் என்கிற நாமதேயமானது செல்லுமென்று சொல்லத்தகும். அதெப்படியென்ருல், கண்ணைக்கொண்டு காணுத பொருள்கள் உண்டென்று நம்முடைய காதிலே கேட்கப்பட்டால், நம்முடைய புத்தியானது அறிந்து அதைக் கிரகிக்கும் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. ஆனுல் அதைப் புத்தியானது கிரகி ம் விதத்தை விசாரிக்குமிடத்தில், முற்காலத்திலே பிரத்தியக்ஷமாய்க் காணப்பட்ட விஷயங்களிடத்திலே நின்று பலபல பிரதிபிம்பங்களைப் புத்தியானது எடுக்கிற மேரையாகத் தன்னிடத்திலே பிறப்பித்து, அப்படிபபட்ட பிரதிபிம்பங்களைக் கொண்டு, காதால் கேட்ட பொருள் இன்னதென்று புத்தியானது [6]ரூபிகரித்து கிரகிக்கும். அவ்வண்ணமே, உரோமாபுரியைக் காணுதவன் ரோமாபுரி எப்படிக் கொத்ததென்றும் கோட்டை எந்தப் புறததிலே இருக்கிறதென்றும்

1 abstract (Discursive) knowledge — உய்த்துணர்வு 2 require
3 காட்சியறிவு 4 உய்த்துணர்வு 5 கேள்வியறிவு 6 imagire

கேட்கும்போது, அப்படிப்பட்டவன் தான் பிரத்தியக்ஷமாய் அங்கங்கே கண்ட பட்டணங் கோட்டை முதலானதுகளிடத்திலே நின்று பிரதிபிம்பங்களை வாங்கிற மேரையாக எடுத் 'அப்படிப் பட்ட பிரதிபிம்பங்களைக் கொண்டு உரோமாபுரியை [1]அறிவான். இப்படிப்பட்ட ஞானமானது மெய்யான ரூபத்தின் அறிக்கையா யிராமல், மெய்யாகவே உரோமாபுரி விஷயக ஞானமாயிருக்கிற தென்று சொல்லவேண்டியிருந்தாலும், அப்படிப்பட்ட ஞானத் தின் நிமித்தமாக ரோமாபுரியின் ரூபமானது [1]சுமுத்திரையாகக் கிரகிக்கப்படுகிறதில்லை. ஆதலாலே, [2]வஸ்து ரூபவிஷயக சுமுத்திரையான அறிக்கை' என்கிற நாமமானது அதுக்குச் செல்லாமல், [3]சிரவணத்தினுலே அது பிறந்ததினுல் 'சத்த ஞான' மென்று சொல்லலாகும் என்கிறதுக்குச் சந்தேகப்படக் கணக்கில்லை.

30·2 அரூபிகளைக் கேள்வியறிவால் அறியும் முறை. இப்படிப் பட்ட சத்த ஞானமானது வேறேயொரு விதமாகப் புத்தியிடத் திலே செனிக்குமென்று பார்த்துக்கொண்டிருக்கிறோம். அது [4]எந்தடவென்று விசாரிக்கும்போது, ஆத்தும முதலான சரீரமிலலாத பொருள்களும் [5]பிரகிரிதி முதலான குணங்களும் உண்டென்று கேட்கும்போது, புத்தியானது சரீரமில்லாத பொருட்கள் முதலானதுகள் இன்ன பிரகாரமென்று கண்டு பிடிக்கிறதுக்குக் காணப்பட்ட வஸ்துவுக்குள்ளே இத்தைப் போலே என்று ரூபிக்கிறதுக்கு உபயோகமாயிருக்கிற பொருள் இல்லாததினுற், சரீரமில்லாத ஆத்தும முதலான பொருள்கள் இப்படிக்கொத்ததென்று அறிகிறது மிகவும் அருமையென்கிற துக்குத் தப்பாது. ஆதலாலே, பூலோகத்திலே திரிகிற மனுஷ னவன் இப்படிப்பட்ட அசரீரியான பொருள்களை அறிகிற மேரை மரியாதையானது ஆராய்ந்து கொள்ளத் தக்கதா கும். அதெப்படியென்றுற், சரீரமில்லாத பொருளாகிற சர்வேஸ்வ ரன் முதலான அசரீரியான வஸ்துக்கள் எப்படிக்கொத்த சுபாவ சுரூபத்தைக் கொண்டிருக்கிறதென்று அறியத்தக்கதாக மனுஷ னவன், தன்னுற்பிரத்தியக்ஷமாய்க் காணப்பட்ட பொருள்களுக் குள்ளே சரீரமில்லாத பொருள்களுக்குச் சரிரூபமுள்ள பொருள் இல்லாததினுலே, அப்படிப்பட்ட சரீரமில்லாத பொருள்களை அறிகிற மேரையானது மிகவும் அருமையுள்ளதாயிருக்கும்.

1 precisely 2 adequate knowledge 3 கேள்வி. 4 இயற்கை
5 ஒத்த வடிவம் 6 ஆசிரியரின் நகரம்

**30·3 கடவுளை விஞபூத (எதிர்மறை) வகையால் அறியும் சாமானிய ஞானம்.** அது விளங்கும்படிக்குச் சரீரமில்லாத பொருள்களாகிற சர்வேஶ்வரன் முதலானதுகளை மனுஷர் புத்தியானது அறிகிற மேரை மரியாதையைச் சர்வேஸ்வரனை அறிகிற மேரையின் பேரிலே ஆரோபிச்சு அத்தைக் கொஞ்சத்துக்குள்ளே வெளிப்படுத்தக் கடவோம். அது இரண்டு விதத்திலே அடங்கியிருக்கிறதென்று சொல்லத்தகும். அதில் முந்தின வகைக்கு [1]விஞபூத வகையென்று சொல்லவேணும். அதாவது வஸ்துவாகிற சர்வேஸ்வரனிடத்திலே நின்று அந்தந்த விசேஷத்தைத் தள்ளத்தக்க மேரையாகத் தள்ளிப் பண்ணப்படுகிற நிரூபணமானது விஞபூத மேரையாகத் [2]தேவ விஷயக ஞானமென்று சொல்லப்படும். அதெப்படியென்றால், பராபர வஸ்துவை நிரூபணம் பண்ணுகிறதிலே நடக்கத்தக்க முந்தின அடைவேதெனில், சர்வேஸ்வரனனவர் காரணமுள்ளவரல்ல, ஆதியுமந்தமும் உள்ளவரல்ல, சரீரியானவரல்ல, [3]அங்கிஷமுள்ள பொருளுமல்ல— இப்படிப்பட்ட வேறே அனேகம் வகைகளாகச் சர்வேஸ்வரனனவர் நிரூபிக்கப்படுகிறபோது, அது சர்வேஸ்வரனுடைய மெய்யான நிரூபணமாயிருந்து விஞபூத மேரையுள்ள [4]நிர்வசன மென்றுஞ் சொல்லப்படும். அப்படிப்பட்ட நிர்வசனத்தைப் பண்ணுகிறவன், சர்வேஸ்வரனை மேலெழுந்த வாரியாய் ஒரு பிரகாரமாகக் கிரகித்தாலும், அவரை மெய்யாகக் கிரகிக்கிறானென்று சொல்லவேணுமொழிய, மற்றப்படியல்ல.

அதேதெனில், அவன் சர்வேஸ்வரன் இன்னதென்று [5]சுத்தமாய்க் கிரகியாமல் இருக்கிறானென்று சொல்லப்படாததினால், அவன் மெய்யான நிரூபணம் பண்ணுகிறானென்று சொல்ல வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட நிரூபணத்தில் நின்று பிறக்கிற ஞானமானது சர்வேஸ்வரன் விஷயக ஞானமாயிருக்கிறதென்றும், அப்படிப்பட்ட ஞானத்து நிமித்தமாகச் சர்வேஸ்வரன் அறியப்படுகிறாரென்றும், அது சத்தியமான ஞானமாயிருக்கிறதென்றுஞ் சொல்ல வேண்டியிருந்தாலும், இருட்டிலே உண்டாயிருக்கிற விஷயத்தின பேரிலே ஓடித் தைக்கிற கண்ணினுடைய பார்வைக்குச் சரியாயிருக்கிற அந்த ஞானமானது திவ்விய சுபாவத்தைக் குறையற்ற பிரகாரமாய்ச்

1 எதிர்மறை வகை (per modum negationis) 2 கடவுளறிவு 3 உறுப்புள்ள 1 எப்படி 4 வரையறை 5 அடியோடு, அறவே

சென்று பிடியாத ஞானமென்றும், தேவவிஷயக தெளி வில்லாத ஞானமென்றுஞ் சொல்லப்பட்டுத் தேவ விஷயத்திலே மேலெழுந்தவாரி அறிக்கையுஞ் [1]சாமானிய ஞானமும் [2]சாங்கரிய மேரையுள்ள கிரகனமும் இத்தொகைப்பட்ட நாமங்கள் அதுக் குச் செல்லுமொழிய மற்றப்படியல்ல

30.4 அவினுபூத (உடன்பாட்டு) முறையால் கடவுளை அறிவது. தேவ விஷயத்திலே உண்டான இப்படிப்பட்ட வினுபூத மேரை யுள்ள ஞானமும் நிரூபணமும் தவிரச், சர்வேஸ்வரனுடைய விஷயத்திலே [3]அவினுபூத நிரூபணமும் அவினுபூத மேரையுள்ள ஞானமும் உண்டாயிருக்கிறதென்று சொல்லக்கடவோம். அதெப்படியென்றால், தானயிருக்கிற வஸ்துவுமாய்ப், பின்ன பேதமில்லாமல் பரமானந்த பலம் இதுகள் முதலான சகல நன்மையாயிருக்கிற ஏக நன்மையா யிருக்கிறதுமாய்ச், சகலத் துக்கும் ஆதிகாரணமானதுமாய்ச், சகல பேர்களினுலே ஆரா திக்கப்படத் தக்கவருமாய், அனந்த ஸ்தோத்திரத்துக்குப் பாத்திரமுமாயிருக்கிறவர் சர்வேசுவரனென்று சொல்லக்கட வோமென்று சொல்லும்போது, அவினுபூத நிரூபணமும் அவினு பூத ஞானமுமாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கத் தக்கதாகும். இப்படிப்பட்ட அவினுபூத நிரூபணத்தினுடைய வகையும் அவினு பூத ஞானத்தின் மேரையையும் வெளிப்படுத்தும்படிக்கு அறிய வேண்டின சில விசேஷங்களை வெளிப்படுத்த வேணும். அதில் முதலாம் விசேஷமாவது:

30.5 சொந்தப் பலத்தால் கடவுளைக் கண்கூடாய்க் காண முடியாது. தேவ விஷயக அவினுபூத நிரூபணத்திலே சொல்லப் படுகிற அனந்த மகிமையுள்ள விசேஷங்கள் என்னப்பட்ட யாவையும் பத்தும் பத்தாய் விசாரிக்குமிடத்தில், உண்டாக்கப் படலான புத்தியுடைத்தான பொருள்களுக்குள்ளே ஒரு பொரு ளானுலும் அப்படிப்பட்ட மகிமைகளைப் பிரத்தியக்ஷமாய்க் காண்கிறதுக்குச் சுபாவ பெலத்தினுலே வல்லதாய் இருக்க மாட்டாதென்று சந்தேகமற அங்கீகரிக்கக்கடவோம். அதே தென்றால், உண்டாக்கப்படலான புத்திகளுக்குள்ளே எப்படிப் பட்ட கூர்மையுள்ள புத்தியானுலும் விஷயத்தைக் கண்டு பிடிக்கத் தக்கதாக அதுக்குச் சுபாவமாக வரலான பெலத்தைப்

1 general knowledge (மேல்வாரி அறிவு) 2 தெளிவற்ற அறிவு
3 உடன்பாட்டு அறிவு

பார்க்கும்போது, அது [1]முடிவுள்ள பெலமுண்டாயிருக்குமொழிய மற்றப்படியல்ல. முடிவுள்ள பெலமுடைத்தான புத்திக்கும் முடிவில்லாத சகல நன்மையுடைத்தான கர்த்தனுக்கும் முடிவில்லாத தூரமுண்டாயிருக்கிறதினால், அப்படிப்பட்ட முடிவுடைத்தான புத்தியானது முடிவில்லாத பராபரவஸ்துவாகிற சர்வேசுரனைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டுபிடிக்கிறதுக்கும் [2]எதார்த்தமாய்க் குறையற்ற பிரகாரமாய் அவர் எப்படிக்கொத்தவரென்று [3]விசுவாசிக்கிறதுக்கும் சுபாவ பெலமுடைத்தானதாய் இருக்க மாட்டாது.

அதெப்படியென்றால். சரீர சம்பந்தமா யிருக்கிற சக்ஷு முதலான இந்திரியங்களுக்குஞ் சரீரமில்லாத பொருள்களுக்கும் உண்டாயிருக்கிற தூரத்தைக் காட்டிலும் உண்டாக்கப்படலான புத்திக்குந் தானுயிருக்கிற பராபர வஸ்துவாகிற சர்வேஸ்வரனுக்கும் மிகவும் அதிகமான தூரமுங் கனமான வித்தியாசமும் உண்டாயிருக்கிறது என்கிறதுக்கு மதிகெட்டவனானாலுஞ் சந்தேகப்படமாட்டான். இதிப்படியிருக்கையிலே சக்ஷு முதலான இந்திரியங்கள் தங்களுக்கும் சரீரமில்லாத பொருள்களுக்கும் உண்டாயிருக்கிற சுவல்பத் தூரத்தின் நிமித்தமாக சரீரமில்லாத பொருள்களைக் கண்டுபிடிக்க மாட்டாதபோதே, உண்டாக்கப்படலான புத்தியானதுக்கும் சருவேசுரனுக்கும் உண்டாயிருக்கிற தூரத்தினிமித்தமாக உண்டாக்கப்படலான புத்தி என்னப்பட்டதெல்லாம் தனது சுபாவ பெலத்தினாலே முடிவில்லாத வஸ்துவாகிற சருவேசுரனைக் குறையற்ற விதமாகக் கண்டுபிடிக்கமாட்டாதென்று ஒரு அற்பமாகிலும சந்தேகமில்லாமில்லாமல் அங்கிகரிக்கத்தக்க குன்றாத சத்தியமாகும்.

30·6 **கடவுள் அறியக்கூடிய பொருளானாலும், வவ்வால் கதிரவனைப் பார்க்காததுபோல் புத்தியும் கடவுளைக் காணாது** ஆனால், புத்தியினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே சருவேசுரனாகிற பொருளானது அடங்கியிருக்கிறதென்கிற மெய்யான வசனத்தினாலே நம்மால் இவ்விடத்திலே சொல்லப்பட்ட ஞாயமானது தள்ளுண்டுபோகிறதென்று ஒப்புக்கொள்ளக்கட்வோமல்ல அதேதென்றால். சூரியனாகிற பொருளானது சரீரத்துக்கு உண்டான கண்ணினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கின பொருளாயிருந்தாலும், வவ்வாலுக்கு உண்டான குறையுள்ள பெலமுடைத்தான கண்ணானது,சூரியனை

1 அளவுள்ள 2 உள்ளபடி 3 விசுவசிக்கிறதுக்கும்

காண மாட்டாது என்றிருக்கையிலே, சூரியனுடைய மிகுந்த பிரகாசத்துக்கும் அத்தைக் காணத்தக்க கொஞ்சமுள்ள பெலமுடைத்தான வவ்வாலுடைய கண்ணுக்கும் உண்டாயிருக்கிற சுவல்ப்பதூரத் தினிமித்தமாக வவ்வாலானது சூரியனைக் காணமாட்டாதென்று இருக்கிறபோது, புத்தியினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே சருவேசுரனுகிற பொருளானவர் அடங்கியிருந்தாலும், அப்படிப்பட்ட முகிவில்லாத பிரகாசமாகிற சருவேசுரனுக்கும், அதைக்காணத்தக்கதாகப் போருமென்கிற பெலமில்லாத புத்திக்கும், உண்டாயிருக்கிற முகிவில்லாத தூரத்தின் நித்தமாக உண்டாக்கப்படலான புத்தி என்னப்பட்ட யாவும் சருவேசுரனைப் பிரத்தியக்ஷமாய்க் காண்கிறதுக்கு வல்லதாய் இருக்க மாட்டாதென்று ஒரற்ப சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும்.

30.7 காட்சி அறிவில்லை (i) ஞாயமுள்ள காரணமேதெனில் புத்தியுடைத்தான பொருளானது தான் அறியத்தக்க விஷயத்தை அறியும் விதத்தை விசாரிக்கும்போது, அப்படிப்பட்ட அறிக்கையினுடைய வேலையானது அறிகிற பொருளினுடைய சுபாவ சுரூபத்தை அனுசரிக்குமொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே, அறிகிற பொருளினுடைய சுபாவ மேரையையும் அந்தஸ்தையும் மிகவுங் கடந்திருக்கிற விஷயத்தைப் புத்தியானது சுபாவ பெலத்தினாலே குறையற்ற விதமாகக் கண்டுபிடிக்கமாட்டாதென்று அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். ஆதலாலே, விஷயத்தை அறிகிற புத்தியானதும், அறியப்படலான விஷயமானதும் இந்த இரண்டும் உண்டாக்கப்பட்ட வஸ்துவாகிற அந்தஸ்திலேயிருந்து, அறிகிற சட்சுவினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அறியப்படலான பொருள் அடங்கியிருந்தால் ஒன்று ஒன்றைக் கண்டுபிடிக்கலாமென்று சொல்லலாகும். இது காரணமாகத் தானயிருக்கிற பொருளாகிற சருவேசுரனும் உண்டாக்கப்பட்ட புத்தியானதும் ஓர் அந்தஸ்திலே யிராமல் ஒன்றுக்கொன்று முகிவில்லாத தூரம் உண்டாயிருக்கிறபோது, தானயிருக்கிற அந்தஸ்திலே விளங்கிற பொருளாகிற சருவேசுரனை உண்டாக்கப்பட்ட வஸ்துக்களுடைய அந்தஸ்திலேயிருக்கிற புத்தியானது தனது சுபாவ பெலத்தினாலே சுமுத்திரையாகக் கண்டுபிடிக்க மாட்டாதென்று அங்கீகரிக்கக்கடவோம்.

(ii) இந்தச் சத்தியத்தை இன்னுமொரு ஞாயத்தினாலே ஒப்பச்சொல்லலாம். அதாவது: மனுஷனுடைய ஆத்துமமானது

ஞானவிருத்திகளுக்குக் காரணமாகிற புத்தியுடைத்தானதுமாய், அசரீரியான பொருளுமாய் இருக்கிறதிஞல், தனது சரீரத்தை விட்டு இருந்தால், தன்னையுஞ் சரீரமில்லாத பொருள்களையும் பிரத்தியக்ஷமாய்க் காணும் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அப்படிப்பட்ட அசரீரியான பொருளாகிற ஆத்துமமானது அழிந்துபோகிற சரீரத்தோடே இருக்கிற நாள் மட்டும், அது அழிஞ்சுபோகிற சரீரத்தோடேகூடிச் சம்பந்தித்து [1]இருக்கிறதுக்காகத், தன்னையுஞ் சரீரமில்லாத பொருள்களையும் பிரத்தியக்ஷ சுமுத்திரையாகக் கண்டுபிடிக்கிறதுக்கு வல்லதாயிராது. இதிப்படி யிருக்கையிலே, மனுஷனுடைய ஆத்துமமானது அறிகிற விதமானது: ஆத்துமமானது தானே அழிந்துபோகிற சரீரத்திலே யிருககிற அந்தஸ்தை அனுசரிக்கிறபோதே, ஆத்தும முதலான புத்தியுடைத்தான பொருள்களுடைய அறிக்கையானது[2] அதுகளுடைய சுபாவ சுரூபத்தை அனுசரிக்கிறதென்று சொல்லுகிறதுக்கு அதிகமான ஞாயமாய் இருக்கிறதென்று சொல்லத்தகும். அவ்வண்ணமே, உண்டாக்கப்பட்ட புத்தியானதுக்கு உண்டாயிருக்கிற அறியும் மேரை மரியாதையானது அதினுடைய சுபாவ சுரூபத்தைப் பின்சென்றுகொண்டு, உண்டாக்கப்பட்ட வஸ்துவைக் கண்டு பிடிக்கிறதுக்கு வேறே விக்கினமில்லாவிட்டால், சுபாவ பெலமுள்ளதாய் இருக்கிறதென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல.

(iii) சருவேசுரன் இன்னதென்று சுமுத்திரையாகக் கண்டு பிடிக்கிறதுக்கு உண்டாக்கப்படலான புத்தியானது வல்லதாய் இருக்கமாட்டாது என்கிற சத்தியத்தை முன்சொல்லப்பட்ட ஞாயத்தினின் நிமித்தமாக இன்னம் அதிகமாய் ஒப்பச்சொல்லலாம். அதெப்படியென்ருல், மனுஷனுடைய ஆத்துமமானது தான் பிழைத்திருக்கிறதுக்குச் சரீரத்தை அபேக்ஷியாத பொருளாயிருந்து, [4]ஞான சட்சுவாகிற புத்தியைக் கொண்டிருக்கிறதிஞல், தன்னைப்போலே சரீரமில்லாத தனத்தின் அந்தஸ்திலே யிருக்கிற சரீரமில்லாத பொருள்களைச் சுபாவ பலத்திஞலே பிரத்தியக்ஷமாய்க் கண்டுபிடிக்கலாமென்று சொல்லத்தகும். அப்படிப்பட்ட ஆத்துமமானது அழிந்துபோகிற சரீரத்தோடே கட்டப்பட்ட மேரை நிமித்தமாகச் சரீரமில்லாத பொருளைக் காட்டிலும எவ்வளவாகிலும் நீசப்பொருளாய் இருக்கக்

1 இருக்கிறதிஞல் 2 அறிகிறமுறை 4 ஞானக்கண்

கொள்ளத், தனக்குச் சரியான சரீரமில்லாத பொருள் இன்ன தென்று சுமித்திரையாகக் கண்டுபிடிக்க மாட்டாதபோதே, புத்தியுடைத்தான பொருளானது உண்டாக்கப்பட்டதினுல் கொண்டிருக்கிற கனமான ரீசத்தனத்தின் நிமித்தமாக, முடிவில் லாத மேரையாகத் தனக்கு மேலானதாயிருக்கிற சர்வேஸ்வரன் எப்படிக்கொத்த சுபாவ சுரூபமாய் இருக்கிருரென்று சுமுத்திரை யாகத் தனது சுபாவ பலத்தைக்கொண்டு கண்டுபிடிக்கலா மென்று சொல்லவும் கருதவுங் கூடாது. இப்படிபபட்ட ஞான சட்சுவாகிற புத்தியினுலே கண்டுபிடிக்கப்படாத சர்வேஸ்வரனை முழுதும் மதிகெட்ட பேர்கள் தங்களுக்கும் நாய் நரிகளுக்கும் [1] சாதாரணமா யிருக்கிற கண்ணைக்கொண்டு, கண்டுபிடிக்க வேணுமென்ற ஆசைப்படுகிருர்கள் அவ்வண்ணமே, மனுஷ னுனவன் பூலோகத்திலே திரிகிற நாள் பட்டும் அழிந்துபோகிற சரீரத்தின் அவஸ்தையைக் [2]கொண்டிருக்கிறதுக்காக, முன் சொல்லப்பட்ட பிரத்தியக்ஷ தெரிசனத்தினுலே பராபர வஸ்து வைக் கண்டுபிடிக்க மாட்டான என்றும். ஒப்பச் சொன்னுப் போலே யாச்சுது.

## 30·8 நினைவறிவும் முதல்வகைக் கேள்வியறிவும் இல்லை.

(i) அந்தடைவிலே முற்காலத்திலே பிரத்தியக்ஷமாய்த் தெரிசிக்கப் பட்ட வஸ்துவைப் புத்தியானது பிற்காலத்திலே சுமுத்திரையாக அறிந்து கண்டுபிடிக்கிறப்போலே, மனுஷனுனவன் ஒருக்காலா னுலும் பிரத்தியக்ஷமாய்க் காணுத பராபர வஸ்துவை [3] நினை வினுடைய மேரையாகக் கண்டுபிடிக்க மாட்டான் என்கிறதுக்குத் தப்பாது. (ii) கடைசியாய்ச், சத்த ஞானத்தை விசாரிக்கும் போது, புத்தியானது பிரத்தியக்ஷமாய்க் காணுத வஸ்துவைக் கேட்டதினுலே அறியும்படிக்கு, அங்கேங்கே கண்ட விஷயங் களிடத்தில் நின்று பிரதிபிமபங்களை எடுக்கிற மேரையாக எடுக்கும் என்கிறதுக்குத் தப்பாது. பின்னையும் அறியத்தக்க [4] அப்பிரத்தியக்ஷ விஷயங்களுடைய பிரதிபிம்பங்களுக்கு ஏறக் குறையச் சரியாயிருக் ற பிரதிபிம்பங்களைக் கொண்டு பிரத்தி யக்ஷமாய்க் காணுத வஸ்துவைக் கேட்டதினுற் புத்தியானது கண்டுபிடிக்கிறப்போலே, பராபர வஸ்துவைக் கண்டுபிடிக்க லாம் என்று சொல்லப்படாது. அதேதென்றுல், உண்டாக்கப் பட்ட வஸ்துக்களுக்குள்ளே தானுயிருக்கிற சருவேசுரனுக்கு உண்டான ரூபத்துக்குச் சமான சுரூபத்தைக் கொண்டிருக்கிற பொருள் காண மாட்டாது.

1 பொதுவாய் 2 கொண்டபடியால் 3 நினைவுகூர்ந்து 4 புலனுகாத

30·9 இரண்டாம் வகைக் கேள்வியறிவு (i) கடவுளை ஒருவாறு நன்கு ஒத்துவரும் பொருள்களைக் கொண்டு அறிகிறது. ஆனபடியி னாலே, புத்திக்குண்டான இரண்டாம் வகையுள்ள சத்த ஞானத்தை விசாரிக்கக்கடவோம். அதேனெனில், புத்தியானது சத்த நிமித்தத்தினாலே கண்டுபிடித்த வஸ்துவானது எந்தச் சுபாவ சுரூபத்தைக் கொண்டிருக்கிறதென்று, தான் அறி ற திலே காணப்பட்ட அந்தந்த வஸ்துவை எந்த வஸ்துப்போலே இருக்கிறதென்று சொல்லமாட்டாத தறுவாயிலே, காணப்பட்ட வஸதுக்களுக்குள்ளே எந்த வஸ்துவான கண்டுபிடிக்கத்தக்க வஸ்துவுக்குச் சமீபமாயிருக்குமோ அந்த வஸ்துவினுடைய பிரதி பிம்பத்தைக் கொண்டு அறியத்தக்க அப்பிரத்தியக்ஷமான வஸ்துவை அறியுமொழிய மற்றப்படியல்ல. அதேனென்றால், சரீரமில்லாத பொருளை இந்த லோகத்திலே மனுஷ புத்தியானது அறியும்போது, அப்படிப்பட்ட சரீரமில்லாத பொருளைப் பிரத்தியக்ஷ தெரிசனமாய் மனுஷ புத்தியானது காணத்தக்கது மில்லை, பிரத்தியக்ஷமாய்த்தான் கண்டுபிடிக்கிற வஸ்துக்களுக் குள்ளே ஒரு வஸ்துவைப் போலே சரீரமில்லாத பொருளானது இருக்கிறதென்று எண்ணவுமாட்டாது. ஆதலாலே காணப்பட்ட வஸ்துகளுக்குள்ளே எந்த வஸ்துவானது சரீரமில்லாத வஸ்து வுக்குக் கிட்டியிருக்குமோ, அந்த வஸ்துவினுடைய பிரதிபிம்பத்தைக் கொண்டு சரீரமிலலாத வஸ்துவைக் கண்டுபிடிக்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே, பிரத்தியக்ஷ மாய் அறியப்படுகிற வஸ்துக்களுக்குள்ளே காற்றும் ஆகாசமுஞ் [1] சூக்ஷமான சாயலும் சரீரமில்லாத பொருள்களுக்கு அதிக மாய்க் கிட்டியிருக்கிறதினால் காற்று, ஆகாசம், சாயல் அத் தொகைபபட்ட வஸ்துக்களுடைய பிரதிபிம்பங்களைக் கொண்டு சரீரமிலலாத பொருளைப் புத்தியானது அறியுமொழிய மற்றப் படியல்ல. அப்படியே, சரீரமில்லாத பொருள்களைப் புத்தி யானது: "கண்டுவருகையிலே, அதுகளைத் தான் எண்ணும் வகை யானது சரீரமில்லாத பொருள் காறறும் ஆகாசமுமாய் இரா திருந்தாலுஞ் சரீரமில்லாத பொருளைத் தான அறிகிறதுக் துக்கு வேறே சுமித்தரையான பிரதிபிமபங்களைக் காணு ததினால் அச் சரீரமில்லாத பொருள்களுக்கு அதிமாகக் கிட்டியிருக்கிற காற்று ஆகாசம் முதலான வஸ்துக்களுடைய பிரதிபிம்பங்களைக்கொண்டுபுத்தியானது சரீரமில்லாத பொருளை அறியக்கடவேன்" என்று சொலலிச், சரீரமில்லாத வஸ்துக்

1 Subtle

களை அறிகிறதிலே தனக்குண்டான தப்புத் தீர்க்கிறப் போலே 'காற்றும் ஆகாசமுமாயிராத அசரீரியான பொருளைப் புத்தியானது இந்தடைவாகக் கண்டுபிடிக்கிறேன் என்று' சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. இப்படிப்பட்ட ஞானமானது சரீரமில்லாத பொருளை விஷயிகரிக்கிற ஞானமுமாய்ப் பொய்யில்லாத மெய்யான அறிக்கை(யுமா)யிருந்தாலும், அந்தகாரத்திலே இருக்கிற விஷயத்தைக் கண்ணானது காண்கிறப்போலே, சரீரமில்லாத பொருளின் சுபாவ சுரூபம் எப்படிக்கொத்ததென்றும், அதினுடைய மேரையானது இன்னதென்றும் அப்படிப்பட்ட ஞானத்தின் நிமித்தமாகத் தெளிவோடு குறையற்ற விதமாகச் சுமுத்திரையாய்ப் பூலோகத்திலே திரிகிற மனுஷனாலே கண்டுபிடிக்கப் படுகிறதுமில்லை. இந்தடைவாக உண்டாக்கப்படலான புத்தி என்னப்பட்ட யாவுஞ் சருவேசுரனாலே உண்டாக்கப்பட்ட பொருளைப் பார்த்து, அதுகளுக்கு ஆதிகாரணமான கர்த்தன் உண்டாயிருக்கவேணுமென்று நிச்சயம் பண்ணும் என்கிறதுக்குத் தப்பாது.

**30·10 (ii)** பிற பொருள்களின் நன்மைத் தனத்திலிருந்து கடவுளின் அளவற்ற நன்மைத்தனத்தை உய்த்துணர்கிறது. இதுதவிர, அந்தந்தப் பொருளிடத்திலே உண்டாயிருக்கிற ஞான் முதலான நன்மைகளைப் புத்தியானது பார்த்து, [1]அனவஸ்தை தோஷம் வராதபடிக்கு அப்படிப்பட்ட நன்மைகளெல்லாம் ஆதிகாரணமா யிருக்கிற சருவேசுரனுக்கு அவசியமான சுபாவமாய் இருக்கிறதென்று அங்கீகாரம் பண்ணும். நன்மை யென்னப்பட்ட யாவும் சருவேசுரனுக்குச் சுபாவமாய் இருக்கிறபோதே, அந்த நன்மைகளெல்லாம் வேறொருத்தன் கையிலே வாங்கப்பட்டதாய் இராததினால், அதிலே மட்டுக்கட்டிக் கொண்டு வருகிறவன இல்லையென்து சந்தேகமில்லாமல் அப்புத்தியானது கண்டுபிடித்தாலுங், கண்டுபிடிக்கத் தக்க திவ்விய நன்மையானது எப்படிக்கொத்ததென்று சுபாவமாய்க் காணமல், காணப்பட்ட நன்மையினுடைய பிரதிபிம்பங்களைக் கொண்டு சருவேசுரனை அறியுமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே, அழிஞ்சுபோகிற மனுஷ சரீரத்தோடே சம்மந்திச்சிருக்கிற நரசீவனானது தான் பிரத்தியக்ஷமாய்க் கண்ட பொருளினுடைய பிரதிபிம்பங்களைக்கொண்டு சருவேசுரனை ரூபிகரிச்சு அவரைக் கரைகாணாத பிரகாசம்போலவும்,

1 Progressus in indefinitum

அளவறுக்கப்படாத கருணைகடலைப் போலவும், இத்தொகைப் பட்ட சரீரியான பொருள்களுடையபிரதிபிம்பங்களைக்கொண்டு, பூமியிலேயிருக்கிற மனுஷனானவன் சருவேசுரனை அறிந்து கொள்ளுவானேயழிய மற்றப்படியல்ல.

30.11 அரூபிகளான சம்மனசுக்கள் மனிதனைவிடக் கடவுளை நன்குணர்கின்றன; எனினும் அவ்வறிவும் மட்டமானது. சரீர மில்லாத சம்மனசாகிற பொருளோவென்றால், சரீரமுள்ள பொருள்களைக்காட்டிலும் உத்தம பொருளாகிற தன்னையுஞ் சரீரமில்லாத வேறே வஸ்துக்களையும் பிரத்தியக்ஷமாய்க் கண்டிருக்கிறதினால், அப்படிப்பட்ட உத்தம வஸ்துக்களுடைய பிரதிபிம்பங்களுடைய உதவியைக்கொண்டு சருவேசுரனை அறியும் என்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே, மனுஷனிடத்திலே உண்டாயிருக்கிற தேவவிஷயக ஞானத்தைக்காட்டிலும் சரீர மில்லாத சம்மனசுக்களாகிற பொருள்களுக்கு உண்டாயிருக்கிற தேவவிஷயக ஞானமானது மிகவும் உத்தம ஞானமாயிருக்கிறது என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. மனுஷனுக் குண்டான தேவவிஷயக ஞானத்தை விசாரித்தோமானால், நீசமாயிருக்கிற சரீரியான பொருள்களுடைய பிரதிபிம்பங்களுடைய சகாயத்தினாலே அது பிறந்த ஞானமாய் இருக்கிற தொழிய மற்றப்படியல்ல. சரீரமில்லாத பொருள்களுக்கு உண்டான தேவவிஷயக ஞானமோவென்றால், சரீரியான பொருள்களைக்காட்டிலும் மிகவும் உத்தமமானதுகளாய் இருக்கிற அசரீரியான பொருள்களுடைய பிரதிபிம்பங்களைக்கொண்டு, அப்படிப்பட்ட ஞானம் செனிக்கும என்கிறதுக்குத் தப்பாது. சரீரமுள்ள பொருள்களுடைய பிரதிபிம்பங்களைக் காட்டிலும் சரீரமில்லாத பொருள்களுடைய பிரதிம்பங்களானதுகள் மிகவும் உத்தமானதுகளாய் இருக்கக்கொள்ளச், சரீரமுள்ள பிரதிபிம்பங்களுடைய உதவியைக்கொண்டு மனுஷனிடத்திலே உண்டாயிருக்கிற தேவவிஷயக ஞானத்தைக்காட்டிலும் சரீர மில்லாத பொருள்களுடைய பிரதிபிம்பங்களைக்கொண்டு சரீர மில்லாத பொருள்கள் தங்களிடத்திலே பிறப்பிக்கிற தேவ விஷயக ஞானமானது மிகவுஞ் [1]சிலாக்கியமாய் இருக்கிறதென் கிறதுக்குச் சந்தேகப்படக் கணக்கில்லை. இப்படியிருக்கையிலே, மனுஷனுக்குண்டான தேவவிஷயக ஞானமும் சரீரமில்லாத பேர்களுடைய தேவனை [2]விஷயிகரிக்கிற அறிக்கையும் ஒன்று ஒன்றைக்காட்டிலும் உததமமாயிருநதாலும், திவ்விய சுபாவ

1 சிறந்தது 2 ?

சுரூபமானது எப்படிக்கொத்ததென்று குறையற்றவிதமாக, முன்சொல்லப்பட்ட ஞாயங்களினாலே, உண்டாக்கப்பட்ட புத்தியினாலே சுமுத்திரையாகக் கண்டுபிடிக்கலாமென்று சொல்லவுங் கருதவுங்கூடாது.

30.12 திருவருளால் கண்கூடான காட்சியும் எதார்த்த விசுவாசமும் வருகின்றன. கடைசியாயப், பராபர வஸ்துவிடத்திலே அங்கீகரிக்கப்படத்தக்க பரம ரகசியமாகிற திரீத்துவ ஏகத்துவமும் [1]மாங்ஷ அயிக்கியமும் புத்திக்குள்ளே அடங்காத இதுகள் முதலான அனந்த மகிமையுள்ள விசேஷங்களும் சுமுத்திரையாக எப்படிக்கொத்ததுகள் என்று மோக்ஷமாகிற தேவ விஷயக பிரத்தியக்ஷ தெரிசனததினால் சுமுத்திரையான தெளிவுள்ள மேரையாய்க் கண்டுபிடிக்கப்படுகிறதொழிய மற்றப்படியல்ல. அப்படிப்பட்ட தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனமானது உண்டாக்கப்படலான புத்தியின் சுபாவ பெலத்தில் நின்று பிறக்கமாட்டாமல், சருவேசுரன் தானே [2]பிரதான காரணமேரையாக அத்தை உண்டாக்கப்பட்ட புத்தியிடத்திலே பிறப்பிக்கிறார். ஆதலாலே, திவ்விய பிரகாசத்தினாலே தனது சுபாவத்துக்கு மேலாக உயர்த்தப்பட்ட புத்தியானது தேவ விஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்துக்கு [3]எற்றின காரணமாயிருந்து சருவேசுரன் தானே அந்தத் தெரிசனத்துக்குப் பிரதான காரணமாயிருக்கிறாரென்று அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும்.

அவ்வண்ணமே, எற்றின பிரதான காரணங்களுடைய மேரையாக அப்படிப்பட்ட பிரத்தியக்ஷ தெரிசனமானது தனக்கு எற்றின காரணமாகிற உண்டாக்கப்பட்ட புத்தியின் சுபாவத்தின் அளவு பிரமாணத்திலேயும் அந்தஸ்திலேயும் இராமல், தனக்குப் பிரதான காரணமாகிற சருவேசுரனுக்கு ஏற்றிருந்து, உண்டாக்கப்படலான பொருளின் சுபாவத்துக்கு மேலான அந்தஸ்திலே அது வைக்கப்படத்தக்க நன்மையாகிற குணமாய் இருக்கிறதொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே, [4]திவ்விய பிரகாசத்தினாலே உயர்த்தப்பட்ட புத்தியானது தன்னிடததிலே அப்படிப்பட்ட திவ்விய தெரிசனத்தை எற்றின காரணமேரையாக உண்டாக்கி அப்படிப்பட்ட தெரிசனத்தினிமித்தமாகச் சகல நன்மையான பராபர வஸ்துவின் [5]சுபாவசொரூபம் இன்னதென்று பிரத்தியக்ஷ தெளிவோடு கண்டுபிடிக்கிறது என்கிறதுக்குத் தப்பாது.

1 Incarnation 2 முக்கிய (principal cause) 3 Instrumental cause
4 lumen gloriae 5 இயற்கை

அப்படிப்பட்ட தெரிசனமானது [1]தைவீக விருந்தியாயிருந்து தைவீக விருந்தியின் மேரையாகத் தனக்கு ஆதாரமாய் இருக்கிற யாதொரு பொருளுண்டு, அது தனக்கு எற்றின காரணமாயிருந்தாலும், அதுக்குந் [2]தெரிசிக்கிற நாமத்தைக் கொடுக்குமொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே, அப்படிப்பட்ட பிரத்தியக்ஷ தரிசனமானது 'தெரிசிக்கிறது' என்கிற நாமத்தைத் தனக்குப் பிரதான காரணமாகிற சருவேசுரனுக்குக் கொடாமல் தெரிசிக்கிற தென்கிற நாமத்தைத் தனக்கு எற்றின காரணமுமாய் ஆகாரமுமாய் இருக்கிற உண்டாக்கப்பட்ட புத்திக்குக் கொடுக்கிறதொழிய மற்றப்படியல்ல.

இப்படிப்பட்ட தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனமானது உண்டாக்கப்படலான புத்தியின் சுபாவத்துக்கு மேலானதாயிருக்குமாப்போலே, அதுக்கு வழியாயிருக்கிற [3]தேவ விஷயக எதார்த்த விசுவாசமும் உண்டாக்கப்படலான பொருளின் சுபாவ பெலத்தினாலே சாத்தியமாயிராது. அவ்வண்ணமே, தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனமும் அதுக்கு வழியாகிற எதார்த்த விசுவாசமும் இந்த நன்மை இரண்டையும் உண்டாக்கப்படலான புத்தியுடைத்தான பொருளானதுவிசேஷமான திவ்வியகிருபையினாலே அடையாலாமென்று சொல்லக்கூடுமொழிய மற்றப்படியல்ல.ஆனபடியினாலே,தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்தின் மேரையை வெளிப்படுத்துகிறதுக்கு முன்னே விசேஷ திவ்விய பிரசாதத்தினாலே மாத்திரம் இப்படிக்கொத்த நன்மைகள் உண்டாக்கப்பட்ட பொருளுக்கு வருமென்கிற வசனத்துக்கு அர்த்தம் இன்னதென்று வருகிற பாடத்திலே வெளிப்படுத்துவோம்.

முப்பதாம் பாடம் முற்றும் (கி. ?)

## முப்பத்தோராம் பாடம்

31.() மோட்சமும் அதற்கான செயலும் இயற்கைக்கு மேற்பட்டவை. தயாபரனான கர்த்தரானவர் குறையற்ற பாக்கியமென்கிற மோட்சத்தை மனுஷனானவன் அடைகிறதுக்கு மனுஷனை உண்டாக்கினாரென்று இருபத்தெட்டாம் பாடத்திலே ஒப்பச்சொன்னோம் என்கிறபோதே, அப்படிப்பட்ட குறையற்ற பாக்கியமென்கிற மோட்சமானதும் அதுக்கு வழியாகிற தேவ விஷயக விசுவாச முதலான பழுதற்ற புண்ணியங்களும் [4]மனுஷ

1 தெய்வச்செயல் 2 காண்பவன் 3 தேவவிசுவாசம்.

4 supernatural gift

சுபாவத்துக்கு மேலான நன்மையென்று சொல்லத்தகுமொழிய மற்றபடியல்ல. அவ்வண்ணமே, தேகத்தினுடைய சவுந்திரியமும் லௌகீக பெருமையும் [1]வித்தை முதலான நிமித்தங்களினாலே மனுஷனுக்கு வருகிற ஞான அலங்காரங்களும் இது முதலான பாக்கியங்கள் மனுஷ சுபாவத்துக்கு மேலான நன்மைகளாயிராமல், சரியாயிருக்கிற அளவு பிரமாணமாக மனுஷ சுபாவத்துக்கு ஏற்றிருக்கிறப்போலே, குறையற்ற பாக்கியமென்கிற மோட்சமானதும் அதுக்கு வழியாகிற தேவவிஷயக விசுவாச முதலான குறையற்ற [2]தரும சரித்திரங்களும் மனுஷ சுபாவத்துக்குச் சரி மேரையாக வரத்தக்க நன்மையென்று சொல்லவும் கருதவுங்கூடாது. இது காரணமாக மனுஷனானவன் தனக்குண்டான சுபாவ பெலத்தினாலே இப்படிப்பட்ட குறையற்ற நன்மையைப் [3]பேறுபெற்றடைகிறதுக்கு வல்லவனாயிராமல், அப்படிப்பட்ட நன்மையினுடைய [4]உன்னதமான அந்தஸ்தை மனுஷனானவன் அடைகிறதுக்குத் தயாபரனான கர்த்தரானவர் விசேஷ கிருபை அவனுக்குப் பண்ணவேண்டியிருக்கிறதுக்குச் சந்தேகப்படக்கடவதல்ல.

31.1 மனிதன் செயலனைத்தும் கடவுள் உதவியாலே. இத்தறுவாயில் ஒரு விசேஷ ரகசியமானது மிகவும அறியவேண்டினதாகும். அதாவது, [5]கர்த்தனுடைய விசேஷ கிருபையும் மேலான ஒத்தாசையும், கனமான [6]மாத்திரையிலே உத்தம வகையும் இதுகள் முதலான பதங்களினாலே எந்த விசேஷம் சொல்லப்படுமென்று தெளியத்தக்கதாகும். அதேதென்றால, இதிலே சந்தேகப்படுகிறதுக்கு அவகாசமாவது: மனுஷனுவன உற்பவிக்கிறதுக்கும், வளருகிறதுக்கும், பிழைத்துத்திரிகிறதுக்கும் இது முதலானதுகள் சகலத்துக்கும் சர்வேஸ்வரனுடைய கிருபை வேண்டியிருக்குமென்று சொல்லக்கடவோமொழிய மற்றப்படியல்ல. இதுதவிர, மாதா பிதாவை ரக்ஷிக்கிறதென்கிறதும், ஏழை சனங்கள் நொத்திருக்கிறதைப் பார்த்து அப்படிப்பட்ட சனங்களுக்குச் சுபாவமாக இரங்கி, ஏழைசனங்களை ஒரு விதமாய் இரக்ஷித்துக்கொண்டு வருகிறதென்கிறதும், அவனவனுக்கு உள்ளது கொடுத்து வருகிறதென்கிறதும், மனுஷர் புத்திக் கொத்திருக்கிற சில ஞாயங்களை நடத்துகிறதென்கிறதும்,

1 கல்வி 2 நற்செயல்கள் 3 to merit 4 அந்தர்கதமான (பா பே)
5 Special grace of God, supernatural help 6 மகிமையுள்ள விசேஷம் (475)

[1]ஆசாரிகப் புண்ணியம் ஆகுமென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. ஆதலாலே, இப்படிப்பட்ட புண்ணியங்களை மனுஷனானவன் கர்த்தனுடைய கிருபை யில்லாமல் பண்ணமாட்டாமல், அதுகளைக் கர்த்தனுடைய உதவியைக்கொண்டுபண்ணிக் கொண்டுவருகிறுனெழிய மற்றப்படியல்ல. இப்படிப்பட்ட எளிசான ஆசாரிகப் புண்ணியங்கள் உண்டாகிறதுக்கு வேண்டியிருக்கிற [2]விசாரங்களும் அதன்பேரிலே மனசினுடையருசியாகிற பற்றுதலும் மனுஷனிடத்திலே உற்பவிக்கப் பண்ணுகிற தென்கிறதும் இதெல்லாம் இப்படிப்பட்ட புண்ணியங்கள் உண்டாகிறதுக்குக் கர்த்தன் பண்ணுகிற உதவி யென்றுசொல்லப்படும்.

31·2 எழுப்புகிற அருள், துணையருள், நிறைவருள். இதிலே நிச்சயிக்கத்தக்கதாவது: [3]முந்தினதாயிருக்கிற நல்ல விசாரங்களை மனுஷனிடத்திலே கர்த்தரானவர் பிறப்பிக்கும்போது, மனுஷனுடைய மனசானது அதுகளைவேணுமென்றுசொல்லாமல் பிறப்பிக்கிறுரொழிய மனுஷனுடையமனசானது சம்மதப்பட்டு அப்படிப்பட்ட விசாரங்களைக் கர்த்தரானவர் பிறப்பிக்கிறதில்லையென்று சொல்லக்கடவோம். ஆனபடியினுலே, அப்படிப்பட்ட முந்தின நல்ல விசாரங்கள், புண்ணியத்தை மனுஷனானவன் பண்ணுகிறதுக்குக் கர்த்தனுடைய கிருபையென்று சொல்லத் தகுமொழிய, அப்படிப்பட்ட நல்ல விசாரங்களுக்குப் 'புண்ணியம்' என்கிறநாமமான துசெல்லுமென்று சொல்லக்கூடாமல், அப்படிப்பட்ட நல்லவிசாரங்களை மனுஷனானவன் பராமரிசித்துஞானபூர்வமாகஅதுகளுக்குச் சுவாதந்திரியமுள்ள மனசைக்கொண்டு சம்மதப்படுகிறதென்கிறது மாத்திரம் புண்ணியமென்று சொல்லப்படும் என்கிறதுக்குத் த பாது. அவ்வண்ணமே, முந்தின நல்ல விசாரங்களானதுகளைப பார்க்கும்போது, புண்ணியம் உண்டாகிறதுக்குக் கர்த்தன் பண்ணுகிற உதவியென்கிற பேரும் [4]'கிளப்பிறபிரசாதம்' என்கிறநாமமும அப்படிப்பட்ட விசாரங்களுக்கு சொல்லப்பட்டு, அதுகளுக்குச் சுவாதந்திரியமுள்ள மனசினுடைய சம்மதமானது புண்ணியமென்று சொல்லப்படும். இந்தடைவாகப் பாவ விஷயத்திலே யோசிக்கக்கடவோம். அதேதென்றால், மனசினுடைய சம்மதமில்லாமல் மனுஷனிடத்திலே பிறக்கிற பாவவிசாரங்களானதுகள் பாவமாயிராமல், அப்படிபபட்ட பாவ விசாரங்களுக்கு ஞானபூர்வமாகச் சுவாதந்திரி

1 Moral virtues 2. எண்ணம் 3 antecedent grace 4 அறிவோடு
5 gratia excitans கிழ் (பா. பே.); கிழ்ப்பி (12.21.) கிளப்பிற பி.

யமுள்ள மனசினுடைய சம்மதமானது மாத்திரம் 'பாவம்'என்று சொல்லப்படுமொழிய மற்றப்படியல்ல, புண்ணியத்திலோ வென்றால், அச்சுவாதந்திரியமுள்ள மனசினாலே பண்ணப்படுகிற அங்கீகாரமானது கர்த்தன் திருவுளப்படியே பிறக்கும்போது, அப்படிப்பட்ட கர்த்தனுடைய திருவுளத்தின் செயலானது [1]துணையுள்ள உதவி என்றும் [2]கூட வந்திருக்கிற பிரசாதம்' என்றும் வித்தியாபாரகராயிருக்கிற பேர்கள் சொல்லுவார்கள். கடைகோடியாய் இப்படிப்பட்ட தேவப்பிரசாதம் மரணபரியந்தம் நீளிச்சிருந்தால், அது [3]'சாம்பிரசாதம்' என்கிற நாமத்தைக் கொண்டிருக்கும். திவ்விய திருவுளத்தின்படியே பிறக்கிற அப்படிப்பட்ட மூன்று செயலானதுகள் புத்தியுடைத்தான பொருளிடத்திலே ஆதேயமாய் இருக்குமொழிய மற்றப்படியல்ல.

3 : 3 இயற்கையைப் படைத்த கடவுள், இயற்கைப்படி மனிதன் நடக்கும்படி கட்டாயம் உதவி செய்வார். இதெல்லாம் இப்படி நடந்துவரச்செய்தே, கேட்கப்படத்தக்க சந்தேகத்துக்கு இடமாவது: மனுஷனுடைய உற்பவத்துக்கும் [4]கர்த்தனுடைய நானாவிதமான செயல்களுக்கும் முன் சொல்லப்பட்ட எளிசான புண்ணிய சரித்திரங்களுக்கும் சர்வேசுரனுடைய கிருபை அவசியமாய் வேண்டியிருக்கிறதென்று சொல்லும்போது, குறையற்ற பாக்கியமென்கிற மோக்ஷத்தை மனுஷனானவன் பேறுபெறுகிறதுக்கு வேண்டின விசுவாசத்தை அடைந்து அதற்கான புண்ணியங்களைப் பண்ணத்தக்கதாக [5]மனுஷ சுபாவத்துக்கு மேலான திவ்விய கிருபையும் உதவியும் [6]விசேஷப் பிரசாதமும் வேண்டியிருக்கிறதென்று சொல்லுகிறதுக்குக் காரணம் ஏதென்று ஆராஞ்சு கொள்ளத்தக்கதாகும். இந்த இரகசிய விசேஷமானது வெளியாகும்படிக்கு அறியவேண்டின சத்தியமானது: சர்வேசுரனுடைய திருவுளத்தின் செயலினாலே [7]பொருள் என்னப்பட்ட யாவும் உண்டாகிறதொழிய அப்படிப்பட்ட திவ்விய திருவுளத்தின் செயலில்லாமல் ஒரு பொருளானாலும் உண்டாக மாட்டாது என்பது குன்றாத சத்தியமாகும். பாவமானது மாத்திரம் ஞான உபதேசத்தின் முதற்காண்டத்திலே' சொன்னாப் போலே, நீதி ஞாயத்தின் குறையாகிப் [8]பொருளாகாததாய் இருந்து சனங்களுக்கு உண்டான பெலத்தின் குறையினாலே

1 gratia adjuvans 2 g. concomitans 3 நிறைவருள் — grace of final perseverence 4 அவனுடைய? 5 supernatural grace
6 special grace 7 ens 8 non-ens.

உண்டாகிறதினால் அப்படிப்பட்ட நீதி ஞாயத்தின் குறையாகிற பாவ உற்பவத்துக்குச் சனங்களுடைய துர்ப்பலமானது மாத்திரம் பரிபூரண காரணமாயிருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. ஆதலாலே, திவ்விய திருவுளத்தின் செயலானது பாவ உற்பவத்துக்கு வேண்டியிராதென்று இருமனப்படாமல் அங்கீகரிக்கத் தக்க சத்தியமாகும். அவ்வண்ணமே, மெய்யான பொருளானது ஆண்டவன் திருவுளச் செய லில்லாமல் உண்டாகாத போதே, [1] மோக்ஷ சாதகமாயிருக்கிற புண்ணிய சரித்திரம் உண்டாகிறதுக்குத் திவ்வியமான விசேஷப் பிரசாதமும் மனுஷ சுபாவத்துக்கு மேலான உதவியும் வேண்டியிருக்கிறதென்று சொல்லுகிறதுக்கு ஞாயமுள்ள காரணமுண்டு.

அதேதெனன்றால், அந்தந்தப் பொருள்கள் உற்பவிக்கிறதுக்குக் கர்த்தரானவர் ஒரு நிமித்தத்தைப் பார்த்து உதவி செய்கிறாரொழிய மற்றப்படியல்ல. அப்படியே, மனுஷனுடைய சுபாவத்துக்கு கர்த்தரானவர் காரணமாயிருக்கக்கொள்ள, அப்படிப்பட்ட மனுஷசுபாவத்துக்கு வேண்டின நடக்கைகளும் சரியான மேரையாக ஏற்றிருக்கிற நல்ல சரித்திரங்களும்மனுஷனிடத்திலே உண்டாகிறதுக்கு, மனுஷ சுபாவத்தை உண்டாக்கிற கர்த்தரானவர் உதவிசெய்ய வேணுமொழிய மற்றப்படியல்ல. இது காரணமாக மனுஷனிடத்திலே நின்று மனுஷனுடைய உற்பவம் ஆகிறதும் [2] மனுஷனானவன் வளருகிறது என்கிறதும், கண் முதலான இந்திரியங்கள் தனது சேட்டைகளைப் பண்ணுகிறது என்கிறதும், இத்தொகைப்பட்ட வியாபாரங்களும் மனுஷ சுபாவத்துக்கு அவசியமாய் வேண்டியிருக்கக்கொள்ள, மனுஷ சுபாவத்துக்குக் காரணமாயிருக்கிற கர்த்தரானவர், மனுஷ சுபாவத்தைப் பார்த்து அப்படிப்பட்ட வியாபாரம் உண்டாகிறதுக்கு உதவிசெய்யவேணுமொழிய மற்றப்படியல்ல. இத்தன்மையாக, முன்சொல்லப்பட்ட எளிசான புண்ணிய சரித்திரங்கள் மனுஷ சுபாவ புத்திக்கு ஏற்றிருக்கிற ஞாயம் எளிசாய்த் தோனும் என்கிறதினால், மனுஷ சுபாவ புத்தியை உண்டாக்கின கர்த்தரானவர் அப்படிப்பட்ட புத்தியினுடைய சுபாவத்தைப் பார்த்து, முன்னே சொல்லப்பட்ட எளிசான ஆசாரிகப் புண்ணிய சரித்திரங்களை மனுஷனானவன் பண்ணுகிறதுக்குக் கர்த்தரானவர் உதவிசெய்து கொண்டு வருகிறாரென்று சொல்லக்கடவோம், இப்படிப்பட்ட வியாபாரங்களும் புண்ணிய சரித்திரங்களும்

1 meritorious 2 ஆகிறதுக்கும் (பா.)

[2]உண்டாக்கப்பட்ட சுபாவமான அந்தஸ்திலே இருக்கிறதென்று சொல்லவேணும். ஆனபடியினாலே, இப்படிப்பட்ட வியாபாரங்களும் புண்ணிய சரித்திரங்களும் மனுஷனிடத்திலே உற்பவிக்கிறதுக்குக் கர்த்தரானவர் பண்ணிக்கொண்டுவருகிற உதவியானது, மனுஷ சுபாவத்துக்கு அவசியமாய் வேண்டியிருக்கிற உதவியென்று சொல்லப்படும். அவ்வண்ணமே, காணத்தக்க சுபாவமுடைத்தான கண்ணைக் கர்த்தரானவர் உண்டாக்கின போதே, அதினிடத்தில் நின்று பார்வை பிறக்கிறதுக்குக் கர்த்தரானவர் உதவி செய்யவேணும். இத்தன்மையாக மற்றுண்டான இந்திரியங்களுடைய சுபாவ வியாபாரங்களிலே யோசிக்கக்கடவோம். இந்தடைவாகச் சில எளிதான புண்ணிய சரித்திரங்கள் ஞாயங்களாய் இருக்கிறதென்று காணுகிறதுக்கு மனுஷனுடைய புத்தியானது சுபாவ பெலமுடைத்தானதாய் இருந்து, அதுகளுக்குச் சம்மதப்படத்தக்கதாக மனுஷ சுபாவ பெலத்தைக் கொண்டிருக்கக்கொள்ள, அப்படிப்பட்ட புத்தியினுடையவும் மனசினுடையவும் சுபாவத்துக்குக் காரணமாயிருக்கிற கர்த்தரானவர் அப்படிப்பட்ட புண்ணிய சரித்திரங்களை மனுஷன் செய்கிறதுக்கு உதவி செய்யாதிருந்தால், அப்படிப்பட்ட சுபாவத்துக்குக் கர்த்தரானவர் காரணமாயிருக்கிற மேரைக்குக் குறையுண்டாமென்று சொல்லத்தகும். ஆனபடியினாலே, அப்படிப்பட்ட வகையுள்ள சுபாவத்தை உடைத்தான மனுஷனுக்குக் கர்த்தரானவர் காரணமாயிருக்கக்கொள்ள, அந்த சுபாவத்துக்கு அவசியமாய் வேண்டியிருக்கிற வியாபாரங்களும் அந்தச் சுபாவமுடைத்தான மனுஷனிடத்தில் உண்டாகத்தக்கதாகக், கர்த்தரானவர் உதவி செய்கிறதுக்குத் தப்பில்லாக் கிரமத்தோடு சகலத்தையும் நடத்துகிற கர்த்தனிடத்திலே தனது நன்மைத் தனத்திலே ஒரு வகையாகக் கடன் சுமந்திருக்கிறதென்று சொல்லத்தகும்.

31.4 மோட்சமும் அதையடைய கடவுள் செய்யும் உதவியும் சுபாவத்துக்கு மேலன உதவி. இதெல்லாம் இந்தடைவாக நடந்து வருகையிலே, சர்வேசுரனைப் பிரத்தியக்ஷமாய்த் தெரிசிக்கிறதினால் வருகிற குறைபற்ற பாக்கியமென்கிற மோக்ஷமானதும், அதுக்கு வழியாகிற தேவவிஷயக விசுவாச முதலான பழுதற்ற புண்ணியங்களும், உண்டாக்கப்படலான சகல பொருளுடைய சுபாவத்துக்கு மேலான செல்வமும் நன்மையுமாய் இருக்கக் கொள்ள, அப்படிப்பட்ட செல்வ [1]சாதகமாய் இருக்கிற புண

1. உரிய 2. created nature

ணிய சரித்திரமானது உண்டாக்கப்படலான சுபாவத்துக்கு மேலான புண்ணியமாய் இருக்கவேணும் என்கிறதுக்குத் தப்பாது. உண்டாக்கப்படலான சுபாவத்துக்கு மேலான நன்மையாகிற புண்ணியமா யிருக்கக்கொள்ளச், சுபாவத்துக்குக் கர்த்தரானவர் காரணமாயிருக்கிறதினாலே யானாலும், சுபாவத்தினுடைய மேரையைக் கர்த்தர் பார்த்துப் பண்ணத்தக்க உதவியைப் பண்ணவேண்டி இருக்கிறதென்கிறதினாலே என்கிலும், அப்படிப்பட்ட மேலான பாக்கியமா ற மோக்ஷத்துக்குச் சாதகமாயிருக்கிற புண்ணியங்களை உண்டாக்கப்பட்ட பொருளானது பண்ணத்தக்கதாகக் கர்த்தரானவர் தனது திருவுளத்தின் செயலாகிற உதவியைப் பண்ணுகிறதுக்குக் கணக்கில்லை. ஆனபடியினாலே, மோக்ஷ சாதகமான புண்ணியம் உண்டாகத் தக்கதாகக் கர்த்தரானவர் தாமும் உதவி செய்கிறதுக்குத் தமமால் உண்டாக்கப்பட்ட பொருளின் சுபாவத்தைக் கர்த்தரானவர் பாராமல், வேறேயொரு கனமான நிமித்தத்தைப் பார்த்து, உண்டாக்கப்பட்ட பொருள் மோக்ஷ சாதகமான புண்ணியத்தைப் பண்ணத்தக்கதாகக் கர்த்தரானவர் உதவி செய்கிறதுக்குத் திருவுளமாய் இருக்கவேணுமொழிய மற்றப்படியல்ல. அப்படிப்பட்ட கனமான நிமித்தத்தைப்பார்த்துக் கர்த்தனாலே பண்ணப்படுகிற உதவியானது "[1]விசேஷ திவ்விய கிருபை' என்று சொல்லப்படும். இந்தவிதமாக யுண்டாக்கப்படலான [2]சுபாவத்துக்கு மேலான பிரசாதம் என்கிற நாமமானது அதுக்குச் செல்லுமென்று சொல்லக்கடவோம்.

31.5 இச்செயலுக்குக் கடவுள் முக்கிய காரணம், மனிதன் எத்தன காரியம். ஆனபடியினாலே, உண்டாக்கப்பட்ட பொருளானது யாதொன்று பண்ணுகிறதுக்குப் பொருளின் சுபாவத்தைக கர்த்தரானவர் பார்த்துப் பண்ணுகிற உதவியானது [3]'சுபாவத்தின அந்தஸ்திலேயிருக்கிற உதவி' என்றும் உண்டாக்கப்பட்ட பொருளினாலே [4]'சுபாவமாக அவசியமாய் அபேக்ஷிக்கப்பட்ட ஒத்தாசை' என்றும் சொல்லப்படும். இபபடிப்பட்ட உதவியைக்கொண்டு பொருளானது காரியத்தைப் பண்ணும்போது, காரியத்துக்குப் பிரதான காரணமாய் இருக்கக்கொள்ள, அப்படிப்பட்ட காரியத்தைப் பொருளானது தனது சுபாவ பெலத்தினாலே பண்ணிக்கொண்டு வருகிறதென்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமாகும். மோக்ஷ சாதகமாயிருக்கிற

1. Special grace 2. Supernatural grace
3. இயற்கையான உதவி 4. இயற்கை நாளுக நாடும் உதவி.

புண்ணியங்களோ வென்றால். அதுகளை உண்டாக்கப்பட்ட பொருளானது பண்ணத்தக்கதாகக் கர்த்தரானவர் பொருளின் சுபாவத்தைப்பாராமல்,வேறேயொருகன நிமித்தத்தைப்பார்த்து உதவியாகிற கிருபை பண்ணும்போது, அப்படிப்பட்ட மேலான புண்ணிய விருத்திகளை உண்டாக்கப்பட்ட பொருளானது [1]"பிரதம காரண மேரையாகப்' பண்ணுமல் [2]'எற்றின காரண மாய்' அதுகளைப் பண்ணுகிறதினுல். மோக்ஷத்துக்குக் காரண மாயிருக்கிற புண்ணிய சரித்திரங்களை அப்படிப்பட்ட தனது சுபாவ பெலத்தினுலே பண்ணமாட்டாதென்று சொல்லக்கட வோம்.

3..6 இயற்கைக்கு மேலான செயல்களைச் செய்வதற்குத் துணை காரணம், செய்யாததுக்கு முக்கிய காரணம். இதுதவிரத், தேவ இஷ்டப் பிரசாரத்தை அடைஞ்ச பேர்கள் மோக்ஷ சாதகமான புண்ணிய விருத்திகளானதுகளைப் பண்ணுகிறபோது, உண்டாக் கப்படலான சுபாவத்துக்கு மேலான விசேஷ முகாந்திரங்களை அந்தப் புண்ணிய விருத்திகள் [3]விஷயீகரிக்கிறதினுலே, உண் டாக்கப்படலான சுபாவத்துக்கு மேலான விசேஷ முகாந்திரங்கள் அத்தொகைப்பட்ட புண்ணிய விருத்திகளுக்கு விஷயங்களாய் இருக்கிறது. ஆகையாலே அதுகள் உண்டாக்கப்படலான சுபாவத்துக்கு மேலான அந்தஸ்திலேயிருக்கிற புண்ணிய விருத்தி களென்று சொல்லத்தகும் ஆனபடியினுலே, உண்டாக்கப் பட்ட பொருளானது தனது சுபாவ பெலத்தினுலே அத் தொகைப்பட்ட விருத்திகளைப் பண்ணுகிறதுக்கு வல்லதாயிரா மல், திவ்விய விசேஷ கிருபையின் பெலத்தினுலே அதுகளைப் பண்ணும்போது, அதுகளுக்கு உண்டாக்கப்பட்ட பொருளானது எற்றின காரணமாய் இருக்கிறதென்று சொல்லவேணுமொழிய பொருளானது பார்க்கிறதும் வார்த்தைசொல்லுகிறதும், அத்தை யித்தை அறிகிறதும், இதுகள் முதலான மற்றுள்ள சுபாவ சரித்திரங்களைப் பிரதம காரண மேரையாகப் பண்ணுமாப் போலே, மோக்ஷ சாதகமான புண்ணிய விருத்திகளை உண்டாக் கப்பட்ட பொருளானது பண்ணுகிறதென்று சொல்லப்படாது. மோக்ஷ சாதகமான விருத்திகளை உண்டாக்கப்பட்ட பொரு ளானது பிரதமகாரண மேரையாகப் பண்ணுதிருக்கும்போது, திவ்விய விசேஷ கிருபையின் பெலமானது அப்படிப்பட்ட புண்ணிய விருத்திகளுக்குப் பிரதமகாரணமாய் இருக்கிறதென்று

1 Principal cause 2 Instrumental cause 3 have as objects?

அற்பமாகிலும் சந்தேகமில்லாமல் ஒப்புக்கொள்ளத்தக்க சத்திய மாகும். ஆனபடியினாலே, உண்டாக்கப்பட்ட பொருளானது குறையிலே விழலான தனது சுபாவ பெலத்தைக் கொண்டு ஞாய நீதியின் வழியில் நின்று தப்பிப் போகலாம் என்கிறதுக்காக, அப்படிப்பட்ட புண்ணியவிருத்திகள் உண்டாகிறதிலேயும் குறை யற்ற சித்தியை அதுகள் அடைகிறதிலேயும் நடக்கிற மேரை மரியாதையை விசாரிக்குமிடத்தில், உண்டாக்கப்பட்ட பொருளா னது தனது சுவாதந்திரியமான மனசினுடைய குறையுள்ள பெலத் தைக்கொண்டு அப்படிப்பட்ட சுபாவத்துக்கு மேலாயிருக்கிற புண்ணிய விருத்திகளைப் பண்ணுமல், அந்தவிருத்திகளானதுகள் உண்டாகாததுக்குப் பொருளானது பிரதம காரணமாயிருக்கலா மென்று அங்கீகரிக்கத்தகுமொழிய, அதுகள் உண்டாகிறதுக்குப் பொருளானது எற்றின மேரையாக மாத்திரம் காரணமாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கத் தக்கதாகும். அதெனென்ருல், அப்படிப்பட்ட புண்ணிய விருத்திகள் உற்பவிக்கிறதுக்குக் கார ணமாயிருக்கிற முன் சொல்லப்பட்ட முந்தின நல்ல விசாரங்கள் புத்தியுடைத்தான பொருளிடத்திலே பிறக்க வேணும் என்கிற துக்குத் தப்பாது. அப்படிப்பட்ட முந்தின நல்ல விசாரங்கள் சுவாதந்திரிய மனசினுடைய சம்மதமில்லாமற் புத்தியுடைத் தான பொருளிடத்திலே தெய்வீக மேரையாக மாத்திரம் பிறக் கும்போது அதுகளைத் தயாபரரான கர்த்தரானவர் பொருளின் சுபாவத்தைப் பாராமல் புத்தியுடைத்தான பொருளிடத்திலே பிறப்பிக்கிருரென்று கண்டுபிடிக்கத் தக்கதொழிய மற்றப்படி யல்ல.

பின்னையும், அப்படிப்பட்ட புண்ணிய விருத்திகள் உண் டாக்கப்பட்ட பொருளின் சுபாவத்துக்கு மேலாயிருக்கிற அந் தஸ்திலே யிருக்கிற விஷயத்தை உடைத்தானதுகளாய் இருக்கக் கொள்ள அதுகள் உண்டாக்கப்பட்ட பொருளின் சுபாவத்துக்கு மேலான விருத்திகளாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கவேணும் என்றிருக்கையிலே, உண்டாக்கப்பட்ட பொருளின் சுபாவத் துக்கு மேலான விருத்திகளாயிருக்கக்கொள்ள, ஞானமும் சுவா தந்திரியமும் உடைத்தான பொருளானது அப்படிப்பட்ட விருத் திகளுக்குப் பிரதம காரணமாய் இருக்கலாமென்று சொல்லப் படாது. அதேதென்ருல், பொருளானது காரியத்துக்குப் பிர தம காரணமாய் இருக்கும்போது, பொருளானது ஒன்றில் காரி யத்துக்கு உண்டான அந்தஸ்திலே இருக்கவேணும், இல்லாவிட்

டால் காரியத்துக்கு மேலாயிருக்கிற அஸ்தஸ்திலே காரணமான பொருளானது அடங்கியிருக்க வேணும். இந்த இரண்டும் காரணமான பொருளிடத்திலே இல்லாதபோது, காரியத்தை உத்தேசித்துக் காரணமான பொருளானது பிரதம காரணமாயிருக்கிறதென்று சொல்லப்படாமல், அப்படிப்பட்ட காரியத்துக்கு வேறே பிரதம காரணம் உண்டாயிருக்கிறது என்று அங்கீகரிக்க வேணும். காரியகாரண மேரையானது இப்படிக்கொத்ததாய் இருக்கச்செய்தே, மோக்ஷ சாதகமான புண்ணிய விருத்திகளானதுகள் ஞானமுஞ் சுவாதந்திரியமும் உடைத்தான மனுஷருடையவுஞ் சம்மனசுக்களுடையவும் சுபாவத்துக்கு மேலாயிருக்கிற அந்தஸ்திலே அடங்கியிருக்கக்கொள்ள, மனுஷருஞ் சம்மனசுக்களும் அப்படிப்பட்ட புண்ணியமாகிற தெய்வீக விருத்திகளுக்கு எத்தன காரணங்களாக மாத்திரமிருந்து, திவ்விய விசேஷ கிருபையின் சத்தியானது அதுகளுக்குப் பிரதானகாரணமாய் இருக்கிறதென்கிறதுக்குச் சந்தேகப்படத் தகாது.

3·7 இத்தகைய மேலான செயல்களைச் செய்ய மனிதனின் இயற்கையால் முடியாது. இந்தப் பாடத்திலே சொல்லப்பட்ட ரகசிய விசேஷங்களெல்லாம் எல்லாருக்கும் வெளியாகும்படிக்கு ஆன இடங்களில் அதுகளை அடைவாக ஆரோபித்து அறியப்பண்ணக் கடவோம். அதெப்படியென்றால், எதார்த்தமாகக் குறையில்லாமல் அறியப்பட்ட தேவவிஷயக விசுவாசமும், இதுக்குச் சரியான பாவ நிவாரணத்துக்கு உதவி செய்கிற பச்சாத்தாபமும், உத்தம பத்தியும், மனுஷனானவன் கர்த்தனுக்குத் தான் ஏற்றிருக்க வேணும் என்கிறதுக்காகக் கர்த்தன் கற்பித்த புண்ணிய நெறியிலே தப்பில்லாமல் இனிமேல் நடப்பேன் என்கிற கெட்டியான பிரதிக்கினை பண்ணுகிறதென்கிறதும், தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனமாகிற மோக்ஷத்துக்குச் சாதகமாயிருக்கிற மற்றுள்ள புண்ணிய சரித்திரங்களை விசாரிக்கும்போது, அதுகள் எல்லாம் புத்தியுடைத்தான பொருளினாலே பண்ணப்படுகிற தெய்வீக விருத்திகளாயிருந்தாலும், அப்படிப்பட்ட தர்ம விருத்திகளானதுகள் உண்டாக்கப்படலான ஞானமுள்ள பொருளின் சுபாவத்துக்கு மேலான அந்தஸ்திலே இருக்கிற பொருளாகிற சருவேசுரனை எதார்த்தவிதமாக விஷயீகரிக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே, துப்படிப்பட்ட விஷயத்தை உத்தேசித்துக்கொண்டு வருகிற விருத்திகளானதுகள் உண்டாக்கப்படலான ஞானமுள்ள பொருளின் சுபாவத்துக்கு மேலான விருத்திக

ளென்று சொல்லக்கடவோமொழிய மற்றப்படியல்ல. அதுகள் சுபாவத்துக்கு மேலானவிருத்திகளென்று சொல்லலாய்இருக்கு போது, நடக்கிறதும் வார்த்தை சொல்லுகிற நம் லவுகிக விஷயங் களை அறிகிறதும் என்கிற இத்தொகைப்பட்ட மற்றுள்ள 'விருத் திகப்போலே ஞானமுடைத்தான பொருளில் சுபாவத்துக்குச் சரி யாக ஏற்றிருந்து ஞானம் பொருள்களுக்குச் சுபாவ மேரையாக வரலான நன்மையாய் இருக்கிறதென்று சொல்லப்படாது. ஆதலாலே அப்படிப்பட்ட விருத்திகளை உண்டாக்கிறதுக்கு ஞானமுள்ள பொருளானது சுபாவமுள்ள பெலமுடைத்தான தாய் இருக்கமாட்டாது. அது சுபாவ பெலம் இல்லாததாய் இருக்கிறபோது, அப்படிப்பட்ட புண்ணிய சரித்திரங்களுக்கு ஞானமுள்ள பொருளானது பிரதம காரணமாயிராமல், திவ்விய பிரசாதத்தினாலே ஞானமுள்ள பொருளானது சுபாவத்துக்கு மேலாக உசத்தப்பட்டு, அதுகளுக்கு ஞானமுள்ள பொருள் எத்தனமேரையாக மாத்திரங் காரணமாய் இருக்கலாமென்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமாகும்.

3:.8 மேலான செயலை ஆற்றும்படி கடவுள் உதவுவது இயற்கை யை நோக்கியன்று, ஆனால் அளவற்ற நன்மைந்தானம் பற்றியும் பாடு கள் பற்றியுமாம். இதுதவிரப் பொருளானது அப்படிப்பட்ட புண் ணிய விருத்திகளுக்கு எத்தனகாரணமாய் இருக்கத்தக்கதாக வேண்டின திவ்விய சகாயத்தை, உண்டாக்கப்பட்ட சுபாவமான மேரையைப் பார்த்துக் கர்த்தராானவர், அவசியமாய்ப் பண்ணக் கடவாரென்று சொல்லக் கடவோமல்ல. ஆனபடியினாலே, சகலத் தையுந் தப்பில்லாமல் நடத்துகிற கர்த்தரானவர் முன் சொல்லப் பட்ட புண்ணிய சரித்திரங்களை ஞானமுள்ள பொருள் உண்டாக் கிறதுக்கு வேண்டின திவ்விய சகாயத்தை அவர் பண்ணும் போது, உண்டாக்கப்பட்ட பொருளின் சுபாவத்தைப் பார்த்து அந்தச் சுபாவத்தின் நிமித்தமாக முன் சொல்லப்பட்ட திவ்விய சகாயத்தைப் பண்ணாமல், உண்டாக்கப்பட்ட பொருளுக்கு அந்தத் திவ்விய சகாயத்தைப் பண்ணத்தக்கதாகக் கர்த்தரான வர் வேறே 'கனமான மகிமையுள்ள விசேஷத்தைப்' பார்த்து, அப் படிப்பட்ட பெருமையுள்ள விசேஷத்தின் நிமித்தமாகப் படைப் புண்ட பொருளுக்கு முன்சொல்லப்பட்ட திவ்விய சகாயத்தைப் பண்ணுகிறாரென்று சொல்லக்கடவோமொழிய மற்றப்படியல்ல.

அப்படிப்பட்ட கனமுள்ள விசேஷமேதென்றால், 'ஞான உபதேசத்தின் இரண்டாம் காண்டத்திலே பதினேழாம் பாடத்

1 விருத்திகளும் (பா.)

திலே,' சொல்லப்படும் என்கிறதினால், இத்தறுவாயிலே அத்தைச் சொல்லுகிறது என்கிறது கிரமமாயிராது. ஆனால், அப்படிப் பட்ட பரம ரகசியத்தை நாம் [1]கீர்த்தனத்தினாலே மாத்திரம் உப தேசிக்கவேணுமானால்,முன் சொல்லப்பட்ட புண்ணியசரித்திரங் கள் உண்டாகிறதுக்கு வேண்டின திவ்விய சகாயத்தைக் கர்த் தரானவர் பண்ணிக்கொண்டு வருகையிலே, தனது அளவில்லாத நன்மைத்தனமும் தாம் பண்ணின மாங்கிஷ அபிக்கமும் மனுஷ சுபாவத்திலே தாம் அடைந்த உபத்திரவ மரணமும் என்கிற நிமித்தங்களை மாத்திரம் பார்த்து, அதுகளுக்காக முன்சொல்லப் பட்ட திவ்வியமான உதவியை உண்டாக்கப்பட்ட பொருள் களுக்குச் செய்துகொண்டு வருகிறாரொழிய, உண்டாக்கப்பட்ட பொருளின் சுபாவ முதலான வேறே நிமித்தங்களைப் பார்த்து உண்டாக்கப்பட்ட பொருள் மோக்ஷக் கரையேறுகிறதுக்கு வேண்டின திவ்விய சகாயத்தை அதுக்குப் பண்ணுகிறாரென்று சொல்லவும் கருதவுங் கூடாது,

முப்பத்தோராம் பாடம் முற்றும் (கி. ?)

## முப்பத்தி இரண்டாம் பாடம்

32.1 ஆகுதல் (ens) எல்லாம் அறிவின் துறைக்குட்பட்டது' கடவுளும் ஆகுதலில் ஒன்றாவார். அந்தந்த இந்திரியத்துக்கு அந் தந்தப் பொருளானது விசேஷ விஷயமாயிருக்குமாப்போலே, ஞான விருத்திகளுக்குக் காரணமானதுமாய், ஆத்துமத்திலே மாத்திரம் ஆதேயமானதுமாயிருக்கிற சத்தியாகிற புத்திக்கு [2]ஆகுதலானது விசேஷ விஷயமாயிருக்குமென்று போன பாடங் களிலே ஒப்பச் சொன்னோமே. ஆகையாலே, அந்தந்த இந்திரி யத்தினுடைய விசேஷ விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கினதெல்லாம் அந்தந்த இந்திரியத்துக்கு [3]கோசரமாய் இருக்கலாம் என்று சொல்லவேண்டியிருக்கும் என்கிறதுக்குத் தப்பாது. இந்தடைவாக ஞான சத்தியாகிற புத்திக்கு ஆகுத லானது விசேஷ விஷயமாயிருக்கச் செய்தே, ஆகுதலுடைய விஸ்தாரத்துக்குள்ளே அடங்கினதெல்லாம் அப்படிப்பட்ட புத்திக்கு கோசரமாய் இருக்கலாமென்று சொல்லக்கடவோம். இது காரணமாகப் பராபர வஸ்துவானது சகல பொருள்களைக் காட்டிலும் உத்தமமான ஆகுதலாயிருக்கக்கொள்ள, ஆகுதலு டைய விஸ்தாரத்துக்குள்ளே பராபர வஸ்துவானது அடங்கி யிருக்கிறதென்று அங்கிகரிக்கத்தக்கதாகும். ஆதலாலே இப

1 குறிப்பிடுதல் 2 ens. 3 எட்டியது

படிப்பட்ட பராபர வஸ்துவானது உண்டாக்கப்பட்ட ஞான சத்தியாகிற புத்திக்கு கோசரமாய் இருக்கத்தக்க விஷயமாய் இருக்கிறதென்று ஒப்புக்கொள்ளத்தக்க சித்தாந்தமாகும்.

32·2 காரண காரியத்தால் வரும் அனுமான ஞானத்தால் கடவுளை அறிந்தாலும், அனுரூப காரியம் இல்லாததால் அவரது இயல்பை அறிய முடியாது. இதிலே அறியவேண்டின சில ரகசிய விசேஷங்களுண்டு. அதேதென்றால், புத்தியானது பராபர வஸ்துவைக் கண்டுபிடிக்கத்தக்க மேரைகளானதுகள் பலபல விதங்களா யிருக்கிறதென்று அனுபவசித்தியினாலே கண்டுகொண்டு வருகிறோம். அதெப்படியென்றால், காணப்பட்ட காரியத்தினாலே காணாத காரணத்தைக் கண்டுபிடிக்கலாம் என்கிற ஞாயமுண்டாயிருக்கச் செய்தே, காணப்பட்ட லோகத்தையும், லோகத்திலுண்டான சந்திர சூரியாதி எண்ணப்படாத பொருள்களையும பத்தும் பத்தாய் பராமரிசித்தோமானால், இப்படிப்பட்ட வஸ்துக்கள் என்னப்பட்ட யாவும தானாக உண்டாகமாட்டாது என்கிறதுக்காக, அதுகள் எலலாத்துக்குந் தானாயிருக்கிற ஒரு ஆதிகாரணம் உண்டாயிருக்கவேணும் என்று சந்தேகமற நிச்சயம் பண்ணி, இப்படிக்கொத்த ஓர் ஆதி காரணமானது கடவுளென்றும, மெய்யான கர்த்தனென்றுஞ் சர்வேஸ்வரனென்றும் அங்கீகரித்துக் கொண்டு வருகிறோம். இபபடிககொதத ஞானத்தை விசாரிக்குமிடத்தில், அதினாலே சர்வேஸ்வரனுடைய [1] ஸ்திதியானது அறியப்பட்டுச் சர்வேஸ்வரன் உண்டென்கிற சத்தியத்தைக் கண்டுபிடிக்கிறோமொழிய, அவர் எப்படிக்கொத்த மகிமையுள்ள சுபாவத்தைக் கொண்டிருக்கிறாரென்று அந்த வகையுள்ள ஞானத்தினிமித்தமாகக் குறையிலலாமல் கண்டுபிடிக்கலாய் இராது. ஆனால், சந்திர சூரியாதி வழங்கிக்கொண்டு வருகிற பிரபஞ்சம் என்னப்பட்டதெல்லாம் பத்தும் பத்தாய் விசாரிக்கப்பட்டால், அந்தந்தப் பொருளினுடைய அலங்கார பல மூதலான பெருமையுள்ள விசேஷ குணங்கள் காணப்படுகிறதினால், வஸ்துவென்னப்பட்ட யாவையும் உண்டாக்கின காரணமான சர்வேஸ்வரனுக்கு மகா மகாப்பட்ட மகிமைகள் உண்டென்று நிச்சயம் பண்ணலாம் என்கிறதுக்குத் தப்பாது. ஆனால், லோகமும் லோகத்திலுண்டான வஸ்துவென்னப்பட்ட யாவும் தனித்தனியேயானாலும் எல்லாங் கூடவென்கிலும் விசாரிக்கப்பட்டாலுஞ், சசலநன்மை சுரூபமாயிருக்கிற சர்வேஸ்வரனுக்கு அதெல்லாம் [2] அனுரூப காரியமாய்

1 existence உள்ளமை 2 effectus univocus

இராமல் உண்டாக்கப்பட்ட பொருளென்னப்பட்ட யாவுக்கும் மனோவாக்குக்கு எட்டாததாயிருக்கிற ஏக பராபரவஸ்துவுக்கும் முடிவில்லாத தூரம் உண்டாயிருக்கக்கொள்ள, சகல பொருள்களுடைய பெருமை விஷயக ஞானத்தினிமித்தமாகச் சகலத்தையும் உண்டாக்கிற சர்வேஸ்வரனுக்குச் சில மகிமையுண்டென்று நிர்ணயம் பண்ணலாயிருக்கிற தொழிய, அவருடைய அனந்த மகிமையுள்ள [1] சுபாவசுரூபத்தை இப்படிக் கொத்ததென்று கண்டு பிடிக்கக்கூடாது.

**32·3 சம்மனசு மனிதனைக் காட்டிலும் கடவுளை நன்கு அறிந்தாலும் அதன் அறிவும் குறைவுள்ள அனுமான ஞானமே.** இதிலே அறியவேண்டின விசேஷமாவது: அதிகமதிகமான பெருமையுள்ள பொருளை அவனவன் அறிகிறதினால் ஆதி காரணமான சர்வேஸ்வரனிடத்திலே அதிகமதிகமான மகிமை உண்டாயிருக்கிறதென்று அவனவன் கண்டுபிடிப்பான் என்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது. ஆதலாலே, சகல சரீரியான பொருளைக்காட்டிலும் சரீரமில்லாத சம்மனசானவன் மிகவும் உத்தம பொருளாய் இருக்கிறபோதே, அந்தந்தச் சம்மனசானவர் தன்னையுந் தனக்கு மேலாயிருக்கிற சம்மனசுக்களையும் அறிகிறதினால், அவனுக்கு வருகிற பராபர வஸ்து விஷயக ஞானமானது சரீரத்தின் கண்ணாலே காணப்பட்ட சகல பொருள்களுடைய பெருமை விஷயக ஞானத்தினாலே பிறக்கிற தேவவிஷயக ஞானத்தைக் காட்டிலும் [2] அதிகமதிகமாய் இருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. ஆனாற், சம்மனசானவன் உண்டாக்கப்பட்ட பொருளாயிருக்கக் கொள்ள, உண்டாக்கப்பட்ட மற்ற வஸ்துக்களைப்போலே ஆதி காரணமான சர்வேஸ்வரனுக்கு அனுரூபகாரியமாய் இராதென்று அங்கீகரிக்கவேணும் என்கிறதுக்குத் தப்பாது. இந்த விஷயமாக 'நித்திய சீவன சல்லாபத்திலேயும்' இவ்விடத்திலேயும் போன பாடத்திலேயும் விஸ்தாரப் பிரசங்கம் பண்ணினோம் என்கிறதினால் இவ்விடத்திலே கொஞ்சத்துக்குள்ளே இவ்வளவு எடுத்துக்காட்டினது போரும். இற்றைவரைக்கும் நம்மாற் சொல்லப்பட்ட தேவவிஷயக ஞானத்தை விசாரிக்குமிடத்தில், உண்டாக்கப்பட்ட பொருள் விஷயக ஞானத்தில் நின்று அது பிறந்து யிருக்கிற '[3]அனுமான ஞானமா'யிருக்கக் கொள்ள, அந்த ஞானமானது உண்டாக்கப்பட்ட புத்தி

1 தன்மை (பா. பே) 2 உத்தமமாய்(பா. பே.) 3 discursive knowledge

யினுடைய சுபாவத்துக்கு மேலான தாயிராமல், உண்டாக்கப் பட்ட புத்தியினுடைய சுபாவத்துக்கு ஒத்திருக்கிற தேவவிஷயக ஞானமென்று சொல்லப்படும்.

32·4. கேள்வியால் வருகிற சப்த அல்லது விசுவாச ஞானம் அநுமான ஞானத்தினுஞ் சிறந்தது. எனினும் பிரத்தியக்ஷ ஞானத்தை (நேர்காட்சி) நோக்க அது இருட்டில் பார்ப்பது போன்றது இதுதவிரக் கடவுள் இன்னதென்று கண்டுபிடிக்கிறதுக்குக் [1]கேள்வியானது வேறே ஞானத்தைப் பிறப்பிக்கும் என்கிறதுக் குத்தப்பாது. அவ்வண்ணமே, தேவோக்தித்த வேதத்திலே சொல்லப்படுகிற சருவேசுரனுடைய தெய்வதிரித்துவ ஏகத்துவமும் மாங்கிஷ அயிக்கியமும் மற்றுண்டான இத்தொகைப் பட்ட பரமரகசியங்களின் மகிமைகளும் மனுஷனுலே கேட்கப் பட்டால், கர்த்தனிடத்திலே அப்படிப்பட்ட பெருமையுள்ள விசேஷங்கள் உண்டாயிருக்கிறதென்று அற்பமாகிலுஞ் சந்தேகமில்லாமல் மனுஷனைவன் அறிகிறதுந்தவிர, இப்படிப்பட்ட திவ்வியமான மகிமைகள் இன்னதென்று குறையுள்ள மேரையாக மனுஷனைவன் கண்டுபிடிப்பான் என்கிறதுக்குச் சந்தேகப் படத் தேவையில்லை. இந்த வகையுள்ள ஞானத்துக்குச் [2]'சப்த ஞானம்' 'விசுவாச ஞானம்' என்கிற நாமமானது செல்லுமென்று சொல்லத்தகும். இப்படிப்பட்ட ஞானத்தின் நிமித்தமாகச் சகலத்துக்கும் ஆதிகாரணமான சகல நன்மை சுரூபமான சருவேசுரன் உண்டென்றும், அவருடைய அனந்த மகிமையுள்ள சுபாவ சுரூபம் இன்னதென்றுஞ், சுமுத்திரையாய் மெய்யாகவே கண்டுபிடிக்கிறோமென்று சொல்லவேண்டியிருந்தாலும், இதெல்லாம் மறைவுள்ள மேரையாக இருட்டிலே காணப்படுகிறதென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. இப்படி சுமுத்திரையாக இருட்டிலே காணப்பட்ட சகல நன்மை சுரூபமான சருவேசுரனைவரைப் பிரகாசமாய்ப் [3]பிரத்தியக்ஷ தெரிசனத்து நிமித்தமாகக் கண்டுபிடிக்கிறதென்கிறது, சீவனுடைய 'குறையற்ற பாக்கியம்' என்றும், 'பரமானந்தம்' என்றும் 'மோக்ஷம்' என்றுஞ் சொல்லப்படும்.

அவ்வண்ணமே, இந்தப்பூமியிலே திரிகிற வழிப்போக்கனைவன் மறைவுள்ள மேரையாக விசுவாச தெரிசனத்தினுலே பராபர வஸ்து இன்னதென்று கண்டுபிடித்து, அதினுடைய திருச்சித்தத்தின்படியே நடக்கிறதென்கிறது வழியாயிருந்து,விசுவாசதெரி

1 testimony. 2 hearsay, belief. 3 கண்கூடு

சமத்தினிமித்தமாக இருட்டிலே காணப்பட்ட சகல நன்மை சுரூபமான கர்த்தரானவர் பிரகாசமாகிற பிரதியக்ஷ தெரிசனத்தினாலே காணப்பட்டால், அதே சீவனுக்கு [1]அவதி ரூபமான குறையற்ற பாக்கியமென்கிற மோக்ஷமென்று சொல்லப்படும். அப்படிப்பட்ட இருட்டாகிற விசுவாசத்தினாலே கர்த்தனை அறிந்து, அவருக்கு ஏற்றிருக்கிற சகல நிர்மல புண்ணிய வழியிலே பாவமற்ற நடக்கையானது பூலோகத்திலே மனுஷனை வன் மகாமகாப்பட்ட பிரயாசத்தோடு பண்ணிக்கொண்டுவருகிற வேலையென்றும் [2]'தேவவிஷயக சேவகதர்மம்' என்றுஞ் சொல்லப்படும்.

32.5. நேர்காட்சி மனிதன் இயற்கைக்கு மேலானது. எனினும் கடவுள் அதைப் பரிசாக அளித்திருக்கிறார். பிரத்தியக்ஷ தெரிசனத்து நிமித்தமாகக் கண்டுபிடிக்கப்பட்ட அப்படிப்பட்ட சர்வேசுரனானவர் தாமே பரிபூரண தக்ஷிணையும் குறையற்ற சமபளமுமானவர் வாக்குக்கு [3]அகோசரமானதுமாய் என்றென்றைக்கும் நிற்கத்தக்க பலனானதுமாய் இருக்கிறதென்று அற்பமாகிலுஞ் சந்தேகமில்லாமல் முழுமனதோடே அங்கீகரிக்கக்கடவோம். அவ்வண்ணமே, உண்டாக்கப்பட்ட புத்திக்கும் மட்டில்லாத சகல நன்மை சுரூபமான கர்த்தனுக்கும் முகிவில்லாத தூரம் உண்டாயிருந்தாலும், இப்படிப்பட்ட அவதியாகிற தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்தைக் கர்த்தனுடைய அளவில்லாத பெலத்தினாலே உண்டாக்கப்பட்ட புத்தியானது அடையாலாமென்று போன பாடங்களிலே ஒப்புவிக்கப்பட்ட போதே, இப்படிப்பட்ட அவதியான குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷத்தைப் பாவமற்ற சகல நிர்மல புண்ணிய வழியிலே நடக்கிற புண்ணியாத்துமாக்களுக்குத் தயாபரனான சருவேசுரன் கட்டளையிடத்தக்க திருவுளமானார் என்று இத்தறுவாயிலே ஒப்புவிக்கத்தக்க சத்திய விசேஷமாகும். இந்தச் சத்திய விசேஷத்தைச் சர்வேசுரனானவர் தமது வேதத்திலே திருவுளம் பற்றி வெளிப்படுத்தினார் என்கிறதினால், அற்பமாகிலுஞ் சந்தேகமற்ற ஸ்திரமாக அதை அறிகிறோமொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே, தேவோக்கித்த வேதத்திலே உண்டாயிருக்கிற பலபல உதாகாரணங்களினாலே இந்தச் சத்திய வர்த்தமானமானது ஒப்புவிக்கப்படும் என்கிறதுக்குத் தப்பாது. அப்படிப்பட்ட அனேக உதாகாரணங்களுக்

1 finality (முடிவு) 2 கடவுள்வழிபாடு service of God 3 எட்டாதது

குள்ளே ஒன்றிரண்டு மாத்திரம் இந்த அவசரத்திலே நாம் எடுத்துக்காட்டித் தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்திலே சீவனுடைய அவதியாகிற மோக்ஷமான குறையற்ற பிரத்தியக்ஷ பாக்கியமானது அடங்கியிருக்கிறதென்றும், அத்தை அடைந் திருக்கிற சீவனனது எப்படிப்பட்ட தெய்வீக வரப்பிரசாதங்களி னாலே அலங்கரிக்கப்படுகிறதென்றும் எவ்வளவாகிலும் வெளி யாகும்படிக்கு வருந்தக்கடவோம்.

32.6 இதற்கு வேதாகமத்திலிருந்து முதல் சான்று (சங். 83. 5) அவ்வண்ணமே [1]தேவாதீஷ்டனுயிருக்கிற தீர்க்க தெரிசியானவர் சருவேசுரனை உத்தேசித்து அருளிச் செய்ததாவது: [2]"உன்னு டைய ஆலயத்திலே வாசமாயிருக்கிற பேர்கள் பாக்கியவான் களாம், அவர்கள் உம்மை ஊழியுள்ள காலம் ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டு வருவார்கள்.' இதினுடைய [3]தாற்பாரியமா வது: சருவேசுரனனவர் பெலத்தினாலேயும் ஞானத்தினாலேயுங் [4]காரணத்தினாலேயும் எங்குமிருக்கிறார் என்று சொல்லவேண்டி யிருக்கையிலே, சோதிமண்டலத்திலே அவர் பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகிறார் என்கிறதினாலே அப்படிப்பட்ட ஸ்தலமானது சருவேசுரனுக்கு 'விசேஷமான ஆலயம்' என்று சொல்லப்படும். இது காரணமாக அப்படிப்பட்ட ஆலயத்துக்குப் பிறந்திப்பட்ட பேர்கள் சருவேசுரனைப் பிரத்தியக்ஷமாய்க் காணுமலிருக்கிறதி னால் அவர்களுக்குப் பாக்கியவான்கள் என்கிற பேர் செல்லாது. சருவேசுரனுக்கு விசேஷ ஆலயமாகிற சோதி மண்டலத்திலே வாசமாயிருக்கிற பேர்களோவென்றால், அப்படிப்பட்ட ஆலயத் திலே வாசமாயிருக்கிறது என்கிறது சருவேசுரனைப் பிரத்தியக்ஷ மாய் காண்கிறதுக்குந் தாற்பரியமென்று சொல்லத்தகும். அதெப்படியென்றால், ராசாவினுடைய அரமனையிலே குடியா யிருக்கிற பேர்கள் அவர்கள்தானே ராசாவுக்கு சனுக்களென்றும் பிள்ளைகள் முதலான பந்து செனங்களென்றுஞ் சொல்லப்படும் என்றிருக்கையிலே, அவர்கள் ராசாவானவன் [5]சன்னதிப்பட்ட பேர்களாயிருந்து கொண்டு, ராசாவை எப்போதும் பிரத்தியக்ஷ மாய்க்கண்டுவருகிறார்களென்று சொல்லப்படும் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. ஆதலாலே ராசாவினுடைய

1 தேவகாட்சியன் (inspired?); தேவாதீக்ஷத (1ம்.பதி) 2 சங். 83.5
3 பொருள் 4 காரணமாய் (பா.) 5 திருமுன் உள்ள

அரமனையிலே ஒருத்தன் வாசமாயிருக்கிறானென்று சொல்லுகிறது என்கிறது, ராசாவின் சன்னதியிலே அவன் இருக்கிறானென்றும், ராசாவை அவன் பிரத்தியக்ஷமாய்க் கண்டுகொண்டு வருகிறானென்றும் சொல்லுகிறதுக்கு ஒக்கும். இதற்கு ஞாயமேதெனில், ராசாவின் அரமனையிலே பூராதவனும், ராசாவினுடைய அரமனைக்குப் பிறத்திப்பட்டவனாயிருக்கிறவனும் ராசாவின் சன்னதியிலே இருக்கவில்லை என்றும், அரமனையிலே எப்போதும் இநக்கிற ராசாவைப் பிரத்தியக்ஷமாய் அவன் கண்டுகொண்டு வரவில்லை என்றுஞ் சொல்லுகிறதுக்கு ஒக்கும். அம்மருவாதியே, ராசாவினுடைய அரமனையிலே ஒருத்தன் குடியாயிருக்கிறான் என்று சொன்னோமானால், அவன் ராசாவின் சன்னதியிலே இருக்கிறானென்றும், அவன் ராசாவைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டுகொண்டு வருகிறானென்றும் சொல்லுகிறதுக்குச் சமானம். ஆகையாலே, 'சருவேசுரனைப் பிரத்தியக்ஷமாய் ஒருத்தன் காண்கிறது' என்கிற தாற்பாரியமானது 'சருவேசுரனுடைய விசேஷமான ஆலயத்திலே வாசமாய் இருக்கிறான்' என்கிற வாக்கியத்தினாலே காட்டப்பட்டுதென்று சொல்லத்தகும். அப்படியே சருவேசுரனுடைய விசேஷமான ஆலயத்திலே வாசமாயிருக்கிற பேர்கள் அப்படிப்பட்ட வாசத்து நிமித்தமாகச் சருவேசுரனுடைய சன்னதிப்பட்டுச் சருவேசுரனைப் பிரத்தியக்ஷமாயக் கண்டுகொண்டு வருகிறார்கள் என்கிறதுக்காகச் சகல நன்மைகளுடைய விஷயங்களிலே பரிபூரண அனுபவத்தை அவர்கள் அடைந்திருக்கிறார்கள். ஆதலாலே, 'பாக்கியவான்கள்' என்கிற நாமமானது அவர்களுக்குச் செல்லுமென்று வேத உதாகரணத்தினாலே சந்தேகமற அங்கீகரிக்கத்தக்கதாகும். அப்படிப்பட்ட பாக்கியவான்கள் குறைவில்லாத சகல நன்மைகளைத் தாங்கள் அனுபவிக்கிறதுக்குத் தயாபரனான கர்த்தரானவர் காரணமாய் இநக்கிறார் என்றறிந்து, நன்றியறிந்த பேர்களாய் இநக்கக் கொள்ள, இடைவிடாமல் ஊழியுள்ள காலத்திலே சருவேசுரனை ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டு வருகிறார்களென்று தீர்க்கத்தரிசியினுடைய நாவைக் கொண்டு கர்த்தரானவர் திருவுளம் பற்றினார் என்கிறதுக்குத் தப்பாது

### 32·7 இரண்டாம் வேதாகமச் சான்று (சங். 35, 9–10)

பின்னையும், தமது வேதத்திலே சருவேசுவரனானவர் தீர்க்கதெரிசியைக் கொண்டு இந்தச் சத்தியத்தை அருளிச்செய்தா

ரென்று சந்தேகமற அறிகிறோம். தீர்க்கதெரிசியானவர் சருவேசுரனைப் பார்த்துச் சொன்ன வார்த்தைகளாவது: "உம்முடைய அண்டையிலே ஜீவனத்தினுடைய ஊற்றுண்டாயிருக்கக்கொள்ள, உம்முடைய ஆலயத்தின் பரிபூரண செழிப்பினாலே அவர்கள் திருத்தியை அடைவார்கள். நதியினுடைய பிரவாகத்துக்குச் சமானமாயிருக்கிற உமது சுகத்தைப் பானம்போலே அவர்கள் குடிக்கத் தக்கதாகக் கட்டளை இட்டருளினீர், அப்படியே உமது பிரகாசத்தைக் கொண்டு பிரகாசத்தைக் காண்போம்". [1]இந்த வார்த்தைகளுக்குத் தாற்பரியமாவது: "ஆண்டவரே, எல்லாரெக்கும் நிற்கத்தக்க பிழைப்புக்கு, நீர் காரணமாயிருக்கிறீர். ஆதலாலே, உம்முடைய விசேஷமான ஆலய மாகிற பரமானந்தத்தின் பரிபூரணத்தினாலே திரித்தியையடைந்த பேர்கள் தனது வசமாயிராமல், சகல விஷயங்களிலே உமது வசமாய் இருப்பார்களொழிய மற்றப்படியல்ல. அப்படிப்பட்ட பேர்களுடைய தாகமாகிற ஆசையானது சகலத்திலும் பூரிக்கப்படும் என்கிறதுக்காக, நதியினுடைய பிரவாகத்துக்குச் சமானமாயிருக்கிற சுகமானது உம்முடைய கட்டளைப்படியே அவர்களுக்கு மதுரமான பானம் போலே இருக்கும்

32·8 மோட்ச பிரகாசத்தால் கடவுளைக் காண்போம். அப்படியே 'உமமுடைய பிரகாசத்தைக் கொண்டு பிரகாசத்தைக் காண்போம்.' இந்தக் கடைசி வார்த்தைகளினாலே இப்படிப்பட்ட நன்மைகளெல்லாம் எந்தக்காரணத்திலே நின்று பிறந்திருக்கிற தென்று அறியப்பெற்றுப்போலே யாச்சுது. அதேதனென்றாற் பராபர வஸ்துவானது புத்தியினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கியிருந்தாலும், உண்டாக்கப்பட்ட புத்திக்கும், மட்டில்லாத சகல நன்மை சுரூபமாயிருக்கிற பராபர வஸ்துவுக்கும் முடிவில்லாத தூரம் உண்டாயிருக்கச் செய்தே, புத்தியானது தனது சுபாவ பெலத்தினாலே சருவேசுரனைப் பிரத்தியக்ஷமாய்க் காணுகிறதுக்கு வலலதாயிராது. ஆதலாலே கிரமத்தோடு சகலத்தையும் நடத்துகிற கர்த்தரானவர் புத்தியின் சுபாவத்தைக் கெடாமல் புத்தியை அதின் சுபவத்துக்கு மேலாக உயர்த்தித், தேவ விஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்துக்கு எத்தனமேரையாகக் காரணமாயிருக்கத்தக்கதாக பண்ணுகிறார்.

[1] சங். 35. 9—10

இப்படிப்பட்ட அனந்த ஞான சுருபமாயிருக்கிற சருவேசுரனு னவர் புத்தியின் சுபாவத்துக்கு மேலான அந்தஸ்திலேயிருக்கிற ஒரு குணத்தைப் புத்திக்குக் கொடுத்தருளி, அத்தைக்கொண்டு புத்தியானது தனது சுபாவத்துக்கு மேலாயிருக்கிற தைவீக பிரத்தியக்ஷ தெரிசனமாகிற விருத்திக்கு எற்றின காரணமா யிருக்கத்தக்கதாக வல்லதாயிருக்கும். இப்படிக்கொத்த குணத் துக்கு [2]'மோக்ஷப்பிரகாசம்' என்கிற நாமமானதும் 'சர்வேஸ்வர னுடைய பிரகாசம்' என்கிற பேரும் செல்லுமென்று சொல்லப் படும் அப்படிப்பட்ட பிரகாசத்தைக்கொண்டு புத்தியானது தாயைிருக்கிற பரஞ்சோதியாகிற சருவேசுவரனைப் பிரத்தியக்ஷ மாய்க் காணுமென்று காண்பிக்க வேணும் என்கிறதுக்காக 'உன்னுடைய பிரகாசத்தைக்கொண்டு பிரகாசத்தைக் காண் போம்' என்கிற வாககியம வேதத்திலே சொல்லியிருக்கிதே.

32.9 எல்லோருக்கும் மீட்புண்டா? இதுதவிரச் [1]"சகல மனு ஷரும் மோக்ஷக் கரையேறிப் பிழைக்கத்தக்கதாகத் தயாபரனை கர்த்தரானவருக்குத் திருவுளமுண்டாய் இருக்கிறது' என்று தமது வேதத்திலே அவர் பலபல இடங்களிலே திருவுளம் பற்றினரென்று ஸ்திரமாக அறிகிறோம். இதிலே மிகவும் பரா மரிசிக்கத்தக்க விசேஷமாவது: சகலத்தையும் கிரமத்தோடே நடத்துகிற கர்த்தரானவர் எல்லாரும் மோக்ஷக்கரை ஏற வேணு மென்று அவருக்குத் தயையுள்ள திருவுளமுண்டா யிருந்தாலும், மனோவாக்குக்குஎட்டாததாயிருக்கிற அப்படிப்பட்ட பரமரகசிய மாகிற மோட்சத்தை நீதியுள்ள கிரமத்தோடு அவர்களுக்குக் கொடுக்கததக்கதாகக் கர்த்தரானவர் மனதாயிருக்கிறாரொழிய, அக்கிரமமாக அப்படிபபட்ட அனுக்கிரகத்தை அவரவர்களுக் குப் பண்ணுவாரென்று கனபாவமில்லாமல் சொல்லவுங் கருத வுங்கூடாது. இது காரணமாகச், சருவேசுரன் இன்னதென்று கண்டுபிடியாத பாவிகளும, சருவேசுரனை அறிந்து அவர் சித்தத் தின்படியே நடவாமற் கன பாவத்தோடே மரணத்தை அடைந்த சுவாமித்துரோகிகளும் முகிவில்லாத நரகதநினுடைய ஆக் கினைக்குப் பாத்திரர்களாய் இருக்கச் செய்தே, சருவேசுரனு னவர் தமக்கு மிகவும் உகந்த பிள்ளைகளாயிருக்கிற புண்ணியாத் துமாக்களுக்கு ஞாயத்தின்படியே கொடுக்கத்தக்க மோக்ஷ ராச்சியத்தை அப்படிபபட்ட பாவிகளுக்குக் கொடுக்கிறதென்

1. திமோ. 2,4 2 lumen gloriae

கிறது மிகவும் அக்கிரமமாய் இருக்கக்கொள்ள, மனுஷரென்னப் பட்ட யாவரும் என்றென்றைக்கும் நிற்கத்தக்க பிழைப்பாகிற மோக்ஷத்தை அடைய வேணுமென்று தயாபரனை கர்த்த ரானவர் திருவுளமா யிருந்தாலும், அனந்த நீதி சுரூபமா யிருக்கிற அவர் தாமே தமக்குகந்த பிள்ளைகளுக்கு அப் படிப்பட்ட குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷத்தைக் கொடுத் தருளுவாரொழிய, தங்கள் சுவா தந்திரியமான மனசினாலே நரக வேதனைக்குத் தாங்கள் தங்களைப் பாத்திரமாகப் பண்ணிக் கொண்ட பாவிகளை நரகத்திலே தள்ளுவாரொழிய, அப்படிப் பட்ட பாவிகளுக்கு குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷத்தைக் கொடுத்தருளுகிறது என்கிறது கர்த்தனுடைய நீதியுள்ள திரு வுளத்துக்கு ஏற்றிராது என்கிறதுக்காக, அவர்களுக்குக் கர்த்த ரானவர் மோக்ஷத்தைக் கொடுத்தருளத் தக்கதில்லை என்று சந்தேகமற அங்கீகரித்தக்க குன்றுத சத்தியமாகும்.

32·10 மறுமையில் நேர்காட்சி, இம்மையில் இருளில் காண்பதை ஒத்த விசுவாசக் காட்சி. அவ்வண்ணமே, நம்மாற் சொல்லப்பட்ட வேத உதாகரணங்கள் முதலான வேறே அனேகஉதாகரணங்களி னாலே தயாபரனை கர்த்தரானவர் குறையற்ற பாக்கியமென்கிற மோக்ஷத்தை மனுஷருக்கு அவதி ரூபமாகக் கட்டளையிட்டருளி னார் என்கிற சத்திய விசேஷத்தை அற்பமாகிலுஞ் சந்தேகமில் லாமல் முழுமனதோடு அங்கீகரிக்கக்கடவோம். இப்படிப்பட்ட பாக்கியமாகிற குறையற்ற மோக்ஷமானது தேவவிஷயக [1]பிரத்தியக்ஷ தெரிசனத்திலேயும் அத்தை அனுசரித்துக்கொண்டு வருகிற தேவ விஷயக [2]பரிபூரண பத்தியிலேயும், இந்த இரண் டில் நின்று பிறக்கிற [3]பரமானந்தத்திலேயும் அடவாக அடங்கி யிருக்கிறதென்று பலபல ஞாயங்களினாலேயும் வேதப்பிரமாணத் தினாலேயும் அற்பமாகிலுஞ் சந்தேகமில்லாமல் ஒப்புவிக்கப் பட்டதாக அங்கீகரித்துக்கொண்டு வருகிறோம். அப்படியே, பூலோகத்திலே வழிப்போக்கனாய்த் திரிகிற மனுஷனானவன் பராபரவஸ்து இன்னதென்று, விசுவாசத் தெரிசனத்தினாலே இருட்டிலே காணுகிறுப்போலே கண்டுபிடிக்கிறானே. இருட் டிலே காணப்பட்ட சகல நன்மை சுரூபியாயிருக்கிற சருவேசுர னானவர் சருவேசுரனானவர் தானே பிரகாசமாகிற பிரத்தியக்ஷ

1 நேர் காட்சி 2 முழு அன்பு 3 பெரு மகிழ்ச்சி

தெரிசனத்தினாலே காணப்பட்டால், சிவனிடத்திலே தேவ விஷயக பரிபூரண பத்தியையும் மனோவாக்குக்கு எட்டாததாயி ருக்கிற பரமானந்தத்தையும் சகலநன்மை விஷயத்திலே [1]பரிபூரண லாபத்தையும் பிறப்பிக்கிறார் என்கிறதுக்குத் தப்பாது

32.11 மாணிக்கத்தை இருளிலும் ஒளியிலும் காண்பதைப்போல் கடவுளை இம்மையிலும் மறுமையிலும் காண்பது. இதெல்லாம் ஓர் உவமையினாலே துலக்கமாகக் கண்டுபிடிக்கலாம். அதெப்படி யென்றால், விலைமதியாத மாணிக்கத்தை வர்த்தகனானவன் இருட் டிலே கண்டானானால், அந்த மாணிக்கத்தை வர்த்தகனானவன் கண்டான் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. ஆனால், இருட்டிலே காணப்பட்ட விலைமதியாத மாணிக்கமானது தனது துலக்கமான ஒளியையும், பரம காந்தியையுங் காட்டாது என்கிறதினாலே, இருட்டிலே காணப்பட்ட மாணிக்கமானது தன்னைக் கண்டவனி டத்திலே பாரமான சந்தோஷத்தையும் ஆசையையும் பிறப்பி யாது. இருட்டிலே காணப்பட்ட அப்படிப்பட்ட மாணிக்க மானது மிகுந்த பிரகாசத்தோடே காணப்பட்டால் தனது காந்தியையும் ஒளியையும் காட்டும். ஆதலாலே பிரகாசத்தோடு விலைமதியாத மாணிக்கத்தைக் கண்டவன் அதன்பேரிலே மிக வுஞ் சந்தோஷப்பட்டு அத்தைக் கனமாக எண்ணித் தனதாகப் பண்ணவேணுமென்று மிகவும் ஆசைப்படுவானொழிய மற்றப் படியல்ல. அத்தன்மைபோல விலைமதியாத மாணிக்கமாகிற பராபர வஸ்துவானது பூலோகத்திலே திரிகிற புண்ணியாத்து மாக்களினாலே விசுவாசத்தின் தெரிசனத்தைக்கொண்டு காணப் படச்செய்தே, புண்ணியாத்துமாக்களாயிருக்கிற பேர்கள் பரா பரவஸ்து இன்னதென்று இருட்டிலே காண்கிறாப்போலே முன் சொல்லப்பட்ட விசுவாசதெரிசனத்தினாலே பராபர வஸ்துவைக் கண்டுபிடிக்கிறார்கள் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தகாது. ஆனால் இருட்டிலே காணப்படுகிற விலைமதியாத மாணிக்கங்களை அதிசயித்திருக்கிற பராபரவஸ்துவானது பின்னபேதமில்லாமல் தனது மட்டில்லாத சகல நன்மை சுபாவத்தையும், மனோவாக்கு எட்டாததாயிருக்கிற தனது ரூபலாவர்ணியத்தையுந் துலக்க மாகக் காட்டாது. ஆதலாலே, பூலோகத்திலே திரிகிற புண்ணி யாத்துமாக்களாய் இருக்கிறபேர்கள் விலைமதியாத ரத்தினமான பராபர வஸ்துவை இருட்டிலே கண்டதினாலே அப்படிப்பட்ட

1. fruitio.

அப்பிரகாச தெரிசனத்தின் நிமித்தமாகப் புண்ணியாத்துமாக்களாயிருக்கிற பேர்கள் குறையற்ற சந்தோஷத்தையுஞ் சருவேசுரன் பேரிலே திரும்பாத பரிபூரண பத்தியையுஞ் சகல விஷயங்களிலே திரித்தி கொடுக்கிற பரமானந்தத்தையும் அடைகிறூர்களில்லையென்று அனுபவசித்தியினாலே அறிகிறோம். ஆனால் அப்படிப்பக்கொத்த விலைமதியாத ரத்தினமாகிற பராபர வஸ்துவை மோக்ஷப்பிரகாச தெரிசனத்தினாலே சீவனானது கண்டால் அத்தறுவாயிலே சீவனுக்கு உண்டாயிருக்கிற தேவவிஷயக தெரிசனமானது பிரத்தியக்ஷ தெரிசனமென்று சொல்லப்படும்.

32.12 நேரடிக்காட்சியின் இயல்பு: கடவுளே காட்சிப்பொருள். அப்படிப்பட்ட பிரத்தியக்ஷ தெரிசனமானதுக்கு உண்டான மகிமையுள்ள மேரையைக் கொஞ்சந்துக்குள்ளே வெளிப்படுத்தக்கடவோம். அதுக்கு நாலு பெருமையுள்ள விசேஷங்கள் உண்டென்று சொல்லத்தகும். (1) அதில் முதலாம் பெருமை யாவது: உண்டாக்கப்பட்ட பொருள்களுக்குள்ளே ஒன்றாலும் அப்படிப்பட்ட தெரிசனமானதுதனக்கு விஷயிகரியாமல் தானாயிருக்கிற பராபர வஸ்து மாத்திரம் அதுக்கு விஷமாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. (2) இதன்றியே, திவ்விய விஷயக பிரத்தியக்ஷ தெரிசனமானது, மற்ற வஸ்து விஷயக பிரத்தியக்ஷ தெரிசனம்போலே வஸ்துவாகிற விஷயப்பிரதிபிம்பத்தின் நிமித்தமாக உண்டாகாமல், பராபரவஸ்து மாத்திரம் அதுக்கு விஷயமாயிருக்கையிலே, பராபரவஸ்துவின் பிரதிபிம்பமானது அப்படிப்பட்ட பிரத்தியக்ஷ தெரிசனத்திலே கிடைக்குமென்று சொல்லக்கூடாது. அதேதென்றால், தானாயிருக்கிற மட்டில்லாத சகல நன்மையான பராபரவஸ்துவைத் தோற்றுவிக்கிற பிரதிபிம்பமானது உண்டாக்கப்படத் தககதாகயிராதென்று பலபல ஞாயங்களினாலே [1]பிரமவா களாயிருக்கிற சிலபேர்கள் ஒப்புவிக்கிறார்கள். அந்த ஞாயங்களுக்குள்ளே ஒன்றிரண்டை மாத்திரம் கொஞ்சந்துக்குள்ளே சூசனையாகச் சொல்லிக்காட்டுவோம்

32.3 கடவுளின் சாயல் (species) துணைகொண்டு கடவுளைப் பார்ப்பதில்லை (i) ஏனெனில் சாயல் கடவுளுக்கு தூரமுள்ளது. அதெப்படியென்றால், வஸ்துவின் பிரதிபிம்பமானது வஸ்துவாயிராமல், [2]குணரூபமாயிருந்தாலும் வஸ்துவை தோற்றுவிக்க

1. philosophers (Theologians) 2. accident.

வேணும் என்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே, வஸ்து இன்னதென்று தோற்றுவிக்கிற பிரதிபிம்பங்களிடத்திலே காணப்படத்தக்க மேரையானது பத்தும் பத்தாய் விசாரிக்கப்பட்டால், அப்படிப்பட்ட மேரைக்கும் தோற்றுவிக்கிற வஸ்துவின் மேரைக்கும் அளவில்லாத தூரமுண்டாயிருக்கவொண்ணாது. இது தவிர வஸ்துவின் பிரதிபிம்பத்தின் மேரையானது தோற்றுவிக்கிற வஸ்துவின் மேரைக்குக் [1]கேவல விரோதமாயிருந்து, அது தோற்றுவிக்கிற வஸ்துவின் மேரையைக் கெடுத்தால், அப்படிப்பட்ட பிரதிபிம்பமானது உண்டாகமாட்டாதென்றும், வஸ்துவைத் தோற்றுவிக்க மாட்டாதென்றும் சொல்லத்தகும். இதெல்லாம் அந்த வஸ்துக்களைத் தோற்றுவிக்கிற பிரதிபிம்பங்களிடத்திலே காணப்படுகிறது என்கிற ஞாயத்திலே பிரதிபிம்பத்துக்கும் அத்தாலே தோன்றுகிற வஸ்துவுக்கும் அளவில்லாத தூரமும் கேவலவிரோதமான மேரையும் உண்டாயிருக்க ஒண்ணாதென்று சொல்லலாயிருக்கிறது. இது இப்படியிருக்கையிலே, பராபர வஸ்துவினுடைய பிரதிபிம்பமானது உண்டாக்கப்படலாமென்று சொன்னோமானால், அப்படிக்கொத்த பிரதிபிம்பத்துக்கும் பராபர வஸ்துவுக்கும் அளவில்லாத தூரமுண்டாயிருக்கும் என்கிறதுக்குத் தப்பாது. அளவில்லாத தூரத்தின் நிமித்தமாகப் பிரதிபிம்பமானது பராபரவஸ்துவைத் தோற்றுவிக்க மாட்டாதென்று சிலர் அங்கீகரிக்கிறார்கள்.

(ii) சாயல் கடவுளுக்கு முரணானது. இதன்றியே, 'தானுயிருக்கிற' மேரைக்கும் 'உண்டாக்கப்படுகிறது' என்கிற மேரைக்கும், [2]அந்தமானதுக்கும் அனந்தமானதுக்கும் கேவல விரோதம் உண்டாயிருக்கிறதென்றும் ஒன்று ஒன்றைக் கெடுக்கிறதென்றுங் காண்பித்திருக்கிறது என்றிருக்கையிலே, உண்டாக்கப்பட்ட மேரையுள்ள பிரதிபிம்பமானது பராபரவஸ்துவின் தானுயிருக்கிற மேரையைத் தோற்றுவிக்கிறது எப்படி? இந்தடைவாக அந்தமான மேரையுள்ள பிரதிபிம்பமானது பராபரவஸ்துவுக்கு உண்டாயிருக்கிற அனந்தமான மேரையைத் தோற்றுவிக்கிறதுக்கு வல்லதாயிராதென்று ஒப்புக்கொள்ளத் தக்கதாகும். அதேதென்றால், உஷ்ணத்துக்கும் சீதளமேரைக்கும உண்டான விரோதத்தைக் காட்டிலும் அந்தமானதுக்கும் அனந்தமானதுக்

1 முழு   2 எல்லையுள்ளதும் எல்லையற்றதும்

கும் அதிகமான விரோதம் உண்டாயிருக்கிறதென்று சொல்ல வேண்டியிருக்கையிலே, உஷ்ணமானது சீதள மேரையைத் தோற்றுவிக்க மாட்டாதுபோலே, அங்குமான மேரையுள்ள பிரதிபிம்பமானது பராபர வஸ்துவின் அனந்த மேரையைத் தோற்றுவிக்க மாட்டாதென்று சொல்லலாயிருக்கிறது. பராபர வஸ்துவின் பிரதிபிம்பத்திலே பண்ணப்படுகிற இந்த ஆக்ஷேபமானது தேவ விஷயக பிரதியக்ஷ தரிசனத்தில் பண்ணப்படாது. அதேனென்றால், விஷயத்தைத் தோற்றிவிக்கிறதுக்கும் விஷயத்தை [1]ஸ்பரிசிக்கப் பண்ணுகிறதுக்கும் மிகுந்த வித்தியாசமுண்டாய் இருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால், பிரதிபிம்பமானது பொருளைத் தோற்றிவிக்கிறதுக்குப் பொருளின் மகிமைகளெல்லாம் பிரதிபிம்பத்திலே ஒருவிதமாக அடங்கியிருக்க வேணும் என்றிருக்கச் செய்தே, விஷயத்தை 'ஸ்பரிசிக்கப்பண்ணுகிற விருத்தியானது விஷயத்துக்கு ஒருபிரகாரமாக வழியாயிருக்கக்கொள்ள, வழி ரூபத்தின் ஞானத்தினாலே அவதியாகிற விஷயத்தின் மகிமைகளெல்லாம் அது வழியாகவிருத்திக்குள்ளே அடங்கியிருக்கிறதென்று சொல்லக்கடவதல்ல. இது காரணமாகத் தேவவிஷயகப் பிரதியக்ஷ தெரிசனத்தைக்கொண்டு புத்தியானது பராபரவஸ்துவைக் குறையற்ற பிரகாரமாய் விஷயிகரித்து அதைக் குறையற்ற விதமாக ஸ்பரிசிக்குமென்று சொல்லத்தகும். இதெல்லாத்தையும் தேவவிஷயக பிரதியக்ஷ தெரிசனத்து நிமித்தமாகப் புத்தியானது அடையுமென்கிறதினால், தேவ விஷயக பிரத்தியக்ஷ தெரிசனமானதுதேவவிஷயக தரிசனமென்றும், பராபரவஸ்துவாகிற விஷயத்தைக் குறையற்ற விதமாகப் புத்தியானது அடைகிறதுக்கு உத்தம வழியென்றுஞ் சொல்லப்படும். ஆனபடியினாலே பராபரவஸ்துவான பிரதிபிம்பத்திலே பண்ணபடுகிற ஆக்ஷேபமானது தேவவிஷயக பிரதியக்ஷதெரிசனத்திலே செல்லமாட்டாதென்று சொல்லக்கடவோம்.

(iii) அனுரூபமான சாயலாய் இல்லை என்பது மூன்றாம் சான்று. பராபரவஸ்துவைப் பிரதியக்ஷமாய்த் தோற்றிவிக்கிற பிரதிபிம்பமானது உண்டாக மாட்டாதென்று வேறேயொரு ஞாயத்தினாலே சில பேர்கள் ஒப்புவிக்க வருந்துகிறார்கள். அதேனென்றால், "அப்படிப்பட்ட பிரதிபிம்பம் உண்டானால், சருவேசுரனிடத்திலே இருக்கிற அனந்த ஞான பெல முதலான மகிமை

1 தீண்ட. அறிய

கள் என்னப்பட்ட யாவையுந் தோற்றுவிக்கவேணும் என்கிற துக்குச் சந்தேகமில்லை. ஆதலாலே, அவனவன் தனக்கு உண்டானதை அப்பால் கொடுக்கலாமென்றும், தனக்கில்லா ததை அப்பால் கொடுக்கமாட்டானென்றுஞ் சொல்லப்படுகின்ற ஞாயத்தினாலே, அந்தப் பிரதிபிம்பமானது சருவேசுரனுடைய மகிமைகளெல்லாம் தோற்றுவிக்கும்படிக்கு அதுகளெல்லாம பிரதிபிம்பத்திலே ஒருபிரகாரமாக அடங்கியிருக்கவேணும். ஆதலாலே தோற்றுவிக்கிற வகையிலே அந்தப் பிரதிபிம்பமானது அளவறுக்கப்படாத கர்த்தனுக்கு ஒருவிதமாக [1]அனுரூபகாரிய மென்று சொல்லவேண்டியிருக்கும்.'' இப்படிச் சொல்லவொண் ணுது என்கிறதுக்குஞாயமாவது: பொருளானது இருக்கிறமேரை யிலேயும் ஸ்திதி வகையிலேயுஞ் சகல நன்மை சொரூபமான சரு வேசுரனுக்கு அனுரூபகாரியமாய் இருக்கமாட்டாதென்று சொல்லவேணும். ஆதலாலே, இந்தப் பிரதிபிம்பமானது உண் டாக்கப்படாதென்று சொல்லத்தகும். அதேனென்றால், முன் சொல்லப்பட்ட பொருளிரண்டிலே, பராபர வஸ்துவினுடைய மகிமைகளென்னப்பட்ட யாவும் ஒரு பிரகாரமாய் அடங்கி யிருக்குமென்று அங்கீகரிக்கடவது. ஆறு பராபர வஸ்துவைப் பிரத்தியக்ஷமாகத் தோற்றுவிக்கிற பிரதிபிம்பமானது உண்டாக மாட்டாதென்று இற்றைவரைக்கும் நம்மாற் சொல்லப்பட்ட ஞாயங்கள் சிலருக்கு ஏற்றிருக்கிறதென்று அறிகிறோம். இந்தச் சத்தியத்தை ஒப்புவிக்கத் தக்கதாக அந்த ஞாயங்களுடைய பெலம் எம்மாத்திரமென்று நாம் [2] வகையறுமல், வித்தியா பாரகராய் இருக்கிற பேர்கள் [3]பரிச்சேதம் பண்ணக்கடவார்கள்

32·14 (1) **கடவுள் தாமே விஷயமாயிருக்கிருர்: காண்பதில் அவர் முக்கிய காரணம், புத்தி எத்தன காரணம்.** நாம் இந்தச் சத்திய விசேஷத்தை ஒப்புவிக்கத்தக்கதாக ஒரு ஞாயத்தை மிக்வும் அங்கீகரித்து, அந்த நிமித்தமாக அப்படிப்பட்ட பிரதி பிம்பமானது உண்டாகமாட்டாதென்கிற பக்ஷமானது சித்தாந்த மென்று எப்போதும் பண்ணிக்கொண்டு வந்தோம். அந்த ஞாய மேதெனில், அறியவேண்டின விஷயமானது புத்திக்குள்ளே இல்லாததினால், விஷயத்தைத் தோற்றுவிக்கிற பிரதிபிம்ப மானது புத்திக்குள்ளே இருக்கவேணுமென்று வித்தியாபாரகரா

1 univocal effect 2 தீர்மானியாமல் 3 முடிவுகட்டு

யிருக்கிற பேர்கள் அங்கீகரிக்கிறார்கள். ஆனபடியினாலே விஷய மானது புத்திக்குள்ளே [1] அந்தர்கதமாய் இருந்தால் விஷயத் தின் பிரதிபிம்பமானது புத்திக்குள்ளே இருக்கவேணுமென்கிற துக்கு ஞாயங் காணமாட்டாது. இது நிமித்தமாகச் சரீரமில் லாத சம்மனசானவர் தாம் தமக்கு அந்தர்கதமாய் இருக்கக் கொள்ளத் தாம் தம்மைக்கொண்டு அறிகிறாரொழிய, வேறே பிரதிபிம்பத்தைக்கொண்டு தம்மை அறியவில்லை என்கிற பக்ஷமானது எங்நாளும் நமக்கு [2]ருசிகரமாயிருந்தது. ஆனாற் சமமனசானவர் தாம் தம்மை அறிகிற மேரையிலே அவ னவன் வெவ்வேறே பிரகாரமாய்ச் சொல்லிக்கொண்டு வந்தா லும், தேவ விஷயக பிரத்தியக்ஷ தெரிசனமானது உண்டாகும் வகையைப் பார்க்கும்போது, சீவனானது தான் தனக்கு அந்தர் கதமாய் இருக்கிறதைக் காட்டிலும் எங்கும் வியாபித்திருக்கிற கர்த்தரானவர் சீவனுக்கு அதிகமாக அந்தர்கதமாய் இருக்கிற படியினாலே, மோக்ஷப்பிரகாசமென்கிற குணத்தினாலே உயர்த் தப்பட்ட புத்தியானது பராபர வஸ்துவைப் பிரத்தியக்ஷமாய்க் காண்கிறதுக்கு அதிலே அந்தர்கதமாய் இருக்கிற பராபவ வஸ் துவே போருமென்று சொல்லவேணுமொழிய, இதிலே பராபர வஸ்துவின் பிரதிபிம்பமானது கற்பிக்கப்பட்டால் தேவ விஷயக பிரத்தியக்ஷ தெரிசனமானது உற்பவிக்கத்தக்கதாக அது [3]வேண் டியிராதிருக்கிறதுக்காக அந்தப் பிரதிபிம்பமானது வெறுமனே கற்பிக்கப்பட்டதென்று ஒப்புக்கொள்ளக்கடவோம்.

32.5 மோட்சக் காட்சியில் கடவுள் முக்கிய காரணம், அறிவு எத் துன காரணம். இது தவிரப் புத்தியானது அந்தந்த வஸ்துவை அறிகிறதிலே, அப்படிப்பட்ட அறிக்கைக்குப் புத்தியானது பிர தான காரணமென்று சொல்லப்படும். அந்த அறிக்கையை வஸ் துவின் பிரதிபிம்பத்தைக்கொண்டு புத்தியானது பிறப்பிக்கிறது எனகிறதுக்காக அறிக்கையினுடைய உற்பவத்திலே பொருளின் பிரதிபிம்பமானது புத்திக்கு எற்றின காரணம் போல இருக்கிற தென்று சொல்லவேணும். தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசன மானது உறபவிக்கிற வகையை விசாரித்தோமானால், அதிலே வேறே மேரையை யோசிக்க வேணும் என்கிறதுக்குத் தப்பாது. அதெப்படியென்றாற், தேவ விஷயக பிரத்தியக்ஷ தெரிசன மானது தைவீக விருத்தியாயிருந்தாலும், அதுக்குப் புத்தியானது

1 intrinsic 2 பிடித்தது 3 வேண்டாதபடியால்

பிரதான காரணமாயிராமல் சருவேசுரன் தானே அந்த விருத்திக்குப் பிரதான காரணமாயிருந்து, புத்தியானது அப்படிப்பட்ட தனதுவிருத்தியை எற்றின காரணம்போலே பிறப்பிக்குமொழிய மற்றப்படியல்ல. இது இப்படியிருக்கச் செய்தே, சருவேசுரனுனவர் தமது விஷயகபிரத்தியக்ஷ தெரிசனமானதைப்புத்தியினிடத்திலே பிரதான காரணமாய்ப் பிறப்பிக்கிறபோது, சருவேசுரனுடைய பிரதிபிம்பமானது எற்றின காரணமேரையாகச் சருவேசுரனுக்கு அதிலே வேண்டியிருக்கிறதென்று சொன்னேமானுல், தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்தைப் பிரதான காரணமேரையாகக் கர்த்தரானவர் பிறப்பிக்கிறதுக்கு எற்றின காரணமிரண்டும் வேண்டியிருக்கிறதென்று அங்கீகரிக்கப்பட்டாப் போலே யாச்சுது. அல்லது அப்படிப்பட்ட பிரதிபிம்பமானது சருவேசுரனுக்கு வேண்டியிராமற், புத்திக்கு வேண்டியிருக்கிறதென்று அங்கீகரித்தோமானுல், புத்தியாகிற எற்றின காரணத்துக்கு வேறே எற்றின காரணம் கொடுக்கப்பட்டாப் போலேயாச்சுது. இப்படிப்பட்ட அனுச்சிதமான விசேஷங்களை அங்கீகரியாதபடிக்குத் தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனமானது புத்தியிடத்திலே நின்று பிறப்பிக்கிற தெய்வீது விருத்தியாயிருந்தாலும், அதுக்குப் புத்தியானது எற்றின காரணமாயிருந்து, அப்படிப்பட்ட விருத்தி உற்பவிக்கிறதுக்குச் சருவேசுரன் தானே பிரதான காரணமாயிருக்கிருரென்று சந்தேகமற ஒப்புக்கொள்ளத்தக்க சத்திய விசேஷமாகும்.

32.16 (2) கடவுளே சாயலுக்கு (species)ப் பதிலாய் இருக்கிருர். பின்னேயும் வஸ்துவின் பிரதிபிம்ப ஸ்தானத்திலே இருக்கிறவர் சர்வேஸ்வரன் தானே யென்று சொல்லவேணும். அவ்வண்ணமே, யிப்படிப்பட்ட பிரத்தியக்ஷ தெரிசனமானது யேக பராபர வஸ்துவை விஷயிகரித்துத்தெளிவுள்ள கண்ணுடியிலேஅனேகம் பொருள்கள் காணப்படுகிறுப்போலே, அறிவேண்டின வேறே அனேகம் பொருள்களை ஈவனுனது அந்தப் பிரத்தியக்ஷ தெரிசனத்தின் நிமித்தமாகப் பராபர வஸ்துவிடத்திலே காணும் எல்கிறதுக்குத் தப்பாது. அதேதனென்ருற், குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷத்தை அனுபவிக்கிற மகாத்துமாக்களாய் இருக்கிற பேர்களுக்கு அனேக வர்த்தமானங்களை விசேஷ விதமாகச் சர்வேஸ்வரனுனவர் அறிக்கை பண்ணுகிறதினுல் அப்படிப்பட்ட

வர்த்தமானங்களை அறிகிறார்களென்று சொல்லவேண்டியிருந்தாலும், அந்தந்த மகாத்துமத்துக்கு அடுத்த விசேஷங்கள் என்னப்பட்ட யாவையுஞ் சருவேசுரனிடத்திலே அந்தந்த மகாத்துமமானது கண்டுகொண்டு வந்து, தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனமாகிற [1]ஏகபார்வையினாலே மகாத்துமமானது தமக்கடுத்தவிசேஷ பொருள்களையும் பராபரவஸ்துவையுங்காணவேணும்என்கிறதுக்குத் தப்பாது. அப்படிக்கொத்த தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனமானது ஒரு அற்பமாகிலும் விகாரமில்லாமல் ஒருகண்டசீராய் மோக்ஷத்தை அனுபவிக்கிற பேர்களிடத்திலே என்றென்றைக்கும் நிற்குமென்று சொல்லவேண்டியிருக்கிறதினால், எந்த க்ஷணத்திலே சீவனானது சர்வேசுரனைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டதோ, அந்த க்ஷணத்திலே தானே தனக்கடுத்த விசேஷ வர்த்தமானங்களெல்லாஞ் சருவேசுரனிடத்திலே காணும் என்கிறதுக்குத் தப்பாது அவ்வண்ணமே, மோக்ஷத்தை அனுபவிக்கிறவன் லோகம் முடிகிற நாள்மட்டும் தம்மை எத்தனை பேர்கள் வேண்டிக் கொள்வார்களோ, தாம் எத்தனை விசேஷ வர்த்தமானங்களுக்காக அந்தந்த காலத்தறுவாய்களிலே சருவேசுரனை வேண்டிக்கொள்ள வேண்டியிருக்குமோ, சீவனானது சருவேசுரனைப் பிரத்தியக்ஷமாய்க் கண்ட க்ஷணத்திலேதானே அந்தந்த வர்த்தமானம் என்னப்பட்ட யாவையுஞ் சருவேசுரனிடத்திலே பிரத்தியக்ஷமாய் அது காணுமென்று பிரமவாதிகளாய் இருக்கிற பேர்கள் அங்கீகரித்துக் கொண்டு வருகிறார்கள்.

[2]லோக சாசன விசேஷத்திலே மாத்திரம் அறியவேண்டினதாவது: அனந்த ஞான சொரூபமாயிருக்கிற சருவேசுரனானவர் சம்மனசுக்களைக்கொண்டு லோகசாசனத்தைப் பண்ணிக் கொண்டு வந்திருந்தாலும், அப்படிப்பட்ட சாசனமானது பிரதானமாய்ச் சருவேசுரனுக்கு அடுத்ததா யிருக்கக்கொள்ள, சம்மனசுகள் நிறைவேற்றத்தக்க காரியங்களை விசேஷ விதமாக அந்தந்தத் தறுவாய்களிலே சர்வேஸ்வரன் அவர்களுக்குப் பண்ணுகிற அறிக்கையினாலே அவர்கள் அறிகிறார்களொழிய மற்றப்படியல்ல. சொல்லப்பட்ட விசேஷப் பொருள்களை மோக்ஷத்தை அனுபவிக்கிறவர்கள் சர்வேஸ்வரனிடத்திலே காண்கிறதுந் தவிர, வேறே சில விசேஷப் பொருள்களைச் சருவேஸ்வர

1 ஒரே  2 உலகத்தையாளல்

னிடத்திலே அவர்கள் கண்டுகொண்டு வருகிறார்களென்று சொல்லவேண்டியிருக்கும். அதேதெனென்றால், சருவேசுரனாலே பண்ணப்படலான விசேஷங்கள் என்னப்பட்ட யாவும் உண்டாக்கப்பட்ட புத்தியினாலே காணப்படுகிறதில்லையென்று அங்கீகரிக்கும்போது, சருவேசுரனாலே உண்டாக்கப்படலான பொருள்களுக்குள்ளே அனேக விசேஷப் பொருள்களை மோட்சத்தை அனுபவிக்கிற பேர்கள் ஏற்றக்குறைச்சலாகக் கண்டுகொண்டு வருகிறார்கள் என்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது. இந்த விசேஷ வர்த்தமானத்திலேயும், அவனவன் பராபரவஸ்துவைக் கண்டுகொண்டு வருகிற தெளிவிலேயும் மோட்சத்திலே உண்டாயிருக்கிறபேர்களுக்கு உண்டான வித்தியாசத்தின் நிமித்தமாக மோட்சத்தை அடைந்த பேர்களுக்குள்ளே அவரவர்கள் குறையடையாமல் அதிக கொஞ்ச மோட்சத்தையும்,மோட்சத்துக்கடுத்த பரமானந்த செல்வ பாக்கியங்களையும் ஏற்றக்குறைச்சலாக அனுபவித்துக் கொண்டு வருகிறார்களென்று ஒப்புக் கொள்ளத்தக்க சத்தியமாகும். இதெல்லாம் 'நித்திய சீவன சல்லாபத்திலே' நம்மால் விரிவாகச் சொல்லப்பட்டதினால், இவ்விடத்திலே சுருக்கமாக எடுத்துக்காட்டினது போதும். அவ்வண்ணமே, தேவ விஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்துக்கு உண்டாயிருக்கிற மகிமைகளுக்குள்ளே இரண்டு மகிமையுள்ள விசேஷங்கள் சொல்லப்பட்டாப்போலே யாச்சுது. அதேதெனில், அப்படிப்பட்ட பிரத்தியக்ஷ தெரிசனம் உண்டாகிறதுக்குச் சர்வேஸ்வரனானவர் தாமே விஷயமும் [1]பிரதிபிம்ப ஸ்தானத்திலே யிருக்கிறவரென்றும் அங்கிகரிக்கக்கடவோம்.

32.17 மோட்சக்காட்சி பற்றிய வேறு இரண்டு பண்புகள்: அடுத்த அதிகாரத்தில் (3) தேவ விஷயக பிரதியட்ச தெரிசனத்திலே இற்றைவரைக்குஞ் சொல்லப்பட்ட இரண்டு மகிமையுள்ள விசேஷங்கள் தவிர இன்னமிரண்டு மகிமையுள்ள விசேஷங்கள் அதுக்கு உண்டாயிருக்கிறதென்று வெளிப்படுத்தத் தக்கதாக யிருக்கிறது. ஆனபடியினாலே அதில் மூன்றும் மகிமையாவது: ஒருத்தன் ஒருத்தனை முகமுகமாய்க் காண்கிறாப்போலே முன் சொல்லப்பட்ட தெய்வீக தெரிசனத்து நிமித்தமாகச் சீவனானது சர்வேஸ்வரனைக் கொண்டுசர்வேஸ்வரனைப்பிரகாசமாய்க் கண்டு வருகிறது என்கிறதுக்காக இங்கே புண்ணியாத்துமாக்களினாலே

1 சாயலுக்குப்பதிலாக

இருட்டிலே காணப்படுகிற பரம இரகசியங்கள் என்னப் பட்ட யாவும் இன்னதென்றும், அதுகளுடைய மனோவாக்குக் கெட்டததா யிருக்கிற மகிமையுள்ள மேரையையும் அற்ப மாகிலும் பின்ன பேதமில்லாமல் மட்டில்லாத சகல நன்மை யொன்றிலே கூடுகிறதினாலே விளங்கிற ரூபலாவர்ணியமுஞ் சீவ னாலே காணப்படுகிற தொழிய மற்றப்படியல்ல. (4) இதன்றியே, இப்படிப்பட்ட பிரத்தியக்ஷ தெரிசனத்தின் நிமித்தமாகச் சீவ னுக்கு வருகிற பெருமையுள்ள விசேஷங்கள் அதிலே விளங்கியி ருக்கிற நாலாம் மகிமையுள்ள விசேஷமென்று சொல்லக்கட வோம். தேவ விஷயகபிரத்தியக்ஷ தெரிசனத்தின்கடைசியிலேநம் மாற் சொல்லப்பட்ட இந்த இரண்டு மகிமைகளைச் சர்வேஸ்வர னுடைய கிருபாகடாக்ஷத்தினாலே, வருகிற பாடத்திலே எவ்வள வாகிலும வெளிப்படுத்தத் தக்கதாகப் பிரயாசைப்படுவோம்.

முப்பத்திரண்டாம் பாடம் முற்றும் (கி. ௪௱௨௰௨[1])

## முப்பத்தி மூன்றாம் பாடம்

**33. 1. போர் வீரனைப் போலவும் உழவனைப் போலவும் இம்மையில் நல்லவர்கள் உழைத்துத் துன்பப் படுகின்றனர்.** புண்ணியாத்துமாக்களாய் இருக்கிற பேர்கள் பராபரவஸ்து இன்னதென்று சத்தியபிரகாரமாக அறிந்து கரையேறுகிறதுக்கு அப்படிப்பட்ட ஆண்டவனிடத்திலே அறியவேண்டின பரம சத்திய ரகசியங்களைச் சந்தேகமற்ற பூரண விசுவாசத்தோடு அங்கீகரித்துப், பாவமில்லாத சகல நிர்மல புண்ணிய வழியிலே அவர்கள் நடக்கச் செய்தே, ஆண்டவன் சித்தத்தின்படியே நடக்க வேணுமென்று மகா மகாப்பட்ட பிரயாசங்களையும் எண்ணப்படாத கஸ்தி நோவு களையும் கடினமான நிர்ப்பந்த உபாதைகளையும் பூலோகத்திலே திரிகிற நாள்மட்டும் அனுபவித்துக்கொண்டு வருகிறார்களென்று பிரத்தியக்ஷமாய்க் காணப்பட்ட சத்திய விசேஷமாகும் என்கிற துக்குத் தப்பாது. முழு விசுவாச தெரிசனத்தினிமித்தமாக இருட்டிலே காணப்பட்ட ஆண்டவனுக்கு ஏற்க நடக்க வேணு மென்று புண்ணியாத்துமாக்களாய் இருக்கிற பேர்கள் இவ் வுலோகத்திலே இத்தனை பாடுபடச் செய்தே, காற்று, வெயில்,

1. 422

மழை முதலான காரணங்களினாலே வருகிற கஸ்தி உபாதைகளைச் சட்டைபண்ணாமல் உழுது விரைக்கிற பேர்களுக்கும், வெட்டுக் குத்துகளுக்குப் பயப்படாமலும் தனது பிராணனைச் சிலவழிக்கிறதுக்குப் பின்வாங்காமலும் அத்தியந்த துணிவோடு சத்துருக்களுக்கு எதிராக மிதித்து நடக்கிற சூரராயிருக்கிற சேவகருக்கும், இவ்வுலோகத்திலே ஆண்டவனுக்காக எண்ணப்படாத பிரயாசங்களை அனுபவிக்கிற மகாத்துமாக்களாய் இருக்கிற பேர்கள், சமானராய் இருக்கிறார்களென்று சொல்லவேண்டி இருக்கிறது.

**33.2. மறுமையில் கடவுளை நேராகக் கண்டு எண்ணற்ற பேரின்பமடைவர்.** இதிலே அறியவேண்டின விசேஷமாவது: இந்தப் பூமியிலே விரைக்கிற பேர்களும், யுத்தத்திலே தன்னுடைய பிராணனைச் சிலவழிக்கிற பேர்களும் மகாமகாப்பட்ட பிரயாசங்களை அனுபவிக்கிறார்களென்று சந்தேகப்படுகிறதுக்குக் கணக்கில்லை. ஆனால் அப்படிப்பட்ட பேர்கள் படுகிற பிரயாசங்களுக்கும் கஸ்தி உபாதைகளுக்கும் அடைகிற பலனைப் பார்க்கும்போது, அது குறையுள்ளதுமாய் நாலுநாள் மாத்திரம் நிற்கத்தக்க நன்மையுமாய் இருக்கிறதொழிய மற்றப்படியல்ல. புண்ணியாத்துமாக்களாய் இருக்கிற பேர்கள் ஆண்டவனுக்கேற்க நடக்க வேணும் என்கிறதுக்காக இவ்வுலோகத்திலே நாலுநாள் மாத்திரம் அனுபவித்துக்கொண்டு வருகிற பிரயாச நோவுகள் நிமித்தமாகப் பரலோகத்திலே அவர்கள் அடையத்தக்க பலனை விசாரித்தோமானால், அது பழுதற்றதுமாய்ப், பரிபூரணமானதுமாய் மனசினுடைய ஆசையைப் பூரிக்கிறதுக்கு வல்லதுமாய், என்றென்றைக்கும் நிற்கத்தக்க செல்வமானதுமாய், மனோவாக்குக்கு அகோசரமான பாக்கியமானதுமாய் இருக்கிறதென்று சந்தேகமற ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமாகும். அதேதென்றால், புண்ணியாத்துமாக்களாய் இருக்கிற பேர்களிலே குறையற்ற விசுவாச தெரிசனத்தின் நிமித்தமாக இருட்டாகிற மறைவுள்ள மேரையாகச் சகல நன்மை சுரூபமான கர்த்தரானவர் பூலோகத்திலே காணப்பட்டாரே, பரலோகத்திலே பிரத்தியக்ஷமாய்க் காணப்பட்ட அவர்தானே புண்ணியாத்துமாக்களாய் இருக்கிற பேர்கள் இங்கே பட்ட பிரயாசங்களுக்குக் குறையற்றதுமாய்,

என்றென்றைக்கும் நிற்கத்தக்கதுமாய், மனோவாக்குக்கு எட்டாததுமாய் இருக்கிற பலனாயிருப்பாரென்று வேதப் பிரமாணத்தினாலே அற்பமானாலும் சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கத்தக்க பரம சத்தியமாகும்.

**33·3. இந்த மூன்று பாடங்களில் மோட்சத்தை விவரிப்பது, உள்ளங்கையில் கடலேயடக்கக் குழந்தை முயல்வது போலாகும்.** அவ்வண்ணமே, தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்து நிமித்தமாக மகாத்துமாக்களாய் இருக்கிற பேர்கள் சகல நன்மை சுரூபமான கர்த்தனிடத்திலே, மனோவாக்குக்கு எட்டாததாய் இருக்கிற எண்ணப்படாத மகிமைகளைக் காண்பார்கள் என்கிறதுக்குத் தப்பாது. அப்படிப்பட்ட திவ்வியமான மகிமைகளைப் பராபரவஸ்துவினிடத்திலே மோக்ஷத்தை அனுபவிக்கிற பேர்கள் காண்கிறதினாலே, சகல நன்மை விஷயங்களிலே அவர்களுக்கு வருகிற செல்வ பாக்கியங்களை இந்தப் பாடத்திலேயும் வருகிற இரண்டு பாடங்களிலேயும் ஆண்டவன் கிருபையினாலே சுருக்கமாக எவ்வளவாகிலும் வெளிப்படுத்த வருந்துவோம். இதுக்கு நாம் துணியும்போது, கரைகாணாக் கடலானதைச் சிறுபிள்ளையின் உள்ளங்கையிலே அடக்கத்தக்கதாகப் பிரயாசப்படுகிறதுக்குச் சமானமாகும் என்றிருந்தாலும், ஆண்டவனுடைய கிருபா கடாக்ஷத்தை நம்பி, அளவறுக்கப்படாத இப்படிப்பட்ட சமுத்திரத்திலே நின்று ஒரு துள்ளிக்குச் சரியான சில விசேஷங்களை இவ்விடத்திலே எடுத்துக்காட்டிக், கரையேறத் தக்கதாகத் தாற்பரியமுள்ள பேர்கள் நாம் வெளிப்படுத்தப்போகிற பரம ரகசியங்களினாலே இங்கே அடையத்தக்க திருத்தியை அவர்கள் அடையவேணுமென்று சர்வேஸ்வரனைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.

**33.4. அனுமான, சத்த, தீர்க்க, பிரத்தியட்ச தரிசனங்கள் நான்கு:** தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனமானது தனது விஷயமான பராபர வஸ்துவின் பிரதிபிம்பமில்லாமல் உண்டாமென்றும், அப்படிப்பட்ட தெரிசனமானது தானுயிருக்கிற பராபரவஸ்துவை மாத்திரம் [1]விஷயிகரிக்கிறதென்றும், போன பாடத்திலே நம்மால் சொல்லப்பட்டாப்

1. காண்.

போலே ஆச்சுது. இதிலே அறியவேண்டின விசேஷமாவது: அனுமான தெரிசனத்தினாலேயும் தீர்க்கதெரிசிக்குச் சர்வேஸ்வரன் கொடுத்தருளுகிற விசேஷ ஞானத்தினாலேயும் பூமியிலே வழிப்போக்கனாய் இருக்கிற மனுஷனானவன் சர்வேஸ்வரன் உண்டென்றும், அவர் எப்படிக்கொத்தவர் என்றும், மெய்யாகவே கண்டுபிடிக்கிறான் என்கிறதுக்குத் தப்பாது. ஆதலாலே மோக்ஷவாசிகளுக்கு இருக்கிற பிரத்தியக்ஷ தெரிசனமானது கடவுளை மாத்திரம் விஷயீகரிக்குமாப்போலே முன்சொல்லப்பட்ட மூன்று தெரிசனங்களானதுகள் சர்வேஸ்வரனை விஷயீகரித்துக்கொண்டு வருகிறதென்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது. அப்படியே, இந்த நாலு தெரிசனங்களுக்குச் சர்வேஸ்வரன் விஷயமாய் இருக்கச்செய்தே, சர்வேஸ்வரனை விஷயீகரிக்கிறதிலே தானே இப்படிப்பட்ட தெரிசனங்கள் ஒன்றுக்கொன்று மிகவும் வேற்றுமையாய் இருக்கிறதென்று சொல்ல வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட வேற்றுமைகள் இன்னதென்று வகையறுக்கிறதுக்கு இது அவசரமாயிராததினாலே, பூமியிலே திரிகிற வழிப்போக்கருக்கு உண்டான மூன்று தெரிசனங்களுக்கும் மோக்ஷவாசிகளிடத்திலே [2]விளங்கிற பிரத்தியக்ஷ தெரிசனத்துக்கும் உண்டாயிருக்கிற வித்தியாசத்தை மாத்திரம் வெளிப்படுத்தக்கடவோம்.

**33.5.** *மீதி தரிசனங்கள் இருட்டிலே* **பார்ப்பது போல்;** *பிரத்தியட்ச தரிசனம் வெளிச்சத்திலே* **பார்ப்பது போல்.** அதேதென்றால், வழிப்போக்கருக்கு உண்டாயிருக்கிற முன்சொல்லப்பட்ட மூன்று தெரிசனங்கள் நிமித்தமாக வெவ்வேறே மேரையுள்ள நிர்ணயங்களோடேகூட அந்தத் தெரிசனத்தைக் கொண்டிருக்கிற பேர்களுக்கு மெய்யாகவே சர்வேஸ்வரனானவர் காண்பித்திருந்தாலும், அப்படிப்பட்ட தெரிசனமுள்ள பேர்களெல்லாரும் வஸ்துவை இருட்டிலே காண்கிறாப்போலே சர்வேஸ்வரனைக் கண்டு வருகிறார்களொழிய மற்றப்படியல்ல. மோக்ஷவாசிகளுக்கு உண்டாயிருக்கிற தேவவிஷயக தெரிசனம் ஒன்றே மிகுந்த பிரகாசத்தோடே உண்டாயிருந்து, அப்படிப்பட்ட பிரத்தியக்ஷ தெரிசனத்து நிமித்தமாகச் சர்வேஸ்வரனைக் கொண்டு சர்வேஸ்வரனானவர் அவர்களாலே காணப்படுகிறாரொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே, மற்றத் தெரிசனங்களானதுகள் உண்டாக்கப்பட்ட வெவ்வேறே மேரைகளுக்

2. விழங்கிற (பா. பே)

குள்ள பிரதிபிம்பங்களைக்கொண்டு சர்வேஸ்வரனை அவர்களுக்குத் தோற்றுவிக்கிறப்போலே, மோக்ஷவாசிகளுக்கு உண்டான தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனமானது சர்வேஸ்வரனைத் தோற்றுவிக்கிறதென்று சொல்லவும் கருதவும் கூடாது. அவ்வண்ணமே, இப்படிப்பட்ட பிரத்தியக்ஷ தெரிசனமானது நிமித்தமாக மோக்ஷப் பிரகாசத்தினாலே உயர்த்தப்பட்ட புத்தியாகிற கண்ணானது பராபரவஸ்துவிடத்திலே பிரவேசிக்கிறப்போலே சரீரத்தினுடைய கூர்மையுள்ள கண்ணானது, சூரியனுடைய பிரகாசத்தைக் கொண்டு சூரியனைக் காண்கிறதைக் காட்டிலும், உயர்த்தப்பட்ட புத்தியாகிற கண்ணானது பராபரவஸ்துவினுடைய சுபாவ சுரூபத்தையும் அதினுடைய உள்ளத்திலே இருக்கிற அனந்த மகிமைகள் என்னப்பட்ட யாவையும் கண்டு வருகிறது என்கிறதுத் தப்பாது.

அதேதெனன்றால், சூரியனுடைய பிரகாசத்தைக் கொண்டு சூரியனைக் கண்ணானது கண்டு வருகிற மேரையை விசாரிக்குமிடத்தில், சூரியனுடைய பிறத்திப்பட்ட வடிவானது மாத்திரம் காண்பிக்குமொழியச், சூரியனுக்கு அந்தர்கதமாய் இருக்கிற பலம் முதலான குணங்களைக் கண்டுபிடிக்கிறதுக்குக் கண்ணானது வல்லதாயிராது. மோக்ஷப் பிரகாசத்தினாலே உயர்த்தப்பட்ட புத்தியாகிற கண்ணானதேதெனன்றால், [1]அகண்டமான பொருளாகிற சர்வேஸ்வரனை முழுதும் காண்கிறதினால், சர்வேஸ்வரனிடத்திலே புத்தியானது பூருகிறப்போலே [2]அங்கிஷம் இல்லாத வஸ்துவாகிற சர்வேஸ்வரனைப் பழுதறப் பிரத்தியக்ஷமாய்க் கண்டுகொண்டு வருகிறதென்கிற அர்த்தமானது, அவருடைய உள்ளும் புறம்பும் கண்டடைகிறதென்று [3]சூசனை மேரையாகச் சொல்லப்படுமென்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே, மோக்ஷப் பிரகாசத்தினாலே உயர்த்தப்பட்ட புத்தியாகிற கண்ணானது சர்வேஸ்வரனைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டு, அவருடைய தானாயிருக்கிறமேரையும், அநாதித் தன்மையும், அளவறுக்கப்படாத தனமும், அனந்த ஞான நீதி கிருபையும் எப்படிக்கொத்ததென்று உண்டாக்கப்பட்ட வெவ்வேறே பிரதிபிம்பங்களைக்கொண்டு காணாமல், முகமுகமாய் மத்தியான சமயத்திலே கூர்மையுள்ள கண்ணைக்கொண்டு ஒருவன் ஒருவனைக் காண்கிறப்போலே, கண்ணாகிற புத்தியானது தேவ

1. பகாப்பொருள் 2. உறுப்புக்கள் 3. குறிப்பாக

சுபாவத்தையும் அதினுடைய அனந்த மகிமைகளையும் கண்டு வருகிறதொழிய மற்றப்படியல்ல.

**33.6. கடவுளுக்கான அனந்த குணத்தின் பொருள்.** அப்படியே கண்ணுகிற புத்தியானது மட்டில்லாத சகல நன்மையாகிற பராபர வஸ்துவைப் பார்த்து, அது அகண்ட விதமான ஏக நன்மையாயிருக்கிறதென்று பிரத்தியக்ஷமாய்க் கண்டு அகண்ட விதமாய் இருக்கிற அந்த ஒரு நன்மைதானே அற்பமானாலும் பின்னபேதமில்லாமல் அனந்த ஞானமுமாய், முடிவில்லாத பெலமுமாய், அளவறுக்கப்படாத கிருபையுமாய்க், குறையற்ற நீதியுமாய், உண்டாகலான சகல நன்மைகளுமாய் இருக்கிறதென்று புத்தியானது கண்டு வருகிறது என்கிறதுக்குத் தப்பாது. இதிலே "[2]அனந்தம்' என்கிற சப்தத்துக்குண்டான அர்த்தத்தை அறியக்கடவோம். அதேதென்றால், கோபுரமும் கிரகமும் பாதிமாத்திரம் கட்டப்பட்டால், [3]முடிவில்லாத வீடென்றும் முடிவில்லாத கோபுரமென்றும் சொல்லப்படும். இந்தடைவாகக் குறையுள்ள வஸ்துவிடத்திலே '[4]யோசிக்கக்கடவது. அனந்தமென்கிற சப்தமானது சர்வேசுரனிடத்திலே பிரயோகிக்கப்பட்டால் இந்த அர்த்தத்தைக் கொண்டிருக்கிறதென்று சொல்லவும் எண்ணவும் கூடாது, அதேதென்றால், சர்வேசுவரனானவர் மட்டில்லாத சகல நன்மை சுரூபியாய் இருக்கக்கொள்ள, அற்பமாகிலும் குறையைச் சொல்லுகிற அர்த்தத்தை அவர்பேரிலே [5]ஆரோபிக்கவொண்ணாது. அப்படியே குறையை அவரிடத்திலே ஆரோபித்தோமானால், அவர் மட்டில்லாத சகல நன்மை சுரூபமாக இருக்கவில்லை என்றும், அவர் சர்வேசுரனாய் இருக்கவில்லையென்றும் அங்கீகரிக்கிறதுக்கு ஒக்கும். இப்படிப்பட்ட அபத்தத் தப்பறைக்குச் சம்மதப்படாத வண்ணம், சர்வேசுரனிடத்திலே 'அனந்தம்' என்கிற சத்தமானது பிரயோகிக்கப்பட்டால், அது வேறே அர்த்தத்தைக் கொண்டிருக்கிறதென்று சொல்ல வேண்டியிருக்கிறது. அது விளங்கும்படிக்கு அறிய வேண்டினதாவது: நன்மை விஷயத்திலே 'முடிவு' என்கிற சத்தம் யோசிக்கப்பட்டால், அத்தை முடிவுள்ள நன்மையென்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஆதலாலே, அப்படிப்பட்ட நன்மையானது [6]அபிவிர்த்தியை அடையலாமென்றும், அதுக்கு

2. நித்தியம் 3. அரைகுறை 4.5. சுமத்த, சாட்ட, Predicate.
6. வளர்ச்சி

6986



நூதன நன்மை கூடலாமென்றும் சொல்லுகிறதுக்குச் சமானம். ஆனபடியினாலே இந்தவிடைவாக 'முகிவில்லாத நன்மை' யூகிற சத்தமானது சர்வேசுரனிடத்திலே பிரயோகிக்கும்போது, அவர் அபிவிர்த்தியை அடையப்படாத நன்மையாயிருக்கிறாரென்கிற அர்த்தத்தை அந்தச் சத்தமானது கொண்டிருக்குமொழிய மற்றப்படியல்ல. இப்படிப்பட்ட அர்த்தமானது சர்வேசுரனிடத்திலே இந்தச் சத்தத்தினாலே யோசிக்கப்பட்டுச் சர்வேசுரனவர் முகிவில்லாத ஆகுதலென்றும் முகிவில்லாத ஞானமென்றும், முகிவில்லாத பெலமென்றும் சொல்லும்போது, எத்தனை ஆகுதலும் எத்தனை ஞானமும் எத்தனை பலமும் உண்டாயிருக்கலாம், அத்தனை ஆகுதலும் அத்தனை ஞானமும் அத்தனை [3]பலமுமாய் சர்வேசுரன் இருக்கிறார் [4]என்கிறது, முகிவில்லாத நன்மையென்கிற சப்தத்துக்கு அர்த்தமாகும்.

**33.7. கடவுளிடம் அனைத்தும் அடங்கியிருப்பதை ஆன்மா காணும்.** அவ்வண்ணமே, மோக்ஷப் பிரகாசத்தினாலே உயர்த்தப்பட்ட புத்தியானது உண்டாக்கப்பட்ட அந்தந்தப் பொருளானது, ஆகுதலுடைய அங்கிஷமுமாய் மட்டோடே கூடியிருக்கிற ஒவ்வொரு நன்மையுமாய் இருக்கிறதென்று சர்வேசுரனிடத்திலே கண்டுவரச் செய்தே, அந்தப் புத்தியானது ஏக பிரத்தியக்ஷ தெரிசனத்தைக் கொண்டு தானே, பராபர வஸ்துவாகிற சர்வேஸ்வரனவர் முழு ஆகுதலுமாய் மட்டில்லாத சகல நன்மையுமாய் இருக்கிறாரென்று கண்டுகொண்டு வருகிறது. இது காரணமாக உண்டாகலான பெலமென்னப்பட்ட யாவுமாகிற சர்வேஸ்வரனிடத்திலே உண்டாக்கப்படலான பொருள் என்னப்பட்டதெல்லாம் [5]உத்தம விதமாக அடங்கியிருக்கிறதென்று மோக்ஷவாசியாய் இருக்கிறவன் கண்டுவருகிறான் என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால், அனந்த ஞானமாகிற சர்வேசுரனவர் அனந்த தெளிவாகிற தன்னைக்கொண்டு தன்னை முழுதும் கண்டுகொண்டு வருகிறதினால், தம்மால் உண்டாக்கப்படலான பொருளென்னப்பட்ட யாவையும் தம்மிடத்திலே கண்டுகொண்டு வரச்செய்தே, அப்படிப்பட்ட உண்டாக்கலான பொருளெல்லாம் அந்தந்த மோக்ஷவாசியானவன் காணாமல், அந்தந்த மோக்ஷவாசியானவன் உண்டாக்கப்படலான பொருள்களை ஏற்றக் குறைச்சலாக

3. பலமும் சர்வேசுரனுயிருக்கிறார் (பா.) 4. என்கிறதுக்கு (பா. பே.)
5. eminenter

சர்வேசுரனிடத்திலே கண்டிருந்தாலும், சர்வேஸ்வரனுகிற அனந்த பெலத்தை மோக்ஷவாசியானவன் பிரத்தியக்ஷமாய்க் காண்கிறதென்கிறது "சகல பொருள்களுடைய உத்தம[6] அங்கர் பவமாகிற அடக்குதல்[7] சர்வேஸ்வரனிடத்திலே இருக்கிற தென்று அவர் கண்டு வருகிறதுக்குப் போரும். அதே தென்ருல், சர்வேஸ்வரனுகிய அனந்த பெலமானது மட்டில் லாததுமாய்ச், சகல பெலமானதுமாயிருக்கிற தென்று மோக்ஷ வாசியானவர் பிரத்தியக்ஷமாய்க் கண்டு வருகிறதென்கிறது மட்டில்லாத வஸ்துவென்னப்பட்ட யாவும் அத்தாலே உண்டாக்கப்படலாமென்று அவர் கண்டுபிடிக்கிறதுக்குப் போரும். ஆதலாலே வஸ்துவென்னப்பட்ட யாவும் சர்வேஸ்வர னிடத்திலே உத்தம விதமாக அடங்கியிருக்கிறதென்று மோக்ஷ வாசிகள் என்னப்பட்ட யாவரும் கண்டுகொண்டு வருகிருர்கள் என்கிறதுக்குத் தப்பாது.

**33.8. இதற்கு ஓர் எடுத்துக்காட்டு: நோயெல்லாம் போக்கும் சஞ்சீவிகள் பற்றிய அறிவு.** இதெல்லாம் ஓர் உவமையினுலே வெளிப்படுத்தலாம். அதேதென்னில், வியாதி நிவாரணம் பண்ணி ஆரோக்கியம் உண்டாகிறதுக்கு முடிவில் லாத பெலமானது ஏக சஞ்சீவி பரமாவுஷதத்திலே ஒருக்கனுலே பிரத்தியக்ஷமாய்க் காணப்பட்டால், அவன் சகல வியாதிகளையும் ஆரோக்கியங்களையும் அதிலே காணுதிருந்தாலும், அப்படிப் பட்ட பரமாவுஷதமானது சகல வியாதிகளையும் நீக்கி, ஆரோக்கியம் என்னப்பட்ட யாவையும் வரப்பண்ணுகிறதுக்கு வல்லதான காரணமாய் இருக்கிறதென்று பிரத்தியக்ஷமாய் அவன் கண்டுவருகிருன் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தகாது. அத்தன்மை போலக், [1]கேவல அத்தியந்த அபாவமாகிற இல்லாத்தனத்தில் நின்று வஸ்துவை எடுத்து உண்டாக்கிற துக்குச் சர்வேஸ்வரனிடத்திலே முடிவில்லாத பெலத்தை மோக்ஷவாசியாய் இருக்கிறவர் பிரத்தியக்ஷமாய்க் காணும் போது, சர்வேஸ்வரனிடத்திலே உண்டாகலான பொருள் என்னப்பட்ட யாவையும் அவர் காணுதிருந்தாலும், அப்படிப் பட்ட அனந்த பெலமானது சகல அத்தியந்த அபாவமாகிற இல்லாத்தனத்தில் நின்று வஸ்து என்னப்பட்ட யாவையும் உண்டாக்கிறதுக்கு வல்லதான காரணமாய் இருக்கிறதென்று

6. அனைத்தையும் உயர்ந்த முறையில் கொண்டிருத்தல்
7. inclusion, அடக்குதல். 1. ex nihilo sui et subjecti

மோட்சவாசியாய் இருக்கிறவர் கண்டுவருகிருரென்று சந்தேகமற அங்கீகரிக்கத்தக்க சத்திய விசேஷமாகும். இதெல்லாம் மோக்ஷவாசியானவர் காண்கிறதென்கிறது, சர்வேஸ்வரனிடத்திலே பொருளென்னப்பட்ட யாவும் உத்தம விதமாக அடங்கியிருக்கிறதென்று அவர் பிரத்தியட்சமாய்க் காண்கிறதுக்குச் சமானமென்று சொல்லலாய் இருக்கிறது. இப்படி ஏக பராபரவஸ்துவிடத்திலே மனோவாக்குக்கு எட்டாததாயிருக்கிற வேறே ஒரு விசேஷ பரம ரகசியத்தை மோட்சவாசியாய் இருக்கிறவர் பிரத்தியட்சமாய்க் கண்டுகொண்டு வருகிருர். அதாவது: அனந்த தேவ சுபாவத்திலே பின்னபேதமும் வராமல், அது ஒன்று இரண்டாய் உண்டாகாமல் அதினுடைய [2]தான பரிக்கிரகத்து நிமித்தமாக ஏக சர்வேஸ்வரனிடத்திலே மெய்யான திரீத்துவேகத்துவத்தை மிகுந்த ஆச்சரியத்தோடு பிரத்தியட்சமாய் மோட்சவாசியாய் இருக்கிறவர் கண்டுகொண்டு வருகிருர்.

**33.9.** கொடுக்கல் வாங்கல் நான்கு வகைப்படும். இந்தப் பரம ரகசியமானது எவ்வளவாகிலும் கண்டுபிடிக்கிறதுக்குத் தானத்தினுடையவும் பரிக்கிரகத்தினுடையவும் மேரையை ஆராய்ந்து கொள்ளக்கடவோம். **(1)** குறையுள்ளது: அதேதெனென்ருல், ஒரு வகையுள்ள தானத்தினிமித்தமாகக் கொடுக்கப்படுகிற வஸ்து கொடுக்கிறவனிடத்திலே சுத்தமாய் நில்லாமல் பரிக்கிரகம் பண்ணுகிறவனிடத்திலே முழுதும் போய் நிற்குமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே, யாதொருத்தன் தனக்குண்டான சொர்ண இரத்தின மாணிக்கங்கள் முதலான பொருள்களை வேறேயொருத்தனுக்குக் கொடுக்கும்போது, அப்படிப்பட்ட தானத்தின் நிமித்தமாகக் கொடுக்கப்பட்ட பொருளானது கொடுக்கிறவனை முழுதும் விட்டுப் பிரிந்து, கொடுத்தவனிடத்திலே சுத்தமாய் நில்லாமல், வாங்கிறவனிடத்திலே கொடுக்கப்பட்ட பொருளானது நிலையாக நிற்குமொழிய மற்றப்படியல்ல. அப்படிப்பட்ட தான பரிக்கிரகமானது தான பரிக்கிரகத்தின் வகைகளிலே அது 'குறையுள்ள தானம்' என்றும் 'பழுதுள்ள பரிக்கிரகம்' என்றும் சொல்லத்தகும்.

**(2)** அனனுரூபமானது: இதன்றியே வேறே யொரு தான பரிக்கிரகமுண்டு. தானத்து நிமித்தமாகக் கொடுக்கிற

2. கொடுக்கல் வாங்கல்

பொருளானது தனக்குண்டானதில் ஒன்றும் அப்பாலே போகாமல், கொடுக்கிற பொருளிடத்திலே இருக்கிற விசேஷத்துக்கு மிகவும் கீழ்த்தரமாக வேறே விசேஷமானது, வாங்கிறவனிடத்திலே உற்பவிக்குமொழிய மற்றப்படியல்ல. இந்தடைவாகச் சொர்ண முதலான ரத்தினங்களுக்குத் தேசசையும் ஒளிவையும் சூரியனானது கொடுக்கும்போது, சூரியனானது தனக்குண்டான பிரகாசத்திலே ஒரு அங்கிஷத்தை எள்பிரமாணமானாலும் சுவர்ண முதலான ரத்தினங்களுக்குக் குடாமல், சூரியனானது தனக்குண்டான மிகுந்த ஒளிவுக்கு மிகவும் கீழ்த்தரமான வேறே நவமான ஒளிவைச் சுவர்ண ரத்தினங்களிடத்திலே பிறப்பிக்குமொழிய மற்றப்படியல்ல. இந்தத் தானத்து நிமித்தமாகக் குடுக்கிறவன் தனக்குண்டான விசேஷமான நன்மைக்கு மிகவும் [1]அனனுரூப நன்மையைக் குடுக்கிறதினால், இந்தத் தானத்துக்கு [2]'உத்தம தானம்' என்கிற நாமமானது செல்லுமென்று சொல்லக்கூடாது. இந்த [4]அந்தஸ்திலே உபதேசத்தைக்கொண்டு குருவானவர் சீஷனுக்கு குடுக்கிற வித்தியா தானமானது [5]ஏற்றக் குறைச்சலாகக் கூட்டலாம் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. இதிலே ஒன்று மாத்திரம் சில முறை சரியாக வாராது. அதேதென்னில், அக்குருவினிடத்திலே உண்டான ஞானத்துக்குக் குறையாமல், சிலமுறை சரியாகவும் சில முறை அதிகமாகவும் சீஷனிடத்திலே வேறே ஞானமானது பிறக்கிறதென்று கண்டுகொண்டுவருகிறோம்.

(3) *அனுரூபமானது:* சொல்லப்பட்ட இந்த இரண்டு தானங்கள் தவிர வேறேயொரு வகை தானமுண்டு. அந்தத் தானத்து நிமித்தமாகக் குடுக்கிறவன் தனக்குண்டான நன்மையிலே ஒரு அங்கிஷமானது பிரியவும் குறையவும் பண்ணிவந்தாலும், கொடுக்கிறவன் தனக்குண்டான நன்மைக்கு [3]அனுரூபமான நன்மையைச் சரியாக வாங்குகிறவனிடத்திலே பிறப்பிக்கிறதொழிய மற்றப்படியல்ல. இந்த மேரையுள்ள தானமாக மனுஷன் மனுஷனைப் பிறப்பிக்கிறானென்று சொல்லப்படும். அதேதெனென்றால், மாதா பிதாவானவர்கள் தங்களுக்கு உண்டானதிலே சிலதைப் பிரியவும் குறையவும் பண்ணித், தங்களுக்கு உண்டான மனுஷ சுபாவத்துக்கு அனுரூபமான வேறே மனுஷ சுபாவத்தைப் பிள்ளைக்குக் கொடுக்கிறார்

1. equivocal (அனுரூபம், அரூபம் – பாடம்) 2. eminenter
3. univocal 4. இனத்திலே 5. ஏறத்தாழ

களொழிய மற்றப்படியல்ல. இந்தத் தானத்தின் மேரையை விசாரித்தோமானால், அதிலே அங்கிஷத்தின் பிரித்கலும், ஒன்று இரண்டாய்ப் போகிறதென்கிற குறைவும் காணப்பட்டிருந் தாலும், கொடுக்கிறவன் தனக்குண்டான நன்மைக்குச் சரிசமான வேறே ஒரு நன்மையை வாங்கிறவனிடத்திலே கொடுக்கிறான் என்கிறதினாலே, இந்தத் தானமானது சொல்லப் பட்ட தானங்களுக்கு மேலான தானமென்றும் நல்ல தான மென்றும் சொல்லத்தகும்.

**(4) மனத்தையும் சொல்லையும் கடந்தது: (i) சுதன் தோற்றம்:** சொல்லப்பட்ட மூன்று தானங்கள் தவிர வேறே யொரு வகைத் தானம் உண்டு. அது மனோவாக்குக்கு எட்டாத தாயிருக்கிற தானமென்றும் மேலான தானமென்றும் சொல்லப் பட்டு, அத்தைக்காட்டிலும் உத்தம தானம் உண்டென்று சொல்ல வும் கருதவும் கூடாது என்கிறதுக்குத் தப்பாது. அப்படிப் பட்ட தானத்து நிமித்தமாகக் கொடுக்கிறவனிடத்திலே அற்ப மாகிலும் குறைவராமல் கொடுக்கப்பட்ட வஸ்துவினிடத்திலே பின்னபேதமுண்டாகி அது ஒன்று இரண்டாகப் போகாமல், ஏக வஸ்துவானது அற்பமாகிலும் வித்தியாசமில்லாமல் கொடுக் கிறவனிடத்திலேயும் வாங்கிறவனிடத்திலேயும் இருக்கிற தொழிய மற்றப்படியல்ல. இந்த மேரையுள்ள தானமானது அனந்த பொருளாகிற கடவுளிடத்திலே உண்டாயிருக்கலா மொழிய உண்டாக்கப்பட்ட வஸ்துவிடத்திலே உண்டாயி ருக்கலாமென்று முழு மதிகெட்டவனானாலும் சொல்லவும் கருதவும் மாட்டான். மனோவாக்குக்கு [1]அகோசரமாய் இருக்கிற இந்தத் தானமானது சர்வேஸ்வரனிடத்திலே இருக்கும் வகையை எவ்வளவாகிலும் 'ஞானவுபதேசத்தின் மூன்றாம் காண்டத்தில் இரண்டாம் பாடத்திலே' [2]இந்தப் பரமரகசியத்தை இன்னம் அதிக பிரசங்கத்தைக்கொண்டு வெளிப்படுத்தத்தக்கதாக [3]வருந்தக்கடவோம்.

அதெப்படியென்றால், அனந்த ஞானமாகிற சர்வேஸ்வர னானவர் தம்மைக் குறையற்ற பிரகாரமாக முழுதும் இடை விடாமல் அறிந்துகொண்டு வருகிறதினால், தம்முடைய இடத் திலே தாம் எப்படிக்கொத்தவர் என்கிற வார்த்தையைத் தமது

1. எட்டாதது 2. + வெளிப்படுத்தினோம் (பா. பே.) 3-ம் காண்டம் இன்னும் எழுதப்படவில்லை. 3. முயல்வோம்.

அனந்த தானத்து நிமித்தமாக இடைவிடாமல் பிறப்பிக்கிருரென்று வேதப்பிரமாணத்தினுலே அற்பமாகுலும் சந்தேகமில்லாமல் முழுமனதோடு அங்கீகரித்துக்கொண்டு வருகிறோம். இப்படிப்பட்ட [1]புத்தியின் வார்த்தைக்குச், சர்வேஸ்வரனுனவர் ஏக தானத்துக்குக் குறைவராமல் தமது தேவ சுபாவமான சகல நன்மையைக் கொடுக்கிறதினுலே, சர்வேஸ்வரனிடத்திலே இருக்கிற இப்படிப்பட்ட புத்தியின் வார்த்தையானது அற்பமாகிலும் பின்னபேதமில்லாமல் தேவ சுபாவத்தைக் கொண்டிருக்கிறதுக்காகச், சகலநன்மை சுரூபமான தேவ சுபாவத்தோடு அது [2]ஏக பொருளாய் இருந்து, தம்மைப் பிறப்பிக்கிறவரோடேகூட ஒரே பராபரவஸ்து, ஒரே சர்வேஸ்வரனென்று சொல்லப்படுமொழிய, இரண்டு வஸ்துகளென்றும், இரண்டு கர்த்தாக்களென்றும் சொல்லவும் கருதவும் கூடாது. அதேதெனன்ருல், வஸ்து, கர்த்தன் இதுகள் முதலான நாமங்கள் சுபாவத்தினிமித்தமாகச் சொல்லப்படுகிறதினுல், புத்தியின் வார்த்தையைப் பிறப்பிக்கிறவன், பிறக்கிற புத்தியின் வார்த்தை என்கிற ஆளிரண்டிலேயும் இரண்டாய்ப் போகாத ஏக தேவ சுபாவமானது பின்னபேதம் இல்லாமல் இருக்கிறதினுலே, புத்தியின் வார்த்தையைப் பிறப்பிக்கிறவனும், பிறக்கிற புத்தியின் வார்த்தையும் இரண்டாளாய் இருந்தாலும், ஒரே அனந்த வஸ்து என்றும், ஒரே சர்வேஸ்வரனென்றும் சொல்ல வேணுமொழிய மற்றப்படியல்ல. பின்னையும், புத்தியின் வார்த்தையைப் பிறப்பிக்கிறவன் புத்தியின் வழியாகத் தனது புத்தியின் வார்த்தையைப் பிறப்பிக்கிறபோதே, அதைத் தனது [3]சாயலாகப் பிறப்பிக்கிருரென்று சொல்ல வேண்டியிருக்கிற அடைவாகப், புத்தியின் வார்த்தையானது தன்னைப் பிறப்பிக்கிறவன் சாயலாகப் பிறக்கிறதென்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனபடியினுலே சர்வேஸ்வரனிடத்திலே, புத்தியின் வார்த்தையைப் பிறப்பிக்கிறவனும் பிறக்கிற புத்தியின் வார்த்தையும் என்கிற ஆளிரண்டுக்கும் 'பிதா, சுதன்' என்கிற இரண்டு நாமங்கள் மெய்யாகவே செல்லுமென்று சொல்லக்கடவோம்.

(ii) **தூய ஆவியின் தோற்றம்.** ஆனுல், அனந்த ஞானமாய் இருக்கிற சர்வேஸ்வரன் தாம் தம்மை இடைவிடாமல் அறிந்துகொண்டு வருகிறதினுல், தெய்வ [4]அனந்த

1. verbum mentale 2. consubstantial 3. image
4. எல்லையற்ற கொடை

தானத்து நிமித்தமாக இடைவிடாமல் புத்தியின் வார்த்தையைப் பிறப்பிக்கிறாப் போலே, சகல நன்மை சுரூபமான அப்படிப்பட்ட சர்வேஸ்வரன்தானே தாம் தம்மைச் சிநேகிக்கிறதினாலே, பிதாவுக்கும் சுதனுக்கும் இருக்கிற ஏக மனசினிடத்திலே நின்று இருவருடைய பந்தனமாகிற சிநேகமானது பிறப்படுகிறதென்று வேதப் பிரமாணத்தினாலே அங்கீகரித்துக் கொண்டு வருகிறோம். இப்படிப்பட்ட சிநேகத்துக்கு இருவரும் தங்களுக்குண்டான நன்மையான தேவ சுபாவத்தைக் கொடுக்கிறதினாலே, அப்படிப்பட்ட சிநேகமானது தேவ சுபாவத்தோடேகூட ஏக பொருளாய் இருக்கிறதொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே, ஏக தேவ சுபாவமானது இரண்டாய்ப் போகாமல், பின்னபேதமில்லாமல் கொடுக்கிறவனிடத்திலேயும் வாங்கிறவனிடத்திலேயும் சரியாயிருக்கக்கொள்ள, பிதா சுதன் இருவரிடத்தில் நின்று பிறப்படுகிற சிநேகமானது மூன்றாமாளாயிருந்து ஏக வஸ்துவாகிற சர்வேஸ்வரனாய் இருக்கிறாரென்று அளவறுக்கப்படாததுமாய், உண்டாக்கப்பட்ட புத்தியினாலே சுபாவ பெலத்தைக்கொண்டு பிரத்தியட்ச தெரிசனத்து நிமித்தமாக அடையப்படாததுமாய் இருக்கிற அற்புதமானது மோட்சப் பிரகாசத்தினாலே உசத்தப்பட்ட புத்தியினாலே பிரத்தியட்சமாய்க் [2]காணப்படுகிறது என்கிறது ஒப்புக்கொள்ளத்தக்க குன்றாத சத்தியமாகும்.

**33.10. மோட்சத்தில் ஆன்மாவிற்குத் தூய திரித்துவத்தின் காட்சி.** இத்தொகைப்பட்ட அனந்த மகிமையுள்ள விசேஷங்களைப் பராபர வஸ்துவிடத்திலே மோட்சப் பிரகாசத்தினாலே உசத்தப்பட்ட புத்தியுடைத்தான சீவனானது பிரத்தியட்சமாய்க் காண்கிறதினால், தனக்குண்டான [3]சக்தி பிரமாணமாக முழு மனதோடு பிரத்தியட்சமாகக் காணப்பட்ட பராபர வஸ்துவின் பேரிலே பழுதற்ற பத்தியாயிருக்கிறது என்கிறதுக்குச் சந்தேகப்படக் கணக்கில்லை. சீவனானது தேவவிஷயக பிரத்தியட்ச தெரிசன [4]பத்தியை அடைந்திருக்கிறதினால், சகல நன்மைகளுடைய விஷயத்திலே பூர்த்தியையும் குறையற்ற

2. காண்பிக்கிறது (பா. பே.)
3. ஆற்றலுக்குத் தக்கபடி
4. பத்தியையும் (பா.)

திருத்தியைக் கொடுக்கிற பரமானந்தத்தையும் அனுபவிக்கிறதென்று அங்கீகரிக்கக்கடவோம். இது காரணமாத உண்டாக்கப்பட்ட ஜீவனானது தன்னை உண்டாக்கின ஆதிகாரணமான பராபர [5]வஸ்துவோடே மனோ வாக்குக்கு எட்டாததாய் இருக்கிற சிநேகத்தின் பந்தனத்தினாலே கட்டப்பட்டுச், சர்வேஸ்வரனிடத்திலே லயமாய்ப் போகாமல், உண்டாக்கப்பட்ட ஜீவன் உண்டாக்கப்பட்டதாய் இருந்தாலும், தானுயிருக்கிற ஆதிகாரணமான பராபர வஸ்துவோடே முன் சொல்லப்பட்ட பிரத்தியட்ச தெரிசனத்தினாலேயும் பத்தியின் நிமித்தமாகவும் ஓர்விதமாக ஒன்றித்துப் போகிறது என்கிறதுக்குத் தப்பாது.

**33.11. நன்மையில் நிலைகொண்டமை மோட்சக் காட்சியால் வருகிறது.** மோட்ச ராச்சியத்தை அடைந்திக்கிற ஜீவனுக்கும் தானுயிருக்கிற பராபர வஸ்துவுக்கும் உண்டாயிருக்கிற அயிக்கியமானது எவ்வளவாகிலும் வெளியாகும்படிக்கு, மோட்சவாசிகளாய் இருக்கிற பேர்கள் சகல நன்மைகளுடைய விஷயத்திலே அடைந்திருக்கிற தேவப் பிரசாதங்களைக் கொஞ்சத்துக்குள்ளே வெளிப்படுத்த வேண்டியிருக்கிறது. இந்தப் பாடத்திலே நம்மால் அறிவிக்கப்பட்ட தேவவிஷயக பிரத்தியட்ச தெரிசனத்திலேயும் பத்தியிலேயும் அறியவேண்டின விசேஷங்களாவது: பூலோகத்திலே வாசமாய் இருக்கிற வழிப்போக்கரினாலே தேவவிஷயக விசுவாச தெரிசனத்தைக்கொண்டு பராபர வஸ்து இன்னதென்று காணப்பட்டிருந்தாலும், அவர்களாலே கடவுளானது இருட்டிலே காணப்படுமொழிய மற்றப்படியல்ல. இருட்டிலே காணப்பட்ட பராபர வஸ்துவினிடத்திலே இருக்கிற அனந்த மகிமையுள்ள ரூபலாவண்ணியமும் மனோவாக்குக்கு எட்டாததாய் இருக்கிற பெருமையுள்ள விசேஷங்களும் துலக்கமாக வழிப்போக்கரினாலே காணப்படாததினால், அவர்களுக்குச் சகல விஷயத்திலே திருத்தி கொடுக்கிற பரமானந்தமானது உண்டாயிருக்க மாட்டாது. ஆதலாலே, வழிப்போக்கருடைய மனசானது தேவவிஷயக பத்தியில் நின்று திரும்பி, வழிப்போக்கனைப் இருக்-

5. வஸ்துவோடையும் (பா.)

கிறவன் பாவியாய்ப் போகலாம் என்கிறதுக்குத் தப்பாது. மோட்ச பிரகாசத்தினாலே உசத்தப்பட்ட புத்தியுடைத்தான மோட்சவாசியோவென்றால், சர்வேஸ்வரனிடத்திலே உண்டா யிருக்கிற அனந்த மகிமையுள்ள ரூபலாவண்ணியமும் மனோ வாக்குக்கு அகோசரமாயிருக்கிற பெருமைகளும் மோட்சவாசி யினாலே பிரத்தியட்சமாய்க் காணப்படுகிறதினால், அவருடைய மனசானது தேவவிஷயக பத்தியில் நின்று திரும்ப மாட்டாது. அவ்வண்ணமே மோட்சவாசியாய் இருக்கிறவர் தனது பலத்தின் பிரமாணமாக [1]நன்மையிலே நிலைகொண்ட மனசோடு சர்வேஸ் வரன் பேரிலே பத்தியை வைத்துக், தேவ கிருபாகடாட்சத் தினாலே பாவத்திலே விழமாட்டாத சுவாதந்திரியத்தைக் கொண்டிருக்கிறாரொழிய மற்றப்படியல்ல. இதெல்லாம், மோட்சவாசியாய் இருக்கிறவர் எந்தத் திவ்விய வரப்பிரசாதங் களினாலே அலங்கரிக்கப்படுகிறாரென்று சொல்லும்போது, மிகவும் வெளியாகும் என்கிறதுக்குத் தப்பாது. ஆகலாலே, கிரமத்தோடு இந்தப் பரம ரகசியமானதை எவ்வளவாகிலும் வெளிப்படுத்தும்படிக்கு மோட்சவாசியானவர் திவ்விய கிருபா கடாட்சத்தினாலே அடைந்திருக்கிற எண்ணப்படாததுகளுமாய், மனோவாக்குக்கு எட்டாததுகளுமாயிருக்கிற வரப்பிரசாதங் களுக்குள்ளே சிலதுகளை மாத்திரம் வருகிற பாடத்திலே கொஞ்சத்துக்குள்ளே சொல்லிக் காட்டக்கடவோம்.

முப்பத்தி மூன்றும் பாடம் முற்றும்.

(கிரந்தம் ௩௱௪)*

## முப்பத்தி நாலாம் பாடம்

குறையற்ற [2]பரமரகசிய மாகிற மோட்சத்தை [3]அடைகிற பேர்கள் அடைஞ்சிருக்கிற எண்ணப்படாத திவ்விய வரப் பிரசாதங்களை ஆண்டவன் தமது வேதத்திலே அருளிச் செய்தார். அப்படிப்பட்ட வாக்கியங்களுக்குள்ளே ஒன்றி ரண்டை நாம் சொல்லி, அதுகளுக்குண்டான அர்த்தத்தை வெளிப்படுத்தி, மோட்சவாசிகள் அடைந்திருக்கிற திவ்விய வரப்பிரசாதங்களுடைய கனமான மகிமையை எவ்வளவாகிலும்

1. confirmed in grace. 2. பாக்கியம் (பர. பே.)
3. அனுபவி (பா. பே.)

அறியப்பண்ணக் கடவோம். அதேதெனில், "மோட்சவாசி களாய் இருக்கிற பேர்கள் *சருவேசுரனுக்குத் திவ்விய சுபாவத் திலே துணையாயிருக்கிற பேர்களுமாய் அங்கிஷமுள்ள பேர் களுமாயிருக்கிறுரென்றும், †சர்வேசுரனைக் காண்கிறதினுலே அவரைப்போல் இருக்கிறுர்கள் என்றும், ‡சகல பேர்களுடைய ஸ்தானத்திலேயும் சகல வஸ்துக்களாகவும் ஏக பராபர வஸ்து வானது மோட்சவாசிகளுக்குண்டாய் இருக்கிறதென்றும், ¶பிரகாசத்தில் நின்று பிரகாச ரூபமாய்ப் போகிறுர்களென்றும்," வேதத்திலே சொல்லப்பட்டிருக்கிறதே. வேறே இத்தொகைப் பட்ட வாக்கியங்களுக்கு அர்த்தமானது: தானுய் இருக்கிற வருமாய் மட்டில்லாத சகல §நன்மையான சருவேசுரனுக்குச் சுபாவமாக உண்டாயிருக்கிற அனந்த மகிமையுள்ள விசேஷ நன்மைகளை மோட்சப் பிரகாசத்தினுலே உயர்த்தப்பட்ட புத்தி உடைத்தான மோட்சவாசியானவர் தனது மட்டிலே**ஒருமேரை யாகக் கொண்டிருக்கிறுரென்கிறது வேதத்திலே சொல்லப்பட்ட இந்த வகையுள்ள வாக்கியங்களுக்கு அர்த்தமாகும். இது எவ்வளவாகிலும் வெளியாகும்படிக்கு மோட்சவாசிகளுக்கு உண்டான வரப்பிரசாதங்களுக்குள்ளே சில வரப்பிரசாதங் களுடைய மேரையைக் கொஞ்சத்துக்குள்ளே வெளிப்படுத்தக் கடவோம்.

**34·1. ஆன்மாவுக்கு வரும் தெய்வத்தன்மை :**

(1) அதெப்படியென்றுல், கர்த்தரானவர் தானுய் இருக்கிறு ரென்கிறது கர்த்தனிடத்திலே இருக்கிற மகிமைகளுக்குள்ளே ஒருவிதமாக ††முந்தின மகிமையென்று சொல்லப்படும். இது காரணமாகச் சகல நன்மைகளுடைய விஷயங்களிலே கர்த்த ரானவர் தமக்குத் §§தாம் தானே உண்டாயிருக்கிறுரொழிய வேறே ஒரு வஸ்துவிடத்திலே நின்று அவருக்குப் பிரயோசனம் வரமாட்டாது. இது இப்படி இருக்கையிலே, மோட்சவாசிகளுக்கு உண்டாயிருக்கிற பரமானந்த முதலான குறையற்ற பாக்கியத்துக்கு உண்டாக்கப்பட்ட வஸ்து வென்னப்பட்ட யாவும் காரணமாயிராமல், ஏக பராபரவஸ்து தானே காரணமாய் இருக்கிறது என்று சொல்லப்படச் செய்தே,

* 2 இரா. 1, 4 † 1 அரு. 3, 2 ‡ 1 கொ. 15, 28
¶ சங். 85,10 § + வருமாயிருக்கிற (பா. பே.)
** participes †† முதல். §§ + தானே (பா. பே.)

ஏக பராபர வஸ்துவானது மோட்சவாசிகளுக்குச் சகல வஸ்துக்களாக உண்டாயிருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. அப்படியே, கர்த்தரானவர் தமக்குத் தாம்தானே உண்டாயிருக்கிறப்போலே, மோட்சவாசிகளுக்கு அவர் தானே மாத்திரம் இருக்கிறார் என்கிறதுக்காகக், கர்த்தனுக்குச் சுபாவமாகத் [1]தானுயிருக்கிறதன மென்கிற மகிமையுள்ள விசேஷத்தை மோட்சவாசியாய் இருக்கிறவர் தனது மட்டிலே ஒரு பிரகாரமாகக் கொண்டிருக்கிறார் என்று சொல்லக்கடவது.

(2) பூத[2]வர்த்தமான பவிஷியம் என்கிற காலக்கிரமத்துக்கடுத்திருக்கிற பொருளென்னப்பட்ட யாவும் உண்டாக்கலான சகல பொருள்களுடைய சமுகமும் ஆதிகாரணமான கர்த்தனுக்கு அடுத்த வஸ்துக்களாயிருக்கக்கொள்ள, அனந்த ஞானமான கர்த்தரானவர் தாம் தம்மைப் பிரத்தியட்சமாய்க் கண்டு இருக்கிறதினால், தம்மிடத்திலே அந்த வஸ்துக்களை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்கிறதுக்குத் தப்பாது. அத்தன்மை போல மோட்சவாசியாய் இருக்கிறவர் சருவேசுரனைப் பிரத்தியட்சமாய்க் கண்டு இருக்கிறதினால், தமக்கடுத்த வஸ்துவென்னப்பட்ட யாவையும் சருவேசுரனிடத்திலே தானே கண்டு கொண்டு வருகிறார் என்கிறதுக்காகே, மோட்சவாசிகளுக்கு உண்டான இப்படிப்பட்ட குறையற்ற ஞானமானது கடவுளிடத்திலே இருக்கிற அனந்த ஞானத்தைத் தனது மட்டு மேரையாகப் பின்செல்லுகிறதென்று சொல்லத்தகும். (3) இந்தபடிவாகச் சருவேசுரனுனவர் பரம சத்திய சுரூபியாயிருக்கிற தம்மிடத்திலே சகலத்தையும் கண்டு ஒன்றிலேயானாலும் [3]மோசம் போகமாட்டார் என்கிறப்போலே, அப்படிப்பட்ட பரம சத்தியமான சருவேசுரனிடத்திலே மோட்சவாசியாய் இருக்கிறவர் தமக்கு அடுத்ததெல்லாம் கண்டுவரச் செய்தே, அதுகளுக்குள்ளே ஒன்றிலேயானாலும் [4]ஏய்ப்புண்ணமாட்டார்.

(4) இது தவிர, ஆண்டவர் சகல நன்மை சொரூபமாகத் தம்மைப் பிரத்தியட்சமாய்க் காண்கிறதினால், அவர் பரமானந்த சொரூபமாய் இருக்கிறார் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தகாது. அம்மருவாதியே, மோட்சவாசியாய் இருக்கிறவர்

1. தானுயிருக்கிறதனம், aseitas 2. இறப்பு, நிகழ்வு, எதிர்வு
3, 4 — non fallitur.

ஆண்டவரைப் பிரத்தியட்சமாய்ப் பார்த்துக்கொண்டு இருக்கிறதினால், அவர் சகலத்திலே திருத்தி குடுக்கிற பரமானந்தத்தை அனுபவிக்கிறது என்கிறது அனந்த பரமானந்தத்தின் வகையிலே ஆண்டவருக்கு மோட்சவாசியாய் இருக்கிறவர் தனதுமட்டாக *இணையாய் இருக்கிறார் என்று சொல்லலாய் இருக்கிறது.

(5) இதன்றியே, சருவத்துக்கும் வல்லவராய் இருக்கிற கர்த்தரானவர், தனது அனந்த பெலத்தைக்கொண்டு சகல பொருள்களை உண்டாக்கிச் சகலத்தையும் நடத்துகிறார் என்கிறதை விசாரிக்கும்போது, கர்த்தரோடே கூட ராச்சியம் பண்ணுகிற மோட்சவாசியாய் இருக்கிறவர் சருவேசுரன் பண்ணுகிறதெல்லாம் பூரண மேரையாக அங்கீகரித்துக் கொண்டு வரச்செய்தே, அப்படிப்பட்ட அங்கீகாரத்து நிமித்தமாகச் சருவேசுரனோடே கூடச் சகலத்தையும் மோட்சவாசியாய் இருக்கிறவர் தன்மட்டிலே நடத்துகிறார் என்று சொல்லலாய் இருக்கக்கொள்ளச், சருவேசுரனுடைய அனந்த பெலத்தின் வகையிலே மட்டாகக் கர்த்தனுக்கு *இணையாய் இருக்கிறார் என்று அங்கீகரிக்கத்தகும்.

(6) இதல்லாதே, கர்த்தரானவர் மட்டில்லாத சகல நன்மை சொரூபமாய் இருக்கக்கொள்ள, பாவத்திலே விழமாட்டார் என்று ஒப்புக்கொள்ளத்தக்க குன்றாத சத்தியமாகும். இந்தடவிலே மட்டில்லாத சகல நன்மை சொரூபமான சருவேசுரனை மோட்சவாசியாய் இருக்கிறவர் பிரத்தியட்சமாய்க் கண்டு வருகிறதினால், தேவவிஷயக பத்தியினால் நிலைகொண்ட மனசுஉள்ளவருமாய்க், கர்த்தனுக்கு விரோதமான விஷயத்தை இச்சிக்க மாட்டாதவருமாய் இருந்து, ஒரு அற்ப பாவத்திலே யானாலும் மோட்ச வாசியாய் இருக்கிறவர் விழமாட்டார் என்று சந்தேகமற அங்கீகரிக்கக்கடவோம்.

(7) இதன்றியே, அனந்த பரமானந்த சொரூபமாய் இருக்கிற கர்த்தரானவருக்கு நோவு துக்க முதலான துரிதங்கள் ஒன்றினாலேயானாலும் வரமாட்டாதது போலே, ஆண்டவனுடைய பரமானந்தத்திலே பிரவேசிக்கிற மோட்சவாசியாய் இருக்கிறவர் கரைகாணாக் கடலாகிற சந்தோஷத்திலே முழுகி இருக்கிறவர் போலே இருக்கிறாரென்று சொல்லக்கடவோம்.

* துணையாய் (பா.)

ஆனபடியினாலே, ஒரு அற்ப நோயானாலும் அணுப்பிரமாண மான துக்கமென்கிலும் மோட்ச வாசியா யிருக்கிறவரை அண்டுகிறதுக்கு இடமுண்டா யிருக்கிறதென்று சொல்லவுங் கருதவுங் கூடாது.

(8) இதுதவிரத் தானுயிருக்கிற கர்த்தரானவர், மரண மடைய மாட்டாமல், என்றென்றைக்கும் நிறத்தக்க அனந் தானந்த சொரூபமாயிருந்து, ஒரு அற்பமாகிலும் விகார மில்லாமல் ஒருகண்டசீருள்ள நித்திய வஸ்துவா யிருக் கிறப்போல, மோட்சவாசியானவர் என்றென்றைக்குங் கர்த்தனைப் பிரத்தியட்சமாய்க் கண்டு, கர்த்தனுடைய கிருபை யுள்ள திருவுளத்தின்படியே நோவையும் மரணத்தையும் அடை யால் தனது சுபாவமான மோட்சானந்தத்திலே விகார மில்லாமல் ஒருகண்டசீராய்க் குறையற்ற ஆனந்தத்தை அனுப வித்துக்கொண்டு வருகிறாரொழிய மற்றப்படியல்ல.

**34.2** தீயிலுள்ள இரும்பு இதற்கு உவமை. அவ் வண்ணமே மோட்சவாசியானவர் சர்வேசுரனிடத்திலே லயிச் சுப்போகாமல், சருவேசுரனுக்குச் சுபாவமாயிருக்கிற அனந்த மகிமையுள்ள விசேஷ நன்மைகள் உண்டாக்கப்பட்ட பொருளின்மட்டாக மோட்சவாசிகளிடத்திலே காணப்படுகிற தொழிய, உண்டாக்கப்பட்ட பொருளின் குறையுள்ள குணங் களானதுகள் அவரிடத்திலே உண்டாயிராதென்று அங்கீ கரிக்கக் கடவோம், இதெல்லாம் ஓர் உவமையினாலே எவ்வள வாகிலுங் கண்டுபிடிக்கத் தக்கதாக வருந்தக்கடவோம். அதே தெனில், இரும்பானதுக்கு உண்டாயிருக்கிற சுபாவ குணங் களை விசாரித்தோமானால், அதிலே ஐந்து சுபாவங்களைக் கண்டு பிடிப்போம் என்கிறதுக்குத் தப்பாது. அந்தக் குணங்களா வது: கறுப்பு, குளிர், [1]காட்டின்னியம், அழுக்கு, பாரம் என்கிறதுகள் இரும்புக்கு உண்டான ஐந்து குணங்களென்று சொல்லத்தகும். இப்படிக்கொத்த இரும்பானது அக்கினியிலே சிவக்கக் காஞ்சு அக்கினியிலே அது பிரவேசிக்கப்பட்டால், இரும்பானது லயமாய்ப் போகாதிருந்தாலும், இரும்பிலே அக்கினிக்குஉண்டான சுபாவ குணங்கள் காணப்படுமொழிய, இரும்புக்குஉண்டான கறுப்பு முதலான சுபாவ குணங்கள் இரும்பிலே காணப்படுகிறதில்லை. இத்தன்மை போலே,

1. கெட்டி.

சீவனானது கறுப்புப் போலே அஞ்ஞானத்தையும், தேவவிஷயக பத்தியில்லாத சீதளத்தையும், பாவமாகிற அழுக்கையும், ஆண்டவன் சித்தத்துக்குப் படிந்திராத காட்டின்னியத்தையும், மண்ணிலே இருக்கிற விஷயங்கள் பேரிலே மட்டில்லாத ஆசையாகிற பாரத்தையும் கொண்டிருக்கிறதென்று சந்தேகப்படத் தகாது. (1) இப்படிப்பட்ட சீவனானது குறையற்ற பாக்கியமாகிற மோட்சத்தை அடைந்து, தேவவிஷயக பிரத்தியட்ச தெரிசனத்தின் நிமித்தமாக அக்கினியினுலே பிரவேசிக்கப்பட்ட இரும்புபோல அது [1]தேவாதிஷ்டிதனுகாய் இருந்து, 'கறுப்பான அக்கியானத்தை' முழுதும் போக்கடித்து, முன் சொல்லப்பட்ட குறையற்ற ஞானத்தைச் சீவனானது அடையும் என்கிறதுக்குத் தப்பாது. (2–3) தேவவிஷயக 'பத்தியில்லாத்தனமாகிற சீதளமானதைச்' சீவனானது முழுதும் விட்டுப் பிரிந்து, தனது பெலத்துக்குத் தக்க பத்தியைச் சருவேசுரன் பேரிலே வைத்து, ஆண்டவனுடைய சித்தத்தைச் சீவனுடைய மனதானது குறையற்ற பிரகாரமாய்ப் பின்சென்று கொண்டு 'காட்டின்னியம்' என்னப்பட்ட யாவும் அத்தாலே தள்ளுண்டுபோம் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தகாது. (4) பின்னையும், அப்படிப்பட்ட பத்தியின் நிமித்தமாக மோட்சவாசியானவர் குறையிலே விழமாட்டாத தனது சுவாதந்தரியத்தினுலே ஆண்டவருக்குப் பொருந்தின விஷயங்களை அவசியமாக அபேக்ஷிப்பாரொழிய, ஆண்டவருக்கு [2]அரோசகமான விஷயங்களை முழுதும் வெறுத்து அதுகளை அங்கீகரிக்கமாட்டார். இது நிமித்தமாக நன்மையிலே நிலைகொண்ட மனசாயிருக்கிற மோட்சவாசியானவர் தேவவிஷயகப் பிரசாதத்தினுலே என்றென்றைக்கும் அலங்கரிக்கப்பட்டவராய் இருப்பாரொழிய, 'அற்பபாவத்தின் அழுக்கானது' லவலேசமானுலும் அவரிடத்திலே [3]அடைசியிருக்க மாட்டாதென்று சந்தேகமற்ற சத்திய விசேஷமாகும். (5) கடைசியாய், மோட்சவாசியானவர் பூலோகத்திலே உண்டாயிருக்கிற சகல விஷயங்கள் பேரிலே தனது ஆசையை வையாமலும், உன்னதமாயிருக்கிற பராபர வஸ்துவினிடத்திலே மாத்திரம் அவருடைய ஆசையானது ஏறி இளைப்பாறுகிறதினுல், மோட்சவாசியிடத்தில் நின்று பாரம் என்னப்பட்டதெல்லாம் அகன்று போய்த், 'திவ்விய வரப்பிரசாதமாகிற லகுவ்வ' மோட்சவாசியானவர் அடைந்திருக்கிறுர் என்று சொல்லத்தகும்.

1. தேவகாட்சியன். 2. பிடிக்காத 3. அடைத்து.

**34.3 திரித்தி யளிக்கும் இப்பேரின்பமே ஆன்மாவின் முடிவு.** அவ்வண்ணமே, மோட்சவாசியிடத்திலே குறையுள்ள குணங்கள் சற்றுனுலும் உண்டாயிராமல், திவ்விய மகிமையுள்ள விசேஷங்கள் வரப்பிரசாதங்களாக அவரிடத்திலே விளங்கி வருகிறதொழிய மற்றப்படியல்ல. இதுக்கப்பால் அபேக்ஷிக்கத்தக்கது ஒன்றுமில்லாததினுல், இந்தப் பாக்கியமானது மோட்சவாசியினுடைய ஆசையைக் குறையில்லாமல் பூரிக்கிறது என்கிறதுக்குச் சந்தேகமில்லை. பின்னேயும், அற்பப் பொல்லாப்பின் கலப்பில்லாத இப்படிக் கொத்த பாக்கியமானது மோட்சவாசியிடத்திலே என்றென்றைக்கும் நிற்குமென்கிறதினுல், அதே குறையற்ற பாக்கியமும், அதே திரித்தி குடுக்கிற பரமானந்தமும், அதே மனேவாக்குக்கு எட்டாததாயிருக்கிற மோட்சமும், அதே சீவனுடைய அவதியும் ஒடுக்கமுமென்று சொல்லப்படுமொழிய, சுவர்க்கம், வைகுண்டம் முதலான ஸ்தலங்களிலே தெளிவற்ற பாவிகளினுலே வெறுமனே கற்பிக்கப்பட்ட அசுத்த போக சுகங்களினுலேயும், சாருப்பிய முதலான மேரைகளினுலேயும் சீவனுடைய அவதி ஒடுக்கமான மோட்சமானது அடங்கியிருக்குமென்று சத்தியமும் நீதியும் போகிற போக்கை அறியாத மதிகெட்ட மிலேச்சன் சொன்னுற் சொல்லுவானெழிய மற்றப்படியல்ல.

**34.4 கடவுளே பேரின்பத்துக்குக் காரணம்.** கடைசியாய், மோட்சவாசியிடத்திலே, மிகவும் பராமரிசிக்கத்தக்க ஒரு விசேஷமுண்டு. அதேதெனில், மோட்சவாசியானவர் சருவேசுரன் பேரிலே மாத்திரம் கனமான பத்தியாய் இருக்கிறதினுலேயும், மோட்சவாசிக்குச் சருவேசுரனுனவர் சகல வஸ்துக்களாய் இருக்கிருர் என்கிறதினுலேயும், மோட்சவாசியானவர் தான் முன்சொல்லப்பட்ட மகிமையுள்ள விசேஷங்கள் முதலான வேறே அநேக திவ்விய வரப்பிரசாதங்களை அனுபவிக்கிறதிலே சருவேசுரனுடைய கரைகாணுத கருணையானது விளங்கிறது என்கிறதுக்காகவும், சருவேசுரனுடைய திருவுளப்படியே மனேவாக்குக்கு எட்டாததாய் இருக்கிற நன்மைகளை அனுபவித்துக்கொண்டு வருகிற தம்முடைய இடத்திலே சருவேசுரனை ஸ்தோத்திரம் பண்ணுகிறதுக்கு இடமுண்டாய் இருக்கிறதினுலேயும் சந்தோஷப்படுகிருரொழியத், தாம் இப்படிப்பட்ட எண்ணப்படாத நன்மைகளை அனுபவிக்கிருர்

என்கிறதுக்காகச் சந்தோஷப்படுகிறாரென்று சொல்லத்தகாது. அப்படியே, சந்நேவசுரனுடைய நன்மையானது தம்முடைய நன்மையாய் இருக்கிறதென்று எண்ணிக்கொண்டு வரச்செய்தே, சகல நன்மை சுரூபமான சர்வேஸ்வரனனவர் மோக்ஷவாசிக்கு மோக்ஷவாசி முதலான சகல பொருள்களாய் இருக்கிறார் என்கிற வாக்கியமானது குன்றாத சத்தியமென்று சொல்லக்கடவோம். எவ்வளவாகிலும் இதெல்லாம் ஓர் உவமையினாலே வெளியாக்கலாம்.

**34.5. அரசனுக்காக உழைக்கும் தன்னலம் கருதாத ஊழியன் உவமை.** அதேதெனில், தாசனொருத்தன் தனது ராசா பேரிலே பூரண பத்தியாய் இருக்கையிலே, இராசாவின் கையிலே கோடி திரவியம் வாங்கினான். தாசனானவன் கோடி திரவியத்தின் பேரிலே இலவலேசமானாலும் பற்றுதலாய் இராமல், அந்தக் கோடி திரவியத்தைக் கொண்டு தனது ராசாவுக்கு ஊழியம் பண்ணிவிக்கவும், ராசாவினுடைய ராச்சியத்துக்கு நவமான ராச்சியத்தைக் கூட்டவும் உபாயம் பண்ணி, அந்தக் கோடி திரவியமெல்லாம் ராசாவினிமித்தமாகச் சிலவழித்தாலொழியத் தனது விஷயங்களிலே செலவு பண்ணினதில்லை. இந்தத் தாசனுடைய மேரை மரியாதையைப் பத்தும் பத்தாய் விசாரித்தோமானால், தாசனானவன் தனது ராசாவின் பேரிலே பரிபூரண பத்தியாய் இருக்கிறதினால், தனது நன்மையைச் சட்டைபண்ணாமல், ராசாவினுடைய நன்மை தனது நன்மை என்று விசாரிக்கிறானொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே கோடி திரவியத்தின் பேரிலே சற்றாகிலும் பற்றுதல் இல்லாதவனாய்த் தன்னுடைய கையிலே அந்தத் திரவியமெல்லாம் இருக்கிறதென்று தான் சற்றாகிலும் சந்தோஷப்படாமல், இராசாவுக்குத் தோத்திர முதலான நன்மைகள் உண்டாகவேணுமென்று திரவியமெல்லாம் செலவழித்தாலொழியத், தனது காரியங்களிலே ஒரு காசானாலும் செலவழித்தவனல்ல.

**34.6. கர்த்தன் புகழே மோட்சவாசியின் மகிழ்ச்சி.** இந்த உவமையினாலே குழந்தையானது கல்லின குழியிலே உண்டாயிருக்கிற சலத்தினாலே கரைகாணக் கடலைக் கண்டுபிடிக்குமாப்போலே, தானாயிருக்கிற மட்டில்லாத சகல நன்மையான சர்வேஸ்வரனுக்கும் உண்டாக்கப்பட்ட மோக்ஷவாசிக்கும் நடந்து வருகிற மேரையை எவ்வளவாகிலும் கண்டுபிடிக்க

வருந்தக்கடவோம். அதேதெனில், கோடாகோடி திரவியங்களை [1]அதிசயிக்கிற மனோவாக்குக்கு எட்டாததாய் இருக்கிற குறை யற்ற பாக்கியமாகிற மோக்ஷப் பிரகாசத்தைத் தயாபரனான கர்த்தன் கையிலே மோக்ஷவாசியானவர் வாங்கிக்கொண்டு இருக்கிறவர் எண்ணப்படாத திவ்விய பிரசாதங்களைத் தாம் அனுபவிக்கிறதினால் சர்வேஸ்வரனுடைய கரைகாணாத கருணை யானது விளங்கும் என்கிறதுக்காக மிகவும் சந்தோஷப்படுகிறா ரொழிய, இத்தனை வரப்பிரசாதங்களைத் தாம் அனுபவிக்கிற தினால் சர்வேஸ்வரனுடைய கரைகாணாத பிரசாதங்களினாலே அலங்கரிக்கப்பட்ட தாம் மகா இராசாவாக இருக்கிறாரென்று சந்தோஷப்படுகிறதில்லை. பின்னையும், மனோவாக்குக்கு அகோசரமாய் இருக்கிற பெருமைகளின் நிமித்தமாக மோக்ஷ வாசியானவர் மிகவும் விளங்குகிறதினாலே, எல்லாரும் சர்வேஸ் வரனைத் தோத்திரம் பண்ணுகிறதுக்கு வல்லவராய் இருக் கிறார்கள் என்கிறதுக்காகத் தாம் மோக்ஷ பெருமைகளை அனுபவிக்கிறாரென்று சந்தோஷப்படுகிறதொழிய மற்றப்படி யல்ல. அவ்வண்ணமே, மோக்ஷவாசியிடத்திலே தேவவிஷயக பத்தியானது இந்த விதமாக விளங்குகிறதினாலே, மோக்ஷவாசி யிடத்திலே சர்வேஸ்வரன் ஒருவரே சகல பொருள்களாக இருக் கிறாரென்று அங்கீகரிக்கக்கடவோம்.

ஆதலாலே, முன் சொல்லப்பட்ட தாசனானவர் தனது இராசாவானவன் கையிலே கோடித் திரவியம் வாங்கி இராசா வுக்கு நன்மையுண்டாகிறதுக்கு மாத்திரம் செலவழித்தாப் போல, மோக்ஷவாசியானவர் தயாபரனான கர்த்தன் கையிலே எண்ணப்படாத வரப்பிரசாதங்களை வாங்கித், தம்மிடத்திலே யிருக்கிற அப்படிப்பட்ட பெருமைகள் நிமித்தமாகத் தம் முடைய தோத்திரத்தை அபேக்ஷியாமல், கர்த்தனுக்கு மாத்திரம் தோத்திரமுண்டாக வேணுமென்று மோக்ஷவாசி இச்சிக்கிறபோதே. கோடித் திரவியம் வாங்கித் தனது இராசா வுக்கு நன்மை உண்டாகத்தக்கதாக மாத்திரஞ் செலவழித்த தாசனானவன் தனது இராசாவின்பேரிலே பத்தியாயிருக்கிற தைக் காட்டிலும், மோக்ஷவாசியாயிருக்கிறவர் சர்வேஸ்வரன் பேரிலே அதிகமான பக்தியுண்டாய்க், கர்த்தன் கையிலே வாங்கினதெல்லாம் கர்த்தனுக்கு நன்மை முதலான தோத்திர

1. வெல்கிற

முண்டாக வேணுமென்று செலவழிக்கிறுரொழிய மற்றப்படி யல்ல.

**34.7 இருவகை நட்புள், கடவுள் தன்னலமற்ற நட்பிற்குரியவர்.** இதுக்குக் காரணத்தைத் தெரியும்படிக்குப் [1]பக்ஷமானது இரண்டு விதமாய்ப் பிரியுமென்று அறியவேண்டியிருக்கிறது. அதேதெனில், சினேகிதனுடைய நன்மை விஷய பக்ஷமானது [2]சினேக பக்ஷமென்றும் குறையற்ற பக்ஷமென்றும் சொல்லப்படும். இயாதொருத்தன் தனது நன்மையை ஆசைப்பட்டு வேறொருத்தன் பேரிலே பக்ஷமாயிருந்தால், அது [3]சுவாபேக்ஷா பக்ஷமென்றுங் குறையுள்ள பக்ஷமென்றுஞ் சொல்லப்படும். இப்படியிருக்கையிலே மோக்ஷவாசியா யிருக்கிறவரிடத்திலே சினேகித் தேவ விஷயக குறையற்ற பத்தியானது மாத்திரம் விளங்கிறதொழியத், தம்முடைய பேரிலே குறையுள்ள பக்ஷமானது அவரிடத்திலே உண்டாயிருக்க மாட்டாதென்று சந்தேகமற ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமானது அதிகமாக விளங்கும்படிக்கு, மோக்ஷவாசியிடத்திலே யிருக்கிற தேவ பத்தியின் விஷயங்களைத் தனித்தனியே ஆராய்ந்து கொண்டு வெளிப்படுத்தக்கடவோம். (1) அதெப்படியென்றுல், அந்தந்த நன்மையானது அடைவாக அந்தந்த சினேகத்துக்குப் பாத்திரமா யிருக்கச் செய்தே, சர்வேஸ்வரனுகிற நன்மையானது மட்டும் முகிவில்லாத சகல நன்மையா யிருக்கிறதென்று மோக்ஷவாசியா யிருக்கிறவர் பிரத்தியக்ஷமாய்க் கண்டுகொண்டு வருகிறதினுலே, அப்படிப்பட்ட நன்மையாகிற சர்வேஸ்வரனவர் முகிவில்லாத பக்தியைக் கொண்டு சினேகிப்படத் தக்கவரா யிருக்கின்றுரென்று காண்கிறுர் என்கிறதுக்குத் தப்பாது. இதிலே அறியவேண்டினதாவது: உண்டாயிருக்கலான பத்தியென்னப்பட்ட யாவும் முகிவில்லாத பத்தியென்று சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட முகிவில்லாத மோக்ஷவாசியாயிருக்கிறவர் தம்மிடத்திலே இருக்கவில்லையென்று காணும்போது, மோக்ஷவாசியாயிருக்கிறவர் தம்முடைய சத்தியின் அளவாக எத்தனை பத்தியுண்டாயிருக்கக்கூடுமோ, அத்தனை பத்தியைக்கொண்டு முடிவில்லாத நன்மையகிற சர்வேஸ்வரனை அவசியமாகச் சினேகித்து, அற்பமாகிலும் தப்பில்லாத பரம சுகத்தோடு முகிவில்லாமல் அவரை ஸ்தோத்

1. அன்பு (amor) 2. amicitiae, (amor. benevolentiae)
3. சுவ+அபேக்ஷா+பக்ஷம்: தன்னலம் கோரும் நட்பு. (a. concupiscentiae)

திரம் பண்ணுகிறு ரென்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினுலே மோக்ஷவாசியாயிருக்கிறவர் சகல நன்மையான சர்வேஸ் வரனைக் காணக்காண [1]தெகிட்டு இல்லாமல் திரித்தியுள்ளவரா யிருந்தாலும், இன்னம் அவரைக் காணக்காண வாதையில்லாத ஆசையா யிருக்கிருர் என்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது. அவ்வண்ணமே சர்வேஸ்வரனைப் பதினுயிரம் வருஷமாகப் பரம சுகத்தோடு பார்த்துக்கொண்டிருக்கிற மோட்ச வாசியானவர் அப்படிப்பட்ட தெரிசனத்திலே அற்பமாகிலும் தெகிட்டாமல் அந்த க்ஷணத்திலே தானே நவமாகச் சர்வேஸ்வரனைக் காண் கிறவர்போல எப்போதும் ஒருகண்டசீரான பரம சுகத்தை அனுபவித்துக்கொண்டு வருகிருரொழிய மற்றப்படியல்ல.

(2) இது தவிர, மோட்சவாசியானவர் தாம் பூமியிலே திரிந்த நாள்மட்டும் தமக்குத் தயாபரனுன கர்த்தரானவர் பண்ணின பலபல கிருபைகளைப் பார்த்துத் தமக்கு வந்த புண்ணிய விசாரங்களும் தம்மால் கேட்கப்பட்ட சுகிர்த வார்த்தைகளும், இதுகள் முதலான தம்மால் அடையப்பட்ட திவ்விய சகாயங்களைக் கண்முன்னே காண்கிறுப்போலே கண்டு வருகிருர் என்கிறதுக்குத், தயாபரனுன கர்த்தனை ஸ்தோத்திரம் பண்ணி, அப்படிப்பட்ட திவ்விய தோத்திர முண்டாகிறதுக்குத் தம்முடைய இடத்திலே இடமுண்டா யிருக்கிறதினுல், பரம சந்தோஷத்தை அனுபவிக்கிருர் என் கிறதுக்குத் தப்பாது. முன் சொல்லப்பட்ட திவ்விய சகாயங் கள் முதலான வேறே அனேகங் கிருபைகளைக்கொண்டு மோட்சத்தை அடைகிறதுக்கு முன்னே, மோட்சவாசியா யிருக் கிறவர் பூமியிலே திரிகிறநாள் மட்டும், தாம் பண்ணின பல புண்ணிய சரித்திரங்களினுலே கர்த்தனுக்கு ஒக்க நடந்து, அவருடைய ஸ்தோத்திரத்தை நிறைவேற்றினுர் என்கிறதுக் காக மிகவுஞ் சந்தோஷப்படுகிறு ரென்று கேட்கவேணுமோ? அப்படியே மோட்சவாசியானவர் தாம் பாடுபட்ட விசேஷ உபாதைகளும், அனுபவித்த கடின வஸ்தி நோவுகளும், கேட்ட ஈரமான தூஷணங்களும், சகித்த கனமான அவமானங்களும், விசேஷ ஆனந்தத்தையும், சுகத்தையும் தாம் அனுபவிக்கிற துக்கும், தாம் மிகுந்த தோத்திர வெகுமானத்துக்கும் பாத்திர மாயிருக்கிறதுக்கும் காரணமாயிருக்கிறதென்று பார்த்து, இது

1. திகட்டு (பா. வே.)

நிமித்தமாகத் தயாபரனுன கர்த்தனைக் கொண்டாடத்தக்க தாக எல்லாருக்கும் அவகாசமுண்டா யிருக்கிறதினுலே, மனுே வாக்குக்கு எட்டாததா யிருக்கிற ஆனந்தமானது மோட்சவாசி யிடத்திலே விளங்குமென்று அங்கீகரிக்கக்கடவோம்.

34.8 இம்மையில் பட்ட விசேஷத் துன்பத்திற்கு மறுமையில் விசேஷ இன்பம். இந்த அவசரத்திலே அறியவேண்டின ஒரு விசேஷத்தை நன்ருகத் தெளிந்து, ஆண்டவனுக்காகக் கஸ்தி வாதைக ளென்னப்பட்ட யாவை யும் அனுபவிக்கத்தக்கதாகத் துணியக் கடவோம். அதாவது: அவனவன் சர்வேஸ்வரன் முகத்தைப் பார்த்து, மனது பொருந்தி அந்தந்த விசேஷ கஸ்தி நோவுகளைப் பூலோகத் திலே சகித்துக்கொண்டு வந்தால். அதுக்கான விசேஷ சந்தோஷ சுகத்தை மோட்ச ராச்சியத்திலே அனுபவிப்பான் என்கிறதுக்குத் தப்பாது. இந்தப் பலனுனது, அவனவன் பண்ணிக்கொண்டு வருகிற தபசு நிமித்தமாகப் பிறக்கிற கஸ்தி வாதைகளினுலேயுஞ் சர்வேஸ்வரன் அனுப்புகிற நோவு, வியாதி, விசனங்களினுலேயும் மோட்சவாசிக்குப் பலிக்குமென்று சொல்லவேண்டி யிருக்கிறது. இந்தடைவிலே புண்ணிய வானுனவன், தனது சரீரத்தின் அவையவங்களிலே பட்ட வெட்டும் குத்தும் நிமித்தமாகப் பூலோகத்திலே அனுபவித்த விசேஷ நோவுகள் மோட்ச இராச்சியத்திலே அவர் விசேஷ சந்தோஷ சுகத்தை அனுபவிக்கிறதுக்கும் விசேஷ ரூபலா வர்ணியத்தைக் கொண்டிருக்கிறதுக்குங் காரணமாய் இருக்கு மென்று அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். ஆதலாலே, ஒரு அற்பமாகிலும் துக்கத்தை அனுபவிக்கமாட்டாத மோட்சவாசி யானவர் ஆண்டவனுக்காக இன்னம் அதிகமாய்ப் பாடுபட வில்லை என்கிறதினுலே நோவை அடையாதவருடைய மன சானது ஒரு விதமாக நோகுமென்று சொல்லலாயிருக்கிறது. இதன்றியே, பூலோகத்திலே திரிந்த புண்ணியவானுனவர் அதோ இதோ பலபல பாவங்களிலே விழத்தக்கதாக அவசரங் கள் உண்டாயிருக்கச்செய்தே, புண்ணியவானுனவன் பாவத் திலே விழாதவண்ணம் தயாபரனுன கர்த்தரானவர் விலகின கிருபையையும், பண்ணின பாவத்தைப் பொறுத்த தயவையும், இது முதலான வேறே அனேக திவ்விய சகாயங்களையும் மோக்ஷ ராச்சியத்திலே அவர் பார்க்கும்போது, சர்வேஸ்வரனை இடை

விடாமல் ஸ்தோத்திரம் பண்ணப்பண்ண ஊழியுள்ள காலத்திலே பிரயாசமில்லாமல் பரம சுகத்தோடே அவரை ஸ்தோத்திரம் பண்ணுவாரொழிய மற்றப்படியல்ல

**34.9 இம்மை மறுமை வணக்கத்திலும் பத்தியிலும் உள்ள வேறுபாடு.** இத்தறுவாயிலே பூமியிலேயும் மோட்சராச்சியத்திலேயும் சர்வேஸ்வரனைக் [1]கீர்த்தித்துப் பண்ணப்படுகிற ஸ்தோத்திரத்தின் மேரைகளுக்கு உண்டான வித்தியாசத்தைக் கண்டுபிடிக்கக்கடவோம். அதேதென்னில், பூலோகத்திலே திரிகிற புண்ணியாத்துமாக்களினாலே சர்வேஸ்வரனை உத்தேசித்துப் பண்ணப்படுகிற ஸ்தோத்திரமானது வேலையும் ஊழியமுமாயிருக்கிறதினாலே, அது அநேக பிரயாசைகஸ்திகளோடே கூடியிருக்குமொழிய மற்றப்படியல்ல. மோட்சவாசியினாலே சர்வேஸ்வரனைக் குறித்துப் பண்ணப்படுகிற தோத்திரமேதென்றால், சர்வேஸ்வரன் பொருட்டாகப் பண்ணப்பட்ட ஊழியத்துக்கும், வேலைக்கும் அது சம்பளமும் தெட்சணையுமாய் இருக்கக்கொள்ள, பரம சுகத்துக்கும் குறையற்ற சந்தோஷத்துக்கும் அது காரணமாய் இருக்குமொழியப், பிரயாசமும் கஸ்தியும் இலவலேசமானாலும் அப்படிப்பட்ட தோஸ்திரத்திலே உண்டாகலாமென்று சொல்லவும் கருதவும் கூடாது. (2) மோட்சவாசியாய் இருக்கிறவனாலே சர்வேசுரனைக் [1]கீர்த்தித்துப் பண்ணப்படுகிற தோஸ்திரத்திலே நம்மால் சொல்லப்பட்ட விசேஷ நன்மைகளெல்லாம், மோட்சவாசிகளினாலே சர்வேஸ்வரன் பேரிலே வைக்கப்படுகிற பத்தியிலே யோசிக்கக்கடவாய். அதேதென்றால், இவ் வுலோகத்திலே திரிகிற புண்ணியாத்துமாக்களுடைய தேவவிஷயக பத்தியாகிற வேலையானது பிரயாசத்தோடே கூடி இருக்கச்செய்தே, மோட்சவாசியினாலே சர்வேஸ்வரன் பேரிலே வைக்கப்படுகிற பத்தியானது தெட்சணையும் பலனுமாயிருக்கக்கொள்ள, அது பரிபூரண சுகத்துக்கும் திரித்தி கொடுக்கிற சந்தோஷத்துக்கும் காரணமாயிருக்குமொழிய மற்றப்படியல்ல.

**34.10. பிற மோட்சவாசிகளின் விசேஷ இன்பத்தால் மோட்சவாசிக்கு வரும் விசேஷ இன்பம்.** மோட்சவாசியானவர் பரமானந்த முதலான வரப்பிரசாதங்களை அனுபவிக்கிறதுக்கு நம்மால் சொல்லப்பட்ட காரணங்கள்

1. குறித்து 1. குறித்து.

தவிரக் கோடாகோடிகளாய் இருக்கிற மோட்சவாசிகளிடத்திலே திவ்விய கிருபையானது விளங்கி மனோவாக்குக்கு அகோசரமாயிருக்கிற மகிமைகளும் வரப்பிரசாதங்களும் அவர்களிடத்திலே இருக்கிறதென்று அந்தந்த மோட்சவாசியானவர் பிரத்தியட்சமாய்க் கண்டு வருகிறதுக்காக, அந்தந்த மோட்சவாசியானவர் விசேஷமான சந்தோஷத்தையும் சுகத்தையும் அனுபவித்துக்கொண்டு வருகிறதிலேதானே தயாபரனை கர்த்தனை தோஸ்திரம் பண்ணவும், அவர் பேரிலே கூடின மாத்திரம் பத்தியாயிருக்கவும் தமக்கு இடம்பண்ணிக்கொண்டு வருகிறாரொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே, கோடா கோடிகளாய் இருக்கிற மோட்சவாசிகளுடைய எண்ணப்படாத சந்தோஷ சுகங்களும் ஒவ்வொரு மோக்ஷவாசி அதிகமதிகமாகச் சந்தோஷப்படுகிறதுக்குக் காரணமாய் இருக்கிறதென்று சொல்லவேண்டியிருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. ஆனால் எண்ணப்படாத கோடாகோடிகளாய் இருக்கிற மோட்சவாசிகள் அனுபவிக்கிற பரமானந்த முதலான திவ்விய பிரசாதங்களிலே மிகுந்த ஏற்றக் குறைச்சல் உண்டாய் இருக்கச்செய்தே, கீழ்த்தரமாய் இருக்கிற மோட்சவாசியானவர், தமக்கு மிகவும் மேலான மோட்சவாசியினுடைய மகிமை என்னப்பட்டதாவையும் அளவறுத்திராமல் இருந்தால், அப்படிப்பட்ட மேலான மோட்சவாசி பேறுபெற்று அடைந்த வரப்பிரசாதங்களுக்குள்ளே கீழ்த்தரமாயிருக்கிற மோட்சவாசி எம்மாத்திரம் கண்டுகொண்டு வருகிறார், அவரால் காணப்பட்ட அம்மாத்திரனிமித்தமாக அவர் மிகவும் சந்தோஷப்பட்டுச் சர்வேஸ்வரனை ஸ்தோத்திரம் பண்ணுகிறதும் போறாமல், தம்முடைய புத்திக்கு எட்டாததாய் இருக்கிற மகிமையானது மேலான மோட்சவாசியிடத்திலே இருக்கிறதென்று அப்படிப்பட்ட கீழ்த்தரமாயிருக்கிற மோக்ஷவாசி அறிகிறதினால், கனமான சந்தோஷமாயிருந்து, அதிலே கூடச் சருவேசுரனைத் தாம் ஸ்தோத்திரம் பண்ணத்தக்கதாகத் தமக்கு இடம்பண்ணிக்கொண்டு வருகிறார் என்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே, அந்தந்த மோக்ஷவாசியானவர் தம்முடைய இடத்திலேயும் மற்றுண்டான மோக்ஷவாசிகளிடத்திலேயும் விளங்கி வருகிற திவ்விய கிருபையானது பரமானந்தத்தை அனுபவிக்கிறதுக்கும் சருவேஸ்வரனை இடைவிடாமல் தோத்திரம் பண்ணுகிறதுக்கும் காரணமாயிருக்கிறதும் தவிர, அனந்த ஞானமான கர்த்தரானவர்

மோக்ஷராச்சியத்தையும் பூலோகத்தையும், பாதாளத்தையும் ஆளுகிற மேரைமரியாதையிலே மிகவும் விளங்கி வருகிற அனந்த ஞான விமரிசையானதையும் தப்பில்லாக் கிரமத்தையும் அந்தந்த மோக்ஷவாசியானவர் பார்த்து, அவர் மிகவும் சந்தோஷப்படுகிறதுக்கும் கடவுளைக் கொண்டாடுகிறதுக்கும் அந்தத் தெரிசனமானது தானே காரணமாய் இருக்கிறது என்கிறதுக்குக் கணக்கில்லை.

**34.11.** மோட்சப் பிரகாசத்துக்குத்தக்க மனிதனுக்கு மோட்சமும், சம்மனசுக்களின் சபையில் இடமும். இதெல்லாம் வெளியாகும்படிக்கு அந்தந்த ஸ்தலத்துக்கடுத்த திவ்விய [1]சாசனத்தின் மேரையிலே சிறிது விசேஷங்களை வெளிப்படுத்தக்கடவோம். அதெப்படியென்றால், வேதப் பிரமாணத்தினாலே நம்மால் அறியப்பெற்ற சம்மனசுக்களுடைய [2]அர்ச்சியப் பிரபுத்துவங்கள் மூன்றாயிருக்கையிலே, ஒன்பது [3]விலாச சபைகளிலே அதுகள் பிரியும்போது மோக்ஷத்தை அடைகிற நரசீவன்களானதுகள், பண்ணின புண்ணியத்துக்குத் தக்க அளவாக, அந்தந்த சபையிலே கர்த்தரானவர் அந்தந்தச் சீவனுக்கு ஆன ஸ்தலத்தைக் கட்டளையிட்டருளுகிறார் என்கிறதுக்குத் தப்பாது. அப்படியே சம்மனசுக்களுடைய சபைகளானதுகள் தனித்தனியே பிரிகிறதுக்கு ஆன மேரையானது உண்டாயிருக்குமாப்போலே, அந்தந்த விலாச சபையிலே இடம் அடைந்திருக்கிற நரசீவன்களானதுகள் மோக்ஷ விஷயத்திலே ஏற்றக்குறைச்சலாய்ப் பிரிகிறதுக்கு அதுக்கான மேரை உண்டாயிருக்கிறதென்று அங்கீகரிக்கத் தக்கதாகும். இது காரணமாகச் சம்மனசுக்களுக்கு மாத்திரம் அடுத்த விசேஷ தேவ [4]கைங்கிரியமானது நரசீவன்களுக்கு ஏற்பிராது என்கிறதினால், அது மோக்ஷத்தை அடைந்த நரசீவன்களிடத்திலே காணமாட்டாதென்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனால், குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷானுபவத்தின் வகையைப் பார்க்கும் போது, அந்தந்தச் சபையிலே இடமடைந்த சீவனானது அந்தந்தச் சபைகளுக்குள்ளே அடங்கியிருக்கிற சம்மனசுக்களைப் போலே மோக்ஷப் பிரகாசத்தினாலே உயர்த்தப்பட்ட புத்தியுடைத்தானதுகளாய் இருந்து, மோக்ஷப் பிரகாசத்தின் ஏற்றக் குறைச்சலுக்குத் தக்கது தேவவிஷயக பிரத்தியக்ஷ

1. ஆளுகை 2. hierarchy 3. choirs 4. ஊழியம்

தெரிசனத்திலேயும் பரமானந்த அனுபவ மேரையிலேயும் நரசீவன்களானதுகள் சில சம்மனசுக்களுக்குச் சரியானதுகளாய் இருந்து, வேறே சம்மனசுக்களைக் காட்டிலும் அதிகப் பெருமை உள்ளவராயிருந்தாலும், மோக்ஷப் பிரகாசத்தின் ஏற்றக் குறைச்சலானது மாத்திரம் மோக்ஷானுபவத்தின் வித்தியாசத் துக்குக் காரணமாய் இருக்கிறதொழிய, உண்டாக்கப்பட்ட பொருள்களுக்குண்டான சுபாவமான பெருமையானது மோக்ஷானுபவத்துக்கு லவலேசமானாலும் உதவமாட்டாது. இது இப்படியிருக்கையிலே, தப்பில்லாக் கிரமத்தோடு மோக்ஷ ராச்சியத்தை ஆளுகிற கர்த்தரானவர் அந்தந்த மோக்ஷவாசி கொண்டிருக்கிற மோக்ஷப் பிரகாசத்துக்குத் தக்கது ஏற்றக் குறைச்சலான தெளிவோடு அந்தந்த மோக்ஷவாசியினாலே பிரத்தியக்ஷமாய் அவர் முழுதும் காணப்பட்டுத், தனது திவ்விய சுபாவ விஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்தினிமித்தமாக அந்தந்த மோக்ஷவாசியானவர் உண்டாக்கப்படலான பொருள்களை ஏற்றக் குறைச்சலாகக் காணத்தக்கதாகப் பண்ணுகிறார் என்கிறதுக்குத் தப்பாது. இந்த விஷயத்திலே விஸ்தாரப் பிரசங்கத்தை அபேக்ஷிக்கிறவன் நித்திய சீவன சல்லாபத்தின் [2]நாலாமஞ்சாம் சல்லாபத்தைப் பார்க்கக்கடவான்.

**34.12. மோட்சவாசிகள் புதிய விசேஷம் அறிவதால் புத்தின்பம் பெறுவர்.** ஆனால், அந்தந்த மோக்ஷவாசியானவர் சருவேசுரனிடத்திலே ஒருகண்டசீராய் எப்பொழுதும் கண்டு வருகிற பரம ரகசியங்கள் தவிர, அந்தந்த மோக்ஷவாசிக்கு அடுத்த சில விசேஷங்களைக் கர்த்தரானவர் நவமாக அறிவிக்கும் போது, இதிலே தப்பில்லாக் கிரமமானது மிகவும் விளங்கு மென்று சொல்லக்கடவோம். அதேதென்றால், சருவேசுரன் அறிவிக்கிற விசேஷமானது அநேக மோக்ஷவாசிகளுக்கு அடுத்த தாயிருந்தால், அவர்களுக்குள்ளே மேலான மோக்ஷவாசிக்குச் [1]சாக்ஷாத்து அறிவித்து, அவரைக்கொண்டு மற்றவர்களுக்கு ஒழுங்கு பரம்பரையாக ஒருத்தர் ஒருத்தரைக்கொண்டு அறியத் தக்க விசேஷத்தை அறியப் பண்ணுகிறாரொழிய மற்றப்படி அல்ல. இந்தக் கிரமமானது தேவகயிங்கரிய விஷயத்திலே சம்மனசுக்களுக்குள்ளே மிகவும் விளங்கி வருகிறது என்கிற துக்குத் தப்பாது. சகல மோக்ஷவாசிகளினாலே காணப்படுகிற தப்பில்லாத இப்படிப்பட்ட கிரமமானது அவர்களெல்லாரும்

1. நேராக 2—8 சல்லாபங்கள்

கனமான சந்தோஷத்தை அடைந்து இந்த விதமாக ராச்சியம் பண்ணுகிற கர்த்தனைக் குறையற்ற பக்தியோடு கொண்டாடு கிறதுக்குக் காரணமாகும். இந்தடைவாக அந்தந்த விசேஷ காலங்களிலே அந்தந்த மோட்சவாசிகளுக்கு விசேஷ சந்தோஷத்தைத் தயாபரனை கர்த்தரானவர் பண்ணுகிறது என்கிறது சகல மோக்ஷவாசிகளிடத்திலே தேவவிஷயக பத்தியையும் ஸ்தோத்திரத்தையும் பண்ணிவிக்கிறது என்கிற துக்குச் சந்தேகமில்லை. அதெப்படியென்றால், மோக்ஷவாசி களுக்குள்ளே யாதொருத்தன் பூலோகத்திலே திரிகிறபோது தர்ம விதியை விதிக்கிற 'பிரபந்தங்கள் முதலியன புண்ணிய நடக்கைகளை உண்டாக்கினால்' அப்படிப்பட்ட பிரபந்தங்கள் நிமித்தமாகப் பூலோகத்திலே திரிகிற பேர்களுக்குள்ளே யாதொருத்தன் புண்ணியம் பண்ணினால், அப்படிப்பட்ட புண்ணியம் பண்ணுகிறதிலே அதுக்கு உதவி பண்ணின மோக்ஷ வாசிக்கு விசேஷ சந்தோஷம் உண்டாகிறதென்கிறது, தயாபர னை ஆண்டவனுடைய கிருபையுள்ள திருவுளத்துக்கு ஏற்றிருக்கிறதென்று சொல்லத்தகும். இதன்றியே, நீதிபரனை கர்த்தரானவர் வழிப்போக்கராய் இருக்கிற மனுஷரை நடத்துகிற கிரமம் ஏதென்று மற்ற மோக்ஷவாசியானவர் பார்த்து அது நிமித்தமாக மிகவும் சந்தோஷப்பட்டுக், கர்த்தனை ஸ்தோத்திரம் பண்ணுகிறாரென்று சொல்ல வேண்டியிருக் கிறது. இந்த வர்த்தமான முதலான வேறே சில வர்த்தமானங் களையும் கர்த்தன் கிருபையினாலே வருகிற பாடத்திலே எவ்வள வாகிலும் வெளிப்படுத்த வருந்துவோம்.

முப்பத்திநாலாம் பாடம் முற்றும்.

(கிரந்தம்) நாநுமிஎ *

## முப்பத்து ஐந்தாம் பாடம்

**3.51. நல்லோரையும் தீயோரையும் கடவுள் இவ் வுலகில் நடத்துவது ஞானிகளுக்கே விளங்குவதில்லை.** அனந்த ஞான சுரூபியா யிருக்கிற சருவேஸ்வரனானவர் பூலோ கத்திலே திரிகிற பிரசைகள் முதலான பேர்களை நடத்து கிற மேரை மரியாதைகளுக்குள்ளே பலபல பரமரகசியம் உண்டு. அதெப்படியென்றால், ஞாயமுள்ள அடைவாக சகலத்

8. நூல்களை 4. +ஆனால் (பா. பே:) 337*

தையும் நடத்துகிற ஆண்டவரானவர் தமக்கு உகந்த பிள்ளைகளாகிற புண்ணியாத்துமாக்களாய் இருக்கிற பேர்களைக் கரையேற்றுகிற உபாயங்களையும் சுவாமித்துரோகிகளா யிருக்கிற பாவிகளை நடத்துகிற வகைகளையும் விசாரிக்குமிடத்தில் அதுகள் நிலையுங் கரையுங் காணாத சமுத்திரம்போலே பூலோகத்திலே திரிகிற பரம ஞானிகள் முதலாய் அதுகளிலே நிலைகொள்ளாமல் அதுகளைக் கடக்கவும் அளவறுக்கவும் மாட்டார்கள். அதேதென்றால், கர்த்தனுக்கு உகந்த பிள்ளைகளாகிற பேர்கள் எண்ணப்படாத வியாதி முதலான நோவுகளை அனுபவிக்கத், தாரித்திர முதலான நிர்ப்பாக்கியங்களோடேகூட எறிந்து போட்டதுகளாய்ப் பூலோகத்திலே திரியப், பாவிகள் அவர்களைக் கடின உபத்திர நிர்ப்பந்தங்களைப்படுத்த, இதெல்லாம் புண்ணியாத்துமாக்களா யிருக்கிற பேர்கள் கரையேறுகிறதுக்குச் செவ்வையான வழியாயிருக்கிறது என்கிறது பூலோகத்திலே திரிகிற புத்திமான்களுக்கு எட்டாததுமாய், அவர்களால் கண்டுபிடிக்கப்படாததுமாய், இருக்கிற பரமரகசியம் என்று சொல்லத்தகும். இதுக்கு [1]விபரீத அடைவாக மகா மகாப்பட்ட பாவங்களினாலே அருவருக்கப் படத்தக்க சுவாமித் துரோகிகளான பேர்கள் இடைவிடாமல் கன பாவங்களைப் பண்ணிக்கொண்டு வருகிறதினால், சகலமான ஆக்கினை முதலான உபாதைகளுக்கு அவர்கள் பாத்திரங்களாய் இருக்கச்செய்தே, அப்படிப்பட்ட பாவிகள் சரீர ஆரோக்கியத்தின் சுகத்தோடேகூடத் தீர்க்காயிசு உள்ள பேர்களாயிருக்க, பரிபூரண அயிசுவரியத்தோடேகூடச் சகல போக பாக்கியங்களை அனுபவித்துக்கொண்டு வர, எல்லாரும் அவர்களைச் 'செய, செய' என்று சகல வெகுமானங்களோடே கூடப் புகழ்ந்துவர, இதெல்லாத்தையும் விசாரிக்கும்போது, பூமியிலே திரிகிற புத்திமான்களுக்கு அது நிலையாததுமாய்க் கரை காணாத கடலுமாய் இருக்கிறதுந்தவிர, ஈடேறப் போகிற புண்ணியாத்துமாக்கள் முதலாய் இடறுகிறதுக்கு விஷயமான இடமுமாய், அவர்கள் சறுக்கி விழுகிறதுக்கு வழுக்கலுள்ள வழியுமாய் இருக்கிறதென்று அனுபவசித்தியினாலே கண்டு பிடிக்கலா யிருக்கிறது. இதன்றியே, பாவ மென்னப்பட்டயாவையும் வெறுத்துக்கொண்டு வருகிற நீதி சுரூபமான கர்த்தரானவர், சகல பாவங்களை விலக்கிறதுக்கு வல்லவராய்

1. வேறான முறையில்

இருக்கச்செய்தே, மகாமகாப்பட்ட 'பாவிகளுடைய பலவித மான சரித்திரங்களை வரப்பண்ணுமவிருக்கச் செய்யாது அது கள் வருகிறதிலே கர்த்தரானவர் ²உபேக்ஷை பண்ணுகிற தினால், அங்கங்கே தம்முடைய திவ்விய தோத்திரத்தைப் பண்ணுகிறவர்களுடைய வாயானது அடைபட, அனேகம் பேர்கள் நன்மையிலே நிலைகொள்ளாமல் நவமான பாவங் களிலே விழ, இத்தொகைப்பட்ட வேறே அனேகம் விசேஷ வர்த்தமானங்கள் வரட்டும் என்று சொல்லிக் கர்த்தரானவர் பார்த்துக்கொண்டிருக்கிறது என்கிறது. மகாமகாப்பட்ட புத்தி மான்களாய் இருக்கிறபேர்கள் திக்குந் திசையும் அறியாமல் முழுதுந் திகைத்து மயங்கிறதுக்குக் காரணமாய் இருக்கிற தென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை.

35.2 மோட்சவாசிகள் இவ்வுலகப் பராமரிப்பை நன்கு உணர்கிறார்கள். இதெல்லாம் பூமியிலே வழிப்போக்க ராய்த் திரிகிற புத்திமான்களுக்கு மிகவும் மறைபொருளாய் அவர்களாற் கண்டுபிடிக்கப்படாத பரமரகசியமுமா யிருக்கச் செய்தே, மோட்சப் பிரகாசத்தினாலே உயர்த்தப்பட்ட புத்தி யுடைத்தான மோட்சவாசியானவர் இதெல்லாத்தையும் மிகுந்த தெளிவோடு பார்த்து, அதிலே பேரம் வழி ஏதென்றும், அதுக்குக் கடைசியான பிரயோசனம் ஏதென்றும் சந்தேகமற்ற நிச்சயத்தோடே கண்டுபிடிக்கிறதினாற், சொல்லப்படாத சந்தோ ஷத்தை அனுபவித்து, அதெல்லாத்திலும் கர்த்தனுடைய கரை காணாத கிருபையையும் பரம சாமார்த்தியத்தையுங் குறை யற்ற நீதியையும், இடைவிடாமல் தோஸ்திரம் பண்ணத்தக்க தாக புண்ணியாத்துமாக்களாய் இருக்கிற் பேர்கள் தமக்கு இடம்பண்ணிக்கொண்டு வருகிறார் என்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே, புண்ணியாத்துமாக்களா யிருக்கிற பேர்கள் பூலோகத்திலே பண்ணின பாவங்களுக்காக உத்தரிக்கிற துக்கும், நவமான பாவங்களிலே விழாததுக்கும், வியாதி முதலான நோவுகள் உபாயங்களாய் இருக்கிறதென்று மோட்ச வாசியானவர் பிரத்தியக்ஷமாய்க் கண்டு, கர்த்தனுக்கு உகந்த பிள்ளைகளா யிருக்கிற பேர்கள் தேவவிஷயக புத்தி, பொறுமை முதலான தர்ம குணங்களிலேயுங், குறைபற்ற பாக்கியமாகிற பரமானந்த முதலான நன்மைகளிலேயும் அபிவிருத்தியை யடை

1. பாவங்களுடைய (பா) 2. புறக்கணிப்பு

கிறதுக்கு வியாதி நோவு முதலான கிர்ப்பந்தங்கள் என்னப் பட்ட யாவுங் காரணமா யிருக்கிறதென்று அற்பமாகிலுஞ் சந்தேகமில்லாமல் அறிந்துகொண்டிருக்கிறார். ஆதலாலே, புண்ணியாத்துமாக்களா யிருக்கிற பேர்கள் கஸ்தி உபாதைகளை அனுபவிக்கிறதினாலே கர்த்தருடைய அளவறுக்கப்படாத கிருபையைக் குறையற்ற பத்தியோடு கொண்டாடுகிறார் என் கிறதுக்குத் தப்பாது. பாவிகளை ஆண்டவன் நடத்துகிற மேரையோ வென்றால், அதிலே திவ்விய கிருபையையும், நீதி யையும் மோட்சவாசியானவர் கண்டுபிடித்து, அதுகளைத் துதிக் கிறதுந்தவிர, ஆண்டவன் சகல பாவங்களை விலக்காத மேரையி னிமித்தமாக அவருடைய பரம சாமார்த்தியத்தை யிடை விடாமல் அவர் கொண்டாடுகிறதுக்கு உண்டாயிருக்கிற அவகாசத்தைக் கண்டுகொண்டு வருகிறார்.

**35.3 பாவத்தை விலக்காமல் உயர்ந்த நன்மை விளைவிக்கிறார் என்று மோட்சவாசிகள் உணர்கின்றனர்.** இதெல்லாம் வெளியாகும்படிக்கு உண்டான விசேஷங்களைத் தனித்தனியே வெளிப்படுத்தக்கடவோம். அதெப்படியென்றால், கர்த்தரானவர் தமக்கு எண்ணப்படாத துரோகங்களைப் பண்ணிக்கொண்டு வருகிற பாவியானவன் அயிசுவரியங் களோடே கூடப் போக பாக்கியங்களையுஞ் சரீர ஆரோக்கிய சுகத்தையும் அனுபவிக்கத் தக்கதாகக் கட்டளையிடுகிறதிலே தம்முடைய கிருபையை விளங்கப்பண்ணுகிறாரென்று மோக்ஷ வாசியாயிருக்கிறவர் கண்டுகொண்டு வருகிறார். பின்னையும், பாவியானவனுக்குத் தீர்க்காயிசு உண்டாகத்தக்கதாகத் கர்த்த ரானவர் கட்டளையிடும்போது, பாவியானவன் பாவத்தை விட்டுத் தர்மவழியிலே திரும்ப வேணுமென்கிற திவ்விய பொறுமையுள்ள திருவுளத்தை மோட்சவாசியா யிருக்கிறவர் கண்டுகொண்டு வருகிறார் என்கிறதுக்குத் தப்பாது. இதன்றியே, பாவியானவனைக் கர்த்தரானவர் நரகத்திலே தள்ளப்போகிறார் என்றிருக்கையிலே, பாவியானவன் சில அற்பப்போக பாக்கியங்களை அனுபவிக்கிறது என்கிறது கர்த்த ருடைய குறையற்ற நீதியுள்ள திருவுளத்துக்கு ஏற்றிருக்கிற தென்று அங்கீகரிக்கக்கடவோம். இதுதவிரக், கர்த்தரானவர் தமக்குப் பகையாயிருக்கிற பாவிகளுக்கு பலபல உபகாரங் களைப் பண்ணுகிறதினால், தமது அனந்த கிருபையை விளங் கப்பண்ணுகிறார் என்கிறதுக்குத் தப்பாது. இந்தடைவாக

மகாமகாப்பட்ட பாவங்களை அனந்த ஞானமான கர்த்த ரானவர் சகல உபாயங்களினாலே விலக்காத பேரையானது பத்தும்பத்தாய் விசாரிக்கப்பட்டால், அதிலே அவருடைய பரம சாமார்த்தியத்தைக் கண்டுபிடிக்கலாயிருக்கிறது என் கிறதுக்குச் சந்தேகமில்லை. அதேதெனன்றால், பாவியானவன் கர்த்தனுக்கு உகந்த பிள்ளையாயிருக்கிறவனை எண்ணப் படாத வாதைகளைப் படுத்துகிறதினால், புண்ணியவானானவன் தேவவிஷயக பத்தி பொறுமை முதலான வேறே அனேகந் தர்ம குணங்களை இவ்வுலகத்திலே அடைந்து, மோட்சராச்சி யத்திலே பரமானந்த முதலான குறையற்ற நன்மைகளுடைய அபிவிர்த்தியை அடைவான் என்கிறதுக்குச் சந்தேகமில்லையே. ஆதலாலே, தப்பில்லாக் கிரமத்தோடு சலத்தையும் நடத்துகிற கர்த்தரானவர், தாம் சகல உபாயங்களைக்கொண்டு விலக்காத பாவத்தில்நின்று அனேக நன்மைகளைப் பிறப்பிக்கிறதிலே தம்முடைய திவ்விய சமார்த்தியத்தை விளங்கத்தக்கதாகப் பண்ணினாரென்று சொல்லத்தகும். ஆகையாலே, பாவத்தைச் உபாயங்களைக்கொண்டு விலக்கிறதைக் காட்டிலும் அப்படிப் பட்ட விதமாக விலக்காத பாவத்திலே நின்று நன்மை பிறப் பிக்கிறதென்கிறது பரம சாமார்த்தியமான திவ்விய திருவுளத் துக்கு அதிகமாக ஏற்றிருக்கிறது என்று அங்கீகரிக்கக் கடவோம். இதிலே விஸ்தாரப் பிரசங்கத்தை அபேக்ஷிக் கிறவன் தூஷணத் திக்காரத்தின் இருபத்திரண்டாம் பாடத்தைப் பார்க்கக்கடவான். ஆனால், பூலோகத்தைக் கர்த்த ரானவர் நடத்துகிற வகைகளை விசாரிக்கும்போது, அது களுக்குள்ளே அனேக ஞாயமுள்ள மேரையானதுகள் லோகத் திலே திரிகிற புத்திமான்களாலே கண்டுபிடிக்கப்படாத பரமரகசியங்களாய் இருக்கச்செய்தே, மோட்சப் பிரகாசத் தினாலே உசத்தப்பட்ட புத்தியுடைத்தான மோட்சவாசி யானவர் அதுகளை மிகுந்த தெளிவோடு கண்டிருந்து, அது களிலே கர்த்தனுடைய கரைகாணாத கிருபையையும், குறை யற்ற நீதியையும் பரம சாமார்த்தியத்தையும் மிகுந்த ஆச்சரியத் தோடுகூட இடைவிடாமல் தோஸ்திரம் பண்ணத்தக்கதாகத் தமக்கு இடம் பண்ணிக்கொண்டு வருகிறாரொழிய மற்றப்படி அல்ல.

**35.4.** நரகத்தின் பொருத்தத்தையும் நீதியையும் உணர்கின்றனர். இந்தடைவாகப் பாதாளங்களிலே சர்வேஸ்

வரன் நடத்துகிற மேரை மரியாதையை மோட்சவாசியானவர் பார்த்து, அதிலே சர்வேஸ்வரனுடைய கருணையும் குறையற்ற நீதியும் பரம சாமார்த்தியமும் மிகவும் விளங்கிவருகிறதென்று கண்டு வருகிறதினால், மிகவும் அவர் சந்தோஷப்பட்டு அதிலே தானே கர்த்தனைக் கொண்டாடத்தக்கதாக இடம் பண்ணிக் கொண்டு வருகிறாரொழிய மற்றப்படியல்ல. அதெப்படியென்று தனித்தனியே ஆராய்ந்துகொண்டு வெளிப்படுத்தக்கடவோம். நரகத்திலே உபாதைகளை அனுபவிக்கிற பிசாசுகள் முதலான பாவிகள், கர்த்தனுக்குப் பண்ணின கனமான துரோகங்களைப் பார்க்கும்போது, அப்படிப்பட்ட துரோகங்கள் நிமித்தமாக நீதிபரனான கர்த்தரானவர் பிசாசுகள் முதலான பாவிகளை முழுதும் [1]க்ஷயமாய்ப் போகப்பண்ணினாலும், அல்லது அப்படிப் பட்ட சுவாமித் துரோகிகள் அனுபவித்துக்கொண்டு வருகிற கஸ்தி முதலான உபாதைகளைக் காட்டிலும் இன்னம் கனமான நோவுகளுடைய அனுபவத்தை அவர்களுக்குக் கர்த்தரானவர் கட்டளையிட்டருளினாலும், கர்த்தன் பேரிலே இலவசமானாலும் அநியாயத்தை ஆரோபிக்கிறதுக்கு அவகாசமில்லை ஆதலாலே, தயாபரனான கர்த்தரானவர் நரகத்திலே இருக்கிற சுவாமித் துரோகிகளுக்கு முழு [2]நரகத்தையும் அதிகமான கஸ்தி உபாதைகளையும் [3]கட்டளையும் கட்டளையிட்டருளாமல் இருக்கிறதிலே தானே மோட்சவாசியாய் இருக்கிறவர் தயாபரனான கர்த்தனுடைய கிருபையைக் கண்டுபிடித்துக் கர்த்தனைக் கொண்டாடுகிறார் என்கிறதுக்குத் தப்பாது.

இதன்றியே, வெகுமானத்துக்குப் பாத்திரமாயிருக்கிற மகிமையுள்ளவனை [3]அவகீர்த்திச்சு அநியாயமாகப் பண்ணப் படுகிறநிந்தையானது குற்றமாய் இருக்கும் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. அப்படிப்பட்ட குற்றத்தின் பொல்லாப்பையும் அநியாயத்தையும் அளவறுக்க வேணுமானால், நிந்திக்கப்பட்டவனுடைய மகிமையின் பிரமாணமாக அந்தக் குற்றத்தின் அனியாயமானது கொஞ்சமும் அதிகமுமாய் இருக்கிறதென்று சொல்லவேண்டி இருக்கச்செய்தே, அனந்த மகிமையுள்ள சகல நன்மையான கர்த்தனைக் குறித்துப் பாவிகளினாலே பண்ணப் படுகிற பாவமாகிற குற்றமானது முடிவில்லாத பொல்லாப்பும் அநியாயமுமாய் இருக்கிறதென்று சொல்லவேண்டி இருக்கிறது.

1. பாழாய் 2. நாசத்தை (பா. பே.) 3. இகழ்ந்து

அப்படிப்பட்ட முடிவில்லாத அனியாயத்தைப் போக்கடிக்கத்தக்க ஸ்தலமாகிற பூமியிலே பாவியானவன் அத்தைப் போக்கடியாமல், அந்தப் பாவத்தோடே பாவியானவன் [1]பரலோகத்தை அடையும்போது, பரலோகமானது அவனவன் பண்ணின தருமத்துக்கு ஆன பலனை அனுபவிக்கிறதுக்கு மாத்திரம் ஏற்ற ஸ்தலமாய் இருக்கக்கொள்ள, முகிவில்லாத பாவத்தோடே பரலோகத்தை அடைந்த பாவியானவன் அப்படிப்பட்ட முகிவில்லாத குற்றத்துக்குச் சரியாக முகிவில்லாத காலத்திலே ஆக்கினை அனுபவித்துக்கொண்டு வருகிறது என்கிறது குறையற்ற நீதிக்கு ஏற்றிருக்கிறது என்கிறதுக்குச் சந்தேகமில்லை. இது காரணமாக நரகத்திலே பாவிகளானவர்கள் என்றென்றைக்கும் நிற்கத்தக்க கஸ்தி உபாதைகளை அனுபவிக்கிறார்களென்றும், அப்படிப்பட்ட நரகத்திலே மோட்சவாசியானவர் தாம் விழாதபடிக்குத் தயாபரனான கர்த்தரானவர் விலக்கினாரென்றும் பார்த்துக்கொண்டிருக்கிறதினால், கர்த்தனுடைய குறையற்ற நீதியையும் கரைகாணாத கிருபையையும் பழுதற்ற பத்தியோடேகூட அவர் துதித்துக்கொண்டு வருகிறார். இது தவிரச், சர்வேஸ்வரனை உத்தேசித்து ஒன்றுக்கும் ஆகாத எறிஞ்சுபோட்ட பொருளாகிற பிசாசும், மனுஷனானவனும் ஆங்காரத்தினாலே உத்தம பொருளான சர்வேஸ்வரனுக்கு நிந்தையாகப் பாவத்தைப்பண்ணி, உன்னதமான மோட்சத்தைப் போக்கடித்தபோதே, சகல ஸ்தலங்களைக் காட்டிலும் கீழ்த்தரமான ஸ்தலமாகிற பாதாளத்திலே எண்ணப்படாத கஸ்தி உபாதைகளைத் துரோகியாயிருக்கிற பிசாசும மனுஷனும் அனுபவித்துக்கொண்டு வருகிறதுக்காகக் கர்த்தனுடைய குறையற்ற நீதியை மோட்சவாசியானவர் கொண்டாடத்தக்கதாக அவகாசம் உண்டாயிருக்கிறது என்று சொல்லத்தகும்.

**35.5.** இருட்டு, உத்தரிக்கிற ஸ்தலங்களின் பொருத்தமும் அவர்களுக்குத் தெரிகிறது. இப்படிப்பட்ட நரகத்திலே கர்த்தனுடைய குறையற்ற நீதியும், அனந்த தயையும் விளங்கி வருகிறதென்று சொல்லப்படுமாப்போலே சென்மப் பாவத்து நிமித்தமாக மோட்சம் இழந்து போன சேதத்தின் ஆக்கினையைச் சீவனானதுகள் அனுபவிக்கும் ஸ்தலத்திலேயும்

1. மறுவுலகு

புண்ணியாத்துமாக்களானதுகள் அற்பப் பாவத்துக்கும் பொறுக்கப்பட்ட தன் குற்றங்களுக்குத் முழுதும் உத்தரிக்கத் தக்கதாக [1]இந்திரிய கஸ்தி உபாதைகளைச் சிறிதுநாள் அனுபவிக்கிற ஸ்தலத்திலேயும் விளங்கி வருகிற திவ்விய நீதியையும் கிருபையையும் மோட்சவாசியானவர் இடைவிடாமல் கொண்டாடுகிருர் என்று யோசிக்கக்கடவோம். கடைசியாய், நரகத்திலே விழுந்த பாவிகள் பூலோகத்திலே பண்ணின எண்ணப்படாத விதமுள்ள பாவங்களுக்காக எண்ணப்படாத விதமுள்ள கஸ்தி நோவுகளைப் படும்போது, அங்கங்த விசேஷ பாவத்துக்காக அந்தந்த விசேஷமான ஆக்கினையைப் பாவியானவன் அனுபவிக்கிருனே, அப்படிப்பட்ட விசேஷ ஆக்கினை அனுபவிக்கிறதிலே கர்த்தனுடைய பரம சாமார்த்தியமானது விளங்கி வருகிறதென்று மோட்சவாசியானவர் மிகுந்த சந்தோஷத்தோடு பார்த்துக்கொண்டிருக்கிறதினுல், அனந்த ஞானமான கர்த்தனுடைய பரம சாமார்த்தியத்தையும் தப்பில்லாத விமரிசையையும் இடைவிடாமல் தோத்திரம் பண்ணிக்கொண்டு வருகிருரென்று அங்கீகரிக்கக் கடவோம்.

**35.6. மோட்சத்தைப் பற்றிய வேதவாக்குகள்.** இற்றைவரைக்கும் நம்மால் பண்ணப்பட்ட பிரசங்கமானது பத்தும்பத்தாய் விசாரிக்கப்பட்டால், தண்ணீராலே நிரப்பப்பட்ட கழற்சிக் குழியினுலே கரைகாணுத கடலானது காட்டப்பட்ட மேரையாக மோட்சவாசியானவர் அனுபவித்துக் கொண்டு வருகிற மனோவாக்குக்கு எட்டாததாயிருக்கிற குறையற்ற பாக்கியம் என்கிற மோக்ஷத்தின் அடைவானது நாம் பண்ணின பிரசங்கத்தினுலே எவ்வளவாகிலும் காட்டப்பட்டுதென்று சொல்லத்தகும். இனி முகிந்த தறுவாயிலே மோட்சத்தின் மகிமையானது வர்ணிக்கப்படச் செய்தே, தேவோக்கித்த வேதமானது [2]சில வாக்கியங்களைக்கொண்டு அதினுடைய வர்ணிப்பை நிறைவேற்றிக்கொண்டு வருகிறதென்று கண்டு வருகிருேம். அந்த வாக்கியங்களானதுகள் [3]உபோத்காத அலங்காரத்தின் மேரையாகப் பிரயோகிக்கப்பட்ட அர்த்தத்தைக் கிரகியாமல், அத்தாலே கண்டுபிடிக்கத் தக்க ரகசிய அர்த்தமானது எல்லாருக்கும் வெளியாகும்படிக்கு அந்த வாக்கியங்களுடைய தாற்பரியமானது இன்னதென்று வெளிப்

1. poena sensus (sensible pain) 2. சிலது (பா. பே) 3. உருவகம்

படுத்தக்கடவோம். அதெப்படியென்றல், மோக்ஷமானது வர்ணிக்கப்படும்போது, 1. 'பட்டணத்தினுடைய பொன்னுலே கட்டப்பட்ட கோட்டைகளும், 2. வச்சிர முதலான மாணிக்கங்களினுலே உண்டாக்கப்பட்ட கதவுகளும், 3. அதுகள் ஒருக்காலும் அடைபடுகிறதில்லை யென்றும், 4. கர்த்தனுடைய சன்னதியிலே ஸ்படிகமயமான சமுத்திரம் உண்டாயிருக்கிற தென்றும், 5. பலபல பத்திராசனங்களிலே இருக்கிற முடி பொறுத்த ராசாக்கள் ஆண்டவனை இடைவிடாமல் ஸ்தோத்திரம் பண்ணுகிறார்க ளென்றும், பிரகாசமாய் இருக்கிற வெள்ளைச் சட்டைகள் தொட்டிருக்கிறார்க ளென்றும், அப்படிப்பட்ட பேர்கள் செயத்துக்கு அடையாளமானதுகளைக் கையிலே கொண்டிருக்கிறார்க ளென்றும், 6. சம்மனசுவின் கைங்கிரியத்தினுலே மிகவும் பரிமளித்திருக்கிற தூபாதிகள் கர்த்தன் சன்னதியிலே ஏறுகிற தென்றும், 7. அவ்விடத்திலே இருக்கிற பேர்கள் ராத்திரி போசனத்தைப் பண்ணுகிறார்கள் என்றும், 8. அவர்களுக்குக் கர்த்தரானவர் தாமே கச்சைக் கட்டிக்கொண்டு அவரவரண்டையிலே நடக்கிறவராகப் பரிமாறுகிறு ரென்றும், 9. அவ்விடத்திலே மிகுந்த பிரகாசத்தோடே பகலானது விளங்கி வருகிறதொழிய, ராத்திரியின் அந்தகாரமானது ஒருக்காலும் அதிலே பரம்பமாட்டாதென்றும், 10. இப்படி அலங்கரிக்கப்பட்ட மோக்ஷமாகிற பட்டணமானது உசந்த பருவதத்தின் மேலே ஸ்தாபிக்கப்பட்ட [1]சதுராகாரமாய் இருக்கிற தென்றும், [2]இத்தொகைப்பட்ட வேறே அனேக வாக்கியங்களானதுகள் குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷமானது இப்படிப்பட்ட தென்று வர்ணிக்கப்பட்டு வருகிறதிலே, தீர்க்கதரிசிகளாய் இருக்கிறவர்களினுலே சர்வேசுரனுடைய திவ்விய திருவுளத்தின் கட்டளைப்படியே பிரயோகிப்பட்டதுகள் என்று கண்டுகொண்டு வருகிறோம்.

35.7. உருவகமாக இவற்றைப் பொருள்கொள்ள வேண்டும். இதிலே அறியவேண்டின மூன்று ரகசிய விசேஷங்களுண்டு. அதிலே இந்த வாக்கியங்களுடைய தாற்பரியமானது தெளியப்பட்டு, அப்படித் தெளியப்பட்ட தாற்பரியத்தினுலே மோக்ஷபாக்கியம் இன்னதென்று கண்டுபிடிக்கிறதென்கிறது அறியத்தக்க இரண்டு பரம ரகசியமாகும். கடைசியாய் மோக்ஷம் இன்னதென்று நிரூபிக்கிறதிலே

1. சதுர+ஆகாரம் (வடிவம்) 2. காட்சி. 21 : 9 முதலியன

இப்படிப்பட்ட வாக்கியங்கள் பிரயோகிக்கப்படுகிறதுக்குக் காரணமேதென்று அறியத்தக்க மூன்றும் விசேஷமாகும். இதெல்லாம் தனித்தனியே எடுத்துக்காட்டி எல்லாருக்கும் எவ்வளவாகிலும் வெளியாகும்படிக்கு வருந்தக்கடவோம். மோக்ஷ நிரூபணத்திலே நம்மால் சொல்லப்பட்ட வாக்கியங்கள் முதலான வேறே அநேக வாக்கியங்களை விசாரிக்குமிடத்தில், அதுகளெல்லாம் உபோத்காத அலங்கார மேரையாகப் பிரயோகிக்கப்பட்டதினால் அதுகளுடைய [1]சத்தங்களானதுகள் கேவலம் தோற்றுவிக்கிற அர்த்தத்தைக் கிரகியாமல் அதுகளுடைய தாற்பரியத்தினாலே உத்தேசிக்கப்படுகிற அர்த்தத்தைக் கண்டுபிடிக்கக் கடவோம். 1. அவ்வண்ணமே, பூலோகத்திலே காணப்பட்ட மண் மயமாயிருக்கிற பொன் முதலான மாணிக்கங்கள் மோக்ஷராச்சியத்திலே உண்டாயிருக்கிறதென்று சொல்லவும் எண்ணவும் கூடாது என்றிருக்கச் செய்தே, மோக்ஷ பட்டணத்தைச் சூழ்ந்திருக்கிற மதில்களானதுகள் பரிசுத்த தங்கத்தினாலே உண்டாக்கப்பட்டுது என்கிற வாக்கியத்துக்கு அபிப்பிராயமாவது: இங்கேயும் அங்கேயும் உண்டாயிருக்கிற அயிசுவரியத்தின் மேரையைப் பார்க்கும்போது, பூலோகத்திலே இருக்கிற அயிசுவரிய திரவியம் என்னப்பட்ட யாவையும் அருவருக்கத்தக்க துர்க்கந்தச் சேற்றுக்கும் எறிந்துபோடத்தக்க மண்ணுங்கட்டிக்கும் சரியாயிருக்கிறதென்று எண்ணப்படத் தக்கதாய் இருக்கையிலே, மோக்ஷத்திலே விளங்கியிருக்கிற அயிசுவரிய திரவியமானது ஆயிர மாற்றுள்ள பரிசுத்த தங்கத்துக்குச் சமானமானதாய் இருக்கிறதென்று சொல்லவேண்டியிருக்கிறது. ஆகையாலே, அங்கேயும் இங்கேயும் இருக்கிற அயிசுவரியம் இரண்டுக்கும் உண்டாயிருக்கிற வித்தியாசமானது முன்சொல்லப்பட்ட வாக்கியத்தினாலே தோற்றுவிக்கப்படுகிறதொழிய, மோக்ஷராச்சியத்திலே மண்ணுயிருக்கிற பொன்னானது உண்டாயிருக்கிறதென்று சொல்லப்படுகிறதில்லை. அப்படிப்பட்ட மேலான அயிசுவரியத்தை மோக்ஷவாசிகள் எல்லாரும் குறையற்ற பிரகாரமாய் அனுபவித்து அத்தாலே எல்லாரும் சூழ்ந்திருக்கப்பட்ட பேர்கள் போலே இருக்கிறார்களென்று காட்டவேணும் என்கிறதுக்காக மோக்ஷ பட்டணத்தைச் சூழ்ந்திருக்கிற மதிலானது பரிசுத்த தங்கத்தினாலே உண்டாக்கப்

1. சொற்கள்

பட்டுதென்று சொல்லப்பட்டுதொழிய, மோக்ஷ ராச்சியத்திலே இப்படிக்கொத்த மதில் உண்டாயிருக்கிற தென்று அறியாத மிலேச்சன் சொன்னால் சொல்லுவானொழிய மற்றப்படியல்ல. 2. அப்படிப்பட்ட மோக்ஷமாகிற பட்டணத்திலே வச்சிர முதலான மாணிக்கங்களை [2]அதிசெயித்திருக்கிற தர்ம சரித்திரங்கள் நிமித்தமாகப் புண்ணியாத்துமாக்களாய் இருக்கிற பேர்கள் சென்றடைகிறார்க ளென்று தோற்றுவிக்க வேணும் என்கிறதுக்காக வச்சிர முதலான மாணிக்கங்களினாலே உண்டாக்கப்பட்ட கதவுகள் உண்டாயிருக்கிற தென்று சொல்லப்பட்டு தொழிய, அவ்விடத்திலே இப்படிப்பட்ட கதவுகள் உண்டென்று மதிகெட்டவனானாலும் எண்ணமாட்டான். 3. இதன்றியே, மோக்ஷவாசிகளா யிருக்கிற பேர்கள் ஒன்றுக்கானாலும் பயப்படத் தக்கதில்லை யென்று காண்பிக்கத் தக்கதாக மோக்ஷ பட்டணத்தின் கதவுகளானது அடைபடுகிறதில்லை என்று சொல்லப்படுதொழிய மற்றப்படியல்ல. 4. இந்தடைவாக அனந்த ஞான சுரூபியா யிருக்கிற கர்த்தரானவர் சகலத்தையும் அனந்த தெளிவோடு பார்த்துக்கொண்டிருக்கிறார் என்றும், அவருக்கு ஒன்றானாலும் மறைந்திருக்கக் கூடா தென்றும், எல்லாரும் அறியும்படிக்குக், கர்த்தனுடைய சன்னதியிலே ஸ்படிகமாகிற சமுத்திரம் உண்டாயிருக்கிற தென்று சொல்லப்பட்டதாக யோசிப்பாயாக. 5. இதன்றியே, மோக்ஷ பாக்கியத்தை அனுபவிக்கிற பேர்கள் ராசாதி ராசனாயிருக்கிற சருவேசுரனோடேகூட ராச்சியபாரம் பண்ணுகிறார்க ளென்றும், அப்படிப்பட்ட சகல பரிசுத்த தர்மங்களினாலே அலங்கரிக்கப்பட்டுப் பிசாசு முதலான சத்துருக்களைச் செயித்தார்க ளென்றும் காட்டவேணும் என்கிறதுக்காகப் பலபல பத்திராசனங்களிலே இருக்கிற முடிபொருந்த ராசாக்கள் ஆண்டவரை இடைவிடாமல் தோஸ்திரம் பண்ணுகிறார்க ளென்றும், பிரகாச மாயிருக்கிற வெள்ளைச் சட்டைகள் தொட்டிருக்கிறார்க ளென்றும் ஜெயத்துக்கு அடையாளமான துகளைக் கையிலே கொண்டிருக்கிறார்க ளென்றும் சொல்லப்பட்டுதொழிய மற்றப்படியல்ல.

6- அம்மருவாதியே, சம்மனசினுடைய கயிங்கரியத்தினாலே மிகவும் பரிமளித்திருக்கிற தூபாதிகள் கர்த்தன் சன்னதியிலே ஏறுகிறது என்கிற வாக்கியத்தை நீ கேட்கும்

2. வென்ற

போது, புண்ணியவான்களுடைய தியான செப முதலான விருத்திகளைச் சம்மனசுகளான பேர்கள் எல்லாத்தையும் அறிந்த சர்வேசுரன் சன்னதியிலே காட்டி, நமக்காகக் கர்த்தனை வேண்டிக்கொள்கிறார்களென்றும், அப்படிப்பட்ட தியான செப முதலான விருத்திகளானதுகள் தேவ விஷயக பத்தியாகிற அக்கினியோடேகூட இருந்தால், தூபாதிகள் போலே கர்த்தனுக்குப் பரிமளித்திருக்கிறதென்கிற அர்த்தத்தைக் கண்டு பிடிக்கக்கடவாய். 7. இதுதவிர, மோக்ஷவாசிகளாய் இருக்கிறபேர்கள் பரம சுகத்தோடேகூட எப்போதும் இளைப்பாறிக்கொண்டு வருகிறார்களொழிய ஒருக்காலும் பிரயாசைப் படத்தக்கதில்லை என்று காண்பிக்கிற நிமித்தமாக அவர்களுடைய பரமானந்தமானது ராத்திரி போசனத்துக்குச் சமானமென்று சொல்லப்பட்டதாயிருக்கிறதென்று அறிவாயாக. அதேதென்றால், மத்தியான போசனத்துக்குப் பிற்பாடு இன்னம் வேலைசெய்து பிரயாசைப்பட வேண்டியிருந்தாலும், இராத்திரி போசனத்துக்குப் பிற்பாடு இளைப்பாறத் தக்க கணக்கு உண்டாயிருக்கிறதொழிய, இன்னம் பிரயாசைப் படத்தக்க கணக்கில்லை என்கிறதுக்காக மோக்ஷவாசிகளுடைய பரமானந்தமானது மத்தியான போசனத்துக்குச் சரியென்று சொல்லாமல், இராத்திரி போசனத்துக்கு அது சமானமாயிருக்கிறதென்று சொல்லப்படுகிறதொழிய மற்றப்படியல்ல. 8. அந்தந்த மோக்ஷவாசியானவர் அனுபவித்துக்கொண்டு வருகிற பரமானந்தத்துக்கு அளவில்லாத கர்த்தரானவர் தாமே தம்மை விஷயகமாகப் பண்ணியிருந்தாலும், இதெல்லாம் கர்த்தரானவர் தம்முடைய தம்முடைய [1]அனந்ததனத்தின் அளவாவாகப் பண்ணாமல், அந்தந்த மோக்ஷவாசிகளுடைய யோக்கியத்தின் பிரமாணமாக அந்தந்த மோக்ஷவாசிகளுக்குப் பரமானந்தத்தைக் கர்த்தரானவர் பண்ணிவிக்கிறாரென்றும், அந்தந்த மோக்ஷவாசியானவர் அனுபவித்துக்கொண்டு வருகிற பரம சுகமானது தெகிட்டில்லாமல் நாளுக்கு நாள் நவமானது போலே அவருக்கு இருக்கிறதென்றும் தோற்றிவிக்கிறது. இது நிமித்தமாகக் 'கர்த்தரானவர் தானே கச்சை கட்டிக்கொண்டு அவரவர் அண்டையிலே நடக்கிறவராய்ப் போசனத்தைப் பரிமாறுகிறார்' என்று சொல்லப்பட்டுது என்கிறதுக்குச் சந்தேகப்பட வேண்டாம். 9. அப்படிப்பட்ட பரமானந்தத்தை அனுபவிக்

1. infinity

கிற பேர்களுக்குப் 'பரஞ்சோதியுள்ள பகலானது விளங்கு மொழிய இராத்திரியின் அந்தகாரமானது அவர்கள் மேலே பரம்பமாட்டாது' என்கிற வாக்கியத்தினாலே மோக்ஷவாசியான பேர்கள் என்றென்றைக்கும் குறையற்ற சந்தோஷத்தை அனுபவித்து ஒரு அற்பமாகிலும் நோவானது அவர்களை உபாதிக்கத்தக்கதில்லை என்கிற அர்த்தமானதைக் கண்டுபிடிக்கப்படத் தக்கதாகும். 10. கடைசியாய், எண்ணப்படாத திவ்விய பிரகாசத்தினாலே அலங்கரிக்கப்பட்ட மோக்ஷமாகிற பட்டணமானது 'மிகவும் உன்னதமான பர்வதத்தின் மேலே (சதுராகாரமாய்) ஸ்தாபிக்கப்பட்டது' என்கிற வாக்கியங்களினாலே மோக்ஷக் கரையேறுகிறதுக்கு அவனவன் படத்தக்க பிரயாசத்தை நிச்சயம் பண்ணி, அதிலே ஏறின பாக்கியவான்கள் ஓர் அற்பமாகிலும் சந்தேகமில்லாமல் ஒருகண்டசீராய் என்றென்றைக்கும் பரமானந்தத்தை அனுபவிப்பார்கள் என்கிற குன்றுத சத்தியத்தை மோட்சமாகிற பட்டணத்தின் சதுரமான [1]ஆகாரமானது அறிவிக்கிறதென்று அறிவாயாக.

**35.8. மோட்சம் எத்தகையது?** மோட்ச விஷய நிரூபணத்திலே [2]இற்றைவரைக்கும் சொல்லப்பட்ட வாக்கியங்களுடைய தாற்பரியமானது எவ்வளவாகிலும் வெளிப்படுத்தினாற் போலே ஆச்சுது. தெளியப்பட்ட இந்தத் தாற்பரியத்தினாலே குறையற்ற பாக்கியமாகிற மோட்சமானது இன்னதென்று எவ்வளவாகிலும் கொஞ்சத்துக்குள்ளே நிரூபிக்கத்தக்கதாக வருந்தக்கடவோம். அவ்வண்ணமே, பராபர வஸ்துவுக்குச் சுபாவமாய் இருக்கிற பரமானந்த முதலான அனந்த மகிமைகளானதுகளை உண்டாக்கப்பட்ட பொருளானது தனது அளவாக மோட்சப் பிரகாசத்தின் சகாயத்தைக்கொண்டு ஒரு பிரகாரமாகக் கொண்டிருக்கிறதென்கிறது, உண்டாக்கப்பட்ட பொருளினாலே அனுபவிக்கப்படுகிற குறையற்ற பாக்கியமாகிற மோட்சமானது நிரூபிக்கப்படலாம் என்று அங்கீகரித்து இதெல்லாம் தேவ விஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலே வருகிறதென்று நிச்செயிக்கக்கடவோம். ஆதலாலே, இதே சீவனானது அடையத்தக்க அவதி யென்றும் இதே சீவனுக்கு எண்ணப்படாத நன்மைகளைக் கொடுக்கிற ஒடுக்க மென்றும் சொல்லத்தகும்.

1. வடிவம் 2. விஷயத்திலே (பா. பே.)

**35.9. உருவக முறையில் மோட்சம் விவரிக்கப்படுவ தேன்? பசு உவமை.** இதிப்படியிருக்கையிலே, மோட்ச நிரூபணம் பண்ணப்படுகிறதிலே உபோக்காத அலங்கார மேரையாக முன் சொல்லப்பட்ட வாக்கியங்களானதுகள் பிர யோகிக்கப்படுகிறதுக்குக் காரணமாவது: மோட்சவாசிகளான பேர்கள் மனோவாக்குக்கு எட்டாததாய் இருக்கிற எண்ணப் படாத திவ்விய மகிமைகளை முன்சொன்ன மேரையாக அனுபவிக்கிறார்க ளென்று அற்பமாகிலும் சந்தேக மில்லாமல் அங்கீகரிக்கத் தக்க, குன்றாத சத்தியமாகும் என்கிறதுக்குத் தப்பாது. அப்படிப்பட்ட பரம ரகசியங்களும் திவ்விய விசேஷ வரப்பிரசாதங்களும் அதுகளுக்குச் சரியான பொருள்களானாலும் பூமியிலே உண்டாயிருக்க மாட்டாது என்கிறதினாலே, அப்படிப் பட்ட பரம ரகசியங்களையும் திவ்விய விசேஷ வரப்பிரசாதங் களையும் இன்னதென்று வர்ணிக்கத்தக்கதாகப் பூமியிலே திரிகிற பேர்களுக்குச் சுமுத்திரையான வார்த்தைகள் கிடை யாது என்கிறதுக்குத் தப்பாது. சுமுத்திரையான வார்த்தை கிடையாதபோதே, பூமியிலே திரிகிற பேர்கள் மோட்சத்தை இன்னதென்று எவ்வளவாகிலும் கண்டுபிடிக்கத் தக்கதாக மோட்ச நிரூபணம் பண்ணுகிறதிலே முன்சொல்லப்பட்ட வாக்கியங்களுடைய பிரயோகமானது பண்ணப்படத்தக்கதாய் இருந்தது.

இதெல்லாம் ஓர் உவமையினாலே வெளியாக்கலாம். அதே தெனில், ஒன்றும் அறியாத பசுவானதுக்கு மகாமகாப்பட்ட ருசியுள்ள பக்ஷணங்களையும் விவித சிங்காரங்களினாலே அலங் கரிக்கப்பட்ட அரண்மனையையும் அறிவிக்க வேணுமானால், பசுவானது அறிந்த ருசியுள்ள பட்சணங்களுடைய மேரை யைக் கொண்டு அது இருக்கிற மாட்டுக்கொட்டங்களுடைய நாமத்தைக்கொண்டு அறிவிக்கத் தக்க பக்ஷணங்களையும் அரண்மனையையும் அறிவிக்க வேணுமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே, மிருதுவாயிருக்கிற பச்சைப் புல்லையும் சாவி வைக்கோலையும் பாலுள்ள பருத்தி விரையையும், ஒழுகாத கொட்டத்தையும் இத்தொகைப்பட்ட பொருள்களுடைய பேரைக்கொண்டு மதுரமான பக்ஷணங்களாகிற பாயசத்தையும் அதிரச முதலான கசாயங்களையும் வடை, இட்டலி, அப்பம், தேன்குழல், இத்தியாதிகளையும் மகாமகாப்பட்ட ருசிகரமான கறிகளையும், பட்டுப்பட்டாவளிகளினாலேயும் நவரத்தினங்

களினுலேயும் அலங்கரிக்கப்பட்ட இராசாவினுடைய அரண் மனையையும் பசுவுக்கு அறிவிக்க வேணுமொழிய மற்றப்படி யல்ல. அத்தன்மைபோல மோட்ச மகிமைகளை அறியாத மனுஷருக்குச் சர்வேஸ்வரனுனவர் அறிவிக்கும்போது, பூமி யிலே இருக்கிற நீசமான அயிசுவரிய பாக்கியங்களுடைய நாமங்களைக்கொண்டு, மோட்சத்தினுடைய சொல்லப்படாத பாக்கியசெல்வங்களைப் பூமியிலே மிருகங்களோடே கூடத் திரிகிற நீசமான மனுஷனுக்கு அறிவிக்கிறது என்கிறது தப்பில்லாக் கிரமமா யிருக்கிற தென்று முழுமனதோடு அங்கீ சரிக்கக் கடவோம்.

**35.10.** அடைமொழி யின்றி நம் சொற்களைக் கடவுளுக்குப் பயன்படுத்தலாகாது. இத்தறுவாயிலே மிகவும் அறியவேண்டின ஒரு விசேஷ முண்டு அதாவது: பூலோகத்திலே கற்பிக்கப்பட்ட வார்த்தைகளானதுகள் பூமி யிலே இருக்கிற பேர்களுக்குப் பிரதானமாய் நாமங்களாக இடப்பட்டதென்று சொல்ல வேணுமொழியப், பரலோக சம்பந்தமாயிருக்கிற காணப்படாத விசேஷ வஸ்துக்களுக்குப் பூலோகத்திலே நடந்துவருகிற சத்தங்களானதுகள் பிரதான மான நாமங்களாக இடப்பட்டதென்று சொல்லக்கூடாது. ஆதலாலே பூலோகத்திலே காணப்படுகிற வஸ்துகள் குறை யோடேகூட இருக்கக்கொள்ள, அதுகளுக்கு இடப்பட்ட நாமங்களானதுகள் வஸ்துக்களையும் வஸ்துக்களோடேகூட இருக்கிற குறைகளையும் சொல்லும் என்கிறதுக்குத் தப்பாது. இது இப்படியிருக்கையிலே, பரலோக சம்பந்தமாய் இருக்கிறது களுமாய்க் குறையற்றதுகளுமாய் இருக்கிற வஸ்துக்கள் பேரிலே பிரசங்கம் பண்ணப்பட்டால், அப்படிப்பட்ட பிரசங் கத்திலே பூமியிலே நடந்துவருகிற வார்த்தைகளைப் பிரயோகிக்க வேண்டியிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. ஆகையாலே, தப்பு வராதபடிக்கு அந்தந்த வார்த்தையினுடைய அர்த்தத்தைப் பத்தும் பத்தாய் விசாரித்து, அதிலே கூட்டத் தக்க அர்த்தத்தைக் கூட்டித் தள்ளத்தக்க அர்த்தத்தைத் [1]தள்ளக்கடவோம். அதெப்படியென்றால், பலம் என்கிற சத்தமானது காரியத்தை உண்டாக்கிற மேரையைச் சொல்லி அது [2]குணமாய் இருக்கிற தென்றகூடச் சொல்லும். சர்வேசுர

1. analogical sense  2. accident

ளிடத்திலே பெலமென்கிற சப்தமானது பிரயோகிக்கப் பட்டால், வஸ்துவை உண்டாக்கிற மேரையைச் சொல்லு மொழியக் குணமென்கிறதைச் சொல்லாது. இந்தடைவிலே ஞானம் என்கிற நாமமானது விஷயத்தினுடைய அறிக்கையைச் சொல்லி, அந்த அறிக்கையானது போய் வருகிறதுமாய் அறிந்தவனுக்குப் பின்னமாயிருக்கிற விருத்தியானதுமாய் இது முதலான வேறே விசேஷங்களையும் கூடஇருக்கிறதென்று சொல்லும் என்கிறதுக்குச் சந்தேகமில்லே. ஆனல் சருவேசுர ளிடத்திலே பிரயோகிக்கப்பட்ட ஞானமென்கிற சப்தமானது விஷயத்தின் அறிக்கையை மாத்திரம் சொல்லுமொழிய, மற்ற அர்த்தங்களை அது கொண்டிராது. இந்த மேரையானது வேறே அனேகம் சப்தங்களிலே பிரயோகிக்கப்படத் தக்கதாகும் என்று அறிவாயாக. அதெப்படியென்றால், சிலமுறை பரலோக சம்பந்தமாயிருக்கிற விஷயங்களிலே உபோத்காத அலங் காரத்தின் மேரையாகச் சப்தமானது பிரயோகிக்கப்பட்டால், அத்தருவாயிலே சப்தத்தினுலே முந்தமுந்தத் தோற்றுவிக்கப் படுகிற அர்த்தத்தை முழுதும் தள்ளி அத்துக்குப் பின்னபேத மாயிருக்கிற வேறே அர்த்தத்தைக் கண்டுபிடிக்கக்கடவோம். அவ்வண்ணமே, மோக்ஷ விஷயத்திலே பொன், மாணிக்கங்கள், போசனம் இதுகள் முதலான சப்தங்கள் பிரயோகிக்கப்படுகிற போது, அப்படிப்பட்ட சப்தங்கள் முந்தமுந்தத் தோற்றி விக்கிற அர்த்தங்களை முழுதும் தள்ளி, நம்மால் சொல்லப்பட்ட அர்த்தங்களைக் கிரகிக்கவேணுமொழிய மற்றப்படியல்ல. இது காரணமாக மனுஷனானவன் பரலோக சம்பந்தமாய் இருக்கிற பிரசங்கத்தைப் பண்ண வேண்டியிருந்தால், அதிலே பிரயோகிக் கத்தக்க வார்த்தைகள் ஏதென்றும், எந்த விதமுள்ள பொருள்கள் அவ்விடத்திலே இருக்கிறதென்றும் அங்கீகரிக்கத் தக்கதிலேயும், வார்த்தைகளுடைய பண்ணப்படத்தக்க பிரயோகத்திலேயும், வஸ்துக்களுடைய அங்கீகாரத்திலேயும் அறியாத மனுஷன் இடருதபடிக்கு வித்தியாபாரகராய் இருக்கிற குருவைக் கேட்கக்கடவான்.

இந்த அவசரத்திலே முழு மனுஷனுடைய ஒடுக்கம் ஏதென்று சொல்ல வேண்டியிருக்கச்செய்தே, லோக முடிந்த பிற்பாடு, மரணத்தை அடைந்த யாவார்க்கும் சர்வத்துக்கும் வல்லவரான சர்வேசுரனவர் தனது அனந்த பெலத்தைக் கொண்டு மாங்கிஷ உத்தானத்தைக் கட்டளையிட போகிறார்

என்கிற அற்புதத்தை இங்கே வெளிப்படுத்துகிறது என்கிறது கிரமமாகுமென்று காண்பித்திருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட பரம ரகசியமானது உண்டாமென்று கேவலம் வேதப்பிரமாணத்தினாலே மாத்திரம் நிச்சயமாகக் கண்டுபிடிக்கிறதினாலேயும், கரையேறுகிறதுக்கு அறியவேண்டின பரம ரகசியங்கள் என்னப்பட்ட யாவையும் உபதேசித்த பிற்பாடு, இந்தப் பரம ரகசியமானது வெளிப்படுத்தத்தக்கதாக இருக்கிறதினாலேயும், 'ஞான உபதேசத்தின் மூன்றாம் காண்டத்திலே கடைசிப் பாடங்களிலே' கர்த்தனுடைய கிருபாகடாக்ஷத்தினாலே எவ்வளவாகிலும் வெளிப்படுத்துவோம் என்கிறதுக்காக, அத்தை இவ்விடத்திலே அறியப் பண்ணாமல் இருக்கக்கடவோம்.

முப்பத்தஞ்சாம் பாடம் முற்றும்.

(கிரந்தம்) ௩௱அ௰*

## முப்பத்தாறும் பாடம்

**36.1 உழைப்பால் கல்வி முதலியன பெறுவது போல் உழைப்பால் மனிதன் மோட்சம் பெறவேண்டும்.** தப்பில்லாக் கிரமத்தோடு சகலத்தையும் நடத்துகிற கர்த்தரானவர் இப்போதிருக்கிற வழிப்போக்கரான மனுஷருக்கு நன்மை கொடுக்கிற வகையிலே நடத்துகிற விதமானது குறையற்ற ஞாயமுள்ள கிரமமாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கக் கடவோம். அதேதென்றால் மனுஷனுடைய சுபாவத்துக்கு வேண்டியிருக்கிற சுபாவ நன்மைகளை பிரயாசமில்லாமல் மனுஷனை அடையப்பண்ணி, [1]வித்தை முதலான விசேஷ நன்மைகளானதுகளைப் புத்தியறிந்த மனுஷன் பிரயாசப்பட்டு அடைய வேணுமென்று கட்டளையிட்டு அருளினாரொழிய எப்போதும் நடக்கு மேரையை விசாரிக்குமிடத்தில், மனுஷனானவன் பிரயாசப்படாமல் வித்தை முதலான நன்மைகளை அடையமாட்டானென்று அனுபவசித்தியினாலே கண்டுகொண்டு வருகிறோம். இது குறையற்ற கிரமமாய் இருக்கையிலே புத்தியறிந்த மனுஷன் தனது சுபாவத்துக்கு மிகவும் மேலானதாயிருக்கிற நன்மையாகிற மோக்ஷத்தை மிகவும் பிரயாசப்பட்டு அத்தை அடைகிறது என்கிறது குறையற்ற ஞாயத்துக்கு ஒத்திருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால்



1. கல்வி

புத்தி யறிந்த மனுஷன் மிகவும் பிரயாசப்படாமல் தனது சுபாவத்துக்கு மேலானதா யிராத நன்மையாகிற வித்தை முதலானதுகளை அடையமாட்டாதபோதே, தனது சுபாவத்துக்கு மிகவும் மேலானதுமாய், என்றென்றைக்கும் நிற்கத் தக்கதுமாய் இருக்கிற குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷத்தை மனுஷனானவன் மிகவும் பிரயாசப்பட்டு அடைகிறதென்கிறது குறையற்ற ஞாயமென்று சொல்ல வேணுமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே, சிறு பிள்ளைகள் உட்பட்ட ஞானஸ்நானத்தின் ஆசாரத்தினாலே தேவ இஷ்ட முதலான வரப்பிரசாதங்களையும் மோக்ஷத்தையும் அடையும்போது, அந்த நன்மைகளெல்லாம் [2]ஒருத்தர் பிரயாசப்பட்டதினால் அதுகளுக்கு வருமொழிய மற்றப்படியல்ல. இந்த விசேஷ திவ்விய கிருபையானது புண்ணியம் பண்ணிப் பிரயாசப்பட மாட்டாத சிறு பிள்ளைகளிடத்திலே விளங்குகிறது என்கிறது, தயாபரனான கர்த்தனுடைய திருவுளத்துக்கு ஏற்றிருக்குமாப் போலே, புத்தி யறிந்து ஆன புண்ணியங்களைப் பண்ணுகிறதுக்கு வல்லவர்களா யிருக்கிற மனுஷரானவர்கள் தனது சுவாதந்திரியமுள்ள மனதைக்கொண்டு கன பாவமென்னப்பட்ட யாவையும் தவிர்த்து, சகல நிர்மல புண்ணிய வழியின் நெறியை அனுசரித்து திவ்விய கிருபையினாலே இப்படிப்பட்ட பிரயாசைப்பட்டு, மோக்ஷக்கரையேறுகிறது என்கிறது ஆண்டவனுடைய பழுதற்ற நீதி ஞாயத்துக்கும் குறையற்ற கிருபைக்கும் ஒத்திருக்கிறதென்று சந்தேகமற அங்கிகரிக்கக் கடவோம்.

**36.2 உன்னையன்றி உன்னை மீட்கமாட்டார்.** அவ்வண்ணமே, 'உன்னையில்லாமல் உன்னை உண்டாக்கின கர்த்தரானவர் உன்னையல்லாமல் உன்னைக் கரையேற்றத் தக்கதில்லை'[1] என்கிற வாக்கியமானது புத்தி யறிந்து குறையற்ற சுவாதந்திரியத்தோடு நடக்கிற மனுஷனிடத்திலே சந்தேகமற ஒப்புக்கொள்ளத் தக்க குன்றாத சாத்தியமாகும் என்கிறதுக்குத் தப்பாது. இந்த வாக்கியத்துக்கு அர்த்தமேதெனில் நீ பிரயாசப்படாமல் உன் மனசு ஆம் அல்ல என்று சொல்லாமல், உன்னைக் கர்த்தன் உண்டாக்கினது, என்கிறது உன்னையல்லாமல் உன்னைக் கர்த்தன் உண்டாக்கினது என்கிற பதங்களுக்கு அர்த்தமாகும்; நீ பிரயாசப்பட்டு உனது சுவாதந்திரியமான மனசோடு பாவம்

2. யேசு பெருமான்

1. Quin feict te, sine non salvahte sine te — St. Aug.

என்னப்பட்ட யாவையுந் தவிர்த்து, நிர்மல புண்ணிய வழியிலே நீ நடவாமல், உன்னைக் கர்த்தரானவர் மோக்ஷக்கரைசேற்றத் தக்கதில்லை என்கிற வாக்கியமானது உன்னையல்லாமற் கர்த்தன் உன்னைக் கரையேற்றத் தக்கதில்லை என்கிற அர்த்தக்கைசு சொல்லும். இது இப்படி யிருக்கையிலே, இனிமேல் வெளிப் படுத்தத் தக்க விசேஷங்களைத் துலக்கமாகக் கண்டுபிடிக்கும் படிக்குப் புத்தியுடைத்தான பொருளின் சுவாதந்திரியமானது பிரியும் விதத்தைத் தெளியக்கடவோம்.

**36.3** இருவகைச் சுதந்திரம். அதேதனென்றால், புத்தி யுடைத்தான பொருளுக்குக் கர்த்தரானவர் கொடுத்த சுவாதந் திரியமானது புத்தியுடைத்தான பொருளை முழுதும் விட்டுப் பிரியுமென்று சொல்லவொண்ணுது என்றிருக்கையிலே, புத்தி யுடைத்தான பொருளானது அடைந்திருக்கிற [2]அவஸ்தைக்குத் தக்க வகையாக அதினுடைய சுவாதந்திரியமானது வெவ்வேறே மேரையைக் கொண்டிருக்கிறதென்று அங்கீகரிக்க வேணும். அதெப்படி யென்றால், குறையற்ற பாக்கியம் என்கிற மோக்ஷ மான அவதியை அடைந்த பேர்களுடைய சுவாதந்திரியத்தைப் பத்தும் பத்தாய் விசாரிக்குமிடத்தில் மோக்ஷவாசியினுடைய சுவாதந்திரியமானது நன்மையிலே நிலைகொண்டதுமாய்க் குறையாகிற பாவத்திலே விழமாட்டாததுமாய் இருக்கக் கொள்ள, 'கேவலங் குறையற்ற சுவாதந்திரியம்' என்கிற நாம மானதும் [3]'தர்மமாத்திரம் விஷயக சுவாதந்திரியம்' என்கிற பேரும் அதுக்குச் செல்லுமென்று சொல்ல வேண்டியிருக்கிறது. நன்மையின் கலப்பில்லாத பொல்லாப்பாகிற நரகமென்கிற அவதியை அடைந்த பாவிகளுடைய சுவாதந்திரியமானதோ வென்றால், குறையற்ற திவ்விய நீதியாக்கினையின் மேரையாக அது பாவத்திலே நிலைகொண்டதுமாய்ப் பாவத்தை விட்டுத் தர்மத்திலே திரும்பமாட்டாததுமா யிருக்கிறதினால், [4]'பாபமாத் திரம் விஷயகம் சுவாதந்திரிய என்று சொல்லப்படுமொழிய மற்றப்படியல்ல. அப்படியே, இந்த இரண்டு வகையுள்ள மேரைகளைப் பார்க்கும்போது, அப்படிப்பட்ட சுவாதந்திரியம் இரண்டுக்கும் சுவாதந்திரியம் என்கிற நாமமானது செல்லு மென்று சொல்ல வேண்டியிருந்தாலும் ஒன்றோடொன்று மிகுந்த வேற்றுமையாய் இருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. அதே தனென்றால், மோட்சவாசியினுடைய சுவாதந்திரியமானது

2. நிலை 3. The perfect liberty, good liberty 4. bad liberty

நன்மையிலே நிலைகொண்டு, நன்மையை விட்டுப் பாவத்திலே விழுமாட்டாததாய் இருக்கையிலே, பலபல நன்மைகளுக்குள்ளே மோக்ஷவாசியானவர் தனது இச்சைப்படியே அந்தந்தப் புண்ணிய விசார முதலான நன்மைகளைத் தெரிந்து கொள்ளத் தக்கதாக வல்லவராய் இருக்கிறார் என்கிறதுக்குச் சந்தேகப்படக் கணக்கில்லை. நரகத்திலே எண்ணப்படாத கஸ்தி நோவு பாதைகளை அனுபவிக்கிற பேர்களுடைய சுவாதந்திரியத்தைப் பார்க்கும்போது, அது பாவத்திலே நிலைகொண்டு பாவத்தை விட்டுப்பிரிந்து ஓர் அற்ப நன்மையிலேயாகிலும் திரும்ப மாட்டாததாயிருக்கையிலே, அப்படிப்பட்ட சுவாதந்திரியத்தை [1]உடைத்தான பிசாசுகள் முதலான பாவிகளான பேர்கள் பலபல பாவங்களுக்குள்ளே சிலதுகளைத் தெரிந்து கொள்ளலா மென்று சொல்ல வேணும்.

**36.4. நரகத்தில் பாவிகளின் சுதந்திரம்.** இதிலே தப்பு வராதபடிக்குச் [2]சாவதானமாய் வார்த்தைகளை நடத்தி அங்கீகரிக்கத்தக்க விசேஷங்களை மாத்திரம் அங்கீகரிக்கக் கடவோம். அதேதனென்றால், திவ்விய நீதியுள்ள கற்பனைப்படியே நரகத்திலே இருக்கிற அந்தந்தப் பாவிகளுக்குப் பாவத்தோடேகூட மிகுந்த துக்க மனஸ்தாபங்களை வருத்தி விக்கிற சில விசாரங்களுண்டு. அதுகள் பாவிகள் அனுபவித்துக் கொண்டு வருகிற சுபாவமாக ஆக்கினை வேதனைக்கு அடுத்ததுகளாய் இருக்கச்செய்தே, அப்படிப்பட்ட துக்க விசாரங்கள் பாவிகளை ஒரு க்ஷணமாகிலும் விட்டுப் பிரிய அறியாது. அதேதனென்றால், நரகத்திலே யிருக்கிற பாவிகள் பூமியிலே இருக்கிற போது பண்ணின பாவங்களுக்குத் திவ்விய திருவுளத்தின்படியே கற்பிக்கப்பட்ட [3]சரிசமான ஆக்கினை வேதனையானது என்றென்றைக்கும் [4]ஒருகண்டசீராய்ப் பாவிகளை உபாதிக்குமொழிய, அப்படிப்பட்ட கஸ்தி வேதனையிலே ஒரு அற்பமாகிலும் விகாரம் வரமாட்டாது. ஆதலாலே, அப்படிப்பட்ட கஸ்தி வேதனைக்குச் [5]சாக்ஷாத்துக் காரணமாயிருக்கிற பாவ விசாரங்கள் ஒருகண்டசீராய், என்றென்றைக்கும் முன் சொல்லப்பட்ட பிசாசுகள் முதலான பாவிகளிடத்திலே உண்டாய் அவர்களை ஊழியுள்ள காலம் ஒரு விதமாக உபாதிக்குமொழிய, ஒரு க்ஷணமாகிலும் அப்படிப்பட்ட விசாரங்கள் அவர்களை விட்டுப் பிரியத்

1. அடைந்த (பா. பே.) 2. கவனமாய். 3. adequate, 4. uniformly, 5. நேரடி.

தக்கதில்லை. இந்தப் பாவ விசாரங்கள் தவிர, வேறே அனேகம் பாவ விசாரங்களுக்குள்ளே முன் சொல்லப்பட்ட சுவாதந்திரிய முடைத்தான பிசாசுகள் முதலான பாவிகள் வேறே சில விசேஷ பாவங்களுக்குச் சம்மதப்படலாம் என்று சொல்லலாயிருக்கிறது.

**36.5. மோட்சத்தில் நல்லவர்களின் சுதந்திரம்.** இந்த மேரையானது நன்மை விஷயத்திலே மோக்ஷவாசிகளுக்கும் நடந்துவருகிறது என்று அடைவாய் யோசிப்பாயாக. மோட்ச வாசிகளுக்கும் நரகத்திலே இருக்கிற பிசாசுகள் முதலான பாவி களுக்கும் நடந்துவருகிற சொல்லப்பட்ட இரண்டு வகையுள்ள சுவாதந்திரியங்கள் தவிரப் பூமியிலே திரிகிற வழிப்போக்கரான மனுஷரிடத்திலே வழங்கி வருகிற சுவாதந்திரியமானது வழிக்குத் தக்க அடைவுள்ளதாய் இருக்கக்கொள்ள, முன் சொல்லப்பட்ட இரண்டு வகையுள்ள சுவாதந்திரியங்களுக்கு இது மிகுந்த வேற்றுமையாய் இருக்கிறதென்று கண்டுவருகிறோம். அதெப்படி யென்றால், அவதியானது ஏக ரூபமாயிருக்கக் கொள்ள, அன்னி யோன்னியமாய் அத்தியந்த விரோத குணங்களில்லாமல் நன்மை தின்மை விஷயங்களிலே ஒருகண்டசீரான மேரையானது அவதி யிலே காணப்படுமொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே, அற்பமாகிலும் பொல்லாப்பின் கலப்பில்லாத நன்மையாகிற மோக்ஷம் என்கிற அவதியிலே புண்ணிய சுரூபமா யிருக்கிற நன்மை என்னப்பட்ட யாவும் பரம சுகத்தின் நல்வினையும் விளங்கிவருகிறதொழிய, நன்மைக்கு விருத்தமான பாவத்தின் பொல்லாப்பும் துக்கத்தின் தீவினையும் அப்படிப்பட்ட அவதி யிலே இருக்கிற பேர்களை அண்டலாமென்று சொல்லவுங் கருதவுங் கூடாது. இத்தன்மையாக அற்பமாகிலும் நன்மையின் கலப்பில்லாத வெறுக்கப்படத்தக்க துர்க்கந்தமாகிற பொல்லாப் பான நரகம் என்கிற அவதியிலே பாவத்தின் தீவினையும் வேதனை யினுடைய தின்மையுங் காணப்படுகிறதொழியத், தர்ம சுகம் என்கிற நன்மை இரண்டும் நகரமாகிற அவதியிலே உண்டா யிருக்கிறதென்று சொல்லக் கூடாது.

**36.6. வழிப்போக்கனான இவ்வுலக மனிதனின் சுதந்திரம்.** இது இப்படியிருக்கையிலே, பூமியிலே திரிகிற மனுஷ ரானவர்கள் வழிப்போக்கரா யிருக்கக்கொள்ள, வழிக்கான மேரையுள்ள சுவாதந்திரியத்தைக் கொண்டிருக்கிறார்கள் என் கிறதுக்குத் தப்பாது. அதெப்படியென்றால், வழியின் சுபாவ

சுருபத்தை விசாரித்தோமானால், வழியானது இடதுபாரிசம் வலதுபாரிசம் எனகிற இரண்டிலுந் திரும்பும் என்கிறதுக்காக, வழிப்போக்கனாயிருக்கிறவன் வழியின் வலது பாரிசத்தை விட்டு இடது பாரிசத்திலே நடக்கலாமென்றுஞ் சொல்ல வேண்டியிருக்கிறது. இத்தன்மையாகப் பூமியிலே இருக்கிற மனுஷர்களினாலே நடக்கப்படுகிற வழியானது வலதுபாரிசமாகிற புண்ணியத்திலேயும், இடது பாரிசமாகிற பாவத்திலேயும் பிரிந்து போகிறது என்று கண்டுகொண்டு வருகிறோம். ஆனபடியினாலே, இப்படிப்பட்ட வழிக்குத்தக்க மேரையுள்ள சுவாதந்திரியமானது வலது பாரிசப் புண்ணிய வழியிலேயும், இடது பாரிசமாகிற பாவ வழியிலேயுந் திரும்புகிறதுக்கு வல்லதாய் இருக்கிறதென்று சொல்லவேண்டியிருக்கிறது. இப்படிச் சொல்லாமல், பலபல புண்ணியத்திலே மாத்திரமானாலும் பலபல பாவத்திலே மாத்திரமென்கிலும், பூமியிலே திரிகிற மனுஷருடைய சுவாதந்திரியமானது திரும்புகிறதுக்கு வல்லதாயிருக்கிறது என்று சொன்னோமானால் அப்படிப்பட்ட சுவாதந்திரியமென்று சொல்லத்தகுமொழிய, வழிக்கான வகையுள்ள சுவாதந்திரியமாய் இருக்கிறதென்று சொல்லக் கூடாது. இது தவிரப், புத்தியுடைத்தான பொருள் என்னப்பட்ட யாவும் உண்டாக்கப்பட்டதாய் இருக்கக்கொள்ள, அதினுடைய சுபாவ பெலத்தைப் பார்க்கும்போது, அது நல்வினை தீவினை இரண்டிலும் நிலைகொள்ளாததுமாய்க், குறையுள்ளதுமாய் இருக்கிறதென்று சொல்லவேணும். ஆதலாலே, புத்தியுடைத்தான பொருளானது தனது சுவாதந்திரியத்தின் பலத்தைக் கொண்டு திவ்விய கிருபா கடாக்ஷத்தினாலே சகல நிர்மல புண்ணிய வழியிலே நடக்கிறதுக்கு வல்லதாய் இருக்குமாப்போலே தனது சுவாதந்திரிய துர்பெலத்தின் குறையினாலே புண்ணியமாகிற நன்மையை விட்டுக் குறையாகிற பாவத்திலே விழலாமென்று அற்பமாகிலுஞ் சந்தேகமில்லாமல் ஒப்புக்கொள்ளத்தக்க சத்திய விசேஷமாகும். இது இப்படி இருக்கையிலே பாவிகளும் புண்ணியவான்களும் என்கிற இரண்டு வகையாக மனுஷர் என்னப்பட்ட யாவரும் பிரிகிறார்களென்று சொல்ல வேண்டியிருக்கிறது.

**36.7. பாவ வழியும் புண்ணிய வழியும்:** இப்படிப்பட்ட இரண்டு வகையிலே பிரிந்த பாவிகளும் புண்ணியாத்துமாக்களும் நடக்கிற பாவ புண்ணிய வழிகள் இரண்டையும் விசாரிக்குமிடத்தில் ஒன்றுக்கொன்று சொல்லப்படாத விருத்த

மேரை யுள்ளதாய் இருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. (i) அவ்வண்ணமே, பாவ வழியானது 'இடது பாரிசம்' என்கிற பேர்பெற்று, 'வலது பாரிச வழி' என்கிற நாமமானது நிர்மல புண்ணிய வழிக்குச் செல்லுமென்று சொல்லக் கடவோம். ஆதலாலே, இப்படிப்பட்ட வழிகள் இரண்டுக்கும் உண்டான சுபாவ சுரூபமானது சகலத்திலே முழு வேற்றுமை உண்டாய் இருக்கிறதென்று சந்தேகமற்ற சத்திய விசேஷமாகும். (ii) அவ்வண்ணமே, பாவ வழியானது புண்ணிய வழி என்னப்பட்டவாவையும் தள்ளிப்போட்டுப், புண்ணியமான வழியானது ஒரு அற்பப் பாவத்தையாகிலும் அங்கீகரிக்க மாட்டாது. பின்னையும் சுபாவமான வழியானது அருவருக்கப்படத்தக்க துர்கந்தச் சேற்றுக்கும், கனமான அந்தகாரத்துக்கும் சரியான மேரையுள்ளது என்று சொல்ல வேண்டியிருக்கச் செய்தே, புண்ணியமான வழியானது அங்கீகரிக்கப்படத்தக்க பரிசுத்தமானதுமாய்ப், பரஞ்சோதியினாலே பிரகாசிக்கப்பட்டதுமாய் இருக்கிறதென்று சொல்லத்தகும். (iii) இதன்றியே, பாவமான வழியானது சகல நீதிக்கு ஒவ்வாததாய் இருக்கக்கொள்ள, அதிலே நடக்கிற பாவிகள் பன்றி, நாய், நரி முதலான செந்துக்களைக் காட்டிலும் கெட்ட மிருகங்களுமாய்ச் சர்வேஸ்வரனாலே அருவருக்கப்பட்ட பேர்களுமாய் இருக்கையிலே, புண்ணியமான வழியானதோ வென்றால், அது குறையற்ற நீதிக்கு ஒத்திருக்கிறதுமாய்ப், பழுதற்ற புண்ணிய ரூபமானதுமாய் இருக்கக் கொள்ள, அதிலே நடக்கிற பூவாசிகளாய் இருக்கிற மனுஷரானவர்கள் சம்மனசுக்கள் என்கிற பேர் பெற்றுத், தயாபரனை பிதாவாகிய கர்த்தனுக்கு மிகவும் உகந்த பிள்ளைகளாய் இருக்கிறார்கள் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தகாது. (iv) இது தவிர, நாய், பன்றி முதலான மிருகங்களுக்கும் மனுஷனுக்கும் சாதாரணமான துர்கந்த மோக கஷ்டாதி போகங்களினாலே நிறைந்ததாய் இருக்கிற பாவ வழியிலே நடக்கிற பேர்கள் அப்படிப்பட்ட துர்கந்த சுகங்களைப் பல நாளும் அனுபவித்துக் கொண்டு வருகிறதினால், முழுதும் மதிகெட்ட பேர்களாய்ப் போகிறதும் போராமல், சுத்த மிருகங்களுடைய மதியில்லாத்தனத்தையும், பிசாசுக்கான சுவாமித் துரோகத்தையும் கொண்டிருக்கிறாரொழியக், கேவல மனுஷருக்கான குணத்தைக் கொண்டிருக்கிறார்களில்லை. தரும ரூபமான வழியோவென்றால் அது மிகவும் கடின தபசுடைய வகைகளினாலே

யும், பரிசுத்த சன்னியாச [1]நியமத்தினாலேயும், மோகமாகிற பாவமற்ற சமுசார தருமத்தினாலேயும், மற்றுண்டான சகல சுகிர்த சிங்காரத்தினாலேயும், அலங்கரிக்கப்பட்டதாய் இருக்கச்செய்தே, அப்படிப்பட்ட வழியிலே நடக்கிற பேர்கள் பரிசுத்த புண்ணியாத்துமாக்களுமாய், மிகவும் [2]இஷ்டகந்தமான சகல சுகிர்த வாசனை பரிமளங்களைக் கொண்டிருந்து, திவ்விய பரம ரகசியங்களைக் கண்டுபிடிக்கிறதுக்குக் கர்த்தனுடைய கிருபாகடாக்ஷத்தினாலே மிகவும் கூர்மையுள்ள புத்தியுடைத்தானதுகளாய் இருக்கிறதும் போராமல், நல்ல மனுஷருக்கான சுகிர்த குணங்களைக் கொண்டிருக்கிறதும் தவிர, மோக்ஷவாசிக்கான திவ்விய மகிமையுள்ள குணங்களுடைய சாயலை வழிப்போக்கனுக்குக் கடின மேரையாகக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. (௪) கடைசியாய், விஸ்தாரமான பாவ வழியானதுக்குப் பாதாளமான நரகமானது அவதியாய் இருக்கக்கொள்ள, அது இறக்கத்துக்குச் சமானமானது என்று சொல்லப்பட்டுக், கோடா கோடிகளாகிற பாவிகளுடைய கூட்டங்கள் தங்களுக்கு முழுக்கேடாக விழுந்தும், கெட்டும், அப்படிப்பட்ட பாவ வழியிலே நடக்கிறதென்று கண்டுகொண்டு வருகிறோம். பாவ வழிக்கு மிகவும் விருத்தமான புண்ணிய வழியானது பத்தும் பத்தாய் விசாரிக்கப்பட்டால், அது [3]ஓரடிப்பாடாயிருந்து, பலபல பாரமான பிரயாசங்களோடு அதிலே நடக்கவேண்டி இருக்கிறதினாலே, புண்ணிய வழியானது ஏற்றமானதுக்குச் சமானமாய் இருக்கிறதென்று சொல்லப்படும். அதிலே நடக்கிற புண்ணியவான்களுடைய சபையானது மிகவும் கொஞ்சமாய் இருக்கிறதென்று அனுபவசித்தியினாலேயும் வேதப் பிரமாணத்தினாலேயும் நிச்சயம் பண்ணிக்கொண்டு வருகிறோம்.

அவ்வண்ணமே, பாவ புண்ணிய வழிகள் இரண்டுக்குஞ் சொல்லப்பட்ட வித்தியாசங்கள் முதலான எண்ணப்படாத அநேக பின்னபேதகங்கள் உண்டாயிருக்குமாப்போலே, அதுகளுக்கு உண்டாயிருக்கிற அவதிகள் இரண்டுக்கும் மனோவாக்குக்கு எட்டாததாயிருக்கிற மிகுந்த வேற்றுமை உள்ளதாய் இருக்கிறதென்று அற்பமாகிலுஞ் சந்தேகமில்லாமல் முழு மனதோடு அங்கீகரிக்கக் கடவோம். அப்படியே, [4]கற்கசமாகிற

1. நிமித்த (பா.பே.) 2. நறுமணம் 3. ஓரடிப்பாடு—ஓரடிப்பாதை
4. கக்கிசம், கக்கசம், கற்கசம் — பிரயாசம், வருத்தம்

ஏற்றமான புண்ணிய வழிக்குச் சகல ஸ்தலங்களைக் காட்டிலும் உன்னதமான ஸ்தலமாகிற மோக்ஷமானது அவதியாயிருக்கையிலே, சகல ஸ்தலங்களைக் காட்டிலும் கீழ்த்தரமான ஸ்தலமாகிற நரகமானது இறக்கமாகிற பாவ வழிக்கு அவதியாய் இருக்கிறதென்று பலபல ஞாயங்களினாலேயும், வேதப் பிரமாணத்தினாலேயும் அங்கீகரிக்கக் கடவோம். ஆனால் குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷத்தின் மேரையானது முப்பத்து நாலம் பாடத்திலேயும் முப்பத்தஞ்சாம் பாடத்திலேயும் எவ்வளவாகிலும் இன்னதென்று ஒப்புவிக்கப்பட்டாப்போலே ஆச்சுது.

**36.8. நரகத்தின் இயல்பு: நரகத்துக்காக மனிதரைப் படைக்கவில்லை.** இனி இந்தப் பாடத்திலேயும் வருகிற இரண்டு பாடங்களிலேயம் நரகத்தினுடைய மேரை இன்னதென்று எவ்வளவாகிலும் வெளிப்படுத்த வருந்துவோம். இதிலே முந்தமுந்த அறியவேண்டினதாவது: மோக்ஷமாகிற ஒடுக்கத்தை மனுஷரான பேர்கள் அடையவேணுமென்று கர்த்தரானவர் உண்டாக்கினாரென்று அங்கீகரிக்க வேணுமொழிய, ஒடுக்கமான நரகத்திலே மனுஷரானபேர்கள் விழவேணும் என்கிறதுக்காக கர்த்தரானவர் அவர்களை உண்டாக்கினாரென்று சொல்லவும் எண்ணவுங் கூடாது. இந்தப் பரமரகசியத்தின் அடைவைத் தப்பில்லாமற் கண்டுபிடிக்கிறது என்கிறது அரிதென்று சொல்ல வேண்டியிருக்கையிலே, அப்படிப்பட்ட பரம ரகசியமானது எல்லாருக்கும் எவ்வளவாகிலும் விளங்கும்படிக்குக் கர்த்தனுடைய கிருபாகடாக்ஷத்தினாலே பிரையாசைப்படுவோம். நாம் சொல்லத் தக்கதை எல்லாருந் தெளிவோடு கண்டுபிடிக்கிறது அருமையாயிருக்கக்கொள்ள, நாம் சொல்லத் தக்கதை ஆக்ஷேபமின்றி சாவதானமாக எல்லாரும் கேட்டு மனசிலே பற்றுதலோடு வைக்கக்கடவார்கள்.

**(i) கடவுளிடம் முன்பின் நிலை இல்லை.** அதேதென்னில், தானாயிருக்கிற பராபர வஸ்துவாகிற கர்த்தரானவர் அற்பமாகிலும் விகாரமில்லாமல் எப்போதும் ஒருகண்டசீராய் அனாதியாய் இருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே, ஸ்திதி முதலான விஷயங்களிலேயும் அவரை உத்தேசித்து [1]வர்த்தமான காலம் ஒருகண்டசீராய் எப்போதும் இருக்

1. நிகழ்காலம்

கிறதென்று அங்கீகரிக்க வேணுமொழிய, அவரைக் ²கீர்த்தித்துப் ³பூத பவுஷிய காலங்கள் இரண்டும் உண்டாயிருக்கிறதென்று அங்கீகரிக்க வொண்ணுது. ஆதலாலே, கர்த்தரானவர் தாம் சகலத்தையும் அறிகிறதிலேயும், அதையும் இதையுங் கற்பிக்கிறதிலேயும் ⁴பூர்வாபர மேரையானது உண்டாயிராமல், ⁵அனுதினத்தின் சன்னிதானத்திலே அதெல்லாத்தையும் அநந்த தெளிவோடு கண்டிருக்கிறு ரென்றும், ஸ்திரமான மனதின் திருவுளத்தினுலே அவரவருக்கு அத்தையும் இத்தையுங் கொடுக்கிறதுக்குத் திருவுளமாய் இருக்கிருரென்றும் சந்தேகமற அங்கீகரிக்கத் தக்கதாகும். இதுக்குக் காரணம் ஏதெனிற், கர்த்தரானவர் விஷயங்களைக் கொண்டாலும், விஷயங்களுடைய பிரதிபிம்பங்களைக் கொண்டென்கிலும் விஷயங்களை அறியாமல், ⁶ஆகுதலாகிற தம்மைத்தாம் கண்டிருக்கிறதினுலே, எல்லாத்தையும் கண்டிருக்கிருர் என்கிறதுக்குத் தப்பாது. ஆகையாலே அவரிடத்திலே பூருவாபர விகாரமானது உண்டாயிராதென்று அங்கீகரிக்கப்படுமாப்போலே, சகலத்தையும் அவர் அறிகிற விதத்திலே பூருவாபர மேரையானது உண்டாயிராது என்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமாகும்.

(ii) *காரண காரியத்தில் முன்பின் நிலை காணலாம்.* அவ்வண்ணமே, திவ்விய அனுதினத்தினுடைய சன்னிதானத்திலே பூருவாபர கிரமமானது மெய்யாகவே உண்டாயிராதிருந்தாலும், இப்போ நாம் வெளிப்படுத்தத்தக்க பரம ரகசிய முதலான வேறே சில பரம ரகசியங்களை அடைவாக வெளிப்படுத்தும்படிக்குப் ⁷பிரமவாதிகளாய் இருக்கிற பேர்கள் சர்வேசுரன் சகலத்தையுங் கண்டுகொண்டு வருகிறதிலேயும், அவரவருக்கு ஆக்கினை சம்பாவனை கட்டளையிட்டருளுகிறதிலேயும், பூருவாபர மேரையை ஒரு வழியாக விதித்துக்கொண்டு வருகிருர்கள். அதெப்படியென்றுல், சருவேசுரன் அனுதியாகக் கண்டுகொண்டு வருகிற விஷயங்களுக்குள்ளே ஒன்றுக்கொன்று காரணமாய் இருக்கிறதென்று காணும் போது ஒன்றின் நிமித்தமாக ஒன்றைத் தாம் கட்டளையிடத் தக்கதாகத் திருவுளமுண்டாய் இருக்கிறதிலேயும், அதெல்லாம் அனுதித்தனத்தின் சன்னிதானத்திலே சர்வேசுரனுக்கு ⁸ஆசன்னமானதாய் இருந்தாலுங் காரணமான விஷயமானது முன்னே அவராலே காணப்

2. குறித்து 3. இறந்த, எதிர்காலங்கள் 4. முன்பின்
5. நித்தியம் 6. esse 7. அறிஞர் 8. present, உண்டு.

படுகிறது என்றும், காரிய விஷயமானது பின்னே காணப்படுகிறது என்றுஞ் சொல்லத்தகும். இங்கடைவாக ஒன்றில் முகாந்திரத்தினலே ஒன்றைச் சர்வேசுரன் கட்டளையிட்டால், அதிலே பூர்வாபர மேரையை விதிக்கிறது என்கிறது வேதபாரகருக்குச் சம்மதமாச்சுது. இதெல்லாம் வெளியாகும்படிக்கு ஒன்றிலே காட்டக் கடவோம்.

(iii) **நிமித்தமும் நிமித்தசமும்:** யாதொருத்தன் மகா பாவத்தைப் பண்ணினதினலே சுரூரத் தபசைப் பண்ணினல், இந்த விஷயங்கள் இரண்டையும் கர்த்தரானவர் அனுதியாகக் கூட கண்டிருந்தாலும், காணப்பட்ட இந்த இரண்டு விஷயங்களுக்குள்ளே தபசுக்குப் பாவமானது காரணமாய் இருக்கிறதினலே பாவமானது முன்னேயும் தபசானது பின்னேயும் கர்த்தனலே காணப்பட்டுதென்று சொல்லுவார்கள். இத்தன்மையாகப் பாவத்தின் முகாந்திரத்தினலே பாவியானவனை நரகத்திலே தள்ளத்தக்கதாகக் கர்த்தரானவர் அனுதியாய்த், திருவுளமாய் இருக்கையிலே, பாவமும் நரகமும் இரண்டுக்கும் [2]**நிமித்தம்** நிமித்தசம் என்கிற மேரையானது உண்டாய் இருக்கக்கொள்ளப், பாவியினுடைய பாவத்தைக் கர்த்தரானவர் கண்ட பிற்பாடு, அவனை நரகத்திலே தள்ளத்தக்கதாகத் திருவுளமானர் என்று சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே, இப்படிப்பட்ட திவ்விய விஷயங்களுக்குள்ளே [3]"காலத்தினுடைய பூர்வாபரியம்' இல்லையென்று சொல்ல [4]"லக்ஷிய லக்ஷணத்தின் மேரையுள்ள பூர்வாபரியமானது' உண்டாயிருக்கிறதென்று அங்கீகரித்தகும்.

(iv) **நல்வினையால் மோட்சம் — நிமித்தம், நல்வினை செய்ய அருள்தர வேணும் — நிமித்தசம்:** இந்த விதமாக இதெல்லாம் வெளிப்படுத்தப்பட்டு இருக்கையிலே, மனுஷனவன் மோக்ஷ அவதியை அடையவேணும் என்கிறதுக்காகக் கர்த்தனலே அவன் உண்டாக்கப்பட்டதொழிய, ஒடுக்கமாகிற நரகத்திலே மனுஷன் விழவேணுமென்று மனுஷனைக் கர்த்தன் உண்டாக்கவில்லை என்கிற பரம ரகசியத்தின் அடைவை எவ்வளவாகிலும் கண்டுபிடிக்க வருந்தக் கடவோம். அதெப்படியென்றல், தாமாயிருக்கிற தயாபரனை கர்த்த

2. நிமித்தமாகிய காரணத்தில் நின்று தோன்றிய நிமித்தஜம் என்ற காரியம். 3. காலத்தால் முன்பின்னிலை. 4. கருத்தால் முன்பின் நிலை.

ர்னவர் தாம் அனந்த பரமானந்த சுரூபமாய் இருக்கிறுப் போலே, குறையற்ற அனந்தமாகிற மோக்ஷத்தைப் புத்தி யுடைத்தான மனுஷர் என்னப்பட்ட யாவரும் அடைய வேணு மென்று இத்தனை கோடாகோடி மனுஷரை உண்டாக்கத் தக்க தாகக் கர்த்தரானவர் அறுதியாய்த் திருவுளமானுர். அவர் அனந்த நீதி சுரூபமாய் இருக்கக்கொள்ளத், தமக்கு ஏற்றிருக் கிற புண்ணிய நடக்கைகளினுலே மோக்ஷத்தை மனுஷன் அடையத்தக்கதாக அவருக்குத் திருவுளம் உண்டாயிருந்து தொழிய மற்றப்படியல்ல. மனுஷரான பேர்கள் தங்களுக் குண்டான சுபாவ பெலத்தைக் கொண்டு அவதியாகிற மோக்ஷ சாதகமான புண்ணியங்களைப் பண்ணுகிறதுக்கு (வல்லவர் களாய் இருக்கிருர்கள் இல்லையென்று, கர்த்தரானவர் பார்த்து, அவர்கள் மோக்ஷ சாதகமான புண்ணியங்களைப் பண்ணுகிற துக்கு) வேண்டின திவ்விய சகாயங்களையும் பலபல கிருபை களையும் அவரவர்களுக்குப் பண்ணத் தக்கதாகக் கர்த்தரானவர் ஸ்திரமுள்ள மனசாயிருந்தார். இற்றைவரைக்கும் சொல்லப் பட்டதில் 'நிமித்தம், நிமித்தஜம்' என்கிற இரண்டுக்கும் உண்டான மேரையை விசாரித்தோமானுல், குறையற்ற பாக் கியம் என்கிற மோக்ஷத்தை ஆன புண்ணிய சரித்திரங்களைக் கொண்டு அடைய வேணும் என்கிறதுக்காக மனுஷனை உண் டாக்கிறது என்கிற திவ்விய திருவுளமானது பராபர வஸ்து வினிடத்திலே விசாரிக்கத்தக்க திருவுளங்களுக்குள்ளே முந்தின திருவுளமாகும். மோக்ஷ சாதகமான புண்ணியங்களை மனுஷ னுனவன் நிறைவேற்றத் தக்கதாக ஆன கிருபை முதலான திவ்விய சகாயங்களைத் தயாபரனுன கர்த்தரானவர் மனுஷ னுக்குப் பண்ணவேணுமென்கிற கருணையுள்ள கருத்தானது முந்தின திருவுளத்தில் வந்ததினுல், அப்படிப்பட்ட திவ்விய திருவுளங்கள் இரண்டிலே நிமித்தம் நிமித்தஜம் என்கிற பூர்வாபர மேரையானது விளங்கி வருகிறதென்று ஒப்புக் கொள்ளத்தக்க கிரமமாகும். அவ்வண்ணமே, முன்சொல்லப் பட்ட திவ்விய திருவுளங்கள் இரண்டும் காலப்பிரமாணத்திலே முன்னது பின்னதுகளாய் இராமல், அறுதியாகக் கடவுளி டத்திலே இருந்ததென்று சொல்ல வேண்டியிருக்கையிலே, நிமித்தம் நிமித்தஜம் என்கிற ஞாயத்தினுலே முன் சொல்லப் பட்ட திருவுளங்கள் இரண்டிலே பூர்வாபர மேரையானது கண்டுபிடிக்கலாய் இருக்கிறது.

(v) நல்வினை செய்தோனைக் காண்பது முந்தியது, மோட்சமளிப்பது அதற்குப் பிந்தியது. ஆனால், மனுஷனானவன் ஆன சுகிர்த சரித்திரங்களைக் கொண்டு மோக்ஷபாக்கியத்தைப் பேறுபெற்று அடையவேணும் என்கிறதுக்காகத் தயாபரனான கர்த்தன் ஆன திவ்விய சகாயங்களை மனுஷனுக்குக் கொடுக்கவேணும் என்கிறதை விசாரித்த பிற்பாடு, அனந்த ஞானமான சர்வேசுரனானவர் அவரவருக்குத் தாம் கொடுக்கத் தக்க சகாயங்களைக் கொண்டு அவனவன் பண்ணும் கருமங்களை ஸ்திரமாக அறிகிறவராய், மனுஷருக்குள்ளே சிலபேர்கள் தேவ சகாயங்களைக் கொண்டு, மோக்ஷ சாதகமான புண்ணியங்களைப் பண்ணுவார்கள் என்று கண்டு, அப்படிப்பட்ட புண்ணியாத்துமாக்களை மாத்திரம் அவசியமாய் மோட்ச பாக்கியத்தை அடைவிக்கிறதற்கு அநாதியாய் ஸ்திரமுள்ள திருவுளமானார் என்று அங்கீகரிக்கவேணும். அதெப்படியென்றால், மனுஷர் என்னப்பட்ட யாவருக்கும் குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷத்தைக் கொடுக்கத் தக்கதாகக் கிருபையுள்ள திருவுளமுள்ள கர்த்தரானவர், தாமே அனந்த நீதியானவராய் இருக்கக் கொள்ளத், தனது கிருபையுள்ள முன் சொல்லப்பட்ட திருவுளத்துக்குத் தப்பில்லாக் கிரமத்தோடு [1]சித்தியுண்டாக்கத்தக்கதாகப் பண்ணவேணுமொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே, எல்லாருக்கும் மோக்ஷபாக்கியத்தைக் கொடுக்கவேணும் என்கிற திவ்விய திருவுளமுள்ள கர்த்தரானவர் புண்ணியவான்களுக்கு மாத்திரம் அத்தைக் கொடுப்பார் என்று சந்தேகமற ஒப்புக்கொள்ளத்தக்க குன்றாத சத்தியமாகும். இவ்விடத்திலே சொல்லப்பட்ட விசேஷங்களெல்லாம் கடவுளிடத்திலே அநாதியாய் இருந்தாலும், புண்ணியவான்களுக்கு மாத்திரம் மோக்ஷத்தைக் கொடுப்பார் என்கிறதுக்காக மனுஷனாலே பண்ணப்படத்தக்க புண்ணியங்களுடைய திவ்விய தெரிசனைக்குப் பற்பாடு. மோக்ஷ தான விஷயக திவ்விய திருவுளமானது கடவுளிடத்திலே, முன் சொல்லப்பட்ட ஞாயங்களினாலே, பிந்தினதென்று யோசிக்கக் கடவோம். மோக்ஷதானத்திலே உண்டாயிருக்கிற திருவுளமானது சகல மனுஷரிடத்திலேயும் சித்தியாததுக்குக் காரணம் ஏதென்னில், முன் சொல்லப்பட்ட பாடங்களிலே சொன்னோம் என்கிறதினாலே, இவ்விடத்திலே, திரும்பச் சொல்லக் கணக்கில்லை. இற்றைவரைக்குஞ் சொல்லப்பட்ட விசேஷங்களினாலே

1. நிறைவேறல்

மனுஷனானவன் குறைவற்ற பாக்கியம் என்கிற மோக்ஷத்தை அடையவேணு மென்று அவனைச் சர்வேசுரன் உண்டாக்கினு ரென்று கண்டுபிடிக்கலாய் இருக்கிறதொழிய, ஒடுக்கமாகிற நரகத்திலே மனுஷனைத் தள்ளவேணும் என்கிற திருவுளமான து கர்த்தனிடத்திலே இருந்ததென்று சொல்லலாயிராது.

(vi) **பாவியின் தீவினையைக் காண்பது நிமித்தம், தீவினைக்கு நரகத் தீர்ப்பு நிமித்தஜம்.** ஆனபடியினாலே, நரகத்திலே மனுஷனைத் தள்ளவேணும் என்கிற அனந்த நீதி சுரூபமான திருவுளம் கர்த்தரிடத்திலே உண்டாயிருந்த வகையை ஆராய்ந்து கொள்ளக் கடவோம். அதெப்படியென்றால், மோக்ஷ மாகிற குறையற்ற பாக்கியத்தை மனுஷரென்னப்பட்ட யாவரும் அடைய வேணுமென்று, மோக்ஷ சாதகமான புண்ணிய விருத்தி களை எல்லாரும் பண்ணுகிறதுக்கு வேண்டின திவ்விய கிருபை யுள்ள சகாயங்களைக் கர்த்தன் கையிலே வாங்கியிருக்கிற பேர் களுக்குள்ளே அப்படிப்பட்ட திவ்விய கிருபையுள்ள சகாயங் களைக் கொண்டு சிலர் தனது சுவாதந்திரியமுள்ள மனசோடு மோக்ஷத்துக்குச் சாதகமான புண்ணியங்களைப் பண்ணுவார்கள் என்று, அனந்த ஞான சுரூபியாயிருக்கிற கர்த்தரானவர் அறுதியாய் அறிந்திருந்தாப்போலே, வேறே அனேகம் பேர்கள் கர்த்தன் கையிலே வாங்கின திவ்விய சகாயங்களைத் தங்களுக் குண்டான சுவாதந்திரியமுள்ள மனசைக் கொண்டு சட்டை பண்ணுமல், தங்களை உண்டாக்கின கர்த்தனுக்கு மகாமகாப் பட்ட கனமான துரோகங்களைப் பண்ணுவார்களென்று கர்த்த ரானவர் கண்டிருந்ததினால், அப்படிப்பட்ட பாவிகளை நரகத் திலே தள்ளத்தக்கதாகக் கர்த்தனிடத்திலே நீதியுள்ள திருவுளம் உண்டாச்சுதென்று சொல்லத் தகுமொழிய மற்றப்படியல்ல. அப்படியே, பாவிகளான பேர்களினாலே தங்களுக்குண்டான சுவாதந்திரியமுள்ள மனசைக் கொண்டு பண்ணப்படும் பாவங் கள் கர்த்தனாலே காணப்பட்டதுகளாயிருந்து, நரகத்தினுடைய ஆக்கினையை அனந்த நீதியுள்ள கர்த்தரானவர் கட்டளையிடுகிற துக்குக் காரணமாயிருந்துதென்று சந்தேகமற அங்கீகரிக்கத் தக்க குன்றாத சத்தியமாகும். ஆதலாலே, பாவங்களுடைய பாவ விஷயக திவ்விய தெரிசனமானதும், நரகத்திலே பாவி களைத் தள்ளவேணும் என்கிற திவ்விய திருவுளமுங் கடவுளிடத் திலே அறுதியாய் இருப்பதென்று சொல்லவேண்டி இருக்கை யிலே, அப்படிப்பட்ட திவ்விய தெரிசனம் திருவுளம் என்கிற

இரண்டுக்கும் நிமித்தம், நிமித்தஜம் என்கிற மேரையுள்ள பூர்வாபரியமானது உண்டாயிருக்கிறதென்று ஒப்புக்கொள்ளக் தக்க கிரமமாகும். ஆதலாலே கர்த்தனாலே காணப்பட்ட பாவமானது மனுஷனை நரகத்திலே தள்ளவேணும் என்கிற கர்த்தனுடைய திவ்விய திருவுளத்துக்குக் காரணமாய் இருந்ததென்று சொல்லக்கடவதொழிய, ஒடுக்கமாகிற நரகத்திலே மனுஷனானவன் விழவேணுமென்று தயாபரனை கர்த்தன் மனுஷனை உண்டாக்கினாரென்று சொல்லவுங் கருதவுங் கடவோமல்ல.

(vii) **வீடுபேறு நல்வினைப் பயன் என்றால், மோட்சமடைய மனிதனைப் படைத்தார் என்பது பொருந்துமா?** இந்த திவ்விய விஷயத்திலே ஒரு சந்தேகம் கேட்கிறதுக்கு இடமுண்டு. அதாவது: 'மனுஷனாலே பண்ணப்படுகிற புண்ணியமானது கர்த்தனாலே அறிவாகக் காணப்பட்டதாய் இருந்து, அது மனுஷனை மோக்ஷக் கரையேற்ற வேணுமென்கிற திவ்விய திருவுளத்துக்குக் காரணமாய் இருக்குமாப் போலே, கர்த்தனாலே காணப்பட்ட பாவியினுடைய பாவமானது பாவியை நரகத்திலே தள்ளுகிறதுக்குக் காரணமாய் இருந்ததென்று சொல்லவேணும் என்கிறதுக்குத் தப்பாது, ஆகலாலே, மனுஷனை நரகத்திலே தள்ளத்தக்கதாகக் கர்த்தரானவர் அவனை உண்டாக்கினாரென்று 'சொல்லத் தகாதது போலே, மனுஷனை மோக்ஷக் கரையேற்றவேணும் என்கிறதுக்காக மனுஷனைக் கர்த்தரானவர் உண்டாக்கினாரென்று சொல்லப்படாதென்று சொல்ல வேண்டியிருக்கிறது. அதேதனென்றால், பாவ புண்ணியமானது மனுஷனானவன் நரகத்திலே விழுகிறதுக்கும் மோக்ஷக் கரையேறுகிறதுக்கும், காரணமாய் இருக்கிறதென்று சொல்லப்படுகிறதொழிய மற்றப்படியல்ல.

விடை: இறைவன் திருவருளே மோட்சத்திற்குக் காரணம். முறையோடு அதைப் பெற நல்வினை காரணம். மோக்ஷ நரக விஷயத்திலே நம்மால் சொல்லப்பட்ட திவ்விய கிரமத்தைப் பத்தும்பத்தாய் விசாரியாதவன் இப்படிப்பட்ட சந்தேகத்துக்கு உடன்படுவானொழிய, நம்மாலே சொல்லப்பட்டதைக் குறையில்லாமல் நன்றாயறிந்தவன் அப்படிப்பட்ட சந்தேகப்படுகிறதுக்கு இடம் காணமாட்டான். அதேதனென்றால், மனுஷனுடைய புண்ணிய சரித்திரங்களைக் கர்த்தரானவர் பாராமல், தனது அனந்த கிருபையினிமித்தமாக

மனுஷனுக்கு மோக்ஷம் கொடுக்க வேணுமென்று மனுஷனை உண்டாக்கிறாரென்று சொல்லி, மீளவும் மனுஷனானவன் புண்ணியத்தைப் பண்ணி மோக்ஷக் கரையேறவேணும் என்கிறதுக்குத் திவ்விய திருவுளம் உண்டாச்சுதென்று சொல்லும்போது, மனுஷனைக் குறித்து மோக்ஷ விஷயக [1]தானத்துக்குக் கிரமமாகச் சித்தியானது உண்டாக வேணுமென்று, புண்ணியமானது அபேட்சிக்கப்படுமென்று சொல்லப்படுகிறதொழிய, மனுஷனைக் [2]கீர்த்தித்து மோக்ஷ விஷயக தானத்திலே அறுதியாய் உண்டாயிருந்த திவ்விய திருவுளத்துக்கு மனுஷனுடைய புண்ணியமானது காரணமாய் இருந்துதென்று சொல்லக்கூடாது. நரகத்திலே மனுஷனைத் தள்ளவேணும் என்கிற திவ்விய திருவுளமோவென்றால், காணப்பட்ட பாவியினுடைய பாவமானது மாத்திரம் காரணமாய் இருந்துதென்று சொல்ல வேண்டியிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே, மோக்ஷ விஷயக தானமானது [1]கிரமத்தோடு மனுஷனுக்கு இப்போது சித்திக்கத்தக்கதாகப் புண்ணிய சரித்திரமானது வேண்டியிருக்கிறதென்று சொல்லக்கூடுமொழிய, மனுஷன் பொருட்டாக மோக்ஷ விஷயக தானத்திலே அறுதியாயிருந்த திவ்விய திருவுளத்துக்குத் திவ்விய கிருபையானது மாத்திரம் காரணமாயிருந்ததினால், மனுஷனுடைய புண்ணியமானது அதுக்குக் காரணமாய் இருந்துதென்று சொல்லவும் கருதவும் கூடாது. ஆகையால், மனுஷனைக் கரையேற்றத்தக்கதாகக் கர்த்தரானவர் அவனை உண்டாக்கினாரென்று அங்கீகரிக்கப்படுமாப்போலே, மனுஷனை நரகத்திலே தள்ளவேணும் என்கிறதுக்காக அவனைக் கர்த்தரானவர் உண்டாக்கினாரென்று சொல்லவும் எண்ணவும் ஒண்ணாது. அதேனென்றால், மனுஷனானவன் தனது சுவாதந்திரியமுள்ள மனசோடு திவ்விய சகாயங்களைச் சட்டைபண்ணாமல், தன்னை உண்டாக்கின கர்த்தனுக்குக் கனமான துரோகங்களைப் பண்ணித், திவ்விய கிருபைக்குத் தான் பாத்திரமாயிராத வண்ணம், கனமான பாவங்களைப் பண்ணினபோதே, பாவியானவன் வியர்த்தமாய் இராதபடிக்குப் பாவத்தினிமித்தமாக நரக வேதனையை அனுபவித்து, அனந்தமான திவ்விய நீதிக்கு அவன் பாத்திரமாய் இருக்கத்தக்கதாகக் கர்த்தரானவர் கட்டளை இட்டருளுகிறார்

1. தானம் — கொடை: நீதியோடு மோட்சத்தை அளிக்க நல்வினை தேவை. 2. குறித்து

என்கிறது அவருடைய திவ்விய சாமார்த்தியத்துக்கும், அனந்த நீதிக்கும் மிகவும் ஒத்திருக்கிறதென்று ஒப்புக்கொள்ளக் கடவோம்.

**36 9. நரகத்தின் இயல்பு : மூன்று குணங்கள்.** இதெல்லாம் எவ்வளவாகிலும் எல்லாருக்கும் விளங்கும்படிக்கு அனந்த திவ்விய நீதிக்குப் பாத்திரமாயிருக்கிற பாவியானவன் நரகத்திலே அனுபவித்துக்கொண்டு வருகிற கஸ்தி யுபாதைகளானதுகள் மனோவாக்குக்கு எட்டாததுகளா யிருந்தாலும், கரைகாணாத அக்கினிச் சமுத்திரத்தைக் குறைக்கொள்ளியினாலே காட்டுகிற மேரையாக நரகத்தினுடைய கஸ்தி யுபாதைகளுக்குள்ளே சிலதுகளை மாத்திரம் எடுத்துக்காட்டினதினால், அந்தக் கஸ்தி யுபாதைகள் தவிர நம்மால் வர்ணிக்கப்படாத வேறே அனேக நோவு துக்கங்கள் உண்டாயிருக்கிறதென்று கண்டுபிடிக்கக் கடவோம். ஆனால், அனந்த ஞானமான கர்த்தரானவர் நரகத்திலே விழத்தக்க பேர்களை அறிந்தவரா யிருந்து அவர்களை உண்டாக்குவானேன்? என்கிற அபத்தக் கேள்விக்கு முன் ஆன பிரத்தியுத்தாரஞ் சொன்னோம் என்கிறதினால், இவ்விடத்திலே அத்தைத் திரும்பச் சொல்லுகிறதுக்குக் கணக்கில்லை. அவ்வண்ணமே நரகத்திலே பிசாசுகள் முதலான பாவாத்துமாக்கள் அனுபவித்துக்கொண்டு வருகிற கஸ்தி வாதைகளுடைய விஷயங்களிலே அறியவேண்டிய மூன்று விசேஷங்களுண்டு. (i) அதில் நரகத்தினுடைய கஸ்தி யுபாதைகளானதுகள் எத்தனை வகைக்குள்ளே அடங்கியிருக்கிறதென்று அறியத்தக்க முந்தின விசேஷமாகும். (ii) சரீரமில்லாத பிசாசு முதலான நரசீவன்கள் சரீரமுள்ள பொருளினாலே கஸ்தி வாதைகளைப் படுகிற விதமானது அறியத்தக்க இரண்டாம் விசேஷமாகும். (iii) நரகத்திலே விழுந்தபேர்கள் அதிலே எத்தனை காலம் இருக்கப் போகிறார்களென்று நிச்சயிக்கிறதென்கிறது தெளியத்தக்க மூன்றாம் விசேஷமென்று சொல்லப்படும். இதெல்லாம் தனித்தனியே சொல்லிக் காட்டி, அதுகள் இப்படியிருக்கவேணும் என்கிறதுக்கு ஆன ஞாயங்களைக்கொண்டு சுருக்கமாக ஒப்புவிக்க வருந்தக்கடவோம்.

**36.10. நரகவேதனை ஆறு வகைப்படும்.** பாவிகளான பேர்கள் தங்களை உண்டாக்கின அளவில்லாத கர்த்தனை ஆங்காரத்தினாலே நிர்ந்தைபண்ணி, அருவருக்கப்படத் தக்க

நீசமான போக பாக்கியங்களின் நிமித்தமாக உன்னத மோக்ஷத்தின் பரமானந்தத்தை மனசு பொருந்திப் போக்கடித்தபோதே, கர்த்தனுக்கு வெறுக்கப்படத்தக்க நீசத் துரோகிகளாய்ச் சகல ஸ்தலங்களைக் காட்டிலும் கீழ்த்தரமான நரகத்திலே எண்ணப்படாத துக்க வாதைகளை அனுபவிக்கிறதென்கிறது குறையில்லா ஞாயத்துக்கு ஏற்றிருக்கிறது என்கிறதுக்குச் சந்தேகமில்லை, அப்படிப்பட்ட பாவிகள் அனுபவித்துக்கொண்டு வருகிற கஸ்தி வாதைகள் ஆறு விதங்களாகப் பிரியுமென்று சொல்லலாயிருக்கிறது. அதாவது: (i) உக்கிரமான அக்கினி இடைவிடாத தகனத்தின் நிமித்தமாகப் பொறுக்கப்படாத உஷ்ணமானதும், (ii) புத்திக்குள்ளே அடங்காததாயிருக்கிற குளிரினுடைய வாதையும், (iii) கனமான அந்தகார உபத்திரமும், (iv) மனதை நாசமாய்ப் போகப்பண்ணுமல் மனசை இடைவிடாமல் குடைகிற புழுக்களும், (v) முகியாத பரமானந்தமாகிற மோக்ஷத்தைப் போக்கடித்த துக்கமும், (vi) அப்படிப்பட்ட கஸ்தி வாதைகளை விட்டு அதில் நின்று பாவியானவன் புறப்படாத நிச்சயத்தினாலே வருகிற அவநம்பிக்கையும், இந்த ஆறு வகையுள்ள வாதைகளை அவனவன் அறிந்து, அப்படிப்பட்ட ஸ்தலத்திலே தான் விழாதபடிக்கு, மெய்யான சர்வேசுரன் எப்படிக்கொத்தவர் என்று அறிகிறதுக்கும், பாவத்தின் கைப்புள்ள சுகங்களை வெறுத்துக், கர்த்தனுடைய திருச்சித்தத்துக்கு ஏற்றிருக்கிற புண்ணிய நடக்கைகளாய் நடக்கிறதுக்கும் துணிந்து, வருந்தவேணும் என்கிறதுக்காக, முன் சொல்லப்பட்ட ஆறு வகையுள்ள வாதைகளைத் தனித் தனியே இன்னதென்று சுலபமாகச் சொல்லிக் காட்டக் கடவோம்.

(i) பொறுக்க முடியாத வெப்பம்: பூமியிலேயும் நரகத்திலேயும் இருக்கிற அக்கினி இரண்டுக்கும் பரம ஞானிகளாயிருக்கிற பேர்கள் சொல்லுகிற வித்தியாசத்தை விசாரிக்கும்போது, நரகத்திலே இருக்கிற அக்கினிக்குப் பூமியிலேயிருக்கிற அக்கினியானது சித்திரத்திலே எழுதப்பட்ட அக்கினியென்று சொல்லத்தகும். அதேதென்றால், நரகத்தினுடைய அக்கினியானது பிரகாசம் இல்லாததுமாய்ச், சரீரமில்லாத பொருள்கள் பண்ணின பாவங்களின் அளவாக அதுகளைத் தகன முதலான கஸ்திகளைப் படுத்தத்தக்க கர்த்தனுடைய நீதித் திருவுளப்படி வல்லதுமாய் எப்போதும் இடைவிடாத

தகனம் பண்ணுகிறதுக்கு விறகு முதலானதுகளை அபேக்ஷியாததுமாய், ஒன்றினாலே யாதாலும் [1]சமியாததுமாய் இருக்கக் கொள்ள, அனந்த நீதி சுரூபமான திவ்விய திருவுளத்துக்கு அற்புத மேரையாக அது கயிங்கிரியம் பண்ணிக்கொண்டு வருகிறதொழிய மற்றப்படியல்ல. தேவவிஷயக பத்தியாகிற திவ்விய அக்கினியினாலே மோக்ஷவாசியாயிருக்கிற பேர்கள் மனோவாக்குக்கு அகோசரமான பரமானந்தத்தை அனுபவிக்கிறார்களே, அப்படிப்பட்ட குறையற்ற பாக்கியத்தைத் தனது சுவாதந்திரியமுள்ள மனதாலேசக்கொண்டு போக்கடித்த பாவிகள் [2]திவ்விய விஷயக வர்மத்தோடேகூட நீச நரகத்தினுடைய உக்கிரமமான அக்கினிக்குள்ளே புதைக்கப்பட்டு, அதிலே [3]க்ஷயமில்லாமல் பரிபூரணமாக இடைவிடாமல் ஒருகண்டசீராய் வெந்துபோகிற தென்கிறது பழுதற்ற நீதிக்கு ஏற்றிருக்கிற தென்று கேட்க வேணுமோ?

(ii) **சொல்ல முடியாத குளிர்:** முழுதும் நிர்ப்பாக்கியமான பாவிகள் சொல்லப்படாத உஷ்ணத்தில் நின்று எண்ணிக்கைக்குள்ளே அடங்காத குளிரின் உபத்திரவத்தை அனுபவிக்கிறார்களே. அதுக்குக் காரண மேதென்னில், தேவவிஷயக பத்தியாகிற திவ்விய அக்கினியை அருவருக்துப், பாவமான அக்கினியிலே வேகத்தத்ததாகப் பாவிகள் இச்சைப்பட்டதுக்குப் பொறுக்கப்படாத குளிரினுடைய அனுபவமான துக்கு ஒத்திருக்கிற ஆக்கினையாய் இருக்கிறதென்று சொல்லவேண்டி இருக்கிறது. ஒருவிடத்திலே யாதாலும் தேற்றரவு காணாத படிக்குத் திவ்விய சாபம் பெற்ற பாவிகள், அக்கினிக்குள்ளே வேகும்போது குளிருபத்திரவம் அனுபவத்தினாலே 'வாசி உண்டாயிருக்கிற தென்று எண்ணிக்கொண்டு வருகிறார்கள். மீளவும் குளிரினுடைய வாதையை அனுபவிக்கும்போது, அதைப் பொறுக்க மாட்டாமல், அக்கினிக்குள்ளே வெந்துபோனால் தாவிலையென்று விசாரிக்கிறார்கள்.

(iii) **பேரிருள்:** கனமான அந்தகாரத்தினாலே சூழப்பட்ட மதிகெட்ட பாவிகளான பேர்கள், கனமான துக்கத்தையும் மனஸ்தாபத்தையும் தங்களுக்கு வருத்துவிக்கிற விசேஷங்களைக் கண்டுவருகிறார்களொழிய, அற்பமாகிலும் சந்தோஷத்தினுடைய மின்னலானது ஒரு க்ஷணமாகிலும் அவர்களிடத்திலே

1. அணையாதது 2. கடவுளைப் பகைத்தல் 3. அழிவு 4. குறைவு

பின்னமாட்டாது. ஆண்டவர் சித்தத்தின்படியே நடக்கிறதுக்கு வேண்டியிருக்கிற தெளிவுகளைத் தள்ளிப்போட்டதினால், அப்படிப்பட்ட கனமான அந்தகாரத்திலே மூடப்பட்ட பாவிகள் சகலத்திலும் ஞாய நீதியை அறியாமல் எல்லாரும் விபரீதமாய் எண்ணிக்கொண்டு வருகிறார்களொழிய மற்றப் படியல்ல.

(iv) மனத்தைக் குடையும் புழு: இதன்றியே, பாவிகளான பேர்கள் முன்செய்த பாவங்களை இடைவிடாமல் கண் முன்னே இருக்கிறாப்போலே கண்டுகொண்டு வந்து, அதினாலே வருகிற மனஸ்தாபமானது திருத்தி அடையாமல், என்றென்றைக்கும் குடைகிற புழுவானதுபோலே ஒருகண்ட சீராய் அவர்களுடைய மனசை அறுத்துவரும் என்கிறதுக்குத் தப்பாது. இது குறையற்ற ஞாயத்துக்கு ஒத்திருக்கிற ஆக்கினையென்று சொல்லக்கடவது. அதேதென்றால் பாவிகளான பேர்கள் தங்களுக்குத் தயாபரனான கர்த்தன் பண்ணின எண்ணப்படாத உபகாரங்களை முற்றும் மறந்து, அருவருக்கப்படத்தக்க சுகங்களை அனுபவிக்கவேணும் என்று கர்த்தனுக்கு நினைத்த துரோகங்களுடைய [1]ஸ்மரணந்தானே இடைவிடாத துக்கத்தை அவர்களுடைய மனசுக்கு வருத்திவிக்கிறதினால், பாவிகளுடைய மனசை அந்த ஸ்மரணந்தானே திருத்தி அடையாமல் என்றென்றைக்கும் குடைகிற புழுவானதென்று சொல்லப்படும்.

(v) மோட்சத்தை இழந்த வருத்தம்: இதன்றியே, பாவியானவன் பாவங்களைப் பண்ணுகிறதிலே நீர்மேற் குமிழிக்குச் சரியாக ஒரு க்ஷணத்திலே மாத்திரம் நின்று அழிந்து போகிறதுமாய், மகாமகாப்பட்ட துக்கங்களுடைய கலப்புள்ளதுகளுமாய், அருவருக்கப்படத் தக்கதுகளுமாய் இருக்கிற நீச போக பாக்கியங்களை ஆசைப்பட்டு, என்றென்றைக்கும் நிற்கிறதுமாய்ப், பொல்லாப்பின் கலப்பில்லாததுமாய், வெகுமான முதலான சகல நன்மைகளுடைய விஷயங்களிலே குறையற்ற பாக்கியமானதுமாய் இருக்கிற மோட்சத்தின் பரமானந்தத்தைப் போக்கடித்த சேதத்தை நினைக்கிறதினால், நீதியுள்ள கர்த்தன் பேரிலே அவன் பரிபூரண பகையை வைத்துச் சொல்லப்படாத மனஸ்தாபத்தை அனுபவித்துக்கொண்டு வருகிறானே. இதெல்லாம் பழுதற்ற நீதிக்கு ஒத்திருக்கிறது என்

1. நினைவு

கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால், பூமியிலே திரிகிற பாவியானவன் பாவத்துக்கு உடன்படாதபடிக்குத் தனது மனசைத் தான் பண்ண வேண்டின [1]நிக்கிரகத்தின் நிமித்தமாக வருகிற கொஞ்சக் கஸ்திக்குப் பின்வாங்கிப், புத்தியில்லாத மிருகத்தைக் காட்டிலும் அவன் மதிகெட்டவனாய்க், குறையற்ற செல்வமாகிற மோக்ஷத்தைச் சட்டைபண்ணாமல், மிருகங்களைப் போலே நீசமான சுகங்களை மாத்திரம் அனுபவிக்கிறதுக்கு மிகவும் வருந்தினபோதே, அப்படிப்பட்ட வியர்த்தமான வருத்தத்துக்கு மோக்ஷத்தைப் போக்கடித்த துக்கமுள்ள வருத்தமானது தப்பில்லாத ஞாயத்துக்கு ஒத்திருக்கிற ஆக்கினையாய் இருக்கிறதென்று சொல்லவேணுமொழிய மற்றப்படி அல்ல.

(vi) அவநம்பிக்கை: இந்தவிதமாக நரகத்திலே விழுந்த பாவியானவன் தான் அனுபவித்துக்கொண்டு வருகிற எண்ணப்படாத கஸ்தி வாதைகளும், அசுத்த நோவுகளும் ஒருகண்டேராய் ஒரு எள்பிரமாணமானாலும் குறையாமல், என்றென்றைக்கும் நிற்குமொழிய ஒருக்காலும் ஒழியாதென்று நிச்சயமாய் அறிந்திருக்கிறதினால், அப் பாவியானவன் தன்பேரிலே தான் முழு வர்மமாயிருந்து, தான் தன்னைக் கெடுக்கவும் தான் ஒன்றுமில்லாததாய்ப் போகவும், அக்கிரமமான ஆசைப்படுகிறான் என்றிருக்கையிலே, இப்படிப்பட்ட பொல்லாப்பானாலும், வேறே யொரு அற்ப நன்மையென்கிலும் தனக்கு வரமாட்டாது என்கிற நம்பிக்கையில்லாமல் இருக்கிறான் என்கிறதுக்குத் தப்பாது. இதிலே ஆண்டவனுடைய நீதி மிகவும் விளங்குமென்று சொல்லத்தகும். அதேதென்றால், மோக்ஷராச்சியத்திலே ஒரு அற்பமாகிலும் பொல்லாப்பின் கலப்பில்லாததுகளான எண்ணப்படாத நன்மைகளை அடையலாமென்று மனுஷனானவன் நம்புகிறதுக்குத் தயாபரனான கர்த்தரானவர் இடமுண்டாக வேணுமென்று, மனோவாக்குக்கு எட்டாததாய் இருக்கிற அனேக கிருபைகளைப் பண்ணிக்கொண்டு வந்தார் என்று அறிந்திருக்கிறோமே, அப்படிப்பட்ட தேவ சகாயங்களை எல்லாம் பாவியானவன் நினையாமல், பரலோகம் உண்டென்றும் பரலோகத்திலே தனக்கு நன்மை வரலாமென்றும் நம்பிக்கை இல்லாதவன் போலே மிருகங்களுக்கும் மனுஷனுக்கும் சாதாரண மேரையாக அனுபவிக்கப்படத்தக்க போகபாக்கியத்தைப்

1. ஒறுத்தல்

பார்த்து, அதே மாத்திரம் தேடத்தக்க நன்மையென்றும், அதொன்றே இச்சிக்கப்படத்தக்க பாக்கிய சுகமென்றும் நிச்சயமுள்ளவன் போலே, பூலோகத்திலே நடக்கிறான் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. அப்படிப்பட்ட பாவியானவன் தான் அடையத்தக்க நன்மை விஷயங்களில் திவ்விய கிருபையை நம்பாமல் இருந்ததுக்கு, நரகத்திலே விழுந்த அப்படிப்பட்ட பாவி ஒரு அற்ப நன்மையென்கிலும், தனக்கு வரவேணுமென்று தான். இச்சிக்கிற பொல்லாப்பானாலும், தனக்கு வரமாட்டாதென்கிற அவநம்பிக்கையானது குறையற்ற நீதி ஞாயத்துக்கு ஒத்திருக்கிற அபராதமென்று சந்தேகமற அங்கீகரிக்கத்தக்கதாகும்.

**36.11. ஐம்பொறிகளால் வாதை:** அவ்வண்ணமே, நரகமாகிற துக்கசாகரத்திலே விழுந்த பாவாத்துமாக்களான பேர்கள், பிசாசுகளோடேகூட முன்சொல்லப்பட்ட கஸ்தி நோவுகளை யனுபவித்துப், பிசாசுகளினாலே வேறே அனேக விசேஷ நிர்ப்பந்த உபத்திரங்களைப் படுகிறார்கள் என்கிறதுக்குச் சந்தேகமில்லை.(1) அதேதென்றால், பூலோகத்திலே பாவிகளான பேர்கள் திரியும்போது, கண்ணாலே எண்ணப்படாத பாவங்களைப் பண்ணினதுக்கு ஆக்கினையாக நரகத்திலே பலபல அகோரமான ரூபங்களைக் கொண்டிருக்கிற பிசாசுகளைக் காண்பார்கள் என்று ஒப்புக்கொள்ளத்தக்க விசேஷமாகும். (2) நரகத்திலே இருக்கிற பேர்களுடைய இடைவிடாத 'அய்யோ' என்கிற சப்தமானதுகளும், ஓயாத அழுகைக் குரல்களும், அவரவர்கள் சர்வேசுரனைச் சொல்லுகிற தூஷண வார்த்தைகளும் நரகத்திலே விழுந்த பாவிகளினாலே கேட்கப்படுமே. அவர்கள் பாவத்துக்கடுத்த [1]கானங்களையும் பரியாச வார்த்தைகளையும் சிரிப்பு முதலான சரச அதப்பியங்களையும்[2] காதால் கேட்டதுக்கு அது ஞாயமுள்ள அபராதமென்று அங்கீகரிக்கத்தக்கதாகும். (3) இது தவிரப், பூமியிலே இருக்கிற பாவிகளான பேர்கள் சுகத்தோடே பாவம் பண்ண வேணுமென்று பலபல பரிமளங்களையும் [3]இஷ்டகந்த வாசனைகளுள்ள புஷ்பாதிகளையும் முகர்ந்து [4]பார்த்ததுக்கு ஆக்கினையாகச், சகிக்கப்படாத துர்க்கந்த நாத்தங்களை நரகத்திலே அனுபவிக்கிறார்கள் என்கிறதுக்குத் தப்பாது. (4) இத்தன்மையாக நரகத்திலே விழுந்த

1. காரணங்களையும் (பா.) 2. ஒழுக்கக்கேடு
3. நறுமணம் 4. பாவத்துக்கு (பா. பே.)

பாவிகள் மிகவும் அரோசகமான கைப்பை விழுங்கிருப்போலே இருக்கிறதென்கிறதும், மிகவும் உபாதிக்கிற பசி தாகத்தினுடைய கஸ்திகளை இடைவிடாமல் அனுபவிக்கிறது என்கிறதும், பலபல பாவங்களுக்கு உபயோகமாக மகா மகாப்பட்ட ருசியுள்ள பக்ஷணங்களை அவர்கள் பக்ஷித்தகதுக்கும், [1]சுராபானம் முதலான [2]நீசித பானங்களைப் பண்ணினதுக்கும், அனியாயமாக்கப் போசனப் பிரியராயிருந்ததுக்கும் தப்பில்லாக் கிரமமுள்ள ஆக்கினையாய் இருக்கிறதென்று கேட்கவேணுமோ? (5) இப்மேரையாகப், பட்டுப் பட்டாவளி முதலான வஸ்திரங்களைப் பாவிகளான பேர்கள் பூமியிலே அனியாயமாக உடுத்ததுக்கும், சுக செல்வமுள்ள மிருது சயனங்களிலே பாவமுள்ள சுகங்களை அனுபவித்ததுக்கும், அப்படிப்பட்ட பாவிகள் நரகத்திலே உக்கிரமான அக்கினியிலே சூழ்ந்திருக்கப்பட்டதுகளாய் இருக்கிறது என்கிறதும், அக்கினி மயமாயிருக்கிற கட்டில்களிலே கட்டாயமாகப் படுக்கையிலே பிசாசுகளினாலே கடினமான அடிகளைப் படுகிறதென்கிறதும் கிரமமுள்ள அபராதமாய் இருக்கிறதென்கிறதுக்குச் சந்தேகமில்லை.

**36.12.** இராசாக்கள் முதலிய துரைகள் படும் பாடு: இம்மருவாதியாகப் பரிபூரண அயிசுவரிய தன சம்பத்துக்களினாலே கன கர்வமுள்ள ராசாக்கள் முதலான பிரபுக்கள் பூமியிலே இருக்கிற ஏழை சனங்களுடைய குடிகெடுத்து, ஊரார் உடைமைகளை அனியாயமாய் அபகரித்ததினால், தங்களுக்கு அயிசுவரியத்தின் அபிவிருத்தியை வரப்பண்ணினதுக்கும், நீதி ஞாயத்தின் கிரமத்தைப் பாராமல் தோஷத் துரோகங்களுக்கு ஆன ஆக்கினைகளை இடாமல் [3]உதாசன புத்தியுள்ளவர்களாய் இருந்ததுக்கும், அல்லது அனியாயமாய்க் குற்றமில்லாமல் அவரவர்களுக்கு ஆக்கினை இட்டதுக்கும், இப்படிப்பட்ட ராசாக்கள் முதலான துரைகள் நரகத்திலே விழுந்து எறிந்து போட்ட நீசர்களுமாய்ச் சகலத்திலே சேத பாதங்களையும் குறைகளையும் முழுக் கேடுகளையும் அனுபவிக்கிற பேர்களுமாய் இருக்கிறதென்கிறதும், எண்ணிக்கைக்குள்ளே அடங்காத கடூரமான ஆக்கினைகளை நிஷ்டூரமான பிசாசுகளினாலே படுகிறதென்கிறதும் கிரமமுள்ள மேரை என்று அங்கீகரிக்கக் கடவோம்.

1. கள்குடித்தல் 2. இழிவான 3. கவனமின்மை

இற்றைவரைக்கும் நம்மால் கொஞ்சத்துக்குள்ளே சொல்லப்பட்ட கஸ்தி நோவுகளும் தவிர, வேறே அனேக வாதைகளையும் நிர்ப்பந்தங்களையும் நரகத்திலே விழுந்த நிர்ப்பாக்கியரான பாவிகள் அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள் என்கிறதுக்குத் தப்பாது. ஆனால் இப்படிப்பட்ட விஷயங்களிலே பண்ண வேண்டியிருக்கிற விஸ்தாரப் பிரசங்கத்தை விட்டுச் சரீரமில்லாத பிசாசுக்கள் முதலான நரசீவன்கள் சரீரியான அக்கினி முதலான பொருள்களினாலே வாதைப்படுகிற மேரையையும், நரக சம்பந்தமாய் இருக்கிற கஸ்தி நோவுகளைப் பாவிகளான பேர்கள் என்றென்றைக்கும் அனுபவிக்கப் போகிறார்களென்கிற குன்றாத சத்தியத்தையும், ஆன ஞாயங்களினாலே ஒப்பச் சொல்ல வேண்டியிருக்கிறது. இதெல்லாம் வருகிற பாடங்கள் இரண்டிலே கர்த்தனுடைய கிருபாகடாட்சத்தினாலே [1]சங்க்ஷேபமாக வெளிப்படுத்த வருந்தக்கடவோம்.

முப்பத்தாறும் பாடம் முற்றும்.

(கிரந்தம்) ருஈசமஎ *

## முப்பத்தேழாம் பாடம்

**37.1.** பாவக் குருட்டாட்டத்தால் நரகம் பற்றிய தவறான அறிவு: தெளிவற்ற பாவிகள் மோக்ஷநிருபணம் பண்ணுகிறதிலே அனேக அபத்த விசேஷங்களையும் நீதி ஞாயத்துக்கு ஒவ்வாததாய் இருக்கிற பலபல பொய்யான வகைகளையும் வெறுமனே கற்பித்தார்களென்று இருபத்து மூன்றாம் பாடம் துவக்கி [2]அனுபந்தமாய் வருகிற அஞ்சு பாடங்களிலே நம்மால் ஒப்பிவிக்கப்பட்டாப்போலே ஆச்சுது. இப்படிப்பட்ட தெளிவற்ற பாவிகளான பேர்கள் மோக்ஷ விஷயத்திலே பலபல தப்பறை விசேஷங்களை வெறுமனே குளறித் தாறுமாறாய்க் கற்பித்தாப்போலே, நரகத்தை நிருபிக்கிறதிலே அனேக தப்பறை விசேஷங்களை ஸ்தாபிக்க வருந்துகிறார்கள். அந்தத் தப்பறைகளுக்குள்ளே இரண்டு தப்பறைகளைத் தெரிந்து கொண்டு, அதுகளுக்கு விருத்தமான சத்தியத்திலே அங்கீகரிக்கத்தக்க மேரை இன்னதென்று அடைவாக வெளிப்படுத்தும்போது, அத்தாலே சொல்லப்பட்ட இரண்டு தப்பறை விசேஷங்களானதுகள் [3]ஆக்ஷேபிக்கப்படும் என்கிறதுக்குத் தப்பாது.

1. சுலபமாக (பா. பே.) 547 * 2. தொடர்ச்சியாய் 3. மறுக்கப்படும்

அதெப்படியென்றால், தெளிவற்ற மனுஷனானவன் பண்ணின பாவங்களினாலே மங்கிப்போன மதியுடைத்தானவனாய் மிருகங்களைப் போலே சரீரத்தின் கண்ணாலே காணப்பட்ட [3]கண்டிப்பான விஷயங்களை மாத்திரம் அறிகிறானேயழியச், சரீரமில்லாமல் பொருளானது இருக்கலாமென்றும், பொருளானது சரீரமில்லாமல் சுக துக்கத்தை அனுபவிக்கிறதுக்கு வல்லதாய் [4]இருக்கிறதென்றும் கண்டுபிடிக்க மாட்டுகிறானில்லை. இது காரணமாகச் சரீரமில்லாத பொருள் உண்டென்று அறிகிறதுக்கும், சரீரமில்லாத பொருள்களை நேசிக்கிறதுக்கும் அநுவநக்கிறதுக்கும் வல்லவனாயிருக்கிற மனுஷன் தன்னாலே தானே கெட்டுப்போய்ப், புத்தியில்லாத செந்துக்களைக் காட்டிலும் ஞாயத்தின் நிமித்தமாக மிகவும் உத்தம பொருளாயிருந்தாலும் ஞான பெலமானது தன்னிடத்திலே வியர்த்தமாயிருக்கப் பண்ணுகிறதினால், ஞானமில்லாத செந்துக்களைக் காட்டிலும் கெட்டுப்போனானென்று சொல்லத்தகும்.

**37.2. நரகம் பற்றி இரு தப்பறைகள்:** (i) இப்படிப்பட்ட தெளிவற்ற, பூமியிலே திரிகிற மனுஷனானவன் பண்ணின புண்ணியங்களின் நிமித்தமாகப் பலனை அனுபவிக்கிறதுக்கு இல்லாத சொர்க்கமானது உண்டாயிருக்கிறதென்று வெறுமனே சம்மதித்து, அத்தை அடைந்திருக்கிற சீவனானது [5]தேஜஸ சரீரத்தைக் கொண்டிருக்கிறதென்கிற தப்பறை விசேஷத்தை அங்கீகரிக்குமாப்போலே, பாவத்தின் நிமித்தமாக நரகத்திலே விழுந்த சீவனானது ஒரு சரீரத்தைக் கொண்டிருக்கிறதென்று சொல்லிக்கொண்டு வருகிறான். அப்படிப்பட்ட சரீரத்துக்கு 'யாதன சரீரம்' என்கிற நாமத்தைக் கற்பித்து, அப்படியே வெறுமனே கற்பிக்கப்பட்ட சரீரமானது பூதியங்களினாலே கூடின பொருளாயிருக்கிறதோ, அல்லது ஆகாச முதலான வேறே [6]திரவியங்களினாலே கூடின [7]பதார்த்தமாய் இருக்கிறதோ வென்று சொல்லாதபோதே, பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேணுமென்கிற மேரையை இந்தத் தப்பறை விசேஷத்தைக் கற்பிக்கிறதிலே மறந்துபோனான் என்று சொல்லக்கடவோம். (ii) இதன்றியே, இப்படிப்பட்ட யாதன சரீரத்தைக் கொண்டிருக்கிற சீவனானது சிறிது காலமாத்திரம் நரகத்திலே கஸ்திவாதைகளை அனுபவித்த பிற்பாடு, அப்படிப்

3. material 4. இருக்கிறதை (பா. பே.) 5. ஒளிஉடல்
6. Substance 7. பொருள்

பட்ட சீவனுனது திரும்பப் பூமியிலே வந்து கல்லாய், மரமாய், ஊர்வன, பறப்பன செந்துவாய், விலங்கு சாதியிலுட்பட்ட மிருகமாய், மனுஷனுய்ப் பிறக்குமென்று, சத்தியத்தைக் கண்டு பிடியாத மனுஷனுனவன் சொல்லிக்கொண்டு வருகிருனெழிய மற்றப்படியல்ல.

**37.3. இவற்றின் மறுப்பு:** இப்படிப்பட்ட விசேஷங்கள் இரண்டும் தப்பறை விசேஷங்களாய் இருக்கிறதென்று போன பாடங்களிலே நம்மால் சொல்லப்பட்ட ஞாயங்களினுலே எளிசாய்க் கண்டுபிடிக்கலா யிருக்கிறது என்கிறதுக்குத் தப் பாது. (1) அதெதென்றுல்,நரசீவனுனது நிற்கிறதுக்கும் தனது ஞான விருத்திகளைப் பண்ணுகிறதுக்கும், வேணும் வேண்டாம் என்கிறதுக்கும் சரீரம் தேவையில்லையென்று ஒப்பச்சொன்ன போதே, தேஜஸ யாதன சரீரம் இரண்டும் வெறுமனே கற்பிக் கப்படுகிற தென்று ஒப்பிவித்தாப்போலே யாச்சுது. (2) இது தவிரத் தனது [1]பவுதிக சரீரத்துக்கு மாத்திரையாய் இருக்கிற சீவனுனது வேறே பவுதீக சரீரத்தோடே கூட சுபாவமாய் இருக்கமாட்டாதென்று ஒப்புவிக்கிற நியாயங்களினுலே தேஜஸ யாதன சரீர முதலான வெறுமனே கற்பிக்கப்பட்ட வேறே சரீரங்களைச் சீவனுனது கொண்டிருக்க மாட்டாதென்று ஸ்தா பிக்கப்பட்டு தென்று சொல்லத்தகும். (3) இந்தவடைவாக மறுசென்ம மில்லையென்று போன பாடங்களிலே நம்மால் ஒப்பி விக்கப்பட்ட ஞாயங்களினுலே மோக்ஷக்கரை யேறுகிற சீவனு னது பரமானந்தத்தை என்றென்றைக்கும் அனுபவிக்கும் என் றும், பாவத்தின் நிமித்தமாக நரகத்திலே விழுந்த சீவனுனது ஒருக்காலும் முடியாத கஸ்தி நோவுகளைப் படுகிறதென்றும் ஒப்புவித்தாப்போலே ஆச்சுது. (4) ஆகலாலே, நரக விஷயத் திலே சந்தேகமற அங்கீகரிக்கத்தக்க சத்தியமாவது: மனுஷ னுடைய மரணத்து நிமித்தமாக மனுஷ சீவனுனது தனது சரீரத்தைப் பூமியிலே விட்டுச் சரீரமில்லாமல் நரக வேதனையை என்றென்றைக்கும் அனுபவிக்குமொழிய, ஒருக்காலும் அதிலே நின்று புறப்படத்தக்கதில்லை என்கிறது தேவோக்கித்த வேதப் பிரமாணத்தினுலேயும், பல ஞாயங்களினுலேயும் குன்றுத சத்தியமாயிருக்கிற தென்று அற்பமாகிலும் சந்தேகமில்லாமல் முழுமனதோடு அங்கீகரிக்கக் கடவோம்.

1. Physical body

**37.4.** *சரீரியான தீ, அசரீரிகளான பேயையும் ஆன்மாவையும் எரிப்பது எப்படி?* சரீரமில்லாத பொருளாகிற பிசாசுகளும் மனுஷனுடைய மரணத்தின் நிமித்தமாகத் தனது சரீரத்தை விட்டு வேறே சரீரத்தைக் கொண்டிராத நரசீவன்களும், நரகத்திலே 'சரீரியான அக்கினி முதலான திரவியங்களினுலே மனோவாக்குக்கு எட்டாததாய் இருக்கிற கஸ்தி நோவுகளை அனுபவிக்கிறதென்று கர்த்தரானவர் தனது வேதத்திலே திருவுளம்பற்றின போதே, இதிலே அற்பமாகிலும் சந்தேகப்படுகிறதுக்கு இடமில்லை. ஆனுல், சரீரமில்லாத பொருள் சரீரமுள்ள வஸ்துக்களைக் காட்டிலும் மிகவும் உத்தம பொருளாயிருந்து, சரீரமுள்ளதுகளை ஒருவிதமாக ஆளுகிற துக்குத் தப்பில்லாக் கிரமம் உண்டாயிருக்கையிலே, சரீரமில்லாத அப்படிப்பட்ட உத்தம பொருளானதுகள் தனக்கு மிகவும் கீழ்த்தரமான சரீரமுள்ள பொருள்களினுலே கஸ்தி வாதைகளை அனுபவிக்கிற மேரை இன்னதென்று கண்டுபிடிக்கிறது என்கிறது அரிது.

**37.5.** விடைகள்: *(1) தீ எரிப்பது என்பது தவருன எண்ணம்:* ஆனபடியினுலே, வித்தியாபாரகராய் இருக்கிற பேர்கள் நிச்செயம் பண்ணத்தக்க அருமையான இப்படிப்பட்ட விஷயத்திலே பலபல மேரைகளைச் சொல்லிக்கொண்டு வருகிறுர்கள். அவ்வண்ணமே, சரீரமில்லாத பிசாசுகளையும் நரசீவன்களையும் நரகத்தினுடைய சரீரமுள்ள அக்கினி முதலானதுகள் மெய்யான ²தகனுதி ³ஆக்கினை நிமித்தமாக வாதியாது இருந்தாலும், அப்படிப்பட்ட சரீரமில்லாத பேர்கள் தானே தாங்கள் நரகத்தின் அக்கினியின் தகனத்தினுலே கஸ்தி வாதைகளை அனுபவிக்கிறுர்களென்று 'விசாரிக்கிறதினுல், சொல்லப்படாத துக்கத்தையும் மனஸ்தாபத்தையும் அவர்கள் அடைகிறுர்களென்று சிலர் சொல்லிக்கொண்டு வருகிறுர்கள். அப்படிச் சொல்லும்போது, அக்கினி முதலானதுகள் சரீரமில்லாத பொருள்களை வாதியாமல் இருக்கையிலே, சரீரமில்லாத பொருள்கள் தங்களை அக்கினி முதலானதுகள் வாதிக்கிறது என்று நினைக்கிற பொய்யான விசாரமாகிற ⁴மயக்கமானது சரீரமில்லாத பேர்கள் நரகத்திலே கஸ்தி வாதைகளை அனுபவிக்கிறதுக்குக் காரணமாய் இருக்கிறதென்று சொல்ல

1. Corporal fire  2. எரித்தல் முதலிய  3. கினை  4. Illusion

வேணுமொழிய, சரீரமுள்ள அக்கினி முதலானதுகள் தகன வகைகளினாலே கஸ்தி வாதை நோவுகளைப் படுத்துகிறதென்று சொல்லக்கூடாது.

(2) விடை 2. தீ அவர்களைச் சிறைப்படுத்துகிறது. வேறே சில பேர்கள் இதிலே வேறே மேரையாக இந்த ரகசியத்தை வெளிப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். அதாவது: சரீரமுள்ள அக்கினியானது சரீரமில்லாத பேர்களைத் தனது கீழிருக்கப்படுத்திச், சரீரமில்லாத பேர்களுக்கு அது ஒரு சிறைச்சாலை போலே இருந்து, அக்கினியானது தன்னிடத்திலே சரீரமில்லாத பேர்களைக் கட்டாயமாய் இருத்தி, அங்கேயும் இங்கேயும் அவர்களை அந்த அக்கினியானது தன்னை விட்டுப் பிரியவொட்டாமல் பண்ணுகிறதென்கிறது இது சரீரமுள்ள அக்கினியானது சரீரமில்லாத பேர்களைக் கஸ்தி நோவு படுத்துகிற மேரையாய் இருக்கிறதென்று முன்சொல்லப்பட்ட வித்தியாபாரகர் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இந்த மேரையானதைச் சரீரமில்லாத பொருள்களைக் கஸ்திப்படுத்துகிற மற்ற வஸ்துக்களிடத்திலே யோசிப்பாயாக.

(3) விடை 3. தீ அவர்களிடம் புதிய குணம் உண்டாக்கி வருத்தும். இந்த விஷயத்திலே வேறே மேரையானது சில பேர்களினாலே விசாரிக்கப்பட்டது. அதாவது, நரகத்திலே இருக்கிற சரீரியான அக்கினி முதலான பொருள்கள் சரீரமில்லாத பிசாசுகளிடத்திலேயும், நரசீவர்களிடத்திலேயும் [3]திரவியமாகாத [4]குண ரூபமான ஒரு பொருளை அனந்த திவ்விய நீதியான திருவுளப்படியே உண்டாக்கும். அந்தப் பொருளானது பிசாசுகளுக்கும் நரசீவன்களுக்கும் மிகவும் [5]விருத்தமாய் இருக்கக்கொள்ள, அதைப் பிசாசுகளும் நரசீவன்களும் கொண்டிருக்கிறதென்கிறது அது சரீரமில்லாத பிசாசுகளும் நரசீவன்களும் சரீரியான அக்கினி முதலான பொருள்களினாலே கஸ்தி வாதைகளை அனுபவிக்கிற மேரையாய் இருக்கிறதென்று வேறே சில வித்தியாபாரகர் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

**37.6. மூன்று விடைகளைப் பற்றி ஆசிரியர் கருத்து:** நரகத்திலே இருக்கிற பிசாசுகளும் நரசீவன்களும் கஸ்தி நோவுகளை அனுபவிக்கிற இந்த மேரைகள் மூன்றுக்கும் அங்கீ

3. Substance 4. Accident 5. எதிர்

கரிக்கத்தக்க [1]யோக்கியதை எம்மாத்திரம் உண்டாயிருக்கிறதென்று வித்தியாபாரகரா யிருக்கிற பேர்கள் [2]பரிச்சேதசம் பண்ணக்கடவார்கள். அதுகளிலே முழுதும் நாம் சம்மதப்படாததுக்குத் தேவோக்தித்த வேதத்திலே சொல்லப்படுகிற பலபல வாக்கியங்களுடைய [3]சுபாவ சுரூபமான அர்த்தமானது ஞாயமாகும். அதேதென்றால், 'நரகத்தின் அக்கினியானது பிசாசு முதலான பாவிகளைத் தகிக்கிறது' என்கிற வாக்கியங்களும், 'பிசாசு முதலான பாவிகள் நரகத்தினுடைய அக்கனிக்குள்ளே சொல்லப்படாத கஸ்திகளோடே இடைவிடாமல் வேகிறார்கள்' என்கிற வசனங்களும், 'நரகத்திலே இருக்கிற பேர்கள் பொறுக்கப்படாத குளிரை அனுபவிக்கிறார்கள்' என்கிற துக்கங்களும் பத்தும் பத்தாய் விசாரிக்கப்பட்டால், பாவிகளுடைய மயக்கமானது அவர்கள் படுகிற கஸ்தி நோவுக்குக் காரணமாய் இருக்கிறது என்கிறது முன் சொல்லப்பட்ட வாக்கியங்களுடைய அர்த்தத்துக்கு ஒவ்வாததாய் இருக்கிறதென்று காண்பிக்கிறது. இந்தவைகயாக நரகத்தினுடைய அக்கினியானது தன்னை விட்டுப் பாவிகளைப் பிரியவொட்டாமல், தன்னோடே கூட எப்போதும் இருக்கப் பண்ணுகிறது என்கிற மேரையானது சிறைச்சாலையுடைய வாதையை மாத்திரம் சொல்லுகிறதொழியத் தகனத்தினாலே வருகிற வேதனையைச் சொல்லமாட்டாதது போலே இருக்கிறது. இத்தன்மையாகத் திரவியமாகாத குணரூபமான பொருளை நரகாக்கினியானது பிசாசுகளிடத்திலேயும் நரசீவன்களிடத்திலேயும் பிறப்பிக்குமென்று சொல்லுகிறார்களே, அந்தக் குணமானது அப்படிப்பட்ட பேர்களிடத்திலே [4]ஆதேயமாயிருந்து, பிசாசுகளையும் நரசீவன்களையும் கஸ்திப்படுத்துகிறதென்று சொன்னோமானால், அந்தப் பொருளானது பிசாசுகள் முதலான சீவன்களுடைய சுபாவத்துக்கு மேலானதாய் இருக்குமோ அல்லது அதுகளுடைய சுபாவத்துக்கு ஏற்றிருக்கிற பொருளாய் இருக்கிறதோ என்று நிச்சயம் பண்ணுகிறது அரிது. இது தவிர, எந்த விதமாகச் சொன்னாலும், பிசாசு முதலான சீவன்கள் அக்கினியினுடைய தகனத்தையும் குளிரையும் அனுபவிக்கிறது என்கிற அர்த்தமானது அந்தக் குணத்தினுடைய வாதையினாலே [5]பிரதிபாதிக்கப்படுகிறது என்று ஒப்பச் சொல்லுகிறது அரிது.

1. தகுதி 2. தீர்மானி 3. இயல்பான கருத்து
4. தழுவி 5. கூறு

**37.7. ஆசிரியரின் விடை:** ஆனபடியினாலே, நரகத்தினுடைய அக்கினி முதலான பொருள்கள் பிசாசுகளையும் சீவன்களையும் வேறே மேரையாய்க் கஸ்திப்படுத்துகிறதென்று விசாரித்துக்கொண்டு வருகிறோம். அந்த மேரையானது நவமானதாயிருக்கையிலே, அதுக்கு ஒப்புக்கொள்ளத்தக்க யோக்கியதை உண்டோ இல்லையோ என்று நாம் பரிச்சேதம் பண்ணாமல், [1]பிர்ம்ம வாதிகளாயிருக்கிற பேர்கள் பண்ணுகிற பரிச்சேதத்தை அங்கீகரிக்கக்கடவோம். ***(1) சிரவணிக சக்தி — பண்ணுகிறது, தரிக்கிறது என இருவகைப்படும்.*** இந்த விஷயத்திலே நமக்கு [2]ரோசமாய் இருக்கிற சொல்லு மேரையானது விளங்கும்படிக்கு அறியவேண்டின விசேஷமாவது: உண்டாக்கப்பட்ட பொருள்களிடத்திலே இருக்கிற சத்தியானது அனந்த பெல சுரூபமாயிருக்கிற சர்வேஸ்வரனுக்குக் கீழ்ப்பட்டதாய் இருந்து, சுபாவ மேரையாக வரக்கூடாத காரியத்தை அந்தச் சத்தியைக்கொண்டு கர்த்தரானவர் பண்ணும்போது, பொருளினுடைய சத்தியானது [3]சிரவணிக சக்தி என்கிற நாமத்தைக் கொண்டிருந்து, ஒன்றான கர்த்தனுக்கு அது எத்தனமாய் இருக்கிறதென்று சொல்லப்படும். இந்தச் சத்தியானது ஒன்றைப் பண்ணுகிற வகையிலேயும் அங்கீகரிக்கத் தக்கதாகும். அதாவது, சத்தியானது தனது சுபாவத்தினாலே பண்ணப்படாத காரியம் யாதொன்றுண்டு, அதைப் பண்ணுகிறதுக்கு அனந்த பெல சுரூபமான கர்த்தனுக்கு எத்தனமாய் இருக்கலாமென்று சொல்லப்படுமாப்போலே, பொருளைத் தரிக்கிற சத்தியானது தனது சுபாவத்தின்படியே தரிக்கப்படாத வஸ்துக்களைத் தரிக்கத்தக்கதாகக் கர்த்தனுக்கு எத்தனமாய் இருக்கலாமென்று ஒப்புக்கொள்ளத் தக்கதாகும். ஆதலாலே [4]'பண்ணுகிற சக்தி, [5]'தரிக்கிற சக்தி' என்கிற வகைகள் இரண்டிலும் சிரவணிக சக்தியானது பிரியும் என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

**(2) சரீரத்தோடு நரகிலுள்ள ஆன்மா சரீரத் தொடர்பால் துன்புறும்.** இதிப்படி வெளிப்படுத்தினதின்றி, சரீரியான அக்கினி முதலான பொருள்கள் சரீரமில்லாத பிசாசுகளையும் சீவன்களையுங் கஸ்திப்படுத்துகிற மேரை இன்னதென்று கண்டுபிடிக்கலாய் இருக்கிறது. அதெதென்றால்,

1. வேத அறிஞர்   2. பிடித்தது   3. Potentia obedientialis
4. p. activa   5. p. passiva

சரீரியான அக்கினியானது தனது சத்தியைக்கொண்டு மனுஷ சரீரத்தைச் சுபாவமாய்த் தகிக்கிறபோது, தனது தகனமானது மாய்ச் சரீரத்தைக் கெடுக்கிறதுமாய் இருக்கிற உஷ்ணத்தைச் சரீரத்திலே உண்டாக்குமொழிய, ஆத்துமத்திலே அந்த உஷ்ணத்தை உண்டாக்க மாட்டாது. அப்படியே, சரீரத்தினுடைய சம்மந்தித்திருக்கிற அங்கிஷங்களைப் பிரியப்பண்ணுகிறது என்கிறது அக்கினியானது சரீரத்திலே நோவைப் பண்ணுகிறதென்று சொல்ல வேணும் அதேதென்றால் உயிருள்ள சரீரத்தின் அங்கிஷங்களுடைய பிரிச்சலானது நோவாகுமென்று சொல்லவேண்டி யிருக்கிறது. இதிலே அறிய வேண்டினதாவது: நரசீவனுக்கு அடுத்த சக்திகளெல்லாம் ஊற்றில்நின்று சலமானது ஊறிப் புறப்படுகிறாப்போலே சீவனிடத்தில் நின்று புறப்படுகிறதென்று சொல்லவேண்டியிருந்தாலும், சரீராதேயமா யிருக்கிற [1]ஸ்பரிசமாகிற சத்திபைச சீவனானது சரீரத்தின் நோவை அனுபவிக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் அத்தியந்த பந்தமுண்டா யிருக்கிறபோதே, ஆத்துமமானது சகல வஸ்துக்களைக் காட்டிலும் தனதாயிருக்கிற வஸ்துவாகிற சரீரத்துக்கு நாசம் வருத்திவிக்கிற நோவு உண்டாயிருக்கிறதுக்காக, அந்த நோவுக்குத்தக்க துக்கத்தைத் தன்னிடத்திலே ஆதேயமாயிருக்கிற மனசாகிற சத்தியைக்கொண்டு அனுபவிக்கிறதென்று கேட்கவேணுமோ? அதேதென்றால், ஆத்துமமானது தன்னுற் சினேகிக்கப்பட்ட தனது சரீரத்தோடே எப்போதுங் கூடியிருக்கவும், அதுக்கு நாசம் வராமலிருக்கவுஞ் சரீரத்தைக் கொண்டு ஆன சுகங்களை அனுபவிக்கவும் சுபாவமாக மிகவும் ஆசைப்படச் செய்தே, சரீரத்தின் நோவானது அப்படிப்பட்ட ஆசைக்கு விருத்தமாயிருந்து, அந்த ஆசையைக் கெடுக்கிறதினால், நோவினாலே கெடுக்கப்பட்ட ஆசைக்கு விருத்தமாயிருந்து, அந்த ஆசையைக் கெடுக்கிறதினால், நோவினாலே கெடுக்கப்பட்ட ஆசையை யுடைத்தான ஆத்துமமானது மிகுந்த துக்கத்தைத் தன்னிலே மாத்திரம் ஆதேயமாயிருக்கிற மனசாகிற சத்தியைக் கொண்டு அனுபவிக்கிறது என்கிறது சீவனுடைய சுபாவத்துக்கு ஏற்றிருக்கிற ஞாயம் உண்டாயிருக்கிறதென்று சந்தேகப்படத் தகாது. அக்கினிக்குள்ளே வேகிற சரீரத்தோடே கட்டப்பட்ட சீவனானது இதே துக்கத்தை

1. ஊறு. தொடல்

அனுபவிக்கிற மேரையாய் இருக்கிறதொழிய மற்றப்படியல்ல. இப்படி ஆத்துமமானது சரீரத்தோடே துக்கப்படும்போது, ஆத்துமமானது அக்கினிக்குள்ளே வெந்துபோகிற தென்றும், அக்கினியினாலே தகிக்கப்படுகிற தென்றும் கஸ்திப்படுகிற தென்றும் சொல்லத்தகும்.

(3) **சரீரமில்லாத ஆன்மாவும் பேயும் துன்புறுகிறது எப்படி? (i)** *சிரவணிக சத்தியால்.* சரீரமில்லாமல் நரகத்திலே இருக்கிற சீவனானது அவடத்திலே இருக்கிற அக்கினியினாலே தகிக்கப்படுகிற மேரையோவென்றால், நரகத்தின் அக்கினியானது தனது சத்தியைக் கொண்டு சுபாவமாகத் தனது கடூர உஷ்ணத்தைச் சரீரமில்லாத சீவனிடத்திலே உண்டாயிருக்கிறதுக்கு வலலதாய் இராதிருந்தாலும் அந்த அக்கினியின் சத்தியானது சருவேசுரனுக்குச் சிரவணிக சத்தியாகிற எத்தனமாயிருந்து ஆத்துமத்திலே தனது கடூர உஷ்ணத்தை உண்டாக்கும். மீளவும், சீவனானது தனது தகிக்கிற சத்தியைக் கொண்டு சுபாவமாக அக்கினியின் கடூரமான உஷ்ணத்தைக் கொண்டிருக்கத் தக்கதாக வல்லதாய் இராதிருந்தாலும், ஆத்துமத்துக்கு உண்டான அப்படிப்பட்ட கொண்டிருக்கிற 'சத்தியானது கர்த்தனுக்கு சிரவணிக சத்தியான எத்தனமாயிருந்து, நரகாக்கினியினுடைய கடூர உஷ்ணத்தை அந்தச் சத்தியத்தைக் கொண்டு ஆத்துமமானது கொண்டிருக்கிறதென்று அங்கீகரித்துக் கொண்டு வருகிறோம். சீவனாலே கொண்டிருக்கப்பட்ட இப்படிப்பட்ட நரகத்தின் அக்கினியினுடைய உஷ்ணமானது ஆத்துமமானது மிகவும் துக்கப்படுகிறதுக்குக் காரணமாயிருக்கிற தென்கிறது 'நரகத்தினுடைய அக்கினியினாலே சீவனானது தகிக்கப்படுகிறது' என்றும், 'நரகத்தினுடைய அக்கினிக்குள்ளே சீவனானது கஸ்தி வேதனைகளை அனுபவிக்கிறது' என்றும் 'வெந்துபோகிறது' என்றும் சொல்லுகிறது என்கிறது புத்திக்கு ஒத்திருக்கிற தென்று காண்பித்திருக்கிறது. இந்தவிதமாக 'நரகத்தினுடைய குளிரைச் சீவனானது கொண்டிருக்கிறதினால், துக்கம் அனுபவிக்கிறது' என்கிறது நரகத்தின் கஸ்தியை அனுபவிக்கிறது என்று சொல்லிக்கொண்டு வருகிறோம். சரீரமில்லாத பிசாசுகளும் நரசீவன்களும் இந்த விதமாகக் குளிரின் கஸ்தியை அனுபவித்து, அக்கினியினாலே

1. Potentia passiva

இந்தப்படி தகிக்கப்படும் என்கிற மேரையுள்ள வசனமானது இந்த விஷயத்திலே தேவோக்தித்த வேதத்திலே சொல்லப் பட்ட வாக்கியங்களுடைய அர்த்தத்தை அங்கேயும் இங்கேயும் திரும்பாமல், செவ்வையான அனுசரணத்தைக் கொண்டு அதை அறிவிக்கிறதினாலே, இந்த மேரையுள்ள வசனமானது நமக்கு மற்றப் [2]பக்ஷங்களைக் காட்டிலும் [3]ரோசகமான பக்ஷமாய் இருக் கிறதென்று சொல்லுகிறோம்.

(ii) வெப்பத்திற்கு எவ்வாறு ஆதாரம். ஆனால், சரீரமில்லாத பொருளாகிற பிசாசும் சீவனும் சரீரியான உஷ்ணத்துக்கு ஆதாரமாய் இருக்கிறதென்று சொல்லுகிறோமே. இது நிமித்தமாக ஆச்சரியப்பட வேண்டாம். அதெனென்றால், நரசீவனானது அசரீரியாய் இருக்கையிலே, சரீரத்தோடே கட்டப்பட்டுச் சரீரத்தினுடைய பந்தனத்துக்கு ஆதாரமாய் இருக்கிறதென்று சொல்ல வேணும். அப்படிப்பட்ட பந்தன மானது மாதா பிதாவினாலே பண்ணப்படுகிறது என்கிறதுக் காக அது சரீரியானதாய் இருக்கிறதென்று அனேகம் வித்தியா பாரகராய் இருக்கிற பேர்கள் சொல்லுகிறார்கள். இது தவிர, அதெல்லாம் சுபாவமாய் வராமல், நரக அக்கினியினுடைய சத்தியானது அனந்த திவ்விய பெலத்துக்கு எத்தனமாயிருந்து தனது உஷ்ணத்தைச் சரீரமில்லாத பொருள்களிடத்திலே உண்டாக்கி இந்தப் பிரகாரமாக அதுகளை நரக அக்கினியானது தகிக்கிறதென்றும், இந்தடவாகச் சரீரமில்லாத பொருளானது சரீரமுள்ள உஷ்ணத்தை அற்புத மேரையாகக் கொண்டிருந்து நரக அக்கினியினாலே தகிக்கப்படுகிறதென்றும் சொல்லு கிறோமொழியச், சரீரமில்லாத பொருளானது சரீரமுள்ள உஷ்ணத்தை அந்த அவசரத்திலே உண்டாக்கிறதென்றும் சுபாவ மேரையாகக் கொண்டிருக்கிறது என்றும் சொல்லு கிறோமில்லை.

(iii) உயர்ந்த பொருளுக்குத் தாழ்ந்த பொருளால் வாதை. இந்த மேரையாகச் சரீரமில்லாத பிசாசும் சீவனும் சகல சரீர பொருள்களைக் காட்டிலும் தான் உத்தம பொருளாய் இருக்கிறதென்றும் சரீரியான பொருளென்னப்பட்ட யாவும் சுபாவமுள்ள கிரமமாகத் தனக்குக் கீழாயிருக்க வேணு மென்றும் பிரத்தியக்ஷமாய் அறிந்து, நீச சரீரியான அக்கினி

2. கருத்து   3. பிடித்தம்

யானது தனது உஷ்ணத்தை நீச சரீரியான பொருளிடத்திலே உண்டாக்கி அதுகளைத் தகிக்கிறுப் போலே உத்தம பொருளாய் இருக்கிற பிசாசினிடத்திலேயும் சீவனிடத்திலேயும் அக்கினி யானது உஷ்ணத்தை உண்டாக்கும்போது, அக்கினியினுடைய தகனத்துக்கு நீச சரீரியான வஸ்துவைப் போலே தான் உட்பட்ட பொருளாய் இருக்கிறதென்று பிசாசும் சீவனுதும் கண்டுவருகிறதினாலே, மனோவாக்குக்கு எட்டாததாய் இருக்கிற துக்கத்தையும் மனஸ்தாபத்தையும் அனுபவிக்கிறது என்கிற துக்குச் சந்தேகப்படக் கணக்கில்லை.

(iv) எவ்வாறு சிறை? அவ்வண்ணமே, நீசமான அக்கினியானது தனது உஷ்ணத்தைப் பிசாசுகளிடத்திலேயும் சீவன்களிடத்திலேயும் உண்டாக்கித், தனது உஷ்ணத்தினாலே சரீரமில்லாத அப்படிப்பட்ட உத்தம பொருள்களைச் சூழ்ந் திருக்கிற மேரையாகத் தன்னிடத்திலே அடக்கிறதென்று சொல்லத்தகும். இது காரணமாக நரகத்தினுடைய அக்கினி யானது தன்னை முன் சொல்லப்பட்ட சரீரமில்லாத பொருள் களைப் பிரியவொட்டது என்கிறதுக்காக, நரக அக்கினியானது சரீரமில்லாத பிசாசுகளையும் நரசீவன்களையும் அங்கேயும் இங்கே யும் போகவொட்டாமல் தகிக்கிற சிறைச்சாலையாய் இருக்கிற தென்றும் சில வித்தியாபாரகராய் இருக்கிற பேர்கள் சொல்லு கிறுப்போலே சொல்லலாயிருக்கிறது.

(v) எங்கிருந்தாலும் எரிப்பது எப்படி? இதன்றியே சரீரியான உஷ்ணமானது முன்சொன்ன மேரையாகச் சரீர மில்லாத பொருளைத் தன்கீழ்ப் படுத்துகிறபோதே, சரீரமில் லாத பொருளிடத்திலே அது நரகாக்கினியினாலே உண்டாக்கப் படுகிற விரோதமான குணமாய் இருக்கிறதென்று சொல்லப் படும். அப்படிப்பட்ட அக்கினியானது தனது கடூரமான உஷ்ணத்தைச் சரீரமில்லாத பொருளிடத்திலே சுபாவ மேரை யாக பிறப்பியாமல், அனந்த திவ்வியமான பெலத்துக்கு அது எத்தனமாக அதை அற்புத [1]ரீதியாகச் செனிப்பிக்கிறபோதே, இப்படிப்பட்ட உஷ்ணத்தைச் சரீரமில்லாத பொருளிடத்திலே செனிப்பிக்கிறதுக்குச் சரீரமில்லாத பொருள் அந்த அக்கினிக் குச் சமீபமாயிருக்கவும் பாதாளத்திலே கிடக்கவும் தேவை யில்லை. அதேதென்றால், அனந்த நீதிசுரூபமான கர்த்தரானவர்

1. நீதி — பாடம்

பாவிகளுக்கு ஆக்கினையிடத்தக்க கம்து அனந்த பெலத்துக்கு எத்தனமாக அப்படிப்பட்ட அக்கினியைப் பண்ணிக்கொண்டு வருகிறதினால் அந்த அக்கினியைத் தனது உஷ்ணத்தை அற்புத ரீதியாக உண்டாக்கிறதுக்கு சத்தியின் ஸ்பரிசனம் வேண்டியிருக்கிறதொழிய ²ஸ்தல சாமீப்பியம் தேவையில்லை யென்று அங்கீகரிக்கக்கடவோம். அதெப்படியென்றால், பரமண்டலத்திலே பதிந்திருக்கிற சூரியனானது தனது பிரகாசத்தைப் பூமியிலெங்கும் பரம்பப் பண்ணுமொழியப் பூமிக்குள்ளே தனது பிரகாசத்தைப் பூரப்பண்ணுது என்கிறதுக்குத் தப்பாது. இதிப்படி யிருக்கையிலே, பூமிக்குள்ளே அனேகம் தூரமாயிருக்கிற பொன் மாணிக்கங்கள் முதலான ரத்தினங்களுக்குச் சூரியனானது தனது சத்தியைக்கொண்டு ஒளியைச் சனிப்பிக்கிறதுக்கு வல்லதாய் இருக்கிறதென்று அங்கீகரித்துக்கொண்டு வருகிறோமே.* அனந்த திவ்விய பெலத்துக்கு எத்தனமாய் இருக்கிறதான நரக அக்கினியானது பாதாளத்திலே இருந்தாலும் தனது சத்தி ஸ்பரிசனத்தைக்கொண்டு தூரத்திலே யிருக்கிற சரீரமில்லாத பொருளிடத்திலே அற்புத மேரையாக உஷ்ணத்தை உண்டாக்கிறதுக்கு அப்படிப்பட்ட அக்கினியானது வல்லதாய் இராதென்று சொல்லுகிறதுக்கு ஞாயங் காணமாட்டாது. இற்றைவரைக்கும் நம்மாற் பண்ணப்பட்ட பிரசங்கத்திலே நரகத்தினுடைய அக்கினியானது சரீரம் இல்லாத பிசாசு முதலான பாவாத்துமாக்களைக் கஸ்திப்படுத்துகிற மேரை எவ்வளவாகிலும் வெளிப்படுத்தப்பட்டாப் போலே ஆச்சுது.

**37,8. நரகம் நித்தியத்துக்கும் : இதை மறுப்போர்.** இனி நரகத்திலே எண்ணப்படாத கஸ்தி வாதைகளை அனுபவித்துக்கொண்டு வருகிற பிசாசு முதலான பாவிகளுக்கு யாதொருகாலம் கரையேற்றம் உண்டாயிருக்குமோ இல்லையோ என்று வரையறுக்கத் தக்கதாகும். அதேதெனன்றால் தெளிவற்ற பாவிகள் இந்த விஷயத்திலே அங்கீகரிக்கத்தக்க சத்தியத்தைக் கண்டுபிடியாமல், தாறுமாறாய்ச் சில தப்பறை விசேஷங்களை அங்கீகரித்துக்கொண்டு வருகிறார்கள். அதேதெனன்றால், நரகத்திலே விழுந்த பாவிகள் சிறிதுநாள் மாத்திரம் கஸ்தி வாதைகளை அவ்விடத்திலே அனுபவித்த பிற்பாடு, திரும்பப் பூமியிலே வந்து பிறக்கிறார்களென்று அங்கீகரித்துப்

2. இடத்தால் நெருங்கியிருத்தல் * 17ஆம் நூற்றாண்டுக் கொள்கை

பலபல ஜென்மங்கள் நிமித்தமாகச் சீவனுனதுகள் வருகிறதும் போகிறதுமாய் இருக்கிறதென்று அங்கீகாக்கிறார்களொழிய, என்றென்றைக்கும் அது நரகத்திலே இருக்குமென்கிறது அவர்களுக்குச் சம்மதமாயிராது. அப்படியே சில பாவிகளுக்கு மாத்திரம் ஒருக்காலும் முடியாத ஆக்கினையானது பலிக்குமென்று அவர்கள் அங்கீகரித்தாலும், இது உபசார மேரையாக மேலெழுந்தவாரியாக மாத்திரம் அவர்களாற் சொல்லப்படுகிற தொழிய, நரகத்தினுடைய ஆக்கினையைப் பாவிகளான பேர்கள் ஊழியுள்ள காலம் அனுபவிப்பார்கள் என்கிற விசேஷத்தை மெய்யாகவே அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்று சொல்லக்கூடாது. அதேதெனென்றால், அவர்களுடைய மதத்திலே உண்டான சித்தாந்தத்தை அனுசரிக்கும்போது, சகலவுலகங்கள் ஒழிந்து மகாபிரளயம் வந்த பிற்பாடு எல்லோருக்கும் மோக்ஷம் உண்டென்று சொல்ல வேண்டியிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. ஆகலாலே, நரகத்தினுடைய ஆக்கினை ஒரு காலம் முடியும் என்கிற தப்பறைப் பக்ஷமானது இவர்களுக்குச் சம்மதமாய் இருக்கிறதென்று சொல்லவேண்டியிருக்கிறது.

**37.9. அடுத்த பாடத்தில் பதில்.** ஆனபடியினாலே, இப்படிப்பட்ட பக்ஷமானது முழுத் தப்பறையாய் இருக்கிறதென்று காட்டும்படிக்கு நரகத்திலே எண்ணப்படாத கஸ்திவாதைகளை அனுபவித்துக்கொண்டு வருகிற பிசாசு முதலான பாவிகள் நரகத்திலே நின்று பிறப்படாமல், மனோவாக்குக்கு எட்டாததாயிக்கிற கஸ்தி நோவுகளை என்றென்றைக்கும் அனுபவிப்பார்களென்று சிறிது ஞாயங்களினாலே ஒப்புவிக்கக்கடவோம். அப்படிப்பட்ட சத்திய விசேஷத்தை ஆண்டவன் தனது சத்திய வேதத்திலே பலபல வாக்கியங்களினாலே திருவுளம்பற்றினதினாலே, லவலேசமானாலும் சந்தேகத்துக்கு இடங்காணமாட்டாது. ஆனால் நரகத்திலே விழுந்த பேர்கள் என்றென்றைக்கும் அதிலே இருக்கக் கர்த்தன் கட்டளையிட்டதென்கிறது தப்பில்லாக் கிரமமாயிருக்கிறது என்று சிறிது ஞாயங்களினாலே ஒப்பச்சொல்லுவோம். இதெல்லாம் வருகிற பாடத்திலே கர்த்தன் கிருபாகடாக்ஷத்தினால் எல்லாருக்கும் வெளியாகும்படிக்கு ஆன ஞாயங்களினாலே இந்தச் சத்தியத்தைக் காட்டக்கடவோம்.

முப்பத்தி ஏழாம் பாடம் முற்றும்.

(கிரந்தம்) ௨௱௬௰௬ *

## முப்பத்தெட்டாம் பாடம்

**38.1. இவ்வுலகில், வழிப் போக்கனுகிய மனிதன் மாறக் கூடியவன்.** நரசீவனுடைய சுபாவ சுருபத்தை நன்றாய் ஆராய்ந்து கொண்டோமானால், அழிந்து போகிற பவுதீக சரீரத்தைப் பாவத்தோடே கூட விட்டுப்பிரிந்த நரசீவனது பாவத்திலே நிலைகொண்ட மனசாய் இருக்குமென்று சொல்லவேண்டி இருக்குமொழிய மற்றப்படியல்ல. (i) இதுக்கு ஞாயமேதெனில், வழிப்போக்கனாய் இருக்கிறவன் வழியிலே அங்கேயும் இங்கேயும் விருத்த மேரைகளாக விலகி நடக்கிறதுக்கு வல்லவனாய் இருக்குமாப்போலே, மனுஷனனவன் பூமியிலே திரிகிற நாள்மட்டும் வழிப்போக்கன் மேரையாக விருத்த விஷயங்களிலே தனது சுவாதந்திரியமுள்ள மனசைக்கொண்டு திரும்புகிறதுக்கு வல்லவனாய் இருக்கிறனென்று அனுபவசித்தியினாலே கண்டுபிடிக்கலாய் இருக்கிறது. (ii) இது தவிர, அழிந்துபோகிற பவுதீக சரீரமானது பலபல விருத்தமான விகாரங்களோடே கூடியிருந்து வியாதிக்கும், ஆரோக்கியத்துக்கும் [1]பாத்திரமாய் இருக்கச்செய்தே, அத்தியந்த விருத்தமான விகாரங்களுக்கு [2]ஆஸ்பதமாய் இருக்கிற அப்படிப்பட்ட சரீரத்தோடே [3]மாத்திரை மேரையாகக் கட்டப்பட்ட நரசீவனது பலபல [4]அத்தியந்த விருத்தமான விகாரங்களுக்குள்ளாய்த், தர்மமாகிற ஆரோக்கியத்தையும் பாவமாகிற வியாதியையும் அனுபவிக்கிறதுக்குப் பாத்திரமாய் இருக்கிறது என்கிறது நடக்கிற மேரையென்று சொல்லப்படும். அவ்வண்ணமே, மனுஷனனவன் பூமியிலே திரிகிற நாள்மட்டும் தனது சுவாதந்திரியமுள்ள மனசைக்கொண்டு தேவ விஷயக பத்தியைக் கொண்டிருக்கிறவனுமாய், ஆண்டவனுக்கு உகந்தவனுமாய் இருக்கலாம் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. மீளவும். மனுஷனனவன் தேவவிஷயக பத்தியை விட்டுத் தனது சுவாதந்திரியமுள்ள மனசோடு கனபாவத்துக்கு உடன்பட்டுக், கர்த்தனாலே அருவருக்கப்படத்தக்க பாவியாய்ப் பூமியிலே திரியலாம் என்கிறதுக்குத் தப்பாது.

**38.2. செத்தபின், கெதியடைந்த மனிதன் மாற மாட்டான்.** இப்படிப்பட்ட மனுஷன் மரணத்தின் நிமித்தமாகப் பூமியிலே நடக்கிற மேரையையும், விகாரத்துக்கு

1—2 உள்ளாய் 3. form 4. மிக முரணான மாறுதல்

ஆஸ்பதமாயிருக்கிற சரீரத்தையும் ஜீவனானது போக்கடித்து, வழிப்போக்கன் என்கிற அவஸ்தையிலே நின்று அவதியை அடைந்ததென்று சொல்ல வேண்டியிருக்கிறது. அவதியை நரஜீவனானது அடைந்தபோதே, வழிப்போக்கன் போலே விருத்தமான விகாரங்களுக்கு அது உள்ளாயிராமல், பாவத்தில் நின்று தனது மனசைத் தேவவிஷயக பத்தியிலே திருப்புகிறதுக்கும், மீளவும் தேவவிஷயக பத்தியை விட்டுக் கர்த்தனுக்கு அருவருப்புள்ள பாவத்தைத் தனது சுவாதந்திரியத்தினாலே அங்கீகரிக்கிறதுக்கும் வல்லதாயிருக்க மாட்டாதென்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்திய விசேஷமாகும். இப்படிச் சொல்லாமல், அப்படிப்பட்ட ஜீவனானது பாவ புண்ணியத்தைப் பண்ணுகிறதுக்கு வல்லதாய் இருக்கிறதென்று சொன்னோமானால், மனுஷனுடைய மரண நிமித்தமாக வழிப்போக்கனுடைய அவஸ்தையையும், அத்தியந்த விருத்தமான விகாரங்களுக்கு ஆஸ்பதமாயிருக்கிற சரீரத்தையும் போக்கடித்த ஜீவனானது வழிப்போக்கனுடைய மேரையை விட்டுப் பிரியவில்லை என்றும், அத்தியந்த விருக்தமான விகாரங்களுக்குக் காரணத்தைக் கொண்டிராமல், அப்படிப்பட்ட கனமான விகாரங்களுக்கு உள்ளாயிருக்கிறதென்றும் சொல்ல வேண்டியிருக்கிறது. அப்படிக்கொத்த அபத்தத்தை அங்கீகரியாததுக்கு, அத்தியந்த விருத்தமான விகாரங்களுக்கு ஆஸ்பதமாய் இருக்கிற தேகத்தை விட்டுப் பிரிந்ததுமாய், வழிப்போக்கனுடைய மேரையைப் போக்கடித்ததுமாய் இருக்கிற ஜீவனானது அவதியை அடையும்போது அவதிக்குத்தக்க மேரையை அது கொண்டிருக்கிறது என்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால், வழியிலே நடக்கிற ஜீவனானது வழிக்குத்தக்க அத்தியந்த விருத்தமான மேரைகளைக் கொண்டிருக்கிறதென்று பிரத்திக்ஷமாய்க் காணப்படுமாப்போலே, அவதியை அடைந்த ஜீவனானது அவதிக்கான மேரையைக் கொண்டிருக்க வேண்டுமென்று புத்திமானாய் இருக்கிறவன் கண்டுபிடிக்க வேணும் என்கிறதுக்குத் தப்பாது. இதிப்படி இருக்கையிலே, கண்டுபிடிக்கத்தக்க சத்திய ரகசியமாவது: அத்தியந்த விருத்தமான விகாரங்கள் வழிக்கடுத்த மேரையாய் இருக்குமாப்போலே, வழியாகாததாய் இருக்கிற அவதியானது வழிக்கான மேரைகள் இல்லாததாய் இருக்க வேணும் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை.

ஆதலாலே, பலபல விருத்த [1]விகாரங்கள் இல்லாததுமாய், ஒரு மேரையை உடைத்தானதுமாய் இருக்கிற அவதியை அடைந்த அந்தச் சீவனுனது விருத்தமான விகாரங்களில்லாமல் இருக்கவேணும் என்கிறதுக்குத் தப்பாது.

**38.3. நல்லவனுக்கு நித்திய மோட்சம், தீயவனுக்கு நித்திய நரகம். (i) அவதி மாருது.** இதுகளெல்லாம் அங்கீகரிக்கத்தக்க சத்தியமாயிருக்கும் போது, கண்டு பிடிக்கத் தக்க சத்திய ரகசியமாவது: மனுஷனுனவன் தேவ விஷயக பத்தியோடே மரணமாகிற அந்தஸ்தை அடைந்தால் அவனுடைய சீவனுனது வழிப்போக்கனுடைய மேரையையும், அத்தியந்த விருத்தமான விகாரங்களுக்கு ஆஸ்பதமாயிருக்கிற தேகத்தையும் விட்டுப்பிரிந்ததா யிருக்கக்கொள்ள, அப்படிப்பட்ட சீவனுனது தேவவிஷயக பத்தியினுலேயும் சினேகத்தினுலேயும் நிலைகொண்ட மனசாயிருந்து, கர்த்தனுக்கு விருத்தமான பாவத்திலே தனது மனதைத் திருப்ப மாட்டாது என்கிறதுக்குச் சந்தேகப்படத் தகாது. தேவவிஷயக பத்தியிலேயுஞ் சினேகத்திலேயும் என்றென்றைக்கும் நிலைகொண்ட மனதுள்ள சீவனுனது, திவ்விய கிருபைக்கு என்றென்றைக்கும் பாத்திரமாய் இருக்கக்கொள்ள, அப்படிக்கொத்த சீவனுனது என்றென்றைக்கும் பரிபூரண பாக்கியமாகிற மோக்ஷத்தின் பரமானந்த முதலான குறையற்ற செல்வங்களை அனுபவிக்கிறதுக்குத் தயாபரனுன கர்த்தரானவர் திருவுளமானுரென்று வேத வாக்கியத்தினுலே சந்தேகமற அங்கீகரித்துக்கொண்டு வருகிறோம். அல்லது, தேவ இஷ்டப்பிரசாதத்தைப் போக்கடிக்கிற கன பாவத்தோடு மனுஷனுனவன் மரணமாகிற அந்தஸ்தையடைந்தால், அவனுடைய சீவனுனது வழிப்போக்கனுடைய மேரையையும், அத்தியந்த விருத்தமான விகாரங்களுக்கு ஆஸ்பதமா யிருக்கிற தேகத்தையும் விட்டுப் பிரிந்ததா யிருக்கக் கொள்ள, அப்படிப்பட்ட சீவனுனது தேவ இஷ்டப்பிரசாதத்தைப் போக்கடிக்கிற கனபாவத்திலேயும் தேவவிஷயக வர்மத்திலேயும் நிலைகொண்ட மனசாயிருந்து, கர்த்தனுக்கு ஏற்றிருக்கிற புண்ணியத்திலேயும் பத்தியிலேயும் தனது மனசைத் திருப்ப மாட்டாதென்று அங்கீகரிக்கக்கடவோம். தேவ இஷ்டப்பிரசாதத்தைப் போக்கடிக்கிற சுபாவத்திலேயும், தேவ விஷயக வர்மத்திலேயும் என்றென்றைக்கும் நிலைகொண்ட

1. விதம், வேதம் (பா. பே.)

மனசுள்ள சீவனுனது திவ்விய நீதி திருவுளப்படியே ஆக்கினைக்குப் பாத்திரமா யிருக்கக்கொள்ளச், சகலத்தையுங் கிரமத்தோடு நடத்தி வருகிற அனந்த நீதியுள்ள கர்த்தரானவர் அப்படிக்கொத்த சீவனுனது நரகத்திலுடைய ஒழியாத அக்கினிக்கு என்றென்றைக்கும் அவியாத கட்டையா யிருக்கத் தக்கதாகத் திருவுளமானுர் என்று வேதவாக்கியத்தினுலே அறிகிறதும் போராமல், அப்படிக்கொத்த நீதியுள்ள திவ்விய திருவுளமானது பழுதற்ற ஞாயத்துக்கு ஏற்றிருக்கிறதென்று பலபல [1]யுத்திகளினுலே ஒப்பச் சொல்லலாம் என்கிறதுக்குத் தப்பாது: அதேதென்ருற் கன பாவத்தோடே தேகத்தை விட்டுப் பிரிந்த சீவனுனது அதிலே என்றென்றைக்கும் நிலை கொண்ட மனசுள்ளதுமாய், என்றென்றைக்கும் ஆக்கினைக்குப் பாத்திரமானதுமாய் இருக்கிற மேரையைப் பார்க்கும்போது, அப்படிப்பட்ட சீவனுனது நரகத்திலே விழுந்து பூமியிலே பண்ணின பாவத்தின் அளவாக என்றென்றைக்குங் கஸ்தி உபாதைகளை அனுபவிக்கிறது என்கிறது, பாவத்தில் நின்று திரும்பாத மனசுள்ள சீவனுக்குக் கிரமமாக நீதிப்படியே வரத் தக்க பொல்லாப்பு என்று சொல்லக் கடவதொழிய மற்றப் படியல்ல.

**38.4. (2) இம்மையில் விதைப்பு மறுமையில் அறுவடைப் பொசிப்பு.** (i) இற்றைவரைக்கும் சொல்லப் பட்ட ஞாயங்கள்தவிர, பரலோக சுபாவ சுருபத்தினுலே நாம் சொன்ன சத்தியத்தை ஒப்பச் சொல்லலாயிருக்கிறது. அதெப் படியென்ருல், சகலத்தையுந் தப்பில்லாக் கிரமத்தோடு நடத்தி வருகிற அனந்த நீதியான கர்த்தரானவர் வழிப்போக்கனு யிருக்கிற மனுஷனுனவன், பூமியிலே யிருக்கிற நாளெல்லாம் பிரதானமாய் விரைக்கிறதுக்கான காலமாயிருக்கப், பூலோக மானது விரைக்கிறதுக்கு ஆன ஸ்தலமாயிருக்க ஞாய நீதிப் படியே கட்டளை யிட்டருளினுரென்றும், பின்னையும் பூமியிலே விரைக்கப்பட்ட விரைப்பு முழுப்பலனைக் குறையில்லாமற் கடைசியா யனுபவிக்கத் தக்கதாகப் பரலோகத்தை ஆன ஸ்தலமாயிருக்கக் கட்டளையிட்டாரென்றும் வேதப்பிரமாணத் தினுலே அறிகிரேும். இப்படிப்பட்ட கிரமம் தப்பாதபடிக்குச் சீவனுனது பூலோகத்திலே பண்ணின பாவத்துக்குத் தக்க பலனைப் [2]பொசிக்கிறதுக்கு ஆன ஸ்தலமாகிற நரகத்தை அடை

1. ஞாயங்கள். 2. அனுபவிக்க

யும் என்கிறதுக்குத் தப்பாது. அப்படிப்பட்ட நரகமானது வழிப்போக்கர் ஆகாத பாவிகள் அடையத்தக்க ஸ்தலமாய் இருக்கக்கொள்ளப், பாவிகள் பூமியிலே நடந்த வழிக்கு அது அவதியா யிருக்க வேணுமென்று சொல்ல வேண்டியிருக்கிறது. அது அவதியாய் இருக்கிறபோதே, அதுக் கப்பால் ஒன்று மில்லை என்று அங்கீகரிக்கக்கடவோம். அல்லது, நரகத்துக் கப்பால் இன்னம் வேறே உண்டென்று சொன்னோமானால், [3]அர்த்த விரோதமுள்ள விசேஷங்களை அங்கீகரிக்கத் தக்க தாகும், அதெப்படியென்றால், ஒன்றுக்கப்பால் ஒன்று உண்டென்று சொல்லும்போது, அது வழி யென்று சொல்லப்படும். ஒன்றுக்கப்பால் வேறே ஒன்று மில்லை என்று சொல்லப் பட்டால், அது அவதியென்று சொல்லத்தகும். வழிக்கும் அவதிக்கும் இத்தனை மிகுந்த வேற்றுமையுண்டாயிருக்க கொள்ள, வழியும் அவதியும் இந்த இரண்டும் ஒன்றாய் இருக்கலாமென்று மதிகெட்டவன் முதலாய்ச் சொல்ல மாட்டான். அவ்வண்ணமே, பாவிகளுடைய நரகமானது மூதியு மென்றால், அதுக்கப்பால் இன்னம் வேறே ஒன்று உண்டென்று சொல்ல வேண்டியிருக்கும். இப்படிச் சொல்லும்போது, நரகம் ஒன்றே வழியும் அவதியுமாய் இருக்கிறது என்கிற அபத்தத் துக்குச் சம்மதப்பட்டாப்போலே ஆச்சுது. இப்படிப்பட்ட அபத்தத்தை ஒப்புக்கொள்ளாதபடிக்கு, வழிப்போக்கர் ஆகாத பாவிகள் தாங்கள் நடந்த பாவ வழிக்கு அவதியாகிற நரகத்திலே விழுந்தபோதே, அவடத்திலே என்றென்றைக்கும் கஸ்தி வாதைகளை அனுபவிப்பார்களொழிய, நரகத்துக் கப்பால் அவர்கள் அடையத்தக்க வேறேயொன்றும் இல்லையென்று அங்கீகரிக்க வேண்டியிருக்கும்.

(ii) **விதைப்பு வழி, பொசிப்பு அவதி:** இந்தச் சத்திய விசேஷமானது வேறே விதமாக வெளிப்படுத்தப்படலாய் இருக்கிறது. அதேதென்னில், ஒன்று ஒன்றினாலே [1]அபேட்சிக்கப் பட்டால் அபேட்சிக்கப்பட்டது அவதி என்றும், அபேட்சிக்கிற மேரையுள்ளது வழி என்றும் சொல்லத் தகும். இது நிமித்தமாக விரைப்பானது பலனுடைய அனுபவத்தை அபேக்ஷிக்கிறதினாலே, விரைப்பானது வழியாய் இருக்கிறதென்றும், பலனுடைய அனுபவமானது அவதியாய் இருக்கிற தென்றும், சொல்லவேணு மொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே, வழி ரூபமான விரைப்புக்கு

3. absurd. 1. Exigere, require

அப்பால் இன்னம் வேறேயொன்று உண்டென்கிற அவதியான பலனுடைய அனுபவம் உண்டாயிருக்கிறதென்று சொல்ல வேண்டியிருக்கையிலே, பலனுடைய அனுபவமாகிற கடைசி யான அவதிக்கப்பால் வேறேயொன்று உண்டாயிருக்கிற தென்று சொல்லவும் கருதவும் கூடாது. இது காரணமாகப், பாவிகள் பாவங்களைப் பண்ணுகிறதென்கிறது அவர்கள் விரைக்கிற விரைப்பாய் இருக்கிறதென்று சொல்லப்படுகிற தினுல், அதுக்கப்பால் கடைசியான அவதியாகிற ஆக்கினை அனுபவம் உண்டாயிருக்கிறதென்று சம்மதிக்கவேண்டி இருக் கிறது. ஆனபடியினலே, அப்பால் வேறே ஒன்றை அபேக்ஷி யாத கடைசி அவதியாகிற இப்படிப்பட்ட ஆக்கினையின் அனுபவமானது பாவிகளிடத்திலே என்றென்றைக்கும் நிற்கு மென்று சொல்லத்தகுமொழிய, அது முகியுமென்று சொல்லு கிறது என்கிறது அவதியின் ரூபத்துக்கு ஒவ்வாத மேரையாய் இருக்கிறதென்கிறதுக்குச் சந்தேகமில்லை.

கர்த்தரானவர் பூலோகத்திலே சில பாவங்களுக்குச் சில முறை ஆக்கினை இடுகிற மேரையானது நம்மால் சொல்லப்பட்ட இந்த ஞாயத்துக்கு விருத்தமாய் இருக்கிறதென்று சொல்லவும் எண்ணவும்கடவாயல்ல. அதேதெனென்றால், இவ் வுலோகத்திலே பாவிக்குச் சர்வேசுரன் ஆக்கினையிடுகிற மேரையை விசாரிக்கும் போது, அதைப் பார்த்திருக்கிற பேர்களுக்கும் பாவிக்கும் புத்தி உண்டாகவேணு மென்று, அப்படிப்பட்ட ஆக்கினை கர்த் தனலே இடப்படுகிறதினலேயும், அப்படிப்பட்ட ஆக்கினை பாவியினுடைய பாவத்துக்குச் சரியாக இராததினலேயும் அது வழிப்போக்கனுக்கான ஆக்கினை அனுபவமாய் இருக்கிறதினலே யும், அப்படிப்பட்ட ஆக்கினை அனுபவத்துக்குக் கடைசி அவதியான ஆக்கினை அனுபவத்தின் நாமமானது செல்லு மென்று சொல்லக்கூடாது.

**38.5. (3)** பாவம் முடிவில்லாதது. ஆகவே தண்டனை யும்: இதன்றியே, தேவ இஷ்டப்பிரசாதத்தைப் போக் கடிக்கிற பாவத்தினுடைய கனத்தை அளவறுத்தோமானல், அந்தப் பாவத்துக்கு முகிவில்லாத தீவினை உண்டென்று கண்டு பிடிப்போம். ஆதலாலே, நன்மை பெறுகிற ஸ்தலமாகிற பூலோகத்திலே பாவியானவன் அப்படிப்பட்ட பாவத்து நிமித்தமாக ஆன பச்சாத்தாப உபாயங்களைப் பண்ணித்,

தனக்குத் தேவ இஷ்டப்பிரசாதம் வரத்தக்கதாகப் பண்ணினால், அப்படிப்பட்ட தேவ இஷ்டப்பிரசாதமாகிற பிரகாசத்தினாலே கன பாவமாகிற அந்தகாரமானது நீங்கிப்போம் என்கிறதுக்குத் தப்பாது. அல்லது அப்படிப்பட்ட கனபாவத்தோடே பாவி யானவன் மரணத்தை அடைந்தால், அது நிமித்தமாக அனந்த திவ்விய நீதியுள்ள தீர்வைப்படியே பாவியானவன் நரகத்திலே விழுகிறானென்று ஒப்புக்கொள்ளத்தக்க குன்றாத சத்தியமாகும். அப்படிப்பட்ட ஸ்தலமானது தேவ இஷ்டப்பிரசாத முதலான நன்மைகளைப் பெறுகிறதுக்கு ஆன ஸ்தலமாயிராமல், அப் பாவத்துக்குச் சரியான ஆக்கினையை அனுபவிக்கிறதற்கான சிறைச்சாலையாய் இருக்கிறதினால், அதிலே அடைக்கப்பட்ட பாவியானவன் தான் பண்ணின பாவத்துக்குச் சரியான ஆக்கினையை அனுபவிப்பான் என்கிறது தப்பில்லாத நீதியுள்ள கிரமத்துக்கு ஒத்திருக்கச்செய்தே, கனபாவத்துக்கு வரத்தக்க சரியான ஆக்கினை எப்படிப்பட்டது என்று நிச்சயம் பண்ணும் படிக்குப் பாவத்துக்குண்டான தீவினையின் கனமானது எம் மாத்திரமென்று அடைவாகக் கண்டுபிடிக்கக்கடவோம். அதேத னென்றால், அனந்த நீதியான கர்த்தரானவர் வேதத்தினாலேயும், நியாயமுள்ள ஞானத்தைச் சனங்களுக்குக் குடுத்ததினாலேயும் விலக்கின கனபாவத்தைப் பாவியானவன் பண்ணும்போது, கர்த்தரானவர் [1]எத்துணையும் இல்லையென்று எண்ணி, அவரைச் சட்டைப்பண்ணாமல், கர்த்தனுக்கு நிந்தையாகப் பாவியானவன் கனத்த குற்றத்தைப் பண்ணினானென்று சொல்ல வேண்டி இருக்கிறது.

**38.6. பாவத்தால் கடவுளுக்கு நிந்தனை:** (i) **நிந்திக் கப்பட்டவன் தகுதிக்குத்தக்க நிந்தை பெரிது.** அப்படிப் பட்ட குற்றத்தின் தீவினையை அளவறுக்கவேணுமானால் அந்தக் குற்றத்தைக்கொண்டு நிந்திக்கப்பட்டவனுடைய பெருமை எம் மாத்திரமென்று அளவறுத்து நிச்சயம் பண்ணவேணும். அதேத னென்றால், நிந்திக்கப்பட்டவனுடைய பெருமை கொஞ்சமானால் அவனை உத்தேசித்துப் பண்ணப்பட்ட குற்றமும் கொஞ்ச மானது என்று சொல்லப்படும். அல்லது நிந்திக்கப்பட்ட வனுடைய மகிமையானது மகா பெரியதாயிருந்தால் அவனை உத்தேசித்துப் பண்ணப்பட்ட குற்றம் மகா பெரிய குற்ற மென்று சொல்வத்தகும். இந்தச் சத்திய விசேஷமானதை

1. எத்தனை (பா.)

லோகத்திலே அவரவர்க்கு பண்ணப்படுகிற பலபல குற்றங்களுடைய மேரைகளினாலே கண்டுபிடிக்கலாய் இருக்கிறது. அதெப்படியென்றால், யாதொருத்தன் ²சண்டாளனைக் கன்னத்திலே அடித்தால், அப்படிப்பட்டவன் அடித்த அடியைக்கொண்டு சண்டாளனை நிந்தித்து அவனுக்குக் குற்றம் பண்ணினான் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. பின்னையும் அப்படிப்பட்டவன் வெள்ளாளனையும் பிரமாணனையும் கன்னத்திலே அடித்தானானால் அப்படிப்பட்ட அடியைக்கொண்டு வெள்ளாளனையும் பிராமணனையும் நிந்தித்து, அவனவனுக்குண்டான பெருமைக்குத் தக்கது அடித்தவனாலே அவனுக்குப் பண்ணப்பட்ட குற்றமானது ஏற்றக்குறைச்சலாய் இருக்கிறதென்று அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. கடைசியாய், ராச்சியத்தை ஆளுகிற ராசாவைக் கன்னத்திலே யாதொருத்தன் அடித்தால், அடியினிமித்தமாக நிந்திக்கப்பட்ட ராசாவுக்கு அவனால் பண்ணப்பட்ட குற்றமானது மிகவும் கனமான குற்றமாய் இருக்கக்கொள்ள, ராசாவை அடித்தவன் ராசாவுக்குப் பண்ணின குற்றத்தின் நிமித்தமாகத் தலைவெட்டுண்டு போகிறதென்கிறது நியாயமுள்ள கிரமத்துக்கு ஒத்திருக்கும் என்கிறதுக்குச் சந்தேகப்படத் தகாது. உலகத்திலே நடந்து வருகிற இப்படிப்பட்ட கிரமத்தினாலே குற்றத்துக்குண்டான தீவினையின் கனத்தை இன்னதென்று கண்டுபிடிக்கக் கடவோம். அதெப்படியென்றால், சண்டாளனுக்குக் கொஞ்சப் பெருமை உண்டாயிருக்கக்கொள்ள, அவனுக்குப் பண்ணப்பட்ட குற்றமானது கொஞ்சக் குற்றமென்று சொல்லப்படும். வெள்ளாளனுக்கும் பிராமணனுக்கும் அதிகம் அதிகமான பெருமைகள் உண்டாயிருக்கிறதினால், அவனவனுக்குப் பண்ணப்பட்ட குற்றமானதுக்கு அளவு, அவனவனுக்கு உண்டான பெருமைக்குத் தக்கதாய் இருக்கிறதென்று சொல்லவேண்டி இருக்கிறது. கடைசியாய், ராசாவை அடிச்ச அடி மகா கனமான குற்றமாய் இருக்கக்கொள்ள, ராசாவைக் கன்னத்திலே அடிச்சவன் சாவுக்குப் பாத்திரமாய் இருக்கச் செய்தே, சண்டாளன் முதலான பேர்களை அடித்தவன் தலைவெட்டுண்டு போகிறதுக்கு யோக்கியனாய் இருக்கிறானென்று சொல்வார்கள் இல்லை.

இப்படிக் குற்றத்தை அளவறுக்கு மேரையானது நியாயமுள்ள கிரமமாய் இருக்கும்போது, பாவியானவன் கர்த்தன்

2. இழிகுலத்தான்

விலக்கின பாவத்தைப் பண்ணுகிறதினாலே, கர்த்தனுக்கு நிந்தையாக அவருக்கு குற்றம் பண்ணுகிறான் என்கிறதுக்குத் தப்பாது. ஆகலாலே நிந்திக்கப்பட்ட கர்த்தனுடைய பெருமையின் அளவாக அவருக்குப்பண்ணப்பட்ட குற்றமானது எம்மாத்திரமாய் இருக்கிறதென்று அங்கீகரிக்கக்கடவோம். ஆதலாலே, கர்த்தனுக்கு உண்டான மகிமையானது முடிவில்லாத மகிமையாய் இருக்கக்கொள்ள, அவருக்குப் பண்ணப்பட்ட குற்றத்தின் தீவினையை அளவறுத்தோமானால், அந்தக் குற்றத்தின் பொல்லாப்பானது முடிவில்லாத பொல்லாப்பாய் இருக்கிறதென்று சொல்லவேண்டியிருக்கிறது.

(ii) *நிந்திக்கிறவன் தாழ்ந்த நிலைக்குத் தக நிந்தை பெரிது.* இதுதவிர, யாதொருத்தன் தனக்குச் சரியானவனுக்கு குற்றம் பண்ணினால் அது ஒரு மேரையாய்ப் போகலாய் இருக்கிறதென்கிறது எல்லாருக்குஞ் சம்மதமாகும். கீழ்த்தரமாய்ப் இருக்கிறவன் தனக்கு மேலாயிருக்கிறவனை நிந்தை பண்ணி அவனுக்குக் குற்றம் பண்ணினால், அப்படிப்பட்ட குற்றம் கனமான குற்றமென்று சொல்லவேணும். இந்தடைவாகக் கீழாயிருக்கிறவனாலே மேலாயிருக்கிறவனுக்குப் பண்ணப்பட்ட குற்றமானது அளவறுக்க வேணுமானால், நிந்திக்கிறவன் நிந்திக்கப்பட்டவன் இருவருக்குண்டான மகிமையிலே விளங்குகிற தூரத்தின் அளவாகக் கீழ்த்தரமாயிருக்கிறவன் பண்ணின குற்றத்தின் பொல்லாப்பானது இம்மாத்திரமாய் இருக்கிறதென்று நிச்சயம் பண்ணப்படும். இதிப்படி இருக்கச்செய்தே உண்டாக்கப்பட்ட குறையுள்ள நீசமான பொருளுக்கும் தானுயிருக்கிற சகல நன்மை சுரூபமான சர்வேஸ்வரனுக்கும் அளவில்லாத தூரம் உண்டாயிருக்கிற நிமித்தமாகக், கர்த்தனுக்கு முடிவில்லாத மேரையாகக் கீழ்த்தரமாய் இருக்கிற உண்டாக்கப்பட்ட பொருளினாலே கர்த்தனுக்கு நிந்தையாகப் பண்ணப்படுகிற குற்றமானது முடிவில்லாத குற்றமா யிருக்கிறதென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல.

(iii) *நிந்தித்தவனுக்குச் சாவுக்குப்பின் மன்னிப்பில்லை.* ஆனால், மனுஷனானவன் தான் வழிப்போக்கனாயிருக்கிற காலத்திலே பண்ணின கனமான குற்றமெனப்பட்டயாவையும் மரணத்தை அடைகிறதுக்கு முன்னே கர்த்தனுடைய கிருபையினாலே போக்கடிக்கலாமென்று வேதப்பிர

மரணத்தினாலே அறிகிறோம். வழிப்போக்கனாயிருக்கிற பாவியானவன் தான் பண்ணின முடிவில்லாத குற்றத்தைப் பூமியிலே யிருக்கும்போது கர்த்தன் கிருபையினாலே போக்கடிக்கலாம் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. அல்லது பாவியானவன் முகிவில்லாத குற்றத்தோடே மரணத்தை யடைந்து, அவனுடைய சீவனானது அவதியாகிற நரகத்திலே விழுந்தால், அப்படிப்பட்ட அவதியானது அத்தியந்த விருத்தமான விகாரங்களுக்கு இடமாய் இராதபோதே, முடிவில்லாத பாவத்தோடே அவதியாகிற நரகத்தை சீவனானது அடைந்தபோதே அதிலே தனது முடிவில்லாத பாவத்துக்குச் சரியான ஆக்கினையை அனுபவிக்குமொழியப், பாவத்தைவிட்டுத் தேவ இஷ்டப் பிரசாதத்தை யடையமாட்டாது. என்றால்[1] முகிவில்லாத பாவத்துக்குச் சரியான ஆக்கினை ஏதென்று விசாரிக்குமிடத்தில், முகிவில்லாத ஆக்கினையானது மாத்திரம் முகிவில்லாத பாவத்துக்குச் சரியான ஆக்கினையென்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனபடியினாலே, சரீரத்தோடே கூடயிருக்கிற சீவனானது பூமியிலே தான் பண்ணின பாவத்துக்குச் சமானமாக ஆக்கினை அனுபவ ஸ்தலமாகிற நரகத்திலே விழுந்தபோதே, தான் பண்ணின முகிவில்லாத பாவத்துக்கு ஒருக்காலும் முகியாத கஸ்தி வாதைகளை அனுபவிக்குமொழிய அதில் நின்று ஒருக்காலும் சீவனானது பிறப்படமாட்டாது என்கிறது அனந்த நீதி திவ்விய தீர்வைக்கும் பழுதற்ற ஞாயமுள்ள கிரமத்துக்கும் ஒத்திருக்கிற தென்று முழு மனசோடு அங்கீகரிக்கக்கடவோம்.

**38.7.** அற்பப் பாவத்தோடு இறந்தவர்களின் நிலை. இதிலே ஒரு சந்தேகத்துக்கு இடமிருக்கிறது. அதாவது: "நரகத்திலே விழுந்த சீவனானது அற்ப பாவத்தையுங் கன பாவமாகிற முடிவில்லாத குற்றத்தையும் பண்ணியிருக்கும் என்கிறதுக்குத் தப்பாது. முகிவில்லாத குற்றத்தின் நிமித்தமாகச் சீவனானது முகிவில்லாத ஆக்கினையை அனுபவிக்கிற தென்கிறது தப்பில்லாக் கிரமத்துக்கு ஒத்திருக்கிறது என்று ஒப்புவிக்கப் பட்டாப்போலே ஆச்சுது. [2]சுவல்பப் பாவத்தினிமித்தமாகச் சீவனானது நரகத்திலே எத்தனை நாள் கஸ்தி வாதைகளை அனுபவிக்கிறது?" என்கிற விசேஷத்திலே அங்கீகரிக்கத்தக்க சித்தாந்தம் ஏதென்று வெளிப்படுத்தத்தக்கதாகும்.

1. ஆனால் 2. சொற்ப.

சிலர் சுவல்பப் பாவத்தின் மேரையை மேலெழுந்தவாரியாக மாத்திரங் கண்டுபிடித்து, அதிலே பிரிக்கத்தக்க இரண்டு விசேஷங்களைத் தொகுத்துப் பிரியாமல் தேவ விஷயக பத்தியோடே சீவனுனது சரீரத்தைவிட்டுப் பிரியும்போது, ஓர் அற்பபாவத்தோடே கூடியிருந்தால் அப்படிப்பட்ட பாவத்து நிமித்தமாகச் சிறிது நாள் உத்தரிக்குமாப்போலே, நரகத்திலே விழுந்த சுவாமித் துரோகிகள் பண்ணின கனபாவங்கள் நிமித்தமாக என்றென்றைக்கும் முடியாத கஸ்தி வாதைகளை அனுபவிப்பார்களே, அவர்கள் பண்ணின சுவல்ப பாவத்தின் நிமித்தமாக அவர்களாலே அனுபவிக்கப்படுகிற ஆக்கினையானது (சிறிது மாத்திரம் அனுபவித்த பிற்பாடு,) அவர்களுக்கு ஒழியுமென்று சொல்லிக்கொண்டு வருகிறுர்கள்.

(i) **அற்பபாவக் குற்றமும் அதற்கான தண்டனையும்.** அப்படிப்பட்ட பேர்கள் சுவல்பப் பாவத்தின் மேரையை மேலெழுந்தவாரியாக மாத்திரம் விசாரித்து இதைச் சொல்லுகிறுர்களொழிய மற்றப்படியல்ல. அதேதெனன்றுல், சுவல்பப் பாவத்திலே குற்றத்தின் மேரையும், நீதிப்படியே அனுபவிக்கப்படத் தக்க ஆக்கினையினுடைய [1]கடனும் என்கிற இரண்டு விசேஷங்கள் சுவல்ப பாவத்திலே உண்டாயிருக்கிறதினுல், அப்படிப்பட்ட விசேஷங்கள் இரண்டும் தனித்தனியே தொகுத்துக் கண்டுபிடியாதிருந்தால், முன்சொல்லப்பட்ட சந்தேகத்திலே நிவாரணம் உண்டாய் அதிலே அங்கீகரிக்கப்படத்தக்க சித்தாந்தம் ஏதென்று கண்டுபிடிக்கிறது அரிது. அப்படிப்பட்ட விசேஷங்கள் இரண்டும் தனித்தனியே தொகுத்துப் பிரித்து சுவல்பப் பாவத்தோடே மரணத்தை அடைந்த புண்ணியவான்களுடைய வகையிலே அறிய வேண்டினதாவது: தேவவிஷயக பத்தி முதலான தர்ம குணங்களினுலே அலங்கரிக்கப்பட்டதுமாய், கர்த்தனுக்கு மிகவும் உகந்ததுமாய், மோக்ஷானுபவத்துக்குத் திவ்விய கிருபையினுலே பாத்திரமானதுமா யிருக்கிற சீவனுனது தன் சரீரத்தை விட்டுப் பிரிந்த க்ஷணத்திலே தானே தேவவிஷயக பத்தி சிநேக முதலான தர்ம குணங்களிலே நிலைகொண்ட மனசாய் இருக்குமென்று இற்றைவரைக்கும் சொல்லப்பட்ட நியாயங்களினுலே சந்தேகப்படுகிறதுக்கு இடமில்லை. அவ்வண்ணமே சகல நன்மை நீதி சுரூபமா யிருக்கிற கர்த்தனைப் பிரத்தியக்ஷ

1. கட்டனையும் (பா. பே.)

மாய்ப் பார்த்துப் ப ரி பூ ர ண பாக்கியமாகிற மோக்ஷத்தின் பரமானந்த முதலான குறையற்ற செல்வங்களை அப்படிப் பட்ட சீவனுனது அனுபவியாதவண்ணம் யாதொரு சுவல்பப் பாவத்தினுலே தாமசம் பண்ணப்படாதிருந்தால், அது தனது சரீரத்தைவிட்டுப் பிரிந்த க்ஷணத்திலே தானே தேவ விஷயக பிரத்தியக்ஷ தெரிசனமான மோட்சத்தின் வரப்பிரசாதங்களை அது அடையும் என்கிறதுக்குத் தப்பாது.

(ii) **அற்பப் பாவம்தீர, மோட்சம்.** ஆனுல் அப்படிப் பட்ட சீவனுனது தான் பண்ணின அற்ப பாவங்களுக்குள்ளே யாதொரு அற்பப்பாவம் நிவாரணம் பண்ணுமல் அத்தோடே சரீரத்தைவிட்டுப் பிரிந்தால், அப்படிப்பட்ட அற்பப் பாவத்தைச் சீவனுனது போக்கி அதினிமித்தமாக அனுபவிக்கத் தக்க சரியான ஆக்கினையை அனுபவித்து, அப்படிப்பட்ட கடனைத் தீர்த்துப்போட்ட பிற்பாடு, அனந்த நீதி திவ்விய திருவுளப்படியே மோட்ச கரையேறுமொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே, தேவவிஷயக பத்தி முதலான தர்ம குணங்களிலே நிலைகொண்ட மனசுள்ள தனது சரீரத்தை விட்டுப் பிரிந்தவுடனே, தன்னை இரட்சித்த தயாபரனுன கர்த்தன்பேரிலே குறையற்ற பத்தியை வைத்துத் தன்னிடத்திலே இருக்கிற அற்ப பாவத்தின் நிமித்தமாக உத்தம மனஸ்தாபமா யிருக்குமென்று அங்கீகரிக்கத் தக்கதாகும். அப்படியே, சீவனுனது சரீரத்தை விட்டுப் பிரிந்தவுடனே தனது அற்பபாவத்தின் நிமித்தமாகத் தான் பட்ட உத்தம மனஸ்தாப முதலான தேவவிஷயக பத்தியின் விருத்தியினுலே முந்தமுந்தத் தனது சு வ ல் ப ப் பாவ நிவாரணம் பண்ணும். இந்தவைகைவாகப் போக்கின சுவல்பப் பாவத்தின் நி மி த் த மா க நீதிப்படியே அனுபவிக்கத்தக்க ஆக்கினையைச் சரியாய் அனுபவித்த பிற்பாடு கர்த்தனுக்கு உகந்த சீவனுனது மோட்ச கரையேறு மொழிய மற்றப்படியல்ல.

(iii) **அவதி அடைந்த ஆன்மா பாவமன்னிப்பு என்ற விகாரமடையலாமா?** தனது சரீரத்தை விட்டுப் பிரிந்த சீவனுனது தன்னிடத்திலே இருக்கிற சுவல்பப் பாவத்தைப் போக்கிற வகையானது நம்மால் சொல்லப்பட்ட அவதியின் சுபாவ சுரூபத்துக்கு விருத்தமாய் இருக்கிறதென்று சொல்லக்கடவாயல்ல. அதேனென்ருல், அவதியை அடைந்த

சீவனுனது அத்தியந்த விரோதமான மேரைக்குள்ள விகாரங்களை அடையமாட்டாதென்று சொன்னேமொழிய, ஒரு வகையிலே அடங்கின விகாரங்களை அடையமாட்டாதென்று நம்மால் சொல்லப்பட்டதில்லை. இதெல்லாம் வெளியாகும் படிக்குச் சொல்லப்பட்ட பதங்களுக்குண்டான அர்த்தத்தை வெளிப்படுத்தக்கடவோம். தேவ இஷ்டப்பிரசாதமும் சுவாமித் துரோகமும், சர்வேஸ்வரனுக்குச் சனுவாயிருக்கிறது என்கிறதும் அவருக்குக் குறையற்ற சத்துருவாய் இருக்கிறதென்கிறதும், கனபாவமும் தேவவிஷயக பத்தியும் இத்தொகைப் பட்ட மேரைகளுள்ள விகாரங்கள் அத்தியந்த விரோதமான மேரைகளுள்ள விகாரங்களென்று சொல்லப்படும். ஒருவகையுள்ள பாவ விசாரமாய் இருந்த பிற்பாடு, வேறொரு வகையுள்ள பாவத்துக்கு உடன்படுகிறதென்கிறதும், அல்லது ஒரு வகையுள்ள தர்ம விசாரமாயிருந்து பிற்பாடு வேறொரு வகையுள்ள புண்ணியத்திலே மனசாயிருக்கிற தென்கிறதும், தேவவிஷயக பத்தியாயிருக்கிற தென்கிறதும், பாவத்தின் நிமித்தமாக உத்தம மனஸ்தாபமாகிற தர்ம விருத்தியைப் பண்ணுகிற தென்கிறதும், இத்தொகைப்பட்ட மேரைகளுள்ள விசாரங்களானதுகள் அத்தியந்த விரோதமான மேரைகளுள்ள விகாரங்களாய் இராமல், ஒரு வகையிலே அடங்கின மேரைகளுள்ள விகாரங்களென்று சொல்லப்படும். இதிப்படி இருக்கையிலே, தேவ இஷ்டப்பிரசாதத்தோடே அவதியை அடைந்த சீவனுனது தேவவிஷயக பத்தியிலே நிலைகொண்ட மனசாய் இருந்து, அத்தியந்த விரோதமான மேரைக்குள்ள விகாரங்களை அடைய 'மாட்டாதென்று அங்கீகரிக்கத்தக்க சிந்தாந்தமாகும். அப்படிப்பட்ட மனசானது நன்மையிலே நிலைகொண்ட மனசாய் இருக்கும்போது, சர்வேஸ்வரன் பேரிலே பத்தியாயிருக்கிறது என்கிறதும், தனக்குண்டான அற்பப் பாவத்தின் நிமித்தமாக உத்தம பச்சாத்தாபப்படுகிறதும், இது முதலான ஒருவகையிலே அடங்கின மேரைகளுள்ள விகாரங்களை அடையலாம் என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

**(iv) நரகிலுள்ள பாவிக்குச் சாவானபாவ மன்னிப்பில்லை.** அவதியை அடைந்த புண்ணிய சீவனுடைய வகையிலே சொல்லப்பட்டதெல்லாம் நரகத்திலே இருக்கிற பிசாசு முதலான சீவன்களிடத்திலே விபரீத கிரமமாக யோசிக்கத்தக்க

வேணுமென்று (பா. பே.)

தென்று சொல்லத்தகும். அதெப்படியென்றால், நரகத்திலே இருக்கிற பிசாசுகள் முதலான பாவிகள் பாவத்திலே நிலை கொண்ட மனசுள்ள பேர்களுமாய்ச், சர்வேசுரனுக்கு முழுதுந் துரோகிகளுமாய் இருக்கிறதினால், ஒரு பாவ விசாரமாயிருந்த பிற்பாடு, வேறே யொரு பாவ விசாரத்துக்குச் சம்மதப் படுகிறது என்கிற இந்த ஒரு வகையில் அடங்கின மேரைகள் உள்ள விகாரங்களை அடைகிறதுக்கு வல்லவர்களாய் இருக் கிறார்களென்று சொல்லக்கூடுமொழியப், பாவ விஷயத்தை முழுதும் விட்டு ஓரற்ப புண்ணிய விசாரத்துக்கு உடன்பட மாட்டார்கள் என்கிறதுக்குத் தப்பாது. பாவத்தின் நிமித்த மாக உத்தம பச்சாத்தாபமானது வேதவிஷயக பத்தியினாலே பிறந்தால் அது உத்தம வகையுள்ள புண்ணியமாய் இருக்கும் போது, நரகத்திலே இருக்கிற பிசாசு முதலான பாவிகள் அப்படிப்பட்ட மனஸ்தாபத்துக்கு உடன்பட மாட்டார்கள்.

(v) **அற்பப் பாவ மன்னிப்பில்லை.** இது காரணமாக நரகத்திலே இருக்கிற நரசீவன்கள் தங்களுக்கு உண்டான சுவற்ப பாவத்தின் நிமித்தமாக முன் சொல்லப்பட்ட புண்ணிய வான்கள் போலே, பச்சாத்தாபப்படத் தக்கதுமில்லை, தங்களுக் குண்டான சுவற்ப பாவங்களை ஒருக்காலும் போக்கத்தக்கது மில்லை. சுவற்ப பாவங்களை அப்படிப்பட்ட சீவன்கள் போக் காத போதே, தங்களுக்கு உண்டான சுவற்ப பாவத்தின் நிமித்தமாக நியாயத்தின்படியே அனுபவிக்கத்தக்க கஸ்தி வாதைகளை என்றென்றைக்கும் அனுபவிக்குமொழிய, அப்படிப்பட்ட கஸ்திவாதைகள் ஒருக்கலாகிலும் ஒழியுமென்று சொல்லவும் கருதவும் கூடாது. ஆதலாலே, நரகத்திலே இருக்கிற சீவன்களானதுகள் கன பாவங்களுக்காகவும், ஒரு சுவற்ப பாவங்களின் நிமித்தமாகவும் என்றென்றைக்கும் கஸ்தி வாதைகளை அனுபவிக்குமென்று சொல்லும்போது, கன பாவங் களுக்குச் சுவற்ப பாவங்கள் சரியாயிருக்கிறதென்று நம்மால் சொல்லப்பட்டுதென்று விசாரிக்க வேண்டாம். அதேதென்றால், கனபாவங்களுக்கு முகிவில்லாத தீவினை உண்டாயிருக்கிற தினாலேயும், பாவிகளை ஒருக்காலும் விட்டுப்போகத் தக்க தில்லை என்கிறதினாலேயும் நரகத்திலே இருக்கிற சீவன் களானதுகள் கன பாவங்களின் நிமித்தமாக என்றென்றைக்குங் கஸ்திவாதைகளை அனுபவிக்குமென்று சொல்லி, அதுகள் தனது சுவல்பப் பாவங்களை ஒருக்காலும் தள்ளக்கூடாததினாலே

சுவல்பப் பாவத்தின் நிமித்தமாக என்றென்றைக்கும் கஸ்தி நோவுகளை அதுகள் அனுபவிக்குமென்று சொல்லுகிறோ மொழிய, முகிவில்லாத பொல்லாப்புள்ள கனபாவங்களுக்குச் சுவற்ப பாவங்களான துகள் சரியான துகளாய் இருக்கிறதென்று சொன்னோமென்று விசாரிக்கிறதுக்கு இடமில்லை.

**38.8.** நித்திய நரகத்துக்கு வேறொரு சான்று: கன பாவத்துக்கு முடிவில்லா ஆக்கினை. இப்படிப்பட்ட நரகத்திலே விழுந்த நிர்ப்பாக்கியரான பாவிகள் தாங்கள் பண்ணின பாவத்தின் நிமித்தமாக என்றென்றைக்கும் கஸ்தி நோவுகளை அனுபவிப்பார்கள் என்கிற குன்றாத சத்தியமானது வேறே யொரு நியாயத்தினாலே ஒப்புவிக்கப்படலாய் இருக்கிறது. அதெப்படியென்றால், கர்த்தரானவர் மட்டில்லாத சகல நன்மை சுருபமா யிருக்கக்கொள்ள, நன்மையைக் கெடுக்கிற பொல்லாப்பாகிற பாவத்துக்கும் கர்த்தரானவருக்கும் முகி வில்லாத தூரம் உண்டா யிருக்கிறதென்று அங்கீகரித்து, முகி வில்லாத பொல்லாப்பாகிற பாவமானது அளவில்லாத விதமாக அரோசகமா யிருக்கிறதென்று ஒப்புக்கொள்ளத் தக்க குன்றாத சத்தியமாகும். கர்த்தருக்கு உண்டாயிருக்கிற அப்படிப்பட்ட சுபாவ சுருபத்தை விசாரிக்குமிடத்திலே, எத்தனை அதிகம் அதிகமான ஆக்கினையினாலே கனபாவமானது விலக்கப்படவா யிருக்கிறதோ, அப்படிப்பட்ட அதிகம் அதிகமான ஆக்கினை யினாலே கர்த்தராலே கனபாவமானது விலக்கப்டுகிறதென்கிறது கர்த்தருடைய மட்டில்லாத சகல நன்மையான சுபாவ சுருபத் துக்கு ஒத்திருக்கிறதென்று சொல்லவேண்டி யிருக்கிறது.

பாவிகளான பேர்கள் பண்ணின கனபாவத்தைப் போக் கடிக்கத் தக்க ஸ்தலத்திலே போகாதிருந்தால், பண்ணின பாவத்துக்கான பலனைப் பொசிக்கத்தக்க ஸ்தலத்திலே அவர்கள் அடையும்போது, தப்பில்லாத நீதிப்படியே முகிவில்லாத ஆக்கினை யிடலாம் என்றிருக்கையிலே, முகிவில் லாத ஆக்கினையினாலே கனமான பாவத்தைக் கர்த்தரானவர் விலக்கினார் என்கிறது தப்பில்லாத நியாயமாய் இருக்கிற தொழிய மற்றப்படியல்ல. அல்லது முகிவில்லாத பொல்லாப் புள்ள பாவத்துக்கான பலனை அனுபவிக்கத் தக்க ஸ்தலமாகிற நரகத்திலே ஆயிரம் இரண்டாயிரம் வருஷம் மாத்திரம் ஆக்கினையை அனுபவிக்ககத்தக்கதாகக் கர்த்தாரானவர்

கட்டளையிட்டருளினர் என்று சொன்னோமானால், இன்னம் பதினாயிரம் வருஷம் ஆக்கினை அனுபவம் என்கிற அதிகமான ஆக்கினையினாலே கனபாவத்தைக் கர்த்தரானவர் விலக்கலாமென்று சொல்லத்தகும். இத்தன்மையாகப் போகப்போக எந்த முடிவுள்ள ஆக்கினையினாலே கனபாவத்தைக் கர்த்தரானவர் விலக்கினாலும் அதிகமதிகமான ஆக்கினையினாலே விலக்கலாமென்று சொல்லவேண்டியிருக்கும். இப்படிச் சொல்லும்போது, எத்தனை அதிகமான ஆக்கினையினாலே கன பாவத்தை விலக்கலாமோ, அத்தனை அதிகமான ஆக்கினையினாலே கர்த்தரானவர் பாவத்தை விலக்கவேணும் என்கிற மேரையானது அவருடைய திவ்விய சுபாவ சுரூபத்துக்கு ஒத்திருக்கிறதென்று நம்மால் ஒப்புவிக்கப்பட்டது. கனபாவத்துக்கு முடிவுள்ள ஆக்கினையைக் கட்டளை யிட்டாரானால், அப்படிக் கட்டளையிடுகிறதினாலே கர்த்தரானவர் தனது திவ்விய சுபாவத்துக்கு ஒத்திருக்கிற மேரையை அனுசரிக்கவில்லை என்று சொல்லவேண்டியிருக்கும்.

(ii) கடவுளின் நீதிக்கு ஒத்திருக்கிறது. இந்தடைவாகக் கனபாவத்துக்குச் சரியான ஆக்கினை அனுபவத்தைக் கர்த்தரானவர் பரலோகத்திலே [1]கற்பிக்கிறது என்கிறது அவருடைய அனந்த நீதிக்கு ஒத்திருக்கிற மேரையாயிருக்கச் செய்தே, அதுக்கு முடிவுள்ள ஆக்கினையை மாத்திரம் கற்பித்தால் அந்த மேரையை அனுசரிக்க வில்லையென்று சொல்லவேண்டியிருக்கும். இப்படிக்கொத்த வார்த்தை அங்கீகரியாமல் சரியான ஆக்கினையினாலேயும், எத்தனை அதிகமான ஆக்கினையினாலே கனபாவத்தை விலக்கலாமோ, அத்தனை ஆக்கினையினாலேயும், அனந்த நீதி சொரூபமான கர்த்தரானவர் கன பாவத்தை விலக்கினாரென்று சொல்லும்படிக்கு, நரகத்திலே விழுந்த பாவி தனது கன பாவத்து நிமித்தமாக என்றென்றைக்கும் எண்ணப்படாத கஸ்தி நோவுகளை அனுபவிக்கத் தக்கதாகக் கர்த்தரானவர் கட்டளை யிட்டாரென்று அங்கீகரிக்கக்கடவோம். இப்படிச் சொல்லும்போது, நரகத்திலேயிருக்கிற பாவிகள் கன பாவத்தின் நிமித்தமாக என்றென்றைக்கும் எண்ணப்படாத கஸ்தி வாதைகளை அனுபவிக்கத் தக்கதாகக் கர்த்தரானவர் தாம் கட்டளையிட்டாரென்று தமது வேதத்திலே அறிவிச்சாரே, அப்படிப்பட்ட மேரையானது

1. அனுபவிக்கிறது (பா.)

தப்பில்லாக் கிரமமாயிருக்கிற தென்றும், பழுதற்ற நியாயத்துக்கு அது ஒத்திருக்கிறதென்றும், பண்ணின பிரசங்கத்தினாலே ஒப்புவிக்கப்பட்டதா யிருக்கிறதொழிய, திவ்விய சுவாதந்திரியமுள்ள மனசுக்கு ஒன்றினாலே கட்டாயம் பண்ணப்படலாம் என்கிற தப்பறை விசேஷமானது நமக்குச் சம்மதமாயிருக்கிறதென்று சொல்லவுங் கருதவுங் கூடாது.

389. **மகாப் பிரளயத்துக்குப் பின் எல்லோருக்கும் மோட்சமென்பதற்கு மறுப்பு.** ஆனால், நரகத்திலே இருக்கிற பாவிகள் தாங்கள் பண்ணின பாவங்களின் நிமித்தமாக எண்ணப்படாத கஸ்தி வாதைகளை என்றென்றைக்கும் அனுபவிக்கத்தக்கதாகக் கர்த்தரானவர் கட்டளையிட்டருளினார் என்கிற மேரையானது அனந்த திவ்விய கிருபைக்கு [1]ஒத்திராது என்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆதலாலே, ஒரு மகா பிரளயம் வருமாம்; அது வந்த பிற்பாடு எல்லாருக்கும் மோட்சம் உண்டாம் என்று வெறுமனே கற்பிச்சுக்கொண்டு வருகிறார்கள். இவர்கள் மெய்யாகவே தெளிவற்ற பாவிகளாய் இருக்கிறார்கள் என்கிறதுக்குத் தப்பாது. அவர்கள் இப்படிச் சொல்லும்போது, தங்களுடைய மதிகெட்டதனத்தைக் காணப் பண்ணுகிறதும் போராமல், தங்களுக்கும் மற்றவர்களுக்கும் கேடாக எல்லாரும் சகல பாவத்துக்கும் எளிதாய் உடன்படுகிறதுக்கு வழிதிறந்தார்கள் என்று சொல்லக்கடவோம்.

(ii) **பாவத்தில் எளிதில் விழுவார்கள்.** அதேதென்றால், நரகத்தில் விழுந்த பாவிகள் என்றென்றைக்கும் ஒழியாத அக்கினிக்குள் அவியாத கட்டைகளாய் இருப்பார்களென்று அனேகம் பேர்கள் அறிந்தும், அதுக்குப் பயப்படாமல் எண்ணப்படாத கன பாவங்களுக்கு உடன்படுகிறார்கள் என்று பார்த்துக்கொண்டு வருகிறோம். அப்படிப்பட்ட பேர்கள் தாங்கள் எப்படிப்பட்ட பாவ [2]கஷ்டங்களிலே முழுகினாலும் இதுக்காக நரகத்திலே விழுந்து அதிலே சிறிது காலமாத்திரம் கஸ்தியை அனுபவித்த பிற்பாடு அதில் நின்று புறப்பட்டுக் கரையேறுவார்களென்று நம்பிக்கையாய் இருந்தார்களானால், தன் கைக்கெட்டின பாவம் என்னப்பட்ட யாவுக்கும் துணிவார்களென்று கேட்கவேணுமோ?

(ii) **கடவுளின் நீதிக்கு அடுக்கும்:** பின்னையும் அவர்களாலே அநுசரிக்கப்படுகிற தப்பறைப் பட்சத்தின் நிமித்த

1. ஒற்றிராது (பா. பே.) 2. மலம்

மாக அவர்களுடைய மதிகெட்டதனம் மிகவும் விளங்கி வருகிற தென்று சொல்லக்கடவோம். அதேதெனன்றால், பாவிகளுக்குக் கர்த்தரானவர் ஒழியாத ஆக்கினையைக் கட்டளையிட்டருளின மேரையானது திவ்விய கிருபைக்கு ஒத்திராதென்று சொல்லும் போது, திவ்விய கிருபையானது கிருபையாய் இருக்கையிலே, அற்பமாகிலும் பின்னமில்லாமல் அது அனந்த நீதியாய் இருக்கிறதென்று அறிந்தார்களில்லை. இதன்றியே தயாபரனான கர்த்தரானவர் கிரமத்தோடு கிருபை பண்ணுவாரொழியக், குறையற்ற கிரமம் தப்பிக் கிருபை பண்ணுவா ரென்று சொல்லக்கணக்கில்லை. அப்படியே, அனந்த திவ்விய கிருபையான நீதியின் பேரிலே குறையை ஆரோபியாத வண்ணம், அதுக்கதுக்கான ஸ்தலங்களிலே கிருபையும் நீதியும் விளங்க வருகிறதென்று சொல்லக்கடவோம். இதின் நிமித்தமாகப் பாவங்களைக் கர்த்தரானவர் பொறுக்கத்தக்க ஸ்தலமாகிற பூமியிலே வழிப்போக்கனாய்த் திரிகிற மனுஷன் எந்தெந்தக் கன பாவத்தைப் பண்ணினாலும் அது நிமித்தமாக ஆன பச்சாத் தாபமாய் இருந்தானானால், அந்தப் பாவத்தைக் கர்த்தரானவர் பொறுப்பாரென்று வார்த்தைப்பாடு கொடுத்திருக்கிறா ரென்று வேதப்பிரமாணத்தினாலே அறிகிறோம். அப்படிப்பட்ட வார்த்தைப்பாட்டைக் கர்த்தரானவர் செலுத்தும்போது, தமது கிருபையின் பேரிலே குறையை ஆரோபிக்கிறதுக்கு இலவலேசமானாலும் இடங்கொடாமல், தனது கிருபையை மிகவும் விளங்கத்தக்கதாகப் பண்ணுகிறாரென்று அங்கீகரிக்கக் கடவோம். மீளவு முகிவில்லாத பொல்லாப்பாகிற பாவத்தின் நிமித்தமாகப் பாவிகளான பேர்கள் நரக வேதனையை என்றென்றைக்கும் அனுபவிக்கத்தக்கதாகக் கர்த்தன் திருவுளமானார் என்கிறதினாலே, தனது அனந்த நீதிக்குக் குறையுண்டென்று சொல்லவொட்டாமல், அந்த மேரையிலே தானே தமது அனந்த நீதியை மிகவும் விளங்கப் பண்ணினாரென்று சந்தேகமற [1]எண்ணத்தக்க குன்றாத சத்தியமாகும்.

(iii) **இவ்வுலகில் மன்னிப்பு:** கடைசியாய்ப், பாவங்களைப் பொறுக்கத்தக்க ஸ்தலமாகிற பூமியிலே திரிகிற வழிப்போக்கனாயிருக்கிற மனுஷன் எப்படிப்பட்ட கனமான பாவம் பண்ணிப் பின்னையும் அதுக்கான பச்சாத்தாபத்தோடு இருந்தானானால், அப்படிப்பட்ட கன பாவத்தைக் கர்த்தரானவர்

1. ஒப்புக்கொள் (பா. பே.)

பொறுக்கச் செய்தே, பாவத்துக்கான ஆக்கினை அனுபவிக்கத் தக்க ஸ்தலமாகிற நரகத்திலே விழுந்த பாவியினுடைய பாவங்களைப் பொறுமல், பாவியானவன் நரக வேதனையை என்றென்றைக்கும் அனுபவிக்கத் தக்கதாகக் கர்த்தரானவர் கட்டளை இட்டருளினதினால், பரம சாமார்த்திய சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர், தனது அனந்த கிருபையினாலே பாவமென்னப்பட்ட யாவையும் பொறுக்கிறதிலேயும், நரகத்திலே விழுந்த பாவிகளுக்கு முடியாத ஆக்கினை கட்டளையிட்டருளுகிறதிலேயும் தமது தப்பில்லாக் கிரமமானது மிகவும் பிரகாசிக்கத்தக்கதாகப் பண்ணிவருகிருரென்று அங்கீகரிக்கத்தக்க குன்றாத சத்தியமாய் இருக்கிறதென்று முழு மனதோடு ஒப்புக்கொள்ளக்கடவோம்.

**38.10.** அற்பப் பாவம் செய்த பெரியோரும் பாலரும், **பகுத்தறிவற்ற பாலரும் பைத்தியக்காரும் பெறும் அவதி:** இற்றைவரைக்கும் நரசீவனுடைய ஒடுக்கமாகிற அவதியானது இன்னதென்று எவ்வளவாகிலும் சொல்லப்பட்டாப்போலே ஆச்சுது. இப்படிப்பட்ட ஒடுக்கத்துக்கு அடுத்ததுகள் இன்னம் பராமரிசிக்கத்தக்க மூன்று [2]இரகசிய விசேஷங்களுண்டு. (i) அதெப்படியென்றால், தேவ இஷ்டப்பிரசாதத்தினாலேயும், தேவ விஷயக பத்தியினாலேயும் அலங்கரிக்கப்பட்ட புண்ணியவான் வீண் வார்த்தை, [3]வியர்த்த காலக்ஷயம் இதுகள் முதலான அற்பப் பாவங்களோடே கூட மரணத்தை அடைந்தால், அப்படிப்பட்ட புண்ணியவானுடைய சீவனானது தனது சரீரத்தை விட்டுப் பிரிந்த க்ஷணத்திலே தேவஇஷ்டப்பிரசாதத்தினாலேயும், தேவ விஷயகப் பத்தியிலேயும் நிலைகொண்ட மனதாயிருந்தாலும், முன் சொல்லப்பட்ட அற்பப் பாவங்களைத் தள்ளாமல், அதுகளுக்காக ஆக்கினை அனுபவிக்கத்தக்க கடனானது தீராத நாள்மட்டும், தேவ விஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்தை அப்படிப்பட்ட சீவனானது அடைய மாட்டாது என்றிருக்கையிலே, மோட்சத்தை அந்தச் சீவனானது அடையாத காலத்திலே அதுக்கு அவஸ்தையாவது ஏது என்கிற ரகசிய விசேஷமானது பராமரிசிக்கத்தக்க மூன்று விசேஷங்களுக்குள்ளே அறியவேண்டின முந்தின விசேஷமாகும். (ii) தேவயிஷ்டப் பிரசாத மில்லாதவனுமாய்க், கன பாவத்தைப் பண்ணுதவனுமாய் இருக்கிற பாலனானவன் முன் சொல்லப்பட்ட அற்பப் பாவங்களோடேகூட மரித்தால்,

2. விசேஷ ரகசியங்கள் (பா. பே.) 3. வீண் காலப்போக்கு

அப்படிப்பட்ட பாலனுடைய ஜீவனானது அடையத்தக்க அவதி ஏதென்று நிச்சயம் பண்ணுகிறது என்கிறது இது முன் சொல்லப்பட்ட அறியவேண்டின மூன்று விசேஷங்களுக்குள்ளே அறியத்தக்க இரண்டாம் விசேஷமாகும். (iii) [1]கடைகோடியாய்ப் புத்தியறியாத பாலனானவனும், மரணபரியந்தம் பயித்தியம் கொண்டவனும் இந்த இரண்டு வகையுள்ள பேர்களும் கனபாவத்தையும் அற்பப்பாவத்தையும் பண்ணாமல். தேவவிஷயக பத்தியும் இல்லாமல் மரணத்தை அடைந்த பிற்பாடு, இப்படிப்பட்ட பேர்களுடைய ஜீவன்கள் இரண்டுக்கும் வரத்தக்க கெதி ஏதென்கிற ரகசியமானது முன் சொல்லப்பட்ட அறியவேண்டின விசேஷங்களுக்குள்ளே மூன்றாம் விசேஷமாகும்.

இந்த மூன்று விசேஷங்களிலே ஒப்புக்கொள்ளத் தக்க சித்தாந்தம் ஏதென்று கண்டுபிடிக்கிறதுக்குத் தேவோக்தித்த வேதப்பிரமாணத்திலே அறியவேண்டின சில பரமரகசியங்கள் உண்டு. அதுகளை நன்றாக யாதொருத்தன் அறியாமலிருந்தால், முன்சொல்லப்பட்ட மூன்று விசேஷங்களிலே போம் வழி ஏதென்று கண்டுபிடிக்க மாட்டான் என்கிறதினாலே 'ஞான உபதேசத்தின் மூன்றாங் காண்டத்தினுடைய கடைசிப் பாடங்களிலே' பாதளத்தோடே நரக முதலான ஸ்தலங்கள் இத்தனையென்று தொகுத்து வகையறுக்கும்போது, முன்சொல்லப்பட்ட மூன்று விசேஷங்களை அடைவாக வெளிப்படுத்துவோம் என்கிறதினால், அப்படிப்பட்ட விசேஷங்களை நிரூபிக்கிறது என்கிறது [2]உச்சிதமாய் இராது.

ஆத்தும நிர்ணயம் முற்றிற்று.

(கிரந்தம்) சாருடிரு*

1. = கடைசியாய்; கள்குடியாய், கழகொடியாய், (பா.)
2. பொருத்தமாய். 455*

# தத்துவ போதகரும் வீரமாமுனிவரும்

தத்துவ போதகர் என்று பெயர் நொபிலியாருக்கு எப்பொழுது வந்தது என்று தெரியவில்லை. அவர் பல ஆண்டுகளாக 'ஐயர்' என்று அழைக்கப் பெற்றதாகத் தெரிகிறது. ஆனால் வீரமா முனிவர் காலத்திலேயே தத்துவ போதகர் என்ற பெயர் வழக்கில் வந்து விட்டதுக்குத் தக்க சான்று இருக்கின்றது. போதகர் உரோமையில் 1577-ல் பிறந்து 1605-ல் இந்தியா போந்து 1656-ல் உயிர் துறந்தார். அவருக்குப்பின் வந்த பெஸ்கி என்ற வீரமா முனிவர் 1680-ல் இத்தாலியா நாட்டில் பிறந்து 1710-ல் இந்தியா வந்து 1747-ல் இறந்தார். தத்துவ போதகரை வீரமாமுனிவர் மிகவும் மதித்துப் பாராட்டுகிறார். 1936-ல் பாண்டிச்சேரியில் நான்காம் பதிப்பாக அச்சேறிய வேத விளக்கம் என்ற நூலின் பத்தாம் பக்கத்தில் அவர் சொல்லுவதாவது: "மாறாத தவமும் பொய்யாத நூலும் குறையாத அறங்களும் வடிவாகக் கொண்டு தோன்றித் தத்துவ போதக சுவாமி யாவருக்கும் முன்னே ஆண்டவரால் அனுப்பப்பட்டு விடியற்காலத்து ஒளிபோல் இங்கே நெடுநாள் விளங்கி, வேத நூலாகக் கதிரால் எழுதப்பட்ட தன்மையால் அவரே எழுதித் வைத்த காண்டம் முதற் பலவும் மங்கா ஒளியோடு இன்னம் அஸ்தமியாத சூரியனாக வழங்கும் தன்மையல்லவோ?"

இந்தப் பகுதியிலிருந்து தத்துவ போதகர் என்ற பெயர் வீரமா முனிவர் காலத்திலேயே வழக்கில் இருந்தது தெரிகிறது. மேலும் ஐந்து காண்டங்களாக முனிவர் எழுதிய ஞானோபதேசம், காண்டம் என்று வெறுமனே வழங்கியதும் தெரிகிறது.

தத்துவ போதகர் தமிழில் புதிதாய் ஆக்கிய கலைச் சொற்கள் பலவற்றைத் தாம் 1743-ல் எழுதிய தமிழ் இலத்தின் அகராதியில் வீரமாமுனிவர் சுட்டிக் காட்டுகிறார். ஒவ்வொரு இடத்திலும் Apud Reverendum Patrem Robertum அதாவது 'வணக்கத்துக்குரிய இராபர்ட் அடிகளாரிடம்' என்று மிகுந்த வணக்கத்தோடு பேசுகிறார். அந்த இடங்களைத் தொகுத்துக் கீழே கொடுத்திருக்கிறோம். அவையாவன

*அதிதூதன்*, praecipuus legatus. Hinc: *அதிதூதர்* seu *அதிதூதர்கள்* (apud R. P. Robertum) Archangeli. (பக். 24)

*அந்தக்கரணம்*, interiores animae facultates, R. P. Robertus. *அந்தயோக்கியம்* quod convenit fini: *யோக்கியம்* convenientia et *அந்தம்* finis. R. P. Robertus. (25)

*அம்பியமுயசித்தம்* apud R. P. Robt: est sacrificium ad expianda quinque crimina in usu plantarum. (34)

அவஸ்தை G. 1° necessitas, 2° vulgo articulus mortis. Hinc அவஸ்தைப்பூசுதல் sacramentum Extremae Unctionis. 3° finis. Unde addito அ privativo, fit அனவஸ்தை sine fine, infinitum. Unde per R. P. Rob. அனவஸ்தை தோஷம் processus in infinitum. (46)

அவினுபூதம் affirmatio, ex R. P. Roberto. (46)

அர்ச்சியசிஷ்ட **Sanctus, a, um.** அற்சியம் vel அர்ச்சியம் — **veneratio** et சிஷ்ட **bonus** quasi ita bonus ut omnium veneratione dignus sit. R. P. Robertus addit aliquando தம. Sic அர்ச்சியசிஷ்டதம ut sit superlativus, **sanctissimus, a, um.** (53)

அனுகரண காரணம் G. **Causa concomitans** R. P. Robertus. (55)

அனுமானம், G. Signum Unde Rev. P. Robertus தேவதிரவியானுமானம் dicit sacramentum: signum divitiarum divinarum. Sic அனுமான தெரிசனம், dicit esse visionem abstractivam, scilicet ex signis. 2° Hinc cum quae signis tantum cognoscuntur dubia sint, அனுமானம் est dubitatio. (56)

அனுரூபம் G. 1° conformitas: ex ரூபம் figura, forma, et அனு simul. Hinc ex Rev. P. Rob. அனுரூப காரணம் causa univoca, et அனுரூபமாகாத காரணம் causa aequivoca: அனனுரூப காரணம் etiam haec dicitur. (57)

ஆக்கிறிஷ்ட ஞானம் notitia conjecturalis, ex. R. P. Roberto ஆக்கிறிஷ்டம் G. conjectura. (62)

ஆங்காரம் superbia. Hinc ஆங்காரன் vir superbus; et ஆங்காரி generis communis. Hinc ex R. P. Roberto: ஆங்கார விஷையத் தவம் est hypocrisis: quasi poenitentia ex motivo superbiae. (62)

ஏற்றினம் vel எத்தனம் **instrumentum.** ஏற்றின காரணம் — **causa instrumentalis** — R. P. Robertus. (137)

கிர்த்திக்கிறது a R. P. Roberto: usurpatur pro குறிக்கிறது **denotare.** Alibi non invenitur. (201)

சகசம் G. (jagagem) ex jagam; vide in fine. Hinc. R. P. Rob. 1. சகச நீதி justitia originalis, 2° சகசஞ் சொல்லுகிறது, dicere sincere prout est. 3° veluti cujuslibet natura. Sic அவனுக்கிது சகசமாய்ப் போச்சு hoc illi factum est naturale. (247)

சமூநிதம் G. ex R. P. Rob. **communis, e.** Sic **communionem Sanctorum** dicit சமூநிதப் பிரயோசனம். (258)

சன்னிதானம் G. **praesentia** Hinc R. P. Rob. புத்தி சன்னிதானம்—**sphaera intellectus** (269)

சானித்தியம் **praesentia,** de hac quoad beatitudienm dissert R. P Robertus. (296)

சுதன் G. **filius** Hinc சுதத்துவம் ex R. P. Roberto **filiatio.** (293)

சவிகரம், சுவிகாரம் — **suum facere.** Unde illud Evangelii: **accepit eam in suam** bene vertas அவளை சுவிகரம் செய்தார். Hinc R. P. Robert **filium adoptivum** சுவிகர சுதன் vacat. Ex hoc est சுவிகரிக்கிறது **facere suum, assumere sibi.** Idem R. P. Robertus **'ne sumas nomen Dei in vanum' vertit:** வியர்த்தமாய்ச் சுவிகரியாதிருப்பாயாக. (298)

சூத்திரம் vel சூஸ்திரம் 1° **regula grammaticae, poeticae** etc. R. P. Robertus sic vocat **regulas religiosorum. (301)**

சோமம் G. **liquor inebrians** ex R. P. Roberto; **liquor amarus** quo in sacrificio யாகம் utuntur. (315)

ஞானதிக்கியர் G. intelligentia excellentes; **ex** ஆதிக்கியம் praefectura. R. P. Robertus sic vocat Cherubinos. (318)

தம G. (tama), particula, qua **R. P. Robertus, utitur ad** exprimendum superlativum. Sic சுத்த தம purissimus, **a, um;** & c. (328)

திக்காரம் G. (diccaram), repulsio, confutatio. Hinc liber தூஷணதிக்காரம் confutatio contumeliarum **(ex R. P. Roberto)** Ex hoc திக்கரிக்கிறது confutare. (Cf. Muttusami's வேத விகற்பதிக்காரம்.) (343)

தேவோக்தித்தம் seu தேவோக்தம் G. (devoctam), (ex தேவ et uotam, dictum) dictio divina, revelatum a Deo. (369)

நாதகீர்த்தியர் per R. P. Rob. **Dominationum Chorus inter angelos.** (386)

பரார்த்த சங்கை G, R. P. Robertus posuit pro **processus in infinitum** (423)

பிரியம் **res nobis jucunda, accepta. Hinc** பிரிய தத்தம் **—donum faciens gratum, gratia sanctificans.** *

பிறதமம் G. **res praecipua vel prima** Hinc R. P. Rob. dicit majorem syllogismi—பிறதம வாக்கியம். (446)

விக்கிரக பூசகன், (R. P. Nobili); idolatra, qui statuas non relative cultu adorat. (562)

விசேஷணம் G. (R. P. Robert) praedicatum propositionis. (563)

விலாசம் G. transpositione litterarum pro விலாசம் amplitudo spatii. Hinc விலாச சபை coetus amplus; **chorus angelicus.** (570)*

விஷூதம், apud R. P. Rob. est negatio. Hinc விஷூத கற்பினை, praeceptum negativum, (574)

வேதபாரகர் G. proprie **custodes Legis, Doctores.** (584)

ஸ்தானுபதி **qui est alterius loco,** unde **legatus,** (589)*

ஸ்நாபகன் **qui lavat,** *B*aptista inter Christianos. (590)

G: Grandonicum (Sanskrit); * used by Nobili though not mentioned by Beschi.

* அநுச்சாரம்–inurbanitas (55)

* அநுதி – qui est sine principio: ex ஆதி principium et அ privativo, cum ன (55)

* அகறம சாஸ்திரம் (அகரும சாஸ்திரம்) scientia speculativa (5)

* அகோசரம் G. quod inaccessibile est seu visu seu dictu: ex கோசரம் perceptibile et அ privativo (6)

* அக்கியானம் G. insoientia, igrorantia ex கியானம், scientia et அ **privativo**; Vulgo usurpatus pro idololatria;hinc அக்கியானி, ignorans, vulgo idololatra (6)

* அங்கீகாரம் G. **assensus interior.** Hinc அங்கீகரிக்கிறது assentiri in animo (7)

* அசகசாந்திரம் G. ex அசம், ovis கசம் elephas et அந்தரம் differentia; quasi sit differentia elephantis ab ove (8)

* அசட்டை-**negligentia** praecipue ex eo quod vili pendat alterius dicta. Item contemptus a சட்டை **honor** et அ privativo (8)

* அசரீரி G. ex சரீரி corporeus et அ privativo: incorporeus (8)

* அசனம் G 1° cibus 2° comestio (9)

# அரும்பதம்

அக்கிரமம்-ஒழுங்கீனம் 6
அகண்டம்-simple, பகா 131
அகல்-தவிர் 31
அகோசரம்-எட்டாதது 427
அகோராத்திரம்-இரவுபகல்211
அங்கலாய்ப்பு-வருத்தம் 333
அங்கிஷம்-உறுப்பு 7
அங்கீகாரம்-ஏற்றல் 7
அசுரோத்திரிய-செவியில்லா
அசரீரி-உடலற்றது 33 [427
அசனம்-உணவு 292
அசுகை-பொறுமை 293
அஞ்சனசலாகை-கோல் 438
அஞ்ஞானம்-அறியாமை 425
அடசி-மறைந்து 437
அடைவு-முறை 6
அத்தியந்தம்-அளவற்ற 11
அதிசயித்தல்-மிகுதல் 99
அந்தகரணம்-உட்பொறி 41
அந்தகாரம்-இருள் 121
அந்தந்த-இன்ன இன்ன 21
அந்தம்-முடிவு
அந்தர்கத-உள்ளூற 326
அந்தர்பவம்-அடக்குதல் 502
அந்தரங்கம்-உள்ளே 69
அந்தஸ்து-நிலைமை 94
அப்பியாசம்-பயிற்சி 96
அப்பிரத்தியக்ஷம்-காணாத 460
அப்பிரயோசனம்-பயனின்மை
அபசெயம்-தோல்வி 101 [2
அபத்தம்-பிழை 17
அபாவம்-இன்மை 431 [195
அபானத்துவாரம்-ஆசனவாய்
அபிவிருத்தி-வளர்ச்சி 10
அபேட்சை-சிநேக, சுபாவ 14
அபேக்ஷிக்கிறது-விரும்பல் 26
அம்மருவாதி-அவ்வாறு
அமிர்தரூபம்- 387
அயிஸ்வரியம்-சொத்து 66
அர்த்தநாரி-பாதிப்பெண் 247
அர்த்தவிருத்தம்-முரண்
[பொருள் 439 [166
அர்த்தவிரோதம்-முரணானது
அரப்புக்கோட்டை-தளம் 298
அரையாப்பு-பறங்கிப்புண் 216
அரோசகம்-வெறுப்பு 88
அவகாசம்-இடம், காரணம் 171
அவசரம்-சமயம் 175
அவதி-முடிவு 5
அவஸ்தை-நிலைமை 47
அவினாபூதம்-உடன்பாடு 12
அவுஷதம்-மருந்து 65
அவையவம்-உறுப்பு 18
அழியாவஸ்து-சாகாத 7
அளவறு-வரையறு 417
அறிக்கை-பகுத்தறிவு 4
அறிகிறசேட்டை-அறிதல் 24
அன்னியோன்னியம்- 32
அனங்கீகாரம்-மறுத்தல் 49
அனந்தம்-குறைவு,அளவற்ற 13
அனர்த்தம்-கேடு 94
அனவஸ்தை-முடிவின்மை 76
அனாதி-eternal, நித்திய 4
அனுக்கிரகம்-அருள் 87 [394
அனு(ச்)சிதம்-பொருந்தாதது
அனுசரித்தல்-பின்பற்று 319
அனுதாபம்-மனஸ்தாபம் 218
அனுபந்தம்-தொடர்ச்சி 564

அனுபவசித்தி-அனுபவம் 33
அனுமானம்-உய்த்துணர்வு 70
அஸ்திவாரம்-அடிப்படை 69
அக்ஷயம்-அழிவு
அக்ஷரம்-எழுத்து 91
ஆக்கிராணம்-முகர்தல் 34
ஆக்கிரிஷ்ட ஞானம்-உய்த்
[துணர்வு 453
ஆக்கினை-தண்டனை 32
ஆகுதல்-being 11 [431
ஆகுதலில்லாத்தனம்-nonbeing
ஆசன்னராய்-முன்னின்று 105
ஆசாரிகக்குறை-ஒழுக்கக்
[குறை115 [virtue467
ஆசாரிகப் புண்ணியம்-Moral
ஆசாரியபுருஷர்-Doctors 146
ஆசையைப் பூரிக்கிற- 29
ஆட்சேபம் பண்ணு-மறு 7
ஆதாரம்-தாங்குவது 4
ஆதேயம்-தழுவுவது 4
ஆயம்-சுங்கம் 294
ஆரோபித்தல்-சாட்டல் 41
ஆவசியக-தேவை 273 [தது22
ஆனது ஆகாதது-தக்கது,தகா
ஆஸ்பதம்-உரியது,புகலிடம்382
ஆக்ஷேபம்-மறுப்பு 369
இடறு-முட்டுக்கட்டை 82
இத்தொகைப்பட்ட-இத்தகைய
இந்தடைவு-இவ்வாறு 33
இம்மிரெட்டி-இரட்டிப்பு
இதரமாய்-புறம்பாய் 21
இருக்கச்செய்தே-இருக்க7 [193
இருமனப்படல்-தத்தளித்தல்
இல்லாத்தனம்-இல்லாமை 14
இலக்கம்-எண் 145

இலகுகுணம்-எளிமை 24
இலவலேசம்-கொஞ்சம் 33
இஷ்டகெந்தம்-நறுமணம் 362
ஈடேற்றம்-மீட்பு 1
ஈடேற்று-நிரூபி 304
உச்சித-தக்க 8
உட்பட்டு-உடன்பட்டு 241
உண்டாக்கப்பட்ட-படைத்த 6
உத்திரதிக்கு-வடதிசை 448
உத்தேசித்து-குறித்து 80
உத்தமபிரகாரம்-eminently 13
உத்தம பொருள்- 430
உதகம்-நீர் 333 [பிழைப்பு188
உதரபோஷணம்-வயிற்றுப்
உதாசனபுத்தி-கவலையீனம் 563
உதாசனம்-அக்கறையின்மை 84
உபட்சீணம்-ஈடுபாடு 44
உபசார மேரை-576 [cause39
உபாதான காரணம்-material
உபாதி-துன்புறுத்து 122
உபாதை-துன்பம் 258
உபாயம்-means 91
உபேக்ஷை-புறக்கணிப்பு 527
உபோத்காதம்-ஆகுபெயர் 398
உள்ளிந்திரியம்-உட்பொறி 25
உற்பவம்-தோற்றம் 3
உற்பனம்-தோற்றம் 209
உன்னதமான-உயர்ந்த 466
எக்கச்சக்கம்-ஒழுங்கீனம் 238
எண்ணிக்கை-எண்ணம் [177
எதார்த்த பொருள்-உள்ளது
எதார்த்தம்-உள்ளபடி 451
எதார்த்த வசனம்-உள்ளசொல்
எற்றினகாரணம்-கருவி12 [103
எழுத்து-விபி 67

ஏகரூபம்- 545
ஏது-யாது 18 [தாழ்வு 12
ஏற்றக் குறைச்சல்-உயர்வு
ஐந்திரியச்சீவன்-விலங்கு 25
ஒடுக்கம்-முடிவு 324
ஒப்பச்சொல்-பொருந்தச்சொல்
ஒப்புவி-நிரூபி 5 [13
ஒரு கண்ட சீர்-uniform 14
ஒருமி-உடன்படு 333
ஒவ்வாமல்-பொருந்தாமல் 28
ஓரடிப்பாடு-ஒற்றடிப்பாதை
கட்டாயம்-வன்மை 5 [548
கடைகோடி-இறுதி 333
கண்டி-தாக்கு 17
கண்டிப்பு-quantity 430
கண்டிப்பில்லாதது-Immate-
கண்டுபிடி-உணர் 8 [rial 195
கணக்கு-காரணம் 83
கர்த்தத்துவம்-mastery 177
கரையேற்றம்-மீட்பு 1
கலப்பில்லாத்தனம்- 331
கவாக்ஷம்-சன்னல் 448
கவிழ்ந்த ரூபம்-வளைவு 29
கவீசுரன்-பெருங்கவிஞன் 396
களவாணுதல்-திருடல் 188
கற்பித்தல்-கற்பனை செய் 7
கற்பனை-கட்டளை 75
கனமான-கடின 11
கஸ்தி-துன்பம் 532
காட்டின்னியம்-hardness 513
காண்பிக்கிறது-தோன்றுகிறது
காமாதுரன்-மிகாமி 216 [92
காலவன்- 379
காலக்ஷயம்-காலப்போக்கு 72
கிரகணம்-கிரகித்தல் 450
கிரகித்தல்-உட்கொளல் 11
கிரந்தம்-வடமொழி 1
கிரந்தம்-நூல் 53
கிரமம்-முறை 208
கிரம ரூபம்-முறையான 380
கிரியை-செயல் 18
கிருகம்-வீடு 19
கிருத்தி-செய்கை 4
கிருபணன்-உலோபி 329
கிருபை-அருள் 91
கிருஷிபாரகர்-குடியானவர் 288
கிளப்பிற பிரசாதம்-எழுப்பும்
[அருள் 12
கீர்த்தனம்-குறிப்பு 476
கீர்த்தித்து-குறித்து 275
கிராங்கிஷம்-ஐம்பொறிகள் 8
குணரூபம்-accident 487
குலாலன்-குயவன் 39
குறைக்கொள்ளி-கொள்ளி 557
குறைத்தல்-குறைச்சல் 83
குக்ஷி-வயிறு 292
கூட்டுறவு-சேர்க்கை 7
கெதி-ஒடுக்கம் 3
கெந்தம்-மணம் 426
கெமனம்-நடத்தல் 54
கேவலம்-முழு, சுத்த 13
கேவலாகாரம்-simplicity 435
கேவலாவலோகனம்-நோக்கு 37
கொஞ்சம்-சுருக்கம் 424
கொத்தளம்-கோட்டை 298
கோசரம்-எட்டியது 428
சகசம்-இயற்கை 436
சங்கம்-புணர்ச்சி 376
சங்கியை-எண்ணிக்கை 176
சங்கேதம்-குறியீடு 19
சங்கோசம்-கூச்சம் 247
சங்க்ஷேபம்-சுருக்கம் 18

சஞ்சலம்-நிலையாமை 55
சஞ்சிவி-மருந்து 387
சட்சு-கண் 447
சட்டைபண்-மதி 424
சடம்-matter 23 [211
சண்டாளன்-இழிகுலத்தான்
சத்த ஞானம்-Testimony 12
சத்தம்-சொல் 395
சத்தி-கருவி 26
சதுராகாரம்-ச. வடிவம் 533
சந்திவிக்கிரகம்-கூட்டல், பிரிக்
சபலம்-பயனுனது 4 [தல் 201
சம்பாவனை-பரிசில் 101
சம்ஸ்காரம்-வாசனை 68
சமவிதம்-சரிநிகர் 444
சமற்பகம்-முழு, செம்மை 134
சமானரூபம்-சமமானது 32
சமித்தல்-பொறுத்தல் 328
சமுகம்- 511
சர்வபரித்தியாகம்-முற்றத்
சரண்-கால் 94 [துறத்தல்153
சரித்திரம்-செயல் 153
சரீர தர்மம்-உடல்நிலை 44
சரீரநிக்கிரகம்-உடலடக்கம்371
சரீரம்-(ஸ்தூல, லிங்க,
யாதனு, தேஜஸ) 129
சரீராதேயம்-உடலைச்சாரும் 26
சரீரி-உடல் உள்ளது 50
சலம்-பிடிவாதம் 40
சலபானம்-நீரைக்குடித்தல்330
சன்னிதானம்-முன்பு 17
சன்னிவாதம்-நோய் 48
சனு-நண்பன் 302
சக்ஷு-கண் 426
சாக்கிரம்-கருவி-426
சாகரணம்-விழிப்பு-47
சாங்கோபாங்கங்கள்-உறுப்புக்
சாசனம்-ஆளுதல்415 [கள்152
சாத்தியம்-கூடியது 439
சாதகம்-உரிய 470
சாதாரண-பொது 4
சாதாரணமான இந்திரியம் 26
சாதி-இனம் 115
சாம்பிரசாதம்-நிறைவருள்468
சாமானியம்-universal 32
சாமீப்பியம்-அண்மைநிலை 9
சாயல்-நிழல் 19
சாயுச்சியம்-கலந்தநிலை 10
சாரமாகிற ஊன் 24
சாரூப்பியம்-ஒருருவம் 405
சாலோக்கியம்-ஓரிடம் 406
சாவதானம்-எச்சரிக்கை 120
சானித்தியம்-முன்னிலை 10
சாஸ்திரபாரகர்-அறிஞர் 315
சாக்ஷாத்து-நேரடி 524
சித்தம்-மனது 33
சித்தாந்தம்-நிச்சயம் 8
சித்திக்கும்-கிடைக்கும் 406
சிரவணம்-கேள்வி 454
சிரவணிக சத்தி-பணிவாற்றல்
சிருஷ்டி-படைத்தல் 415 [570
சிலாக்கியம்-சிறந்தது 463
சிவியர்-பல்லக்குக்காரர் 293
சிற்பாசாரி-தச்சன் 71
சீதளம்-குளிர்ச்சி 113 [188
சீவனோபாயம்-பிழைக்கும்வழி
சீவாத்துமம், பரமாத்துமம் 130
சுக்கிலம்-விந்து 311
சுகம்-கிளி 242
சுகிர்தம்-நன்மை 300
சுகிர்த விருத்தி-நற்செயல் 12
சுபத்தம்xஅபத்தம் 279

சுபத்தவிசேஷம்-உண்மை230
சுபாவக்குறை-Physical
சுபாவ சர்த்தர் 177 [defect 6
சுபாவ சுரூபம்-இயற்கை 1
சுபாவபலம்- 12
சுபாவம்-இயற்கை 3
சுமுத்திரையான-தக்க 33
சுரோத்திரம்-செவி 426
சுலோசனம்-மூ. கண்ணுடி 448
சுவர்க்கம்- 9
சுவர்க்கபதம் 389
சுவர்ணம்-தங்கம் 445
சுவல்பம்-அற்ப 457
சுவாதந்திரியம்-உரிமை 4
சுவாமி துரோகி-Traitor 22
சுவிகரித்தல்-ஏற்றல் 59
சுவைரம்-சுதந்திரம் 53
சுராபானம்-கட்குடித்தல் 563
சுஷ்கம்-வரட்சி 157
சூசனை-குறிப்பு 397
சூக்ஷ்மான-Subtle 461
செப தப 28
செந்து-மிருகம் 7
செவ்வை ரூபம்-நிமிர்ந்த 29
செனித்தல்-பிறத்தல் 412
செனுர்த்தன் 403
சேட்(ஷ்)டை-செயல், இயக்கம்
சேதபாதம்-ஊனம் 310 [4
சேதம்-அழிவு 1
சேதம்-அறிவு 33
சேதனம்-அறிவு 33
சேர்க்கை-தொடர்பு 40
சேவகதர்மம்-பணிவிடை 480
சேவகர்-தொழிலாளர் 88
சொற்பனம்-கனவு 4
சோதிமண்டலம்-மோட்சம் 29
சோபனம்-அலங்காரம் 327
சோபானம்-படிக்கட்டு
ஞாயம்-சான்று 20
ஞான-spiritual 4
ஞானசுரூபம் 28
ஞானபூர்வமாக-மனமார 219
ஞானபெலன்-அறிவாற்றல் 32
தகனம்-சுடுதல் 65
தணிந்தவர்-தாழ்ந்தவர் 209
தப்பனே-தவனே 441
தப்பறை-தவறுனகொள்கை2
தப்பில்லா கிரமம் 6
தயாபரன் 101
தர்மசரித்திரம்-நற்செயல்288
தர்மவிசாரம்-நல்வினைவு 102
தரிக்கிற-ஏற்கிற 298
தருமபாரகன்-புண்ணியவான்
தருமபுத்தி-அறிவுரை 5 [220
தர்க்கி-வாதாடு 7
தறுவாய்-சமயம் 45 [late 24
தன்னுடையதாகப்பண்-assimi
தனட்டியர்-செல்வர் 109
தனுதிசம்பத்து 332
தாசன்-அடியான் 221 [ture27
தாதுகுணபிரமாணம்-Tempera
தாற்பரியம்-கருத்துரை 1
தாரம்-மனைவி 230
தானம்-கொடுக்கல் 13
தானுய் இருத்தல் 13
திகட்டு-தெவிட்டல் 14
தியானம்-அறிவு 13
திரணம்-புல் 1
திரவியம்-matter
திரித்தி-நிறைவு 378
திரித்துவம்-மும்மை 464
திரித்துவ ஏகத்துவம் 13

திருஷ்டி-கண் 427
திருச்சித்தம்-திருவிருப்பம் 479
திருத்தி-நிறைவு 14
திருவுளம்-விருப்பம் 190
திருஷ்டாந்திரம்-உதாரணம் 46
திவசம்-சிரார்த்தம் 154
திவ்வியகுரு-Divine master 1
திவ்விய தெரிசனம்- 102
தீர்வை-தீர்ப்பு 37
தீஷ்டன்-காண்போன் 481
தீக்ஷிதன்-குரு 375
துர்கந்தம்-நாற்றம் 211
துர்ப்பலம்-பலவீனம் 16
துரிதகஸ்தி-துன்பங்கள் 66
துரைத்தனம்-அதிகாரம் 201
துலக்கம்-தெளிவு 81
துலைகிறது-முடிவடைவது 257
தூங்கு மஞ்சக் கட்டில்- 371
தூரிகை-brush 238
தூஷணம்-calumny 75
தெரிசித்தல்-காணுதல் 465
தெக்ஷிணை-கூலி 88
தேசோமயம்-ஒளிப்பிழம்பு 381
தேவபிரகாசம்- 98
தேவவிஷயக-தேவ 56
தேவ விஷயக பத்தி-பத்தி 55
தேவோக்கித்த-இறைவன்
தேஜஸ்-ஒளி 281 [அருளிய 10
தொந்தம்-தொடர்பு 36
தோப்பனார்-தகப்பனார் 379
தோர்வை-தோல்வி 101
தோற்றம்-origin 322
நட்டுவமார்கள்-நடனஆ. 371
நரசீவன்-மனித உயிர் 3
நவம்-புதுமை 179
நாசிகை-மூக்கு 437
நாமகரணம்-பெயர் 19
நாஸ்திகர்-இறைமறுப்பவன் 9
நிக்கிரகம்-அடக்கம் 186
நிசிதம்-தகாது 10
நிபந்தனம்-நூல் 1 [cause 39
நிமித்த காரணம்-efficient
நிமிக்கம்-காரணம் 277
நிர்க்கமனம்-புறப்படல் 148
நிர்ணயம்-தீர்மானித்தல் 1
நிர்ப்பாக்கியம்-துன்பம் 333
நிர்மலம்-தூய்மை 188
நிர்வசனம்-வரையறை 455
நிருமாணம்-ஆக்கப்படுவது 39
நிரூபனம்-எண்பித்தல் 12
நிவாரணம்-அழிப்பு 2
நிறைவேற்று-முடி 16
நிஷ்களம்-உருவமற்ற 132
நிஷ்டூரம்-கொடுமை 74
நிஷ்பலம்-வீண் 153
நீசம்-தாழ்வு 11
நீதிபரர்-நடுவர் 320
பகுதி-வரி 294
பங்கசம்-தாமரை 51
பச்சாத்தாபம்-வருத்தம் 218
பஞ்சரம்-கூடு 19 [23
பஞ்சேந்திரியங்கள்-ஐம்பொறி
பட்டிகள்-சிற்றூர்கள் 396
படையிறங்குதல்-போரிடல் 20
பண்ணுகை-செய்தல் 51
பத்தி-அன்பு 14
பத்தும்பத்தாய்-கவனமாய் 25
பதம்-சொல் 48
பதார்த்தம்-பொருள் 19
பதிதன்-ஒழுங்கீனன் 416
பந்தம்-கட்டு 48
பந்தனம்-கட்டு 54

பயிர்ச்செலவு-உழவு 290
பரமசத்தியம்-mystery 8
பரம ஞான செல்வம் 99
பரமண்டலம்-மோட்சம் 446
பரமாத்துமம், சீவாத்துமம் 41
பரமானந்தம்-பேரின்பம் 13
பரருடைமை-பிறருடைமை 188
பரஸ்பரம்-ஒன்றுக்கொன்று 40
பராபரவஸ்து-கடவுள் 11
பராமரிசம்-Reasoning 38
பரார்த்தசங்கியை-எண்ணற்
பரிக்கிரகம்-ஏற்றல் 13[றது 176
பரிச்சேதம்-Judgement 37
பரிசிதி-தேர்ச்சி 96
பரித்தியாகம்-துறத்தல் 232
பரிதாபம்-வெப்பம் 328
பரிபூரணம்-நிறைந்த 91
பரியந்தம்-வரை 69
பரியாசம்-பகடி 382
பருவதம்-மலை 69
பலகணி-சன்னல் 447
பலன்-விளைவு 278
பலித்தல்-பயன் அளித்தல் 88
பவிஷ்யகாலம்-எதிர்காலம் 103
பறங்கிப்புண்-syphilis 216
பக்ஷணம்-தீனி, இரை 31
பக்ஷபாதம்-ஓரவஞ்சனை 125
பக்ஷம்-பக்கம் 8
பக்ஷித்தல்-உண்ணுதல் 64
பாக்கியம்-பேரின்பம் 327
பாத்திரம்-உரியது 21
பாரதந்திரியம்-அடிமைத்தனம்
பாரம்-கனம் 24 [50
பாரிசம்-பக்கம் 71
பாஹ்யேந்திரம்-புறப்பொறி
பிசாய்-சும்மா 292 [442

பிசினி-உலோபி 329
பிண்டம்-உடல் 179
பிதிருக்கள்-உறவினர் 378
பிர்மரந்திரம்-உச்சித்துவாரம்
பிரகாரம்-படி 104 [195
பிரகிருதி-இயற்கை 454
பிரசங்கம்-சொற்பொழிவு 8
பிரசாதம்-அருள் 108 [287
பிரசித்தவார்த்தை-பழமொழி
பிரத்திஉத்தாரம்-மதில் 8
பிரத்தியட்ச தரிசனம் 11
பிரத்தியட்சம்-கண்கூடு 5
பிரத்தியக்ஷவார்த்தை-
பழமொழி 287
பிரதானம்-முக்கியம் 12
பிரதிபதம்-பதவுரை 1
பிரதிபலிக்கிறது-reflect 41
பிரதிபாதித்தல்-கூறுதல் 569
பிரதிபிம்பம்-சாயல் 7
பிருதிவி, அப்பு, வாயு, தேயு —
(நிலம், நீர், காற்று, தீ) 21
பிரபந்தம்-நூல் 16
பிரமவாதி-Philosopher 487
பிரமாணம்-அளவு 104 [385
பிரமாணிக்கம்-பிராமணத்துவம்
பிரயோகம்-பயன்படுத்தல் 1
பிரயோகிக்க-வழங்க 395
பிரயோசனம்-நோக்கம் 373
பிரரேகன்-இயக்குவோன் 55
பிரவாகம்-பெருக்கு 483
பிரவேசி-நுழை 9 [68
பிராக்தனம்-பூர்வசென்ம மணம்
பிராணகத்தி-கொலை 332
பிராந்தி-வெறி 329
பிரிதிவி-மண் 413
பிரையாசம்-கடினம் 90

பின்னம்-வேறுபட்ட 21
பீசம்-அண்டம், விந்து 378
புத்திரலாபம்-பிள்ளைப்பேறு
புறத்திப்பட்ட-பிற 10 [373
புறவிந்திரியம் 25
பூச்சியன்-போற்றற்குரியவன்
பூத-இறந்த காலம் 511 [96
பூதியம்-element 185
பூர்வசென்மம்-முன்பிறப்பு 68
பூர்வாபரம்-முன்பின்நிலை 15
பூவாசி-பூமி வாசிகள் 547
பேதகசுபாவம்-வேற்றுமை 32
பேதிப்பித்தல்-வேறுபடுத்தல்
பொசிக்க-உண்ண 56 [235
பொசித்தல்-நுகர்தல் 193
பொல்லாத-தீய 115 [283
போக்கணங்கெட்ட-வக்கற்ற
போகசுகம்-சிற்றின்பம் 86
போகபாக்கியம்-சிற்றின்பம் 2
போம்வழி-solution 42
பௌதீக சரீரம்-பூத உடல் 8
மகாமகாப்பட்ட-மிகப்பெரிய
மச்சம்-மீன் 203 [121
மட்டு-அளவு 13
மட்டுக்கட்டுதல்-எல்லையிடு 175
மடக்கு-பெரிய பாத்திரம் 19
மதம்-கொள்கை 139 [391
மதானுசரணம்-மதத்தின்படி
மதிக்கிறஇந்திரியம்-instinct
மதிக்கிற சத்தி ,, 26, 34
மரணபரியந்தம்-சாகும்வரை
மருவாதி-முறை 22 [120
மறுத்துத்தாரம்-பதில் 89
மாங்கிஷம்-இறைச்சி 412
மாத்திரை-form 4
மானசம்-மனது 33
மாஸ்தை-மாதம் 145
மிலேச்சன்-அநாகரிகன் 244
முகனை-காரணம் 96
முகிவு-முடிவு 60
முந்தின-முதல் 3
முழுவஸ்து-முழுப்பொருள் 21
முறைப்பாடு-முறையீடு 100
மேரை-முறை 33
மேரைமரியாதை-முறைமை 13
மேலாங்கிஷம்-அறிவு, நினைவு,
மேஷவிருஷணன் 378 [மனது 8
மைதுனம்-புணர்ச்சி 328
மோட்ச சாதகம்-meritorious
யக்கியம்-யாகம் 375 [12
யத்தனம்-கருவி 237
யதீசுரர்-பெருந்துறவிகள் 232
யாதன சரீரம் 15
யுத்திகள்-ஞாயங்கள் 225
யூகம்-உய்த்துணர்தல் 64
யோக்கிய-தக்க 4 [51
யோகார்த்தம்-காரணப்பெயர்
யோசி (யோஜி)-சேர்த்தல் 36
ரசமி-கதிர் 280
ரசன்-நாக்கு-426
ரணஸ்தலம்-போர்க்களம் 120
ரந்திரம்-வெடிப்பு 414
ரஸ்மி-கதிர் 414
ரஜஸ்-ஒளி 99
ரக்ஷித்தல்-காத்தல் 333
ரீதி-முறை 64
ரேகை-வரி 72
ரேதஸ்கலனம்-Pollution381
ருசிகரம்-பிடித்தது 491
ருது-பர்வம் 445
ரூட்டியார்த்தம்-இடுகுறி 51
ரூபலாவண்ணியம்-அழகு 372

ரூபிக்கிறது-கற்பனை செய் 32
ரூபிகரணசக்தி-கற்பனை 34
ரூபிகரணம்-கற்பனைசெயல் 36
ரோகம்-பிணி 328
லகித்தல்-அழிதல் 411
லக்ஷணம்-அடையாளம் 4
லயம்-அழிவு 10 [கலத்தல்140
லயமாய்ப்போதல்-இரண்டறக்
லலாடலிபி-தலையெழுத்து 5
லாபம்-அடைதல் 1
லிங்கசரீரம்- 41
லெச்சை-வெட்கம் 133
லேகிகன்-எழுத்தாளன் 248
லோக சங்கேதம்-மரபு 23 [51
லோகசங்கேதனம்-உலகவழக்கு
லோகசாசனம்-ஆட்சி 493
வகையறு-வரையறு 7
வசவு-திட்டுதல் 122
வசனம்-பேச்சு 243
வர்ச்சித்தல்-தவிர்த்தல் 153
வர்ணம்-நிறம் 26
வர்த்தமான காலம்-நிகழ்காலம்
வர்த்தமானம்-செயல் 1 [104
வர்த்திக்கும்-வளரும் 24
வரஅறியாது-வராது 5
வருந்து-முயலு 395 [றுமை20
வலுவேற்றுமை-பெரியவேற்
வழிப்போக்கன்- 5
வளர்த்தியைப் பண்ணுகிற-25
வளருகிற சேட்டை- 23
வாதம்-discussion 164
வாதை (உபாதை) 333
வார்த்தை சொல்-பேசு 22
விக்கிரகம்-சிலை 19
விகாரம்-வேறுபாடு 10
விசய,விசத-சுத்த 197
விசாரம்-எண்ணம் 213
விசாரி-கருது 1
விசுவாச தரிசனம்- 11
விசேஷணம்-பயனிலை 37
விசேஷியம்-எழுவாய் 37
விடிவேறு-காலையில் 329
விந்தியபாரகர்-அறிஞர் 7
வித்து-விந்து 182
வித்துவாங்கிஷர்-கற்றோர் 71
வித்தை-கல்வி 466
வித்யா-கல்வி 97
விதி-கட்டளை 211
விதித்தல்-கற்பித்தல் 9
விப்புருதி-வெப்ப மிகுதி 312
விபட்சம்-எதிர்கொள்கை 407
விபரீதம்-திரிபு 33
விபக்ஷம்-எதிர்பக்கம் 7
விமோசனம்-விடுதலை 213
வியக்தி-individual 240
வியசனம்-வேறுபாடு 186
வியத்தி-இன்னுார் 115
விபர்த்தம்-வீண் 5
விபவகாரம்-வழக்கு 7 [328
விபாகுல பரிதாபம்-துன்பங்கள்
வியாபாரம்-தொழில், செயல் 81
விரத்தினி-துறவி 376
விருத்தம்-எதிர்ப்பான 164
விருத்தாந்தம்-நிகழ்ச்சி 129
விருத்தி-தொழில் 36
விருக்ஷம்-மரம் 78
விரேசனம்-பேதிமருந்து 317
விரை-விதை 502
விலாச சபை-choir 14
விவித-பல்வகை 243
விவேகம்-முன்னுரை 1
விவேசனம்-பாகுபாடு 94

விருபூதம்-எதிர்மறை 12
வினயம்-அடக்கம் 16
விஸ்தாரம்-விரிவு 9
விஷயக-விஷய 12
விஷயம்-object, புலன் 11
விஷயீகரித்தல்-அறிதல் 50
விசேஷ கிருபை-தனியருள் 12
வெகுத்துவம்-மிகுதல் 280
வெகுமானம்-பெருமை 153
வெள்ளாட்டி-வேலைக்காரி 388
வெறுமனே-வீணே. 9
வேதபிரமாணம்-Scripture 17
வேதாளம்-பேய் 379
வைகுண்டம், கைலாசம் 10
ஸ்தலம்-இடம் 27
ஸ்தாபரோஷிதிகள்-செடிகொடி [445
ஸ்தாபிக்கும்-நிறுவு 37
ஸ்திரி பூமான்-ஆண் பெண் 144
ஸ்தோத்திரம்-வணக்கம் 326
ஸ்நேகம்-எண்ணெய் 412
ஸ்பரிசம்-ஊறு 426
ஸ்மரணம்-நினைவு 11
ஸமஸ்காரம்-வாசனை 442
க்ஷயம்-அழிவு 35

## ஆத்தும நிர்ணயம்

### TECHNICAL TERMS — கலைச் சொற்கள்

**Cause**-காரணம், நிமித்தம்
First-ஆதி-,
Universal-சாதாரண-,
Principal-பிரதான, பிரதம
Particular-விசேஷ
Univocal-அனுரூப
Equivocal-அனுரூபமாகாத, அனனுரூப
Instrumental-எத்தின
Exemplar-மாதிரிகையான
Formal-ரூபிகரிக்கிற
Efficient-நிமித்த
Material-உபாதான
Final-பிரயோசன
Generative-உற்பவிக்கிற
Adequate-யோக்கிய
Effect-காரியம், நிமித்தஜம்
Anterior & Posterior-பூர்வாபர மேறை
Intellect-புத்தி
**Knowledge**-தெரிசனம், அறிக்கை, ஞானம்
Intuitive-பிரத்தியக்ஷ-,
Inference-அனுமான, ஆக்கிரிஷ்ட
Testimony-சப்த, சத்த
Faith-விசுவாச
Prophesy-தீர்க்க
Divine-திவ்விய
Perfect-சங்-(வாலறிவு)
Scripture-வேதபிரமாணம்
Paganism-அஞ்ஞானம்
Form-மாத்திரை, மாதிரிகை
Formally-கேவலம்
Matter-திரவியம், சடம்
Nature-சுபாவம், சுபாவசுரூபம்
Naturally-சுபாவமாக
Necessarily-அவசியமாக
Quality-குணம், லக்ஷணம்
Accident-குணம்

Being-ஆகுதல்
Substance-1) வஸ்து, பொருள், பதார்த்தம்
2) திரவியம்(× accident)
Complete substance-முழுவஸ்து
Supreme being-பராபரவஸ்து
**Element**-பூதியம்
Earth-பிரிதிவி, மண்
Water-அப்பு, நீர்
Air-வாயு, வளி
Fire-தேயு, தீ
Ether-ஆகாசம், விசும்பு
Essence-1) ஆகுதல்,சுபாவம், சுவரூபம், சுபாவ சுரூபம்
2) சாரம், ஊன்
Direct, Concrete-எதார்த்தப்
Indirect-சூசனை [பொருள்
Idea-விசாரம்
Image-பிரதிபிம்பம், சாயல்
Imagination-ரூபீகரணம்
**Sense**-இந்திரியம்
Five-பஞ்ச-,
Common-பொது, சாதாரண
Interior-உள், அந்தகரணம்
Exterior-பாஹ்ரி, புற
Judging-மதிக்கிற
Memory-ஸ்மரணம்
Vigilance-சாக்கிரம்
Tongue-ரசனம், நாக்கு
Touch-ஸ்பரிசம்
Eye-சக்ஷு, கண்
Nose-ஆக்கிராணம், நாசிகை
Ear-சுரோத்திரம், காது
Stomach-குக்ஷி, வயிறு
Member-அவயவம், உறுப்பு

Dream-சொப்பனம், கனவு
Epilepsy-சன்னிவாதம்
Intellect-புத்தி, அறிக்கை,
Will-மனசு,மானசம் [சேதனம்
**Liberty**-சுவாதந்திரியம்
Absolute-கேவலம், குறையற்ற
Good-தர்மமாத்திரம் விஷயக
Bad-பாப ,, ,,
Egoism-அகங்காரம்
Subjection-பாரதந்திரியம்
Fate-லலாடலிபி, விதி, தலையெழுத்து
Opportunity-அவகாசம்
Indifference-உதாசீனம்
**Know**-அறி
Grasp-கிரகி
Infer-யூகி
Draw-இழு
Affirm-அங்கீகரி
Deny-அனங்கீகரி, மறு
Perceive-விஷயீகரி
Discuss-தர்க்கி
Prove-ஒப்புவி
Account for-ஈடேற்று
Be certain-நிர்ணயி
Refute-கண்டி
Propose-ஆரோபி
Reason-பராமரிசி
Judge-பரிச்சேதம் பண்ணு
Object-ஆக்ஷேபி
Define-நிரூபி [வார்த்தை
Verbum mentale-புத்தி
Apprehension-அவலோகனம், கிரகணம்
Simple ap.-கேவல ,,

Judgement-பரிச்சேதம், தீர்வை

Reasoning-பராமரிசம்

Proposition-வசனம்

Certainty-எதார்த்த வசனம்

Major-பிரதம வசனம்

Minor-இரண்டாம் ,,

Conclusion-அனுவதி

Summary-சங்க்ஷேபம்,சுருக்கம்

Negative-விருபூதம்

Positive-அவிருபூதம்

Prejudice-சலம், பக்ஷபாதம்

Obstinacy-பிடிவாதம்

Inferior to Superior-விண்ணப்பம் செய்

Superior to Inferior-அருளிச் செய், திருவுளம்பற்று

Evidence-பிரமாணம்

Immediate-சாக்ஷாத், நேரடி

Explicit-பாலரீதி, வாசினீரீதி

Implicit-மறைவு மேரை

Metaphor-உபோத்காதம்

Argument-ஞாயம்

Sign-அனுமானம்

Example-திருஷ்டாந்திரம், உதாகரணம்

Destruction-நிவாரணம், நிக்கிரகம், க்ஷயம், லயம்

Subject-விசேஷியம்

Predicate-விசேஷணம்

Object-விஷயம்

Affirm(join)-யோசி

**Opinion**-பக்ஷம்

Prima facie o.-பூர்வபக்ஷம்

Opposite o.-விபக்ஷம்

Certainty-சித்தாந்தம்

Doubt-சந்தேகம்

Reply-பிரத்தியுத்தாரம்

Solution-போம்வழி

Falsehood-தப்பறை, அபத்தம்

Revealed-தேவோக்திரு

Mystery-பரமரகசியம், தேவரகசியம், காரணிக்கம்

Triune-திரித்துவ ஏகத்துவம்

Presence-சன்னிதானம்

Convention-லோக சங்கேதம்

Connotation-ரூட்டியார்த்தம், இடுகுறி

Denotation-யோகார்த்தம், காரண

Knowingly-ஞானபூர்வமாக

Practical-கன்மக

Speculative-அகன்மக

Superficial-மேலெழுந்தவாரி

Pertaining to-விஷயக

Relation-தொந்தம்

Reciprocal-அன்னியோன்னிய பரஸ்பர

Superfluity-கவுரவதோஷம்

Progressus in ind-அனவஸ்தை தோஷம்

Hermaphrodite-அர்த்தநாரி

Assimilate-தானதாகப் பண்ணு

Awareness-சாகரணம்

**Body**-சரீரம், சடம்

Material-ஸ்தூல

Subtle-லிங்க (அந்தகரணம்)

Glorious-தேஜஸ

Suffering-யாதனு

Earthly-பவுதிக [பிரகாசம்

Lumen gloriae-மோக்ஷ

Heaven-மோக்ஷம், சோதி
Indra-சுவர்க்கம் [மண்டலம்
Krishna-வைகுண்டம்
Siva-கைலாசம்
Presence-சானித்தியம்
Nearness-சாமீப்பியம்
Same world-சலோக்கியம்
Mixture-சாயுச்சியம்
Meritorius-மோக்ஷசாதக
Confirmed in grace-நன்மை
யிலே நிலைகொண்ட
Choir-விலாச சபை [பிரசாதம்
**Grace**-வரப்பிரசாதம், அருள்,
Sanctifying-தேவஇஷ்ட
Awakening-எழுப்பிற பி.
கிளப்பிற பி.
Helping-துணைபண்ணுகிற
Final-சம்பிரசாதம்
Charming-பரியதத்தம்[பட்ட
Sufficient-போரும் என்னப்
Concomitant-கூட
வந்திருக்கிற
Effective-பரிபூரணகிருபை
Eucharist-சற்பிரசாதம்
**Potency**-சக்தி, சத்தி
Active-பண்ணுகிற
Passive-தரிக்கிற
Obedient-சிரவணிக
Instinct-மதிக்கிற
Imagination-ரூபகரிக்கிற
Interior-அந்தகரணம்
Universal-சாமானியம்
Ordinary-எப்போதுமுள்ள
Particular-விசேஷ
Species-சாதி
Individual-வியக்தி

**Faculty**-அங்கிஷம் (அம்சம்)
Superior-மேல்
Inferior-கீழ்
**Defect**-குறை
Physical-சுபாவ, ஆகுதலுக்
Moral-ஆசார [கடுத்த
**Love**-பக்ஷம், பக்தி
Selfish-சுபாவாபேக்ஷா
Altruistic-சிநேகாபேக்ஷா
Movement-சேட்டை
**Action**-விருத்தி, கிரியை
Good-சுகிர்த ,,
Vegetative-வளருகிற
Sensitive-இந்திரிய
Intellectual-ஞான[உற்பவம்
Origin-தோற்றம், சகசம்,
End-கெதி, அவதி, ஒடுக்கம்
Simple-கேவலம், அகண்ட
Absolute-கேவலம்,முழு, சுத்த
**Soul**-ஆத்துமம், சீவன், உயிர்
God-பரமாத்துமா
Man's-சீவாத்துமா, நரசீவன்
Great-மகாத்துமா
Vegetative-வளருகிற சீவன்
Sensitive-இந்திரிய ,,
Rational-அறிகிற ,,
Incarnation-மாங்கிஷஐக்கியம்
பரிக்கிரகம், அவதாரம்
Transcendent-அகோசரம்
Within reach-கோசரம்
Support-ஆதாரம்
Supported-ஆதேயம்
Inhere-அபேக்ஷி, நழுவு
Acceptable-ரோசகம்
Not ,, -அரோசகம்
Licit & illicit-ஆன ஆகாத

Difference-பேதம், பின்ன பேதம்
„ great-அசகசாந்திரம், வலுவேற்றுமை
Giving-தானம்
Taking-பரிக்கிரகம்
Union & division-சந்தி விக்கிரகம்
Respect-மேரை மரியாதை
Limited-மட்டாக
Square-சதுராகாரம்
Self existent-தானுய்
Infinite-அறுதி, அனந்தம்
Infinity-பரார்த்த சங்கியை
Impeccability-பாவமில்லாத் தனம்
Atheists-நாஸ்திகர்
Nothingness-இல்லாத்தனம், அபாவம்
General-சாதாரணம்
Fit-பாத்திரம், உசிதம்
Body bound-சரீராதேயம்
Humours-வாத பித்த சிலேட்டுமம், விஷசலம்
Straight-செவ்வைரூபம்
Bent-கவிழ்ந்த „
Filiation-சுதத்துவம்
Paternity-பிதாத்துவம்
Cowness-பசுத்துவம்
Animality-மிருகத்துவம்
Animal-செந்து
Adequate-சமுத்திரை
Potter-குலாலன்
Echo-பிரதிபலி
Disorder-விபரீத கிரமம்
Syphilis-பறங்கிப்புண்
Doctors-வித்தியாபாரகர், வித்துவாங்கிஷர்
Theologians-வேத சாஸ்திரி, வேதபாரகர், பிருமவாதி, குருபீடபுருஷர், விசுவேசுர வாதி, ஆச்சாரியபுருஷர்
Treatise-நிபந்தனம்
Monk-யதீசுரன்
Priest-தீக்ஷதன், குரு
Spirit-அசரீரி
Sacrifice-எக்கியம், பலி
Reparation-பிராயசித்தம்
Proceeding-நிர்க்கமனம்
Considering-கீர்த்தித்து, உத்தேசித்து
Extent-விஸ்தாரம், விசாலம்
Glory-தேஜஸ
Proverb-பிரசித்த வார்த்தை
Body & world-அண்டபிண்டம்
Near in space-ஸ்தல சாமீப்பியம்
Deluge-மகாப்பிரளயம்
Government-சாசனம்
Service-சேவகதர்மம், விருத்தி
Ancestors-பிதிருக்கள்
Prophet-தேவாதீஷ்டன், தீர்க்கதரிசி
Devotees-சனுக்கள்
Farmers-கிருஷிபாரகர்
Tax-பகுதி, ஆயம்
Bastion-கொத்தளம், கொம்மை அரபுக்கோட்டை
Contrition-மனஸ்தாபம், பச்சாத்தாபம்
Redemption-கரையேற்றம், ஈடேற்றம்
Disavantages-சேதபாதம்
Perfect-அங்கோபாங்கம், சா-

Bear-சமி
Traitor-சாமி துரோகி
Murder-பிராணகத்தி
Lust-மோகபிராந்தி
Pain of sense-இந்திரிய கஸ்தி
Little-இலவலேசம்
Multiplicity-வெகுத்துவம்
Following-அனுசரணம்
Eye-glass-சுலோசனம்
Window-சுவாசம்
Eyebrush-அஞ்சனசலாகை
Binding-பந்தனம்
Mover-பிரேரகன்
Wayfarer-வழிப்போக்கன்
Uniform-ஒருகண்டசீர்
Useless-வியர்த்தம், அப்பிர
Useful-சபலம் [யோசனம்
Loss சேதபாதம்
Receive-சுவீகரி
Reject-வர்ச்சி [அந்தஸ்து
State-அவஸ்தை, அவத்தை,

Manner-ரீதி, மேரை, மருவாதி
End-முடிவு, அந்தம்
Means-உபாயம்
Former birth-பூர்வசென்மம், சமஸ்காரம், பிராக்தனம்
Quantity-பரிமாணம்,
Contrary-விருத்தம் [கண்டிப்பு
**Opposed**-விரோதம்
Contradictory-அத்தியந்தவி.
Mutually-பரஸ்பர வி.
Simply opposed-கேவல வி.
Different-விபரீத மேரை
Complete renunciation-சர்வபரித்தியாகம்
Crown of the head-பிரமந்திரம், சத்தி ஸ்பரிசம்
Beget-செனி
**Tense**-காலம்
Present-வர்த்தமான, நிகழ்
Past-பூத, இறந்த
Future-பவிஷ்ய, எதிர்

*Taken from*

***Fr. Buccerio's account of Madural Mission to the Jesuit General Aquaviva 3 Oct. 1610***

Regarding Father Robert "I was pleased to see that speculative Philosophy and Theology and all other sciences are still fresh in his mind. His knowledge of Tamil in particular is so amazing that one would think it is his native language. It is wonderful how he has been able to master it so thoroughly within these few years. Father Goncalo Fernandes who has known all the Fathers who came to these missions, assures me that no one, either in the past or the present, ever knew the language so thoroughly, and pronounced it with such perfection. In addition to Tamil he knows Badaga (Telugu) and Grantham (Sanskrit), the language in which the Brahmins wrote their laws and poems. His genius and great natural talents alone cannot account for the fluency and grace with which

he speaks those languages, and the easy and courteous manner with which he deals with these people. According to me he has received very special gifts from Heaven.

His **House** is poor, built of earth, and covered with thatch not with tiles as this house in which Father Goncalo Fernandes and myself are residing. It is called the ***Madam*** of the Aiyer, which is the name given to the houses of all Sannyasis who profess chastity and do not chew betel which they say, excites the passions of the flesh and incites to evil. The bed is wretched and I asked Father Provincial to provide a better one.

His **table** is also extremely poor; it is the bare ground, at most a plank on which the Aiyer sits with his legs folded under him. In front of him, on the ground, is spread a plantain leaf which serves as a table, table cloth and plate; it is on that leaf that the rice, herbs and vegetables are served, which are to be taken only with the fingers. Milk and water is the only drink allowed. When taking food only one hand, the right one, should be used; the left should not touch anything; it must remain clean so as to be used at the end of the meal to pour water out of the drinking vessel to wash the right hand. Your Paternity will see from this how remote this mode of life is from all luxury.

"His **dress** which I wore when I was in his Mutt, consists of a cloth round the waist, and over it a long tunic of cotton, of a dull colour which they call Kavi. This is the colour adopted by Hindu penitents or Sannyasis who profess perpetual chastity, and also by poor people. Over the tunic is thrown another half sheet of the same cloth to serve as a mantle and on the head another piece of cloth worn like our birettas; all of the same colour. Instead of shoes, as it would be shocking among Indians to touch the skin of dead animals, they use wooden clogs with straps covered with a red cloth or slippers of the same material as the vestments used for Mass.

## தத்துவ போதகரின் நூல்கள்

1. ஞான உபதேசம் — காண்டம் I
2. ,, — ,, II
3. ,, — ,, IV
4. ,, — 26 பிரசங்கங்கள்
5. ஞான உபதேசக் குறிப்பிடமும் 28 பிரசங்கங்களும்
6. புனர் சென்ம ஆக்ஷேபம்
7. நித்திய சீவன சல்லாபம் + கடவுள் நிர்ணயம்
8. சேசுநாதர் சரித்திரம்
9. தேவமாதா சரித்திரம்
10. தூஷணத் திக்காரம்
11. ஆத்தும நிர்ணயம்

## பிற நூல்கள்

1. உபதேசம் (பெரிய உ. + சின்ன உ.)*
2. வணக்கம் †
3. ஞான சஞ்சீவி
4. திவ்விய மாதிரிகை
5. ஞான நட்சேத்திர மாலை
6. பாவ சங்கீர்த்தனக் குறிப்பிடம்
7. தர்ம நடக்கை, நல்ல மரண ஆயத்தம், ஞான ஆறுதல்
8. Flos Sanctorum என்ற அடியார் வரலாறு ‡
9. நீதிச்சொல்

---

* தத்துவ போதகர் நூல்களிலிருந்து எடுக்கப்பட்டது.

† தம்பிரான் வணக்கம் (1578). கிரீசித்தியானி வணக்கம், ஏழு வணக்கம், பெரிய குறிப்பிடம், சின்னக் குறிப்பிடம், மதுரை மந்திரம், மந்திர வியாக்கியானம் என்ற ஏழு நூல்களைக் கொண்டது.

‡ கிடைக்குமிடம் : i **தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி.**

ii **பதிப்பாசிரியர், சேவியர் கல்லூரி**
**பாளையங்கோட்டை.**